சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் சுருக்கமான வரலாறு

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ 1975

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

இந்த நூல் பின்வருவோர் அடங்கிய ஆசிரியக் குழுவால் தயாரிக்கப் பெற்றது: ப. நி. பொனமரியோவ் (தலைவர்), யெ. நி. புகாயேவ், மி. ஸெ. வோலின், வி. ஸெ. ஸாயித்ஸவ், அ. ப. கூச்கின், நி. அ. லமாக்கின், இ. இ. மீன்த்ஸ்.

КРАТКАЯ ИСТОРИЯ КПСС

на тамильском языке

© தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'' மாஸ்கோ

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

И $\frac{10203—663}{014(01)—75}$ 754—75



கார்ல் . மார்க்ஸ்



பிரிட்ரிஹ் எங்கெல்ஸ்

விளாதீமிர் இலியீச் லெனின்

பொருளடக்கம்

முன்னுரை 11

அத்தியாயம் ஒன்று

மார்க்ஸீயக் கட்சி அமைக்கப்பட்டது

ருஷ்யா ஏகாதிபத்தியத்தின் புகு வாயிலில்

உலகம் ஏகாதிபத்தியக் காலக் கட்டத்தில் பிரவேசிக்கிறது 19

ருஷ்யா இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் . 23

சிதறிய குழுக்களிலிருந்து மார்க்ஸீயக் கட்சியாக

மார்க்ஸ், எங்கெல்ஸின் விஞ்ஞானக் கம்யூனிஸம் . 34

ருஷ்யாவின் தொழிலாளர் இயக்கத்தில் மார்க்ஸீயம் நிலை பெறுதல் 41

கட்சி பற்றி லெனினது போதனை. 50

''இஸ்க்ரா''. 58

போல்ஷிவிஸத்தின் தோற்றம். கட்சியின் முதல் செயல்திட்டம் 62

கட்சியின் மறைமுக வாழ்க்கை 68

அத்தியாயம் இரண்டு

ஜார் ஆட்சியும் முதலாளித்துவமும் கவிழ்த்தப்படுதல்

முதல் புரட்சியின் நெருப்பில்

புரட்சி முதிர்கிறது 72

புரட்சித் தலைமை பற்றிய லெனினது போதனை . 78

அமைதியான ஊர்வலத்திலிருந்து ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு 87

சமூக-ஜனநாயகவாதிகள் எல்லோரும் ஒன்று இணைக்கப்படுதல் 96

பின்னணிப் போராட்டங்கள் 102

புரட்சி தோல்வி அடைந்தது ஏன்? மக்களுக்குப் புரட்சி என்ன கற்பித்தது? 105

முதல் புரட்சியிலிருந்து இரண்டாம் புரட்சிக்கு

ஒழுங்காகப் பின்வாங்கல் 111

பின்வாங்குவது நிறுத்தப்படுகிறது 119

கட்சிச் சக்திகளின் ஒற்றுமையை வலுப்படுத்தல் 121

''பிராவ்தா'' செய்தித்தாள் 125

புதிய புரட்சி எழுச்சியின் தலைமையில் 129

போல்ஷிவிக் கட்சியும் நாட்டின விடுதலை இயக்கமும் 131

முதல் உலக யுத்தத்துக்கு முன் 136

முதலாவது உலக யுத்தம். இரண்டாவது அகிலத்தின் தோல்வி. 139

யுத்தத்துக்கு எதிராக போல்ஷிவிக் கட்சியின் அறிக்கை 145

சர்வதேசியமும் தேசபக்தியும் 148

சர்வதேசியவாதிகளை ஒன்றிணைக்க போல்ஷிவிக்குகளின் முயற்சி 150

புரட்சி பற்றிய போதனையை லெனின் விரிவுபடுத்துகிறார் 151

புரட்சிகரமான மக்கள் திரளின் தலைமையில் போல்ஷிவிக்குகள். 155
இரண்டாவது பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி . . 158

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி

ஜார் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின் 161
சோஷலிஸப் புரட்சிக்குப் பரிணமிப்பதற்கான லெனினது திட்டம் 163
போல்ஷிவிக்குகள் தம் கருத்துக்கள் சரியானவை என்று பொது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டு கிறார்கள் 170
இரட்டை ஆட்சியின் முடிவு 174
எழுச்சி தொடங்க முடிவு 178
பூர்ஷ்வா வர்க்கம் உள்நாட்டுப் போரைத் தொடங்குகிறது 181
ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு ஆயத்தம் . . . 183
சோஷலிஸப் புரட்சியின் வெற்றி 192
மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் முக்கியத்துவம் 203

அத்தியாயம் மூன்று

சோஷலிஸ சமூகத்தின் கட்டுமானம்

சோஷலிஸ அரசின் அமைப்பு

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின் கட்சியின் புதிய பொறுப்புக்கள். 207
சோவியத் அரசின் நிர்மாணம். 210
ஜனநாயக மாற்றங்கள் 216
யுத்தத்திலிருந்து வெளியேற்றம் 219
சோஷலிஸ மாற்றங்கள் 225
முதலாவது சோவியத் அரசியல் சட்டம் . . . 235

சோஷலிஸத் தாய் நாட்டின் பாதுகாப்பு

சோஷலிஸக் கணப்பை அணைக்க ஏகாதிபத்திய வாதிகளின் முயற்சி 239

போர்முனைகளில் முதல் வெற்றிகள் 241

கட்சியின் இரண்டாவது செயல் திட்டம் . . . 248

தலையீட்டாளர்கள் மீதும் வெண்படையினர் மீதும் வெற்றி 258

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் ஒரே கட்சி ஆனது ஏன்? 264

போல்ஷிவிஸத்தின் சர்வதேச முக்கியத்துவம் பற்றி லெனின் 269

லெனினது பாதையில் சோஷலிஸத்தை நோக்கி

சோவியத் அரசு சமாதானத்துக்காகப் போராடுகிறது 276

வறுமையிலும் பின்தங்கிய நிலையிலும் இருந்து மீளும் வழியை, சோஷலிஸத்துக்கு வழியைக் கட்சி காட்டுகிறது 279

கட்சி சோஷலிஸக் கட்டுமானத்தை இயக்கி நடத்தும் சக்தி 284

சோவியத் யூனியன் உருவாகியது 292

''யார் யாரை?'' 296

உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களே, ஒன்று சேருங்கள்! . . 301

லெனினது அறிவுரைகள் 305

அகில உலக உழைப்பாளிகளின் தலைவர், நண்பர், ஆசான் 311

லெனின் பெயரால் கட்சியில் அழைப்பு . . . 316

நாட்டில் தொழில் பெருக்கம் 319

திரோத்ஸ்கிவாதத்தின் படு தோல்வி 322

விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை முறையில் அமைத்தல். 329
சோஷலிஸத்தின் முன்னேற்றத்துக்கு ஆயத்தம் . 333
தொழிலாளி வர்க்கம் சோஷலிஸக் கட்டுமானத்தின் இயக்கு சக்தி 344

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றி

முதல் ஐந்தாண்டுத் திட்டம் 350
கூட்டுப் பண்ணை அமைப்பு நிறுவப்படுதல் . . 357
உழைப்பாளர் கூட்டுறவு—கூட்டுப் பண்ணையின் பிரதான வடிவம். 364
கட்சி—சோஷலிஸப் புனர் நிர்மாணத்தின் ஒழுங்கமைப்பாளி 371
சோவியத் யூனியனின் வெற்றிகள் உலகம் அனைத்தின் மீதும் பாதிப்பு விளைக்கின்றன . . . 374
சோஷலிஸத்தை நிறுவும் லெனினது திட்டம் நிறைவேறியது. 378

அத்தியாயம் நான்கு

சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு

சோஷலிஸ அமைப்பை வலுப்படுத்தக் கட்சியின் போராட்டம்

சோவியத் நாடு வளர்ச்சியின் புதிய கட்டத்தில் அடி வைக்கிறது 390
கட்சியின் புதிய பணிகளும் அவற்றின் நிறைவேற்றத்துக்கான போராட்டமும் 394
சோவியத் யூனியன் இரண்டாவது உலகப் போரின் தொடக்கத்தில் 405

மாபெரும் தேசபக்த யுத்தத்தில் வெற்றி

சோவியத் யூனியன் பாசிஸத்துடன் போரில் அடி வைக்கிறது 411

எதிரி நிறுத்தப்படுகிறான் 416
எல்லாம் போர்முனைக்கு! எல்லாம் வெற்றிக்கு! . 421
நிர்ணயகரமான போர்கள் 425
பகைவர்கள் சோவியத் நிலத்திலிருந்து துடைத்து ஒழிக்கப்பட்டார்கள் 433
சோவியத் சேனையின் விடுதலை அளிக்கும் முன் னேற்றம் 435
மாபெரும் தேசபக்த யுத்தத்தின் வெற்றிகர நிறைவேற்றம் 439

சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றுக்கான போராட்டத்தின் முன்னணியில்

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உரு வாகிறது 446
உழைப்பு முனைமுகத்தில் சோவியத் மக்களின் வீரச் சாதனை 452
யுத்தத்துக்குப் பிறகு கட்சியின் நிலை 463
சர்வதேசக் கெடுபிடி நிலையைத் தளர்த்துவதற்கு சோவியத் யூனியனின் முயற்சி. 469
சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இரு பதாவது காங்கிரஸ். 481
நாட்டுப் பொருளாதாரத்தைப் புது ஏற்றம் பெறச் செய்ய முயற்சி. 492
சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் உலகக் கம்யூனிஸ இயக்கமும் 500

அத்தியாயம் ஐந்து

கம்யூனிஸக் கொடியை உயர்த்திப் பிடிப்போன்

கம்யூனிஸக் கட்டுமானம் விரிவாகத் தொடங்குகிறது

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் இறுதி வெற்றி. 507

கட்சியின் புதிய செயல் திட்டம் 512
கம்யூனிஸம். அதன் அடிப்படை இயல்புகள் . . 515
கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம். 516
கம்யூனிஸ சமூக உறவுகள் 518
புதிய மனிதனைப் போதித்துப் பயிற்றுவது . . 524
எல்லாம் மனிதனின் நன்மைக்கே 527

கம்யூனிஸக் கட்டுமானக் காலத்தில் கட்சி

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி—சோவியத் மக்களின் முன்னணிப் படை 529
கட்சி உறுப்பினர்களின் உரிமைகளும் கடமைகளும். 530
கட்சியின் அமைப்புக்கும் செயலுக்கும் உரிய கோட்பாடுகள் 533

உலக வளர்ச்சியின் பிரதான நெடுஞ்சாலை

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் உலகப் புரட்சி நிகழ்முறையும் 536
சோவியத் யூனியன்—சமாதானக் காவலன் . . . 539
தற்போதையக் காலகட்டத்தின் முதன்மையான புரட்சிச் சக்தி 548
வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுடன் சோவியத் யூனியனின் ஒத்துழைப்பு 554

கம்யூனிஸக் கட்டுமானப் பாதையில்

தலைமையின் கூட்டுத்துவம் வலுவடைகிறது . . 563
பொருளாதாரச் சீர்திருத்தம் 572
சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து மூன்றுவது காங்கிரஸ் 581

மாபெரும் அக்டோபர் புரட்சியின் பொன் விழாவும்
வி. இ. லெனினது நூறுவது பிறந்த நாள் விழாவும்

அனைத்துலக உழைப்பாளிகள் திருநாள் . . . 587
சோஷலிஸத்தின் மாபெரும் வெற்றிகள் நிகழ்ந்த ஐம்பது ஆண்டுகள் 592
லெனினீயப் பதாகையின் கீழ் 601

உலகக் கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியத்துக்கு
எதிரான போராட்டத்தின் முன்னணியில்

கம்யூனிஸ இயக்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தும் முயற்சி 605
கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு 608
சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து நான்காவது காங்கிரஸ் 616

முடிவுரை 629

முன்னுரை

சோவியத் யூனியன் என்னும் விறல் மிக்க சோஷலிஸ அரசு நிலவுகிறது, அதிலே சுரண்டுபவர்களும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இல்லை, பொருளாதார, அரசியல், நாட்டின ஒடுக்குமுறை கிடையாது என்பதை அறியாத மக்கள் உலகின் எந்த மூலையிலும் இருக்க மாட்டார்கள். சோவியத் நாட்டில் எல்லா நிலமும் ஆலைகளும் தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் கனிகளும் இருப்புப்பாதைகளும் நிதி மனைகளும் பண்பாட்டு நிலையங்களும் உடல்நல நிறுவனங்களும், பதிப்பகங்களும் திரைப்பட, வானொலி நிலையங்களும் உழைப்பாளிகளுக்குச் சொந்தமானவை, அனைத்து மக்கள் அரசின் உடைமைகள்.

சோவியத் நாடு அரை நூற்றாண்டுக்கு மேலாக நிலவி வருகிறது. இந்தக் காலத்தில் எத்தனையோ மக்கள் இனங்களின் பிரதிநிதிகள் அதற்கு வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு புதிய உலகை—சோஷலிஸ உலகை—கண்கூடாகக் கண்டார்கள். சோஷலிஸம் தன் ஆக உயர்ந்த கட்டமான கம்யூனிஸத்துக்குப் பரிணமித்துக் கொண்டிருக்கும் புதிய சமூகம். கம்யூனிஸமோ, தன் பதாகை மீது ''ஒவ்வொருவரிடமிருந்தும் திறமைக்கு ஏற்ற உழைப்பு, ஒவ்வொருவருக்கும் தேவைக்கு ஏற்ற ஊதியம்'' என்ற வாசகத்தைப் பொறித்துக் கொண்

டிருக்கும் சமூகம். சோவியத் யூனியன் சமாதானத்தின் முக்கிய அரணாக விளங்குகிறது என்பதையும் சோவியத் அரசாங்கம் புதிய உலக யுத்த அபாயத்தை எதிர்த்துச் சலிக்காமல் போராடி வருகிறது என்பதையும் உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் அறிவார்கள்.

''முந்திய வரலாற்றுக் காலம் அனைத்திலும் ஒருபோதும் இல்லாத இந்தச் சமூகம் எவ்வாறு தோன்றி நிலை பெற்றது?'' என்று அறிய ஒவ்வொரு மனிதனுக்கும் ஆவல் ஏற்படுவது சகஜமே. மனித குலம் தன் வரலாற்றுக் காலத்தில் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கிறது என்பது தெரிந்த விஷயம். மிகப் பண்டைக் காலத்தில், வரலாற்றின் முதல் கட்டங்களில், குல அமைப்பு நிலவிய போது, சிறு சிறு கூட்டுச் சமுதாயங்கள் பண்படாத உழைப்புக் கருவிகளைப் பொது உடைமையாக வைத்திருந்தன, வாழ்க்கைச் சாதனங்களைச் சேர்ந்து உற்பத்தி செய்தன, ஒன்று சேர்ந்து அவற்றைப் பயன்படுத்தின. இந்த கட்டத்தைக் கடந்ததும் மனித சமூகம் பணக்காரர்களாகவும் ஏழைகளாகவும், உடைமையாளர்களாகவும் உடைமை அற்றவர்களாகவும் பிரிவு பட்டது. மனிதன் மனிதனால் சுரண்டப்படுவது எங்கும் நிலை பெற்றது. இதன் தவிர்க்க முடியாத அம்சமாக மக்கள் இனங்களுக்கு இடையே ஆக்கிரமிப்புப் போர்கள் நடந்தன. சில வேளைகளில் இவை பல பத்து லட்சம் மக்களைப் பலி கொண்ட கொடிய இரத்தக் களரிகளாக விளங்கின.

இவ்வாறு பல ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. பல கோடி மக்கள் கொண்ட ஒரு பிரமாண்டமான நாட்டில், அதாவது ருஷ்யாவில் நிலவிய ஜார் ஆட்சி போன்ற எதேச்சாதிகார அமைப்பை ஒழித்து, முதலாளித்துவ முறைகளுக்கு முடிவு கட்டி, விடுதலை பெற்ற, சம உரிமை கொண்ட உழைப்பாளி மக்களின் சோஷலிஸ சமுதாயத்தை நிறுவுவது சாத்தியமே என்பதற்கு வரலாற்றிலேயே முதலாவது எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள் சோவியத் யூனியனின் தொழிலாளர்களும் குடியானவர்களும். ஒரு தலைமுறையின் ஆயுட்காலத்தில், அரை நூற்றாண்டில், சோவியத் நாட்டின் மக்கள் பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேற்றத்துக்குப் பெரும் பாய்ச்சல் நிகழ்த்தி விட்டார்கள். சோவியத் மக்கள் தங்கள் நாட்டை

மாபெரும் சோஷலிஸ வல்லரசாக மாற்றிவிட்டார்கள். இது நம் காலத்தில் நிகழ்ந்த அற்புதம் மட்டும் அல்ல, உலக வரலாற்றிலேயே யாவற்றிலும் மகத்தான அற்புதம். இது எவ்வாறு நிகழ்ந்தது என்று அறிய உலகின் எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த எல்லா நாட்டு மக்களும்இயல்பாகவே விரும்புகிறார்கள். ஆலை முதலாளிகளும் தொழில் அதிபர்களும் இல்லாமல் இயந்திரத் தொழில் எவ்வாறு இயங்க முடியும், நிலப்பிரபுக்களும் குலாக்குகள் எனப்படும் பணக்கார விவசாயிகளும் இல்லாமல் வேளாண்மை எவ்வாறு நடை பெற முடியும், உற்பத்திச் சாதனங்களின் மீது தனி உடைமை இல்லாமல் நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சி அடைய முடியும் என்று அறிய அவர்கள் விரும்புகிறார்கள்.

சோவியத் யூனியனின் சாதனைகள் மாட்சி மிக்கவை. வரலாற்றிலேயே முதன் முதலாகச் செயற்கைத் துணைக் கோளங்கள் செலுத்தப்பட்டதும் சோவியத் விண்வெளி விமானிகளின் பறப்புக்களும் இந்த சோஷலிஸ நாட்டின் விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தின் ஒளி மிக்க சான்றுகளாகத் திகழ்ந்தன. உலகம் அனைத்திலும் மிகப் பலரின் கண்களை இவை திறந்துவிட்டன. சோவியத் யூனியனைப் பற்றி ஒன்றுமே அறியாதிருந்தவர்கள், அதன் சாத்தியக் கூறுகளில் நம்பிக்கைஇல்லாதிருந்தவர்கள்,இரு சாராருமே கண் திறக்கப் பெற்றார்கள். சோஷலிஸப் பொருளாதார வளர்ச்சியின் மிகுந்த வேகமும் சோவியத் திட்ட அமைப்பு, சோவியத் விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் வெற்றிகளும் அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் சோவியத் மக்கள் முயன்று பெற்றுள்ள சாதனைகளும் உலகு அறிந்தவை.

சோவியத் யூனியனைப் பற்றியும் அதன் மாபெரும் சாதனைகளைப் பற்றியும் எல்லா மக்கள் இனங்களுடனும் சமாதான மும் சம உரிமையும் கொண்ட அதன் கொள்கையைப் பற்றியும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடைய கையாட்களும் பொய்யும் அவதூறும் கொண்டு எழுப்பும் எல்லாத் தடைகளையும் குறுக்குச்சுவர்களையும் வாழ்க்கையின் உண்மை தகர்த்துவிடுகிறது. உலகு அனைத்தின் உழைப்பாளி மக்களுடைய அறிவுகளையும் இதயங்களையும் இந்த உண்மை மேலும் மேலும் அகன்ற வழியில் எட்டி விடுகிறது. முதலாளித்துவ

முறை இன்னும் நிலைத்திருக்கும் நாடுகளின் மக்களுடைய உள்ளங்களைப் பின்வரும் எண்ணம் மேலும் மேலும் வலிவாக ஆட்கொள்கிறது: ''ருஷ்யாவின் மக்கள் அவ்வளவு வெற்றி கரமாக நடந்து முன்னேறிவரும் அதே பாதையில் நாமும் ஏன் முன் செல்லக் கூடாது? அடிமைத் தளையையும் தேசீய ஒடுக்குமுறையையும் உடைத்து எறிந்து, சுரண்டலுக்கு முடிவு கட்டி, மனிதர்களுக்கு ஏற்ற, விடுதலை வாழ்வை நாமும் ஏன் போராடிப் பெறக் கூடாது?''

இந்தப் பாதை எளியது அல்ல. ஆனால், விடுதலைக்கும் உண்மை மனித இன்பத்துக்கும் இட்டுச் செல்லும் ராஜ பாட்டை இதுவே, எதார்த்தமான, வெற்றி தரும் ஒரே வழி இதுவே என்று முதல் சோஷலிஸ நாடு ஆகிய சோவியத் யூனி யனின் அனுபவமும், இப்போது மற்ற சோஷலிஸ நாடுகளின் அனுபவமும் காட்டுகின்றன.

சோவியத் குடியரசு முதன் முதலாக சோஷலிஸத்தை நிறுவியது. இந்தக் கட்டுமானத்தை விஞ்ஞான அடிப்படை யில் நிலைநாட்டுவதும் புதிய சமூகத்துக்கான போராட்டத் தின் போது, அனுபவத்தில் சரி பார்ப்பதும் அவசியமாய் இருந்தன. தவிரவும், சோவியத் யூனியன் ஏறத்தாழ மூன்று பத்தாண்டுகள்வரை சோஷலிஸத்தைக் கட்டி அமைக்கும் ஒரே நாடாக இருந்தது. பகை முதலாளித்துவ முற்றுகை வளையத்தின் நடுவே இருந்தது அது. இளம் சோவியத் குடியரசை நசுக்குவதற்கு உலக முதலாளித்துவம் தன்னால் இயன்றதை எல்லாம் செய்தது. இரண்டு தடவைகள் — 1918-1920லும் 1941-1945லும்—சோவியத் நாட்டு மக்கள் இனங்கள் தங்கள் விடுதலையையும் சுயாட்சியையும் காப் பதற்காக, புது அமைப்பைக் காக்கும் பொருட்டு, குருதி பெருக்கிக்கடும் போர்கள் நிகழ்த்த நேர்ந்தது.

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றியும் அதன் மாபெரும் நலன்களும் பெறப்பட்டதற்கு முக்கியக் காரணம், மாபெரும் லெனினால் நிறுவப்பட்டுப் போஷிக்கப் பட்ட கம்யூனிஸ்ட் கட்சி, படைப்புத் தன்மை கொண்ட மார்க்ஸீயக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், சோவியத் மக்கள் அனைவரதும் தலைமையில் நின்றதாகும். அது கடந்து வந்துள்ள பாதைக்கு ஈடானதை உலகின் வேறு

எந்த அரசியல் கட்சியும் கண்டதே இல்லை. வீரப் போராட்டமும் கடும் சோதனைகளும் பிரச்சினைகளின் துணிகர முடிவுகளும் உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள வெற்றிகளும் நிறைந்த அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட பாதை ஆகும் இது.

19 பத்தொன்பதாம் நூற்றாண்டும் இருபதாம் நூற்றாண்டும் சந்தித்த காலத்தில் தோன்றிய லெனினது கட்சி, விஞ்ஞானக் கம்யூனிஸப் பதாகை ஏந்தி வரலாற்று அரங்கில் அடி வைத்தது. சந்தர்ப்பவாதத்தையும், வரட்டுச் சூத்திர வாதத்தையும் குறுகிய குழுக் கண்ணோட்டத்தையும் தேசிய வாதத்தையும் அது தீவிரமாக எதிர்த்து, மார்க்ஸீயத்தின் தூய்மையைக் காத்து உறுதியுடன் போராடியது. விஞ்ஞானக் கம்யூனிஸ போதனையைப் படைப்புத் தன்மையுடன் கடைப் பிடித்து அதைச் செயல்படுத்தியது லெனினது கட்சி. அது ருஷ்யாவின் புரட்சிகர விடுதலை இயக்கத்தின் அனுபவத்திலிருந்தும் சர்வதேச புரட்சிகர விடுதலை இயக்கத்தின் அனுபவத்திலிருந்தும் பொதுவான முடிவுகளைப் பெற்று, மார்க்ஸீய-லெனினீயச் சித்தாந்தத்தை வளப்படுத்தி அதை முன்னே இட்டுச் சென்றது.

கம்யூனிஸ்ட் கட்சி, ஜாராட்சிக்கும் ருஷ்ய முதலாளித்துவத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் திரளைத் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் துணிவுடன் நடத்திச் சென்றது. அதே சமயம் இது சர்வதேச ஏகாதிபத்தியவாதத்துக்கும் எதிரான போராட்டமாக விளங்கியது. லெனினது கட்சி இரண்டு பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிகளில் மக்கள் திரளைத் தலைமையேற்று நடத்திச் சென்றது. முதலாவது, 1905-1907ல் நடந்த புரட்சி. இரண்டாவது, 1917 பிப்ரவரியில் நடந்த புரட்சி. இந்த இரண்டாவது புரட்சியின் விளைவாக ஜாராட்சி கவிழ்க்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகரமான மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியையும் தலைமை தாங்கி நடத்தியது. இந்தப் புரட்சியின் விளைவாக ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வெற்றி பெற்றது, சோவியத் சோஷலிஸ அரசு நிறுவப்பட்டது. புரட்சிக்கு முன் ருஷ்யாவின் பல நாட்டினங்களைச் சேர்ந்த மக்கள், தந்தை-வழி-குல அமைப்பு முதல் முதலாளித்துவ

அமைப்புவரை வரலாற்று வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் இருந்தார்கள். அக்டோபர் புரட்சியின் வெற்றி இந்த மக்கள் அனைவரையும் சோஷலிஸத்துக்கு இட்டு வந்தது.

சிறு மார்க்ஸீய வட்டங்களாகத் தொடங்கிய சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இப்போது மாபெரும் சக்தியாக வளர்ந்திருக்கிறது. மற்ற நாடுகளின் மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகளுடன் சேர்ந்து அது உலக வளர்ச்சிப் போக்கு அனைத்தின் மீதும் பெருத்த பாதிப்பு நிகழ்த்திவருகிறது. தற்போது அதில் 145 லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மார்க்ஸீய-லெனினீயக் கருத்துக்களால் ஒன்று இணைக்கப் பட்டவர்கள். மக்களுடன் நெருக்கமான உறவு கொண்டவர்கள். சோவியத் யூனியனில் கம்யூனிஸக் கட்டுமானத்துக்குத் தலைமை ஏற்று நடத்திவருகிறார்கள் இவர்கள். நம் காலத்தின் சிறந்த தஸ்தாவேஜாக விளங்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது செயல் திட்டத்தில் கட்சியின் வரலாற்றுச் செயலின் அனுபவம் தொகுத்து உரைக்கவும் அண்மை வருங்காலத்தில் அதன் கடமைகள் வரையறுக்கவும் பட்டிருக்கின்றன.

கட்சிச் செயல் திட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''சோவியத் மக்களின் தன்னலம் அற்ற உழைப்பு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்த, நடைமுறைச் செயல் ஆகியவற்றின் விளைவாக, எதார்த்தத்தில் நிலவும் சோஷலிஸ சமூகமும் சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பதற்குரிய, அனுபவத்தில் சரி பார்க்கப்பட்ட விஞ்ஞானமும் மனித குலத்துக்குக் கிடைத்துள்ளன. சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்லும் நெடுஞ்சாலை போடப்பட்டுவிட்டது. பல மக்கள் ஏற்கனவே இதில் முன்னேறி வருகிறார்கள். விரைவிலோ, தாமதித்தோ எல்லா மக்களும் இந்தப் பாதையில் முன்னேறுவார்கள்.''

* * *

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி எவ்வாறு தோன்றி வளர்ந்து வலுப்பட்டது, பழைய உலகின் எல்லாச் சக்திகளுக்கும் எதிராக எத்தகைய துணிவுடன் அது போராட்

டம் நிகழ்த்தியது, நிகழ்த்திவருகிறது, உழைப்பாளி மக்கள் திரளின் நலன்களை அது எவ்வாறு தன்னலமின்றிக் காத்துப் போராடியது, போராடி வருகிறது, சோஷலிஸத்திற்காகவும் கம்யூனிஸத்திற்காகவும் உழைப்பாளி மக்களின் போராட்டத்தை அது எவ்வாறு தலைமை தாங்கி நடத்துகிறது என்ற விவரங்கள் இந்தப் புத்தகத்தில் சுருக்கமாகத் தரப்பட்டிருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் கட்டி அமைப்பதில் சோவியத் மக்கள் அடைந்துள்ள வெற்றிகளையும் விவரிக்கிறது இந்த நூல்.

எல்லா மக்களும் கம்யூனிஸத்தை அடைவதற்கான பாதையை ஒளியுறுத்தும் மார்க்ஸீய-லெனினீய போதனையை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி விசுவாசத்துடன் கடைப்பிடித்ததே இந்த வெற்றிகள் யாவற்றுக்கும் அடிப்படை என்பது நூலில் காட்டப்பட்டுள்ளது.

அத்தியாயம் ஒன்று

மார்க்ஸீயக் கட்சி அமைக்கப்பட்டது

ருஷ்யா ஏகாதிபத்தியத்தின் புகு வாயிலில்

உலகம் ஏகாதிபத்தியக் காலக் கட்டத்தில் பிரவேசிக்கிறது

ருஷ்யாவின் திரளான மக்கள் மற்ற நாடுகளின் மக்கள் போலவே ஒடுக்கு முறைக்கு எதிராகப் பல நூற்றாண்டுகள் போராடினர். பல முறை அவர்கள் ஆயுதம் ஏந்திக் கிளர்ச்சிகள் செய்தனர். ஆனாலும் சுரண்டுவோரின் அடிமைத் தளைகளை உடைத்து எறிய அவர்களால் முடியவில்லை. ஏனெனில் அவர்களிடம் போராட்டத்தின் தெளிவான குறிக்கோள் இல்லை, ஒழுங்கமைப்பும் இல்லை. தொழிலாளி வர்க்கம் உருவான பின்பே மக்கள் நம்பகமான தலைமை பெற்று வலு அடைந்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகள் ஒழுங்கமைந்து ஒன்றிணைந்து விடாப் பிடியான போராட்டம் நடத்தக் கற்பிக்கின்றன. தொழிலாளி வர்க்கமே முதன் முதலாக ஒரு ஸ்தாபனத்தை—கட்சியை—நிறுவியது. இந்தக் கட்சி

வெகு ஜனங்களின் போராட்டத்துக்கு உணர்வு பூர்வமாகத் தலைமை தாங்கி நடத்துகிறது.

1917 அக்டோபரில் ருஷ்யாவின் தொழிலாளர்களும் குடியானவர்களும் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் ஆட்சியிலிருந்து அகற்றி, எல்லா வகை ஒடுக்குமுறையிலும் பலாத்காரத்திலுமிருந்து விடுபட்ட புதிய சமூகத்தை அமைக்கத் தொடங்கினர்கள். இன்னும் கால் நூற்றாண்டுக்குக் கொஞ்சம் கூடுதலான காலம் கழிந்ததும் மனித குலத்தின் மூன்றில் ஒரு பகுதியினர் சோஷலிஸப் பாதையில் அடி வைத்து விட்டார்கள். இந்தப் பாதையில் முதலில் முன்னேறினர்கள் ருஷ்யாவின் மக்கள். இருபதாம் நூற்றாண்டு, மனித குலம் சுரண்டலிலும் ஒடுக்குமுறையிலுமிருந்து விடுதலை பெற்ற நூற்றாண்டு ஆகிவிட்டது. நாடு பிடிக்கும் போர்களை ஒழித்து நிலையான சமாதானத்தை நிறுவுவதற்குப் போராட்டம் நிகழும் நூற்றாண்டு ஆகிவிட்டது.

உலகில் நிகழ்ந்த வியப்பூட்டும் மாறுதல்களையும் அவற்றில் சோவியத் யூனியன் ஆற்றிய பங்கையும் புரிந்து கொள்வதற்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எத்தகைய காலக்கட்டம் ஆரம்பித்தது என்று தெரிந்து கொள்வது அவசியம். இது ஏகாதிபத்தியக் காலக்கட்டம் எனப்படுகிறது. இந்தப் புதிய காலக்கட்டம் மனிதகுலத்துக்குப் புதிய துன்பங்களைக் கொண்டு வந்தது. ஆயினும் உழைப்பாளிகள் சுரண்டலிலிருந்து உண்மையாக விடுபடுவதற்கான நிலைமைகளை அதுவே தோற்றுவித்தது.

ஏகாதிபத்தியம் முதலாளித்துவச் சமூகத்தினது வளர்ச்சியின் விளைவு, அதன் ஆக உயர்ந்த, இறுதிக் கட்டம் ஆகும். முதலாளிகள் ஒருவரோடு ஒருவர் கொடிய போட்டி நடத்துகிறார்கள். செல்வம் திரட்டும் பேராசை ஒவ்வொரு முதலாளியின் எண்ணங்களையும் செயல்களையும் மேலும் மேலும் ஆட்கொள்கிறது. ஜாடிக்குள் அடைபட்ட சிலந்திகள் ஒன்றை ஒன்று கொன்று தின்பதுபோல முதலாளிகளில் வலியவர்கள் எளியவர்களை நசுக்குகிறார்கள், பெருத்தவர்கள் சிறியவர்களையும் நடுத்தரமானவர்களையும் ஓட்டாண்டிகள் ஆக்குகிறார்கள். சரக்கு உற்பத்தி நாளடைவில் ஒரு சில பெரு முதலாளிகளின் கைகளில் குவிந்தது. அதிகத்திலும் அதிக

லாபம் திரட்டும் போட்டா போட்டியில் அவர்கள் சங்கங்களாக—ஏகபோக நிறுவனங்களாக—ஒன்று சேர்ந்தார்கள். ஏகபோக நிறுவனங்களின் சொந்தக்காரர்கள் உற்பத்தி அளவுகளை வரையறுத்தார்கள், தங்களுக்கு லாபகரமான விலைகளை நிர்ணயித்தார்கள், சரக்கு விற்பனைச் சந்தைகளையும் மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களையும் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். நாளடைவில் அவர்கள் மிக முக்கியமான பல சரக்குகளின் உற்பத்தியைக் கைப்பற்றிக் கொண்டார்கள், சந்தைகளைத் தங்களுக்கு அடிப்படுத்திக் கொண்டார்கள். ஏகபோக நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரசில் முக்கியப் பதவிகளில் அமர்ந்தார்கள்.

ஏகபோகங்களின் ஆதிக்கத்தால் முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளி மக்களது நிலைமை சீர்கெட்டது. சரக்குகளின் விலைகள் உயர்ந்தன, வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்தன. உழைப்பாளி மக்களிடமிருந்து மேலும் மேலும் அதிக வரிகள் வசூலிக்கப்பட்டன. முதலாளிகளின் விறல் மிக்க சங்கங்கள் தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் நீண்ட காலம் விடாப்பிடியாகப் போராடிப் பெற்ற நலன்களைப் பறித்துக் கொண்டன. சுரண்டுவோருடன் தொழிலாளர்களின் மோதல்களில் அரசு வர வர அடிக்கடி தலையிட்டு, முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கலாயிற்று. சிறு சொத்துக்காரர்கள் ஏகபோகங்களின் தாக்குதலுக்கு முன் எதுவும் செய்யத் திறன் அற்றவர்கள் ஆகிவிட்டார்கள். விவசாயிகளின் தலைவிதி, எல்லாம் வல்ல நிதி மனிதகளே மேலும் மேலும் அதிகமாகச் சார்ந்தது. நிதிமனிதகளே வட்டிக்குக் கடன்கள் வழங்கின, விலைகளைத் தங்கள் விருப்பப்படி நிர்ணயித்தன. பெரு மூலதனம் தொழிலகச் சொந்தக்காரர்களையும் சிறு வியாபாரிகளையும் ஈவிரக்கம் இன்றி நசுக்கிற்று, அவர்களை முழுமையாக ஓட்டாண்டிகள் ஆக்காவிட்டால் முற்றிலும் தனக்கு அடிப்படுத்திக் கொண்டது. பள்ளி ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறிஇயலார்கள், அலுவலக ஊழியர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், ஓவியக் கலைஞர்கள் முதலிய அறிவு ஜீவிகள் மூலதனத்தைச் சார்ந்து இருப்பதை ஏகபோகங்கள் தீவிரப்படுத்தின. மக்களின் வாழ்க்கை நாளுக்கு நாள் இன்பம் அற்றது ஆகிக் கொண்டு போயிற்று.

ஏகபோகங்கள் பிரமாண்டமான நிதி வசதிகளைத் தம் மிடம் குவித்துக்கொண்டன. தங்கள் தேசிய அரசுகளில் அவற்றுக்கு இடம் போதவில்லை. பெருத்த லாபம் திரட்டும் வேட்கையால் உந்தப்பட்டு அவை வேற்று நாடுகளுக்கு, சிறப் பாக வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு, படு வேகமாகப் பாய்ந் தன. இருபதாம் நூற்றாண்டு தொடங்கும் தறுவாயில் மிகப் பெரிய முதலாளித்துவ வல்லரசுகள் உலகம் அனைத்தையும் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு விட்டன. யாவற்றிலும் பெரிய காலனி ஆட்சிப் பேரரசாக விளங்கியது பிரிட்டன். உலகின் நான்கில் ஒரு பாகத்தின் மீது அது ஆட்சி செலுத் தியது. பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது ஆப்பிரிக்காவின் மூன்றில் ஒரு பாகம். ஆப்பிரிக்க மக்களைச் சூறையாடுவதில் பிரிட்டனையும் பிரான்சையும் எட்டிப் பிடித்தது ஜெர்மனி. அமெரிக்க ஐக்கிய நாடுகள் நம்பிக்கைத் துரோகம் செய்து கியூபாவையும் பிலிப்பைனையும் கைப்பற்றிக் கொண்டது, லத்தீன் அமெரிக்காவின் செல்வ வளங்களை உறிஞ்சுவதற்கு, பிரமாண்டமான பேய்க் கணவாய் போலத் தன் வேட்கை மிக்க உறிஞ்சிகளை நீட்டியது. சிறு வல்லரசுகளும் பெரு வல் லரசுகளுக்குப் பின் தங்கிவிடவில்லை. பெல்ஜியமும் ஹாலந்தும் போர்த்துகலும் தங்கள் சொந்த நிலப்பரப்பைக் காட்டிலும் 70-80 மடங்கு பெரிய நிலப்பரப்புக்கள் மீது ஆட்சி செலுத்தின.

ஏகாதிபத்தியம் முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளி மக்களது துன்பங்களைத் தீவிரப்படுத்தியது. வலிமை குறைந்த, பின்தங்கிய மக்கள் இனங்கள் மீது அது காலனி ஆட்சி நுகத்தைப் பூட்டியது. இவ்வளவோடு நிற்கவில்லை அது. ஏகாதிபத்தியம் நாசகரமான உலக யுத்தங்களின் அகாதத் தில் மனித குலம் முழுவதையும் தள்ளியது. முதலாளித்துவம் சமமின்றி வளர்ச்சி அடைந்தது. ஒரு நாடு இன்னொரு நாட்டை முந்தியது. முன்னே பாய்ந்து சென்ற நாடு பின்தங்கிய மக்களினங்களின் சூறையில் தனக்கு அதிகப் பங்கு வேண்டும் என்று கோரியது. ஆனால் உலகமோ ஏற்கனவே பங்கிடப் பட்டு விட்டது. எனவே, புதிய விற்பனைச் சந்தைகளும் மூலப் பொருள்கள் கிடைக்கும் இடங்களும் பெறுவதற்கு வலுக் கட்டாயமாக அவற்றைப் பிறரிடமிருந்து கைப்பற்று

வது அவசியம் ஆயிற்று. உலகை மறு பங்கிடுவதற்கான போராட்டமே ஏகாதிபத்திய யுத்தங்களின் காரணம் ஆகும்.

ஏகபோகங்கள் முதலாளித்துவ உலகின் பொருளாதாரம் அனைத்தையும் நிர்வகிக்கவும் ஏகாதிபத்திய அரசுகளின் அரசியலை நிர்ணயிக்கவும் தொடங்கின. காலனி ஆதிக்க ஒடுக்கு முறை கொண்ட உலக அமைப்பு உருவாயிற்று. விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய ஒரு சில விறல்மிக்க அரசுகள் உலகின் மிகப் பெரும்பான்மை மக்களை நிதித் துறையில் நசுக்கலா யின. முதலாளித்துவ வளர்ச்சியின் இந்தப் புதிய கட்டத்தை லெனின் ஏகாதிபத்தியம் என்று அழைத்தார். ''ஏகாதிபத் தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' என்னும் நூலில் இதை எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆராய்ந்திருக்கிறார் அவர்.

ஏகாதிபத்தியத்தோடு கூடவே சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் பிற்போக்கு வலுத்தது. புரட்சிகள் தோன்றிய இடங்கள் எல்லாவற்றிலும் ஏகாதிபத்தியவாதிகள் அவற்றை நசுக்கினார்கள். கைப்பற்றிய நாடுகளில் அவர்கள் கடைக் கோடிப் பிற்போக்குச் சக்திகளை ஆதாரமாகக் கொண்டார் கள். நிலப்பிரபுக்களையும் அடிமைச் சொந்தக்காரர்களையும் கூட அவர்கள் ஆதரித்தார்கள். முதலாளித்துவம் சமூக முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை ஆகி விட்டது. தானும் உயிரோடு அழுகிக் கொண்டு, இளைஞர்களையும் வாழ விடாமல் அடிக்கும் மிதமிஞ்சித் தின்று கொழுத்த பணக்காரனுடன் முதலாளித்துவத்தை ஒப்பிட்டார் லெனின்.

ருஷ்யா இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்

அண்மைக் கால வரலாற்றின் உலக நிகழ்ச்சிகளின் மையத்தில் விளங்கியது ருஷ்யா.

இருபதாம் நூற்றாண்டின் தொடக் கத்தில் முதலாளித்துவம் ருஷ்யாவின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் வகிக்கத் தொடங்கிவிட்டது. பெரும் பெரும் தொழிற் சாலைகளிலும் ஆலைகளிலும் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் குவிந்தார்கள். இருப்புப் பாதைகள் நாட்டின் பல பிரதேசங் களை இணைத்தன. பெரிய நகரங்கள் தோன்றின. இவை நவீனப் பொருளாதார, அரசியல், பண்பாட்டு மையங்களாக விளங்கின. பெரிய தொழிற்சாலைப் பிரதேசங்கள் உருவாயின.

இவற்றோடு கூடவே ஜாராட்சி ருஷ்யா வெளி நாட்டு மூலதனத்தைச் சார்ந்து இருப்பதும் அதிகரித்தது. வெளி அரசுகளுக்கு அதன் கடன் இடைவிடாமல் அதிகமாயிற்று. பெருத்த லாபங்களால் ஈர்க்கப்பட்ட அயல் நாட்டு மூல தனம் கனரகத் தொழிலுக்குள்ளும் புகுந்துவிட்டது. முதலாளி களின் ஏகபோகக் கூட்டுக்கள் தோன்றி விரைவாக வளர்ந் தன. தொழில்துறையின் முக்கியக் கிளைகள் மீது இவை ஆதிக்கம் வகிக்கலாயின. ஏகபோகங்கள் நாட்டின் பொருளாதார வாழ்வை வர வர அதிகமாக நிர்வகிக்கத் தொடங்கின, அரசு இயந்திரத்தின் தலைமைப் பீடத்துடன் மேலும் மேலும் நெருக்கமாக இணைந்தன. ருஷ்யா ஏகாதிபத்திய நாடு ஆகலாயிற்று.

எனினும், ருஷ்யாவை மேற்கு ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த முதலாளித்துவ நாடுகளிலிருந்து தனிப் பிரிக்கும்ஒரு மிக முக்கியமான சிறப்பு இயல்புஇருந்தது. மற்ற நாடுகளில் போலவே ருஷ்யாவில் முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவ-பண்ணையடிமை முறையின் இடத்தில் வந்தது. நிலப்பிரபுத்துவ-பண்ணையடிமை முறையில் குடியான வர்கள் பண்டங்களையும் கால் நடைகளையும் போல விற்கவும் வாங்கவும் பட்டு வந்தார்கள். ருஷ்யாவில் முதலாளித் துவம் வந்த பிறகும் பண்ணையடிமை முறையின் கடுமையான மீத மிச்சங்கள் எஞ்சியிருந்தன. இவை நாட்டின் வாழ்க்கையில் பரவி இருந்தன. இவற்றில் முக்கியமானவை ஜாரின் எதேச்சாதிகாரமும் நிலப்பிரபுக்களின் நில உடைமையும் நாட்டின ஒடுக்கு முறையும் ஆகும்.

ருஷ்யாவில் வரம்பிலா முடியரசு நிலவியது. ஆட்சி அதிகாரம் அனைத்தும் முழுமையாக ஜாரிடமே இருந்தது. ஜார் தனக்குத் தோன்றியபடி சட்டங்கள் பிறப்பித்தான், அமைச் சர்களையும் அதிகாரிகளையும் நியமித்தான், மக்களின் பணத்தை வரைமுறையின்றி வசூலித்தான், செலவிட்டான். எவ்வித அரசியல் சட்டமும் நிலவவில்லை. ஜாரின் அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி யாரை வேண்டுமானாலும் கைது செய்யவும் சிறையில் அடைக்கவும் நாடு கடத்தவும், எந்தப் பள்ளிக் கூடத்தையும் தினசரியையும் சஞ்சிகையையும் மூடவும் முடிந்தது. ஜார் நிலச் சொந்தக்காரப் பிரபு வம்சத்தினரின்



ருஷ்யாவின் திரளான மக்கள்
ஜாரினால் ஒடுக்கப்படுவதை ஓவியர்
இவ்வாறு சித்திரித்தார்

நலன்களின் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டான். பிரபு வம்சத்தினர் எல்லா அரசியல் உரிமைகளும் பெற்றிருந்தார்கள், அரசில் முக்கியப் பதவிகளை வகித்தார்கள், கொழுத்த சம்பளங்களும் உதவித் தொகைகளும் பெற்று வந்தார்கள். இவர்கள் உயர் வகுப்பினர். இவர்களுக்குச் சலுகைகளும் உரிமைகளும் மரபு முறையாகக் கிடைத்து வந்தன. ஜார் ஆட்சி முடியரசு சாராம்சத்தில் அடிமைச் சொந்தக்காரர்கள்-நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரமாக விளங்கியது. ருஷ்யாவின் மக்களுக்கு எவ்வித அரசியல் உரிமையும் இல்லை. சுதந்திரமாகக் கூட்டம் கூடவும், தங்கள் கருத்துக்களை வெளியிடவும், கோரிக்கைகள் விடுக்கவும், சங்கங்களாகவும் நிறுவனங்களாகவும் சுதந்திரமாக ஒன்று சேரவும், சுதந்திரமாகச் செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் புத்தகங்களும் பிரசுரிக்கவும் மக்களால் முடியவில்லை. அரசியல் கட்சிகள் அமைப்பதும் பொது மக்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. அரசியல் கட்சிகளில் சேர்ந்திருந்ததற்காகக் குடிமக்கள் சிறைகளில் அடைக்கவும் அத்துவானங்களுக்கு நாடு கடத்தவும் கடுங்காவல் தண்டனை விதிக்கவும் பட்டார்கள்.

நாட்டுப்புறத்திலோ பயங்கரமான பண்ணையடிமை முறை மீத மிச்சங்கள் நிலைத்திருந்தன. இவற்றின் தலையூற்றுக விளங்கின ''லாத்திஃபூந்தியா'' என அழைக்கப்பட்ட விசாலமான நிலங்கள். இவை நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமாய் இருந்தன. எல்லாரிலும் பெரிய, முதல் நிலப்பிரபுவாக இருந்தான் ஜார் மன்னன். ஜாரின் குடும்பம் ஒன்றிடம் மட்டும் ஐந்து லட்சம் விவசாயிக் குடும்பங்களிடம் இருந்ததைக் காட்டிலும் அதிக நிலம் இருந்தது. முப்பது ஆயிரம் பெரிய நிலப்பிரபுக்கள், பண்ணையடிமை முறைச் சுரண்டலால் வறியவர்கள் ஆக்கப்பட்டு உரிமையின்மையால் நசுக்குண்டிருந்த ஒரு கோடி விவசாயிகளின் குடும்பங்கள் வைத்திருந்த அளவு நிலத்தை உடைமையாகக் கொண்டிருந்தார்கள். நிலம் இன்மையால் குடியானவர்கள் தவித்தார்கள். ஏழைக் குடியானவன் மோசமான, வளம் அற்ற சிறு நிலத் துண்டில் மரக் கலப்பை போன்ற மிகப் பழங்காலக் கருவிகளால் உழவு நடத்தி வறுமையில் வாடி வந்தான். விளைச்சல் பொய்த்துப்

போவதும் பஞ்சமும் கிராமங்களின் விதியாக இருந்தன. நிலம் தேவைப்பட்டதால் குடியானவன் வேறு வழியின்றி நிலப்பிரபுவிடம் அடிமைப்படுத்தும் நிபந்தனைகளின் பேரில் நிலத்தைக் குத்தகைக்கு எடுக்க வேண்டியதாயிற்று. இந்த நிபந்தனைகளின்படி, குடியானவன் தன் கருவிகளையும் குதிரைகளையும் கொண்டு நிலப்பிரபுவின் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டு, விளைச்சலில் பாதியை நிலப்பிரபுவுக்குக் கொடுத்து விட வேண்டி இருந்தது. அதிகாரிகளுக்கு அற்பக் ''குற்றம்'' இழைத்ததற்காகவும் வரி செலுத்தத் தவறியதற்காகவும் குடியானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள், அவர்களுடைய உடைமைகள் ஜப்தி செய்து விற்கப்பட்டன. வறுமையிலும் உரிமை இன்மையிலும் சிக்குண்டு நலிந்தது நாட்டுப்புறம். ஆனால் நாட்டுப்புறத்திலும் படிப்படியாகப் புகுந்தது முதலாளித்துவம். அதன் பாதிப்பால் விவசாயிகளிடையே வகுப்புப் பிரிவு ஏற்பட்டது. குலாக்குகள் (நாட்டுப்புற பூர்ஷ்வாக்கள்), ஏழைக் குடியானவர்கள் (இவர்களை நாட்டுப்புற அரைப் பாட்டாளிகளும் பாட்டாளிகளும் என்று அழைத்தார் லெனின்) என்ற இரு பிரிவுகள் தோன்றின.

அரைப் பண்ணையடிமை முறை நிலைமைகளில் தொழிலாளர்கள் மிகக் கொடுமையாகச் சுரண்டப்பட்டார்கள். முதலாளிகள், ஜார் ஆட்சி நிர்வாகம் என்ற இரு வகை அதிகாரத்தின் கீழ் சிக்குண்டு அவர்கள் இரட்டை ஒடுக்குமுறைக்கு ஆளானார்கள். உழைப்பாளிகள் பாதுகாப்பு என்பது பெயருக்குக் கூட இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் தான், இடைவிடாத போராட்டத்தின் விளைவாக அரசாங்கம் அன்றாட வேலை நேரத்தைப் பதினொன்றரை மணியாக வரையறுத்தது. ஆயினும் உண்மையில் முன்போலவே 12-14 மணி நேர வேலை நாளே தொடர்ந்து நடப்பில் இருந்தது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட அற்ப ஊதியம் எளிய உணவுக்குக் கூடப் போதும் போதாததாக இருந்தது. ஆனால் இந்த அற்பக் கூலியையும் கூட முதலாளிகள் எல்லா வகையிலும் குறைத்து வந்தார்கள். ஏதாவது காரணத்தைக் காட்டி முதலாளிகள் விதித்து வந்த அபராதத் தொகைகளைச் செலுத்துவது தொழிலாளர்களுக்குக் கடும் தொல்லையாக

ஜார் ஆட்சி ருஷ்யாவில் சராசரி ஒவ்வொரு நிலப்பிரபுவிடமும் 300 விவசாயிகளிடம் இருந்த அளவு நிலம் இருந்தது

விவசாயிகளில் பாதிப் பெயர் இம்மாதிரி இருப்பிடங்களில் வசித்தார்கள்

ஜார் ஆட்சியில் விவசாயிகள்
இப்படி வாழ்ந்தார்கள்

இம்மாதிரிக் கருவிகளால் விவசாயிகள் நிலத்தைப்
பண்படுத்தினர்கள்



உரால் உலோக வார்ப்புத் தொழிற்சாலை. இதில் தொழிலாளர்கள் நாள்தோறும் 13-14மணி நேரம் வேலை செய்தார்கள்



கனியம் வெட்டி எடுக்கும் தொழிலாளி

ஜார் ஆட்சியில் தொழிலாளர்களின்
வாழ்க்கை இப்படி இருந்தது

அனேகத் தொழிலாளர் குடும்பங்கள் வசித்த பாரக்
கில் பொது உறங்கிடம்

இருந்தது. பெரும்பாலான தொழிலாளர்கள் தொழிற்சாலை பாரக்குகளில், பொது அறையில், இரண்டு அடுக்குப் பலகைப் படுக்கைகளில் வசித்து வந்தார்கள்.

அறிவு ஒளி மக்களைக் கீழ்ப்படிவு அற்றவர்கள் ஆக்கி விடும் என்று எதேச்சாதிகாரம் பயந்தது. எனவே அது மக்களை அறியாமை இருளிலும் கல்வி இன்மையிலும் ஆழ்த்தி வைத்திருந்தது. ருஷ்யாவின் எண்பது சதவிகிதம் மக்கள் எழுதப் படிக்க அறியாதவர்களாக இருந்தார்கள்.

ஜாராட்சி ருஷ்யா பெரிய காலனி ஆட்சிப் பேரரசாக விளங்கியது. முற்றிலும் உரிமைகள் அற்ற, ருஷ்யர் அல்லாத மக்களே நாட்டின் ஜனத்தொகையில் பாதிக்கும் அதிகமாக இருந்தார்கள். அவர்கள் ஈவிரக்கம் இன்றிச் சுரண்டவும் எல்லா வகையிலும் இழிவுபடுத்தவும் அவமதிக்கவும் பட்டார்கள். ஜாரின் அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி அவர்கள் மீது வழக்குகள் தொடுப்பதும் தண்டனை விதிப்பதுமாய் இருந்தார்கள். கிழக்கு நாட்டின எல்லைப் பிரதேசங்கள் மூலப் பொருள்கள் வழங்கும் இடங்களாக மாற்றப்பட்டன. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையே அவற்றுக்கு விதிக்கப் பட்டது. ஜாரின் அதிகாரிகள் ருஷ்யர் அல்லாத சில மக்கள் இனங்களை அவற்றின் தொன்று தொட்ட தாயகங்களிலிருந்து வெளியேற்றி அவற்றின் நிலங்களை ருஷ்ய நிலப் பிரபுக்களுக்கும் பணக்கார விவசாயிகளுக்கும் அளித்தார்கள். ருஷ்யர் அல்லாத மக்களின் நாட்டினப் பண்பாடு தொல்லைக்கு உட்படுத்தப்பட்டு நசுக்கப்பட்டது. பல மக்கள் இனங்கள் செய்தித்தாள்களும் புத்தகங்களும் பிரசுரிக்கவும் குழந்தைகளுக்குத் தாய்மொழியில் கல்வி அளிக்கவும் முடியாதவாறு தடை செய்யப்பட்டன. ருஷ்யாவின் கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் அனைவருமே எழுத்தறிவு அற்றவர்களாக இருந்தார்கள். ஜார் அரசாங்கம் நாட்டினங்களுக்கு இடையே பகைமையைத் திட்டமிட்டு மூட்டிவிட்டது, ஒரு நாட்டினத்தை மற்றொன்றின் மீது ஏவி விட்டது, யூதப் படுகொலைகளையும் ஆர்மீனியர்களுக்கும் ஆஸர்பைஜானியர்களுக்கும் இடையே படுகொலைகளையும் தூண்டி நடத்தியது. ஜார் ஆட்சி ருஷ்யா மக்கள் இனங்களின் சிறைச் சாலையாக விளங்கியது.

ஆனால் ருஷ்ய மக்களிடையே ஜனநாயகவாதிகளும் புரட்சிக்காரர்களும் நிறைய இருந்தார்கள். பொதுப் பகையான ஜார் ஆட்சிக்கு எதிராகப் போராடுவதற்கு ஒன்று சேரும் படி எல்லாப் புரட்சிச் சக்திகளையும் அவர்கள் அறைகூவி அழைத்தார்கள். ருஷ்யப் புரட்சிக்காரர்களின் தலைமையில் நடந்த ஒன்றிணைந்த புரட்சிப் போராட்டத்தில் ருஷ்யாவின் எல்லா மக்கள் இனங்களையும் சேர்ந்த உழைப்பாளி மக்கள் ஒருவருக்கொருவர் நெருங்கி வந்தார்கள்.

ருஷ்யாவில் வசித்த பதிற்றுக் கணக்கான நாட்டினங்களும் மக்கள் இனங்களும் இனக் குழுக்களும் சமூக வளர்ச்சியின் வெவ்வேறு படிகளில் இருந்தன. அவற்றில் சில முதலாளித்துவக் கட்டத்தை எட்டிவிட்டன. வேறு சில தந்தைவழி-நிலப்பிரபுத்துவ அமைப்பின் நிலைமைகளில் இன்னும் வாழ்ந்து வந்தன. வேறு சிலவற்றிலோ குல அமைப்பின் மீதமிச்சங்கள் நிலைத்திருந்தன. சில மக்கள் இனங்கள் முழுமையாக அமைந்த நாட்டினங்களாக உருவாகி இருந்தன. மற்றவையோ பலவீனமாக இணைந்த சிறு மக்கள் இனங்களாகவோ, தங்களுக்குள் பகைமை கொண்ட இனக் குழுக்களாகவோ கூட இருந்தன. சில மக்கள் இனங்கள் நிலைத்து வாழ்ந்து பெரிய நகரங்களை நிறுவின. வேறு சில கால்நடை மந்தைகளுடன் வெற்று நிலப்பகுதிகளில் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தன, சர்வ சாதாரணமான வாழ்க்கை வசதிகளைக் கூட அறியாதிருந்தன. சில மக்கள் இனங்கள் உயர் வளர்ச்சி பெற்ற விஞ்ஞானமும் இலக்கியமும் படைத்திருந்தன. வேறு சிலவோ தங்கள் மொழிகளுக்கு உரிய எழுத்துக்கள் கூட இல்லாதிருந்தன.

பாட்டாளி மக்கள் மிகக் கொடுமையாகச் சுரண்டப்படுவதும் குடியானவர்களின் மட்டு மீறிய வறுமையும் உரிமை இன்மையும் ருஷ்யர் அல்லாத நாட்டினங்கள் முரட்டுத்தனமாக ஒடுக்கப்படுவதும் ருஷ்யாவில் ஆதிக்கம் செலுத்தி வந்தன. மிக விசாலமான ஐரோப்பிய, ஆசிய நிலப்பரப்பில் பரவி இருந்த இந்தப் பிரமாண்டமான நாடு, முரண்பாடுகளும் புண்களும் நிறைந்த உலகு அனைத்தையும் ஒரு வகையில் உருவகப்படுத்திக் காட்டியது. மிகப் பெரும்பாலான மக்களை—ஜனத்தொகையின் ஐந்தில் நான்கு பங்கை—ஒடுக்கி

அடிமை நிலையில் வைத்திருந்தனர் ஒரு சில நிலப்பிரபுக்களும் முதலாளிகளும். ஜாரின் அரசாங்கம் இவர்களுக்கு விசுவாசமுள்ள காவலாளியாகப் பணி ஆற்றிவந்தது.

உலகம் முழுவதிலும் உழைப்பாளிகள் கிட்டத்தட்ட இவ்வாறே வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அதிக வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் விடாப்பிடியான போராட்டத்தின் பயனாகத் தொழிலாளர்கள் தங்கள் நிலைமையை ஓரளவு உயர்த்திக் கொண்டார்கள் என்பது உண்மையே. ஆனாலும் எங்கும் மிகப் பெரும்பாலான மக்கள்—தொழிலாளர்களும் குடியானவர்களும்—ஈவிரக்கம் இன்றிச் சுரண்டவும் ஒடுக்கவும் பட்டார்கள். உடைமை அற்றவர்களும் அடிமை நிலையில் இருந்தவர்களுமான நகர, நாட்டுப்புற உழைப்பாளி மக்கள் மிகப் பெரிய புரட்சிச் சக்தியாக விளங்கினார்கள். ஆனால் அவர்களுக்கு அரசியல் அறிவு புகட்டுவதும் அவர்களை ஒழுங்கமைப்பதும் ஒன்று இணைப்பதும் தங்கள் நலன்களையும் புதிய, இன்பம் நிறைந்த, சுதந்திர வாழ்வைப் படைக்கும் பொருட்டுப் போராடுவதற்கான வழிகளையும் அவர்களுக்குத் தெளிவாகப் புரிய வைப்பதும் அவசியமாய் இருந்தன.

வறுமையிலும் ஒடுக்கு முறையிலும் சுரண்டலிலும் இருந்து விடுபடுவதற்கான வழியை எல்லா உழைப்பாளி மக்களுக்கும் காட்டியது மார்க்ஸீயம்-லெனினீயம்.

சிதறிய குழுக்களிலிருந்து மார்க்ஸீயக் கட்சியாக

மார்க்ஸ், எங்கெல்ஸின் விஞ்ஞானக் கம்யூனிஸம்

பணக்காரர்களும் ஏழைகளும், ஒடுக்குபவர்களும் ஒடுக்கப்படுபவர்களும் இல்லாத, போர்கள் இல்லாத நியாயமான சமூகத்தைப் பற்றி நெடுங்காலமாகவே மனிதர்கள் கனவு கண்டு வந்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த சிந்தனையாளர்கள் இத்தகைய சமூகத்தை சோஷலிஸ சமூகம், கம்யூனிஸ சமூகம் என்று அழைத்தார்கள். ஆனால் மனிதர்கள் சோஷலிஸத்தைப் பற்றிக் கனவு மட்டுமே கண்டார்கள்.

அதற்குச் செல்லும் உண்மை வழியை அவர்கள் அறிந்திருக்க வில்லை. அதற்கு இட்டுச் செல்லும் எதார்த்தமான சக்தியை அவர்கள் காணவில்லை.

பாட்டாளி மக்களுடையவும் எல்லா உழைப்பாளி மக்களுடையவும் மாபெரும் போதகர்களான மார்க்ஸும் எங்கெல்ஸும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இந்தக் கனவை விஞ்ஞானமாக மாற்றி விட்டார்கள். மனித குல வரலாற்றை ஆராய்ந்து சமூக வளர்ச்சியின் இயக்கு சக்தியை அவர்கள் கண்டு அறிந்து வெளிக் காட்டினார்கள். மனித குலம் இருந்த இடத்திலேயே நிலைத்து இருப்பதில்லை. ஒரு சமூக அமைப்பின் இடத்திற்கு மற்றொரு சமூக அமைப்பு வருகிறது. தொடக்கக் கால சமூகத்தில் மக்கள் கூட்டுச் சமுதாயங்களாக வாழ்ந்தார்கள். உற்பத்திச் சாதனங்களை—அதாவது, நிலம், புவிக்கரு, காடுகள், நீர்நிலைகள், உழைப்புக் கருவிகள் ஆகியவற்றை—பொது உடைமையாகக் கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் பணக்காரர்களும் ஏழைகளும் இல்லை. எல்லா மனிதர்களும் சமமாக இருந்தார்கள். ஆனால் நாளடைவில் உற்பத்திச் சாதனங்கள் தனி மனிதர்களின் உடைமைகள் ஆயின. சமூகம் உடையவர்கள், இல்லாதவர்கள் என்று பிரிவுபட்டது. உற்பத்திச் சாதனங்களை உடைமையாகக் கொண்டிருந்தவர்கள் அவை இல்லாதவர்களைச் சுரண்டத் தலைப்பட்டார்கள்.

இவ்வாறு மிகத் தொன்மைக் காலத்திலேயே சமூகம் அடிமைகளாகவும் அடிமைச் சொந்தக்காரர்களாகவும் பிரிவுபட்டது. அடிமை எவ்வித உரிமையும் அற்றவனாய் இருந்தான். அவன் மனிதனாகவே மதிக்கப்படவில்லை, அடிமைச் சொந்தக்காரனின் உடைமையான ''பேசும் கருவி'' எனவே எண்ணப்பட்டான். அடிமைச் சொந்தக்கார சமூகத்தின் இடத்திற்கு வந்தது நிலப்பிரபுத்துவ சமூகம். நிலப்பிரபுக்களும் பண்ணையடிமைகளும் கொண்டது இந்த சமூகம். நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்த குடியானவர்களின் நிலை அடிமைகளின் நிலையிலிருந்து சிறிதே வேறுபட்டிருந்தது. ஆனாலும் நிலப்பிரபு அளித்த துண்டு நிலத்தில் குடியானவன் சிறு சொந்த விவசாயம் நடத்தி வந்தான். குறித்த சில நாட்கள் அவன் நிலப்பிரபுவுக்காக வேலை செய்வது கட்டாயமாய்

இருந்தது. நிலப்பிரபுத்துவ சமூக அமைப்புக்குப் பின் வந்தது முதலாளித்துவ அமைப்பு. முதலாளித்துவ சமூகத்தில் முக்கியமான எல்லா உற்பத்திச் சாதனங்களும் முதலாளிகளுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் உரியவையாக இருக்கின்றன. அடிமையையும் பண்ணை அடிமையையும் போல் அன்றி, பாட்டாளி சுதந்திர மனிதன். ஆனால் அவனிடம் உடைமை எதுவும் கிடையாது. உழைக்கும் கரங்கள் மட்டுமே அவனிடம் உள்ளன. பட்டினியால் மடியாதிருக்கும் பொருட்டு அவன் முதலாளியிடம் தொழிலாளியாகக் கூலிக்கு அமரவும் அவனுக்குத் தன் உழைப்புச் சக்தியை விற்கவும் வேண்டி இருக்கிறது. சாராம்சத்தில் முதலாளித்துவ அமைப்பு கூலி அடிமைமுறை அமைப்பு ஆகும்.

ஒரு சமூக அமைப்பின் இடத்திற்கு வேறு ஒரு சமூக அமைப்பு ஏன் வந்தது? சமூக வளர்ச்சியின் இயக்கு சக்தியாக விளங்குவது யாது? அடிமைச் சொந்தக்கார சமூகமும் நிலப்பிரபுத்துவ சமூகமும் முதலாளித்துவ சமூகமும் பணக்காரர்கள், ஏழைகள், உடையவர்கள், இல்லாதவர்கள், சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என்று பிரிவுபடுகின்றன. இந்த சமூகங்களில் ஒவ்வொன்றும் ஒடுக்கும் வர்க்கங்களாகவும் ஒடுக்கப்படும் வர்க்கங்களாகவும் பிரிவு பட்டிருந்தது. இந்த வர்க்கங்கள் எப்போதும் இடைவிடாத போராட்டம் நிகழ்த்தி வந்தன. சமூகம் வர்க்கங்களாகப் பிரிவுபட்ட பின் **வர்க்கங்களின் போராட்டமே** வரலாற்றின் இயக்கு சக்தி ஆயிற்று.

வர்க்கங்களாகப் பிரிவுபடுவதை அடிப்படையாகக் கொண்ட எந்த ஒரு சமூக அமைப்பும் நிலையானது அல்ல. அடிமைச் சொந்தக்கார சமூகமும் நிலப்பிரபுத்துவ சமூகமும் தோன்றி, வளர்ந்து, மடிந்து போயின. இதே விதி முதலாளித்துவத்துக்கும் நேரப் போகிறது. மார்க்ஸும் எங்கெல்ஸும் இதன் வளர்ச்சி விதிகளைக் கண்டறிந்து, முதலாளித்துவம் தன் அழிவுக்கு உரிய நிலைமைகளைத் தானே ஏற்படுத்துகிறது என்று விஞ்ஞான ஆதாரத்துடன் நிரூபித்தார்கள். முதலாளித்துவம் வளர்ச்சி அடையும்போது உற்பத்திச் சாதனங்கள் ஓர் இடத்தில் குவிகின்றன. பெரிய தொழில் நிலையங்கள் சிறிய, நடுத்தர நிலையங்களை இடையறாது நெருக்கித்

தள்ளிக் கபளீகரம் செய்துவிடுகின்றன. உழைப்பும் உற்பத்தியும் மேலும் மேலும் பெருத்த அளவுகளில் ஒன்று சேருகின்றன, அதாவது, தங்கள் தன்மையில் மேலும் மேலும் சமூகப் போக்கை மேற்கொள்ளுகின்றன. ஆனால் பொது உழைப்பின் விளைவை ஒரு சில முதலாளிகள் கவர்ந்து கொள்கிறார்கள், ஏனெனில் உற்பத்திச் சாதனங்கள் அவர்களுடைய உடைமைகளாக இருக்கின்றன. இவ்வாறு முதலாளித்துவம் தானே சோஷலிஸத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய பொருளியல் நிலைமைகளை—பேரளவான சமூக உற்பத்தியை—தோற்றுவிக்கிறது. முதலாளித்துவத்தின் இடத்தில் சோஷலிஸத்தை நிலை பெறச் செய்வதற்கு உற்பத்திச் சாதனங்கள்மீது தனி உடைமை ஒழிக்கப்பட வேண்டும். உற்பத்திச் சாதனங்கள் சமூகம் அனைத்தினதும் உடைமை ஆக வேண்டும்.

ஆனால் ஆதிக்கம் வகிக்கும் சுரண்டுவோரின் வர்க்கங்கள் உடைமையையும் சலுகைகளையும் ஆட்சி அதிகாரத்தையும் தாமே விரும்பி விட்டுக்கொடுத்துவிட மாட்டா. புரட்சியின் வாயிலாகப் பழைய சுரண்டுவோர் சமூகத்தைத் துடைத்து அகற்றிவிட்டு, மனிதனே மனிதன் ஒடுக்குவதை அறியாத புதிய சமூகத்தை நிறுவக் கூடிய சமூக சக்தி தேவை. அத்தகைய சமூக சக்தியாக விளங்குகிறது பாட்டாளி வர்க்கம்—நவீனத் தொழிலாளர்களின் வர்க்கம். முதலாளித்துவத்தைக் குழிதோண்டிப் புதைத்து, கம்யூனிஸ சமூகத்தைப் படைக்கும் வர்க்கம் என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள பங்கை மார்க்ஸும் எங்கெல்ஸும் ஆதாரபூர்வமாக நிலைநாட்டினார்கள். முதலாளித்துவம் தானே பாட்டாளி வர்க்கத்தைத் தோற்றுவிக்கிறது. மூலதனத்தின் பெருக்கத்துக்கு ஏற்பப் பாட்டாளி வர்க்கம் பெரிதாகி வளர்கிறது. முதலாளித்துவ சமூகத்தில் மற்ற உழைப்பாளி மக்கள் திரளுடன் ஒப்பிடுகையில் பாட்டாளி வர்க்கம் தனிப்பட்ட நிலையை வகிக்கிறது. தொழிலாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களைத் தனி உடைமையாகப் பெற்றிருக்கவில்லை. சுரண்டலை ஆதாரமாகக் கொண்ட சமூக அமைப்பு நிலைத்திருப்பதில் அதற்கு எவ்வித அக்கறையும் இல்லை. போராட்டத்தில் இழப்பதற்கு அதனிடம் தன் விலங்குகள் தவிர வேறு எதுவும் கிடையாது. பெரிய நகரங்களில்

உள்ள பெரும் தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் சேர்ந்து வேலை செய்வது திரளான தொழிலாளர்களை ஒன்றிணைக்கிறது, கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி ஒற்றுமைப்படுத்துகிறது, ஒன்று சேர்ந்து செயலாற்றப் பயிற்றுகிறது. தங்கள் முதல் பகைவனை — முதலாளிகளின் வர்க்கத்தை — தொழிலாளர்கள் ஒவ்வோர் அடியிலும் எதிர்ப்படுகிறார்கள். இரு வர்க்கங்களுக்கும் இடையே போராட்டம் தீவிரமாகிறது.

முதலாளித்துவ சமூகத்தின் மிக மிக ஒடுக்கப்பட்ட வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க்கம் இந்த சமூகத்தை அடியோடு மாற்றி அமைப்பதில், தனி உடைமையையும் வறுமையையும் ஒடுக்குமுறையையும் முழுமையாக ஒழிப்பதில் அக்கறை கொண்டிருக்கிறது. தன்னை விடுவித்துக்கொண்டு தொழிலாளர் வர்க்கம் எஞ்சிய உழைப்பாளி மக்கள் திரள் அனைத்தையும் எல்லா விதச் சுரண்டலிலுமிருந்து விடுவிக்கும். எனவே, தொழிலாளி வர்க்கம் உழைப்பாளி மக்கள் அனைவருடையவும் அடிப்படை நலன்களை வெளியிடுவதுடன் அவற்றைச் செயல் முறையில் பாதுகாக்கிறது. அதனால்தான் ஒடுக்குமுறைக்கும் பலாத்காரத்துக்கும் எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தனித்து இருக்கவில்லை—முதலாளித்துவத்தின் கொடுமைகளால் பெரும்பான்மை மக்கள் வருந்துகின்றனரே. இவ்வாறு, வாழ்க்கை நிலைமைகளே பாட்டாளி வர்க்கத்தை யாவற்றிலும் புரட்சித் தன்மை கொண்ட, யாவற்றிலும் முற்போக்குள்ள வர்க்கம் ஆக்கியுள்ளன. அதற்கு எதிர் நிற்கிறது மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் உள்ள கடமை. மூலதனத்தை எதிர்த்துப் புரட்சிப் போராட்டத்தை முதலில் தொடங்குவதும், எல்லா உழைப்பாளிகளையும் சுரண்டப்படுபவர்களையும் இந்தப் போராட்டத்தில் தன்னைச் சுற்றி ஒருங்கு திரட்டுவதும் அந்தக் கடமை.

சுரண்டலை எதிர்த்துக் கிளர்ந்து எழும் தொழிலாளி வர்க்கம் முதலாளிகளோடு மட்டும் இன்றி, அவர்களுடைய நலன்களைக் காக்கும் அரசுடனும் மோதுகிறது. வரலாறு பின்வருமாறு போதிக்கிறது: அரசு சமூக வாழ்வில் எப்போதுமே பெரும் பங்கு ஆற்றி வந்திருக்கிறது. பழைய சமூக முறைகளை நிலை நிறுத்தவோ புதிய சமூக அமைப்பை வலுப்படுத்தவோ அது உதவி வந்திருக்கிறது. அரசு என்பது அதி

காரிகள் கொண்ட முழு இயந்திரமும் போலீஸும் இராணுவமும் நீதி மன்றங்களும் சிறைச் சாலைகளும். சமரசப்படுத்த முடியாத வர்க்கங்களாக சமூகம் பிளவுபட்ட போது தோன்றியது அது. அரசு சமூகத்துக்கு உயரே இருப்பது போலவும் ஒழுங்கை நிலை நாட்டவே பணி ஆற்றுவது போலவும் தோன்றுகிறது. உண்மையிலோ, எந்த வர்க்கம் உற்பத்திச் சாதனங்களின், சமூகச் செல்வங்கள் அனைத்தினதும் உடைமையாளியாக விளங்குகிறதோ, அந்த வர்க்கத்தின் நலன்களுக்கே தொண்டு ஆற்றுகிறது அரசு. அடிமைச் சொந்தக்கார அமைப்பில் அடிமைச் சொந்தக்காரர்களே அரசின் தலைமைப் பீடத்தில் இருந்தார்கள். நிலப்பிரபுத்துவ அமைப்பில் நிலப் பிரபுக்களும் முதலாளித்துவ அமைப்பில் பூர்ஷ்வாக்களும் அரசுத் தலைமையை ஏற்றுள்ளனர். இந்த ஆளும் வர்க்கங்கள் அடிமைகளையும் குடியானவர்களையும் தொழிலாளர்களையும் ஒடுக்குவதற்கு அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திவந்தன, பயன்படுத்தி வருகின்றன. அடிமைகளும் குடியானவர்களும் தொழிலாளர்களும் சுரண்டுவோரின் உடைமைகளையும் பணக்காரர்களின் சலுகைகளையும் ஆக்கிரமித்துப் பறித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதே அரசின் பணியாக இருந்தது, இருக்கிறது. வாழ்வு தீர்ந்த வர்க்கத்தின் இடத்திற்கு வந்த புதிய வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றது இயல்பே. எனவே, ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்சினை எந்தப் புரட்சியினதும் அடிப்படைப் பிரச்சினை ஆகும். எல்லா ஒடுக்கப்பட்டவர்களுக்கும் தலைமை தாங்கிச் செல்லும் தொழிலாளி வர்க்கம் சோஷலிஸப் புரட்சி நிகழ்த்துவதும், ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றப்பட்ட சுரண்டுபவர்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்கும் புதிய, சோஷலிஸ சமூகத்தை நிறுவுவதற்கும் தனது அரசியல் ஆதிக்கத்தை— பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை — நிலைநாட்டுவதும் இன்றியமையாதது ஆகும்.

முதலாளித்துவ ஆட்சியைக் கவிழ்க்க முதலாவது வீர முயற்சி, பிரான்சு நாட்டின் தலைநகர் பாரிஸைச் சேர்ந்த தொழிலாளர்கள் 1871ம் ஆண்டில் மேற்கொண்டார்கள். பூர்ஷ்வாக்களின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு அவர்கள் கம்யூன் என்ற புதிய பாட்டாளி வகை அரசை நிறுவினர்கள்.

பாரிஸ் கம்யூன் 72 நாட்கள் நிலைத்தது. அது தோல்வி அடைந்ததற்கு ஒரு காரணம் தொழிலாளர் இயக்கத்தைச் சரியாக வழிகாட்டி நடத்த வல்ல மார்க்ஸீயக் கட்சி இல்லாதது ஆகும். ஆயினும் வரலாற்றில் முதலாவதான இந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சி இறவாப் புகழ் உடையது. இதன் அனுபவத்தின் அடிப்படையில் மார்க்ஸ் பின்வரும் உண்மையைக் காட்டினார்: பாட்டாளி வர்க்கமும் உழைப்பாளி மக்களும் பூர்ஷ்வா அரசு இயந்திரத்தை வெறுமே கையாளக் கூடாது. அவர்கள் இந்த இயந்திரத்தை உடைத்துவிட்டு இதன் இடத்தில் சோஷலிஸத்தைச் செயல்படுத்துவதற்கு ஏற்ற புதிய, பாட்டாளி அரசை நிறுவ வேண்டும். எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் பாரிஸ் கம்யூனின் வீரச் சாதனையை வெகுவாகப் போற்றுகிறார்கள். அதன் அனுபவம் தந்த படிப்பினைகளைக் கற்றுக்கொண்டார்கள், கற்றுக்கொள்கிறார்கள்.

மார்க்ஸும் எங்கெல்ஸும் பின்வருமாறு போதித்தார்கள்: தொழிலாளி வர்க்கம் நன்கு ஒழுங்கமைந்தது, அரசியல் உணர்வு உள்ளது. தன் குறிக்கோள்களையும் கடமைகளையும் போராட்ட வழிகளையும் சாதனங்களையும் அது புரிந்து கொண்டிருக்கிறது. இதுவே அதன் பலம். முதலாளிகளின் நலன்களுக்கு அடிப்படையில் எதிரான தங்கள் நலன்களைத் தொழிலாளர்கள் புரிந்து கொண்டு சோஷலிஸ ஆதர்சத்தை ஆயுதமாகப் பூணும்போதுதான் — வேறு சொற்களில் கூறினால், சோஷலிஸமும் தொழிலாளர் இயக்கமும் கலந்து ஒன்றாகும்போதுதான்—முதலாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து விடுபடுவதற்குரிய உணர்வு பூர்வமான போராட்டமாக மாறும். இந்தப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்குத் தொழிலாளர்கள் தங்கள் **சுதந்திர அரசியல் கட்சியை** அமைப்பது இன்றியமையாதது. சோஷலிஸம் தொழிலாளர் இயக்கத்தோடு சேர்ந்து ஒன்றுவதைக் கட்சி செயல்படுத்தும். தொழில் வாரியாகவும் நாட்டின வாரியாகவும் தனித் தனித் தொழிலாளர் குழுக்களின் நலன்களை அல்ல, பாட்டாளி வர்க்கம் அனைத்தினதும் நலன்களை அது பிரதிநிதித்துவப்படுத்தும். கட்சி தொழிலாளர் இயக்கத்துக்கு அதன் அரசியல் கடமை

களையும் போராட்டச் சாதனங்களையும் இறுதிக் குறிக்கோளையும் சுட்டிக் காட்டும்.

உலகின் எந்தப் பகுதியிலும் எந்த நாட்டினத்தையும் சேர்ந்த அல்லது எவ்விதத் தோல் நிறமும் கொண்ட தொழிலாளர்களின் பொது வைரி ஒன்றுதான். அதுவே முதலாளித்துவம். எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்தின் பொதுவான ஒரே குறிக்கோள்—சோஷலிஸம், கம்யூனிஸம். மூலதனம் சர்வதேச சக்தி. அகில உலகப் பரிமாணத்தில் அதை வெற்றி கொள்வதற்கு எல்லா நாடுகளின் தொழிலாளர்களுடையவும் ஒன்றிணைந்த முயற்சி தேவை. எனவேதான் சர்வதேச வர்க்க ஒருமைப்பாடு தொழிலாளர் இயக்கத்தின் ஜீவாதாரத் தேவை, அதன் வெற்றிக்கான நிபந்தனை ஆகும். ஒவ்வொரு நாட்டின் தொழிலாளி வர்க்கமும் சர்வதேச உழைப்பாளிகள் சைனியத்தின் தேசீயப் படைப் பிரிவாக விளங்குகிறது. மார்க்ஸும் எங்கெல்ஸும் **பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின்** மாபெரும் கோஷத்தை முன்வைத்தார்கள்:

''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!''

மார்க்ஸும் எங்கெல்ஸும் தங்கள் போதனையின் அடிப்படைகளை 1848ல் ''கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை'' என்னும் நூலில் விவரித்தார்கள். தொழிலாளி வர்க்கத்தின் கட்சியை அமைப்பதற்காக அவர்கள் வாழ்நாள் முழுவதும் போராடினார்கள். மார்க்ஸ், எங்கெல்ஸ், இருவரதும் தலைமையில் தொழிலாளிகளின் சர்வதேசத் தோழமை மன்றம்—முதலாவது அகிலம்—1864ல் நிறுவப்பட்டது. பாட்டாளி வர்க்கத்தின் இந்த சர்வதேச நிறுவனம் அப்போது சிறிது காலமே நிலைத்திருந்தது. 1889ல் இரண்டாவது அகிலத்தை நிறுவுவதற்கு எங்கெல்ஸ் தலைமை ஏற்றார்.

ருஷ்யாவின் தொழிலாளர் இயக்கத்தில் மார்க்ஸீயம் நிலை பெறுதல்

மார்க்ஸீயம் முதன் முதலில் மேற்கு ஐரோப்பாவில் பரவிற்று. அங்கே முதலாளித்துவம் முன்னதாக வளர்ச்சி அடைந்தது, நவீன இயந்திரத் தொழில் பாட்டாளி வர்க்கம் முதன் முதலில் உருவாயிற்று. ஆனால் அங்கேயும் கூட ஆரம்பத்தில் சிறுபான்மைத் தொழிலாளர்களே மார்க்ஸியத்தை ஆதரித்தார்கள். அதன் செல்வாக்கு படிப்படியாக

அதிகரித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் மார்க்ஸீயம் மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்தில் ஆதிக்கம் வகிக்கும் போதனை ஆகிவிட்டது. சரியற்ற கண்ணோட்டங்களையும் போக்குக்களையும் எதிர்த்து இடைவிடாத, கொள்கைவாதப் போராட்டம் நிகழ்த்தி இந்த வெற்றியைப் பெற்றது மார்க்ஸீயம். சமூக-ஜனநாயக் கட்சிகளின் அணிகளிலும் பல்வேறு சீர்திருத்தவாதப் போக்குகளுக்கு எதிராக மார்க்ஸீயத்தின் கொள்கைவாதப் போராட்டம் நிகழ்ந்தது.

ருஷ்யாவில் நீண்ட காலம்வரை மார்க்ஸீயவாதிகள் இருக்கவில்லை. பொருளாதாரப் பின்தங்கிய நிலை, வெகுஜனத் தொழிலாளர் இயக்கம் இல்லாதது, குடியானவர்கள் மிகப் பெரும்பாலராய் இருந்தது ஆகிய காரணங்களால் ருஷ்யாவின் புரட்சிக்காரர்கள் மார்க்ஸீயத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அது ருஷ்யாவுக்கு ஏற்காதது என்று அவர்கள் எண்ணினர்கள். இவர்கள் நரோத்னிக்குகள் எனப்பட்டார்கள். ''நரோத்னிக்'' என்ற பெயர், மக்கள் என்று பொருள்படும் ''நரோத்'' என்னும் சொல்லுடன் தொடர்பு கொண்டது. இந்தப் புரட்சிக்காரர்கள் தங்களை மக்களுடையவும் அவர்களது நலன்களுடையவும் காவலர்கள் என்று கூறிக் கொண்டமையால் நரோத்னிக்குகள் என்று அழைக்கப் பட்டார்கள். மெய்யாகவே நரோத்னிக்குகள் ஜாரின் எதேச்சாதிகாரத்தையும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையையும் எதிர்த்து வீரத்துடன் போராடினர்கள், மக்களுக்காகத் தங்களைப் பலி கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் தவறான கருத்துக்களை மேற்கொண்டிருந்தார்கள். நரோத்னிக்குகள் ருஷ்யா தனக்கே உரிய முறையில் வளர்ச்சி அடையும் என்றும் ருஷ்யாவில் வாழ்க்கை தனி வகையில் அமையும் என்றும் நம்பினர்கள். விவசாயிகளே புரட்சியின் பிரதான சக்தி என்று அவர்கள் எண்ணினர்கள். விவசாயிகளின் கூட்டுச் சமுதாயத்தின் வாயிலாக சோஷலிஸத்துக்குப் பரிணமிக்க முடியும் என்று அவர்கள் கனவு கண்டார்கள். ருஷ்யாவில் நடப்பில் இருந்த கிராமக் கூட்டுச் சமுதாயம் நிலத்தைப் பொது உடைமையாக வைத்திருப்பதை ஆதாரமாகக் கொண்டிருந்தது. தனிக் குடித்தனக்கார விவசாயிகளுக்குக்

குறித்த கால உபயோகத்துக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப் பட்டது. அவ்வப்பொழுது சமநிலை ஏற்படுத்தும் நோக்கத் துடன் நிலம் மறு பங்கீடு செய்யப்பட்டது.

சமூக வாழ்க்கை நிலைமைகளின் காரணமாக சோஷலிஸக் கருத்துக்களைப் பரப்பும் பணி விவசாயிகள் மீது அல்ல, தொழிலாளர்கள் மீதே சார்ந்திருக்கிறது என்பதை நரோத் னிக்குகள் புரிந்துகொள்ளவில்லை. விவசாயிகளின் கூட்டுச் சமுதாயத்தால் தன்னந்தனியாக முதலாளித்துவத்திலிருந்து உழைப்பாளிகளைக் காக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. விவசாயிகளின் கூட்டுச் சமுதாயம் நிலவிய நாடுகளில் எல்லாம் அது முடிவில் ஏழைகளாகவும் பணக்காரர்களாகவும் பிரிவுபட்டது என்று வரலாறு போதிக் கிறது. அதுவே ருஷ்யாவிலும் நிகழ்ந்தது. ஆனால், பொருளா தாரத் துறையில் பின்தங்கிய நாடுகளில், பின்தங்கிய மக்கள் இனங்கள் சோஷலிஸத்தை அணுகும் பாதையை எளிதாக்கு வது, அதிக வளர்ச்சி அடைந்த நாடுகளின் வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் உதவிக்கு வரும்போது கூட்டுச் சமுதாயத்துக்கு இயலும் என்று மார்க்ஸும் எங்கெல்ஸும் முன் கண்டார்கள்.

ருஷ்யாவின் நரோத்னிக்குகள் தனியாய் இல்லை. முத லாளித்துவம் நிலை பெறுவதற்கு முன் மற்ற நாடுகளிலும் சோஷலிஸத்தைப் பற்றிக் கனவு கண்ட முன்னணிச் சிந்தனை யாளர்கள் இத்தகைய கருத்துக்களை வெளியிட்டு வந்தார்கள். ஆனால் வாழ்க்கை அனுபவம் அவர்களுடைய கருத்துக்களை நிராகரித்துவிட்டது. சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கு, பெருத்த இயந்திரத் தொழில் உற்பத்தி குறித்த வளர்ச்சித் தரத்தை எட்டியிருக்க வேண்டும். சோஷலிஸ ஆதர்சங்க ளுக்குத் தொண்டு ஆற்றுவதை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட ஊழியர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸின் விஞ்ஞானக் கம்யூனிஸத்தின் அடிப்படைகளை அறிந்திருப்பது இன்றியமை யாதது.

நரோத்னிக்குகளையும் அவர்களுடைய புரட்சிகர விவ சாய ஜனநாயகவாதத்தையும் புரட்சிக்கு அவர்களுடைய அறைகூவலையும் மார்க்ஸும் எங்கெல்ஸும் லெனினும் வெகு வாக மதித்தார்கள். அதே சமயம் நரோத்னிக்குகளின்

தவறான சித்தாந்தத்தை அவர்கள் தாக்கி விமர்சித்தார்கள். நிலப்பிரபுக்களுக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் எதிராகத் திரளான மக்களின் போராட்டத்துக்குத் தலைமைதாங்கி, இந்தப் போராட்டத்தை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லும் பொறுப்பை ஏற்க இருந்த வரலாற்றுச் சக்தியைக் காண முடியாதவாறு இந்தச் சித்தாந்தம் நரோத்னிக்குகளைத் தடுத்தது. இந்தச் சக்தியாக விளங்கியது தொழிலாளி வர்க்கம்.

மிருகத்தனமான சுரண்டலும் அரசியல் உரிமைகள் அறவே இல்லாததும் ருஷ்யாவில் தொழிலாளர்களின் எதிர்ப்புக்கு வித்திட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதுக்களிலேயே தொழிலாளர்களிடையே கிளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் ஏற்பட்டன. எழுபதுக்களில் இவை இன்னும் அதிகரித்தன. இவை, சகிக்க முடியாத நிலைமையிலிருந்து மீள்வதற்கு வேறு வழி இல்லாமையால் ஆட்கள் வருவது வரட்டும் என்று மேற்கொண்ட தான்தோன்றி நடவடிக்கைகள் மட்டுமே. தாங்கள் துன்பப்படுவது ஏன், எந்தக் குறிக்கோளை நோக்கித் தாங்கள் முன்னேற வேண்டும் என்று இந்த ஆட்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை.

போராட்டத்தின் போது தொழிலாளி மக்கள் திரளிலிருந்து வெளிப்பட்டார்கள் முற்போக்குள்ள, அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்கள். பாட்டாளி வர்க்கத்தின் துன்ப நிலைக்குக் காரணங்கள் என்ன, அதை விடுதலை பெறச் செய்யும் வழிகள் யாவை என்று அவர்கள் மும்முரமாக ஆராய்ந்தார்கள். தொழிலாளர் நிறுவனங்களை அவர்கள் அமைக்கத் தொடங்கினர்கள். எழுபதுக்களின் இரண்டாம் பாதியில் முதல் தொழிலாளர் சங்கங்கள் தோன்றலாயின. ஆனாலும் புரட்சி இயக்கத்தில் தனி ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள் நரோத்னிக்குகள். நரோதிஸத்தை வெற்றி கொள்வதும் பாட்டாளி வர்க்கத்தின் உண்மைக் கொள்கைவாதம் ஆகிய மார்க்ஸீயத்தின் அடிப்படையில் உறுதியாக நிற்பதும் தொழிலாளர் இயக்கத்தின் இன்றியமையாத கடமை ஆயிற்று.

ஜாரின் அதிகாரிகளின் தொல்லை காரணமாக வெளிநாடு செல்ல நேர்ந்த ருஷ்யப் புரட்சிக்காரர்கள் சிலர், நரோதிஸத்

திலிருந்து தாங்கள் தொடர்பைத் துணித்துக்கொண்டு விட்ட தாகவும் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் தனிக் கட்சி யை அமைப்பது அவசியம் எனக் கருதுவதாகவும் 1883ல் அறிக்கை வெளியிட்டார்கள். இவ்வாறே தோன்றியது ருஷ் யாவின் முதலாவது மார்க்ஸீய ஸ்தாபனம் ஆகிய ''உழைப்பு விடுதலைக்'' குழு. இதை நிறுவியவர் பிளெஹானவ். இவர் திறமைசான்ற மார்க்ஸீய சித்தாந்தகர்த்தர், பிரசாரகர்.

''உழைப்பு விடுதலைக்'' குழுவின் நடவடிக்கைகள் ருஷ்யா வில் மார்க்ஸீயத் தொழிலாளர் கட்சி அமைப்பதற்கு வழி கோலியது. விரைவில் ருஷ்ய நாட்டின் உள்ளேயும் மார்க் ஸீயவாதிகள் தோன்றினர் — முதலில் பீட்டர்ஸ்பர்கிலும் பின்பு மற்ற நகரங்களிலும். ஆஞல் வழக்கொழிந்த பழைய கருத்துக்கள் இடைவிடாத தீவிர எதிர்ப்பு இன்றி அரங்கி லிருந்து வெளியேறுவது இல்லை. புரட்சி வட்டாரங்களில் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் (அப்போது மார்க்ஸீயவாதிப் புரட்சிக்காரர்கள் தங்களை இவ்வாறு அழைத்துக் கொண் டார்கள்) நரோத்னிக்குகளுக்கும் இடையே கடும் போராட்டம் நிகழ்ந்தது. சமூக-ஜனநாயக இயக்கம் மெதுவாக, சிரமத் துடன் வளர்ச்சி அடைந்தது. பத்து ஆண்டுகளில் விசால மான நாட்டில் பத்துக்குச் சற்றே கூடுதலான சிறு இரகசிய மார்க்ஸீயக் குழுக்களும் வட்டங்களும் பெரிய நகரங்களில் அமைந்தன. முன்னணித் தொழிலாளர்கள் இடையிலும் புரட்சி மனப்பான்மை கொண்ட அறிவுஜீவிகள் இடையிலும் விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களைப் பரப்புவதுடன் (விளக்கி விவரிப்பதுடன்) அவை நின்று கொண்டன. பொது மக்கள் இடையே அரசியல் வேலையை அவை இன்னும் தொடங்க வில்லை. மார்க்ஸீயம், தொழிலாளர் இயக்கத்துடன் தொடர்பு அற்ற கொள்கைவாதப் போக்காக மட்டுமே இருந்து வந்தது. சமூக-ஜனநாயகம் அப்போது தொடக்க நிலை யிலேயே இருந்தது.

இயக்கம் எவ்வளவுதான் மெதுவாக வளர்ச்சி அடைந் தாலும் முன்னேக்கிப் பெருத்த அடி எடுத்து வைப்பதற்கு— சோஷலிஸ போதனையைத் தொழிலாளர் இயக்கத்துடன் ஒன் றிணைப்பதற்கு—வேண்டிய நிலைமைகளை அது உருவாக்கியது. இப்போது எதிர்ப்பட்டது அடுத்த கடமை. சிதறிய குழுக்களை,

போராட்டக் குறிக்கோளினதும் சாதனங்களினதும் ஒருமையால் வலுவாக இணைக்கப்பட்டு, மையப்படுத்திய, கட்டுப்பாடு கொண்ட கட்சியில் ஐக்கியப்படுத்துவதும் அது தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் வழிகாட்டி ஆகும் பொருட்டு அதற்குச் செயல்திட்டம் வகுப்பதுமே இந்தக் கடமை.

இத்தகைய கட்சியை அமைக்கும் கடமையை முன்வைத்தார் விளாதீமிர் இல்யீச் லெனின். அவருடைய உண்மைக் குலப் பெயர் உல்யானவ். ஆனால் சட்ட விரோதமாக வேலை செய்துவந்த மற்ற ருஷ்யப் புரட்சிக்காரர்கள் போலவே அவரும் லெனின் என்ற புனைபெயரை வைத்துக் கொண்டார். இந்தப் பெயரிலேயே அவர் உலகு எங்கும் பிரசித்தி பெற்றார். பதினேழு வயது இளைஞராகப் புரட்சிப் பாதையில் அடி எடுத்து வைத்த லெனின், ஒடுக்குமுறையிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் உழைப்பாளி மக்களை விடுவிப்பதற்கான போராட்டத்திற்கு, மனிதகுலத்தின் இன்பம் நிறைந்த வருங்கால மாகிய கம்யூனிஸத்தின் பொருட்டுப் போராடுவதற்குத் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். லெனின் முதல் ருஷ்யப் புரட்சிக்காரர்களின் வீர மரபை ஏற்றுக்கொண்டார், ஆனால் அவர்களுடைய தவறுகளிலிருந்து விடுபட்ட வேறு பாதையை, புரட்சிகர மார்க்ஸீயப் பாதையைக் கடைப்பிடித்தார்.

மார்க்ஸீயம் உலகைப் புரட்சிகரமாக மாற்றி அமைப்பதற்கும் உழைப்பாளி மக்களைப் பொருளாதார, அரசியல், உள அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதற்கும் ஏற்ற திறன் மிக்க கருவி என்று லெனின் கண்டு கொண்டார். மார்க்ஸீய சித்தாந்தத்தை வெறும் புத்தகரீதியாக, அருவமாகப் புரிந்து கொள்வதை லெனின் ஒப்பவில்லை. லெனினது கருத்துப்படி மார்க்ஸீயம் வரட்டுச் சூத்திரம் அல்ல, புரட்சிகரச் செயலுக்கு உயிரோட்டமுள்ள வழிகாட்டி. சென்ற நூற்றாண்டின் எண்பதுக்களிலேயே லெனின் மார்க்ஸீயத்தைப் பரப்புவதில் பெரும் பங்கு ஆற்றினார். 1893ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அவர் பீட்டர்ஸ்பர்க் வந்து சேர்ந்தார். ஜாரினுடைய பேரரசின் தலைநகரான பீட்டர்ஸ்பர்க் ருஷ்யாவின் புரட்சி இயக்கத்தின் மையமாகவும் விளங்கியது. விரைவிலேயே

லெனின் பீட்டர்ஸ்பர்க் மார்க்ஸீயவாதிகளின் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர் ஆகிவிட்டார்.

ருஷ்யாவில் மார்க்ஸீயத் தொழிலாளர் கட்சியை அமைப்பதில் பல கஷ்டங்கள் இருந்தன. போலீஸ் தொந்தரவின் கடினமான நிலைமைகளில் கட்சியைச் சட்ட விரோதமாக அமைக்க நேரிட்டது. புரட்சிக்காரர்களிடையே நரோத்னிக்குகள் இன்னும் செல்வாக்கு பெற்றிருந்தார்கள். ருஷ்யத் தொழிலாளர்கள் தங்கள் கட்சியை அமைப்பது பற்றிச் சிந்திக்க இன்னும் வேளை வரவில்லை என்றும் இது நடப்புக்கு வர முடியாத கனவு என்றும் நம்பிக்கை குறைந்தவர்கள் பலர் கூறினார்கள்.

இந்தச் சிரமங்களால் ருஷ்ய மார்க்ஸீயவாதிகள் நெஞ்சு தளரவில்லை. லெனின் எழுதிய ''‘மக்களின் நண்பர்கள்’ என்பவர்கள் யார், அவர்கள் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு எதிராக எவ்வாறு போரிடுகிறார்கள்?'' என்னும் நூல் மார்க்ஸீயவாதிகளின் தன்னலம் அற்ற வேலையின் திசையை நம்பகமாகக் காட்டுகிறது. இந்த நூல் 1894 கோடையில் இரகசியமாக அச்சிடப்பட்டது. மக்களின் உண்மையான நண்பர்கள் நரோத்னிக்குகள் அல்ல, மார்க்ஸீயவாதிகளே என்றார் லெனின். ஜார் ஆட்சிக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிரான போராட்டத்தில் மக்களின் அரசியல் தலைமையை ஏற்க வல்லது ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கமே என்று அவர் நிரூபித்துக் காட்டினார். இவ்வாறு செய்வதற்குத் தொழிலாளி வர்க்கத்துக்குப் போராட்டப் புரட்சிக் கட்சி தேவை. இத்தகைய கட்சியை அமைப்பது ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் முதற்படியான கடமை. தொழிலாளர்களின் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு அற்ற கலகக் கிளர்ச்சிகளையும் வேலை நிறுத்தங்களையும் பாட்டாளி வர்க்கத்தின் உணர்வு பூர்வமான வர்க்கப் போராட்டமாக மாற்றும் நிலையான ஸ்தாபனத்தை—கட்சியை மார்க்ஸீய-வாதிகள் எப்போது நிறுவுகிறார்களோ ''அப்போது, ருஷ்யத் தொழிலாளி எல்லா ஜனநாயகச் சக்திகளுக்கும் தலைமை தாங்கி எழுந்து, வரம்பிலா முடியரசைக் கவிழ்த்து விட்டு ருஷ்யப் பாட்டாளிகளை (எல்லா நாடுகளதும் பாட்டாளிகளோடு கூடவே) வெற்றிகரமான கம்யூனிஸப் புரட்சியை நோக்கி பகிரங்க அரசியல் போராட்டத்தின் நேர்

லெனின் (மேஜை அருகே நடுவில் உட்கார்ந்திருப்பவர்) பீட்டர்ஸ்பர்க் ''தொழிலாளிவர்க்க விடுதலைப் போராட்டக் குழுத்'' தலைவர்களிடையே. 1895ம் ஆண்டு

வழியில் நடத்திச் செல்வான்'' என்று எழுதினார் லெனின். (வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 1, பக்கம் 312).

இவ்வாறு வெகு தூரம் முன்னே நோக்கினார் லெனின். ஜார் ஆட்சியின் விறல் மிக்க போலீஸ் இயந்திரத்துக்கு எதிர் நின்ற புரட்சிக்காரர்களின் இரகசியமான சிறு வட்டங்களுக்கு முன்னே புலனுயிற்று மாபெரும் வரலாற்றுச் சாத்தியக் கூறு.

ருஷ்ய மார்க்ஸீயவாதிகள் லெனினது கருத்துக்களைத் தொழிலாளர் இயக்கத்தின் நடைமுறையில் செயல்படுத்தத் தொடங்கினார்கள். பீட்டர்ஸ்பர்கில் இருந்த மார்க்ஸீய வட்டங்கள், லெனினது முன்முயற்சியால் ''தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்ட ஐக்கியம்'' என்ற பெயரில் ஒரே ஸ்தாபனமாக 1895ம் ஆண்டு ஒன்றிணைந்தன. மார்க்ஸீயவாதிகள் வேலை நிறுத்தங்களில் பங்கு கொண்டார்கள்,

துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுத் தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பிரகடனம் செய்தனர். முன்னணித் தொழிலாளர்களின் சிறு சிறு வட்டங்களில் பிரசாரத்திலிருந்து தொழிலாளி வர்க்கத்தின் விரிவான திரள்களில் கிளர்ச்சி வேலைக்கு மாற்றம் இவ்வாறு நிகழ்ந்தது. பீட்டர்ஸ்பர்க் ''போராட்ட ஐக்கியம்'' ருஷ்யாவில் முதன் முதலாக விஞ்ஞான சோஷலிஸத்தைத் தொழிலாளர் இயக்கத்துடன் ஒன்றிணைத்தது. பொருளாதாரக் கோரிக்கைகளின் பொருட்டுத் தொழிலாளர்களின் போராட்டத்தை ஜார் ஆட்சிக்கும் முதலாளித்துவச் சுரண்டலுக்கும் எதிரான அரசியல் போராட்டத்துடன் ஒன்றுபடுத்தியது அது. ''போராட்ட ஐக்கியம்'' தொழிலாளர் கட்சியின் முளைக் கருவாக விளங்கிற்று. வருங்கால மார்க்ஸீயக் கட்சியின் சிறப்பு இயல்புகள்—அதன் புரட்சித் தன்மை, தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு, பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்கு, ஜனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் அடைவதற்கான போராட்டத்துக்குத் தலைமை ஏற்பது ஆகிய தன்மைகள்—அதில் பளிச்செனத் தென்பட்டன.

பீட்டர்ஸ்பர்க் ''போராட்ட ஐக்கியத்தை'' மாதிரியாகக் கொண்டு மற்ற நகரங்களில் இருந்த சமூக-ஜனநாயக ஸ்தாபனங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. ஒவ்வொரு வேலை நிறுத்தத்தையும் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்துக்குப் பயிற்சி அளிக்கும் பள்ளியாக மாற்றுவதே தங்கள் கடமை என அவை இப்போது உணர்ந்தன. சமூக-ஜனநாயகம் தொழிலாளர்களுடன் இணைந்து ஒரே வாழ்வு வாழத் தொடங்கியது. புரட்சிப் போராட்டத்தில் பல முன்னணித் தொழிலாளர்கள் உரம் பெற்றார்கள். பிற்காலத்தில் இவர்கள் கட்சிக்கும் சோவியத் அரசுக்கும் பிரபல தலைவர்கள் ஆனார்கள். உதாரணமாக, பீட்டர்ஸ்பர்க் கடைச்சல் பட்டடைத் தொழிலாளர் கலினின் பிற்காலத்தில் சோவியத் அரசின் தலைமை உறுப்பின் தலைவராக விளங்கினார். யெக்கத்தெரீனஸ்லாவ் பிட்டர் பெத்ரோவ்ஸ்கி உக்ரேனிய சோவியத் குடியரசின் தலைமை உறுப்புக்குத் தலைவர் ஆனார்.

லெனினது ''போராட்ட ஐக்கியம்'' சமூக-ஜனநாயக ஸ்தாபனங்கள் கட்சியில் ஒன்று சேர்வதற்குக் கொள்கை

வாத முன்னேற்பாடுகள் செய்தது. சமூக-ஜனநாயகவாதிகளின் முதல் காங்கிரஸ் 1898 மார்ச் மாதம் மீன்ஸ்க் நகரில் இரகசியமாக நடந்தது. இந்தக் காங்கிரஸ் ருஷ்யாவினது சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை ஸ்தாபித்தது. ருஷ்யாவின் மார்க்ஸீயக் கட்சி ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராட்டம் பிரிக்க முடியாதது என்பதை இந்தப் பெயரால் உறுதிப்படுத்தியது. தனது அணிகளில் ருஷ்யர்களை மட்டும் இன்றி, ருஷ்யாவின் எல்லா மக்கள் இனங்களையும் சேர்ந்த முற்போக்குத் தொழிலாளர்கள் சேர்ந்திருப்பதை இவ்வாறு அது எடுத்துக் காட்டியது. காங்கிரஸின் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. எதேச்சாதிகார நுகத்தை உடைத்து எறிவதும், அதன் பின் சோஷலிஸம் முழு வெற்றி அடையும்வரை முதலாளித்துவத்துடன் போராட்டத்தை இன்னும் ஊக்கத்துடன் தொடர்ந்து நடத்துவதுமே ருஷ்யாவினது பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள் என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்தது இந்த அறிக்கை.

வட்டார சமூக-ஜனநாயக ஸ்தாபனங்கள் காங்கிரஸை வரவேற்றன. அவை ருஷ்யாவினது சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் கமிட்டிகள் என்று அழைக்கப்பட்டன. ஆனால் இன்னும் உரம் பெறுத இளம் கட்சியின் மீது ஜார் ஆட்சி பல தாக்குதல்களை நடத்தியது. போலீஸ் பற்பல பிரபல சமூக-ஜனநாயகவாதிகளைப் பின் தொடர்ந்து தேடிக் கைது செய்தது. காங்கிரஸால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டி உறுப்பினர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டார்கள். எனவே மத்தியக் கமிட்டி தன் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தது. சமூக-ஜனநாயகவாதிகளுக்கு ஒன்றித்த செயல்திட்டமும் செயல்தந்திரமும் விதிகளும் இன்னும் அமையவில்லை. ஒன்றித்த, மையப்படுத்தப்பட்ட ஸ்தாபனம் எதார்த்தத்தில் இன்னும் நிலவவில்லை.

கட்சி பற்றி லெனினது போதனை

தொழிலாளி வர்க்கத்துக்குத் தேவையானது அரசியல் கட்சி அல்ல, பரஸ்பர உதவி நிதியும் தொழிற் சங்கங்களுமே என்றும், கட்சி தேவையாய் இருந்தாலும் கூட, தொழிலதிபர்களுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப்

போராட்டத்தில் தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டே என்றும் இந்தச் சங்கடமான நேரத்தில் சில குரல்கள் ஒலித்தன. எங்கோ தொலைவில் உள்ள சோஷலிஸத்தைப் பற்றி அல்ல, உடனடியாக நாள் வேலை நேரத்தைக் குறைப்பதையும் ஊதியத்தை அதிகரிப்பதையும் பற்றி மட்டுமே எண்ண வேண்டும் என்று இத்தகைய கருத்துக்களின் ஆதரவாளர்கள் கூறினர்கள். அரசியல் போராட்டத்தைப் பொறுத்தவரை, தொழிலாளர்கள் இன்னும் அதற்குப் பக்குவம் பெறவில்லை என்றும் பூர்ஷ்வாக்களே இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும் என்றும் இவர்கள் சொன்னார்கள். இவர்கள் ''பொருளாதாரவாதிகள்'' என அழைக்கப்பட்ட சந்தர்ப்பவாதிகள். ''ஐந்து காசுகளுக்காக'' பொருளாதாரப் போராட்டம் நடத்துவதற்கு மேல் போக இவர்கள் விரும்பவில்லை.

சமூக-ஜனநாயத்தில் புரட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கும் இடையே கடுமையான கொள்கைவாதப் போராட்டம் உக்கிரமாக மூண்டது. புரட்சிக்காரர்கள் சுரண்டலை ஒழித்துக் கட்டவும் சோஷலிஸ சமூகத்தை அமைக்கவும் பாடுபட்டார்கள். சந்தர்ப்பவாதிகளோ, முதலாளித்துவத்துக்குத் தங்களை இசைவித்துக் கொண்டார்கள், பூர்ஷ்வாக்களுடன் சமரசம் செய்துகொள்ளுமாறு தொழிலாளர்களை அழைத்தார்கள். ருஷ்ய சந்தர்ப்பவாதிகள் தனித்து இருக்கவில்லை. அந்தக் காலத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், மற்ற நாடுகளிலும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் முழுவதிலுமே சந்தர்ப்பவாதிகள் தலை தூக்கி இருந்தார்கள். இவர்கள் ரிவிஷனிஸ்டுகள்—திரிபுவாதிகள்—எனப்பட்டார்கள். ஏனெனில் இவர்கள் மார்க்ஸீயத்தை ரிவிஷன் (மறு பரிசீலனை) செய்ய வேண்டும் என்று கோரினர்கள், அது பழையது ஆகிவிட்டதாகக் கூறினர்கள், வர்க்கப் போராட்டத்தையும் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் நிராகரித்தார்கள். சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் இந்தத் திருப்பு முனையில் புரட்சிப் போராட்டத்தின் உலக அரங்கில் பிரவேசித்தார் மார்க்ஸ், எங்கெல்ஸ், இருவருடையவும் சீடரும் அவர்களுடைய பணியைத் தொடர்ந்து நடத்தியவரும் ஆன லெனின்.

அந்தக் காலத்தில் உலகப் புரட்சி இயக்கத்திலும் ருஷ்யாவின் புரட்சி இயக்கத்திலும் பல்வேறு ஸ்தாபனங்கள் நிலவி வந்தன. மார்க்ஸீய போதனையை ஆதாரமாகக் கொண்டு, வரலாற்று அனுபவத்தை விமர்சன நோக்குடன் ஆராய்ந்து, புது வகை அரசியல் ஸ்தாபனத்தை—தொழிலாளி வர்க்கக் கட்சியை—அமைப்பது அவசியமாய் இருந்தது. இந்தப் பணியையே லெனின் மேற்கொண்டார். பல வெளியீடுகளில், சிறப்பாக 1902லும் 1904லும் எழுதிய ''என்ன செய்வது?'' ''ஓர் அடி முன்னே, இரண்டு அடிகள் பின்னே'' என்னும் அருமையான நூல்களில் கட்சியையும் தொழிலாளர் இயக்கத்தில் அதன் பங்கையும் அதன் நடவடிக்கைகளுக்கும் ஒழுங்கமைப்புக்கும் உரிய கோட்பாடுகளையும் பற்றிய தம் கருத்துக்களை அவர் விளக்கி விவரித்தார்.

வரலாற்று அனுபவம் லெனினைப் பின்வரும் மிக முக்கியமான முடிவுக்கு இட்டு வந்தது: வரலாற்றில் எந்த ஒரு வர்க்கமும், இயக்கத்தை ஒழுங்கமைத்து, அதற்குத் தலைமை வகித்து நடத்திச் செல்லத் திறன் கொண்ட தன் முன்னணிப் பிரதிநிதிகளைத் தோற்றுவிக்கவில்லை என்றால் ஆட்சிப் பீடத்தை எட்டியதில்லை. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலைவன் மார்க்ஸீயக் கட்சியே.

கட்சி தொழிலாளி வர்க்கத்தின் அங்கம், அதன் முன்னணிப் படைப் பிரிவு. எல்லாத் தொழிலாளர்களையும், எல்லா உழைப்பாளிகளையும் உள் இழுத்துக்கொள்ள அதனால் முடியாது. பாட்டாளிகள் பல்வகைப் பட்டவர்கள். அவர்களில் பல படிவுகள் உண்டு. சிலர் அதிக அரசியல் உணர்வு உள்ளவர்கள், வேறு சிலர் குறைவான அரசியல் உணர்வு படைத்தவர்கள். முதலாளித்துவத்தால் ஓட்டாண்டிகள் ஆக்கப்படும் விவசாயிகளும் சிறு கைத்தொழிலாளர்களும் தொழிலாளி வர்க்கத்தை இடையறாது நிறைத்த வண்ணமாய் இருக்கிறார்கள். தொழிலாளர்களின் முன்னணிப் பகுதியினருக்கும் எஞ்சிய தொழிலாளி மக்கள் திரளுக்கும் இடையே வேறுபாடு நிலவுகிறது. எல்லோரிலும் அரசியல் உணர்வு மிக்கவர்களும் ஒழுங்கமைந்தவர்களும் தன்னலம் அற்றவர்களும் புரட்சிப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்து விட்டவர்

களும் ஆன தொழிலாளி வர்க்கத்தின் தலை சிறந்த மனிதர் களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு பாட்டாளி வர்க்கக் கட்சி அமைகிறது, வளர்கிறது.

தான்தோன்றியான தொழிலாளர் இயக்கத்துக்கு முன்னே சென்று அதற்கு வழி காட்டுவதும், போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிர்ப்படும் எல்லாக் கேள்விகளுக் கும் விடை அளிப்பதும், அதை ஒழுங்கமைப்பதும், பின்தங் கிய படிவுகளை அரசியல் உணர்வு பெற்றவர்களின் தரத்துக்கு உயர்த்துவதும் கட்சியின் பொறுப்பு ஆகும். லெனின் எழுதினார்: ''...முற்போக்குச் சித்தாந்தத்தை வழிகாட்டியாகக் கொண்ட கட்சிதான் முன்னணிப் படைவீரனின் பங்கை ஆற்ற முடியும்.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 6, பக்கம் 25). இத் தகைய முற்போக்குச் சித்தாந்தமாக, புரட்சி நடவடிக்கைக்கு நம்பகமான வழிகாட்டியாக விளங்குகிறது மார்க்ஸீயம். சமூக வளர்ச்சி, வர்க்கப் போராட்டம் ஆகியவற்றின் விதிகளை அறிந்திருப்பதால்தான் கட்சி தொழிலாளர் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்த வல்லதாய் இருக்கிறது.

தொழிலாளி வர்க்கம் சோஷலிஸத்தின் பொருட்டு மாபெரும் போராட்டம் நடத்தி வருகிறது. மனிதகுலத்தை சமுதாய, நாட்டின ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களி லிருந்தும் விடுவிக்க அது பொறுப்பு ஏற்றிருக்கிறது. எல்லா உழைப்பாளிகளையும் தன்னைச் சுற்றி ஒருங்கு திரட்ட வல்ல, சோஷலிஸ உணர்வு படைத்த தொழிலாளர்கள் தங்களுக்கு எவ்வளவு ஆபத்தானவர்கள் என்பதை ஆளும் சுரண்டுவோர் வர்க்கங்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கின்றன. ஏனெனில் எங்குமே உழைப்பாளிகள் பெரும்பான்மையினர், சுரண்டு வோர் சிறுபான்மையினர் தாம். ஆனால் இந்தச் சிறுபான் மையினர் பெரும்பான்மையினரைக் கீழ்ப்படிய வைப்பது பலத்தைக் கொண்டு மட்டுமே அல்ல. மக்களின் உள்ளங்களை அடிமைப்படுத்துவதற்கு உரிய பல்வேறு சாதனங்கள் பூர்ஷ்வாக்களிடம் உள்ளன. பள்ளி, தேவாலயம், பத்திரிகை கள், இலக்கியம், கலை ஆகியவற்றின் வாயிலாகப் பொது மக்கள் திரளைத் தம் செல்வாக்குக்கு உட்படுத்த அவர்கள் முயல்கிறார்கள்.

தொழிலாளி வர்க்கத்தை வலுவற்றது ஆக்கவும் பிளவு

படுத்தவும் பொய் வழியில் செலுத்தவும் பூர்ஷ்வாக்கள் கையாளாத சாதனங்கள் எவையும் இல்லை. இந்த இழி செயலில் பூர்ஷ்வாக்களுக்கு உதவுகிறார்கள் சந்தர்ப்பவாதிகள். தொழிலாளர்கள் மூலதனத்திற்கு எதிராகப் புரட்சிப் போராட்டம் நடத்தக் கூடாது என்றும், ஏனெனில் சோஷலிஸத்தை நிறுவுவதற்குத் தேவையானது புரட்சி அல்ல, பல் வேறுவகைச் சீர்திருத்தங்களே என்றும் தொழிலாளர்களுக்கு நம்பிக்கையூட்ட அவர்கள் முயல்கிறார்கள். செல்வம் படைத்த வர்க்கங்கள் உழைப்பாளிகளுக்கு இடையே பிளவு ஏற்படுத்தவும், தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் சச்சரவு மூட்டிவிடவும் முயற்சி செய்கின்றன. இவ்வாறே காலனி ஆட்சியாளர்களும் ஒரு மக்கள் இனத்தை மற்றொன்றுக்கு எதிராகத் தூண்டிவிட எத்தகைய இழிவான முறையையும் மேற்கொள்கிறார்கள், மனித இன, நாட்டின, இனக்குழு, மத வகைப்பட்ட வேறுபாடுகளைப் பயன்படுத்துகிறார்கள். ''பிளவு படுத்தி ஆட்சி செய்'' என்ற விதியை, சுரண்டுவோர் சமூகத்தில் எல்லாக் காலங்களையும் எல்லா மக்கள் இனங்களையும் சேர்ந்த ஆளுவோர் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். இப்போதும் சுரண்டுவோர் வர்க்கங்கள் அதே கொள்கையைப் பின்பற்றுகின்றன. தொழிலாளர்களையும் உழைப்பாளிகளையும் ஒரு நாட்டிற்குள் இருக்கும் மக்களையும் உலக மக்கள் அனைவரையும் நாட்டின, மனித இன, மத அடையாளங்களின் அடிப்படையில் வேறு பிரிக்க இந்த வர்க்கங்கள் முயல்கின்றன. பூர்ஷ்வாக் கொள்கைவாதத்துக்கும் அரசியலுக்கும் எதிரான போராட்டம் தொழிலாளி வர்க்கத்துக்கு ஜீவாதார முக்கியத்துவம் உள்ளது. இந்தப் போராட்டத்தை நடத்துகிறது மார்க்ஸீயக் கட்சி. அது பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சுதந்திரத்தை விழிப்புடன் பாதுகாக்கிறது, தொழிலாளி வர்க்கத்திற்கு சோஷலிஸ உணர்வை அயர்வின்றிப் புகட்டுகிறது.

சோஷலிஸப் புரட்சி மிக ஆழ்ந்த அடிப்படை மாற்றம், இந்தப் புரட்சியின்போது தொழிலாளி வர்க்கம் எல்லா உழைப்பாளிகளையும் சுரண்டப்படுவோரையும் சுரண்டலும் அநீதியும் நிறைந்த உலகுக்கு எதிரான இறுதிப் போரில் நடத்திச் செல்லும் என்று கண்டார் லெனின். தொழிலாளர்களைப்

புரட்சி உணர்வில் பயிற்றுவது கட்சியின் மிக முக்கியப் பொறுப்பு. மக்களின் முன்னணிப் படைப் பிரிவு என்று சொல்லிக் கொள்வது போதாது, எல்லோரும் இதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் செயல் ஆற்ற வேண்டும் என்றார் லெனின். எதேச்சாதிகாரமும் ஒடுக்குமுறையும் எந்த வர்க்கத்தை அல்லது சமூகப் பகுதியைப் பாதித்தாலும் சரியே, அவற்றை எதிர்க்கும்படி தொழிலாளர்களுக்குக் கற்பிப்பது கட்சியின் கடமை. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரனே மக்கள் உரிமைக் காவலன் என்று அழைத்தார் லெனின். சோஷலிஸக் கருத்துக்களைப் பிரசாரம் செய்யவும் ஜனநாயகக் கோரிக்கைகளை முன் வைக்கவும் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்தினது உலக வரலாற்று முக்கியத்துவம் என்ன என்று விளக்கவும் எந்தச் சந்தர்ப்பத்தையும் அவன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்கும் சக்தியான பாட்டாளி வர்க்கத்துக்கு ஸ்தாபனம் எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்பதை லெனின் போன்று புரிந்து கொண்டவர் எவரும் இல்லை. ''ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்குப் பாட்டாளி வர்க்கத்திடம் ஸ்தாபனத்தைத் தவிர வேறு ஆயுதம் கிடையாது'' என்று அவர் எழுதினார். (முழு நூல் திரட்டு, தொகுதி 8, பக்கம் 403). தனது சக்தி ஒழுங்கமைந்த ஸ்தாபனத்திலேயே இருக்கிறது, ஒன்றிணைந்த தொழிலாளர்கள் எல்லாம் வல்லவர்கள், தனித் தனி சிதறிய தொழிலாளர்களோ, எதற்கும் ஏலாதவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள வாழ்க்கையே தொழிலாளி வர்க்கத்துக்குக் கற்பிக்கிறது. கட்சியின் உயர்ந்த கடமையைப் பின் வரும் புகழ்பெற்ற சூத்திரத்தில் லெனின் வெளியிட்டார்: ''எங்களுக்குப் புரட்சிக்காரர்களின் ஸ்தாபனத்தைத் தாருங்கள், நாங்கள் ருஷ்யாவைத் தலைகீழாக்கிவிடுகிறோம்!'' (முழு நூல் திரட்டு, தொகுதி 6, பக்கம் 127). இத்தகைய ஸ்தாபனத்தின் இன்றியமையாமையை முந்திய புரட்சி அனுபவம் முழுவதும் விளக்கமாகக் காட்டியது. விறல்மிக்க அடக்குமுறை இயந்திரமும் உழைப்பாளிகளின் உள்ளங்களை அடிமைப்படுத்துவதற்கான அவ்வளவே வலிமையுள்ள சாதனங்களும் படைத்த சுரண்டுவோர் வர்க்கங்களின் அரசு

தொழிலாளி வர்க்கத்துக்கு எதிர்நின்றது. மையப்படுத்தப் பட்ட வலுவான கட்சி இல்லாமல் பாட்டாளி வர்க்கத்தால் வெற்றிபெற முடிந்திராது.

புரட்சிக்கே தம்மை அர்ப்பணித்துவிட்ட முழுநேரப் புரட்சிக்காரர்கள் கட்சியின் கருவாக விளங்குகிறார்கள் என்று கருதினர் லெனின். இவர்கள் கொள்கையில் அசை யாத பற்றுறுதி கொண்டவர்கள், விரிந்த அரசியல் அறிவும் அனுபவமும் வாய்ந்தவர்கள், தன்னலத் தியாகிகள், தொழி லாளி வர்க்கத்துக்குத் தம்மை உளப்பூர்வமாக அர்ப்பணித்து விட்டவர்கள். சட்டவிரோத நிலைமைகளில் போலீஸுக்கு எதிராகப் போராடும் திறமையும் இரகசிய நடவடிக்கைகளில் தேர்ச்சியும் சிறப்பாக முக்கியமானவை. லெனின் கருதிய மாதிரியான முழுநேரப் புரட்சிக்காரனுக்கும் மக்களோடு தொடர்பு இல்லாத சதியாலோசனைக்காரனுக்கும் பொது வான அம்சம் எதுவும் இல்லை. முழு நேரப் புரட்சிக்காரன் எப்போதும் மக்களின் நடுவே இருக்க வேண்டும், அவர் களுடைய தேவைகளை அறிய வேண்டும், அவர்களைத் தேவையான மனநிலையில் வைத்திருக்க வேண்டும், உழைப்பாளிகளின் அரசியல் உணர்வையும் அவர்களுடைய ஒழுங்கமைப்பையும் அவர்களுடைய புரட்சி விருப்பத்தையும் வளர்ப்பதில் முழு மனதுடன் ஈடுபட வேண்டும்.

சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைக்க முயலும் கட்சிக்கு அதற்கேற்ற ஸ்தாபனக் கட்டமைப்புக் கோட் பாடுகளும் தேவைப்படுகின்றன. கட்சியின் ஸ்தாபனக் கட்ட மைப்பினதும் கட்சியின் உள் வாழ்க்கையினதும் முக்கியக் கோட்பாடு ஜனநாயக மத்தியத்துவம் என்று லெனின் கருதினர். தனித் தனிக் குழுக்களின் ஒன்றுக்கொன்று தொடர்பு அற்ற நடவடிக்கைகள் ஒரு போதும் வெற்றி அளிக்க மாட்டா. எல்லாச் சக்திகளையும் ஒன்று திரட்டி, அவற்றை ஒரே குறிக்கோளை நோக்கிச் செலுத்துவது, தனித்தனிக் குழுக்களுடையவும் ஸ்தாபனங்களுடையவும் நடவடிக்கை களுக்கு ஒருமை அளிப்பது மையப்படுத்தப்பட்ட தலைமை ஒன்றால் மட்டுமே முடியும். மனிதர்கள் தங்கள் கொள்கைப் பற்று காரணமாக, தாமாகவே விரும்பிப் புரட்சிக் கட்சியில் சேருகிறார்கள். அவர்களுடைய ஒழுங்கமைப்பும் சித்தம்,

செயல் ஆகியவற்றின் ஒற்றுமையும் ஜனநாயக வழியில், அதாவது, கட்சியின் கொள்கையையும் திட்டங்களையும் கடமைகளையும் பற்றிக் கூட்டாக, ஒன்று சேர்ந்து விவாதிப்பதன் அடிப்படையில் அன்றி வேறு வழியில் ஏற்பட முடியாது.

ஒன்றித்த, மையப்படுத்தப்பட்ட கட்சி கட்டுப்பாடு இல்லாமல் நிலவ முடியாது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குப் பணிவது, கூட்டாக அங்கீகரிக்கப்பட்ட முடிவுகளுக்குக் கட்சியின் எல்லா உறுப்பினர்களும் நிபந்தனை இன்றிப் பொறுப்பு ஏற்பது என்பதே கட்டுப்பாட்டின் பொருள். கட்சிக்கு இன்றியமையாத ஒழுங்கமைப்பையும் செயல்களில் ஒருமுனைப்பாட்டையும் தருவது கட்டுப்பாடு தான். கட்சியின் உண்மையான ஒற்றுமை கொள்கைவாத ஒற்றுமை மட்டுமே அல்ல, ஸ்தாபன ஒற்றுமையும் ஆகும். கட்சியின் ஒவ்வோர் உறுப்பினருக்கும், அவர் எந்தப் பதவியை வகித்தாலும் சரியே, கட்டாயமான ஒன்றித்த கட்டுப்பாடு இல்லாமல் இந்த ஒற்றுமை சாத்தியம் இல்லை. கட்சிக் கட்டுப்பாடு குருட்டுத்தனமானதோ, இயந்திர ரீதியானதோ அல்ல, உணர்வுபூர்வமானது என்பதே அதன் வலிமை ஆகும். நடவடிக்கைகளில் ஒற்றுமை, விவாதத்திலும் விமர்சனத்திலும் சுதந்திரம்—இவ்வாறு தொழிலாளர் கட்சியில் கட்டுப்பாட்டை வரையறுத்தார் லெனின். தீர்மானங்களை விவாதிப்பதிலும் தயாரிப்பதிலும் கட்சியின் எல்லா உறுப்பினர்களும் ஊக்கமாகப் பங்கு கொள்கிறார்கள். தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின் அவர்கள் அச்சம் காரணமாக அன்றி உளப்பூர்வமாக அதை நிறைவேற்ற வேண்டும், ஒரே மனிதன் போலச் செயல் புரிய வேண்டும்.

இவ்வாறுக, ஜனநாயக மத்தியத்துவத்தின் பெருமை என்ன என்றால், மிகக் கண்டிப்பான மத்தியத்துவத்தையும் விரிவான கட்சி ஜனநாயகத்தையும், கட்சித் தலைமையின் விவாதத்துக்கு இடமற்ற அதிகாரத்தையும், அது கட்சி உறுப்பினர் திரளால் தேர்ந்தெடுக்கப்படுவதையும் அவர்களுக்கு விளக்கம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பதையும், கட்சிக் கட்டுப்பாட்டையும் கட்சி உறுப்பினர் திரளின் படைப்புச் செயலூக்கத்தையும் அது பொருத்தமாக இணைக்கிறது என்பதாகும்.

கட்சி பற்றிய லெனினுடைய கருத்துக்களைப் பின் வரு மாறு சுருக்கமாகத் தொகுத்து உரைக்கலாம்: கட்சி என்பது, புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தை ஒழுங்கமைப்பதும் அதற்குத் தலைமை வகிப்பதும் அதை வழிகாட்டி நடத்துவதும் ஆன சக்தி. கட்சி அமைக்கப்பட்ட காலப் பகுதியில் லெனின் அதைப் பற்றிய போதனையின் அடிப்படைகளை நிறுவினார். இந்த போதனை, புரட்சி அனுபவத்தாலும் சோஷலிஸ சமூகக் கட்டுமானத் தின் அனுபவத்தாலும் வளர்ந்து வளம் பெற்றது.

''இஸ்க்ரா''

இத்தகைய கட்சியின் அமைப்பை எதி லிருந்து தொடங்குவது? இதற்குப் பதில் அளிப்பதற்கு ருஷ்யாவில் நிலவிய ஸ்தூல நிலைமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது. ருஷ்யாவில் சமூக-ஜனநாயக ஸ்தாபனங்கள் ஒன்றிலிருந்து ஒன்று தனித்து இயங்கி வந்தன, வட்டார விவகாரங்களிலேயே அவை முழுமை யாக ஈடுபட்டிருந்தன. எனவே, ''எதிலிருந்து தொடங்கு வது?'' என்ற கேள்விக்கு, ''செய்தித் தாள் வெளியிடுவதி லிருந்து'' என விடை அளித்தார் லெனின். இந்தச் செய்தித் தாள் எல்லா மார்க்ஸீயவாதிகளையும், எல்லா முன்னணித் தொழிலாளர்களையும் ஒன்று திரட்டி ஒற்றுமைப்படுத்தும் மையமாக விளங்கும் என்றார் அவர். லெனின் ஸ்தாபித்த ''இஸ்க்ரா'' இத்தகைய செய்தித் தாள் ஆகியது. முதலாவது அகில ருஷ்ய மார்க்ஸீயச் செய்தித் தாள் ஆகிய ''இஸ்க்ரா'' 1900 டிசெம்பரில் வெளிவரத் தொடங்கியது. இது இரகசியமாக ருஷ்யாவுக்கு வெளியே அச்சிடப்பட்டு இரக சியமாக ருஷ்யாவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ருஷ்ய மார்க்ஸீயவாதிகளின் போராட்ட வெளியீடான ''இஸ்க்ரா'' தொழிலாளர்களுக்குப் புரட்சிப் பயிற்சி அளிக் கும் பள்ளியாக மாறிவிட்டது. இந்தச் செய்தித் தாள் வாழ்க் கையின் எல்லா அம்சங்களையும் பற்றி விரிவாக விளக்கியது, வட்டார நலன்களின் குறுகிய வட்டத்திலிருந்து தொழிலா ளர்களை வெளியே இட்டு வந்தது, அவர்களுடைய பொது அறிவு எல்லைகளையும் உள, அரசியல் ஆர்வத்தையும் விரிவு படுத்தியது. மிக எளிய, எல்லோருக்கும் தெரிந்த மெய் விவரங்களை ஆதாரமாகக் கொண்டு வாசகர்களுக்கு மார்க் ஸீயக் கருத்துக்களையும் பாட்டாளி மக்களின் அடிப்படை



Российская Социалдемократическая Рабочая Партія

ИСКРА

„Изъ искры возгорится пламя"
Отвѣтъ декабристовъ Пушкину.

ОТЪ РЕДАКЦІИ

Предпринимая изданіе политической газеты — „Искра", мы считаемъ необходимымъ сказать нѣсколько словъ о томъ, къ чему мы стремимся и какъ понимаемъ свои задачи.

Мы переживаемъ крайне важный моментъ въ исторіи русскаго рабочаго движенія и русской социалдемократіи. Послѣдніе годы характеризуются поразительно быстрымъ распространеніемъ социалдемократическихъ идей среди нашей интеллигенціи, а на встрѣчу этому теченію общественной мысли идетъ самостоятельно возникшее движеніе пробудившагося пролетаріата, который начинаетъ объединяться и бороться противъ своихъ угнетателей, начинаетъ съ жадностью стремиться къ соціализму. Кружки рабочихъ и социалдемократовъ интеллигентовъ появляются повсюду, распространяются мѣстные агитаціонные листки, растетъ спросъ на социалдемократическую литературу, далеко обгоняя предложеніе, а усиленныя правительственныя преслѣдованія не въ силахъ удержать этого движенія. Битковъ набитыя тюрьмы, переполненныя мѣста ссылки, чуть не каждый мѣсяцъ слышно о „процессахъ" во всѣхъ концахъ Россіи, о произволѣ администраторовъ, о конфискаціи литературы и типографій, но движеніе все растетъ, захватываетъ все больше районъ, все глубже проникаетъ въ рабочій классъ, все больше привлекаетъ общественное вниманіе. И все экономическое развитіе Россіи, вся исторія русской общественной мысли и русскаго революціоннаго движенія ручаются за то, что социалдемократическое рабочее движеніе будетъ расти несмотря ни всѣ препятствія и въ концѣ концовъ — преодолѣетъ ихъ.

Но, съ другой стороны, главная черта нашего движенія, которая особенно бросается въ глаза въ настоящее время, — его раздробленность, его, такъ сказать, кустарный характеръ: мѣстные кружки возникаютъ и дѣйствуютъ независимо другъ отъ друга и даже (что особенно важно) независимо отъ кружковъ, дѣйствующихъ въ тѣхъ же центрахъ: не устанавливается традиція, нѣтъ преемственности, и мѣстная литература всецѣло отражаетъ раздробленность и отсутствіе связи съ тѣмъ, что уже создано русской социалдемократіей.

Несомнѣнная связь этой раздробленности съ запросами, вызываемыми слабою и широкой движенія, создаетъ, по-

среди русскихъ социалдемократовъ, что узкой практицизмъ, оторванный отъ теоретическаго освѣщенія движенія въ его цѣломъ, грозитъ совсѣмъ движеніе изъ ложную дорогу, это фактъ; въ этомъ не могутъ усомниться люди, непосредственно знакомые съ подложеннымъ дѣло въ большинствѣ нашихъ организацій. Да есть и литературныя произведенія, подтверждающія это: стоитъ назвать хотя бы „Credo", вызвавшее уже вполнѣ законный протестъ. „Отдѣльное приложеніе къ Рабочей Мысли (сент. 1899)", столь рельефно выражавшее тенденціи, проникающія всю газету „Рабочая Мысль", или наконецъ — воззваніе петербургскій „Группы Самоосвобожденія Рабочаго Класса", составленное въ духѣ того же „экономизма". И совершенно неѣпно утвержденіе „Рабочаго Дѣла", что „Credo" представляетъ собою не больше какъ мнѣніе единичныхъ людей, что направленіе „Рабочей Мысли" выражаетъ лишь сумбурность и бестактность ея редакціи, а на особое направленіе въ самомъ ходѣ русскаго рабочаго движенія.

А рядомъ съ этимъ въ произведеніяхъ писателей, которыхъ читающая публика, съ большимъ или меньшимъ основаніемъ, считала до сихъ поръ видными представителями „легальнаго" марксизма, все болѣе и болѣе обнаруживается поворотъ къ возрѣніямъ, сближающимся съ буржуазной апологетикой. Результатомъ всего этого и является тотъ разбродъ и та анархія, благодаря которымъ мы живемъ или вѣрнѣе умираемъ безъ политики, перечисляя свои успѣхи, могъ печатно заявить, не встрѣчая возраженій, будто большинство дѣйствующихъ въ Россіи социалдемократовъ состоитъ изъ его послѣдователей.

Мы не хотимъ преувеличивать опасность положенія, не закрывать на нее глаза было бы немалѣйшимъ вредомъ: вотъ почему мы отъ всей души привѣтствуемъ рѣшеніе „Группы Освобожденія Труда" возобновить съ литературную дѣятельность и начать систематическую борьбу противъ поспѣшныхъ извращеній и ошибокъ социалдемократизма.

Практическій выходъ изъ всего этого такой: мы, русскіе социалдемократы, должны сплотиться и направить всѣ усилія на образованіе крѣпкой партіи, борющейся подъ единымъ знаменемъ революціонной социалдемократіи. Именно эта задача была намѣчена уже Съѣздомъ 1898 года, обязы-

РОССІЙСКАЯ СОЦІАЛЬ-ДЕМОКРАТИЧЕСКАЯ РАБОЧАЯ ПАРТІЯ

ИСКРА

„Изъ искры возгорится пламя!"...
Отвѣтъ декабристовъ Пушкину.

№ 1. ДЕКАБРЬ 1900 ГОДА. № 1.

НАСУЩНЫЯ ЗАДАЧИ НАШЕГО ДВИЖЕНІЯ

Русскіе социалдемократы не разъ уже заявляли, что ближайшей политической задачей русской рабочей партіи должно быть ниспровержение, завоеваніе политической свободы. Это заявляли больше 13 лѣтъ тому назадъ представители русской социалдемократіи, члены группы „Объ. Трудъ", это повторяли два съ половиной года тому назадъ и представители русскихъ социалдемократическихъ организацій, образовавшіе весной 1898 года Русскую Социалдемократическую Рабочую Партію. Но не смотря на это неоднократное заявленіе, которое и впослѣдствіи повторялось социалдемократами въ Россіи стоитъ констатировать въ настоящее время. Многіе представители нашего движенія выражаютъ сомнѣніе въ правильности указаннаго рабочей партіи. Говорятъ, что преобладающее значеніе должна имѣть экономическая борьба, отдѣляются на второй планъ политическія задачи пролетаріата, стушевываютъ и ограничиваютъ ихъ задачи извѣстнаго дѣла, что размѣры его образованія слишкомъ значительной рабочей партіи въ Россіи просто преждевременны теперь, что рабочимъ надо всѣми силами экономическую борьбу, придавливаетъ политическую интеллигенцію, въ какой съ либерализмъ. Это рѣшеніе заключаетъ въ себѣ самыя вѣрныя предсказанія тѣхъ, сколько уже одно изъ нихъ оправдалось: русскіе пролетаріи дѣйствительно выходятъ и въ самомъ отрицаніи социалдемократической программы и „Рабочая Мысль" (особенно въ послѣдніе). Противоречіе заключалось въ сущности въ томъ же смыслѣ. Русскій социалдемократъ перестаетъ признать важнѣйшій, передовой сознательный, дѣйствительно самостоятельно. Съ одной стороны мысль отъ передовыхъ представителей трудящагося класса города больше, чѣмъ въ другихъ странахъ, и что при такой отсутствіи русское революціонное движеніе осуждено на бѣдность. Отсюда слѣдуетъ стремленіе къ массамъ, желаніе не пропускать вступающій русскій пролетаріатъ, преклоненіе передъ стихійностью рабочаго движенія. Много уже сдѣлано въ этомъ отношеніи русской социалдемократіей, но еще большее остается сдѣлать. Съ ростомъ движенія повышаются требованія къ социалдемократіи: сознаніе все шире, работа все разнообразнѣе, отсюда новыя и болѣе сложныя задачи: сосредоточеніе своихъ силъ на осуществленіе ближайшихъ частныхъ задачъ, которыя подчиненіе повседневнымъ нуждамъ пролетаріата и отсюда. Это вполнѣ совершенно законное и неизбѣжное, но оно заставляетъ обращать особое вниманіе на то, чтобы частныя задачи не заслоняли основныхъ принциповъ борьбы, не вошищались въ нѣкоторомъ самодовольномъ отношеніи къ нимъ, чтобы частныя работы не возводились въ степень главной и единственной работы.

Сосредоточеніе политическому указанію и политической организаціи рабочаго класса — вотъ главная и основная задача. Взявъ, его подчеркнуть эту задачу по первой линіи, съ ея подчеркнуть ей всѣхъ частностей видитъ и ее для ближайшихъ цѣлей борьбы, тѣсно отношеніе ее живой нить и замѣтить отдѣльный путь движенія.

Отчленяетъ эту задачу, повторимъ, тѣ, кто съ сомнѣніемъ относится къ идеѣ политической организаціи, отчленяетъ, кто считаетъ возможнымъ и рѣшительно устроить рабочій „политическій" только въ политическомъ моментѣ

ность въ Россіи живого и сильнаго. И только тогда можно будетъ назвать пролетаріатъ русскаго рабочаго революціонеромъ Петра Алексѣева: „создавъ могущественную организацію рабочихъ людей, и ярко дисциплины, сознанія создателями сознательно, развитіемъ въ массахъ".

ВИЛЬГЕЛЬМЪ ЛИБКНЕХТЪ

(родился 29-го марта 1826 г., умеръ 7-го августа 1900 г.)

Со смертью сподвижника вождя германской социалдемократической революціонной пролетаріатъ всего міра лишился одного изъ своихъ наиболѣе послѣдовательныхъ и неутомимыхъ борцовъ въ революціонной. Не довелось ему это сто лѣтнему юношѣ, какъ гровитъ порывы переживать рабочаго вѣкъ социалдемократическій строй. Не только въ вѣкъ, конецъ Германіи, но и въ другихъ странахъ Европы, да по одной лишь Европѣ — и Америкѣ, Австраліи, и даже въ южной Африкѣ. Конецъ показали боевые сотрудничества международныхъ, въ которой принялъ участіе отецъ тысячъ, быть можетъ, самое названіе немецкаго рабочаго и представляющей рабочихъ партій Англіи, Франціи, Австріи, Венгріи, Бельгіи, Даніи и десяткомъ другихъ странъ. Но единодушныхъ заключеніемъ жизнь рабочаго класса, жизнь международнаго, выглядѣлись его матеріальныя, то изъ тѣхъ, съ которыми онъ работалъ, не удостоивался еще не одного, но самой интересной.

Вспомнимъ глубокое сказаніе происходящаго всего

நலன்களையும் தெளிவுபடுத்தியது ''இஸ்க்ரா''. பாட்டாளி மக்களுக்கு சோஷலிஸ உணர்வை அது இடையறாமல், விடாப் பிடியாகப் புகட்டியது, அவர்களுடைய போராட்டத்தை சோஷலிஸ ஆதர்சத்துடன் ஒன்று கலப்பதற்குப் பாடுபட்டது.

எதேச்சாதிகார அமைப்பை ''இஸ்க்ரா'' மக்கள் அனைவர் முன்பும் அம்பலப்படுத்தி விளாசியது. ஒடுக்குமுறையும் தான்தோன்றித் தனமும் எந்த விதத்தில் வெளிப்பட்டாலும் சரியே, ''இஸ்க்ரா'' அவற்றைப் பழித்து நிந்தித்தது. தொழிலாளர்மீது வன்முறை, விவசாயிகள் அவமதிக்கப்படுதல், ருஷ்யர் அல்லாத மக்கள் துன்புறுத்தப்படுதல், அறிவு ஜீவிகள் இகழ்ச்சிக்கு உள்ளாதல், பிற மதத்தினர் தொந்தரவு செய்யப்படுதல், எல்லாவற்றையும் அது கடுமையாகத் தாக்கிற்று. ''இஸ்க்ரா'' ஜாரின் எதேச்சாதிகாரம், போலீஸ் தான்தோன்றித் தனம், முதலாளித்துவச் சுரண்டல் ஆகியவற்றின்பால் வெறுப்பைத் தூண்டி விட்டது. அநீதி நிறைந்த சமூக அமைப்பிற்கு முடிவு கட்டும்படி அது அறைகூவி அழைத்தது. ஒவ்வொரு வன்முறை, ஒடுக்குமுறை நிகழ்ச்சிக்கும் எதிராகக் கிளர்ந்து எழுவதற்குத் தொழிலாளர்கள் பழக்கப்பட்டார்கள். விரிவான வெகுஜனங்கள் பாட்டாளி வர்க்கத்தைத் தங்கள் வழிகாட்டியாக மதிக்கப் பழகி விட்டார்கள்.

''இஸ்க்ரா'' பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் பிரசாரம் செய்தது. பிற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினுடைய நடவடிக்கைகளை அது ருஷ்யத் தொழிலாளர்களுக்கு நெருங்கியவை ஆக்கிற்று. சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டு உணர்ச்சியைத் தொழிலாளர்கள் உள்ளங்களில் வளர்த்தது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பிற்போக்கின் அரண்களில் ஒன்றான ஜார் ஆட்சியைக் கவிழ்ப்பது ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசீயக் கடமை என்று ''இஸ்க்ரா'' விளக்கியது. நாட்டின ஒடுக்குமுறை எந்த வடிவில் வெளிப்பட்டாலும் ''இஸ்க்ரா'' அதை முழு மூச்சாக எதிர்த்தது. காலனியாதிக்க ஆக்கிரமிப்புக்களையும் மக்கள் இனங்கள் ஒடுக்கப்படுவதையும் அது சிறிதும் விட்டுக் கொடுக்காமல் தாக்கியது.

மக்களின் எல்லா வர்க்கங்களிலும் சமூகக் குழுக்களிலும் உட்புகுந்து வேலை செய்யுமாறு ''இஸ்க்ரா'' சமூக-ஜனநாயக வாதிகளைப் பணித்தது. அதன் செல்வாக்கின் பயனாக ருஷ்யாவினது சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக் கமிட்டிகள் தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு வெளியே போய், உழைப்பாளிகளின் மற்ற வகுப்பாரிடையே வேலை செய்ய முதல் அடி எடுத்து வைத்தன. விவசாயிகளிடையே துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன, அவர்களிடையே பிரசார வேலை செய்யக் குழுக்கள் அமைக்கப்பட்டன. படைவீரர்களின் பாசறைகளில் புரட்சிப் பிரசார வேலை தொடங்கியது. மாணவர்களின் சமூக-ஜனநாயகக் குழுக்கள் அமைந்தன, உயர்நிலைப் பள்ளி மாணவர் வட்டங்கள் ஏற்பட்டன. வருங்காலப் பாதிரிகள் பயிற்றப்பட்ட மதப்பள்ளிகளில் கூட சமூக-ஜனநாயகவாதிகள் புகுந்துவிட்டார்கள். பூர்ஷ்வா மிதவாதிகளுக்கும் எதிர்ப்பு மனநிலை கொண்ட உயர்குடி நிலப்பிரபுக்களுக்கும் கூட ஜார் ஆட்சிமேல் இருந்த அதிருப்தியை அவர்கள் தங்கள் நடவடிக்கைகளில் பயன்படுத்திக் கொண்டார்கள்.

''இஸ்க்ரா'' ஒழுங்கமைப்பு மையம் ஆகி விட்டது. சமூக-ஜனநாயகத்தின் புரட்சிச் சக்திகள் அதைச் சுற்றித் திரண்டன. தன்னலம் இன்றி ஊக்கத்துடன் உழைத்தார்கள் ''இஸ்க்ராவின்'' ஏஜெண்டுகள். இவர்கள் அதன் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகள், அதன் கருத்துக்களைப் பரப்புபவர்கள். அந்தக் காலத்தில் சிறப்பாக அருந்தொண்டு ஆற்றினார்கள் பாபுஷ்கின் என்ற தொழிலாளரும் பௌமன் என்னும் அறிவுஜீவியும். வரவிருந்த புரட்சியின் பொருட்டு அரும் பணி ஆற்றிய இவர்கள் இருவரும் அது வெற்றி பெறும்வரை உயிர் வாழ்ந்திருக்கவில்லை. ஜாரின் கொலையாளிகள் பாபுஷ்கினைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். பௌமன், கூலிக்கு அமர்த்திய கொலைகாரனால் கொல்லப்பட்டார். ''இஸ்க்ரா'' தன் ஆதரவாளர்களை ஒரே அகில ருஷ்ய ஸ்தாபனமாக ஒன்றுபடுத்தியது. தனித் தனிப் பிரிந்த சமூக-ஜனநாயகக் குழுக்களுக்குப் பொதுக் கட்சி வேலையில் ஒன்றிணைவதற்கு உதாரணமாக விளங்கியது ''இஸ்க்ராவின்'' இந்தச் செய்கை. முழுநேரப் புரட்சிக்காரர்களின் ''இஸ்க்ரா'' ஸ்தாபனம்

கட்சியை அமைப்பதிலும் விரிவுபடுத்துவதிலும் மிகப் பெரிய பங்கு ஆற்றியது.

லெனினது ''இஸ்க்ரா'' எல்லா வித சமுதாய, நாட்டின ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடும் கட்சியை அமைத்தது. சமூக-ஜனநாயகத்தின் அணிகளில் கொள்கைவாத ஊசலாட்டங்களும் ஸ்தாபனக் குழப்பமும் நிலவிய சூழ்நிலையில், அதில் ''பொருளாதார வாதம்'' மேலோங்கி இருந்த போது, தனது ஏறத்தாழ மூன்று ஆண்டு நடவடிக்கையைத் தொடங்கியது ''இஸ்க்ரா''. புரட்சிகர மார்க்ஸீயத்தின் அடிப்படையில் சமூக-ஜனநாயகத்தின் கொள்கைவாத, ஸ்தாபன ஒற்றுமையை ஏற்படுத்தியது ''இஸ்க்ராவினது'' செயலின் விளைவாகத் திகழ்ந்தது. ''இஸ்க்ராவின்'' இந்த வெற்றியைக் கட்சிக் காங்கிரஸில் நிலைப்படுத்த வேண்டி இருந்தது.

போல்ஷிவிஸத்தின் தோற்றம். கட்சியின் முதல் செயல்திட்டம்

1903 ஆகஸ்டில் ருஷ்யாவுக்கு வெளியே (முதலில் பிரஸல்ஸ் நகரிலும் பின்பு லண்டனிலும்) இரகசியமாகக் கூடியது ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ். ருஷ்யாவின் எல்லாப் பெரிய நகரங்களையும் இயந்திரத் தொழில் பிரதேசங்களையும் சேர்ந்த சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்துகொண்டார்கள்.

நீண்ட விவாதங்களுக்கும் உக்கிரமான வாதப் போர்களுக்கும் பிறகு காங்கிரஸ் கட்சிச் செயல்திட்டத்தை உறுதிப்படுத்தியது. கட்சி எதற்காகப் போராடுகிறது என்பது இதில் தெளிவாக, திட்ட வட்டமாகக் கூறப்பட்டிருந்தது. ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் படைப் பிரிவுகளில் ஒன்று என்ற அறிக்கையுடன் தொடங்கிற்று செயல்திட்டம். அது இரு பகுதிகள் கொண்டிருந்தது. குறைந்தபட்சச் செயல்திட்டம் கட்சியின் அண்மை ஜனநாயகக் கடமைகளை விவரித்தது. அதிகபட்சச் செயல்திட்டம் அதன் இறுதிக் குறிக்கோளை — சோஷலிஸத்தை—வரையறுத்தது.

புரட்சியின் வாயிலாக ஜார் முடியரசைக் கவிழ்ப்பதும்

அதன் இடத்தில் ஜனநாயகக் குடியரசை நிறுவுவதும் தன் அண்மைக் கால அரசியல் கடமை என்று கட்சி பிரகடனம் செய்தது. பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

''எல்லா ஆண், பெண் குடிகளுக்கும் சர்வப் பொதுவான, சமமான, நேர்முக, இரகசிய வாக்குரிமை;

''விரிவான வட்டார சுயநிர்வாகம்;

''அதிக்கிரமிப்பிலிருந்து நபருக்கும் இருப்பிடத்துக்கும் பாதுகாப்பு;

''மனச் சான்றுக்கும் பேச்சுக்கும் அச்சு வெளியீடுகளுக்கும் கூட்டம் கூடுவதற்கும் வேலை நிறுத்தம் செய்வதற்கும் சங்கங்கள் அமைப்பதற்கும் தடையற்ற சுதந்திரம்;

''நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது;

''மத ஸ்தாபனங்களை அரசிலிருந்தும் பள்ளிகளை மத ஸ்தாபனங்களிலிருந்தும் பிரிப்பது;

''இரு பால்களையும் சேர்ந்த எல்லாக் குழந்தைகளுக்கும் 16 வயதுவரை இலவசமான கட்டாயப் பொதுக்கல்வியும் தொழிற் கல்வியும்''.

தொழிலாளி வர்க்கத்தை உடல், உளச் சீர்கேட்டிலிருந்து பாதுகாக்கவும் அதன் விடுதலைப் போராட்ட வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் ஆன கோரிக்கைகள்மீது கட்சி விசேஷ கவனம் செலுத்தியது. இவையாவன:

''எட்டு மணி நேர வேலை நாள்;

''பள்ளி செல்லும் வயதுக் குழந்தைகளின் உழைப்பைப் பயன்படுத்துவதற்குத் தடை;

''தீங்கு விளைக்கும் துறைகளில் மாதரின் உழைப்புக்குத் தடை, அவர்களுக்கு சம்பளத்துடன் பேறுகால விடுமுறை அளிப்பது, குழந்தைகள் நிலையங்கள் அமைப்பது;

''தொழிலாளர்களுக்கு முதுமையிலும் உழைப்புத் திறன் இழந்துவிடும் போதும் அரசுப் பராமரிப்பு;

''தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் தொழிற்சாலைப் பரிசோதனையும் சுகாதாரக் கண்காணிப்பும் இலவச மருத்துவ உதவியும் தொழிலதிபர்களின் செலவில் ஏற்படுத்துவது.''

வரலாற்றில் முதன் முறையாகத் தொழிலாளர் கட்சி விவசாயிகளின் தேவைகளைப் பரிவுடன் அணுகியது. நிலச்

சீர்திருத்தச் செயல்திட்டத்தின் கோரிக்கைகள் ஒரே நோக்கம் கொண்டிருந்தன. பண்ணையடிமை முறையின் கொடிய மீத மிச்சங்களை ஒழிப்பது, நாட்டுப் புறத்தில் வர்க்கப் போராட்ட வளர்ச்சியைச் சுளுவாக்குவது—இதுவே அந்த நோக்கம். அக்கோரிக்கைகளாவன:

''பண்ணையடிமை முறை ஒழிக்கப்பட்ட போது குடியானவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்கள் (''துண்டு நிலங்கள்'') அவர்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும்;

''குடியானவர்களுக்கு விடப்பட்ட நிலங்களுக்கு அவர்கள் ஈட்டுத்தொகை செலுத்துவது ரத்து செய்யப்பட வேண்டும், அரசு ஏற்கனவே பெற்றுள்ள தொகைகள் அவர்களுக்குத் திருப்பித் தரப்பட வேண்டும்;

''குடியானவன் தன் நிலத்தைப் பயன்படுத்துவதற்கு இடைஞ்சலாய் இருக்கும் எல்லாச் சட்டங்களும் ரத்து செய்யப்பட வேண்டும், அதாவது, தன் நிலத்தை விற்கவோ குத்தகைக்கு விடவோ குடியானவனுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்;

''மிக அதிகமான குத்தகைத் தொகையைக் குறைப்பதற்கும் தளைபூட்டும் ஒப்பந்தங்களைச் செல்லுபடி ஆகாதவை என்று அறிவிப்பதற்கும் நீதி மன்றங்களுக்கு உரிமை அளிக்கப்பட வேண்டும்.''

நாட்டுப்புறத்தின் உடனடித் தேவைகளைத் தீர்க்கும் பொறுப்பை குடியானவர்கள் கைகளிலேயே ஒப்படைப்பது—விவசாயிகள் கமிட்டிகள் அமைப்பது — அவசியமாய் இருந்தது. நிலச் சீர்திருத்தச் செயல்திட்டம் நிலப் பிரபுக்களுக்கும் ஜாருக்கும் எதிராகப் புரட்சிப் போராட்டம் நடத்துமாறு குடியானவர்களை அறைகூவி அழைத்தது.

நாட்டுப்புற வாழ்க்கையையும் விவசாயிகள் இயக்கத்தின் வளர்ச்சியையும் ஆழ்ந்து அறிந்து கொண்டதன் அடிப்படையில் கட்சி தனது நிலச் சீர்திருத்தச் செயல்திட்டத்தைச் செப்பம் செய்தது. நிலப்பிரபுக்களின் எல்லா நிலங்களையும் பறிமுதல் செய்ய வேண்டும், நாட்டில் உள்ள நிலங்கள் எல்லாவற்றையும் தேசிய உடைமை ஆக்கவேண்டும், அதாவது, நிலத்தின் மீது தனியார் சொத்துரிமையை அகற்றி

அதை ஜனநாயக அரசின் உடைமை ஆக்க வேண்டும் என்ற கோஷத்தை 1905ம் ஆண்டுப் புரட்சியின் போது போல்ஷிவிக்குகள் கிளப்பினார்கள். ருஷ்யாவில் இருந்த நிலைமைகளில் இதுவே நிலப் பிரச்சினைக்கு ஒரே சரியான இன்றியமையாத தீர்வாக விளங்கியது.

நாட்டினப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாவற்றிலும் ஜனநாயகத் தன்மை மிக்க செயல்திட்டத்தைக் கட்சி முன் வைத்தது. இதில் பின்வரும் கோரிக்கைகள் அடங்கி இருந்தன:

''அரசின் பகுதிகளான எல்லா நாட்டினங்களுக்கும் சுய நிர்ணய உரிமை;

''எந்த மனித இனத்தையும் நாட்டினத்தையும் சேர்ந்தவர்கள் ஆயினும் எல்லாக் குடிகளுக்கும் முழுமையான சம உரிமை;

''தனிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளும் மக்கள் தொகை அமைவும் கொண்ட பிரதேசங்களுக்குச் சுயநிர்வாக(சுயாட்சி) உரிமை;

''அரசின் செலவில் ஏற்படுத்தப்படும் பள்ளிகளில் தாய் மொழியில் கல்வி பெறும் உரிமை;

''வட்டார சமூக, அரசு நிலையங்கள் எல்லாவற்றிலும் தாய்மொழியைப் பயன்படுத்தும் உரிமை.''

இந்தச் செயல்திட்டம் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் நலன்களுக்கு முழுப் பாதுகாப்பு அளித்தது. அதன் முக்கியக் கோரிக்கை நாட்டினங்களின் சுயநிர்ணய உரிமை பற்றியது. இந்தக் கோரிக்கையின் பொருள் என்ன என்றால், தன் வாழ்க்கையைத் தான் விரும்பும் வகையில் அமைத்துக் கொள்ள—சுதந்திர அரசை ஸ்தாபித்துக் கொள்ளவோ, ருஷ்யாவின் பகுதியாக இருந்து வரவோ—ஒவ்வொரு நாட்டினத்துக்கும் உரிமை உண்டு என்பது ஆகும். தொழிலாளி வர்க்கத்தின், உழைப்பாளிகள் அனைவருடையவும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி இருந்தது. எல்லா நிலைமைகளிலும் மக்கள் இனங்கள் தாமாகவே விரும்பி ஒரே அரசாக ஒன்று இணைவதையே கட்சி ஆதரித்தது.

குறைந்தபட்சச் செயல்திட்டம் மொத்தத்தில் அரசு, சமூக வாழ்வு அனைத்தும் முழுமையாக ஜனநாயக ரீதியில்

அமைய வேண்டும் என்று கோரியது. இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுவது அதிகப்பட்சச் செயல்திட்டத்தில் கூறப்பட்ட சோஷலிஸத்துக்கான போராட்டத்துக்கு வாய்ப்பான நிலைமைகளை ஏற்படுத்தும்.

வரலாற்றில் யாவற்றிலும் புரட்சித்தன்மை மிக்க வர்க்கம் என்ற முறையில் **பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடுதலை பெற்றுத் தரும் பணி** பற்றிய கருத்து செயல்திட்டம் முழுவதிலும் இழையோடி இருக்கிறது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பு வரலாற்று நோக்கில் தவிர்க்க இயலாதது. சுரண்டல், ஒடுக்குமுறை ஆகியவற்றின் எல்லா வடிவங்களிலிருந்தும் விடுபட்ட சமூகத்தை அமைக்கும் மாபெரும் பணியைப் பாட்டாளி வர்க்கமே நிறைவேற்றும் என்று கூறியது செயல்திட்டம். புரட்சியின் வாயிலாக முதலாளித்துவத்தை ஒழிப்பது, சோஷலிஸப் புரட்சியை நிறைவேற்றிப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதுதான் சமூகத்தை மாற்றி அமைப்பதற்கான பாதை ஆகும். எல்லா உழைப்பாளி மக்களுக்கும் சுரண்டுவோர் சமூகத்தில் அவர்களது கதியற்ற நிலையையும், மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்குப் புரட்சி தவிர்க்க இயலாதது என்பதையும் விளக்கி, இந்த மாபெரும் குறிக்கோளை அடைய முன்வருமாறு கட்சி அவர்களை அழைத்தது.

ருஷ்ய மார்க்ஸீயவாதிகளது காங்கிரஸ் உலகிலேயே ஆகப் புரட்சிகரமான செயல்திட்டத்தை மேற்கொண்டது. மக்களுடையவும் நாட்டின் முற்போக்கு வளர்ச்சியினதும் நலன்களைப் பாதுகாக்கும் இத்தகைய கோரிக்கைகளை வேறு எந்த அரசியல் கட்சியும் முன் வைக்கவில்லை. அசாதாரணத் துணிவு மிக்க பணிகள் அடங்கிய தீர்மானம் இது. அந்தக் காலத்தில் ருஷ்யா வறுமையிலும் அறியாமையிலும் உழன்று கொண்டிருந்தது. ஆனால் லெனினும் ருஷ்ய மார்க்ஸீயவாதிகளும் நெடுந் தூரம் முன்னே பார்வை செலுத்தினர்கள்.

இத்தகைய செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கட்சியை அதற்கு ஏற்ப ஒழுங்கமைக்க வேண்டியிருந்தது. யார் கட்சி உறுப்பினர் ஆகலாம் என்ற பிரச்சினை குறித்துப் புரட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கும் காங்கிரஸில்

கடும் போராட்டம் நிகழ்ந்தது. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் கட்சி ஸ்தாபனங்கள் ஒன்றில் கட்டாயமாக உனுப்பினராக இருக்கவும் அதன் தலைமையின் கீழ் வேலை செய்யவும் வேண்டும் என்று லெனினும் அவருடைய ஆதரவாளர்களும் வலியுறுத்தினர்கள். கட்சியில் தேவையான ஒழுங்கமைப்பையும் கட்டுப்பாட்டையும் உறுதிப்படுத்தும் இந்தக் கோரிக்கை விவாதத்துக்கு இடம் அற்றது என்று தோன்றும். ஆனல் இதுவே தான் சந்தர்ப்பவாதிகளுக்குப் பாதகமாய் இருந்தது. எனவே, கட்சி ஸ்தாபனம் எதிலும் சேர விரும்பாதவர்கள், கட்சிக் கட்டுப்பாட்டைச் சுமையாகக் கருதுபவர்கள், வெறும் அனுதாபத்துடனும் உதவியுடனும் நின்று விடுபவர்கள் ஆகியவர்களையும் கட்சியில் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் யோசனை கூறினர்கள்.

கட்சியின் எல்லா நடவடிக்கைகளையும் புரட்சியின் திசையில் ஒருங்கிசைந்த முறையில் செலுத்த வல்ல தலைமையைத் தேர்ந்தெடுத்து விட்டுக் காங்கிரஸ் தன் காரியத்தை முடித்தது. அப்போது சந்தர்ப்பவாதிகள் தாங்கள் காங்கிரஸின் முடிவுகளுக்குக் கீழ்ப்படிய மறுப்பதாக அறிவித்து கட்சியில் பிளவு ஏற்படுத்தினர்கள். கட்சியின் மைய உறுப்புக்களுக்கு நடந்த தேர்தல்களில் பெரும்பான்மை பெற்ற லெனினது ஆதரவாளர்கள் போல்ஷிவிக்குகள் என்றும் அவர்களுடைய எதிர்த் தரப்பினர் மென்ஷிவிக்குகள்* என்றும் அழைக்கப்படலானர்கள். காங்கிரஸில் நடந்த வாதப் போர்களில் பிறந்த ''போல்ஷிவிக்'' என்னும் சொல், தொழிலாளி வர்க்கத்தின் பணிக்கு, கம்யூனிஸத்தின் பணிக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துவிட்ட, ஒருங்கிசைந்த மார்க்ஸீயவாதிப் புரட்சிக்காரன் என்று பொருள்படலுற்றது.

ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தினது புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியை—போல்ஷிவிக் கட்சியை—அமைத்தது

---

* போல்ஷிவிக் என்பது பெரும்பான்மை என்று பொருள்படும் ''போல்ஷின்ஸ்த்வோ'' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. மென்ஷிவிக் என்ற சொல் சிறுபான்மையைக் குறிக்கும் ''மென்ஷின்ஸ்த்வோ'' என்ற சொல்லிலிருந்து தோன்றியது.—(மொ-ர்.)

ருஷ்யாவினது சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் லெனின் உரையாற்றுகிறார். ருஷ்யாவில் புரட்சிகர மார்க்ஸீயக் கட்சிக்கு வித்திட்டது இந்தக் காங்கிரஸ்

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் நிறைவேற்றிய முக்கியச் செயல் ஆகும். ருஷ்யாவின் மார்க்ஸீயவாதிகளது இந்தக் காங்கிரஸ், மனிதகுல விடுதலைப் போராட்டத்தின் வீர வரலாற்றில் மதிப்புக்கு உரிய இடம் பெற்று விட்டது. ருஷ்யாவின் உழைப்பாளிகளை மட்டும் இன்றி உலகு அனைத்தின் உழைப்பாளிகளையும் கொந்தளிப்புக்கு உள்ளாக்கியிருந்த மிக உடனடிப் பிரச்சினைகள் அதில் தீர்க்கப்பட்டன.

கட்சியின் மறைமுக வாழ்க்கை

அந்தக் காலத்தில் சில ஆயிரம் பெயர் மட்டுமே கட்சியின் உறுப்பினராக இருந்தார்கள். நாட்டின் மக்கள் கடலில் இந்த எண்ணிக்கை ஒரு துளி மட்டுமே. நாட்டின் இன்றியமையாத தேவைகளையும் நாட்டின் வளர்ச்சி வாய்ப்புக்களையும் வேறு எந்தக் கட்சியையும்விட லெனினது கட்சி நன்றாக அறிந்திருந்தது. இதுவே அதன் சக்தி. புரட்சியை நடத்துவதற்குத் தான் மட்டும் முயற்சி செய்தால் போதாது என்பதை லெனினுடைய கட்சி அறிந்திருந்தது. தொழிலாளி

வர்க்கத்தினுடையவும் விவசாயிகள் சமூகத்தினுடையவும் நாட்டின் எல்லா முற்போக்குச் சக்திகளுடையவும் ஆதரவு இதற்குத் தேவைப்பட்டது. எனவேதான், தன் செயல் திட்டக் கோரிக்கைகள் சரியானவை என்பதைப் பொது மக்களின் உள்ளங்களில் **பதிய வைப்பதும்** அவற்றுக்குத் தொழி லாளர்களதும் விவசாயிகளதும் ஆதரவைப் பெறுவதும் தனது முக்கியக் கடமை எனக் கட்சி கருதியது. ஜனநாயக அமைப்பு உள்ள நாடுகளில் கட்சிகள் தங்கள் கொள்கையை விளக்குவதற்கு அச்சக வெளியீடுகளையும் கூட்டங்களையும் பொதுக்கூட்டங்களையும் விரிவாகப் பயன்படுத்தின. ருஷ்யாவில் இந்த நிலைமைகள் இல்லை. ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மறைமுகமாக நிலவியது.

ஜார் ஆட்சி ருஷ்யாவில் புரட்சிக்காரர்களின் வாழ்க்கை கடினமாய் இருந்தது, வேலை ஆபத்தாய் இருந்தது. எந்தக் கணத்திலும் அரசியல் போலீஸ் அவர்களைப் பிடித்துச் சிறை யில் தள்ளவோ, ''கண்காணாத இடத்துக்குக்'' கடத்தவோ முடியலாம். சிறப்பாகக் கடினமாய் இருந்தது சட்ட விரோத மான நபரின் வாழ்க்கை. கைது செய்யப்படும் அபாயம் காரண மாகவோ, சிறையிலிருந்தோ சிறைக் குடியிருப்பிலிருந்தோ தப்பி வந்த பிறகோ, சட்ட விரோதமான நிலைமையை வேறு வழியின்றி மேற்கொண்டு தலைமறைவாய் இருந்த புரட் சிக்காரர்கள் சட்ட விரோதமான நபர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். நிலையான இருப்பிடம் இன்றி, பொய்ப் பாஸ் போர்ட்டுடனே அல்லது எவ்விதப் பத்திரமும் இல்லாமலோ அவர்கள் இரவும் பகலும் இடைவிடாமல் புரட்சி வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் எத்தகைய இடர்ப்பாடுகளும் வறுமையும் புரட்சிக்காரர்களைத் தடை செய்ய முடியவில்லை. அவர்கள் பொதுமக்களை அணுக எங்கும் வழி கண்டார்கள். அன்றுட, சள்ளைபிடித்த புரட்சி வேலையின் வீரம் இது. இத் தகைய வாழ்க்கை நடத்துபவன் போலீஸாருடன் போராடத் திறமை உள்ளவனாகவும் உளவாளிகளுக்குக் கடுக்காய் கொடுக்கத் தெரிந்தவனாகவும் இரகசிய நடவடிக்கை விதி களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பவனாகவும் இருப்பது அவசியமாய் இருந்தது.

கட்சி ஸ்தாபனங்களில் உழைப்புப் பிரிவினை வழக்கில் இருந்தது. ஒவ்வொருவரது இயற்கைத் திறமைகளுக்கும் ஏற்ப, சிலர் பிரசாரகர்களாகவும், சிலர் கிளர்ச்சிக்காரர் களாகவும், வேறு சிலர் ஒழுங்கமைப்பாளர்களாகவும் இருந் தார்கள். வட்டங்கள் அமைப்பதும் அவற்றின் பயிற்சி வேலையை ஒழுங்காக நடத்துவதும் நகருக்கு வெளியே எங்கேனும் மறைவான ஒதுக்கிடத்தில் கூட்டங்கள் கூட்டுவதும் தொழிற் சாலை வாயிலில் தொழிலாளர்களைச் சில நிமிடங்கள் நிறுத்தி வைத்துச் சுருக்கமான சொற்பொழிவு ஆற்றுவதும் வீதி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும் போன்ற காரியங்களுக்கு ஆழ்ந்து யோசித்து முன்னேற்பாடு செய்வதும் சக்தியையும் நரம்பாற்றலையும் முழுமையாக ஈடுபடுத்துவதும் தன்னையே தியாகம் செய்வதும் இரகசிய வேலைகளில் தேர்ச்சி பெற் றிருப்பதும் அவசியமாய் இருந்தன. ஒற்றர்களை வேவுபார்ப் பதற்கும் பாஸ்போர்ட்டுகளும் பிற பத்திரங்களும் தயாரிப் பதற்கும் பெறுவதற்கும் தனித் தனிக் குழுக்கள் அமைக்கப் பட்டன.

கட்சித் தொழில் நுணுக்கம் எனப்பட்டதன்பால் விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. இரகசிய அச்சகங்கள் அமைப் பது, கட்சிப் பிரசுரங்களை வைத்திருக்கக் கிட்டங்கிகளுக் கும் இரகசிய இருப்பிடங்களுக்கும் ஏற்பாடு செய்வது— இதுவே கட்சித் தொழில் நுணுக்கம் எனப்பட்டது. இத்தகைய இரகசிய இருப்பிடங்கள் வட்டங்களின் வேலைக்கும் கமிட்டிக் கூட்டங்களுக்கும் கட்சிக் கூட்டங்களுக்கும் தேவைப்பட்டன. சந்திப்பு இடங்கள் கண்டிப்பாக இரகசியமாக வைக்கப்பட் டிருந்தன. இந்த இடங்களில் தகவல்களும் பொறுப்புக் கட்டளைகளும் கொடுக்கப்பட்டன, மையத்திலிருந்தோ வேறு நகரத்திலிருந்தோ வந்த தோழர்களுடன் சந்திப்புக்கள் நிகழ்ந்தன. சந்திப்பு இடங்களுக்கு வருபவர்களைச் சரி பார்ப்பதற்காகக் குறிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன.

இரகசிய அச்சகங்கள் விஷயத்தில் தனிப்பட்ட அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டது. இவற்றில் துண்டுப் பிரசுரங் களும் செய்தித் தாள்களும் கைப்புத்தகங்களும் அச்சிடப் பட்டன. அச்சகத் தொழிலாளர்கள் உண்மைத் துறவிகளாக இருந்தார்கள். அவர்கள் அரிதாகவே எப்போதாவது, அதி

லும் இரவில் மட்டுமே, காலாற நடக்கவும் தூய காற்றைச் சுவாசிக்கவும் தங்கள் இரகசிய இடங்களிலிருந்து வெளியே சென்றார்கள். சில அச்சகங்கள் பெரும் புகழ் பெற்றன. இவற்றில் ஒன்று த்பிலீஸி நகரில் இருந்த ''நீனு'' அச்சகம். போலீஸ் நகர் முழுதும் சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்தும் பல ஆண்டுகள் கட்சிப் பணிக்குத் தொண்டு ஆற்றிய இந்த அச்சகத்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.

கட்சி இலக்கியத்தை வாசகர்களுக்கு—தொழிலாளர்கள், விவசாயிகள், படையினர், அறிவுஜீவிகள் ஆகியோருக்கு—வழங்குவது மிகக் கடினமாய் இருந்தது. பல நூல்கள் ருஷ்யாவுக்கு வெளியே அச்சிடப்பட்டன. அரசியல் போலீஸின் பெரும் படையால் பாதுகாக்கப்பட்ட அரசு எல்லையை ஊடுருவி இந்த நூல்களை ருஷ்யாவுக்குள் கொண்டுவர வேண்டியிருந்தது. ஆனால் அத்துடன் கவலை தீர்ந்துவிடவில்லை. ருஷ்யாவுக்குள் கொண்டுவரப்பட்ட நூல்கள் இரகசியக் கிட்டங்கிகளில் சேர்க்கப்பட்டன. ஏஜெண்டுகள் வந்து நாடு முழுவதிலும் அவற்றை எடுத்துப்போய்ப் பரப்பினர்கள். நாட்டுக்கு உள்ளே அச்சிடப்பட்ட செய்தித் தாள்களும் பிரகடனங்களும் பெருத்த ஆபத்துக்கிடையே விநியோகிக்கப்பட்டன. இந்த வேலைக்காக அஞ்சல் குழுக்கள் அமைக்கப்பட்டன.

கட்சி மையத்துடனும் மற்ற இடங்களில் இருந்த ஸ்தாபனங்களுடனும் நிரந்தரத் தொடர்பை நிர்வகிப்பது சுலபமாயில்லை. பெரும்பாலும் இந்தத் தொடர்பு கடிதப் போக்குவரத்து மூலம் வைத்துக் கொள்ளப்பட்டது. கடிதப் போக்குவரத்தோ, முகவரியாளர்கள் வெளிப்பட்டு விட்டதாலோ, கட்டாயம் காரணமாகக் குடிபெயர்ந்ததாலோ கைது செய்யப்பட்டதாலோ அடிக்கடி இடை முறிந்தது. கடிதங்கள் குறியீட்டுச்சொற்களால் மறைபொருளாக எழுதப்பட்டு, போலீஸின் சந்தேகத்தைக் கிளப்பாத முகவரிக்கு அனுப்பப்பட்டன.

அப்படியும் ஒரு புரட்சிக்காரர் போலீஸின் கைகளில் சிக்கி நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டால், பகிரங்க நீதிமன்ற விசாரணையைப் புரட்சியின் நலன்களுக்காகப் பயன்படுத்த அவர் முயன்றார். ஜாரின் குற்றத்தன்மை கொண்ட எதேச்சாதிகாரத்தையே கைதிக் கூண்டில் ஏற்ற அவர் முயற்சி செய்தார்.

அத்தியாயம் இரண்டு

ஜார் ஆட்சியும் முதலாளித்துவமும் கவிழ்த்தப்படுதல்

முதல் புரட்சியின் நெருப்பில்

ருஷ்யாவில் மார்க்ஸீயக் கட்சி வர்க்கப் போராட்டங்களில் வளர்ந்து உரம் பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டில் புரட்சி நிலைமை உருவாயிற்று. விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையே, தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே, ஒடுக்கப்பட்ட நாட்டினங்களுக்கும் ருஷ்ய நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே, உரிமைகள் அற்ற மக்களுக்கும் அவர்களை எள்ளி நகையாடிவந்த ஜாருக்கும் இடையே முரண்பாடுகள் பல பத்தாண்டுகளாக வளர்ந்து திரண்டு விட்டிருந்தன. இப்போது இந்த முரண்பாடுகள் வெளிப்பட்டன.

புரட்சி முதிர்கிறது

1900-1903ல் திடீரென்று பரவிய உலகப் பொருளாதார நெருக்கடி ருஷ்யாவை மிகவும் பாதகமாகப் பீடித்தது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் மூடப்பட்டன, தொழிலாளிகள் வீதிகளில் விரட்டப்பட்டார்கள். போதாக்குறைக்கு 1901ல் நாட்டுப்புறத்தில் பஞ்சம் தலைவிரித்தாடியது. வேலையற்ற ஆயிரமாயிரம் உழைப்பாளிகள் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பினார்கள், கிராமங்களிலிருந்தோ, பஞ்சம் மக்களை நகரங்களுக்கு விரட்டியது. உழைப்பாளி மக்களின் துன்பம் எல்லையை எட்டி விட்டது.

1901ம் ஆண்டின் ஆரம்பத்தில் தொழிலாளர்களும் மாணவர்களும் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, பிற பெரிய நகரங்கள் ஆகியவற்றின் வீதிகளில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தினர்கள். ''எதேச்சாதிகாரம் ஒழிக!'' என்ற கோஷம் ஊர்வலங்களில் வானளாவ முழங்கிற்று. ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் பலவந்தமாகத் துரத்தியடிக்கப்பட்டார்கள். நகரங்களின் வீதிகள் குருதிப் பெருக்கால் செந்நிறம் அடைந்தன. ஆயினும் இதனால் தொழிலாளர்களை நிறுத்த முடியவில்லை. ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நாடு எங்கும் பெருவெள்ளமாய்ப் பெருகின. வழக்கமாகத் தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கைகளை ஒட்டி நடைபெறும் வேலை நிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்களுடன் கலந்து அரசியல் தன்மை பெற்றன. 1903 கோடையில் போராட்டம் நாட்டின் தென் பகுதி முழுவதிலும் பரவியது. காக்கேஷியப் பிரதேசத்திலும் உக்ரேனிலும் பொது அரசியல் வேலை நிறுத்தங்கள் நடந்தன. இவற்றில் பொருளாதாரக் கோரிக்கைகளும் அரசியல் கோரிக்கைகளும் கலந்து ஒன்றுயின.

1901ல் முதல் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கியபோது, புரட்சி நடப்பதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் அல்லது ஆண்டுகள் பாக்கி இருந்தன என்பது சமூக-ஜனநாயகவாதிகளுக்குத் தெரியவில்லை. ஒன்றை மட்டும் அவர்கள் திண்ணமாக அறிந்திருந்தார்கள். தங்கள் இடம் பொது மக்கள் திரளுக்கு நடுவே, தங்கள் கடமை மக்கள் திரளைப் போராட்டத்துக்குத் தூண்டி ஊக்குவது என்பதே அந்த விஷயம். ஆனால் அந்தக் காலத்தில் நரோதிஸக் கருத்துக்களைப் பின்பற்றியவர்கள் அமைத்த சோஷலிஸ்ட்-புரட்சியாளர்கள் கட்சி ஜாருக்கும் அவனுடைய அதிகாரிகளுக்கும் எதிராகத் தனி நபர் பயங்கரவாதச் செயல்களே முக்கியச் சாதனம் என்று பிரசாரம் செய்து வந்தது. இந்தச் செயல் தந்திரம் மக்களை நேர் வழியிலிருந்து பிறழ வைத்தது. சோஷலிஸ்ட்-புரட்சியாளர்களின் துர்ச்சாகசப் போக்கை சமூக-ஜனநாயகவாதிகள் தீவிரமாக எதிர்த்தார்கள். தனிநபர் பயங்கரவாதச் செயல் புரட்சிக்காரர்களின் கவனத்தை முக்கிய நோக்கத்திலிருந்து — ஜார் ஆட்சி மீது பொது மக்களின் தாக்குதலுக்கு ஆயத்தம் செய்வதிலிருந்து— திருப்பிவிடும் என்று

அவர்கள் சான்று காட்டினர்கள். சமூக-ஜனநாயகவாதிகள் வெகுஜனப் போராட்டச் சாதனங்களை — வேலை நிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் — மேற்கொள்ள அழைத்தார்கள், அவற்றை ஒழுங்கமைத்து நடத்தினர்கள், போராட்டத்தின் படிப்பினைகளைப் பொது மக்களுக்குக் கற்பித்தார்கள். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக் கமிட்டிகள் பொது மக்களைத் தலைமை தாங்கி நடத்துவதில் அனுபவம் திரட்டின.

நகரத் தொழிலாளர்களின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் நீரில் எறிந்த கல்லிலிருந்து கிளம்பிப் பரவும் அலைகள் போல நாடு எங்கணும் பரவி மக்களிடையே பரபரப்பு ஏற்படுத்தின. வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்ளும்படி பிரசாரம் செய்வதற்காக சொந்த கிராமங்களுக்கு அனுப்பப்பட்ட தொழிலாளியின் பேச்சை நாட்டுப்புற மக்கள் கவனமாய்க் கேட்கலானார்கள். நகரத்துக்கு வந்த விவசாயியும் பாட்டாளி வர்க்கத்தின் கிளர்ச்சி நடவடிக்கைகளை உற்று நோக்கி, பின்னர் தன் கிராமவாசிகளுக்கு அவற்றைப் பற்றிக் கூறினான். ஒடுக்குவோருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த தொழிலாளி குடியானவனுக்கு உதவினான். 1902 வசந்தத்தில் நாட்டின் தென் பகுதியில் விவசாயிகள் கிளர்ச்சிகள் மூண்டெழுந்தன. குடியானவர்கள் நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளில் தாக்கிப் புகுந்து, நிலப்பிரபுக்களின் தானியச் சேமிப்புக்களையும் கால் நடைத் தீவனச் சேமிப்புக்களையும் கைப்பற்றினர்கள். குடியானவர்களை ஒடுக்குவதற்காகப் பதினாயிரத்துக்கும் மேல் ஜாரின் துருப்புக்கள் அனுப்பப்பட்டன. கிளர்ச்சி நடந்த பிரதேசம் போர்க்களத்தைப் போல் காட்சி அளித்தது. ஆனால் இது அரசியல் உணர்வு அற்ற மக்கள் திரளின், தெளிவான அரசியல் கோரிக்கைகள் இல்லாத, அதாவது, அரசு அமைப்பை மாற்றும் கோரிக்கைகள் இல்லாத கிளர்ச்சி. இது தானே மூண்டு எழுந்தது. நகரத் தொழிலாளர்களுடன் விவசாயிகளின் ஐக்கியம் இன்னும் ஏற்படவில்லை. இந்தக் காரணங்களால் விவசாயிகளின் கிளர்ச்சி வேறு வழி இன்றித் தோல்வியில் முடிந்தது.

1904 ஜனவரியில் மூண்ட ருஷ்ய-ஜப்பானியப் போர் நாட்டில் இருந்த நிலைமையை ஒரேயடியாகத் தீவிரப்படுத்தியது. இது இரு தரப்பிலும் நாடுபிடிப்பதற்கான, சூறையாடும் போராக விளங்கியது. ஜாரின் சைனியம் நன்கு பயிற்சி அளிக்கப்படவில்லை. அதைத் தலைமை தாங்கி நடத்திய ஜெனரல்களும் படை அதிகாரிகளுமோ, மந்த புத்தி உள்ளவர்கள், கல்வி அறிவு அற்றவர்கள். எனவே அது தோல்வி அடைந்தது. இந்த யுத்தம் மக்கள் மீது புதிய துன்பங்களைச் சுமத்தியது. ஏராளமான மனித உயிர்களை அது பலி கொண்டது. போர் பொருளாதாரத்தை நிலைகுலைத்தது, அரசாங்கப் பொக்கிஷத்தை வெறுமை ஆக்கிற்று. விலைகள் விஷம்போல ஏறித் தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சகிக்க இயலாதது ஆக்கின. இளைஞர்கள் படையில் சேர்க்கப்பட்டு விட்டதால் விவசாயிகள் குடும்பங்களில் உழைக்க ஆட்கள் இல்லை. நாட்டுப்புறத்தில் முனகல்களும் அதிருப்தியும் தோன்றின. போர்மக்களின் பொறுமையைச் சோதிக்கும் கடைசித் துளி ஆயிற்று. ருஷ்யா புரட்சியின் தலை வாயிலில் நின்றது.

ஒரு சிறு உந்தல் தான் தேவைப்பட்டது. 1905, ஜனவரி 9ந் தேதி நிகழ்ச்சிகள் இத்தகைய உந்தலாகப் பணி ஆற்றின. பீட்டர்ஸ்பர்க் நகரின் ஆகப் பெரிய தொழிற்சாலையான புத்திலவ் தொழிற்சாலையில் ஜனவரி மாதத் தொடக்கத்தில் வேலை நிறுத்தம் தொடங்கியது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட சில தொழிலாளர்களின் சார்பில் தொழிலாளர்கள் செயலில் இறங்கினர்கள். மற்றத் தொழிற்சாலைகளும் ஆலைகளும் புத்திலவ்காரர்களை ஆதரித்தன. பீட்டர்ஸ்பர்க் கொந்தளித்தது.

இந்த நிகழ்ச்சிகளுக்கு முன்பே பாதிரி கப்போன் என்பவன் போலீஸின் கட்டளைப்படி தொழிலாளர்களைப் புரட்சிப் போராட்டத்திலிருந்து திசை திருப்பும் நோக்கத்துடன் ஒரு ஸ்தாபனம் அமைத்திருந்தான். ஜார் வசித்து வந்த பனிக்கால அரண்மனைக்குத் திரண்டு சென்று மக்களின் தேவைகள் பற்றி விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம் என்று அவன் யோசனை கூறினான். ஜார் இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவான் என்று தொழிலாளர்களுக்கு நம்பிக்கை ஊட்டினான் பாதிரிகப்போன். தொழிலாளர்கள் அவனது வஞ்சத் தூண்டலுக்கு



1905, ஜனவரி 9ந் தேதி, பீட்டர்ஸ்பர்க் பனிக்கால அரண்மனை அருகே தொழிலாளர்களின் அமைதியான ஊர்வலத்தின் மீது ஜாரின் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள்

உட்பட்டுவிட்டார்கள். ஜார் மன்னன் ''நல்லவன்'' என்றும், மக்களைச் சூறையாடும் அதிகாரிகள் அவனை ஏமாற்றுவதாகவும் இன்னமும் பலர் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஜார் இரத்த பலி வாங்குவான் என்று போல்ஷிவிக்குகள் எச்சரித்தார்கள். ஆனால் போலீஸின் சூழ்ச்சியை அவர்களால் இடைமுறிக்க முடியவில்லை. எனவே, விண்ணப்ப ஊர்வலத்தில் கலந்து கொள்வது, மக்களோடு சேர்ந்து இருப்பது, பொது மக்களின் வெகுளித்தனமான முடியரசுப் பற்றை அம்பலப் படுத்துவது என்று போல்ஷிவிக்குகள் முடிவு செய்தார்கள்.

ஜனவரி 9ந் தேதி ஞாயிறன்று 140 ஆயிரத்துக்கும் மேல் தொழிலாளர்கள் மனைவிமாருடனும் குழந்தைகளுடனும்

விழா உடைகள் அணிந்து, தெய்வப் படங்களையும் சிலுவை களையும் ஜாரின் உருவப் படங்களையும் ஏந்தியவாறு ஜாரின் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்கள். அமைதியான இந்த ஊர்வலத்தினர்மீது படையினர் ஜாரின் கட்டளைப்படி பீரங்கிகளிலிருந்து குண்டுகளைப் பொழிந்தார்கள், வாட்க ளாலும் சவுக்குக்களாலும் அவர்களைத் தாக்கினர்கள். பல ஆயிரம் பெயர் கொல்லவும் காயப்படுத்தவும் பட்டார்கள்.

அன்று முதல் ஜனவரி 9ம் தேதி ''இரத்த ஞாயிறு'' என்று பெயர் பெற்று விட்டது. அந்த நாள் ருஷ்யாவின் தொழிலா ளர்களை அரசியல் விழிப்பு அடையச் செய்தது. ஜாரும் அவனது அரசாங்கமும் யாருடைய நலன்களைப் பாதுகாக்கிறார்கள்



குதிரைப் போலீஸ் படையினர் வேலைநிறுத்தக்காரர்களை அடித்து விரட்டுகிறார்கள்

என்பதைத் தொழிலாளர்கள் புரிந்துகொண்டார்கள். ஜார் மேல் மக்களுக்கு இருந்த நம்பிக்கை குண்டுகளுக்கு இரையாகி விட்டது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் பயிற்சி ஒரே நாளில் வெகு தூரம் முன்னேறிவிட்டது.

ஜார் ஆட்சியின் இரத்தமயமான கொடுஞ்செயலுக்கு விடையாக நாடு முழுவதிலும் எதிர்ப்பு வேலை நிறுத்தங்கள் நடந்தன. ஜனவரி மாதத்தில் மட்டும் 440 ஆயிரத்துக்கும் மேல், அதாவது, முந்திய பத்தாண்டுக் காலம் முழுவதையும் விட அதிகமான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். பெருந் திரளான தொழிலாளர்களின் வேலை நிறுத்த அலைகள் விவசாயி வெகுஜனங்களையும் இயக்கின. ருஷ்யாவில் புரட்சி தொடங்கிவிட்டது.

புரட்சித் தலைமை பற்றிய லெனினது போதனை

பாட்டாளி வர்க்கக் கட்சி புரட்சியில் தான் நடந்துகொள்ளும் போக்கை வரையறுக்க வேண்டியிருந்தது. இதற்கு, ருஷ்யாவில் நடக்கும் புரட்சி எப்படிப்பட்டது, அதன் தன்மை என்ன, அதை இயக்கும் சக்திகளும் வருங்கால வாய்ப்புக்களும் யாவை, புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் யாவை என்று புரிந்துகொள்ள வேண்டியிருந்தது.

1905ம் ஆண்டு வசந்தத்தில் லண்டன் மாநகரில் கூடிய ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மூன்றாவது காங்கிரஸ் புரட்சியில் கட்சியின் போக்கை வகுத்தது. புரட்சி நடந்துகொண்டிருந்தபோது இன்னும் இரண்டு கட்சிக் காங்கிரஸ்கள்—நான்காவது காங்கிரஸ் 1906லும் ஐந்தாவது காங்கிரஸ் 1907லும்—நடந்தேறின. மாறிய போராட்ட நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கட்சியின் செயல் தந்திரம் இவற்றில் துல்லியமாகத் திட்டப்படுத்தவும் விரிவாக்கவும் பட்டது. புரட்சியில் போல்ஷிவிக்குகளின் நிலையை லெனின் பல நூல்களில், சிறப்பாக, ''ஜனநாயகப் புரட்சியில் சமூக-ஜனநாயகத்தின் இரண்டு செயல் தந்திரங்கள்'' என்னும் அருமையான நூலில் ஆதாரம் காட்டி விளக்கினார். இந்த நூல் 1905ல் வெளியாயிற்று.

லெனின் பின்வருமாறு விளக்கினார்: ருஷ்யாவில் நடப்பது பூர்ஷ்வாப் புரட்சி. ஜாரின் எதேச்சாதிகாரத்தையும் பண்ணை

யடிமை முறையின் மீத மிச்சங்களையும் ஒழிப்பது இதன் நோக்கம். இந்தப் புரட்சியின் நேரடிக் கடமை முதலாளித்துவ அமைப்பை ஒழித்து சோஷலிஸத்தை நிலைநாட்டுவது என்று எண்ணுவது சரி அல்ல. புரட்சியின் தன்மை புறநிலைக் காரணங்களால் நிச்சயிக்கப்படுகிறதே அன்றி தனி நபர்கள், குழுக்கள் அல்லது கட்சிகளின் விருப்பங்களால் அல்ல. விருப்பத்தை எதார்த்தமாக எண்ணிவிடுவது எல்லாவற்றிலும் நாசகரமானது. தொழிலாளி வர்க்கம் இன்னும் போதிய அரசியல் உணர்வோ ஒழுங்கமைப்போ பெற்றிருக்கவில்லை. பெருந்திரளான தொழிலாளர்கள் சோஷலிஸத்தின் குறிக்கோள்களையோ அதைச் செயல்படுத்தும் முறைகளையோ பற்றிக் குறைவாகவே அறிந்திருந்தார்கள். விவசாயிகளோ, சோஷலிஸ போதனையைப் புரிந்து கொள்ள இன்னும் திறன் அற்றவர்களாய் இருந்தார்கள். நாட்டுப்புறத்தில் இன்னும் முக்கியப் பகைவனாய் இருந்தான் நிலப்பிரபு. நிலப்பிரபுவின் அடிமைத் தளைகளை எதிர்த்து விவசாயிகள் அனைவரும், ஏழைகளும் பணக்காரர்களும் கிளர்ந்து எழுந்தார்கள். ஆனால் இது முதல் அடி வைப்பு மட்டுமே. இதன் பின் நாட்டுப்புறத்தில் இன்னும் நிறையப் போராட்டம் நிகழ்த்திய பின்னரே சோஷலிஸத்தை நோக்கி அடுத்த அடி எடுத்து வைக்கப்படும். விவசாயிகள் ஏககாலத்தில் முதல் அடியும் கடைசி அடியும் எடுத்து வைக்க முடியும் என்று அவர்களிடம் சொன்னவன் அவர்களை ஏமாற்றினான். விவசாயிகள் சமூகத்துக்கு உள்ளேயே, நாட்டுப்புற ஏழைகளுக்கும் நாட்டுப்புறப் பணக்காரர்களுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை அவன் மறந்துவிட்டான்.

இவ்வாறு, முந்திய நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவில் நடந்தது போலவே ருஷ்யாவில் **பூர்ஷ்வாப்** புரட்சி விரிவாக நடந்தது. ஆனால் முந்திய புரட்சிகளுடன் இதன் ஒற்றுமை இவ்வளவோடு முடிந்து, ஆழ்ந்த வேற்றுமைகள் தொடங்கின. ருஷ்யப் புரட்சி உலக முதலாளித்துவத்தின் உயர்ந்த வளர்ச்சியின் சூழ்நிலையில் நடந்தது. முதலாளித்துவம் ஏகாதிபத்தியக் கட்டத்தில் அடி வைத்திருந்தது. சில முன்னணி நாடுகளில் முடியரசு அரசாங்கங்களுக்கு முடிவு கட்டுவது உள்பட அனேக ஜனநாயகப் பொறுப்புகள் இன்னும் நிறைவேறாமல்

இருந்தன ஆயினும் முன்னணி நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின்முன் நின்றது சோஷலிஸப் புரட்சி நடத்தும் பணி. ருஷ்யாவில் நடந்த புரட்சி உலகம் முழுவதிலும் அரசியல் அதிர்ச்சிகளும் புரட்சிகளும் ஏற்படுவதற்கு வழி வகுத்தது. ருஷ்யப் புரட்சி வெறும் பூர்ஷ்வாப் புரட்சி அல்ல, பூர்ஷ்வா **விவசாயிப்** புரட்சி, ஏனெனில் இதற்கு அடிக்கல் நாட்டியது நிலப் பிரச்சினை. அதன் முக்கிய நோக்கம் நிலப்பிரபுக்களின் பெரு நில உடைமையை ஒழிப்பது. இது **மக்களின்**, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி. அது மக்களின் ஜீவாதார நலன்களைக் காக்கும் பொருட்டு நடந்தது. மிகப் பெரும்பான்மையான பொது மக்கள் அதில் பங்கு கொண்டார்கள். தங்களுடைய கோரிக்கைகளின் முத்திரையைப் புரட்சியின் போக்கு முழுவதன் மீதும் பதித்துவிட்டார்கள் அவர்கள்.

ருஷ்யாவில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டு லெனின் மிக முக்கியமான கருத்தை வெளியிட்டார்: தொழிலாளி வர்க்கம் புரட்சியில் **மேலாதிக்கம்** (*தலைமை*) வகிக்க வேண்டும்.

புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கம் சாத்தியமாகவும் அவசியமாகவும் இருந்தது ஏன்?

பண்ணையடிமை முறையின் எல்லா மீத மிச்சங்களையும் முழுமையாக ஒழிப்பதிலும் ஜாரின் எதேச்சாதிகார ஆட்சியைக் கவிழ்ப்பதிலும் ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிப்பதிலும் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கம் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தது. புரட்சியின் முடிவான வெற்றி சோஷலிஸத்தை நிறுவுவதற்கான தொழிலாளி வர்க்கப் போராட்டத்துக்கு மிக நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்தும். பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தபடியால் அதில் மிக ஊக்கத்துடன் பங்கு கொள்வது அதன் கடமை ஆகி விட்டது. அது மட்டும் அல்ல, புரட்சிக்குத் தலைமை ஏற்று நடத்துவதும் பாட்டாளி வர்க்கத்தின் பொறுப்பு ஆகிவிட்டது. அந்த நிலையில்தான் முடிவான வெற்றி சாத்தியமாய் இருந்தது.

தொழிலாளி வர்க்கம் மேலாதிக்கம் வகிப்பதற்கு வேண்டிய எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தது. பேரளவான உற்பத்தி அதை ஒழுங்கமைப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் பயிற்றி

இருந்தது. வேலை நிறுத்தப் போராட்டம் தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தி, அவர்களுக்கு உரம் ஏற்றி, அரசியல் அறிவு ஊட்டி, அவர்களுடைய போராட்டப் பண்புகளை வடிவாக்கி இருந்தது. பெரும் பெரும் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் உலகம் முன் கண்டிராத அளவு பாட்டாளிகளின் குவிவு இதற்கு உதவியாய் இருந்தது. தொழிலாளி வர்க்கம் மற்ற வர்க்கங்களோடு ஒப்பிடும்போது மிக அதிகமான போராட்டத் திறனும் புரட்சி ஊக்கமும் போராட்டத்தில் தன்னலத் தியாகமும் படைத்திருந்தது. ஏற்கனவே அது எதார்த்தத்தில் புரட்சி இயக்கத்தின் பிரதானச் சக்தியாக விளங்கிற்று. அதற்கே உரிய சுதந்திரமான புரட்சிகர மார்க்ஸீயக் கட்சி இருந்தது. இந்தக் கட்சியின் செயல்திட்டம் மக்களின் நலன்களுக்கும் நாட்டின் முற்போக்கான வளர்ச்சிக்கும் உகந்ததாக இருந்தது.

ஆனால் பாட்டாளி வர்க்கம் ஒன்று மட்டுமே, தன் பலத்தை மாத்திரம் கொண்டு வெற்றி பெற முடியாது. வெற்றி பெறுவதற்கு அதற்குக் கூட்டாளிகள் வேண்டும். இத்தகைய கூட்டாளியாக விளங்குகிறது விவசாயிகள் சமூகம். நிலப் பிரபுக்களிடமிருந்து எல்லா நிலத்தையும் பறித்துக்கொள்ளவும் பண்ணையடிமை முறையின் எல்லா மீத மிச்சங்களையும் அடியோடு துடைத்து ஒழிக்கவும் விவசாயிகள் சமூகம் பேராவம் கொண்டிருக்கிறது. ஆனால் விவசாயிகள் சமூகம் தனியாக, சொந்த பலத்தை மட்டும் கொண்டு புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்த முடியாது. ஒவ்வொரு விவசாயியும் தன் துண்டு நிலத்தில் வேளாண்மை நடத்துகிறான், சிறு அளவு உற்பத்தி செய்கிறான். இந்த வாழ்க்கை நிலைமைகளின் காரணமாகவே விவசாயிகள் சமூகம் தனித் தனியாகப் பிரிந்து சிதறி இருக்கிறது. விவசாயி ஏக காலத்தில் உழைப்பாளியாகவும் உடைமையாளனாகவும் இருக்கிறான். இந்தக் காரணத்தால் அவன் அரசியல் நோக்கில் உறுதி அற்றவன். அவனுடைய மனோபாவம் கிராமப் பொது சமுதாயத்தால் அளவறுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் நோக்கில் அவன் தொழிலாளியை விடக் குறைந்த வளர்ச்சி பெற்றவன். எனவே, நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதும், அரசியல் அறிவு பெற்றதும் போராட்டத்தில் உரம் ஏறியதும் ஆன வேறொரு வர்க்கத்தின்

தலைமை விவசாயிகள் சமூகத்துக்குத் தேவைப்படுகிறது. தனது உண்மை வழிகாட்டியை, தலைவனை, நகர இயந்திரத் தொழில் பாட்டாளியின் வடிவில் விவசாயிகள் சமூகம் பெற்றிருக்கிறது. **விவசாயிகள் சமூகம் அனைத்துடனும் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியமும் இந்த ஐக்கியத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரமுமே பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்கு நிர்ணயகரமான நிபந்தனையாக விளங்கின.**

ருஷ்ய பூர்ஷ்வா வர்க்கம் புரட்சியில் நிர்ணயகரமான போராட்டத்துக்குத் தகுதி அற்றது என்று தெரிந்துவிட்டது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சித் தன்மையை அது அஞ்சியது. பாட்டாளி வர்க்கம் ஜனநாயக வெற்றிகளுடன் நின்று விடாது, சோஷலிஸப் புரட்சிக்கு முயன்று பாடுபடும் என பூர்ஷ்வா வர்க்கம் பயந்தது. நிலப் பிரபுத்துவ உடைமைகள் அகற்றப்பட்டதும் தன் தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் தன் மூலதனத்தையும் இழக்க நேருமோ என்று அது திகில் அடைந்தது. ஜாரின் அதிகாரவர்க்கத்துடன் பூர்ஷ்வாக்கள் ஆயிரமாயிரம் உறவுகள் இணைத்திருந்தன. இந்த உறவுகள் எல்லாவற்றையும் துணித்துக் கொள்ள பூர்ஷ்வா வர்க்கம் அஞ்சியது. எனவே, பூர்ஷ்வா வர்க்கம் எதேச்சாதிகாரத்தை எதிர்த்த போதிலும் ஜார் ஆட்சியை ஒழிப்பதற்கு அல்ல, அதனுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவே விரும்பியது. பொது மக்கள் திரளின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டு, தொழிலாளர்கள், விவசாயிகளின் நலன்களைப் பலி கொடுத்து ஜார் ஆட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு கூடிய விரைவில் புரட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே அது விரும்பியது.

ஆகவே, புரட்சியில் பொது மக்களுக்குத் தலைமை தாங்குவது யார் என்பது பற்றித் தொழிலாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் இடையே போராட்டம் தவிர்க்க முடியாததாய் இருந்தது. புரட்சியின் விதி—அது மக்களின் முழு வெற்றியில் முடியுமா அல்லது ஜார் ஆட்சியுடன் பூர்ஷ்வா வர்க்கத்தின் ஒப்பந்தத்திலா என்பது—இந்தப் போராட்டத்தின் விளைவுகளையே பொறுத்திருந்தது. பூர்ஷ்வா வர்க்கத்தை நெருக்கித் தள்ளிப் பொது மக்கள் திரளிலிருந்து தனிப்படுத்துவதும், புரட்சியை நசுக்க அதற்கு வாய்ப்பு இல்லாத

படி செய்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமையாக இருந்தது.

ஜார் ஆட்சிமீது முடிவான வெற்றி ஒவ்வொரு புரட்சியினதும் அடிப்படைப் பிரச்சினைக்கு — அரசு அதிகாரம் பற்றிய பிரச்சினைக்கு இட்டு வந்தது. ஜார் ஆட்சி கவிழ்த்தப்படுவதன் விளைவாக அமையும் அரசு அதிகாரம் எப்பேர்ப்பட்டதாக இருக்க வேண்டும்? தொழிலாளி வர்க்கம் அதன்பால் எத்தகைய போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கு லெனின் விடை அளித்தார். அவர் சொன்னார்: புரட்சி வெற்றி பெற்றதும் தொழிலாளர்கள், விவசாயிகளின் நலன்களுக்கு உகந்த ஆழ்ந்த மாற்றங்கள் நிகழும். எனவே நிலப்பிரபுக்களும் பெரும் பூர்ஷ்வாக்களும் அதை மூர்க்கமாக எதிர்ப்பது தவிர்க்க முடியாதது. இந்த எதிர்ப்பை முறிக்கவும் கவிழ்த்தப்பட்ட ஆட்சியை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்குப் புரட்சியின் எதிரிகள் செய்யும் முயற்சிகளை முறியடிக்கவும் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியை இறுதிவரை நடத்திச் செல்லவும் அதன் வெற்றியால் கிடைத்த நன்மைகளைக் காக்கவும் சோஷலிஸத்தின் பொருட்டுப் போராடுவதற்குக் களத்தை ஆயத்தப்படுத்தவும் வல்லது புரட்சிகர வர்க்கங்களின் சர்வாதிகாரம் மட்டுமே. இது **பாட்டாளி வர்க்கத்தினுடையவும் விவசாயிகள் சமூகத்தினுடையவும் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரமாக** இருக்கும். ஆயுதந் தாங்கிய மக்களைச் சார்ந்த புரட்சி அரசாங்கம், லெனினது கருத்துப்படி, அதன் அரசியல் உறுப்பாக விளங்க வேண்டும். இத்தகைய அரசாங்கத்தில், சாதகமான நிலைமைகளில் தொழிலாளிவர்க்கத்தின் பிரதிநிதிகள் பங்கு பற்றுவது இன்றியமையாதது.

தொழிலாளி வர்க்கத்துக்கு அதன் போராட்டத்தினது வரலாற்று முக்கியத்துவம் உள்ள வருங்காலக் கடமையை லெனின் விளக்கினார்: எல்லா உழைப்பாளி மக்களையும் பூர்ஷ்வாப் புரட்சியின் வழியே, ஜனநாயகக் குடியரசைப் போராடி அமைப்பதன் வாயிலாக, முதலாளித்துவத்தைத் தூக்கி எறியும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இட்டுச் செல்வதே இந்தக் கடமை. **பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி சோஷலிஸப் புரட்சியாக வளரும்** வருங்கால வாய்ப்பு இது. புரட்சியின்போது

தொழிலாளி வர்க்கம் பக்குவம் அடைந்து மக்கள் தலைவனாக மலரும். பொது மக்களிடையே பாட்டாளி வர்க்கத்தின் மீது நம்பிக்கை வலுப்படும். வெவ்வேறு வர்க்கங்களையும் கட்சிகளையும் அவற்றின் அறிக்கைகளையும் செயல்களையும் ஸ்தூல நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியுமே ஒருங்கிசைந்த முறையில், முடிவுவரை தங்கள் நலன்களைப் பாதுகாக்கின்றன என்பதை மக்கள் காண்பார்கள்.

கடுமையான வர்க்கப் போராட்டங்களில் மக்களின் புரட்சி பற்றிய அறிவு வளர்ச்சி மிகுந்த விரைவாக நடைபெறும். ஜனநாயகப் புரட்சியில் விவசாயிகள் சமூகம் முழுவதும் மொத்தமாக நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடும். இந்தப் போராட்டத்தில் அது வெற்றி பெற்றதும் விவசாயிகள் தரவாரியாகப் பிரிக்கப்படுவது தொடங்கும், நிலத்துக்காகக் கடும் போராட்டம் மூளும். பணக்கார விவசாயிகள் (குலாக்குகள்) புரட்சியிலிருந்து விலகிவிடுவார்கள். ஏழைக் குடியானவர்களும் நாட்டுப்புறப் பாட்டாளிகளும் அரைப் பாட்டாளிகளும் தொழிலாளி வர்க்கத்தை மையமாகக் கொண்டு ஒன்று இணைவார்கள். தொழிலாளி வர்க்கம் அவர்களை நகர, நாட்டுப்புற பூர்ஷ்வாக்களுக்கு எதிராக, சோஷலிஸத்தின் பொருட்டு, சுரண்டலை அடியோடு ஒழிப்பதன் பொருட்டுப் போராட்டத்தில் தலைமை தாங்கி நடத்திச் செல்லும்.

பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்கும் சோஷலிஸப் புரட்சிக்கும் இடையே உள்ள சிக்கலான பரஸ்பர உறவையும் அவை ஒன்றிலிருந்து மற்றதற்குப் பரிணமிப்பதையும் எளிய, புரியக் கூடிய உதாரணத்தால் விளக்கினார் லெனின். அவர் சொன்னார்: நம் வீட்டு முகப்பு வெளியில் இரண்டு குப்பைக் குவியல்கள் இருப்பதாகவும் வண்டி ஒன்றே என்றும் அதில் ஒரு குவியலுக்கு மேல் ஏற்றமுடியாது என்றும் வைத்துக் கொள்ளுங்கள். முகப்பு வெளியை முழுமையாகச் சுத்தப்படுத்த உண்மையாகவே விரும்புபவன் முதலில் ஒரு குவியலை அகற்றி விட்டு அப்புறம் இரண்டாவதை அகற்ற முற்படுவான். ருஷ்யப் புரட்சியிலும் நிலைமை இதுவே. பண்ணையடிமை முறை, நிலப்பிரபுத்துவச் சுரண்டல் எனப்படும் கூளம் அனைத்தை

யும் தங்கள் வண்டியில் அள்ளிப் போட்டுக்கொண்டு வெளி யேற்றுவது மக்களின் முதல் காரியம். அப்புறம் திரும்பி வந்து முதலாளித்துவச் சுரண்டல் என்னும் கூளத்தின் இரண்டாவது குவியலை வாரி வெளியேற்றுவதில் முனைய வேண்டும்.

தொழிலாளி வர்க்கம் எந்த அளவுக்கு அரசியல் உணர் வும் ஒழுங்கமைப்பும் பெற்றிருக்கிறது என்பதைப் புரட்சியின் வெற்றி கணிசமாகச் சார்ந்திருந்தது. கட்சியின் இன்றியமை யாமையையும் புரட்சியில் அதன் பணியையும் பொது மக்கள் எடுத்த எடுப்பிலேயே புரிந்து கொண்டுவிட மாட்டார்கள். பொது மக்களின் அனுபவம் இன்மையையும் அவர்களுடைய எளிதில் நம்பும் சுபாவத்தையும் எவ்வளவு தந்திரசாலியான அரசியல் எத்தன், துர்ச்சாகசக்காரன் அல்லது பாதிரி கப்போன் போன்ற போக்கிரி பயன்படுத்தக் கூடும். மக்களின் உட்புகுந்து வேலை செய்து, தன் பணியால் அவர்களது முழு நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆகிவிட்ட கட்சி இந்த ஆபத் திலிருந்து அவர்களைக் காக்கிறது. புரட்சியின் உயிர்த் துடிப்பும் வெல்லரும் விறலும் பொதுமக்கள் திரளின் புரட்சிகரப் படைப்புத் தன்மையில் இருக்கின்றன என லெனின் கண்டார். தொழிலாளர்களினதும் எல்லா உழைப்பாளிகளுடையவும் புரட்சி முன்முயற்சியையும் சுதந்திரத்தையும் கட்ட விழ்த்து விடுவதே புரட்சியில் கட்சியின் மிக முக்கியக் கடமை. அதன் கோஷங்கள் முன்னே செல்ல அழைக்கின்றன, வெற்றிக்கு இட்டுச் செல்லும் மிக அருகான, நேர்வழியைக் காட்டுகின்றன, தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சி ஊக்கத்தைப் பன்மடங்கு பெருக்குகின்றன. மக்கள் முதன்மை யாகச் சொந்த அனுபவத்திலிருந்தே படிப்பினை பெறு கிறார்கள் என்று சொல்லவே வேண்டியதில்லை. தேவையான முடிவுகள் பெறுவதில் நகர, நாட்டுப்புற உழைப்பாளி மக்களுக்கு மார்க்ஸீயக் கட்சிதான் உதவ முடியும். அதிலும், மற்றக் கட்சிகள் புரட்சி பற்றித் தங்களுக்குச் சாதகமான எண்ணங்களை உழைப்பாளி மக்கள்மீது சுமத்த முயல்வதால் இது இன்னும் அவசியம் ஆகிறது. பொது மக்கள் வாழ்க்கை யின் படிப்பினைகளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு மார்க் ஸீயக் கட்சி ஊக்கத்துடன் பாடுபட வேண்டும்.

கட்சி புரட்சியை ஒழுங்கமைந்த முறையில் தொடங்கி வைப்பதாலும் அதன் பங்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உள்ளது ஆகிறது. புரட்சிக்கு முன்கூட்டி நாள் குறிக்க முடியாது. ஆழ்ந்த காரணங்களால், சமூக வாழ்க்கையில் முதிர்ந்து விட்ட நிலைமைகளின் விளைவாகத் தோன்றுகிறது அது. ஆனால், எல்லா முதனிலைகளும் எதிரே இருக்கும்போது, கட்சிக்கு மக்களிடையே செல்வாக்கு இருந்து, பொதுமக்கள் திரளின் அதிருப்தியும் சீற்றமும் அதிகத்திலும் அதிகமாகத் தீவிரம் அடையும் கணத்தைச் சரியாக மதிப்பிட அதனால் முடியும் போது, புரட்சியில் நிர்ணயகரமான போராட்டத்தை ஒழுங்கமைத்து நடத்த முடியும், நடத்த வேண்டும்.

இத்தகையதாக இருந்தது போல்ஷிவிக்குகளின் செயல் தந்திரம். அவர்கள் பாட்டாளிகளுக்குச் சரியான போராட்ட வழியைக் காட்டினார்கள். வர்க்கச் சக்திகளை ஆழ்ந்த முறையில் சீர்தூக்கி மதிப்பிட்டதன் அடிப்படையில் காணப்பட்டது இந்த வழி. வெற்றி பெறும் விருப்பாற்றல் நிறைந்தது இந்த வழி.

மென்ஷிவிக்குகளோ, வேறு நிலையை மேற்கொண்டார்கள். வாழ்க்கையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள விரும்பாத, தொழிலாளி வர்க்கத்தின் வெற்றியை அஞ்சுகிற சந்தர்ப்பவாதிகள், வரட்டுச் சூத்திரவாதிகள் என்ற முறையில் அவர்கள் புரட்சியை அணுகினார்கள். ருஷ்யாவில் புரட்சி, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த முந்திய புரட்சிகள் போலவே பூர்ஷ்வாக்களின் தலைமையில் நடைபெற வேண்டும் என்றும், வெற்றி பெற்றால் பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்துக்கே இட்டு வர வேண்டும் என்றும் அவர்கள் எண்ணினார்கள். சில மென்ஷிவிக்குகள் எதார்த்த ஆதாரம் அற்ற அதிதீவிர இடதுசாரி நிலையை மேற்கொண்டார்கள். திரோத்ஸ்கி, ''ஜார் இல்லாமல், ஆனால் தொழிலாளர்களின் அரசாங்கம்'' என்ற துர்ச்சாகச கோஷத்தைக் கிளப்பினார் அதாவது, பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியின் வழியாக நேரே சோஷலிஸப் புரட்சிக்குத் தாண்டிக் குதிக்குமாறு அழைத்தார். இது புரட்சியை மடிப்பதாகவே அர்த்தப்பட்டது, ஏனெனில், விவசாயிகள் சமூகம் உடனே இந்த நடவடிக்கைக்கு இணங்கியிராது. வலது சாரியினர் போலவே இடதுசாரி சந்தர்ப்பவாதிகளுக்கும்

பொதுவான கொள்கைவாத மூலம் ஒன்றே. விவசாயிகள் சமூகத்தைத் தன்னுடன் நடத்திச் செல்லத் தொழிலாளி வர்க்கத்துக்கு உள்ள திறன்மீது நம்பிக்கை இன்மையே அது.

அமைதியான ஊர்வலத்திலிருந்து ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு

போல்ஷிவிக்குகள் லெனினுடைய கருத்துக்களையும் கோஷங்களையும் பொதுமக்கள் திரளிடையே பரப்பினார்கள். ஆனால் நாட்டில் இருந்த ஒரே அரசியல் ஸ்தாபனம் அவர்கள் மட்டுமே அல்ல. புரட்சி நடக்கையில், சிறப்பாக, 1905 சரத் காலத்தில் வேறு கட்சிகளும் தோன்றின. நிலப்பிரபுக்களின் கட்சி, பூர்ஷ்வாக்களின் கட்சி, குட்டி பூர்ஷ்வாக்களின் கட்சி ஆகியன இவை. நாட்டினப் பிரதேசங்களில் பல்வேறு கட்சிகள் கிளம்பின. பூர்ஷ்வாக்களின் தலையாய கட்சி அரசியல் சட்டரீதியான ஜனநாயகக் கட்சி (காடெட்டு). மிதவாத பூர்ஷ்வா வர்க்கம் ஜனநாயகக் குறிப்பலகையின் அடியில் தன் முடியரசு விருப்பங்களை மறைத்தது. சோஷலிஸக் கொடியின் கீழ் செயல் ஆற்றினார்கள் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் (எஸ் ஆர்கள்), மக்கள் சோஷலிஸ்டுகள் (என் எஸ்கள்), அனேக நாட்டின சோஷலிஸ்ட் கட்சிகள் முதலியோர்.

மூன்று முக்கியமான சமுதாய சக்திகள் புரட்சியில் மோதிக் கொண்டன. ஜாரின் தலைமையில் பண்ணையடிமை-நிலப்பிரபுக்களும் மிதவாத பூர்ஷ்வா வர்க்கமும் ஜனநாயகமும் (தொழிலாளி, குட்டி பூர்ஷ்வா ஜனநாயகமும்) இந்தச் சக்திகள். ஜார் ஆட்சியின் சூழ்ச்சிகளையும் பூர்ஷ்வா வர்க்கத்தின் நடவடிக்கைகளையும் போல்ஷிவிக்குகள் கூர்ந்து கவனித்து வந்தார்கள். முந்திய புரட்சிகள் கற்பித்த பாடத்தை, அதாவது, ''மக்கள் போராடுகிறார்கள், பூர்ஷ்வா வர்க்கம் திருட்டுத்தனமாக ஆட்சியைக் கைப்பற்றுகிறது'' என்ற பாடத்தை அவர்கள் மக்கள் திரளுக்கு நினைவுபடுத்தினார்கள். ஜார் ஆட்சிக்கு எதிராக எழுச்சி நடத்துவதற்குப் போராட்ட ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி புரட்சியின் தொடக்க நாட்களிலிருந்தே போல்ஷிவிக்குகள் எல்லா ஜனநாயக சக்திகளையும் வற்புறுத்தி அழைத்தார்கள். எஸ் ஆர்களின் கட்சியுடன் அவர்களுடைய உறவு இதனாலேயே நிர்ணயிக்கப்பட்டது. எஸ் ஆர்கள் தங்களை சோஷலிஸ்டுகள் என்று எண்ணிக்



கருங்கடலில் இருந்த ''பத்யோம்கின்'' என்ற போர்க் கப்பலின் மாலுமிகள் 1905ம் ஆண்டு ஜூன் மாதம் கிளர்ச்சி செய்தார்கள்

தொழிலாளர் குழுக்கள் 1905, டிசம்பர் மாதம் மாஸ்கோ வீதிகளில் தடையரண்கள் அமைத்துப் போரிட்டன

மக்கள் ஜார் ஆட்சியை
எதிர்த்துக் கிளர்ந்து எழுந்தார்கள்

1905 இலையுதிர் காலத்தில் விவசாயிகளின் கிளர்ச்சி

கொண்டிருந்தார்கள். ஆனால் சோஷலிஸம் பற்றிய சரியான கருத்தோ அதற்கு இட்டுச் செல்லும் வழி பற்றிய சரியான புரிவோ அவர்களுக்கு இல்லை. புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை எஸ் ஆர்கள் மறுத்தார்கள். நிலப் பிரபுக்கள் மீது வெற்றியும் நிலம் முழுவதும் குடியான வர்கள் கைகளுக்கு மாறிவிடுவதும் மட்டுமே தானாக சோஷலிஸத்துக்கு இட்டுச் சென்று விடாது, இந்தப் பரிணமிப்பு பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வையும் ஒழுங்கமைப்பையும், நாட்டுப்புற ஏழை மக்களுடன் பாட்டாளி வர்க்கத்தின் தொடர்புகளையும் பொறுத்திருக்கிறது என்பதை எஸ் ஆர்கள் புரிந்து கொள்ளவில்லை. போல்ஷிவிக்குகள் எஸ் ஆர்களின் தவறான கருத்துக்களைத் தாக்கி விமர்சித்தார்கள். ஆனாலும் எஸ் ஆர்கள் விவசாய ஜனநாயகவாதிகளாய் இருந்தமையால், எதேச்சாதிகார அமைப்புக்கு எதிராக அவர்களுடன் இணைந்து செயல்பட போல்ஷிவிக்குகள் இசைந்தார்கள்.

புரட்சியின் போக்கு போல்ஷிவிக்குகளின் கருத்து சரி என்று உறுதிப்படுத்தியது. புரட்சிப் போராட்ட அலைகள் நாளுக்கு நாள் உயர எழுந்தன.

பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம் மேலும் மேலும் தீவிரம் அடைந்தது. வேலை நிறுத்தங்கள் நாடு எங்கும் பரவின, தொழிலாளர்களின் புதிய புதிய அணிகளை உட்படுத்திக் கொண்டன, நாளுக்கு நாள் அதிக விடாப்பிடியாக முன்னேறலாயின. சில இடங்களில் வீதித் தடை அரண்கள் அமைத்துப் போலீஸுக்கும் துருப்புக்களுக்கும் எதிராகப் போர்கள் நிகழ்த்தும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது.

திரளான தொழிலாளர்களின் அரசியல் வேலை நிறுத்தங்கள் பொது மக்களை உலுக்கி அசைத்தன. நாட்டுப்புறம் விழிப்பு அடைந்தது. 1905 வசந்தத்திலும் கோடையிலும் விவசாயிகளின் போராட்ட நடவடிக்கைகள் நாட்டின் ஐரோப்பியப் பகுதியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கில் பரவின. சரத்காலத்திலோ இந்தப் பகுதியில் பாதி போராட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாயிற்று. விவசாயிகள் கூட்டங் கூட்டமாக நிலப்பிரபுக்களை எதிர்த்தார்கள், பண்ணை வீடுகளைத் தீக்கிரை ஆக்கினார்கள், தானியத்தைக் கைப்பற்றிக் கொண்

டார்கள், போலீஸ்காரர்களைக் கொன்றார்கள், நிலப் பிரபுக்களின் நிலத்தை மக்களுக்கு வழங்கும்படி கோரினார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்கள் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தின் பாதிப்பால் கிளர்ந்து எழுந்தன. போலந்திலும் லாட்வியாவிலும் பாட்டாளி வர்க்க இயக்கம் புயல் வேகத்தில் வளர்ந்து பரவியது. அங்கே வீதித் தடையரண்கள் நிறுவப்பட்டுப் போராட்டங்கள் நடந்தன. காக்கேஷியப் பிரதேசத்தில், சிறப்பாக ஜார்ஜியாவில் ஆயுதப் போராட்டம் மும்முரமாக மூண்டது. தொலைதூர சைபீரியப் பிராந்தியத்தில்கூட ''யக்கூத் குடியரசு'' தோன்றியது. அங்கே மக்கள் வரி செலுத்துவதையும் ஜார் அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்றுவதையும் நிறுத்திவிட்டார்கள். பாட்டாளி வர்க்கப் போராட்டமும் விவசாயிகளின் எழுச்சியும் ஒன்று சேர்ந்ததால் ஜாரின் தரைப்படையிலும் கடற்படையிலும் ஊசலாட்டம் தொடங்கியது. படையினரிடையே நாளுக்குநாள் அதிகரித்து வந்த அதிருப்தி போர்க்கப்பல் ''பத்யோம்கினில்'' நிகழ்ந்த கலகக் கிளர்ச்சியில் துலக்கமாக வெளிப்பட்டது. இந்தக் கிளர்ச்சி பற்றிய செய்தி உலகு எங்கும் காட்டுத் தீ போலப் பரவியது.

ஜார் ஆட்சி சில விஷயங்களில் விட்டுக் கொடுத்தும் வாக்குறுதிகள் வழங்கியும் புரட்சிப் போராட்டத்திலிருந்து மக்களின் கவனத்தை அகற்ற முயன்றது. 1905 ஆகஸ்டில், அரசாங்க தூமா (இது நாடாளுமன்றம் போன்ற ஒன்று) கூட்டப்படும் என்ற ஜாரின் அறிக்கை வெளியாயிற்று. தூமா சட்டங்கள் இயற்றும் உரிமைகள் எவையும் இன்றி, ஜாருக்குக் கீழ்ப்பட்ட ஆலோசனை மன்றமாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது. நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் பணக்கார விவசாயிகளில் மிக அற்பப் பகுதியினரும் மட்டுமே அதன் உறுப்பினர் ஆக அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். தொழிலாளர்களும் பெரும்பான்மை விவசாயிகளும் முன்போல உரிமைகள்அற்றவர்களாகவேஇருந்தார்கள்.மக்கள் பிரதிநிதித்துவத்தின் மோசமான பித்தலாட்டமாக விளங்கியது இது.

மக்கள் விரோத தூமாவைச் செயல் ஊக்கத்துடன் பகிஷ்கரிக்கும்படி போல்ஷிவிக்குகள் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள். தேர்தல்களிலிருந்து செயலின்றி ஒதுங்கி இருப்பது

மட்டுமே போதாது, தேர்தல் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் அரசியல் வேலை நிறுத்தங்களையும் ஜார் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் பயன்படுத்துவது அவசியம் என்றூர்கள் போல்ஷிவிக்குகள். மாறுக, மென்ஷிவிக்குகளோ, தூமா தேர்தல்களில் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ஒத்துழைக்கும் படி மக்களை வேண்டிக்கொண்டார்கள். தூமாவை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற போல்ஷிவிக்குகளின் கோஷத்தைத் தொழிலாளர்கள் மட்டுமே இன்றி, விவசாயிகளும் அறிவு ஜீவிகளின் முன்னணிப் பகுதியினரும் கூட ஆதரித்தார்கள். ஜார் ஆட்சி மீது பொதுத்தாக்கு நடத்துவதற்காக எல்லாச் சக்திகளையும் ஒருங்கு திரட்ட போல்ஷிவிக்குகள் ஓய்வின்றி உழைத்தார்கள். மென்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்க அவர்கள் மறுக்கவில்லை, பல நடவடிக்கைகளைக் கூட்டாக ஒழுங்கமைத்தார்கள். ஆயினும், அதே சமயம், அடிப்படைக் கோட்பாடுகள் சம்பந்தமான பிரச்சினைகளில் மென்ஷிவிக்குகளுடன் சமரசம் அற்ற போராட்டம் நடத்திவந்தார்கள். சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளுடன் போல்ஷிவிக்குகள் போராட்ட ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்கள். புரட்சியின் போக்கில் உருவான ''விவசாயிகள் ஐக்கியத்தை'' ஆதரித்தார்கள். அதே சமயம், சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின் மருள்களையும் ஊசலாட்டங்களையும் தாக்கி விமர்சித்து வந்தார்கள். தன் வர்க்க அரசியல் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்காமல், ஜனநாயகக் கட்சிகளின் புரட்சித்தன்மையுள்ள பகுதியினர் அனைவருடனும் தோளோடுதோள் சேர்த்து ஜார் ஆட்சியைக் கவிழ்க்க முன் செல்ல வேண்டும் என்னும் லெனினது அறிவுரையை போல்ஷிவிக்குகள் கடைப்பிடித்தார்கள்.

புரட்சிப் போராட்டங்களில் கட்சியின் புதிய ஊழியர்கள் உரம் பெற்றூர்கள். மக்கள் திரளை ஒழுங்கமைப்பதில் அவர்கள் தேர்ச்சி அடைந்தார்கள். இவனோவோ-வஸ்னிஸேன்ஸ்க் தொழிலாளர் வேலை நிறுத்தங்களை ஒழுங்கமைத்தவரான ஃபுருன்ஸேயும் உரால் பாட்டாளி வர்க்கத் தலைவர் ஸ்வெர்திலோவும் சிறப்பாக முன்னணிக்கு வந்தார்கள். ஜாரின் நீதிமன்றம் ஃபுருன்ஸேயுக்கு மரண தண்டனை விதித்தது. பின்பு இது கால வரையறை அற்ற கடுங்காவல் தண்டனையாக

மாற்றப்பட்டது. இதே ஃபுருன்ஸே பிற்காலத்தில் பிரபல சோவியத் தளகர்த்தராகப் புகழ் பெற்றார். ஸ்வெர்திலோவை ஜார் அரசாங்கம் சைபீரியாவின் கண்ணற்ற மூலை ஒன்றுக்கு நாடு கடத்தியது. பிற்காலத்தில் அவர் போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டிச் செயலாளராகவும் சோவியத் அரசின் தலைமை நாடாளுமன்றத்தின் முதல் தலைவராகவும் பதவிகள் வகித்தார். புரட்சியில் தீவிரமாகப் பங்காற்றிய பலர் பிற்காலத்தில் கட்சி, சோவியத் அரசு ஆகியவற்றின் பிரபலத் தலைவர்கள் ஆனார்கள். உதாரணமாக, கூய்பிஷெவும் ஆர்ஜெனிகித்ஸேயும் சோஷலிஸப் பொருளாதார அமைப்பாளர்கள் ஆனார்கள்; லித்வீனவும் பவரோவ்ஸ்கியும் சோவியத் அரசாங்க தூதர்களாகப் பதவி ஏற்று, லெனினது சமாதானக் கொள்கையைப் பரப்பினார்கள், ஷௌமியான் பாக்கூ கம்யூனின் தலைவர் ஆனார்; அர்த்தியோம், சோவியத் உக்ரேனின் ஒரு தலைவர் ஆனார். கிழக்கு நாடுகளைச் சேர்ந்த பல தொழிலாளர்களும் ருஷ்யாவில் புரட்சிப் போராட்டப் பயிற்சி பெற்றார்கள். இவர்களில் சிறப்பாக முன்னுக்கு வந்தவர் ஹைதர் என்பவர். பிற்காலத்தில் இவர் ஈரானில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்து அதன் தலைவராக விளங்கினார்.

புரட்சி அலை மேலும் மேலும் கொந்தளித்து எழுந்தது. 1905 அக்டோபரில் பொது வேலை நிறுத்தம் நாடு முழுவதிலும் பரவியது. தொழிற்சாலைகளும் ஆலைகளும் வேலையை நிறுத்திவிட்டன. இருப்புப் பாதைப் போக்குவரத்து நின்று விட்டது. தபால், தந்தி நிலையங்கள் வேலை செய்யவில்லை. சிறு அரசாங்க ஊழியர்களும் மாணவர்களும் வழக்குரைஞர்களும் மருத்துவர்களும் பொறியியலாரும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களோடு சேர்ந்து கொண்டார்கள். எதேச்சாதிகாரத்தை ஒழிப்பது, ஜனநாயகக் குடியரசை நிலைநாட்டுவது என்ற கோஷங்களுடன் நடந்தது வேலை நிறுத்தம்.

புரட்சியின் இந்தப் புயல்வேக வளர்ச்சிக் காலத்தில் தொழிலாளர்களின் படைப்பு முயற்சியின் விளைவாக, வரலாறு முன் காணாத புதிய ஸ்தாபனம் ஒன்று அமைக்கப்பட்டது. இதுவே **தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்.** போராட்டம் நடக்கையில் இவை கிளர்ச்சிக்கு ஆயத்தம்

செய்யும் உறுப்புக்களாகவும் புதிய ஆட்சி ஆதிகாரத்தின் மூலக்கருவாகவும் மாறிவிட்டன. ஜாரின் அதிகாரிகளைப் பொருட்படுத்தாமல் சோவியத்துக்கள் தீர்மானங்கள் வெளியிட்டன, கட்டளைகள் இட்டன, ஆணைகள் பிறப்பித்தன, முன் அனுமதி இன்றி எட்டு மணி நேர வேலை நாளை அமல் படுத்தின, ஜனநாயக சுதந்திரங்களை ஏற்படுத்தின. சோவியத்துக்கள் புரட்சியின் வெற்றிக்காக, சோஷலிஸத்துக் காகப் போராட்டம் நடத்தும் உறுப்பாகவும் தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகள் சமூகத்தினதும் சர்வாதிகார உறுப்பாகவும் விளங்கும் என்பதை லெனின் கூரிய முன்னுக் குடன் கண்டு கொண்டார்.

புரட்சியின் வளர்ச்சியைக் கண்டு அரண்டுபோன அரசாங்கம், எதேச்சாதிகார அமைப்பைக் காக்கும் பொருட்டு மக்களுக்கு மேலும் விட்டுக் கொடுக்க விரைந்தது. 1905, அக்டோபர் 17ந் தேதி ஜார் ஓர் அறிக்கை வெளியிட்டான். சுதந்திரம் பற்றியும் சட்டங்கள் இயற்றும் உரிமைகள் கொண்ட அரசாங்க தூமா அமைப்பது பற்றியும் ஏராளமான பொய் வாக்குறுதிகள் இந்த அறிக்கையில் அடங்கி இருந்தன. ஜார் இந்த அறிக்கையைப் பிறப்பித்ததற்குக் காரணம், சக்திகள் ஓரளவு தாற்காலிக சமநிலை அடைந்திருந்ததுதான். தொழிலாளர்களாலும் விவசாயிகளாலும் ஜார் ஆட்சியைக் கவிழ்க்க இன்னும் முடியவில்லை. ஜார் ஆட்சியாலோ, முந்திய சாதனங்களைக் கொண்டு நிர்வகிக்க இயலவில்லை.

ஜார் எறிந்த இந்த இரைத் துண்டை பூர்ஷ்வாக்கள் மகிழ்வுடன் பொறுக்கிக் கொண்டார்கள். முதலாளித்துவ முறையில் நாட்டாண்மை செய்துவந்த பெரு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் அதிகாரத்தைப் பங்கிடுவதுபற்றி ஜாருடன் தொடர்ந்து விவாதித்து வந்தாலும் ஜார் அரசாங்கத்தின் தரப்பிலேயே இருந்துவந்தார்கள். ஜாரின் அறிக்கை புரட்சியை அமைதியான, சட்டரீதியான வழியில் செலுத்தவும் அதன் மூலம் முடியரசை அழிவிலிருந்து காக்கவும் வாய்ப்பு அளிக்கிறது என்று பூர்ஷ்வா வர்க்கம் எண்ணியது. போல்ஷிவிக்குகளோ, ஜாரின் அறிக்கையை நம்பாதிருக்கும் படியும் ஜார் ஆட்சியைக் கவிழ்க்கும் வரை புரட்சிப் போராட்

டத்தைத் தொடர்ந்து நடத்தும்படியும் தொழிலாளர் களுக்கும் விவசாயிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்கள். கொந்தளிப்பு நிறைந்த இந்த நாட்களில், புரட்சியில் நேரடி யாகப் பங்கு கொள்ளும் பொருட்டு லெனின் அயல் நாட் டிலிருந்து ருஷ்யா திரும்பினர்.

பொது வேலைநிறுத்தம் தொழிலாளி வர்க்கத்தை ஆயுத மேந்திய கிளர்ச்சிக்கு மிக அருகே இட்டு வந்தது. ஜார் ஆட்சி தன் அதிகாரத்தையும் நிலப்பிரபுக்களின் வருவாயையும் காக்கும் பொருட்டுத் தொழிலாளிகளை இரக்கமின்றிச் சுட்டு வீழ்த்தியது. எனவே, வன்முறைக்கு எதிராக வன்முறையை மேற் கொள்வது தவிர வேறு வழி எதுவும் புரட்சி ஆவேசம் பொங்கிய பொது மக்கள் திரளுக்கு இல்லாமல் போயிற்று. போல்ஷிவிக்குகள் புரட்சி தொடங்கிய நாட்களிலிருந்தே ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யலாயினர். அவர்கள் படையினருக்கு இடையே வேலை செய்தார்கள், தொழிலாளர்களைக் கொண்டு போராட்டக் குழுக்கள் அமைத் தார்கள், துப்பாக்கி சுடவும் வீதிப் போர்கள் நடத்தவும் அவர்களுக்குப் பயிற்சி அளித்தார்கள். நேர்மையுள்ள எல்லா ஜனநாயகவாதிகளையும் விடுதலைக்காகப் போராட ஆயத்த மாய் இருப்பதாகச் செயலில் காட்டியவர்கள் அனைவரை யும் கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யும்படி போல்ஷிவிக்குகள் அழைத்தார்கள்.

1905டிசம்பரில் ஆயுதமேந்திய கிளர்ச்சிக் கொடியை முதலில் தூக்கிப் பிடித்தார்கள் மாஸ்கோ பாட்டாளிகள். பெருத்த முடியரசு ஒன்றின் அஸ்திவாரங்களை ஆட்டி உலுக் கிய மாஸ்கோ தொழிலாளர்களின் தன்னலம் அற்ற வீரப் போராட்டத்தின் போக்கை உலகம் முழுவதும் உன்னிப்பாகக் கவனித்தது. கிளர்ந்து எழுந்த தொழிலாளர்கள் ஒன்பது நாட்கள் வீரப் போர் புரிந்தார்கள். ஆனால் ஆயுதப் போராட்ட அனுபவம் அவர்களுக்கு இன்னமும் இல்லை, ஆயுதங்களும் போதவில்லை. மாஸ்கோ நகர்க் காவல் படை தயங்கியது. ஆனால் புரட்சிக்காரர்கள் தருணத்தை நழுவ விட்டு விட்டார்கள். படையினரைத் தங்கள் தரப்புக்கு ஈர்க்க ஊக்கத் துடன் முயற்சி செய்யத் தவறிவிட்டார்கள். கிளர்ச்சியை ஒழுங்கமைத்தவர்கள் தொடக்கத்திலேயே கைது செய்யப்

பட்டார்கள். கிளர்ச்சி தனித்தனி வட்டாரங்களில் ஒன்றோடு ஒன்று தொடர்பு அற்ற நடவடிக்கைகளாக மாறிவிட்டது. தாக்குப் போர் நடத்துவதற்குப் பதில் தற்காப்புச் செயல் தந்திரம் மேற்கொள்ளப்பட்டது. இது கிளர்ச்சியின் தோல்வியை முன்கூட்டியே உறுதிப்படுத்திவிட்டது. மாஸ்கோவைத் தொடர்ந்து மற்ற நகரங்களிலும் பிரதேசங்களிலும் கிளர்ச்சிகள் மூண்டன. இவை பேரளவாகப் பரவின ஆயினும் முடிவு வரை முன்னேறித் தாக்கும் விடாமுயற்சியுடனும் ஒன்றித்தும் ஒரே நேரத்திலும் இவை நிகழவில்லை. ஜார் அரசாங்கம் நம்ப முடியாத கொடுமையுடன் இந்தக் கிளர்ச்சிகளை அடக்கி விட்டது.

ருஷ்யத் தொழிலாளர்களின் டிசம்பர் மாத ஆயுதக் கிளர்ச்சி மனித குல விடுதலைப் போராட்ட வரலாற்றில் பாரிஸ் கம்யூனுக்குப் பிறகு ஆகப் பெரிய அடிவைப்பாக இடம் பெற்றுவிட்டது. மக்களின் விடுதலைக்காகவும் இன்பத்துக் காகவும் போராடும் புதிய வீரர்கள் அதை உதாரணமாகக் கொண்டு பயிற்றப் பெற்றார்கள்.

போல்ஷிவிக்குகளும் மென்ஷிவிக்குகளும் இந்தக் கிளர்ச்சியை மதிப்பிடுவதில் அடிப்படையில் வேறுபட்டார்கள். ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் வீரப் போராட்டத்தை மென்ஷிவிக்குகள் கண்டனம் செய்தார்கள். அவர்களுடைய சந்தர்ப்பவாதமும் அரசியல் பேடித்தனமும் இதில் மிகத் துலக்கமாக வெளிப்பட்டன. ''ஆயுதப் போராட்டத்தைத் தொழிலாளர்கள் மேற்கொண்டிருக்கக் கூடாது'' என்றார் மென்ஷிவிக்குகளின் தலைவர் பிளெகானவ். மாறாக, அவர்கள் ஆயுதப் போராட்டத்தை இன்னும் உறுதியுடனும் ஒழுங்கமைந்த முறையிலும் நடத்தியிருக்க வேண்டும் என்றார்கள் போல்ஷிவிக்குகள்.

சமூக-ஜனநாயக வாதிகள் எல்லோரும் ஒன்று இணைக்கப்படுதல்

புரட்சி மக்களின் மிகப் பெருந்திரளை உணர்வு பூர்வமான அரசியல் வாழ்வுக்குத் தூண்டி எழுப்பியது. தொழிலாளர்கள் இடையே போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு விரைவாக வளர்ந்தது. ஆனால் இந்தச் செல்வாக்கு ஸ்தாபன ரீதியில் உறுதியாக்கப்படவில்லை. கட்சி நடவடிக்கைகளின் நிலைமைகள்

மாறின. முன்னர், ஒழுங்கற்ற நிலைமையில் கட்சி அமைக்கப் பட்ட போது ஒத்திசைந்த புரட்சிக்காரர்கள் எல்லோரை யும் ஒற்றுமைப்படுத்துவது முதன்மையாக அவசியமாய் இருந்தது. இப்போதோ, வலுவான கட்சி நிலவியது. அதற்குச் செயல் திட்டமும் விதிகளும் இருந்தன. தொழிலாளி வர்க்கத்தின் சிறந்த மனிதர்கள் அதன் அணிகளில் திரண் டிருந்தார்கள். இதைப் பெருந்திரளான பொது மக்களின் கட்சி ஆக்குவதும் அதன் கதவுகளைத் தொழிலாளர்களுக்கு விரிவாகத் திறந்துவிடுவதும் பல நூறு புதிய ஸ்தாபனங்களை அமைப்பதும் அவசியமாய் இருந்தன. இவ்வாறு செய்தால் தான் மக்கள் திரளைத் தன் செல்வாக்குக்கு உட்படுத்துவதும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்துக்கு உறுதி யான தலைமையை ஏற்படுத்துவதும் முடியும் என்று தெரிந் தது. புரட்சியின் போக்கில் மக்கள் ஒரு சில சுதந்திரங்களை முயன்று பெற்றிருந்தபடியால் கட்சியைத் திரளான மக்களுக்கு உரியது ஆக்குவது சாத்தியம் ஆயிற்று. விளைவாக, கட்சி நடவடிக்கைகளின் எல்லைகள் விரிவடைந்தன செய்தித்தாள் கள் சட்டபூர்வமாக வெளிவரலாயின, பகிரங்கக் கூட்டங் களும் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

புரட்சிப் போராட்டத்தில் முதன்முதலாகச் செயலூக் கத்துடன் பங்கு கொண்ட பல தொழிலாளர்கள் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார்கள். ஆனால் அரசியல் நிலைமையைச் சரி வரப் புரிந்து கொள்ள அவர்கள் எல்லோருக்குமே முடிந்து விடவில்லை. தொழிலாளர்களின் ஒரு பகுதியினர் மென்ஷி விக்குகளுடன் சேர்ந்து கொண்டார்கள். போல்ஷிவிக் ஸ்தா பனங்கள் இயந்திரத் தொழில் மையங்களில் மேலோங்கி இருந்தன. மிகவும் முற்போக்குள்ள, அரசியல் உணர்வு பெற்ற பாட்டாளிகளை அவை ஒருங்கிணைத்தன. மென்ஷிவிக்கு களோ, கைத்தொழிலாளர்கள் இடையே, குறைந்த அர சியல் உணர்வு பெற்ற தொழிலாளர்கள் மீது செல்வாக்கு கொண்டிருந்தார்கள். இளம் சமூக-ஜனநாயகவாதிகள் வேறு பட்ட கருத்துக்களும் கொள்கைத் திட்டங்களும் கொண்ட போல்ஷிவிக்குகளையும் மென்ஷிவிக்குகளையும் படிப்படியாகத் தான் இனம் கண்டுகொண்டார்கள். ருஷ்யாவின் சமூக-ஜன

நாயகத் தொழிலாளர் கட்சி என்ற ஒரே பெயரும் அதிகார பூர்வமாக ஒரே செயல் திட்டமும் கொண்ட தனித் தனி போல்ஷிவிக் ஸ்தாபனங்களும் மென்ஷிவிக் ஸ்தாபனங்களும் சில இடங்களில் நிலவியது தொழிலாளர்களுக்குத் திகைப்பு உண்டாக்கிற்று. இது கட்சியையும் புரட்சியையும் பலவீனப் படுத்துகிறது என்று வர்க்க உணர்வு அவர்களுக்கு அறிவுறுத் தியது. போல்ஷிவிக்குகளையும் மென்ஷிவிக்குகளையும் சேர்ந்த பல சமூக-ஜனநாயகவாதித் தொழிலாளர்கள் ஒன்றிணை வைக் கோரினர்கள். ஒரே கட்சி வேண்டும் என்று கீழிருந்து கிளம்பிய இயக்கம் கட்சியை வலுப்படுத்துவதையும் புரட்சியின் வெற்றிக்காகத் தீவிரப் போராட்டம் நடத்தும் பொருட்டு எல்லா சக்திகளையும் ஒற்றுமைப்படுத்துவதையும் பற்றிய ஆர்வத்தை வெளியிட்டது.

ஒற்றுமையில் பாட்டாளி வர்க்கம் கொண்டிருந்த ஆர்வத்தை போல்ஷிவிக்குகள் ஆதரித்தார்கள். மென்ஷிவிக்கு களின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களின் சந்தர்ப்பவாதத்தைச் சொந்த அனுபவத் தால் தெரிந்து கொள்ளவும் போல்ஷிவிக்குகளே பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை வெளியிடுபவர்கள், சோஷலிஸத்துக் காக மெய்யாகவே போராடுபவர்கள் என்று புரிந்து கொள்ள வும் குறித்த காலம் தேவைப்படும் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள். புரட்சிகர மார்க்ஸீயக் கோட்பாடுகளே இறுதியில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் வெற்றிவாகை சூடும், மென்ஷிவிக் தலைவர்கள் தனித்து ஒதுக்கப்பட்டு விடுவார்கள், தொழிலாளர்கள் போல் ஷிவிக்குகளின் தரப்புக்கு வந்து விடுவார்கள் என்று போல் ஷிவிக்குகள் உறுதியாக நம்பினர்கள்.

மென்ஷிவிக் தலைவர்கள் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். கட்சியின் மூன்றுவது காங்கிரஸின் நிகழ்ச்சிகளில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. மாறாக, அப்போது தங்கள் தனி மகாநாட்டைக் கூட்டினர் கள், ஒரே கட்சியில் ஒத்துழைக்க மறுத்தார்கள். ஆயினும் புரட்சியின் படிப்பினைகளது பாதிப்பினால் தொழிலாளர்களது ஒன்றிணையும் ஆர்வத்தை அவர்கள் வேறு வழியின்றி மதிக்க வேண்டியதாயிற்று.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நான்காவது காங்கிரஸ் 1906 வசந்தத்தில் ஸ்டாக்ஹோம் நகரில் நடந்தது. இது ஒன்றிணைக்கும் காங்கிரஸ் என அழைக்கப்பட்டது, ஏனெனில் சமூக-ஜனநாயகக் கட்சியின் போல்ஷிவிக், மென்ஷிவிக், நாட்டின ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டார்கள். புரட்சியின் போக்கில் எதிர்ப்பட்ட கட்சியின் முக்கியப் பணிகள் பற்றிக் காங்கிரஸ் விவாதித்தது. போல்ஷிவிக்குகள் பாட்டாளி வர்க்கத்தின் மேலாதிக்கத்தை வலியுறுத்தினார்கள், ஜாரின் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் ஜனநாயக சக்திகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தை ஆதரித்தார்கள். மென்ஷிவிக்குகளோ, புரட்சியின் தலைமையை பூர்ஷ்வா வர்க்கத்தின் கைகளில் ஒப்படைக்க விரும்பினர்கள். ஆயுதக் கிளர்ச்சியை ஒழுங்கமைத்ததற்காக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட பல போல்ஷிவிக் ஸ்தாபனங்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்ப முடியவில்லை ஆதலால் மென்ஷிவிக்குகளே காங்கிரஸில் பெரும்பாலராய் இருந்தார்கள். மென்ஷிவிக்குகளின் செல்வாக்கு காங்கிரஸின் முடிவுகளில் தெரிந்தது. கட்சியின் நிலச் சீர்திருத்தச் செயல்திட்டத்தை மாற்றுவது அவசியம் என்று போல்ஷிவிக்குகள் கருதினர்கள். நிலத்தை தேசிய உடைமை ஆக்கும் கோரிக்கையை முன்வைக்கும் படி லெனின் யோசனை கூறினர். நிலப்பிரபுக்களிடம் உள்ள எல்லா நிலங்களையும் ஈடு செலுத்தாமல் பறிமுதல் செய்து விவசாயிகளின் பயன்பாட்டுக்கு அவற்றை வழங்க வேண்டும் என்பது இந்தக் கோரிக்கையின் அர்த்தம். ஆனால் மென்ஷிவிக்குகள் காங்கிரஸில் தங்கள் பெரும்பான்மையைப் பயன்படுத்தி லெனினது யோசனையை நிராகரித்து விட்டார்கள். புரட்சியை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட போல்ஷிவிக்குகளின் மற்ற யோசனைகளையும் அவர்கள் ஏற்கவில்லை. இவையாவன: பொது மக்களின் நேரடிப் போராட்டமும் இயக்கத்தின் சட்டவிரோதமான வடிவங்களும் முக்கியமானவை என ஒப்புக்கொள்ள வேண்டும், ஆயுதமேந்திய கிளர்ச்சி போராட்டத்தின் ஆக உயர்ந்த வடிவமாகக் கருதப்பட வேண்டும். மென்ஷிவிக்குகள் இவற்றை ஏற்காததால் போல்ஷிவிக்குகள் கலக்கம் அடையவில்லை. மென்ஷிவிக்குகளுடன் தங்களுக்கு

உள்ள கோட்பாட்டு வேறுபாடுகளை மறைக்காமல் அவர்கள் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு முதல் இடம் கொடுத்தார்கள், புரட்சிகர மார்க்ஸீயப் பதாகையின் கீழ் இந்த ஒற்றுமைக்காகக் காங்கிரஸில் போராடினார்கள்.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி நாட்டில் தொழிலாளர்களின் பிரதானக் கட்சியாய் இருந்தாலும் ஒரே கட்சியாக இல்லை. ருஷ்யாவின் எல்லா மக்கள் இனங்களையும் சேர்ந்த முன்னணித் தொழிலாளர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் அணிகளில் ஒன்றித்துப் போராடினார்கள். ஆனால் பாட்டாளிகள் பல நாட்டினங்களைச் சேர்ந்தவர்களாக இருந்ததன் விளைவாக ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியோடு கூடவே வேறு சில சமூக-ஜனநாயகக் கட்சிகள்—போலிஷ், லாட்வியா, லித்துவானிய முதலிய கட்சிகள்—தோன்றின. இந்தக் கட்சிகள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேராமல் தனித் தனியே செயலாற்றின. இது தொழிலாளி வர்க்கத்தின் செயல் ஒற்றுமையை பலவீனப் படுத்தியது. தேசிய சமூக-ஜனநாயகக் கட்சிகள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் கலப்பதன் இன்றியமையாமையைப் புரட்சியின் போக்கு மேலும் மேலும் நன்கு வலியுறுத்தியது. கட்சியின் நான்காவது காங்கிரஸில் இத்தகைய ஒன்றிணைப்பு நிகழ்ந்தது. தேசிய சமூக-ஜனநாயகக் கட்சிகள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தன.

எல்லா சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களும் ஒன்றித்த ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் ஒன்றிணைந்தது பாட்டாளி வர்க்கத்தை ஒற்றுமைப்படுத்த உதவியது, அதன் புரட்சி ஆற்றலைப் பல மடங்காகப் பெருக்கியது. எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் விரிவான வட்டாரங்கள் மீது போல்ஷிவிக்குகளின் கொள்கை வாதச் செல்வாக்கை அது வலுப்படுத்தியது, சந்தர்ப்பவாதிகளையும் தேசியவாதிகளையும் அம்பலப்படுத்தித் தனித்து ஒதுக்குவதை எளிதாக்கிற்று. ஒன்றித்த ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள் பாட்டாளி வர்க்க சர்வதேசியம், சோதர

நம்பிக்கை, நெருங்கிய போராட்ட நட்புறவு ஆகியவற்றின் உணர்வில் பயிற்றப்பட்டார்கள்.

மக்களின் நலன்களுக்கான போராட்டத்தில் போல்ஷிவிக்குகள் எல்லோருக்கும் முன்னே இருந்தார்கள். அவர்கள் ஜாரின் எதேச்சாதிகாரத்துக்கு எதிராகப் பொது மக்களின் போராட்டத்தைச் சோர்வின்றி ஒழுங்கமைத்தார்கள். தங்கள் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக—ஊதிய உயர்வுக்காகவும் வேலை நாள் நேரம் குறைக்கப்படுவதற்காகவும்—தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்களை அவர்கள் உற்சாகமாக ஆதரித்தார்கள். அரசியல் சட்டம் பற்றிய மருட்சிகள் எவ்வளவு கேடானவை என்பதை அவர்கள் நாள் தோறும் பொது மக்களுக்கு விளக்கி வந்தார்கள். நிகழ்ச்சிகளின் போக்கு தங்கள் கொள்கையின் உண்மையை நிரூபிக்கும் என போல்ஷிவிக்குகள் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அவ்வாறே நடக்கவும் செய்தது. போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு வளர்ந்தது. ஓர் ஆண்டிற்குள், 1907 வசந்தத்தில் லண்டன் மாநகரில் நடந்த ஐந்தாவது கட்சிக் காங்கிரஸில் அவர்கள் வென்றார்கள். பெரும்பான்மையான சமூக-ஜனநாயகத் தொழிலாளர்கள் வாழ்க்கையின் உண்மை போல்ஷிவிக்குகளின் தரப்பில் இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். ''இடதுசாரிக் கூட்டணி'', அதாவது ஜாரின் முடியரசுக்கு எதிரான ஒன்றித்த ஜனநாயக முன்னணி அமைக்கும் லெனினது செயல் தந்திரத்தைக் காங்கிரஸ் ஆதரித்தது. ''இடதுசாரிக் கூட்டணி'' பற்றிய செயல் தந்திரம் எல்லாப் புரட்சிகளதும் அனுபவத்திலிருந்து தானாகவே கிளைத்திருக்கிறது என்றும் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் மார்க்ஸீயக் கட்சிக்கு அது கட்டாயமாகத் தேவையானது என்றும் லெனின் நிரூபித்தார்.

ஒன்றித்த கட்சி 1907ல் 150ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. கட்சி பொது மக்களுக்கு உரியது ஆகிவிட்டது. ஆனால் ஸ்தாபன ஒன்றிணைப்பு உண்மையான போராட்ட ஒற்றுமையை உடனே ஏற்படுத்திவிடமுடியவில்லை. எல்லா சமூக-ஜனநாயகவாதிகளையும் உடைக்க முடியாத ஒன்றித்த சக்தியாக ஒற்றுமைப்படுத்துவதற்கு நேரம் தேவைப்பட்டது.

டிசம்பர் கிளர்ச்சியின் தோல்விக்குப் பிறகு புரட்சி கொஞ்சங் கொஞ்சமாக வேகம் குறைந்து கொண்டு போயிற்று.

பின்னணிப் போராட்டங்கள்

புரட்சிகரத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஜார் ஆட்சி வெறியுடன் பழி வாங்கிற்று. தண்டனைப் படைப் பிரிவுகள் நாடு முழுவதிலும் சென்று புரட்சியில் கலந்து கொண்டதாகச் சந்தேகிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் அடித்துப் புடைத்தன, சுட்டு வீழ்த்தின. ஆனால் புரட்சியை அடியோடு நசுக்கிவிட இன்னமும் ஜாரினால் முடியவில்லை. தொழிலாளர்கள் விடாப்பிடியான போராட்டங்களைத் தொடர்ந்தார்கள். விவசாயிகளின் எழுச்சிகள் 1906 கோடையில் நாட்டின் ஐரோப்பியப் பகுதியின் பாதியில் பரவின. பால்டிக் கடற்படையில் கலகக் கிளர்ச்சிகள் நடந்தன. தொடர்ந்து நடந்த புரட்சி, வாக்களித்தபடி அரசாங்க தூமாவைக் கூட்டுவதற்கு ஜார் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. நிலத்தையும் விடுதலையையும் தூமாவின் வாயிலாகச் சமாதான வழியில் பெறலாம் என்ற மருட்சியைப் பொது மக்களிடையே பரப்ப ஜார் அரசாங்கம் முயன்றது.

தேர்தல் சட்டம் நாட்டின் மக்கள் தொகையில் பாதிப் பெயரை வாக்குரிமை அற்றவர்கள் ஆக்கியது. தூமாவுக்குத் தேர்தல்கள் சர்வஜன வாக்குரிமையின் பேரிலோ, சமத்துவமாகவோ, நேர்முகமாகவோ, இரகசியமாகவோ நடக்கவில்லை. சொத்தையும் வர்க்கங்களையும் அடையாளமாகக் கொண்டு மக்கள் தனி வகைகளாகப் பிரிக்கப்பட்டார்கள். இந்த வகைகள் குரியாக்கள் (வேளாண்மை, நகர, விவசாயிகள், தொழிலாளர் குரியாக்கள்) எனப்பட்டன. ஒவ்வொரு குரியாவிலும் தேர்வாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள், ஆனால் சம எண்ணிக்கையுள்ள வாக்குகளின் பேரில் அல்ல. நிலப்பிரபுக்களில் இரண்டாயிரம் வாக்காளர்களில் ஒருவன் தேர்வாளனைத் தெரிந்தெடுக்கப்பட்டான். விவசாயிகளில் முப்பதாயிரம் வாக்காளர்களில் ஒருவனும் தொழிலாளர்களில் தொண்ணூறாயிரம் வாக்காளர்களில் ஒருவனும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

இது சம்பந்தமாகத் தொழிலாளர்கள் எத்தகைய நிலையை மேற்கொள்ள வேண்டியிருந்தது? அரசியல் சட்டம்

பற்றிய மருட்சியைப் பொது மக்களின் உள்ளங்களிலிருந்து அகற்றி, புரட்சிப் போராட்டம் ஒன்றினால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்பதை அவர்களுக்கு விளக்குவதே முக்கிய மானது என போல்ஷிவிக்குகள் கருதினார்கள். எனவே, தூமா வை பகிஷ்கரிக்கும் படி அவர்கள் பொது மக்களுக்கு வேண்டு கோள் விடுத்தார்கள். ஆனாலும் தூமா தேர்தல்களை இடை முறிக்க முடியவில்லை. புரட்சியின் உச்ச கட்டம் கடந்துவிட் டது. அதன் சரிவு தொடங்கிவிட்டது. ''மக்கள் விடுதலைக் கட்சி'' என்று தேர்தலில் தங்களை அழைத்துக்கொண்ட காடெட்டுகளின் ஏமாற்றுக்கு விவசாயிகள் ஆளாகிவிட்டார் கள். புரட்சி வேகம் தணியத் தொடங்கியிருந்த வேளையில் போல்ஷிவிக்குகள் முதல் தூமாவை பகிஷ்கரித்தது தவறு என்று தெரிந்தது. இந்தத் தவற்றை அவர்கள் விரைவில் திருத்திக் கொண்டார்கள். அரசியல் சட்டம் பற்றிய மருட்சி களை தூமாவுக்கு உள்ளிருந்து கொண்டே எதிர்த்துப் போராட முடியும் என்பதை அனுபவம் காட்டிவிட்டது.

முதலாவது தூமா எழுபத்திரண்டு நாட்களே நீடித்தது. அதில் விவாதிக்கப்பட்ட முக்கியப் பிரச்சினை நிலம் பற்றியது. இந்த விவாதம் நாடு அனைத்தின், மக்கள் அனைவரின் கவனத் தையும் ஈர்த்தது. விவசாயிகளின் பிரதிநிதிகள் (துருதோவிக்கு கள்) நிலப்பிரபுக்களிடம் உள்ள எல்லா நிலமும் விவசாயி களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கோரினார்கள், மீட்புத்தொகை செலுத்த இசைந்தார்கள். ''நிலம் உழைப் பாளிகளுக்கு'' என்றார்கள் அவர்கள். காடெட்டுகளோ நிலப் பிரபுக்களிடம் உள்ள நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் நல்ல விலை கொடுத்துப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று யோசனை கூறினார்கள். தொழிலாளர் பிரதிநிதிகள் விவசாயிகளின் கோரிக்கைகளை ஆதரித்தார்கள். ஜார் நிலமோ விடுதலையோ அளிக்கப் போவதில்லை என்பதை விவசாயிப் பிரதிநிதிகள் புரிந்து கொள்ளலானார்கள். அவர்கள் தொழிலாளர் பிரதி நிதிகளுடன் நெருங்கிய உறவு கொள்ளத் தொடங்கி, விவ சாயிகளின் கோரிக்கைகளை முன்னிலும் அழுத்தமாக வலியுறுத் தினார்கள். அப்போது ஜார் தூமாவைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தல்கள் நடக்கும் என்று அறிவித்தான்.

முதலாவது தூமா பயனுள்ள பயிற்சிப் பள்ளியாக விளங் கிற்று. இரண்டாவது தூமா முந்தியதைக் காட்டிலும் அதிக உறுதி கொண்டிருந்தது: அதில் அதிக எண்ணிக்கையில் விவ சாயிகள் பிரதிநிதிகளும் சமூக-ஜனநாயகவாதிகளும் இருந் தார்கள். முதலாவது தூமாவில் 97 விவசாயிகள் பிரதிநிதி களும் 17 சமூக-ஜனநாயகவாதிகளும் இருந்தார்கள் என்றால் இரண்டாவது தூமாவில் 155 விவசாயிகள் பிரதிநிதிகளும் 65 சமூக-ஜனநாயகவாதிகளும் இருந்தார்கள். இரண்டாவது தூமா முதலாவதை விடச் சற்று அதிக நாட்கள் நீடித்தது. அதிலும் நிலப் பிரச்சினையே முதன்மை பெற்றது. போல் ஷிவிக்குகள் ''இடதுசாரிக் கூட்டணிக்'' கொள்கையை, அதாவது, விவசாய ஜனநாயகவாதிகளுடன் ஐக்கியக் கொள் கையைக் கடைப்பிடித்தார்கள். அவர்கள் விவசாயிகள் பிரதி நிதிகளை ஆதரித்தார்கள், இன்னும் உறுதியாகச் செயல் ஆற்றும்படி அவர்களைத் தூண்டினார்கள். விவசாயிகள் பிரதி நிதிகள் மேலும் அடிக்கடி சமூக-ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து நடவடிக்கை மேற்கொண்டார்கள். இது ஜார் அரசாங்கத்துக்கு ஆழ்ந்த கலவரம் ஊட்டியது. புரட்சி மீது புதிய தாக்கு நடத்த அது வெகு காலமாகவே ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. போல்ஷிவிக்குகள் மக்களை இது பற்றி முன்கூட்டி எச்சரித்தார்கள்.

1907, ஜூன் மாதம் ஜார் அரசாங்கம் உட் புரட்சி நடத் தியது. தூமாவின் சமூக-ஜனநாயகவாதிகள் குழு மீது சதியா லோசனைக் குற்றம் சாட்டிக் கைது செய்தது. தூமா கலைக்கப் பட்டது. காடெட்டுகள் ஒரு வார்த்தையில் கூட எதிர்ப்பு தெரிவிக்காமல், மௌனமாகக் கலைந்து சென்று விட்டார்கள். இவ்வாறு அவர்கள் இன்னும் ஒரு முறை புரட்சிக்குத் துரோகம் செய்தார்கள். ஜார் புதிய தேர்தல் சட்டம் பிறப்பித் தான். இது மக்களின் உரிமைகளை இன்னும் அதிகமாகக் குறைத்தது. நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் தூமாவுக்கு முக்கால்வாசித் தேர்வாளர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். தொழிலாளர்களும் விவசாயிகளுமோ, நான்கில் ஒரு பங்கு தேர்வாளர்களையே தேர்ந்தெடுக்க முடிந்தது. ஒடுக்கப்பட்ட நாட்டினங்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைந்து விட்டது: மத்திய ஆசியாவின் ஆதிக்குடிகளுக்கு வாக்குரிமை

அறவே இல்லை. போலந்து, காக்கேஷியா, பிற நாட்டினப் பிரதேசங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளது எண்ணிக்கை கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு ஆக்கப்பட்டது. இத் தகைய அலங்கோலமான தேர்தல் சட்டம் மூன்றுவது தூமா வில் பண்ணையடிமைச் சொந்தக்கார நிலப்பிரபுக்களும் பெரு முதலாளிகளும் தனி ஆதிக்கம் செலுத்த வகை செய்தது.

புரட்சி தோல்வி அடைந்தது ஏன்? மக்களுக்குப் புரட்சி என்ன கற்பித்தது?

1905-1907ல் நடந்த ருஷ்யப் புரட்சி, ஏகாதிபத்தியக் காலக் கட்டத்தில் நிகழ்ந்த முதலாவது மக்கள் புரட்சி ஆகும். இது நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சி. நாட்டின விடுதலை இயக்கமே இதில் பெருத்த இடம் பெற்றிருந்தது. இப்போது உலகின் பல மக்கள் இனங்கள் எதன் பொருட்டுப் போராடு கின்றனவோ அதன்பொருட்டே அப்போது ருஷ்யாவின் மக்கள் இனங்கள் போராட்டம் நடத்தின. எனவேதான் முதலாவது ருஷ்யப் புரட்சி அவ்வளவு படிப்பினை நல்குவதாக விளங்கு கிறது. போல்ஷிவிக் கட்சி புரட்சி தோல்வி அடைந்ததன் காரணங்களைப் பகுத்து ஆராய்ந்து, புரட்சியிலிருந்து என்ன படிப்பினைகள் பெற வேண்டும் என்று விவரித்தது.

முதலாவது ருஷ்யப் புரட்சி தோல்வி அடைந்ததன் காரணங்கள் என்ன?

புரட்சியில் போல்ஷிவிக்குகள் கடைப்பிடித்த கொள்கை தவருனதா? அல்ல. புரட்சியின் போக்கு போல்ஷிவிக்குகளின் கொள்கை சரியானது என்று உறுதிப்படுத்தியது. போல்ஷி விக்குகள் சரியான கோஷங்களை முன் வைத்தார்கள்: ஆயுத மேந்திய கிளர்ச்சி மூலம் ஜார் ஆட்சியைக் கவிழ்க்க வேண் டும், பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகள் சமூகத்துக்கும் ஐக்கியம் ஏற்படுத்த வேண்டும், தொழிலாளர்களையும் விவசாயிகளையும் கொண்டு புரட்சிகர அரசாங்கம் அமைக்க வேண்டும். போல்ஷிவிக்குகள் முதலில் போராட்டத்தில் இறங்கினர்கள், தங்களைப் பின் தொடரும்படி பொதுமக்களை ஈர்த்தார்கள், உயிரை மதிக்காமல் இறுதிவரை வீரத்துடன் போராடினர்கள். பொது மக்களின் போராட்டம் வெற்றி பெறுததற்குக் காரணம் புரட்சித் தாக்கு போதிய வலிமை கொண்டதாக இல்லாததே ஆகும். ஜார் ஆட்சி கடுமையான

தாக்குக்கு உள்ளாயிற்று என்றாலும் அதைத் தாங்கிக் கொண்டு சமாளித்துவிட்டது.

புரட்சியின் தலைமைச் சக்தியாக இருந்தது தொழிலாளி வர்க்கம். அது வீரப் போராட்டத்துக்கு உதாரணம் காட்டியது, மக்கள் அனைவரதும் போராட்ட உற்சாகத்தைத் தூண்டி ஊக்கியது. வரலாற்றில் முதன்முறையாகப் பாட்டாளி வர்க்கம் மக்களின் தலைவனைச் செயல் ஆற்றியது. முதலாளித்துவம் போதிய வளர்ச்சி அடையாத காரணத்தால் தொழிலாளி வர்க்கம் நாட்டின் மக்கள் தொகையில் சிறுபான்மையாக இருப்பினும் புரட்சிக்குத் தலைமை ஏற்கத் தொழிலாளி வர்க்கம் வல்லது என்பது நடப்பில் உறுதிப்பட்டுவிட்டது.

ஆயினும் தொழிலாளர்கள் இன்னமும் ஒன்றித்துச் செயல்படவில்லை. பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் பிரிவு முந்திய போராட்டங்களால் கணிசமாகப் பலம் குறைந்திருந்த சமயத்தில் போராட்டத்துக்குக் கிளம்பின தனித் தனித் தொழிலாளர் பிரிவுகள். கிளர்ச்சியை நடத்துவதற்கான ஒன்றித்த அகில ருஷ்ய மையம் இல்லை. எனவே ஆயுதப் போராட்டம் ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாத வட்டாரக் கிளர்ச்சிகளின் தன்மையை அடைந்தது. எல்லா சமூக-ஜனநாயகவாதிகளையும் ஒன்றித்த ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் ஒன்றிணைப்பது புரட்சியின் போக்கிலேயே தான் சாத்தியம் ஆயிற்று. ஆனால் மென்ஷிவிக்குகள் போராடுவோரின் அணிகளில் ஒழுங்குக் குலைவு ஏற்படுத்துவதைத் தொடர்ந்தார்கள். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சிக்குள் ஒற்றுமை இல்லாதது தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்தி, அதன் தாக்குதலின் வேகத்தை மட்டுப்படுத்தியது. இந்தக் காரணங்களால் பாட்டாளி வர்க்கம் புரட்சியின் மேலாதிக்கப் பணியை முழுமையாக இறுதிவரை நிறைவேற்றவும் அதை வெற்றிக்கு இட்டு வரவும் முடியவில்லை.

மேம்பட்ட வாழ்க்கைக்கான போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளின் ஐக்கியம் உலக வரலாற்றிலேயே முதன் முறையாக உருவாகலாயிற்று. தொழிலாளர்களும் விவசாயிகளும் தனித் தனியே சிதறி இருந்தது தான் முந்திய எல்லாப் புரட்சிகளினதும் பலவீனமாக இருந்தது. ருஷ்யப்

புரட்சியில் அவர்கள் சேர்ந்து செயல் புரியத் தொடங்கினர் கள். இது சர்வதேச விடுதலை இயக்கத்தின் மிகப் பெரிய சாதனையாகத் திகழ்ந்தது. ஆனால் இந்த ஐக்கியத்தை உறுதி யாக நிலைப்படுத்த அப்போது முடியவில்லை. விவசாயிகள் சமூகம் போதிய ஒழுங்கமைப்பும் நெஞ்சு உறுதியும் இல்லாமல், தனித் தனியே பிரிந்து செயல் ஆற்றியது. பெரும்பாலான குடியானவர்கள் அரசியல் நோக்கில் மிகவும் பின்தங்கி இருந்தார்கள். அவர்கள் இன்னமும் ஜார்மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள், அரசாங்க தூமா ஏதோ செய்யப் போகிறது என்று எதிர்பார்த்தார்கள்.

ருஷ்யாவில் வசித்த பல நாட்டினங்களைச் சேர்ந்த தொழி லாளர்கள் தோளோடு தோள் சேர்த்துப் போராடினர்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் ஒற்றுமை அப் போதுதான் உருவாகத் தொடங்கியிருந்தது. ஜார் ஆட்சி யுடன் சமரசம் செய்து கொள்ள விழைந்த நாட்டின பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்கும் நாட்டினக் குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளின் ஊசலாட்டமும் நாட்டின விடுதலைப் போராட் டத்தைப் பலவீனப்படுத்தின.

இராணுவச் சீருடை அணிந்த விவசாயிகளே பெரும்பால ராய் இருந்த சைனியத்தின் நடத்தையை இவை எல்லாம் பாதகமாகப் பாதித்தன. சில படைப் பிரிவுகள் எதேச்சாதி காரத்துக்கு எதிராக ஊக்கத்துடன் செயல் புரிந்தன என்றாலும் பெரும்பாலான படையினர் ஜார் அரசாங்கத்திற்கு விசு வாசமாய் இருந்தார்கள், அதன் ஆணைகளை நிறைவேற்றினர் கள்.

பாட்டாளி வர்க்கப் போராட்டமும் விவசாயிகளின் எழுச்சிகளும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் நடவடிக்கை களும் படையினரின் கலகக் கிளர்ச்சிகளும் நிலப் பிரபுக்களை அவர்களுடைய ஜாரோடு சேர்த்து அடித்துக் கொண்டு போக வல்ல பிரசண்டமான பெருக்காக ஒன்று கலப்பது முதல் புரட்சியில் முடியவில்லை.

உலக பூர்ஷ்வா வர்க்கம் ருஷ்ய ஜாருக்கு உதவி புரிந்தது. ருஷ்யாவில் இருந்த தங்கள் முதலீடுகள் பறிபோய் விடுமோ என்று அன்னிய ஏகாதிபத்தியவாதிகள் நடுங்கினர்கள். ருஷ்யா விலிருந்து பறந்து சிதறும் தீப்பொறிகள் ஐரோப்பா முழு

வதிலும் பெருந்தீயை மூட்டி விடும், அதில் தங்களுடைய வருமானங்களும் ஆட்சி அதிகாரமும் எரிந்து சாம்பலாகி விடும் என்று அவர்கள் பயந்தார்கள். உதாரணமாக, பிரெஞ்சு நிதியதிபர்கள் ஜார் அரசாங்கத்துக்கு இருநூறு கோடி பிராங்குகள் கடன் கொடுத்தார்கள். தன்னுடைய நிலையை வலுப்படுத்திக்கொள்ளவும், தண்டனை நடவடிக்கைகளும் இராணுவ-போர்க்கள நீதிமன்ற விசாரணைகளும் ஆட்களைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்குவதுமான தன் கொள்கையைக் கடைப்பிடிக்கவும், ஜார் அரசாங்கத்துக்கு இந்தக் கடன் துணை செய்தது.

1905-1907ல் நடந்த ருஷ்யப் புரட்சி உலகம் முழுவதிலும் விடுதலைப் போராட்டத்தின் மீது மிகப் பெருத்த பாதிப்பு நிகழ்த்தியது. உலகப் பிற்போக்கின் முக்கிய அரண்களில் ஒன்றான ஜார் ஆட்சி முடியரசுக்குப் புரட்சி பலமான அடி கொடுத்தது. இந்த நிகழ்ச்சி பல நாடுகளில் புரட்சி உற்சாகத்தைத் தீவிரப்படுத்தியது. ருஷ்யப் புரட்சி சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் புதிய கட்டத்தைத் தொடங்கி வைத்தது. ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களின் போராட்டம் தீவிரம் அடைந்தது. ஈரான், துருக்கி, சீனம் போன்ற பெரிய ஆசிய நாடுகளில் பூர்ஷ்வாப் புரட்சிகள் நடந்தன. இந்தியா, இந்தோசீனம், இந்தோனேசியா, மங்கோலியா ஆகியவற்றில் காலனி ஆட்சி ஒடுக்குமுறைக்கு எதிராக உழைப்பாளிகளின் போராட்டம் உக்கிரமாயிற்று. ருஷ்யப் புரட்சி பற்றிய செய்தி லத்தீன் அமெரிக்காவையும் எட்டியது. கியூபாவில் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். மெக்ஸிக்கோவில் புரட்சி மூண்டது. ''1905ல் ருஷ்யாவில் எழுந்த புரட்சி ஆவேசம் எங்களைத் தூண்டி ஊக்கியது. அப்போது ருஷ்யாவில் நடந்த போராட்டம் எங்களுக்கு வழிகாட்டும் வட மீனைத் திகழ்ந்தது'' என்றார் மெக்ஸிக்கோ புரட்சியில் பங்கு கொண்ட ஒரு பிரமுகர். ஆர்ஜென்டைனாவிலும் சிலியிலும் பிரேஸிலிலும் புரட்சி அலை கொந்தளித்து எழுந்தது. இவை எல்லாம் ஏகாதிபத்தியக் காலனியாட்சி அமைப்பைப் பலவீனப்படுத்தின.

உலகப் புரட்சி இயக்கத்தின் மையம் ருஷ்யாவுக்கு மாறிவிட்டது. ருஷ்யாவின் வீரப் பாட்டாளி வர்க்கம் உலகு அனைத்தினதும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணி ஆகிவிட்டது.

முதலாவது ருஷ்யப் புரட்சி போராட்டத்தின் புதிய சாதனங்களையும் வடிவங்களையும் கையாண்டது. உலகத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறும் விடுதலை இயக்கம் அனைத்தினதும் வரலாறும் அதற்கு முன் கண்டிராதவை இந்தச் சாதனங்களும் வடிவங்களும். எல்லா ஜனநாயகச் சக்திகளும் பங்கு கொண்ட திரளான மக்களின் அரசியல் வேலை நிறுத்தம் முதன்முதலாகக் கையாளப்பட்டது, பின்னர் ஆயுத மேந்திய கிளர்ச்சியாக வளர்ந்தது. புரட்சியின் போக்கில் தோன்றிய தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்வதிலும் தலைமை தாங்கி நடத்துவதிலும் முக்கியப் பங்கு ஆற்றின. அதோடு கூட, தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் சமூகம் ஆகியவற்றின் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் என்ற புதிய மக்கள் அதிகாரத்தின் மூலக்கரு வடிவாகவும் விளங்கின இவை. 1917ம் ஆண்டு மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியினது வெற்றியின் விளைவாக ருஷ்யாவில் நிலை நாட்டப் பெற்ற சோவியத் ஆட்சி அதிகாரத்தின் முன்னுரு இந்த சர்வாதிகாரம்.

புரட்சி மக்களுக்கும் பல படிப்பினைகளை நல்கியது. வாழ்க்கைப் பள்ளியில், அதிலும் புரட்சி போன்ற மாபெரும் பள்ளியில் மக்கள் வேறு எங்கேயும் விட அதிகமாகக் கற்கிறார்கள். தொழிலாளர்களும் கணிசமான அளவு விவசாயிகளும் மிக அவசியமான பாடங்களைக் கற்றுத் தேர்ந்தார்கள்.

புரட்சியில் தனது மேலாதிக்கத்தைச் செயல்படுத்தவும் புரட்சியின் வெற்றியில் அக்கறை கொண்ட சமூகத்தின் எல்லா ஜனநாயகச் சக்திகளையும் தன்னைச் சுற்றி ஒருங்கு திரட்டவும் போராட்ட ஊக்கம் மிக்க தனது மார்க்ஸீயக் கட்சியின் தலைமையிலேயே தன்னால் முடியும் என்பதை ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் புரட்சியின் அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டது. இத்தகைய கட்சியாக விளங்கியது லெனினால் அமைக்கப்பட்ட போல்ஷிவிக் கட்சி.

ருஷ்யாவின் தொழிலாளர்கள், விவசாயிகள், ஒடுக்கப் பட்ட மக்கள் இனங்கள் ஆகிய அனைவரதும் ஒன்று சேர்ந்த புரட்சிப் போராட்டமே ஜாரின் எதேச்சாதிகாரத்தையும் அதன் பின் முதலாளித்துவ நுகத்தையும் ஒழிக்க முடியும்

என்பதைப் புரட்சி நம்பிக்கை ஊட்டும் விதத்தில் நிரூபித்தது. அரசியல் விழிப்பு அடைந்த மக்கள் முதலில் ஜாரிடம் சலுகை கோரினார்கள். ஜார் பாய்ச்சல் காட்டினான். மக்கள் திரளின் தாக்குதல் மும்முரமானபோது அற்பச் சலுகைகள் வழங்க ஒருப்பட்டான், ஆனால் தாக்குதல் சிறிது தளர்ந்ததும் அவற்றை மறுத்து விட்டான். எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்து விடாப்பிடியாகப் போராடுவதன் இன்றியமையாமையை மக்கள் நாளடைவில் புரிந்து கொண்டார்கள்.

புரட்சி எல்லா வர்க்கங்களையும் கட்சிகளையும் செயலில் காட்டியது, அவற்றின் விருப்பங்களையும் நாட்டில் அவற்றின் பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தியது. ஒரு கட்சி எதற்காகப் போராடுகிறது, யார் எவருடைய வர்க்க நலன்களைக் காக்கிறார்கள் என்பதைத் திரளான மக்கள் கண்கூடாகக் கண்டார்கள். எல்லோரும் ஒரே மாதிரியான விடுதலையை விரும்புகிறார்கள் என்று புரட்சிக்கு முன்பு பலருக்குத் தோன்றியது. புரட்சி இந்தத் தெளிவின்மையை அகற்றிவிட்டது. வெவ்வேறு வர்க்கங்கள் பெற முயல்வது ஒரே வகையான சுதந்திரம் அல்லவே அல்ல என்று அது காட்டியது. காடெட்டுகளையும் சமாதான வழியில் விடுதலை பெறுவதாக அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளையும் விவசாயிகள் முதலில் நம்பினார்கள். ஆனால் புரட்சி ஜாருடன் முடிவான போராட்டத்தை எட்டி விட்டதும் காடெட்டுகள் கயமையுடன் மக்களுக்குத் துரோகம் செய்தார்கள். விவசாயிகள் துன்பம் நிறைந்த, ஆனால் பயனுள்ள பாடம் கற்றுக் கொண்டார்கள். நகரத் தொழிலாளர்களுடன் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்வதே நிலையான வெற்றிக்கு உறுதி அளிக்கும் என்று பல விவசாயிகள் புரிந்து கொண்டார்கள்.

புரட்சி போல்ஷிவிக் கட்சிக்குப் பல படிப்பினைகளை நல்கியது. கட்சி பெருத்த அரசியல் பயிற்சி பெற்றது, மக்கள் திரளை ஒழுங்கமைப்பதில் மிக நிறைய அனுபவம் திரட்டியது. போல்ஷிவிக்குகள் லட்சோப லட்சம் பாட்டாளிகளின் போராட்டத்துக்கு முதல் தடவை தலைமை ஏற்று நடத்தினார்கள். 1905 வரை ஒப்புநோக்கில் சிறு வட்டாரத்தினரே போல்ஷிவிக்குகளை அறிந்திருந்தார்கள். புரட்சி நடக்கையில் தொழிலாளர்களின் விரிவான திரள்கள் போல்ஷிவிக்குகளை

இனம் கண்டு கொண்டன. போல்ஷிவிக்குகள் மக்களின் நலன்களுக்காகத் தன்னலம் கருதாமல் போரிட்டார்கள், போராட்டத்தின் மிகக் கெடுபிடி நிறைந்த, அபாயமான பகுதி களில் இருந்தார்கள். இவை எல்லாம் மக்களின் உணர்வில் ஆழப் பதிந்தன.

புரட்சியில் மக்கள் தங்கள் ஜீவாதார நலன்களின் பொருட்டுப் போராடக் கற்றுர்கள். 1905ம் ஆண்டுப் புரட்சி போன்ற பொது ஒத்திகை இல்லாமல் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றி சாத்தியம் ஆகி இராது என்று லெனின் கூறியது வெறுமே அல்ல.

முதல் புரட்சியிலிருந்து இரண்டாம் புரட்சிக்கு

புரட்சி தோல்வி அடைந்ததை அடுத்துத் துன்பம் மிகு ந்த காலம் தொடங்கியது. நாடு எங்கும் குருதி பெருகிற்று, பயங்கர நிகழ்ச்சிகள் தலைவிரித்தாடின, மக்கள் கிட்டி போட்டு நெருக்கப்பட்ட வர்கள் போலத் தவித்தார்கள். புரட்சிப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆயிரக் கணக்கில் மரண தண்டனைக்கு உள்ளானுர்கள். பதினாயிரக் கணக் கானவர்கள் சிறைகளில் தள்ளவும் கடுங்காவல் தண்டனை முகாம்களுக்கு அனுப்பவும் பட்டார்கள். புரட்சிப் பாதை யில் அடிவைக்கத் துணிந்த உழைப்பாளிகளை ஜார் ஆட்சி கொடூரமாகப் பழி வாங்கியது. ஜார் அரசாங்கமும் நிலப் பிரபுக்களும் முதலாளிகளும் மக்களின் உணர்விலிருந்து புரட்சியின் நினைவை அறவே துடைத்து அழித்துவிடுவது என்று சங்கற்பம் செய்து கொண்டார்கள்.

ஒழுங்காகப் பின்வாங்கல்

பொது மக்களின் போராட்டம் தளர்வடைந்தது. தொழிலாளர் இயக்க அலை ஒரேயடியாகத் தணிந்துவிட்டது. வேலைநிறுத்தக்காரர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டு போயிற்று. நாட்டுப் புறத்தில் நடந்த தீவிரப் போராட்டம் அப்போதைக்கு அடங்கிவிட்டது. மிகப் பெரும் புரட்சியின் பல ஆண்டுக்காலக் கெடுபிடிக்குப் பின்

ஏற்பட்ட கலைப்பு மக்களை அயர்த்தியது. இந்தக் கலைப்பு தீர்வதற்கு நேரம் தேவைப்பட்டது.

ஆயினும் புரட்சிக்கு முந்திய அமைப்பு முறைக்கு முழுமையாகத் திரும்ப ஜார் ஆட்சியால் முடியவில்லை. ருஷ்யா புரட்சிக்கு முந்தியதுபோல இப்போது இல்லை. தங்கள் அதிகாரத்தையும் வருவாய்களையும் காப்பாற்றி வைத்துக் கொள்ளும் பொருட்டு ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சிக்குத் தங்களை இசைவித்துக் கொள்வது இன்றியமையாதது என்பதைப் பண்ணையடிமைச் சொந்தக்கார நிலப்பிரபுக்கள் புரிந்து கொண்டார்கள். நகரங்களையும் கிராமங்களையும் சேர்ந்த பூர்ஷ்வாக்களிடையே கூட்டாளிகளைத் தேடினார்கள் அவர்கள். ஜார் ஆட்சி புதிய கொள்கையைக் கடைப்பிடிக்கத் தலைப்பட்டது. அரசாங்க தூமாவின் வாயிலாக, நிலப் பிரபுக்கள், பூர்ஷ்வாக்களின் புரட்சி எதிர்ப்பு ஐக்கியத்தை உறுதிப்படுத்தும் பொருட்டும் மக்களின் எஞ்சிய பகுதியினரை ஏமாற்றும் நோக்கத்துடனும் அரசாங்க தூமாவை அது அப்படியே வைத்திருந்தது. அலங்கோலமான தேர்தல் சட்டம் ஜார் ஆட்சிக்கு விரும்பிய பயனை அளித்தது. 1907ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாவது அரசாங்க தூமாவில் சமூக-ஜனநாயகவாதிகளதும் விவசாயிகள் பிரதிநிதிகளதும் மிகச் சிறிய குழுவே எஞ்சி இருந்தது. ஜாரின் எதேச்சாதிகாரத்தை பகிரங்கமாக ஆதரிப்பவர்களும் பண்ணையடிமைச் சொந்தக்கார நிலப்பிரபுக்களின் நலன்களைக் காப்பவர்களுமே தூமாவின் நிகழ்ச்சிப் போக்கைத் தீர்மானித்தார்கள். பூர்ஷ்வா வர்க்கப் பிரதிநிதிகள் எதிர்க் கட்சியின் பாத்திரத்தை வகித்தார்கள், எனினும், அவர்கள் புரட்சியை அஞ்சியபடியால் எல்லா அடிப்படைப் பிரச்சினைகளிலும் ஜாரின் அரசாங்கத்தையே ஆதரித்தார்கள்.

எல்லா விவசாயிகளுக்கும் நிலத்தை வழங்காமலும் நிலப் பிரபுக்களின் நிலத்தைப் பறிக்காமலும் இருக்கும் வகையில் நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜார் அரசாங்கம் முயன்றது. புரட்சியின் விளைவாக, ''ஜார்-அப்பன்'' மேல் விவசாயிகள் விசுவாசம் பாராட்டுவார்கள் என்ற நம்பிக்கை ஆட்சித் தலைவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. அவர்கள் கிராம பூர்ஷ்வா வர்க்கத்தை — பணக்கார விவசாயிகளான குலாக்கு

களை — தங்களுக்கு ஆதாரமாகக் கொள்ளத் தொடங்கினர்கள், ஏழைக் குடியானவர்களின் நிலங்களைச் சொந்தம் ஆக்கிக் கொள்ள அவர்களுக்கு உதவினர்கள். இந்த நோக்கத்துடன் புதிய நிலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இச் சட்டம் நிலப் பிரபுக்களின் நிலத்தைத் தொடவில்லை. அந்த நிலம் முன்போலவே சட்டத்தின் பாதுகாப்பில் இருந்தது. மாறுதல்கள் விவசாயிகளின் நிலத்தை மட்டுமே பாதித்தன. முன்பு இந்த நிலம் கூட்டு சமுதாயத்துக்குச் சொந்தமாய் இருந்தது. சமுதாயம் விவசாயிக்குக் குறித்த அளவு நிலத்தை ஒதுக்கீடு செய்தது. புதிய சட்டப்படி கூட்டு சமுதாயத்திலிருந்து விலகிக் கொள்ளவும் தன் ஒதுக்கீட்டு நிலத்தைச் சொந்த உடைமையாகப் பதிவு செய்து கொள்ளவும் ஒவ்வொரு விவசாயிக்கும் உரிமை அளிக்கப்பட்டது. சில ஏழைக் குடியானவர்கள் (சிறப்பாகக் கூலி வேலை தேடி நகரங்களுக்குச் சென்றவர்கள்) தங்கள் ஒதுக்கீட்டு நிலத்தை விற்றுவிட்டு, கிராமத்துடன் தங்கள் தொடர்பை முடிவாக அறுத்துக் கொண்டு விட்டார்கள். நாட்டுப்புற பூர்ஷ்வாக்களோ (குலாக்குகள்), தனிப்பட்ட விவசாய நிதிமனையின் உதவியால் ஏழைக் குடியானவர்களிடமிருந்து அவர்களுடைய ஒதுக்கீட்டு நிலங்களை மலிவான விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். பெருந்திரளான குடியானவர்களுக்கோ, கூட்டு சமுதாயத்திலிருந்து வெளியேறியதால் வறுமையிலும் அடிமைத் தளையிலுமிருந்து மீட்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை. அதிகாரிகள் எவ்வளவோ வலுக்கட்டாயப்படுத்தியும் மொத்தத்தில் சுமார் கால்வாசிக் குடியானவர்களே கூட்டு சமுதாயத்திலிருந்து விலகினர்கள்.

ஜார் ஆட்சி முன்போலவே மக்களின் முதல் பகைவனாக, சமூக முன்னேற்றத்துக்குப் பெருத்த முட்டுக்கட்டையாக இருந்து வந்தது.

நாட்டில் நிலவிய சூழ்நிலை இத்தகையது. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சி இதன் அடிப்படையிலேயே செயல்பட வேண்டி இருந்தது.

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சி சிறப்பாகக் கடினமான நிலைமையில் இருந்தது. அது பலத்த தாக்குதல்களுக்கு உள்ளாயிற்று. கட்சி உறுப்பினர்கள் பெருந்திரளாகக் கைது

ஜாராட்சியால் தொல்லைப்படுத்தவும் போலீசால்
தேடவும் பட்ட லெனின் உயிருக்கே ஆபத்தான
நிலையில் மெல்லிய பனிப்பாளங்கள் மீது நடந்து
ருஷ்யாவின் எல்லையைக் கடந்து வெளிநாடு சென்றார்

செய்யப்பட்டார்கள். பல பிரபல ஊழியர்கள், மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் உள்பட, சிறைகளிலும், சைபீரியச் சிறைக் குடியிருப்புக்களிலும் கடுங்காவல் தண்டனை முகாம்களிலும் இருந்தார்கள். லெனினும் அனேக போல்ஷிவிக் தலைவர்களும் தாய்நாட்டிலிருந்து வெளியேறி அயல் நடுகளில் வசிக்க நேர்ந்தது. போலீஸ் தாக்குதலுக்கு உள்ளாகாத வட்டாரக் கமிட்டி ஒன்று கூட இல்லை. கொள்கை உறுதி அற்ற பல அறிவு ஜீவிகள் கட்சியிலிருந்து விலகி ஓடிவிட்டார்கள். தொழிலாளர்களின் ஒரு பகுதி இரகசியக் கட்சி வேலையிலிருந்து ஒதுங்கிவிட்டது. ஆனால் இவ்வாறு ஒதுங்கியவர்களில் சிலர் கட்சிக்கு உதவி செய்து வந்தார்கள்: கட்சி வெளியீடுகளுக்காக நிதி திரட்டினார்கள், முழுநேரப் புரட்சிக்காரர்களுக்கு இரவு தங்க இட வசதி செய்தார்கள்,

சட்ட விரோதமான துண்டுப் பிரசுரங்களை வினியோகித்தார்கள். கட்சி ஸ்தாபனங்களின் உறுப்பினர் தொகை கணிசமாகக் குறைந்து விட்டது. ஜாரின் போலீஸ் புரட்சி ஸ்தாபனங்களில் தனது கையாட்களை மிகுந்த சிரமத்துடன் அனுப்பி வைத்தது. இவர்கள் உளவு வேலை செய்தார்கள், புரட்சிக்காரர்களைக் காட்டிக் கொடுத்தார்கள்.

தோல்வி மென்ஷிவிக்குகளை ஒரேயடியாக உளம் சோரச் செய்துவிட்டது. அவர்கள் புதிய புரட்சியைப் பற்றி எதுவும் செய்யவோ எண்ணவோ கூட வாய்ப்பில்லை என்று கூறி, கிலி கொண்டு பின்வாங்கிவிட்டார்கள். சட்ட விரோதமான கட்சியைக் கலைத்துவிடும்படியும் சட்ட விரோதமான புரட்சி வேலையை நிறுத்தி விடும்படியும் அவர்கள் வலியுறுத்தினர்கள். கட்சியின் புரட்சிச் செயல் திட்டத்தையும் செயல் தந்திரத்தையும் அதன் புரட்சி மரபுகளையும் நிராகரிப்பதை விலையாகச் செலுத்தி, சட்டபூர்வமாக நிலவும் உரிமையை ஜாரின் அதிகாரிகளிடமிருந்து வாங்க மென்ஷிவிக்குகள் விரும்பினர்கள். சோஷலிஸத்துக்கு மட்டுமே அல்ல, ஜனநாயகத்துக்கும் அவர்கள் துரோகம் செய்தார்கள். இவர்கள் லிக்விடேட்டர்கள் — கலைப்புக் கொள்கையினர் — என்று சரியாகவே அவப் பெயர் பெற்றார்கள்.

உறுதி அற்ற சில போல்ஷிவிக்குகள் ஆபத்தான ஊசலாட்டத்தைக் காட்டினர்கள். இவர்கள் புரட்சிகர வெற்றுச் சொற்களால் வெறி கொண்டு, வீதித் தடையரண்களில் போர் புரிய அழைப்பவனே புரட்சிக்காரன் என்றும், பிற்போக்கு தூமாவில் இருப்பது புரட்சிக்காரனுக்கு உகந்தது அல்ல என்றும் முழங்கினர்கள். வேலையின் சட்டபூர்வமான வடிவங்களைப் பயன்படுத்திக் கொள்ள மறுக்கும்படி இவர்கள் கட்சியை அறைகூவி அழைத்தார்கள், சமூக-ஜனநாயகப் பிரிவை தூமாவிலிருந்து திருப்பி அழைக்க வேண்டும் என்று கோரினர்கள். இதனால்தான் இவர்கள் ஒத்ஸோவிஸ்டுகள்— திருப்பி அழைப்போர்—என்ற பெயரைப் பெற்றார்கள். லிக்விடேட்டர்கள் சட்ட விரோதமான கட்சியைக் கலைத்துவிடும்படி யோசனை கூறினர்கள் என்றால், ஒத்ஸோவிஸ்டுகள் கட்சி நிலவுவதை மறைமுகமாக அபாயத்துக்கு உள்ளாக்கினர்கள். பொதுமக்களிடையே வேலை செய்வதற்கு இருந்த சட்ட

பூர்வமான வாய்ப்புக்களைப் பயன் படுத்த மறுப்பது, திரளான பொது மக்களுடன் கட்சியின் தொடர்பைத் துண்டித்து விடும். இந்தத் தொடர்பு இல்லாவிட்டால் கட்சி தனது வலிமையை இழந்து வெறும் சம்பிரதாயப் பிரிவாக மாறி விடும். எனவேதான் லெனின் ஒத்ஸோவிஸ்டுகளை வேடதாரி லிக்விடேட்டர்கள் என அழைத்தார்.

புரட்சி தோல்வியுற்று, பொது மக்கள் களைத்துப் போயிருந்த சூழ்நிலையில் கொள்கை ஊசலாட்டங்கள் சிறப்பாகக் கேடு விளைப்பவையாக இருந்தன. லிக்விடேட்டர்கள் ஜார் ஆட்சியின் முன் சரணாகதி அடையும் கொள்கைவாதத்தைப் பரப்பினர்கள். ஒத்ஸோவிஸ்டுகளோ, துர்ச்சாகசச் செயல்களில் ஈடுபடத் தூண்டினர்கள். இரு சாராருமே திரளான பொது மக்களின் புரட்சித் திறனிலும் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றியிலும் நம்பிக்கை இன்மையை மக்களின் உள்ளங்களில் புகுத்தினர்கள். கட்சியின் வாழ்வுக்கே அவர்கள் உலை வைத்தார்கள். லிக்விடேட்டர்களுக்கு உதவினர் மென்ஷிவிக் திரோத்ஸ்கி. ''ஒற்றுமை'' என்ற சொல்லின் மறைவில் திரோத்ஸ்கிவாதிகள் லிக்விடேட்டர்களுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்று பிரசாரம் செய்தார்கள். போல்ஷிவிக்குகளோ, லிக்விடேட்டர்களையும் அவர்களுடைய துணைவர்களான திரோத்ஸ்கிவாதிகளையும் சமரசமின்றி எதிர்த்துப் போராடினர்கள். அவர்கள் லிக்விடேட்டர்களையும் ஒத்ஸோவிஸ்டுகளையும் திரோத்ஸ்கிவாதிகளையும் தாக்கி விளாசினர்கள். அதே சமயம், லிக்விடேட்டர்களை எதிர்த்த மென்ஷிவிக்குகளோடு இணக்கம் கொண்டு, சட்ட விரோதமான கட்சியை ஒன்றுசேர்ந்து பாதுகாப்பதற்காக அவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டார்கள். இவ்வாறு, பிற்போக்கு தாண்டவம் ஆடிய கடினமான ஆண்டுகளில், கட்சியின் பொருட்டும் அதைக் குலைப்பவர்களுக்கு எதிராகவும் போராட வல்லவர்கள் அனைவரையும் போல்ஷிவிக்குகள் ஒன்றிணைத்தார்கள்.

போல்ஷிவிக் கட்சி உழைப்பாளிகளைத் துன்பத்தில் கைவிட்டுவிடவில்லை. பெருத்த இழப்புக்களைத் தாங்கிக் கொண்டு, அது புரட்சியை நசுக்க முற்பட்டவர்களுக்கு எதிராகத் தன்னலம் இன்றிப் போராடியது. ஆழ்ந்த தலை மறைவில் வேலை

செய்தவாறு, மக்களுக்குத் திறமையுடன் நம்பிக்கை ஊட்டி னர்கள் போல்ஷிவிக்குகள்: கெட்ட காலம் விரைவில் கழிந்து விடும். ஜார் ஆட்சி புரட்சியை ஒடுக்கி விட்டது, ஆனல் புரட்சி எவற்றல் மூண்டதோ அந்தக் காரணங்களே ஒழிக்க அதனல் முடியவில்லே. மக்கள் உரிமைகள் அற்றவர்களாகவே இருந்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்கு வாழ்க்கை நடத்துவது முன்னிலும் கடினம் ஆகிவிட்டது. ஏழை விவசாயிகள் இன் னமும் நிலப் பிரபுக்களின் அடிமைத் தளேயில் பிணிப்புண்டு அற்பத் துண்டு நிலத்தில் முன்போலவே பாடுபட்டு வருகிறார் கள். போதாக் குறைக்கு அவர்களுடைய நிலங்கள் எண்ணிக் கையில் அதிகரித்து வரும் குலாக்குகளின் கைகளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் போகத் தொடங்கிவிட்டன. நாட் டினப் பிரதேசங்களேச் சேர்ந்த உழைப்பாளிகளின் நிலேமை இன்னும் மோசமாகிவிட்டது. சுருங்கச் சொன்னல், புரட்சி யின் ஒரு காரணம் கூட அகற்றப்படவில்லே. காரணங்கள் அப்படியே இருந்து வருவதால், என்றுவது ஒரு நாள் இவை புதிய புரட்சி மூண்டு எழப் புரிந்தே தீரும்.

ஆனல் புதிய புரட்சிக்கு ஆயத்தங்களும் புதிதாகச் செய் வது அவசியம். நிலேமைகள் மாறிவிட்டன, கட்சியின் செயல் தந்திரமும் மாறிவிட்டது. பிற்போக்கு வெற்றி பெற்றிருக்கும் நிலேமைகளில் ஜார் முடியரசை நேரடியாகத் தாக்கி வீழ்த்தும்படி பொது மக்கள் திரளுக்கு அறைகூவல் விடுப் பது முடியாதிருந்தது. பின் வாங்குவதும் சுற்று வழியான போராட்ட முறைகளேக் கையாள்வதும் அவசியமாய் இருந் தன. சட்ட விரோதமான கட்சி இதன் பொருட்டு அரசாங்க தூமாவின் பேச்சு மேடையையும் தொழிற்சங்கங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தொழிலாளர் கழகங்கள் போன்ற எஞ்சியுள்ள சட்ட ரீதியான ஸ்தாபனங்களேப் பயன்படுத்திக் கொள்ள வேண்டி இருந்தது. லெனின் போல்ஷிவிக்குகளேப் ''புரட்சிகரமான சொற்றொடர்களே அள்ளி வீசுவதை'' அரு வருத்து ஒதுக்கப் பயிற்றினர். உண்மைப் புரட்சியாளன் பொது மக்கள் இடையே மிகவும் கடினமான, எவர் கவனத்தையும் ஈர்க்காத, வரண்ட, அன்றுட வேலேயிலும் தன் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்களுக்குக் கற்பித்தார்.

இந்த வேலை ஒருகாலும் வீண் போகாது என்றார் அவர்.

இவ்வாறு, புரட்சி தோல்வியுற்றபின் மார்க்ஸீயக் கட்சிக்கு, அதற்கு முன் எதிர்ப்படாத ஒரு கடமை எதிர்ப்பட்டது. ஒழுங்காகப் பின் வாங்குவது, வட்டாரங்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு, பொது மக்கள் திரளுக்கு அரசியல் கல்வி அளிக்கும் பொருட்டு, சட்டரீதியான எந்த வாய்ப்பையும் புரட்சித்தன்மையுடன் பயன்படுத்திக் கொள்வது என்பதே அந்தக் கடமை. போல்ஷிவிக்குகள் இந்தக் கடினமான வேலையை விடாமுயற்சியுடன் பயின்றார்கள். சட்ட விரோதமான வேலையைச் சட்டபூர்வமான வேலையுடன் ஒருங்கிசைப்பது கட்சியின் செயல் அனைத்துக்கும் இயல்பாகிவிட்டது. தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட போல்ஷிவிக் பிரதிநிதிகளின் குரல்கள், எதேச்சாதிகாரத்தையும் நிலப்பிரபுக்களையும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் துணிவுடன் தாக்கியவாறு ஜார் அரசாங்க தூமாவின் ஒய்ந்த சூழலில் உற்சாகமாக ஒலித்தன, திரளான பொது மக்களைத் தங்கள் தரப்புக்கு ஈர்த்தன. ஆசிரியர்கள், மருத்துவர்கள், மாதர்கள் ஆகியோரின் சட்டபூர்வமான மகாநாடுகளை போல்ஷிவிக்குகள் பயன்படுத்திக்கொண்டார்கள். பொது மக்களின் வாழ்வில் எழும் உடனடிப் பிரச்சினைகள் மீது தங்கள் கருத்துக்களை இவற்றில் அவர்கள் திறமையாக வெளியிட்டார்கள், போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு மகாநாட்டினரை அறை கூவி அழைத்தார்கள். சட்டபூர்வமான ஸ்தாபனங்களில் போல்ஷெவிக்குகள் பகிரங்கமாகச் சொல்ல முடியாத விஷயங்களை, சட்ட விரோதமான கட்சி ஸ்தாபனங்கள் தங்கள் துண்டுப் பிரசுரங்களிலும் மறைமுகக் கூட்டங்களிலும் தொழிலாளர்களுடன் இரகசிய உரையாடல்களிலும் சொல்லி முடித்தன, ஜார் ஆட்சியைப் புரட்சி வாயிலாகக் கவிழ்ப்பதற்கு ஸ்தாபன சக்தியாக ஒன்றிணைவது இன்றியமையாதது என்ற முடிவுக்கு அவர்களை இட்டு வந்தன. இந்த விதமாகக் கட்சி, திரளான பொது மக்களையும் ஜார் முடியரசைக் கவிழ்ப்பதில் அக்கறை கொண்டவர்கள் எல்லோரையும் புதிய புரட்சிக்கு ஆயத்தம் செய்தது.

துன்பம் நிறைந்த பிற்போக்கு ஆண்டுகளில், புதிய அர

சியல் அனுபவத்தாலும் புதிய போராட்ட முறைகளாலும் ஸ்தாபன வடிவங்களாலும் கட்சி வளம் பெற்றது. புரட்சியின் போது போல்ஷிவிக்குகள் தாக்கி முன்னேறப் பயின்றார்கள். தோல்வி, தங்கள் முக்கியச் சக்திகளை உருக் குலையாமல் காப்பாற்றியவாறு ஒழுங்காகப் பின்வாங்க அவர்களுக்குக் கற்பித்தது. புரட்சியின் அடுத்து வந்த வெற்றிக்கு இந்த அனுபவம் விலைமதிக்க முடியாத முக்கியத்துவம் கொண்டிருந்தது. சரியாகத் தாக்கி முன்னேறவும் சரியாகப் பின்வாங்கவும் பயிலாமல் வெற்றிபெற முடியாது என்று போதித்தார் லெனின்.

போல்ஷிவிக்குகள் மக்கள் முன் புதிய ஒளியில் தென்பட்டார்கள். எதிர்க் கட்சிகள் என்றும் புரட்சிக் கட்சிகள் என்றும் தங்களைக் கூறிக்கொண்ட மற்ற எல்லாக் கட்சிகளும் கடினமான சோதனையில் தேறுமல் வீழ்ந்து விட்டன. அவை அனைத்தும் பிற்போக்குக்கு முன் மண்டியிட்டன, புரட்சியைக் கைவிட்டன, மக்களுக்குத் துரோகம் செய்தன. போல்ஷிவிக் கட்சி ஒன்று மட்டுமே ஊக்கம் குன்றவில்லை, உளம் சோரவில்லை, தன் அணிகளை உறுதியுடன் வலுப்படுத்துவதையும் புதிய புரட்சிப் போர்களுக்கு விடாப்பிடியாக பலம் திரட்டுவதையும் தொடர்ந்தது. மக்கள் தொண்டில் தங்கள் ஈடுபாட்டையும் புரட்சியின் பால் தங்கள் விசுவாசத்தையும் போல்ஷிவிக்குகள் இன்னும் ஒரு முறை நிரூபித்துக் காட்டி விட்டார்கள். அவர்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு வருங் காலத்தில் புரட்சி நடத்தும் வாய்ப்பை அளித்தார்கள், உழைப் பாளிகளின் அன்றுடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உறுதியுடன் போராடினார்கள். தொழிலாளி வர்க்கம் போல்ஷிவிக்குகளைத் தன் விசுவாசமுள்ள நண்பர்களாகவும் நம்பகமான தலைவர்களாகவும் கருதியது, சங்கடம் நிறைந்த காலத்தில் போல்ஷிவிக்குகளுடன் நெருங்கிய உறவு கொண்டது.

பின்வாங்குவது நிறுத்தப்படுகிறது

வெற்றியாளர்களின் களிக் கொண்டாட்டம் சிறிது காலமே நீடித்தது. இரத்தப் பெருக்குகளோ, தூக்கு மேடைகளோ, துப்பாக்கிக் குண்டுகளோ, கடுங்காவல் தண்டனைமுகாம்களோ, எவையுமே திரளான பொது மக்களின் எதிர்ப்புச் சித்த உறுதியை முறிக்க முடியவில்லை.

புரட்சியை அறவே ஒடுக்கிவிட்டதாக ஜாரின் அதிகாரிகள் இன்னும் ஓயாமல் பெருமை அடித்துக் கொண்டிருந்த போதே புரட்சி நெருங்குவதை அவர்கள் திடீரென்று மறுபடி உணர்ந்தார்கள். முதலில் இயக்கத்தைத் தொடங்கிற்று தொழிலாளி வர்க்கம். 1910ம் ஆண்டுக் கோடையில் மாஸ்கோ தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் திடீரென ஆரம்பித்தது. ஈவிரக்கம் அற்ற சுரண்டலையும் பிச்சைக் காசு அளவான கூலியையும் எதிர்த்துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆண்டு முடிவில் பீட்டர்ஸ்பர்கிலும் மாஸ்கோவிலும் மற்ற நகரங்களிலும் ஜார் அதிகாரிகளுக்கு எதிராக அரசியல் ஆர்பாட்டங்கள் நடந்தன. அடுத்த ஆண்டு வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை இரு மடங்கு ஆயிற்று. 105 ஆயிரத்துக்கும் மேல் தொழிலாளர்கள் தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்கள். தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டத்துடன் நின்றுவிடவில்லை. பீட்டர்ஸ்பர்க் நகரில் போல்ஷிவிக்குகளால் கூட்டப்பட்ட பொதுக்கூட்டங்களில் ஆவேசம் பொங்கியது. இரண்டாவது அரசாங்க தூமாவின் கைது செய்யப்பட்ட உறுப்பினர்களை விடுதலை செய்யும் படி தொழிலாளர்கள் கோரினர்கள். ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் திண்ணிய தோள்களை நிமிர்த்தத் தொடங்கியதும் அண்மை வெற்றியாளர்களின் காலடியில் தரை ஆட்டம் கண்டது.

தொழிலாளர் இயக்கம் புத்துயிர் பெற்றதால் உழைப் பாளி மக்கள் திரள் அனைத்தும் புது வலிமை பெற்றது. நாட்டுப் புறத்தில் நிலப்பிரபுக்களின் பண்ணைகள் மீண்டும் பற்றி எரிந்தன. ''எங்களுக்கு நிலத்தை வெட்டித் தாருங்கள், இல்லாவிட்டால் நாங்கள் உங்களை வெட்டி விடுவோம்'' என்று பயமுறுத்திக் கோரினர்கள் விவசாயிகள். ஆனல் விவசாயிகள் இயக்கத்தில் ஒரு புதிய கட்டமும் தொடங்கியது— ஏழைக் குடியானவர்களுக்கும் பணக்கார விவசாயிகளுக்கும் இடையே போராட்டம் ஆரம்பித்தது. நிலப்பிரபுக்களின் பண்ணைகளோடு கூடவே குலாக்குகளின் வீடுவாசல்களும் இரவில் தீப்பிடித்து எரிந்தன. நாட்டுப்புறத்தில் இரண்டு சமுதாயப் போராட்டங்கள் நிகழ்ந்தன: ஒன்று, நிலப்பிரபுக்களுக்கு

எதிராக விவசாயிகள் அனைவரதும் முக்கியமான போராட்டம், இரண்டாவது, ஏழைக் குடியானவர்களுக்கும் குலாக்குகளுக்கும் இடையே நடந்த போராட்டம். இது இன்னும் முக்கியமானது அல்ல என்றாலும் நாளுக்கு நாள் தீவிரம் ஆகிக்கொண்டு போயிற்று.

ருஷ்யாவின் ஒடுக்கப்பட்ட நாட்டினங்களின் இயக்கமும் தீவிரமாயிற்று. நாட்டினப் பிரதேசங்களைச் சேர்ந்த உழைப்பாளிகள் ருஷ்யத் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் போராட்டத்தை மேலும் மேலும் ஒற்றுமையாக ஆதரித்தார்கள். ''சமத்துவமும் விடுதலையும்'' என்ற கோரிக்கையுடன் விரிவாகப் பரவியது நாட்டினங்களின் விடுதலைப் போராட்டம்.

புரட்சியின் புதிய ஏற்றம் தொடங்கி விட்டது.

கட்சிச் சக்திகளின் ஒற்றுமையை வலுப்படுத்தல்

மக்கள் போராட்டத்தின் வெற்றி தொழிலாளர்களின் ஒற்றுமையைச் சார்ந்திருந்தது. ஆனால் லிக்விடேட்டர்களோ, ருஷ்யாவின் சமூக-ஜன நாயகத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்கள் என்ற போர்வையில் மறைந்துகொண்டு தொழிலாளர்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்த முயன்றார்கள். புரட்சிப் போராட்டத்துக்கு அல்ல, ஜார் ஆட்சியிடம் சலுகைகளை வேண்டிப் பெறுவதற்கு, அதாவது, பேச்சு, கூட்டம் கூடுவது, ஐக்கியங்கள் ஏற்படுத்திக் கொள்வது ஆகியவற்றுக்கு உரிய சுதந்திரங்களை வழங்கும்படி விண்ணப்பம் செய்து கொள்ளுவதற்கு அவர்கள் தொழிலாளர்களை அழைத்தார்கள். முதல் புரட்சி அனுபவத்தால் அறிவு முதிர்ச்சி பெற்று, போல்ஷிவிக்குகளின் பிரசாரத்தால் கொள்கை உறுதி அடைந்திருந்த பாட்டாளி வர்க்கம் லிக்விடேட்டர்களின் துரோகக் கொள்கையைப் புரிந்து கொண்டது. ''ஜாரிடம் மனுச் செய்து கொள்ளப் போவதன்'' புதிய படியான அவர்களுடைய சூழ்ச்சியைப் பாட்டாளி வர்க்கம் இகழ்ச்சியுடன் தகர்த்து எறிந்துவிட்டது. பத்து லட்சக் கணக்கான தொழிலாளர்களில் 1,300 பெயர் மட்டுமே லிக்விடேட்டர்களின் விண்ணப்பத்தில் கையெழுத்திட்டார்கள். மிகப் பெரும்பாலான தொழிலாளர்கள் லிக்விடேட்டர்களைப் புறக்கணித்து

விட்டார்கள். சோஷலிஸத்துக்கும் ஜனநாயகத்துக்கும் துரோகம் செய்பவர்கள் கட்சியில் இருப்பதைச் சகிப்பது, கட்சியின் பெயரால் செயலாற்ற அவர்களை அனுமதிப்பது கட்சியைப் பலவீனப்படுத்துவதும் அதன் வேலையைக் கடின மாக்குவதும் ஆகும் என்பது வர வர அதிகத் துலக்கமாகத் தெரிந்தது.

1912 ஜனவரி மாதம், அகில ருஷ்யக் கட்சி மகாநாடு பிராகா நகரில் (செக்கோஸ்லோவாக்கியா) நடந்தது. அனேக மாக எல்லாக் கட்சி ஸ்தாபனங்களும் அதில் கலந்து கொண் டன. நடப்பில் பூர்ஷ்வா வர்க்கத்தின் தரப்புக்குச் சென்று விட்ட லிக்விடேட்டர்களைக் கட்சியிலிருந்து விலக்கிவிடுவது என்று மகாநாடு ஒரு மனதாகத் தீர்மானம் செய்தது. பிராகா மகாநாட்டுத் தீர்மானங்களுக்குக் கீழ்ப்படியாத திரோத் ஸ்கிவாதிகளும் பிற சந்தர்ப்பவாதிகளும் அவ்வாறே கட்சி யிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

சந்தர்ப்பவாதிகளின் எல்லாச் சிதர்களையும் குழுக்களை யும் ஒட்டுச் சேர்த்து சொந்தக் கட்சியை அமைக்கவும் அதை போல்ஷிவிக்குகளுக்கு எதிர்நிறுத்தவும் திரோத்ஸ்கி 1912 ஆகஸ்டில் முயற்சி செய்தார். இது ''ஆகஸ்டுக் கூட்டணி'' எனப்பட்டது. தொழிலாளர்கள் அதற்கு ஏற்பு அளிக்கவில்லை. அவர்கள் போல்ஷிவிக்குகளை மையமாகக் கொண்டு ஒற்று மையாக ஒன்று திரண்டார்கள். எனவே இந்தக் கூட்டணி விரைவில் கலைந்து சிதறிவிட்டது.

உலகத் தொழிலாளர் இயக்கத்தில், சந்தர்ப்பவாதிகளை அறவே நீக்கி விட்ட முதலாவது ஒரே கட்சி போல்ஷிவிக் கட்சி மட்டுமே. சந்தர்ப்பவாதிகள் அகற்றப்பட்டது ருஷ்யா வின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் போராட்டத் திறனை அதிகரித்தது. உள் போராட்டத்தால் பிளவு படாத, ஒன்றித்த, ஒற்றுமைப்பட்ட தொண்டர் குழுவாக மக்கள் திரள்களின் முன் நின்றது கட்சி.

கட்சி திரளான பொது மக்களைப் புதிய புரட்சிக்கு ஆயத் தப்படுத்தியது. முதல் புரட்சியில் நிறைவேற்ற முடியாது போன அதே நோக்கங்களை இந்தப் புரட்சியும் கொண்டிருந் தது. ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிப்பது, நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்வது, எட்டு மணிநேர வேலை

நாலே அமுலுக்குக் கொண்டுவருவது என்பவை அந்த நோக்கங்கள். இந்த மூன்று நோக்கங்களும் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருடையவும் எல்லா உழைப்பாளிகளுடையவும் மிக உடனடியான முக்கிய நலன்களே வெளியிட்டன. மக்கள் இடையே அதிருப்தி ஏராளமாகக் குவிந்திருந்தது. எல்லோரும் மாறுதல்களே எதிர்பார்த்தார்கள். மீண்டும் போராட்டத்தில் குதிக்க மக்கள் முற்றிலும் தயாராய் இருந்தார்கள். திரளான பொதுமக்களின் வளர்ந்துவந்த புரட்சி இயக்கத்தைப் புரட்சி எழுச்சியாக மாற்றுவதற்கு ஒரு வியாஜம் மட்டுமே தேவைப்பட்டது. சைபீரிய ஆறு லேனாவில் நடந்த நிகழ்ச்சிகள் இத்தகைய வியாஜமாக இருந்தன.

லேனா ஆற்றுத் தங்கச் சுரங்கங்களில் அன்னிய முதலாளிகளும் ருஷ்ய முதலாளிகளும் கட்டுப்பாடு அற்ற ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். இந்தத் தங்கச் சுரங்கங்கள் இருப்புப் பாதைகளிலிருந்து தொலைவில், சைபீரியத் தைகாக் காட்டின் அத்துவானத்தில் இருந்தன. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளிகள் தொழிலாளர்களை முன் கண்டோ கேட்டோ இராத அளவு கொடுமையாகச் சுரண்டி வந்தார்கள். பொழுது புலர்ந்தது முதல் பொழுது சாயும்வரை ஓயாது உழைக்கும்படி தொழிலாளர்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இந்தக் கடும் உழைப்புக்கு அவர்கள் பெற்ற ஊதியமோ மிக அற்பம். முதலாளிகளின் கடைகளிலேயே தொழிலாளர்கள் உணவுப் பண்டங்கள் வாங்க வேண்டியிருந்தது. அடிக்கடி இந்தப் பண்டங்கள் அழுகலும் ஊசலுமாய் இருக்கும். ஒரு சுரங்கத்தில் தொழிலாளர்களுக்கு ஒரு தடவை புழுப் பிடித்த இறைச்சி தரப்பட்டதும், அவர்கள் வேலை நிறுத்தம் செய்து, வாழ்க்கை நிலைமைகள் சீர்பட வேண்டும் என்றும் பயங்கர அடக்குமுறை நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரினார்கள். வேலை நிறுத்தக்காரர்களை மற்றச் சுரங்கத் தொழிலாளர்கள் ஆதரித்தார்கள். எல்லாத் தங்க வயல்களிலும் வேலை நிறுத்தப்பட்டது. சுரங்க முதலாளிகள் தொழிலாளர்களுக்கு விட்டுக் கொடுக்க மறுத்து, பீட்டர்ஸ்பர்கில் இருந்த ஜார் அதிகாரிகளிடம் உதவி வேண்டினார்கள். வட்டாரப் போலீஸ் படைகளைக் கொண்டு இயக்கத்தை ஒடுக்கும்படி அங்கிருந்து கட்டளை பிறந்தது.

கொடூரமான தண்டனை நடவடிக்கைகளால் லேனா வேலை நிறுத்தக்காரர்களை மட்டும் இன்றி, நாட்டின் உழைப்பாளிகள் அனைவரையும் அச்சுறுத்தி மிரட்ட முடிவு செய்தது ஜார் ஆட்சி.

1912 ஏப்ரல் மாதம் நாலாம் தேதி, தொழிலாளர் அணி வரிசை சுரங்க முதலாளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த அமைதியாகச் சென்றபோது, போலீஸ் வழி மறித்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. ஐந்நூறு பெயருக்கு மேல் கொல்லப்பட்டார்கள், அல்லது காயம் அடைந்தார்கள்.

ஜார் ஆட்சியின் இரத்த வெறி கொண்ட கொடுஞ் செயல் பற்றிய செய்தி மறு நாள் நாடு முழுவதற்கும் தெரிந்து விட்டது. தொழிலாளர்கள் ஆவேசமாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். வேலை நிறுத்தங்கள் வெடித்துக் கிளம்பின, பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் தொடங்கின.

சைபீரியத் தங்க வயல்களில் வேலை செய்த தொழிலாளர்கள் மீது ஜார் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானவர்கள் லேனா ஆற்றில்

''தொழிலாளர்களின் படு கொலைக்குப் பொறுப்பாளி ஜார் ஆட்சியே. முடியரசு ஒழிக!'' என்று போல்ஷிவிக்குகள் பொது மக்களிடம் கூறினர்கள். விசாரணை நடத்தும்படியும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் படியும் அரசாங்க தூமாவில் கோரிக்கை விடுத்தது சமூக-ஜனநாயகப் பிரிவு. இதற்கு விடையாக, ''இப்படித்தான் நடந்தது, வருங்காலத்திலும் இப்படித்தான் நடக்கும்'' என்று கூறினான் ஜாரின் உள்துறை அமைச்சன். அவனுடைய துடுக்கான பதில், இயக்கத்தை இன்னும் தூண்டிவிட்டது. தொழிலாளர்களின் அமைதியான ஊர்வலத்தின் மீது நடந்த துப்பாக்கிப் பிரயோகத்துக்கு யார் பொறுப்பாளி என்பதை எல்லோரும் தெரிந்து கொண்டார்கள். எதிர்ப்பு தெரிவிப்பதற்காக நடந்த வேலை நிறுத்தங்களில் ருஷ்யா அனைத்தையும் சேர்ந்த மூன்று லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். 1912 மே தினத்தன்று சுமார் நான்கு லட்சம் பெயர்—1905ம் ஆண்டிற்குக் குறையாத எண்ணிக்கையில்—வேலை நிறுத்தம் செய்தார்கள். 1905 ஜனவரியில் பனிக்கால அரண்மனைக்கு முன் செய்தது போலவே புரட்சியைத் துப்பாக்கிக் குண்டுகளால் ஒடுக்க ஜார் ஆட்சி முயன்றது. உண்மையிலோ, மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்த ஜார் அரசாங்கம் இணங்க வல்லது என்ற நம்பிக்கையின் கடைசி மீத மிச்சங்களையே அது குண்டுகளுக்கு இரை ஆக்கிற்று.

''பிராவ்தா'' செய்தித்தாள்

போல்ஷிவிக் கட்சி புதிய புரட்சி எழுச்சியை முன்கண்டு அதற்கு ஏற்பாடுகள் செய்தது, எழுச்சி தொடங்கியதும் அதைத் தலைமைதாங்கி நடத்தியது. லெனினது முன் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வமான தொழிலாளர் நாளேடு ''பிராவ்தா'', திரளான பொது மக்களைக் கட்சி ஒழுங்கமைப்பதில் பெருத்த பங்கு ஆற்றியது. இந்தச் செய்தித்தாளின் முதல் இதழ் பீட்டர்ஸ்பர்கில் 1912, மே 5ந் தேதி வெளியாயிற்று. அப்போது முதல் இந்தத் தேதி தொழிலாளர் பத்திரிகை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

''பிராவ்தா''போராடும் பாட்டாளி வர்க்கத்தின் ஆன்மாவாகத் திகழ்ந்தது. ஊதிய உயர்வு, உழைப்பு நிலைமைகளிலும்

வாழ்க்கை நிலைமைகளிலும் மேம்பாடு ஆகிய, தொழிலாளர் களின் ''பகுதிக் கோரிக்கைகளை'' எதேச்சாதிகாரத்தைக் கவிழ்த்துவது என்ற மக்களின் பொது நலன்களுடன் திறமையாக ஒன்றிசைத்தது அது. செய்தித்தாளில் வேலை நிறுத்தங்கள் பற்றி வெளியான அன்றுட அறிக்கைகள் மூல தனத்துக்கு எதிராக உழைப்பின் போராட்ட முனைமுகத் திலிருந்து வந்த உண்மையான செய்தி அறிக்கைகளாக விளங்கின. ''பிராவ்தா'' வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக் கைகளைச் சூத்திர வடிவில் தொகுத்துத் தந்தது, மற்றத் தொழிற்சாலைகளையும் நகரங்களையும் சேர்ந்த தொழிலாளர் களை அவர்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தருமாறு அழைத்தது, பாட்டாளி வர்க்கத்தின் மேலும் மேலும் புதிய வட்டாரங்களை இயக்கத்தில் கலந்து கொள்ளச் செய்தது. திரளான தொழிலாளர்களுக்கு வர்க்க ஒருமைப்பாட்டு உணர்வை ஊட்டியது இந்தச் செய்தித்தாள்.

''பிராவ்தா'' கட்சி வாழ்வின் மையத்தில் விளங்கியது. வழக்கமாகப் பொது மக்கள் திரளிடையே வேலை போலீஸின் பார்வையில் படாத ஏதேனும் ஒதுக்கமான இடத்தில் கூடிப் ''பிராவ்தா'' படிப்பதிலிருந்து தொடங்கியது. ''பிராவ்தா'' படிக்கும் தொழிலாளர்களின் இத்தகைய வட்டம் படிப் படியாகக் கட்சியின் அடிநிலைக் குழுவாக மாறியது. அது செய்தித்தாளுக்காகப் பணம் திரட்டியது, தொழிலாளர் களின் வாழ்க்கை பற்றித் தகவல்கள் தெரிவித்தது, செய்தித் தாளுக்குக் கடிதங்களில் மிக முக்கிய அரசியல் பிரச்சினைகள் மீது தன் கருத்தை வெளியிட்டது. ''பிராவ்தாவுக்குச்'' செய்தி நிருபங்கள்எழுதிஅனுப்பியவர்கள் தொழிலாளர்களே. சுமார் இரண்டு ஆண்டுகளில் ''பிராவ்தா'' தொழிலாளர் களின் பதினேழாயிரம் செய்தி நிருபங்களைப் பிரசுரித்தது. பெருத்த எண்ணிக்கையில் தொழிலாளர் நிருபர்களின் குழு செய்தித்தாளை மையமாகக் கொண்டு வளர்ந்தது. இந்த நிருபர்கள் ''பிராவ்தாவின்,'' அதாவது போல்ஷிவிக் கட்சி யின் கருத்துக்களை மக்கள் இடையே பரப்பும் பணியும் ஆற்றினர்கள்.

''பிராவ்தாவின் '' பிரதி விற்பனை நாற்பதாயிரத்தை எட்டியது, ஆனால் அதைப் படித்தார்கள் லட்சக் கணக்கான



போல்ஷிவிக் செய்தித்தாள் ''பிராவ்தா''

தொழிலாளர்கள். அதன் வெளியீட்டை நிறுத்த ஜாரின் அதிகாரிகள் எல்லா வகையிலும் முயன்றார்கள். அரசாங்கத் தணிக்கையாளர்கள் செய்தித்தாளின் உள்ளடக்கத்தைக் கண்காணித்தார்கள். இரண்டு ஆண்டுகளில் எட்டு தடவை செய்தித்தாள் நிறுத்தப்பட்டது, ஆனால் ஒவ்வொரு முறையும்

அது புதிய பெயரில் வெளியிடப்பட்டது. அதிகாரிகள் அபராதம் விதிப்பதன் மூலம் செய்தித்தாளை நசுக்கிவிடலாம் என்று நம்பினர்கள். இந்த அபராதத் தொகைகளைச் செலுத்துவது ''பிராவ்தாவுக்கு'' மிகச் சிரமமாய் இருந்தது. ஆனால் தொழிலாளர்கள் அதற்கு உதவ முன் வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு காசாகத் தேவையான தொகையைத் திரட்டினர்கள். மக்களின் வாழ்க்கை பற்றி உண்மை கூறும் ஒரே செய்தித்தாள் ''பிராவ்தாவே'' என்று தொழிலாளர்கள் அறிந்திருந்தார்கள்.

அந்தக் காலத்தில் தொழிலாளர் செய்தித்தாளுக்குச் சந்தா கட்டுவது கட்சி உறுப்பினர் சந்தா செலுத்துவதற்கு ஒப்பாக இருந்தது. போல்ஷிவிக்குகள் ''பிராவ்தாவுக்குச்'' சந்தா சேகரித்தார்கள். லிக்விடேட்டர்களோ, ''லூச்'' என்னும் தங்கள் செய்தித்தாளுக்குச் சந்தா திரட்டினர்கள். தொழிலாளர்கள் செய்தித்தாள்களுக்குக் கட்டிய சந்தாத் தொகைகளில் ஐந்தில் நான்கு பங்கு ''பிராவ்தாவுக்குக்'' கிடைத்தது. வேறு வார்த்தைகளில் சொன்னால், அரசியல் உணர்வு பெற்ற தொழிலாளர்களில் என்பது சதவிகிதம் பெயர் போல்ஷிவிக்குகளை மையமாகக் கொண்டு ஒன்று திரண்டார்கள்.

இவ்வாறு ''பிராவ்தா'' சட்டவிரோதமான கட்சி திரளான பொது மக்களின் கட்சி ஆவதற்கு உதவியது.

''பிராவ்தாவைத்'' தலைமை தாங்கி நடத்தினர் லெனின். ருஷ்யாவுக்கு அருகில் இருப்பதன் பொருட்டு லெனின் கிராக்கவ் நகருக்கு வந்து வசிக்கலானர். அப்போது இந்த நகரம் ஆஸ்திரோ-ஹங்கேரிய சாம்ராஜ்யத்தின் பகுதியாக இருந்தது. லெனின் அனேகமாக நாள்தோறும் ''பிராவ்தாவுக்கு'' எழுதினர். இரண்டு ஆண்டுக் காலத்தில் அவருடைய 280க்கும் மேற்பட்ட கட்டுரைகளும் குறிப்புக்களும் ''பிராவ்தாவில்'' வெளியாயின. செய்தித்தாள் ஊழியர்கள் ருஷ்யாவிலிருந்து அவரிடம் வந்தார்கள், அவருக்குக் கடிதங்கள் கொண்டுவந்தார்கள், அவரிடமிருந்து கட்டளைக் குறிப்புக்களைப் பெற்றார்கள். ''பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்கள் சாதித்த பெரும் செயல்'' என்று லெனின் ''பிராவ்தாவை'' மதிப்பிட்டார். ''பத்தாயிரக் கணக்கிலும் லட்சக்

கணக்கிலும் தொழிலாளர்கள் 'பிராவ்தாவுக்கு' ஆதரவாய் இருந்தார்கள்'' என்றார் அவர்.

புதிய புரட்சி எழுச்சியின் தலைமையில்

ருஷ்யாவில் புரட்சிப் போராட்டம் மேலும் மேலும் வளர்ந்தது. 1912ல் பத்து லட்சத்துக்கும் மேல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். 1913ல் இவர்களது எண்ணிக்கை பன்னிரண்டரை லட்சமாக அதிகரித்தது. தொழிலாளி வர்க்கம் மீண்டும் தாக்குதலை மேற்கொண்டது.

போல்ஷிவிக் கட்சி பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் எல்லாத் தோற்றங்களையும் வடிவங்களையும் வழி காட்டி நடத்தியது. ''பிராவ்தாவுக்கு'' இணையாக அதன் சட்ட பூர்வமான அகில ருஷ்ய உறுப்பாக விளங்கியது நான்காவது அரசாங்க தூமாவில் இருந்த போல்ஷிவிக் பிரிவு. இந்த தூமாவுக்குத் தேர்தல்கள் 1912 இலையுதிர் காலத்தில் நடந்தன. தேர்தல் சட்டப்படி, மொத்தம் நூறு குபெர்னியாக்களில் ஆறில் மட்டுமே தொழிலாளர் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த ஆறு குபெர்னியாக்களிலும் பத்து லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் குவிந்திருந்தார்கள். இந்த ஆறு குபெர்னியாக்களிலுமே போல்ஷிவிக் தொழிலாளர்கள் தூமா உறுப்பினர் தேர்தலில் வெற்றி அடைந்தார்கள். போல்ஷிவிக் கட்சி எத்தகைய செல்வாக்கு பெற்றிருந்தது, தலைமை ஏற்கும் எத்தகைய திறனை அது காட்டியது என்பதை இந்த வெற்றிகளைக் கொண்டே அனுமானிக்கலாம். 136 ஆயிரம் தொழிலாளர்கள் மட்டுமே இருந்த மற்ற குபெர்னியாக்களிலிருந்து ஏழு மென்ஷிவிக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது தொழிலாளர் குரியாக்களின் பிரதிநிதிகளாக அல்ல.

தூமா பிரிவு கட்சி மத்தியக் கமிட்டியின் நேரான தலைமையில் செயல் ஆற்றியது. போல்ஷிவிக் உறுப்பினர்கள் மக்களது வாழ்க்கையின் மிக முக்கியமான உடனடிப் பிரச்சினைகளைப் பற்றிக் கட்சியின் கருத்துக்களை ஜார் அரசாங்க தூமாவில் துணிவுடன் வெளியிட்டு அவற்றுக்காகப் போராடினார்கள். வழக்கமாக அரசாங்கத்தின் மீது கேள்விக் கணைகள்

தொடுப்பதற்கு, தொழிற்சங்கங்கள் மூடப்பட்டது, தொழிலாளர் செய்தித்தாள் தொல்லைப்படுத்தப்படுவது, சுரங்க விபத்து, ஆலையில் வெடியதிர்ச்சி, தொழிற்சாலையில் நச்சு நோய், வேலை நிறுத்தக்காரர்கள் கைது செய்யப்பட்டது, காவலாட்களால் விவசாயி கொலை செய்யப்பட்டது போன்ற ஏதேனும் வாழ்க்கை நிகழ்ச்சி எடுத்துக்கொள்ளப் பட்டது. இவை எல்லாம் போல்ஷிவிக் உறுப்பினர்களுக்கு தூமாவின் பேச்சு மேடையிலிருந்து போலீஸ் தான் தோன்றி நடவடிக்கைகளையும் உழைப்பாளிகள்பயங்கரமாகச் சுரண்டப்படுவதையும் சொற்களில் சித்திரிக்க வாய்ப்பு அளித்தன. தொழிலாளர் உறுப்பினர்களின் குரல்கள் திரளான பொது மக்களின் காதுகளை எட்டின, ஜார் ஆட்சி மீதும் நிலப்பிரபுக்கள் மீதும் முதலாளிகள் மீதும் அவர்களுடைய வெறுப்பை அதிகமாக்கின.

தூமாவில் இருந்த தொழிலாளி வர்க்கப் பிரதிநிதிகள் மூன்று சட்ட மசோதாக்களைக் கொண்டுவந்தார்கள். இவையாவன, எட்டு மணி நேர வேலை நாள், சமூக இன்ஷூரன்ஸ், நாட்டினங்களின் சமத்துவம் ஆகியவை பற்றிய மசோதாக்கள். இவை ''பிராவ்தாவில்'' வெளியிடப்பட்டன. விரிவான வெகுஜனங்கள் இவற்றின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டார்கள்.

தொழிலாளர் உறுப்பினர்கள் ஜார் ஆட்சியையும் அதை ஆதரித்த பிற்போக்குக் கட்சிகளையும் தாக்கி தூமாவில் பேசியதுடன் நிற்கவில்லை. தூமாவுக்கு வெளியிலும் அவர்கள் வேலை செய்தார்கள். அவர்கள் தொழிற்சாலைகளுக்கும் ஆலைகளுக்கும் சென்றார்கள், தங்கள் செயல் பற்றித் தொழிலாளர்களுக்கு முன் அறிக்கைகள் சமர்ப்பித்தார்கள், சட்ட விரோதமான வட்டாரக் கட்சி ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டார்கள், கட்சி மையக் கமிட்டியின் கட்டளைகளை அவற்றுக்குத் தெரிவித்தார்கள், பொது மக்களிடையே வேலையைச் சீரமைப்பதில் அவற்றுக்கு உதவினார்கள்.

''பிராவ்தாவின்'' செயலையும் தூமாவில் உறுப்பினர்களின் நடவடிக்கைகளையும் போல்ஷிவிக்குகள் சட்டவிரோதக் கட்சியின் வேலையுடன் திறமையாக ஒருங்கிணைத்தார்கள். உதாரணமாக, தொழிற்சங்கங்கள் தொந்தரவுக்கு உள்ளாக

கப்படுவது பற்றி, சமூக-ஜனநாயகக் கட்சியின் போல்ஷிவிக் பிரிவு தூமாவில் 1912 டிசம்பரில் கேள்விகள் கிளப்பியது. ''பிராவ்தாவும்'' கட்சியின் பீட்டர்ஸ்பர்க் கமிட்டியும் இந்தக் கேள்வியைக் குறித்துத் தொழிலாளர்களின் பொது அபிப்பிராயத்தை உருவாக்கின. தொழிற்சங்கங்கள் துன் பத்துக்கு உள்ளாக்கப்படுவது பற்றிய செய்திகள் ''பிராவ் தாவில்'' வெளியாயின. பீட்டர்ஸ்பர்க் கமிட்டி இரகசியத் துண்டுப் பிரசுரத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யும்படி தொழிலாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. தூமாவில் போல்ஷிவிக் உறுப்பினர் ஜார் அதிகாரிகளின் நடவடிக்கை களை விளாசிய அதே சமயத்தில், பல பெரிய ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்கள் வேலையை நிறுத்தி, தங்கள் பிரதிநிதிக்கு ஒற்றுமையாக ஆதரவு தெரிவித்தார் கள்.

புரட்சி எழுச்சியின் நிலைமைகளில் கட்சி வேலை உற்சாக மாக நடக்கலாயிற்று. பிற்போக்கு ஆண்டுகளில் உரம் பெற்ற சட்டவிரோத போல்ஷிவிக் ஸ்தாபனங்கள், சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேலும் மேலும் விரிவாக மேற்கொண்டன. கட்சியின் அணிகள் பல்கின, ஆலைகளிலும் தொழிற்சாலைகளி லும் அதன் கமிட்டிகள் வலுவடைந்தன. தொழிற்சங்கங்கள், சேம நிதிகள் போன்ற சட்டபூர்வமான தொழிலாளர் ஸ்தா பனங்கள் அனைத்தையும் போல்ஷிவிக்குகள் மென்ஷிவிக்-லிக்விடேட்டர்களின் ஆதிக்கத்திலிருந்து கைப்பற்றிக் கொண்டார்கள். போல்ஷிவிக் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் முழு ஒப்புதலைப் பெற்ற ஒரே தலைவன் ஆகிவிட்டது. தரைப் படைமீதும் கடற்படைமீதும் நாட்டுப்புறப் பிராந்தியங்களிலும் நாட்டினப் பிரதேசங்களிலும் அதன் செல்வாக்கு பரவியது.

போல்ஷிவிக் கட்சியும் நாட்டின விடுதலை இயக்கமும்

போல்ஷிவிக் கட்சி நிறுவப்பட்டது முதலே நாட்டின விடுதலைப் போராட் டத்தை ஆதரித்தது. 1903ல் நடந்த இரண்டாவது கட்சிக் காங்கிரஸில் ஏற்கப்பட்ட நாட்டினப் பிரச்சினை குறித்த திட்டவட்டமான செயல்திட்டம் அதனிடம் இருந்தது. ருஷ்யாவிலும் உலகம் முழுவதிலும் நாட்டின, காலனி ஆதிக்க ஒடுக்குமுறையை

ஒழிக்கும் போராட்டக் கொடியை இந்தச் செயல் திட்டத் தின்படி அது உயர்த்திப் பிடித்தது. 20ம் நூற்றாண்டின் தொடக் கத்தில் ஏகாதிபத்தியவாதிகள் சீனாவைப் பல கூறுகளாகத் துண்டுபோட்டபோது லெனின் இந்தச் செயலைக் கடுமை யாக எதிர்த்தார். ஏகாதிபத்தியச் சூறையை எதிர்த்துப் போராடும்படி ருஷ்யாவின் தொழிலாளர்களை அவர் அறை கூவி அழைத்தார். ஈரானில் புரட்சி வெடித்துக் கிளம்பிய போது போல்ஷிவிக்குகள் அதை ஊக்கத்துடன் ஆதரித் தார்கள்.

ஏகாதிபத்தியத்தின் நிலைமைகளில் நாட்டினப் பிரச்சினை சரியாக வரையறுக்கப்படுவது சிறப்பான முக்கியத்துவம் பெற்று விட்டது. ஏகாதிபத்தியம் நாட்டின ஒடுக்குமுறை யைத் தீவிரப்படுத்தியது, நாட்டினப் பகைமையைத் தூண்டி விட்டது. இவ்வாறு தொழிலாளி வர்க்கத்தைப் பிளவு படுத்தவும், பாட்டாளி வர்க்கப் புரட்சிப் போராட்டமும் நாட்டின விடுதலை இயக்கமும் ஒரே ஐக்கிய முன்னணியாக அமையவிடாமல் தடுக்கவும் அது முயன்றது.

போல்ஷிவிக்குகளின் நடவடிக்கைகள் நடப்பில் பாட் டாளி வர்க்கச் சர்வதேசியத்துக்கு ஆதர்சமாக விளங்கின. ஏகாதிபத்தியத்துக்கும் காலனி ஆட்சிக்கும் எதிரான போராட்டத்தில் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கமும் கிழக்கு நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களும் ஒன்றிணைந்த ஐக்கியத்தை உருவாக்குவதற்கு அலுக்காமல் களைக்காமல் அடிக்கல் நாட்டினார்கள் போல்ஷிவிக்குகள். நாட்டினங்கள் குறித்த பிரச்சினையில் அவர்கள் புரட்சிகர மார்க்ஸீயக் கொள்கையை ஒருங்கிசைந்த முறையில் விடாப்பிடியாக ஆதரித்துக் கடைப்பிடித்தார்கள். இந்தப் பிரச்சினை பற்றிப் பற்பல கட்டுரைகள் எழுதினார் லெனின். ஜார்ஜியர் ஸ்டாலின், லாட்வியர் ஸ்துச்கா, ஆர்மீனியர் ஷௌமியான் போன்ற போல்ஷிவிக் இலக்கிய ஆசிரியர்களும் இந்த விஷயம் பற்றி எழுதினார்கள். அடிமைப்பட்டிருக்கும் மக்கள் இனங் கள் முழு விடுதலை பெறுவதும் நாட்டின ஒடுக்குமுறையை மெய்யாகவே ஒழித்துக் கட்டுவதும் சமூகத்தைப் புரட்சி வாயிலாக மாற்றி அமைப்பதற்காகத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராடுவதன் மூலமே சாத்தியம் ஆகும் என்று

சான்று காட்டி விளக்கினர்கள் போல்ஷிவிக்குகள். தொழிலாளர்களின் நலன்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் நலன்களுக்கும் தேவையானது தனித்தனியே இயங்குவது அல்ல, எல்லா நாட்டினங்களையும் சிறு நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்த பாட்டாளி வர்க்க ஸ்தாபனங்களாக — அரசியல், தொழிற்சங்க, கூட்டுறவு, கல்வி ஸ்தாபனங்களாக — இணைந்து கலப்பது தான். தொழிலாளர் இயக்கமும் சரி, நாட்டின விடுதலை இயக்கமும் சரி, வெற்றி பெறுவதற்கு அவசியமானது ஒன்றுக்கு ஒன்று எதிர் நிற்பதும் ஒன்றிடமிருந்து ஒன்று தனித்துப் பிரிவதும் அல்ல, பொதுப் பகைவனுக்கு எதிராகச் சேர்ந்து போராடுவதே ஆகும். ஒடுக்கப்பட்ட நாட்டினங்கள் புரட்சியின் வாயிலாக மட்டுமே தனிப் பிரிந்து சுதந்திர அரசுகளாக உரு ஆகும் உரிமை உட்படச் சுயநிர்ணய உரிமையைப் பெற முடியும் என்று போதித்தது போல்ஷிவிக் கட்சி. இந்த வழியிலேயே அவை பெரியவையும் சிறியவையுமான எல்லா மக்கள் இனங்களுடையவும் பூரண சமத்துவத்தையும் சோதர ஒத்துழைப்பையும் பெற முடியும்.

பல நாட்டினங்கள் கொண்ட ஜார் ஆட்சி ருஷ்யாவின் நிலைமைகளில் ஒடுக்கும் நாட்டினத்தைச் சேர்ந்த தொழிலாளர்களதும் ஒடுக்கப்பட்ட நாட்டினங்களைச் சேர்ந்த தொழிலாளர்களதும் வர்க்கப் போராட்டத்தை ஒன்றுகக் கலப்பது சிறப்பாக முக்கியமாய் இருந்தது. எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர்களிடையே முழுமையான பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தாமல் இவ்வாறு ஒன்று சேர்ப்பது அசாத்தியமாய் இருந்தது. போல்ஷிவிக்குகள் தங்கள் கொள்கை அனைத்தாலும் இம்மாதிரி நம்பிக்கையை ஏற்படுத்த முயன்றார்கள். ருஷ்யப் பெருவல்லரசு நாட்டின வெறியை வேறு எவரையும்விடக் கடுமையாகவும் தயவு தாட்சிண்ணியம் இல்லாமலும் தாக்கினகள் போல்ஷிவிக்குகள். ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இடையே பூர்ஷ்வாக்கள் பரப்பிய தேசீயவாதத்தையும் அவர்கள் இவ்வாறே உறுதியுடன் தாக்கினர்கள். அதே சமயம் லிக்விடேட்டர்களும் திரோத்ஸ்கிவாதிகளும் பல வகைத் தேசீயப் பிறழ்ச்சிவாதிகளும் போல்ஷிவிக் கட்சியின்

நாட்டினச் செயல் திட்டத்தை எதிர்த்தார்கள். பொதுப் பகைவனை ஜார் ஆட்சிக்கு எதிராகத் தொழிலாளர்களுடன் சேர்ந்து போராடுவதற்கு ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களை அழைப்பதற்குப் பதிலாக, பள்ளிகள் அமைத்தல், தாய்மொழியில் புத்தகங்களும் பத்திரிகைகளும் வெளியிடுதல், பொது விடுமுறை நாளில் அன்றி, நாட்டின மரபுக்கு ஏற்ற நாளில் ஓய்வு கொள்ளும் உரிமை முதலிய பண்பாட்டுப் பிரச்சினைகள் மீதே முழுக் கவனத்தையும் செலுத்தும்படி யோசனை கூறினார்கள் அவர்கள். பண்பாட்டு-நாட்டினச் சுயாட்சிச் செயல் திட்டத்தை அவர்கள் முன்வைத்தார்கள். எந்தக் குடிமகனும் அவன் வசிக்கும் இடம் எதுவாய் இருந்தாலும் தான் ஒரு குறித்த நாட்டினத்தைச் சேர்ந்தவன் என்று அறிவிக்கலாம்; இப்படிச் செயற்கையாக அமைக்கப்பட்ட நாட்டினம் தன் இனக்குழுவினர் எல்லோர்மீதும் வரிகள் விதிக்கவும், பள்ளி, மொழி போன்ற நாட்டினப் பண்பாட்டுப் பிரச்சினைகள் மீது முடிவெடுப்பதற்காகச் சொந்த நாடாளுமன்றம் அமைக்கவும் உரிமை பெற்றிருக்க வேண்டும் என்பது இந்தச் செயல் திட்டத்தின் சாரம்.

உண்மையில் இது நாட்டின ஒடுக்குமுறையின் வெளிப்படையான வடிவங்களைத் துடைத்துச் சுத்தப்படுத்தி, மேல் பூச்சு பூசப் பெற்ற பூர்ஷ்வாச் செயல்திட்டம் தவிர வேறு இல்லை. எல்லா அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளதும் தீர்வை அது ஜார் ஆட்சியின் பொறுப்பில் விட்டுவிட்டது, அதாவது ஆட்சி அதிகாரத்தை ஆளும் வர்க்கங்களுடைய அரசாங்கத்தின் கைகளில் விட்டுவிட்டது. தொழிலாளர்களை அது செயற்கையாக வேறு பிரித்தது, பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் ஒன்றித்த முன்னணியைப் பிளவுபடுத்தியது, ஏனெனில் தொழிலாளி எங்கு வசித்து வேலை செய்தாலும் சரியே, அவன் குறித்த நாட்டினத்தில் சேர வேண்டும் என்று அது கோரியது. புரட்சி இயக்கத்தைக் குறுகிய நாட்டின நலன்களுக்குக் கீழ்ப்படுத்துவதாகவே இது அர்த்தப்பட்டது. பூர்ஷ்வா வர்க்கம் இந்தச் செயல்திட்டத்தை ஆட்சேபிக்காததில் ஆச்சரியம் இல்லை.

நாட்டினப் பண்பாட்டுச் சுயாட்சியின் பூர்ஷ்வாத் தன்மையை போல்ஷிவிக்குகள் அம்பலப்படுத்தினார்கள். பள்ளி

களும் நாட்டின மொழியில் புத்தக வெளியீடும் மிக அவசிய மானவை என்பது கூறுமலே விளங்கும். போல்ஷிவிக் கட்சி இந்தக் கோரிக்கைகளின் பொருட்டுப் போராடி வந்தது. ஆனல் மக்கள் இனங்களின் உண்மையான சமத்துவத்தை நாட்டினங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே, அதாவது தனது வாழ்க்கையையும் விதியையும் தானே நிர்ணயித்துக்கொள்ள ஒவ்வொரு நாட்டினத்துக்கும் உள்ள உரிமையின் அடிப்படையிலேயே பெற முடியும். சர்வதேசீயப் பயிற்சியின் இருவகைப்பட்ட கடமை இதன் விளைவாகவே தோன்றியது. அதாவது, தனிப்பிரியும் உரிமை உட்படச் சுயநிர்ணய உரிமை ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்கு இருக்க வேண்டும் என்று ருஷ்யர்களிடையே வலியுறுத்து வது, ருஷ்ய மக்கள் இனத்துடன் சுய விருப்பத்தின் பேரில் சேர்ந்து ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையை ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களிடையே வலியுறுத்துவது.

போல்ஷிவிக்குகளின் செயல்கள் பல மேற்கு ஐரோப்பிய சோஷலிஸ்ட் கட்சிகளில் நிகழ்ந்தவற்றுக்கு அடிப்படையில் மாறுய் இருந்தன. இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த பெரும் பாலான சோஷலிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் நாட்டின விடுதலை இயக்கத்தை ஆதரிக்கவில்லை. ஏகாதிபத்தியவாதி களின் கொள்ளைக்காரத்தனமான காலனி ஆட்சிக் கொத் கையை அவர்கள் மேலும் மேலும் பகிரங்கமாக ஆதரித் தார்கள். போல்ஷிவிக்குகளோ, சர்வதேச சோஷலிஸ மகா நாடுகளில் சர்வதேசீயத் தன்மை வாய்ந்த நாட்டினச் செயல் திட்டத்தையும் கொள்கையையும் ஒத்திசைந்த முறையில் ஆதரித்தார்கள், காலனி ஆட்சிமுறை நிந்திக்கப்பட வேண் டும் என்று கோரினுர்கள்.

இவ்வாறு நாட்டினப் பிரச்சினையில் இரண்டு போக்குகள், இரு கொள்கைகள் வெளிப்படையாக மோதிக் கொண்டன. இவையாவன, பூர்ஷ்வா வர்க்கத்தாலும் எல்லாக் குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளாலும் ஆதரிக்கப்பட்ட பூர்ஷ்வா தேசீய வாதமும் எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர் களின் பதாகை ஆகிவிட்ட பாட்டாளிவர்க்க சர்வதேசீயமும். இவற்றில் முன்னது, ஒடுக்குமுறையின் தலையூற்றுன ஏகாதி

பத்தியத்தை ஒழிப்பதற்குரிய பொதுப் போராட்டத்துக்கு முதன்மை கொடுக்காமல் குறுகிய நாட்டினக் கோரிக்கைகளுக்கு முதலிடம் தந்தது. எதார்த்தத்தில் இந்தக் கொள்கை காலனியாட்சி வல்லரசுகளின் ஆதிக்கத்தை நிலையாக வைத்திருக்கவே உதவியது. பாட்டாளி வர்க்க சர்வதேசியமோ, விடுதலைக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் நாட்டின ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுவதன் பொருட்டும் நடக்கும் போராட்டத்தில் தொழிலாளர்களதும் எல்லா ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளதும் வர்க்க ஒருமைப்பாட்டையே எல்லாவற்றிலும் முக்கியமாகக் கருதியது.

போல்ஷிவிஸத்தின் கொள்கையே சரியானது என்பதை வாழ்க்கை உறுதிப்படுத்திவிட்டது. ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்கள் பாட்டாளி வர்க்கத்தைப் பின்பற்றி, ஜார் ஆட்சியை ஒழிப்பதற்கான பொதுப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டன.

முதல் உலக யுத்தத்துக்கு முன்

ஏகாதிபத்தியம் தனது மிகக் கொடிய இயல்புகளை மேலும் மேலும் வெளிக் காட்டியது. முதலாளித்துவம் உலகின் மிகப் பெரும்பான்மையினர் மீது விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சில ''பெரு வல்லரசுகளின்'' காலனியாட்சி ஒடுக்கு முறை என்னும் உலக அமைப்பாக வளர்ந்துவிட்டது. ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் இனங்கள் அடிமைப்பட்டன. லத்தீன் அமெரிக்க நாடுகள் ஏகாதிபத்திய வல்லரசுகளின் சார்பு நாடுகள் ஆயின. காலனியாட்சியாளர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களை மிருகத்தனமாகக் கொடுமைப்படுத்தினர்கள், அவற்றின் செல்வங்களைச் சூறையாடினர்கள், பணியாதவர்களைச் சுட்டும் வெட்டியும் அடக்கி ஒடுக்கினர்கள்.

ஏகாதிபத்தியம் முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளிகளுக்கு முன் கண்டும் கேட்டும் இராத துன்பங்களை—ஏக போகங்களின் சுரண்டல், திரளான மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, வரிச் சுமை அதிகரிப்பு முதலியவற்றை — கொண்டுவந்தது. எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் பிற்போக்கு தலை தூக்கியது—தொழிலாளர்களுக்கும் எல்லா முற்போக்குச் சக்திகளுக்கும் எதிராக ஒடுக்குமுறை தீவிரம் ஆயிற்று.

ஆனால் ஏகாதிபத்தியத்தின் மிகக் கொடிய தோற்றமாக விளங்கியது படைவெறி அதிகரிப்பு. முக்கிய ஐரோப்பிய வல்லரசுகள், சிறப்பாக ஜெர்மனியும் பிரிட்டனும் தங்கள் படைவலிமையைத் தீவிரமாக அதிகப்படுத்திக் கொண்டன. உலகச் சந்தையில் அவற்றின் போட்டிப் போராட்டம் உக்கிரம் ஆயிற்று. பிரிட்டனின் பூர்ஷ்வாப் பத்திரிகைகள் ''ஜெர்மானியப் படையெடுப்பு'' தவிர்க்க முடியாதது என்று ஓயாமல் ஓலமிட்டன. மறு புறம் ஜெர்மானிய பூர்ஷ்வாக்களோ, ''பிரிட்டிஷ் தாக்குதல்'' தவிர்க்க முடியாதது என்று தங்கள் மக்களுக்கு உருவேற்றினர்கள். பிரான்ஸும் ருஷ்யாவும் ஆஸ்திரோ-ஹங்கேரியும் அவசர அவசரமாக ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டன. ஏகாதிபத்திய அரசுகளின் ஆளுநர்கள் மக்களை ஏமாற்றியும் அவர்களுக்கு வெறி ஏற்றியும் மக்கள் திரள்களுக்கு நாட்டு வெறி ஆவேசம் ஊட்டினர்கள், அவர்களை ஒருவர்மீது ஒருவர் ஏவிவிட முயன்றார்கள்.

ஐரோப்பாவில் சர்வதேச யுத்தம் மூளும் தறுவாயில் இருந்தது. ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே நிலவிய கடுமையான முரண்பாடுகளின் விளைவாக அது மூண்டது. போர் மின்னல்கள் ஏற்கனவே வெட்டத் தொடங்கிவிட்டன. 1910ல் இத்தாலி ஆப்பிரிக்காவில் துருக்கியின் வசமிருந்த இடங்களைச் சூறையாட முற்பட்டு அரேபியர்களைப் படுகொலை செய்தது. 1912ல் யுத்த நெருப்பு ஐரோப்பாவுக்குப் பரவி பால்கன் நாடுகளில் மூண்டெரிந்தது.

நெருங்கி வந்த உலக யுத்த அபாயம் சாதாரண மக்களைக் கலவரப்படுத்தியது. ஆனால் எல்லாம் வல்ல ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அவர்கள் என்ன செய்ய முடியும்? அந்தக் காலத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற ஒரே ஒரு சக்தி தான் இருந்தது. அதுதான் சர்வதேசப் பாட்டாளி வர்க்கம். அதன் முன்னணிப் பகுதிகள் இரண்டாவது அகிலத்தில் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது அகிலம் இந்த அவசரப் பிரச்சினையை விவாதித்தது. சோஷலிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் 1912ல் பாஸேல் (சுவிட்ஸர்லாந்து) என்னும் இடத்தில் மகாநாடு கூட்டி யுத்தத்துக்கு எதிரான அறிக்கையை ஒரு முகமாக ஏற்றுக்கொண்டார்கள். வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒருவரை ஒருவர் சுடுவது கடும்

குற்றம் எனத் தாங்கள் எண்ணுவதாக அவர்கள் ஆழ்ந்த முறையில் அறிவித்தார்கள். எல்லா நாடுகளின் தொழிலாளர்களையும் புரட்சிப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். யுத்தம் மூளாமல் தடுக்க முடியாவிட்டால் அதன் விளைவாக ஏற்படும் நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு ஏகாதிபத்திய அரசாங்கங்களைக் கவிழ்த்த முயற்சி செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

ஆனால் அப்போதே சோஷலிஸ்ட் கட்சிகளின் சில தலைவர்கள் தங்கள் ஏகாதிபத்திய அரசாங்கங்களின் காலனி ஆதிக்கக் கொள்கைக்குச் சப்பைக்கட்டுக் கட்டினார்கள். படைவெறியின் வளர்ச்சியும் இராணுவ உற்பத்திப் பெருக்கமும் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் அளிக்கின்றன என்றார்கள் அவர்கள். இவ்வாறு கூறியவர்கள் சந்தர்ப்பவாதிகள், சோஷலிஸத் துரோகிகள், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள்.

போல்ஷிவிக் கட்சி இரண்டாவது அகிலத்தின் பாஸல் அறிக்கையைச் சற்றும் பிசகாமல் கடைப்பிடித்து உண்மையான புரட்சிக்காரன் தன் சர்வதேசக் கடமையை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதை எல்லா நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுகளுக்குக் காட்டிற்று. ஜார் ஆட்சியின் அஸ்திவாரத்தை ஆட்டி அசைத்துவிட்ட புரட்சிப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி அது தொழிலாளர்களை அழைத்தது. ஜார் ஆட்சியின் நாடு கைப்பற்றுத் திட்டங்களை அம்பலப்படுத்தியது.

ருஷ்யாவில் தொழிலாளர் இயக்க அலைகள் மேலும் மேலும் உயர எழுந்தன. 1914ம் ஆண்டு முற்பாகுதியில் சுமார் பதினைந்து லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தங்கள் இடையருது கிளம்பிய வண்ணமாய் இருந்தன. புரட்சி வாயிற் கதவைத் தட்டத் தொடங்கிவிட்டது. ஜூன் மாதம் பாக்கூவில் தொழிலாளர்களின்பொது வேலைநிறுத்தம் ஆரம்பம் ஆயிற்று. அனேக நகரங்களின் தொழிலாளர்கள் அவர்களை ஆதரித்தார்கள். பீட்டர்ஸ்பர்க் நகரில் வேலைநிறுத்தம் செய்தவர்களின் எண்ணிக்கை ஜூலையில் இரண்டு லட்சத்தை எட்டிவிட்டது. புத்திலவ் தொழிற்சாலை முகப்பு வெளியில் நடந்த பொதுக் கூட்டத்

1914, ஜூலையில் பீட்டர்ஸ்பர்க் நகர வீதிகளில் அமைக்கப் பட்ட தடையரண்கள்

தின் மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பதிலாகத் தொழிலாளர்கள் தடையரண்கள் நிறுவத் தொடங்கினர்கள். ஆனால் அப்போது ஏற்பட்ட புரட்சி நிலைமை புரட்சியாக வளரவில்லை. 1914, ஆகஸ்டு முதல் தேதி மூண்டுவிட்ட உலக யுத்தம் இதைத் தடுத்தது.

முதலாவது உலக யுத்தம். இரண்டாவது அகிலத்தின் தோல்வி

முதலாவது உலக யுத்தத்துக்கு வித்திட்டது ஏகாதிபத்தியம். முதலாளித்துவத்தின் ஒரு சீரற்ற வளர்ச்சி ஏகாதிபத்திய நிலைமைகளில் பந்தயத் தன்மையை மேற்கொண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஜெர்மனி இயந்திரத் தொழில் வளர்ச்சித் தரத்தில் அது வரை உலகிலேயே முதல் இடம் வகித்து வந்த பிரிட்டனையும் அவ்வாறே பிரான்ஸையும் விரைவாக முந்தத் தொடங்கியது.

உரம் பெற்றுவிட்ட இளம் வேட்டை விலங்கு போன்ற ஜெர்மன் ஏகாதிபத்தியம் உலக வரைபடத்தைத் தனக்குச் சாதகமாக மாற்றி அமைக்கவும் முதிய காலனியாட்சி வல்லரசுகளான பிரிட்டனிடமும் பிரான்ஸிடமுமிருந்து அவற்றின் ஆட்சிப் பிரதேசங்களைப் பறித்துக்கொள்ளவும் முயன்றது. ஜெர்மனி உலகில் முதல் இடம் பெறப் போட்டி போட்டது. ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே எழுந்த முரண்பாடுகளும் யுத்தத்துக்கு முக்கியக் காரணம் ஆயின. ருஷ்ய முதலாளிகளுக்குப் புதிய சந்தைகள் தேவைப்பட்டன. அவர்கள் அண்மைக் கிழக்கு நாடுகளை ஆர்வத்துடன் நோக்கினர்கள். ஜெர்மன் ஏகாதிபத்தியமும் அந்த நாடுகளையே வசப்படுத்திக்கொள்ள ஆசைப்பட்டது.

ஐரோப்பா ஏகாதிபத்தியங்களின் இரண்டு பகை முகாம்களாகப் பிரிவுபட்டது. ஒரு புறம் இருந்தன ஜெர்மனியும் ஆஸ்திரோ-ஹங்கேரிய சாம்ராஜ்யமும். மறு புறம் இருந்தன பிரிட்டனும் பிரான்ஸும் ருஷ்யாவும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒரு பக்கமாக ஒதுங்கிவிட்டது போல் இருந்தது. அமெரிக்க ஏகபோகங்கள் போர்த் தளவாடங்களின் விற்பனையால் கொழுத்த லாபம் சம்பாதிக்கவும், சொந்த இராணுவத்தை அமைப்பதற்கு அவகாசம் பெறவும், போரிடும் தரப்புக்கள் கூலைத்துச் சோர்ந்து போனதும் யுத்தத்தில் தாங்களும் கலந்து கொள்ளவும் நம்பிக்கையுடன் திட்டம் இட்டுக் காத்திருந்தன. போட்டிக்காரர்களை அவர்கள் முன்பு கைப்பற்றியிருந்த சந்தைகளிலிருந்து வெளியேற்றும் பொருட்டும் வேற்று நாடுகளைக் கொள்ளை அடிக்கும் பொருட்டும் ஏற்கனவே பங்கிடப்பட்டு விட்ட உலகத்தை அடியிலிருந்து மறுபங்கீடு செய்யும் பொருட்டுமே நடந்தது இந்த யுத்தம்.

யுத்தத்துக்கு இன்னொரு காரணமும் இருந்தது. முதல் ருஷ்யப் புரட்சியின் பாதிப்பினால் உலகம் முழுவதிலும் தொழிலாளர் இயக்கம் அலையடித்துக் கொந்தளித்தது. ஜெர்மனியையும் பிரான்ஸையும் பிரிட்டனையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் தொழிலாளர்களின் மிகப் பெரும் வேலை நிறுத்தங்கள் உலுக்கின. ஆளும் வர்க்கங்கள் புரட்சி நெருங்குவதை உணர்ந்தன. யுத்தத்தின் துணையால் தொழி

லாளி வர்க்கத்தின் குருதியைப் பெருக்கி அதை பலவீனப் படுத்தலாம், போரிடும் நாடுகளின் தொழிலாளர்களை ஒருவர் மீது ஒருவரை ஏவிவிடலாம், புரட்சிச் சக்திகளைச் சோர்வு படுத்தலாம் என்று உலக ஏகாதிபத்தியவாதிகள் நம்பினர் கள். ஏகாதிபத்தியவாதிகளுக்கு இந்த யுத்தம் தங்கள் ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளவும் ஆதிக்கத்தை நீடிக் கவும் உரிய சாதனமாக விளங்கியது.

யுத்தம் நெருங்குவதை எல்லா நாடுகளின் சமூக-ஜன நாயகக் கட்சிகளும் கண்டன. இரண்டாவது அகிலத்தின் உலக மகாநாடுகள் ஒவ்வொன்றிலும் யுத்த எதிர்ப்புத் தீர்மானங் கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அகிலத்தைச் சேர்ந்த எல்லாக் கட்சிகளும் மகாநாடுகளின், சிறப்பாக பாஸேல் (1912) காங்கிரஸின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதாக ஆழ்ந்த முறையில் பொறுப்பு ஏற்றன. ஆனால் யுத்தம் மூண்டதுமே அனேகமாக எல்லாக் கட்சிகளும் தங்கள் பொறுப்புக்களைக் கைவிட்டுவிட்டன. இரண்டாவது அகிலத்தின் தலைமைக் கட்சி யான ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி, 1914, ஆகஸ்டு 4ந் தேதி, யுத்தக் கடன்களை ஆதரித்து வாக்களித்தது, அதாவது, தன் ஏகாதிபத்திய அரசாங்கத்தை ஆதரித்தது. பிரெஞ்சு, பெல்ஜிய சோஷலிஸ்டுகளும் அவ்வாறே நடந்துகொண் டார்கள். அவர்கள் தங்கள் பிரதிநிதிகள் பூர்ஷ்வா அரசாங் கங்களில் உறுப்பேற்க அனுப்பினர்கள். இரண்டாவது அகி லத்தைச் சேர்ந்த அனேகமாக எல்லாக் கட்சிகளும் தங்கள் பூர்ஷ்வாத் தாய்நாட்டைக் ''காக்க'' முன்வரும்படி தொழி லாளர்களை அழைத்தன. இரண்டாவது அகிலம் தோல்வி அடைந்தது.

இந்தத் தோல்வி தற்செயலானது அல்ல. அதற்கு உரிய காரணங்கள் இருந்தன. சொந்த நாட்டு உழைப்பாளிகளைச் சுரண்டியதன் மூலமும் சிறப்பாகக் காலனிகள், ஆதீன நாடு களின் மக்களைச் சூறையாடியதன் மூலமும் ஏகபோகங்க ளுக்கு நம்ப முடியாத அளவு கொள்ளை லாபம் கிடைத்தது. உதாரணமாக ஆங்கில பூர்ஷ்வாக்கள் பிரிட்டனில் தொழி லாளர்களைச் சுரண்டியதனால் பெற்றதைவிட அதிக லாபத் தைத் தங்கள் காலனிகளிலிருந்து அள்ளிய வண்ணமாய் இருந் தார்கள். எனவே, இந்தக் கொள்ளை லாபத்திலிருந்து சில

துணுக்குகளை ஒரு சில தொழிலாளர்களுக்கும் பிற உழைப்பாளி வட்டாரங்களுக்கும் பகிர்ந்து கொடுப்பது ஏகாதிபத்தியவாதிகளுக்குச் சாத்தியம் ஆயிற்று. இவ்வாறு ஏகாதிபத்திய நாடுகளில் ''தொழிலாளி மேற்குடியினர்'' என்று அழைக்கப்பட்ட சலுகை பெற்ற தொழிலாளர்களின் பேரணி உருவாயிற்று. இதன் கணிசமான பகுதியாய் விளங்கினர்கள் சட்டபூர்வமான தொழிற்சங்கங்களின் ஊழியர்கள், நாடாளுமன்றங்களில் இருந்த சமூக-ஜனநாயகக் கட்சிப் பிரிவினர் முதலியோர். இவர்கள் தங்களுக்குச் சலுகைகள் வழங்கும் ஏகாதிபத்தியத்தை நிலையாக வைத்திருப்பதில் அக்கறை கொண்டிருந்தார்கள். இவ்வாறு, தொழிலாளர்களின் ஒன்றித்த முன்னணியைப் பிளவுபடுத்தவும், தங்களால் ஊட்டி வளர்க்கப்படும் அதிக ஊதியம் பெறும் தொழிலாளர்களைத் தொழிலாளி வர்க்கம் அனைத்துக்கும் எதிர்நிறுத்தவும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு வாய்த்துவிட்டது.

முதலாளித்துவத்தின் ''அமைதியான'' வளர்ச்சி நிகழ்ந்த பத்தாண்டுகளில் மேற்கு நாடுகளின் சமூக-ஜனநாயகக் கட்சிகள் சட்டபூர்வ நிலைமைகளுக்குப்பழக்கப்பட்டு விட்டன. சட்டபூர்வ நிலைமைகள் தேவைப்பட்டது புரட்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காகவே தவிர, வெறுமே தமக்காகவே அல்ல. தொழிலாளர்களும் புரட்சிப் போராட்டத்தின் சட்டபூர்வமான வாய்ப்புக்களைத் தீவிரமாக ஆதரித்தார்கள். ஆனால் நாளடைவில் கட்சியின் மேல் வட்டாரங்கள் சட்டபூர்வ நிலைமைகளுக்குத் தங்களை இசைவித்துக் கொண்டுவிட்டன. அதன்பின் அவை வர்க்கப் போராட்டத்தைவிட ''வர்க்க சமாதானத்தைப்'' பற்றியே அதிகக் கவலைப்படலாயின. புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் நோக்கமாகக் கொண்ட கொள்கைக்குப் பதிலாக, முதலாளித்துவம் அமைதியான வழியில் சோஷலிஸமாக மாறும் என்று பிரசாரம் செய்யத் தொடங்கினர்கள் சந்தர்ப்பவாதிகள். கட்சி நடவடிக்கைகள் எல்லாவற்றையும் சட்டத் தன்மைக்கு இசைவித்தது சந்தர்ப்பவாதத்தை வலுப்படுத்தியது. சட்டத் தன்மையைப் பயன்படுத்துவது அவசியமாய் இருந்தது என்பது கூறுமலே விளங்கும். ஆனால் சோஷலிஸத்தின் பொருட்டுப் புரட்சிப் போராட்டம் நடத்துவதே

தொழிலாளி வர்க்கக் கட்சியின் குறிக்கோள். இந்தக் குறிக் கோளைச் சட்டத்தன்மைக்கு பலியிட்டு விடுவது தகாததாக இருந்தது.

சமூக-ஜனநாயகக் கட்சியின் சிறந்த பிரதிநிதிகள் சந்தர்ப் பவாதக் கருத்துக்களை எதிர்த்துப் போராடினார்கள். சந்தர்ப்ப வாதத்தின் ஆபத்தை எங்கெல்ஸே சுட்டிக்காட்டினார். இரண்டாவது அகிலத்தின் மகாநாடுகளில் சந்தர்ப்பவாதத் தை எதிர்த்து உறுதியாகப் போராடினார் லெனின். போல்ஷி விக்குகள் இரண்டாவது அகிலத்தில் புரட்சிக் கொள்கை யைத் தீவிரமாக ஆதரித்தார்கள், மார்க்ஸீயத்துக்காகப் போராடுவோரின் முன்னணியில் செயலாற்றினார்கள், சர்வ தேசத் தொழிலாளர் இயக்கத்தில் புரட்சிச் சக்திகளைத் திரட்டி ஒற்றுமைப்படுத்தினர்கள். மற்ற நாடுகளைச் சேர்ந்த உண்மை சர்வதேசீயவாதிகளும் சந்தர்ப்பவாதத்தை எதிர்த் துப் போராடினர்கள். ஜெர்மனியில் கார்ல் லிப்னெஹ்த், ரோஸா லக்ஸம்பர்க், கிளாரா த்ஸேத்கின், பல்கேரியாவில் திமீத்ரி பிளாகோயெவ் போன்ற தலைவர்கள் இந்தப் போராட் டத்தைத் தலைமைதாங்கி நடத்தினர்கள்.

ஆனால் சந்தர்ப்பவாதிகளின் கையே வர வர மேலோங் கிற்று. தவிரவும், சந்தர்ப்பவாதிகளைத் தாக்கி விமர்சித்த போதிலும் அவர்களுடன் தொடர்பை அறுத்துக்கொள்ள விரும்பாத குழுக்கள் கட்சிகளுக்குள் தோன்றின. இவை ''நடு நிலையினர்'' குழுக்கள் எனப்பட்டன. ஜெர்மனியில் காவுத்ஸ்கி யும் ருஷ்யாவில் திரோத்ஸ்கியும் இந்தப் போக்கின் தலைவர் களாக இருந்தார்கள். நடுநிலையினர் சந்தர்ப்பவாதிகளைக் காட்டிலும் அதிக ஆபத்தானவர்களாக இருந்தார்கள், ஏனெனில் இவர்கள் தங்கள் சந்தர்ப்பவாதத்தைத் திரையிட்டு மறைத்தார்கள், மார்க்ஸீயத்திலிருந்து பிறழ்ச்சியை இடது சாரிச் சொற்றொடர்களால் மூடிப் போர்த்தார்கள்.

யுத்தத்துக்கு முன்பு இந்த எல்லாப் போக்குக்களும் ஒரே கட்சிகளுக்குள் பக்கம் பக்கமாக இருந்து வந்தன. அடுத்த தீவிர நெருக்கடியின்போது இவற்றின் முரண்பாடுகள் வெளிப் பட்டுத் தீரும் என்பது தெளிவாய் இருந்தது. இத்தகைய நெருக்கடியாக விளங்கியது உலக யுத்தம்.

சந்தர்ப்பவாதிகள் தங்கள் பூர்ஷ்வா வர்க்கத்தை ஆதரித்தார்கள். பூர்ஷ்வா வர்க்கத்துடன் அவர்களது இரகசிய ஐக்கியம் பகிரங்கம் ஆகிவிட்டது. அவர்கள் தற்காப்பு நிலையை மேற்கொண்டார்கள், தங்கள் அரசாங்கங்கள் நடத்திய யுத்தத்தை நியாயப்படுத்தினர்கள், அதற்கு ஆதரவு அளித்தார்கள். சந்தர்ப்பவாதம் சோஷலிஸ-நாட்டுவெறியாக மாறிவிட்டது: சொல்லில் சோஷலிஸம், செயலிலோ தங்கள் பூர்ஷ்வாக்களின் நாடு பிடிக்கும் கொள்ளைக்காரத் திட்டங்களுக்கு ஆதரவு.

நடுநிலையினர் சோஷலிஸ-நாட்டுவெறியினரைத் தொடர்ந்து தாக்கி விமர்சித்தார்கள், ஆனால் அவர்களிடமிருந்து தொடர்பை அறுத்துக் கொள்வதை எதிர்த்தார்கள். நடுநிலையினரின் போக்கு முன்னிலும் ஆபத்தானதும் தீங்கானதும் ஆகிவிட்டது, ஏனெனில் இப்போது அவர்கள் பூர்ஷ்வா வர்க்கத்தின் பகிரங்கக் கூட்டாளிகளைப் பாதுகாத்தார்கள். நடுநிலையினர் தாங்களே பூர்ஷ்வா வர்க்கத்துடன் சதியாலோசனையில் பங்கு கொள்பவர்கள் ஆகிவிட்டார்கள்.

இடதுசாரியினர் வெளிப்படையான துரோகிகளுக்கு எதிராகப் போராட்டம் தொடங்கினர்கள், எனினும் அவர்களுடன் தொடர்பைத் துணித்துக்கொள்ளவில்லை. நடுநிலையினரை எதிர்க்கவும் அவர்களுக்குத் துணிவு போதவில்லை. பல்கேரிய சமூக-ஜனநாயகக் கட்சி (தெஸ்னியாக்குகள்) யுத்தத்தை எதிர்த்தது. செர்பிய சமூக-ஜனநாயகக் கட்சி சரியான நிலையை மேற்கொண்டது. இத்தாலிய சோஷலிஸ்டுகள் யுத்தத்தை எதிர்த்தார்கள். ஆனால் இத்தாலி யுத்தத்தில் கலந்து கொண்ட பிறகு கட்சி சாராம்சத்தில் நடுநிலையினரின் போக்கை மேற்கொண்டது.

சோஷலிஸ-நாட்டுவெறி, நடுநிலையினர் போக்குகள் ருஷ்யாவிலும் வெளிப்பட்டன. ஆனால் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த மற்றக் கட்சிகளுக்கு மாறுக போல்ஷிவிக்குகள் லிக்விடேட்டர்களுடன் தங்கள் போராட்டத்தை முடிவு வரையில் நடத்தி, யுத்தத்துக்கு முன்பே அவர்கள் எல்லோரையும் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். இந்த நடவடிக்கை எவ்வளவு சரியானது என்பதை யுத்தம் உறுதிப்படுத்தியது. சோஷலிஸத்துக்கும் சர்வதேசீயத்துக்

கும் விசுவாசம் கடைப்பிடித்தவாறு, யுத்தத்துக்கு எதிரான போராட்டத்துக்குப் புரட்சிகரச் செயல் திட்டம் வகுத்து அதை ஒத்திசைந்த முறையில் விடாப்பிடியாக நிறைவேற்றிய ஒரே கட்சி போல்ஷிவிக் கட்சி மட்டுமே.

யுத்தத்துக்கு எதிராக போல்ஷிவிக் கட்சியின் அறிக்கை

சுவிட்ஸர்லாந்தில் வெளியான போல்ஷிவிக் கட்சிச் செய்தித்தாளின் 1914, நவம்பர் 1ந் தேதி இதழில், யுத்தம், சமாதானம், புரட்சி ஆகிய பிரச்சினைகள் குறித்து போல்ஷிவிக் கட்சியின் போக்கு பற்றிய அறிக்கை வெளியிடப்பட்டது. இதை எழுதியவர் லெனின்.

இந்த அறிக்கை யுத்தத்தின் தன்மையைத் துல்லியமாகவும் தெளிவாகவும் சித்திரித்தது. போரிடும் இரண்டு முகாம்களையும் சேர்ந்த பூர்ஷ்வாக்கள் தங்கள் தரப்பு மட்டுமே தற்காப்புப் போர் நடத்துவதாக மக்களுக்கு நம்பிக்கையூட்ட முயன்றார்கள். போரிட்ட ஒவ்வொரு நாட்டின் அரசாங்க தூதர்களும் தங்கள் நாடுகள் மட்டுமே தற்காப்புப் போர் நடத்துவதாக நிரூபிப்பதற்காக மலை மலையாகக் காகிதங்களை எழுதிக் குவித்தார்கள். ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, பிரான்ஸ், பிரிட்டன், பெல்ஜியம், போரிட்ட பிற நாடுகள் ஆகியவற்றின் சோஷலிஸ்ட் கட்சிகளின் தலைவர்களோ, யுத்தம் மூண்டுவிட்டபடியால் தற்காத்துக் கொள்வது இன்றியமையாதது என்று பூர்ஷ்வாக்களைப் போலவே மக்களிடம் ஓயாமல் கூறிவந்தார்கள். ஆனால் லெனின் விஷயத்தை வேறு விதமாக விளக்கினார். போரின் தன்மையை அது நிகழும் விதத்தைக் கொண்டு நிர்ணயிக்கக் கூடாது: எந்த யுத்தத்திலும் தற்காப்பும் தாக்குதலும் சமயத்துக்கு ஏற்றவாறு மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே போரின் தன்மையை யார் அதைத் தொடங்கினார்கள், யாருடைய பிரதேசத்தில் பகைவன் புகுந்திருக்கிறான் என்பதைக் கொண்டும் தீர்மானிக்கக் கூடாது. எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் யுத்தத்துக்கு ஏற்பாடுகள் செய்தன. ஆனால் எந்த நாடு தான் அதிக ஆயத்தமாய் இருப்பதாக நினைத்ததோ அது முதலில் யுத்தத்தைத் தொடங்கியது.

எந்த வர்க்கம் யுத்தத்தை நடத்துகிறது, குறித்த யுத்தம் எந்தக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறது,

ஆளும் வர்க்கம் யுத்தத்தில் எந்தக் குறிக்கோளை அடைய முயல்கிறது என்பவற்றைக் கொண்டே யுத்தத்தின் தன்மை முடிவு செய்யப்படுகிறது. இந்த நோக்கிலிருந்து மார்க்ஸீய வாதிகள் யுத்தங்களை நியாயமானவை, அநியாயமானவை என்று பிரிக்கிறார்கள்.ஒடுக்குவோருக்கு எதிராக ஒடுக்கப்படும் வர்க்கங்கள் நடத்தும் யுத்தங்கள் நியாயமானவை. பண்டைய ரோம சாம்ராஜ்யத்தில் ஸ்பார்த்தாக் நடத்திய கிளர்ச்சி போன்று அடிமைகள் அடிமைச் சொந்தக்காரர்களுக்கு எதிராகப் புரியும் போர்கள்; ருஷ்யாவில் புகாச்சோவின் தலைமையில் நடந்த குடியானவர்கள் போர் போன்று நிலப் பிரபுக்களுக்கு எதிராகப் பண்ணையடிமைகள் நடத்தும் போர்கள்; ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் இனங்கள் அன்னிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக, ஏகாதிபத்தியக் காலனியாட்சியாளர்களுக்கு எதிராக நடத்தும் போர்கள் போன்ற நாட்டின விடுதலைப் போர்கள் ஆகியன இத்தகைய நியாயமான போர்கள். வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கம் சோஷலிஸத்தைக் காக்கும் பொருட்டு நடத்தும் போர்களும் நியாயமானவையே.சோவியத் நாடு ஏகாதிபத்திய நாடுகளின் தலையீட்டை எதிர்த்து நடத்திய போரும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் படையெடுப்புக்கு எதிராகக் கியூபா மக்களின் போரும் இதற்கு எடுத்துக்காட்டுகள்.

முதலாவது உலக யுத்தம் இரு தரப்பிலும் நியாயம் அற்ற, கொள்ளைக்காரத் தன்மை கொண்ட, ஏகாதிபத்தியப் போராக விளங்கியது. எனவே, இந்த யுத்தத்தில் ''தாய்நாட்டின் தற்காப்பு'' என்ற கோஷத்தைக் கிளப்புவதன் அர்த்தம் தன் பூர்ஷ்வா வர்க்கத்துக்குச் சாதகமாகச் செயல்படுவது, தொழிலாளி வர்க்க லட்சியத்துக்குத் துரோகம் செய்வது என்பதே ஆகும். நியாயம் அற்ற யுத்தத்தை நியாயம் உள்ளதாக மாற்றுவது, ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டுப் போராக, ஒடுக்குபவர்களுக்கு எதிராக ஒடுக்கப்படும் வர்க்கங்களின் போராக, அதாவது புரட்சியாக மாற்றுவது என்ற கோஷம் ஒன்றுதான் இத்தகைய யுத்தத்தில் ஒரே சரியான கோஷமாக இருக்க முடியும் என்று கூறினார் லெனின்.

ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றுவது என்ற கோஷத்தை முன்வைத்து, லெனினும் போல்ஷி

விக்குகளும் புரட்சி வேலையைத் திரளான பொது மக்களிடையே நடத்தும்படியும், ஏகாதிபத்திய அரசாங்கங்களுக்கு எதிராக—ருஷ்யாவில் ஜார் ஆட்சிக்கு எதிராக—போராடுவதன் இன்றியமையாமையை அவர்கள் உள்ளங்களில் பதிய வைக்கும்படியும் கூறினார்கள். இத்தகைய போராட்டத்தின் அனேக வடிவங்களை போல்ஷிவிக்குகள் காட்டினார்கள்: யுத்தக் கடன்களுக்கு ஆதரவாக வாக்களிக்க மறுப்பது, பூர்ஷ்வா அரசாங்கங்களில் உறுப்பினராக மறுப்பது, தங்கள் பூர்ஷ்வா வர்க்கத்துடன் ''உள்நாட்டுச் சமாதானம்'' செய்து கொள்ள மறுப்பது, சட்டவிரோதமான கட்சி ஸ்தாபனங்களை அவை இல்லாத இடங்களில் அமைப்பது, படையினர் போர்முனையில் சோதரப் பாங்குடன் அளவளாவுவதையும் திரளான பொது மக்களின் புரட்சிச் செயல்களையும் ஆதரிப்பது. இந்த நடவடிக்கைகள் புரட்சி விரைவில் தொடங்க உதவும், பொது மக்களை அதற்கு ஆயத்தப்படுத்தும். புரட்சிக்கான போராட்டம் யுத்தத்தில் அரசாங்கங்களின் தோல்வியால் எளிதாகும். தோல்வி அரசு இயந்திரத்தைப் பலவீனப்படுத்தும், அதன்மீது திரளான பொது மக்களின் தாக்குதலைச் சுளுவாக்கும், புரட்சி ஏற்பாடுகளைச் சுலபமாக்கும். தோல்விக் கொள்கைக்குப் புரட்சி வேலையை அயர்வின்றித் தொடர்வதும், குறித்த முதலாளித்துவ நாட்டில் அரசாங்கத்தின் சங்கடங்கள் எல்லாவற்றையும் புரட்சியை விரைவில் தொடங்குவதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதும் தேவை.

ஏகாதிபத்திய யுத்தத்தில் தங்கள் அரசாங்கங்களின் தோல்வியை நோக்கமாகக் கொண்ட கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு லெனினது அறிக்கை எல்லாப் புரட்சிக்காரர்களையும் வேண்டியது. சோஷலிஸத்தின் துரோகிகள் தங்கள் பூர்ஷ்வா வர்க்கத்துடன் சேர்ந்து லெனினுடைய கோஷத்துக்குத் தங்கள் விருப்பப்படி விளக்கம் கூற முற்பட்டார்கள். யுத்தத்தில் தனது அரசாங்கத்தின் தோல்வியை விரும்புபவன் பகைவனின் வெற்றியை விரும்புகிறான் என்றார்கள் அவர்கள். ஆனால் அவர்கள் லெனினுடைய கருத்தைத் திரித்தார்கள். லெனினது கருத்துப்படி ஏதேனும் ஒரு கட்சி அல்ல, போரிடும் நாடுகளின் **தொழிலாளி வர்க்கக் கட்சிகள் அனைத்**

துமே ஏகாதிபத்திய யுத்தத்தில் தங்கள் அரசாங்கங்கள் தோல்வி அடையும்படி செய்ய முயல வேண்டும். அந்த நிலையில், ஏகாதிபத்தியவாதிகளால் தங்கள் நலன்களின் பொருட்டுத் தொடங்கப்பட்ட யுத்தம், ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான உள்நாட்டுப் போராக மாற முடியும். இதில் வெளிப்பட்டது லெனினது சித்தாந்தத்தின் சர்வதேசீயத் தன்மை. பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசீயப் புரட்சிச் செயல்கள் சாத்தியம் என்று போல்ஷிவிக் கட்சி நம்பியது, அவற்றை எல்லா வகையிலும் ஆதரித்தது.

சோஷலிஸ-நாட்டுவெறியினருடன் தொடர்புகளை அறவே துணித்துக் கொள்ளுமாறும் எல்லா வகைச் சந்தர்ப்பவாதிகளும் நீக்கித் துப்புரவாக்கப்பட்ட புதிய, மூன்றாவது அகிலத்தை நிறுவும்படியும் லெனினது அறிக்கை கோரியது.

சர்வதேசீயமும் தேசபக்தியும்

போல்ஷிவிக் கட்சியின் அறிக்கை வரலாற்றின் அந்தச் சிக்கலான, கடினமான காலப்பகுதி முழுவதையும் மின்வெட்டுப் போல ஒளியுறுத்தியது. இது திண்ணமான, தெளிவான, துணிவுமிக்க போராட்டச் செயல் திட்டமாக விளங்கியது. இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதித் தலைவர்கள் திரளான பொது மக்களை எந்த அடை சந்துக்குள் இட்டுச் சென்றிருந்தார்களோ அதிலிருந்து வெளியேறும் ஒரே வழியைக் காட்டியது இந்த அறிக்கை. எல்லா நாடுகளின் புரட்சிச் சக்திகளையும் இந்த அறிக்கை உற்சாகப்படுத்தியது. இந்தக் காரணத்தினாலேயே ஆளும் வர்க்கங்களும் சோஷலிஸ-நாட்டுவெறி கொண்ட அவற்றின் கையாட்களும் போல்ஷிவிக்குகளுக்கு எதிராக விரிவான போராட்டம் தொடங்கினார்கள். போல்ஷிவிக்குகள் தேசபக்தியை மதிக்கவில்லை என்றும் தாய்நாட்டை ஒப்புக்கொள்ளவில்லை என்றும் இவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

ஆனால் இது அப்பட்டமான பொய். தான் வசிப்பது எத்தகைய நாட்டில்—எதேச்சாதிகார நாட்டிலா அல்லது குடியரசிலா, சோஷலிஸத்துக்கான போராட்டத்தில் தனக்குச் சாதகமான நிலைமைகளிலா அல்லது அதற்கு இடையூறு செய்யும் நிலைமைகளிலா—என்பது பாட்டாளிக்கு முக்கியத்துவம் அற்றதே அல்ல. போல்ஷிவிக்குகள் எதிர்த்தது பொதுவாகத்

தாய் நாட்டின் தற்காப்பை அல்ல, முதலாளித்துவ ஏகபோகங்களின் தாய்நாட்டை, ருஷ்யாவின் நிலப்பிரபுக்களதும் பூர்ஷ்வாக்களதும் தாய்நாட்டைத் தற்காப்பதையே. 1914ல் தொடங்கிய ஏகாதிபத்திய யுத்தத்தில் ஆளும் வர்க்கத்தார் தங்கள் நாடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் புரட்சி இயக்கத்தை நசுக்கி மாய்ப்பதையும் பிறருடைய பிரதேசங்களைச் சூறையாடுவதையும் கைப்பற்றிக் கொள்வதையும் வேற்று மக்கள் இனங்களை அடிமைப்படுத்துவதையுமே நோக்கங்களாகக் கொண்டிருந்தார்கள். உண்மையான தேசபக்தன் யுத்த அரசாங்கத்தை, மக்கள் இனங்களை நசுக்கி மாய்க்கும் அரசாங்கத்தை ஆதரிப்பவன் அல்ல, பிற்போக்கு அரசாங்கத்தை எதிர்ப்பவன், தன் நாடு ஒடுக்குமுறை, அடிமைத்தனைகள், பூர்ஷ்வா-வர்க்கத்தின் சூறையாடும் கொள்கை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்புபவன்தான். உண்மையான தேசபக்தி சர்வதேசீயத்துக்கு முரண்படுவதில்லை, ஒரு நாட்டினத்தை மற்றொரு நாட்டினத்துக்கு எதிராக ஏவிவிடக் காரணம் ஆவதில்லை. அது சர்வதேசீயத்துடன் இசைவாகப் பொருந்துகிறது. 1917 அக்டோபரில் ருஷ்யாவின் உழைப்பாளி மக்கள் பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டபின் போல்ஷிவிக்குகள் தற்காப்புவாதிகள் ஆகி விட்டார்கள், வெற்றிபெற்ற தொழிலாளர்கள், விவசாயிகளின் தாய்நாட்டைக் காக்க முனைந்தார்கள்.

போல்ஷிவிக்குகளின் அறிக்கைக்கு எதிர்நிலையாக, ''வெற்றியும் வேண்டாம், தோல்வியும் வேண்டாம்'' என்ற கோஷத்தைக் கிளப்பினர் திரோத்ஸ்கி. ஆனால் இது ஜார் ஆட்சி அதிகாரத்தை, ஏகாதிபத்தியவாதிகளின் அதிகாரத்தை நிலையாக வைத்திருப்பதாகவே அர்த்தப்பட்டது. சூறையாடும் ஏகாதிபத்திய யுத்தத்தில் ''தாய்நாட்டின் தற்காப்பு'' என்ற நாட்டுவெறி கொண்ட கோஷத்தின் நய நுட்பம் வாய்ந்த வடிவமாக விளங்கியது திரோத்ஸ்கியின் கோஷம். ஏகாதிபத்திய யுத்தத்தை உள்நாட்டுப் போராக, ஜார் ஆட்சி அதிகாரத்தையும் ஏகாதிபத்தியவாதிகளின் அதிகாரத்தையும் கவிழ்க்கும் போராட்டமாக மாற்றுவதன் வாயிலாகவே உண்மையான ஜனநாயக சமாதானத்தை நிலைநாட்ட முடியும்.

முதலாவது உலக யுத்தம் மனித குலத்தின் விதி பற்றிய பிரச்சினையை வரலாற்றிலேயே முதல் முறையாக முழு வேகத்துடனும் எழுப்பியது. பொதுவான நாட்டு வெறிப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்ட உலக அரசியல் தலைவர்களில் எவருமே இந்த யுத்தத்தை எப்படி நிறுத்துவது, மக்கள் இனங்களுக்கு இடையே போர்களுக்கு எவ்வாறு முடிவு கட்டுவது, நிலையான சமாதானத்தை உலகில் எப்படி நிலை நாட்டுவது என்ற கேள்விக்கு விடையளிக்க முடியவில்லை. மனிதகுலம் அனைத்தையும் பாதித்த இந்த அவசரக் கேள்விக்கு லெனின் ஒருவரே விடை அளித்தார்.

சர்வதேசியவாதிகளை ஒன்றிணைக்க போல்ஷிவிக்குகளின் முயற்சி

மக்களின் நலன்களையும் சோஷலிஸக் குறிக்கோளையும் உயர்வாக மதித்தவர்கள் எல்லோரும் லெனினது அறிக்கைப் பதாகையின் கீழ் ஒன்று சேரத் தொடங்கினர்கள். சர்வதேச சமூக-ஜனநாயக அணிகளில் இருந்த இடதுசாரிச் சக்திகள் பழைய கருத்துக்களின் பிணிப்பிலிருந்து விடுபெறவும் பழைய ஸ்தாபனத்துடன் தங்களை இணைத்திருந்த தளைகளை அறுத்து எறியவும் லெனின் துணை செய்தார். 1915 ஆரம்பத்தில் நடந்த சர்வதேச சோஷலிஸ்ட் இளைஞர் மகாநாட்டிலும் சர்வதேச சோஷலிஸ்ட் மாதர் மகாநாட்டிலும் போல்ஷிவிக்குகள் கலந்து கொண்டார்கள். லெனினது அறிக்கையில் உள்ள கோஷங்களை இந்த மகாநாடுகளில் அவர்கள் விளக்கி விவரித்தார்கள்.

1915 ஆகஸ்டு மாதக் கடைசியில், சுவிட்ஸர்லாந்து நாட்டில் உள்ள ஸிம்மர்வால்டு கிராமத்தில் அனேக சமூக-ஜனநாயகக் கட்சிகளுடைய பிரதிநிதிகளின் சர்வதேச மகாநாடு நடை பெற்றது. பதினெரு நாடுகளின் பிரதிநிதிகள் அதில் பங்கு கொண்டார்கள். பெரும்பாலான பிரதிநிதிகள் நடுநிலையினர்.

யுத்தத்தின் பாதிப்பாலும் திரளான தொழிலாளர்கள் இடதுசாரிப் போக்கைப் பின்பற்றிய காரணத்தாலும் நடுநிலையினர் பகிரங்கமான சோஷலிஸ-நாட்டுவெறியினரிடமிருந்து தனித்து விலக முயன்றார்கள்; அவர்களை முன்னிலும் கடுமையாகத் தாக்கி விமர்சித்தார்கள். ஆனால் ஏகாதிபத்திய

யுத்தத்தை உள்நாட்டுப் போராக மாற்றுவது, தங்கள் அரசாங்கத்தைத் தோல்வி அடையச் செய்வது என்ற லெனினுடைய கோஷங்களை நடுநிலையினர் ஏற்கவில்லை. ஆயினும் இந்த மகாநாடு சோஷலிஸ-நாட்டுவெறியினரை எதிர்த்ததால் இதில் கலந்து கொள்வது அவசியம் என்று போல்ஷிவிக்குகள் கருதினர்கள். குறுகிய குழுக் கண்ணோட்டம் போல்ஷிவிக்குகளுக்குப் பிடிக்காத விஷயம். மக்களின் எல்லா வட்டாரங்களிலும் வேலை செய்வதும் தங்கள் நிலையை விடாப்பிடியாக, பொறுமையுடன் விளக்குவதும் இன்றியமையாதவை என அவர்கள் எண்ணினர்கள். ஆயினும், மகாநாட்டில் கலந்து கொள்ள இசைந்ததனால் லெனின் நடுநிலையினருக்கு இணங்கிவிடவில்லை. அவர்களுடைய தயக்கத்தையும் தவறுகளையும் தாக்கி விமர்சித்தார். ஸிம்மர்வால்டு மகாநாட்டில் தமது தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய எட்டுப் பெயரைக் கொண்டு ஒரு இடதுசாரிக் குழுவைத் திரட்டினர் லெனின். இந்த இடதுசாரிக் குழு எல்லா ஒத்திசைந்த புரட்சிக்காரர்களுக்கும் சர்வதேசீயவாதிகளுக்கும் கவர்ச்சி மையமாகத் திகழ்ந்தது. ஸிம்மர்வால்டில் இடதுசாரியினர் சுமார் ஐந்தில் ஒரு பகுதியினராக இருந்தார்கள் என்றால், ஆறு மாதம் கழித்து கிந்தால் (சுவிட்ஸர்லாந்து) என்னும் இடத்தில் நடந்த இரண்டாவது மகாநாட்டில் அவர்கள் அனேகமாக மூன்றில் ஒரு பகுதியினர் ஆகிவிட்டார்கள். லெனினுடைய கோஷங்கள் திரளான மக்களை எட்டிவிட்டன.

புரட்சி பற்றிய போதனையை லெனின் விரிவுபடுத்துகிறார்

உலக வரலாற்றின் படிப்பினைகளையும் சர்வதேசப் புரட்சி இயக்கத்தின் அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டு, சோஷலிஸப் புரட்சியை, உலகப் புரட்சியைப் பற்றிய மார்க்ஸீய போதனையை லெனின் விரிவுபடுத்தினர்.

சோஷலிஸத்துக்குத் தேவையான பௌதிக முன்னிலைகள் பக்குவப்படுவதை ஏகாதிபத்தியம் விரைவுபடுத்தியது. பெருத்த இயந்திரத் தொழிலை அபிவிருத்தி செய்த அதே சமயத்தில் ஏகாதிபத்தியம் தன்னைக் குழி தோண்டிப் புதைப்பவர்களை உருவாக்கி வலுப்படுத்தியது. எங்கும் பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டு போயிற்று.

மூலதனத்தின் ஒடுக்குமுறையில் அதிருப்தி கொண்ட எல்லோரையும் ஒன்று திரட்டி ஒற்றுமைப்படுத்தவும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, வர்க்க வகையானவையும் நாட்டின வகைப்பட்டவையுமான ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் ஒழிப்பதற்காக, அவர்களைப் புரட்சிக்குத் தூண்டி நடத்தவும் தன்னால் முடியும் என்பதைப் பாட்டாளி வர்க்கம் மக்களின் நலன்களுக்காகத் தான் நடத்திய போராட்டத்தின் வாயிலாகக் காட்டிவிட்டது.

நாட்டின-விடுதலை இயக்கமும் தீவிரம் அடைந்தது. காலனி, ஆதீன நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்கள், பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து போராடுவதன் மூலமே ஏகாதிபத்தியத்தை முறியடித்து வீழ்த்த முடியும் என்பதை ருஷ்யாவில் நடந்த முதலாவது புரட்சியின் அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டிருந்தார்கள். ருஷ்யப் புரட்சி ஒடுக்கப்பட்ட நாட்டினங்களைத் தட்டி எழுப்பி விடுதலைப் போராட்டப் பாதையில் செலுத்தியது. காலனிப் பிரதேசங்களைச் சேர்ந்த ஏராளமான சிப்பாய்கள் உலக யுத்த முனைகளில் இருந்தார்கள். அவர்கள் புரட்சி மனப்பான்மை கொண்ட படையினருடன் கலந்து பழகினார்கள், நவீன ஆயுதங்களைப் பிரயோகிக்கப் பயின்றார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் முன்னணிப் பிரதிநிதிகள் ஒடுக்குவோருக்கு எதிரான பொதுப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். நாட்டின விடுதலை இயக்கம் உலகப் புரட்சி இயக்கத்தின் உள்ளுறுப்பு ஆகி விட்டது.

ஏகாதிபத்தியம் சர்வதேச சக்தி, எனவே சர்வதேசப் புரட்சி இயக்கந்தான் அதை வெற்றிகொள்ள முடியும் என்று போதித்தார் லெனின். சர்வதேசத் தொழிலாளி வர்க்கப் புரட்சிப் போராட்டம், நாட்டின விடுதலை இயக்கம் ஆகியவற்றின் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கி நடத்தப் பெறும் ஒன்றித்த முன்னணி உலக ஏகாதிபத்தியத்துக்கு எதிர்நிறுத்தப்பட வேண்டும். சோஷலிஸப் புரட்சியை நிறைவேற்றப் போகிற பாட்டாளி வர்க்கமே ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதில் முன்முயற்சி எடுத்துக்கொள்ளும்.

சோஷலிஸப் புரட்சி என்பது ஒரு போர் அல்ல. அது ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் நிகழ்வதில்லை. புரட்சியை இவ்வாறு கொச்சையாகப் புரிந்துகொண்டவர்களை லெனின்

கடுமையாக விளாசினர். மக்களின் எல்லா ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடையவும் பகுதிகளுடையவும் அனேகப் போர் களும் நடவடிக்கைகளும் அடங்கியதாக இருக்கும் சோஷ லிஸப் புரட்சி. விவசாயிகள் சமூகமும் அரைப்பாட்டாளி மக்கள் திரளும், நகரக் குட்டி பூர்ஷ்வாக்களின் கணிசமான பகுதிகளும் பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து போராட்டம் நடத்தும். இவர்கள் எல்லோருமே ஏகபோகங்களின் ஒடுக்குமுறையை எதிர்க்கிறார்கள், நிலப்பிரபுக்கள், பூர்ஷ் வாக்கள் ஆகியோரின் ஒடுக்குமுறையையும் நாட்டின ஒடுக்கு முறையையும் வேறு வகை ஒடுக்குமுறையையும் அவர்கள் எதிர்க்கிறார்கள். இந்த இயக்கங்களை ஒன்றிணைப்பதும் பூர்ஷ்வா வர்க்கத்தை அதிகாரத்திலிருந்து அகற்றிவிட்டு சோஷலிஸத்தின் வெற்றிக்கு வகை செய்வது என்ற ஒரே குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமை ஆகும்.

உலக முதலாளித்துவ அமைப்பு மொத்தத்தில் சோஷ லிஸப் புரட்சிக்கு ஏற்ற பக்குவம் பெற்றுவிட்டது. ஏகாதிபத் தியம் சோஷலிஸத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய புற நிலையான காரணங்களை ஏற்படுத்தி இருந்தது. உலக யுத்தம் மக்களுக்குக் கணக்கிட முடியாத துன்பங்கள் விளைத்தது. யுத்தத்தின் போது ஒரு கோடிப் பெயர் உயிரிழந்தார்கள் இரண்டு கோடிப் பெயர் அங்கவீனர்கள் ஆனார்கள். ஏகபோக அதிபர்களின் ஆதிக்கம் எந்த நிலைக்குத் தங்களை இட்டு வந்தது என்பதை யுத்தம் உழைப்பாளிகளுக்குக் காட்டியது. யுத்தம் ஏகாதிபத்தியத்திலிருந்தே பிறந்தது. முதலாளித் துவத்தின் பொது நெருக்கடி தொடங்கிவிட்டதை அது காட் டியது, இந்த நெருக்கடியின் வெளியீடாக விளங்கியது. முத லாளித்துவத்தின் அரசியல், பொருளாதார, கொள்கைவாத அஸ்திவாரங்களும் மக்களைத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத் திருக்கும் அதன் திறனும் இடையறாது மேலும் மேலும் பல வீனம் அடைவது இந்த நெருக்கடிக்கு இயல்பானது. மறுபுறம் யுத்தம் ஏகாதிபத்தியத்தின் எல்லா முரண்பாடுகளையும் தீவிரப்படுத்தியது. யுத்தம் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை யும் மூலதனம் ஓரிடத்தில் குவிவதையும் விரைவுபடுத்தியது, ஏகபோகங்களின் செல்வம் பெருகவும் ஆட்சி அதிகாரம்

வலுப்படவும் காரணம் ஆயிற்று. அதன் விளைவாக உழைப் பாளிகள் பேரிழப்புக்களுக்கு உள்ளானார்கள். போரிட்ட ஐரோப்பிய நாடுகளில் புரட்சிக்கு ஏற்ற சூழ்நிலை உருவா யிற்று. புரட்சிச் சூழ்நிலையைப் புரட்சியாக மாற்றுவதற்குத் துணிவுள்ள புரட்சி முன்முயற்சி தேவைப்பட்டது. இத்தகைய முன்முயற்சி எடுத்துக் கொண்டது ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம்.

ருஷ்யாவில் நெருங்கி வந்துகொண்டிருந்த புரட்சியைப் பற்றி லெனின் எழுதினார்: அது தனது தன்மையில் பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சியாய் இருக்கும். ஆனால் அது 1905-1907ல் நடந்த புரட்சியின் வெறும் மறு நிகழ்வாக இராது. முதல் புரட்சியின் தோல்விக்குப் பின் கழிந்துள்ள பத்து ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தீவிரம் அடைந்துள்ளது. பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் அதிகரித்திருக்கிறது. அது அதிக அனுபவம் பெற்றுள்ளது. ஏழை விவசாயிகளின் எண்ணிக்கையும் மிகுந்திருக்கிறது. பாட்டாளி வர்க்கத் துடன் அவர்களுடைய ஐக்கியம் முன்னிலும் நெருக்கம் ஆகியிருக்கிறது. பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி சோஷலிஸப் புரட்சியாகப் பரிணமிப்பதற்கு வாய்ப்பான நிலைமைகள் நாட்டில் ஏற்பட்டுள்ளன.

1915ல் லெனின் ஒரு முக்கியமான விஞ்ஞான முடிவுக்கு வந்து அதை ஆதாரத்துடன் நிலைநாட்டினார். சோஷலிஸம் தொடக்கத்தில் சில நாடுகளிலோ, ஒரு தனி நாட்டிலோ வெற்றி பெற முடியும் என்பது அந்த முடிவு. சோஷலிஸம் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலுமோ அல்லது பெரும்பாலானவற்றிலோ ஏககாலத்தில்தான் வெற்றி பெற முடியும் என்று அதுவரை மார்க்ஸீயவாதிகள் எண்ணி வந்தார்கள். முதலாளித்துவம் மேலும் மேலும் முதிர்ந்து வந்த காலத்துக்கு இது சரியாய் இருந்தது. ஆனால் தனது இறுதியான, ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தில் முதலாளித்துவம் அழுகி மடியத் தொடங்கி இருந்தது. முதலாளித்துவத்தின் ஒரு சீரற்ற வளர்ச்சி சிறப்பாகத் தீவிரம் அடைந்து பந்தயத் தன்மை பெற்று விபத்தாக மாறியிருந்தது. இந்தப் புதிய நிலைமைகளின் காரணமாக சோஷலிஸம் ஒரே நாட்டில் வெற்றி பெறுவது சாத்தியம் ஆகி இருந்தது.

ஏகாதிபத்தியச் சங்கிலித் தொடரைத் துணித்து, ஒரு நாட்டில் வெற்றி பெறுவதன் வாயிலாக, புரட்சி உலகப் புரட்சி இயக்கத்தின் சக்திகளைக் கட்ட விழ்த்துவிடும். லெனினுடைய புதிய முடிவுகள் எல்லா நாடுகளையும் சேர்ந்த புரட்சிப் போராட்ட வீரர்களுக்குத் தெளிவான வருங்கால வாய்ப்புக்களைக் காட்டின.

புரட்சிகரமான மக்கள் திரளின் தலைமையில் போல்ஷிவிக்குகள்

ருஷ்யாவில் லெனினது அறிக்கையைச் செயல்படுத்துவதற்கான போராட்டம் விடாப்பிடியாகத் தொடர்ந்து நடந்தது.

யுத்த காலத்தில் ஜார் ஆட்சி போல்ஷிவிக் கட்சியை முன் ஒருபோதும் இல்லாத அளவு பயங்கரக் கொடுமைகளுக்கு உட்படுத்தியது. போர் தொடங்குவதற்கு முன்பே ''பிராவ்தா'' மூடப்பட்டுவிட்டது. போல்ஷிவிக் அச்சக வெளியீடுகள் அனைத்துக்கும் வாய்ப் பூட்டு போடப்பட்டுவிட்டது. பல்லாயிரம் கட்சி ஊழியர்கள் சிறைகளில் தள்ளப்பட்டனர். ஜார் அதிகாரிகள் அரசாங்க தூமாவின் போல்ஷிவிக் உறுப்பினர்களைக் கைது செய்து அவர்கள் மீது வழக்கு தொடர்ந்தனர். உறுப்பினர்கள் வீரத்துடன் நடந்து கொண்டார்கள். ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றும்படி அவர்கள் விடுத்த அறைகூவல் உலகு எங்கும் முழங்கிற்று. விரிவான பொது மக்கள் யுத்தம் பற்றிய உண்மையைக் கேட்டு அறிந்தார்கள். தூமா உறுப்பினர்களுக்கு ஆயுட்காலம் முழுவதும் சைபீரியச் சிறைக் குடியிருப்பில் வசிக்கும் தண்டனை விதிக்கப்பட்டது. பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகள் பூர்ஷ்வா நாடாளுமன்றத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாகவும் ஆதர்சமாகவும் விளங்கியது போல்ஷிவிக் உறுப்பினர்களின் நடத்தை. மேற்கு நாடுகளில் நாடாளுமன்றங்களின் சமூக-ஜனநாயகக் கட்சிப்பிரதிநிதிகள் பூர்ஷ்வா அரசாங்கங்களை யுத்தத்தில் ஆதரிப்பதும், பலர் விரைவில் அந்த அரசாங்கங்களில் உறுப்பு ஏற்பதுமாக இருந்த அதே சமயத்தில் ருஷ்யாவில் தொழிலாளர்களைச் சேர்ந்த போல்ஷிவிக் பிரதிநிதிகள் சோஷலிஸக் குறிக்கோளுக்கு விசுவாசமாக நடந்து கொண்டார்கள்.

நான்காவது அரசாங்க தூமாவின் போல்ஷிவிக் உறுப்பினர் கள். இவர்கள் ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்த்துப் பேசிய தற்காக ஜார் நீதி மன்றத்தால் ஆயுட்கால சைபீரியச் சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டார்கள்

போல்ஷிவிக்குகள் முக்கிய வேலையைப் பாட்டாளி களுக்கு இடையே நடத்திவந்தார்கள். அவர்கள் அரசாங்கத் தையும் அதனுடன் ஒத்துழைத்த சோஷலிஸ்ட்-நாட்டு வெறியினரையும் மென்ஷிவிக்குகளையும் எஸ் ஆர்களையும் தாக்கினார்கள், ஜார் அரசாங்கத்தால் கலைக்கப்பட்ட கட்சி ஸ்தாபனங்களைத் தொழிற்சாலைகளில் மீட்டமைத்தார்கள், புதியவற்றை நிறுவினார்கள். துன்ப நிலைமையால் மக்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியை எல்லாத் துன்பங்களுக்கும் பொறுப்பாளியான ஜார் ஆட்சிக்கு எதிராகத் திறமையுடன் திருப்பிவிட்டது கட்சி. போல்ஷிவிக்குகள் வேலை நிறுத்தங்

களுக்குத் தலைமை ஏற்று அவற்றை ஜார் ஆட்சிக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளாக மாற்றினர்கள். இராணுவத்தில் புரட்சிப் பிரசாரம் செய்வதற்குத் தண்டனையாக சுட்டுக் கொல்லப்படும் அபாயம் இருந்தது, எனினும் கட்சி அஞ்சாமல் இத்தகைய பிரசாரத்தைச் செய்து வந்தது. போல்ஷிவிக்குகள் விவசாயிகளையும் போராட்டத்துக்குத் தூண்டி எழுப்பினர்கள். நாட்டினப் பிரதேசங்களைச் சேர்ந்த உழைப்பாளிகளுக்கு இடையிலும் கட்சிப் பிரசாரம் முழங்கிற்று.

போல்ஷிவிக்குகள் முன் கூறியது போலவே யுத்தம் மக்களுக்கு மிகப் பெரும் துன்பங்கள் விளைத்தது, நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தது. போக்குவரத்து ஒழுங்கு குலைந்துவிட்டதால் நகரத்துக்குக் கோதுமையும் பிற உணவுப் பண்டங்களும் வருவது குறைந்து விட்டது. நகர உழைப் பாளிகள் பஞ்சத்துக்கு உள்ளாகும் நிலை நெருங்கி வந்தது. இவை எல்லாம் முனைமுகத்தில் ஏற்பட்ட தோல்விகள், லட்சக் கணக்கிலும் பத்து லட்சக் கணக்கிலும் படையினர் அர்த்த மின்றிக் கொல்லப்பட்டது ஆகியவற்றுடன் சேர்ந்து கொண் டன. ஜார் ஆட்சி ருஷ்யாவின் படை வலிமையை முறிக்க முப்பது மாதங்களே போதுமானவையாய் இருந்தன. ஜாரும் அவனுடைய அமைச்சர்களும் நாட்டை நிர்வகிப்பதற்கு அறவே திறன் அற்றவர்கள் என்பது வெளியாகி விட்டது. பெரும் பூர்ஷ்வா முகாமைச் சேர்ந்த ஜாரின் கூட்டாளிகள் கூட அவனைப் புறக்கணித்துவிட்டு, ஜாரின் சிங்காதனத்துக் குப் புதிய உரிமையாளனைத் தேடலாயினர். அயல் நாட்டு அரசாங்க தூதர்கள் அரசனை மாற்றுவதில் ருஷ்ய பூர்ஷ்வா வர்க்கத்துக்கு உதவினர்கள்.

ஆனால் இப்போது எதுவும் ஜார் ஆட்சிக்கு உதவ முடிய வில்லை. அவனுடைய அரியாசனம் ஆட்டம் கண்டுவிட்டது. துன்பத்தால் நலிந்த மக்கள் மறுபடியும் போராட்டத்துக்குக் கிளர்ந்து எழுந்தார்கள். மக்களைத் தலைமைதாங்கி நடத்திச் சென்றது பாட்டாளி வர்க்கம். 1914ல் போர் தொடங்கியது முதல் 70 வேலை நிறுத்தங்கள் நடந்தன. இவற்றில் 85 ஆயிரம் பெயர் பங்குகொண்டார்கள். 1915ல் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியது. இவற்

றில் ஐந்து லட்சம் பெயர் கலந்து கொண்டார்கள். யுத்தத் தின் மூன்றுவது ஆண்டின் ஆரம்ப மாதங்களில் 1500 வேலை நிறுத்தங்கள் நடந்தன. இவற்றில் பதினைந்து லட்சம் பெயர் கலந்து கொண்டார்கள். புரட்சி விரைவாக நெருங்குவதை இந்த நிகழ்ச்சி காட்டியது. புரட்சி பற்றிய லெனினது தீர்க்க தரிசனம் மெய் ஆயிற்று.

இரண்டாவது பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி

ருஷ்யாவில் தொழிலாளர் இயக் கத்தின் பாதிப்பினால் போர்முனையில் படையினரின் நடவடிக்கைகள் தீவிரம் அடைந்தன. முழு முழு ரெஜிமெண்டுகள் தலைவர்களின் ஆணைகளை நிறைவேற்ற மறுத்தன. ஆயிரக்கணக்கான படை யினர் போர்முனையை விட்டு அகன்றார்கள். நாட்டுப் புறத் தில் விவசாயிகளின் அதிருப்தி வளர்ந்தது.

1917 பிப்ரவரியில் பெத்ரோகிராத் (யுத்தம் தொடங் கியதும் பீட்டர்ஸ்பர்கின் பெயர் பெத்ரோகிராத் என மாற்றப்பட்டது) தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்தார்கள். நகரக் காவற்படையினர் அவர்களோடு சேர்ந்து கொண்டார் கள். கிளர்ந்து எழுந்த மக்களின் முன்னணியில் சென்றார்கள் போல்ஷிவிக்குகள். அவர்களுடைய கோஷங்கள் திரளான மக்களுக்கு உற்சாகம் ஊட்டின. தொழிலாளர்கள், படை வீரர்களின் ஒருமித்த தாக்குதலைத் தாங்கமுடியாமல் எதேச்சாதிகாரம் தகர்ந்து சரிந்தது. ரமானவ் வம்சத்தினரின் முன்னூறு ஆண்டு ஆட்சி முடிந்தது. கிளர்ச்சிக்காரர்கள் பெத் ரோகிராதில் தொழிலாளர், படையினர் பிரதிநிதிகளின் சோவியத்தை நிறுவினர்கள். இராணுவத்தினரும் மக்களும் பெத்ரோகிராத் வீரர்களை ஆதரித்தார்கள். எங்கும் தொழி லாளர்கள், படையினர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்— மக்கள் ஆட்சி அதிகாரத்தின் உறுப்புக்கள் — நிறுவப் படலாயின.

தொழிலாளர்களும் பெரும்பாலும் விவசாயிகளைச் சேர்ந்த படை வீரர்களும் வெற்றி பெற்றார்கள். ஆனால் அவர்களுடைய வெற்றி முழுமையாகவில்லை: சோவியத்துக்க ளோடு கூடவே தோன்றியது தாற்காலிக அரசாங்கம். இது பூர்ஷ்வாக்களதும் பூர்ஷ்வாத்தன்மை பெற்றுவிட்ட நிலப் பிரபுக்களதும் ஆட்சியின் உறுப்பு.

1917ம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சி நாட்களில் பெத்ரோகிராதின் தொழிலாளர் பகுதியில்

புரட்சியை வெற்றிகரமாக நடத்தியவர்கள் தொழிலாளர்களும் விவசாயிகளுமாய் இருக்க, ஆட்சி அதிகாரம் பூர்ஷ்வாக்கள் கையில் போய்ச் சேர்ந்ததற்கு என்ன காரணம்?

புரட்சி ஜாரின் வன்முறை இயந்திரத்தை உடைத்து எறிந்துவிட்டது. ருஷ்யா விடுதலை பெற்ற நாடு ஆகிவிட்டது. லட்சோபலட்சம் மக்கள் உடனே அரசியல் நடவடிக்கைகளுக்கு ஈர்க்கப்பட்டார்கள். ஆனால் ருஷ்யாவில் பெரும்பாலராய் இருந்தார்கள் விவசாயிகளும் குட்டி பூர்ஷ்வாக்களும். அப்போதுதான் விழித்து எழுந்த, அரசியல் முதிர்ச்சி பெறுத பொது மக்கள் நிலைமையை எடுத்த எடுப்பில் புரிந்து கொள்ள வில்லை. புரட்சி வெற்றி அடைந்ததும் யுத்தத்தின் தன்மை மாறிவிட்டது, ஜார் ஆட்சி கவிழ்க்கப்பட்டுவிட்டதால் யுத்தத்தின் ஏகாதிபத்தியத் தன்மை நீங்கி விட்டது என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் இந்த விஷயத்தில் நேர்மையுடன் வழி தவறி விட்டார்கள். ஆட்சியிலிருந்து ஜார் அகற்றப்பட்டது உண்மையே எனினும் பூர்ஷ்வாக்களும் நிலப் பிரபுக்களும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினர்கள்.

யுத்தம் முன்போலவே ஏகாதிபத்தியத் தன்மை கொண்ட தாக, நியாயம் அற்றதாகவே இருந்தது.

குட்டி பூர்ஷ்வாக்களின் கருத்துக்கள் குறித்த காலத் துக்குத் தொழிலாளர்களின் விரிவான வட்டாரங்களையும் தொற்றிக்கொண்டன. இந்தக் காரணத்தால் குட்டி பூர்ஷ் வாக்களின் பல பிரதிநிதிகள்—எஸ் ஆர்களும் மென்ஷிவிக்கு களும் — சோவியத்துக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் கள். எந்தக் கட்சியையும் சேராத பிரதிநிதிகளில் பெரும்பான் மையோர் அவர்களை ஆதரித்தார்கள். மென்ஷிவிக்குகளும் எஸ் ஆர்களும் மிகப் பெரும்பாலான சோவியத்துக்களின் தலைமையில் இருந்தார்கள். குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளின் வற்புறுத்தலுக்கு இணங்கி, சோவியத்துக்கள் ஆட்சி அதி காரத்தை பூர்ஷ்வாக்களுக்கு, அதாவது தாற்காலிக அரசாங் கத்துக்கு, தாமாகவே விட்டுக் கொடுத்தன. ருஷ்யாவில் இரட்டை ஆட்சி நிலைபெற்றது: தாற்காலிக அரசாங்கம் பூர்ஷ்வா ஆட்சி உறுப்பாகவும் சோவியத்துக்கள் பாட்டாளி வர்க்க, விவசாயிகள் ஆட்சி உறுப்பாகவும் விளங்கின. ஆனால் இரட்டை ஆட்சி நாட்டில் நெடுங்காலம் நீடிக்க முடிய வில்லை.

இவ்வாறு புரட்சியின் ஆரம்பத்தில் பாட்டாளி வர்க்கம் போதிய ஒழுங்கமைப்பும் அரசியல் உணர்வும் பெற்றிருக்க வில்லை என்பது வெளிப்பட்டது. யுத்த காலத்தில் பாட்டாளி வர்க்கத்தின்உள்ளடக்கம்மாறியிருந்தது.ஏராளமான தேர்ந்த தொழிலாளர்கள் போர் முனைக்கு அனுப்பப்பட்டார்கள். தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் அவர்கள் இடங்களுக்கு வந்தார்கள் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களைச் சேர்ந்த தொழி லாளர்கள். போல்ஷிவிக் ஸ்தாபனங்கள் பெரிதும் பலவீனம் அடைந்திருந்தன. அவற்றின் தலைவர்கள் சிறைகளிலோ, சைபீரியச் சிறைக் குடியிருப்புக்களிலோ, வெளி நாடுகளிலோ இருந்தார்கள். அதே சமயம் மென்ஷிவிக்குகளும் எஸ் ஆர்களும் மக்களுக்கு முன் காட்சி அளித்தார்கள், தூமா அரங்கிலிருந்து ஜார் ஆட்சியைத் தாக்கிப் பேசினார்கள், ஓரளவு மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்கள். யுத்தத் துக்கு முன் பெரும்பாலான தொழிலாளர்கள் போல்ஷிவிக்கு களையே பின்பற்றி வந்தார்கள். இப்போது திரளான தொழி

லாளர்களே மீண்டும் தங்கள் தரப்புக்குக் கொண்டு வரும் கடமை போல்ஷிவிக்குகளுக்கு எதிர் நின்றது.

1917 பிப்ரவரிப் புரட்சி ருஷ்யாவுக்கும் உலகம் முழுவதற்குமே பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. யுத்த காலத்தில் நடந்த முதல் புரட்சி இதுவே. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கு அது உதாரணம் காட்டியது. ருஷ்யப் புரட்சியின் செல்வாக்கினால் மற்ற நாடுகளில் தொழிலாளர் இயக்கம் தீவிரம் அடைந்தது.

பிப்ரவரிப் புரட்சி, ருஷ்யாவில் எல்லாவித மக்கள் இயக்கத்தையும் பல நூற்றாண்டுகளாக அடக்கி நசுக்கிவந்த எதேச்சாதிகாரத்தை ஒழித்து விட்டது. 1903ம் ஆண்டில் போல்ஷிவிக் கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் வகுக்கப் பட்ட குறைந்தபட்சச் செயல் திட்டம் அடிப்படையில் நிறைவேறிவிட்டது. ஜார் ஆட்சி வழியிலிருந்து அகற்றப் பட்டுவிட்டது. அதிகபட்சச் செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு—பூர்ஷ்வா ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கும்—போல்ஷிவிக்குகளின் தலைமையில் போராட்டம் தொடங்கும் வாய்ப்பு, சோஷலிஸத்தின் பொருட்டுப் போராடும் வாய்ப்பு தொழிலாளி வர்க்கத்துக்குக் கிடைத்துவிட்டது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி

ஜார் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்

புரட்சியை நிறைவேற்றிய மக்கள் சமாதானத்தையும் உணவையும் நிலத்தையும் விடுதலையையும் எதிர்பார்த்தார்கள். ஆனால் தாற்காலிக அரசாங்கம் உழைப்பாளிகளின் இந்த விருப்பங்களை நிறைவேற்றத் தயாராய் இல்லை. காரணம், அது பூர்ஷ்வாக்கள், நிலப் பிரபுக்களின் அரசாங்கம், அவர்களுடைய நலன்களைப் பாதுகாத்தது என்பதுதான். தாற்காலிக அரசாங்கம் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தியது. தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்த அது தயாராய் இல்லை. அனேகத்

தொழிற்சாலைகளில்தொழிலாளர்கள்பகிரங்கமாகஅமலுக்குக் கொண்டுவந்திருந்த எட்டு மணி நேர வேலை நாளை அது தீவிர மாக எதிர்த்தது. நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பறித்துக் குடியானவர்களுக்கு அளிக்கத் தாற்காலிக அர சாங்கம் மறுத்துவிட்டது. பூர்ஷ்வா அரசாங்கம் ஒடுக்கப் பட்ட நாட்டினங்களுக்கு விடுதலை வழங்குவதாக எண்ணத் தானும் இல்லை. பழைய நாட்டின ஒடுக்கு முறையையே அது கையாண்டு வந்தது. முடியரசு அகற்றப்பட்டுவிட்டது என்று அது அறிவிக்கக்கூட இல்லை. ருஷ்யா குடியரசாகப் பிரகடனம் செய்யப்படவில்லை. ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, பூர்ஷ்வாக்களும் நிலப்பிரபுக்களும் ஜார் மன்னனை மீண்டும் சிங்காதனத்தில் ஏற்றலாம் என்று நம்பினார்கள்.

அப்போதுதான் புரட்சி நடத்தி முடித்திருந்த ஆயுதந் தாங்கிய மக்கள் முதலாளிகளின் எதிர்ப்பை நசுக்கியிருக்க முடியும். மிகப் பெரும்பாலான மக்களின் பிரதிநிதிகளாய் இருந்த சோவியத்துக்கள் ஆட்சி அதிகாரம் முழுவதையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் அவை இவ்வாறு செய்யவில்லை. ஏனெனில் சோவியத்துக் களில் மேலாண்மை நடத்தினார்கள் எஸ் ஆர்களும் மென்ஷி விக்குகளும். யுத்த காலத்தில் இந்தக் கட்சிகள் எப்படி ''வர்க்க சமாதானத்தைப்'' பிரசாரம் செய்து, ஆளும் வர்க்கத்தினருக்கு ஆதரவாய் இருந்தனவோ அப்படியே இப்போதும் பூர்ஷ்வா அரசாங்கத்தின் ஆதாரத் தூண்களாக விளங்கின. எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் பூர்ஷ்வாக் களுக்கும் அவர்களது அரசாங்கத்துக்கும் இணக்கம் தெரி வித்தார்கள். அதனால்தான் அவர்கள் இணக்கக் கொள்கை யினர் என்ற அவப் பெயர் பெற்றார்கள். 1905ல் மென்ஷிவிக்கு கள் புரட்சி அரசாங்கத்தில் சோஷலிஸ்டுகள் உறுப்பு வகிப் பதை எதிர்த்தார்கள். இப்போதோ, பூர்ஷ்வா அரசாங்கத்தை ஆதரித்தார்கள்.

சமாதானத்தையும் நிலத்தையும் பற்றிய தங்கள் கோரிக் கைகளை நிறைவேற்ற அவசரப்படாமல் இருக்கும்படிப் பொது மக்களுக்கு அறிவுறுத்தினார்கள் எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும். ''அரசியல் சட்ட அமைப்பு மன்றம் கூடும் வரை பொறுத்திருங்கள்'' என்றார்கள் அவர்கள். அது கூட்டப்

படும் தேதியைக் கூட அவர்கள் குறிக்கவில்லை. எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் அரசாங்கத்தின் மீது கண்காணிப்பை ஏற்படுத்துவதாக உறுதி கூறினார்கள். ஆனால் அதிகாரம் இல்லாத கண்காணிப்பு கவைக்கு உதவாதது. நடப்பில் அவர்கள் பூர்ஷ்வா அரசாங்கத்தின் கொள்கை அனைத்தையும் சரி என்று ஏற்று ஆதரித்தார்கள். ருஷ்யா சோஷலிஸத்துக்குப் பக்குவம் பெறவில்லை என்றும் சோஷலிஸத்துக்கு ஏற்ற நிலைமைகள் உயர் வளர்ச்சி பெற்ற மேற்கு நாடுகளில் மட்டுமே உள்ளன என்றும் இணக்கக் கொள்கையினர் பல்லவி பாடினார்கள். ருஷ்யாவில் முதலாளித்துவத்தை நிலையாக வைத்திருப்பதை ஆதரித்து, அதில் சில அம்சங்களைச் சீர்படுத்த வேண்டும், சிலவற்றுக்கு மெருகு கொடுக்க வேண்டும் என்று அவர்கள் யோசனை கூறினார்கள்.

சோஷலிஸத்துக்குப் பரிணமிக்க அவசியமான எல்லா எதார்த்த நிலைமைகளும் ருஷ்யாவில் இருந்தன. மேற்கொண்டு, அழிவையும் அளவற்ற உயிர் இழப்பையும் விளைத்த யுத்தம், ஒன்று மூலதனத்தின் ஆட்சியில் மேலும் அவல வாழ்வு நடத்துவது, இல்லாவிட்டால் பாட்டாளி வர்க்கத்திடம் ஆட்சியை ஒப்படைத்து, புதிய சோஷலிஸ சமூகத்தை அமைப்பதற்காக முன்னேறுவது என்ற இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுக்குமாறு மக்களைக் கட்டாயப்படுத்தியது.

தேவையாய் இருந்தது மக்கள் தங்கள் பலத்தை உணர்வதுதான், சோஷலிஸம் தங்களுக்கு மீட்சி அளிக்கும் என்று அவர்கள் புரிந்து கொள்வதுதான். இந்த உணர்வையும் புரிவையும் ஒரு கட்சி — போல்ஷிவிக் கட்சி — மட்டுமே மக்களுக்கு அளித்தது.

சோஷலிஸப் புரட்சிக்குப் பரிணமிப்பதற்கான லெனினது திட்டம்

பிப்ரவரிப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு போல்ஷிவிக் கட்சி மறைவிலிருந்து வெளி வந்தது. ''பிராவ்தாவும்'' மற்ற போல்ஷிவிக் செய்தித்தாள்களும் பிரசுரமாகத் தொடங்கின. போல்ஷிவிக் தலைவர்கள் சிறைச்சாலைகளிலிருந்து விடுதலையானார்கள், சைபீரியக் குடியிருப்புகளிலிருந்து திரும்பினார்கள். அவர்களில் பலர் தலைநகர் பெத்ரோகிராதுக்கு வந்தார்கள். போல்ஷிவிக்குகள் பொது மக்களிடம் சென்று



1917, ஏப்ரல் 3ந் தேதி அயல்நாட்டு வாசத்திலிருந்து திரும்பிய லெனின், பெத்ரோகிராத் நகரத் தொழிலாளர்கள், படை வீரர்கள், மாலுமிகள் ஆகியோர் முன் சொற்பொழிவு ஆற்றுகிறார்

புரட்சியை விரிவுபடுத்தி ஆழமாக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆனால் நாட்டில் சூழ்நிலை சிக்கல் நிறைந்ததாக இருந்தது. இதற்கு முக்கியக் காரணம் தாற்காலிக அரசாங்கம், சோவியத்துக்கள் என்ற இரண்டு ஆட்சிகள் ஒரே சமயத்தில் நிலவியதுதான். சரியான செயல் தந்திரம், புதிய போராட்டத்

திட்டம் வகுப்பதற்குக் கட்சியே இந்தச் சூழ்நிலையைத் தெளிவாகப் புரிந்து கொள்வது அவசியமாய் இருந்தது. கட்டாயம் காரணமாக வெளி நாடுகளில் தங்கியிருந்தபின் ருஷ்யா திரும்பியிருந்த லெனின் இத்தகைய திட்டம் வகுத்தார்.

லெனினது ரெயில் வந்த நிலையத்தின் முன் இருந்த சதுக்கம் 1917, ஏப்ரல் 3ந் தேதி பின்மாலையில் ஆயிரக்கணக்கான மனிதர்களின் கூட்டத்தால் நிறைந்திருந்தது. நண்பர்களும் போராட்டத் தோழர்களும் லெனினை எதிர்கொள்ள வந்திருந்தார்கள். தொழிற்சாலைகள் தொழிலாளர் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. செங்காவற்படை அணிகள்—தொழிற் சாலைகளில் திரட்டப்பட்டிருந்த ஆயுதமேந்திய தொழிலாளர் பிரிவுகள் இவ்வாறு அழைக்கப்பட்டன — வந்திருந்தன. தரைப் படையினரும் கடற்படையினரும் ரயில் நிலையத்துக்கு முன் ஒழுங்கான வரிசைகளாக அணிவகுத்து நின்றார்கள். கவச லாரிகள் வந்தன. களி பொங்கும் மக்கள் திரள் ''ஹுர்ரா!'' என்ற வெற்றி முழக்கத்துடன் வரவேற்றது. ஒரு கவச லாரியிலிருந்து லெனின் உரை ஆற்றினார். மக்கள் மூச்சுக் கூட விடாமல் தலைவரின் உரையை அமைதியாகக் கேட்டார்கள். ''சோஷலிஸப் புரட்சி நீடுழி வாழ்க!'' என்று லெனின் சொற்பொழிவை முடித்ததும் அங்கீகார முழக்கமும் வாழ்த்தொலிகளும் ஆர்த்தன.

மறுநாள்—ஏப்ரல் 4ந் தேதி—லெனின் தமது திட்டத்தைக் கட்சித் தலைவர்களுக்கு எடுத்துரைத்தார். லெனினுடைய ''ஆய்வுரைகள்'' (விரிவுரையின் முக்கிய அம்சங்கள்) மூன்று நாட்களுக்குப் பின் ''பிராவ்தாவில்'' பிரசுரிக்கப் பட்டன. அவற்றின் சாராம்சம் வருமாறு:

புரட்சியின் முதல் கட்டம் பூர்ஷ்வா வர்க்கத்தின் கைகளில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்ததுடன் முடிந்துவிட்டது. இரண்டாவது கட்டம் தொடங்கியிருக்கிறது. ஏழை விவசாயிகளுடன் ஐக்கியம் ஏற்படுத்திக்கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் மாறுவதுடன் இந்தக் கட்டம் முடியவேண்டும். பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி தவிர்க்க இயலாதவாறு சோஷலிஸப் புரட்சியாக வளரும்.

இந்தக் காலப் பகுதியில் கட்சி எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அதன் செயல் தந்திரம் எத்தகையதாக இருக்க வேண்டும்? முதன்மையாக அது பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தை நம்பக் கூடாது, அதற்கு ஆதரவு தரவும் கூடாது. இந்த அரசாங்கம் சமாதானமோ, உணவோ, நிலமோ, விடுதலையோ தராது என்று மக்களுக்கு முன் அதை அம்பலப்படுத்த வேண்டும். தொழிலாளர்கள், படையினர் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் தாம், ஆட்சி அதிகாரம் முழுவதையும் தம் கைகளில் எடுத்துக் கொண்ட பின் யுத்தத்துக்கு முடிவு கட்டும், நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பறித்து விவசாயிகளுக்கு அளிக்கும், நாட்டின ஒடுக்கு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும். ''ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!'' என்பதே கட்சியின் கோஷமாய் இருந்தது.

இது மேதை வாய்ந்த புரட்சிச் செயல் தந்திரமாக விளங்கியது. அப்போதைய சோவியத்துக்களில் மென்ஷிவிக்குகளும் எஸ் ஆர்களும் பெரும்பாலராய்இருந்தது லெனினுக்குக் கலக்கம் ஊட்டவில்லை. ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே அளிக்கப்பட வேண்டும் என்று கோரியதன் மூலம் போல்ஷிவிக்குகள் மக்களின் நலன்களே தங்களுக்கு முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகளின் நலன்களைப் பிரதிபலிக்கும் உண்மையான மக்கள் அரசாங்கம் அமைவதற்குத் தாங்கள் பாடுபடுவதாகவும் காட்டி விட்டார்கள். திரளான பொது மக்களிடையே பெருத்த செல்வாக்கு பெற்றிருந்த சோவியத்துக்களுக்கு ஆட்சி அதிகாரம் மாற்றப்படுவதை எதிர்ப்பது மென்ஷிவிக்குகளுக்கும் எஸ் ஆர்களுக்கும் அவ்வளவு எளிதாய் இல்லை. இந்தத் திரளான மக்கள் மென்ஷிவிக்குகள் மீதும்எஸ் ஆர்கள் மீதும் கொண்டிருந்த நம்பிக்கை, புரட்சியின் கருவிலிருந்து எழுந்த தாற்காலிக அரசாங்கத்துடன் சோவியத்துக்களின் இணக்கம் என்ற கருத்தையே தற்போதைக்குச் சார்ந்திருந்தது. காலம் செல்லச்செல்ல தாற்காலிக அரசாங்கத்தின் ஏகாதிபத்திய இயல்பும் பூர்ஷ்வா வர்க்கத்துடன் இணங்கி நடக்கும் மென்ஷிவிக்-எஸ் ஆர்

கொள்கையால் மக்களுக்கு விளைந்த தீங்கும் மேலும் மேலும் அம்பலமாகும்.

''ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!'' என்ற கோஷம் தாற்காலிக அரசாங்கத்தை உடனே கவிழ்க்கும்படி அறைகூவல் விடவில்லை. அப்போது அதை உடனடியாகக் கவிழ்ப்பது நடவாததாய் இருந்தது, ஏனெனில் அதற்கு சோவியத்துக்களின் ஆதரவு இருந்தது. எனவே, பொது மக்களிடம் போய், சோவியத்துக்கள் பூர்ஷ்வா அரசாங்கத்துடன் தொடர்பை அறுத்துக் கொண்டு ஆட்சி அதிகாரம் முழுவதையும் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விளக்குவது அவசியமாய் இருந்தது. சோவியத்துக்களில் பெரும்பான்மையான மக்கள் பிரதிநித்துவம் பெற்றிருக்கிறார்கள். இராணுவம் அவற்றின் தரப்பில் இருக்கிறது. சோவியத்துக்கள் தாங்களே ஆட்சி அதிகாரம் என்று பிரகடனம் செய்தால் அவற்றை எதிர்த்து நிற்க யாராலும் முடியாது.

இத்தகைய ஆட்சி மாற்றம் அமைதியான முறையில் நடக்க முடியும். தாற்காலிக அரசாங்கம் மக்களுக்கு எதிராகப் படைபலத்தைப் பிரயோகிக்க அஞ்சியது. தவிர, அப்போது அதனிடம் படை பலமும் இல்லை. சோவியத்துக்களின் தரப்பிலோ மக்களின் பலமும் ஆதரவும் இருந்தன. அத்தகைய நிலைமைகளில் பூர்ஷ்வா அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ளாமலே சோவியத்துக்கள் ஆட்சி அதிகாரம் முழுவதையும் தங்கள் கைகளில் குவித்துக்கொள்ள முடிந்திருக்கும்.

லெனின் நெடுந்தூரம் முன்னே நோக்கினார். ஆட்சி அதிகாரம் முழுவதும் சோவியத்துக்களின் கைகளுக்கு மாறுவதும் எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் கொண்ட அரசாங்கம் அமைவதும் இந்தக் கட்சிகளின் தன்மையை மாற்றிவிட மாட்டா: அவை முன்போலவே ஊசலாடும். பூர்ஷ்வா வர்க்கத்தின் பக்கமே சாயும். ஆனல் அவற்றின் ஊசலாட்டம் இப்போது புதிய நிலைமைகளில் நிகழும். பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கும். பூர்ஷ்வா அரசு இயந்திரமும் அதன் எல்லாம் வல்ல அதிகாரி வர்க்கமும் முறிக்கப்பட்டிருக்கும். அதன் இடத்தில் சோவியத்துக்

களின் அடிப்படையில் புதிய அரசு இயந்திரம் அமைக்கப் பட்டிருக்கும். சோவியத்துக்களில் எஸ் ஆர்களதும் மென் ஷிவிக்குகளதும் ஊசலாட்டம் உழைப்பாளி மக்கள் திரளின் கண்களுக்கு முன்னே நிகழும். போல்ஷிவிக்குகள் எஸ் ஆர்கள், மென்ஷிவிக்குகளின் நடத்தையைத் தாக்கி, புரட்சியின் முக்கியப் பணிகளை நிறைவேற்ற அவர்களுடைய அரசாங்கம் திறமை அற்றது என்பதை அம்பலப்படுத்தி இருப்பார்கள். திரளான பொது மக்கள் இணக்கக் கொள்கையினரைப் புறக் கணித்து விட்டு சோவியத்துக்களின் தலைமையை போல்ஷி விக்குகளிடம் ஒப்படைத்திருப்பார்கள். ஒரே ஆட்சி அதிகாரம் பெற்ற சோவியத்துக்களுக்குள் அதிகார மாற்றமும், ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு மாறுவதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்படுவதும் அமைதியான முறையில் நிகழ முடிந்திருக்கும்.

லெனினுடைய திட்டத்தில் சோவியத்துக்களின் நட வடிக்கைகள் பற்றிய கொள்கைத் திட்டமும் வரையறுக்கப் பட்டிருந்து:

சர்வதேசத் துறையில்—பொது ஜனநாயக சமாதானம் பெற முயலுவது.

பொருளாதாரத் துறையில் — எல்லா நிதிமனைகளையும் தேசிய உடைமை ஆக்கி, ஒன்றித்த மக்கள் நிதிமனை அமைப்பது, பெருத்த—சர்க்கரை, உலோகத் தொழில்—ஏகபோகங்களை அரசு உடைமை ஆக்குவது, எல்லா வகைப் பொருள்களின் உற்பத்தி மீதும் வினியோகத்தின் மீதும் சோவியத்துக்களின் கண்காணிப்பை ஏற்படுத்துவது.

விவசாயத் துறையில் — நிலப்பிரபுக்களின் நிலங்களை ஈட்டுத்தொகை எதுவும் கொடுக்காமல் பறிமுதல் செய்வது, நாட்டில் உள்ள நிலம் அனைத்தையும் தேசிய உடைமை ஆக்கு வது, அதாவது அதை மக்களின் உடைமையாக மாற்றுவது.

நாட்டினத் துறையில்—ஜார் காலத்திய ''மக்கள் இனங் களின் சிறைக் கூடங்களை'' தகர்ப்பது, தனிப் பிரிந்து சுதந் திர அரசுகள் அமைத்துக் கொள்வது உட்படச் சுயநிர்ணய உரிமையை எல்லா ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்கும் அளிப்பது. இத்தகைய உரிமை ஒப்புக்கொள்ளப்படுவது, ருஷ்யாவுடன் தங்கள் தொடர்புகளைத் தாமதமின்றி அறுத்துக்

கொள்ளும்படி எல்லா நாட்டினங்களையும் அழைப்பது ஆகாது. இதன் அர்த்தம், ஒவ்வொரு மக்கள் இனமும் தனது விதி பற்றிய பிரச்சினையை, சமூக வளர்ச்சி அனைத்தினதும் நலன்களையும் சோஷலிஸத்தின் பொருட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தினுடைய நலன்களையும் அடிப்படையாகக் கொண்டு தானே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்பதே. எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்றித்த அரசியல், தொழிற்சங்க, கூட்டுறவு, கல்வி ஸ்தாபனங்களில் ஒன்று சேர்வது புரட்சியின் நலன்களுக்கும் தொழிலாளர் இயக்க நலன்களுக்கும் உகந்தது என்று அதே சமயம் லெனின் வலியுறுத்தினார். எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஒன்றித்த கட்சியும் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையும் புரட்சியின் வெற்றிக்கு உத்தரவாதம் என்றார் அவர்.

இந்த எல்லா நடவடிக்கைகளும் சோஷலிஸத்தை அக்கணமே நடப்புக்குக் கொண்டுவருவது என்று அர்த்தப்படா. சோஷலிஸத்தை உடனடியாக நடப்புக்குக் கொண்டு வருவது இயலாத காரியம். இந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவது சோஷலிஸத்தை நோக்கி ஓர் அடி முன்னேறுவது ஆகும்.

லெனினுடைய ''ஆய்வுரைகளை'' ஒரு சில கட்சித் தலைவர்கள் மட்டுமே எதிர்த்தார்கள். இவர்கள் சோஷலிஸப் புரட்சியில் நம்பிக்கை கொள்ளவில்லை. மென்ஷிவிக்குகளுடன் தொடர்புகள் நிலையாக வைத்திருக்க வேண்டும் என்று அடம் பிடித்தார்கள் இவர்கள். ஏப்ரல் மாதக் கடைசியில் போல்ஷிவிக் கட்சியின் அகில ருஷ்ய மகாநாடு கூடியது. அது லெனினது திட்டத்தை உறுதிப்படுத்திற்று. மகாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் அடிப்படையில் கட்சி அனைத்தும் விரைவாக ஒருங்கு திரண்டது. அதனுடைய ஒற்றுமையும் அரசியல் முதிர்ச்சியும் புரட்சி உரமும் இதில் வெளிப்பட்டன. போல்ஷிவிக் கட்சி லெனினது கருத்துக்களைப் பொது மக்களிடையே பரப்பியது.

கட்சி மேற்கோண்ட வழி சரியானது என்பதை நிகழ்ச்சிகளின் போக்கு உறுதிப்படுத்தியது. மே மாதம் முதல்தேதி ருஷ்யாவின் உழைப்பாளி மக்கள் உழைப்புத் திருநாளை முதன்முறை பகிரங்கமாகக் கொண்டாடினர்கள். பொதுக் கூட்டங்களில் அப்போது மிக முக்கியமான உடனடிப் பிரச்சினையாய் இருந்த சமாதானம் பற்றி வெகுவாகப் பேசப்பட்டது. சோவியத்துக்களால் சமாதானம் பெற முடியும் என்றும் சோவியத்துக்களின் கைகளில் ஆட்சி அதிகாரம் முழுவதும் அளிக்கப்பட வேண்டும் என்றும் போல்ஷிவிக்குகள் யோசனை கூறினர்கள். போல்ஷிவிக்குகளின் எதிரிகள் சொல்லளவில் சமாதானத்தை ஆதரித்தார்கள், இல்லாவிட்டால் மக்கள் அவர்கள் பேச்சைச் செவி ஏற்க மாட்டார்களே. ஆனால் இணக்கக் கொள்கையினர் எவ்விதத் திண்ணமான நடவடிக்கையையும் பிரேரிக்கவில்லை. நடப்பில் அவர்கள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினர்கள். சட்டபூர்வ ஜனநாயக (பூர்ஷ்வாக்) கட்சியினரைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை.

போல்ஷிவிக்குகள் தங்கள் கருத்துக்கள் சரியானவை என்று பொது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறார்கள்

பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் யுத்தம் ஒரு வழியாக முடிந்து விடும் என்ற நம்பிக்கையுடன் வீடுகளுக்குத் திரும்பினர்கள். ஆனால் மறு நாளே தாற்காலிக அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சரின் அறிக்கை செய்தித்தாள்களில் வெளியாயிற்று. ருஷ்யா தன் கூட்டணி நாடுகளுடன் சேர்ந்து யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த ஆயத்தமாய் இருப்பதாக இந்த அறிக்கை கூறியது. ஆத்திரம் அடைந்த பல ஆயிரம் படைவீரர்கள் அரசாங்கம் இருந்த அரண்மனைக்குப் பாய்ந்து சென்றார்கள். தாற்காலிக அரசாங்கம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக ஆயுதப் பிரயோகம் செய்யத் திட்டமிட்டது. ஆனால் அவ்வாறு செய்ய அதற்கு ஏலவில்லை. தலைநகரின் பிரதான வீதியான நெவா நெடுஞ்சாலையில் மட்டும் தன் ஆதரவாளர்களைக் கொண்டு எகாதிபத்தியக் கொள்கைக்கு ஆதரவாக சிறு ஆர்ப்பாட்டம் நடத்துவிக்கத்தான் அதனால் முடிந்தது. இதற்குப் பதிலாக போல்ஷிவிக்குகளின் அழைப்புக்கு இணங்க ஒரு லட்சத்துக்கும்

மேல் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி, ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கு மாற்றப் பட வேண்டும் என்று கோரினர்கள். மாஸ்கோவிலும் உரால் பிரதேச நகரங்களிலும் பிற இயந்திரத் தொழில் மையங்களிலும் இவ்வாறே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

அரசாங்கம் ஆட்டம் காணத் தொடங்கியது. எஸ் ஆர் களும் மென்ஷிவிக்குகளும் அதன் உதவிக்கு விரைந்தார்கள். முதலில் அவர்கள் பொது மக்கள் தங்களை நிந்திப்பார்கள் என்று பயந்து பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தில் உறுப்பு ஏற்காமல் ஒதுங்கி இருந்தார்கள். ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு, தாற்காலிக அரசாங்கம் ஆபத்துக்கு உள்ளாயிருந்த சமயத்தில் அதன் நிலையை வலுப்படுத்தும் பொருட்டும் பொது மக்களிடையே அதன்மேல் மீண்டும் நம்பிக்கை ஏற்படுத்தும் பொருட்டும் இணக்கக் கொள்கையினர் அதன் உறுப்பினராகச் சேர்ந்து கொண்டார்கள். காடெட்டுகள் (அரசியல் சட்ட ரீதியான ஜனநாயகவாதிகள்), எஸ் ஆர்கள், மென்ஷிவிக்குகள் ஆகியோர் கொண்ட கூட்டணி அரசாங் கம் அமைக்கப்பட்டது.

போல்ஷிவிக்குகள் கூறியது சரி என்பதைத் தலைநகரத் தொழிலாளர்களும் படையினரும் சொந்த அனுபவத்தின் வாயிலாக நாளடைவில் தெரிந்து கொண்டார்கள். தாற் காலிக அரசாங்கத்தை நம்பக் கூடாது, இந்த அரசாங்கம் விரும்புவது யுத்தத்தையே, சமாதானத்தை அல்ல என்று போல்ஷிவிக்குகள் எச்சரித்திருந்தார்கள். இணக்கக் கொள்கை யினர் சோஷலிஸ்டுகள் அல்ல என்று போல்ஷிவிக்குகள் சொன்னதும் சரி ஆயிற்று: எஸ் ஆர்களும் மென்ஷிவிக்கு களும் பூர்ஷ்வா அரசாங்கத்தில் உறுப்பு ஏற்று அதைக் காப்பாற்றினர்கள். முன்னணித் தொழிலாளர்கள் மட்டுமே அல்ல, பெத்ரோகிராதின் தொழிலாளர், படையினரின் விரி வான பகுதியினர் எஸ் ஆர்களையும் மென்ஷிவிக்குகளையும் புறக்கணிக்கத் தொடங்கினர்கள். தொழிலாளர்கள் எஸ் ஆர், மென்ஷிவிக் பிரதிநிதிகளை சோவியத்துக்களிலிருந்து திரும்ப அழைத்து, அவர்களின் இடங்களுக்கு மக்களின் உண்மையான காவலர்களை — போல்ஷிவிக்குகளை — தேர்ந்

தெடுத்து அனுப்பினர்கள். தலைநகரின் பாட்டாளிகளும் காவல் படையினரும் போல்ஷிவிக்குகளின் பக்கம் திரும்பலா யினர்.

நாட்டின் பிற பிரதேசங்களிலும் போர் முனையிலும் விஷயம் வேறு விதமாக உருவாயிற்று. போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு எங்கும் வலுவடைந்தது என்றாலும் மொத்தத்தில் எஸ் ஆர்கள், மென்ஷிவிக்குகளின் செல்வாக்கே நாட்டில் மேலோங்கி இருந்தது. தொழிலாளர், படையினர் பிரதிநிதி சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் இதைக் காட்டியது. 1917, ஜூன் மாதம் பெத்ரோகிராதில் நடந்த இந்தக் காங்கிரஸில் மொத்தம் சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்களில் போல்ஷி விக்குகள் பத்தில் ஒரு பகுதியினரே இருந்தார்கள். எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் தாற்காலிக அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கும்படி காங்கிரஸ் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்கள். பூர்ஷ்வா வர்க்கத்துடன் கூட் டணி அமைக்காமல் நாட்டை நிர்வகிப்பது இயலாது என்று அவர்கள் நிரூபிக்க முயன்றார்கள். ''தனியே அரசை நிர் வகிக்க இணங்கும் கட்சி எதுவும் இல்லை'' என்று கூறினார் ஒரு மென்ஷிவிக் தலைவர். நிசப்தம் நிலவிய ஹாலில் திடீரென நம்பிக்கையுடன் முழங்கிற்று ஒரு குரல்: ''இருக்கிறது அத்தகைய கட்சி!'' என்று. ஹால் திடுக்கிட்டது. இத்தகைய பொறுப்பை ஏற்கத் துணிந்தவர் யார் என்று அறிய எல்லோ ருக்கும் ஆவல் உண்டாயிற்று. இவ்வாறு கூறியவர் லெனின். பேச அனுமதி பெற்று, ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவி யத்துக்கள் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்னும் போல்ஷிவிக்குகளின் யோசனையை லெனின் விளக்கினார். லெனினது பேச்சின் பாதிப்பால் காங்கிரஸின் தொழிலாளர் பிரதிநிதிகளில் பலர் ஊசலாடினார்கள். ஆயினும் இணக்கக் கொள்கையினர் பெரும்பான்மையைப் பயன்படுத்திக் கொண்டு, பூர்ஷ்வாக்களுடன் இணங்கிச் செயல்படும் கொள் கையை ஆதரிக்கும் தீர்மானத்தைப் பிரேரித்துக் காங்கிரஸின் ஏற்பைப் பெற்றார்கள். காங்கிரஸ் மேற்கொண்ட நிலை உழைப்பாளிகளின் மனநிலைக்குப் பொருந்தவில்லை என்று அதற்குக் காட்ட போல்ஷிவிக்குகள் முடிவு செய்தார்கள்.

ஜூன் மாதம் 10ம் தேதி பெத்ரோகிராதில் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

போல்ஷிவிக்குகள் ஆட்சி மாற்றம் நிகழ்த்த ஏற்பாடு செய்வதாக இணக்கக் கொள்கையினர் பழிதூற்றத் தொடங்கினர்கள். குறித்த நாளுக்கு சரியாக முந்திய தினம் காங்கிரஸ் ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதித்து விட்டது. அத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வது! காங்கிரஸின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுப்பதா? அப்படிச் செய்தால் அது சோவியத்துக்களுடன் மோதுவதாக அர்த்தப்படும். காங்கிரஸின் ஆணைக்குப் பணிவதா? ஆனால் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. லட்சோபலட்சம் மனிதர்களைத் தடுத்து நிறுத்துவது கடினமாய் இருந்தது.

என்னதான் கடினமாய் இருந்தாலும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ரத்து செய்வது என்று கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானித்தது. ஒரு ரெஜிமெண்டோ ஒரு தொழிற்சாலையோ கூட ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை. போல்ஷிவிக்குகளின் மாபெரும் செல்வாக்கை இது காட்டியது. தொழிற்சாலைகளைப் பார்வையிட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள், ஆர்ப்பாட்டம் தடை செய்யப்பட்டதால் தொழிலாளர்கள் மிகவும் அதிருப்தி கொண்டிருப்பதையும் ஊர்வலம் கிளம்பத் துடிப்பதையும் நேரில் கண்டு கொண்டார்கள். தொழிலாளர்களின் அதிருப்தி மேலும் ஆழ்ந்ததாகிவிடும் என்று பயந்து, ஆர்ப்பாட்டத்தை ஜூன் 18ந் தேதி நடத்துவது என்றும் ஆனால் தாற்காலிக அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை தெரிவிப்பதே அதன் நோக்கமாய் இருக்கும் என்றும் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது.

போல்ஷிவிக்குகள் தங்கள் கட்சியின் ''ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே! என்ற கோஷத்துடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும்படி உழைப்பாளிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். குறித்த நாள் அன்று சுமார் ஐந்து லட்சம் தொழிலாளர்களும் படையினரும் ஊர்வலம் புறப்பட்டார்கள். மிகப் பெரும்பான்மையினர் போல்ஷிவிக் கோஷத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். மிகச் சிறு கும்பல் மட்டுமே தாற்காலிக அரசாங்கத்தின் மேல்

''நம்பிக்கை'' இருப்பதாகக் கூறும் போஸ்டரை ஏந்தியவாறு நடந்தது. ஆனால் ஆட்சி அதிகாரம் முழுவதும் சோவியத்துக் களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரிய ஆர்ப் பாட்டக்காரர்களின் கடலில் இந்தக் கும்பல் எங்கோ அமிழ்ந்து விட்டது. தலைநகரத் தொழிலாளி வர்க்கமும் காவற் படையும் போல்ஷிவிக்குகளுக்கு ஆதரவாக, பூர்ஷ்வா அர சாங்கத்துக்கு எதிராக, இணக்கக் கொள்கையினருக்கு எதிராகத் தங்கள் சித்த உறுதியை வெளிப் படையாகவும் தீர்மானமாகவும் காட்டி விட்டன.

போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு வர வர அதிகரிப்பது அரசாங்கத்தை மேலும் மேலும் கலவரத்துக்கு உள்ளாக் கியது. பூர்ஷ்வா வர்க்கத் தலைவர்கள் புரட்சி வளர்ச்சிக்கு எதிராகக் கைகண்ட சாதனம் ஒன்றைப் பயன்படுத்தத் திட்ட மிட்டார்கள்—போர் முனையில் தாக்குதல் தொடங்குவதன் வாயிலாகப் புரட்சி எழுச்சியை ஒடுக்க அவர்கள் முடிவு செய் தார்கள். ருஷ்யாவின் கூட்டாளி நாடுகளான பிரிட்டனும் பிரான்ஸும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் ஜெர்மனிக்கு எதிராகத் தீவிர இராணுவ நடவடிக்கை எடுத்துக் கொள் ளும்படி கோரின. பூர்ஷ்வா வர்க்கம் பின்வருமாறு கணக் கிட்டது: போர் முனையில் தாக்குதல் வெற்றி அடைந்தால் அரசாங்கத்தின் அதிகாரம் வலுப்படும், மக்கள் இயக்கத்தை பலத்தினால் ஒடுக்கி நசுக்குவது சாத்தியம் ஆகும். தாக்கு தோல்வி அடைந்தாலோ, அதற்கு போல்ஷிவிக்குகளே பொறுப்பாளிகள், யுத்தத்தை எதிர்ப்பதன் மூலம் அவர்கள் இராணுவத்தைச் சிதைக்கிறார்கள் என்று பழி சாட்டி, போல்ஷிவிக் கட்சியைத் தாக்கி நொறுக்கிவிடலாம். ஆர்ப் பாட்டம் நடக்கும் நாளிலேயே தாக்குதலும் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டது. தாக்குதல் சோவியத்துக்களின் காங்கிரஸின் ஒப்புதல் பெற்றது என்று காட்ட இணக்கக் கொள்கையினர் விரும்பினர்.

இரட்டை ஆட்சியின் முடிவு

ஜூன் 18ந் தேதி, பெத்ரோகிராத் உழைப்பாளிகள் அனைவரும் அரசாங் கத்துக்கும் யுத்தத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திக் கொண்டிருந்த போது, அதே அரசாங்கத்தின் ஆணைப்படி படையினர் தாக்குப் போருக்கு

அனுப்பப்பட்டார்கள். இது பகிரங்கமான துர்ச்சாகசச் செயல். தாக்குதல் படு தோல்வியில் முடிந்தது. பகைவர்கள் எதிர்த் தாக்கு தொடங்கி, நிலப் பரப்பையும் போர்த் தள வாடங்களையும் கைப்பற்றி, போர்க்கைதிகளையும் பிடித்துக் கொண்டார்கள். தாற்காலிக அரசாங்கத்தின் துரோகச் செயலினது விளைவாக ருஷ்யா கொல்லப்பட்டவர்களும் காயமடைந்தவர்களுமாக ஏறக்குறைய அறுபதாயிரம் பெயரை இழந்தது.

தாக்குதல் தோல்வியில் முடிந்த செய்தி பெத்ரோகிராதை எட்டியதும் எட்டாததுமாக, பூர்ஷ்வா வர்க்கம் திட்ட மிட்டபடி செயல் ஆற்றத் தலைப்பட்டது. அதன் அச்சு வெளியீடுகளும் இணக்கக் கொள்கையினரின் செய்தித்தாள் களும் போல்ஷிவிக்குகள் தங்கள் யுத்த எதிர்ப்புப் பிரசாரத் தினுல் தாக்குதலை இடைமுறித்து விட்டார்கள் என்று ஒரே குரலில் ஓலமிடத் தொடங்கின. காடெட்டுகள் தாங்கள் அர சாங்கத்திலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அறிக்கை விடுத்தார்கள். இதன் மூலம் அவர்கள் எஸ் ஆர், மென்ஷிவிக் தலைவர்களை மிரட்ட விரும்பினர்கள்: ஒன்று தனியாக ஆட்சி நடத்துங்கள், அல்லது, தொழிலாளர்களிடம் உள்ள ஆயுதங் களைப் பறித்துக் கொள்வது, புரட்சி மனப்பான்மை கொண்ட படையினரைப் பெட்ரோகிராதிலிருந்து வெளியேற்றுவது, போல்ஷிவிக் கட்சிக்குத் தடை விதிப்பது என்ற, புரட்சியை ஒடுக்குவதற்கான எங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளுங் கள்.

தலைநகரத் தொழிலாளர்களும் படையினரும் கிளர்ச்சி அடைந்தார்கள். ஜூன் மாத ஆர்ப்பாட்ட நாளில் வெளி யிடப்பட்ட தங்கள் விருப்பத்தைத் தாற்காலிக அரசாங்கம் மதிக்கவில்லை, தன் கொள்கையையே தொடர்ந்து கடைப் பிடித்தது என்பதால் அவர்கள் ஆத்திரம் கொண்டார்கள். திரளான பொது மக்களின் ஆழ்ந்த அதிருப்தி எதேச்சையாக வெளிப்பட்டது: தலைநகரில் வைக்கப்பட்டிருந்த மெஷீன்கன் ரெஜிமெண்டு வீரர்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதந் தாங்கிய ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மானித்தார்கள். மெஷீன்கன் படையினர் தொழிற்சாலைகளுக்கும் நகர்க் காவல் படை ரெஜிமெண்டுகளுக்கும் தங்கள் பிரதிநிதிகளை

அனுப்பி, ஆர்ப்பாட்டத்தில் சேர்ந்து கொள்ள அழைத்தார்கள். எங்கும் அவர்களுக்கு ஆதரவு வாக்களிக்கப்பட்டது.

போல்ஷிவிக் கட்சி இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிராகக் கருத்து தெரிவித்தது. அரசாங்கத்தைக் கவிழ்க்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள இன்னும் நேரம் வரவில்லை, நாட்டில் நிலைமைகள் அதற்குப் பக்குவப்படவில்லை. தலைநகரில் பலம் போதிய அளவு இருந்தது, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது சாத்தியமாய் இருந்தது, ஆனால் அதை நிலை நிறுத்தி வைத்துக் கொள்ள முடியாது என்று தோன்றியது. நாடும் போர் முனையும் இன்னமும் அரசாங்கத்தையும் இணக்கக் கொள்கையினரையும் நம்பி இருந்தன. அவர்களோடு சேர்ந்து அவை கிளர்ச்சியை எதிர்க்கும். எனவே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள மறுக்கும்படிக் கட்சி பொது மக்களைக் கேட்டுக் கொண்டது. ஆயினும் கொந்தளிப்பு அடைந்திருந்த மக்களைக் கட்டுக்குள் வைத்திருப்பது முடியாது என்று தோன்றியது. எல்லோரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளத் துடித்தார்கள்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைத் தலைமை இன்றி விடுவது பூர்ஷ்வாக் கண்ணியில் அதைச் சிக்க வைப்பது ஆகும்: மக்கள் திரள் ஒழுங்கீனமாக ஆர்ப்பாட்டம் நடத்தும், அதன்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம் என்றே எதிர்பார்த்துக் காத்திருந்தது பூர்ஷ்வா வர்க்கம். ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமை ஏற்று அதை ஒழுங்கமைந்த அமைதியான ஊர்வலமாக மாற்றுவது என்று போல்ஷிவிக் கட்சி மத்தியக் கமிட்டி முடிவு செய்தது.

ஜூன் மாதம் 4ந் தேதி ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் ''ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!'' என்ற கோஷத்துடன் ஊர்வலம் வந்தார்கள். செங்காவல் படைப் பிரிவுகளும் புரட்சிகரக் கடற்படையினரும் இராணுவத்தினரும் புரட்சி எதிரிகளின் தாக்குதலிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களைக் காத்தனர். பூர்ஷ்வாக்களும் எஸ் ஆர்-மென்ஷிவிக் தலைவர்களும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் புரட்சியின் முக்கிய சக்திகளை ஒழிக்கவும் திட்டமிட்டிருந்தார்கள் என்பது வெளிப்

1917, ஜூலை 4ந் தேதி பெட்ரோகிரதில் நடந்த அமைதியான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் மீது பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தின் ஆணைப்படி படைவீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்கள்

பட்டது. முனைமுகத்திலிருந்து அழைக்கப்பட்டிருந்த தொழிலாளர்கள் மீதும் கடற்படையினர் மீதும் சுட்டார்கள். அரசாங்கப் படைப் பிரிவுகள் ''பிராவ்தா'' அலுவலகத்தையும் தொழிலாளர்களின் நிதியுதவியால் வாங்கப்பட்டிருந்த அச்சகத்தையும் தாக்கித் தகர்த்தன. யூன்கெர்களின் (இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள்) விசேஷப் படைப் பிரிவுக்கு லெனினைக் கண்டுபிடித்துக் கொன்றுவிடும் பொறுப்பு தரப்பட்டது. லெனினது இருப்பிடம் சோதனை இடப்பட்டது. ஆனால் கட்சி லெனினை மறைவிடத்தில் ஒளித்து விட்டது. முன்பு ஜார் ஆட்சிக் காலத்தில் போலவே அவர் தலை மறைவாக வசித்து வேலை செய்ய நேர்ந்தது. திரளான மக்கள் மீது அடக்குமுறை தொடங்கியது. பல பிரபல போல்ஷிவிக்குகள் கைது செய்யப்

பட்டனர். தொழிலாளர்களிடம் இருந்த ஆயுதங்கள் பறித்துக் கொள்ளப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ரெஜிமெண்டுகள் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டன. புரட்சி மனப்பான்மை கொண்ட படைவீரர்கள் போர் முனைக்கு அனுப்பப்பட்டார்கள். சேனையில் மரண தண்டனை மறுபடி நடப்புக்குக் கொண்டுவரப்பட்டது. கட்டளைகளை நிறை வேற்ற மறுத்ததற்காகப் பல ஆயிரம் படைவீரர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் பலர் சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

ஆட்சி அதிகாரம் முழுவதும் பூர்ஷ்வா வர்க்கத்தின் கைகளுக்கு மாறிவிட்டது.

எழுச்சி தொடங்க முடிவு

நாட்டின் மாறிய சூழ்நிலையில் போல்ஷிவிக்குகளின் முந்திய செயல் தந்திரம் புதிய நிலைமைகளுக்குப் பொருந்தவில்லை. புதிய செயல் தந்திரத்தை வரையறுத்தது போல்ஷிவிக் கட்சியின் ஆறுவது காங்கிரஸ். இது பெத்ரோகிராதில் ஆகஸ்டு மாதம் கூட்டப்பட்டது. காங்கிரஸ் அரைச் சட்டபூர்வ நிலைமைகளில் நிகழ்ந்தது. அரசாங்கம் பிரதிநிதிகளைக் கைது செய்துவிடாமல் இருக்கும் பொருட்டு கூட்ட இடத்தை அனேக முறை மாற்ற நேர்ந்தது.

லெனின் காங்கிரஸில் நேரே கலந்து கொள்ளவில்லை. தாற்காலிக அரசாங்கத்தின் உளவாளிகளிடமிருந்து தலை மறைவாக அவர் நகருக்கு வெளியே ரஸ்லீவ் ஏரியின் அக்கரையில் வசித்து வந்தார். ஆனலும் எதார்த்தத்தில் லெனினே காங்கிரஸை வழி காட்டி நடத்தினர். அவருடைய யோசனைகளும் உத்தரவுகளுமே காங்கிரஸ் தீர்மானங்களின் அடிப்படையாக விளங்கின.

இரட்டை ஆட்சி முடிந்து விட்டது. அதிகாரம் அனைத்தும் படைத்தலைவர்கள் கைகளுக்கு மாறிவிட்டது. நிலைமையின் நிர்ணயகர்த்தா ஆகி விட்டது பூர்ஷ்வா அரசாங்கம்— நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலையை இவ்வாறு வரையறுத் தார் லெனின். ஆட்சி அதிகாரத்தைச் சமாதான முறையில் தன் கைகளில் எடுத்துக் கொள்வது பாட்டாளி வர்க்கத் துக்கு முடியாது. பலவந்தமாகவே புரட்சி எதிரி அர சாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு அதைக் கைப்பற்ற முடியும்.



தாற்காலிக அரசாங்கத்தின் தொல்லைகளுக்கும் தேட்டத்துக்கும் உள்ளான லெனின், பெத்ரோகிராத் நகர்ப் புறத்தே, ரஸ்லீவ் ஏரி அருகே, ஒரு குடிசையில் மறைந்து வசித்தார்

''ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!'' என்ற கோஷமும் புதிய சூழ்நிலைக்குப் பொருந்தவில்லை. சோவியத்துக்கள் பூர்ஷ்வா அரசாங்கத்தின் பின் இணைப்பு ஆகி விட்டன. சுட்டுக் கொல்லப்பட்ட தொழிலாளர்கள், படையினரின் இரத்தத்தால் எஸ் ஆர்-மென்ஷிவிக் தலைவர்கள் கைகளைக் கறைப்படுத்திக் கொண்டுவிட்டார்கள். கொலைகாரர்கள் கைகளில் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கும்படி எப்படிக் கேட்க முடியும்? ஆயினும் இதனால் சோவியத்துக்களில் வேலை செய்யக் கட்சி மறுக்கிறது என்று அர்த்தம் ஆகாது. இப்போதும் நாம் சோவியத்துக்களுக்கே ஆட்சி அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று கோருகிறோம், ஆனால் தற்போதைய சோவியத்துக்களுக்கு அல்ல, புரட்சியின் நாசகாரிகள் அகற்றப்பட்டுத் துப்புரவாக்கப்பட்ட சோவியத்துக்களுக்கு. சோவியத்துக்களை விட்டு அகலாதிருக்கும்படி மட்டும் அல்ல, அவற்றைத் தங்கள் தரப்புக்குக்

கொண்டுவரும் பொருட்டு வேலையைத் தீவிரப்படுத்தும்படியும் காங்கிரஸ் போல்ஷிவிக்குகளைக் கேட்டுக் கொண்டது.

ஆயுத எழுச்சி நடத்தும் போக்கைக் காங்கிரஸ் மேற்கொண்டது. ஆனால் இதன் அர்த்தம் எழுச்சியை உடனே தொடங்க வேண்டும் என்பது அல்ல. நிலைமைகள் முதிர்ந்து விடும் போதே, புரட்சி மீண்டும் ஏற்றம் பெறும் போதே, மிக நிர்ணயகரமான நடவடிக்கைகளின் இன்றியாமையை மக்கள் திரள் நன்கு புரிந்து கொண்ட பிறகே எழுச்சியை ஒழுங்கமைத்து நடத்த முடியும்.

லெனினுடைய''ஏப்ரல் ஆய்வுரைகளில்''சூத்திர வடிவில் வெளியிடப்பட்ட கட்சியின் பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தைக் காங்கிரஸ் உறுதிப்படுத்தியது. தீர்மானத்தில் பின்வருமாறு கூறப்பட்டது: ருஷ்யாவின் பொருளாதாரம் அகாதத்தில் வீழும் நிலையில் இருக்கிறது. மக்கள் ஆடைகளும் காலணிகளும் இன்றிப் பஞ்சைகளாய் வாடியவருகிறார்கள். உழைப்பாளிகள் பட்டினி கிடக்கிறார்கள். போர்முனையில் துருப்புக்களுக்கு வயிறார உண்ணக் கிடைப்பதில்லை. பணத்தின் மதிப்பு ஆபத்தான முறையில் சரிந்து கொண்டிருக்கிறது. வெளிநாட்டு மூலதனத்தைச் சார்ந்திருப்பது தீவிரமாகி விட்டது. அன்னிய ஏகாதிபத்தியவாதிகள், தங்கள் காலனிகளில் எப்படி நடந்துகொள்வது வழக்கமோ அப்படியே ருஷ்யாவில் நடந்து கொள்கிறார்கள். மாபெரும் ருஷ்ய நாடு ஏகாதிபத்திய வல்லரசுகளால் பங்கிட்டுக் கொள்ளப் படும் அபாயத்துக்கு உள்ளாகி இருக்கிறது. பூர்ஷ்வா அரசாங்கத்தை, யுத்தமும் பஞ்சமும் விளைக்கும் அரசாங்கத்தைக் கவிழ்த்துவதும் ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தினுடையவும் ஏழை விவசாயிகளுடையவும் கைகளுக்கு மாற்றப் படுவதுமே நாட்டைக் காப்பதற்கான ஒரே வழி. இந்த ஆட்சி தான் விபத்து நேராது தவிர்க்கவும் தேசியப் பொருளாதாரத்தைச் சீரமைக்கவும் நாட்டை முன்னேற்றவும் வல்லது.

சோஷலிஸப்புரட்சிக்கு ஏற்பாடு செய்கையில் போல்ஷிவிக் கட்சி, சோவியத் ஆட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் நிலைநாட்டுவதற்கானபோராட்டக் கொள்கைத் திட்டத்தை ஆதரித்த புரட்சிகர-மார்க்ஸீயச் சக்திகள் எல்லாவற்றையும் தன் அணிகளில் சேர்த்துக் கொண்டு

தன்னைச் சுற்றி ஒற்றுமையாக ஒன்று திரட்டியது. இந்தக் காரணத்தால், திரோத்ஸ்கியின் தலைமையில் இயங்கிய குழு ஆறுவது காங்கிரஸில் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்தக் குழு லெனினது கொள்கை சரியானது என்று ஒப்புக் கொண்டு கட்சியின் கருத்துக்களுக்காகப் போராடுவதாக வாக்குறுதி அளித்தது. ஆனால் கட்சியில் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்கள் எல்லோருமே—முதன்மையாகத் திரோத்ஸ்கி —தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. திரோத்ஸ்கி விரைவிலேயே கட்சிக்கு எதிராகப் போராட்டத்தை மீண் டும் தொடங்கிவிட்டார்.

திரளான பொது மக்களிடையே, தொழிலாளர்கள், படைவீரர்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாதர்கள் ஆகி யோருக்கிடையே விரிவாக வேலை தொடங்கும்படி காங்கிரஸ் கட்சியைப் பணித்தது. காங்கிரஸ் மக்கள் அனைவருக்கும் அறிக்கை விடுத்தது. பூர்ஷ்வா சர்வாதிகாரத்தை ஒழித்து, பாட்டாளி வர்க்கத்தினதும் ஏழை விவசாயிகளதும் சர்வாதி காரத்தை நிலைநாட்டும் பொருட்டுச் சக்தியை எல்லாம் திரட்டும் படி அறைகூவி அழைத்தது.

பிரதிநிதிகள் காங்கிரஸின் தீர்மானங்களால் உத்வேகம் பெற்று, நிர்ணயகரமான போருக்குத் திரளான பொது மக்களை ஆயத்தம் செய்யத் தங்கள் வட்டாரங்களுக்குச் சென்றார்கள்.

பூர்ஷ்வா வர்க்கம் உள்நாட்டுப் போரைத் தொடங்குகிறது

பூர்ஷ்வா வர்க்கம் நாட்டில் ஆட்சி அதிகாரம் முழுவ தையும் கைப்பற்றிக் கொண்டு போல்ஷிவிக்குகளைப் பழி வாங்குவதுடன் சோவியத்துக்களையும் கலைத்துவிடத் தீர்மானித்தது. எல்லா வற்றையும் பழைமையை நோக்கித் திருப்புவது பற்றி பூர்ஷ்வாத் தலைவர் கள் வெளிப்படையாகப் பேசினார்கள். ஒரு லட்சாதிபதி, பட்டினியின் கொடுங் கரத்தால் புரட்சியை நசுக்கும்படி யாரும் கேட்டிராத துடுக்குடன் அறைகூவல் விடுத்தான். ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் மூடிவிட்டுத் தொழிலாளர்களை வீதியில் விரட்ட வேண்டும் என்பது இந்த அறைகூவலின் பொருள். தொழிலதிபர்கள் அவ்வாறே செய் தார்கள்: லட்சோபலட்சம் தொழிலாளர்கள் வேலையற்றவர்

கள் ஆகி விட்டார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களில் பட்டினி புகுந்தது.

பாட்டாளி வர்க்கத்தின் எதிர்ப்பு முறிக்கப் பட்டுவிட்டது என்றும் போல்ஷிவிக் கட்சி அடக்குமுறைகள் காரணமாக வலு இழந்து விட்டது என்றும் எண்ணி, புரட்சி எதிரிச் சக்திகள் இராணுவ சர்வாதிகாரியிடம் ஆட்சியை ஒப்படைக்கவும் ருஷ்யாவில் புரட்சி வென்று பெற்ற நன்மைகளை எல்லாம் ஒழித்துவிட்டு மீண்டும் முடியரசை நிலை நிறுத்தும் பணியை இந்த சர்வாதிகாரியின் பொறுப்பில் விடவும் முடிவு செய்தன. ருஷ்ய பூர்ஷ்வா வர்க்கமும் அன்னிய ஏகாதிபத்தியங்களும் இராணுவத் தலைமை தளகர்த்தன் ஜெனரல் கர்னீலவை சர்வாதிகாரி பதவிக்குத் தேர்ந்தெடுத்தன. ஆகஸ்டு மாதக்கடைசியில் கர்னீலவ் குதிரைப் படைப் பிரிவையும் வேறு பல படைப் பிரிவுகளையும் போர் முனையிலிருந்து அகற்றிப் பெத்ரோகிராதுக்கு அனுப்பினன். ''சோவியத்துக்களைக் கலைத்து விரட்டப் போகிறேம்'' என்று பெருமை அடித்துக் கொண்டார்கள் இராணுவ அதிகாரிகள்.

தாற்காலிக அரசாங்கத்தினரும் அரசாங்கத் தலைவன் கேரென்ஸ்கியும் ஜெனரல்களின் சதியாலோசனை பற்றி அறிந்திருந்தார்கள், நடப்பில் அதற்கு உதவினர்கள். அதைத் தடுப்பதற்கு ஒன்றும் செய்யாதிருந்தார்கள். ஆனால் புரட்சி எதிர்ப்பின் பெருத்த அளவைக் கண்டு, ஜெனரல்கள் போல்ஷிவிக்குகளைத் தூக்கிலிடுவதுடன் நில்லாமல் எஸ் ஆர்களையும் மென்ஷிவிக்குகளையுங்கூட நொறுக்கி விடுவார்கள் என்று இணக்கக் கொள்கையினர் புரிந்து கொண்டார்கள். கேரென்ஸ்கி அரண்டு போனன். பொது மக்கள் புரட்சியைக் காக்கும் பொருட்டுக் கர்னீலவுக்கு எதிராகக் கிளம்பப் போவதைத் தெரிந்து கொண்டு அவன் அவர்களை உதவிக்கு அழைக்கலானன். எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் தாற்காலிக அரசாங்கத்தைக் காக்க வேண்டும் என்று மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட முயன்றார்கள்.

லெனின் தலை மறைவாய் இருந்தார். புரட்சி எதிரிகளின் சூழ்ச்சிகளையும் இணக்கக் கொள்கையினரின் ஏய்ப்பு நடவடிக்கைகளையும் அவர் கூர்ந்து கவனித்து வந்தார். ஜெனரல்களின் புரட்சி எதிர்ப்புத் தாக்குதலை எதிர்த்துப் போராடுவது அவசியமாய் இருந்தது. ஆனால் கேரென்ஸ்கியின் அரசாங்

கத்தைக் காப்பது புரட்சி எதிரிகளின் சூழ்ச்சிகளுக்குத் துணை செய்வதாக முடியும். லெனின் அறிவார்ந்த செயல் தந்திரத்தை முன் வைத்தார்: திரளான பொது மக்களைக் கர்னீலவை எதிர்த்துப் போராட அழைப்பது, ஆனால் தாற்காலிக அரசாங்கத்தைக் காப்பதற்காக அல்ல, மாறாக, ஜெனரல்களின் கலகக் கிளர்ச்சிக்கு உடந்தையாய், அதற்குப் பொறுப்பாளியாய் இருந்தது அரசாங்கமே என்பதை அம்பலப்படுத்துவதற்காக.

போல்ஷிவிக்குகளின் அழைப்பை ஏற்று, திரளான பொது மக்கள் ஜெனரல்களின் கலகக் கிளர்ச்சியை முறியடிக்க ஒன்று திரண்டு எழுந்தார்கள். செங்காவல் படை அணிகள் எங்கும் மும்முரமாகத் திரட்டப்பட்டன. பெத்ரோகிராத் செங்காவல் படையினரும் புரட்சி இராணுவத்தினரும் கர்னீலவ் கும்பலின் தாக்குதலைத் தடுத்து முறியடிக்கும் பொருட்டுப் பெத்ரோகிராத் நகரில் புகும் சாலைகளுக்குச் சென்றார்கள். குதிரைப் படைப்பிரிவின் முன்னேற்றம் நிறுத்தப்பட்டது. போல்ஷிவிக்குகள் குதிரைப் படையினருக்கு ஜெனரல்களின் சூழ்ச்சிகளை விளக்கினார்கள். படைவீரர்கள் தங்கள் அதிகாரிகளுக்குப் பணிய மறுத்து விட்டார்கள். கர்னீலவையும் அவனுடைய நெருங்கிய கூட்டாளிகளையும் தாற்காலிக அரசாங்கம் வேறு வழியின்றிக் கைது செய்தது. பூர்ஷ்வா வர்க்கத்தால் தொடங்கப்பட்ட உள்நாட்டுப் போர் படுதோல்வியில் முடிந்தது. கிலியடித்துப் போயிருந்த இணக்கக் கொள்கையினர் சுதாரித்துக் கொண்டு மறுபடி பூர்ஷ்வாத் தொழுவத்தில் புகுந்து கொண்டார்கள்: புரட்சியை மேலும் வளர விடாமல் தடுக்கும் பொருட்டுக் கேரென்ஸ்கி புதிய கூட்டணி அரசாங்கம் அமைத்தான். காடெட்டுகள் அரசாங்கத்தில் பங்குகொண்டார்கள். ஆனால் அரசாங்கத்தின் இந்தக் கடைசி அமைப்பு சிறிது காலமே உயிர்த்திருந்தது.

ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு ஆயத்தம்

கர்னீலவ் கும்பலை எதிர்த்து நடந்த போராட்டத்தில் சோவியத்துக்கள் புத்துயிர் பெற்றன. ஆகஸ்டு 31ந் தேதி, பெத்ரோகிராத் சோவியத் போல்ஷிவிக்குகளின் ஒரு தீர்மானத்தை அங்கீகரித்தது. ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்

என்று கோரியது இந்தத் தீர்மானம். செப்டெம்பர் 5ந் தேதி இதே மாதிரித் தீர்மானத்தை மாஸ்கோ சோவியத் அங்கீகரித்தது. ஒன்றன்பின் ஒன்றுக மற்ற சோவியத்துக்களும் பெத்ரோகிராத், மாஸ்கோ தீர்மானத்தில் சேர்ந்துகொண்டன. ருஷ்யாவின் திரளான உழைப்பாளி மக்கள் பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் போல்ஷிவிக்குகளுத் தவிர எல்லா அரசியல் கட்சிகளையும் ஆட்சியில் பார்த்து விட்டார்கள். பூர்ஷ்வா வர்க்கப் பிரதிநிதிகளான காடெட்டுகளின் ஆட்சியை அவர்கள் அனுபவித்திருந்தார்கள். காடெட்டுகளும் எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் சேர்ந்த கூட்டணியின் ஆட்சியை அவர்கள் அறிந்திருந்தார்கள். எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் சோவியத்துக்களில் பெரும்பாலராய் இருந்த காலத்திலேயே இந்தக் கட்சிகள் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு இணங்கிப் போகும் கட்சிகள் என்பதைத் திரளான பொது மக்கள் நடப்பில் கண்டு தெரிந்து கொண்டிருந்தார்கள். புரட்சியின் போக்கில் இந்தக் கட்சிகள் திவாலாகி விட்டன. புரட்சியின் பால் தங்களுக்கு உள்ள வெறுப்பை அவை வெளிக் காட்டி விட்டன, மக்களுக்கு சமாதானமும் உணவும் நிலமும் விடுதலையும் வழங்க மறுத்து விட்டன. திரளான உழைப் பாளி மக்கள் இணக்கக் கொள்கைக் கட்சிகளைப் புறக்கணித்தனர்.

இணக்கக் கொள்கையினருடைய செயல் தந்திரம் முழுவதும் செல்லாக் காசு ஆகிவிட்டதை இந்தக் கட்சிகளின் குழப்பம் துலக்கமாகக் காட்டியது. பிப்ரவரிப் புரட்சிக்குப் பிறகு, குட்டி பூர்ஷ்வா அலை எஸ் ஆர்களையும் மென்ஷிவிக்குகளையும் ஆட்சிக்குக் கொண்டுவந்ததும் அவர்களுடைய கட்சிகள் விரைவாக வளரத் தொடங்கின: அவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை பல லட்சங்கள் ஆயிற்று. புரட்சியின் போக்கில் இணக்கக் கொள்கையினர் கட்சியின் உண்மைச் சொரூபம் விரிவான பொது மக்கள் திரளுக்கு மேலும் மேலும் தெளிவாகப் புலப்படலாயிற்று. எனவே இவற்றின் வளர்ச்சி நின்று விட்டது. அது மட்டும் அல்ல, இந்தக் கட்சிகளின் சாதாரண உறுப்பினர்கள், பூர்ஷ்வா வர்க்கத்துடன் எஸ் ஆர்-மென்ஷிவிக் தலைவர்கள் ஒத்துழைத்ததால் ஆத்திரம் அடைந்து கட்சிகளை விட்டு விலகத் தொடங்கினர்கள்.

கர்னீலவ் கும்பலின் முறியடிப்புக்குப் பின் இணக்கக் கொள்கையினர் கட்சிகளின் சிதைவு மேலும் தீவிரம் அடைந்தது. 1917 இலையுதிர் காலத்துக்குள் எஸ் ஆர்களின் கட்சி பிளவுபட்டது. விவசாயிகளுக்குள் வர்க்கப் போராட்டம் வலுப்பட்டது. பணக்கார விவசாயிகளான குலாக்குகள் புரட்சியை அஞ்சி, பூர்ஷ்வா அரசாங்கத்தை ஆதரித்தார்கள். இவர்களுடைய நலன்களை வெளியிட்டார்கள் பூர்ஷ்வா அரசாங்கத்தில் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பிய வலது சாரி எஸ் ஆர்கள். விரிவான திரள்களான விவசாயிகள் முழுமையாகப் புரட்சியின் பக்கம் திரும்பி விட்டார்கள். நாட்டில் நடந்த விவசாயிக் கிளர்ச்சிகள் இந்தத் திருப்பத்தைக் காட்டின. விவசாயிகள் சமூகத்தின் இந்தத் திருப்பத்தை எஸ் ஆர்கள் கட்சியின் கணிசமான பகுதி பிரதிபலித்தது: விவசாயிகளின் நலன்களுக்குத் துரோகம் செய்த வலதுசாரியினருடன் தொடர்பைத் துணித்துக் கொண்டு இந்தப் பகுதி இடதுசாரி எஸ் ஆர்களின் சுதந்திரக் கட்சியாகத் தனிப் பிரிந்தது. புதிய கட்சி புரட்சியின் அடிப்படைப் பிரச்சினையில் —ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களுக்கு மாற வேண்டும் என்பதில்—போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்கும் போக்கை மேற்கொண்டது.

மென்ஷிவிக்குகளின் கட்சியும் சிதறத் தொடங்கியது. சமூக-ஜனநாயக சர்வதேசீயவாதிகள் என்ற பெயர் சூட்டிக் கொண்ட குழு அந்தக் கட்சியிலிருந்து தனிப் பிரிந்தது, இந்தக் குழுவினரும் போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்க இசைந்தார்கள்.

போல்ஷிவிக்குகள் நாட்டில் எல்லாவற்றிலும் மதிப்பும் செல்வாக்கும் மிக்க சக்தியாகத் திகழ்ந்தார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ளாத எஸ் ஆர்-மென்ஷிவிக் பிரதிநிதிகளைத் தொழிலாளர்களும் படைவீரர்களும் சோவியத்துக்களிலிருந்து வெளியேற்றத் தொடங்கினர்கள். அவர்களுடைய இடங்களுக்கு, மக்களின் நலன்களைக் காக்க ஒத்திசைந்த முறையில் போராடுபவர்கள் என்று நிரூபித்துக் கொண்ட போல்ஷிவிக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சோவியத்துக்கள் போல்ஷிவிக் மயமாகும் கட்டம்—சோவியத்துக்கள் போல்ஷிவிக்குகளின் தலைமையின் கீழ் வரும் கட்டம்—தொடங்கியது. போல்ஷிவிக் கட்சி தொழிலாளி

வர்க்கத்தின் உழைப்பாளிகள் அனைவரதும் புரட்சிப் போராட்டத்திற்கு எல்லோராலும் ஏற்கப்பட்ட தலைவனாக மாறியது. புரட்சியின் புதிய ஏற்றம் தொடங்கியது. இது வரும் என்று கட்சியின் ஆறாவது காங்கிரஸ் முன் கூறியிருந்தது, போல்ஷிவிக்குகள் இதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். ''ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களுக்கே!'' என்ற கோஷம் மீண்டும் கட்சியின் நடைமுறை கோஷம் ஆயிற்று. ஆனால் இப்போது இது எழுச்சியின் கோஷமாக, தாற்காலிக அரசாங்கத்தை ஆயுதப் போராட்டத்தின் வாயிலாக வீழ்த்தும் கோஷமாக ஒலித்தது.

செப்டெம்பர் மாத நடுவில் லெனின் மத்தியக் கமிட்டிக்கும் பெத்ரோகிராத், மாஸ்கோக் கமிட்டிகளுக்கும் இரண்டு கடிதங்கள் எழுதினார். ஆயுதக் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய்யும்படி இவற்றில அவர் கட்சியைக் கேட்டுக் கொண்டார். சூழ்நிலை கிளர்ச்சிக்குப் பக்குவம் அடைந்து விட்டது. நாடு முழுவதிலும் சக்தி மிக்க வேலை நிறுத்த இயக்கம் பரவி வந்தது. ஏழு லட்சம் ரெயில்வே தொழிலாளர்கள் வாழ்க்கை நிலைமைகள் மேம்பட வேண்டும் என்று கோரி வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். ரெயில்வே ஊழியர் வேலை நிறுத்தத்தை அரசாங்கம் ஒருவாறு சரிக்கட்டுவதற்குள் உலோகத் தொழிலாளர்களும் தோல் தொழிலாளர்களும் வேலையை நிறுத்தி விட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து மூன்று லட்சத்துக்கும் மேல் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலைநிறுத்த இயக்கத்தின் இத்தகைய ஏற்றம் 1905 புரட்சியிலோ, 1917 பிப்ரவரிப் புரட்சிக் காலத்திலோ காணப்படவில்லை. பழைய உலகின் மீது நிர்ணயகரமான் தாக்குதல் தொடங்குவதற்கு முன் நடந்த இந்த வேலை நிறுத்தங்கள் அவற்றில் பங்கு கொண்டவர்களின் எண்ணிக்கை காரணமாக மட்டுமே சிறப்பானவையாக இல்லை. அனேக இடங்களில் தொழிலாளர்கள் முதலாளிகளை அகற்றிவிட்டு ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் தங்கள் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டார்கள். பாட்டாளி வர்க்கப் போராட்டம் மேலும் மேலும் சூடு பிடித்தது. தொழிலாளர் இயக்கம் ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்சினையை நெருங்கியது.

விவசாயிகள் போராட்டத்தின் தன்மையும் மாறிவிட்டது. நிலப் பிரபுக்கள் ஜெனரல் கர்னீலவுக்கு ஆதரவாய் இருப்பதை உழைப்பாளி விவசாயிகள் கண்டுகொண்டார் கள். கர்னீலவ் கும்பல் வெற்றி பெற்றால் தாங்கள் விடுதலை யையோ நிலத்தையோ காண இயலாது என்பது அவர்க ளுக்குப் புரிந்தது. விவசாயிகள் நிலப்பிரபுக்களை விரட்டவும் நிலத்தையும் உழவு சாதனங்களையும் கால்நடைகளையும் அவர் களிடமிருந்து பறித்துக்கொள்ளவும் பண்ணை வீடுகளுக்கு நெருப்பு வைத்து அவர்களை வெளியே கிளப்பவும் தலைப் பட்டார்கள். நாடு முழுவதிலும் விவசாயி இயக்கம் நிலப் பிரபுக்களுக்கு எதிரான பகிரங்கப் போராக வளர்ந்து விட்டது.

போர்முனையில் படைவீரர்களின் அதிருப்தி, படை யினரின் கிளர்ச்சியாகி, தாற்காலிக அரசாங்கத்துக்குக் கீழ்ப்படியப் பெருந்திரளான மக்களின் மறுப்பில் சேர்ந்து கொண்டது.

நாட்டினப் பிரதேசங்களை — உக்ரேன், பேலோருஷ்யா, மத்திய ஆசியா, காக்கேஷியா ஆகியவற்றை—சேர்ந்த உழைப்பாளிகளுக்கு இடையேயும் இயக்கத்தின் தன்மை மாறி விட்டது. ''சொந்த'' நாட்டின பூர்ஷ்வா வர்க்கம் புரட்சிக்குப் பயந்து அகில ருஷ்யப் புரட்சி எதிர்ப்புடன் கூட்டு சேரத் தயங்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட நாட்டினப் பிரதேச உழைப்பாளிகள், அகில ருஷ்யத் தொழி லாளர், விவசாயிகள் இயக்கத்துடன் ஒன்றித்த முன்னணி யாக முன்னிலும் நெருக்கமாக இணையத் தொடங்கினர்கள். அனேக நாட்டினப் பிரதேசங்களில் கடும் போராட்டம் மூண்டு கிளர்ச்சியாக வளர்ந்தது. தாஷ்கந்த் நகரில் (மத்திய ஆசியா) பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்துக்கு எதிராக வெடித்தெழுந்த கிளர்ச்சியில் திரளான உஸ்பெக், ருஷ்ய உழைப்பாளிகள் கலந்து கொண்டார்கள்.

சர்வதேசச் சூழ்நிலையும் மாறிவிட்டது. ருஷ்யாவில் புரட்சி உலக யுத்தத்தின் நிலைமைகளில் வளர்ச்சி அடைந்தது. மரணப் போரில் ஈடுபட்டிருந்த ஏகாதிபத்திய வேட்டை விலங்குகள் அந்தச் சமயத்தில் சமாதானம் பற்றி ஒப்பந்தத் துக்கு வரவும் புரட்சிகர ருஷ்யாமீது பாயவும் முடியாத

செங்காவற்படைப் பிரிவு பெத்ரோகிராத் வீதிகளில்

போர்முனையில் படையினர், ஆட்சி அதிகாரம் சோவியத்துக் களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள்

போல்ஷிவிக் கட்சி ஆயுதந் தாங்கிய
எழுச்சிக்கு ஏற்பாடு செய்கிறது

விவசாயிகளின் புரட்சிப் படைப் பிரிவு

நிலையில் இருந்தன. தவிரவும் ருஷ்யப் புரட்சி, ருஷ்ய ஜெர்மானிய முனையில் நிலவிய ஓரளவு போர் நிறுத்தம் ஆகிய வற்றின் விளைவாக ஜெர்மனி தனது படைகளில் ஒரு பகுதியை பிரான்ஸுக்கும் பிரிட்டனுக்கும் எதிராக மேற்குப் போர் முனைக்கு அனுப்பவும் ஒரு சிறிது வெற்றி பெறவும் முடிந்தது. நேச நாடுகளுடன் சமரச நிபந்தனைகள் கொண்ட சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளலாம் என்ற நம்பிக்கை இதனால் ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளின் உள்ளங்களில் துளிர்த்தது. மறு புறம், 1917 வசந்தத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டன், பிரான்ஸ் தரப்பில் போரில் கலந்து கொண்டது. நேசநாடுகளின் பலம் மிகுந்தது, அவை யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்று நம்பின.

யுத்தம் முடிகிற வழியாய்க் காணோம். ஆனால் யுத்தத் தால் களைத்து நலிந்து துன்பங்கள் உழன்ற திரளான பொது மக்கள் இந்த நிலைமையை ஏற்றுக் கொண்டு வாளா இருக்க விரும்பவில்லை. படையினரின் ஆத்திரம் அதிகரித்தது. ருஷ்யாவில் நடக்கும் புரட்சி பற்றியும் போல்ஷிவிக்குகளையும் லெனினையும் பற்றியும் உண்மைச் செய்தி மிகுந்த சிரமத் துடன்தான் என்றாலும் அவர்களை எட்டிவிட்டது. பிற நாடு களின் தொழிலாளர்களும் படைவீரர்களும் ருஷ்யாவின் உழைப்பாளிகள் மீது அனுதாபம் கொண்டார்கள், அவர் களைக் குறித்துப் பெருமைப்பட்டார்கள், அவர்களுடைய உதாரணத்தைப் பின்பற்ற ஆயத்தம் ஆனார்கள். புரட்சி நடத்துவது அவர்களுக்கு அதிகக் கடினமாய் இருந்தது உண்மையே. ருஷ்யாவில் இருந்த போல்ஷிவிக் கட்சி போன்று அவ்வளவு துணிவும் உறுதியும் அனுபவமும் புரட்சித் தன்மையும் வாய்ந்த கட்சி எந்த நாட்டிலும் இல்லை. ஆனால் எங்குமே பொது மக்களின் பொறுமைக்கு முடிவு வந்து விட்டது. அவர்களது மனக் கொதிப்பு மிகுந்தது. 1917 சரத் காலத்தில் ஜெர்மானியக் கடற்படையில் கலகக் கிளர்ச்சி வெடித்துக் கிளம்பியது. மற்ற நாடுகளிலும் புரட்சி பக்குவம் அடைந்து வருகின்றது என்று எல்லா அறிகுறிகளும் காட்டின.

இதற்கிடையே ருஷ்யாவில் புரட்சிச் சக்திகள் நிர்ணய கரமான போராட்டத்துக்கு முன்னேற்பாடுகள் செய்தன.

தாற்காலிக அரசாங்கம் தத்தளித்தது. புரட்சியை முறியடிப்பதற்காக அது பரபரப்புடன் பலத்தைத் திரட்டியது. இரண்டாவது ''கர்னீலவ் படையெடுப்புக்கு'' ஆயத்தம் செய்தது. புரட்சியை எப்படியாவது மூளாமல் தடுப்பதற்காக நாட்டின் தலைநகர் பெத்ரோகிராதை ஜெர்மானியருக்கு ஒப்புக் கொடுக்கவும் அது தயாராய் இருந்தது.

துரோகி அரசாங்கத்தை விரட்டிவிட்டு, ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு புரட்சியைக் காக்கப் பாட்டாளி வர்க்கத்தாலும் ஏழை விவசாயிகளாலுமே முடியும் எனத் தெரிந்தது.

கிளர்ச்சி ஏற்பாடுகளைத் தலைமைதாங்கி நடத்தும் பொருட்டு லெனின் இரகசியமாகத் தலைநகர் வந்து சேர்ந்தார். 1917, அக்டோபர் 10ந் தேதி மத்தியக் கமிட்டிக் கூட்டம் நடந்தது. கிளர்ச்சி தொடங்குவதன் இன்றியமையாமை குறித்து இதில் லெனின் உரை நிகழ்த்தினார். லெனின் எழுதிய தீர்மானத்துக்கு மத்தியக் கமிட்டி ஒப்புதல் அளித்தது. கிளர்ச்சி தவிர்க்க முடியாதது, முற்றிலும் பக்குவம் அடைந்து விட்டது என்று இந்தத் தீர்மானம் கூறியது. கிளர்ச்சி பற்றிய தீர்மானத்தை வழிகாட்டியாகக் கொள்ளும் படியும் அதை ஒழுங்கமைப்பதையே முதல் கடமையாகக் கருதும் படியும் இந்த நோக்கிலிருந்து எல்லா நடைமுறைப் பிரச்சினைகளையும் விவாதித்து முடிவு செய்யும்படியும் எல்லாக் கட்சி ஸ்தாபனங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

மத்தியக் கமிட்டியின் இரண்டு உறுப்பினர்கள்—காமினெவும் ஸினேவிவும் — மட்டுமே இந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள். மென்ஷிவிக்குகள் போலவே இவர்களும் புரட்சியின் வெற்றியை நம்பவில்லை. ருஷ்யா சோஷலிஸத்துக்கு ஏற்ற முதிர்ச்சி பெறவில்லை என்று நினைத்தார்கள். கோழைகளும் நம்பிக்கை குறைந்தவர்களுமான இவர்களுடைய வாதங்களை மத்தியக் கமிட்டி இகழ்ச்சியுடன் நிராகரித்தது. மத்தியக் கமிட்டியின் தீர்மானம் செயல் தொடங்குவதற்குக் கட்சி விடுத்த கட்டளை ஆகி விட்டது. கிளர்ச்சியைத் தலைமை வகித்து நடத்தும் கட்சியின் இராணுவ-புரட்சி மையத்திற்கு மத்தியக் கமிட்டி தன் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தது.

பெத்ரோகிராத் சோவியத்தில் கிளர்ச்சியை நடைமுறை

யில் ஒழுங்கமைப்பதற்கான உறுப்பு—இராணுவ-புரட்சிக் கமிட்டி—நிறுவப்பட்டது. போல்ஷிவிக்குகளும் இடதுசாரி எஸ் ஆர்களும் கட்சிச் சார்பற்ற புரட்சிக்காரர்களும் இதில் அங்கம் வகித்தார்கள். இராணுவ-புரட்சிக் கமிட்டி புரட்சிச் சக்திகளை, முதன்மையாக செங்காவல் படைப் பிரிவுகளை அணிதிரட்டியது. பால்டிக் கடற்படை முழுவதும் புரட்சியின் சார்பில் இருந்தது. இராணுவ-புரட்சிக் கமிட்டியின் அழைப்பு வந்ததுமே நடவடிக்கை தொடங்க ஆயத்தமாய் இருந்தன பெத்ரோகிராத் நகரக் காவல் படை ரெஜிமெண்டுகள். கிளர்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கு அடிப்படையாக விளங்கின லெனினுடைய உத்தரவுகள்.

லெனின் கிளர்ச்சி தொடங்கும் நேரத்தை மிருந்த யோசனையுடன் தெரிந்தெடுத்திருந்தார்—கிளர்ச்சி இதோ திடீரெனத் தொடங்க வேண்டி இருந்தது. ஆனால் அதற்குள் துரோகிகள் பின்புறமிருந்து எதிர்பாராத அடி கொடுத் தார்கள். மத்தியக் கமிட்டியில் படு தோல்வி அடைந்த காமினெவும் ஸினேவிவும் நம்பமுடியாத துரோகச் செயலில் ஈடுபட்டார்கள். கிளர்ச்சி பற்றிய கட்சித் தீர்மானத் துக்குத் தாங்கள் ஒப்புதல் தரவில்லை என்ற செய்தியை போல்ஷிவிக் அல்லாத செய்தித்தாள் ஒன்றில் அவர்கள் வெளியிட்டார்கள். கிளர்ச்சிக்கு இரகசியமாக ஏற்பாடுகள் நடப்பது பகைவனுக்கு இதனால் தெரிந்துவிட்டது. போல்ஷிவிக் கட்சி துரோகிகள் இல்லாதவாறு துப்புரவு செய்யப்பட வேண்டும் என்று மத்தியக் கமிட்டிக்கு எழுதினார் லெனின். மேற்கண்ட இருவரும் தாமதமின்றிக் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார். மத்தியக் கமிட்டி புரட்சிக்குக் குழி பறிக்க முயன்ற இருவரையும் தனித்து ஒதுக்கி, கட்சியின் பெயரால் எவ்வித அறிக்கையும் வெளி யிடக் கூடாது என்று அவர்களுக்குத் தடை விதித்தது.

சோஷலிஸப் புரட்சியின் வெற்றி

ஏற்பாடுகளைத் தொடர்ந்து நடத்தும் படியும் கிளர்ச்சியின் போராட்டப் பகுதிகளை வலுப்படுத்தும்படியும் திட்டத்தைத் துல்லியமாக வரையறுக்கும் படியும் கோரினார் லெனின். புரட்சியின் மையமாக, கிளர்ச்சியின் பிரதானக் கேந்திரமாக இருந்தது நாட்டின் தலைநகர் பெத்ரோகிராத்.

நகர்க் காவல் படைப் பிரிவுகள் அனைத்தையும் புரட்சியின் தரப்புக்கு ஈர்க்க இராணுவ-புரட்சிக் கமிட்டி முயன்றது. ரெஜிமெண்டுகளுக்குக் கமிஸார்கள் அனுப்பப்பட்டார்கள். தலைமையைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளும் படியும் தளகர்த்தர்கள் இராணுவ-புரட்சிக் கமிட்டியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை என்றால் அவர்களுடைய உத்தரவுகளை நிறைவேற்றாமல் விட்டுவிடும்படியும் கமிஸார்கள் பணிக்கப்பட்டனர். இராணுவப் பிரதேச அலுவலகத்துக்கும் கமிஸார்கள் அனுப்பப்பட்டார்கள். நகர்க் காவல் படை முழுவதும் இராணுவ-புரட்சிக் கமிட்டியின் வசம் வந்துவிட்டது. நிகழ்ச்சிகள் தொடங்கும் நேரம் நெருங்கியது.

இந்த சந்தர்ப்பத்தில் தாற்காலிக அரசாங்கத்துக்குத் தொண்டு புரிந்தார் திரோத்ஸ்கி. பிப்ரவரிப் புரட்சிக்கு முன்வரை திரோத்ஸ்கி மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து லெனினுக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் எதிராக மிகக் கீழ்த்தரமான போராட்டம் நடத்திவந்தார். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின்போ, திரளான பொது மக்களிடையே போல்ஷிவிக் கட்சியின் செல்வாக்கு எவ்வளவு மகத்தானது என்பதைக் கண்டு அவர் போல்ஷிவிக் கட்சியில் சேர முடிவு செய்தார். ஆறுவது காங்கிரஸ் திரோத்ஸ்கியையும் அவருடைய கருத்துத் தோழர்களையும் கட்சியில் சேர்த்துக்கொண்டது. அவர் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பெத்ரோகிராத் சோவியத்தின் தலைவர் பதவி அவருக்குத் தரப்பட்டது. ஆனால் திரோத்ஸ்கி தம் கருத்துக்களை மாற்றிக் கொள்ளவில்லை, லெனினுடைய போல்ஷிவிஸக் கோட்பாடுகளை ஏற்கவில்லை. புரட்சிக்கு முக்கியமான அந்தக் கணத்தில் அவர் தம்முடைய பொறுப்பற்ற அறிக்கை ஒன்றின் மூலம் ஆயுதக் கிளர்ச்சியை இடை முறிக்கத் தெரிந்தார். பெத்ரோகிராத் சோவியத்தின் கூட்டத்தில் பேசுகையில், அக்டோபர் 25ந் தேதி கூட இருந்த சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் வரை கிளர்ச்சியைத் தள்ளி வைக்கும்படி திரோத்ஸ்கி கோரினார். அவருடைய இந்தக் கூற்று, கிளர்ச்சி அக்டோபர் 25ந் தேதி நடக்கக் கூடும் என்று தாற்காலிக அரசாங்கத்துக்குக் காட்டி விட்டது. அரசாங்கம் போல்ஷிவிக்குகளை முந்திக்கொண்டு தடுப்பு நடவடிக்கைகள்

மேற்கொள்ள முடிவு செய்து தாக்குதலுக்கு ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிற்று.

கிளர்ச்சியை சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் வரை ஒத்திப்போடுவது எவ்வகையிலும் கூடாது என்று வற்புறுத்தினர் லெனின். அவரது உத்தரவுப் படி ஆயுதந் தாங்கிய கிளர்ச்சி அக்டோபர் 24ந் தேதி தொடங்கி விட்டது. முன்கூட்டித் தயாரித்த திட்டப்படி ரெயில் நிலையங்களும் அஞ்சல், தந்தி நிலையங்களும் அரசாங்கக் கட்டிடங்களும் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன: தாற்காலிக அரசாங்கம் பதுங்கி இருந்த பனிக் கால அரண்மனை முற்றுகை இடப் பட்டது. அரசாங்க நிதிமனை கைப்பற்றப்பட்டது. இவ்வாறு பாரிஸ் கம்யூனின் தவறை மறுபடி செய்வது — புனிதர்களிலும் புனிதர்களான நிதி அதிபர்களைத் தாக்கப் பாரிஸ் கம்யூன் துணியவில்லை — தவிர்க்கப்பட்டது. அக்டோபர் 25ந் தேதி காலைக்குள் ஆயுதக் கிளர்ச்சி வெற்றி பெற்றுவிட்டது. தாற்காலிக அரசாங்கம் அகற்றப்பட்டுவிட்டது, ஆட்சி அதிகாரம் பெத்ரோகிராத் சோவியத்தின் உறுப்பான இராணுவ-புரட்சிக் கமிட்டியின் கைகளுக்கு மாறிவிட்டது என்ற பிரகடனத்தை லெனின் காலை பத்து மணிக்கு எழுதினர்.

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட தாற்காலிக அரசாங்கம் பனிக்கால அரண்மனைக்குள் அரண் செய்து கொண்டு ஒளிந்திருந்தது. போர்முனையிலிருந்து உதவி வரும் என்ற நம்பிக்கை தாற்காலிக அரசாங்கத்துக்கு இன்னும் இருந்தது. அரசாங்கத் தலைவன் கேரென்ஸ்கி வெளிநாட்டுக் கொடி மாட்டிய அமெரிக்கக் கார் ஒன்றில் அமர்ந்து இரகசியமாகப் போர் முனைக்கு ஓடினான்: பனிக்கால அரண்மனையைக் கைப்பற்றும்படி உத்தரவு இட்டார் லெனின். புரட்சிக் கடற் படையினர் வசம் இருந்த ''அரோரா'' என்னும் போர்க் கப்பல் அக்டோபர் 25ந் தேதி இரவு பீரங்கி வெடிகள் தீர்த்தது— தாக்குதல் தொடங்குவதற்கான சங்கேதக் குறி இது. புரட்சிப் படைப் பிரிவுகள் திடீரெனத் தாக்கிப் பனிக்கால அரண்மனையைக் கைப்பற்றி விட்டன. முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்பட்டுப் பெத்ரோபாவ்லவ்ஸ்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்கள். முற்காலத்தில் ஜார் விடுதலைப்

பனிக்கால அரண்மனைமீது திடீர்த் தாக்கு



போர்க் கப்பல் ''அரோரா''

போராட்ட வீரர்களே இந்தக் கோட்டையில் தான் சிறை வைப்பது வழக்கம்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெற்று விட்டது. அப்போது முதல், முற்போக்குள்ள மனித குலம் அனைத்தும் அக்டோபர் 25 (நவம்பர் 7)ந் தேதியை சோவியத் ஆட்சி நிலைநாட்டப் பெற்ற, தொழிலாளர்கள், விவசாயிகளின் முதலாவது சோஷலிஸ அரசு ஸ்தாபிக்கப் பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருநாளாக, சோஷலிஸ சமூகக் கட்டுமானம் தொடங்கிய நன்னாளாகக் கொண்டாடி வருகிறது.

அக்டோபர் புரட்சியை, ஆயுதந்தாங்கிய கிளர்ச்சியை, உத்வேகம் ஊட்டி ஒழுங்கமைத்த சக்தி, லெனினைத் தலைவராகக் கொண்ட போல்ஷிவிக் கட்சியே. அனேக நாடுகளில் நடந்த பல புரட்சிகளை ஆராய்ந்து, கிளர்ச்சி நடத்துவதில் பாட்டாளி வர்க்கமும் உழைப்பாளி மக்களும் திரட்டியிருந்த

பெருத்த அனுபவத்தைப் பொதுமைப்படுத்தினர் லெனின். கிளர்ச்சியை எதிர்த்துக் கருத்து தெரிவித்த சீர்திருத்தவாதிகளை லெனின் விளாசினர். அதே சமயம், ஆயுதக் கிளர்ச்சியே எப்போதும், எவ்வித நிலைமைகளிலும் கட்டாயமான ஒரே போராட்ட வடிவம் என்று கிளிப்பிள்ளைவாதம் பேசிய ''இடதுசாரி'' துர்ச்சாகசக்காரர்களையும் அவர் கடுமையாகத் தாக்கினர். அதனால்தான், 1917 ஏப்ரலில் புரட்சியின் சமாதான வளர்ச்சிப் போக்கைக் கட்சி கடைப்பிடித்து வந்த போது தாற்காலிக அரசாங்கத்தை உடனடியாகக் கவிழ்க்க வேண்டும் என்று கோரிய போல்ஷிவிக்குகளை லெனின் கண்டனம் செய்தார். குறித்த முதனிலைகள் இல்லாத போது இம்மாதிரிக் கிளர்ச்சி துர்ச்சாகசமே ஆகும். கிளர்ச்சி பற்றிய மார்க்ஸீயவாதிகளின் போக்கைப் பின்வருமாறு விவரித்து எத்தகைய நிலைமைகளில் கிளர்ச்சி சாத்தியம் என்பதை லெனின் வரையறுத்தார்:

''கிளர்ச்சி வெற்றிகரமாக இருப்பதற்கு, சதியாலோசனையை அல்ல, கட்சியை அல்ல, முன்னணி வர்க்கத்தைச் சார்ந்து இருக்க வேண்டும். இது முதலாவது. கிளர்ச்சி திரளான பொது **மக்களின் புரட்சி ஏற்றத்தைச்** சார்ந்திருக்க வேண்டும். இது இரண்டாவது. வளர்ந்து வரும் புரட்சியின் வரலாற்றில், மக்களுடைய முன்னணி வரிசைகளின் செயலூக்கம் உச்ச நிலையிலும், பகைவர்கள் அணிகளிலும் **புரட்சியின் பல வீனமான, உறுதியற்ற அரைகுறை நண்பர்களின் அணிகளிலும் ஊசலாட்டம்** மிகமிகத் தீவிரமாகவும் இருக்கும் விதத்தில் ஏற்படும் **திருப்பு முனையைக்** கிளர்ச்சி சார்ந்திருக்க வேண்டும். இது மூன்றாவது.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 34, பக்கங்கள் 242-243).

அக்டோபர் கிளர்ச்சிக்கு முன் ருஷ்யா இருந்த நிலையில் இந்த எல்லா நிபந்தனைகளும் நிறைவேறி இருந்தன. இந்த எல்லா நிபந்தனைகளும் நிறைவேறி இருந்த படியால் கிளர்ச்சியைக் கலை போன்று அணுகுவது, அதாவது தீர்க்கமாக யோசித்து அதற்கு நன்கு ஆயத்தங்கள் செய்வது அவசியமாய் இருந்தது. லெனின் இவ்வாறு கோரினர், கிளர்ச்சியைத் தலைமை ஏற்று நடத்துவதில் இத்தகைய கலை நுட்பத்தையே அவர் காட்டினர். கிளர்ச்சி தொடங்கிவிட்ட பிறகு போல்ஷி

விக்குகள் அதை இறுதிவரை நடத்திச் செல்ல லெனின் வகை செய்தார். நிர்ணயகரமான இடத்தில் மிக அதிகமான பலம் திரட்டிக் குவிக்கப்பட்டது. 1905 டிசம்பர் கிளர்ச்சியின் ஒழுங்கமைப்பாளர்கள் தற்காப்பு நிலையை மேற்கொண்டார் கள். இந்தக் கிளர்ச்சியின் அனுபவத்தைக் கட்சி கவனத்தில் வைத்திருந்தது. 1917 அக்டோபரில் போல்ஷிவிக்குகள் கிளர்ச்சியை நிர்ணயகரமான தாக்கு நடவடிக்கை ஆக்கினர் கள். லெனினது கட்டளைப்படி கிளர்ச்சிக்கு மிக வாய்ப்பான கணத்தை—பகைவர்களின் சக்திகள் உளச் சோர்வும் கிளர்ச் சிக்காரர்களின் அணிகள் வெற்றி நம்பிக்கையால் உற்சாகப் பெருக்கும் கொண்டிருந்த கணத்தை—கட்சி தெரிந்தெடுத் தது. மிகப் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட ஆயுதந் தாங்கிய கிளர்ச்சி ஒரே நாளில் வெற்றி அடைந்ததற்கும் அதில் இரத்தப் பெருக்கு அனேகமாக ஏற்படாததற்கும் காரணம் இதுவே.

தொழிலாளர், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத் துக்களது இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் 1917, அக் டோபர் 25ந் தேதி நள்ளிரவில் தொடங்கியது. நாடு அனைத் தையும் சேர்ந்த 450க்கும் மேற்பட்ட சோவியத்துக்கள் காங்கிரஸில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. நாட்டின் எல்லா நாட்டினப் பிரதேசங்களும் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியிருந்தன. 650 பிரதிநிதிகளில் சுமார் 400 பெயர் போல்ஷிவிக்குகள். மற்றவர்கள் எஸ் ஆர் அல்லது மென்ஷி விக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எஸ் ஆர்களில் மிகப் பெரும் பான்மையினர்—180 பெயர்வரை—இடது சாரி எஸ் ஆர்கள். ஆட்சி அதிகாரப் பிரச்சினையில் அவர்கள் போல்ஷிவிக்கு களை ஆதரித்தார்கள். முன்பு எங்கும் நாட்டாண்மை நடத்தி வந்த மென்ஷிவிக்குகளும் வலதுசாரி எஸ் ஆர்களுமோ காங்கிரஸில் மொத்தம் எழுபது, எண்பது பெயரே இருந் தார்கள். இந்த எண்ணிக்கை கூடக் கண் முன்னே கரைய லாயிற்று: அவர்களில் பலர் இடதுசாரிக்கு வந்தார்கள். ஒரு சில பிரதிநிதிகளே காங்கிரஸை விட்டு வெளியேறினர்கள்.

சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் ஆட்சி அதி காரம் அனைத்தும் சோவியத்துக்களின் கைகளுக்கு மாற வேண் டும் என்ற தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. சோவியத்துக்

கள் மக்கள் அனைவரதும் ஒப்புதல் பெற்ற சட்டபூர்வமான ஆட்சி ஆகிவிட்டன. மக்களின் பிரதிநிதிகள் சோவியத்துக் களின் காங்கிரஸில் கூடி இருந்தார்கள். பூர்ஷ்வா வர்க்க சர் வாதிகாரம் ஒழிக்கப்பட்டு விட்டது. மக்கள் அனைவருடைய வும் நலன்களைக் காக்கவும் அவர்களை சோஷலிஸக் கட்டு மானப் பாதையில் நடத்திச் செல்லவும் திறன் படைத்த ஒரே வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

லெனின் சமாதானத்தையும் நிலத்தையும் பற்றிக் காங் கிரஸில் உரைகள் நிகழ்த்தினர். அப்போதுதான் வெற்றி அடைந்திருந்த சோஷலிஸப் புரட்சிக்கு உத்வேகம் ஊட்டி நடத்திய தலைவரைப் பிரதிநிதிகள் மகிழ்வுடன், கோலாகல மாக வரவேற்றார்கள். களி ஆரவாரம் காரணமாக லெனின் வெகு நேரம் வரை உரை தொடங்க முடியவில்லை. பேச வாய்ப்பு கிடைத்ததுமே லெனின் தாம் எழுதியிருந்த சோவியத் ஆட்சியின் முதல் அரசாணையைக் காரியப் பாங்குடன் படிக்க முற்பட்டார். இந்த அரசாணை, மிகமிக உடனடியான, மிகமிகக் கொந்தளிப்பு ஏற்படுத்தியிருந்த பிரச்சினையை— யுத்தத்தை எப்படி முடிப்பது என்ற பிரச்சினையை—பற் றியது. பிரதேச இணைப்போ ஈட்டுத் தொகை செலுத்தலோ இன்றி, அதாவது, வேற்றூர் நிலப்பரப்புக்களைக் கைப்பற்றும ளும் போர்ச் செலவைத் தோற்ற நாடுகளிடம் கட்டாயப் படுத்தி வாங்காமலும், பொது ஜனநாயக சமாதான உடன் படிக்கை செய்து கொள்வதற்குப் பேச்சுவார்த்தைகள் உடனே தொடங்கும்படி போரிடும் நாடுகள் எல்லாவற்றி னுடையவும் மக்களுக்கும் அரசாங்கங்களுக்கும் சோவியத் ஆட்சி யோசனை கூறியது. பிரதேச இணைப்பு இல்லாத சமா தானம் என்பதற்கு அர்த்தம் இந்த யுத்தத்தில் வேற்றூர் நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுமல் இருப்பது மட்டுமே அல்ல, எல்லா நாட்டினங்களுக்கும் மக்கள் இனங்களுக்கும் சுயநிர் ணய உரிமையும் தங்கள் விதியைத் தாங்களே முடிவு செய்து கொள்ளும் உரிமையும் அளிப்பதும் ஆகும் என்று லெனி னுடைய அரசாணை மிகமிகத் தெளிவாக வரையறுத்தது. சமாதானம் பற்றிய அரசாணை ருஷ்யாவின் மக்கள் இனங்க ளுடைய நலன்களை மட்டுமோ போரிடும் நாடுகளின் மக்கள்

1917, அக்டோபர் 26ந் தேதி, சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸில் உரை ஆற்றுகிறார் லெனின்

இனங்களுடைய நலன்களை மட்டுமோ அல்ல, உலகின் எல்லா மக்கள் இனங்களுடையவும் நலன்களைக் காத்தது.

பனிக்கால அரண்மனை முன் இருந்த சதுக்கத்துக்கு உயரே வெடிமருந்துப் புகை இன்னும் அகலாதிருந்த போதே சோவியத் அரசாங்கம் சமாதான தாகத்தால் தவித்துக் கொண்டிருந்த மனிதகுலம் அனைத்திற்கும் ஏகாதிபத்திய யுத்தத்தை நிறுத்தும்படியும் நியாயமான ஜனநாயக சமாதானம் செய்து கொள்ளும் படியும் யோசனை விடுத்தது. வாட்டி வதைத்த யுத்த ஆண்டுகளில் முதல் தடவையாக, புதிய சமூகத்தால் பிரேரிக்கப்பட்ட சமாதானச் செயல் திட்டத்தைத் திரளான மக்கள் இனங்கள் செவிமடுத்தன. ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் சமாதான யோசனையை மூடி மறைக்க முயன்றார்கள். ஆனால் அது எல்லா மக்கள் இனங்

களின் உள்ளங்களிலும் எதிரொலித்தது. ஏகாதிபத்திய யுத்தத்தின் இரும்புத் தளைகளை உடைத்து எறிந்து, கொள்ளையும் குருதிப் பெருக்கும் நிறைந்த போரிலிருந்து விடுபடலாம் என்ற நம்பிக்கையை எல்லோர் உள்ளங்களிலும் நிறைத்தது இந்த யோசனை.

உலகம் அதுவரை அறிந்திராத புதிய சர்வதேச உறவுகளுக்கு அடிக்கல் நாட்டியது சோவியத் ஆட்சி. அது மற்ற மக்கள் இனங்களை அடிப்படுத்த ஆசைப்படவில்லை, எந்த வல்லரசையும் பின்பற்ற விரும்பவில்லை. மக்கள் இனங்களுக்கு இடையே உள்ள விவாதத்துக்கு இடமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யுத்தத்தைச் சாதனமாக ஏற்காமல் விலக்கிய கோட்பாடு—பேச்சு வார்த்தைகளைச் சார்ந்த கோட்பாடு, வெவ்வேறு சமூக அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சக வாழ்வை மதிக்கும் கோட்பாடு—முதன் முறையாகப் பிரகடனம் செய்யப்பட்டது. மற்ற மக்கள் இனங்களை அடிமைப் படுத்துவதையும் வேற்றூர் நிலப்பரப்புக்களைக் கைப் பற்றுவதையும் அடிப்படையாகக் கொள்ளாமல் எல்லா மக்கள் இனங்களதும் சம உரிமையையும் பரஸ்பர மதிப்பையும் அடிப்படையாகக் கொண்டு அயல்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

அதே இரவில் நிலம் பற்றிய உரை நிகழ்த்துவதற்கு லெனின் அழைக்கப்பட்ட போது ஹால் இரண்டாவது தடவை வாழ்த்து முழக்கங்களால் ஆர்த்தது.

நிலம் பற்றிய அரசாணைக்கு ஒப்புதல் அளிக்கும்படி லெனின் பிரேரித்தார். இதன் படி நிலப்பிரபுக்களின் நிலங்கள், மடங்களின் நிலங்கள், ஜார் குடும்ப நிலங்கள் ஆகியவை எல்லாம் எவ்வித ஈட்டுத் தொகையும் இன்றி மக்களின் உடமை ஆகிவிட்டன. நிலத்தின்மீது தனி உடைமை அகற்றப் பட்டது. நாட்டில் இருந்த எல்லா நிலமும் தேசீய உடைமை ஆக்கப்பட்டது, அதாவது மக்கள் எல்லோருக்கும் சொந்தமான உடைமை ஆகி விட்டது.

விவசாயிகள் எஜமானின் நிலத்தைச் சொந்தம் ஆக்கிக் கொள்ள எத்தனையோ நூற்றாண்டுகளாகக் கனவு கண்டு வந்தார்கள். நிலப்பிரபுக்களின் ஆட்சிக்கு எதிராக அவர்கள் பல முறை ஆயுதமேந்தி எழுந்தார்கள். ஆனால் ஒவ்வொரு

முறையும் அவர்கள் தோல்வி அடைந்தார்கள், ஏனென்றால் தனித் தனியே சிதறிய விவசாயி மக்கள் திரளை ஒன்றுக ஒழுங்கமைத்து அவர்களை வெற்றிக்கு இட்டுச் செல்ல வல்ல வர்க்கம் இருக்கவில்லை. பூர்ஷ்வா வர்க்கம் அவர்களைத் தங்கள் பின் இழுத்துச் செல்ல முயன்றது. ஆனால் அதன் முயற்சி பலிக்கவில்லை. ஏனென்றால் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பறித்துக்கொள்வதற்கு அர்த்தம் பூர்ஷ்வாச் சொத்துரிமையையே தாக்குவது ஆகும். நிலம் தருவதாக வாக்களித்த எஸ் ஆர்கள் விவசாயிகளைத் தங்களுடன் இட்டுச் செல்ல முயன்றார்கள். எஸ் ஆர்களின் பிரதிநிதி தாற்காலிக அரசாங்கத்தில் விவசாய அமைச்சனாகக் கூட இருந்தான். அவர்களுடைய கட்சி மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து சோவியத்துக்களில் பெரும்பான்மை வகித்தது. ஆனால் அவர்களுடைய கொள்கை பூர்ஷ்வா வர்க்க நலன்களையே மதிப்பதாய் இருந்தது. எனவே அவர்களும் விவசாயிகளை ஏமாற்றவே செய்தார்கள். போல்ஷிவிக்குகள் மட்டுமே விவசாயிகளுக்குத் தாங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றினார்கள். தொழிலாளி வர்க்கத்தினிடமிருந்தே, அதன் கட்சியான போல்ஷிவிக் கட்சியிடமிருந்தே விவசாயிகளுக்கு நிலம் கிடைத்தது. வெற்றி பெற்ற சோஷலிஸப் புரட்சி விவசாயிகளின் பல நூற்றாண்டுக் கனவு நனவு ஆவதற்கு உடனே வகை செய்தது.

லெனின் தமது உரையை முடித்ததும் பிரதிநிதிகளின் நடுவிலிருந்து ஒரு விவசாயி முன்னே வந்து, கூட்டத்தினருக்குச் சிரம் தாழ்த்து வணக்கம் தெரிவித்து விட்டு, லெனின் புறம் திரும்பி அவரை வணங்கி, நிலப் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததற்காக அவருக்கு ருஷ்யாவின் பல கோடி விவசாயிகளின் சார்பில் நன்றி தெரிவித்தான்.

சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ், அரசாங்கத்தை—புரட்சித் தலைவர் லெனினை முதல்வராகக் கொண்ட மக்கள் கமிஸாரவையை—அமைத்தது.

இத்துடன் காங்கிரஸின் வேலை முடிந்து விட்டது. காங்கிரஸின் ஆணைகளையும் புதிய அரசாங்கத்தின்—தொழிலாளர், ஏழை விவசாயிகளது அரசாங்கத்தின்—தீர்மானங்களையும்

செயல்படுத்தும் பொருட்டுப் பிரதிநிதிகள் நாட்டின் பல் வேறு இடங்களுக்குச் சென்றார்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் முக்கியத்துவம்

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி மக்கள் விரோத ஆட்சியை அகற்றியது, பின்தங்கிய அரசு அமைப் பை உடைத்து எறிந்தது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட் டியது, சோவியத் சோஷலிஸ அரசை அமைத்தது.

வரலாற்றில் நிகழ்ந்த மற்ற எல்லாப் புரட்சிகளுக்கும் அக்டோபர் புரட்சிக்கும் உள்ள முதன்மையான வேறுபாடு, இந்தப் புரட்சியைத் தொழிலாளி வர்க்கம் ஏழை விவசாயி களோடு கூட்டு சேர்ந்து நிறைவேற்றியது என்பதே. புரட்சி யின் போக்கில் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்கள் புரட்சி உறுப்புக்களான சோவியத்துக்களை அமைப்பதில் வெற்றி பெற்றார்கள். சோவியத்துக்கள் ஏதேனும் அரசியல் கட்சியால் கற்பனை செய்யப்படவில்லை. முதலாவது ருஷ்யப் புரட்சி ஆண்டுகளிலேயே, திரளான பொது மக்களால், தொழி லாளர்களின் படைப்பு ஆற்றலால் உருவாக்கப்பட்டன அவை. இந்த முதல் சோவியத்துக்களில் புதிய ஆட்சியின் முன்மாதிரிகளைக் காணப் பெற்றார் லெனின். பிப்ரவரிப் புரட் சியில் சோவியத்துக்கள் மறு உயிர்ப்பு பெற்றன, நாடு முழு வதிலும் ஏற்படுத்தப்பட்டன. திரளான பொது மக்களைப் புரட்சிக்கு அணிதிரட்டி ஆயுதக் கிளர்ச்சிக்கு ஆயத்தம் செய் யும் ஸ்தாபனங்களாக விளங்கிய சோவியத்துக்கள் அக்டோ பர் புரட்சியினது வெற்றியின் விளைவாகப் புதிய, தொழி லாளர்-விவசாயிகள் ஆட்சியின் உறுப்புக்கள் ஆகி விட்டன. திரளான உழைப்பாளி மக்களை அரசு நிர்வாகத்திலும் சோஷலிஸக் கட்டுமானத்திலும் ஈடுபடுத்துவதற்குச் சிறந்த வாய்ப்பை சோவியத்துக்கள் ஏற்படுத்தின.

அக்டோபர் புரட்சி, நாடு துண்டுகளாகக் கூறு போடப் பட்டு அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் கைப் பாவையாக மாறும் ஆபத்தைத் தவிர்த்தது, நாட்டின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் வலுப்படுத்த வகை செய்தது. சோவியத்

ஆட்சி துன்புற்ற பொது மக்களின் உளமார்ந்த சமாதான ஆர்வத்தைப் பிரதிபலித்து, ருஷ்யாவை யுத்தத்திலிருந்து மீட்கவும் மக்கள் இனங்களுக்கிடையே சமாதானத்தை நிலை நாட்டவும் முயற்சி தொடங்கியது.

ஏகாதிபத்தியம் வகுத்து வைத்திருந்த ஓநாய் நீதியின்படி ஆளும் நாட்டினத்தைச் சேராத மக்கள் இனங்கள் ஒடுக்கு முறைக்கும் அடிமை வாழ்வுக்குமே ஏற்றவை என்று விதிக்கப் பட்டிருந்தன. புரட்சி இந்த அநியாய அமைப்பைத் தகர்த்து எறிந்தது. ருஷ்யாவில் இருந்த ''மக்கள் இனங்களின் சிறைச் சாலை'' பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் அடியோடு பெயர்த்துத் தகர்க்கப்பட்டது. முன்பு ருஷ்யாவில் ஒடுக்கப் பட்டிருந்த மக்கள் இனங்கள் விடுதலை அடைந்தார்கள். வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் உதவியால் தங்கள் பின்தங்கிய நிலையை விரைவில் அகற்றி, நாட்டின் முன்னணி நாட்டினங்களை எட்டிப் பிடிக்கும் வாய்ப்பு அவற்றுக்குக் கிடைத்தது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி நாட்டின் நெடுங்காலப் பொருளாதாரப் பின்தங்கிய நிலையைப் போக்கு வதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்கி, உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சிக்கு விரிவான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தது. ருஷ்யாவின் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் பண்பாட்டில் பின்தங்கிய நிலையை அறவே போக்குவதற்கு அது அடி கோலியது.

அக்டோபர் புரட்சி மார்க்ஸீய-லெனினீயத்தின் வெற்றி யாகத் திகழ்ந்தது. புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியின் முக் கியத்துவத்தையும் பாத்திரத்தையும் அது எல்லா உழைப் பாளிகளுக்கும் கண்கூடாகக் காட்டியது. ருஷ்யாவின் தொழி லாளி வர்க்கமும் உழைப்பாளிகளும் போல்ஷிவிக் கட்சியைத் தலைமையில் பெற்றிருந்தன. இந்தக் கட்சி மார்க்ஸீய-லெனி னீயப் புரட்சிச் சித்தாந்தத்தை வழிகாட்டியாகக் கொண் டிருந்தது. லெனினது கட்சி மக்கள் தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதையும் தனது தலைமை சரி யானது என்பதையும் காட்டியது, திரளான பொது மக்களின் ஒப்புதல் பெற்ற தலைவன் ஆயிற்று. அது தனது சர்வதேசீயக்

கடமையை நிறைவேற்றியது, ஏகாதிபத்திய முன்னணியை உடைத்து ஊடுருவி, சோஷலிஸக் கட்டுமானப் பாதையில் முன்னேறிய ருஷ்யாவினது பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு வகை செய்தது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி பெருத்த சர்வதேச முக்கியத்துவம் உள்ளது. ஐரோப்பாவினதும் ஆசியாவினதும் எல்லையற்ற பெரும் பரப்பில் அமைந்துள்ள மிகப் பெரிய நாட்டில் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் தலைமை தாங்கி, மனிதகுல வரலாற்றிலேயே முதன் முறையாக வெற்றி பெற்றது பாட்டாளி வர்க்கம். பதினைந்து கோடிக்கும் மேல் மக்களைக் கொண்ட தேசம் ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து விலகிவிட்டது. உலக நிலப்பரப்பின் ஆறில் ஒரு பகுதி மீது ஒளி வீசிப் பறந்தது சோஷலிஸச் செங்கொடி. ஏழை விவசாயிகளின் ஆதரவுடன் ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கம் முதன் முதலில் சோஷலிஸத்துக்குச் சாலை அமைத்து சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கு வழி காட்டத் தொடங்கியது. ருஷ்யாவில் நடந்த அக்டோபர் புரட்சி உலக மக்கள் இனங்களுக்கு ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து மீளும் புரட்சிகரமான முறையைக் காட்டியது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தொழிலாளர் ஆட்சியை நிலை நாட்டுவதற்குரிய பாதையை அது காட்டியது. நிலப்பிரபுக்களின் பல நூற்றாண்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான வழியை அது பிற நாடுகளின் திரளான விவசாயிகளுக்குக் காட்டியது. ஏகாதிபத்தியத்திலிருந்தும் காலனியாட்சி முறையிலிருந்தும் நாட்டின, சமுதாய விடுதலை பெறுவதற்கும் மக்கள் இனங்களுக்கிடையே சோதர உறவு வெற்றி அடைவதற்கும் ஏற்ற வழியை உலகின் ஒடுக்கப்பட்ட நாட்டினங்களுக்கு அது காட்டியது.

ருஷ்யாவின் உழைப்பாளிகளின் இந்த மாபெரும் சாதனை மனிதகுல வரலாற்றில் அடிப்படையான திருப்பமாக விளங்கியது. அக்டோபர் புரட்சி எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களுக்கு உற்சாகம் ஊட்டியது, அவர்களது புரட்சி முன் முயற்சியைக் கட்டவிழ்த்து விட்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கம் எங்கும் தீவிரம் அடைந்தது. பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றின. தொழிலாளர்

கள் இடையே மட்டும் அல்ல, எல்லா உழைப்பாளிகள் இடையேயும் ஒழுங்கமைப்பு மேம்பட்டது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் செல்வாக்கினுல் தேசிய-விடுதலே இயக்கம் விரிவாகப் பரவி, காலனியாட்சியின் அஸ்திவாரங்களேத் தகர்க்கலாயிற்று. ஏகாதிபத்திய ஒடுக்கு முறையிலிருந்து மனித குலத்தை விடுவிப்பதற்கான மாபெரும் போராட்டத்துக்கு அது அடி கோலியது. உலகில் ஒளி பரப்பலாயிற்று புது சகாப்தத்தின் உதயம் —முதலாளித்துவம் ஒழிந்து சோஷலிஸ சமூகம் நிறுவப்படும் சகாப்தத்தின், மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிஸத்துக்குப் பரிணமிக்கும் சகாப்தத்தின் உதயம்.

மனிதகுலத்தின் உண்மையான வசந்தம் தொடங்கிற்று.

அத்தியாயம் மூன்று

சோஷலிஸ சமூகத்தின் கட்டுமானம்

சோஷலிஸ அரசின் அமைப்பு

அக்டோபர் புரட்சியின் வெற்றி நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையையும் பணியையும் மாற்றிவிட்டது. பழைய அமைப்பை ஆட்சியிலிருந்து அகற்றி அழிக்கும் கட்சியாக இருந்த அது சுரண்டுவோர் அற்ற, மனிதனுல் மனி தன் ஒடுக்கப்படுவது அற்ற புதிய சமூக அமைப்பை நிறுவும் கட்சியாக மாறியது.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின் கட்சியின் புதிய பொறுப்புக்கள்

சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பது அதற்கு முன் எங்கும் எவராலும் மேற்கொள்ளப்படாத காரியமாக இருந்தது. பகைமை கொண்ட முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்ட ஒரு நாட்டில் அது தொடங்கியது. தனி உடைமை ஒழிக்கப் பட்ட, அதாவது, சமுதாய ஏற்றத் தாழ்வினதும் ஒடுக்கு முறையின் எல்லா வடிவங்களதும் அடிப்படையே பெயர்த்து அகற்றப்பட்டு விட்ட சமூகம் நிருமிக்கப்படுவது முதன் முத லாகத் தொடங்கியது. பல கோடி மக்களுடைய வாழ்க்கை யின் மிக ஆழ்ந்த பொருளாதார, அரசியல் அஸ்திவாரங்களைப் புதிதாக நாட்டும் செயல் நடைபெறலாயிற்று. உலகின் எந்த நாட்டு மக்களுக்கும் எந்தக் காலத்திலும் எதிர்ப்பட்ட

வற்றில் எல்லாம் மாண்பு மிக்க பணியாகத் திகழ்ந்தது இது. இத்தகைய அருஞ் செயல் புரிவதற்கு மக்களே ஒழுங்கமைத்துத் தலைமை தாங்கி நடத்துவது அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆனதும், கஷ்டங்களுக்கு அஞ்சாததும், சமூக வளர்ச்சி விதிகளே அறிந்ததும், சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் செல்லும் வழியை விஞ்ஞான நோக்கில் நிர்ணயிக்க வல்லதும் ஆன கட்சியால் தான் முடியும். லெனினது கட்சி இந்த எல்லாப் பண்புகளும் பெற்றிருந்தது. யுத்தத்தால் சீரழிக்கப்பட்ட பின்தங்கிய பொருளாதாரம் கொண்ட, பல நாட்டினங்கள் வாழும் மிகப் பெரிய நாட்டின் விதிக்கு முழுப் பொறுப்பையும் அது துணிவுடன் ஏற்றுக்கொண்டது.

போல்ஷிவிக் கட்சி உலகின் முதலாவது சோஷலிஸ அரசின் ஆளும் கட்சி ஆயிற்று. ஆயினும் மற்ற அரசியல் கட்சிகள் சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸின் முடிவுகளே ஒப்புக் கொண்டால், மக்கள் பிரதிநிதிகளின் உச்ச உறுப்பு ஆன தொழிலாளர், படைவீரர் பிரதிநிதிகளின் சோவியத்துக்களது காங்கிரஸால் வகுக்கப்பட்ட கொள்கைத் திட்டத்தை அவை ஆதரித்தால் அவற்றோடு ஒத்துழைக்க போல்ஷிவிக் கட்சி மறுக்கவில்லை. மென்ஷிவிக்குகளும் வலதுசாரி எஸ் ஆர்களும் சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸை விட்டு வெளியேறியபோது, சோவியத்துக்களின் எல்லைகளுக்குள் அவர்களோடு கூட்டணியை ஒப்புக்கொள்ளத் தயாராய் இருப்பதாக போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி பகிரங்கமாக அறிவித்தது. எனவே, போல்ஷிவிக்குகள் எவருடனும் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை என்ற கூற்று அறவே ஆதாரம் அற்றது ஆகும். ஆனால் எஸ் ஆர்களும் மென்ஷிவிக்குகளும் போல்ஷிவிக்குகளின் யோசனையை ஏற்கவில்லை. இடதுசாரி எஸ் ஆர்களோ, ஆட்சி அதிகாரம் சோவியத்துக்களின் கைகளுக்கு மாறுவதை ஆதரித்த போதிலும் அரசாங்கத்தில் பங்கு கொள்ள ஆரம்பத்தில் மறுத்து விட்டார்கள்.

வலதுசாரி எஸ் ஆர்கள் விவசாயிகளே சோவியத் ஆட்சிக்கு எதிர்நிறுத்த முயன்றார்கள். 1917 மே மாதத்துக்குப் பின் விவசாயிகள் பிரதிநிதிகள் சோவியத்துக்களுக்கு மறுதேர்தல்கள் நடக்கவில்லை ஆதலால் எஸ் ஆர்கள் அவற்றின்

மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமையில் முன்போலவே இருந்து வந்தார்கள். ஆனால் அக்டோபர் புரட்சியையும் அது வென்று பெற்ற நலங்களையும் எதிர்த்த வலதுசாரி எஸ் ஆர் களை விவசாயிகள் புறக்கணித்தார்கள். 1917ம் ஆண்டின் இறுதியில் விவசாயிப் பிரதிநிதிகள் சோவியத்துக்களின் இரண்டு அகில ருஷ்யக் காங்கிரஸ்கள் நடை பெற்றன. வலதுசாரி எஸ் ஆர்களின் எதிர்நடவடிக்கைகளைப் பொருட் படுத்தாமல் காங்கிரஸ்கள் சோவியத் அரசாங்கத்தின் ஆணை களையும் கொள்கையையும் ஆமோதித்தன. விவசாயிப் பிரதி நிதிகள் சோவியத்துக்களைத் தொழிலாளர், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களுடன் ஒன்றிணைப்பதற்குச் சாதகமாக அவை கருத்து தெரிவித்தன. விவசாயிகளுக்கு இடையே போல்ஷிவிக்குகளின் செல்வாக்கு விரைவாக வளர் வதை இடதுசாரி எஸ் ஆர்கள் கண்டார்கள். போல்ஷிவிக்கு கள் இடதுசாரி எஸ் ஆர்களை மக்கள் கமிஸாரவையில் உறுப்பு வகிக்கும்படி மீண்டும் அழைத்தார்கள். விவசாயிக் காங் கிரஸ்களின் பிரதிநிதிகளுடைய வற்புறுத்தலின் பேரில் இடது சாரி எஸ் ஆர்கள் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார் கள். இடதுசாரி எஸ் ஆர்களுக்கு விவசாய, நீதி முதலிய மக்கள் கமிஸார் பதவிகள் அளிக்கப்பட்டன. சோவியத் அர சாங்கத்தில் 11 போல்ஷிவிக்குகளும் 7 எஸ் ஆர்களும் உறுப் பினர்கள் ஆனார்கள்.

1918 ஜனவரி மாதம், பெத்ரோகிராத் நகரில் இரண்டு காங்கிரஸ்கள் ஏககாலத்தில் கூடின. ஒன்று தொழிலாளர், படைவீரர்களின் சோவியத்துக்களது மூன்றுவது அகில ருஷ்யக் காங்கிரஸ். மற்றது விவசாயிப் பிரதிநிதிகள் சோவியத்துக் களின் மூன்றுவது அகில ருஷ்யக் காங்கிரஸ். பிந்தைய காங்கிரஸின் பிரதிநிதிகள் அனைவரும் தொழிலாளர், படை வீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களது காங்கிரஸுடன் சேர்ந்து கொண்டார்கள். சோவியத்துக்களின் ஒன்றித்த காங்கிரஸில் மக்கள் கமிஸாரவையின் நடவடிக்கைகள் பற்றி அறிக்கை சமர்ப்பித்தார் லெனின். விவசாயிப் பிரதிநிதிகள் சோவியத்துக்கள் தொழிலாளர், படைவீரர்கள் பிரதிநிதி களின் சோவியத்துக்களுடன் இணைக்கப்பட்டதால் சோவியத் ஆட்சி மேலும் வலுப்பட்டது.

பூர்ஷ்வாக்களும் அவர்களுடைய குட்டிபூர்ஷ்வா ஏஜெண்டுகளும் மக்களின் விருப்பத்துக்குப் பணியவில்லை. அவர்கள் மக்கள் ஆட்சிக்கு ஏதிராக ஆயுதங்களும் கைகளுமாகக் கிளம்பினர்கள். சுரண்டுவோரின்ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின் அவர்களுடைய எதிர்ப்பு தீவிரமாக அதிகரிக்கும் என்று லெனின் விடுத்த எச்சரிக்கை மெய் ஆயிற்று. சோவியத் ஆட்சியை உறுதியாக நிலைப்படுத்துவதும் பெருந்தொகையான பகைவர்களிடமிருந்து அதைக் காப்பதும் கட்சியின் கடமை ஆயிற்று.

சோவியத் அரசின் நிர்மாணம்

சமாதானத்தையும் நிலத்தையும் பற்றிய சோவியத் ஆட்சியின் முதல் ஆணைகளே அது அவர்களுடைய சொந்த ஆட்சி என்பதை மிகப் பெரும்பாலான மக்களுக்கு உணர்த்தி இருந்தன. எனவே 1917 இறுதியிலும் 1918 ஆரம்பத்திலும் பெத்ரோகிராத், மாஸ்கோ, உரால் பிரதேசம், தோன் பிரதேசம் ஆகியவற்றில் புரட்சிக்கு எதிராகக் கிளம்பிய கலகங்களை எளிதாக அடக்க முடிந்தது. சோவியத் ஆட்சி மிகக் குறுகிய காலத்திற்குள் நாட்டில் நிலை பெற்று அதன் விரிந்து பரந்த நிலப்பரப்பில் வெற்றி வலம் வந்தது.

தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்ற பின் கம்யூனிஸ்டுகள், உழைப்பாளிகள் கட்சியின் முதன்மையான கடமை நாட்டை நிர்வகிக்கக் கற்றுக்கொள்வதே என்று லெனின் கூறினர். தொழிலாளர்களும் விவசாயிகளும் இந்தக் கலையை பூர்ஷ்வா வர்க்கத்தினிடமிருந்து அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடாது. பூர்ஷ்வா வர்க்கத்தால் அமைக்கப்பட்ட அரசு இயந்திரத்தைப் பயன்படுத்துவதும் முடியாதிருந்தது. பூர்ஷ்வா அரசும் அதன் நிர்வாக இயந்திரமும் உழைப்பாளிகளை அடக்கி ஒடுக்குவதற்காக அமைக்கவும் செவ்வைப்படுத்தவும் பட்டிருந்தன. அதை அஸ்திவாரத்தோடு பெயர்த்துத் தகர்த்துவிட்டு பூர்ஷ்வாக்கள் இல்லாத, பூர்ஷ்வாக்களுக்கு எதிரான அரசை—தொழிலாளர்கள், விவசாயிகளின் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை—அமைக்க வேண்டி இருந்தது. இது வரலாறு அதுவரை கண்டிராத புதிய அரசு.

இத்தகைய அரசை அமைக்கையில் சோவியத் ருஷ்யாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தின் அமைச்சகங்களை ஒழித்துவிட்டார்கள். அவற்றுக்குப் பதிலாக மக்கள் கமிஸாரகங்கள் நிறுவப்பட்டன. பிராந்தியங்களில் பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவ ஆட்சியின் எல்லா உறுப்புக்களும் அகற்றப்பட்டன. நிலப்பிரபுக்களுக்கும் பூர்ஷ்வாக்களுக்கும் தொண்டாற்றிவந்த பழைய அரசு இயந்திரம்—போலீஸ், அதிகாரவர்க்க, நீதிமன்ற, இராணுவ இயந்திரம்—உடைத்துத் தகர்க்கப்பட்டுவிட்டது. மக்கள் நீதிமன்றங்களும் மக்கள் மிலீஷியாவும் அமைக்கப்பட்டன. புரட்சி எதிர்ப்பையும் மறைமுக அழிவு வேலையையும் ஒடுக்கும் பொருட்டு அகில ருஷ்ய அசாதாரணக் கமிஷன் (இது ருஷ்யச் சொற்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து ''செக்கா'' என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது) உருவாக்கப்பட்டது. நாட்டின் எல்லா மக்கள் இனங்களதும் ஒத்துழைப்பைச் சீர்படுத்துவதற்காக நாட்டின விவகார மக்கள் கமிஸாரகம் (நர்கோம் நாத்ஸ்) அமைக்கப்பட்டது. போல்ஷிவிக் கட்சி தனது மிகப் பிரபல தலைவர்களை மக்கள் கமிஸார்களாக நியமித்தது இவர்களாவர் த்ஸெர்ழீன்ஸ்கி, லுனச்சார்ஸ்கி, மென்ழீன்ஸ்கி, பெத்ரோவ்ஸ்கி, ஸ்தாலின், ஷ்லீஹ்தெர் முதலியோர். சோவியத் அரசின் உச்ச சட்ட நிர்மாண மன்றம் ஆன அகில ருஷ்ய மத்தியச் செயற் குழுவின் தலைவர் பதவி ஏற்றார் ஸ்வெர்திலோவ்.

சோஷலிஸ அரசு நிர்வாக இயந்திரத்தை அமைப்பதில் பல இடர்ப்பாடுகள் நேர்ந்தன. விஷயம் தெரிந்தவர்கள் போதவில்லை. பழைய நிர்வாக இயந்திரத்தின் அலுவலர்கள் புரட்சி எதிர்ப்புக் கட்சிகளின் பாதிப்பினால் சோவியத் ஆட்சிக்குப் பணி ஆற்ற மறுத்து விட்டார்கள். அவர்களில் பலர் தாமே பூர்ஷ்வா அல்லது நிலப்பிரபுத்துவ வட்டாரங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஆனாலும் போல்ஷிவிக் கட்சி அலுவலர்களின் மறைமுக அழிவு வேலையாலோ தேர்ந்த ஊழியர்கள் போதாமையாலோ நெஞ்சம் கலங்கவில்லை. அது பொது மக்களை அணுகியது. ஒழுங்கமைப்புத் திறமைகள் படைத்த ஆயிரக் கணக்கான முன்னணித் தொழிலாளர்களும் படைவீரர்களும் விவசாயிகளும் மக்களிடையே இருந்து முன்



சோவியத் அரசுக்குத் தலைமை ஏற்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்.

முதலாவது சோவியத் அரசாங்க முதல்வர், மக்கள் கமிஸாரவைத் தலைவர் விளாதீமிர் இலியீச் லெனின்
யா. ஸ்வெர்திலோவ், ஃபெ. த்ஸெர்ழின்ஸ்கி, மி. கலீனின்,
அ. லுனச்சார்ஸ்கி, வி. மென்ழீன்ஸ்கி,
கி. பெத்ரோவ்ஸ்கி, நி. ஸிமாஷ்கோ,
இ. ஸ்தாலின், பி. ஸ்துச்கா,
அ. ஷ்லீஹ்தர்.

வந்தார்கள். இவர்களையும் அரசியல் உணர்வு மிக்கவர்களும் மக்களுடன் தொடர்பு உள்ளவர்களும் ஆன அறிவுஜீவிகளையும் கொண்டு சோவியத் ஆட்சியின் மைய, வட்டார உறுப்புக்களின் புதிய நிர்வாக இயந்திரம் நிருமிக்கப்பட்டது. சோவியத் அரசு இயந்திரத்தில் வேலை செய்வதற்குத் தனது சிறந்த ஊழியர்களை அனுப்பியது போல்ஷிவிக் கட்சி. அதோடு கூடவே பூர்ஷ்வா நிபுணர்களுடையவும் அலுவலர்களுடையவும் அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ளவும் அது முயன்றது. புதிய ஆட்சியுடன் ஒத்துழைப்பதில் அவர்களுக்கு அக்கறை உண்டாக்கும் பொருட்டு அவர்களுக்குக் கூடுதலான சம்பள விகிதங்கள் ஏற்படுத்தப் பட்டன.

புதிய அரசு இயந்திரம் பெரிதாக இல்லை. சோவியத் அரசாங்க அலுவலர்கள் பெற்ற சம்பளம் தொழிலாளர்களின் சராசரி ஊதியத்தைவிட அதிகமாய் இல்லை. அரசை நிர்வகிப்பது பணக்காரர்களால்தான் முடியும் என்ற, சுரண்டு வோரால் பல நூற்றாண்டுகளாகப் புகட்டப்பட்ட அசட்டுத் தனமான மூடநம்பிக்கை தகர்ந்துவிட்டது. சோவியத் அரசை நிறுவியபின் தொழிலாளர்களும் விவசாயிகளும் அதை நிர்வகிப்பதற்கு விடாமுயற்சியுடன் பயிலத் தொடங்கினர்கள்.

புதிய இராணுவத்தை அமைப்பது எல்லாவற்றிலும் கடினமான காரியங்களில் ஒன்றாக இருந்தது. உள்நாட்டுப் புரட்சி எதிர்ப்புச் சக்திகள் மட்டுமே அல்ல, உலக ஏகாதிபத்தியமும் தொழிலாளர், விவசாயிகள் நாட்டை அமைதியாய் இருக்க விட மாட்டா என்பதை போல்ஷிவிக் கட்சி புரிந்து கொண்டது. சோவியத் அரசையும் புரட்சியின் சாதனைகளையும் இராணுவ பலத்தால் காப்பதற்கு ஏற்பாடுகள் செய்வது அவசியமாய் இருந்தது. கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் நடந்த யுத்தத்தால் களைத்துச் சலித்துப் போயிருந்த பழைய இராணுவம் இதற்கு வல்லமை அற்றதாக இருந்தது. அதைக் கலைத்துவிடுவது அவசியம் ஆயிற்று. செங்காவல் படைப் பிரிவுகள் நாட்டின் தற்காப்புக்குப் போதியவையாக இல்லை. எண்ணிக்கையில் பெருத்த பகைவர்களுக்குமுன் சோவியத் குடியரசு அனேகமாக ஆயுத பலம் அற்றதாக இருந்தது. தொழிலாளர், விவசாயிகளின் செஞ்சேனை நிறுவப்படு

வது 1918 ஜனவரி மாதம் தொடங்கியது. சோவியத் ஆட்சி, அதை ஒழுங்கமைக்கும் பணியில் பழைய சேனையின் இராணுவ நிபுணர்கள்—இராணுவ அதிகாரிகள், ஜெனரல்கள், அட்மிரல்கள்—பலரைத் தன் கண்காணிப்பின்கீழ் ஈடுபடுத்தியது.

பகிரங்கப் போராட்டத்தில் முறியடிக்கப்பட்ட காடெட்டுகள், வலது சாரி எஸ் ஆர்கள், மென்ஷிவிக்குகள் ஆகியோரின் புரட்சி எதிர்ப்புக் கட்சிகள் அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தின் துணையால் சோவியத் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டன. ஜார் ஆட்சி அகற்றப்பட்ட பின் தாற்காலிக அரசாங்கம் அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தைக் கூட்டக் கடமைப்பட்டிருந்தது. நாட்டில் அரசு ஆட்சியின் வடிவத்தை நிர்ணயிப்பது இந்த மன்றத்தின் வேலையாய் இருந்தது. ஆயினும் பூர்ஷ்வாக் கட்சிகளும் இணக்கக் கொள்கையினர் கட்சிகளும் இந்த மன்றத்தைக் கூட்டுவதை எவையேனும் காரணங்களைக் காட்டித் தாமதப்படுத்திவந்தன.

அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தை விரைவில் கூட்டும்படி கோரி வந்த ஒரே கட்சி போல்ஷிவிக் கட்சிதான். ஆட்சிக்கு வந்ததும் போல்ஷிவிக்குகள் தங்கள் வாக்கைக் காப்பாற்றினர்கள். மன்றத்தைக் கூட்டினர்கள். அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தைப் பற்றிய பிரமை விரிவான மக்கள் திரளிடையே இன்னமும் வலுவாய் இருந்தது என்பதை போல்ஷிவிக்குகள் அறிந்திருந்தார்கள். தலைநகரிலிருந்து தொலைவில் இருந்த பிராந்தியங்களில் அரசியல் சட்ட அமைப்பு மன்றத்துக்காக நடந்த தேர்தல்களில் வலது சாரி எஸ் ஆர்கள் பெரும்பான்மை வாக்குகள் பெற்றிருந்தார்கள் என்பதும் இவற்றின் துணையால் ஆட்சியைக் கைப்பற்ற அவர்கள் விரும்பினர்கள் என்பதும் தெரிந்திருந்தன. அரசியல் சட்ட அமைப்பு மன்றம் அக்டோபர் புரட்சியின் சாதனைகளையும் சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரஸ் நிறைவேற்றிய அரசாணைகளையும் உறுதிப்படுத்தும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். 1918 ஜனவரி மாதம் கூடிய அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தில், நாட்டின் ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களின் கைகளிலேயே முழுமையாக நிலவுவதாக ஒப்புக்கொள்ளும் படியும், சமாதானத்தையும்

நிலத்தையும் பற்றிய அரசாணைகளையும் சோவியத் அரசாங்கத்தின் சமாதான வெளிநாட்டுக் கொள்கையையும் ஆமோதிக்கும்படியும் போல்ஷிவிக்குகளும் இடதுசாரி எஸ் ஆர்களும் யோசனை முன்வைத்தார்கள். இது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு ஆமோதிப்பு தெரிவிப்பது என்று அர்த்தப்படும். ஆனால் மன்றத்தின் வலதுசாரி எஸ் ஆர்களது பெரும்பான்மை இந்த யோசனையை விவாதிக்கக்கூட மறுத்து விட்டது. இவ்வாறு செய்ததன் வாயிலாக அது தன்னை மக்களின் விருப்பத்துக்கு எதிராக நிறுத்திக் கொண்டது. எனவே சோவியத் ஆட்சிக்கு அரசியல் சட்ட அமைப்பு மன்றத்தைக் கலைப்பது தவிர வேறு வழி இல்லாமல் போய் விட்டது.

விரைவில் கூடிய தொழிலாளர், படைவீரர், விவசாயிப் பிரதிநிதிகள் சோவியத்துக்களின் மூன்றுவது அகில ருஷ்யக் காங்கிரஸ் இந்தச் செய்கைக்கு ஒப்புதல் அளித்தது. லெனினால் எழுதப்பெற்று கம்யூனிஸ்ட் பிரிவினால் பிரேரிக்கப்பட்ட ''உழைப்பாளிகள், சுரண்டப்படும் மக்கள் ஆகியோரின் உரிமைப் பிரகடனத்தை'' அது அங்கீகரித்தது. பிரகடனத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: ''ருஷ்யா தொழிலாளர் படைவீரர், விவசாயிப் பிரதிநிதிகள் சோவியத்துக்களின் குடியரசாக அறிவிக்கப்படுகிறது.'' ருஷ்ய சோவியத் குடியரசு விடுதலை பெற்ற நாட்டினங்களின் சுய விருப்பத்தால் அமைந்த ஐக்கியத்தின் அடிப்படையில் சோவியத் நாட்டினக் குடியரசுகளின் கூட்டரசாக (சம உரிமை கொண்டவற்றின் ஒன்றிப்பாக) ஸ்தாபிக்கப்பட்டது. சோவியத்துக்களின் மூன்றுவது காங்கிரஸ் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் சாதனைகளை, சோவியத் அமைப்பின் ஸ்தாபனத்தை, சட்ட பூர்வமாக உறுதிப்படுத்தியது. ''உழைப்பாளிகள், சுரண்டப்படும் மக்கள் ஆகியோரின் உரிமைப் பிரகடனம்'' உலக வரலாற்றின் மிகப் பிரபலமான சாஸனம் ஆகும். பூர்ஷ்வாப் புரட்சிகளின் எல்லாச் சாஸனங்களிலிருந்தும் அது கோட்பாட்டில் வேறுபடுகிறது. பதினெட்டாம் நூற்றுண்டில் நடந்த பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட ''மனிதனுடையவும் குடிமகனுடையவும் உரிமைப் பிரகடனம்'' சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் சோதரத்துவத்தையும் அறிவித்தது. ஆனால் ஆட்சிக்கு வந்த பூர்ஷ்வா

வர்க்கம் இந்த உரிமைகளைச் செயல்படுத்துவதற்கு எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. உழைப்பாளிகளுக்கு சுதந்திரமோ சமத்துவமோ சோதரத்துவமோ கிடைக்கவில்லை. பிரெஞ்சுப் பிரகடனம் பூர்ஷ்வா ஆட்சி அதிகாரம் வலுப்படவும் முதலாளித்துவம் நிலை பெறவும் திரளான பொது மக்கள் மேலும் தீவிரமாகச் சுரண்டப்படவுமே துணை செய்தது. ருஷ்யாவில் ஆட்சிக்கு வந்த பாட்டாளி வர்க்கமோ சோவியத் பிரகடனத்தில் அறிவிக்கப்பட்ட உரிமைகள் நடப்பில் வருவதற்கு வகை செய்தது. அது உழைப்பாளி வர்க்கங்களின் உண்மையான விருப்பத்தைப் பிரதிபலித்தது, அவற்றின் அதிகாரத்தை நிலை நாட்டியது, மனிதனை மனிதன் சுரண்டும் வழக்கத்தை ஒழிக்கவும் சோஷலிஸத்தைக் கட்டி அமைக்கவும் கங்கணம் கட்டிக் கொண்டது.

ஜனநாயக மாற்றங்கள்

சோஷலிஸத்தை நிறுவுவதற்கு நாட்டில் இடைக் காலப் போக்குகள், பண்ணை அடிமைமுறை ஆகியவற்றின் மீத மிச்சங்களை ஒன்று விடாமல் ஒழிப்பது இன்றியமையாதது என்று கம்யூனிஸ்ட் கட்சி புரிந்து கொண்டது. ஆறே வாரங்களில் இவை துடைத்து அகற்றப்பட்டு விட்டன. நிலம் பற்றிய அரசாணை விவசாயத்தில் பண்ணை அடிமை முறையின் மீத மிச்சங்களை வேரோடு களைந்து எறிந்துவிட்டது. நாட்டின் மக்கள் அந்தஸ்துப்படி (மேற்குடியினர், வணிகர்கள் முதலிய) வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததும் பட்டங்களும் விருதுகளும் ரத்து செய்யப்பட்டன. நாட்டின் மக்கள் அனைவரும் ருஷ்ய சோவியத் குடியரசின் குடிகள் என்று அழைக்கப் படலாயினர். சோவியத் ஆட்சி மனச்சான்று சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது. மதஸ்தாபனங்கள் அரசிலிருந்து தனிப்படுத்தப்பட்டன. எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றவும் ஒரு மதத்தையுமே பின்பற்றாமல் இருக்கவும் ஒவ்வொரு குடிமகனும் சுதந்திரம் பெற்றிருந்தான். பள்ளிகள் மதஸ்தாபனங்களிலிருந்து தனிப் பிரிக்கப்பட்டன. மத விதிகளின் போதனையும் மாணவர்கள் மீது மத ஸ்தாபன ஊழியர்கள் செல்வாக்கு செலுத்துவதற்கான எல்லாப் பிற வடிவங்களும் நீக்கப்பட்டன. மாதர்கள் வரலாற்றில் முதன் முறையாக ஆடவருக்குச் சமமான உரிமைகள் பெற்றார்கள்.

குடும்பம், திருமணம் ஆகியவை பற்றியும் தாய்மை, சேய் மைப் பாதுகாப்பு பற்றியும் சட்டங்கள் இயற்றப்பட்டன. மாதர்கள், ஆடவர்களின் உழைப்புக்கு ஊதியத்தில் இருந்த ஏற்றத் தாழ்வு அகற்றப்பட்டது. கல்வி பெறவும் அரசாங்க, சமூகப் பணிகளில் ஈடுபடவும் சொத்து வைத்திருக்கவும் மாதருக்குச் சம உரிமைகள் ஏற்படுத்தப்பட்டன. உழைப் பாளி மக்கள் உண்மையான பேச்சு சுதந்திரமும் அச்சக வெளியீட்டு சுதந்திரமும் கூட்டம் கூடும் உரிமையும் தொழிற்சங்கங்களும் பிற சமூக ஸ்தாபனங்களும் நிறுவும் உரிமையும் பெற்றார்கள்.

சோவியத் ஆட்சி 1918 நவம்பர் மாதத் தொடக்கத்தில் ''ருஷ்யாவின் மக்கள் இனங்களின் உரிமைப் பிரகடனத்தை'' அறிவித்தது. இந்தப் பிரகடனம் ருஷ்யாவின் எல்லா நாட் டினங்களதும் சமத்துவத்தைச் சட்ட பூர்வமாக நிலை நாட் டியது. ருஷ்யர் அல்லாத நாட்டினங்கள் ஒடுக்கப்படுவதற்கு முடிவு கட்டப்பட்டது. தனிப்பிரிந்து சுதந்திர அரசுகளாக அமையும் உரிமை உள்பட, சுயநிர்ணய உரிமை எல்லா நாட்டினங்களுக்கும் வழங்கப்பட்டது. போல்ஷிவிக் கட்சி வரலாற்றுப் போக்கில் உருவான ருஷ்ய அரசைத் துண்டுக ளாகப் பிளக்க விரும்பியது என்று இதற்கு அர்த்தம் அல்ல. மாறுக ஒன்றித்த பல நாட்டினக் குடும்பத்தில் புது வாழ்வு அமைப்பது உழைப்பாளிகளுக்கு எளிது என்றே அது கருதியது. ஆனால் ஒரே அரசில் மக்கள் இனங்களின் ஒன்றிணைவு மக்கள் இனங்களால் **தாமாகவே விரும்பிச்** செய்யப்பட வேண்டும் என்று போல்ஷிவிக் கட்சி எண்ணியது.

சோவியத் அரசாங்கம் பின்லாந்தினதும் உக்ரேனுடை யவும் சுதந்திர அரசுரிமையை ஒப்புக் கொண்டது. ஜார் அரசாங்கத்தாலும் தாற்காலிக அரசாங்கத்தாலும் சீனா, ஆப்கனிஸ்தான், ஈரான், துருக்கி ஆகியவை மீது சுமத்தப்பட் டிருந்த சம உரிமையற்ற எல்லா உடன்படிக்கைகளையும் செல்லுபடி ஆகாதவை என அது அறிவித்தது. இந்தச் செயல் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாட்சி முறைக்கும் கொடுக்கப்பட்ட பலத்த அடியாக விளங்கியது. மக்கள் இனங்களுக்கு இடையே உறவுகளில் கோட்பாட்டு வகையில் புதிய கொள்கை—எல்லா மக்கள் இனங்களதும் அரசுரிமைக்கு

மதிப்பும் முழு சமத்துவமும், அவற்றின் உள் விவாரங்களில் தலையிடாமையும் கொண்ட கொள்கை—கடைப்பிடிக்கப்படுவதை எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளிகள் கண்டார்கள். சோவியத் அரசாங்கத்தின் உறுப்பாக விளங்கிய நாட்டின விவகாரங்கள் பற்றிய மக்கள் கமிஸாரகம் முன்னர் ஒடுக்கப்பட்டுக் கிடந்த நாட்டினங்களுக்குத் தங்கள் அரசு நிர்வாகத்தை அமைப்பதிலும் தங்கள் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதிலும் உதவியது.

தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்கள் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்காகவே புரட்சி நடத்துகிறார்கள், எனவே, புரட்சிக்குப் பின்னர் தங்கள் நிலைமை சீர்படுவதை அவர்கள் உடனடியாக உணரும்படி செய்வது அவசியம் என்று சுட்டிக்காட்டினார் லெனின். சோவியத் அரசாங்கம் மிகக் கடினமான நிலைமைகளில் உழைப்பாளிகளின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயன்ற வகையில் எல்லாம் பாடுபட்டது. உணவுப் பண்ட வினியோகத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு உழைப்பாளிகளுக்கு, முதன்மையாகத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் உணவுப் பண்டங்கள் சரிவரக் கிடைக்க அது வகை செய்தது. தங்கள் குழந்தைகளுக்கு இலவசப் பள்ளிக் கல்வி அளிக்கவும் இலவச மருத்துவ உதவி பெறவும் உரிமை எல்லா உழைப்பாளிகளுக்கும் கிடைத்தது. உலகிலேயே முதலாவதாக சோவியத் நாட்டில் எட்டு மணி நேர வேலை நாள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. தொழிலாளர்களையும் அலுவலக ஊழியர்களையும் நோயுற்ற சமயத்திலும் வேலைத்திறனை இழந்த சந்தர்ப்பத்திலும் வேலை கிடைக்காமல் இருக்கும்போதும் பராமரிப்பதற்கான செலவை அரசு தன்மீது ஏற்றுக் கொண்டது.

போல்ஷிவிக் கட்சியும் சோவியத் ஆட்சி உறுப்புக்களும் திரளான உழைப்பாளி மக்களை அரசு நிர்வாகத்தில் செயலூக்கத்துடன் பங்கு கொள்ள அழைத்தன, ஜனநாயக சுதந்திரங்களைப் பயன்படுத்த அவர்களுக்குக் கற்பித்தன. இதனால் உழைப்பாளிகளின் செயலூக்கம் வளர்ந்தது, அவர்களுடைய அரசியல் உணர்வு மிகுந்தது, அடுத்து வந்த சோஷலிஸ

மாற்றங்கள் எளிதாயின. இத்தகைய பயிற்சி சோஷலிஸப் புரட்சியின் உள் உறுப்பு ஆயிற்று.

யுத்தத்திலிருந்து வெளியேற்றம்

போல்ஷிவிக் கட்சி சோவியத் ஆட்சியின் தொடக்க நாட்கள் முதலே சமாதானத்துக்காக ஊக்கத்துடன் போராட்டம் நடத்தலாயிற்று. ஆனால் பொது ஜனநாயக சமாதானம் செய்துகொள்வதற்கு சோவியத் அரசாங்கம் விடுத்த வேண்டுகோளையும் யோசனையையும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் ஆகியவற்றின் ஏகாதிபத்திய அரசாங்கங்களும் மற்ற முன்னாள் கூட்டணி நாடுகளும் நிராகரித்துவிட்டன. அப்போது சோவியத் அரசு மக்களின் சமாதான விருப்பத்தைப் பிரதிபலித்தவாறு ஜெர்மனியுடனும் அதன் கூட்டணி நாடுகளுடனும் பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியது. பேச்சுவார்த்தைகளின் போக்கில் மற்ற நாடுகளும் அவற்றில் கலந்து கொள்ளும் என்று சோவியத் அரசு நம்பியது. ஜெர்மன் அரசாங்கம் போர் நிறுத்தத்துக்கு இசைந்தது. ஆனால் பேச்சு வார்த்தைகளின் போது அது சமாதானத்துக்குக் கொள்கைக்கார நிபந்தனைகள் விதித்தது.

ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் படைகள் கைப்பற்றியிருந்த போலந்து, லித்துவானியா, லாட்வியாவின் பகுதி, பேலோருஷ்யாவின் பகுதி ஆகியவற்றை நிலையாகத் தங்கள் வசம் வைத்துக்கொள்ளவும் உக்ரேனிய தேசியவாதிகளின் உதவியுடன் உக்ரேனியாவை ஆக்கிரமித்துக் கொள்ளவும் முயன்றார்கள். இந்தக் கொடும் நிபந்தனைகளை ஏற்பது தவிர சோவியத் ஆட்சிக்கு அப்போது வேறு வழி இல்லாதிருந்தது. போரிடுவதற்கு அதனிடம் வலிமை இல்லை. நாட்டில் சீரழிவு தலைவிரித்து ஆடியது. நான்கு ஆண்டு யுத்தத்தால் களைத்துச் சோர்ந்திருந்த பழைய சேனை போரிடும் திறனை இழந்து விட்டது. சேனை இல்லாமல் போரில் சிக்கிக் கொள்வது புரட்சியை மாய்ப்பதற்கும் சோவியத் ஆட்சியைத் தாக்குதலுக்கு இரை ஆக்குவதற்கும் ஒப்பாய் இருந்தது.

ஜெர்மனியுடன் கடுமையான சமாதான உடன்படிக்கையைத் தாமதம் இன்றிச் செய்து கொள்ள வேண்டும் என்றார்கள் லெனினும் அவருடன் ஒத்த கருத்து உள்ளவர்களும்.

ஆனால் சமாதானத்தை எதிர்த்தவர்களும் கட்சியில் இருந்தார்கள். சோவியத் அரசு ஏகாதிபத்தியவாதிகளுடன் எவ்வித சமரசமும் செய்து கொள்ளக் கூடாது என்றும் பூர்ஷ்வா அரசுகளுடன் பாட்டாளி வர்க்க அரசின் ஒப்பந்தங்கள் கோட்பாட்டு நோக்கில் அனுமதிக்கத் தக்கவை அல்ல என்றும் அவர்கள் கூறினார்கள். சோவியத் குடியரசு உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து என்ன வந்தாலும் வரட்டும் என்று போராட்டம் நடத்த வேண்டும் என்றும் தன்னுடைய ஆயுத பலத்தால் மேற்கு ஐரோப்பாவுக்குப் புரட்சியைக் கொண்டு வர வேண்டும் என்றும் அவர்கள் கருதினார்கள். போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் சிலரும் இந்த நோக்கைக் கொண்டிருந்தார்கள். உள்நாட்டுப் புரட்சி எதிர்ப்பாளர்களுடன் போராட்டத்தில் சோவியத் ஆட்சியின் முதல் வெற்றிகள் அவர்களைத் தலை கிறுங்க வைத்திருந்தன. தங்கள் புரட்சித்தன்மை பற்றி அவர்கள் இறுமாப்பு கொண்டிருந்தார்கள், தங்களை ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' என்று அழைத்துக் கொண்டார்கள்.

போல்ஷிவிக் கட்சியில், அதன் தலைமை உறுப்பில் கடினமான நிலைமை உருவாயிற்று. ''இடது சாரிக் கம்யூனிஸ்டுகள்''சமாதான உடன்படிக்கையின் ஆதரவாளர்களான லெனினுக்கும் அவருடன் கருத்து ஒருமை கொண்டவர்களுக்கும் என்ன என்னவோ பட்டங்கள் சூட்டினார்கள். உலகப் புரட்சியின் நலன்களின் பொருட்டு சோவியத் ஆட்சியையே கூட பலி கொடுத்துவிடலாம் என்று தங்களுக்குள் பேசி முடிவு செய்து கொண்டார்கள் இந்த ''அதிதீவிர புரட்சிவாதிகள்.'' அவர்களுடைய இந்த அறிக்கையை விந்தையானது, விகிருதமானது என்று கூறினார் லெனின். ''இடதுசாரியினரின்'' துர்ச்சாகசப் போக்கையும் அவர்களுடைய குட்டி பூர்ஷ்வாத் தன்மையையும் லெனின் தமது பல பேச்சுக்களில் படிப்படியாக வெளிப்படுத்தினார். கம்யூனிஸ்டுகளின் ஆக உயர்ந்த சர்வதேசீயக் கடமை சோஷலிஸத்தின் அரணான சோவியத் குடியரசை நிலைநிறுத்திக் காப்பது தான் என்று அவர் விளக்கினார். சோவியத் குடியரசு நிலவுவதும் அதன் உதாரணமும் உலகப் புரட்சியின் வளர்ச்சிக்கு வேறு எதையும்விட அதிகமாகத் தொண்டு ஆற்றும் என்றார் அவர்.

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' எதிர்ப்பு சோவியத் நாடு உடனே சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள இடை யூறாய் இருந்தது. சமாதான உடன்படிக்கையில் கையெழுத்து இடுவதைத் திரோத்ஸ்கியும் எதிர்த்தார். அயல் விவகார மக்கள் கமிஸார் என்ற வகையில் ஜெர்மனியுடன் நடந்த பேச்சுவார்த்தைகளில் சோவியத் பிரதிநிதிக் குழுவின் தலை வராக இருந்த திரோத்ஸ்கி, ஜெர்மனி இறுதி எச்சரிக்கை விடுக்கும் பட்சத்தில் சமாதான உடன்படிக்கையில் கை யெழுத்து இடும்படி மக்கள் கமிஸாரவைத் தலைவர் லெனின் இட்டிருந்த உத்தரவை நிறைவேற்றவில்லை. இந்த வாய்ப் பைப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மானியர் தங்கள் படை களுக்கு முன்னேறும்படி கட்டளை இட்டு, சமாதான உடன் படிக்கை மசோதாவில் குறித்திருந்தவற்றைக் காட்டிலும் மிக அதிகமான நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அளவு கடந்த ஆயுத பலம் பெற்றிருந்த ஜெர்மானியப் படை களைப் பெத்ரோகிராதிலிருந்து சிறிது தூரத்தில் தேக்கி நிறுத்துவதற்கு இளம் சோவியத் குடியரசு அரும்பாடுபட நேர்ந்தது.

ஜெர்மானியர்களுடன் பேச்சுவார்த்தையில் திரோத்ஸ்கி இவ்வாறு நடந்து கொண்டது தற்செயலாக அல்ல. ஒரு தனி நாட்டில் சோஷலிஸம் வெற்றி பெற முடியும் என்று அவர் நம்பவில்லை. சோவியத் ருஷ்யாவால் தன்னந்தனியாக உலக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்க முடியாது என்று அவர் நினைத்தார். ஐரோப்பிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம் ஆட்சியை வென்று கைப்பற்றுவதுதான் சோவியத் ருஷ்யா வைக் காக்க முடியும் என்பது அவர் கருத்து. ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளைத் தாக்குப் போருக்குத் தூண்டிய போது, இந்தத் தாக்குதல் ஜெர்மன் மக்களுக்கு எரிச்சல் ஊட்டும், ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் தூண்டிவிடும், இந்தப் புரட்சி சோவியத் குடியரசின் உதவிக்கு வரும் என்று திரோத்ஸ்கி நம்பினார். ஆனால் அவருடைய நடத்தை துர்ச்சாகசச் செயலாக விளங்கியது. புரட்சி எந்த நாட்டில் எப்போது நிகழும் என்று ஒருவருக்கும் முன் கூட்டித் தெரியாது, தெரியவும் முடியாது. குறித்த நாட்டில், குறித்த நேரத்தில் புரட்சி நிகழும் என்ற கணக்கீட்டின்

அடிப்படையில் செயல் தந்திரம் வகுப்பது அடி மடத்தனம் என்றும் அது சோஷலிஸக் குடியரசுக்கும் உலக விடுதலை இயக்கத்துக்கும் மிகப் பெருத்த தீங்கு விளைக்கக் கூடும் என்றும் லெனின் கருதினார். இந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறே நடந்தது. ஜெர்மனியில் புரட்சி அப்போது நிகழவில்லை. ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளோ, தங்கள் தாக்குதலினால் சோவியத் அரசின் வாழ்வையே ஆபத்துக்கு உள்ளாக்கினார்கள், அதனிடமிருந்து முன்னிலும் அதிக நிலப்பரப்பைத் துணித்து எடுத்துக் கொண்டார்கள்.

போல்ஷிவிக் கட்சி சமாதானத்தின் எதிரிகளுடைய எதிர்ப்பை முறித்து விட்டது. சோவியத் அரசு ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தத்தில் 1918, மார்ச் 3ந் தேதி கையெழுத்து இட்டது. பேச்சுவார்த்தைகள் நடந்த பிரேஸ்த் என்னும் (பேலோருஷ்ய) நகரின் பெயரால் இது பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை என அழைக்கப்பட்டது.

சமாதான உடன்படிக்கை கையெழுத்தானதால் கட்சிக்குள் போராட்டம் நின்றுவிடவில்லை. கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் புஹாரினது தலைமையில் ''இடதுசாரியினர்,'' ஒரு தனி நாட்டில் சோஷலிஸம் வெற்றி பெறுவது சாத்தியம் என்பதைத் திரோத்ஸ்கி போலவே மறுத்தார்கள். சோவியத் ருஷ்யாவில் அக்டோபர் புரட்சியின் சாதனைகளைக் காப்பது வெற்றிகரமான உலகப் புரட்சியின் நிலைமைகளிலேயே முடியும் என்றும் உலக ஏகாதிபத்தியத்துடன் போர் புரிவதன் வாயிலாக இந்தப் புரட்சிக்கு முன்னேற்பாடு செய்வது அவசியம் என்றும் அவர்கள் கருதினார்கள். புரட்சியை வெளியிலிருந்து ''தூண்டிவிடும்'' சித்தாந்தம் மார்க்ஸீயத்துடன் எவ்விதப் பொதுமையும் கொண்டது அல்ல என்று விரிவாக விளக்கினார் லெனின். புரட்சிகளை ஏற்றுமதி செய்ய முடியாது. புரட்சிகள் முதலாளித்துவ நாடுகளுக்கு உள்ளே வர்க்க முரண்பாடுகள் முதிர்வதன் விளைவாகவே தோன்றுகின்றன என்றும் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு, ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் தரத்தையும் மற்ற உழைப்பாளி வட்டாரங்களுடன் அதன் தொடர்புகளையுமே சார்ந்திருக்கின்றன என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிப்

பேசுகையில், சமாதான உடன்படிக்கை ''சரணாகதி'' என்றும் ''சர்வதேச மூலதனத்துக்கு எதிராக யுத்தம்'' மட்டுமே ''ஒரே வருங்கால வாய்ப்பாக'' விளங்குவதாகவும் பன்னி உரைத்தார்கள் ''இடது சாரியினர்.'' முதலாளித்துவ நாடுகளுடன் சோவியத் குடியரசு எவ்விதத்திலும் ''சமாதான உடன்வாழ்வு'' நடத்த முடியாது என்றும் அவை உடன் வாழ முடியும் என்று நினைப்பது வீண் பிரமை என்றும் புஹாரின் வலிந்து உரைத்தார். லெனின் ''இடதுசாரியினரை'' கண்டனம் செய்தார். முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்ட நிலையில் முதலாவது சோஷலிஸ அரசு நிலவுவது வரலாற்று நோக்கில் தவிர்க்க முடியாதது என்றூர் அவர். சோஷலிஸம் ஒரு நாட்டில் முதலில் வெற்றி பெறுவது என்றூல் மற்ற நாடுகளில் முதலாளித்துவம் நிலவும் என்று அர்த்தம். அப்படி இருக்கும்போது. சோஷலிஸக் கட்டுமானத்துக்கும் அதனூலேயே உலகம் முழுவதிலும் சோஷலிஸத்தின் வெற்றிக்கும் மிகச் சாதகமான நிலைமைகளை உருவாக்கக் கூடிய வெளி நாட்டுக் கொள்கைக் கோட்பாடுகளை சோஷலிஸ அரசுக்கு வகுத்துத் தருவதும் முதலாளித்துவ அரசுகளுடன் அதன் பரஸ்பர உறவுகளுக்கு ஏற்ற நியமங்களை உருவாக்குவதும் கட்சியின் கடமை எனக் கூறினூர் லெனின்.

போல்ஷிவிக் கட்சியின் அணிகளில் ''இடதுசாரித் தன்மை கொண்ட'' குட்டி பூர்ஷ்வா ஊசலாட்டங்கள் நேர்ந்தது இது முதல் தடவை அல்ல. அந்தக் காலத்தில் நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலராய் இருந்தார்கள் சிறு உடைமையாளர்களும் சிறு நிலச் சொந்தக்காரர்களும். அவர்களுடைய தனி வகைப்பட்ட நிலைமையே இந்த ஊசலாட்டங்களுக்குக் காரணம். நிலையுறுதி இல்லாமையும் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குத் தாவுவதும் இந்த சமுதாய வட்டாரத்தினரின் சிறப்பு இயல்பு ஆகும். குட்டி பூர்ஷ்வா ''அதிதீவிரப் புரட்சித் தன்மைக்கு'' சுலபமாக மாறுவான், ஆனூல் கஷ்டங்கள் எதிர்ப்பட்டதும் எளிதாக உளம் சோர்ந்து ஏங்கிப் போவான். தொழிலாளி வர்க்கத்துக்கு இயல்பான தாங்குதிறனையும் ஒழுங்கமைப்பையும் கட்டுப்பாட்டையும் நிலையுறுதியையும் காட்டுவதற்கு அவன் வல்லவன் அல்ல. அரசியல் வளர்ச்சிப் போக்கின் கடினமான சந்தர்ப்

பங்களில், வரலாற்றின் திடீர்த் திருப்பங்களில், குட்டி பூர்ஷ்வாப் புரட்சிவாதிகளின் வெடி சிதறும் ''புரட்சிகர'' வாய்வீச்சுகளுக்கும் அவர்களுடைய செயல்களுக்கும் இடையே முரண்பாடுகள், ஒரு நாட்டில் குட்டி பூர்ஷ்வா வட்டாரம் எண்ணிக்கையில் அதிகமாய் இருப்பதற்கு ஏற்ப வன்மையாக வெளிப்படும். அவர்களுடைய தயக்கங்கள் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குள் புகும் அபாயமும் அந்த அளவுக்கு அதிகரிக்கும்.

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' தன்மையைச் சித்திரிக்கையில், அவர்கள் வெளிக்குப் புரட்சிக்காரர்களாகத் தோற்றம் அளித்தாலும் நிராசை, புகலின்மை, ருஷ்யாவின் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் சக்தியில் நம்பிக்கை இன்மை ஆகியவை நிறைந்த மனப்பான்மையையே அவர்கள் வெளியிடுகிறார்கள் என்பதைக் காட்டினார் லெனின்.

பிரேஸ்த் சமாதானத்தை முறிக்க வேண்டும் என்ற ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' போக்கு லெனினும் அவருடைய ஆதரவாளர்களும் உறுதியுடன் விடாப்பிடியாக நடத்திய போராட்டத்தின் விளைவாகத் தோல்வி அடைந்தது. 1918 மார்ச்சில் நடந்த போல்ஷிவிக் கட்சியின் ஏழாவது அசாதாரணக் காங்கிரஸ் சமாதானப் பிரச்சினையில் லெனினது போக்கை உறுதிப்படுத்தி, ஜெர்மனியுடன் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையை நிறைவேற்றுவதன் இன்றியமையாமையை ஒப்புக்கொண்டது.

பதினைந்து ஆண்டுகளாக ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி என்று வழங்கிவந்த போல்ஷிவிக் கட்சிக்கு, ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சி என்ற மறுபெயர் ஏழாவது காங்கிரஸில் சூட்டப்பட்டது. இந்த மறுபெயர் அவசியம் என்பதை ஆதாரப்படுத்துவதற்காக, பெரும்பாலான நாடுகளின் சமூக-ஜனநாயகவாதிகளிலிருந்து போல்ஷிவிக்குகள் தனித்துப் பிரிவதன் இன்றியமையாமையை லெனின் சுட்டிக் காட்டினார். பிற நாட்டு சமூக-ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்கள் சோஷலிஸத்துக்கு துரோகம் செய்துவிட்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் கையாட்கள் ஆகிவிட்டார்கள். தவிர கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயர் அதன் போராட்டக் குறிக்கோளை—கம்யூனிஸத்தை அடையும்

குறிக்கோளை—சரியாகப் பிரதிபலித்தது. சோஷலிஸ மாற்றங்களைத் தொடங்கியுள்ள கட்சி கம்யூனிஸ சமூகத்தை அமைக்கும் குறிக்கோளை நோக்கி முன்னேறுகிறது என்றார் லெனின்.

சமாதானத்துக்கான போராட்டத்தில் லெனின் கடைப் பிடித்த கொள்கை சரியானது என்பதை வாழ்க்கை முழுமையாக உறுதிப்படுத்தியது. மிகப் பெரும்பான்மையான ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' அதே ஆண்டில் தங்கள் தவறுகளை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்கள்.

குட்டி பூர்ஷ்வா ஊசலாட்டத்தைப் பிரதிபலித்த இடதுசாரி எஸ் ஆர்களின் கட்சி பிரேஸ்த் சமாதானத்தை எதிர்த்தது. 1918 மார்ச்சில் சோவியத்துக்களின் நான்காவது அகில ருஷ்யக் காங்கிரஸ் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை உறுதிப்படுத்தியது. இடதுசாரி எஸ் ஆர்கள் காங்கிரஸின் தீர்மானங்களுக்கு இசையவில்லை. அவர்கள் போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்கும் ஒப்பந்தத்தை முறித்து விட்டு மக்கள் கமிஸாரவையிலிருந்து வெளியேறி விட்டார்கள்.

பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டது மிகப் பெரிய சர்வதேச முக்கியத்துவம் கொண்டிருந்தது. சோவியத் ருஷ்யா நம்ப முடியாத இடர்களைப் பொருட்படுத்தாமல் சமாதானப் போராட்டத்தில் வெற்றி அடைந்தது. அது இடை ஓய்வு பெற்றது. இது சமாதான இயக்கத்தின் முதல் வெற்றியாகத் திகழ்ந்தது. சோவியத் அமைப்பு கணிசமாக வலுவடைந்தது.

சோஷலிஸ மாற்றங்கள்

வெற்றி வாகை சூடிய புரட்சியும் நாட்டில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றங்களும் விரிவான பொது மக்கள் திரளிடையே பெருத்த உற்சாகத்தைத் தூண்டிவிட்டன. எங்கும், நகரங்களிலும் கிராமங்களிலும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. புது வாழ்வை நிருமிப்பது பற்றியும் சோவியத் அரசின் உள்நாட்டு, அயல் நாட்டுக் கொள்கை பற்றியும் இந்தக் கூட்டங்களில் தொழிலாளர்களும் விவசாயிகளும் விவாதித்தார்கள். கம்யூனிஸ்டுகள் தங்கள் கட்சியின் கொள்கையை மக்களுக்கு விளக்கி விவரித்தார்கள். அது பொதுக்கூட்ட ஜனநாயகக் காலம். வெற்றிகரமான புரட்சிக்குப் பின் இத்தகைய நிகழ்ச்சி தவிர்க்க இயலாதது, விதி

முறைக்கு ஒத்தது. ஆயினும் கூட்டங்கள் போடும் பழக்கம் மட்டுமீறி நீடித்துவிடாதபடி செய்யக் கட்சி அக்கறை எடுத்துக் கொண்டது. மக்களின் உற்சாகப் பெருக்கை நிர்மாண வேலையில் அது ஈடுபடுத்தியது.

அக்டோபர் புரட்சிக்குப் பின் சோவியத் நாடு முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலக்கட்டத்தில் பிரவேசித்தது. புரட்சி அரசியல் அதிகார உறுப்புக்களை அமைத்த பின்னர் சமூக உற்பத்தியை ஒழுங்கமைப்பதும் நாட்டின் பொருளாதார வாழ்வைச் சீர்படுத்தி, புதிய சோஷலிஸ அடிப்படையில் நிலைப்படுத்துவதும் ஆட்சி அதிகாரத்தை வென்று பெற்ற தொழிலாளி வர்க்கத்தின் மிகமிக முக்கியமான, மிக மிகச் சிக்கலான காரியம் ஆகும். ஒரே வீச்சில், அல்லது அரசாணைகள் பிறப்பிப்பதன் மூலம் சோஷலிஸத்தைக் கொண்டு வந்துவிட முடியாது. உற்பத்திச் சாதனங்கள் மீது தனி உடைமையை மக்கள் அனைவரதும் உடைமையாக மாற்றுவது படிப்படியாகவே, அதிலும் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு வடிவங்களிலும் வேறு வேறான வேகங்களிலுமே நிகழும்.

சோவியத் நாட்டில் பொருளாதாரத்தின் சோஷலிஸ அமைப்பு நிறுவப்படுவது, அக்டோபர் புரட்சியின் ஆரம்ப நாட்களிலேயே, அரசாங்க, அதாவது பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவ அரசுக்குச் சொந்தமாய் இருந்த தொழில் நிலையங்கள் மக்களின் உடைமையாக மாற்றப்பட்டது முதலே, தொடங்கி விட்டது. வெற்றி சூடியதற்குப் பின் விரைவிலேயே சோவியத் ஆட்சி அரசாங்க நிதிமனையின் நிர்வாகத்தைத் தன் கைகளில் எடுத்துக்கொண்டது. அப்புறம் தனியார் நிதிமனைகளைத் தேசிய உடைமை ஆக்கி நிதிமனை விவகாரம் அரசின் ஏகபோகம் என்று அறிவித்தது. பூர்ஷ்வா வர்க்கத்தின் பொருளாதார வலிமைக்குஇந்தச் செயல் பலத்தஅடி கொடுத்தது. ஜாரும் தாற்காலிக அரசாங்கமும் பிற அரசாங்கங்களிடமிருந்து முதன்மையாக யுத்த முஸ்தீப்புக்கள் செய்யவும் யுத்தம் நடத்தவும் வாங்கியிருந்த எல்லாக் கடன்களும் ரத்து செய்யப்பட்டு விட்டன.

முதலாளிகளின் தனியார் தொழில் நிலையங்களை மக்கள் உடைமையாக மாற்றுவது இதைவிடச் சிக்கலான காரியம்.

முதலாளிக்குச் சொந்தமாய் இருந்த தொழிற்சாலையைத் தொழிலாளர்கள் தங்கள் மேற்பார்வையில் எடுத்துக்கொள் கிறார்கள்

முதலாளித்துவ அமைப்பில் எல்லோரையும் விட அதிகமாக ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்திடம் ஆட்சியை வென்று பெறும் சமயத்தில் பயிற்சி பெற்ற ஊழியர்களோ பெருத்த இயந்திரத் தொழில் உற்பத்தியை நிர்வகிப்பதற்கான தேர்ச் சியோ இருப்பதில்லை. ருஷ்யாவில் இந்த இடர்ப்பாடுகள் இன் னும் சிக்கலாயின, ஏனென்றால் இங்கே வரலாற்றிலேயே முதன் முறையாக சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பு நிகழ்ந் தது. பொருளாதாரத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதற்கு உரிய திண்ணமான வழிகளையோ சமூக உற் பத்தியை நிர்வகிக்கும் வடிவங்களையோ எவருமே அறிந் திருக்கவில்லை. இந்த நிர்வாக வடிவங்கள் அனுபவத்தாலும் பூர்ஷ்வா வர்க்கத்துடன் கடும் போராட்ட நிலைமைகளில் தொழிலாளர்களின் புரட்சிப் படைப்புத் திறனாலும் பெறப் பட்டன. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு லெனினது கட்சி முதலாளிகளின் உடைமைகளைப் பறிப்பதற்கும் அவர் களுடைய தொழில் நிலையங்களை தேசிய உடைமை ஆக்கு

வதற்கும் ஆட்சியை வென்று கைப்பற்றியதுமே அவசரப்பட வில்லை. ஒவ்வோர் இடத்திலும் தொழில் நிலையங்களில் உற் பத்திமீதும் உற்பத்தியான பொருள்களின் வினியோகத்தின் மீதும் தொழிலாளர் கண்காணிப்பு ஏற்படுத்தும்படி கட்சி தொழிலாளர்களுக்கு யோசனை கூறியது. சோவியத் ஆட்சி தொழிலாளர் கண்காணிப்பு பற்றித் தனிச் சட்டம் இயற்றி யது. இதன் உதவியால் தொழிலாளர்கள் தாமே உற்பத்தி யை நிர்வகிப்பதில் அனுபவம் பெறவும் இயற்கைத் திறமை வாய்ந்த பொருளாதார ஒழுங்கமைப்பாளர்களைத் தங்க ளிடையே இருந்து தோற்றுவிக்கவும் முடிந்தது. 1917ல் ஒன் றரை மாதங்களுக்குள் எல்லா ஆலைகளிலும் தொழிற்சாலை களிலும் சுரங்கங்களிலும் கனிகளிலும் இருப்புப் பாதை, நீர்வழிப் போக்குவரத்திலும் தொழிலாளர்கள் தங்கள் கண் காணிப்பை ஏற்படுத்தி விட்டார்கள்.

முதலாளிகள் கண்காணிப்புச் சட்டத்துக்குப் பணிய விரும்பவில்லை. சோவியத் ஆட்சி நிலையானது அல்ல என்று நினைத்து, அதைக் கவிழ்த்து விடலாம் என்று நம்பி, அவர்கள் மறைமுக அழிவு வேலைகள் நடத்தினர்கள்: கண்காணிப்புக் குழுக்களை வேலை இடத்தில் அனுமதிப்பதில்லை, அவற்றிட மிருந்து உற்பத்திப் பொருள்களை மறைத்தார்கள், கணக் கில் குழப்பம் செய்தார்கள், தொழிலாளர்களுக்குச் சம்பள பட்டுவாடாவை நிறுத்தினர்கள், தொழில் நிலையங்களை மூடி னர்கள். ஏற்கனவே யுத்தத்தால் சேதம் அடைந்திருந்த நாட் டின் தேசீயப் பொருளாதாரம் ஒரேயடியாகச் சீர்குலையும் அபாயம் பூர்ஷ்வா வர்க்கத்தின் மறைமுக அழிவு வேலை காரணமாக ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி பூர்ஷ்வா வர்க் கத்தின் பொருளாதார அழிவு வேலையை ஒடுக்கும்படி தொழி லாளர்களை வேண்டிக் கொண்டது. பல பெரிய தொழில் நிலை யங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அதாவது முதலாளிகளிட மிருந்து ஈடு செலுத்தாமல் எடுத்துக்கொள்ளப்பட்டு தேசீய உடைமை, அதாவது, சோஷலிஸ அரசின் சொத்து ஆக்கப்பட் டன. பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்பு தனியார் நிறுவனங்கள் தேசீய உடைமை ஆக்கப்படுவதை விரைவுபடுத்தவே செய் தது. 1918 கோடை காலத்துக்குள் முதலாளிகளின் பெரிய இயந்திரத் தொழிற்சாலைகளின் பெரும் பகுதியும் போக்கு

வரத்தும் வர்த்தகக் கப்பல்களும் அயல்நாட்டு வாணிகமும் தேசீய உடைமை ஆக்கப்பட்டன. சோவியத் அரசு தேசீயப் பொருளாதாரத்தில் தலைமை இடம் பெற்று விட்டது. பூர்ஷ்வா வர்க்கத்தின் பொருளாதார விறல் அடியோடு முறிக்கப்பட்டு விட்டது.

உற்பத்தி சோஷலிஸ சமூக உடைமை ஆக்கப்பட்டதைத் தலைமை ஏற்று நடத்துவதற்காகவும் தேசீயப் பொருளாதாரத்தை அரசு நிர்வகிப்பதற்காகவும் தேசீயப் பொருளாதார உச்ச ஆலோசனை மன்றமும் சோவியத் ஆட்சியின் வட்டார உறுப்புக்களுக்கு உட்பட்ட தேசீயப் பொருளாதார ஆலோசனை மன்றங்களும் அமைக்கப்பட்டன. பொருளாதார ஆலோசனை மன்றங்களின் வேலையில் தொழிற்சங்கங்களும் பங்கு கொண்டன. நிதிமன்றங்களும் இருப்புப் பாதைகளும் பெரிய தொழிற்சாலைகளும் தேசீய உடைமை ஆக்கப்பட்டு, பொருளாதார ஆலோசனை மன்றம் அமைக்கப்பட்டதனால் புதிய, சோஷலிஸ தேசீயப் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு நிறுவத் தொடங்குவது கட்சிக்கும் சோவியத் ஆட்சிக்கும் சாத்தியம் ஆயிற்று.

1918 வசந்தத்தில் லெனின் ''சோவியத் ஆட்சியின் அடுத்த பணிகள்'' என்னும் தமது புகழ் பெற்ற நூலை வெளியிட்டார். சோஷலிஸப் பொருளாதாரத்தின் அடிப்படைகளை நிறுவும் திட்டத்தை இதில் அவர் குறித்திருந்தார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலக் கட்டத்தின் சிறப்பு இயல்பு என்ன வென்றால், இந்தப் பரிணமிப்பைச் செயல்படுத்தும் எந்த நாட்டினதும் பொருளாதாரத்தில், உருவாகி வரும் சோஷலிஸப் பொருளாதார அமைப்போடு கூடவே சோஷலிஸத்துக்கு முந்திய பழைய அமைப்புக்களும் ஒப்புநோக்கில் நீண்ட காலம் நிலவி வரும் என்பதே. உதாரணமாக ருஷ்யாவில் பரிணமிப்புக் காலக் கட்டத்தின் தொடக்கத்தில் சோஷலிஸ அமைப்போடு கூடவே பின்வருவனவும் நிலவின:

—சில்லறைப் பண்ட உற்பத்தி; தங்கள் சரக்குக்களைச் சந்தையில் விற்பனை செய்யும் விவசாயிகள் முதன்மையாக இதைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்கள்.

—இயற்கைப் பொருளாதாரம் (அதாவது, அனேகமாக

எதையும் வாங்கவோ விற்கவோ செய்யாத பொருளாதாரம்); லட்சோப லட்சம் விவசாயிகளிடையே, சிறப்பாக வளர்ச்சியில் பின்தங்கிவிட்ட வட எல்லைப் பிரதேசம், மத்திய ஆசியா, காக்கேஷியாவின் பகுதி ஆகியவற்றின் மக்கள் இனங்களிடையே இது நிலைத்திருந்தது;—தனியார் முதலாளித்துவம் (நகர, நாட்டுப்புற பூர்ஷ்வா வர்க்கம்);—அரசு முதலாளித்துவம்.

வெவ்வேறு நாடுகள் சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் வடிவங்களும் முறைகளும் வெவ்வேறாய் இருக்கலாம் என்று போதித்தார் லெனின். ஆனால் இந்தப் பரிணமிப்பின் சாரம் எங்குமே ஒன்றுதான்: சோஷலிஸப் பொருளாதார அமைப்பை ஆதிக்கம் வகிப்பதாகவும் பின்னர் ஒரே தனி அமைப்பாகவும் மாற்றுவதுதான். சோஷலிஸப் புரட்சி வெற்றி அடைந்த பிறகு, புரட்சிகர ஆட்சி அதிகாரத்தையும் புது அரசையும் வலுப்படுத்துவதற்கு ஒப்பவே சோஷலிஸப் பொருளாதாரக் கட்டுமானத்தை ஒழுங்கமைப்பதும் மார்க்ஸீய-லெனினீயக் கட்சியின் முக்கியக் கடமை ஆகிவிடுகிறது.

பண்டங்களின் உற்பத்தியையும் வினியோகத்தையும் மிகக் கண்டிப்பாகக் கணக்கிடுவதையும் கண்காணிப்பதையும் ஒழுங்கமைப்பதிலிருந்து சோஷலிஸக் கட்டுமானத்தைத் தொடங்க வேண்டும் என்று கூறினார் லெனின். அரசு முதலாளித்துவத்தை—அதாவது சோவியத் அரசின் கண்காணிப்புக்கு உட்பட்ட தனித் தொழிலதிபர் மூலதனத்தை சோஷலிஸத்தின் நலன்களுக்காக, சோஷலிஸ நிர்மாணத்தை விரைவுபடுத்தும் பொருட்டுப் பயன்படுத்துவது சாத்தியம், உபயோகமானதும் கூட என்று அவர் கருதினார். தனித் தொழில் நிலையங்களையும் மூலப் பொருள் வளங்களையும் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் பொறுப்பைக் குறித்த நிபந்தனைகளின் பேரில் முதலாளிகளிடம் ஒப்படைத்து, அவர்களோடு சேர்ந்து ஐக்கிய மூலதனக் கம்பெனிகள் அமைக்கலாம் என்பது இந்த யோசனை. கூட்டுறவின் பல்வேறு வடிவங்களை, அதாவது சிறு உடைமையாளர்களின் சப்ளை-விற்பனைக் கழகங்கள், நுகர்வோர் கழகங்கள், உற்பத்திக் கழகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது சிறப்பாக முக்கியமானது. சோஷலிஸ அரசு, நகரங்களுக்கும்

விவசாயிகள் நிலப்பிரபுவின் நிலத்தைத் தங்களுக்குள் பகிர்ந்துகொள்கிறார்கள்

கிராமங்களுக்கும் இடையே பண்டமாற்றைக் கூட்டுறவுக் கழகங்களின் வாயிலாகத் தலைமை வகித்து நடத்தவும் கட்டுப்படுத்தவும் முடியும்.

சோஷலிஸ நிர்மாணத்தைத் தொடங்கியதும் கம்யூனிஸ்ட் கட்சி மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டது. பொருளாதாரத்தைப் படிப்படியாக, மிகக் குறைந்த அளவே வலி உண்டாகும் விதத்தில் சோஷலிஸ முறைக்கு மாற்றுவதற்கு ஏற்ற பல இடைக்கால வடிவங்களை (தொழிலாளர் கண்காணிப்பு, அரசு முதலாளித்துவம், கூட்டுறவு) அது கையாண்டது.

உழைப்பின் உற்பத்தித் திறன் பற்றிய பிரச்சினை மீது கம்யூனிஸ்ட் கட்சி தனிப்பட்ட கவனம் செலுத்தியது. முதலாளித்துவத்துடன் ஒப்பிடும்போது உழைப்பின் உயர்ந்த உற்பத்தித் திறனுக்கு வகை செய்வது சோஷலிஸத்தின் பிரதானக் கடமை என்று போதித்தார் லெனின். சோவியத் நாட்டின் உற்பத்திச் சக்திகளை மேம்படுத்துவதும் இயற்கை வளங்களை அதிக அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவதும் எரிபொருள் உற்பத்தி, உலோக வார்ப்பு, இரசாயன, இயந்

திர நிர்மாண, மின்சாரத் தொழில்கள் போன்ற கனரக இயந்திரத் தொழில்களை விரிவுபடுத்துவதும் இதற்கு இன்றிய மையாதவை. நாட்டு மக்கள் அனைவரதும் எழுத்தறிவையும் கல்வியறிவையும் உயர்த்துவதும் முதலாளித்துவ அமைப் பில் திரட்டிக் குவிக்கப்பட்ட விஞ்ஞான, தொழில் நுட்பச் சாதனைகள் யாவற்றையும் சோஷலிஸத்தின் தொண்டில் ஈடு படுத்துவதும் அவ்வாறே இன்றியமையாதவை.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு உழைப் பாளிகளுக்கு சோஷலிஸ உணர்வை ஊட்டுவதோடு கூடவே, தங்கள் உழைப்பின் விளைவுகளில் அவர்களுக்குப் பொருளா தார அக்கறை ஏற்படுத்தி, பொருள்களின் உற்பத்தியை அதி கரிக்கும் அவர்களது முயற்சியைத் தூண்டி ஊக்க வேண்டும். உழைப்பாளிகளின் போட்டியை—உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத் திரளான உழைப்பாளிகளின் சுயவிருப்ப இயக்கத்தை—ஒழுங்கமைப்பது மிகப் பெருத்த முக்கியத்துவம் பெற்று விட்டது. ஆனால் தொடக்கத்தில் உழைப்புக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும் கழப்புபவர் களையும் அரசுக்குக் குறைவாகக் கொடுத்துவிட்டுத் தங்களுக்கு அதிகமாக எடுத்துக் கொள்ள முயன்ற பேராசைக்காரர் களையும் எதிர்த்துப் போராடவும் வேண்டி இருந்தது. இந்த மாதிரி மனப்பான்மையையும் வழக்கங்களையும் ஏற்படுத்தி இருந்தது முதலாளித்துவம். அரசு இப்போது பூர்ஷ்வா வர்க்கத்தினுடையது அல்ல, தங்களுடையது, மக்களுடையது என்பதைப் பலரால் உடனே புரிந்துகொள்ள முடியவில்லை. முதலாளித்துவ உலகிலிருந்து அப்போதுதான் வெளிவந் திருப்பவனுக்கு மக்களின் சொத்து தன்னுடையவும் சொத்து, அதைப் பேணிக் காப்பதும் அதிகம் ஆக்குவதும் அவசியம் என்பதை உடனே புரிந்து கொள்வது கடினம்.

எல்லாவற்றிலும் கடினமான காரியம் விவசாயத்தில் சோஷலிஸ அமைப்பை ஏற்படுத்துவது. அக்டோபர் புரட்சி யின் வெற்றிக்குப் பிறகு விரைவிலேயே பண்ணையாட்கள், ஏழை விவசாயிகளின் ஒரு பகுதியினர் நிலப்பிரபுக்களின் முன்னாள் பண்ணைகளில் கூட்டுப் பண்ணைகள் (கம்யூன்கள்) அமைக்கத் தொடங்கினர்கள். நிலப்பிரபுக்களின் சில முன் னாள் பண்ணைகள் அரசின் உடைமை—அரசாங்கப் பண்ணை

கள்—ஆக்கப்பட்டன. இவையே நாட்டுப்புறத்தில் சோஷலிஸத்தின் முதல் முனைகளாக இருந்தன.

சோஷலிஸத்தின் அடித்தளம் அமைக்கப்படுவதை மூர்க்கமாக எதிர்த்தார்கள் பணக்கார விவசாயிகளான குலாக்குகள். அந்தக் காலத்தில் குலாக்குகளின் பண்ணைகள் சுமார் இருபது லட்சம் என்று, அதாவது நாட்டில் இருந்த மொத்த விவசாயப் பண்ணைகளில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு என்று கணக்கிடப்பட்டிருந்தன. குலாக்குகள் தங்கள் செல்வத்தைப் பயன்படுத்தி கிராமத்தில் நாட்டாண்மை செய்யவும் ஏழைக் குடியானவர்களையும் சக்தியற்ற குடியானவர்களையும் தங்களுக்குப் பணிய வைக்கவும் முயன்றார்கள். சோவியத் ஆட்சி ஏழை, நடுத்தரக் குடியானவர்களுடைய நலன்களைக் காத்ததனால் குலாக்குகள் அதை வெறுத்தார்கள். உள்நாட்டுப் புரட்சி எதிர்ப்பாளர்களுக்கும் வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்கள் முக்கிய அரணாக விளங்கினார்கள், சோவியத் எதிர்ப்புக் கலகங்களைத் தூண்டி விட்டார்கள். 1918 வசந்தத்தில் நாட்டில் நிலவிய சீரழிவு காரணமாகவும் தானியப் பற்றாக்குறை காரணமாகவும் தானிய ஏகபோகம் மாறுதிருக்கும் என்று சோவியத் ஆட்சி உறுதிப்படுத்தியது. விவசாயிகளிடம் தானியம் வாங்கவும் தானிய விற்பனை செய்யவும் சோவியத் அரசு மட்டுமே உரிமை பெற்றது என்று இது அர்த்தப்பட்டது. குலாக்குகள் உட்பட எல்லா விவசாயிகளும் அரசுக்கு தானியத்தை நிலையான விலைகளுக்கு விற்க வேண்டியிருந்தது. ஆனால் குலாக்குகள் தானியத்தைப் பதுக்கினார்கள், கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டார்கள். சோவியத் ஆட்சியைப் பட்டினியால் மாய்த்துவிடலாம் என்று அவர்கள் திட்டமிட்டார்கள்.

நாட்டுப் புறத்தில் குலாக்குகளுக்கும் ஏழைக் குடியானவர்களுக்கும் இடையே கடும் போராட்டம் நடந்தது. ஏழைக் குடியானவர்கள் குலாக்குகளின் அடாபிடி நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடினார்கள். ஆனால் அவர்களுக்கு ஒழுங்கமைப்பு போதவில்லை. கட்சியும் சோவியத் ஆட்சியும் குலாக்குகளுடன் போராடுவதில் ஏழை விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு நாட்டுப்புறத்துக்குப் பெருந்திரளாக அணிவகுத்துச் செல்லும்படி முன்னணித் தொழிலாளர்களுக்கு

அழைப்பு விடுத்தன. கம்யூனிஸ்டுகளின் தலைமையில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் அணிகள் கிராமங்களுக்குப் புறப் பட்டன. நாட்டுப்புற ஏழை மக்களை ஒழுங்கமைக்கத் தொழி லாளர்கள் உதவினர்கள். அதே சமயம், 1918 கோடையில் லெனினது யோசனையின் பேரில் நாட்டுப்புறத்தில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கும் அரசாணை ஏற்கப்பட் டது. வட்டாரக் கட்சி, சோவியத் ஸ்தாபனங்கள் இந்தக் கமிட்டிகளை அமைக்க வழிகாட்டி உதவின. கமிட்டிகளில் நடுத்தர விவசாயிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

ஏழை விவசாயிகள் கமிட்டிகள் நாட்டுப் புறத்தில் சோ வியத் ஆட்சியின் தூண்களாக விளங்கின. அவை உழைப்பாளி விவசாயிகளைத் தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி ஒற்றுமை யாக அணிதிரட்டின, குலாக்குகளின் எதிர்ப்பை முறிக்கவும் அதன் பலத்தை ஒடுக்கவும் சோவியத் அரசுக்கு உதவின. குலாக்குகளிடமிருந்து சுமார் ஐந்து கோடி ஹெக்டார் நில மும் ஏராளமான குதிரைகளும் எருதுகளும் உழவு கருவி களும் கைப்பற்றப்பட்டன. நிலப்பிரபுக்களின் நிலம் பங்கிடப் பட்ட போது குலாக்குகள் இவற்றைத் தங்கள் வசப்படுத்தி இருந்தார்கள். இப்போது இவை எல்லாம் ஏழை விவசாயி களின் கைகளுக்கு வந்துவிட்டன. ஏழை விவசாயிகள் கமிட்டி கள் குலாக்குகளிடமிருந்த அதிகப்படி தானியத்தைக் கைப் பற்றவும் நகர மக்களுக்கும் செஞ்சேனைக்கும் உணவுப் பண் டங்கள் கிடைக்கவும் உதவின. இந்தக் கமிட்டிகளின் துணை யால் ஏராளமான ஏழை விவசாயிகள் வசதியாகக் குடித்த னம் நடத்தத் தொடங்கினர்கள். கிராமங்கள் நடுத்தர விவ சாயிகள் கொண்டவை ஆகி விட்டன. குலாக்குகளின் சக்தி யோ பெரும் அளவுக்கு முறிக்கப்பட்டு விட்டது. பெரும் பாலான குலாக்குகள் நடுத்தர விவசாயிகளின் நிலைமைக்கு வந்து விட்டார்கள். எல்லா விவசாயிகளையும் ஒப்பவே அவர் கள் பங்கு நிலம் பெற்றார்கள். பண்ணையாட்களையோ ஏழை விவசாயிகளையோ கூலிக்கு அமர்த்தாமல் சொந்த பலத்தால் அவர்கள் வேளாண்மை செய்ய நேர்ந்தது. குலாக்குகளின் பண்ணைகளை முற்றிலும் ஒழித்துவிடும் நோக்கம் அப்போது சோவியத் அரசுக்கு இல்லை. அவர்கள் சோவியத் சட்டங் களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றே அது கட்டாயப்படுத்

தியது. 1919 கடைசியில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் தங்கள் கடமையை நிறைவேற்றிவிட்டு கிராம சோவியத்துக்களில் கலந்து ஒன்றுகிவிட்டன. இது சோவியத் ஆட்சியை மேலும் வலுப்படுத்தியது.

முதலாவது சோவியத் அரசியல் சட்டம்

1918 ஜூலையில் சோவியத்துக்களின் ஐந்தாவது காங்கிரஸ் கூடியது. அதன் பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டு பகுதியினர் கம்யூனிஸ்டுகள். தவிர, பல பிரதிநிதிகள் கம்யூனிஸ்டுகள்பால் பரிவு கொண்டிருந்தார்கள், அவர்களுடைய கொள்கையை முழுமையாக ஆதரித்தார்கள்.

இந்தக் காங்கிரஸில் முதலாவது சோவியத் அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது என்பது இதன் வரலாற்று முக்கியத்துவம் ஆகும். சோவியத் அரசு அமைப்பையும் தொழிற்சாலைகள், ஆலைகள், நிலம், புவிக்கரு ஆகியவற்றின் மீது தனி உடைமை ரத்து செய்யப்பட்டதையும் சட்ட பூர்வமாக உறுதிப்படுத்தியது அரசியல் சட்டம். எல்லா நாட்டினங்களையும் மனித இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகள் அனைவருக்கும் சம உரிமைகளையும் கடமைகளையும் அது நிலை நாட்டியது, மையத்திலும் வட்டாரங்களிலும் சோவியத் ஆட்சி உறுப்புக்களின் கட்டமைப்பை வரையறுத்தது. சோவியத் அரசு இலச்சினையில் அரிவாளும் சம்மட்டியும் பொறிக்கப்பட்டன. சோவியத் அமைப்பு தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற இரண்டு உழைப்பாளி வர்க்கங்களின் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதை இது கண்கூடாகக் காட்டியது.

முதலாவது சோவியத் அரசியல் சட்டம் ருஷ்யாவின் உழைப்பாளிகள் அனைவருக்கும் அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பை உறுதிப்படுத்தியது, ஆனால் சுரண்டுவோருக்கு வாக்குரிமையை மறுத்துவிட்டது. ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டுவோரும் அவர்களுடைய கையாட்களும் அன்னிய அரசுகளின் உதவியை ஆதரவாகக் கொண்டு உக்கிரமான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அவர்களது வாக்குரிமை இவ்வாறு பறிக்கப்பட்டது.

சோஷலிஸக் கட்டுமானம் விரிவாக நடப்பதை இடது சாரி எஸ் ஆர்கள் கட்சியும் எதிர்க்கத் தலைப்பட்டது. 1918 வசந்தத்தில் அதன் பிரதிநிதிகள் சோவியத் அரசாங்கத் திலிருந்து விலகி விட்டார்கள். ஆனால் சோவியத்துக்களில் அதன் பிரதிநிதிகள் இருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி கிராமங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கவும் குலாக்குகளை அடக்கவும் தொடங்கிய போது இடதுசாரி எஸ் ஆர்கள் குலாக்குகளை ஆதரிக்க முன் வந்தார்கள். நிலையான அரசு விலைகள் செலுத்தி அதிகப்படி தானியச் சேமிப்புக் களைக் குலாக்குகளிடமிருந்து எடுத்துக் கொள்ளும் நடவடிக் கை ரத்து செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் கோரி னர்கள். இந்தக் கட்சியின் தலைவர்கள் சோவியத்துக்களின் ஐந்தாவது காங்கிரஸ் நடக்கையில் மாஸ்கோவில் சோவியத் எதிர்ப்புக் கலகத்துக்கு ஏற்பாடு செய்து ஆட்சியைக் கைப் பற்ற முயன்றார்கள். கலகம் சில மணி நேரத்தில் அடக்கப் பட்டு விட்டது. சோவியத் ஆட்சிக்கு எதிராகத் தங்கள் செயலின் மூலம் இடதுசாரி எஸ் ஆர்களின் தலைவர்கள் திர ளான உழைப்பாளி மக்களின் முன் தங்கள் சுயரூபத்தைக் காட்டிக் கொண்டார்கள். ஐந்தாவது காங்கிரஸ், சோவியத் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட இடதுசாரி எஸ் ஆர் கள் கட்சிப் பிரதிநிதிகளை சோவியத்துக்களிலிருந்து விலக்க முடிவு செய்தது. இடதுசாரி எஸ் ஆர்களின் கணிசமான பகுதி தங்கள் தலைவர்களிடமிருந்து தனித்துப் பிரிந்து சோவியத் ஆட்சிக்கு ஆதரவு அளிக்கலாயிற்று. இடது சாரி எஸ் ஆர்களின் ஒரு பகுதி பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துவிட்டது.

போல்ஷிவிக்குகள் நாட்டை நிர்வகிக்கும் கடினமான கலையை நன்கு கற்றுத் தேர்ந்தார்கள், தொழிலாளர்களுக் கும் விவசாயிகளுக்கும் இந்தக் கலையைக் கற்பித்தார்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் தலைமைச் சக்தியாகத் திகழ்ந்தது கம்யூனிஸ்ட் கட்சி. சோவியத்துக்கள், தொழிற் சங்கங்கள், இளைஞர்கள் சங்கம் ஆகியவற்றின் வேலையை அது ஒருங்கிணைத்து நடத்தியது. தொழிற்சங்கங்கள் புரட்சிக்கு முன்பே தோன்றி நிலவி வந்தன. ஆனால் இளம் கம்யூனிஸ்டு கள் சங்கம் 1918 அக்டோபரில் உருவாயிற்று. கம்யூனிஸ்ட்

கட்சி இந்த ஸ்தாபனங்களுக்கு ஆணைகள் இடவில்லை. இவற்றில் வேலை செய்த தன் உறுப்பினர்கள் வாயிலாக, தனது கொள்கை சரியானது என்பதை அவற்றுக்கு அறிவுறுத்தி, தனது தீர்மானங்களைச் செயல்படுத்தியது.

கட்சியை வெகுஜனங்களுடன் இணைத்த சமூக ஸ்தாபனங்கள், அதன் தலைமையில் சோவியத் நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சீரான இயந்திர அமைப்பாக உருவாயின. முதலாளித்துவத்தின் ஆதரவாளர்கள், சிறப்பாக முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த வலதுசாரி சமூக-ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்கள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தூற்றினர்கள். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அம்மணமான பலாத்காரம், தொழிலாளி வர்க்கத்தால் எஞ்சிய மக்கள் அனைவரும் நசுக்கப்படுதல் என்றூர்கள் அவர்கள். இவ்வளவோடு இன்றி, சோவியத் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் மீது போல்ஷிவிக்குகளின் சர்வாதிகாரமே என்று கூறினர்கள் அவர்கள். ஆனால் இவை துவேஷம் நிறைந்த கட்டுக் கதைகளே.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டுவோரை **மட்டுமே**, சுரண்டுவோரின் ஆட்சியை மீண்டும் வன்முறையால் நிலைநாட்டவும் மக்கள் மீது மீண்டும் ஏறிச் சவாரி செய்யவும் முயல்பவர்களை **மட்டுமே** ஒடுக்குவது ஆகும். சோவியத் ஆட்சி வன்முறையை மேற் கொண்டது, புரட்சி விரோதிகள் அதை அவ்வாறு செய்யும்படி கட்டாயப்படுத்திய போது தான். தொழிலாளி வர்க்கம் தன் வர்க்கப் பகைவர்களிடம் கூட அதிகத்திலும் அதிகமான மனிதத் தன்மையைக் காட்டியது, சுய நிதானத்துக்கு வரவும் பெரும்பாலான மக்களின் சித்தத்துக்குப் பணியவும் அவர்களுக்கு வாய்ப்பு அளித்தது. அக்டோபர் புரட்சி நிறைவேறியதுமே சோவியத் ஆட்சியை எதிர்த்துக் கலகம் செய்த ஜாரின் ஜெனரல் கிராஸ்னேவ் முறியடிக்கப் பட்டுச் சிறை பிடிக்கப்பட்டதும், மக்களுக்கு எதிராக மேற்கொண்டு கிளர்ச்சி செய்வதில்லை என்ற வாக்குறுதியை வாங்கிக் கொண்டு அவனை விடுதலை செய்து விட்டது தொழிலாளிவர்க்கம். ஆனால் கிராஸ்னேவ் நேர்மையின்றி நடந்து கொண்

டான். அவன் நாட்டின் தென்பகுதிக்கு ஓடி, அங்கே புரட்சி எதிரிகளின் படைப் பிரிவுகளை மீண்டும் திரட்ட முற்பட்டான்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சுரண்டுவோரின் மிகச் சிறு கும்பலுடைய நலன்களுக்குக் கூடத் தீங்கு செய்யக் கூடாது என்றும் அவ்வாறு செய்வது ''உண்மையான'' ஜனநாயகத்தின் கோட்பாடுகளுக்கு முரணானது என்றும் தொழிலாளிவர்க்கத்துக்குத் துரோகம் செய்த ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி கார்ல் காவுத்ஸ்கி போன்ற இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் கூறினார்கள். காவுத்ஸ்கி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்ஸீய போதனையையே நிராகரித்தார், ''தூய ஜனநாயகத்தை'' ஆதரித்துப் போராடினார், பூர்ஷ்வா ஜனநாயகத்தை மெச்சிப் புகழ்ந்தார். இது பகிரங்கமான கொள்கைமாறித்தனம், பாட்டாளி வர்க்க நலன்களுக்குத் துரோகம், பூர்ஷ்வா ஜனநாயகத்துக்கு ஆதரவு, பாராட்டு.

1918 சரத்காலத்தில் லெனின் ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும் கொள்கைமாறி காவுத்ஸ்கியும்'' என்ற புத்தகத்தை எழுதினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பூர்ஷ்வா ஜனநாயகத்துடன் ஒப்பிடும்போது உயர்ந்த வகை ஜனநாயகம் என்று அதில் அவர் விளக்கினார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மிகப் பெரும்பான்மை மக்களின், சுரண்டப்பட்ட மக்கள் திரளின் ஜனநாயகம், சுரண்டும் சிறுபான்மையினரின் உரிமைகளை மட்டுமே குறுக்குவது என்று அர்த்தப்படும். மாறாக, பூர்ஷ்வா ஜனநாயகமோ சுரண்டுவோருக்கு மட்டுமே ஜனநாயகம், உழைப்பாளி மக்கள் மீது அவர்களுடைய சர்வாதிகாரம் என்று அர்த்தப்படும். பூர்ஷ்வா அரசினதும் பாட்டாளி வர்க்க அரசினதும் எதிரெதிரான தன்மைகளை லெனின் விடாப்பிடியாக விளக்கி விவரித்தார். வரலாற்றுப் போக்கில் அரசு பெரும்பான்மையினரான உழைப்பாளி மக்கள் திரள் மீது சிறுபான்மையினரான சுரண்டுவோரின் (அடிமைச் சொந்தக்காரர்கள் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின்) வன்முறை உறுப்பாக, ஆதிக்க உறுப்பாகத் தோன்றியது என்று அவர் காட்டினார். மாறுகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசோ, ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டுவோரின் சிறு கும்பல் மீது மிகப் பெரும்பான்மை

மக்களின் ஆதிக்க உறுப்பு ஆகும். இது சோஷலிஸக் கட்டுமானத்துக்குப் பணி ஆற்றுகிறது. மிக விரிவான மக்கள் திரளுக்கு ஜனநாயகம், சுரண்டுவோருக்கு எதிராகப் புரட்சி சர்வாதிகாரம், இரண்டையும் ஒன்று சேர்ப்பதுதான் சோவியத் ஆட்சியின் சாரம்.

சோஷலிஸத் தாய் நாட்டின் பாதுகாப்பு

சோஷலிஸக் கணப்பை அணைக்க ஏகாதிபத்திய வாதிகளின் முயற்சி

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டும் வர்க்கங்கள் ஆட்சியும் முந்திய சலுகைகளும் பறிபோனதை ஒப்புக் கொண்டு சும்மா இருக்க விரும்பவில்லை. நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் ஏராளமான பொருள் வளமும் அரசியல், இராணுவ அனுபவமும் சர்வதேச மூலதனத்துடன் விரிவான தொடர்புகளும் பெற்றிருந்தார்கள். நாட்டுப்புறத்தில் பெருத்த எண்ணிக்கையில் இருந்த குலாக்குகளின் ஆதரவு அவர்களுக்கு இருந்தது. அக்டோபர் புரட்சி நிறைவுற்றதுமே ஆட்சி இழந்த சுரண்டுவோர்—நிலப்பிரபுக்களும் பூர்ஷ்வாக்களும்—சோவியத் ஆட்சியைக் கவிழ்க்கும் பொருட்டுச் சொந்தப் படைகள் திரட்டவும் வெண்காவற்படை அமைக்கவும் முற்பட்டார்கள்.

அக்டோபர் புரட்சியின் பாதிப்பால் தங்கள் நாடுகளின் உழைப்பாளிகளும் காலனிகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களும் போராட்டத்துக்குக் கிளர்ந்து எழுவதை ஏகாதிபத்தியவாதிகள் மிகுந்த மனக் கலக்கத்துடன் கண்டார்கள். தவிரவும் ருஷ்யப் புரட்சி அன்னிய முதலாளிகளின் பணப்பைகளையும் தாக்கிற்று. ருஷ்யாவில் இருந்த அவர்களுடைய தொழில்நிலையங்கள் பிடுங்கிக்கொள்ளப்பட்டன. பிரிட்டிஷ், பிரெஞ்சு முதலாளிகள் ஜார் அரசாங்கத்துக்கும் பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்துக்கும் கொடுத்திருந்த கடன்களை சோவியத் ஆட்சி ரத்து செய்துவிட்டதால் அவர்களுக்கு நூறுகோடிக் கணக்கான ரூபிள்கள் நஷ்டமாயின. எனவே, ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் குடியரசை வெறுத்தார்கள். அதன் இராணுவ பலவீனத்தைச் சாதகமாக எடுத்துக்கொண்டு, சோஷலிஸக் கணப்பை அணைத்து விடவும்

சோவியத் குடியரசு வலுவடைய விடாமல் தடுக்கவும் அவர்கள் முயன்றார்கள்.

இத்தகைய முயற்சியை முதலில் மேற்கொண்டார்கள் ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள். இளம் சோவியத் குடியரசுக்கு மிகப் பெருத்த சேதம் விளைக்க அவர்களால் முடிந்தது. ஆனால் தங்கள் பிரதான நோக்கத்தை—சோவியத் குடியரசை அழிப்பதை—அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. ருஷ்யாவின் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்கள் அரசை வெற்றிகரமாகக் காத்தார்கள்.

ஜெர்மனியுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ருஷ்யாவின் முன்னாள் கூட்டணி அரசுகள் கணிசமான படைகளைத் தனிப்பிரித்து சோவியத் நாட்டுக்கு எதிராக அனுப்ப ஆரம்பத்தில் முடியவில்லை. ஆயினும் நாட்டுக்கு உள்ளே புரட்சி எதிர்ப்புக்கு அவை உடனேயே எல்லா விதத்திலும் ஆதரவு அளித்தன. உள்நாட்டுப் புரட்சி எதிர்ப்பு, வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் என்ற இந்த இரண்டு சக்திகளும் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஒன்று சேர்ந்தன. பல இராணுவ அதிகாரிகளும் ஜெனரல்களும் பிற புரட்சி எதிர்ப்பாளர்களும் நாட்டின் எல்லைப் பிரதேசங்களுக்குத் தப்பி ஓடியிருந்தார்கள். அங்கே வெண்காவற் படைகள் அணிதிரட்டப்பட்டன, பல்வேறு சோவியத் விரோதி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் சில ''ருஷ்யாவின் அரசாங்கம்'' என்று கூடப் பெயர் சூட்டிக்கொண்டன. நாட்டைத் துண்டுகளாகக் கூறு போடும் விருப்பத்துடன் ஏகாதிபத்தியவாதிகள் பூர்ஷ்வா-தேசீயவாதிக் கட்சிகளுக்கு எல்லா வகையிலும் ஆதரவு அளித்தார்கள், எல்லைப் பிராந்தியங்களில் ''நாட்டின அரசாங்கங்கள்'' எனப்பட்ட கைப்பாவை அரசாங்கங்கள் அமைக்க அவற்றுக்கு உதவினார்கள். முதலாளித்துவ அரசுகளிடமிருந்து பேரளவான இராணுவ, பொருள் உதவி புரட்சி எதிர்ப்பாளர்களுக்குக் கிடைத்தது.

1918 வசந்தத்தில் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் ஏகாதிபத்தியவாதிகள் பகிரங்க இராணுவத் தலையீட்டைத் தொடங்கினார்கள். ருஷ்யாவின் புரட்சி எதிர்ப்புக்கு உதவியவாறு அவர்களுடைய படைகள் வடக்கிலும் தூரக் கிழக்கிலும் காக்கேஷியா

விலும் மத்திய ஆசியாவிலும் சோவியத் நாட்டின் விசாலமான நிலப்பரப்புக்களைக் கைப்பற்றிக் கொண்டன. ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள் உக்ரேனையும் பேலோருஷ்யாவையும் லித்துவானியாவையும் லாட்வியாவையும் எஸ்தோனியாவையும் உருக்குலைத்து வதைத்தார்கள். ஜார்ஜியாவில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட மென்ஷிவிக்குகள் தங்கள் மக்களுக்கு அஞ்சி ஜெர்மனியுடன் சூழ்ச்சி செய்து கொண்டார்கள். விரைவாக ஜெர்மன் படைகள் ஜார்ஜியாவை வசப்படுத்திக் கொண்டன. பூர்ஷ்வா-நிலப்பிரபுத்துவ ருமேனியா, அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதலால், அவர்களுடைய ஆதரவுடன் பெஸ்ஸரேபியாவைக் கைப்பற்றிக் கொண்டது.

சோவியத் நாடு போர் முனைகளின் வளையத்தில் அகப்பட்டுக் கொண்டது. வெண்படையினர், தலையீட்டாளர்கள் ஆகியோரின் சேனைகள் கணிசமாக அதிக ஆயுதபலம் கொண்டிருந்தன. அவற்றின் அதிகாரிகள் அனுபவம் படைத்திருந்தார்கள். புரட்சிவிரோதிகள் சோவியத் குடியரசில் கலகங்களையும் சதியாலோசனைகளையும் பயங்கர நடவடிக்கைகளையும் நடத்தி வந்தார்கள். 1918, ஆகஸ்டு 30ந் தேதி எஸ் ஆர்கள் லெனினது உயிரைக் கவர முயன்று அவரைக் கடுமையாகக் காயப்படுத்தினர்கள்.

பகைவர்கள் முக்கியமான தானியப் பிரதேசங்களையும் பெட்ரோலிய, நிலக்கரி வளங்களையும் கைப்பற்றிக் கொண்டார்கள். போக்குவரத்து இடை நிறுத்தங்களுடனேயே நடந்தது. மூலப் பொருள்களும் எரிபொருளும் இல்லாமையால் ஆலைகளும் தொழிற்சாலைகளும் நின்று விட்டன. நகர வாசிகள் பட்டினி கிடந்தார்கள். பொருளாதாரச் சீரழிவும் பஞ்சமும் பெருவாரியான கொள்ளைநோய்களும் சோவியத் நாட்டை நெருக்கடி நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டன.

போர்முனைகளில் முதல் வெற்றிகள்

ஆனால் சோவியத் ஆட்சி தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி விவசாயிகளையும் சார்ந்திருந்தது. முதன் முதலாக ஆட்சிக்கு வந்திருந்த இவர்கள் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் மீண்டும் ஆட்சிக்கு வர விடுவதைவிட இறப்பதே மேல் என்று தயாராக முன்வந்

புதிதாக நிறுவப்பட்ட செஞ்சேனையின் முதல் பட்டாளங்களில் ஒன்று, வெண்படையினரையும் அன்னியத் தலையீட்டாளர்களையும் எதிர்த்துப் போரிடுவதற்காக முனைமுகம் செல்கிறது

தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தலையீட்டாளர்களுக்கும் உள்நாட்டுப் புரட்சி விரோதிகளுக்கும் எதிராகப் புனித விடுதலைப் போராட்டத்துக்கு மக்களைத் தூண்டி எழுப்பிற்று. நாட்டை ஒன்றித்த இராணுவ முகாம் ஆக மாற்றி விட்டது அது. செஞ்சேனை ரெஜிமெண்டுகளும் டிவிஷன்களும் விரைவாக அமைக்கப்படலாயின. கட்சியின் தலைசிறந்த சக்திகள் அவற்றுக்கு அனுப்பப்பட்டன. சீர்குலைந்திருந்தாலும் மிகப் பெரிதான நாட்டின் எல்லாச் சேமிப்புக்களும் போர்முனையின் தொண்டுக்கு ஒதுக்கப்பட்டன.

உள்நாட்டுப் போரும் வெளியார் தலையீடும் 1918 வசந்தத்தில் லெனினால் வகுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க சோவியத் ஆட்சியை விடவில்லை. உள்நாட்டுப் போர் ஆண்டுகளில் யுத்தகாலக் கம்யூனிஸம் எனப்பட்ட கொள்கையைக் கடைப்பிடிப்பது கட்சிக்குத் தவிர்க்கஇயலாததுஆகிவிட்டது.இந்தக் கொள்கையின் சாரம் இதுதான். சோவியத் அரசு பெரிய தொழில் நிலையங்களை அடுத்து எல்லா நடுத்தரத் தொழில் நிலையங்களையும் பற்பல

சிறு தொழில் நிலையங்களையும் தேசிய உடைமை ஆக்கி விட்டது, கட்டற்ற வியாபாரத்தைத் தடை செய்தது, உழைப்பை எல்லோருடையவும் கட்டாயக் கடமை ஆக்கிற்று, விவசாயிகளுக்கு உணவுப் பொருள் பங்கீட்டை அமுலுக்குக் கொண்டுவந்தது. ''உழைக்காதவனுக்கு உணவு கிடையாது'' என்ற கோட்பாடு செயல்படுத்தப்பட்டது. உழைக்கத் திறன் படைத்தவர்கள் எல்லோரும் கட்டாயம் வேலை செய்ய வேண்டி இருந்தது. வேலை செய்யாதவர்களுக்கு உணவுச் சீட்டுகள் வழங்கப்படவில்லை. பணக்கார வர்க்கங்களைச் சேர்ந்தவர்களுக்கு எந்த மாதிரி வேலைகள் கொடுப்பது என்பதை சோவியத் ஆட்சியின் வட்டார உறுப்புக்கள் திட்டம் செய்தன. அந்தக் காலத்தில் முன்னாள் பூர்ஷ்வாக்கள் மண் வெட்டிகளும் கைகளுமாக நிலத்தில் வேலை செய்வதை அடிக்கடி காண முடிந்தது.

உணவுப் பங்கீட்டுத் திட்டப்படி, சொந்த உபயோகத்துத் தேவையானவை தவிர அதிகப்படியான உணவுப் பண்டங்கள் எல்லாவற்றையும் விவசாயிகள் அரசிடம் கட்டாயமாக ஒப்படைக்க வேண்டி இருந்தது. இந்தப் பண்டங்களின் விலையை அரசு பணமாகக் கொடுத்தது. ஆனால் அந்தக் காலத்தில் பணத்துக்கு மதிப்பு இல்லை. பணம் கொடுத்து அனேகமாக எதையுமே வாங்க முடியாமல் இருந்தது. எனவே விவசாயிகள் அதிகப்படி உணவுப் பண்டங்கள் அனைத்தையும் உண்மையில் இலவசமாகவே அரசுக்குக் கொடுத்துவந்தார்கள். விவசாயிகள் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் நகர வாசிகளுக்கும் செஞ்சேனைக்கும் உணவுப் பண்டங்களும் ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மூலப் பொருள்களும் தங்களால் இயன்ற அளவு வழங்கி வந்தார்கள். இவ்வாறு செய்யாமல் நாட்டைப் பாதுகாக்க முடியாது, நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் ஒழிக்க முடியாது, சோவியத் ஆட்சியிடமிருந்து பெற்ற நிலத்தைத் தங்கள் கைகளில் வைத்திருக்க முடியாது என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். புரட்சியால் பெற்ற நலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அன்னியத் தலையீட்டாளர்களுக்கும் வெண் படையினருக்கும் எதிராக நிகழ்ந்த போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும்

இடையே இராணுவ-அரசியல் ஐக்கியம் இந்த அடிப்படையிலேயே உருவாயிற்று.

அன்னியத் தலையீடு, உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் நிலைமைகளில் யுத்தகாலக் கம்யூனிஸம் ஒன்றே சாத்தியமான ஒரே கொள்கையாக இருந்தது, முற்றிலும் சரி என்று நிரூபணம் ஆயிற்று. ஆனால் யுத்தகாலக் கம்யூனிஸம் சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்லும் வழி அல்ல. யுத்தகாலக் கம்யூனிஸம் சோவியத் ஆட்சியின் கண்டுபிடிப்பு என லெனின் கருதினார். அதே சமயம், அது யுத்தத்தாலும் சீரழிவாலும் ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட தாற்காலிக நடவடிக்கையே என அவர் கூறினார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் சரியான கொள்கையும் அதன் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளும், தொழிலாளி வர்க்கத்தினதும் உழைப்பாளி விவசாயிகளதும் வீரமும் ஆத்ம சமர்ப்பணமும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை எதிர்த்துச் சமாளிக்க சோவியத் நாட்டுக்குத் துணை நின்றன. குறுகிய காலத்தில் இளம் செஞ்சேனை உரம் பெற்று விட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் அணிகளிலிருந்து, பொது மக்கள் இடையிலிருந்து தோன்றினார்கள் திறமைசான்ற சேனைத் தலைவர்களும் தளகர்த்தர்களும். ஃபுருன்சே, சப்பாயெவ், வரஷீலவ், புத்யோன்னி, புலூஹர் முதலியோர் இவர்களில் சிலர். அனுபவம் முதிர்ந்த வெண்படை ஜெனரல்களையும் ஏகாதிபத்திய அரசுகளின் ஜெனரல்களையும் முறியடிக்கத் தாங்கள் வல்லவர்கள் என்பதை இவர்கள் காட்டி விட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிற்சங்கங்களும் இளங் கம்யூனிஸ்டுகள் சங்கமும் தங்கள் உறுப்பினர்களைத் திரள் திரளாக அணிதிரட்டிப் படையில் சேர்த்தன. மூன்று லட்சம் கம்யூனிஸ்டுகள், அதாவது கட்சியின் மொத்த உறுப்பினர்களில் பாதிப் பெயர் செஞ்சேனையில் சேர்ந்து போர்முனைகளில் பணி ஆற்றினார்கள். படைப் பிரிவுகளில் இராணுவக் கமிஸார் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் ஆட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள். படையினருக்கு இவர்கள் அரசியல் பயிற்சி அளித்தார்கள், முன்பு ஜாரின் சேனையில் இருந்த அதிகாரிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்தார்கள்.

தொழிலாளர், விவசாயிகள் தற்காப்பு சபையின் கூட்டம். 1918ம் ஆண்டு

1918 நவம்பர் மாதம் சோவியத் அரசாங்கம் லெனினது தலைமையில் தொழிலாளர்-விவசாயிகள் தற்காப்பு சபையை நிறுவியது. இந்த சபை நாட்டின் எல்லா ஜனசக்தியையும் பொருள் வளங்களையும் நிர்வகித்தது, தலையீட்டாளர்களையும் வெண் படையினரையும் முறியடிப்பதில் அவற்றை ஈடுபடுத்தியது. செஞ்சேனையின் முதுகெலும்பாக விளங்கினர்கள் தொழிலாளர்கள். அவர்களை மையமாகக் கொண்டு ஒன்றிணைந்தார்கள் ஏழை, நடுத்தர விவசாயிக் குடும்பங்களைச் சேர்ந்த திரளான படைவீரர்கள். தலையீட்டாளர்களுடனும் வெண்படையினருடனும் சேர்ந்து பழைய அமைப்பு முறைகளும் திரும்பி வருவதை இவர்கள் கண்டார்கள்.

வெண்படையினரும் தலையீட்டாளர்களும் தாங்கள் கைப்பற்றிய பிரதேசங்களில் நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் ஆட்சியை மறுபடி நிலைநாட்டினர்கள். அவர்களுடைய மிருகத்தனமான பயங்கரச் செயல்களுக்கு பலியானர்கள் பதினாயிரக் கணக்கான சோவியத் மக்கள். நிலப்பிரபுக்கள் விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பறித்துக் கொண்டார்கள்.

முதலாளிகள் ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் திரும்பினர்கள். அக்டோபர் புரட்சியால் பெற்ற நன்மைகளையும் சோவியத் நாட்டின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் காக்கும் பொருட்டுத் தொழிலாளர்களும் உழைப்பாளி விவசாயிகளும் தங்கள் ஒழுங்கமைப்பாளியான கம்யூனிஸ்ட் கட்சியைச் சுற்றி ஒற்றுமையாக அணி திரண்டார்கள். பகைவர்களின் பின்புலத்தில் கம்யூனிஸ்டுகள் திரளான மக்களுடைய கொரில்லா நடவடிக்கைகளின் ஒழுங்கமைப்பாளர்களாகச் செயல் ஆற்றினர்கள்.

தலையீட்டாளர் சேனைகளின் சிப்பாய்கள் சோவியத் ருஷ்யாவின் தொழிலாளர்கள், விவசாயிகள்பால் பரிவு கொண்டு அவர்களை எதிர்த்துப் போரிட மறுத்தார்கள். 1918 அக்டோபரில் ஆஸ்திரோ-ஹங்கேரியில் புரட்சி நடந்தது. விளைவாக முடியரசு வீழ்ந்தது. ஆஸ்திரோ-ஹங்கேரி அனேக சுதந்திர அரசுகளாகச் சிதறியது. நவம்பர் மாதம் ஜெர்மனியில் புரட்சி மூண்டு எழுந்தது. அங்கேயும் முடியரசு கவிழ்ந்தது. சோவியத் படைகளதும் கொரில்லா வீரர்களுடையவும் தாக்குதலுக்கு எதிர் நிற்க முடியாமல் ஜெர்மானியப் படைகளும் ஆஸ்திரோ-ஹங்கேரியப் படைகளும் தாங்கள் கைப்பற்றியிருந்த நிலப்பரப்பிலிருந்து வெளியேற நேர்ந்தது. சோவியத் அரசாங்கம் கொள்கைக்காரத் தன்மை கொண்ட பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையை ரத்து செய்தது. லெனின் முன்கண்டது போன்றே இது குறுகிய கால உடன்படிக்கையாக முடிந்தது. உக்ரேன், பேலோருஷ்யா, லித்துவானியா, லாட்வியா, எஸ்தோனியா ஆகியவற்றின் உழைப்பாளி மக்கள் சோவியத் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டி சோவியத் நாட்டினைக் குடியரசுகளை அமைத்தார்கள். 1918 இலையுதிர் காலத்தில் சேஞ்சேனை முக்கியமான முதல் வெற்றிகள் பெற்றது.

ஆனால் சோவியத் குடியரசைப் புதிய ஆபத்துக்கள் சூழ்ந்தன. முதலாவது உலக ஏகாதிபத்திய யுத்தத்தில் ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும் தோல்வி அடைந்தன. நேச நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் ருஷ்யாவில் புரட்சி விரோதிகளுக்கு இராணுவ உதவியை அதிகமாக்கினர்கள்.

மேற்கு ஐரோப்பாவில் நிகழ்ந்த புரட்சி ஏற்றம் சோவியத் குடியரசுக்குப் பெரும் துணை புரிந்தது. அக்டோபர் புரட்சி, சோவியத் குடியரசின் வெற்றிகள் ஆகியவற்றின் பாதிப் பினால் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் அமைக்கப் பட்டன. தங்கள் நாடுகளில் பூர்ஷ்வா வர்க்கத்தை ஆட்சி யிலிருந்து அகற்றிவிட்டு சோவியத் ஆட்சியை நிலைநாட்டு வதற்காக நடந்த போராட்டத்தில், ஜனநாயகத்தைப் பற்றிய போலிச் சொற்றொடர்களால் தொழிலாளர்களைப் புரட்சியிலிருந்து வேறு புறம் திருப்பவும் முதலாளித்துவ அமைப்பை நிலையாக வைத்திருக்கவும் முயன்ற சோஷ லிஸ்ட்-சீர்திருத்தவாதிகளுடன் நடந்த போராட்டத்தில் தோன்றின இவை.

முப்பது நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள், இடதுசாரி சோஷலிஸ்ட் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் முதலாவது காங் கிரஸ் 1919 மார்ச் மாதத் தொடக்கத்தில் மாஸ்கோவில் நடந்தது. இந்தக் காங்கிரஸ் மூன்றாவது கம்யூனிஸ்ட் அகி லத்தை அமைத்தது. சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தில் சோஷலிஸ-சீர்திருத்தவாதத்தின் மீது மார்க்ஸீய-லெனினீ யத்தின் பெரு வெற்றியாக விளங்கியது இது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் தலைசிறந்த புரட்சிச் சக்திகள் கம்யூ னிஸ்ட் அகிலத்தின் கொடியின் கீழ் ஒன்று திரண்டன.

ஐரோப்பாவின் அனேக நாடுகளில் புரட்சி ஏற்றம் தொழி லாளர்களின் ஆயுதப் போராட்டமாக வளர்ந்தது. 1919 மார்ச் மாதம் ஹங்கேரியில் சோஷலிஸப் புரட்சி நடந்தேறி யது. ஹங்கேரிய சோவியத் குடியரசு உருவாயிற்று. சோவியத் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுகளின் சார்பிலும் அரசாங்கத்தின் சார்பிலும் லெனின் ஹங்கேரிய சோவியத் குடியரசின் அரசாங்கத்துக்கு வரவேற்பு தெரிவித்தார், அதன் தலைவர் களுக்கு யோசனைகள் கூறி உதவினர். ஏப்ரல் மாதம் பவேரி யாவில் சோவியத் ஆட்சி உதயம் ஆயிற்று. ஆனால் ஐரோப் பாவின் மையத்தில் சோவியத் குடியரசுகள் சிறிது காலமே நிலைத்திருந்தன. மே மாதம் ஜெர்மனியின் சமூக-ஜனநாயக வாத அரசாங்கத்தின் படைகள் பவேரியாவில் சோவியத் ஆட்சியை ஒடுக்கிவிட்டன. சோவியத் ஹங்கேரிக்கு எதிராக நேச நாடுகளின் அரசாங்கங்கள் இராணுவத் தலையீடு நடத்

லெனின் கம்யூனிஸ அகிலத்தின் முதலாவது காங்கிரஸ் தலைமைக் குழுவில்

தின. ஆகஸ்டு மாதத் தொடக்கத்தில் அவை ஹங்கேரியில் பாட்டாளி வர்க்க ஆட்சியை ஒடுக்குவதில் வெற்றி பெற்றன.

கட்சியின் இரண்டாவது செயல் திட்டம்

ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் எட்டாவது காங்கிரஸ் 1918 மார்ச்சில் கூடியது. அப்போது உள்நாட்டுப்போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. உள்நாட்டுப் புரட்சி விரோதிகளாலும் விறல் மிக்க ஏகாதிபத்திய வல்லரசுகளாலும் உருவாக்கப் பட்ட போர்முனைகளின் இரும்பு வளையத்தில் சிக்கியிருந்தது சோவியத் குடியரசு. ஆயினும் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சியின் எல்லாப் பகைவர்கள் மீதும் இறுதி வெற்றியில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தது. எனவே யுத்தத்தின் மிகச் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டிருந்த அதே சமயத்தில் அது முன்னே பார்வை செலுத்தியது.

லெனின் தயாரித்த புதிய கட்சிச் செயல் திட்டத்தைக் காங்கிரஸ் அங்கீகரித்தது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலக்கட்டம் முழுவதிலும் கட்சி நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செயல் திட்டம் வரையறுத்தது. அதன் அடிப்படைக் கருத்துக்கள் யாவும் சோவியத் நாட்டில் சோஷலிஸ சமூகத்தை நிறுவுவது என்ற முக்கியக் கடமையை நிறைவேற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. உயர் வகை ஜனநாயகமான சோவியத் ஜனநாயகம் அதில் விவரிக்கப்பட்டிருந்தது. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் வர்க்கத் தன்மையும் பொய்மையும் துலக்கிக் காட்டப்பட்டிருந்தன.

அரசியல் துறையில் செயல்திட்டம் பின்வரும் கடமைகளை விதித்தது:

—சோவியத்துக்களை, தாழ் மட்டத்திலிருந்து உச்ச மட்டம் வரை வட்டார, மைய அரசு இயந்திரம் முழுவதினுடையவும் ஒரே அஸ்திவாரமாக நடப்பில் மாற்றுவது. வட்டார சுயநிர்வாகத்தை அதிகத்திலும் அதிகமாக விரிவுபடுத்துவது. திரளான பொது மக்களின் பண்பாடு, ஒழுங்கமைப்பு, தன் முயற்சி ஆகியவற்றின் தரத்தை இடையறாது உயர்த்துவது;

—சுரண்டுவோரின் எதிர்ப்பை இடைவிடாது ஒடுக்குவதன் அவசியத்தை ஒப்புக் கொண்டு, சுரண்டுவோர் வர்க்கங்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்படுவதையும் பிற சுதந்திரங்கள் குறுக்கப்படுவதையும் போராட்டத்தின் தாற்காலிகச் சாதனங்களாக எண்ணுவது. சுரண்டுவோரின் ஆட்சி மீண்டும் நிலைநாட்டப்படும் வாய்ப்பு முழுமையாக மறைந்ததும் இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் ரத்து செய்து விடுவது;

—ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் பயன்படுத்தும்படி மேலும் மேலும் அதிக விரிவான மக்கள் திரளை ஈர்ப்பது. பூர்ஷ்வாக்களிடமிருந்து கட்டிடங்களைப் பறிமுதல் செய்து கூட்டங்கள் கூடுவதற்கும், அச்சகங்களுக்கும் காகிதக் கிட்டங்கிகளுக்கும் பிற வேலைகளுக்கும் உழைப்பாளிகளுக்கு இட வசதி அளிப்பதன் வாயிலாக இதற்கு ஏற்ற பொருள் வாய்ப்புக்களை விரிவுபடுத்துவது;

—பால், மதம், மனித இனம், நாட்டினம் ஆகியவற்றைச்

சாராமல் எல்லா மனிதர்களதும் சமத்துவத்தை நடப்பில் உறுதிப்படுத்துவது;

—அரசாங்கப் பதவிகள் வகிக்கும் நபர்களின் பொறுப்பையும் மக்களுக்கு விளக்கம் தரும் கடமையையும் உயர்த்துவதன் வாயிலாக ஆட்சி உறுப்புக்களுக்கும் திரளான உழைப்பாளி மக்களுக்கும் இடையே மேலும் நெருக்கமான தொடர்பு ஏற்படுத்துவது;

—உழைப்பாளிகளின் ஒழுங்கமைப்பும் கல்வியறிவும் உரமும் மிக்க பகுதி என்ற வகையில் இயந்திரத் தொழில் பாட்டாளி வர்க்கத்துக்குப் பரிணமிப்புக் காலத்தில் கிடைத்துள்ள ஒரு சில அரசியல் சட்ட அனுகூலங்களை, நாட்டுப்புறப் பாட்டாளிகள், அரைப் பாட்டாளிகளின் எல்லா வட்டாரங்களையும் நடுத்தர விவசாயிகளையும் முன்னணித் தொழிலாளர் களைச் சுற்றி நெருக்கமாக அணி திரட்டும் பொருட்டுப் பயன் படுத்துவது;

—சோவியத் நிர்வாக இயந்திரத்தில் சடங்கு மனப்பான்மையை ஒழிக்கும் பொருட்டு அரசு நிர்வாகத்தில் குறித்த வேலையைச் செய்யும்படி சோவியத்தின் ஒவ்வோர் உறுப்பினரையும் பணிப்பது. அரசு நிர்வாக வேலையில் எல்லா உழைப்பாளிகளையும் படிப்படியாக ஈடுபடுத்துவது;

பொருளாதாரத் துறையில் நாட்டின் உற்பத்திச் சக்திகளை எல்லா விதத்திலும் அதிகப்படுத்துவது முக்கியக் கடமை என்று கட்சி விதித்தது. எல்லா உற்பத்திச் சாதனங்களையும் சமூக உடைமை ஆக்குவதற்கும் நாட்டின் பொருளாதார நடவடிக்கை அனைத்தையும் அரசு முழுவதற்கும் பொதுவான ஒன்றித்த திட்டத்தின் அடிப்படையில் ஒழுங்கமைப்பதற்கும் வகை செய்யப்பட்டது. விஞ்ஞான வளர்ச்சியின் உதவியாலும் விஞ்ஞானத்துக்கும் உற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதாலும் பொருளாதாரத்தை வெற்றிகரமாக அமைக்க வேண்டும்.

அரசாங்க சோவியத் பண்ணைகள் (அரசாங்கப் பண்ணைகள்) அமைப்பது, கூட்டுப் பண்ணை நடத்தும் நோக்கத்துடன் விவசாயிகள் எல்லா வடிவங்களிலும் கூட்டுறவு முறையில் ஒருங்கு சேர்வதற்கு எல்லா வகையிலும் ஆதரவு அளிப்பது ஆகியவற்றின் வாயிலாகப் பேரளவான சோஷலிஸ வேளாண்

மையை ஒழுங்கமைக்கும் கடமையைச் செயல்திட்டம் முன் வைத்தது.

விவசாயிகளின் தனியார் பண்ணைகள் விஷயத்திலும், நாட்டில் விளைபொருள்களின் அளவைப் பெருக்கும் பொருட்டு அவர்களுடைய உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது தன் கடமை என்று கட்சி கருதியது. இந்த நோக்கத்துடன் செயல்திட்டம் அனேக நடவடிக்கைகளைக் குறித்தது:

—விவசாயிகளின் நிலப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துவது;

—விவசாயிகளுக்குச் சிறந்த விதைகளும் செயற்கை உரங்களும் வழங்குவது, கால்நடைகளின் சாதித் தரத்தை மேம்படுத்த அவர்களுக்கு உதவுவது;

—விவசாயிகளின் நிலங்களைச் சீர்படுத்துவது;

—விவசாயிகளின் உபயோகத்துக்காக அனுகூலமான நிபந்தனைகளின் பேரில் உழவு கருவிகள் வழங்கும் வாடகை நிலையங்களும் அரசாங்கத் தொழிற்கூடங்களில் உழவுகருவிகளைச் செப்பனிடும் வசதிகளும் ஏற்படுத்துவது;

—விளைநிலங்களையும் கால்நடைகளையும் எப்படிப் பராமரித்துப் பேண வேண்டும் என்று விவசாயிகளுக்குக் காட்டும் சோதனை நிலையங்கள் அமைப்பது;

—விவசாயிகளுக்கு இடையே வேளாண்மை இயல் அறிவைப் பரப்புவது.

நாட்டினப் பிரச்சினை குறித்துக் கட்சியின் கொள்கையைச் செயல்திட்டம் வரையறுத்தது. சுரண்டுவோருக்கு எதிராக, சோஷலிஸத்தின் பொருட்டுச் சேர்ந்து போராடுவதற்காக எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளை ஒற்றுமைப்படுத்துவதே இந்தக் கொள்கையின் நோக்கம். முன்பு ஒடுக்குபவையாக இருந்த நாட்டினங்களைச் சேர்ந்த பாட்டாளிகள் மீது முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த மக்களினங்களைச் சேர்ந்த திரளான உழைப்பாளிகளின் அவநம்பிக்கையை மிக மிக விரைவில் போக்குவது கட்சியின் கடமையாக வகுக்கப்பட்டது. எந்த நாட்டினத்தினுடையவும் எல்லா விதச் சலுகைகள் அனைத்தையும் ஒழித்துவிடும்படியும் எல்லா நாட்டினங்களுக்கும் மக்கள் இனங்களுக்கும் முழுச் சமவுரிமை வழங்கும் படியும் காலனிகளுக்கும் சமவுரிமை இல்லாத

நாட்டினங்களுக்கும் தனி அரசாகப் பிரியும் உரிமையை ஏற்றுக்கொள்ளும் படியும் செயல்திட்டம் கோரியது. 1919 தொடக்கத்தில் முன்னாள் ருஷ்யப் பேரரசின் நிலப்பரப்பில் ஐந்து சுதந்திர சோவியத் குடியரசுகள் உருவாயின. இவை யாவன: ருஷ்ய சோவியத் சோஷலிஸக் கூட்டுக் குடியரசு, உக் ரேனிய, பேலோருஷ்ய, லித்துவானிய, லாட்விய, எஸ்தோ னிய சோவியத் சோஷலிஸக் குடியரசுகள். தலையீட்டாளர் களையும் வெண்படையினரையும் விரைவில் முறியடிக்கும் பொருட்டு இந்தக் குடியரசுகளின் இராணுவ, பொருளா தார முயற்சிகளை ஒன்றிணைப்பதற்குக் கட்சியின் எட்டாவது காங்கிரஸ் ஆதரவு தெரிவித்தது. சோவியத் குடியரசுகள் ஒரே கூட்டரசாக இணைவது தகும் என்று செயல் திட்டம் ஒப்புக் கொண்டது.

சோவியத் நாட்டின் உழைப்பாளிகளுடைய பொருளா தார-அன்றாட வாழ்க்கை நிலைமை மேம்படுத்துவதற்கும் பண் பாட்டுத் தரத்தை உயர்த்துவதற்கும் பின்வரும் நடவடிக் கைகள் மேற்கொள்ளவும் வகுக்கவும் பட்டன:

—எட்டு மணி நேர வேலை நாள். பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் இயந்திரத் தொழிலின் சிறப்பாகத் தீங்கு விளைக்கும் துறைகளில் வேலை செய்பவர்களுக்கும் ஆறு மணி நேர வேலை நாள். மாதர்களுக்கும் வயதுவராதவர் களுக்கும் இரவு வேலையும் விதித்த நேரத்துக்கு மேல் அதிகப் படி வேலையும் தீங்கு விளைக்கும் துறைகளில் வேலையும் தடை செய்யப்பட்டன;

—வாரந் தோறும் நாற்பத்திரண்டு மணி நேர ஓய்வும் ஆண்டுதோறும் சம்பளத்துடன் விடுமுறையும் மாதர்க ளுக்குப் பேறு காலத்தில் பதினாறு வார விடுமுறையும் முழுச் சம்பளத்துடன்;

—உழைப்புத்திறனை இழந்துவிடும் சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் முழு மையான சமூகப் பராமரிப்பு;

—உழைப்பாளிகளின் இருப்பிட வசதிகளை எல்லா வகை யிலும் மேம்படுத்துவது;

—இலவச மருத்துவ உதவி;

—எல்லாக் குழந்தைகளுக்கும் பதினேழு வயதுவரை

கட்டாய இலவசக் கல்வி, பள்ளிக்கு முந்திய குழந்தைகள் நிலையங்கள் அமைப்பது, விரும்புபவர்கள் எல்லாருக்கும், முதன்மையாகத் தொழிலாளர்களுக்கு, உயர் கல்வி நிலையங் களில் பயிலும் வாய்ப்பு, தொழிலாளர்களும் விவசாயிகளும் சுயமாகக் கற்றுத் தேர்வதற்கும் தங்கள் திறமைகளை வளர்த் துக் கொள்வதற்கும் எல்லா விதத்திலும் அரசாங்க உதவி, எல்லாக் கலைச் செல்வங்களும் விரிவான வட்டாரங்களுக்குப் பயன்பட வகை செய்வது;

—அரசு அதிகார இயந்திரத்தையும் சாதனங்களையும் பயன்படுத்திக் கம்யூனிஸக் கருத்துக்களை மிக விரிவாகப் பரப்புவது.

இவற்றில் பெரும்பாலான நடவடிக்கைகள் சோவியத் ஆட்சியின் தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.

செயல் திட்டம் தவிர, **நடுத்தர விவசாயிகள்பால் கடைப்பிடிக்க வேண்டிய போக்கு பற்றியும்** காங்கிரஸ் ஆலோசனை செய்தது. விவசாயிகள் சமூகம் பலதரப்பட்ட வர்கள் அடங்கியது. ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயி கள், பணக்கார விவசாயிகள் (குலாக்குகள்) என்னும் மூன்று வகுப்புக்களாக அது பிரிவுபடுகிறது. அக்டோபர் புரட் சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவில் ஒரு கோடிக்கு மேல் விவ சாயப் பண்ணைகள் கணக்கிடப்பட்டன. இவற்றில் அறுபது லட்சம் ஏழை விவசாயிகளின் பண்ணைகள், இருபது லட்சத் துக்கும் மேல் நடுத்தர விவசாயிகளின் பண்ணைகள், சுமார் இருபது லட்சம் குலாக்குகளின் பண்ணைகள். விவசாயிகள் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினுடையவும் அரசியல் சொரூ பம் புரட்சியின் போது வெளிப்பட்டது. நாட்டுப்புற ஏழை கள் தொழிலாளர்கள் போலவே சோவியத் ஆட்சியை உறுதி யாக ஆதரித்து நின்றனர். குலாக்குகள் சோவியத் ஆட்சியின் பகைவர்களாக நடந்து கொண்டார்கள். நடுத்தர விவசாயி களோ, ஊசலாடினர்கள். ஏன்? ஏன் என்றால் அவர்கள் ஒரு வகையில் உடைமையாளர்கள், வேறு வகையில் உழைப் பாளிகள். அவர்களிடம் சொந்தப் பண்ணைகள் இருந்தன. அவற்றை விரிவுபடுத்தி, வசதியாக வாழ, செல்வந்தர்கள் ஆக அவர்கள் முயன்றார்கள். ஆனால் அவர்கள் பிறருடைய உழைப்பைச் சுரண்டவில்லை, தங்கள் நிலங்களில் தாங்களே

பாடுபட்டார்கள். உடைமையாளர்கள் என்ற வகையில் நடுத்தர விவசாயிகள் பூர்ஷ்வா வர்க்கத்தின் பக்கம் சாய்ந்தார்கள், உழைப்பாளிகள் என்ற வகையிலோ, அவர்கள் தொழிலாளர்கள்பால் ஈர்க்கப்பட்டார்கள்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்காகவும் பிறகு அதை வலுப்படுத்துவதற்காகவும் தொழிலாளிவர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தோடு கடும் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது நடுத்தர விவசாயி அதன் முடிவை எதிர்பார்த்தவாறு யார் பக்கம் சேர்வது என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சி நிலப்பிரபுக்களிடமிருந்து பறித்த நிலத்தை விவசாயிகளுக்கு வழங்கிய போது நடுத்தர விவசாயி அதை ஆதரித்தான். ஆனால் 1918 கோடையில் சோவியத் ஆட்சி கட்டாயத் தேவை காரணமாக விவசாயிகளிடமிருந்து அதிகப்படி தானியம் அனைத்தையும் குறித்த விலை கொடுத்து எடுத்துக் கொள்ளத் தொடங்கி தானியத்தைச் சுதந்திரமாக விற்பனை செய்வதைத் தடைசெய்ததும் நடுத்தர விவசாயி பூர்ஷ்வா வர்க்கத்தின் பக்கம் சாய்ந்தான். சில இடங்களில் அவன் சோவியத் ஆட்சிக்கு எதிராகக் குலாக்குகள் விளைத்த கலகங்களில் பங்குகூட எடுத்துக் கொண்டான். அதனால்தான் தொழிலாளி வர்க்கமும் அதன் முன்னணியான கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் குடியரசு அமைந்த பிறகு முதல் ஆண்டில் ஏழை விவசாயிகளுடன் ஐக்கியத்தை எல்லா வகையிலும் பலப்படுத்தின, ஆனால் நடுத்தர விவசாயி விஷயத்தில் அக்டோபர் புரட்சிக்கு முந்திய அதே கொள்கையை—அதாவது அவன் பூர்ஷ்வா வர்க்கத்தை ஆதரிக்காதபடி அவனை நடுநிலையில் வைத்திருக்கும் கொள்கையையே தொடர்ந்து கடைப்பிடித்தன. பொது மக்கள் சொந்த அனுபவத்திலிருந்தே படிப்பினை பெறுகிறார்கள். நடுத்தர விவசாயி விஷயத்திலும் இவ்வாறே நடந்தது. அன்னிய ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் குடியரசுக்கு எதிராகப் போர் தொடுத்து, வெண்படையினர் அவர்களுடைய உதவியுடன் பல பகுதிகளில் தங்கள் ஆட்சியை மீண்டும் ஸ்தாபித்ததும் நிலப்பிரபுக்கள் விவசாயிகளிடமிருந்து நிலத்தை மறுபடி பிடுங்கிக் கொண்டதை நடுத்தர விவசாயி கண்டான்.

அப்போது அவன் சோவியத் ஆட்சியின் பக்கம் நிலையாகத் திரும்பி, அதன் எல்லா நடவடிக்கைகளையும் ஊக்கத்துடன் ஆதரிக்கத் தொடங்கினான். ஆனால் விஷயம் இந்தத் திருப்பத்தோடு நின்றுவிடவில்லை. நாட்டுப்புறத்தில் சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டிலேயே முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. நிலப்பிரபுக்களிடமும் குலாக்குகளிடமுமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட நிலப் பகுதிகளைப் பெற்ற லட்சோப லட்சம் ஏழை விவசாயிகள் சொந்த வேளாண்மை தொடங்கினார்கள். நாட்டுப்புறம் நடுத்தர விவசாயிகளுடையது ஆகிவிட்டது. பாதிக்கு மேல் பண்ணைகள் நடுத்தர விவசாயிகளுடையவை ஆகிவிட்டன. கட்சி தன் கொள்கையை வகுக்கும் போது இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது.

கட்சியின் எட்டாவது காங்கிரஸில் லெனின் நடுத்தர விவசாயி பற்றிய கொள்கையை ஆதாரங்களுடன் விளக்கினார். கம்யூனிஸ்டுகள் உழைப்பாளி விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையாகவும் தலைமைக் கோட்பாடாகவும் கருதினார்கள். எனவேதான் குலாக்குகளுடனும் சோவியத் ஆட்சியின் எல்லாப் பகைவர்களுடனும் போராடுவதற்கு ஏழை விவசாயிகளை ஆதாரமாகக் கொண்டு **நடுத்தர விவசாயிகளுடன் நிலையான ஐக்கியம்** ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், இந்த ஐக்கியத்தில் தலைமைப் பணி ஆற்றும் பொறுப்பு தொழிலாளி வர்க்கத்தைக் சேர்ந்திருக்க வேண்டும் என்று லெனின் பிரேரித்த கொள்கையைக் காங்கிரஸ் அங்கீகரித்தது.

சோஷலிஸக் கட்டுமானத்தில் விவசாயிகளை ஈடுபடுத்துவது அவசியம் என்று காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. தனி உடைமையை ஒழிப்பதும் உற்பத்திச் சாதனங்கள் எல்லாவற்றையும் சமூக உடைமை ஆக்குவதுமே சோஷலிஸம். தொழிலாளி வர்க்கம் தனது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, இவ்வாறு சமூக உடைமை ஆக்கும் செயலை இயக்கி நடத்தும், ஆனால் வெவ்வேறு விதமாக. பெரு நிலச்சொந்தக்காரர்களிடமும் முதலாளிகளிடமுமிருந்து அவர்கள் சூறையாடிச் சேர்த்த செல்வத்தை அது ஈடு செலுத்தாமல் பிடுங்கிக் கொள்ளும்.

அவர்களுடைய எல்லா நிலங்களையும் ஆலைகளையும் தொழிற் சாலைகளையும் நிதிமனைகளையும் பிறவற்றையும் ஜப்தி செய்து மக்கள் அனைவரதும் உடைமையாக மாற்றுவதன் மூலம் இந்தப் பணி நிறைவேற்றப்படும். உழைப்பாளி விவசாயிகளும் உடைமையாளர்கள்தாம், ஆனால் சிறு சொத்துக்காரர்கள். சோஷலிஸம் வெற்றி அடைவதற்கு அவர்களுடைய உற்பத்திச் சாதனங்களும் சமூக உடைமை ஆக்கப்படுவது இன்றியமை யாதது. ஆனால் அவர்கள் விஷயத்தில் வன்முறையைக் கையாளுவது கூடாது. பெரிய பண்ணைகளுக்கு மாறுவது, தங்கள் உற்பத்திச் சாதனங்களைத் தாமே விரும்பி ஒன்று சேர்ப்பது எவ்வளவு அனுகூலமானது என்பதை அவர்கள் மனத்தில் பதியும்படி எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்கு ஓரளவு காலமும் பரிணமிப்பு நடவடிக்கைகளின் முழுத் தொகுப்பும் பல்வேறு கூட்டுறவு வடிவங்களின் தொகுப்பும் தேவைப் படும். ஆகவே, நடுத்தர விவசாயின் விஷயத்தில் பலாத் காரத்தை மேற்கொள்வது தகாது என்று கட்சி கருதியது. அவனுக்கு விட்டுக் கொடுக்கும் படியும் தன் வாழ்க்கையை சோஷலிஸ முறையில் மாற்றி அமைத்துக் கொள்ள தனக்கு ஏற்புள்ள வடிவங்களைத் தேடிக் கொள்ள அவனுக்கு உதவும் படியும் கட்சி கேட்டுக்கொண்டது. இந்த அடிப்படைக் கருத் துக்கள் கட்சிச் செயல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டன.

விவசாயிகள் பிரச்சினைக்குக் காங்கிரஸ் கண்ட தீர்வு சோவியத் ஆட்சியின் பகைவர்களை முறியடிப்பதற்கும் சோ வியத் நாட்டில் சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பதற்கும் சர்வதேசப் புரட்சி இயக்கத்துக்கும் மிகப் பெருத்த முக் கியத்துவம் உள்ளதாக இருந்தது. உழைப்பாளி விவசாயிக ளுடனும் பிற சிறு உடைமையாளர்களுடனும் தொழிலாளி வர்க்கத்தின் உறவு பற்றிய பிரச்சினை சோஷலிஸப் பாதை யில் அடி வைக்கும் ஒவ்வொரு நாட்டுக்கும் ஜீவாதார முக் கியத்துவம் வாய்ந்தது ஆகும். எந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கம் முன்னுக்கருப் பருவத்தில் இருக்கிறதோ, ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அவர்களுடைய கையாட்களான ''சொந்தப்'' பிற்போக்காளர்களுக்கும் எதிரான போராட்டத்தின் பிரதானச் சுமையை உழைப்பாளி விவசாயிகள் ஏற்க

வேண்டி இருக்கிறதோ அந்த நாடுகளில் இந்தப் பிரச்சினை சிறப்பாக முக்கியமானது. பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் அனுபவம் காட்டியிருப்பது போல, விவசாயிகள் ஒற்றுமை யாகச் செயல்பட்டால், அதோடு, சோஷலிஸ நாடுகளுடனும் பிற நாடுகளின் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்துடனும் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்ளும் கொள்கையைக் கடைப் பிடிக்கும் முற்போக்குக் கட்சிகள் அவர்களுக்குத் தலைமை தாங்கினால், இந்தப் போராட்டம் வெற்றி பெறக் கூடும்.

கட்சியை மேலும் வலுப்படுத்தவும் அதன் வேலையை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளைக் காங்கிரஸ் பரிசீலித்தது. தற்செயலாகச் சேர்ந்தவர்களையும் சடங்கு முறைகளில் ஊறிப் போனவர்களையும் அகற்றிக் கட்சியைத் தூய்மைப்படுத்துவதும் புதிய உறுப்பினர்களை, சிறப்பாகப் பாட்டாளிவர்க்கம் அல்லாத சமூக வட்டாரங்களைச் சேர்ந்த வர்களை, கட்சியில் சேர்க்கும்போது கண்டிப்பான போக்கு கடைப்பிடிப்பதும் அவசியம் என்ற கருத்தை அது ஆதரித்தது.

உக்ரேன், பேலோருஷ்யா, லித்துவானியா, துர்க்கிஸ் தான், லாட்வியா, எஸ்தோனியா ஆகியவற்றில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றியதன் தொடர்பாக ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சி அவற்றுடன் கொள்ள வேண்டிய உறவு பற்றிய பிரச்சினை எழுந்தது. எல்லா சோவியத் குடியரசு களுடையவும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் காங் கிரஸில் கூடியிருந்தார்கள். எல்லா சோவியத் நாட்டினக் குடியரசுகளுடையவும் கம்யூனிஸ்ட் கட்சிகளை ஒன்று சேர்ப் பதும் ஒரே தலைமையம்—ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல் ஷிவிக்) கட்சி மத்தியக் கமிட்டி—கொண்டதும் ஆன மையப் படுத்தப்பட்ட ஒரே கம்யூனிஸ்ட் கட்சி நிலவுவதை நிலையாக வைத்திருப்பது அவசியம் என்று பாட்டாளி வர்க்க சர்வதே சியக் கோட்பாடுகளை வழிகாட்டியாகக் கொண்டு காங்கிரஸ் முடிவு செய்தது. குடியரசுகளின் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிகள் விரிவான உரிமைகள் பெற்றிருப்பதையும் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷிவிக்) மத்தியக் கமிட் டிக்குக் கீழ்ப்பட்டிருப்பதையும் காங்கிரஸ் காட்டியது.

எட்டாவது கட்சிக் காங்கிரஸின் முடிவுகளும் அதன் ஒப் புதல் பெற்ற புதிய செயல் திட்டமும் சோஷலிஸக் கட்டு

மானம் பற்றிய தெளிவான புரிவைத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் அளித்தன. சோஷலிஸப் புரட்சி ருஷ்யா வில் எவ்வாறு வெற்றி பெற்றது, எல்லா நாடுகளிலும் அது ஏன் தவிர்க்க முடியாதது, அதன் சக்தி எதில் அடங்கி இருக் கிறது என்பவற்றை ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் திட்டம் உலகம் அனைத்தையும் சேர்ந்த உழைப்பாளிகளுக்கு விவரமாக விளக்கியது.

ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் எட்டா வது காங்கிரஸால் ஏற்கப்பட்ட செயல்திட்டத்தின் சர்வதேச முக்கியத்துவம் பற்றி லெனின் பின்வருமாறு கூறினார்:

''...அனைத்து உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு படைப் பிரிவாக விளங்கும் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி என்ன செய் தது என்ற கேள்விக்கு, நமது செயல் திட்டத்தின் சாதாரண மான மொழிபெயர்ப்பே சிறந்த விடையாகும். நமது செயல் திட்டம் பிரசாரத்துக்கும் கிளர்ச்சிக்கும் ஏற்ற மிக வலிய கருவியாக இருக்கும். 'இதோ இருக்கிறார்கள் நம் தோழர் கள், நம்முடைய சோதரர்கள், இங்கே ஆற்றப்படுகிறது நமது பொதுப் பணி' என்று தொழிலாளர்கள் எதன் அடிப் படையில் சொல்லுவார்களோ அந்தப் பத்திரமாகத் திக ழும் இது.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 38, பக்கம் 212).

புதிய செயல் திட்டத்தை மேற்கொண்ட பின் கட்சி அதை நிறைவேற்ற முற்பட்டது.

தலையீட்டாளர்கள் மீதும் வெண்படையினர் மீதும் வெற்றி

அன்னியத் தலையீட்டாளர்களுக்கும் வெண்படையினருக்கும் எதிரான போ ராட்டம் மூன்று ஆண்டுகள் நீடித்தது. அது முன் ஒருபோதும் கேட்டிராத அளவு கொடியதாக இருந்தது. இளம் சோவியத் அரசுக்கு எண்ணற்ற இன்னல்கள் விளைத்தது அது. சோவியத் குடியரசின் நிலை பல முறைகள் நெருக்கடிக்கு உள்ளாயிற்று. கல்சாக்கின் சைனியம் சைபீரியாவிலிருந்து போர் நடவடிக்கைகள் தொடங்கி உராலைக் கைப்பற்றி, கிழக்கே இருந்து வோல்கா ஆற்றை நோக்கி முன்னேறியது. தெனீக்கினுடைய சைனியம் தெற்கிலிருந்து துலா நகரை நெருங்கி மாஸ்கோவை அபாயத்துக்கு உள்ளாக்கிற்று. யுதே னிச்சின் சைனியம் பெத்ரோகிராத் நகரின் எல்லை வட்டாரங்

கூளை இரண்டு தடவைகள் ஆக்கிரமித்துக் கொண்டது. விராங்கல் பிரபு கிரிமியாவைக் கைப்பற்றிக்கொண்டான். வெண்போலந்தினரின் சைனியம் மேற்கே இருந்து நெருக்கியது. வடக்கே ஆதிக்கம் செலுத்தின ஜெனரல் மில்லரின் கொள்ளைக் கூட்டங்கள். மிகப் பெரிய ஏகாதிபத்திய நாடுகளின் இராணுவத் தலைமை அலுவலகங்கள் இந்த எல்லாப் படைகளுடையவும் நடவடிக்கைகளை இயக்கின, வலுப்படுத்தின. நாட்டின் வளம் மிக்க பகுதிகளான உக்ரேன், காக்கேஷியா, சைபீரியா ஆகியவை போர் முனைகளின் வலையத்துக்கு அப்பால் இருந்தன. அந்தக் காலத்து வெளிநாட்டுப் பத்திரிகைகள் போல்ஷிவிக்குகளின் தவிர்க்க முடியாத வீழ்ச்சி நெருங்கிவிட்டது என்ற செய்திகளால் நிறைந்திருந்தன. சோவியத் ஆட்சியின் வாழ்வு முடிந்து விட்டது என்ற செய்திகூடப் பற்பல தடவைகள் வெளியாயிற்று.

ஆனால் சோவியத் ஆட்சி மக்கள் ஆட்சி. மக்களை அழிப்பது எப்படி இயலாதிருந்ததோ அப்படியே சோவியத் ஆட்சியை அழிப்பதும் இயலாதிருந்தது. போர் முனைகளில் அபாய நிலை ஏற்பட்டபோதெல்லாம் சோவியத் அரசாங்கத் தலைவர், தற்காப்பு சபைத் தலைவர் லெனினும் போல்ஷிவிக் கட்சியும் மக்களுக்கும் சேனைக்கும் வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்களுடைய அறைகூவல்கள் புது சக்திகளைத் தோற்றுவித்தன. ஆபத்துக்கு உள்ளான பகுதிகளுக்கு விரைந்தனர் கட்சியின் சிறந்த மனிதர்களும் தொழிலாளர்கள், இளம் கம்யூனிஸ்டுகளின் புதிய படைப் பிரிவுகளும். தனது வெற்றியைப் பறை சாற்றிக் கொண்டிருந்த பகைவர்கள் தோல்வி அடைந்து ஓட்டம் எடுத்தார்கள். பட்டினி கிடந்த, வெறுங் காலர்களான, மோசமாக உடை அணிந்த, ஆயுத பலம் குறைந்த செஞ்சேனை வீரர்கள்—தொழிலாளர்களும் விவசாயிகளும்—தங்கள் ஆட்சிக்கான போராட்டத்தில் முன் கண்டிராத தன்னலத் தியாகத்தையும் வீரத்தையும் காட்டினர்கள். லெனினது கட்சியின் மத்தியக் கமிட்டியுடையவும் சோவியத் அரசாங்கத்துடையவும் தலைமையின் கீழ் உழைப்பாளி மக்கள் போர் முனையிலும் பின்னணியிலும் மிகக் கடுமையான நிலைமைகளில், கடக்க முடியாதவையாகத் தோன்றிய இடையூறுகளைக் கடக்க வலிமை பெற்றுவிட்டார்கள்.

அன்னியத் தலையீட்டாளர்களுக்கும் வெண்படையினருக்கும் எதிராக சோவியத் மக்கள் நடத்திய போராட்டத்தை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டம் எளிதாக்கிற்று. முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளிகள் வெண்படையினருக்கும் தலையீட்டாளர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்படுவதை இடைமுறித்தார்கள், ''ருஷ்யாவைத் தொடாதே'' கமிட்டிகளை அமைத்தார்கள். பல நாடுகளின் பல்லாயிரம் தொண்டர்கள் செஞ்சேனையின் சர்வதேசப் படைப் பிரிவுகளில் சேர்ந்து போரிட்டார்கள். உலகு அனைத்தின் தொழிலாளர்களும் விவசாயிகளும் காட்டிய ஆதரவும் பரிவும் ருஷ்யாவின் உழைப்பாளிகளுக்கு ஊக்கமும் வெற்றியில் நம்பிக்கையும் ஊட்டின.

லெனின் எழுதினார் ''...இந்த ஆதரவுதான், திரளான உழைப்பாளி மக்கள்—உலகம் முழுவதிலும், நம் மீது மிகுந்த பகைமை கொண்ட வல்லரசுகளில்கூட, உள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் உழவர்களும் அடங்கிய திரளான மக்கள்—நம்பால் காட்டும் இந்தப் பரிவு தான், இந்த ஆதரவும் இந்தப் பரிவும் தான், நமக்கு எதிராக நடத்தப்பட்ட எல்லாப் படையெடுப்புக்களும் தோல்வியில் முடிந்ததற்கு இறுதியான, மிக நிர்ணயகரமான ஊற்றுக்கண்ணாக, நிர்ணயகரமான காரணமாக இருந்தன...'' (முழு நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 293).

1920 இறுதிக்குள் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடைய கூட்டாளிகளும் ருஷ்யாவில் நடத்திய எல்லாத் தாக்குதல்களும் முறியடிக்கப்பட்டுவிட்டன. தலையீட்டாளர்களும் வெண்படையினரும் சைபீரியாவிலும் மத்திய ஆசியாவிலுமிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். சோவியத் ஆட்சி அஸெர்பைஜானிலும் பின்பு ஆர்மீனியாவிலும் ஜார்ஜியாவிலும் வெற்றி அடைந்தது. சோவியத் அரசைப் படை பலம் கொண்டு மாய்த்துவிடும் முயற்சி படு தோல்வி அடைந்தது. சோவியத் தூரக் கிழக்கு ஒன்றில் மட்டுமே ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களும் வெண்படையினரும் 1922 வரை தாக்குப் பிடித்தார்கள். நாட்டின் எஞ்சிய நிலப் பரப்பு முழுவதும் 1920 முடிவுக்குள்ளேயே அன்னியத் தலையீட்டாளர்களிடமிருந்தும் வெண்படைக் கும்பல்களிடமிருந்தும் மீட்கப்

பட்டுவிட்டது. அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் சைனியங்களது காப்பில் லித்துவானியாவிலும் லாட்வியாவிலும் எஸ்தோனியாவிலும் ஆட்சியை மீண்டும் கைப்பற்ற பூர்ஷ்வா வர்க்கத்துக்கு வாய்த்தது என்பது உண்மையே. மல்தாவியா (பெஸ்ஸரேபியா), உக்ரேன், பேலோருஷ்யா ஆகியவற்றின் ஒரு பகுதி தாற்காலிகமாக சோவியத் குடியரசுகளிலிருந்து பிரித்து அகற்றப்பட்டிருந்தது.

உள்நாட்டுப் போரில் தன்னைவிட வலிமை மிக்க தலையீட்டாளர்களுடையவும் வெண்படையினருடையவும் ஒன்றித்த படைகள் மீது செஞ்சேனை பெற்ற வெற்றிகள் அற்புத நிகழ்ச்சிகளாகத் தோன்றுதிருக்க முடியாது. இந்த வெற்றிகளின் காரணங்களை லெனின் பின்வருமாறு விளக்கினார்: ''...நிகழ்ந்த அற்புதம், கட்சி விழிப்புடன் இருந்ததன் விளைவாகவும் கட்சி கண்டிப்பான கட்டுப்பாடு கொண்டிருந்ததன் விளைவாகவும் கட்சியின் செல்வாக்கு எல்லா இலாகாக்களையும் அலுவலகங்களையும் ஒன்றிணைத்ததன் விளைவாகவும், மத்தியக் கமிட்டி அளித்த கோஷத்தின்படி பதிற்று, நூற்று, ஆயிரக்கணக்கானவர்களும், இறுதி மதிப்பீட்டில் லட்சோப லட்சம் பெயரும் ஒரே மனிதன் போன்று இயங்கியதன் விளைவாகவும் முன்கேட்டிராத தியாகங்கள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகவுமே, இவற்றின் விளைவாக மட்டுமே, நிகழ முடிந்தது.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 40, பக்கம் 240).

சோவியத் ஆட்சிக்காக, சோவியத் அரசினது சுதந்திரத்துக்காக, அமைதி நிறைந்த சோஷலிஸக் கட்டுமானத்துக்கு ஏற்ற நிலைமைகளைப் பெறுவதற்காக நடந்த போராட்டத்தில் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும் இது.

கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை வகித்து நடத்தப்பட்ட சோவியத் மக்கள் உலக ஏகாதிபத்தியத்துடன் தனியாகப் போரிட்டு, அக்டோபர் புரட்சியின் மாபெரும் நலன்களையும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினுடையவும் உலகு அனைத்தின் ஒடுக்கப்பட்ட மக்களுடையவும் அரணான சோவியத் அரசின் சுதந்திரத்தையும் காத்தார்கள்.

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டுவோரும் உள்நாட்டுப் புரட்சி விரோதிகளும் தொழிலாளர்கள், விவசாயிகளின் ஆட்சியை வெல்லத் திறன் இல்லாதிருந்ததை சோவியத்

நாட்டில் அன்னியத் தலையீடும் உள் நாட்டுப் போரும் காட்டி விட்டன. அவர்கள் ஏகாதிபத்திய அரசுகளின் உதவியை நாடினார்கள். இந்த அரசுகளோ, முதல் சோஷலிஸ அரசை அழிப்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தன. அப்போது இளம் சோவியத் அரசு, பொருளாதார, இராணுவ நோக்கில் பெரு விறல் வாய்ந்த ஏகாதிபத்தியத்துடன் ஒப்பிடவே முடியாத அளவுக்கு பலவீனமாய் இருந்தது. ஆனாலும் அது ஏகாதிபத்தியத்தின் தாக்குதல்கள் எல்லாவற்றையும் முறியடித்து, அன்னியத் தலையீட்டாளர்களையும் அவர்களுடைய கையாட்களான வெண்படையினரையும் படு தோல்விக்கு உள்ளாக்கிவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்களும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியால் கிடைத்த நன்மைகளையும் சோவியத் ஆட்சியையும் காத்த அதே சமயத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின், எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப் பாளிகளின் நலன்களுக்காகவும் போராடினார்கள். நிலப் பிரபுக்களிடமிருந்தும் முதலாளிகளிடமிருந்தும் ஆட்சியைப் பிடுங்கிக் கொள்வதோடு, உள்நாட்டு, சர்வதேசப் பிற்போக் காளர்களுடன் ஜீவமரணப் போரில் அதைக் காத்து நிற்கவும் தாங்கள் வல்லவர்கள் என்பதை சோவியத் நாட்டின் தொழிலாளர்களும் விவசாயிகளும் நிரூபித்துவிட்டார்கள். ஏகாதிபத்தியவாதிகளைத் தாக்கவும் சிதற அடிக்கவும் முடியும் என்பதை உலகு அனைத்தின் உழைப்பாளிகளுக்கு, சிறப்பாகக் காலனிகள், ஆதீன நாடுகளின் மக்களுக்கு அவர்கள் காட்டினார்கள். இது ஏகாதிபத்தியத்துடன் போராடுவதற்கு ஒடுக்கப் பட்ட மக்களைத்தூண்டி ஊக்கியது, தங்கள் வெற்றியில் அவர்களுடைய நம்பிக்கையை வலுப்படுத்தியது.

வெளிநாட்டாரின் படையெடுப்பையும் வெண்படையினரையும் எதிர்த்து மிகக் கடும் போராட்டம் நடந்து கொண்டிருந்த போதும் கட்சி விரிவான பொருளாதாரக் கட்டுமானப் பணியைத் தளர்த்தவில்லை. 1920ம் ஆண்டு வசந்தத்தில் கூடிய கட்சியின் ஒன்பதாவது காங்கிரஸ் இந்த விஷயம் குறித்தே ஆலோசனை நடத்தியது. 1920 பிப்ரவரியிலேயே லெனினது கட்டளைக்கு இணங்க ருஷ்யாவை மின்சாரமயமாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டம்

சோவியத் நாட்டை மின்சாரமயம் ஆக்குவது பற்றி லெனின் விரிவுரை நிகழ்த்துகிறார். 1920ம் ஆண்டு

நிறைவேறுவதற்கு 10-20 ஆண்டுகளாகும் என்று கணக்கிடப் பட்டிருந்தது. போல்ஷிவிக் கட்சி அமைக்கப்பட்ட காலம் முதலே லெனினுடைய போராட்டத் தோழராய் இருந்தவ ரும் பெருத்த மின்பொறி இயல் நிபுணரும் ஆன கிரிழிழஜேவ் ஸ்கியின் தலைமையில் நிபுணர்களின் குழு ஒன்று இந்தத் திட் டத்தை வகுத்தது. 1920 டிசம்பரில் சோவியத்துக்களின் காங்கிரஸ் இந்தத் திட்டத்தை உறுதிப்படுத்தியது. காங்கிர ஸின் கூட்டம் பல்ஷோய் தியேட்டர் கட்டிடத்தில் நடந்தது. மாஸ்கோவில் எரி பொருள் இல்லாமையால் கட்டிடத்தில் வெப்ப வசதிகள் செய்யப்படவில்லை. நகரப் போக்குவரத்துச் சாதனங்களும் இயங்கவில்லை. பிரதிநிதிகள் கூட்டத்துக்கு நடந்து போய்ச் சேர்ந்தார்கள். நாட்டை மின்சாரமயமாக் கும் திட்டத்தின் வரைபடம் காங்கிரஸில் காட்டப்பட்டது. அதை ஒளியுறுத்தும் பொருட்டுக் கிரெம்ளினில் கூட மின் விளக்குகள் அமைக்கப்பட்டன—தலைநகரில் அப்போது மின் ஆற்றல் அவ்வளவு குறைவாய் இருந்தது. இத்தகைய நிலை

மைகளில் நாட்டின் தலைமை ஆட்சி உறுப்பான சோவியத்துக் களின் காங்கிரஸ் மின்சாரமயமாக்கும் திட்டத்தை விவாதித் தது. தனது துணிவாலும் மாட்சியாலும் சமகாலத்தவர்களை வியப்பில் ஆழ்த்தியது இந்தத் திட்டம்.

மொத்தம் பதினைந்து லட்சம் கிலோவாட் திறன் கொண்ட 30 மின் நிலையங்கள் நிறுவத் திட்டத்தில் வகை செய்யப் பட்டிருந்தது. அந்தக் காலத்துக்கு இது சோவியத் நாட் டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உரிய துணிகரமான, மாட்சி மிக்க திட்டமாக விளங்கியது. திர ளான தொழிலாளர்களையும் அரசியல் உணர்வு படைத்த விவசாயிகளையும் ஈர்க்க வல்ல மாபெரும் திட்டம் இது என்று எழுதினார் லெனின். இதைக் கட்சியின் இரண்டாவது செயல் திட்டமாக அவர் கருதினார். தொடங்கிய வேலையின் மிகப் பெரிய முக்கியத்துவத்தை லெனின் பின்வரும் சொற்களில் வெளியிட்டார்: "**சோவியத் ஆட்சியும், நாடு முழுவதும் மின் சாரமயம் ஆக்கப்படுவதும் சேர்ந்த கூட்டு மொத்தமே கம்யூ னிஸம்.**" (*முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 159*).

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் ஒரே கட்சி ஆனது ஏன்?

ருஷ்யாவுக்குப் பிறகு, வேறு வித வர லாற்று நிலைமைகளில் சோஷலிஸப் பாதையில் அடி வைத்த அனேக நாடு களில், சோஷலிஸக் கட்டுமானத்தைத் தலைமை தாங்கி நடத்தும் மார்க்ஸீய-லெனினீயக் கட்சிக ளோடு கூடவே, பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளி வர்க்கங்க ளுடையவும் சமுதாயக் குழுக்களுடையவும் (விவசாயிகள், நகரச் சிறு உடைமையாளர்கள், அறிவுஜீவிகளின் சில வட் டாரங்கள் ஆகியவை) நலன்களை வெளியிடும் பிற அரசியல் கட்சிகளும் செயல் ஆற்றுகின்றன. இவை சோஷலிஸக் கட்டுமானத்தைக் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டு இந்தக் குறிக்கோளை அடைவதற்கு ஊக்கத்துடன் பாடுபடுகின்றன. எடுத்துக்காட்டாகப் போலந்திலும் செக்கோஸ்லோவாக் கியாவிலும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும் இருக்கும் நிலைமை இதுவே. சோவியத் அரசில் மட்டும் இறுதியில் ஒரே ஒரு அரசியல் கட்சி மாத்திரமே எஞ்சி இருப்பது ஏன்?

ருஷ்யாவில் நிலவிய பெருந்தொகையான கட்சிகள் கடு மையான வர்க்கப் போராட்டத்தின் போது படிப்படியாகச்

சிதறி, அரங்கிலிருந்து அகன்றுவிட்டன. கம்யூனிஸ்ட் கட்சி தான் தங்கள் நலன்களைத் தொடர்ந்து காத்து வரும் ஒரே காவலாளி, எல்லா நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளதும் ஆக்கிரமிப்பிலிருந்து சோவியத் நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் உறுதிமிக்க போராட்ட வீரன் என்பதை உள்நாட்டுப் போர்க் காலத்தில் உழைப்பாளிகளின் எல்லா வட்டாரங் களும் சொந்த அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்துகொண் டன. கொடிய உள்நாட்டுப் போர் நடந்த மூன்று ஆண்டுக ளில் எண்ணற்ற போர்முனைகளில் கம்யூனிஸ்டுகள் தம்மையே பலி கொடுத்ததைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் கண்டார்கள், அவர்களுடைய வீரத்தாலும் நிலையுறுதியா லும் ஆட்கொள்ளப்பட்டார்கள். இந்தப் புனித விடுதலைப் போரின் நெருப்பில், தொழிலாளர்களும் விவசாயிகளும் கம் யூனிஸ்ட் கட்சியை முன்னிலும் நன்றாக அறிந்து கொண் டார்கள், சோவியத் அரசைத் தலைமை ஏற்று நடத்த அதற்கு உள்ள தகுதியையும் திறமையையும் மதிப்பிட்டார்கள், அதன் மீது முன்னிலும் அதிக நம்பிக்கை கொண் டார்கள்.

அக்டோபர்வாதிகள், சட்ட ரீதியான ஜனநாயகவாதி கள் (காடெட்டுகள்) ஆகியோரின் கட்சிகளும் உக்ரேன், காக்கேஷியப் பிரதேசம், மத்திய ஆசியா, கிரிமியா, வோல்கா உரால் பிரதேசங்களின் நாட்டினப் பகுதிகள் ஆகியவற்றைச் சேர்ந்த பூர்ஷ்வா-நாட்டினக் கட்சிகளும் முடியரசுவாதி களும் போன்ற வெளிப்படையான பூர்ஷ்வா-நிலப்பிரபுக் கட்சிகள் சோவியத் ஆட்சியின் ஆரம்ப நாட்கள் முதலே சோஷலிஸப் புரட்சியைப் பகிரங்கமாக எதிர்த்தன. அவை சோவியத் எதிர்ப்புச் சதியாலோசனைகளும் கலகங்களும் நடத்தின, அன்னிய ஏகாதிபத்தியவாதிகளுடன் (ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள்) தொடர்பு கொண்டு அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றின, கைகளில் ஆயுதங்கள் ஏந்தித் தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றன. இவ்வாறு, பூர்ஷ்வா-நிலப்பிரபுக் கட்சிகள் தாங்கள் சோவியத் எதிரி, மக்கள் எதிரி, புரட்சி விரோதிக் கட்சிகள் என்பதை முற்ற முழுக்கக் காட்டிக் கொண்டன.

அக்டோபர் புரட்சியை எதிர்த்த மென்ஷிவிக்குகள், எஸ் ஆர்களின் கட்சிகளும் பிற குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளும் பூர்ஷ்வாக்கள், நிலப்பிரபுக்களின் கட்சிகளோடு சேர்ந்து சோவியத் ஆட்சியின் எதிரிகளுடைய முகாமில் இருந்தன. குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளின் ஊசலாட்டமுள்ள அரசியல் குழுக்கள், பகுதிகள் விஷயத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சமயோசிதமான செயல் தந்திரத்தைக் கடைப்பிடித்தது. இந்தக் கட்சிகளின் உறுப்பினர்களில் சோவியத் ஆட்சியுடன் ஒத்துழைக்க ஆயத்தமாய் இருந்தவர்களுக்கு, தங்கள் தயக்கத்தைப் போக்கவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இன்றியமையாமையைப் புரிந்து கொள்ளவும் அதற்கு ஆதரவு அளிக்க முன்வரவும் உதவுவதற்குக் கட்சி தன்னால் இயன்றதை எல்லாம் செய்தது. புரட்சி விரோதிகள் முகாமைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் கம்யூனிஸ்டுகள் இத்தகையவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

மென்ஷிவிக்குகள், எஸ் ஆர்கள் ஆகியோரின் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவாக அவர்களுடைய தலைவர்கள் 1918 கோடையில் தொழிலாளர்களாலும் விவசாயிகளாலும் சோவியத்துக்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் ஜெர்மன் புரட்சியின் விளைவாகவும் அன்னிய இராணுவத் தலையீட்டின் முதல் படிப்பினைகளின் விளைவாகவும் 1918 சரத்காலத்தில் சோவியத் ஆட்சிக்கு ஆதரவான திருப்பம் அவர்களிடையே ஏற்பட்டது தெரிந்ததும் போல்ஷிவிக்குகள் இந்தத் திருப்பத்தை உடனே கருத்தில் கொண்டார்கள். ருஷ்ய பூர்ஷ்வாக்களுடனும் வெளிநாட்டு பூர்ஷ்வாக்களுடனும் கூட்டு சேர மறுத்த மென்ஷிவிக்குகளுக்கும் எஸ் ஆர்களுக்கும் சோவியத்துக்களின் வேலையில் பங்கு கொள்ள உரிமை அளிக்கப்பட்டது. அவர்களுடைய செய்தித்தாள்கள் வெளிவரலாயின. ஆனால் மென்ஷிவிக்குகளும் எஸ் ஆர்களும் இந்தக் கொள்கையில் சிறிது காலமே நிலைத்திருந்தார்கள். 1919 இளவேனில் காலத்திலேயே, கல்சாக்கின் தாக்குதல்கள் நடந்த நாட்களிலேயே அவர்கள் மீண்டும் சோவியத் எதிர்ப்புச் சக்தியாகச் செயல்பட்டார்கள். சோவியத் ஆட்சி அவர்களுடைய செய்தித்தாள்களை மூடிவிட நேர்ந்தது.

ஆனாலும் இந்தக் கட்சிகளின் நடவடிக்கைகள் தடை செய்யப் படவில்லை. உள் நாட்டுப் போர் முடியும் தறுவாயில்கூட (1920 டிசம்பர்), மென்ஷிவிக்குகளுக்கும் எஸ் ஆர்களுக்கும் பிற குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளுக்கும் சோவியத்துக்களில் பிரதிநிதிகள் இருந்தார்கள்.

ஆனால் சோஷலிஸப் புரட்சி எவ்வளவு தூரத்துக்கு மேலும் வளர்ச்சி அடைந்ததோ, குட்டி பூர்ஷ்வாக் கட்சிக ளுடையவும் திரளான உழைப்பாளி மக்களுடையவும் பாதை கள் அவ்வளவு அதிகமாகப் பிரிந்து சென்றன. விவசாயி களும் கைத்தொழிலாளர்களும் உழைப்பாளி அறிவுஜீவி களும் புரட்சி, உள்நாட்டுப் போர் ஆண்டுகளில் பல படிப் பினைகள் பெற்றிருந்தார்கள். நீண்ட காலம் நடந்த கடுமை யான உள்நாட்டுப் போர் எல்லாக் கட்சிகளும் தங்கள் நிலைகளைத் தெளிவாக வரையறுப்பதை இன்றியமையாதது ஆக்கிற்று. அவை ஒன்று போல்ஷிவிக்குகளை எதிர்க்க வேண்டி யிருந்தது—வெண்படையினருடனும் தலையீட்டாளர்களுட னும் சேர்ந்துகொண்டு சொந்த மக்களுக்கு எதிராகச் செல்ல வேண்டும் என்பது இதன் அர்த்தம்; இல்லாவிட்டால் நிலப் பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் எதிராக, உழைப்பாளி மக்களின் தரப்பில் செயல்பட வேண்டியிருந்தது—இதன் அர்த்தம் போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொள்வது என்று ஆயிற்று. ஏனெனில் வெண்படையினருக்கும் தலையீட்டாளர் களுக்கும் எதிராகப் போராட்டத்தை ஒழுங்கமைத்து நடத்திச் செல்ல வல்ல வேறு அரசியல் சக்தி எதுவும் நாட்டில் இல்லை. ருஷ்யாவின் உழைப்பாளி மக்கள் தங்கள் கட்சியைத் தெரிந்தெடுத்து விட்டார்கள். அவர்கள் லெனினுடைய கட் சியின் தரப்பில், போல்ஷிவிக்குகளின் தரப்பில் சேர்ந்து போராடி வெற்றி பெற்றார்கள். மென்ஷிவிக் கட்சி, எஸ் ஆர் கட்சி, பிற குட்டி பூர்ஷ்வாக் கட்சிகள் ஆகியவற்றின் தலை வர்கள் வெண்படையினருடனும் தலையீட்டாளர்களுடனும் சேர்ந்து கொண்டார்கள், அவர்களோடு கூடவே வரலாற் றின் குப்பை மேட்டில் எறியப்பட்டார்கள். ருஷ்யக் கூட்டர சில் இவ்வாறு நிகழ்ந்தது.

நாட்டின் எல்லைப் பகுதிகளிலும் அதன் நாட்டினப் பிர தேசங்களிலும்கூட இவ்வாறே நடந்தது. பூர்ஷ்வா, குட்டி

பூர்ஷ்வா நாட்டினக் கட்சிகள் வெளிநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒத்துழைத்து இங்கேயும் முகங்களில் கரி பூசிக் கொண்டன. நாட்டினப் பிரதேசங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் இவற்றைப் புறக்கணித்தார்கள், இவற்றின் துரோகக் கொள்கையைக் கண்டனம் செய்தார்கள், கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களைச் சுற்றி ஒற்றுமையாக அணி திரண்டார்கள். தங்கள் நாட்டின பூர்ஷ்வா வர்க்கத்துடனும் அதன் கட்சிகளுடனும் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்வதைக் காட்டிலும் ருஷ்யத் தொழிலாளர்களுடன் ஐக்கியம் ஏற்படுத்திக்கொள்வதே சாலச் சிறந்தது என அவர்கள் முடிவு செய்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி, தனது ஒத்திசைந்த சர்வதேசியக் கொள்கை காரணமாக, முன்னர் ஒடுக்கப்பட்டிருந்த மக்கள் இனங்களுக்கிடையே நிலையான செல்வாக்கு பெற்றுவிட்டது.

குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளின் அணிகளில் புரட்சி மனப்பான்மை கொண்ட நபர்களும் இருந்தார்கள். இந்த நபர்கள் தங்கள் வலதுசாரித் தலைவர்களின் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்து அவர்களுடன் தொடர்பை அறுத்துக் கொண்டு சோவியத் ஆட்சியின் கொள்கைத் திட்டத்தை ஒப்புக் கொள்ளும் சொந்த ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டார்கள் (இடதுசாரி எஸ் ஆர்கள், மென்ஷிவிக்-சர்வதேசியவாதிகள், இடதுசாரி பூந்த்காரர்கள், உக்ரேனில் பரோத்பிஸ்டுகள் ஆகியோரும் வேறு பலரும்). கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சி மனப்பான்மை கொண்ட இந்த நபர்களை வரவேற்று இவர்களுடன் ஒத்துழைத்தது. கம்யூனிஸ்டுகளைச் சுற்றிலும் மிகப் பெரும்பான்மையான உழைப்பாளிகள் ஒன்று திரண்டதைக் கண்டு இந்த எல்லாக் கட்சிகளும் குழுக்களும் தாங்கள் தனித்து நிலவுவதில் பயனில்லை என்ற முடிவுக்குப் படிப்படியாக வந்து, தாமாகவே விரும்பிக் கலைந்துவிட்டன. இவற்றின் பல உறுப்பினர்களும் ஒரு சில தலைவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இவ்வாறு போல்ஷிவிஸம் தனக்கு நெருக்கமாய் இருந்த சோஷலிஸச் சிந்தனைப் போக்குக்களில் சிறந்தவை எல்லாவற்றையும் தன்பால் ஈர்த்துக் கொண்டது.

இந்தக் காரணங்களால்தான் நாட்டில் மக்களின் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரே கட்சியாக போல்ஷிவிக்குகள் எஞ்சி விட்டார்கள்.

போல்ஷிவிஸத்தின் சர்வதேச முக்கியத்துவம் பற்றி லெனின்

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி, ருஷ்யாவில் சோவியத் ஆட்சியின் வெற்றிகள் ஆகியவற்றின் பாதிப்பினால் பிற நாடுகளின் புரட்சிகரத் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் கம்யூனிஸக் கொள்கை நிலையை மேற்கொண்டார்கள். திவாலாகிவிட்ட இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதித் தலைவர்களுடன் தொடர்புகளை அவர்கள் துணித்துக் கொண்டு விட்டார்கள், கம்யூனிஸ்ட் குழுக்களும் கட்சிகளும் அமைத்தார்கள்.

1919 மார்ச்சில் மாஸ்கோவில் நடந்த கம்யூனிஸ்ட், இடதுசாரி சோஷலிஸ்ட் கட்சிகளின் முதலாவது சட்ட அமைப்புக் காங்கிரஸிற்குப் பிறகு இந்த நிகழ்முறை வெகு வாகத் தீவிரம் அடைந்தது. இந்தக் காங்கிரஸ், மூன்றாவது கம்யூனிஸ அகிலம் என்ற பாட்டாளி வர்க்கத்தின் புதிய சர்வதேசப் புரட்சிகர ஸ்தாபனத்தை அமைத்தது. நவீனக் கம்யூனிஸ இயக்கத்துக்கு அடி கோலப்பட்டது.

சோஷலிஸ்ட் கட்சிகளிலிருந்து பிரிந்து விலகிய இடதுசாரிக் குழுக்கள், ஸ்தாபனங்களின் அடிப்படையிலேயே கம்யூனிஸ்ட் கட்சிகள் வழக்கமாக உருவாயின. அதன் ஊழியர்களுக்கு புது வகையான கட்சியை அமைப்பதிலும் திரளான பொது மக்களின் புரட்சிப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்துவதிலும் இன்னும் அனுபவம் ஏற்படவில்லை. தவிரவும், அவர்களில் சிலர் சோஷலிஸ்ட் கட்சிகளின் சந்தர்ப்பவாதப் பழக்கத்திலிருந்து உடனே விடுபட்டுவிடவில்லை. வேறு சிலர் மறு கோடிக்குச் சென்றார்கள். இவர்கள் சோஷலிஸ்ட் கட்சிகளின் தலைவர்களுடைய துரோகத்தின்மீதும் சந்தர்ப்பவாதத்தின் மீதும் கடுஞ் சீற்றம் கொண்டு பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் பங்கு கொள்வதை எதிர்த்தார்கள், சீர்திருத்தவாதித் தொழிற்சங்கங்களில் வேலை செய்வதன் இன்றியமையாமையை மறுத்தார்கள். இத்தகைய மனநிலைகள் பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி, ஹாலந்து ஆகியவற்றின்

கம்யூனிஸ்ட் கட்சிகளில் சிறப்பாகக் கடுமையாக வெளியிடப்பட்டன. இவர்கள் தாம் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்.''

லெனின் சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தின் வளர்ச்சியையும் வெற்றிகளையும் ஊன்றிக் கவனித்து வந்தார், அதன் பலவீனங்களைக் கண்டார், இளம் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குத் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்ள உதவினார். கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கொள்கைவாதத்தில் வலுப்படுத்துவதற்கும் அவற்றின் ஊழியர்களை மார்க்ஸீய முறையில் பயிற்றுவதற்கும் சரியான கொள்கையை வகுப்பதற்கும் திரளான பொது மக்களுடன் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கும் அவர்களுடைய புரட்சிப் போராட்டத்திற்கு வெற்றிகரமாகத் தலைமை ஏற்பதற்கும் வலதுசாரியினர் போலவே ''இடதுசாரியினரும்'' முட்டுக்கட்டையாய் இருந்தார்கள். இளம் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமை ஊழியர்கள் ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியினது வளம் மிக்க அனுபவத்தைப் பயில்வதும் இந்த அனுபவத்தைத் தங்கள் நாடுகளின் நிலைமைகளுக்குப் பொருந்தப் பயன்படுத்துவதும் சிறப்பாக முக்கியமானவை என்று லெனின் கருதினார்.

1920 கோடையில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் கூடியது. அதன் நடவடிக்கைகள் பெத்ரோகிராதில் தொடங்கின, ஆனால் தொடர்ந்து மாஸ்கோவில் நடந்து முடிந்தன. கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபன நோக்கிலும் வலுப்படுத்துவதன் மீதும் திரளான பொதுமக்களின் பெரும்பான்மையைத் தம் தரப்பில் ஈர்க்கும் பொருட்டு அவை சரியான கொள்கையை வகுக்கும்படி செய்வதன்மீதுமே காங்கிரஸ் முக்கியமான கவனத்தைச் செலுத்தியது.

காங்கிரஸிற்கான எல்லா முன்னேற்பாடுகளையும் அதன் நடவடிக்கைகளையும் தலைமைதாங்கி நடத்தினார் லெனின். ''கம்யூனிஸத்தில் 'இடதுசாரிப் போக்கு' என்னும் குழந்தை நோய்'' என்ற தலைப்புடன் அவர் எழுதிய நூல் காங்கிரஸ் கூடுவதற்குச் சற்று முன்பு வெளியாகி இருந்தது. காங்கிரஸ் பிரதிநிதிகள் லெனினுடைய நூலைக் கருத்தூன்றிப் படித்தார்கள். உலகு அனைத்திலும் உள்ள கம்யூனிஸ்டுகளின் இன்றியமையாத வழிகாட்டி நூல் ஆகிவிட்டது அது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான போராட்டக் காலத்திலும் சோவியத் நாட்டில் இந்த சர்வாதிகாரம் நிலவிய முதல் ஆண்டுகளிலும் போல்ஷிவிக் கட்சி பெற்றிருந்த மிகப் பெரிய அனுபவத்தை இந்த நூலில் தொகுத்துத் தந்திருந்தார் லெனின். ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுபவம் ருஷ்யப் புரட்சி போலவே தேசிய முக்கியத்துவம் மட்டும் இன்றி, சர்வதேச முக்கியத்துவம் கொண்டிருக்கிறது, ஏனெனில் ''...ருஷ்யாவின் ஆதர்சம் எல்லா நாடுகளுக்கும் அவற்றின் தவிர்க்க முடியாததும் அருகாமையில் உள்ளதும் ஆன வருங்காலத்திலிருந்து மிக முக்கியமான ஏதோ ஒன்றைக் காட்டுகிறது'' என்று குறித்தார் லெனின் (முழு நூல் திரட்டு, தொகுதி 41, பக்கம் 4).

போல்ஷிவிக் கட்சி மார்க்ஸீய சித்தாந்தத்தின் மிகத் திண்மையான அடித் தளத்தின் மீது எழுந்தது, இந்தப் புரட்சி சித்தாந்தம் சரியானது என்பதைத் தனது நடைமுறைச் செயல் அனைத்தாலும் நிரூபித்தது என்று எழுதினார் லெனின். ருஷ்ய சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின்முக்கியப் பகைவனான வலதுசாரி சந்தர்ப்பவாதத்துடன், மென்ஷிவிஸத்துடன் சமரசத்துக்கு இடம் அற்ற கோட்பாட்டுப் போராட்டத்தில் அது வளர்ந்து வலுவடைந்து உரமேறியிருக்கிறது. அதோடு கூடவே போல்ஷிவிக் கட்சி அரை அராஜகத் தன்மை கொண்ட குட்டிபூர்ஷ்வா புரட்சிப் போக்கையும் உறுதியுடன் எதிர்த்து அடக்கியது. ருஷ்யாவில் எஸ் ஆர்களும் அராஜகவாதிகளும், கட்சியில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளும்'' இந்தப் போக்கை வெளிக் காட்டினர்கள்.

திரளான பொது மக்களைப் புரட்சிக்குத் தயார்படுத்துவதில் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பில், சோஷலிஸ அரசில் அதன் தலைமைப் பாத்திரத்தையும் பற்றிய பிரச்சினையை லெனின் தமது நூலில் விரிவாக விளக்கினர். போல்ஷிவிக் கட்சி தனக்கு எதிர்ப்பட்ட பிரமாண்டமான பொறுப்புக்களைச் சமாளித்தது, முதன்மையாகப் புரட்சி சித்தாந்தம் சரியானதாக இருந்ததாலும் கட்சியின் அணிகளில் இரும்புக் கட்டுப்பாடு நிலவியதாலுமே என்று அவர் சுட்டினர். பூர்ஷ்வா வர்க்கத்தின்மீது வெற்றி பெறுவதற்கும் முதலாளித்துவ சமூகத்தை

சோஷலிஸ சமூகமாக மாற்றி அமைப்பதற்கும் மிகக் கண்டிப்பான கட்டுப்பாடும் கட்டாயமான மையப்பாடும் உள்ள கட்சி தொழிலாளி வர்க்கத்துக்கு இன்றியமையாதது. இத்தகைய கட்டுப்பாடு நீண்ட கால உழைப்பின் பயனாகவே ஏற்படும். ஆனால் இது ஏற்படுவதைக் சரியான புரட்சி சித்தாந்தம் இருப்பது எளிதாக்கும். இத்தகைய சித்தாந்தம் ''...வரட்டுச் சூத்திரம் அல்ல, ஆனால் உண்மையாகவே பெருந்திரளான மக்களுக்கு உரிய, உண்மையாகவே புரட்சிகரமான இயக்கத்தின் நடைமுறையுடன் நெருங்கிய தொடர்பிலேயே இறுதியாக உருவாகும்'' என்று அழுத்திக் கூறினார் லெனின் (முழு நூல் திரட்டு, தொகுதி 41, பக்கம் 7).

போல்ஷிவிக் கட்சி உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றிகள் பெற்றது விரிவான உழைப்பாளி மக்கள் திரளுடன், முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாலும் அதன் அரசியல் தலைமையும் போர்த்தந்திரமும் செயல் தந்திரமும் சரியாய் இருந்ததாலும்தான். இவை சரியானவை என்பதை விரிவான பொது மக்கள் தங்கள் சொந்த அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்டார்கள். போல்ஷிவிக்குகள் எல்லா நிலைமைகளிலும், புரட்சிக்கு முந்திய ஆண்டுகளிலும் புரட்சி ஆண்டுகளிலும், தொழிலாளர் இயக்கத்தின் ஏற்றக் காலத்திலும் அதன் வற்றக் காலத்திலும் பிற்போக்கு தலை விரித்து ஆடிய காலத்திலும் யுத்தக் காலத்திலும் திரளான பொது மக்கள் இடையே வேலை செய்தார்கள். திரளான பொது மக்களுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற எல்லா வாய்ப்புக்களையும்—தொழிற்சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள், இன்ஷூரன்ஸ் நிதிகள் ஆகியவற்றை —போல்ஷிவிக்குகள் பயன்படுத்திக் கொண்டார்கள். பிற்போக்குள்ள அரசாங்க தூமா தேர்தல்களையும் தூமா பேச்சு மேடையையும் பொது மக்களுக்கு அறிவூட்டி அவர்களைத் தங்கள் பக்கம் கவர்ந்து இழுக்கத் திறமையுடன் பயன்படுத்திக் கொண்டார்கள் போல்ஷிவிக்குகள். புரட்சியின் வெற்றியை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் மற்ற ஜன நாயக ஸ்தாபனங்களோடு அவர்கள் ஒப்பந்தங்கள் செய்து

கொண்டார்கள், அவ்வாறு செய்கையில் தங்கள் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்கவும் இல்லை.

விரைவாக வளர்ந்து வந்த கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பகுத்து ஆராய்ந்து, அதே சமயம் அதன் பலவீனங்களையும் தவறுகளையும் லெனின் சுட்டிக் காட்டினார். தங்கள் போக்கைக் கைவிடாத வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் சமூக-ஜனநாயகக் கட்சிகளிலிருந்து வந்து கம்யூனிஸ்ட் கட்சிகளில் நுழைவதை யாவற்றிலும் பெருத்த அபாயமாகக் கருதினார் லெனின். கம்யூனிஸ்டுகளாக வேடம் புனைந்து கொண்டு இவர்கள் பழைய சந்தர்ப்பவாத வழக்கத்தையே தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். இது கம்யூனிஸ்ட் அகிலத்தின்பால் திரளான புரட்சிகரப் பாட்டாளி மக்களின் மரியாதையைக் குறைக்கக் கூடும், முதலாளித்துவத்தை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்கான அவர்களுடைய போராட்டத்தைக் கடினம் ஆக்கக் கூடும். எனவே, வலதுசாரி சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான போராட்டத்தைத் தளர்த்தாமல் இருக்கும்படியும், ருஷ்யாவின் மார்க்ஸீயவாதிகள் ஒரு காலத்தில் செய்தது போல, சந்தர்ப்பவாதி நபர்களை அகற்றிக் கம்யூனிஸ்ட் கட்சிகளைத் துப்புரவு ஆக்கும்படியும் லெனின் எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளுக்கு வேண்டுகோள் விடுத்தார். தன் அணிகளில் சந்தர்ப்பவாதிகளைச் சகித்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட ஊக்கம் உள்ள முன்னணிப் படைப் பிரிவாக இருக்கவும் அதைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பெறும் நிலைக்கு இட்டு வரவும் முடியாது என்றார் அவர்.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் காங்கிரஸ் தன் தீர்மானங்களில் லெனினுடைய யோசனைகளையும் போல்ஷிவிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அனுபவத்தையும் கருத்தில் எடுத்துக் கொண்டு, வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் நுழைவதற்கும் செயல்படுவதற்கும் தடைகள் ஏற்படுத்தியது.

அந்த ஆண்டுகளில் கம்யூனிஸத்தில் ''இடதுசாரிப் போக்கின்'' தவறு விரிவாகப் பரவி இருந்தது. லெனின் இதைக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சிப் பருவ நோய் என்று அழைத்தார். ''இடது சாரியினரின்'' தவறுகள், தொழிலாளி

வர்க்கத்தையும் விரிவான உழைப்பாளி மக்கள் திரளையும் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சிகளின் பாத்திரத்தையும் கடமைகளையும் தவறுக மதிப்பிடுவதற்கு இட்டுச் சென்றன என்று அவர் விளக்கினார். பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் பங்கு கொள்வதையும் சீர்திருத்தவாதத் தொழில் சங்கங்களில் வேலை செய்வதையும் மறுப்பது திரளான பொது மக்களுடன் கட்சியின் தொடர்பைத் துணித்து விடும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. எல்லா வகையான அரசியல் நடவடிக்கைகளுக்கும் முன்னுல் வர்க்கச் சக்திகளையும் அவற்றின் பரஸ்பர சம்பந்தத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் புறக்கணிப்பது ''இடது சாரியினரை'' துர்ச்சாகசச் செயல்களுக்குத் துண்டிவிடக் கூடும். அராஜகத்துக்கு ஒப்பான ''இடதுசாரிப் போக்குக்கு'' எதிராக போல்ஷிவிக் கட்சியின் போராட்ட அனுபவம், சிறப்பாக பிரேஸ் த்சமாதான உடன் படிக்கை கையெழுத்திடப்பட்ட காலத்தில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடன்'' போராட்ட அனுபவம், எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் படிப்பினை நல்குவதாக இருந்தது.

போல்ஷிவிஸத்தின் இந்த அனுபவத்தையும் காங்கிரஸ் கணக்கில் எடுத்துக் கொண்டது. ''இடது சாரிப் போக்கு'' நோயை விரைவில் போக்கும்படியும், திரளான பொது மக்கள் உள்ள எல்லா இடங்களிலும் வேலை செய்யும் படியும், சட்டரீதியானவை, சட்ட விரோதமானவை, நாடாளுமன்ற நடவடிக்கைகள், நாடாளுமன்றத்துக்கு வெளியே உள்ள நடவடிக்கைகள் முதலிய போராட்ட வடிவங்கள் எல்லாவற்றையும் திறமையுடன் ஒருங்கிணைக்கும் படியும் அது கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கேட்டுக்கொண்டது.

கம்யூனிஸ்ட் அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான உலகக் கருத்தரங்காகத் திகழ்ந்தது. தொழில் வளர்ச்சி மிக்க முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்தவையும் அவ்வாறே காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்தவையுமான கம்யூனிஸ்ட் கட்சிகளும் குழுக்களும் அதில் கலந்து கொண்டன. தொழில் வளர்ச்சி மிக்க முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் ஸ்தாபனங்களை மட்டுமே ஒன்றிணைத்த முதலாவது, இரண்

டாவது அகிலங்களிலிருந்து மூன்றுவது, கம்யூனிஸ்ட் அகிலம் இந்த விஷயத்தில் சிறப்பாக வேறுபட்டிருந்தது.

காங்கிரஸ் நாட்டினப் பிரச்சினை மீதும் காலனிப் பிரச்சினை மீதும் மிகுந்த கவனம் செலுத்தியது. லெனினால் தயாரிக்கவும் பிரமாணப்படுத்தவும் பட்ட ஆய்வுரைகளின் அடிப்படையில் அது சில விசேஷ தஸ்தாவேஜுகளை ஏற்றுக் கொண்டது. காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் புரட்சிகர-ஜனநாயக இயக்கத்துக்கு உறுதியான ஆதரவு அளிப்பதாகக் காங்கிரஸ் பிரகடனம் செய்தது.

லெனினுடைய யோசனைகள் கிழக்கு நாடுகளின் இளம் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தன. தேசீய-விடுதலைப் போராட்டத்தை எல்லா வகையாலும் விரிவுபடுத்தும்படியும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்துடனும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சோவியத் குடியரசுகளின் போராட்டத்துடனும் அதை ஒன்று சேர்க்கும்படியும் லெனின் அறை கூவல் விடுத்தார். கம்யூனிஸ போதனை பாட்டாளி வர்க்கம் செயல் பட்டு வந்த முதலாளித்துவ நாடுகளில் முதன்மையாகப் பரவிற்று. காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளை நோக்கி லெனின் கூறினார்: ''...பொதுப்படையான கம்யூனிஸ சித்தாந்தத்தையும் நடைமுறையையும் ஆதாரமாகக் கொண்டு, ஐரோப்பிய நாடுகளில் இல்லாத தனிவகை நிலைமைகளுக்கு அவற்றை இசைவித்து, விவசாயிகளை பிரதானத் திரளாய் இருக்கும் நிலைமைகளுக்கு ஏற்ப, முதலாளித்துவத்துக்கு எதிராக அன்றி இடைக் காலத்தின் மீத மிச்சங்களுக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கும் நிலைமைகளுக்கு ஏற்ப இந்த சித்தாந்தத்தையும் நடைமுறையையும் பயன்படுத்த நீங்கள் திறன் பெற வேண்டும்.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 39, பக்கம் 329).

கடினமான, தனி வகைப்பட்ட, அதே சமயம் பெருமை சான்ற இந்தப் பணியை நிறைவேற்றுவதில் கம்யூனிஸ்ட் அகிலம் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு எல்லா விதங்களிலும் உதவி செய்தது.

லெனினது பாதையில் சோஷலிஸத்தை நோக்கி

வெண்படையினரையும் தலையீட்டாளர்களையும் வெற்றி கொண்ட பிறகு கட்சி தனது கவனத்தையும் சோவியத் மக்களின் சக்தி அனைத்தையும் பொருளாதாரக் கட்டுமானத்தில் இப்போது ஈடுபடுத்த முடிந்தது. இதற்கிடையே ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் நாட்டை எல்லாப் புறங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள். புதிய இராணுவத் தலையீடு நடத்தும் எண்ணத்தை அவர்கள் கைவிடவில்லை. இது நேராது தவிர்ப்பதற்கு அறிவுசான்ற, சமயோசிதமான சர்வதேசக் கொள்கையைக் கடைப்பிடிப்பது அவசியமாய் இருந்தது. சோவியத் அரசின் வெளி நாட்டுக் கொள்கை முதலாளித்துவ அரசுகளுடன் சமாதான சகவாழ்வை நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தக் கொள்கையைப் பிரேரித்துச் செப்பம் செய்தார் லெனின். உள்நாட்டுப் போர் முடிந்ததும் அவர் சொன்னார்: ''...முதலாளித்துவ வல்லரசுகளுடன் அக்கம் பக்கமாக நிலவ நமக்கு முடியும்படியான நிலைமைகளை நாம் போராடிப் பெற்றுவிட்டோம்...'' (முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 22)

சோவியத் அரசு சமாதானத்துக்காகப் போராடுகிறது

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் சமாதானத்தை நிலைப்படுத்துவதற்காக லெனினது தலைமையில் விடாப்பிடியாக முயன்றன. யுத்தத்துக்குப் பின் ஒத்துழைப்பு பற்றி விவாதிப்பதன் பொருட்டு முதலாளித்துவ அரசுகளின் பிரதிநிதிகள் இத்தாலிய நகர் ஜினேவாவில் 1922ம் ஆண்டு மகாநாடு கூட்டியபோது சோவியத் அரசாங்கம் சர்வதேச ஆயுதக் குறைப்புத் தீர்மானத்தைப் பிரேரித்தது. இந்தப் பிரேரணை நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் நாட்டுக்கு எதிராகப் புதிய தலையீடு நடத்தும் திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

1920க்களின் நடுவில், தொழிலாளர்களின் புரட்சி நடவடிக்கைகளை ஒடுக்கவும் தங்கள் ஆட்சியை வலுப்படுத்தவும் முதலாளித்துவத்தைத் தாற்காலிகமாக நிலைப்படுத்தவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பூர்ஷ்வாக்களுக்கு இயன்று

விட்டது. அப்போது முதல் சோவியத் நாட்டில் தலையீடு நடத்தும் அபாயம் வெகுவாக அதிகரிக்கலாயிற்று. எல்லா அரசுகளும் முழுமையான ஆயுத ஒழிப்பு செய்ய வேண்டும் என்னும் யோசனையை சோவியத் அரசாங்கம் சர்வதேச சங்கத்தில் 1927ம் ஆண்டு பிரேரித்தது. இந்த யோசனையும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஏகாதிபத்தியவாதிகள் சர்வ தேசச் சூழ்நிலையைக் கெடுபிடி நிறைந்தது ஆக்கி, சோவியத் யூனியனுக்கு எதிராகத் தலையீடு நடத்தச் சூழ்ச்சி செய்தார் கள். 1927ம் ஆண்டு பிரிட்டன் சோவியத் யூனியனுடன் தூத ராலய உறவுகளைத் துணித்துக் கொண்டது. அது சோவியத் விரோத இராணுவக் கூட்டணி அமைக்க முயன்றது, சோவியத் யூனியனுக்கு யுத்த அபாயம் ஏற்படுத்தியது.

இந்தக் காரணங்களால் சோவியத் யூனியன் தன்னிடம் அப்போது இருந்த குறைவான செல்வ வளங்களில் கணிச மான பகுதியைச் செஞ்சேனையின் போர் வலிமையை அதிகப் படுத்தும் பொருட்டு ஒதுக்க நேர்ந்தது. பல முதலாளித்துவ அரசுகள், சிறப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் அமைப்பை உலகிலிருந்து துடைத்து ஒழித்துவிடும் நோக் கத்தைக் கடைப்பிடித்து, நீண்ட காலம்வரை சோவியத் அரசாங்கத்துக்கு ஏற்பு அளிக்காமலே இருந்தன. பொருளா தார முற்றுகையின் வாயிலாக இளம் சோவியத் குடியரசை நசுக்கிவிடலாம் என்று முதலாளித்துவவாதிகள்கனவு கண்டார்கள். முதலாவது உலக யுத்தத்திலும் அன்னியத் தலையீடும் உள்நாட்டுப் போரும் நடந்த காலத்திலும் சீரழிந்திருந்த தேசீயப் பொருளாதாரத்தை சுயபலம் கொண்டு மீட்டமைப்பது சோவியத் ஆட்சிக்கு இயலாது என்று அவர்கள் உறுதியாக நம்பினர்கள்.

மெய்யாகவே யுத்தத்துக்குப் பிறகு ஏகாதிபத்தியவாதி களும் வெண்படையினரும் இழைத்த தீங்குகளின் விளைவாக சோவியத் நாடு மிகவும் இடர்கள் நிறைந்த நிலைமையில் இருந்தது. எரிபொருளும் கச்சாப் பொருள்களும் இல்லாத தனால் ஆலைகளும் தொழிற்சாலைகளும் நின்று விட்டன. அவற் றில் பல தலையீட்டாளர்களால் அழிக்கப்பட்டு விட்டன. 1920ல் பேரளவுத் தொழில் உலக யுத்தத்துக்கு முன்பு உற் பத்தி செய்ததற்கு ஏழு மடங்கு குறைவாக உற்பத்தி செய்

தது என்றால் ருஷ்யா எவ்வளவு சீரழிவுக்கு உட்பட்டிருந்தது என்பதைக் கற்பனை செய்து கொள்ளலாம். மிக மிக இன்றியமையாத தேவைப் பொருள்கள்—உடைகள், காலணிகள், மண்ணெண்ணெய் ஆகியவையும் நெருப்புப் பெட்டியும் உப்பும் கூடப் போதிய அளவு இல்லை. விவசாயிகள் இரவில் தங்கள் இருப்பிடங்களில் சிறுவிளக்குகளால் வெளிச்சம் ஏற்படுத்தினார்கள். மாதர்கள் கையால் நூல் நூற்று, கைத்தறிகளில் நெய்த முரட்டுத் துணி உடைகளைத் தாங்களே தயாரித்துக் கொண்டார்கள். ஆடவர்கள் மரப் பட்டை நாரினால் லாப்தி எனப்படும் நீள் சோடுகளை முடைந்து கொண்டார்கள்.

தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகள் சிறப்பாகக் கடினமாய் இருந்தன. நாள் முழுவதற்கும் அவர்களுக்கு மெல்லிய துண்டு ரொட்டி மட்டுமே கிடைத்து வந்தது. இதுகூடக் கிடைக்காத நாட்களும் இருந்தன. பட்டினியின் நிர்ப்பந்தத்தால் பல தொழிலாளர்கள் குடும்பங்களுடன் கிராமங்களுக்குப் போய் வேளாண்மை செய்யலானார்கள். நகரங்களில் எஞ்சியிருந்த தொழிலாளர்களோ பல விதவீட்டுச் சாமான்களைக் கைகளால் செய்து உணவுப் பண்டங்களுக்கு மாற்றாக அவற்றை விற்றுப் பிழைப்பு நடத்திவந்தார்கள்.

விவசாயிகளும் மிகுந்த வறுமையில் உழன்றார்கள். அவர்களுடைய விவசாயம் நிலைகுலைந்தது. தலையீட்டாளர்களும் வெண்படையினரும் ஏராளமான கால் நடைகளையும் கோழிகள், வாத்துக்களையும் கொன்று விட்டார்கள், தானியத்தைப் பறிமுதல் செய்தார்கள். போதாக் குறைக்கு 1921ல் கடும் வரட்சி ஏற்பட்டது. நாட்டில் விளைச்சல் இன்மையால் பஞ்சம் ஏற்பட்டது. பல குபேர்னியாக்களின் மக்கள் பட்டினி கிடந்தார்கள்.

அந்தக் காலத்தில் சோவியத் பொருளாதாரம் எந்த நிலைமையில் இருந்தது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதாரத்துடன் அதை ஒப்பிட்டுப் பார்ப்போம். 1920ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 5500 கோடிக் கிலோவாட்-மணி மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்பட்டது. சோவியத் நாட்டிலோ, ஐம்பதே கோடிதான் உற்பத்தி ஆயிற்று. இதே ஒப்பு நோக்கில்: நிலக்கரி 60 கோடி டன்—சுமார் 90 லட்சம்

டன்; பெட்ரோலியம் 6 கோடி 20 லட்சம் டன்—சுமார் 40 லட்சம் டன்; எஃகு 4 கோடி 30 லட்சம் டன்—2 லட்சம் டன் மட்டுமே. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வயல்களில் சுமார் இரண்டரை லட்சம் டிராக்டர்கள் வேலை செய்தன. சோவியத் நாட்டிலோ டிராக்டர்களே இல்லை. அவற்றின் இடத்தில் 80 லட்சம் மரக் கலப்பைகள் இருந்தன.

வறுமையிலும் பின்தங்கிய நிலையிலும் இருந்து மீளும் வழியை, சோஷலிஸத்துக்கு வழியைக் கட்சி காட்டுகிறது

சோவியத் நாட்டைப் பொருளாதாரச் சீர்கேட்டிலும் வறுமையிலுமிருந்து விரைவாக மீட்பது எப்படி? எந்த வழியில் சோஷலிஸத்துக்குச் செல்வது? எந்த முறைகளால் சோஷலிஸத்தை நிறுவுவது? அப்போது கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைவர் லெனினும் விடை காண முயன்ற கேள்விகள் இவை.

1921 மார்ச்சில் கூடிய பத்தாவது கட்சிக் காங்கிரஸ் இந்தக் கேள்விகளுக்கு விடை அளித்தது. காங்கிரஸில் விரிவுரை நிகழ்த்தினார் லெனின். சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பதற்கு யாவற்றினும் சரியான வழியைக் கண்டுபிடிப்பதே விரிவுரையின் உள்ளடக்கம். பிரதான வர்க்கங்களான தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே சமாதான நிலைமைகளில் சரியான பரஸ்பர சம்பந்தத்தைச் சீர்படுத்துவதே முதன்மையாகத் தேவைப்பட்டது. இந்த வர்க்கங்களுக்கு இடையே உறவுகள் சோவியத் ஆட்சியின் விதியை நிர்ணயிக்கும் என்று குறித்தார் லெனின். நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் விரட்டுவது முடிந்தது, அவசியமாய் இருந்தது என்றால், விவசாயிகளுடன் தொழிலாளர்கள் சேர்ந்து வாழவும் நட்பு கொள்ளவும் வேண்டும் என்றார் அவர்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் உழைப்புச் சோதரர்கள். இருவருமே நிலப்பிரபுக்களுடையவும் முதலாளிகளுடையவும் ஒடுக்குமுறையை அனுபவித்தவர்கள். தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒருவர் இன்றி மற்றவர் இருக்க முடியாது. விவசாயிகள் தொழிலாளர்களுக்கு உணவு அளிக்கிறார்கள். தொழிலாளர்களோ விவசாயிகளுக்குக் கருவிகளும் இயந்திரங்களும் தொழில் உற்பத்திப் பொருள்களும் வழங்குகிறார்கள். உற்பத்தியும் உழைப்புமே இந்த இரு வர்க்கங்களை

யும் நெருக்கமாக இணைக்கின்றன. எனவே, கட்சியின் கொள்கை தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே **ஐக்கியத்தை நிலைப்படுத்துவதை** நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று போதித்தார் லெனின். இதற்கு, இராணுவத் தலையீடும் உள்நாட்டுப் போரும் நடந்த ஆண்டுகளில் கட்டாயம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட போர்க்காலக் கம்யூனிஸத்துக்குப் பதில் புதிய பொருளாதாரக் கொள்கை (நெப்)* கடைப்பிடிக்கப்பட வேண்டும். உண்மையில் இந்தக் கொள்கை 1918லேயே லெனினால் அடிப்படையில் குறிக்கப் பட்டிருந்தது, ஆனால் உள்நாட்டுப் போர் அது செயல்படாதவாறு குறுக்கிட்டு விட்டது.

சமாதான நிலைமைகளில் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே பரஸ்பர உறவுகள் பொருளாதார அடிப்படையில் அமைய வேண்டும். தொழில் உற்பத்திப் பொருள்களுக்கும் விவசாய விளைபொருள்களுக்கும் மாற்றம் வர்த்தகத்தின் துணையால் நடக்க வேண்டும். இத்தகைய மாற்றம் பல நூற்றாண்டுகளாக நடந்து வந்திருக்கிறது. விவசாயிகள் அதற்குப் பழகி விட்டார்கள். அது இல்லாமல் அவர்களால் வாழ முடியாது. ஆனால் இதற்கு தேசீயப் பொருளாதாரத்தை **மீட்டமைப்பது மட்டும் இன்றி மேற் கொண்டும் விரிவுபடுத்த** வேண்டும். மேலும், கனரகத் தொழில் நிர்ணயகரமான பங்கு ஆற்றும் வகையில் அதைச் சரியான திசையில் விரிவுபடுத்த வேண்டும். கனரகத் தொழில் இல்லாமல் பொருளாதாரத்தின் மற்றத் துறைகளை உயர்த்தவோ உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகமாக்கவோ முடியாது.

நாடு சீரழிந்திருந்தது. பொருளாதார வாழ்க்கை ஸ்தம்பித்திருந்தது. அதற்கு உயிரூட்டுவது எப்படி? விவசாயத்தை மீட்டமைப்பதிலிருந்து தொடங்க வேண்டும் என்றார் லெனின். முதன் முதலாக, தொழிலாளர்களுக்கு வயிறார உணவு அளிக்க வேண்டும், அவர்களை அழிவிலிருந்து காக்க வேண்டும். விவசாயிகள் உணவுப் பொருள்கள் தருவார்கள். தொழிற்

---

* நோவயா எக்கனமீச்செஸ்கயா பலீத்திக்கா என்ற ருஷ்யச் சொற்களின் முதல் எழுத்துக்கள்—NEP.—(மொ-ர்.)

சாலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சு, சணல், கம்பளி, தோல் போன்ற விவசாயக் கச்சாப் பொருள்களை அவர்கள் வழங்குவார்கள். தொழிலாளர்களுக்குப் போதிய உணவும் ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் கச்சாப் பொருள்களும் கிடைத்ததும் தொழில் துறை வலிவு பெற்று எழுந்து விவசாயிகளுக்குத் தேவையான சரக்குகளைத் தயாரிக்கத் தொடங்கும். எனவே விவசாயிகள் வேளாண்மையில் அக்கறை கொள்ளவும், சொந்தத் தேவைக்கு அதிகமான உணவுப் பொருள்கள் அவர்களிடம் இருக்கவும் அவர்கள் அவற்றைத் தொழிலாளர்களுக்கும் நகர மக்களுக்கும் விற்க முடியவும் தானியங்களையும் விவசாயக் கச்சாப் பொருள்களையும் அரசுக்கு விற்கு முடியவும் வாய்ப்பு அளிக்கும் நிலைமைகளை நாட்டுப்புறங்களில் ஏற்படுத்த வேண்டும்.

உள்நாட்டுப் போர் ஆண்டுகளில் வழக்கில் இருந்த உணவுப் பண்டப் பங்கீட்டை அகற்றிவிட்டு அதன் இடத்தில் **உணவுப் பண்டத் தீர்வையைப்** புகுத்தும்படி லெனின் பிரேரித்தார். தீர்வையின் அளவு மிதமாக நிச்சயிக்கப்பட வேண்டும். தான் விளைவிக்கும் பொருள்களில் ஒரு பகுதியை அரசுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்பதை விவசாயி புரிந்து கொள்வான். தொழிலாளர்களும்அலுவலக ஊழியர்களும்கூட வரி செலுத்துகிறார்கள். தொழிற்சாலைகளை மீட்டமைக்கவும் விரிவுபடுத்தவும் வேண்டும், விவசாயிகளுக்கும் தொண்டு புரியும் அரசு இயந்திரத்தை நடத்திவர வேண்டும். சோவியத் நாட்டை, தொழிலாளர்களதும் விவசாயிகளதும் அமைதி நிறைந்த உழைப்பைக் காத்து நிற்கும் செஞ்சேனைக்கு உணவு அளிக்க வேண்டும். ஆகவே அரசிடமிருந்து இலவசப் பயன்பாட்டுக்கு நிலத்தைப் பெற்றிருக்கும் விவசாயி, தான் விளைவிக்கும் பொருள்களில் ஒரு சிறு பகுதியை இலவசமாக, தீர்வை வடிவில் அரசுக்கு அளிக்க விருப்புடன் இசைவான். விளைபொருள்களின் மற்றப் பகுதியை அவன் அன்றுடத் தேவைகளை நிறைவேற்றிக்கொண்டபின் சந்தைக்கு எடுத்துப் போய் விற்று, கிடைத்த பணத்தைக் கொண்டு தொழிற் சாலைச் சரக்குகள் வாங்கிக் கொள்வான். நாட்டுப்புறத்துடன் நகரத்தின் **வர்த்தக உறவு** இவ்வாறு நிலைபெறும். இந்த வர்த்தகம் வேளாண்மையை விருத்தி செய்வதற்கு

விவசாயியைத் தூண்டி ஊக்கும். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் வலுப்படும்.

கட்டற்ற வர்த்தகத்தின் விளைவாக முதலாளித்துவம் திரும்பி வரும் அபாயம் ஏற்படாதா? ஆம், ஓர் அளவுக்கு ஏற்படுந்தான் என்றார் லெனின். தனி வர்த்தகன் வருவான், தனியார் சிறு தொழிலகங்கள் திறக்கும், பூர்ஷ்வாக்கள் திரும்பி வருவார்கள். ஆனலும் சோஷலிஸ அரசுக்கு இது அபாயமானது அல்ல. நிதிமூலகங்கள், வெளிநாட்டு வர்த்தக ஏகபோகம், தேசிய உடைமை ஆக்கப்பட்ட தொழில் நிலையங்கள், இருப்புப் பாதை, நீர்வழிப் போக்குவரத்து, நிலம் ஆகியவை போன்ற ஆதிக்க உயர் நிலைகள் அதனிடம் உள்ளன. இந்த நெம்புகோல்களைப் பயன்படுத்தித் தனியார் மூலதனத்தின் வளர்ச்சியைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். பிற்பாடு அரசுத் தொழிலும் வர்த்தகமும் தனியார் மூலதனத்தை அடியோடு நெருக்கித் தள்ளிவிடும்.

கட்டற்ற வர்த்தகம் விவசாயிகளின் உள்ளங்களிலும் தனி உடைமை வெறியை மூட்டி விடும். மற்றவர்களைச் சுரண்டிப் பணக்காரர்கள் ஆகும் ஆசை பலருக்கு உண்டாகும். எனவே தொழிலாளி வர்க்கமும் அதன் கம்யூனிஸ்ட் கட்சியும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்க வேண்டும், வர்த்தகத்தையும் பொருளாதாரம் முழுவதையும் கட்டுப்படுத்தி இயக்கும் சுக்கானைத் தங்கள் கைகளில் கெட்டியாகப் பிடித்திருக்க வேண்டும், ஒழுங்கமைந்த தடத்தில் அவற்றைச் செலுத்த வேண்டும், அவற்றைக் கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும், சோஷலிஸக் கட்டுமானத்தின் தொண்டில் அவற்றை ஈடுபடுத்த வேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலப் பகுதியைக் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டிருந்தது. அதன் அஸ்திவாரத்தின் மேல் சோவியத் நாட்டில் சோஷலிஸ சமூகம் நிறுவப்படும் என்ற திட நம்பிக்கையை வெளியிட்டார் லெனின்.

கட்சியின் பத்தாவது காங்கிரஸ் லெனினுடைய அடிப்படைக் கருத்துக்களை ஆமோதித்து, புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்தது. இதற்கு ஏற்ப, சோவியத் அரசாங்கம் விவசாய

வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் சட்டங்களைப் பிறப்பித்தது. விவசாயிகள் சமூகம் இவற்றை மிகுந்த உள நிறைவுடன் ஏற்றுக்கொண்டது.

போர்க்காலக் கம்யூனிஸத்திலிருந்து புதிய பொருளாதாரக் கொள்கைக்கு இவ்வாறு திடீர்த் திருப்பம் செய்ததன் வாயிலாகக் கம்யூனிஸ்ட் கட்சி தன் விவேகத்தையும் சமூக வளர்ச்சிக்கு உரிய விதிகள் பற்றிய அறிவையும் காட்டியது. மாமனிதர் லெனினே, தமது மேதையையும் விஞ்ஞானத் தொலைநோக்கையும் புலப்படுத்தினர்.

லெனினால் வகுக்கப்பட்டு சோவியத் நாட்டில் நடைமுறையால் சரி பார்க்கப்பட்ட சோஷலிஸக் கட்டுமானத்திற்கான வழிகளும் முறைகளும் மார்க்ஸீய சித்தாந்தத்திற்கு வழங்கப்பட்ட அரு நிதியமாக விளங்குகின்றன. விவசாயிகளும் குடிசைத் தொழிலாளர்களும் கம்மியர்களும் இருந்து வரும் நிலையில், சோஷலிஸத்தைக் கட்டி அமைக்கும் எந்த நாட்டிலும் அந்தந்த இடத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப இவை கட்டாயமாக மீண்டும் மேற்கொள்ளப்படும்.

உலகப் புரட்சியின் அடித்தளமும் அரணுமாக விளங்கும் சோவியத் அமைப்பு புதிய பொருளாதாரத் திட்டத்தின் பாதையில் உறுதியாக வலுப்பட்டது. சோஷலிஸத்தை நிறுவியதன் வாயிலாகவே கட்சி தனது சர்வதேசக் கடமையை நிறைவேற்றியது, உலகப் புரட்சி இயக்கம் வளர்ச்சி அடைய உதவியது. லெனின் சொன்னார்: ''இப்போது சர்வதேசப் புரட்சி மீது நமது முக்கியச் செல்வாக்கை நம்முடைய பொருளாதாரக் கொள்கை மூலம் நாம் செலுத்துவோம்... இந்தத் துறையில் போராட்டம் உலகு பரவிய அளவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை நாம் நிறைவேற்றி விட்டால் சர்வதேச அளவில் கட்டாயமாகவும் முடிவாகவும் வெற்றி பெற்று விடுவோம்.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 43, பக்கம் 341).

மிகக் கடினமான சர்வதேச, உள்நாட்டுச் சூழ்நிலையில் சோஷலிஸத்தைக் கட்டி அமைக்கும் சிக்கலான பணியை நிறைவேற்றுவது கட்சியின் அணிகளில் முழுமையான ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நிலவியதனாலேயே சாத்தியம் ஆயிற்று. அரசியல் ஊசலாட்டத்துக்கு உள்ளான குட்டி பூர்ஷ்வா

மக்கள் நாட்டில் பெரும்பாலராய் இருந்த காரணத்தால் இந்த ஒற்றுமை சிறப்பாக இன்றியமையாததாக இருந்தது. இந்த ஊசலாட்டங்கள் கட்சியின் நிலையுறுதி அற்ற உறுப்பினர்களைப் பற்றிக்கொள்கின்றன. உட்குழுப் போரட்டத்தையும் கட்சியால் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படும் கொள்கைப் போக்கிலிருந்து அற்பப் பிறழ்வையும் கூட உழைப்பாளிகளின் பகைவர்கள் புரட்சி எதிர்ப்பு நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிரேஸ்த் சமானத்துக்காக நடந்த போராட்டக் காலத்தில் இவ்வாறு நிகழ்ந்தது. அப்போது கட்சியில் உட்குழுக்கள் ஏற்பட்டன. யுத்தத்திலிருந்து அமைதியான ஆக்க உழைப்புக்குப் பரிணமிப்பு நடந்த சமயத்திலும் இவ்வாறு நேர்ந்தது. அப்பொழுது சோஷலிஸக் கட்டுமானத்தில் தொழிற்சங்கங்களின் பங்கு பற்றிய பிரச்சினை மீது உட்குழுப் போராட்டம் மீண்டும் உக்கிரமாக மூண்டது.

கட்சியின் கோட்பாட்டு ரீதியான கொள்கைப் போக்குக்கு எதிராகத் தங்கள் தனிப்பட்ட கொள்கைத் திட்டத்தை முன் வைப்பவையும் கட்சியின் ஸ்தாபன ஒற்றுமையையும் கொள்கைவாத - அரசியல் ஒருமையையும் குலைப்பவையுமான குழுக்களும் உட்குழுக்களும் மார்க்ஸீய-லெனினீயக் கட்சியில் அனுமதிக்கத் தகாதவை. **கட்சியின் ஒற்றுமையைக் கண்ணின் கருமணி போலப் பேணிக் காக்க வேண்டும்** என்றார் லெனின். கட்சியில் உட்குழுக்களையும் குழுப் போராட்டத்தையும் தடைசெய்யும் தீர்மானத்தைப் பத்தாவது காங்கிரஸ் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தை மீறுபவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று தீர்மானம் கூறியது.

கட்சி ஒற்றுமை பற்றிய லெனினது கோட்பாடு அதனுடைய வாழ்வின் **மீற முடியாத விதினாக** விளங்கியது, விளங்குகிறது.

கட்சி சோஷலிஸக் கட்டுமானத்தை இயக்கி நடத்தும் சக்தி

ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி அணிகளின் ஒற்றுமை சோஷலிஸத்தை வெற்றிகரமாக நிறுவுவதற்குத் தேவையான நிர்ணயகரமான நிபந்தனை ஆகும். இது கட்சியின் சித்த, செயல் ஒற்றுமைக்கு வகை செய்கிறது, சோஷலிஸ அரசில் அதன் தலைமைப் பாத்திரத்தை வலுப்படுத்துகிறது.

கட்சியின் பத்தாவது காங்கிரஸுக்கு முன்னர் கட்சியில் முக்கியப் பிரச்சினை குறித்தே முதன்மையாக விவாதம் நடந்து வந்தது. பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பிலும் சோஷலிஸக் கட்டுமானத்திலும் கட்சியின் இடமும் பாத்திர மும் என்ன என்பதே இந்தப் பிரச்சினை. பல்வேறு வகை யினரான எதிர்த் தரப்பினர் பசப்புச் சொற்றொடர்களின் மறைவில், சோவியத் தேசியப் பொருளாதார நிர்வாக அமைப்பைத் தாக்கினார்கள்.

சோவியத் தேசியப் பொருளாதார நிர்வாகத்தின் அடிப் படைக் கோட்பாடுகளும் வடிவங்களும் முறைகளும் அன் னியத் தலையீட்டாளர்களுடனும் வெண்படையினருடனும் போர் நடந்த ஆண்டுகளிலேயே வகுக்கப்பட்டுச் சரிபார்க் கப்பட்டிருந்தன. கட்சி எட்டாவது காங்கிரஸால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தனது செயல்திட்டத்தில் இந்த அனுபவத் தைப் பொதுமைப்படுத்தி இருந்தது. அரசுத் தொழில் துறை, போக்குவரத்து ஆகியவற்றின், அதாவது தேசியப் பொருளா தாரத்தின் சோஷலிஸத் துறையின் நிர்வாகத்தை ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில், ஒரே தலைமையையும் நிர்வாகத்தில் உழைப்பாளி மக்களை ஈடுபடுத்துவதையும் ஒன்று இணைப்பதன் வாயிலாக ஒழுங்கமைப்பதன் உசிதத்தை அது ஒப்புக் கொண்டிருந்தது. பொருளாதார நிர்வாகத்தின் சோஷலிஸக் கோட்பாடுகளை விஞ்ஞான ஆதாரங்களுடன் நிலை நாட்டினார் லெனின்.

ஆயினும் எதிர்த் தரப்பினர் சோஷலிஸப் பொருளாதார நிர்வாகக் கோட்பாட்டையும் தேசியப் பொருளாதார நிர் வாக அமைப்பு முறையையும் தாங்கள் ஏற்கவில்லை என்று அறிவித்தார்கள். இவர்களில் சிலர், பொருளாதார நிர் மாணத் துறை உள்பட சோவியத் அரசின் தலைமையிலிருந்து கட்சி விலக்கப்பட வேண்டும் என்று கோரினார்கள், கட்சி யின் பணி உண்மையில் அறிவு புகட்டுவதுடன் நின்றுவிட வேண்டும் என்று கூறினார்கள். வேறு சிலர், தேசியப் பொருளா தார நிர்வாகம் அனைத்தையும் தொழிற்சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றார்கள்.

சோவியத் அரசில் கட்சியின் தலைமைப் பாத்திரத்தைக் குலைக்கவும் பலவீனப்படுத்தவும் தேசியப் பொருளாதார

நிர்வாகத்திலும் சோஷலிஸக் கட்டுமானத்திலும் பங்கு கொள்வதிலிருந்து அதை விலக்கவும் எதிர்த்தரப்பினர் செய்த முயற்சிகளைக் கட்சி கடுமையாக நிந்தித்தது. அவர்க ளுடைய கருத்துக்களும் கோரிக்கைகளும் விஞ்ஞானக் கம்யூ னிஸக் கோட்பாடுகளுக்கும் பாட்டாளி வர்க்க நலன்களுக்கும் அடிப்படையில் முரணுய் இருந்தன. எதிர்த்தரப்பினரை லெனின் விளாசினர். கம்யூனிஸ்ட் கட்சி புதிய பாட்டாளி வர்க்க ஆட்சியின் உட்கருவாக விளங்குகிறது, பாட்டாளி வர்க்க அரசில் தலைமை வகித்து இயக்கும் சக்தியாகத் திகழ்கிறது என்று விளக்கினர் அவர். ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாக அன்றி வேறு வகையில் சாத்தியம் இல்லை'' என்று அவர் அழுத்திக் கூறினர். (முழு நூல் திரட்டு, தொகுதி 43, பக்கம் 42).

கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளி வர்க்கத்தின், உழைப் பாளி மக்களின் யாவற்றிலும் புரட்சிகரமான, உறுதியாக ஒன்றிணைந்த, அனுபவம் மிக்க, செல்வாக்கு உள்ள அரசி யல் ஸ்தாபனம். கம்யூனிஸத்தை அடைவது என்ற தெளி வான குறிக்கோளை அது கொண்டிருக்கிறது. இது கட்சியின் செயல் அனைத்திற்கும் குறிக்கோளை நோக்கி முன்னேறும் தன்மையை அளிக்கிறது. அதன் கொள்கை விஞ்ஞான அடிப் படையில், மார்க்ஸீய சித்தாந்தத்தின் முடிவுகளின் பேரில் வகுக்கப்படுகிறது. முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்தை யும், அதோடு உழைக்கும் விவசாயிகள், அறிவுஜீவிகள் சமூகங்களையும் சேர்ந்த அரசியல் உணர்வு மிக்க நபர்கள் அதன் உறுப்பினர்கள். எஃகுக் கட்டுப்பாட்டில் ஒருங்கிணைந்த ஸ்தாபனமாக அது விளங்குகிறது. உழைப்பாளிகளின். நலன்களின் பொருட்டுக் கட்சியின் ஆத்மத் தியாகம் நிறைந்த பல்லாண்டுப் போராட்டமும் புரட்சி இயக்கத்தையும் புதிய சோஷலிஸ அரசின் கட்டுமானத்தையும் தலைமை வகித்து நடத்தும் அதன் திறனும் விரிவான பொது மக்கள் திரளுக்கு அதன்மீது ஆழ்ந்த நம்பிக்கையையும் அதன் அனுபவம் முதிர்ந்த தலைமையின்பால் மதிப்பையும் ஏற்படுத்தி இருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் இந்தப் பண்புகளும் தகுதிகளுமே சோஷலிஸ அரசில் தலைமை வகித்து இயக்கும் சக்தி என்ற பாத்திரத்திற்கு அதை உரியது ஆக்குகின்றன.

எனவே, பொருளாதாரக் கட்டுமானத்தில் சோஷலிஸ அரசினது தலைமையைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அளிக்கக் கூடாது என்ற கோரிக்கை முற்றிலும் அபத்தமாய் இருந்தது. சோவியத்துக்களுக்குக் கட்சி தலைமை ஏற்பது அரசு உறுப்புக்கள் என்ற வகையில் அவற்றின் பாத்திரத்துக்குச் சிறிதும் பழுது உண்டாக்குவதில்லை, மாறுக, அவற்றின் பாத்திரத்தையும் பொறுப்பையும், அவற்றின் உரிமைகளையும் தகுதியையும் செயல்வன்மையையும் மேலும் வலுப்படுத்தவே செய்கிறது.

கட்சி தொழிலாளி வர்க்கத்தின், விரிவான உழைப்பாளி மக்கள் திரளின் நலன்களைக் கருத்தில் கொண்டு சோவியத் அரசின் கொள்கையைத் தீர்மானிக்கிறது, பொருளாதார நிர்மாணம் பற்றிய பிரச்சினைகள் உட்பட அதன் எல்லாச் செயல்களையும் சரியான திசையில் செலுத்துகிறது. கட்சியின் பத்தாவது காங்கிரஸால் வகுக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை இதற்கு நம்பிக்கையூட்டும் எடுத்துக்காட்டு ஆகும்.

தேசீயப் பொருளாதார நிர்வாகத்தைத் தொழிற்சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எதிர்த்தரப்பினரின் கோரிக்கையும் இவ்வாறே தவருனதாக இருந்தது. சோவியத் அரசைப் பொருளாதார நிர்வாகத்திலிருந்து விலக்குவதும் இந்தச் செயலில் கட்சியின் தலைமைப் பாத்திரத்தைப் பலவீனப்படுத்துவதும் இந்தக் கோரிக்கையின் நோக்கங்களாய் இருந்தன. தொழிற்சங்கங்கள் திரளான தொழிலாளர்களின் ஸ்தாபனங்கள் ஆகையால், அவர்களுடைய சர்வாதிகாரம் நிலவுகையில் தேசீயப் பொருளாதார நிர்வாகம் அவற்றிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்று வலிந்து ரைத்தார்கள் எதிர்த் தரப்பினர். சோஷலிஸத் தொழில் நிலையங்களில் அரசால் நியமிக்கப்பட்ட இயக்குநர்களை அகற்றிவிட்டு அவர்களின் இடங்களில் தொழிலாளர்களாலும் அலுவலக ஊழியர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் தொழில் துறைகளின் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் தேசீயப் பொருளாதாரம் முழுவதையும் நிர்வகிப்பதற்கு எல்லா உற்பத்தியாளர்

களதும் காங்கிரஸால் தேர்ந்தெடுக்கப்படும் மைய உறுப்பு அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் யோசனை கூறினர்கள். தேசியப் பொருளாதாரத்தைத் தலைமை ஏற்று இயக்கி நடத்துவது என்ற சோவியத் அரசின் முக்கியமான செயலைத் தொழிற்சங்கங்களிடம் ஒப்படைப்பது என்று இது அர்த்தப்பட்டது.

மக்கள் அனைவரதும் உடைமை முழுவதையும் ஒன்றித்த அரசுப் பொருளாதார அமைப்பாக நிறுவுவதும் அதன் நிர்வாகத்தை சோஷலிஸ அரசின் கைகளில் ஒருமையப்படுத்துவதும் அதன் திட்டமிட்ட வளர்ச்சியும் இன்றியமையாதவை என்பதை மார்க்ஸிய போதனை ஆதாரங்களுடன் நிலைநாட்டி இருக்கிறது. கட்சி இதையே வழிகாட்டியாகக் கொண்டது. எதிர்த் தரப்பினரோ, அதை அராஜக-சிண்டிகலிஸப் பாதையில் தள்ளினர்கள், அதாவது, தொழில் நிலையங்களையும் முழு முழுத் தொழில் துறைகளையும் நடத்தும் பொறுப்பை உற்பத்தியாளர்களிடமே ஒப்படைக்கவும் சோஷலிஸப் பொருளாதார நிர்வாகத்தைத் துண்டுகளாகக் கூறு போடவும் ஒன்றித்த அனைத்து அரசுத் திட்டத்தின் அடிப்படையில் செயல்படும் அதன் மையப்படுத்தப்பட்ட தலைமையை அகற்றவும் அவர்கள் முயன்றார்கள்.

அரசின் செயல்களைத் தொழிற்சங்கங்களிடம் ஒப்படைப்பது அறிவுக்கு ஒவ்வாதது என்று லெனினும் கட்சியும் சான்று காட்டினர்கள். சுய விருப்பத்தின் பேரில் அமைந்த சமூக ஸ்தாபனங்கள் ஆகும் தொழிற்சங்கங்கள். தேசியப் பொருளாதாரத்தின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமுமோ சோஷலிஸ அரசின் இயல்பான செயல். இந்தச் செயலைத் தொழிற் சங்கங்கள் தாங்களே மேற்கொள்ள முடியாது. அவை முதன்மையாகத் தொழிற்சாலைத் தொழிலாளர்களையும் ஊழியர்களையும், அதிலும் அவர்களுடைய தொழில் வகை நடவடிக்கைகளுக்கு ஏற்ப, ஒன்றிணைக்கின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நிலைமைகளில் தொழிற்சங்கங்கள் தங்கள் துறைகளைச் சேர்ந்த உழைப்பாளிகளின் குறுகிய இலாகாவாரியான நலன்களை—ஒரு வர்க்கம் என்ற வகையில் பாட்டாளிகளின் அனைத்து அரசு நலன்களுக்கு ஒவ்வாத நலன்களை—வெளியிடக் கூடும். தவிரவும், தேசியப் பொருளாதாரம்

விவசாயத்தையும் உள்ளடக்கியது. மிகப் பெரும்பான்மை யான உழைப்பாளி விவசாயிகள் தொழிற்சங்க ஸ்தாபனங் களைச் சேர்ந்தவர்கள் அல்ல. அரசு உறுப்புக்களோ என்றால் நாடு அனைத்தின் மக்களதும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்பார்க்கின்றன, தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளதும் வளர்ச்சி மீது செல்வாக்கு செலுத்துகின்றன. எனவே, அரசு முழுவதன் அளவிலும் திட்டப் படியும் தேசீயப் பொருளாதாரத்தின் மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை ஒழுங்கமைக்க வல்லது சோஷலிஸ அரசு மட்டுமே. அதே சமயம் சோஷலிஸக் கட்டுமானத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரம் முழுமையாக வெளிப்படுகிறது, ஏனெனில் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் புறநிலையான பொருளாதார விதிகளைக் கையாண்டு, முதலாளித்துவ சமூகத்தை சோஷலிஸ சமூகமாக மாற்றி அமைப்பதற்குரிய சரியான வழியைக் காட்டவும் விஞ்ஞான அடிப்படையில் சோஷலிஸக் கட்டுமானத்தை நடத்தவும் வல்லது.

தொழில் நிலையங்களின் நிர்வாகத்தில் ஒரு நபர் தலைமைக் கோட்பாட்டின்மீது எதிர்த் தரப்பினர் நடத்திய தாக்குதல் களையும் கட்சி நிராகரித்துவிட்டது. அக்டோபர் புரட்சிக்குப் பின் சோஷலிஸ தேசீயப் பொருளாதாரத்தின் அடிப்படை களை நிறுவத் தொடங்கிய லெனின், சோஷலிஸத் தொழில் நிலையங்களின் நிர்வாகத்தில் ஒரு நபர் தலைமையையும் உழைப்பாளிகளை, முதன்மையாகத் தொழிற்சங்கங்களின் வாயிலாக இந்தக் காரியத்தில் ஈடுபடுத்துவதையும் பொருத்த மாக இணைப்பதன் அவசியத்தை விஞ்ஞான ஆதாரங்களுடன் நிலைநாட்டினார். தொழில் துறையில் உற்பத்தி இந்த அடிப்படையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டது. பொருளாதாரக் கட்டுமானத்தில் தொழிற்சங்கங்களின் பாத்திரத்தைக் கட்சி குறுக்கிவிடவில்லை. தொழிற்சங்கங்கள் தங்கள் அணிகளிலிருந்து திறமைசான்ற உற்பத்தி ஒழுங்கமைப்பாளர்களைப் பொறுக்கி எடுத்து, சோஷலிஸத் தொழில் துறையை நிலைப்படுத்துவதில் முக்கியப் பங்கு ஆற்றின. ஆயினும் ஒரு நபர் தலைமைக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களை நியமிப்பது மார்க்ஸீய சித்தாந்தத்தின் நோக்கில் ஆதாரமற்றது.

எந்தத் தொழில் நிலையத்தினதும் முறையான வேலை அதன் ஊழியர்கள் எல்லாரும் மிகக் கண்டிப்பான கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்தால் தான் முடியும் என்று லெனின் விளக்கினார். நவீனப் பெருமளவு உற்பத்திக்கு இது தேவை. தொழில் நிலையத்தின் தலைவனாக இருக்கும் நிர்வாகியின் தனித்த சித்தமே உற்பத்தி நிகழ்முறையில் இத்தகைய கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியும். எனவே, சோஷலிஸத் தொழில் நிலையங்களின் தலைமையை, தேர்ந்தெடுக்கப்படும் தொழிலாளர் கமிட்டிகள் அல்ல, பாட்டாளி வர்க்க அரசால் நியமிக்கப்படுபவர்களும், திட்டவட்டமான நிர்வாக உரிமைகள் பெற்றவர்களும் தனி நபர் தலைமையின் அடிப்படையில் செயல் ஆற்றுபவர்களுமான இயக்குநர்களே ஏற்க வேண்டும்.

தொழிலாளர்களைக் கம்யூனிஸ முறையில் போதித்துப் பயிற்றுவதற்கு மிக முக்கியமான ஒழுக்கநெறி-அரசியல் காரணியையும் இதன் தொடர்பில் கட்சி கருத்தில் கொண்டது. தொழிலாளர்கள், ஊழியர்களின் சுய நிர்வாக அடிப்படையில் தொழில் நிலையங்கள் இயங்கினால், அதன் விளைவாக அவர்கள் தங்கள் தொழில் நிலையங்களின் நலன்களை மட்டுமே வாழ்வின் குறிக்கோளாக எண்ணுவார்கள், மற்ற உழைப்புக் குழுக்களிலிருந்து தாங்கள் தனித்து ஒதுங்கியவர்கள் என்று நினைப்பார்கள். அவர்களுக்குள் பிணக்கும் மோதலும் கூட நிகழலாம். இவற்றால் பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு பலவீனம் அடையும். தொழில் நிலையங்களை அரசு நிர்வகிக்கும் போதோ, தொழிலாளர்களிடையே அனைத்து அரசு நோக்கும் அக்கறையும் வளர்ச்சி அடையும், தாங்கள் தனித்து ஒதுங்கிய, அடைப்பிடத்தில் இருக்கிற உற்பத்திக் குழு அல்ல, நாட்டின் ஒன்றித்த சோஷலிஸப் பொருளாதார அமைப்பின் பிரிக்க முடியாத பகுதி என்ற உணர்வு உறுதிப்படும்.

பொருளாதார நிர்மாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசு, தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் தெளிவாக வரையறுக்கப்பட்ட பரஸ்பர ஒத்துழைப்பு இவ்வாறு நிலைநாட்டப்பட்டது. சோவியத் அரசின் தலைமை வகித்து இயக்கும் சக்தி ஆகிய கட்சி மார்க்ஸீய சித்தாந்தத்தின் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரக் கொள்

கையை வகுக்கிறது, சோவியத் அரசு உறுப்புக்களுக்கு யோசனை கள் வழங்குகிறது. சோஷலிஸ அரசு தேசீயப் பொருளா தாரத்தின் எல்லாத் துறைகளையும் நேரடியாகத் தலைமை வகித்து இயக்குகிறது. தொழிற்சங்கங்கள் பொருளாதார நிர் மாணத்தில் கட்சியுடனும் அரசுடனும் ஒத்துழைத்து உழைப் பின் பால் சோஷலிஸப் போக்கைக் கடைப்பிடிக்கத் தொழி லாளர்களைப் பயிற்றுகின்றன, உழைப்புக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தவும் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வும் முயல்கின்றன, அரசின் திட்டப் பொறுப்புக்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதில் தொழில் நிலையங்களின் நிர்வாகி களுக்கு உதவுகின்றன, உற்பத்தி ஒழுங்கமைப்பாளர்களைப் பயிற்றுகின்றன, தொழிலாளர்களதும் அலுவலக ஊழியர் களதும் நல்வாழ்வுக்கு வகை செய்கின்றன. தொழிற்சங்கங் கள் போதித்துப் பயிற்றும் ஸ்தாபனங்கள், ''...நிர்வாகப் பள்ளிகள், பொருளாதார நிர்வாகப் பள்ளிகள், கம்யூனிஸப் பள்ளிகள்'' என்றார் லெனின். (முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 203).

இவற்றோடு கூடவே, அரசு நிறுவனங்களுடனும் சமூக நிறுவனங்களுடனும் கட்சியின் உறவுகளைக் குறித்த கோட் பாடுகளையும் திரளான பொது மக்களிடையே வேலை செய் வதற்கு உரிய முறைகளையும் கம்யூனிஸ்ட் கட்சி வகுத்தது. சோவியத்துக்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இளைஞர் நிறுவனத்துக்கும் உழைப்பாளிகளின் கூட்டுறவுக் கழகங்க ளுக்கும் கட்சி கட்டளைகள் இடுவதில்லை, தன் சித்தத்தை அவற் றின் மேல் சுமத்துவதில்லை. அவற்றுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் எடுத்துரைப்பதன் மூலமே அவற்றின் மீது செல்வாக்கு செலுத்துகிறது. அரசு நிறுவனங்களிலும் சமூக நிறுவனங்களிலும் அது தனது கம்யூனிஸ்ட் உட்குழுக்களை அமைத்திருக்கிறது. இவை கட்சி உறுப்பினர் அல்லாத திரளான மக்களுக்குக் கட்சியின் கொள்கையை விவரமாக விளக்குகின்றன. அதை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொள்ள வும் நடைமுறையில் செயல்படுத்தவும் முயல்கின்றன.

நம்பிக்கை ஊட்டும் முறையே திரளான பொது மக்க ளிடையிலும் தன் எல்லா நிறுவனங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலை முறையாகும்.

பத்தாவது கட்சிக் காங்கிரஸின் தீர்மானங்கள் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் புதிய உற்சாகம் ஊட்டின.

சோவியத் யூனியன் உருவாகியது

ஆனால் சோஷலிஸக் கட்டுமானத்தின் வெற்றிகளுக்கு சோவியத் யூனியனில் வசிக்கும் எல்லா மக்கள் இனங்களையும் ஒரே சோதரக் குடும்பமாக நெருக்கமாக ஒன்றிணைப்பதும் இன்றியமையாததாக இருந்தது. தேசத்தின் எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளின் ஒன்றித்த போராட்டத்தின் விளைவாகவே தலையீட்டாளர்கள் மீதும் வெண்படையினர் மீதும் வெற்றி கிட்டியது. இப்போது அனைவரதும் உழைப்பு முயற்சிகளால் பொருளாதாரச் சீரழிவை வெற்றி கொண்டு சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதை விரைவுபடுத்த வேண்டியிருந்தது. பகைமை நிறைந்த முதலாளித்துவ முற்றுகை காரணமாக, நாட்டின சோவியத் குடியரசுகளின் மக்கள் இனங்கள் ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்ளுவது இன்னும் அவசியம் ஆயிற்று. நாட்டினப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு கண்டது இவ்வாறு செய்யத் துணை புரிந்தது.

அக்டோபர் புரட்சியின் பயனாக ருஷ்யாவின் எல்லா நாட்டினங்களும் சட்டப்படி சமத்துவம் பெற்றன. எல்லா மக்கள் இனங்களையும், அவை சமூக வளர்ச்சியின் எந்தத் தரத்தில் இருந்தாலும் சரியே, பொருளாதார, பண்பாட்டு நோக்கில் சமமானவையாகச் செய்வது அடுத்த கடமையாக இருந்தது. இதற்கு, பின்தங்கிய மக்கள் இனங்களை முன்னணியில் இருந்தவற்றின் தரத்துக்கு உயர்த்தவும், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட பொருளாதார வடிவங்களிலிருந்து, துன்பகரமான முதலாளித்துவ கட்டத்தைத் தாண்டிக் கடந்தவாறு சோஷலிஸ அமைப்புக்குப் பரிணமிக்க அவற்றுக்கு உதவவும் வேண்டி இருந்தது. இதன் பொருட்டு, அதிக வளர்ச்சி அடைந்த பொருளாதாரம் கொண்ட மக்கள் இனங்கள், முதன்மையாக ருஷ்ய மக்கள், பின்தங்கிய மக்கள் இனங்களுக்கு அவற்றின் பிரதேசங்களில் தொழிற்சாலைகள் நிறுவவும் நாட்டின ஊழியர்களைப் பயிற்றித் தயாரிக்கவும் உதவுவது அவசியமாய் இருந்தது.

சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளில் நாட்டினங்

களின் அரசு அமைப்பை வலுப்படுத்த நிறைய நடவடிக்கை கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மிக மிகப் பின்தங்கிய மக்கள் இனங்கள் அரசு நிர்வாகத்தில் ஈடுபடுத்தப்பட்டன. அவற்றின் ஆட்சி உறுப்புக்களும் பொருளாதார நிர்வாகமும் நீதி மன்றங்களும் அச்சக வெளியீடுகளும் பள்ளிகளும் நாடக அரங்குகளும் தாய் மொழியிலேயே நடத்தப்பட்டன. மக்களின் மிக மிகத் தாழ்நிலையில் இருந்த எழுத்தறிவு விகிதத்தை அதிகரிக்க இது உதவியது, மக்கள் இனத்தின் பண்பாட்டுத் தரத்தை உயர்த்தியது.

உள் நாட்டுப் போர் முடிந்த பிறகு ருஷ்யாவின் நிலப் பரப்பில் நிலவின: ருஷ்ய சோவியத் சோஷலிஸக் கூட்டுக் குடியரசு, உக்ரேனிய சோவியத் சோஷலிஸக் குடியரசு, பேலோருஷ்ய சோவியத் சோஷலிஸக் குடியரசு, காக்கேஷிய சோவியத் சோஷலிஸக் கூட்டுக்குடியரசு (இதில் ஆஸர்பை ஜான், ஆர்மீனிய, ஜார்ஜிய சோவியத் சோஷலிஸக் குடியரசு கள் சேர்ந்திருந்தன) ஆகியன. ஹீவாவிலும் புஹாராவிலும் (மத்திய ஆசியா) மக்கள் குடியரசுகள் உருவாயின. ஒவ்வொரு சோவியத் குடியரசும் தன் எல்லாப் பிரச்சினைகளை யும் சுதந்திரமாகத் தீர்த்துக் கொண்டது. புதிய வளர்ச்சிக் கட்டத்தில், சமாதான வாழ்க்கை நிலைமைகளில் எல்லாக் குடியரசுகளுக்கும் நடவடிக்கைகளின் ஒருங்கிசைவும் இரா ணுவத் தற்காப்புச் செயல் போன்ற சில அரசுச் செயல் களில் உடன்படிக்கை அடிப்படையில் இணைவும் மட்டுமே அல்ல, அதிக நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பும் மையப்படுத்தப்பட்ட ஒன்றித்த சோவியத் அரசில் இணைவும் தேவைப்பட்டன. ஒவ்வொரு தனிக் குடியரசின் அரசுரிமை யையும் பிரதேச முழுமையையும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப் பிலிருந்து காப்பது தங்களது நெருங்கிய ஐக்கியத்தையே சார்ந்திருக்கிறது என்பதை சோவியத் குடியரசுகளின் உழைப்பாளிகள் தெளிவாகக் கண்டார்கள். பொருளாதாரச் சீரழிவைப் போக்கி சோஷலிஸத்தை நிறுவுவதற்கு எல்லா சோவியத் குடியரசுகளுடையவும் பொருளாதார, அரசியல், இராணுவ வளங்களை மிக நெருக்கமாக ஒன்றிணைப்பது இன்றி யமையாது தேவைப்படுகிறது என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

ஒன்றித்த சோவியத் அரசாக இணைவதற்கு ஆதரவாக எல்லா சோவியத் குடியரசுகளிலும் உழைப்பாளிகளின் இயக்கம் தொடங்கியது. ஜார் ஆட்சியை அகற்றவும் நிலப் பிரபுக்களதும் பூர்ஷ்வாக்களதும் ஆதிக்கத்தை ஒழிக்கவும் சோவியத் ஆட்சியை நிலைநாட்டி வலுப்படுத்தவும் எல்லா நாட்டினங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் நடத்திய ஒன்றிணைந்த போராட்டத்தில், தலையீட்டாளர்களுடனும் வெண்படையினருடனும் அவர்கள் நிகழ்த்திய போராட்டத்தில், சோஷலிஸக் கட்டுமானத்திற்காக அவர்கள் புரிந்த ஒன்றிணைந்த உழைப்பில் இருந்தன இந்த இயக்கத்தின் வேர்கள்.

ஒன்றுக இணைவதற்கு சோவியத் மக்கள் இனங்கள் காட்டிய விருப்பத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தது. **பல நாட்டினங்கள் அடங்கிய ஒன்றித்த அரசைக்** கூட்டரசு அடிப்படையில் உருவாக்கும் யோசனையை அது முன் வைத்தது. நான்கு சோவியத் குடியரசுகளுடையவும் பிரதிநிதிகள் 1922 டிசம்பரில் மாஸ்கோ நகரில் கூடி, சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனுக (சோவியத் யூனியன்) இணையத் தீர்மானித்தார்கள். ஒவ்வொரு சோவியத் குடியரசும் அரசுரிமை பெற்ற ராஜ்யமாக இருந்து வந்தது, சொந்த சோவியத் அரசாங்கம் பெற்றிருந்தது. இந்த அரசாங்கம் தன் குடியரசின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தானே, ஆனால் சோவியத் யூனியனின் பொதுச் சட்டங்களின் அடிப்படையில், தீர்த்துக் கொண்டது. சில யூனியன் குடியரசுகளில் சுயாட்சி சோவியத் குடியரசுகள் இருந்தன. அவற்றுக்கும் சொந்த அரசாங்கங்கள் இருந்தன, இவை தங்கள் குடியரசின் உள் வாழ்க்கைப் பிரச்சினைகளை சோவியத் அரசின் சட்டங்களின் அடிப்படையில் தீர்த்துக் கொண்டன.

இவ்வாறு அமைக்கப் பட்டது ஒன்றித்த சோவியத் சோஷலிஸ யூனியன் அரசு. இதை உருவாக்கியவர் மாபெரும் லெனின் ஆவார்.

சோவியத் யூனியன் லெனினது நாட்டினக் கொள்கையின் பெரு வெற்றி ஆகும். மிகச் சிக்கல் நிறைந்த நாட்டினப் பிரச்சினைக்கு ஆதர்சத் தீர்வை உலகு அனைத்திற்கும் காட்டியது இது. சோவியத் யூனியனில் நூற்றுக்கும் மேல்



சோவியத் யூனியன் மக்கள் கமிஸாரவைத்
தலைவர் லெனின்

நாட்டினங்களும் மக்களினங்களும் வாழ்கின்றன. ஒரே சோதரக் குடும்பமாக அவை இணைந்திருப்பது உலக வரலாற்று முக்கியத்துவம் கொண்டது ஆகும்.

''யார் யாரை?''

புதிய பொருளாதாரக் கொள்கையை மேற்கொண்ட பின் கம்யூனிஸ்ட் கட்சி அதைச் செயல்படுத்துவதற்கு மக்களை மும்முரமாக ஒழுங்கமைத்தது. புதிய பணிகளுக்கு இணங்க அது தன் அணிகளை மாற்றி வகுத்தது. விவசாயத்தையும் தொழிற் சாலைகளையும் போக்கு வரத்தையும் மீட்டமைப்பது, நகரங்களுக்கும் நாட்டுப்புறங்களுக்கும் இடையே சரக்குப் பரிமாற்றத்தை ஊக்கி நடத்துவது, கடன்-நிதி அமைப்பை ஒழுங்குபடுத்துவது போன்ற பொருளாதாரச் செயல்களை கட்சி ஸ்தாபனங்களின் முக்கிய நடவடிக்கைகள் ஆயின. கட்சி செஞ்சேனையிலிருந்து ஆயிரமாயிரம் கம்யூனிஸ்டுகளைப் பொருளாதாரப் பணியில் ஈடுபடுத்தியது. அவர்களில் பலர் ஆலைகள், தொழிற்சாலைகளின் இயக்குநர்களும் போக்கு வரத்து, அரசு வர்த்தகம், கூட்டுறவுக் கழகங்கள் ஆகியவற்றின் தலைவர்களும் ஆயினர்.

கட்சிக் குழுக்கள் நிர்வாக அலுவலர்களின் உத்தரவுகளில் குறுக்கிடாமல், தொழில் நிலையங்களின் வேலையில் எல்லா வகையிலும் செல்வாக்கு செலுத்தின, கீழிருந்து கண் காணிப்பு நடத்தின. உற்பத்திப் பொறுப்புக்களை நிறைவேற்று வதற்கும் உழைப்பின் உற்பத்திச் திறனை அதிகரிப்பதற்கு மான முயற்சியில் கம்யூனிஸ்டுகள் கட்சி உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களை வழிகாட்டி நடத்திச் சென்றார்கள்.

கிராமங்களில் கம்யூனிஸ்டுகள் புதிய பொருளாதாரக் கொள்கையின் உட்பொருளையும் உணவுப்பண்டப் பங்கீட்டுக் குப் பதில் உணவுப்பண்டத் தீர்வையை அமல்படுத்தும் சோவியத் சட்டத்தின் கருத்தையும் விவசாயிகளுக்கு விளக்கினர் கள். கட்சிக் குழுக்கள் பயிர்நிலப் பரப்பை விரிவுபடுத்தும் படியும் கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும்படியும் விவசாய விளைச்சலை அதிகரிக்கும்படியும் விவசாயிகளை வேண்டிக் கொண்டன. கூட்டுறவுக் கழகங்கள் அமைக்கவும் அவற்றின் வேலையைச் சீர்படுத்தவும் விவசாய இயந்திரங்களை

வேளாண்மையில் பயன்படுத்தவும் விவசாயக் கருவிகளைச் செப்பனிடவும் அவை விவசாயிகளுக்கு உதவின.

கட்சியின் ஊக்கம் மிக்க உழைப்பு விரைவிலேயே பயன் அளித்தது. லெனின் முன்கண்டது போலவே, புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் விவசாயமும் தொழில் துறையும் விரைவில் மீட்டமைக்கப்பட்டன. தொழிலாளர்களதும் விவசாயிகளதும் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. தொழிலாளர்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு, ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் திரும்பினர்கள். அரைப் பட்டினி கிடந்த நாட்டுப்புற ஏழை விவசாயிகளின் பொருள் நிலை மேம்பட்டது. சோவியத் அரசாங்கம் அவர்களுக்கு விதைகளும் வேளாண்மைக் கருவிகளும் கடனுக்குக் கொடுத்தது.

ஆனால் கட்டற்ற வியாபாரத்தை ஆதாரமாகக் கொண்டு தனி வர்த்தகர்கள் தோன்றி வளரலாயினர். அவர்கள் சில்லறை வியாபாரத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டு மொத்த வியாபாரத்திலும் நுழைந்தனர். தொழில் துறையில் தனித் தொழிலதிபர்கள் தோன்றினர். சிறு எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலை செய்யும் சிறு தொழில் நிலையங்களை அவர்கள் நடத்தத் தொடங்கினர். நாட்டுப்புறத்தில் குலாக்குகள் எனப்படும் பணக்கார விவசாயிகளின் கும்பல் எண்ணிக்கையிலும் செல்வ வளத்திலும் அதிகரித்தது.

இந்தச் சிக்கலான நிலைமைகளில் சில கம்யூனிஸ்டுகள் பூர்ஷ்வா வர்க்கத்தைப் பொருளாதாரத் துறையில் வெல்வதற்குத் தொழிலாளி வர்க்கத்திற்கு உள்ள சக்தியிலும் திறமையிலும் நம்பிக்கை இழந்தனர். அவர்கள் சொன்னார்கள்: நாம் அக்டோபர் புரட்சியை நடத்தி முடித்தோம், பூர்ஷ்வா வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஒழித்தோம், அன்னியத் தலையீட்டாளர்களை விரட்டினோம். இவ்வளவுக்கெல்லாம் பிறகு முதலாளித்துவம் மறு உயிர்ப்பு அடைவதை அனுமதிக்கத் தொடங்கி இருக்கிறோம். கட்சியின் இந்தக் கொள்கைக்கு நாங்கள் இசையவில்லை. இவ்வாறு கூறிய கம்யூனிஸ்டுகளின். மனநிலைக்கு தூபம் போட்டது மென்ஷிவிக்குகளும் சர்வதேச சமூக-ஜனநாயகவாதிகளும் கிளப்பிய பரிதாபமான ஓலம். புதிய பொருளாதாரக் கொள்கையைச் செயல்படுத்தியதன்

மூலம் சோவியத் கம்யூனிஸ்டுகள் பின் நோக்கி, முதலாளித்துவத்தை நோக்கித் திரும்பி விட்டார்கள். அழிவை நோக்கிச் செல்கிறார்கள் என்று ஊளையிட்டார்கள் இவர்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கை மெய்யாகவே நாட்டின் வாழ்க்கையில் முக்கியத் திருப்பமாக இருந்தது, ஆனால் பின்னோக்கிய இயக்கமாக அல்ல. இத்தகைய திருப்பத்தைத் தாங்குவது எல்லாருக்கும் முடியவில்லை. இந்த ஊசலாட்டங்கள் எதனால் ஏற்பட்டன என்ற கேள்விக்கு லெனின் பின் வருமாறு விடை அளித்தார்: ''வரலாற்றின் ஒவ்வொரு தனிவகைத் திருப்பமும் குட்டி பூர்ஷ்வா ஊசலாட்டங்களின் வடிவத்தில் ஒரு சில மாறுதல்களை ஏற்படுத்துகிறது. இவை பாட்டாளி வர்க்கத்தின் பக்கத்தில் எப்போதும் இருந்து வருகின்றன, ஏதேனும் ஓர் அளவில் பாட்டாளி வர்க்கத்தின் இடையே எப்போதும் புகுந்து விடுகின்றன''. எனவே திடீர்த் திருப்பம் நிகழும்போது அரங்கில் ஊசலாட்டத்தின் இரண்டு போக்குக்கள் தோன்றுகின்றன: ஒன்று ''குட்டிபூர்ஷ்வாச் சீர்திருத்தவாதம்'', மற்றது ''குட்டி பூர்ஷ்வாப் புரட்சிவாதம், சொல்லளவில் பயங்கரமானது, படாடோபமானது, வீரம் காட்டிப் பசப்புவது, செயலளவிலோ, நொறுங்கலும் சிதறிலும் அறிவீனமும் கொண்ட வெற்று வேட்டு—இந்த ஊசலாட்டங்களின் இரண்டு 'போக்குகள்' இவையே.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 44, பக்கம் 101).

முதலாளித்துவம் திரும்பி வரும் அபாயத்தை லெனின் விழிப்புடன் உணர்ந்தார். அதே சமயம், கட்சியின் கவனத்தை அவர் ஓர் உண்மையின் பால் திருப்பினார்: முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பு நிகழும் காலக் கட்டத்தில் பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே வர்க்கப் போராட்டம் மறைந்து விடுவதில்லை, ஆனால் புதிய வடிவங்களை மேற்கொள்கிறது. ''யார் யாரை?'' என்பதுதான் கேள்வி. முதலாளித்துவம், அதாவது, புதிய பொருளாதாரக் கொள்கையின் நிலைமைகளில் முளைத்திருக்கும் புதிய பூர்ஷ்வா வர்க்கமும் குலாக்குகளும், முன்னதாக பலம் திரட்டி மேலோங்கிவிடுமா, அல்லது தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் நாட்டின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் வசப்படுத்தி,

தனி வியாபாரிகளைச் சந்தையிலிருந்து நெருக்கி வெளியேற்றி, குலாக்குகளை அடக்கி வைக்குமா? உழைக்கும் விவசாயிகள் மீது செல்வாக்கு பெறுவதன் பொருட்டே போராட்டம் முதன்மையாக நடந்தது. உருவாகி வந்த பூர்ஷ்வா வர்க்கம் உழைக்கும் விவசாயிகளுடன் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியத்தைப் பிளவுபடுத்தவும் விவசாயிகளைத் தன் தரப்புக்கு இழுக்கவும் முயன்றது. அதன் முயற்சிகளைத் தகர்த்து விவசாயிகளுடன் ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொழிலாளி வர்க்கத்துக்கு அவசியமாய் இருந்தது. இந்த ஐக்கியத்தின் முறிக்க முடியாத உறுதியே சோஷலிஸக் கட்டுமானத்தின் எல்லா வெற்றிகளுக்கும் உத்தரவாதம் அளித்தது.

இத்தகைய சிக்கலான சூழ்நிலையில் முக்கியமானது தனது சக்திகளில் நம்பிக்கை இழக்காதிருப்பதும் எல்லா இடர்களையும் கடந்து திட்டமிட்ட குறிக்கோளை—சோஷலிஸத்தை—நோக்கி உறுதியாக அடி வைத்து முன் செல்வதுமே என்று கூறினார் லெனின்.

பொருளாதாரக் கட்டுமானப் பணிகளின் சங்கிலியில் அந்தக் காலத்தில் முக்கியக் கண்ணாக விளங்கியது வியாபாரமும் அதன் அடிப்படையில் சிறு விவசாயிகளின் தனி உடைமை உற்பத்தியுடன் சோஷலிஸத் தொழில் துறையின் பொருளாதார உறவுகளை ஒழுங்குபடுத்துவதும். கட்சியின் பதினொன்றாவது (1922), பன்னிரண்டாவது (1923) பதின்மூன்றாவது (1924) காங்கிரஸ்கள் வியாபார வளர்ச்சிப் பிரச்சினைகளை வெகுவாக ஆராய்ந்தன. கம்யூனிஸ்டுகள் வியாபாரம் செய்யும் திறமையை இன்னமும் பெறவில்லை. சிலரோ, வர்த்தகத்தையே இகழ்ச்சியுடன் நோக்கினார்கள். மாபெரும் புரட்சியை நிறைவேற்றிய கம்யூனிஸ்டுகள் இம்மாதிரி விவகாரத்தில் ஈடுபடுவது அழகல்ல என்று அவர்கள் கருதினர்கள். இத்தகைய தவறான எண்ணங்களை லெனின் தாக்கி விமர்சித்தார். **கம்யூனிஸ்டுகள் வியாபாரம் செய்யக் கற்க வேண்டும்** என்ற கோஷத்தை எழுப்பினார் அவர்.

ஊழியர்களைச் சரியாகத் தெரிந்தெடுத்து தக்க இடங்களில் அமர்த்துவதும், கட்சியும் அரசும் விதித்த பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதைச் சரி பார்க்கும் ஏற்பாடும்

திறமையுள்ள பொருளாதார நிர்வாகத்துக்குப் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை ஆயின, ஏனென்றால் கட்சியினதும் அரசினதும் கொள்கை மனிதர்கள் வாயிலாகவே செயல்படு கிறது.

1922ம் ஆண்டு, ருஷ்யக் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் பதினேராவது காங்கிரஸுக்குப் பிறகு, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி ஏற்படுத்தப்பட்டது. இஓஸிஃப் ஸ்தாலின் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பொருளாதார நிர்வாகப் பணியில் கட்சி தனது சிறந்த ஊழியர்களை நியமித்தது. அரசாங்கத்தில் லெனினுடைய உதவியாளராக இருந்த த்ஸியுருப்பா வர்த்தக இலாகாவுக்குத் தலைவரானார். அப்புறம் இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார் மிக்கொயான். த்ஸெர்ழீன்ஸ்கி போக்குவரத்துத் துறை மக்கள் கமிஸாரகத்துக்குப் பின்னர் தேசீயப் பொருளாதார உச்ச ஆலோசனை சபைக்கும் தலைவராய் இருந்தார். கூய்பிஷேவ் மின் ஆக்கத் துறையைத் தலைமை வகித்து நடத்தினார். த்ஸெர்ழீன்ஸ்கியின் மரணத்துக்குப் பின்னர் தேசீயப் பொருளாதார உச்ச ஆலோசனை சபைத் தலைவர் ஆனார்.

கட்சியின் சரியான கொள்கை, தொழிலாளர்களின் தன்னலம் அற்ற உழைப்பு ஆகியவற்றின் பயனாக சோஷலிஸ அமைப்பு வலுவுற்று வளர்ச்சி அடைந்தது. கம்யூனிஸ்டுகள் பொருளாதார நிர்வாகம் செய்யக் கற்றுத் தேர்ந்தார்கள். அவர்கள் வர்த்தகத்தில் தேர்ச்சி அடைந்து மொத்த வியாபாரத்திலும் சில்லறை வியாபாரத்திலும் இருந்து தனி வர்த்தகர்களை நெருக்கி வெளியேற்றத் தொடங்கினார்கள். தொழிலாளர்களில் சிலர், ஆலைகள், தொழிற்சாலைகள் ஆகிய வற்றின் திறமையுள்ள இயக்குநர்களாக மலர்ந்தார்கள். அவர் கள் உற்பத்தியை நன்றாக அறிந்திருந்தார்கள். திரளான தொழி லாளர்களைச் சரியான முறையில் அணுகவும் அவர்களுடைய முன்முயற்சியைப் பயன்படுத்திக் கொள்ளவும் அவர்களால் முடிந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியால் உற்சாகம் ஊட்டப்பெற்ற தொழிலாளர்கள் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் சுரங்கங் களையும் கனிகளையும் ஊக்கத்துடன் மீட்டமைத்தார்கள்.

விவசாயிகள் தங்கள் வேளாண்மையை மேம்படுத்தினர்கள். தொழிற்சாலைச் சரக்குகளும் விவசாய விளைபொருள்களும் சந்தையில் மேலும் மேலும் அதிகமாக விற்பனைக்கு வரலாயின.

இவ்வாறு ''யார் யாரை?'' என்ற பிரச்சினை சோஷலிஸத்துக்குச் சாதகமாகத் தீர்க்கப்பட்டது. சோவியத் நாடு விரைவாகத் தன்னிறைவு பெற்றது.

உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களே, ஒன்று சேருங்கள்!

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் பாதிப்பால் தொழில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிப் போராட்டம், காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் போராட்டத்துடன் ஒன்று கலக்கத் தொடங்கியது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலை இயக்கம் **உலகு பரவிய** தன்மை பெற்றது. இந்த மாபெரும் உலகப் புரட்சி நிகழ்முறை பற்றிப் பேசுகையில், முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம்தான் காலனிகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுடன் கூட்டு சேர்ந்து உலக முதலாளித்துவத்தை இறுதியாக வெற்றி கொள்ள முடியும் என்பதைச் சுட்டிக் காட்டினார் லெனின்.

சோவியத் நாடு உலக விடுதலை இயக்கத்தின் தலைமையை ஏற்றது. சுரண்டலுக்கு எதிராகப் பாட்டாளிகளின் போராட்டத்திற்கும் ஏகாதிபத்தியத்தால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளின் மக்களின் விடுதலைக்கான போராட்டத்திற்கும் உலகப் புரட்சி இயக்கத்துக்கும் அது உதவியது. ஏகாதிபத்தியத்தினதும் காலனியாட்சியினதும் ஒடுக்குமுறையிலிருந்து மனிதகுலத்தின் விடுதலைக்கு வழி வகுக்கும் கௌரவம் மிக்க, மிகவும் கடினமான பணியை வரலாறு ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்திடம் ஒப்படைத்தது. உலகம் அனைத்திலும் உள்ள தொழிலாளிகளும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களும் சோவியத் நாட்டைப் பெருமையுடன் நோக்கினர், பகைமை கொண்ட முதலாளித்துவ நாடுகளின் முற்றுகை நிலவிய கடினமான சூழ்நிலையில் சோஷலிஸக் கட்டுமானத்தில் அதன் வீரம் செறிந்த முயற்சிகளையும் வெற்றிகளையும் வியந்து

பாராட்டினர். சோவியத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்களுடைய பொதுச் செயலையே நிறைவேற்றுகிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

அக்டோபர் புரட்சிக்கு உத்வேகம் ஊட்டி அதை ஒழுங்கமைத்து நடத்தியவர், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர், வரலாற்றில் முதலாவது பாட்டாளி வர்க்க அரசின் முதல்வர் லெனினது பெயர் உலகின் எல்லாக் கண்டங்களிலும் பெரும் புகழ் பெற்றது. சோவியத் நாடு, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரதும் ஈர்ப்பு மையமாக விளங்கியது. ''இப்போது நாம் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி மக்களின் பிரதிநிதிகளாக மட்டும் அல்ல, ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் பிரதிநிதிகளாகவும் செயல்படுகிறோம்'' என்றார் லெனின். (முழு நூல் திரட்டு, தொகுதி 42, பக்கம் 71).

முதலாளிகளும் நிலப் பிரபுக்களும் இல்லாமல் தொழிலாளர்களும் விவசாயிகளும் புது வாழ்வை எப்படி நிறுவுகிறார்கள் என்று பார்ப்பதற்காக ஒடுக்கப்பட்ட மக்கள் திரள்களின் பிரதிநிதிகள் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பெருத்த இடர்களைக் கடந்து சோவியத் நாட்டுக்கு வந்தார்கள். வெளிநாட்டு உழைப்பாளிகளின் பிரதிநிதிக் குழுக்கள் லெனினையும் அவருடைய போராட்டத் தோழர்களையும் சந்தித்தார்கள். லெனின் பல நாடுகளின் புரட்சிக்காரர்களுடன் உரையாடினார், அவர்களுக்கு மிக உபயோகமான யோசனைகளை வழங்கினார்.

கிழக்கு நாடுகளின் மக்கள் இனங்களது முதலாவது காங்கிரஸ், சோவியத் ஆஸர்பைஜானின் தலைநகர் பக்கூவில் 1920 செப்டெம்பர் மாதம் கூடியது. இரண்டாயிரத்துக்கும் மேல் பிரதிநிதிகள் இதில் பங்கு கொண்டார்கள். ஒடுக்கப்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் இனங்களின் பிரதிநிதிகள், தங்கள் அத்தியாவசியப் பிரச்சினைகளை விவாதிப்பதன் பொருட்டு, போராடி விடுதலை பெற்ற ருஷ்யாவின் மக்கள் இனங்களுடைய பிரதிநிதிகளோடு வரலாற்றிலேயே முதன் முறையாக ஓரிடத்தில் கூடினார்கள். துருக்கி, எகிப்து, ஈரான், சீனா, இந்தியா, அப்கனிஸ்தான், துர்க்கிஸ்தான், கிர்கீஸியா, புஹாரா, ஹீவா, ஜார்ஜியா, ஆர்மீனியா ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பிற நாடுகளின் பிரதிநிதிகளும் காங்கிரஸின் நடவடிக்கை

களில் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா ஆகியவற்றின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதி நிதிகளும் மகாநாட்டில் இருந்தார்கள். காங்கிரஸ் கிழக்கு நாடுகளின் மக்கள் இனங்களுக்கு விடுப்பதற்கான அறிக்கை யை ஏற்றுக் கொண்டது. ஒன்றுபட்டு, ஏகாதிபத்திய, காலனி ஆட்சி ஒடுக்குமுறையிலிருந்து தங்கள் விடுதலையின் பொருட்டுப் போராட்டத்தை வலுப்படுத்தும்படிக் கிழக்கு நாடுகளின் மக்கள் இனங்களைக் காங்கிரஸ் அறைகூவி அழைத் தது. ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் போராட்டத்துக்கு ஆதரவு அளிக்குமாறு ஐரோப்பாவையும் அமெரிக்காவை யும் ஜப்பானையும் சேர்ந்த தொழிலாளர்களைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டார்கள். ''எல்லா நாடுகளுடை யவும் தொழிலாளர்களதும் ஆசிய, ஆப்பிரிக்க உழைப்பாளி மக்கள் திரள்களதும் கூட்டு நீடூழி வாழ்க!'' என்ற கோஷத் துடன் இந்த வேண்டுகோள் முடிந்தது.

கிழக்கு நாடுகளின் மக்கள் இனங்களது முதலாவது காங் கிரஸின் முக்கியத்துவத்தைக் குறித்து, இது எந்த இராணுவ வெற்றியையும் விட அதிக மகத்தான சாதனை என்று கூறி னார் லெனின். காங்கிரஸின் வேலையைத் தொகுத்துரைத்து, உலக விடுதலை இயக்கத்தின் புதிய கோஷத்தை லெனின் ஆமோதித்து ஆதாரங்களுடன் நிலைநாட்டினார்: ''உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களே, ஒன்று சேருங்கள்!''

சோவியத் அரசு தோன்றியதுமே உலகின் எல்லா ஒடுக் கப்பட்ட மக்கள் இனங்களுக்கும் விடுதலை வழங்கும்படியும் சுயநிர்ணய உரிமை அளிக்கும்படியும் கோரிக்கை விடுத்தது. ஈரானையும் துருக்கியையும் பங்கு பிரிப்பது பற்றி ஜார் அரசாங்கமும் பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கமும் செய்து கொண்டிருந்த அவமதிப்பு நிறைந்த இரகசிய உடன்படிக்கை களை அது கிழித்து எறிந்து அழித்து விட்டது, 1900ம் ஆண்டில் நடந்த பாக்ஸர் கிளர்ச்சியின் பொருட்டுச் சீனா மீது ஏகாதிபத் தியவாதிகள் விதித்திருந்த நஷ்ட ஈட்டில் தன் பங்கைப் பெற மறுத்து விட்டது, கீழை நாடுகளின் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்கு அவற்றின் விடுதலைப் போராட்டத்தில் சோதர உதவிக் கரத்தை நீட்டியது. ஆப்கனிஸ்தானுடையவும் ஈரா

னுடையவும் சுதந்திரத்திற்கு சோவியத் ருஷ்யாவே முதலில் ஏற்பு அளித்தது, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிராகஅவற்றின் போராட்டத்துக்குஆதரவு தந்தது. பிரிட்டனும் பிரான்ஸும் பிற நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளும் துருக்கிக்கு எதிராகத் தலையீடு நடத்தியபோது, அன்னிய ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து விரட்டவும் தங்கள் சுதந்திரத்தைக் காக்கவும் துருக்கிய மக்களுக்கு சோவியத் ருஷ்யா உதவியது, அவர்களுக்குப் பொருளாதார உதவி அளித்தது. அன்னிய ஆக்கிரமிப்பாளர்களை நாட்டிலிருந்து விரட்டுவதற்கு மங்கோலிய மக்களுக்கு உதவியது செஞ்சேனை. ஜெர்மனி, பல்காரியா, போலந்து ஆகிய நாடுகளின் தொழிலாளர்கள் 1923ல் புரட்சிப் போராட்டங்கள் நடத்தியபோது சோவியத் மக்கள் அவர்களுடன் தங்கள் ஒருமைப்பாட்டை வெளியிட்டார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான், பிரிட்டன் ஆகியவற்றின் ஏகாதிபத்தியவாதிகள் சீனாவின் சைனியவாதிகளையும் பிற்போக்காளர்களையும் ஆதரித்து அதன் உள் விவகாரங்களில் பகிரங்கமாகத் தலையீடு செய்தபோது, தங்கள் நாட்டின் சுதந்திரத்தின் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகளையும் உள்நாட்டுப் புரட்சிவிரோதிகளையும் எதிர்த்துப் போராடிய சீனாவின் புரட்சிச் சக்திகளது உதவிக்கு விரைந்தது சோவியத் யூனியன்.

1922 நவம்பரில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் காங்கிரஸில் சர்வதேசத் தொழிலாளர், தேசிய விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள்முன் லெனின் கடைசி முறையாகச் சொற்பொழிவு ஆற்றினார். உலகின் 58 நாடுகளின் பிரதிநிதிகள் காங்கிரஸில் குழுமி இருந்தார்கள். ''ருஷ்யப் புரட்சியின் ஐந்து ஆண்டுகளும் உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்களும்'' என்னும் பொருள் பற்றி லெனின் உரை நிகழ்த்தினார். புதிய பொருளாதாரக் கொள்கையின் வெற்றிகள்மீது தமது உரையில் முக்கியமாகக் கவனம் செலுத்தினர். சோவியத் விவசாயிகள் இந்தக் கொள்கையால் திருப்தி அடைந்திருந்தார்கள். தொழிலாளர்களதும் விவசாயிகளதும் ஐக்கியம் மேலும் வலுப்பட்டிருந்தது. விவசாயம் விரைவாக மீட்டமைக்கப்பட்டு விட்டது, தொழில்களும் வியாபாரமும் உற்சாகமாக நடக்கத் தொடங்கியிருந்தன. சரியானபடி தலைமை ஏற்று

நடத்துவதற்கு எல்லாக் கம்யூனிஸ்டுகளும் கற்க வேண்டும் என்றார் லெனின். சோவியத் கம்யூனிஸ்டுகள் தங்கள் வேலை அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி, விஷய ஞானத்துடன் சோவியத் சமூகத்தின் வளர்ச்சியை சோஷலிஸத்தை நோக்கிச் செலுத்த வேண்டும். வெளிநாட்டுத் தோழர்களோ, ''புரட்சி வேலையின் ஒழுங்கமைப்பையும் கட்டுமானத்தை யும் முறையையும் உள்ளடக்கத்தையும் மெய்யாகவே புரிந்து கொள்ளும் பொருட்டு, விசேஷ அர்த்தத்தில், கற்க வேண்டும். இவ்வாறு நடக்குமானால், உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்கள் நல்லவையாக மட்டுமே அல்ல, சிறந்தவையாகவும் இருக்கும் என்று நான் உறுதியாக நம்பு கிறேன்.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 45, பக்கம் 294).

லெனினது அறிவுரைகள்

அமானுஷீகமான வேலை நெருக்கடி யும் எஸ் ஆர் பயங்கரவாதி மாது வஞ்சகமாகச் சுட்டதால் ஏற்பட்ட காயங்களும் லெனினுடைய உடல் நலத்தை மிக மோசமாக பாதித்தன. அவர் கடுமையாக நோய்ப்பட்டார். நோயுற்ற நிலையிலேயே லெனின் அனேகக் கட்டுரைகளும் கடிதங்களும் எழுதுவித்தார். சோவியத் யூனியனியனில் சோஷலிஸத்தை நிறுவும் திட்டத்தைச் சீராக வகுப்பதே இவற்றின் விஷய மாக இருந்தது.

முழுமையான சோஷலிஸ சமூகத்தை நிறுவுவதற்கு இன்றியமையாத எல்லாம் சோவியத் நாட்டில் இருக் கின்றன. ''முக்கியமானது, நாட்டில் தொழில் பெருக்கம் செய்வது, சோஷலிஸத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத் தை அமைப்பது, தொழில் துறையை, சிறப்பாக சோஷலிஸ தேசீயப் பொருளாதாரத்தின் தலைமைத் துறை என்ற வகை யில் கனரகத் தொழில் துறையை அபிவிருத்தி செய்வதுதான். இயந்திர வசதிகளையும் மின் ஆற்றல் வசதிகளையும் பெருக்கு வதன் அடிப்படையில் தொழிலாளர்கள் உழைப்பின் உற்பத் தித் திறனை உயர்த்துவார்கள், தொழில் உற்பத்திப் பொருள் களின் அளவை வெகுவாக அதிகம் ஆக்குவார்கள். தொழில் பெருக்கம் நாட்டின் தற்காப்புத் திறனையும் சோவியத் மக் களின் அமைதி நிறைந்த உழைப்பின் பாதுகாப்பையும் வலுப் படுத்துவதற்கு நம்பகமான அடிப்படையாக விளங்கும், சமா

தானத்திற்காகவும் முதலாளித்துவ அமைப்புடன் சோஷலிஸ அமைப்பின் பொருளாதாரப் போட்டியில் வெற்றியின் பொருட்டும் விடாப்பிடியான போராட்டம் நடத்த உதவும், விவசாயம் சோஷலிஸப் பாதைக்கு மாறுவதை எளிது ஆக்கும்.

விவசாயிகளின் தனித் தனிச் சிறு பண்ணைகளைப் **பெரிய, கூட்டுறவு, கூட்டுப் பண்ணைகளாக** மாற்றி அமைக்க வேண்டும் என்று போதித்தார் லெனின். இதை தீர்க்கமாக ஆலோசித்து, ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும். விவசாயிகள் கூட்டுப் பண்ணையின் சாதகத்தைத் தாமே கண்டு புரிந்து கொண்டு, எவ்வித வலுக் கட்டாயமும் இல்லாமல் தாமாக விரும்பிக் கூட்டு அமைப்பிற்கு வந்து சேரும் வகையில் அவர்களுக்குச் சொற்களாலும் எடுத்துக்காட்டாலும் நம்பிக்கை ஊட்ட வேண்டும். தொழிலாளி வர்க்கம் விவசாயிகளுக்கு சதாகால வறுமையிலிருந்து விடுபட உதவும், கூட்டுப் பண்ணைகளுக்கு டிராக்டர்களும் விவசாய இயந்திரங்களும் வழங்கி விவசாயிகளின் கடுமையான உழைப்பை எளிதாக்கும். உழைக்கும் விவசாயிகள் புதிய, கூட்டுப்பண்ணை வழியை மேற் கொள்வது மிகவும் சிக்கலான, கடினமான காரியம். ஆனால் இவ்வாறு செய்வது இன்றியமையாதது. அப்போது தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் உற்பத்திச் சாதனங்கள் சமூக உடைமை ஆகி விடும், விவசாயத்தின் உற்பத்தித் திறன் உயரும், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் முறிக்க முடியாதது ஆகும், சோஷலிஸம் வெற்றி பெறும்.

நாட்டைத் தொழில் பெருக்கம் மிக்கது ஆக்கவும் நாட்டுப்புறத்தில் கூட்டுப் பண்ணை அமைப்பை ஏற்படுத்தவும் மக்களுடைய பண்பாட்டுத் தரத்தை வெகுவாக உயர்த்துவதும் சிறந்த தேர்ச்சி பெற்ற ஊழியர்களைப் பயிற்றுவதும் அவசியம். இதற்கு மக்கள் அனைவரும் எழுத்தறிவு பெறும் படி செய்வதும் எல்லா இடங்களிலும் தொடக்கப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் திறப்பதும் உயர் கல்வி நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் விஞ்ஞானக் கம்யூனிஸக் கொள்கைவாதத்தைத் திரளான பொதுமக்களின் உள்ளங்களில் ஆழப் பதிய வைப்பதும் தேவை. சுருங்கச் சொன்னால் **பண்பாட்டுப் புரட்சியை** நிறைவேற்றுவது தேவை.

சோஷலிஸக் கட்டுமானத்தைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு செயல்படுத்தும். தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியம் உறுதியாய் இருந்தால் சோவியத் சோஷலிஸ அரசு உறுதியாகவும் அசைக்க முடியாததாகவும் இருக்கும். எனவே கட்சி இந்த ஐக்கியத்தை இடைவிடாமல் வலுப்படுத்த வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் இந்த ஐக்கியத்தில் தலைமைப் பாத்திரம் வகிக்கும்.

தம்முடைய கடைசிக் கட்டுரைகளில் லெனின் கட்சியின் ஒற்றுமை மீது தனிப்பட்ட கவனம் செலுத்தினார். **கட்சியின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லாமல் சோஷலிஸத்தின் வெற்றியைச் சாதிக்க முடியாது** என்றார் அவர். இந்த ஒற்றுமையைக் குலைப்பவர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். கட்சி ஒற்றுமைக்கு, தலைமைவகித்து நடத்தும் கட்சி ஸ்தாபனங்களின் வேலையில் கூட்டு முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். இது கட்சித் தலைமையின் **உயரிய கோட்பாடு** ஆகும். லெனின் இந்தக் கோட்பாட்டை எப்போதும் கண்டிப்பாகக் கடைப்பிடித்தார். கட்சிக் கொள்கை குறித்த கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகளைத் தனி நபர் தீர்ப்பது அனுமதிக்கத்தகாதது என்று லெனின் கருதினார். இத்தகைய பழக்கம் கட்சியின் போக்கை, கம்யூனிஸக் கொள்கைவாதத்தைத் திரிப்பதற்குக் காரணம் ஆகக் கூடும். கட்சியின் கூட்டு அறிவுதான், அதன் மத்தியக் கமிட்டிதான் சரியான கொள்கையை வகுக்கும், இந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதில் வெற்றிக்கு வகை செய்யும்.

சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்திற்கு லெனின் தமது கடைசிக் கட்டுரைகளிலும் கடிதங்களிலும் விளக்கிய திட்டத்தின் அடிப்படை வரையறுப்புக்கள் இவை.

சோஷலிஸக் கட்டுமானத் திட்டத்தை மட்டுமே அல்ல, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக்குத் தாம் வகுத்த வழிகளையும் வேலை முறையையும் கூட லெனின் கட்சிக்கு மரபு உடைமையாக விட்டுச் சென்றார். **திரளான பொது மக்களுடன் இடையருத தொடர்பு கொண்டிருக்கும்படியும்** அவர்களுடைய மனநிலையைக் கருத்தில் கொள்ளும் படியும் மக்களின் ஆக்க அனுபவத்தை ஆராய்ந்து அறியும்படியும்

அவர்களுடைய கூட்டு அறிவைக் கிரகித்துக் கொள்ளும் படியும் திரளான பொது மக்களுக்கு போதிப்பதோடு நின்று விடாமல் அவர்களிடமிருந்து போதனை பெறும்படியும் லெனின் கட்சிக்குக் கற்பித்தார். மக்களுடன் இடைவிடாமல் பழகுவதற்குத் தாமே உதாரணமாகத் திகழ்ந்தார் அவர். தொழிற்சாலைகளுக்கும் கிராமங்களுக்கும் சென்று பார்வை யிட்டார், தொழிலாளர்களுடனும் விவசாயிகளுடனும் கலந்து உரையாடினர், அவர்களுடைய கூட்டங்களில் உரை யாற்றினர், கட்சியையும் அரசாங்கத்தையும் குறை கூறும் விமர்சனங்களைக் கூர்ந்து கேட்டு, திரளான பொது மக்களின் அரசியல் உணர்வை உயர்த்தினர்.

மக்களின் படைப்பு ஆற்றலில் அசையாத நம்பிக்கை கொண்ட புதிய, **உயர் வகை** அரசியல் தலைவரின் ஆதர்ச உருவாகத் திகழ்ந்தார் லெனின். சமூக வாழ்வில் புதுமை முளைகள் தோன்றுவதை அவர் கூர்ந்து கவனித்தார். சோஷ லிஸக் கட்டுமானத்தில் பயன்மிக்க ஒவ்வொரு முன் முயற்சி யையும் ஆதரிப்பதும் மக்களிடையே பரப்புவதும் கம்யூ னிஸ்ட் கட்சி, அரசு ஆகியவற்றின் முதல் கடமை என்று அவர் எண்ணினர்.

அதிகாரச் சடங்கு, அடிவருடித்தனம், கண் துடைப்பு, வெற்றிகளை மிகைப்படுத்தல், மக்களை ஏமாற்றுதல் ஆகிய வற்றை லெனின் அறவே வெறுத்தார். நாட்டின் பொருளா தார நிலைமை, சட்ட ஒழுங்குகள் மீறப்பட்ட நிகழ்ச்சிகள், சடங்கு பாராட்டும் அதிகாரிகளின் தான் தோன்றித்தனம், கட்சியும் அரசாங்கமும் செய்த தவறுகள் ஆகியவை பற்றித் தமக்கே உரிய நேர்மையுடன் உண்மையை மக்களுக்கு உரைத்து வந்தார் அவர். உண்மையும் உள நேர்மையும் கம்யூ னிஸ்டின் மிக முக்கியமான பண்புகள் என்று அவர் சொல்லு வார். உண்மை சில வேளைகளில் எவ்வளவுதான் கசப்பாய் இருந்தாலும் அதுதான் பற்றுக்குறைகளையும் இடர்களையும் கடக்கவும் தவறுகளைத் திருத்தவும் மக்களைத் தூண்டி ஊக்கும், மக்களிடையே கட்சியின் செல்வாக்கை வலுப்படுத் தும் என்பது அவரது கருத்து.

தம்மை ஆகாயத்தில் தூக்கி வைக்கவும், தமது தொண்டு களைப் பெரிதுபடுத்தவும் தமக்குத் துதி பாடவும் முயன்றவர்

கூட லெனினுல் சகிக்க முடிவதே இல்லே. **எளிமையும் அடக்க மூமே உருவாக** விளங்கினுர் அவர். செருக்கையும் தற்பெரு மையையும் அவர் கடுமையாக நிந்தித்தார். இம்மாதிரிக் குறைகள் உள்ளவர்களேத் தலேமைப் பதவிகளுக்கு அனு மதிக்கலாகாது என்று கோரினுர்.

லெனினது மாதிரியான தலேவனின் அடிப்படை இயல்பு கள் இவை. லெனினுடைய தலேமை வகிக்கும் முறையும் வேலே செய்யும் பாணியும் இவை.

லெனினுடைய நோய் நாளுக்கு நாள் முற்றியது. சிறந்த மருத்துவர்களின் முயற்சிகள் பயன் அளிக்கவில்லே. நாடு முழுவதும் தன் அன்புத் தலேவரின் உடல்நிலே பற்றிய தகவல் களேக் கலவரத்துடன் படித்தது. அவர் உடல் நலம் பெற வேண்டும் என்று உளமார விரும்பி வாழ்த்தித் தொழிலாளர் களும் விவசாயிகளும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அனுப்பிய தந்திகளும் கடிதங்களும் லெனினது முகவரிக்கு வந்து குவிந்தன. ஆனல் நோய் தீர்க்க இயலாததாய் இருந் தது. 1924ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ந் தேதி, **விளாதிமிர் இலியீச் லெனின் காலமானுர்** என்ற துயரச் செய்தி உலகு எங்கும் பரவியது. உலகம் முழுவதிலும் உள்ள உழைப்பாளி களே இது அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கம்யூனிஸ்ட் கட்சி யின், சோவியத் மக்களின், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலேவர் மறைந்து விட்டார். உலகின் முதலாவது சோஷலிஸ அரசின் ஸ்தாபகர், அதனுடைய முதல்வர், கம்யூனிஸத்தின் மாபெரும் சித்தாந்தகர்த்தர், மூன்ருவது, கம்யூனிஸ்ட் அகிலத்தை அமைத்தவர், காலமாகி விட்டார்.

சோவியத் மக்கள் லெனினுடைய திருமேனியைக் கடைசி முறையாக வணங்கி விடை பெறுவதற்குப் பல நாட்கள் பிடித்தன. தங்கள் மறக்க ஒண்ணுத தலேவர், ஆசான் லெனினது திருமுகத்தின் வடிவமைப்பை நெஞ்சில் நிலேயாகப் பதித்துக் கொள்ளும் ஆர்வத்துடன், அவரது உடல் வைத்திருந்த பெட் டியை நோக்கிக் கடுங் குளிரையும் மதியாமல் வெள்ளமாய்ப் பெருகிய வண்ணம் இருந்தார்கள் மக்கள்.

லெனினது உடல் அடக்கம் செய்யப்பட்ட நாள் அன்று சோவியத் நாட்டின் உழைப்பாளிகளும் பல முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளிகளும் ஐந்து நிமிடம் வேலேயை



கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்களும்
உலகனைத்தின் உழைப்பாளர்களும் லெனினுக்கு
இறுதி அஞ்சலி செலுத்துகிறார்கள்



நிறுத்திவைத்தார்கள். தலைவரிடம் விடை பெறுகையில் அவர்கள் அவருடைய செயலை இறுதிவரை நிறைவேற்றி முடிப்பதாகச் சபதம் செய்தார்கள்.

காப்புத் தைலம் பூசப்பட்ட லெனினது மேனி மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் தனியாகக் கட்டப்பட்ட சமாதியில் வைக்கப்பட்டது. இன்றளவும் உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் பிரவாகமாய் லெனினது சமாதிக்கு வந்து, மாபெரும் லெனினுக்கு அஞ்சலி செலுத்தி, உலகம் முழுவதிலும் அவருடைய வாழ்க்கை வேலை முழு வெற்றி கிடைக்கும் வரை — கம்யூனிஸம் நிலைபெறும் வரை—தொடர்ந்து நடத்தப் படும் என்று வாக்கு அளிக்கிறார்கள். லெனினது நினைவைச் சாசுவதம் ஆக்கும் பொருட்டு, மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வளர்ப்புப் பண்ணையான பெத்ரோகிராதிற்கு லெனின்கிராத் என்ற பெயர்சூட்டப்பட்டது.

அகில உலக உழைப்பாளிகளின் தலைவர், நண்பர், ஆசான்

லெனின் எப்படி உலகு அனைத்தின் உழைப்பாளிகளுடையவும் ஒடுக்கப் பட்ட மக்களுடையவும் ஒருங்கே ஏற்றுக்கொள்ளப்பட்ட, அன்புக்குரிய தலைவர் ஆனார்? லெனினுடைய பெயர் எல்லா நாடுகளையும் கண்டங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளின் போராட்டப் பதாகை ஆனது ஏன்?

இதற்குக் காரணம் என்ன என்றால் லெனின் உழைப்பாளி மக்களுக்கே தம்மை முழுமையாக அர்ப்பணித்து விட்டதையும் அவர்களுடைய நலன்களைத் துணிவுடன் காத்துப் போராடியதையும் அவர்களுக்காகவே வாழ்ந்து அவர்களது இன்பத்தையே நாடியதையும் உலகு எங்கும் உள்ள உழைப்பாளிகளும் ஒடுக்கப்பட்ட மக்களும் கண்டதுதான். ஒடுக்குமுறையின் எல்லா வடிவங்களையும் ஒழிப்பதற்கும் அநீதி நிறைந்த ஒடுக்குவோர் சமூகத்தின் இடத்தில் நியாயம் வாய்ந்த கம்யூனிஸ சமூகத்தை நிறுவுவதற்குமே அவர் தமது மேதையையும் வற்றாத ஆற்றலையும் ஈடுபடுத்தினார். ஒடுக்கப்பட்டு, துன்பத்தில் உழன்ற திரளான மக்கள் சுரண்டலிலிருந்து விடுபடுவது பற்றிப் பல நூற்றாண்டுகளாகக் கனவு கண்டு வந்தார்கள். இந்த விடுதலைக்கு அடிகோலியது லெனினது கட்சியின் தலைமையில் ரஷ்யாவில் நிறைவேறிய மாபெரும் அக்டோபர்

சோஷலிஸப் புரட்சி. மனிதகுல வரலாற்றிலேயே முதன் முதலாக உழைப்பாளி மக்கள் சுரண்டுவோரை ஆட்சி யிலிருந்து அகற்றிவிட்டு, தங்கள் விதியைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, தாங்களே அரசை நிர்வகிக்கவும் புதிய, இன்ப வாழ்வை நிறுவவும் தொடங்கி இருந்தார்கள். பூமி யின் ஆறில் ஒரு பாகத்தில் செம்பதாகை வீசிப் பறந்தது, சோஷலிஸக் கலங்கரை விளக்கு ஒளி வீசலாயிற்று. சுரண்டும் வர்க்கங்களே ஆட்சியிலிருந்து அகற்றியதும் வரலாற்றிலேயே முதலாவது பாட்டாளி வர்க்க அரசை நிறுவியதும் அதில் தொழிலாளர்களும் விவசாயிகளும் சோஷலிஸத்தையும் கம் யூனிஸத்தையும் கட்டி அமைக்கும் பணியில் ஈடுபட வைத்த தும் லெனினது வாழ்க்கையினதும் செயலினதும் முக்கியப் பணி ஆகும்.

லெனினுடைய தலைமையின் கீழ் ருஷ்யாவில் தொழி லாளர்களின் நிலைமை அடிப்படையில் மாறிவிட்டதை உலகம் அனைத்திலும் உள்ள பாட்டாளிகள் கண்டார்கள். ருஷ்யா வின் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவச் சுரண்டல் நுகத்தை உடைத்து எறிந்துவிட்டு, ஆளும் வர்க்கம் ஆகிவிட்டது. வரலாற்றிலேயே முதன் முறையாக சோவியத் நாட்டில் எட்டு மணி நேர வேலை நாள் சட்டத்தால் நிலைநாட்டப் பட்டது. தொழிற்சாலைகளும் ஆலைகளும் முதலாளிகளிட மிருந்து பறித்துக் கொள்ளப்பட்டு மக்கள் அனைவரதும் உடைமை ஆக்கப்பட்டன. தொழிலாளர்கள் தாங்களே அரசை நிர்வகிக்கலானார்கள். உலகம் முழுவதின் தொழிலாளி வர்க்கத்தினதும் இந்தக் கனவுகள் ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தால் நனவு ஆக்கப்பட்டன. தோன்றியது முதலே லெனினால் தலைமை ஏற்று நடத்தப் பெற்ற சோவியத் அரசை எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி மக்கள் தங்கள் தாயகமாகக் கருதத் தொடங்கினர்கள்.

உலகம் முழுவதன் உழைக்கும் விவசாயிகளும் தங்கள் பல நூற்றாண்டுக் கால மனோரதம் சோவியத் நாட்டில் பலித் திருப்பதைக் கண்டார்கள். லெனினதும் அவரது தலைமையில் இயங்கிய கட்சியினதும் அழைப்பை ஏற்று ருஷ்யாவின் உழைக்கும் விவசாயிகள் தொழிலாளர்களுடன் ஐக்கியம் ஏற்படுத்திக் கொண்டு நிலப்பிரபுக்களின் ஒடுக்குமுறை யிலிருந்து என்றென்றைக்கும் விடுபட்டு, சொந்த நிலமும்

அரசியல் சுதந்திரமும் பெற்றுர்கள். நாட்டின் அரசை நிர்வகிக்க அவர்கள் பழகிவிட்டார்கள். நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையிலிருந்தும் முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்தும் விடுபெறவும் வறுமையிலும் அறியாமையிலும் கல்வி இன்மையிலும் இருந்து மீளவும் ஒரே சரியான வழியைத் தங்களுக்குக் காட்டியதற்காக உலகின் உழைக்கும் விவசாயிகள் எல்லோரும் லெனின்மீது ஆழ்ந்த அன்பு செலுத்தினர்கள்.

நாட்டின, மனித இன அடையாளங்களின் அடிப்படையில் மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப்படுவதும் நாட்டின ஒடுக்கு முறையும் வரலாற்றிலேயே முதன் முதலாக சோவியத் நாட்டில் லெனினது மூதறிவு ஆர்ந்த தலைமையின் கீழ் அறவே அகற்றி ஒழிக்கப்பட்டுவிட்டதை ஏகாதிபத்தியத்தால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த காலனிகள், ஆதீன நாடுகளின் மக்கள் கண்கூடாகக் கண்டார்கள். எண்ணிக்கையில் பெரியவையும் சிறியவையும் பின்தங்கியவையும் முன்னேறியவையும் ஆன எல்லா மக்கள் இனங்களும் சோவியத் யூனியனில் உண்மையான சமத்துவம் பெற்றிருப்பதையும், ருஷ்யாவில் வசிக்கும் மக்கள் இனங்களிடையே நிலவி வந்த பரஸ்பர அவநம்பிக்கையும் பகைமையும், நெருங்கிய நட்பும் சோஷலிஸ நிர்மாணத்தில் சோதர ஒத்துழைப்புமாக மாறி இருப்பதையும் அவர்கள் கண்டார்கள். ஏகாதிபத்தியவாதிகளாலும் காலனி ஆட்சியாளர்களாலும் பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க மக்கள் இனங்களுக்கு, சோவியத் நாட்டில் முன்பு பின்தங்கி இருந்த மக்கள் இனங்கள் லெனின் வகுத்த வழியில் முதலாளித்துவத்தைத் தாண்டி சோஷலிஸத்துக்குப் பரிணமித்தது மிகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. காலனி ஆட்சி உலகைச் சேர்ந்த கோடிக் கணக்கான உழைப்பாளி மக்கள் தங்கள் கனவுகள் சோவியத் யூனியனில் நனவு ஆகியிருப்பதைக் கண்டார்கள். காலனி ஆட்சி அடிமைத்தனத்திலிருந்தும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்தும் விடுபடும் வழியை, விடுதலையும் முன்னேற்றமும் பெறும் வழியைத் தங்களுக்குக் காட்டிய லெனின் மீது உளமார்ந்த பேரன்பை அவர்கள் வெளியிட்டார்கள்.

முற்போக்குள்ள மனித சமூகம் அனைத்தும், முக்கியமாக உழைப்பாளிகள் அனைவரும், மக்கள் இனங்களுக்கிடையே சமாதானத்தின் பொருட்டும் நாடுபிடிக்கும் யுத்தங்களை ஒழிக்கும் பொருட்டும் லெனின் நடத்திய விடாப்பிடியான போராட்டத்தை வெகுவாக மதித்தார்கள். லெனின் தாமே எழுதிய சமாதானம் பற்றிய புகழ் பெற்ற ஆணைப் பத்திரத்தை —சோவியத் ஆட்சியின் முதல் அரசாணையை—பிரகடனம் செய்தார், 1914—1918ல் நடந்த ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து நாட்டைக் கரையேற்றினார், அந்த யுத்தத்தை நிறுத்துவதில், லட்சோப லட்சம் மனிதர்களை அழிவிலிருந்து காப்பதில், ஒத்துழைத்தார். வெவ்வேறு சமூக அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை அவர் பிரகடனம் செய்து, முதலாளித்துவ நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் அதை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய விடாப்பிடியாக முயன்றார். லெனினது இந்தக் கோட்பாடு சோவியத் அரசின் அமைதி விரும்பும் வெளிநாட்டுக் கொள்கையின் அசைக்க முடியாத அடிப்படையாக அமைந்தது.

மனிதகுலத்தின் எல்லா உழைப்பாளிகளும் முற்போக்காளர்களும் லெனின் ஆழ்ந்த, ஒத்திசைந்த சர்வதேசீயவாதி என்பதையும் இனவெறியின் சமரசமற்ற பகைவர் என்பதையும் கண்டார்கள். தாமும் கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளி வர்க்கமும் சோவியத் மக்கள் அனைவருமே சோவியத் நாட்டில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின், உலகில் ஒடுக்கப்பட்டவர்கள், அடிமைப்பட்டவர்கள் அனைவரதும் குறிக்கோளுக்காகவே பாடுபடுகிறார்கள் என்பதை லெனின் பலமுறை அறிவித்தார், செயலிலும் காட்டினார். அவரது தலைமையில் வெற்றி பெற்ற அக்டோபர் புரட்சி, விரைவிலோ தாமதித்தோ வெற்றி பெறப்போகிற உலக சோஷலிஸப் புரட்சியின் தொடக்கமாகவே விளங்கியது. எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளிகளையும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களையும் ஏகாதிபத்தியத்துக்கும் காலனி ஆட்சிக்கும் எதிராக, ஜனநாயகத்துக்காகவும் தேசீய விடுதலையின் பொருட்டும் போராடுவோரின் ஆற்றல் மிக்க ஒரே சேனையாக ஒன்று இணைப்பது லெனினுக்கு வாழ்க்கையின் ஆக உயர்ந்த லட்சிய

மாக இருந்தது. உலகில் முதன்மையான புரட்சிச் சக்தியாக விளங்குவது சர்வதேசப் பாட்டாளி வர்க்கமே என்று அவர் விளக்கினர். தன்னைச் சுற்றி எல்லா உழைப்பாளிகளையும் ஒன்று திரட்டி, சோஷலிஸப் புரட்சியை நிறைவேற்றி, ஏகாதிபத்திய பூர்ஷ்வா வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்ற வல்லது பாட்டாளி வர்க்கம் மட்டுமே. பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராகத் தனது புரட்சிப் போராட்டத்திலும்ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களின் விடுதலை இயக்கத்துக்கு உறுதியாக ஆதரவு அளிப்பதாலும் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் தனது சர்வதேசீயக் கடமையை நிறைவேற்றும் என்று போதித்தார் லெனின். மறு புறம், ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்கள் பாட்டாளி வர்க்கத் தின் கூட்டாளிகள். இந்த ஐக்கியம் எவ்வளவு நெருக்கமாய் இருக்கிறதோ, பொதுப் பகைவனான ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் அவ்வளவே வெற்றிகரமாக இருக் கும். முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கமும் காலனிகளையும் ஆதீன நாடுகளையும் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களும் சோவியத் நாட்டைச் சுற்றிலும் ஒன்று திரள்வதன் அடிப்படையிலேயே ஏகாதிபத்தியத்தையும் காலனி ஆட்சியையும் முறியடிப்பது சாத்தியம் ஆகும். **இவ்வாறு போதித்தார் லெனின்.**

உலகம் முழுவதையும் சேர்ந்த பாட்டாளிகளும் ஒடுக் கப்பட்டவர்களும் ஒருமுகமாக ஏற்றுக்கொண்ட **தலைவராக வும்** அவர்களுடைய **நண்பராகவும் ஆசிரியராகவும்** திகழ்ந்தார் லெனின்.

கார்ல் மார்க்ஸ், ஃபிரீட்ரிஹ் எங்கெல்ஸ் இருவரதும் போதனையையும் செயலையும் மேதா விலாசத்துடன் தொடர்ந்து நடத்தியவரான லெனினுடைய வாழ்க்கையும் செயல்களும் தற்கால உலக வரலாற்றுப் போக்கு அனைத்தின் மீதும் பெருத்த பாதிப்பு நிகழ்த்தின, நிகழ்த்தி வருகின்றன.

விளாதீமிர் இலியீச் லெனினது நூறுவது பிறந்த நாள் விழாவை ஒட்டி சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் ஆய்வுரையில் பின்வருமாறு கூறப்பட் டிருக்கிறது:

''லெனினது வாழ்க்கை ஒரு சாதனையாகும். படைப்புத் தன்மை கொண்ட சிந்தனைச் செயலிலும் ஓய்வற்ற புரட்சி நடவடிக்கைகளிலும் கொள்கைவாத, அரசியல் போராட்டங்களிலும் கழிந்ததாகும் இந்த வாழ்க்கை. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரருக்கு உரிய எல்லாச் சிறந்த பண்புகளும் உருவாகத் திகழ்ந்தார் லெனின். இவையாவன: பேரறிவு, எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும் சித்த சக்தி, அடிமைத் தனத்தின் பாலும் ஒடுக்குமுறையின் மீதும் புனிதமான வெறுப்பு, புரட்சி ஆவேசம், ஒத்திசைந்த சர்வதேசீயம், திரளான பொது மக்களின் படைப்பு ஆற்றலில் எல்லையற்ற நம்பிக்கை, மிகப் பெரிய ஒழுங்கமைப்பு மேதை.''

லெனின் பெயரால் கட்சியில் அழைப்பு

லெனினது மறைவு கட்சிக்குப் பேரிழப்பாக இருந்தது. ஆயினும் அதனால் கட்சியின் அணிகளில் பகைவர்கள் எதிர்பார்த்தது போல் குழப்பம் ஏற்படவில்லை. வெற்றி சூடிய லெனினது பதாகையை மையமாகக் கொண்டு முன்னிலும் ஒற்றுமையாக அணிதிரண்டது கட்சி. லெனின் கட்சிக்கு லெனினீயம் என்னும் பெருஞ் செல்வத்தை மரபுரிமையாக விட்டுச் சென்றிருந்தார். கட்சிக்கும் சோவியத் மக்களுக்கும் சோவியத் நாட்டில் சோஷலிஸத்தை நிறுவுவதற்கான மேதை வாய்ந்த திட்டத்தை அளித்து வலுவூட்டியிருந்தார். சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்குமோ, ஏகாதிபத்தியத்தின்மீது இறுதி வெற்றி அடைவோம் என்ற நம்பிக்கையை அவர் உறுதிப்படுத்தி இருந்தார்.

லெனினது மறைவினால் ஏற்பட்ட உணர்ச்சியைத் தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் கட்சியை மேலும் வலுப்படுத்தியதன் வாயிலாகவும் அதில் உறுப்பினராகச் சேர்ந்ததன் மூலமும் காட்டிக் கொண்டது. 1924ம் ஆண்டின் முதல் பாதியில் தொழிற்சாலைகளிலிருந்து 240 ஆயிரத்துக்கும் மேல் தொழிலாளர்கள் கட்சியில் சேர்ந்தார்கள். இவ்வளவு பெருந் திரளானவர்கள் கட்சியில் சேர்ந்தது அதற்கு முன் நிகழ்ந்ததே இல்லை. லெனின் பெயரால் கட்சியில் சேரும் அழைப்பாக விளங்கியது இது. இவ்வாறு கட்சியின் அணிகளை நிறைத்தவர்கள் யாவரிலும் அரசியல் உணர்வு மிக்க முன்னணித்

லெனின் பெயரால் கட்சியில் சேர்தல். கூட்டத்தில் தொழிலாளர்கள் தங்கள் தோழரை லெனினது கட்சியில் சேர்த்துக் கொள்ளும்படி பரிந்துரைக்கிறார்கள்

தொழிலாளர்கள்—அக்டோபர் புரட்சியில் ஊக்கத்துடன் பங்கு கொண்டவர்கள், உள்நாட்டுப் போரும் அன்னியத் தலையீடும் நடந்த ஆண்டுகளில் சோவியத் ஆட்சியை வீரத்துடன் காத்துப் போரிட்டவர்கள், நாட்டின் தொழில் துறையையும் தேசீயப் பொருளாதாரத்தையும் தங்கள் கைகளால் மீட்டமைத்தவர்கள். இவர்கள் சேர்ந்ததால் கட்சியின் பாட்டாளி வர்க்க உட்கரு வலுவடைந்தது. நிலையுறுதி வாய்ந்த மார்க்ஸீய-லெனினீயக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு இது பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது.

1923 ஏப்ரல் மாதம் நடந்த கட்சியின் பன்னிரண்டாவது காங்கிரஸுக்கும் 1924 மே மாதம் கூடிய பதின்மூன்றுவது காங்கிரஸுக்கும் இடைப்பட்ட ஓர் ஆண்டில் கட்சியின் உறுப்பினர் தொகை இரு மடங்குக்கும் மேல் அதிகரித்தது. புதிய உறுப்பினரில் பெரும்பாலானவர்கள் உற்பத்தித் தொழிலாளர்கள். திரளான தொழிலாளர்களிடையே லெனினது கட்சி

யின் செல்வாக்கு வளர்ந்திருந்ததை இது பளிச்சென எடுத்துக் காட்டியது.

பதின்மூன்றாவது காங்கிரஸ் லெனினது மறைவுக்குப் பின்னர் நடந்த முதலாவது கட்சிக் காங்கிரஸ் ஆகும். லெனினுடைய அறிவுரைகளை நிறைவேற்றுவதையே முழு நோக்கமாகக் கொண்டு நடந்தேறியது இது.

கட்சியின் அணிகளை வலுப்படுத்துவதிலும் சோவியத் அரசில் அதன் தலைமைப் பாத்திரத்தை மேலும் உயர்த்துவ திலும் காங்கிரஸ் ஆழ்ந்த கவனம் செலுத்தியது. லட்சக் கணக்கான முன்னணித் தொழிலாளர்கள் திரள் திரளாகக் கட்சியில் சேர்ந்தது இதற்குக் கணிசமான அளவு உதவிற்று. கட்சியில் கருத்துப் பயிற்சி வேலையைத் தீவிரமாக்குவதையும் இளம் கம்யூனிஸ்டுகளுக்கு லெனினுடைய கருத்துக்களை போதித்து வலுவேற்றுவதையும் கட்சி, அரசுக் காரியங் களிலும் பொருளாதார, பண்பாட்டுக் கட்டுமானத்திலும் அவர்களை விரைவாக ஊக்கத்துடன் ஈடுபடச் செய்வதையும் காங்கிரஸ் உடனடி லட்சியமாகக் கொண்டது. வேலை செய் வதில் லெனினுடைய பாணியையும் முறைகளையும் விடாப் பிடியாகப் பயின்று தேரும்படி எல்லாக் கம்யூனிஸ்டுகளுக்கும் அது வேண்டுகோள் விடுத்தது.

போல்ஷிவிக்குகளுக்கு உரிய எஃகுக் கட்டுப்பாட்டை லெனின் காலத்தில் போலவே உறுதியுடனும் திடமாகவும் வலுப் படுத்தும் படியும் கட்சியின் ஒற்றுமையையும் ஒத்திசைந்த கட்சிக் கொள்கையையும் போற்றிக் காக்கும்படியும் உட் குழுக்கள் தலையெடுப்பதை முளையிலேயே கண்டிப்பாகக் கிள்ளி விடும்படியும் கட்சியின் மத்தியக் கமிட்டிக்குக் காங்கிரஸ் பொறுப்பு அளித்தது. ''லெனினீயத்தின் அசைக்க முடியாத கோட்பாடுகளின் அடிப்படையில் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி யின் உறுதியும் திண்மை வாய்ந்த ஒற்றுமையும் புரட்சியின் அடுத்து வரும் வெற்றிகளுக்கு மிக முக்கியமான முதனிலை ஆகும்'' என்று காங்கிரஸின் தீர்மானத்தில் கூறப்பட்டது.

தம் வாழ்வின் கடைசி ஆண்டில், கட்சியின் போராட்டத் திறனை உயர்த்துவதையும் அதன் எல்லா ஸ்தாபனங்களதும், சிறப்பாக மத்தியக் கமிட்டியினுடைய வேலை ஒற்றுமையாகச் சீருற நடப்பதையும் பற்றி லெனின் விசேஷக் கவலை எடுத்துக்

கொண்டார். தனது பெரிய , பயனுள்ள வேலையின் விளைவாக மத்தியக் கமிட்டி மிகுந்த செல்வாக்குள்ள உறுப்பாக மாறி விட்டது என்றும் இந்தச் செல்வாக்கை எல்லா விதத்திலும் ஆதரிப்பதும் வலுப்படுத்துவதும் அவசியம் என்றும் அவர் குறித்தார். மத்தியக் கமிட்டியில் சச்சரவுகள் அனுமதிக்கத் தகாதவை என்றும், அவை கட்சியில் பிளவு ஏற்படுத்தவும் பாட்டாளி வர்க்க அரசின் வாழ்வுக்கே ஆபத்து விளைவிக்க வும் கூடும் என்றும் லெனின் சுட்டிக் காட்டினார்.

கட்சியின் பதின்மூன்றாவது காங்கிரஸ் லெனினது அறி வுரையைச் செயல்படுத்தி, வட்டாரக் கட்சி ஸ்தாபனங்களில் வேலை செய்து வந்த பல கட்சி ஊழியர்களை மத்தியக் கமிட் டிக்குத் தேர்ந்தெடுத்து மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகமாக்கிற்று. அதே சமயம், மையக் கண்காணிப்புக் குழுவில் தொழிற்சாலைத் தொழிலாளர் களைச் சேர்த்து அதையும் வலுப்படுத்தியது. கட்சியின் ஒற்று மையை பலப்படுத்துவதும் கட்சியின் அணிகளைப் பலவீனப் படுத்தும் முயற்சிகள் எங்கிருந்து தோன்றினாலும் அவற்றை முறிப்பதும் மையக் கண்காணிப்புக் குழுவின் முக்கியக் கட மைகளில் ஒன்றாக இருந்தது. காங்கிரஸின் தீர்மானங்களில் கட்சியின் செல்வாக்கைப் பலப்படுத்தி சோவியத் அரசில் அதன் தலைமைப் பாத்திரத்தை உயர்த்தும் அக்கறையே நெடுக இழையோடி இருந்தது.

நாட்டில் தொழில் பெருக்கம்

கம்யூனிஸ்ட் கட்சி லெனினுடைய அறிவுரைகளைச் செயல்படுத்துவதில் சோவியத் மக்களின் முயற்சிகளையும் சக்தியையும் ஈடுபடுத்தியது. புதிய பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதன் பயனாக தேசீயப் பொருளாதாரம் 1925ம் ஆண்டின் முடிவுக்குள் யுத்தத்துக்கு முந்திய, 1913ம் ஆண்டின் தரத்தை எட்டியது. விவசாய விளைபொருள்களின் உற்பத்தி அனேகமாக யுத்தத்துக்கு முந்திய அளவுக்கு வந்து விட்டது. விவசாயிகள் கிட்டத்தட்ட யுத்தத்துக்கு முந்திய அளவு நிலத்தில் பயிர் செய்தார்கள். பெருத்த தொழில் துறையும் கணிசமாக முன்னேற்றம் அடைந்தது. யுத்தத் துக்கு முந்திய அளவில் முக்கால் பங்குப் பொருள்களை அது உற்பத்தி செய்தது. அரசு, கூட்டுறவுத் தொழிற்சாலைகள்

இவற்றில் ஐந்தில் நான்கு பங்கும் தனியார் தொழிற்சாலைகள் ஐந்தில் ஒரு பங்கும் உற்பத்தி செய்தன. உள்நாட்டு வர்த்தகப் பரிமாற்றம் யுத்தத்துக்கு முந்திய அளவில் சுமார் முக்கால் பங்காக இருந்தது. இதில் பாதி அரசின் பங்கு, கூட்டுறவு நிலையங்கள் தனியார் நிலையங்கள் ஆகியவற்றின் பங்கு தலைக்குக் கால் வாசி. மொத்த வியாபாரம் முழுவதும் அரசின் கைகளில் இருந்தது.

உழைப்பாளிகளின் பொருள் நிலை கணிசமாக மேம்பட்டது. தொழிலாளர்களின் எதார்த்த ஊதியம் யுத்தத்துக்கு முன்பை விட அதிகமாய் இருந்தது. விவசாயிகள் முன்பை விடச் சிறந்த உணவு உண்டார்கள், தொழில் உற்பத்திப் பொருள்களை அதிக அளவில் வாங்கினார்கள். மக்களின் பண்பாட்டுத் தரம் உயர்ந்தது. செய்தித் தாள்களும் சஞ்சிகைகளும் அதிக எண்ணிக்கையில் வெளி வந்தன. பள்ளிகள், நாடக, நடன மன்றங்கள், பண்பாட்டுக் கழகங்கள், வாசகசாலைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரித்தது. கிராமங்களில் வானொலியும் திரைப்பட மன்றங்களும் அமைக்கப்பட்டன.

சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் நிலை உறுதிப்பட்டது. சோவியத் யூனியனுடன் தூதரக, வர்த்தக உறவுகள் வைத்துக் கொண்ட முதலாளித்துவ நாடுகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்தது.

லெனினது கட்சியின் தலைமையில் சோவியத் மக்கள் சோஷலிஸத்தை நோக்கி இடைவிடாது முன்னேறினார்கள். இந்த இயக்கத்தை விரைவுபடுத்துவது அவசியமாய் இருந்தது.

1925 டிசம்பரில் கட்சியின் பதினான்காவது காங்கிரஸ் கூடியது. நாட்டில் தொழில் பெருக்கம் செய்வதற்கான லெனினது திட்டத்தைச் செயல்படுத்துவது என்று காங்கிரஸ் முடிவு செய்தது. இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்யும் நாட்டிலிருந்து அவற்றை உற்பத்தி செய்யும் நாடாக சோவியத் யூனியனை மாற்றுவது, தேசீயப் பொருளாதாரத்திற்கு நவீன இயந்திரங்களை வழங்குவது, சோவியத் யூனியனின் பொருளாதாரத் தற்சார்பிற்கும் முதலாளித்துவ நாடுகளிலிருந்து அதன் சுதந்திரத்திற்கும் வகை செய்வது என்று இது அர்த்தப்பட்டது. நாட்டில் தொழில் பெருக்கம்

செய்வது கட்சியின் பொதுக் கொள்கைப் போக்கு ஆயிற்று. காங்கிரஸ், கட்சியின் பெயரை அகில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சி என்று மாற்றி வைத்தது.

கம்யூனிஸ்டுகள் தொழில் பெருக்கம் செய்யும் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டார்கள். ஆயிரமாயிரம் புதிய ஆலைகளும் தொழிற்சாலைகளும் கட்டுவதும் பழையவற்றில் புதிய தொழில் நுட்ப அடிப்படையில் புதிய இயந்திர வசதிகளை நிறுவுவதும் சோஷலிஸத்தின் பொருளியல் தொழில் நுட்ப அடித்தளத்தை அமைப்பதும் தேவைப்பட்டன. கனரக இயந்திரத் தொழிலையும் இயந்திர நிர்மாணத் தொழிலையும் அபிவிருத்தி செய்வதில் முதன்மையாகக் கவனம் செலுத்தப்பட்டது. அடுத்த எல்லா வெற்றிகளுக்கும் ஆணிவேராக விளங்கியது இதுவே. நாட்டின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, விவசாயிகளின் பண்ணைகளை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பது, சோவியத் யூனியனின் தற்காப்பு விறலை வலுப்படுத்துவது, மக்களின் நலவாழ்வை ஏற்றம் பெறச் செய்வது ஆகிய எல்லாவற்றுக்கும் கனரகத் தொழிலின் வளர்ச்சி இன்றியமையாததாக இருந்தது. வளர்ச்சி குன்றிய அல்லது அறவே இல்லாதிருந்த அனேக புதிய தொழில் கிளைகளைத் தொடங்க வேண்டியிருந்தது. இயந்திர நிர்மாணத் தொழில், கடைச்சல் பட்டடை நிர்மாணத் தொழில், மின்சார இயந்திரத் தொழில், விமான நிர்மாணத் தொழில், மோட்டார்-லாரி நிர்மாணத் தொழில், இரசாயனத் தொழில், தற்காப்பு சாதனத் தொழில், டிராக்டர் நிர்மாணத் தொழில், அறுவடைக் கம்பைன் நிர்மாணத் தொழில் ஆகியவை இவை.

புதிய நிர்மாண வேலைக்குப் பெருந்தொகையான நிதி வளம் தேவைப்பட்டது. அதைப் பெறுவது அவசியமாய் இருந்தது. இயந்திரப் பெருக்கத்திற்கு ஏற்பட்ட மிகக் கடினமான இடர்ப்பாடு இதுவே. அன்னிய முதலாளிகள் சோவியத் யூனியனுக்குக் கடன்கள் கொடுக்க விரும்பவில்லை. இயந்திரப் பெருக்கத்துக்குத் தேவைப்பட்ட நிதி வசதிகள் நாட்டிற்கு உள்ளேயே தேடித் திரட்டப்பட்டன. தொழில் துறையிலும் வெளிநாட்டு, உள்நாட்டு வர்தகத்திலும் இருப்புப் பாதை,

நீர்வழிப் போக்குவரத்திலும் கிடைத்த லாபங்கள் எல்லாம், வருவாய்க்கு உரிய சாதனங்கள் அனைத்தும், கனரக இயந்திரத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப் பட்டன. எல்லாவற்றிலும் மிகக் கண்டிப்பான சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டது. பழைய ஆட்சி வாங்கியிருந்த கடன் கள் ரத்து செய்யப்பட்டன. எனவே, அவற்றுக்கு வட்டியாக ஆண்டுதோறும் 80—90 கோடி ரூபிள்கள் தங்கமாகச் செலுத்தும் கட்டாயத்திலிருந்து நாடு விடுபட்டுவிட்டது. இதுவும் தொழில் பெருக்கத்துக்குத் தேவையான நிதிவசதிகள் நாட்டுக்கு உள்ளேயே திரட்டப்பட உதவிற்று. நிதிவசதிகளில் ஒரு பகுதியை மக்கள், சிறப்பாக விவசாயிகள், வரிகளின் வடிவில் கொடுத்தார்கள். குத்தகைக்காகவும் நிலம் வாங்கியதற்காகவும் நிலப்பிரபுக்களுக்குப் பெருந் தொகையான பணம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து விவசாயிகள் விடுபட்டு விட்டமையால் நாட்டில் தொழில் பெருக்கம் செய்வதற்கு உதவ அவர்களால் முடிந்தது. மேற் கொண்டு உள்நாட்டுக் கடன் பத்திரங்களையும் சோவியத் யூனியன் வெளியிட்டது. மக்களால் இவை பெரிதும் விரும்பி வாங்கப்பட்டன.

சோவியத் அரசாங்கம் 1926ம் ஆண்டிலேயே தொழில் துறையில் சுமார் 100 கோடி ரூபிள்கள் முதலீடு செய்தது. 1929ம் ஆண்டிலோ இந்தத் தொகை 500 கோடியாக உயர்ந்தது. ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலுமாக புதுக் கட்டுமான ஸ்தலங்களிலும் வேலை மும்முரமாக நடந்தது. இயந்திரங்களும் உபகரணங்களும் போதவில்லை. ஆயினும் சோஷலிஸக் கருத்தால் உத்வேகம் ஊட்டப் பெற்ற தொழிலாளர்கள் அற்புதம் நிகழ்த்தினார்கள். தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வேகம் முதலாளித்துவ நாடுகளில் இருந்ததை விட அதிகமாய் இருந்தது.

திரோத்ஸ்கிவாதத்தின் படு தோல்வி

சோஷலிஸத் தொழில் பெருக்க அனுபவம் இன்னும் இல்லாததாலும் தொழில்துறை ஊழியர்கள், சிறப்பாகப் பொறி இயலாரும் தொழில்நுட்ப நிபுணர்களும் போதாமையாலும் மேற்கொண்டு இடர்ப்பாடுகள் நேர்ந்தன. புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் உயிர்த்து எழுந்

திருந்த பூர்ஷ்வாப் போக்குள்ள நபர்கள் தொழில் பெருக்கத் துக்கு உலை வைக்க முயன்றார்கள். நம்பிக்கை குறைந்தவர் களும் சரணாகதிவாதிகளும் கட்சியில் மீண்டும் செயல்படத் தொடங்கினர்கள். கட்சியின் கொள்கைப் போக்கை எதிர்த் தார் திரோத்ஸ்கி.

சோஷலிஸத்தைத் தனியான ஒரு நாட்டில் நிறுவுவது சாத்தியம் என்ற அடிப்படையான விஷயத்தில் திரோத்ஸ்கி லெனினிடமும் கட்சியிடமும் இருந்து கருத்து வேறுபாடு கொண்டிருந்தார். முக்கியமான மேற்கு நாடுகளில் முதலா ளித்துவம் ஆட்சியிலிருந்து அகற்றப்படும் முன்பே சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிறுவுவது சாத்தியம் என் பதைத் திரோத்ஸ்கியும் அவரை ஒத்த கருத்து உள்ளவர் களும் மறுத்தார்கள். சோவியத் நாடு தன் பின்தங்கிய நிலை காரணமாக சோஷலிஸக் கட்டுமானத்துக்கு வேண்டிய பக்குவம் பெறவில்லை என்றும், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளி வர்க்கம் ஆட்சியைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு சோவியத் தொழிலாளர்களுக்கு அரசாங்க உதவி அளிக்கும் போதுதான் சோஷலிஸத்தை நிறுவ முடியும் என் றும் அவர்கள் சொன்னார்கள். தன் நாட்டில் உள்ள முதலாளித் துவப் போக்கு உள்ள நபர்களை ஒழிப்பதற்கு சோவியத் தொழிலாளி வர்க்கத்திடம் போதுமான வலிமை இல்லை என்று திரோத்ஸ்கி வலிந்துரைத்தார். விவசாயிகளுடன் தொழி லாளிகளின் ஐக்கியத்தில் திரோத்ஸ்கி ஒரு போதுமே நம் பிக்கை கொள்ளவில்லை. விவசாயிகளை அவர் புரட்சி எதிர்ப்புச் சக்தியாக எண்ணினார். அவர்கள் தொழிலாளி வர்க்கத் துடன் கட்டாயமாக மோதிக் கொள்வார்கள் என்றும் பாட் டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்ப்பார்கள் என்றும் கருதினார்.

சோவியத் நாடு சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்த ஒவ்வொரு தடவையும் திரோத்ஸ்கி கட்சிமீது தாக்குதலை மீண்டும் தொடுத்தார், அதைப் பிளவுபடுத்த முயன்றார். 1923சரத்காலத்தில் தொழில் உற்பத்திப் பொருள் களின் விற்பனையில் நாட்டில் சங்கடங்கள் ஏற்பட்டன. இவற் றின் விளைவாக மக்களிடையே ஓரளவு அதிருப்தி தோன்றி யது. இந்தச் சங்கடங்களையும் லெனின் கடும் நோயுற்றிருந்

தையும் பயன்படுத்திக் கொண்டு திரோத்ஸ்கி தாம் உறுப்பினராய் இருந்த கட்சி மத்தியக் கமிட்டிமீது அது நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்வதாகக் குற்றம் சாட்டத் தொடங்கினார்.

தொழில் உற்பத்திப் பொருள்களின் விலைகளைக் குறைக்கும் கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிர்நிலையாக அவற்றை உயர்த்தும்படி திரோத்ஸ்கி யோசனை கூறினார். இவ்வாறு செய்வது மக்களின், சிறப்பாக விவசாயிகளின் அதிருப்தியை இன்னும் அதிகமாக்கும் என்பதை அவர் பொருட்படுத்தவில்லை. இத்தகைய கொள்கை பாட்டாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஐக்கியத்தைப் பிளவுபடுத்தியிருக்கும், சோவியத் அரசு நிலை குலையும் அபாயத்தை ஏற்படுத்தியிருக்கும். எனவே கட்சி திரோத்ஸ்கியின் யோசனைகளை நிராகரித்து, சரக்குகளின் விலைகளை முறைப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது. விளைவாக, திரளான பொது மக்கள் மிக விரைவில் அமைதி அடைந்தார்கள்.

கட்சித் தலைமை சந்தர்ப்பவாதத்துக்கு இழிந்துவிட்டதாகத் திரோத்ஸ்கி குற்றம் சாட்டினார். லெனினது ஊழியர்களை இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதித் தலைவர்களுடன் அவர் ஒப்பிட்டார். கட்சி திரோத்ஸ்கியையும் அவருடைய கூட்டாளிகளையும் உறுதியாக எதிர்த்துத் தாக்கியது. திரோத்ஸ்கிவாதம் லெனினீயத்திலிருந்து நேரான விலக்கம் மட்டும் அல்ல, பகிரங்கமான குட்டி பூர்ஷ்வாப் பிறழ்ச்சியும் ஆகும் என்று அது சுட்டிக் காட்டியது. திரோத்ஸ்கியின் ஒழுங்கைக் குலைக்கும் நடவடிக்கைகளை 1924 மே மாதம் கூடிய பதின்மூன்றுவது கட்சிக் காங்கிரஸும் அதே ஆண்டு ஜூலை மாதம் நடந்த கம்யூனிஸ்ட் அகிலத்தின் காங்கிரஸும் கண்டனம் செய்தன.

தனது நிலை ஒருமனதாகக் கண்டனம் செய்யப்படுவதைக் கண்ட திரோத்ஸ்கி கட்சி விரோதப் போராட்டத்தை நிறுத்துவதாகவும் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்படுவதாகவும் வாக்களித்தார். ஆனால் இது சூழ்ச்சி, கட்சியை ஏமாற்றும் தந்திரம் மட்டுமே. லெனினது மறைவுக்குப் பிறகு, 1924 சரத் காலத்தில், திரோத்ஸ்கி கட்சி பற்றிப் புதிய அவதூறு

பரப்பத் தலைப்பட்டார். அக்டோபர் புரட்சியின் வெற்றிக் காகக் கட்சி நடத்திய போராட்டத்தின் வரலாற்றை அவர் திரித்துக் கூறினர். 1917ம் ஆண்டு லெனினும் கட்சியும் தம்முடைய சித்தாந்தத்தையே ஆதாரமாகக் கொண்டார் கள் என்றார் அவர். அக்டோபர் புரட்சியை ஒழுங்கமைத்த தில் முக்கியப் பங்கு ஆற்றியவர் தாமே என்று திரோத்ஸ்கி கூறினர். உண்மையிலோ, முக்கியப் பங்கு ஆற்றியவர் லெனின் என்பதும் எழுச்சிக்குத் தலைமை ஏற்ற கட்சி மையத்திலோ, எழுச்சியைத் தலைமை தாங்கி நடத்திய இராணுவ-புரட்சிக் கமிட்டியிலோ திரோத்ஸ்கி உறுப்பு வகிக்கவில்லை என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இத்தகைய அபாண்ட மான அவதூற்றைப் பரப்ப லெனினது ஆயுட் காலத்தில் திரோத்ஸ்கி துணியவில்லை.

கட்சியின் மத்தியக் கமிட்டி திரோத்ஸ்கியின் கட்சி விரோத நடத்தை பற்றிய பிரச்சினையை மீண்டும் விவாதத் துக்கு எடுத்துக் கொண்டது. திரோத்ஸ்கி லெனினீ யத்தின் இடத்தில் திரோத்ஸ்கிவாதத்தைப் புகுத்த முயல்வதாக மத்தியக் கமிட்டி முடிவு செய்தது. அவர் கட்சிக்கு எதிரான போராட்டத்தை நிறுத்தாவிட்டால் கட்சியிலிருந்து விலக்கப்படுவார் என்று கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களான ஸினே விவும் காமினெவும் திரோத்ஸ்கியின் உதவிக்கு வந்தார்கள். அதற்கு முன்பு அவர்கள் திரோத்ஸ்கியை எதிர்த்தார்கள். இப்போதோ, அவர்கள் ''புதிய எதிர்த் தரப்பு'' எனப்பட்டதை அமைத்து, திரோத்ஸ்கியுடன் சேர்ந்து கொண்டு கட்சிக்கு எதிராகவும் லெனினீயத்துக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர்கள். தவிரவும் அவர்கள் திரோத்ஸ்கி போலவே லெனினீயப் பதாகையின் மறைவில் செயல்பட்டார்கள், லெனினது கூற்றுக்களை மேற்கோள் காட்டினர்கள், அவ ருக்கு விசுவாசம் கடைப்பிடிப்பதாக ஆணையிட்டார்கள், உண் மையிலோ, லெனினீயத்தின் உட்பொருளைத் திரித்தார்கள். திரோத்ஸ்கி போலவே அவர்கள் சோவியத் யூனியனில் சோஷ லிஸம் நிறுவப்படுவது சாத்தியம் என்பதை மறுத்தார்கள். பாட்டாளி வர்க்கத்தின் சக்தியை, உழைக்கும் விவசாயி

களைத் தங்களுடன் சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்ல அதற்கு உள்ள திறனை அவர்கள் நம்பவில்லை. ஸினேவிவும் காமினெவும் அரசு சோஷலிஸத் தொழில் துறையை அரசு முதலாளித்துவத் தொழில்துறை என்று கருதினர்கள். கட்சியும் சோவியத் மக்களும் சோஷலிஸத்தை அல்ல, முதலாளித்துவத்தை நிறுவுவதாக அர்த்தப்படும்படி அவர்கள் வலிந்துரைத்தார்கள். கட்சி மீது, அது பூர்ஷ்வா நிலைக்கு இழிந்து விட்டதாகவும் சந்தர்ப்பவாதத்தைக் கடைப்பிடிப்பதாகவும் குலாக்குகளின் நிலைகளுக்கு மாறிவிட்டதாகவும் ''புதிய எதிர்த்தரப்பு'' குற்றம் சாட்டியது. சில எதிர்த் தரப்பினர் முதல் படியாகக் கனரகத் தொழிலின் இடத்தில் இலேசுரகத் தொழில் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினர்கள். அவர்கள் காட்டிய வழியில் சென்றிருந்தால் சோவியத் யூனியன் முதலாளித்துவ அரசுகளுக்கு ஆதீனப் பட்டிருக்கும். அவற்றின் அடிமைத் தளைகளில் மாட்டிக் கொண்டிருக்கும்.

1925 டிசம்பரில் கூடிய பதினைன்காவது கட்சிக் காங்கிரஸ் லெனின் விரோதப் ''புதிய எதிர்த் தரப்பைக்'' கடுமையாக விளாசியது. கட்சியின் ஒற்றுமையைக் குலைக்கும் எல்லாவித முயற்சிகளையும், அவை எங்கிருந்து வந்தாலும், யார் தலைமையில் செய்யப்பட்டாலும் உறுதியுடன் எதிர்த்துப் போராடும்படி அது கட்சியை அறைகூவி அழைத்தது.

லெனினீயத்துக்கு எதிரான போராட்டம், சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிறுவும் லெனினது கொள்கைப் போக்கைக் கட்சி கடைப்பிடிப்பதற்கு எதிரான போராட்டம், ''புதிய எதிர்த்தரப்பைத்'' திரோத்ஸ்கிவாதிகளுடன் கூட்டு சேர்வதற்குத் தூண்டியது. ஒன்றிணைந்த முயற்சிகளால் கட்சியின் மத்தியக் கமிட்டியைக் கவிழ்க்கவும் கட்சித் தலைமையைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளவும் ஐரோப்பாவில் சோஷலிஸப் புரட்சி வெற்றி பெறும் வரை சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிறுவாதிருக்கும் வகையில் கட்சியின் கொள்கையை மாற்றவும் இரு சாராரும் திட்டமிட்டார்கள். 1926ம் ஆண்டு வசந்தத்தில் திரோத்ஸ்கி-ஸினேவிவ் கூட்டணி உருவாயிற்று. திரோத்ஸ்கியும் ஸினேவிவும்

கட்சிக்கு உள்ளும் சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்திலும் பிளவுகள் ஏற்படுத்தும் போக்கைக் கடைப்பிடித்தார்கள். முதலாளித்துவ நாடுகளைச் சேர்ந்த சோதரக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து விலக்கப்பட்ட கம்யூனிஸக் கொள்கை மாறிகளுடன் அவர்கள் தொடர்பு கொண்டார்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தைப் பிளவுபடுத்த அவர்கள் முயன்றார்கள், ஆனால் படு தோல்வி அடைந்தார்கள்.

1927ல் பிரிட்டன் சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதாக அச்சுறுத்திய போது, போர் மூண்டால் எதிர்த் தரப்பினர் கட்சியின் லெனினீய மத்தியக் கமிட்டியையும் சோவியத் அரசாங்கத்தையும் கவிழ்ப்பதற்கு அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்வார்கள் என்று திரோத்ஸ்கி வெளிப்படையாகஅறிவித்தார். இவ்வாறு கட்சியின் முதுகில் குத்துவதாகத் திரோத்ஸ்கி அச்சுறுத்தினர். திரோத்ஸ்கிவாதிகள் சோவியத் ஆட்சியுடையவும் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடையவும் பகைவர்களுக்கு உண்மையில் உதவி செய்தார்கள்.

எதார்த்தத்தில் திரோத்ஸ்கிவாதிகள் தங்கள் தனியான, சட்ட விரோதமாகச் செயல்பட்ட கட்சியை உருவாக்கியிருந்தார்கள். தங்கள் தலைமை மையத்தையும் அவர்கள் அமைத்திருந்தார்கள். உறுப்பினர் சந்தாத் தொகைகளைக் கொண்டு சொந்த நிதியும் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். இரகசிய அச்சகத்தில் சோவியத் எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டார்கள். லெனின் விரோதக் கொள்கைத் திட்டத்தையும் அவர்கள் பிரசுரித்தார்கள்.

இவ்வாறு, கட்சியின் லெனினீயப் போக்குக்கு எதிராக இடைவிடாத போராட்டமும் கட்சி விரோதப் போராட்டத்தின் தர்க்கமும் திரோத்ஸ்கியையும் அவரைப் பின் பற்றிய சிறு தொகையினரான நபர்களையும் புரட்சி எதிர்ப்பு முகாமுக்கு இட்டு வந்தன. மாஸ்கோவிலும் லெனின்கிராதிலும் சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்த அவர்கள் செய்த முயற்சி இதைக் காட்டியது. 1927, நவம்பர் ஏழாந் தேதி, மாபெரும் அக்டோபர் புரட்சியின் பத்தாவது ஆண்டு விழா அன்று, கட்சியின் கொள்கைமாறிகளின் அற்பக் கும்பல்

ஒன்று திரோத்ஸ்கிவாத கோஷங்களுடன் வீதிகளில் வலம்வர முயன்றது. ஆனல் ஆத்திரம் அடைந்த தொழிலாளர்கள் அதை விரட்டி விட்டார்கள்.

கட்சியின் பொறுமை தீர்ந்து விட்டது. திரோத்ஸ்கியையும் திரோத்ஸ்கிவாதிகளையும் நேர் வழிக்குக் கொண்டுவர அது எவ்வளவோ சக்தியைச் செலவிட்டது. திரோத்ஸ்கிவாதிகள் புரட்சி எதிர்ப்புப் போக்கைப் பகிரங்கமாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியதுமோ கட்சியால் அவர்களைத் தன் அணிகளில் மேலும் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. 1927 டிசம்பரில் கூடிய பதினைந்தாவது கட்சிக் காங்கிரஸ், திரோத்ஸ்கிவாதி-ஸினேவிவ்வாதி எதிர்த் தரப்பு லெனினீயத்துடன் தொடர்பைத் துணித்துக் கொண்டு, மென்ஷிவிக் குழுவாக இழிந்து சர்வதேச பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் உள்நாட்டு பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் அடி பணியத் தொடங்கி விட்டது என்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிராக வர்க்கப் பகைவர்களின் ஆயுதமாக மாறிவிட்டது என்றும் சான்றுகளுடன் நிலைநாட்டியது. திரோத்ஸ்கிவாதப் பிரசாரம் செய்பவர்கள் கட்சி உறுப்பினர்களாக இருக்க முடியாது என்று காங்கிரஸ் அறிவித்தது. திரோத்ஸ்கியின் தலைமையில் எல்லாச் செயலூக்கம் உள்ள திரோத்ஸ்கிவாதிகளையும் அது கட்சியிலிருந்து விலக்கியது. மற்றவர்கள் கட்சியின் நிலைகளை மேற்கொண்டு திரோத்ஸ்கிவாதத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தாவிட்டால் அவர்களும் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று எச்சரித்தது. முன்பு திரோத்ஸ்கிவாதிகளாய் இருந்தவர்களில் பலர் திரோத்ஸ்கிவாதத்தின் கேடு முழுவதையும் புரிந்து கொண்டு கட்சியின் வழிக்குத் திரும்பினர்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தில் சேர்ந்திருந்த கட்சிகளும் தங்கள் அணிகளிலிருந்து திரோத்ஸ்கிவாதிகளை நீக்கி விட்டன.

அகில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சி அணிகளில் திரோத்ஸ்கிவாதம் முறியடிக்கப்பட்டது. லெனினீயத்துக்கும் கட்சிக்கும் எதிராகத் திரோத்ஸ்கியின் போராட்டம் இவ்வாறு அவகேடாக முடிந்தது. புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காகத் திரோத்ஸ்கி நாடு கடத்தப்பட்டார். வெளிநாட்டில் அவர் சோவியத் யூனியன்

கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராகவும் சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்துக்கு எதிராகவும் போராட்டம் தொடங்கினர்.

விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை முறையில் அமைத்தல்

சோவியத் தொழில் துறை விரைந்த வேகத்தில் வளர்ச்சி அடைந்து வந்தது. விவசாயமோ பின்தங்கி இருந்தது. தேசீயப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் தகவின்மை உண்டாகும் அபாயம் ஏற்பட்டது. லெனினது கூட்டுறவுத் திட்டத்தை நடைமுறையில் செயல் படுத்துவதை வாழ்க்கை நிலைமைகளே அவசியம் ஆக்கின.

இந்தத் திட்டத்தின் உள்ளடக்கம் யாது? தனிப் பண்ணை யிலிருந்து கூட்டான, சோஷலிஸ விவசாய முறைக்கு விவ சாயிகள் மாறுவதற்கு மிகவும் எளிய, புரியக் கூடிய வழி கூட்டுறவே என்று லெனின் கூரிய மதி நுட்பத்துடன் கண்டார். எனவே தான் அவர் விவசாயிகளைக் கூட்டுறவு முறையில் இணைப்பதற்குப் பெருத்த முக்கியத்துவம் அளித்தார். பூர்ஷ்வா அமைப்பில் கூட்டுறவு கூட்டு முதலாளித்துவத் தொழில் முயற்சியாக விளங்குகிறது. சோஷலிஸ அரசின் நிலை மைகளிலோ கூட்டுறவு சோஷலிஸத்துக்குப் பொருந்துகிறது என்று அவர் சுட்டிக் காட்டினர்.

கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவி மூலமும் பொரு ளாதாரச் சலுகைகளும் வசதிகளும் அளிப்பதன் மூலமும் அரசு ஆதரவு தர வேண்டும் என்று லெனின் யோசனை கூறி னர். கூட்டுறவில் விவசாயி கூட்டுத்துவத்திலும் சமூக நட வடிக்கைகளிலும் பயிற்சி பெறுவான். தனிமையில் தன்னல் வறுமையிலிருந்து விடுபட முடியாது, ஒன்று சேர்ந்து, கூட் டாக முயன்று நல்வாழ்வு பெற இயலும் என்பதை அவன் புரிந்துகொள்ளத் தொடங்குவான். கூட்டுறவின் தாழ் வடி வங்களிலிருந்து உயர் வடிவங்களுக்கு, அதாவது, வினியோக-விற்பனைக் கூட்டுறவிலிருந்து உற்பத்திக்கூட்டுறவுக்கு—இயந் திரக் கூட்டு முயற்சிக்கு, சேர்ந்து நிலத்தைப் பண்படுத்து வதற்கு, விவசாயக் கூட்டுறவுக் கழகங்களுக்கு மாற விவ சாயிகளுக்குக் கம்யூனிஸ்ட் கட்சி உதவ வேண்டும். கூட்டுப் பண்ணை விவசாயியின் சமூக நலன்களையும் சொந்த நலன் களையும் ஒன்றிணைக்க வேண்டும். விவசாயிகளின் இத்தகைய கூட்டுப் பண்ணைகள் சோவியத் நாட்டின் அனேக இடங்களில்

அக்டோபர் புரட்சிக்குப் பின் உடனடியாக ஏற்பட்டலாயின. விவசாயிகள் அவற்றை மேலும் மேலும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். இந்த முயற்சியை விரிவுபடுத்துவது அவசியமாய் இருந்தது. ''முழுமையாகக் கூட்டுறவு முறை ஏற்பட்டிருந்தால் நாம் இப்போதே சோஷலிஸத் தரைமேல் இரு கால்களையும் ஊன்றி நின்றிருப்போம்'' என்று எழுதினார் லெனின். (முழு நூல்திரட்டு, தொகுதி 45, பக்கம் 376).

விவசாயம் பற்றிய புதிய லட்சியத்தைக் கட்சியின் பதினேந்தாவது காங்கிரஸ் முன் வைத்தது. நாட்டில் சோஷலிஸத் தொழில் பெருக்கம் செய்யும் கொள்கை கடைப் பிடிக்கப்பட்ட முதல் ஆண்டுகளின் விளைவுகள் காங்கிரஸில் தொகுத்துரைக்கப்பட்டன. சோவியத் யூனியனின் பேரளவான சோஷலிஸத் தொழில் துறை முக்கியமான முதலாளித்துவ நாடுகளின் தொழில்துறையைக் காட்டிலும் மிக விரைவாக வளர்ச்சி அடைந்து வந்தது. மொத்த விவசாய விளைச்சல் யுத்தத்துக்கு முந்திய அளவுக்கு மேல் போய்விட்டது. ஆனாலும் தானிய விளைச்சல் யுத்தத்துக்கு முந்திய அளவை எட்டவில்லை. அதன் விற்பனைப் பகுதியோ யுத்தத்துக்கு முந்திய அளவில் பாதிதான் இருந்தது. விவசாயிகளின் சிறு பண்ணைகளில் உழைப்பின் உற்பத்தித் திறன் மிகக் குறைவாக இருந்ததும் இவை தாம் விளைவித்த பொருள்களின் கணிசமான பகுதியைத் தாமே பயன்படுத்தியதும் இதற்குக் காரணங்கள். சந்தைக்கு விற்பனைக்கு வந்த தானியம் மிகக் குறைவே. அதே சமயம் நகரங்களின் அதிகரித்து வந்த மக்களின் உணவுப் பொருள் தேவையும் வளர்ந்துவந்த தொழிற்சாலைகளின் விவசாயக் கச்சாப் பொருள் தேவையும் அதிகரித்தன. இந்தத் தேவைகளை விவசாயம் நிறைவேற்றவில்லை. பேரளவான கூட்டுப் பண்ணைதான் முன்னணி விவசாய இயந்திரங்களைக் கொண்டு இந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியும்.

விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை முறையில் அமைக்கும் நோக்கத்தைக் கட்சி செயல்படுத்தத் தொடங்கியது. கூட்டுப் பண்ணையின் அனுகூலங்களை விவசாயிகளுக்கு விளக்கி, இந்தத் திசையில் அது விரிவாக வேலை செய்தது. அதே சமயம், **போர்முனையின்** எல்லாப் பகுதிகளிலும் முதலாளித்துவப் போக்கு உள்ள நபர்களுக்கு எதிராக, தொழில் வர்த்தகம்

ஆகிய துறைகளிலும் நாட்டுப் புறத்தில் குலாக்குகளுக்கு எதிராகவும் தாக்குதல் தீவிரம் அடைந்தது.

1928ம் ஆண்டு உக்ரேனிலும் வடக்குக் காக்கேஷியாவிலும் விளைச்சல் பொய்த்துப் போயிற்று. தானியப் பற்றாக்குறை ஏற்பட்டது. தானியத்தைப் பெரும் அளவில் சேமித்து வைத்திருந்த குலாக்குகளிடம் தானியம் பெற முடிந்திருக்கும். ஆனால் குலாக்குகள் இந்த நிலைமையைச் சாதகமாக எடுத்துக் கொண்டு தானியத்தில் கள்ள வியாபாரம் செய்யவும் கொள்ளை லாபம் திரட்டவும் நாட்டுப் புறத்தில் தங்கள் நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும் முயன்றார்கள். குலாக்குகள் தானியத்தைப் பதுக்கினார்கள், நிலையான விலைகளுக்கு அதை அரசுக்கு விற்க மறுத்தார்கள். குலாக்குகள் சோவியத் ஆட்சியைப் பகிரங்கமாக எதிர்ப்பதாக இது அர்த்தப்பட்டது, நகரங்களில் தானியப் பஞ்சம் ஏற்படும் அபாயத்தை உண்டாக்கியது. குலாக்குகள் மேலும் மேலும் அடிக்கடி பயங்கரச் செயல்களை மேற்கொண்டார்கள். கட்சி, சோவியத் ஊழியர்களையும் ஊக்கமுள்ள நாட்டுப்புற ஊழியர்களையும் அவர்கள் அடிக்கடி மறைவிலிருந்து தாக்கிக் கொன்றார்கள். சோவியத் ஆட்சி குலாக்குகளுக்கு எதிராக அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொண்டது. சோவியத் சட்டங்களை மீறி மறைமுக நாசவேலைகள் செய்ததற்காகக் குலாக்குகள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவர்களிடம்இருந்த தானியம் பறிமுதல் செய்யப்பட்டது.குலாக்குகளிடமிருந்து இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட தானியத்தின் ஒரு பகுதி ஏழைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. மற்றப் பகுதி அரசாங்கக் களஞ்சியங்களில் சேர்க்கப்பட்டது. இவ்வாறு குலாக்குகளின் எதிர்ப்பு முறிக்கப்பட்டது, அவர்களுடைய புரட்சி விரோதச் சூழ்ச்சிகள் தகர்க்கப்பட்டன. அரசு தானியச் சேமிப்பு செய்தது.

குலாக்குகள் மீது நடந்த தாக்குதலைக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஆட்சேபித்தார்கள். புஹாரின் தலைமையில் வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் எதிர்த் தரப்பு உருவாயிற்று. கட்சியின் கொள்கைப் போக்கு சுரண்டும் வர்க்கத்தினர் என்ற முறையில் குலாக்குகளை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.புஹாரின் குழுவினரோ,குலாக்குகளை சோஷ

லிஸத்தில் வேரூன்றுமாறு செய்யும் கருத்தைப் பரப்பினர் கள். முதலாளித்துவப் போக்குள்ள நபர்களுக்கு அடி வணங் கும் நிலைக்குக் கட்சியை இழுத்துச் செல்ல வலதுசாரி சந் தர்ப்பவாதிகள் முயன்றார்கள். 1918ம் ஆண்டு ''இடதுசாரி'' நிலைகளிலிருந்து கட்சிக்கு எதிராகப் போராட்டம் தொடங் கிய புஹாரின், இப்போது வலதுசாரிச் சரணாகதிக் கொள்கை யினரின் முகாமுக்கு வந்துவிட்டார். ''இடதுசாரி'' சந்தர்ப்ப வாதம் வலதுசாரியாக வளர்ந்து விட்டது—மார்க்ஸீய-லெனினீயத்துக்கு எதிரான போராட்டத்தின் தர்க்கப் போக்கு இத்தகையது. வலதுசாரியினரின் சரணாகதிக் கொள்கைவா தப் பிரசாரம் கட்சிக்கும் சோவியத் அரசுக்கும் பெருங் கேடு விளைத்தது. திரோத்ஸ்கிவாதம் முறியடிக்கப்பட்ட பின் வலதுசாரிப் பிறழ்ச்சி கட்சியில் முதன்மையான அபாயம் ஆயிற்று.

திரளான கட்சி உறுப்பினரிடையே தங்களுக்கு ஆதரவு இல்லாததால் வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் முறியடிக்கப் பட்ட திரோத்ஸ்கிவாதிகளிடையே கூட்டாளிகளைத் தேட லாயினர். வலதுசாரி சந்தர்ப்பவாதிகளின் தலைவர் புஹா ரின் அவர்களுடன் திரை மறைவில் பேச்சு வார்த்தைகள் நடத் தினர். கட்சியின் மத்தியக் கமிட்டி புஹாரின் குழுவினரைக் கடுமையாகக் கண்டனம் செய்தது. அவர்களுடைய கருத்துக் களைப் பிரசாரம் செய்வது கட்சி உறுப்பினராய் இருப்பவர் களுக்குத் தகாது என அது முடிவு செய்தது. இதன் பிறகு வலதுசாரி சந்தர்ப்பவாதித் தலைவர்கள் மத்தியக் கமிட்டிக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். தங்கள் போக்கு தவறானது என்றும் கட்சியின் பொதுப் போக்கு சரியானது என்றும் அதில் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள்.

இவ்வாறு, மார்க்ஸீய-லெனினீயத்தின் தூய்மையைப் பாதுகாப்பதற்காகவும் கட்சியின் லெனினீயப் பொதுப் போக்கிற்காகவும் கம்யூனிஸ்ட் கட்சி ''இடதுசாரி,'' வலது சாரி சந்தர்ப்பவாதிகளை எதிர்த்துப் பன்னிரண்டு ஆண்டுக ளுக்கும் மேல் போராட்டம் நடத்த நேர்ந்தது. சந்தர்ப்பவாதி கள் கொள்கைவாத நோக்கில் முறியடிக்கப்பட்டார்கள். சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிறுவும் லெனினது

திட்டத்தை நிறைவேற்றுவதில் கட்சி தனது ஆற்றல் முழுவதையும் ஈடுபடுத்தியது.

சோஷலிஸத்தின் முன்னேற்றத்துக்கு ஆயத்தம்

1927 நவம்பர் மாதம் சோவியத் யூனியனின் மக்கள் இனங்கள் அக்டோபர் புரட்சியின் பத்தாவது ஆண்டு நிறைவைக் கோலாகலமாகக் கொண்டாடின. கம்யூனிஸ்ட் கட்சி இந்தப் பத்து ஆண்டுகளாக, தொழிலாளர்கள், விவசாயிகளின் சோஷலிஸ அரசின் தலைமையில் விளங்கி வந்தது. அதன் அணிகளில் பன்னிரண்டு லட்சத்துக்கும் மேல் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். இவர்களில் பாதிப் பெயர் தொழிலாளர்கள். கட்சி நாட்டை ஆளும் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தது, அதன் வளர்ச்சியை சோஷலிஸத்தை நோக்கிச் செலுத்தியது. மக்களிடையே அதன் செல்வாக்கு பெரிதும் வளர்ந்திருந்தது. அது குறிப்பிடத்தக்க வெற்றிகள் பெற்றிருந்தது. தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் விவசாயிகளும் கட்சியின் கொள்கையைப் புரிந்து கொண்டு எல்லா வகையிலும் ஆதரித்தார்கள்.

தொழில் நிலையங்களின் கட்டுமானம் மேலும் மேலும் விரிவாக நடந்து வந்தது. நாட்டை மின்சாரமயமாக்கும் லெனினுடைய திட்டத்தைச் செயல்படுத்துவதில் கட்சி விசேஷக் கவனம் செலுத்தியது. 1926 டிசம்பரில், லெனின்கிராத் நகரின் அருகே வல்ஹோவ் நீர்மின் நிலையம் உற்பத்தி தொடங்கியது. இதன் திறன் 50 ஆயிரம் கிலோவாட்டுகளுக்குச் சற்றே அதிகமாய் இருந்தது. அந்தக் காலத்தில் அதுவே நாட்டில் எல்லாவற்றிலும் பெரிய நீர்மின் நிலையம். இந்த முதல் வெற்றியால் சோவியத் மக்கள் களி கொண்டாடினார்கள். வல்ஹோவ் மின் நிலையத்துக்கு லெனினது பெயர் சூட்டப்பட்டது. அக்டோபர் புரட்சிக் கொண்டாட்டத்தில், 1927 நவம்பர் 8ந் தேதி த்னேப்பர் ஆற்றின் மீது பெரிய நீர்மின் நிலையத்துக்குக் கடைகால் போடப்பட்டது. இதன் திறன் வல்ஹோவ்மின் நிலையத்தின் திறனைக் காட்டிலும்பத்து மடங்கு அதிகம். பிற மின்நிலையங்களும் கட்டப்பட்டன.

புவி இயலார் நிறைய வேலை செய்தார்கள். கனியங்களையும் நிலக்கரியையும் பெட்ரோலியத்தையும் அவர்கள் நாடு முழுவதிலும் தேடினார்கள், வருங்காலத் தொழிற்சாலைக



த்னேப்பர் ஆற்றின்மீது நீர்மின் நிலையம் நிறுவப்படுகிறது



சைபீரியாவில் குஸ்னேத்ஸ்க் உலோக வார்ப்புத் தொழிற்சாலை கட்டப்படுகிறது

சோவியத் நாட்டில் சோஷலிஸத் தொழில் பெருக்கம்
பிரமாண்டமான கனரகத் தொழிற்சாலைகள்
நிறுவப்படுகின்றன



உராலில் மக்னித்தகோர்ஸ்க் உலோக வார்ப்புத் தொழிற் சாலை நிருமாணிக்கப்படுகிறது



வோல்கா ஆற்றின் கரையில் ஸ்தாலின்கிராத் டிராக்டர் தொழிற்சாலை கட்டப்படுகிறது

ளுக்கு ஏற்ற இடங்களைத் தெரிந்தெடுத்தார்கள். உராலில் மக்னீத்னயா (காந்த) மலை அடிவாரத்திலும் மேற்கு சைபீரியாவில் குஸ்னேத்ஸ்க் நகரின் அருகிலும் பிரமாண்டமான இரும்புவகைத் தொழிற்சாலைகள் இரண்டு கட்டப்படலாயின. 1927ல் தொடங்கப்பட்ட துர்க்கிஸ்தான்-சைபீரிய இருப்புப் பாதை (துர்க்ஸிப்) முதலாவது பெரிய இருப்புப் பாதை நிர்மாணம் ஆகும். ஆயிரத்து ஐந்நூறு கிலோமீட்டர் நீளமுள்ள இந்த இருப்புப் பாதை மத்திய ஆசியாவையும் மேற்கு சைபீரியாவையும் இணைக்க வேண்டியிருந்தது. இது அனைத்து மக்கள் நிர்மாணமாகத் திகழ்ந்தது. ருஷ்யர்களும் உக்ரேனியர்களும் கஸாஃகுகளும் கிர்கீஸியர்களும் தாஜிக்குகளும் உஸ்பேக்குகளும் துர்க்மேனியர்களும் இந்த இருப்புப் பாதையை நிறுவினர்கள். முன்பு ஒட்டகக் காரவான்கள் மட்டுமே நடந்த கஸாஃஸ்தான், அல்தாய் ஸ்தெப்பி வெளிகளைக் கடந்து சென்றது இந்த ரயில் பாதை. முன்னர் பொருளாதாரத் துறையில் பின் தங்கியிருந்த கஸாஃஸ்தான், கிர்கீஸியா, உஸ்பெக்கிஸ்தான், துர்க்மேனிஸ்தான், தாஜிக்கிஸ்தான் ஆகியவற்றின் மக்கள் இனங்களது விரைந்த வளர்ச்சிக்குப் புதிய இருப்புப் பாதை உதவியது. இந்தப் பாதையின் கட்டுமானம் நிறைவுற்றதை ஒட்டி இருப்புப் பாதை நிறுவியவர்கள் நடத்திய கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட விருந்தினரில் ஜப்பானியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகரும் தலைவருமான ஸேன் கத்தயாமாவும் இருந்தார். கட்டுமானத் தொழிலாளர்களை அவர்களது வெற்றிக்காக வாழ்த்திய பின், ''உங்கள் வெற்றி உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி ஆகும்'' என்று அவர் சொன்னார்.

விவசாய இயந்திரங்களும் கருவிகளும் உற்பத்தி செய்வதில் கட்சி முதற்படியாகக் கவனம் செலுத்தியது. 240 லட்சம் விவசாயிகளின் பண்ணைகளுக்கு இவற்றை வழங்குவது அவசியமாய் இருந்தது. அந்தக் காலத்தில் தொழிற்சாலைகள் குதிரைகளால் இழுக்கப்படும் இயந்திரங்களும் கருவிகளுமே தயாரித்து வந்தன. விதை தெளிக்கும் இயந்திரம், அறுவடை இயந்திரம், புல்லறுக்கும் இயந்திரம், கதிரடிக்கும் இயந்திரம், தரம் பிரிக்கும் இயந்திரம், கலப்பை, புல் அரிவாள், அறுப்பு அரிவாள் முதலியன இவை. நாட்டில் டிராக்



ஐந்தாண்டுத் திட்டத்தை நான்கு ஆண்டுகளில் நிறை வேற்றுவதற்கான சோஷலிஸப் போட்டியில் பங்கு கொண்ட வர்கள்.

டர்கள் இன்னமும் சிலவே இருந்தன. அவை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாங்கப்பட்டன. உள்நாட்டில் டிராக்டர் உற்பத்தி அப்போதுதான் ஒழுங்குபட்டுக் கொண்டிருந்தது. லெனின்கிராதில் உள்ள புத்தீலவ் தொழிற்சாலை அவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கியது.

விவசாயப் பண்ணைகளைக் கூட்டுமுறையில் அமைக்கத் தொடங்கிய கட்சி, சோஷலிஸ விவசாயத்துக்கு வேண்டிய பொருளியல்-தொழில்நுட்ப அடித் தளத்தை அமைப்பதில் அக்கறை எடுத்துக் கொண்டது. வோல்கா ஆற்றின் கரையில்,

ஸ்தாலின்கிராத் (தற்போது வோல்காகிராத்) நகரில் டிராக்டர் தொழிற்சாலை கட்டப்பட்டது. த்னேப்பர் நதிக் கரையில் ஸப்பரோழியே நகரில் அறுவடை இயந்திரத் தொழிற்சாலை எழுந்தது. தோன் ஆற்றின் கரையில் உள்ள ரஸ்தோவ் நகரில் விவசாய இயந்திரங்கள் தயாரிக்கும் பிரமாண்டமான தொழிற்சாலை நிறுவப்பட்டது. வோல்காக் கரையில் மிகப் பெரிய டிராக்டர் தொழிற்சாலை மிகக் குறுகிய நேரத்தில்—பதினென்றே மாதங்களில்—கட்டி முடிக்கப்பட்டது. 1930 ஜூன் மாதம் அதன் கன்வேயரிலிருந்து முதல் டிராக்டர் தயாராகி வெளி வந்தது. தொழிலாளர்கள் அதை மாஸ்கோ கொண்டு சேர்த்தார்கள். 1930 ஜூன் 26ந் தேதி, கட்சியின் பதினாறுவது காங்கிரஸ் தொடங்கிய அன்று, இந்த டிராக்டர் செஞ்சதுக்கத்தில் லெனின் சமாதி அருகாகச் சென்றது. தாய்நாட்டில் தயாரான நவீன இயந்திரங்கள் விவசாயத்துக்குக் கிடைக்கலாயின.

கிராமங்களில் சிக்கலான நிகழ்முறைகள் நடந்தன. உற்பத்திச் சாதனங்களின் தனி உடைமையை அடிப்படையாகக் கொண்ட சிறு விவசாய விற்பனைப் பொருள் உற்பத்தி நிலவி வரும் வரையில் முதலாளித்துவம் திரும்பி வரவும் வளரவும் மீட்டமைக்கப்படவும் வாய்ப்பு இருந்து கொண்டிருக்கும் என்று லெனின் கற்பித்திருந்தார். நாட்டுப்புறத்தில் ஏழைகள், நடுத்தர விவசாயிகள், குலாக்குகள் என்ற பிரிவினை தொடர்ந்து நிலவி வரும். தவிர, எந்த நிர்வாக நடவடிக்கைகளும் குலாக்குகளின் பண்ணைகள் வளர்வதை நிறுத்த முடியாது. சோவியத் நாட்டின் உதாரணம் இந்த விஷயத்தில் படிப்பினை தருவதாகும். 1918ம் ஆண்டு, குலாக்குகளிடமிருந்து நிறைய நிலமும் குதிரைகளும் வேளாண்மைக் கருவிகளும் பறித்துக்கொள்ளப்பட்டன. அவர்களுடைய சக்தி முறிக்கப்பட்டது. சோவியத் ஆட்சி நாட்டுப்புறத்தில் முதலாளித்துவப் போக்குள்ள நபர்களை **வரையறைக்கு உட்படுத்தும்** கொள்கையைக் கடைப்பிடித்தது. குலாக்குகள் நிலத்தைக் குத்தகைக்கு எடுப்பதையும் தொழிலாளிகளைக் கூலிக்கு அமர்த்துவதையும் அது தன் சட்டங்களால் வரம்புக்கு உட்படுத்தியது, உயர்த்தப்பட்ட வரிகளை அவர்கள் மீது விதித்தது, நிலையான விலைகளுக்கு அரசுக்கு தானியம்

விற்கும்படி அவர்களிடம் கோரியது, உயர்த்தப்பட்ட விலைகளுக்கு இயந்திரங்களை அவர்களுக்கு விற்றது. இந்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டும் கூட நாட்டில் குலாக்குகளுடைய பண்ணைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1928ல் அவர்களுடைய எண்ணிக்கை பத்து லட்சத்துக்கும் அதிகமாய் இருந்தது. விவசாயிகளால் அரசுக்கு விற்கப்படக் கூடிய தானியத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் குலாக்குகள் கொடுத்தார்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கையின் நிலைமைகளில் குலாக்குகள் உரம் பெற்று நாட்டுப்புறத்தில் செல்வாக்கு அடைந்தார்கள். குலாக்குகளின் வளர்ச்சி அச்சம் ஊட்டியது. ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும்கூட நாளுக்கு நாள் அதிக எண்ணிக்கையில் அவர்களுக்கு அடிமைகள் ஆனார்கள். ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் தங்கள் பங்கு நிலங்களில் வேளாண்மை நடத்தத் திறன் இன்றி அவற்றின் பகுதிகளைக் குலாக்குகளிடம் அடிக்கடி குத்தகைக்கு விட நேர்ந்தது. குலாக்குகளிடம் உழைக்கும் கால்நடைகள் நிறைய இருந்தன, இயந்திரங்களையும் அவர்கள் வாங்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். குதிரைகள் இல்லாத விவசாயிகள் அவர்களை ''உதவி'' வேண்டி நாடிய போது—நிலத்தை உழுவதற்குக் குதிரைகளோ எருதுகளோ தரும்படியும் அறுவடைக் காலத்தில் அறுவடை இயந்திரங்களோ கதிரடிக்கும் இயந்திரங்களோ கொடுக்கும் படியும் வேண்டிக் கொண்டபோது—குலாக்குகள் இதன்மூலம் நிறைய அனுகூலங்கள் பெற்றார்கள். இந்தத் ''தொண்டுகளுக்குப்'' பிரதியாக ஏழை விவசாயிகள் குலாக்குகளின் பண்ணைகளை இலவசமாகப் பண்படுத்த வேண்டியிருந்தது. சில சமயங்களில், சிறப்பாக வரட்சி ஆண்டுகளில், ஏழை விவசாயிகளிடம் அடுத்த அறுவடைவரை போதுமான தானியம் இருக்காது. குலாக்குகளிடமோ கணிசமான தானியச் சேமிப்பு எப்போதும் இருக்கும். எனவே ஏழை விவசாயி பணக்கார அண்டைக் குலாக்கினிடம் தானியமோ விதையோ கடனுக்கு கேட்டுப் பெறவும் அதைக் கணிசமாக அதிக அளவில் குலாக்குக்குத் திருப்பிக் கொடுக்கவும் நேரும்.

சோவியத் ஆட்சி நாட்டுப்புற ஏழை விவசாயிகளுக்கு எல்லா வித உதவியும் அளித்தது: அவர்களுக்கு வரிகளிலிருந்து விடுதலை தந்தது, சாதகமான நிபந்தனைகளின் பேரில் அவர்களுக்கு வேளாண்மை நடத்தக் கடன்கள் வழங்கியது. ஆனால் இந்த உதவி அவர்களுடைய நிலைமையை உடனே சீர்படுத்திவிட முடியவில்லை. சோஷலிஸம் ஒன்றுதான், விவசாயிகள் கூட்டுப் பண்ணைகளாக ஒன்று சேர்வது மட்டுமே குலாக்குகளின் அடிமைத் தளைகளிலிருந்து அவர்களை விடுவிக்கவும் அவர்கள் வசதிகளும் பண்பாடும் நிறைந்த வாழ்க்கை வாழ வகை செய்யவும் வல்லதாய் இருந்தது.

அகில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் பதினைந்தாவது காங்கிரஸுக்குப் பிறகு திரளான விவசாயிகளைக் கூட்டுப் பண்ணைகளாக ஒன்றிணைக்கும் வேலையைக் கட்சி தீவிரப்படுத்தியது. அப்போது நாட்டில் மொத்தம் ஏறத்தாழ மூன்றரை லட்சம் நாட்டுப்புறக் குடியிருப்புக்கள் இருந்தன. இவற்றில் ஒவ்வொன்றிலும் சராசரி எழுபது விவசாயிகளின் பண்ணைகள் இருந்தன. பல கோடி விவசாயிகளின் திரளைத் தனது செல்வாக்குக்கு உட்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளைக் கட்சி மேற்கொண்டது. பல்வேறு கூட்டுறவு வடிவங்களின் அனுகூலங்கள் பத்திரிகைகளிலும் வானொலியிலும் விவசாயிகள் கூட்டங்களிலும் விளக்கி விவரிக்கப்பட்டன.

தொடக்கத்தில் உபயோகிப்போர் கூட்டுறவுக் கழகங்களே நாட்டுப்புறத்தில் அதிக விரிவாகப் பரவின. நாட்டுப்புற மக்களுக்குத் தொழில் உற்பத்திப் பொருள்களை வினியோகிப்பதில் அவை ஈடுபட்டன. வழக்கமாக ஏதேனும் ஒரு கிராமம் அல்லது அண்டை அயலில் உள்ள அனேக கிராமங்களைச் சேர்ந்த குடியானவர்கள் தாமாகவே விரும்பி, கிராம உபயோகிப்போர் கழகங்களை அமைத்தார்கள். அதில் உறுப்பினராகச் சேர்ந்த ஒவ்வொருவரும் சந்தாப் பணம் கட்டினார்கள். சந்தாத் தொகையே கழகத்தின் நிதி ஆயிற்று. அதைக் கொண்டு தொழில் உற்பத்திப் பொருள்கள் வாங்கப்பட்டன. ஒவ்வொரு கழகத்துக்கும் சொந்தமான கடை இருந்தது. சந்தாதார்கள் அதில் சரக்குகள் வாங்கினார்கள். யூனியன் குடியரசுகளில் கழகங்களின் நடவடிக்கைகளை உபயோகிப்போர்

கழகங்களின் மத்திய ஐக்கியங்கள் வழிகாட்டி நடத்தின. அவற்றின் அலுவலகங்கள் அரசிடம் சரக்குகளை வாங்கி உபயோகிப்போர் கழகங்களுக்கு விநியோகித்தன.

சோவியத் அரசாங்கத்தின் தீவிர ஆதரவுடன் கடன் கொடுக்கும் கூட்டுறவுக் கழகங்களும் நாட்டுப்புறத்தில் வளர்ச்சி அடைந்தன. விவசாயிகளுக்கு வேளாண்மைத் தேவைகளுக்காக அனுகூல நிபந்தனைகளின் பேரில் கடன்கள் கொடுத்து உதவும் நோக்கத்துடன் கடன் கொடுக்கும் கூட்டுறவுக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. சோவியத் அரசு மைய விவசாய நிதிமனையைத் திறந்து இந்தக் கழகங்களுக்குக் கடன்கள் வழங்கத் தேவையான நிதி வசதிகள் அளித்தது. இவ்வாறு இந்தக் கழகங்களின் நிதி, உறுப்பினர்களின் சந்தாத் தொகைகளையும் அரசின் நிதி வசதிகளையும் கொண்டு அமைந்தது. கடன் கொடுக்கும் கூட்டுறவுக் கழகங்கள் உழைக்கும் விவசாயிகளைக் குலாக்குகளின் அடிமைத் தளையில் சிக்காதவாறு அரண் செய்தன 1929ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் சுமார் ஒரு கோடி ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் இத்தகைய கழகங்களில் உறுப்பினராய் இருந்தார்கள்.

விவசாயக் கூட்டுறவுக் கழகங்கள் நாட்டுப் புறத்தில் சிறப்பாக முக்கியப் பங்கு ஆற்றின. தொடக்கத்தில் அவை எல்லாவகைத் தொண்டுகளும் புரிந்து வந்தன, அதாவது விவசாயக் கூட்டுறவின் எல்லா வடிவங்களையும் மேற்கொண்டிருந்தன. உற்பத்திக் கூட்டுறவுகள் (நிலத்தைக் கூட்டாகச் சேர்ந்து பண்படுத்துவதற்கான கூட்டுறவு நிறுவனங்கள்), உதவி-உற்பத்திக் கூட்டுறவுகள் (இயந்திர, நிலச் சீராக்கச் சங்கங்களும் பிற சங்கங்களும்), விவசாய விளைபொருள்களை விற்பதற்கும் பண்டங்களாகத் தயாரிப்பதற்குமான கூட்டுறவுகள் (பால், எண்ணெய், பருத்தி, சணல் கூட்டுறவுகள் முதலியன) ஆகியன இவ்வடிவங்கள். கடைசி வடிவமே மிக விரிவாகப் பரவி இருந்தது.

விவசாய விளைபொருள்களை விற்பதற்கும் பண்டங்களாகத் தயாரிப்பதற்குமான கூட்டுறவுகள் விவசாயிகளது உற்பத்தியின் அஸ்திவாரத்தைத் தொடவில்லை. விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் வேலை செய்தார்கள். தங்கள் விற்பனைக்

குரிய விளை பொருள்களை விற்பதற்கும் பண்டங்களாகத் தயாரிப்பதற்கும் மட்டுமே அவர்கள் கூட்டுறவில் இணைந்தார்கள். உதாரணமாக, அது பால் கூட்டுறவாக இருந்தால் அது பாலை விற்பதற்கு நிலையமோ அல்லது பாலி லிருந்து வெண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையோ திறந்தது. இந்தப் பண்டங்கள் அரசுக்கு விற்கப்பட்டன. விவசாயக் கூட்டுறவு வளர்ந்ததற்கு ஏற்ப அது மேலும் மேலும் தனித் துறைகளில் ஈடுபடலாயிற்று. தானிய உற்பத்தியாளர்கள், பீட் கிழங்கு உற்பத்தியாளர்கள், பருத்தி விளைப்போர், சணல் பயிரிடுவோர், கால்நடை வளர்ப்பாளர்கள் முதலி யோரின் கூட்டுறவு நிறுவனங்கள் யூனியன் குடியரசுகளில் அமைக்கப்பட்டன. அரசு இவற்றுடன் ஒப்பந்த உடன்படிக்கை கள் செய்து கொண்டது. கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கும் விவசாய விளைபொருள்களுக்கு மாற்றாக விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்களும் கருவிகளும் பல்வகைத் தொழில் உற்பத்திப் பொருள்களும் வழங்குவதாக இவற்றின்படி அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்டது. 1929ம் ஆண்டில் விவசாயக் கூட்டுறவுகள் நாட்டின் எல்லா ஏழை, நடுத்தர விவசாயிகளின் பாதிக்கும் மேற்பட்ட பண்ணைகளை ஒன்றிணைத்தன.

உற்பத்திக் கூட்டுறவின் மிக எளிய வடிவங்களை அமைப் பதற்கு சப்ளை-விற்பனைக் கூட்டுறவு நிறுவனங்களைக் கட்சி பயன்படுத்திக் கொண்டது, இயந்திரங்களைக் கூட்டாகப் பயன் படுத்துவதிலும் சமூக உழைப்பிலும் உள்ள சாதகங்களை விவசாயிகள் உணருமாறு செய்தது. இயந்திரக் கூட்டுறவு களும் ஒன்று சேர்ந்து நிலத்தைப் பண்படுத்தும் கூட்டுறவு களும் நாட்டுப்புறத்தில் நாளுக்கு நாள் அதிக எண்ணிக்கை யில் உருவாகலாயின. விவசாயக் கூட்டுறவு நிறுவனங்கள் வாடகை இயந்திர நிலையங்களையும் இயந்திரங்கள்-டிராக்டர் களின் பிரிவுகளையும் தொகுதிகளையும் தங்கிடங்களையும் அமைத்து விவசாயிகளுக்கு அனுகூலமான நிபந்தனைகளின் பேரில் நிலத்தைப் பண்படுத்தவும் விளைச்சலை அறுவடை செய்யவும் அவர்களுக்கு உதவின. குதிரைகள் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு இந்த அமைப்பு சிறப்பாக உதவியாயிருந் தது. உழைக்கும் விவசாயிகள் கூட்டுப் பண்ணை அமைப்புப்

பாதையில் அடி வைத்தார்கள். கூட்டுப் பண்ணைகளை வழி காட்டி நடத்துவதற்காகக் கூட்டுப் பண்ணை மையங்கள் குடியரசுகளில் 1927ம் ஆண்டு நிறுவப்பட்டன.

கூட்டுப் பண்ணை அமைப்பை விரிவாக நடத்துவதில் அரசாங்கப் பண்ணைகள் முக்கியப் பங்கு ஆற்றின. இயந்திர உழைப்பின் பெருத்த அனுகூலங்களை அவற்றின் உதாரணத் தைக் கொண்டே விவசாயிகள் புரிந்து கொண்டார்கள். எடுத் துக்காட்டாக, வடக்குக் காக்கேஷியாவில் இருந்த ''கிகாந்த்'' என்னும் அரசாங்கப் பண்ணையை ஒரு லட்சத்துக்கும் மேல் விவசாயிகள் அந்த ஆண்டுகளில் சென்று பார்வையிட்டார் கள். டிராக்டர்களும் நவீன விவசாய இயந்திரங்களும் வேலை செய்வதைக் கண்டு அவர்கள் வியந்து பாராட்டினர்கள். இத்தகைய விவசாயிகள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிய தும் கூட்டுப் பண்ணைகள் அமைப்பதை உற்சாகமாக ஆதரித் தார்கள். பல அரசாங்கப் பண்ணைகள் அக்கம் பக்கத்துக் கிராமங்களின் விவசாயிகளுக்கு நிலத்தைப் பண்படுத்த உதவும் பொருட்டு இயந்திரங்களையும் டிராக்டர்களையும் அனுப்பி உதவின. உக்ரேனில் உள்ள ஷிவ்சேன்கோ அரசாங்கப் பண்ணை இந்த நோக்கத்துடன் நாட்டிலேயே முதலாவது இயந்திர-டிராக்டர் நிலையத்தை அமைத்தது. அதன் செயல் பரப்பில் இருந்த எல்லா விவசாயிகளும் கூட்டுப் பண்ணை களாகச் சேர்ந்தார்கள். வோல்கா ஆற்றின் கரையில் டிராக்டர் தொழிற்சாலை கட்டப்படுவது பற்றி விவசாயிகள் நிறையக் கேள்விப்பட்டார்கள். பிரமாண்டமான இந்த டிராக்டர் தொழிற்சாலை எவ்வாறு எழுகிறது என்பதைக் கண்ணாரக் காணும் பொருட்டு விவசாயிகளின் பிரதிநிதிக் குழுக்கள் நாள்தோறும் கட்டுமான ஸ்தலத்துக்கு வந்த வண்ணமிருந் தன. மொத்தம் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் விவசாயிகள் டிராக்டர் தொழிற்சாலைக் கட்டுமானத்தைப் பார்வையிட் டுச் சென்றார்கள். இவ்வாறு கட்சி லெனினது கூட்டுறவுத் திட்டத்தைச் செயல்படுத்தி, நாட்டுப் புறத்தில் பெருந் திரளான விவசாயிகளின் கூட்டுப்பண்ணை அமைப்புக்கு முன் ஏற்பாடுகள் செய்தது. 1929ம் ஆண்டின் பிற்பாதியில் இந்த அமைப்பு விரிவாகத் தொடங்கியது.

தொழிலாளிவர்க்கம் புதிய, கம்யூனிஸ சமூகத்தின் படைப்பாளி என்ற மாபெரும் மார்க்ஸீய-லெனினீயக் கருத்து சோவியத் நாட்டில் முதன் முதலாகச் செயல் வடிவம் பெற்றது. லெனின் எழுதினார்:''பாட்டாளிவர்க்கம் விவசாயிகளையும் பொதுவாக எல்லாக் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களையும் தன் பின் நடத்திச் செல்வதற்குத் தேவையானவை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், ஒரு வர்க்கத்தின் ஆட்சி, அதன் ஒழுங்கமைப்பு, கட்டுப் பாட்டுச் சக்தி, முதலாளித்துவப் பண்பாடு, விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் எல்லாச் சாதனைகளையும் ஆதாரமாகக் கொண்ட அதன் மையப்படுத்தப்பட்ட விறல், எல்லா வகை உழைப்பாளிகளதும் உளப்பாங்குக்கு நெருக்கமான அதன் பாட்டாளி வர்க்கத் தன்மை, கட்டுப்பாடு இல்லாத, குறைந்த வளர்ச்சி கொண்ட, அரசியலில் குறைந்த உறுதி உள்ள நாட்டுப்புற அல்லது சிறு உற்பத்தி உழைப்பாளி மீது அதன் செல்வாக்கு ஆகியவை.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 38, பக்கம் 386). லெனினது இந்த அடிப்படைக் கருத்தை சோவியத் சமூகத்தின் வரலாறு கண்கூடாக மெய்ப்பித்து விட்டது.

தொழிலாளி வர்க்கம் சோஷலிஸக் கட்டுமானத்தின் இயக்கு சக்தி

அந்தக் காலத்தில் தொழிலாளர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்காகவே இருந்தார்கள். மிகப் பெரும்பாலராக இருந்தவர்கள் விவசாயிகளே. உள் நாட்டுப் போரில் வெற்றிக்குப் பிறகு கட்சி தனது சக்தி எல்லாவற்றையும் சோஷலிஸக் கட்டுமானத்தில் ஈடுபடுத்திய போது, நாட்டில் ஆயிரத்தில் 25 பெயரே தொழிலாளர்கள், 3 பெயரே கம்யூனிஸ்டுகள். 33 கிராமங்களுக்கு ஒரே ஒரு கட்சி ஸ்தாபனம் மட்டுமே இருந்தது. அதில் சராசரி பதிஞெரு கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள்.

இந்த நிலைமைகளில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமை எவ்வாறு செயல்பட்டது? சோஷலிஸக் கட்டுமானத்தில் எல்லா உழைப்பாளிகளதும் தலைவன் என்ற தனது பணியைத் தொழிலாளி வர்க்கம் நிறைவேற்றும் சோவியத் நடைமுறையை லெனின் கூர்ந்த கவனத்துடன் ஆராய்ந்து,

மார்க்ஸீய சித்தாந்தத்தை இந்த நடைமுறையால் வளப் படுத்தினர்.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு தொழிலாளி வர்க்கத்தின் மதிப்பு மிகப் பெரும் அளவில் உயர்ந்தது, உழைப்பாளிகளிடையே அதன் அரசியல் செல்வாக்கு அள விட முடியாதவாறு தீவிரமாயிற்று. ஏற்ற ஸ்தாபன வடிவங் களால் இந்த மதிப்பினதும் செல்வாக்கினதும் சக்தியை நிலைப்படுத்துவதும் பெருக்குவதும் அவசியம் ஆயின.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் சோ வியத் அரசு அமைப்பிலேயே முதன்மையாக வெளிப்பட்டது. சோவியத் ஆட்சி உறுப்புக்களுக்கான தேர்தல்களிலும் அவற் றின் நடவடிக்கைகளிலும் அவற்றை வழிகாட்டி நடத்து வதிலும் தொழிலாளர்களுக்கு ஓரளவு சாதகமான வாய்ப் பை சோவியத் அரசியல் சட்டம் ஏற்படுத்தி இருந்தது. கட்சி யின் தலைமையில் செயலாற்றிய பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றித் திரளான உழைப்பாளிகளை சோவியத்துக்கள் ஒன் றிணைத்தன. சோவியத்துக்களின் மாவட்ட (உயேஸ்த்) காங் கிரஸ்கள் சிறப்பான இடம் பெற்றிருந்தன. மாவட்டக் காங் கிரஸ்களில் பெரும்பாலும் கிராம சோவியத்துக்களின் பிரதி நிதிகளே பங்கு கொண்டார்கள். அரசு அனைத்தின் வாழ்க்கை யையும் வட்டார வாழ்க்கையையும் குறித்த பிரச்சினைகள் இவற்றில் விவாதிக்கப்பட்டன. ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களைப் பிரதிநிதிகள் மிக எட்டாக்கையிலுள்ள மூலை களுக்கும் கூட எடுத்துச் சென்றார்கள். கட்சி இந்தக் காங் கிரஸ்களில் திரளான பொது மக்களின் மனநிலையை ஆராய்ந் தது, அவர்களுடைய கேள்விகளுக்கு விடைகள் அளித்தது, சிறந்த ஊழியர்களை அரசுப் பதவிகளுக்குப் பிரேரித்தது.

கிராமங்கள் சோஷலிஸத்திற்கு வளர்ச்சி அடைவதில் அவற்றுக்கு நேரடியாக உதவுவதில் தொழிலாளர்களையே ஈடுபடுத்துவது அவசியமாய் இருந்தது. இதைக் கட்சியின் மிக முக்கியப் பணிகளில் ஒன்றாகக் கருதினர் லெனின். நாட்டுப் புறத்தில் நிலையாக வேலை செய்வதற்கு அனுப்பப்பட்ட, கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகள் அல்லாதவர்களுமான அரசியல் உணர்வுள்ள தொழிலாளர்கள் கட்சியின் கொள் கைப் போக்கின் பொருட்டு உறுதியாகப் போராடினர்கள்.

இவர்கள் தவிர, சோவியத்துக்களின் தேர்தல்களையும் பிற இயக்கங்களையும் நடத்துவதில் பங்கு கொள்ளும் பொருட்டு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் நாட்டுப் புறம் சென்றார்கள். தொழிலாளர்கள் சென்ற இடங்களில் எல்லாம் ஒழுங்கமைப்பு, கட்டுப்பாட்டு உணர்வைப் பரப்பினார்கள். லெனின்கிராத், மாஸ்கோ, நீழ்னி நோவ்கரத் (தற்போதைய கோர்க்கி நகரம்), இவனேவோ-வஸ்னிஸேன்ஸ்க், உரால், தன்பாஸ் ஆகிய பெரிய தொழில் மையங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் முன்னே சென்றார்கள். போராட்டத்தின் மிகக் கடினமான பகுதிகளில் அவர்களைக் காண முடிந்தது. எல்லையின்றிப் பரந்த நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அவர்கள் புதிய, சோவியத் வாழ்க்கையை நிறுவினார்கள்.

நகரங்களின் பல்வேறு சமூக ஸ்தாபனங்கள் வாயிலாகவும் தொழிலாளர்கள் விவசாயிகள் மீது செல்வாக்கு செலுத்தினார்கள். இவற்றில் முதல் இடம் தொழிற்சங்கங்களுக்கு உரியதாகும். தொழிற்சங்கங்கள் நாட்டுப் புறத்தில் வேலை செய்யுமாறும் அவற்றின் உறுப்பினர்கள் விவசாயிகள் மீது பாட்டாளி வர்க்கச் செல்வாக்கைப் பரப்புபவர்கள் ஆகுமாறும் கட்சி ஏற்பாடு செய்தது. தொழிலாளர்களின் ஒரு பகுதியினர்—தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் — நாட்டுப்புறத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். சில தொழில் நிலையங்கள் நாட்டுப்புற வட்டாரங்களில் இருந்தன. விவசாயத் தொழிலாளர்களின் தொழிற்சங்கம் சிறப்பான முக்கியத்துவம் பெற்றிருந்தது. கிராமிய, நாட்டுப்புற வாழ்க்கை அனைத்தையும் மாற்றி அமைக்கும் முன்னணிச் சைனியம் என்று இதை லெனின் அழைத்தார்.

நாட்டுப்புறத்தின் அரவணைப்பாளர்கள் ஆகும் கருத்து திரளான தொழிலாளர்களிடையே உதித்தது. நாட்டுப்புறத்தில் சோஷலிஸத்தின் வெற்றிக்கான போராட்டத்தில் ஆலைகள், தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் தாமே விரும்பி, தமக்குத் தோன்றிய விதத்தில் நேரடியாகப் பங்கு கொள்ளும் இந்த முன் முயற்சிக்குக் கட்சி ஆதரவு அளித்தது. தொடக்கத்தில் இந்த அரவணைப்பு பண்பாட்டுத் துறையில் மட்டுமே செயல்பட்டது. பின்னர் உற்பத்தித் துறையிலும் இது வியாபித்தது. தொடக்கத்தில் இது தனித் தனி கிராமங்

களுக்குத் தனித் தனித் தொழில் நிலையங்களின் அரவணைப் பாக இருந்தது. பின்னர் விவசாயப் பிரதேசங்களுக்குத் தொ ழில் பிரதேசங்களின் அரவணைப்பாக இது வளர்ந்து விட்டது.

ஏழை விவசாயிகளே நாட்டுப்புறத்தில் கட்சியின் பிரதான ஆதரவாளர்களாக விளங்கினர்கள். புரட்சியின் தொடக்கத்தில், நாட்டுப்புறத்தில் சோவியத்துக்கள் இன்னும் உறுதிப்படாத சமயத்தில், ஏழை விவசாயிகளின் கமிட்டிகள் அமைக்கப்பட்டன என்பது ஏற்கனவே குறிக்கப்பட்டுள்ளது. பிற்பாடு, சோவியத்துக்களிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஏழை விவசாயிகளின் குழுக்கள் உருவாக்கப்பட்டன. நாட்டினப் பிரதேசங்களிலும் கட்சியின் ஆதரவுடன் ஏழை விவசாயிகளின் சங்கங்கள் அமைக்கப்பட்டன. நடுத்தர விவசாயிகளும் இவற்றில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். தங்களது வளர்ந்து வந்த ஒழுங்கமைப்பு காரணமாக ஏழை விவசாயிகள் நாட்டுப்புறத்தின் சமூக வாழ்க்கைமீது நாளுக்கு நாள் அதிகச் செல்வாக்கு செலுத்தினர்கள், குலாக்குகளுடன் தீவிரமாகப் போராடினர்கள்.

கட்சி விவசாயி மாதரையும் அரசியல் வாழ்வில் ஈடுபடத் தூண்டி எழுப்பியது. சோவியத் அரசு தங்களை ஆடவருக்குச் சமமான உரிமைகள் உள்ளவர்கள் ஆக்கியிருக்கிறது என் பதை நாட்டுப்புற மாதர்கள் உணர்ந்து கொண்டார்கள். எனவே, தங்கள் அன்புக்குரிய ஆட்சிக்கு ஆதரவாக அவர்கள் மலைபோல் நின்றார்கள். மாதர்களிடையே வேலையின் வடிவம் ஆயிற்று பிரதிநிதி மாதர்களின் கூட்டம். விவசாயிப் பெண் டிர் பிரதிநிதி மாதர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இவர்கள் தங்கள் கூட்டங்களில் நாட்டுப்புற வாழ்க்கை பற்றிய பல முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்கள். நாட்டுப் புறத்தில் புது வாழ்வை நிறுவுவதில் நகர மாதர் விவசாயிப் பெண்டிருக்கு உதவினர்கள்.

நாட்டுப்புறத்தில் கட்சியின் விசுவாசமுள்ள துணை வனுகப் பணி ஆற்றியது இளங் கம்யூனிஸ்டுகள் சங்கம் (காம்ஸ மோல்). நாட்டுப்புறத்தில் சோஷலிஸத்தை நிறுவும் பொ ருட்டுப் போராடிய இளம் கம்யூனிஸ்ட் வீரர்கள், குலாக்கு களையும் எல்லா சோவியத் விரோதிச் சக்திகளையும் அவ்வாறே தேக்க நிலையையும் விவசாய வளர்ச்சியில் இன்னும் நன்கு

அறியப்படாத சோஷலிஸப் பாதையின்பால் நம்பிக்கை இன்மையையும் எதிர்த்துத் துணிவுடன் போராடினர்கள்.

மைய, வட்டார நாளிதழ்களும் சஞ்சிகைகளும் விவசாயிகளுக்கு முக்கியமான தொண்டு ஆற்றின. கிராமப் பொது மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்கும் சுவர்ச் செய்தித் தாள் வெளிவராத வட்டம் ஒன்று கூட இல்லை. பல்லாயிரம் நாட்டுப்புற நிருபர்கள் குலாக்குகளின் அச்சுறுத்தல்களையும் மறைமுகத் துப்பாக்கிச் சூடுகளையும் கண்டு பயப்படாமல் சோஷலிஸக் குறிக்கோளைத் துணிவுடன் ஆதரித்து நின்றார்கள்.

கட்சி செஞ்சேனையிலும் போதித்துப் பயிற்றும் பெரிய வேலையை நடத்தியது. அதில் ஏராளமான நாட்டுப்புற இளைஞர்கள் இராணுவ சேவை புரிந்து வந்தார்கள். கட்சி அவர்களிடையே அரசியல் பயிற்சியும் பண்பாட்டு-கல்வி போதனையும் அளிக்கும் வேலையைச் செய்தது. விவசாயி இளைஞர்கள் அரசியல் உணர்வும் அறிவும் பெற்றவர்களாகப் பாசறைகளிலிருந்து வீடு திரும்பினர்கள். முன்னாள் செஞ்சேனை வீரர்கள் பலர் நாட்டுப்புறத்தில் பெருத்த செல்வாக்கு பெற்றிருந்தார்கள், வட்டார சோவியத்துக்களுக்குத் தலைமை வகித்தார்கள்.

பள்ளி ஆசிரியர்கள், விவசாய நிபுணர்கள், மருத்துவர்கள் போன்ற அறிவுஜீவிகளும் நாட்டுப்புறத்தில் புது வாழ்வுக்கான போராட்டத்தில் ஈடுபடும்படித் தூண்டப்பட்டார்கள். விவசாயிகளுக்கு அரசியல் கல்வி அளிக்கும் மையங்கள் அமைக்கப்பட்டன. நாட்டுப்புறத்தில் வாசகசாலைகளும் சிவப்புக் கூடாரங்களும், நகரத்தில் விவசாயிகள் விடுதிகளும் இத்தகையவை. நகரத்துக்குச் சொந்தக் காரியமாக வரும் விவசாயிகள் இந்த விடுதிகளில் இளைப்பாறவும் தேவையான யோசனைகள் பெறவும் சொற்பொழிவோ உரையோ கேட்கவும் நகரத் தலைவர்களுடன் உரையாடவும் முடிந்தது.

இவ்வாறு, கட்சி புரட்சியின் போக்கில் உதித்த ஸ்தாபன வடிவங்களையும் வேலை முறைகளையும் உன்னிப்பாகக் கவனித்தது, உயிரோட்டம் உள்ள எல்லாவற்றையும் கவனமாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டது, விவசாயத்தில் சோஷலிஸத்

முதல் டிராக்டர் கிராமத்துக்கு வருகிறது.
1925ம் ஆண்டு

தின் வெற்றிக்கு ஏற்பாடு செய்யும் வரலாற்றுச் சிறப்புள்ள காரியத்தில் திரளான தொழிலாளர்களின் முன்முயற்சிகளை வளர்த்து விரிவாக்கிற்று. லெனின் எழுதினார்: ''அக்டோபர் —சோவியத்—புரட்சியின் மாட்சி மிக்க, அழிக்க முடியாத செயல்களில் ஒன்று என்ன என்றால், முன்னணித் தொழிலாளி, ஏழை விவசாயிகளின் **வழிகாட்டி என்ற வகையில்,** நாட்டுப்புற உழைப்பாளி மக்கள் திரளின் **தலைவன் என்ற முறையில், உழைப்போர் அரசை நிறுவியவன் என்ற முறையில்,** மக்களுக்குத் தொண்டு செய்யலானான் என்பதே'' (முழு நூல் திரட்டு, தொகுதி 36, பக்கம் 363). முன்னணித் தொழிலாளிகளின் இந்த இயக்கத்தை ஒழுங்கமைக்க போல்ஷிவிக் கட்சிக்கு இயன்றது. விவசாயிகளின் வாழ்வு, விவசாயிகளின் பொருளாதாரம், அன்றுட வாழ்க்கை, உளப்பாங்கு ஆகியவற்றின் பல நூற்றாண்டுக்காலப் போக்கை சோஷலிஸ அடிப்படையில் புதுக்கி அமைக்கும் நெம்புகோலாக இந்த இயக்கத்தை மாற்ற அதனால் முடிந்தது. போல்ஷிவிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொண்டு இதுவே.

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றி

தேசியப் பொருளாதாரம் ஒவ்வோர் ஆண்டுக்கும் உரிய அனைத்து அரசுத் திட்டங்களின் அடிப்படையில் மீட்ட மைக்கப்பட்டது. ஆனால் கட்சி அழிவுற்றதை வெறுமே மீட்டமைப்பதுடன் நின்று விடவில்லை. தேசியப் பொருளாதாரம் முழுவதையும் புதிய தொழில் நுட்ப அடிப்படையில் மாற்றி அமைக்கும் பணியை அது மேற்கொண்டது. ஆயிரக் கணக்கான பெரிய ஆலைகளும் தொழிற்சாலைகளும் மின் நிலையங்களும் புதிய நகரங்களும் நிறுவுவதற்குத் துல்லியமான கணக்கீடு தேவைப்பட்டது. இதற்கு எவ்வளவு பணம் வேண்டும், இயந்திர சாதனங்களை எங்கிருந்து பெறுவது, தொழிலாளர்களை எங்கிருந்து அழைப்பது என்பவற்றை எல்லாம் சரியாகத் திட்டமிட வேண்டியிருந்தது. ஓர் ஆண்டுக்கு மட்டும் கணக்கிட்டு இவ்வளவு பெரிய வேலையை நடத்துவது சாத்தியமாய் இல்லை. எனவே கட்சி **வருங்கால நோக்குடன்,** அனேக ஆண்டுகளுக்குச் சேர்த்துக் கணக்கிட்டுத் திட்டம் வகுப்பதை மேற்கொண்டது. தனி உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் ஒவ்வொரு தொழிற்சாலை, ஆலை, எஸ்டேட் சொந்தக்காரனும் தன்னுடைய லாபமே குறியாய் இருப்பான், சமூகம் முழுவதன் நலன்களைப் பொருட்படுத்த மாட்டான். எனவே அங்கே இம்மாதிரித் திட்டம் வகுப்பது சாத்தியம் அல்ல. சோவியத் நாட்டில் சமூக சோஷலிஸ உடைமை நிலவியபடியால் பொருளாதார வளர்ச்சிக்கு உரிய வருங்கால நோக்குள்ள திட்டம் வகுப்பது முற்றிலும் சாத்தியம் ஆயிற்று. பதினைந்தாவது கட்சிக் காங்கிரஸின் கட்டளைப்படி, 1928, அக்டோபர் 1ந் தேதி முதல் 1933 அக்டோபர் 1ந் தேதிவரை சோவியத் யூனியனின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்குரிய **முதலாவது ஐந்தாண்டுத் திட்டம்** வகுக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம்

சோவியத் யூனியனில் **சோஷலிஸத்தின் அடித்தளத்தை,** அதன் திண்ணமான அஸ்திவாரத்தை, நிறுவுவது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாய் இருந்தது. இதற்குப் பின்

வருவன தேவைப்பட்டன: எல்லாத் தொழில் துறைகளுக்கும் விவசாயத்துக்கும் போக்குவரத்துக்கும் தேவையான இயந்திரங்களைத் தயாரிக்கும் பெரிய தொழிற்சாலைகளைக் கட்டுவது; விவசாயிகளை ஒன்று இணைக்கும் கூட்டுப் பண்ணைகளை நாட்டுப்புறத்தில் அமைப்பது; நகரங்களிலும் கிராமங்களிலும் முதலாளித்துவப் போக்குள்ள சக்திகளை ஒழிப்பது. கனரக இயந்திரத் தொழிலை நிறுவுவதுதான் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் அச்சாணியாக விளங்கியது. அதன் உற்பத்தி ஐந்து ஆண்டுகளில் இரு மடங்குக்கும் அதிகமாய் இருக்க வேண்டியிருந்தது. தொழில் வளர்ச்சியின் இந்த வேகம் உலகின் எந்த நாடும் கண்டிராத ஒன்று.

சோவியத் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய செய்தி உலகு எங்கும் பரவிற்று. முதலாளித்துவ நாடுகளின் உழைப்பாளி மக்கள் அதைப் பெருமையுடன் வியந்து பாராட்டினர்கள். பூர்ஷ்வாக்களும் அவர்களுடைய கையாட்களுமோ, அதை வன்மத்துடன் நையாண்டி செய்தார்கள். முதலாளித்துவ உலகின் ஆளுநர்கள் ஐந்தாண்டுத் திட்டம் சோவியத் கம்யூனிஸ்டுகளின் ''பகற் கனவு'' என்று கருதினர்கள். ஆனால் சோவியத் அமைப்பில் எத்தகைய வாய்ப்புக்கள் செறிந்திருந்தன என்பதையும் தங்கள் நாட்டின் விதியைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, சுரண்டுவோருக்காக இன்றித் தங்களுக்காகவே உழைத்தால் உழைப்பாளி மக்கள் என்ன சாதிக்க வல்லவர்கள் என்பதையும் அவர்கள் நன்றாக அறியவில்லை.

ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவது, நாட்டின் ஒரு நூற்றாண்டு பின்தங்கிய நிலையைக் குறுகிய காலத்துக்குள் போக்குவது லேசாக இல்லை தான். கட்சி கஷ்டங்களை மக்களிடமிருந்து மறைக்கவில்லை. புதிய ஆலைகளுக்கும் தொழிற் சாலைகளுக்கும் தேவையான சொந்த இயந்திர சாதனங்கள் அனேகமாக இல்லை. இவற்றை வெளிநாடுகளில் முதலாளிகளிடம் வாங்கவும் அவற்றுக்காக மிகுந்த விலை செலுத்தவும் வேண்டியிருந்தது. இதற்காக தானியம், கட்டுமான மரம், பெட்ரோலியம் ஆகியவற்றை—நாட்டுக்கே தேவையாய் இருந்தவற்றை—விற்க வேண்டியிருந்தது. நாட்டில் தானியம் போதும் போதாது என்ற அளவே எஞ்சியது.

உழைப்பாளிகள் வயிறுகளைக் காயப் போட நேர்ந்தது. ஒரே சமயத்தில் தொழிற்சாலைகளையும் வசதி வாய்ந்த இருப்பிட வீடுகளையும் கட்ட அரசால் முடியவில்லை. நிதி வசதிகள் போதவில்லை. புதிய கட்டுமான ஸ்தலங்களில் தொழிலாளர் கள் மண் குடிசைகளிலும் கூடாரங்களிலும் பாரக்குகளிலும் வசித்தார்கள். கட்டுமான வேலையில் இயந்திரக் கருவிகள் குறைவாகவே இருந்தன. கடினமான பல வேலைகளைக் கைக ளாலேயே செய்ய வேண்டியிருந்தது. நிபுணர்கள் போத வில்லை. தவிர, பழைய நிபுணர்களில் சிலர் நாச வேலைகளில் ஈடுபட்டார்கள்.

வேகத்தைக் குறைத்து, முதலில் நுகர்வுப் பொருள்கள் உற்பத்தி செய்யும் லேசுரகத் தொழில் நிறுவி, உலோக வார்ப்பு, இயந்திர நிர்மாணத் தொழிற்சாலைகளைக் குறைந்த எண்ணிக்கையில் கட்டி இருந்தால் நாட்டில் தொழில் பெருக் கம் செய்யும் காரியம் பல பத்தாண்டுகளுக்கு நீண்டிருக்கும். திறன்மிக்க தொழில் துறையை அமைப்பது சோவியத் ஆட்சி யின் வாழ்வையும் சாவையும் பற்றிய பிரச்சினை என்றும் அதன் பொருளாதார சுதந்திரத்துக்கு வகை செய்வதையும் தற்காப்புத் திறனை உயர்த்துவதையும் பற்றிய பிரச்சினை என்றும் கட்சி மக்களுக்கு விளக்கியது. உலகின் ஒரு தனி சோஷலிஸ அரசு, தேவைப்பட்டால் தனக்குப் போதிய எண் ணிக்கையில் நவீனத் தற்காப்பு சாதனங்களைத் தயாரித்துத் தர வல்ல தொழில்துறை இல்லாமல், பகைமை கொண்ட முதலாளித்துவ நாடுகளின் முற்றுகைக்குள் நெடுங்காலம் நிலவ முடியாது. இந்த உண்மைகள் எல்லாவற்றையும் தொழி லாளி வர்க்கம் தெளிவாகப் புரிந்து கொண்டது. எனவே தான், நாட்டைப் பின்தங்கிய நிலையிலிருந்து விரைவாக மீட்டு முன்னேற்றும் பொருட்டும் அதை அணுக முடியாத சோஷ லிஸக் கோட்டையாக மாற்றும் பொருட்டும் மிகப் பெரிய இடர்களைச் சமாளித்து, உண்மையிலேயே உழைப்பு வீர அற்புதங்களை விளைத்தது தொழிலாளி வர்க்கம்.

சோவியத் தொழிலாளிகள், கட்சியைப் போலவே, ஐந் தாண்டுத் திட்டத்தை எப்பாடு பட்டாகிலும் நிறைவேற் றியே தீர்ப்பது என்ற ஒரே விருப்பத்தால் ஆட்கொள்ளப் பட்டிருந்தார்கள். நாடு முழுவதிலும் புதுக் கட்டுமானச் சாரங்

கள் காட்சி அளிக்கலாயின. உராலிலும் மேற்கு சைபீரியாவி லும் பிரமாண்டமான இரண்டு உலோக வார்ப்புத் தொழிற் சாலைகள் எழுந்தன. இவைதாம் மக்னித்தகோர்ஸ்க் தொழிற் சாலையும் குஸ்னேத்ஸ்க் தொழிற்சாலையும். அங்கேயே நிலக்கரிச் சுரங்கங்களும் இரும்புக் கனிகளும் தோண்டப்பட் டன. ஐந்தாண்டுத் திட்டக் காலத்துக்குள் நாட்டின் கிழக்குப் பகுதியில் திறன்மிக்க புதிய நிலக்கரி-உலோக அடித்தளத் தை உருவாக்குவது இவற்றின் கடமையாக இருந்தது. இதற்கு முந்திய நிலக்கரி-உலோக அடித்தளம் நாட்டின் தெற்கே, தன்பாஸில் இருந்தது. தன்பாஸிலும் புதிய தொழிற்சாலை கள் கட்டப்பட்டன, பழைய தொழிற்சாலைகள் புதுக்கி அமைக்கப்பட்டன. உக்ரேனில் த்னேப்பர் நீர் மின் நிலையம் நிறுவப்பட்டது. இது அந்தக் காலத்தில் உலகிலேயே ஆகப் பெரிய நீர்மின் நிலையமாக விளங்கியது. முன்னர் ஆலைகளும் தொழிற்சாலைகளும் அறவே இல்லாத மத்திய ஆசிய சோவியத் குடியரசுகளில் பேரளவுத் தொழில் துறையின் முதல் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

கட்டுமானத் தொழில் மிகப் பெருந் திரளான மக்களின் மதிப்புக்குரிய தொழில் ஆயிற்று. கட்டுமானத் தொழிலாளர் களில் முன்னவர்களாக விளங்கினர்கள் கம்யூனிஸ்டுகளும் இளங் கம்யூனிஸ்டுகளும். முன்னர் மனிதர் வசித்திராத இடங்களுக்கு அவர்கள் போனர்கள், பல்லாயிரம் உற்சாகி களைத் தங்களுடன் இட்டுச் சென்றார்கள், இளம் தொழி லாளர் குழுக்களை அமைத்து வலுவாக ஒன்றுபடுத்தினர்கள். நாட்டு மக்கள் அனைவரும் புதுத் தொழில் நிலையங்களைக் கட்டுவோருக்கு ஆதரவு தந்து தேவையானவற்றை எல்லாம் வழங்கினர்கள்.

புதிய தொழில் நுட்பத்திலும் புதிய, சிக்கலான உற்பத்தி முறைகளிலும் தேர்ச்சி பெறுவதிலுள்ள கஷ்டங்களையும் கட்சி முன்கண்டது. உயர்நிலை, நடுநிலைத் தொழில்நுட்பக் கல்விச்சாலைகள் நூற்றுக் கணக்கில் திறக்கப்பட்டன. தொழி லாளர்கள் கல்லூரிகளில் புகுவதற்கு வசதி செய்யும் பொருட்டு அவற்றில் தொழிலாளர் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டன. கல்லூரிகளிலும் தொழில் பள்ளிகளிலும் பயின்ற மாணவர்களில் நான்கில் மூன்று பெயர் தொழிலாளர்களாக

இருந்தார்கள். நான்கில் ஒரு மாணவன் கம்யூனிஸ்ட். ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் துறைக்கு சுமார் ஒரு லட்சம் பொறி இயலாரும் தொழில்நுட்ப நிபுணர்களும் கிடைத்தார்கள். இவர்கள் புதிய, சோவியத் தொழில்நுட்ப அறிவுஜீவிகள். கட்சியும் சோவியத் ஆட்சியும் இவர்கள்மீது உறுதியாகச் சார்ந்திருக்க முடிந்தது. தொழில்நுட்பத் தேர்ச்சி பெறும்படி எல்லாத் தொழிலாளர்களுக்கும் கட்சி அறை கூவல் விடுத்தது. தொழில்நுட்ப அறிவு பெறும் திரளான மக்களின் இயக்கம் தொடங்கியது. லட்சோப லட்சம் கட்டு மானத் தொழிலாளர்கள் தங்கள் முறை வேலையைச் செய்து முடித்தபின் தொழில்நுட்ப வட்டங்களிலும் பள்ளிகளிலும் வகுப்புக்களிலும் பயிற்சி பெற்றார்கள். தரையைத் தோண்டு பவர்களும் கட்டுமானத் தொழிலாளர்களும் எஃகு வார்ப் பவர்களாகவும் ஊதுலைத் தொழிலர்களாகவும் கருமான் களாகவும் கடைச்சற்காரர்களாகவும் காரோட்டிகளாகவும் மின்வினைஞர்களாகவும் பயின்று தேர்ந்தார்கள். தொழிற் சாலைகள் வேலை தொடங்கிய போது தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் அவற்றுக்குக் கிடைத்திருந்தார்கள்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் மிகப் பெரும் லட்சியங்கள் திரளான மக்களின் பேரூக்கத்தைத் தூண்டி விட்டன. ''ஐந் தாண்டுத் திட்டத்தை நான்கு ஆண்டுகளில் நிறைவேற்று வோம்!'' என்னும் கோஷத்தை லெனின்கிராத் தொழி லாளர்கள் எழுப்பினார்கள். நாட்டுப்பற்று மிக்க இந்த முன்முயற்சிக்குக் கட்சி ஆதரவு அளித்தது. நாட்டின் பெரிய தொழிற்சாலைகளின் மூன்றில் இரண்டுக்கும் மேல் தொழி லாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டார்கள். தொழிலாளர் குழு தொழிலாளர் குழுவுடனும் தொழிற் கூடம் தொழிற் கூடத்துடனும் தொழிற்சாலை தொழிற்சாலை யுடனும் போட்டி போட்டது. கம்யூனிஸ்டுகள் உழைப்புக்கு உதாரணம் காட்டினார்கள். சோஷலிஸப் போட்டி, வரலாறு முன் காணாத புதிய நிகழ்ச்சியாக விளங்கியது. இதன் மூலையை 1919ல் நடந்த கம்யூனிஸ்ட் ஸுபோத்னிக்குகளில் (சனிக்கிழமை இலவச உழைப்பில்) லெனின் கண்டிருந்தார். ஸுபோத்னிக்குகளை மாபெரும் முன்முயற்சி என அப்போது அவர் அழைத்தார். லெனின் எழுதினார்: ''பூர்ஷ்வா வர்க்

கத்தை ஆட்சியிலிருந்து அகற்றியதைக் காட்டிலும் அதிகக் கடினமான, அதிக முக்கியமான, அதிக அடிப்படையான, அதிக நிர்ணயகரமான புரட்சியின் தொடக்கம் இது, ஏனென்றால், பாழாய்ப் போகிற முதலாளித்துவம் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மரபுரிமையாக விட்டுச் சென்றிருக்கும் சொந்தத் தேக்கநிலை மீதும் கட்டுப்பாடின்மை மீதும் குட்டி பூர்ஷ்வாத் தன்னலத்தின்மீதும், இந்த வழக்கங்கள் மீதும் வெற்றியாகும் இது.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 39, பக்கம் 5). அந்தக் காலத்தில் இவை புதியதன் முதல் முளைகளாக மட்டுமே இருந்தன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது கட்சி இவற்றைப் பேணி வளர்த்தது, அவையும் செழிப்பான விளைச்சல் தந்தன.

நாடு முன்னர் பொருளாதார, தொழில்நுட்ப நோக்கில் பின்தங்கி இருந்ததன் விளைவாக ஏற்பட்ட பல தொல்லைகளைத் தொழிலாளர்கள், பொறி இயலார், தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோரின் முன்முயற்சியும் படைப்புத் தன்மை கொண்ட உழைப்பும் வெற்றி கொண்டன. இதற்கு எடுத்துக் காட்டுகள் ஏராளமாக இருந்தன. அவற்றில் ஒன்று இது. பேரளவான உலோக வார்ப்புத் தொழிலுக்கு புளூமிங்குகள் என்னும் உருளை இயந்திரங்கள் தேவைப்பட்டன. ஆனால் ருஷ்யாவில் இவை தயாரிக்கப்படவில்லை. முதலாளித்துவ நாடுகளில் இவற்றுக்கு ஆர்டர் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொள்ள நேர்ந்தது. ஒரு ஜெர்மானியக் கம்பெனி ஒரு கோடி எழுபது லட்சம் தங்க ரூபிள்கள் ஒரு புளூமிங்குக்கு விலையாகக் கேட்டது, இதைச் செய்து தர ஓர் ஆண்டுக் காலம் தேவை என்று கூறியது. சோவியத் மக்கள் தங்கள் அரசை இவ்வளவு பெரும் செலவுக்கு உள்ளாக்க இசையவில்லை. லெனின்கிராதின் அருகில் உள்ள இழோர் தொழிற்சாலையின் தொழிலாளர்களும் நிபுணர்களும் புளூமிங்கை நாங்களே தயாரிக்கிறோம் என்று கூறினார்கள். முதலாவது சோவியத் புளூமிங்கை ஒன்பதே மாதங்களில் நிர்மாணித்தும் விட்டார்கள். இது தாய்நாடு இட்ட பொறுப்புள்ள ஆணை என்று அவர்கள் எண்ணினார்கள். இதை நிறைவேற்றிய பின் சுமார் எழுநூறு தொழிலாளர்கள் விரும்பியது எல்லாம் கம்யூனிஸ்டு

கள் ஆக வேண்டும், லெனினுடைய கட்சியின் உறுப்பினர் கள் ஆக வேண்டும் என்பது ஒன்று தான்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் குறித்த கெடுவுக்கு முன்பே, நான்கு ஆண்டுகள், மூன்று மாதங்களில் நிறை வேற்றப்பட்டு விட்டது. 1500 பெரிய தொழிற்சாலைகள் உற்பத்தி தொடங்கின. இரும்பு வகை உலோகத் தொழிலும் இயந்திர நிர்மாணத் தொழிலும் புதிதாக அமைக்கப்பட் டன. தொழில் துறையில் புதிய கிளைகள் தோன்றின: டிராக் டர், மோட்டார்-லாரி நிர்மாணத் தொழில், இரசாயனத் தொழில், விமானம் கட்டும் தொழில், தற்காப்பு சாதனத் தொழில் ஆகியன. சோவியத் யூனியன் தொழில் பெருக்கம் பெற்ற நாடு ஆகி விட்டது. சோவியத் யூனியனில் சோஷ லிஸத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டு விட்டது. தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்கும் புதிய சாதன பலம் அளிக்க வல்ல திண்ணமான தொழில்துறை-தொழில் நுட்ப அஸ்திவாரம் நிறுவப்பட்டு விட்டது.

சோவியத் யூனியனில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிகள் சோஷலிஸம் முதலாளித்துவத்தை விட மேம் பட்டது என்பதற்கு ஒளி வீசும் சான்றுகளாகத் திகழ்ந்தன. இது நிறைவேற்றப்பட்ட சமயத்தில் முதலாளித்துவ உலகம் மிக மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் தொழில் உற்பத்தியை இரு மடங்காகப் பெருக்கியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலோ, 1929—1932ல் இது அனேகமாகப் பாதியாகக் குறைந்து விட் டது. மற்ற முதலாளித்துவ நாடுகளிலும் இதே நிலைமைதான் காட்சி அளித்தது. சோவியத் நாட்டில் தொழில் துறை ஏற்றத்தோடு கூடவே உழைப்பாளிகளின் வாழ்க்கை வசதி கள் மேம்பட்டன, வேலையில்லாமை அறவே அகற்றப்பட் டது. முதலாளித்துவ நாடுகளிலோ, வேலையில்லாத் திண் டாட்டம் முன் ஒருபோதும் கேட்டிராத அளவுக்குப் பெருகி விட்டது, நடுத்தர வகுப்பினர் பெருந்திரளாகச் சீரழிவுக்கு உள்ளாயினர், தொழிலாளர்களதும் விவசாயிகளுடையவும் நிலைமை படு மோசம் ஆயிற்று.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் குறித்த கெடுவுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டது சோவியத் யூனியன் தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பெரிய வெற்றி, கம்யூனிஸ்ட் கட்சியினது கொள்கையின் அசாதாரண வெற்றி ஆகும்.

கூட்டுப் பண்ணை அமைப்பு நிறுவப்படுதல்

தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பு உற்சாகம் திரளான விவசாயிகளிடையிலும் பரவியது. ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்த கெடுவுக்கு முன் நிறைவேற்றும் பெரு முயற்சியில் தொழிலாளர்கள் தீவிரமாக முனைந்திருந்த போது நாட்டுப்புறத்தில் பெருந்திரளான விவசாயிகளின் கூட்டுப்பண்ணை இயக்கம் விரிவாகப் பரவியது. தொழில் பெருக்க வெற்றிகள் விவசாயத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதற்குத் தேவையான அடித்தளத்தை அமைத்தன. இது சோஷலிஸக் கட்டுமானத்தின் மிகச் சிக்கலான பணிகளில் ஒன்றாக இருந்தது. இரண்டரைக் கோடி விவசாயிக் குடும்பங்களின் வாழ்க்கை முறை முழுவதையும் நூற்றாண்டுக் கணக்கான மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் வேருடன் களைவது அவசியமாய் இருந்தது.

நாட்டுப் புறத்துக்கு டிராக்டர்களும் இயந்திரங்களும் அளிப்பது இன்றியமையாதது, அவை இல்லாமல் பேரளவு சோஷலிஸ விவசாயம் சாத்தியம் இல்லை என்பதைக் கட்சி புரிந்து கொண்டிருந்தது. சிறு விவசாயியை, அவனுடைய உளப்பாங்கையும் வழக்கங்களையும் மாற்றி அமைக்க வல்லது ''...பொருளியல் அடித்தளம் மட்டுமே, தொழில் நுட்பமும் டிராக்டர்களும் இயந்திரங்களும் விவசாயத்தில் திரளான அளவில் உபயோகிக்கப்படுவதும் திரளான அளவில் மின் வசதிகள் ஏற்படுத்தப்படுவதுமே'' என்று எழுதினார் லெனின். (முழு நூல் திரட்டு, தொகுதி 43, பக்கம் 60).

உழைக்கும் விவசாயிகளுக்கு, முதன்மையாக ஏழை விவசாயிகளுக்கு அரசு அளித்த உதவியின் விளைவாகவும் கட்சி ஸ்தாபனங்கள் செய்த பெருத்த அரசியல், ஒழுங்கமைப்பு வேலையின் விளைவாகவும் 1929ம் ஆண்டுக் கடைசியில் நாட்டின் தானியப் பிரதேசங்களில் விவசாயிகளின் முழு முழுக் கிராமங்கள் கூட்டுப் பண்ணை வாழ்க்கையை மேற்கொள்ளலாயின. முழுமையான கூட்டுப்பண்ணை அமைப்பு தொடங்

கியது. விவசாயிகளின் பெரும்பான்மையான திரள் கூட்டுப் பண்ணைகளின் தரப்பில் முடிவாகத் திரும்பிவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் திரளான மக்களின் கூட்டுப் பண்ணை இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்தின. கூட்டுப் பண்ணைகளுக்குக் கடன்கள் வழங்கப்பட்டன, அவற்றுக்குப் பணி ஆற்றும் பொருட்டு இயந்திர-டிராக்டர் நிலையங்கள் அமைக்கப்பட்டன, கூட்டுப் பண்ணைத் தலைவர்களுக்கு வகுப்புக்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. புதிய கூட்டுப்பண்ணை வாழ்க்கையை ஒழுங்கமைப்பதில் விவசாயிகளுக்கு உதவும்படி கட்சி தொழிலாளர்களுக்கு வேண்டுகோள்விடுத்தது. இருபத்தையாயிரம் கம்யூனிஸ்ட் தொழிலாளர்கள் கிராமங்களுக்குச் சென்றார்கள். ஏழை, நடுத்தர விவசாயிகளில் மிகுந்த அரசியல் உணர்வு பெற்றவர்களை அவர்கள் ஒன்று திரட்டி, லட்சோப லட்சம் விவசாயிகளை சோஷலிஸக் கட்டுமானத்திற்குப் பயிற்றினார்கள்.

1930ம் ஆண்டுத் தொடக்கத்தில் கூட்டுப் பண்ணை அமைப்பைச் செயல்படுத்துவதில் தவறுகள் நிகழ்ந்தன. பல ஊழியர்களின் அனுபவம் இன்மை, கூட்டுப் பண்ணை அமைப்பை விரைவுபடுத்தும் விருப்பம் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்டன இந்தத் தவறுகள். எதார்த்தத்தில், விவசாயிகள் தாமாகவே விரும்பிக் கூட்டுப் பண்ணைகளில் சேர வேண்டும், நடுத்தர விவசாயிகளிடம் மென்மை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற லெனினது கோட்பாட்டுக்குப் பதில் நிர்வாகச் சடங்கு முறை கையாளப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் விவசாயிகள் கூட்டுப் பண்ணைகளில் சேரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். முக்கிய உற்பத்திச் சாதனங்கள் மட்டும் இன்றி, பசுக்கள், பன்றிகள், ஆடுகள் முதலிய எல்லாக் கால்நடைகளும் கோழிகளும் வாத்துக்களும் கூடப் பொது உடைமை ஆக்கப்பட்டன. கூட்டுப் பண்ணை அமைப்பில் நிகழ்ந்த தவறுகளைக் குலாக்குகளும் அவர்களுடைய கையாட்களும் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் கால்நடைகளைக் கொன்றுவிடும்படி விவசாயிகளைத் தூண்டிவிட்டார்கள். நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை மளமளவென்று குறையத் தொடங்கிற்று.

சுய விருப்பக் கோட்பாடு மீறப்பட்டதனால் விவசாயி

களிடையே அதிருப்தி பரவியது, பெருத்த அபாயம் ஏற் படும் வாய்ப்பு இருந்தது. இந்த அபாயத்தைக் கட்சி விரை வில் உணர்ந்தது. மத்தியக் கமிட்டியின் கட்டளைப்படி, இந்தத் தவறுகளைத் திருத்துவதற்கான உடனடி நடவடிக்கை களை அது எடுத்துக் கொண்டது. விவசாயிகளைக் கூட்டுப் பண் ணைகளில் சுய விருப்பத்தின் பேரிலேயே சேர்க்க வேண்டும் என்ற லெனினது கோட்பாடு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. கூட்டுப்பண்ணை அமைப்பு விரிவடைந்தது. நாட்டின் ஏழை, நடுத்தர விவசாயிகளின் மொத்தப் பண்ணைகளில் சுமார் நான்கில் ஒரு பகுதி கூட்டுப் பண்ணை முறையை உறுதியாக மேற்கொண்டுவிட்டது.

கூட்டுப் பண்ணைகள் சோவியத் அரசின் பலத்த தூண் களாக விளங்கின. நாட்டுப்புறத்தில் சோஷலிஸ சக்திகளின் வளர்ச்சி, சுரண்டுவோரின் கடைசியான, எண்ணிக்கையில் மிகப் பெருத்த வர்க்கத்தை—குலாக்குகளை—ஒழிப்பதற்கு வாய்ப்பான நிலைமைகளை ஏற்படுத்தியது. பெருந் திரளான விவசாயிகள் சேர்ந்த கூட்டுப் பண்ணைகள் உள்ள வட்டாரங் களில், குலாக்குகளின் கால்நடைகளையும் இயந்திரங்களையும் பண்ணைக் கட்டிடங்களையும் கூட்டுப் பண்ணைகளின் உப யோகத்துக்காகப் பறிமுதல் செய்ய விவசாயிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. குலாக்குகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதும் அவர்களது வாக்குரிமை பறிக்கப்படுவ தும் எல்லா நாடுகளுக்கும் கட்டாயம் ஆன நடவடிக்கை அல்ல. அவர்கள் சோவியத் ஆட்சிக்கு விசுவாசமாக நடந்துகொண் டால் அவர்களது உடைமைகளைப் பறிமுதல் செய்வது அவசி யமாய் இராது என்று லெனின் கூறினார். ஆனால் சோவியத் யூனியனில் குலாக்குகளின் பண்ணைகள் பத்து லட்சத்துக்கும் மேல் இருந்தன. குலாக்குகள் பெரிய சக்தியாக விளங்கினார் கள். பட்டினியின் மூலம் சோவியத் ஆட்சியை ஒடுக்கவும் ஆயுத பலத்தால் அதைக் கவிழ்க்கவும் அவர்கள் பல முறை முயன்றார்கள். குலாக்குகள் கூட்டுப் பண்ணை முறையை எதிர்த்து மூர்க்கமாகப் போராடினார்கள், விவசாயிகளை மிரட் டினார்கள், ஊக்கமுள்ள நாட்டுப்புற ஊழியர்களைக் கொன் றார்கள். எனவே அவர்களுக்கு எதிராகக் கடுமையான நட வடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் ஆயிற்று. கூட்டுப்

உஸ்பெகிஸ்தானில் முதல் டிராக்டர், 1929ம் ஆண்டு

விவசாயிகள் கூட்டுப் பண்ணையில் சேர்கிறார்கள்.
1930ம் ஆண்டு

நாட்டுப் புறத்தில் கூட்டுப்பண்ணைகள்
அமைக்கப்படுகின்றன



இயந்திர-டிராக்டர் நிலையத்தில் டிராக்டர்களின்
வரிசை

பண்ணைகளில் சேர்ந்த ஏழை, நடுத்தர விவசாயிகள் இவ்வாறு செய்யும்படி வற்புறுத்திக் கோரினர்கள்.

குலாக்குகள் நாட்டின் எல்லைப்புற இடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே அவர்கள் சொந்த உழைப்பினால் பிழைப்பு நடத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு வேறு இடங்களில் குடியேற்றப்பட்ட குலாக்குகளின் குடும்பங்களுக்கு இருக்க இடமும் வேலையும் உணவுப் பொருள்களும் கிடைக்கும்படி சோவியத் அரசு ஏற்பாடு செய்தது. பின்னர் மிகப் பெரும்பாலான விவசாயிகள் சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதை விட்டு விட்டு, தொழிற்சாலைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் வேலை செய்யத் தொடங்கி, படிப்படியாக உழைப்பாளிகளாக மாறிவிட்டார்கள். அவர்கள் மீதிருந்த அரசியல் தடை வரம்புகள் எல்லாம் அகற்றப்பட்டன. அவர்கள் சோஷலிஸ சமூகத்தின் சம உரிமை பெற்ற உறுப்பினர் ஆனார்கள்.

1930ல் உருவான கூட்டுப் பண்ணைகள் ஒன்றுபட்டு வேலை செய்தன, பெருத்த வெற்றிகள் அடைந்தன. அரசாங்க இயந்திர-டிராக்டர் நிலையங்கள் நிலத்தைப் பண்படுத்துவதிலும் விளைச்சலை அறுவடை செய்வதிலும் அவற்றுக்கு உதவின. முன்பு ஏழைகளாய் இருந்த விவசாயிகள் கூட்டுப் பண்ணை வாழ்க்கையின் முதல் ஆண்டுகளிலேயே வசதிகள் பெற்றவர்கள் ஆகிவிட்டார்கள். தனியாள் பண்ணைகள் வைத்துக் கொண்டிருந்த நடுத்தரக் குடியானவர்களைக் காட்டிலும் அதிக அளவில் தானியமும் பிற உணவுப் பண்டங்களும் அவர்களுக்குக் கிடைத்தன. ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் என்ற பிரிவுபாடு கூட்டுப் பண்ணைகளில் மறைந்து விட்டது. கூட்டுப் பண்ணை உறுப்பினன் ஒவ்வொருவனதும் வருமானம் பொதுப் பண்ணையில் அவனுடைய உழைப்பையே பொறுத்திருந்தது. இந்த அர்த்தத்தில் எல்லோரும் சமம் ஆகி விட்டார்கள். முதல் கூட்டுப் பண்ணைகளின் நல்ல உதாரணமும் அவற்றின் வெற்றிகளும் சிறு தனிப் பண்ணைகளைக் காட்டிலும் பெரிய கூட்டுப் பண்ணைகளில் உள்ள அனுகூலங்களுக்கு மிகவும் நம்பிக்கையூட்டும் சான்றுகளாக விளங்கின. கட்சி கூட்டுப் பண்ணை இயக்கத்தை மேலும் விரிவாக நடத்துவதற்கு இந்த வெற்றிகளைப் பயன்படுத்திக் கொண்

டது. 1931ம் ஆண்டுக் கோடைகாலத்துக்குள் ஒரு கோடி முப்பது லட்சம், அதாவது நாட்டின் மொத்த விவசாயிகளின் பண்ணைகளில் பாதிக்கு மேல், கூட்டுப் பண்ணைகள் ஆகி விட்டன.

கூட்டுப் பண்ணை அமைப்பு நிலை பெற்றது சோவியத் விவ சாயத்தின் வளர்ச்சியில் **அடிப்படை முக்கியத்துவம் உள்ள திருப்பமாக,** சோவியத் நாட்டுப்புறத்தில் **மிக ஆழ்ந்த புரட்சித் தன்மை கொண்ட மாற்றமாக** விளங்கியது. இவற்றை ஒழுங் கமைத்து வழி நடத்தியவை கட்சியும் சோவியத் அரசும் ஆகும். பின்தங்கிய சிறு தனியார் பண்ணைகளிலிருந்து பேரளவான சோஷலிஸ விவசாயத்துக்கு மாற்றம், வெவ் வேறுகப் பிரிந்த சிறு உடைமைகள் கொண்ட விவசாயத் துக்கும் பேரளவான சோஷலிஸத் தொழில்துறைக்கும் இடையே இருந்த முரண்பாட்டைத் தீர்த்துவிட்டது. விவசாயி களின் உழவு கருவிகள் கூட்டுப் பண்ணைகளில் ஒன்று சேர்க்கப் பட்டதும், அதுவரை தனித் தனியே பிரிந்திருந்த துண்டு நிலங்கள் ஒருமித்துப் பண்படுத்தப்பட்டதுமே கூட உழைப் பின் உற்பத்தித் திறனைக் கணிசமாக உயர்த்தி விட்டன என்று முதல் கூட்டுப் பண்ணைகளின் அனுபவம் காட்டியது. புதிய தொழில் நுட்பமும் டிராக்டர்களும் இயந்திரங்களும் ஒன்றித்த உழைப்பும் சேர்ந்ததுமோ உற்பத்தி வெகுவாக உயர்வதற்கும் விவசாயிகளின் பொருளியல், பண்பாட்டு நிலை மேம்படுவதற்கும் ஏற்ற நிலைமைகள் உருவாயின.

அரசாங்கப் பண்ணைகள் அமைப்பதிலும் பெருத்த வெற்றிகள் கிட்டின. அவற்றின் உற்பத்திச் சாதனங்கள் அரசு (அனைத்து மக்கள்) உடைமை ஆகும். இந்தப் பண்ணை களில் தொழில் நிலையங்களில் போலவே தொழிலாளர்களின் உழைப்புக்கு உரிய ஊதியம் அளிக்கப்படுகிறது. இவை இயந் திரமயமாக்கப்பட்ட பெரிய பண்ணைகள். 1932ம் ஆண்டு இவை நாட்டுக்கு 10 கோடி பூத் (சுமார் 17 லட்சம் டன்) தானியம் விளைவித்துத் தந்தன.

கட்சி கூட்டுப் பண்ணை அனுபவத்தைப்பொதுமைப் படுத்தியது, கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்த விவசாயிகளுக்கு யோசனைகள் கூறி உதவியது. கூட்டுப் பண்ணையின் பிரதான வடிவத்தை நிர்ணயிப்பது மிக மிக முக்கியமாய் இருந்தது.

உழைப்பாளர் கூட்டுறவு—கூட்டுப் பண்ணையின் பிரதான வடிவம்

சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணை அமைப்பின் நடை முறை கூட்டுப் பண்ணையின் அனேக வடிவங்களை முன் வைத்தது. கட்சி அவற்றை கவனமாக ஆராய்ந்தது. அக்டோபர் புரட்சி நிறை வேறியதுமே பண்ணையாட்களும் நாட்டுப் புறத்தில் புது வாழ்வை நிறுவ உற்சாகம் கொண்ட ஏழை விவசாயி களும் நிலப் பிரபுக்களிடமிருந்து பறித்துக் கொள்ளப் பட்ட நிலங்களில் விவசாயக் **கம்யூன்களை** அமைக்கத் தொடங் கினர்கள். சொந்தத் தேவைப் பொருள்கள் (உடைகள், காலணிகள்) தவிர மற்ற எல்லாச் சொத்தும் கம்யூன்களின் பொது உடைமையாக இருந்தது. கம்யூன்காரர்கள் சேர்ந்து வேலை செய்தார்கள், தங்கள் உழைப்பின் பயனைச் சேர்ந்து உபயோகித்தார்கள். பணம் வைத்துக்கொள்ளும் தேவை அவர்களுக்கு ஏற்படவே இல்லை. கம்யூன்காரர்கள் தங்கள் உணவு விடுதிகளில் இலவசமாக உண்டார்கள். தேவைப்படு பவர்கள் எல்லோருக்கும் காலணிகளும் உடைகளும் கிடைப் பதற்கு நிர்வாக அலுவலகம் வகை செய்தது. இவ்வாறு, வினியோகச் சமன்பாட்டுக் கோட்பாடு கம்யூன்களில் நிலவி யது. தனி ஆட்கள், சிறு குடும்பத்தினர், நிறையக் குழந்தை கள் உள்ளவர்கள் ஆகிய எல்லாக் கம்யூன்காரர்களும் பொது உழைப்பின் விளைவைச் சமமாக அனுபவித்தார்கள். அவர் கள் எவ்வளவுதான் ஒற்றுமையாக வாழ்ந்தாலும், சமன் பாடு, அதிலும் கம்யூன் பொருளாதாரச் சங்கடங்களை எதிர்ப் பட்ட போது, பலரது கண்டனத்துக்கு உள்ளாயிற்று.

கூட்டுப் பண்ணையின் வடிவம் என்ற முறையில் கம்யூன் திரளான விவசாயிகளால் அப்போது ஏற்கப்படக் கூடியதாக இல்லை என்று வாழ்க்கை அனுபவம் காட்டியது. பல நூற் றுண்டுகளாகத் தனிப் பண்ணை வாழ்க்கை நடத்திவந்த விவசாயியால் கம்யூனிஸ வாழ்க்கை முறைக்கு எடுத்த எடுப் பிலேயே மாற முடியவில்லை. வேலை செய்வது, ஆனால் உழைப்

புக்கு உரிய ஊதியம் பெருமல் இருப்பது என்பது எப்படி என அவனுல் புரிந்து கொள்ள முடியவில்லே. தவிரவும் விவசாயிகளின் அன்ருட வாழ்க்கையைக் கம்யூனிஸ அடிப்படையில் ஒழுங்கமைக்க, அதாவது, அவர்களுடைய எல்லாத் தேவைகளேயும் நிறைவேற்ற ஆரம்ப நிலேயில் இருந்த கம்யூன்களுக்கு இயலவில்லே. இதற்கு, ஒரு புறம், எல்லா நலங்களும் முழு அளவில் போதுமானவையாக இருக்க வேண்டும். மறு புறம், ஆட்கள் தங்கள் முழுச் சக்தியையும் ஈடுபடுத்தி உழைக்கவும் பண்ணேயின் வாய்ப்புக்களுக்கு ஏற்றவாறு தங்கள் தேவைகளே விவேகத்துடன் அளவுக்குள் வைத்திருக்கவும் அவசியமான உயர்ந்த உணர்வு பெற்றிருக்க வேண்டும். நாட்டில் கம்யூன்கள் சிலவே இருந்தன. அவை குறைந்த காலமே நிலவின. கூட்டுப் பண்ணேகள் பெருந்திரளாக அமைக்கப்படுவது தொடங்கியதும் அவை உழைப்பாளர் கூட்டுறவுப் பண்ணே வடிவத்தை மேற்கொண்டுவிட்டன.

கூட்டுறவு முறையின் தொடக்கக் காலத்தில், 1928—1929ல், **சேர்ந்து வேளாண்மை செய்யும் கூட்டுறவுகள்** (வேளாண்மைக் கூட்டுறவுகள்) சோவியத் யூனியனில் விரிவாகப் பரவின. கூட்டுப் பண்ணே முறையின் இந்த வடிவத்தின் சிறப்பு என்னவென்ருல், வேளாண்மைக் கூட்டுறவில் சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலப் பகுதிகளே ஒரே பெரு நிலமாக இணேத்து, இயந்திரங்கள் வாங்கி, அவற்றின் உதவியால் சேர்ந்து வேளாண்மை செய்து விளேச்சலே அறுவடை செய்தார்கள் என்பதே. இதில் ஒவ்வொரு விவசாயியும் தனது தனித்த பண்ணே வாழ்க்கையை முன்போலவே நடத்தி வந்தான். அறுவடை செய்யப்பட்ட விளேச்சல், கூட்டுறவின் உறுப்பினர்களிடையே, அவர்களது உழைப்பின் அளவுக்கு ஏற்ப இன்றி, அவர்களுக்குச் சொந்தமான நிலப் பகுதியின் அளவுக்கு ஏற்பப் பங்கிடப்பட்டது. வேளாண்மைக் கூட்டுறவு கூட்டுப் பண்ணேயின் சீர்பட்ட வடிவம் அல்ல என்பதை ஏழை விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் விரைவில் கண்டுகொண்டார்கள். விவசாயிகளிடம் நிலப் பகுதிகள் வெவ்வேறு அளவுகளில் இருந்தன. ஆகவே, எல்லோரும் அனேகமாக ஒரே அளவு உழைத்தார்கள், ஆனுல் விளேச்சல் பங்கீட்டில் அதிக அளவு நிலப் பகுதி உடையவர்களுக்குப்

பெரிய பங்கு கிடைத்தது. எனவே, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் எல்லா உறுப்பினர்களும் அக்கறை கொள்ளுமாறு செய்ய வேளாண்மைக் கூட்டுறவால் முடிய வில்லை. பணக்காரர்களும் நிறைய நிலம் உள்ளவர்களு மான விவசாயிகளுக்கு அது அதிக வசதியாகக் கூட இருந் தது. வேளாண்மைக் கூட்டுறவுகளில் குலாக்குகளும் சேர்ந் தார்கள். இவ்வாறு செய்வது அவர்களுக்குச் சாதகமாய் இருந்தது. வேளாண்மைக் கூட்டுறவு என்ற பெயரின் மறை வில், சோவியத் அரசு அளித்த அனுகூலங்களைப் பயன்படுத் திக் கொண்டு குலாக்குகள் உயர்த்தப்பட்ட வரிகளிலிருந்து நழுவித் தப்பினர்கள். வேளாண்மைக் கூட்டுறவுகளில் குலாக்குகள் வழக்கமாகத் தாங்கள் உழைக்காமல், கூட்டுற வின் உறுப்பினர்களான பண்ணையாட்களையோ ஏழை விவ சாயிகளையோ கூலிக்கு அமர்த்துவதையே விரும்பினர்கள். ஆனால் வேளாண்மைக் கூட்டுறவிலிருந்து அனுகூலங்களையும் வருமானத்தையும் குலாக்குகள் அதிகமாகப் பெற்றார்கள். எனவே,வேளாண்மைக் கூட்டுறவு குலாக்குகளின் சுரண்டலைக் கூட அகற்றவில்லை. இந்த எல்லாக் காரணங்களாலும் வேளாண்மைக் கூட்டுறவுகள் பெரும்பாலான விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத கூட்டுப் பண்ணைகள் என்பது தெளிவாகி விட்டது.

விவசாய உழைப்பாளர் கூட்டுறவு தான் விவசாயிகளுக்கு எல்லாவற்றிலும் அதிகமாகப் புரியக் கூடியதும் ஏற்கத் தக்கதுமான கூட்டுப்பண்ணை வடிவமாக இருந்தது. இதுவே கூட்டுப் பண்ணையின் பிரதான வடிவம் ஆயிற்று. இத்தகைய கூட்டுறவுகளாக (கூட்டுப் பண்ணைகள்) அமைந்ததும் விவ சாயிகள் விதிகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். எவை சமூக உடைமை ஆக்கப்பட வேண்டும், கூட்டுப் பண்ணையை எவ் வாறு நடத்த வேண்டும் என்று இந்த விதிகள் திட்டம் செய் தன. கூட்டுப் பண்ணை விவகாரங்களை நடத்துவதற்கு, தலை வரும் நிர்வாக அலுவலர்களும் கண்காணிப்புக் குழுவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. கண்காணிப்புக் குழு நிர்வாக அலுவலகத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறது. பண்ணை யினுடையவும் கூட்டுப் பண்ணை உறுப்பினர்களுடையவும் நலன்கள் சம்பந்தப்பட்ட எல்லா முக்கியப் பிரச்சினைகளுக்

கும் முடிவு காண்பதில் கூட்டுப் பண்ணையின் ஒவ்வோர் உறுப்பினனும் பொதுக் கூட்டத்தின் வாயிலாகப் பங்கு கொள்கிறான். உழைக்கும் கால்நடைகள் எல்லாமும் (குதிரைகளும் எருதுகளும்) உற்பத்தி செய்யும் கால்நடைகளின் ஒரு பகுதியும் (பசுக்களும் பன்றிகளும் ஆடுகளும்) முக்கிய உழவு கருவிகளின் ஒரு பகுதியும் பண்ணைக் கட்டிடங்களும் கூட்டுப் பண்ணையின் பொது உடைமை ஆகும். முன்னர் விவசாயிகள் தனித் தனிப் பகுதிகளாகத் தனிமையில் பயன்படுத்தி வந்த நிலம் ஒன்றித்த பெரும் பரப்பில் கலந்துவிட்டது. உற்பத்தி செய்யும் கால்நடைகளின் ஒரு பகுதியும் கோழிகளும் வாத்துக்களும் சிறு உழவு கருவிகளும் சொந்த உபயோகப் பொருள்கள், அதாவது வீடுகள், வீட்டுச் சாமான்கள் ஆகியவை எல்லாமும் கூட்டுல்பண்ணை விவசாயியின் சொந்த உடைமையாக இருந்தன. இவை தவிர, ஒவ்வொரு கூட்டுப் பண்ணைக் குடும்பத்துக்கும் சொந்த உபயோகத்துக்காக வீட்டை அடுத்த துண்டு நிலம் கொடுக்கப்பட்டது. இதன் அளவு வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேருக இருந்தது—சுமார் ஒரு ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை. கூட்டுப் பண்ணை விவசாயியின் உழைப்பினது அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ப அவனுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.

கூட்டுப் பண்ணைகள் வளர வளர, அவற்றின் உள் வாழ்க்கையைச் சீரமைத்து வலுவாக்குவதில் கட்சி மேலும் மேலும் அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியது. உழைப்பைச் சரியாக ஒழுங்குபடுத்தவும் கட்டுப்பாட்டைச் சீர்படுத்தவும் கூட்டுப் பண்ணையினருக்கு உதவுவது அவசியமாய் இருந்தது. **சமூகப் பொது விவசாயத்தின் வளர்ச்சியில் கூட்டுப் பண்ணையினரை அக்கறை கொள்ளும்படி** செய்யக் கூடிய வகையில் வேலை முறைகளை வகுக்க வேண்டி இருந்தது. கட்சி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது, முன்னணிக் கூட்டுப் பண்ணைகளின் அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி அதன் அடிப்படையில் கூட்டுப் பண்ணைகளுக்கு உரிய யோசனைகள் கூறியது.

கூட்டுப் பண்ணைகளில் உழைப்பைக் கணக்கிடுவதற்கு ஒவ்வொரு விதமான வேலைக்கும் உரிய அளவுமானத்தை—ஒரு வேலை நாளில் குதிரைக் கலப்பையால் எவ்வளவு நிலம்

உழப்பட வேண்டும், எத்தனை பசுக்கள் பராமரிக்கப் பட வேண்டும் முதலியவற்றை—திட்டப்படுத்தும்படி யோசனை கூறப்பட்டது. இந்த அளவுமானங்கள் விவசாயிகளின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டன, கூட்டுப்பண்ணைகள் இயந்திர சாதனங்கள் பெற்ற அளவுக்கு ஏற்ப மாற்றவும் பட்டன. உழைப்பை அளவிடுவதற்கான அலகு **'வேலைநாள்'** எனக் குறியீடாக அழைக்கப்பட்டது. உழைப்பின் அளவுகோலாகவும் வருவாய்ப் பங்கீட்டின் அளவு கோலாகவும் பயன்பட்டது வேலைநாள்.

தொடக்கத்தில், நாள் முழுதும் வேலை செய்த ஒவ்வொரு வன் கணக்கிலும், அவன் ஒரு நாளில் என்ன செய்தான் என் பதைக் கவனிக்காமலே, ஒரு வேலைநாள் வரவு வைக்கப்பட் டது. இதனால் வேலையின் விளைவுகளில் கூட்டுப் பண்ணையின ருக்குத் தேவையான அக்கறை ஏற்படவில்லை. கூட்டுப் பண்ணை யினரில் சிலர் சிரமம் குறைந்த வேலை பெறுவதற்கு முயன் றார்கள். தோட்டக் காவலில் நாள் முழுவதையும் கழித்தவ னுடைய கணக்கில் உழுதவனுக்கும் புல் அறுத்தவனுக்கும் உரிய அதே வேலைநாள் வரவு வைக்கப்பட்டது. விரைவில் இந்த முறை திருத்தப்பட்டது. வெவ்வேறு வேலைகளில் உழைப்பின் அளவுமானம் நிறைவேற்றப்பட்டதா என்பது வேலையின் சிக்கலையும் கடுமையையும் பொறுத்து மதிப்பிடப் பட்டது. உதாரணமாக, டிராக்டர் ஓட்டியின் அளவுமானம் இரண்டரை வேலைநாட்களாகவும், குதிரைக் கலப்பையால் உழுபவனின் அளவுமானம் ஒன்றே முக்கால் வேலைநாட்க ளாகவும் தோட்டக் காவலாளியின் அளவுமானம் முக்கால் வேலைநாளாகவும், இவ்வாறே மற்றவையும் மதிப்பிடப்பட் டன. திட்டமிட்ட வேலைத்தரத்துடன் அளவுமானத்துக்கு அதிகமாக நிறைவேற்றப்பட்ட உழைப்புக்கு அதிகப்படி வேலைநாட்கள் வரவு வைக்கப்பட்டன. உதாரணமாக, நன்றாக வேலை செய்த டிராக்டர் ஓட்டி ஒரு நாளில் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வேலைநாட்கள் சம்பாதிக்க முடிந்தது.

ஒவ்வொரு கூட்டுப் பண்ணையினனுக்கும் உழைப்புப் புத்தகம் தரப்பட்டது. அவன் கணக்கில் வரவு வைக்கப்பட்ட வேலை நாட்கள் மாதந்தோறும் இந்தப் புத்தகத்தில் பதியப்

பட்டன. கூட்டுப் பண்ணையினர் சம்பாதித்த வேலைநாட்கள் பற்றிய விவரங்களின் பட்டியல்கள் எல்லோரும் காணும்படி தொங்க விடப்பட்டன. உழைப்புக் கணக்கீடு இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டதால் வேலையில் கூட்டுப் பண்ணையினருக்கு அக்கறை ஏற்பட்டது, கட்டுப்பாடு வலுவடைந்தது. ஒவ்வொருவனும் அதிகச் சம்பளம் உள்ள வேலையைப் பெறும் பொருட்டு தனது தகுதியை மேம்படுத்திக் கொள்ள முயன்றான். எத்தனை அதிக வேலை நாட்கள் சம்பாதிக்கிறோமோ அவ்வளவு அதிகப் பணமும் உணவுப் பொருள்களும் பெறுவோம் என ஒவ்வொருவனும் தெரிந்துகொண்டான்.

கூட்டுப் பண்ணைகளில் உற்பத்திக் குழுக்கள் அமைக்கப் பட்டன. ஒவ்வொரு குழுவுக்கும் குறித்த நிலப் பகுதியும் உழைக்கும் கால்நடைகளும் இயந்திரங்களும் உழவு கருவிகளும் ஒதுக்கப்பட்டன. கால்நடைப் பண்ணைகளில் குறித்த எண்ணிக்கை உள்ள ஆட்கள் இத்தனை கால்நடைகளைப் பராமரிக்க வேண்டும் என்று திட்டம் செய்யப்பட்டது. சமூகச் சொத்துக்களைப் பேணுவதிலும் பெருக்குவதிலும் கூட்டுப் பண்ணையினரின் பொறுப்பை இவை எல்லாம் உறுதிப்படுத்தின. கூட்டுப்பண்ணைகள் தங்கள் உற்பத்திப் பொருள்களின் ஒரு பகுதியைத் திட்டப்படி அரசுக்கு வாடகையாகச் செலுத்தின. எஞ்சிய பொருள்கள் கூட்டுப் பண்ணைகளுக்குச் சொந்தமாய் இருந்தன. எந்த எந்த விளைபொருள்களை எந்த அளவு விதைப்புக்காகவும் தீனிக்காகவும் சேமிப்பாகவும் ஒதுக்கி வைப்பது, கூட்டுப் பண்ணையினரிடையே வேலை நாட்களுக்கு இணங்க (அதாவது சமூகப் பொது விவசாயத்தில் செய்யப் பட்ட உழைப்பின் அளவுக்கும் தரத்துக்கும் இணங்க) எவ்வளவு பங்கீடு செய்வது, கூட்டுப் பண்ணைச் சந்தையில் எவ்வளவு விற்பனை செய்வது என்பதை ஆண்டு முடிவில் கூட்டுப் பண்ணையினரின் கூட்டம் முடிவு செய்தது. கூட்டுப் பண்ணையின் பண வருவாயும் இவ்வாறே ஒரு பகுதி வேலைநாள் ஊதியமாக வினியோகிக்கப்பட்டது. எஞ்சிய பகுதி சமூகப் பொது விவசாய வளர்ச்சிக்காகவும் பொதுப் பண்பாட்டுத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. வருவாய் முடிவாகப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன் கூட்டுப் பண்ணையினர் தாங்கள் சம்பாதித்த வேலைநாட்களுக்கு ஏற்பப் பண்டங்களும்

பணமும் முன்கூட்டிப் பெற முடிந்தது. இந்த ஒழுங்கு கூட்டுப்பண்ணைகளுக்கும் தனித்தனிக் கூட்டுப் பண்ணையின ருக்கும் விவசாயத்தை விரிவாக்குவதில் அக்கறை ஏற்படுத்தி யது.

தொடக்கக் காலத்தில் கூட்டுப் பண்ணைகளின் வளர்ச் சிக்கு அவற்றில் நுழைந்து கொண்டிருந்த குலாக்குகளின் நாச வேலைகளும் அனுபவம் உள்ள ஊழியர்கள் போதாததும் முட்டுக்கட்டை போட்டன. கூட்டுப் பண்ணைகளையும் அர சாங்கப் பண்ணைகளையும் ஸ்தாபன ரீதியிலும் அரசியல் நோக் கிலும் வலுப்படுத்தும் பொருட்டு 1933 ஜனவரியில் இயந்திர-டிராக்டர் நிலையங்களிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் அர சியல் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அரசியல் பிரிவுகளில் வேலை செய்வதற்கு அனுபவமும் செல்வாக்கும் உள்ள கம் யூனிஸ்டுகளைக் கட்சி அனுப்பியது. அரசியல் பிரிவுகள் சுமார் முப்பதாயிரம் கூட்டுப் பண்ணைத் தலைவர்கள் உட்பட இரண் டரை லட்சத்துக்கும் மேல் முன்னணிக் கூட்டுப் பண்ணை யினரைத் தெரிந்தெடுத்து, வழிகாட்டி நடத்தும் வேலைக்காகக் கூட்டுப்பண்ணைக் கூட்டங்களுக்குச் சிபாரிசு செய்தன. அரசி யல் பிரிவுகளின் உதவியால் நாட்டுப்புறக் கட்சி ஸ்தாபனங் களும் கூட்டுப் பண்ணைகளை வழி காட்டி நடத்தும் ஊழியர் களும் வலுவடைந்ததும் அரசியல் பிரிவுகள் மூடப்பட்டு வட்டாரக் கட்சி உறுப்புக்களில் சேர்க்கப்பட்டுவிட்டன.

கூட்டுப் பண்ணை அமைப்பின் அனுபவத்தை ஆராய்ந்து பொதுமைப்படுத்தி, கூட்டுப்பண்ணை வாழ்க்கையை மேலும் வசதி உள்ளது ஆக்குவது எப்படி, கூட்டுப் பண்ணைகளை இன் னும் விரைவாக வலுப்படுத்துவதும் கூட்டுப் பண்ணையினரின் வாழ்க்கையை வளப்படுத்துவதும் எப்படி என்று கூட்டுப் பண்ணையினருடன் கலந்து ஆலோசித்தது கட்சி. ஊக்கம் மிக்க கூட்டுப் பண்ணையினரின் இரண்டு அகில சோவியத் காங்கிரஸ்கள் முப்பதுக்களில் நடந்தன. கூட்டுப் பண்ணை களுக்கு உரிய ஆதர்ச விதிகள் பற்றி இவற்றில் விவாதிக்கப் பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டி நடத்தும் பணி இன்னும் முழுமையாக வெளிப்பட்டது. அது புதிய அரசியல் பரீட்சைகளில் தேறியது. சமூகத்தின் சோஷலிஸப் புனர் நிர்மாணம் நடைபெறுகையில் திரளான பொதுமக்களை வழிகாட்டி நடத்தும் விலைமிக்க அனுபவத்தை அது திரட்டியது.

கட்சி—சோஷலிஸப் புனர் நிர்மாணத்தின் ஒழுங்கமைப்பாளி

லெனினுல் ஆதாரத்துடன் நிலைநாட்டப்பட்டு, கட்சியின் லெனினீயச் செயல்திட்டத்தில் விவரிக்கப்பட்ட தனது பொதுக் கொள்கைப் போக்கைக் கடைப் பிடிப்பதில் கட்சி மிகப் பெரிய நிலையுறுதியையும் திடத்தையும் காட்டியது. உள் நாட்டுக் குட்டி பூர்ஷ்வா வட்டாரங்களின் வற்புறுத்தலோ, வெளிநாட்டு பூர்ஷ்வா வர்க்கத்தின் கொள்கைவாதிகளுடையவும் அதன் கையாட்களுடையவும் வன்மம் நிறைந்த ஊகக் கூற்றுக்களோ கட்சியை அசைக்க முடியவில்லை. நாட்டில் தொழில் பெருக்கம் செய்வது, விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை முறையில் அமைப்பது என்ற திட்டமிட்ட பாதையிலிருந்து அது இம்மியும் பிறழவில்லை. இந்த முக்கியப் பணிகளை நிறைவேற்றுவதில் கட்சி தனது முழுச் சக்தியையும் சோவியத் மக்களின் சக்தியையும் ஈடுபடுத்தியது. ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாட்டின் எல்லா நிதிகளும் சாதன வளங்களும் ஒருங்கு திரட்டப்பட்டன.

கட்சியின் பொதுக் கொள்கைப் போக்கைச் செயல் படுத்துவதில் ஏற்பட்ட வெற்றிகள் மக்கள் தலைவன் என்ற முறையில் அதன் செல்வாக்கை உயர்த்தின, அதன் அணிகள் இன்னும் அதிகமாக ஒற்றுமைப்பட உதவின. ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி ஆண்டுகளில் கட்சியில் எந்த விதமான சந்தர்ப்பவாதப் பிறழ்ச்சிகளும் இருக்கவில்லை. திரோத்ஸ்கி வாதிகள், ஸினேவிவ் தரப்பினர், புஹாரின் தரப்பினர் போன்ற முந்திய கட்சி விரோத உட்குழுக்களில் சேர்ந்திருந்தவர்கள் தங்கள் மதி மயக்கங்களுக்காக வருந்தி, கட்சியின் பொதுக் கொள்கைப் போக்கின் ஆதரவாளர்கள் ஆகி விட்டார்கள். பதினேழாவது கட்சிக் காங்கிரஸ் *(1930)* கொள்கைவாத நோக்கிலும் ஸ்தாபனரீதியிலும் கட்சியின் உறுதி

யான ஒற்றுமையையும், முனைமுகம் முழுவதிலும், நகரத்திலும் நாட்டுப்புறத்திலும். சோஷலிஸத்தின் விரிவான முன்னேற்றத்தின் வெற்றிகளையும் காட்டியது.

கட்சி ஸ்தாபனங்களும் வளர்ந்து வலுப் பெற்றன. நாட்டின் சிறந்த மனிதர்கள் கட்சியின் அணிகளில் சேர்ந்தார்கள். அதன் உறுப்பினர் தொகை ஐந்து ஆண்டுகளில் இரு மடங்கு ஆகி, 1933ம் ஆண்டுத் தொடக்கத்தில் முப்பது லட்சத்தை எட்டி விட்டது.

கட்சியின் அரசியல், ஒழுங்கமைப்பு வேலை முன்னிலும் திட்டவட்டமாகவும் துடியாகவும் நடக்கலாயிற்று. சோஷலிஸக் கட்டுமானத்துக்கு நடைமுறையில் தலைமை வகிப்பதற்கு உரிய புதிய வடிவங்களையும் வழிகளையும் அது வகுத்தது. தன்னுடைய எல்லா ஸ்தாபனங்களையும் திரளான பொது மக்களுக்கும் உற்பத்திக்கும் நெருங்கியவை ஆக்கிற்று. பல நூறு கம்யூனிஸ்டுகள் வேலை செய்த பெரிய தொழிற் சாலைகளிலும் புதுக் கட்டுமான ஸ்தலங்களிலும் கட்சிக் கமிட்டிகளும் தொழிற்கூடங்களில் கட்சிக் குழுக்களும் தொழிலாளர் குழுக்களில் கட்சி உட்குழுக்களும் அமைக்கப்பட்டன. பெரிய நகரங்களில் கட்சிக் கமிட்டிகள் (கட்சியின் நகரக் கமிட்டிகள்) நிறுவப்பட்டன. இவை எல்லாம் கட்சி உறுப்புக்களை உற்பத்திக்கு அருகே கொணர்ந்தன, திரளான தொழிலாளர்கள்மீது கட்சியின் செல்வாக்கை வலுப்படுத்தின. உற்பத்தியில் கம்யூனிஸ்டுகளின் முன்னணிப் பணி தீவிரம் அடைந்தது. புதுக் கட்டுமானச் சாரங்கள் மீதும், சுரங்கங்கள், கனிகளின் வெட்டுக் குழிகளிலும் கடைச்சல் இயந்திரங்கள், ஊதுலைகள், மார்ட்டென் உலைகள் ஆகியவற்றின் அருகிலும் —உழைப்பு முனைமுகத்தின் நிர்ணயகரமான இடங்களில் பணி ஆற்றினர்கள் அவர்கள். தொழிற்சங்க, இளங் கம்யூனிஸ்டுகள் ஸ்தாபனங்கள் உற்பத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் மாற்றி அமைக்கப்பட்டன.

நாட்டுப்புற வட்டாரங்களிலும் கட்சி ஸ்தாபனங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. கூட்டுப்பண்ணைகள் அமைவதற்கு முன் நாட்டுப்புறத்தில் பிரதேசக் கட்சி மையக் குழுக்கள் நிலவி வந்தன. குறித்த கிராம சோவியத் அல்லது மாவட்டத்தின் நிலப்பரப்பில் இருந்த எல்லா கிராமங்களையும்

கூட்டுப் பண்ணையில் கம்யூனிஸ்ட் மையக்குழு

கூட்டுப் பண்ணைகளையும் அரசாங்கப் பண்ணைகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள் ஒரே மையக் குழுவின் உறுப்பினராக இருந்தார்கள். கூட்டுப் பண்ணையினர், அரசாங்கப் பண்ணைத் தொழிலாளர்கள், தனிப் பண்ணை விவசாயிகள், விவசாய நிபுணர்கள், பள்ளி ஆசிரியர்கள் முதலியவர்களை இந்த மையக் குழுக்கள் ஒருங்கிணைத்தன. கூட்டுப் பண்ணை அமைப்பு ஏற்பட்டதும் இந்தக் குழுக்கள் உற்பத்திக் கோட்பாட்டின்படி மாற்றி அமைக்கப்பட்டன. கம்யூனிஸ்டுகள் இருந்த கூட்டுப் பண்ணைகளில் சுதந்திரமான கட்சி மையக் குழுக்கள் உருவாயின. இங்கும் கம்யூனிஸ்டுகள் நிர்ணயகரமான பகுதிகளில்—டிராக்டர் ஓட்டிகளாகவும் இயந்திரம் இயக்குவோராகவும் வேளாண்மை விற்பன்னர்களாகவும் கால்நடை வளர்ப்பாளர்களாகவும்—பணி ஆற்றினர்கள். கூட்டுப் பண்ணைகளையும் அரசாங்கப் பண்ணைகளையும் மேலும் நன்கு வழிகாட்டி நடத்தும் பொருட்டும் கட்சி, சோவியத் உறுப்புக்களை அவற்றுக்கு நெருக்கமாகக் கொண்டுவரும் பொருட்டும் நாட்டுப்புற வட்டாரங்களில் இருந்த பெரிய

நிர்வாக அலகுகளான வட்டங்களும் மாவட்டங்களும் வட்டாரங்களாகப் பகுக்கப்பட்டன. வட்டார மையங்களில் கட்சியின் வட்டாரக் கமிட்டிகளும் வட்டார சோவியத்துக்களும் அமைக்கப்பட்டன. கட்சியின் வட்டாரக் கமிட்டிகளின் ஊழியர்கள் கூட்டுப் பண்ணைகளுக்கு அடிக்கடி போய், புதிய கூட்டுப் பண்ணை வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் கட்சி மையக் குழுக்களுக்குப் பயனுள்ள உதவி அளிக்கத் தொடங்கினர்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிகரமான நிறைவேற்றம், கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பெரிய அரசியல், ஒழுங்கமைப்பு நடவடிக்கை, தொழிலாளி வர்க்கம், உழைக்கும் விவசாயிகள், சோவியத் அறிவுஜீவிகள் ஆகியோரின் வீரம் நிறைந்த முயற்சிகள், இவற்றின் விளைவாகும்.

சோவியத் யூனியனின் வெற்றிகள் உலகம் அனைத்தின் மீதும் பாதிப்பு விளைக்கின்றன

சோவியத் யூனியன் நாளுக்கு நாள் விரைந்த வேகத்தில் தன் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கொண்டு போன அதே சமயத்தில், முதலாளித்துவ உலகம் 1929-1933 ஆண்டுகளில் அதற்கு முன் ஒரு போதும் இல்லாத அளவு வலிமை கொண்ட நெருக்கடிக்கு உள்ளாகி நிலை குலைந்துகொண்டிருந்தது. இந்த நெருக்கடி எல்லா முதலாளித்துவ நாடுகளையும் பற்றி உலுக்கியது, முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் அளவு கடந்து கூர்மை அடைந்தன. இந்த நெருக்கடியால் உற்பத்தி ஒரேயடியாகக் குறைந்தது, வேலை இல்லாத் திண்டாட்டம் மட்டு மீறிப் பெருகியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டுமே வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 150—170 லட்சம் என்று கணக்கிடப் பட்டது. வேலை இல்லாமையாலும் விளைவாக ஏற்பட்ட வறுமையாலும் புகலற்றுப் போன தொழிலாளர்கள் ஒடுக்குவோரை எதிர்த்துப் போராட்டம் நடத்த மேலும் மேலும் உறுதியுடன் திரண்டு எழலாயினர். பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்தது. உதாரணமாக ஜெர்மனியில் 1932ம் ஆண்டில் நடந்த ரைஹ்ஸ்தாக் (நாடாளுமன்ற) தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சுமார் 60 லட்சம் வாக்குகள் கிடைத்தன.

பூர்ஷ்வா வர்க்கம் சங்கடங்களிலிருந்து மீள்வதற்கு யுத்தத்திலும் வேற்றூர் பிரதேசங்களைக் கைப்பற்றுவதிலும் வழி தேடிற்று. 1931ம் ஆண்டிலேயே ஜப்பான் போர்ப் பிரகடனம் செய்யாமலே சீனாவின் வட கிழக்கு மாநிலங்களைக் கைப்பற்றி, தூரக் கிழக்கில் யுத்தத்துக்கு வித்திட்டது. ஐரோப்பாவின் மத்தியில் யுத்தம் தொடங்குவதற்கான இரண்டாவது அபாயச் சூழ்நிலை உருவாயிற்று. ஜெர்மானிய ஏகாதிபத்திய வாதிகள் 1933 ஜனவரியில் பாசிஸ்ட் சர்வாதிகாரத்தை நிலைநாட்டி, ஹிட்லர்வாதிகளின் கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினார்கள். பாசிஸ்டுகள் எல்லா ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் அழித்து விட்டார்கள். ஜெர்மனியின் முற்போக்குச் சக்திகள் எல்லாவற்றையும், முதன்மையாகக் கம்யூனிஸ்டுகளை, ஒழித்துக் கட்டுவதற்கு வெறிகொண்ட குரூர நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். ஜெர்மனியின் உலக ஆதிக்கமே தங்கள் நோக்கம் என்று அவர்கள் வெளிப்படையாகப் பிரகடனம் செய்தார்கள். ஹிட்லர் அரசாங்கம் ஆயுத உற்பத்திப் போட்டியில் படு மூர்க்கமாக ஈடுபட்டது. பொருளாதாரத்தை மீட்டமைப்பதற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிற முதலாளித்துவ நாடுகளும் வழங்கிய பெருத்த கடன்களை அது இந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டது.

பாசிஸ்ட் இத்தாலி 1935ம் ஆண்டு அபிசீனியா மீது தாக்கு நடத்தியது. 1936ம் ஆண்டு ஜெர்மனியும் இத்தாலியும் ஸ்பானியக் குடியரசுக்கு எதிராகக் கலகம் செய்த பாசிஸ்டுகளுக்கு உதவும் பொருட்டுத் தங்கள் படையினரை அனுப்பின. அதே ஆண்டு ஜெர்மனியும் ஜப்பானும் ''கம்யூனிஸ்ட் அகில எதிர்ப்பு உடன்படிக்கை'' எனப்படுவதைச் செய்து கொண்டன. இத்தாலியும் இதில் சேர்ந்து கொண்டது. இவ்வாறு, முதன்மையாக சோவியத் யூனியனுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட மூன்று வல்லரசுகளின் இராணுவக் கூட்டணி உருவாயிற்று. அதே சமயம், கம்யூனிஸத்தை எதிர்த்துச் ''சிலுவைப் போர்'' நடத்தும்படி அறைகூவல் விடுத்தவாறே ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவற்றின் ஆட்சியாளர்கள் உலகை மறுபங்கிடுவதற்காக யுத்தத்துக்கு ஆயத்தம் செய்தார்கள், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க

ஐக்கிய நாடுகள் ஆகியவற்றிடமிருந்து காலனிகளைப் பிடுங்கிக் கொள்ளத் திட்டமிட்டார்கள்.

இரண்டாவது உலக யுத்தம் மூளும் அபாயம் முற்றியது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இந்த அபாயத்தை முன்கண்டது. அமைதி விருப்பம் உள்ள அரசுகளை ஒன்று திரட்டவும், பாதுகாப்பைக் கூட்டாக உறுதிப்படுத்துவதற்கும் பகை வனைக் கூட்டாக எதிர்த்து முறியடிப்பதற்குமான அமைப்பை உருவாக்கவும் சோவியத் அரசாங்கம் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இந்த நோக்கங்களுக்காக அனேக அரசுகளுடன் பரஸ்பர உதவி உடன்படிக்கைகளும் அது செய்துகொண்டது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் ஆளும் வட்டாரங்கள் தங்கள் நாடுகளின் தேசீய நலன்களுக்குத் தீங்கு நேரும் வகையில் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களுக்குச் சலுகை காட்டி வந்தன, தண்டனை பெருமல் வழிப்பறிக் கொள்ளைகள் நடத்த அவர்களை அனுமதித்தன, அவர்களை சோவியத் யூனியனுக்கு எதிராகச் செலுத்த முயன்றன. இவ்வாறு செய்வதன் மூலம் தங்களுக்கு அபாயம் நேராமல் தப்பலாம் என அவை நம்பின.

பல நாடுகளின் பூர்ஷ்வா வர்க்கத்தினர் உள்நாட்டுக் கொள்கையில் ஜெர்மனியின் உதாரணத்தைப் பின்பற்றி வெளிப்படையான பாசிஸ்ட் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்த மேலும் மேலும் ஆர்வத்துடன் முயன்றனர். ஜெர்மனியில் சமூக-ஜனநாயகக் கட்சியின் வலதுசாரித் தலைவர்கள் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைக்க மறுத்து, அதன் மூலமே பாசிஸ்டுகளின் வெற்றிக்கு உதவினார்கள். அனேக நாடுகளில் சமூக ஜனநாயகவாதிகளின் ஆதரவாளர்களாயிருந்த விரிந்த திரளான தொழிலாளர்களோ ஜெர்மனியின் இந்த உதாரணத்தைப் பின்பற்றுமல், பாசிஸ்ட் அபாயத்தைக் கண்டு மேலும் இடதுசாரிக்குச் சென்றார்கள். விவசாயிகளின் கணிசமான பகுதியினரும் குட்டி, நடுத்தர பூர்ஷ்வாக்களின் சில வட்டாரத்தினரும் பாசிஸத்தை எதிர்த்தார்கள். பாசிஸ்ட் விரோதிச் சக்திகள் ஒன்றிணைந்த இடங்களில் பாசிஸ்டுகள் எதிர்த்து முறியடிக்கப்பட்டார்கள். பிரான்ஸில் இவ்வாறே நடந்தது. அங்கே 1934 பிப்ரவரியில் பாசிஸ்டுகள் அரசாங்

கத்தைக் கவிழ்க்க முயன்றபோது தொழிலாளர்கள் அவர்களுடைய முயற்சியைத் தகர்த்துவிட்டார்கள். பாசிஸத்தை எதிர்த்து ஒற்றுமையாகச் செயல்படும் உடன்படிக்கையைக் கம்யூனிஸ்ட் கட்சி பிரேரித்தது. சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் இந்த உடன்படிக்கையில் கையெழுத்து இட்டார்கள். ஆஸ்திரியாவில் பாசிஸ்ட் சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளை எதிர்த்து 1934 பிப்ரவரியில் ஆயுதக் கிளர்ச்சி மூண்டு எழுந்தது. வியன்னா நகரின் தொழிலாளர்கள்—கம்யூனிஸ்டுகளும் சமூக-ஜனநாயகவாதிகளும்—இதில் தோளொடு தோள் சேர்த்துப் போரிட்டார்கள். அதே ஆண்டில் இத்தாலியில் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோஷலிஸ்ட் கட்சிக்கும் இடையே ஒத்துழைப்பு நிலைபெற்றது.

1935ம் ஆண்டுக் கோடையில் கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது காங்கிரஸ் நடந்தது. 65 நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் இதில் கலந்து கொண்டன. பல்கேரிய, சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரபல தலைவர் கெயோர்கி திமித்ரோவின் விரிவுரைக்கு இணங்க, பாசிஸ அபாயத்துக்கும் யுத்த ஆபத்துக்கும் எதிராக, கம்யூனிஸ்டுகளுக்கும் சமூக-ஜனநாயகவாதித் தொழிலாளர்களுக்கும் இடையே ஒத்துழைப்பின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் **செயல் ஒற்றுமையை** ஏற்படுத்தவும் பாசிஸ்டுகள் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளில் பாசிஸ்ட் அரசாங்கங்களைக் கவிழ்க்கவும் முயலுமாறு கம்யூனிஸ்ட் கட்சிகளைக் காங்கிரஸ் அறைகூவி அழைத்தது. பாட்டாளி வர்க்க ஒற்றுமையின் அடிப்படையில் **விரிவான மக்கள் திரளின் பாசிஸ எதிர்ப்பு முன்னணியை** அமைக்கும்படியும், தொழிலாளி வர்க்கத்தை மையமாகக் கொண்டு விவசாயிகளையும் நகரக் குட்டி பூர்ஷ்வாக்களையும் அறிவு ஜீவிகளையும் ஒன்று திரட்டும்படியும் காங்கிரஸ் பணித்தது. காலனிகளிலும் ஆதீன நாடுகளிலும் **ஒன்றித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி** அமைப்பதும் இன்றியமையாதது என்று காங்கிரஸ் கூறியது. ஆக்கிரமிப்புக்கும் ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கும் எதிராக, தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடும் நாடுகளுக்கு ஆதரவு அளிக்குமாறு அது எல்லா மக்கள் இனங்களையும் வேண்டிக் கொண்டது. ஆனால் பெரும் பாலான நாடுகளில் சமூக-ஜனநாயகத்தின் வலதுசாரித்

தலைவர்கள் இந்த அறைகூவல்களுக்குச் செவி சாய்க்காமல் இருந்துவிட்டார்கள்.

சோஷலிஸத்தை நிறுவும் லெனினது திட்டம் நிறைவேறியது

சோவியத் கம்யூனிஸ்டுகள் சோஷலிஸ அரசின் விதிலை வலுப்படுத்துவது தங்கள் சர்வதேசக் கடமை என உணர்ந்தார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நாட்டுக்கு நல்ல விசையை அளித்தது. மக்களிடையே உற்சாகம் பொங்கிப் பெருகியது. இத்தகைய சூழ்நிலையில் 1934 ஜனவரியில் கூடியது கம்யூனிஸ்ட் கட்சியின் பதினேழாவது காங்கிரஸ். பெறப்பட்ட வெற்றிகளை அது தொகுத்துரைத்தது. சோஷலிஸப் பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதிலும் நாட்டின் தற்காப்பு வலிமையை இன்னும் உறுதிப்படுத்துவதிலும் அது கவனம் செலுத்தியது.

காங்கிரஸ் சோவியத் யூனியனின் தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்கான, 1933—1937 ஆண்டுகளுக்கு உரிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு முக்கியக் குறிக்கோள்களைக் கட்சி முன்வைத்தது: **அரசியல்** குறிக்கோள்—முதலாளித்துவ மனப்போக்கு உள்ள வட்டாரங்களை அறவே ஒழிப்பதும் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கும் சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் என்ற சமூகப் பாகுபாட்டிற்கும் உரிய காரணங்களை முழுமையாக வேருடன் களைவதும். **பொருளாதாரக்** குறிக்கோள்—தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் தொழில்நுட்ப நோக்கில் மாற்றி அமைக்கும் பணியை நிறைவேற்றி முடிப்பது. இந்தக் குறிக்கோள்கள் அடையப்படுவதால் நிறைவேறும் பணிகளாவன:

—சோவியத் யூனியனில் சோஷலிஸ சமூகம் அடிப்படையில் நிறுவப்படுவது;

—சோஷலிஸ உற்பத்தி வளர்ச்சியின் மிகுந்த வேகம்;

—சோவியத் மக்களின் நல்வாழ்வு இன்னும் விரைவாக ஏற்றம் பெறுவது;

—சோவியத் யூனியனின் தொழில் நுட்ப-பொருளாதார சுதந்திரம் வலுப்படுவது;

—நாட்டின் தற்காப்புத் திறனை உயர்த்துவது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் செயல்முறை நோக்கங்கள் முன்னிலும் மாட்சி மிக்கவையாக இருந்தன. ஐந்து ஆண்டுகளில் தொழில் உற்பத்திப் பொருள்களின் மொத்த அளவை இரு மடங்குக்கு மேலும் விவசாய விளை பொருள்களின் அளவை இரு மடங்கும் அதிகரிக்கத் திட்ட மிடப்பட்டது. மின் ஆற்றல், எஃகு ஆகியவற்றின் உற்பத்தி அனேகமாக இரு மடங்கும் நிலக்கரி தோண்டி எடுப்பது இரு மடங்கும் ஆக்கப்பட்டன. இயந்திர நிர்மாணத் தொழில் தேசீயப் பொருளாதாரத்துக்குத் தேவைப்படும் நவீன இயந்திர சாதனங்களை முழுமையாக வழங்கத் திறன் பெற வேண்டும். இந்தத் தொழில் நாட்டுக்கு அளித்த கடைச்சல் இயந்திரங்கள், பிற இயந்திரங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை எத்தகையது என்றால், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் புதிதாக நிறுவவும் சீரமைக்கவும் பட்ட தொழிற்சாலைகள் மொத்தத் தொழில் உற்பத்திப் பொருள்களில் ஐந்தில் நான்கு பகுதியை உற்பத்தி செய்ய வல்லவை ஆயின. விவசாயத் துக்கு ஐந்து லட்சத்துக்கும் மேல் டிராக்டர்களும் சுமார் ஒரு லட்சம் அறுவடை இயந்திரங்களும் ஒரு லட்சத்துக்கும் மேல் லாரிகளும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இருப்புப் பாதைப் போக்குவரத்துக்கான எஞ்சின்கள், ரயில் பெட்டி கள் ஆகியவை பெருத்த எண்ணிக்கையில் புதிதாகக் கட்டப் பட்டன.

புதிய உற்பத்தி நிலையங்களைக் கச்சாப் பொருள்கள் கிடைக்கும் இடங்களின் அருகே அமைக்கும் போக்கைக் கட்சி தொடர்ந்து கடைப்பிடித்தது. உராலிலும் சைபீரியாவிலும் சோவியத் தூரக் கிழக்கிலும் கஸாஃஸ்தானிலும் மத்திய ஆசியாவிலும் பஷ்கீரியாவிலும் தொழில் துறையை வளர்ச்சி செய்வதில் முதற்படியாகக் கவனம் செலுத்தப்பட்டது. தொழில் துறையின் புதிய ஆதாரத் தளங்கள் இந்த இடங் களில் அமைக்கப்பட்டன. இவ்வாறு செய்வது நாட்டின் பொருளாதார வளர்ச்சி நோக்கில் அவசியமாய் இருந்த தோடு, அதன் தற்காப்புத் திறனை வலுப்படுத்துவதற்கும் இன்றியமையாததாக இருந்தது, ஏனெனில் புதிய தொழில் மையங்கள் நாட்டு எல்லைகளிலிருந்து தொலைவில் இருந்தன. கிழக்குப் பிரதேசங்களில் கனரகத் தொழிலை அபிவிருத்தி செய்

வதற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த மொத்த முதலீட்டுத் தொகையில் பாதி ஒதுக்கப்பட்டது.

பல புதிய லேசுரகத் தொழிற்சாலைகளை நிறுவவும் பழைய தொழிற்சாலைகளைப் புதுக்கி அமைக்கவும் திட்டமிடப் பட்டது. மக்களின் உபயோகத்துக்கான பொருள்களின் உற் பத்தி அதிகரித்தது. கூட்டுப் பண்ணைகளும் அரசாங்கப் பண்ணை களும் சமூக விவசாயத்தை அபிவிருத்தி செய்து தொழில் துறைக்குக் கச்சாப் பொருள்களையும் நகர மக்களுக்கு உணவுப் பண்டங்களையும் அதிக அளவில் வழங்கின.

இந்தக் காரணங்களால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட் டத்தில் சரக்குப் புழக்கத்தை இரண்டரை மடங்காகவும் தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களின் உண்மைச் சம் பளங்களை இரு மடங்காகவும் உயர்த்த வகை செய்வது சாத் தியம் ஆயிற்று. கூட்டுப் பண்ணையினரின் வருமானங்களும் அதிகரித்தன. கனரகத் தொழிலை நிறுவுவதிலும் விவசாயத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதிலும் நேர்ந்த பெருத்த செலவுகள் காரணமாக மக்களுக்கு உணவுப் பொருள்களும் உடைகளும் காலணிகளும் கிடைக்கச் செய் வதில் ஏற்பட்ட சங்கடங்களுக்குப் பிறகு சோவியக் மக்கள் தங்கள் உழைப்பின் பலன்களைச் சுவைக்கத் தொடங்கினர்கள். சோவியத் யூனியனில் சோஷலிஸத்தைக் கட்டி அமைக்கும் திட்டத்தை வகுத்து அளித்த லெனினது மேதை வாய்ந்த தீர்க்கதரிசனத்தையும் இந்தத் திட்டத்தை உறுதியுடன் ஒத்திசைந்த வகையில் செயல்படுத்திய கம்யூனிஸ்ட் கட்சி யினது கொள்கையின் மூதறிவையும் அவர்கள் இன்னும் அதிக அளவில் கண்டு உணர்ந்தார்கள்.

பேரளவான அடிப்படைக் கட்டுமானத்துக்கும் தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளதும் வளர்ச்சிக்கு நிதி வசதி அளிப்பதற்கும் நிதி வளங்கள் திரட்டும் பிரச்சி னைக்குத் தீர்வு கண்டது கட்சியின் முக்கியச் சாதனையாக விளங் கியது. தொழில் பெருக்கம் செய்ய முற்படும் ஒவ்வொரு நாடும் நிதி வளங்களின் கடுமையான தேவையை உணர்கிறது. சோவியத் யூனியனும் இத்தகைய தேவையை உணர்ந்தது. ஆனால் அது வெளி உதவி இல்லாமலே, உள் வலிமையைக் கொண்டே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டது.

சோவியத் யூனியனில் நிதி வளங்கள் திரள்வதற்கு முதன்மைத் தலையூற்றாக விளங்குவது உற்பத்திச் சாதனங்களின் சோஷலிஸ உடைமை ஆகும். சோஷலிஸத் தொழில் நிலையங்களுக்குக் கிடைக்கும் லாபங்களின் கணிசமான பகுதியைத் தன் கைகளில் வைத்துக் கொள்ளவும் குவிந்த நிதிகளை அறிவார்ந்த முறையில், திட்டப்படி செலவிடவும் இதனால் சோவியத் அரசுக்கு முடிகிறது. புதிய தொழில்நிலையங்கள் எவ்வளவு அதிக எண்ணிக்கையில் செயல்படத் தொடங்கினவோ அவ்வளவு அதிக நிதி அரசின் பொக்கிஷத்தில் சேர்ந்தது. தொழில் பெருக்கம் தொடங்கியபோது, பெரும்பாலான தொழில் நிலையங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கையில் பெருத்த இடர்களை எதிர்ப்பட நேர்ந்தது என்பது உண்மையே. இது தவிர்க்க இயலாதது. இத்தகைய காலப் பகுதியை அனுபவித்துத் தீர வேண்டும். தாற்காலிகக் கஷ்டங்களின் அர்த்தத்தைக் கட்சி மக்களுக்கு உள்ளபடி விவரித்து விளக்கியது. மக்கள் இதைச் சரியாகப் புரிந்து கொண்டார்கள், பல இன்னைகளை வீரத்துடன் பொறுத்துக்கொண்டார்கள். புதிய தொழில் நிலையங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்படத் தொடங்கியதுமோ, சோவியத் மக்களின் நல்வாழ்வு விரைவாக உயரலாயிற்று.

தேசீயப் பொருளாதாரம் தொழில்நுட்ப ரீதியில் மீட்டமைக்கப்பட்டது சோஷலிஸ நிதிக் குவிவுக்குப் புதிய முக்கியமான ஊற்றுக்கண்ணாக விளங்கியது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் சுரங்கங்களும் கனிகளும் வாகனப் போக்குவரத்தும் செய்திப் போக்குவரத்தும் அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் புதிய இயந்திர சாதன வசதி பெற்றன. தொழிலாளர்களதும் விவசாயிகளதும் உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்தது. பொருள்களின் அடக்கவிலை குறைந்தது. தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் சோஷலிஸ உடைமை நிலை பெற்று அவை தொழில்நுட்ப நோக்கில் மீட்டமைக்கப் பெற்றதும் அரசு நிதியில் பண வரவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்தது. நாட்டுக்குள் நிதி வளங்கள் திரட்டும் பிரச்சினை இறுதியாகத் தீர்க்கப்பட்டது. மேலும் மேலும் அதிகரித்த அளவில் அடிப்படைக் கட்டுமானம் நடத்தவும் மக்களின் சமுதாய,

எழுத்தறிவின்மையை அகற்றுவதற்கான பள்ளியில் பாடம் நடக்கிறது. சோவியத் நாட்டின் வயதுவந்த எழுத்தறிவற்ற மக்கள் அனைவரும் மூப்பதுக்களில் இந்தப் பள்ளிகளில் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார்கள்

பண்பாட்டுத் தேவைகளுக்கும் அவர்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்கும் அதிக நிதி வளங்களை ஒதுக்கவும் சோவியத் அரசு வாய்ப்பு பெற்றது.

மக்களிடமிருந்து கிடைத்த வரிகளும் உள்நாட்டுக் கடன்களும் அரசுக்கு நிதி வளங்கள் கிடைப்பதற்கான ஊற்றுக்களாகப் பணி ஆற்றின. ஆனால் அரசின் பட்ஜெட்டில் இவை மிகச் சிறு பங்காகவே விளங்கின. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வரிகளாகவும் கடன்கள் மூலமும் கிடைத்த நிதிகள் அரசின் செலவுகளில் எட்டில் ஒரு பங்குக்கே போதியவையாக இருந்தன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலோ இவற்றின் விகிதம் இன்னும் குறைந்தது.

பண்பாட்டுக் கட்டுமானத்துக்கு அரசு ஒவ்வோர் ஆண்டும் பெருத்த பணத்தொகை செலவிட்டுவந்தது. 1930ம் ஆண்டிலேயே தொடக்கக் கல்வி எல்லா மக்களுக்கும் கட்டாயம் ஆக்கப்பட்டது. பள்ளிப் பருவம் வந்த எல்லாக் குழந்தைகளும் பள்ளிகளில் பயின்றனர். அவர்களுக்குக்

கல்வி பயிற்றுவதில் சுமார் பத்து லட்சம் ஆசிரியர்கள் ஈடு பட்டிருந்தார்கள். வயதுவந்தவர்களுக்குக் கல்வி கற்பிப் பதற்குப் பெரு முயற்சி செய்யப்பட்டது. மக்கள் கல்வி அறிவு பெறுவதற்கு ஆர்வத்துடன் முன்வந்தார்கள். பல கோடி ஆடவரும் பெண்டிரும் தங்கள் எழுத்தறிவு இன்மைக்கு முடிவு கட்டினர்கள். முன்பு பின்தங்கியிருந்த நாட்டினங் களைச் சேர்ந்த மக்களுக்கு இது சிறப்பாக முக்கியமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நடுத்தரச் சிறப்புக் கல்வி நிலையங்களும் உயர் கல்வி நிலையங் களும் நூற்றுக் கணக்கில் திறக்கப்பட்டன. 1937ம் ஆண்டு கல்லூரிகளில் மட்டுமே ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பயின்றார்கள். இது மேற்கு ஐரோப்பாவின் எல்லா நாடுகளதும் கல்லூரி மாணவர்களின் மொத்த எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகம்.

சோவியத் சமூகத்தின் ஆன்மிக வாழ்வு ஆண்டுக்கு ஆண்டு அதிக வளம் பெற்றது. நூலகங்கள், நாடக, நடன, மன்றங் கள், இசை அரங்குகள், திரைப்படச் சாலைகள், பொருட் காட்சிச் சாலைகள் முதலியவற்றில் ஆட்கள் எப்போதும் நிறைந்திருந்தார்கள். புத்தகங்கள், சஞ்சிகைகள், நாளிதழ் கள் ஆகியவற்றின் தேவை இடையறாது அதிகரித்துக் கொண்டு போயிற்று. அவற்றின் பிரதி எண்ணிக்கைகளும் விரைவாக அதிகமாயின. சமூக-அரசியல் நூல்களில், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் மேதை வாய்ந்த படைப் புக்களைப் பயில்வதில் சோவியத் மக்கள் விசேஷ ஆர்வம் காட்டினர்கள். இவ்வாறு சோவியத் மக்களின் பொதுக் கல்வித்தரம் உயர்ந்ததோடு கூடவே அவர்களது அரசியல் உணர்வும் அதிகரித்தது, விஞ்ஞான உலகக் கண்ணோட்டம் பற்றிய புரிவு ஏற்பட்டது.

கட்சி முன்கண்டது போலவே, இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டம் சோவியத் மக்களின் ஆற்றல் புது வேகத் துடன் பொங்கிப் பெருகச் செய்தது. புதிய இயந்திரங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெறவும் தொழில்நுட்ப அளவுமானங் களை மாற்றி அமைக்கவும் உற்பத்திப் புதுமை புனைவோரின் இயக்கத்தில் இந்த ஆற்றல் பெருக்கு வெளிப்பட்டது. 1935 இலையுதிர் காலத்தில் தனேத்ஸ் சுரங்கத் தொழிலாளி

அலெக்ஸேய் ஸ்தஹானவ் ஒரு முறைவேலை நேரத்தில் 102 டன் நிலக்கரி வெட்டி எடுத்து அளவுமானத்திற்குப் பதினான்கு மடங்கு அதிகமாக வேலை செய்தார். செய்தித்தாள்கள் மூலமும் வானொலி வாயிலாகவும் அவரது வெற்றிச் செய்தியை நாடு முழுவதும் அறிந்து கொண்டது. ஸ்தஹானவைப் பின்பற்றுவோர் பலர் உடனே முன்வந்தார்கள். சுரங்கத் தொழிலாளர்கள், கனியம் வெட்டி எடுப்போர், உலோக வார்ப்புத் தொழிலாளர்கள், இயந்திர நிர்மாணத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள், இருப்புப்பாதை ஊழியர்கள், அரசாங்கப் பண்ணைகளையும் இயந்திர-டிராக்டர் நிலையங்களையும் சேர்ந்த இயந்திரம் செலுத்துவோர் முதலியவர்கள் இவர்களில் இருந்தார்கள். புதுமை புனைவோரைக் கட்சி ஸ்தாபனங்கள் ஆதரித்தன. கட்சியின் மத்தியக் கமிட்டி 1935 நவம்பரில் தொழில்துறையையும் போக்குவரத்துத் துறையையும் சேர்ந்த முன்னணித் தொழிலாளர்களின் மகாநாட்டைக் கூட்டி, ஸ்தஹானவியர்களின் புகழுக்குரிய முன்முயற்சியை ஆதரித்தது. உற்பத்திப் புதுமை புனைவோரின் இயக்கம் மக்கள் அனைவரதும் இயக்கம் ஆகிவிட்டது. புதிய இயந்திரங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெறுவதுடன் சம்பந்தப்பட்ட போட்டியின் புதிய கட்டம் தொடங்கியதற்கு அறிகுறியாக விளங்கியது இந்த இயக்கம்.

புதுமை புனைவோரை இவ்வளவு உள ஈடுபாட்டுடன் உழைக்கத் தூண்டியது எது? இந்தக் கேள்வி இங்கே எழலாம். சொந்தத்தில் பணம் திரட்டும் ஆசையோ? இல்லை. ஸ்தஹானவ் இயக்கத்தின் பிரதான இயக்கு சக்தியாக விளங்கியவை நாட்டுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமை பற்றிய தொழிலாளர்களின் உணர்வும் தங்கள் உற்பத்தி உழைப்பால் நாட்டின் செல்வத்தைப் பெருக்கவும் தாய்நாட்டின், மக்களின் நன்மைக்காக உழைக்கவும் அவர்களுக்கு உண்டான விருப்பமுமே ஆகும்.

பெரும்பாலான புதுமை புனைவோர் இளைஞர்கள், சோவியத் ஆட்சிக் காலத்தில் உழைப்பு வாழ்க்கை தொடங்கியவர்கள். அவர்கள் கண் எதிரே, அவர்கள் பங்கு பற்றியதன் விளைவாக, நாடு அழிவிலும் பின்தங்கிய நிலையிலும் இருந்து எழுந்து, விறலும் வளமும் மிக்கதாக உயரலாயிற்று. சோஷ

லிஸக் கட்டுமானத்தில் எதிர்ப்பட்ட இடர்களுடன் நடந்த போராட்டத்தில், லெனினீயக் கருத்துக்களால் உரம் பெற்று, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உருவாகத் தொடங்கி இருந்தான் சோஷலிஸ சமூகத்தின் புது மனிதன். புரட்சி மரபுகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பவர்களும் தன்னலம் அற்ற உழைப்பாளிகளும் சோஷலிஸத்தின் வெற்றிகளைக் காத்து நிற்க எப்போதும் ஆயத்தமாய் இருப்பவர்களுமான புதிய தலைமுறையினரை வளர்த்துக் கம்யூனிஸக் கருத்துக் களின்பால் விசுவாச உணர்வில் பயிற்றிவிட்டதில் கட்சி பெருமை கொண்டது.

உற்பத்திப் புதுமை புனைவோரின் இயக்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிறைவேற்றத்தை விரைவுபடுத்தி யது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் போலவே இரண்டாவதும் தொழில் துறையில் நாலேகால் ஆண்டுகளில் நிறைவேற்றப் பட்டது. நூற்றுக் கணக்கான புதிய தொழிற்சாலைகளும் மின்நிலையங்களும் சுரங்கங்களும் பெட்ரோலிய ஊற்றுக்க ளும் செயல் தொடங்கின. ஆயிரக்கணக்கான பழைய தொழில் நிலையங்களுக்குப் புதிய இயந்திர வசதிகள் கிடைத்தன. பிரமாண்டமான இரும்புவகைத் தொழிற்சாலைகள்—மக்னித் தகோர்ஸ்க், குஸ்னேத்ஸ்க் தொழிற்சாலைகளும் உராலிலும் கிராமதோர்ஸ்கிலும் கனரக இயந்திர நிர்மாணத் தொழிற் சாலைகளும்—கட்டி முடிந்துவிட்டன. ஹார்க்கவ் டர்போ-ஜெனரேட்டர் தொழிற்சாலையும் வேறு பல தொழிற்சாலை களும் நிறுவப்பட்டுவிட்டன. உரால்-குஸ்னேத்ஸ்க் தொழிற் சாலைகள் நாட்டின் இரும்புவகை உலோகப் பொருள்களில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கும் தோண்டி எடுக்கப்பட்ட மொத்த நிலக்கரியில் நான்கில் ஒரு பங்குக்கு மேலும் உற் பத்தி செய்தன. சோவியத் யூனியனில் 1932ல் 69 லட்சம் டன்களாக இருந்த எஃகு உற்பத்தி 1937ல் 177 லட்சம் டன்களாக அதிகரித்துவிட்டது. எஃகு தயாரிப்பதில் சோ வியத் யூனியன் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளான பிரிட்டனையும் பிரான்ஸையும் விஞ்சிவிட்டது.

யாவற்றிலும் பெருத்த வெற்றிகள் அடைந்தது இயந் திர நிர்மாணத் தொழில். மிக மிகச் சிக்கலான கடைச்சல் இயந்திரங்களையும் பிற இயந்திரங்களையும் மிக நவீன உப

கரணங்களையும் நிருமிக்க இப்போது அது வல்லதாய் இருந்தது. 1930ல் கூட, மின் நிலையங்களில் அமைக்கப்பட்ட பத்து டர்பைன்கள், ஜெனரேட்டர்களில் ஒன்பது அயல் நாடுகளில் வாங்கப்பட்டவையாக இருந்தன. 1937லோ, அமைக்கப் பட்ட பத்து டர்பைன்களில் எட்டும் எல்லா ஜெனரேட்டர் களும் சோவியத் யூனியனிலேயே நிருமிக்கப்பட்டவையாக இருந்தன. பத்து ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் சோவியத் நாட்டில் **தேசீயப் பொருளாதாரம் அனைத்தும் தொழில் நுட்ப நோக்கில் சீரமைக்கப்பட்டுவிட்டது.** அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் ஜெர்மனிக்கும் அடுத்தபடியாக சோவியத் யூனியன் உலகின் மூன்றுவது தொழில் வல்லரசு ஆகிவிட்டது. இந்தச் சாதனையை நிகழ்த்திய பெருமை தொழிலாளி வர்க்கத்தையும் தொழில்நுட்ப அறிவுஜீவிகளையுமே சாரும்.

தொழிலாளி வர்க்கத்துக்கு ஒப்பாகவே முன்னேறினார் கள் கூட்டுப் பண்ணை விவசாயிகள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவதற்குள் விவசாயத்தைக் கூட்டுப் பண்ணை முறையில் அமைப்பது நிறைவு பெற்றுவிட்டது. 1937ல் ஒரு கோடி எண்பத்தைந்து லட்சம் விவசாயிகளின் பண்ணைகள் கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்துவிட்டன. பத்தே ஆண்டுகளில் நாட்டுப்புறம் அடையாளம் தெரியாதபடி மாறி விட்டது. வயல்களில் வரப்புக்களும் விவசாயிகளின் குறுகிய துண்டு நிலங்களும் மறைந்து விட்டன. அவற்றின் இடத்தில் மிக விசாலமான பயிர் நிலங்கள் காட்சி அளித்தன. விவசாயிகள் வேளாண்மைக்குப் பயன்படுத்திய மரக் கலப்பைகளும் களைக்கொட்டுகளும் மறைந்து விட்டன. அவற்றின் இடத்துக்கு வந்துவிட்டன டிராக்டர்களும் பிற இயந்திரங்களும். 1937ல் நாலரை லட்சத்துக்கும் மேல் டிராக்டர்களும் சுமார் லட்சத்து முப்பதாயிரம் அறுவடை இயந்திரங்களும் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டன. கூட்டுப் பண்ணைகள் பயிர்நிலப் பரப்பை விரிவுபடுத்தின, விளைச்சலை அதிகமாக்கின, கால்நடை வளர்ப்புப் பண்ணைகளை அமைத்தன. கூட்டுப் பண்ணைக் கிராமங்கள் வசதிகள் நிறைந்தவை ஆகிவிட்டன. புதிய வீடுகளும் பள்ளிக்கூடங்களும் பண்பாட்டுக் கழகங்களும் மருத்துவ நிலையங்களும் அங்கு நிறுவப்பட்டன.

கட்சியும் சோவியத் அரசும் கூட்டுப்பண்ணைகளுக்கு எல்லா வகையிலும் உதவி அளித்தன. நிலம் அவற்றின் பயன்பாட்டுக்குச் சாசுவதமாக அளிக்கப்பட்டது. கூட்டுப் பண்ணைகளுக்கு உதவி செய்யும் இயந்திர-டிராக்டர் நிலையங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்தது. இயந்திரம் செலுத்துவோரைப் பயிற்றுவதற்கு முக்கியச் செலவை அரசு ஏற்றுக் கொண்டது. 1935ம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த முன்னணிக் கூட்டுப் பண்ணையினரின் இரண்டாவது காங்கிரஸ் கூட்டுப் பண்ணை அமைப்பை வலுப்படுத்துவதற்குப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. கட்சி, அரசாங்கம் ஆகியவற்றின் தலைவர்கள் அதன் நடவடிக்கைகளில் பங்கு கொண்டார்கள். காங்கிரஸில் உரையாற்றிய முன்னணிக் கூட்டுப் பண்ணையினர் தங்கள் அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டார்கள், பல உபயோகமான யோசனைகளை முன்வைத்தார்கள். விவசாய உழைப்பாளர் கூட்டுறவுகளுக்கு உரிய ஆதர்ச விதிகளைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. கூட்டுப் பண்ணை உற்பத்தியை ஒழுங்கமைப்பது பற்றியும் கூட்டுப் பண்ணைக்குள் வாழ்க்கையைச் சீராக முறைப்படுத்துவது பற்றியும் அடிப்படை வரையறுப்புக்களும் கட்டளைகளும் இவற்றில் அடங்கி இருந்தன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் சோவியத் நாட்டுப்புறத்தின் வாழ்க்கையில் நிகழ்ந்த மிக முக்கியமான மாற்றம் குலாக்குகள் ஒழிக்கப்பட்டது ஆகும். குலாக்குகள் மீண்டும் தோன்றுவதற்கான அடிப்படை—சிறு தனியுடைமை விவசாயப் பண்ணை—அகன்றுவிட்டது. நகரங்களில் முதலாளித்துவப் போக்கு உள்ள நபர்கள் (தனித் தொழிலதிபர்களும் வர்த்தகர்களும்) முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலேயே ஒழிக்கப்பட்டு விட்டார்கள். எனவே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான அரசியல் நோக்கம்—முதலாளித்துவப் போக்குள்ள எஞ்சிய நபர்களையும் அவர்கள் தோன்றுவதற்குரிய காரணங்களையும் ஒழிப்பது—வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக சோவியத் யூனியனில் **சுரண்டுவோர் வர்க்கங்கள்** முழுமை

யாகக் களைந்து அகற்றப்பட்டு விட்டன, மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு இடம் அளிக்கும் காரணங்கள் ஒழிக்கப்பட்டு விட்டன, சோஷலிஸ சமூகம் அடிப்படையில் நிறுவப்பட்டு விட்டது. முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் காலப்பகுதிக்கு உரிய முக்கிய லட்சியங்கள் நாட்டில் நிறைவேற்றப்பட்டு விட்டன. சோவியத் யூனியனில் சோஷலிஸத்தை நிறுவுவதற்கான லெனினுடைய திட்டம் செயல்படுத்தப்பட்டுவிட்டது. முதலாளித்துவம் நிலைபெறுவதற்குப் பல நூறு ஆண்டுகள் பிடித்தன என்பது தெரிந்ததே. சோவியத் யூனியனில் சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பதற்கோ இருபதே ஆண்டுகள் தேவைப்பட்டன. இதோடு, சோவியத் யூனியனில் சோஷலிஸ நிர்மாணம் அசாதாரணமான இடர்கள் நிறைந்த நிலைமைகளில் நிறைவேற்றப்பட்டது என்பதையும் கருத்தில் கொண்டால், சோவியத் மக்களின் சாதனை எத்தகைய மாட்சி மிக்கது என்பதையும் மக்களின் அளவற்ற பேராற்றலைச் செயல்முறைப் படைப்புக்குத் தூண்டி ஊக்கிய கட்சியின் பணி எத்தகைய முக்கியத்துவம் உள்ளது என்பதையும் புரிந்து கொள்ள முடியும். இவ்வளவு குறுகிய காலத்தில் சோஷலிஸம் கட்டி அமைக்கப்பட்டது கட்சியின் பொதுக் கொள்கைப் போக்கு எவ்வளவு சரியானது என்பதை மிக ஆழ்ந்த முறையில் உறுதிப்படுத்தியது.

சோஷலிஸக் கட்டுமானம் நடக்கையில் சமூகவாழ்வின் எல்லாத் துறைகளும் அடிப்படை மாற்றத்துக்கு உள்ளாயின. அரசியல், பொருளாதார அமைப்பு, சமூகத்தின் வர்க்க அமைவு, மனிதர்களின் கருத்துக்கள், எல்லாவற்றிலுமே மாறுதல்கள் நிகழ்ந்தன. தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற இரண்டு நட்புறவு உள்ள வர்க்கங்களும் பெரும்பாலும் இவர்களிடையிலிருந்து தோன்றிய அறிவுஜீவிகள் என்ற சமூக வகுப்பும் மட்டுமே சோவியத் நாட்டில் உள்ளன.

மக்களின் வர்க்க அமைவிலும் சோவியத் நாட்டின் பொருளாதார, சமூக அமைப்பிலும் ஏற்பட்ட அடிப்படை மாறுதல்களைப் பிரதிபலித்தது சோவியத் யூனியனின் அரசியல் சட்டம். 1936ம் ஆண்டு நடந்த சோவியத்துக்களின் எட்டாவது அகில யூனியன் அசாதாரணக் காங்கிரஸால்

சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனது இலச்சினை

இது உறுதிப்படுத்தப்பட்டது. சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றியைச் சட்ட ரீதியாக நிலைப்படுத்தியது அரசியல் சட்டம்.

இவ்வாறு, கம்யூனிஸ்ட் கட்சி, லெனினது திட்டத்தைச் செயல்படுத்தி, சோவியத் யூனியனில் சோஷலிஸ நிர்மாணத்தை ஒழுங்கமைத்து வெற்றிகரமாக நிறைவேற்றியதன் மூலம் சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைப்பதற்குரிய ஆதர்சத்தை உலகுக்கு அளித்தது. இந்தப் புனரமைப்பின் அடிப்படை விதிகளைக் கட்சி ஆதாரப்படுத்தியது, அனுபவத்தில் சோதித்துச் சரி பார்த்தது.

சோவியத் யூனியன் தனது பொருளாதார விறலியும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தி, சர்வதேச அரங்கில் பெருத்த சக்தி ஆகிவிட்டது. சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றிகள் எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளிகளின் புரட்சி உற்சாகத்தை அதிகப்படுத்தின.

கம்யூனிஸத்தின் பொருட்டு சோவியத் மக்களது போராட்டத்தின் வரலாற்றில் மிக முக்கியமான கால கட்டம் நிறைவுற்றது.

அத்தியாயம் நான்கு

சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்கு

சோஷலிஸ அமைப்பை வலுப்படுத்தக் கட்சியின் போராட்டம்

சோஷலிஸத்தை அடிப்படையில் நிறுவியபின் அதன் கட்டுமானத்தை நிறைவுபடுத்தவும் கம்யூனிஸத்துக்குப் படிப்படியாகப் பரிணமிக்கவும் உரிய கட்டத்தில் சோவியத் யூனியன் அடி வைத்தது.

சோவியத் நாடு வளர்ச்சியின் புதிய கட்டத்தில் அடி வைக்கிறது

கம்யூனிஸம் தனது வளர்ச்சியில் இரண்டு கட்டங்களைக் கடக்கிறது என்று மார்க்ஸும் லெனினும் காட்டினர்கள். சோஷலிஸம் என்பது கம்யூனிஸத்தின் முதலாவது, தாழ் நிலைக் கட்டம். முழுமையான கம்யூனிஸம் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சித் தரத்திலும் உழைப்பாளிகளது உணர்வின் தரத்திலும் சோஷலிஸத்திலிருந்து வேறுபடுகிறது. சோஷலிஸம் வளர்ச்சி அடைந்து வலுப்படும் நிகழ்முறையின்போது அதிலிருந்து வளர்கிறது கம்யூனிஸம். லெனின் சொன்னார்: ''சோஷலிஸம் என்பது முதலாளித்துவத்திலிருந்து நேராக வளரும் சமூகம், புதிய சமூகத்தின் முதல் வடிவம். கம்யூனிஸமோ சமூகத்தின் அதிக உயர்வான வடிவம். சோஷலிஸம் முழுமையாக வலுப்பட்ட பின்பே அது வளர்ச்சி அடைய முடியும்.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 40, பக்கம் 33).

சோஷலிஸம் அடிப்படையில் கட்டி அமைக்கப்பட்டதும் அதை வலுப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் குறித்த காலம் தேவைப்படும்.

சோஷலிஸம் வலுப்படுவதற்கு அதன் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளத்தின் வளர்ச்சி முதன்மையாக உதவுகிறது. அந்தக் காலத்திற்குள் சோவியத் யூனியனிடம் விறல் மிக்க தொழில் துறை இருந்தது. ஆனால் இயந்திர உற்பத்தியின் அளவிலும் உழைப்பின் உற்பத்தித் திறன் மட்டத்திலும் அது வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளுக்குப் பின்தங்கி இருந்தது. எனவே தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளதும் தொழில்நுட்ப முன்னேற்றம், நாட்டின் பொருளாதார விறல், அதன் உற்பத்திச் சக்திகளுடையவும் சமூகச் செல்வ வளத்தினுடையவும் அதிகரிப்பு, மக்களது நல்வாழ்வின் இடையறுத வளர்ச்சி ஆகியவற்றின் அஸ்திவாரமாக விளங்கிய கனரக இயந்திரத் தொழிலை எல்லா வகையிலும் மேலும் அபிவிருத்தி செய்வதே முதற் குறிக்கோள் ஆயிற்று.

தொடக்க நிலையில் இருந்த கூட்டுப் பண்ணை அமைப்பை வலுப்படுத்துவது சிறப்பாக அவசியமாய் இருந்தது. கூட்டுப் பண்ணைகளால் தங்கள் வாய்ப்புக்களை எடுத்த எடுப்பில் கண்டு கொள்ள முடியவில்லை. ஆரம்பத்தில் அவை ஒப்பு நோக்கில் சிறியவையாகவும் பொருளாதார நோக்கில் பலவீனமாகவும் இருந்தன. விவசாயிகள் கூட்டுப் பண்ணையில் சேர்ந்தபோது கொண்டுவந்த குதிரைகள், எருதுகள், குதிரைகளால் இழுக்கப்படும் அறுவடைக் கருவிகள், புல்லரிவாள்கள், கதிரடிப்புக் கருவிகள், கலப்பைகள், பரம்புகள் முதலியவையே அவற்றின் பொது உடைமையாக இருந்தன. வேளாண்மை மட்டுமே முழுமையாகப் பொதுவாக்கப்பட்டிருந்தது. கூட்டுப் பண்ணைப் பொருளாதாரத்தின் மற்றொரு முக்கியத் துறையான கால்நடை வளர்ப்பு இனிமேல்தான் அமைக்கப்பட இருந்தது. சில கூட்டுப் பண்ணைகளில் கால்நடைப் பண்ணைகள் இருந்தது உண்மையே. ஆனால் அவற்றில் கால்நடைகள் குறைவாய் இருந்தன. கூட்டுப் பண்ணைகளின் பொதுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தி விரிவாக்குவதும் அவற்றின் வருவாயை அதிகரிப்பதும் அந்த அடிப்படையில் கூட்டுப் பண்ணையினரின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாய் இருந்தன.

சோஷலிஸத்தில் சமுதாய உற்பத்தித் தரம் அவ்வளவு

உயர்ந்து விடுவதில்லை. சமூகத்தினிடம் மக்களின் எல்லாத் தேவைகளையும் முழுமையாக நிறைவேற்றும் அளவுக்குப் பொருள் வளம் இருப்பதில்லை. எனவேதான் சோஷலிஸ சமூகம் ''திறமைக்கு ஏற்ற உழைப்பு, உழைப்புக்கு ஏற்ற ஊதியம்'' என்னும் கோட்பாட்டைச் செயல்படுத்துகிறது. ஒவ்வொரு மனிதனுடைய உழைப்புக்கும் உற்பத்தி செய்யப் படும் பொருளின் அளவையும் தரத்தையும் பொறுத்து ஊதி யம் தரப்படுகிறது என்பது இதன் அர்த்தம். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்ற கோட்பாடு தங்கள் உழைப்பின் பய னில் மக்களின் சொந்தப் பொருளியல் அக்கறையை சமூகம் அனைத்தின் நலன்களுடன் ஒன்று சேர்க்கிறது. சிறப்பாக உழைத்து அதிகப் பயன்கள் விளைப்பவன் அதிக ஊதியம் பெறுகிறான். இது சமூகம் முழுவதற்கும் லாபகரமானது. பொருள்கள் மேலும் மேலும் அதிகமாக உற்பத்தி ஆகின்றன, சோஷலிஸப் பொருளாதாரம் வளர்கிறது, சமூகச் செல்வ வளங்கள் பெருகுகின்றன. சோஷலிஸம் ஒரு படித்தான ஊதிய முறையை அனுமதிக்க முடியாது. உழைப்புக்கும் அதன் ஊதியத்துக்கும் கண்டிப்பான அளவுமானம் ஏற்படுத்து வதும் அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்வதும் கண் காணிப்பதும் அவசியம். ஆகவேதான் லெனின் அறிவுறுத் தினார்: ''கம்யூனிஸத்தின் 'உச்ச' கட்டம் வரும்வரை உழைப் பின் அளவும் உபயோகத்தின் அளவும் சமூகத்தின் சார் பிலும் **அரசின் சார்பிலும் மிகக் கண்டிப்பாகக்** கண்காணிக் கப்பட வேண்டும் என்று சோஷலிஸ்டுகள் கோருகிறார்கள்...'' (முழு நூல் திரட்டு, தொகுதி 33, பக்கம் 97).

மனிதர்களின் உணர்வு சமூகத்தில் நிகழும் மாற்றங் களுக்குப் பின்தங்குகிறது என வாழ்க்கை காட்டுகிறது. சோ வியத் யூனியனில் சோஷலிஸம் வெற்றி பெற்றதும் தனி உடைமை மறைந்துவிட்டது, ஆனால் தனி உடைமைப் பழக் கங்கள் மனிதர்களின் உணர்விலும் நடத்தையிலும் பெரும் அளவு எஞ்சி இருந்தன. சமூகத்துக்குக் குறைவாய்க் கொடுப்பது, ஆனால் சமூகத்திடமிருந்து அதிகமாய்ப் பெறு வது என்பதில் சிலரிடம் இவை வெளிப்பட்டன. எனவேதான் எல்லா உழைப்பாளிகளுக்கும் மறு பயிற்சி அளிப்பதும் அவர் களை சோஷலிஸ சமூகத்தின் செயலூக்கமும் உணர்வும் உள்ள

உழைப்பாளிகளாக மாற்றுவதும் சோஷலிஸத்தின் நிலைமைகளில் சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் உள்ளவை ஆகின்றன.

சோஷலிஸத்தில் அரசு புதிய பாத்திரம் வகிக்கிறது. அதன் ஒரு சில செயல்கள் மறைந்து விடுகின்றன. வேறு சிலவோ முழு வளர்ச்சி பெறுகின்றன. ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட சுரண்டுவோர் வர்க்கங்களின் எதிர்ப்பை அடக்கி ஒடுக்குவது தொடக்கத்தில் சோஷலிஸ அரசின் முக்கியச் செயல்களில் ஒன்றாக இருந்தது. சோஷலிஸம் வெற்றி பெற்றதும் நாட்டுக்குள் சுரண்டுவோர் வர்க்கங்கள் மறைந்துவிட்டன. அடக்கி ஒடுக்குவதற்கு எவரும் இல்லை. எனவே இந்தச் செயல் தானே நின்றுவிட்டது. சோஷலிஸ உடைமையையும் சட்ட ஒழுங்கையும் காப்பது, உழைப்பின் அளவையும் உபயோகத்தின் அளவையும் கணக்கிட்டுக் கண்காணிப்பது என்ற செயல் விரிவடைந்தது. இந்தச் செயலை ஆற்றுகையில் சோஷலிஸ அரசு சோம்பேறிகளையும் ஒட்டுண்ணிகளையும் திருடர்களையும் போக்கிரிகளையும் நிர்ப்பந்தப்படுத்தவும் தண்டிக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது. ஆனால் இந்த மனிதர்கள் சோஷலிஸ சமூகத்துக்கு எவ்வளவுதான் அபாயமானவர்கள் என்றாலும் முன்னாள் சுரண்டுவோருடன் இவர்களைக் கலந்து குழப்பிக்கொள்ளக் கூடாது. சுரண்டுவோர் உழைப்பாளிகளின் வர்க்கப் பகைவர்களாய் இருந்தார்கள், தங்கள் ஆட்சியை மீண்டும் நிலைநாட்ட முயன்றார்கள், தங்கள் உடைமைகளையும் செல்வத்தையும் சலுகைகளையும் பறித்துவிட்டதற்காகத் தொழிலாளி வர்க்கத்தைப் பழி வாங்கினார்கள். சோம்பேறிகளும் ஒட்டுண்ணிகளும் திருடர்களும் போக்கிரிகளுமோ, கடந்தகாலத் தீய மீதமிச்சங்களை உணர்வில் கொண்டிருப்பவர்கள், அல்லது பகைமையுள்ள பூர்ஷ்வாச் செல்வாக்குக்கு உள்ளானவர்கள். இத்தகைய நபர்கள் மீது பயிற்சி மூலமும் கட்டாயப்படுத்துவதன் வாயிலாகவும் அரசு பாதிப்பு விளைக்கிறது.

பொருளாதார-ஒழுங்கமைப்பு, பண்பாட்டுப் பயிற்சி என்ற சோஷலிஸ அரசின் பிரதானச் செயல்கள் சோஷலிஸத்தின் நிலைமைகளில் எல்லாத் தரப்பிலும் வளர்ச்சி அடைந்தன. நாட்டின் சோஷலிஸத் தேசியப் பொருளாதாரம் இருபது

ஆண்டுகளில் வெகுவாக வளர்ந்து, பல துறைகள் கொண்ட தாகவும் அரசு அனைத்திலும் பரவிய அளவில் ஒழுங்கமைந் ததாகவும் பெருகி விட்டது. இவ்வளவு பெரிய, சிக்கலான பொருளாதாரத்தை நிர்வகிப்பதும் அது இடையறாது ஏற்றம் பெறும்படி செய்வதும் அறிவார்ந்த திட்டம் வகுப்ப தன் வாயிலாகவே முடியும். தேசீயப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளது வளர்ச்சியில் சரியான விகிதத்தை நிர்ணயிப்பதும் கடைப்பிடிப்பதும் நிதி, பொருள் வளங் களையும் சமூக உழைப்பின் உற்பத்திப் பொருள்களையும் அறி வுக்குப் பொருந்த வினியோகிப்பதும் தொழிலாளர்களைச் சரிவரப் பயன்படுத்துவதும் சோஷலிஸ அரசின் பொறுப்பு ஆகிவிட்டன. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் அரசியல் உணர்வையும் செயலூக்கத்தையும் பண்பாட்டு, தொழில்நுட்பத் தரத்தையும் மேம்படுத்துவதிலும் தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்கும் ஊழியர் களைப் பயிற்றுவதிலும் அரசின் பொறுப்புக்கள் அதிகம் ஆகி விட்டன.

சோவியத் நாட்டை வெளிப் பகைவர்களிடமிருந்து காக்கும் காரியம் தொடர்ந்தது. சோஷலிஸ அரசு, நாட்டின் தற்காப்புத் திறனை வலுப்படுத்தவும் அதன் பாதுகாப்புக்கு வகை செய்யவும் இடைவிடாது பாடுபட வேண்டி இருந்தது.

கட்சியின் புதிய பணிகளும் அவற்றின் நிறைவேற்றத்துக்கான போராட்டமும்

சோஷலிஸத்தின் வெற்றிகள் மக்க ளிடையே கட்சியின் மதிப்பை இன் னும் அதிகமாக உயர்த்தின. சோவியத் சமூகத்தில் அதன் தலைமை நிலை சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டது. அதில் பின்வருமாறு கூறப்பட்டது:

''தொழிலாளி வர்க்கத்தின் அணிகளையும் உழைப்பாளி களின் பிற வட்டாரங்களையும் சேர்ந்த செயலூக்கமும் அரசி யல் உணர்வும் மிக்க பிரஜைகள் அகில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியில் ஒன்று சேர்கிறார்கள். இது, சோஷலிஸ அமைப்பை வலுப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் உழைப்பாளிகளின் போராட்டத்தில் அவர்களது

முன்னணிப் படைப் பிரிவாகவும் உழைப்பாளர்களின் சமூக, அரசு ஸ்தாபனங்கள் அனைத்தினதும் தலைமை வகிக்கும் மையமாகவும் விளங்குகிறது.''

சோஷலிஸம் வெற்றி பெற்றதும், சோஷலிஸ அமைப்பை வலுப்படுத்துவதும் அபிவிருத்தி செய்வதும் நாட்டுக்குள் கட்சியின் முக்கியப் பணி ஆயிற்று.

சோவியத் நாட்டிலும் கட்சிக்குள்ளும் ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கு அனுகூலமான நிலைமைகளை சோஷலிஸம் உருவாக்கிற்று. 1936ம் ஆண்டு அரசியல் சட்டம் புகுத்தப்பட்டது சோவியத் சமூக அமைப்பையும் அரசு அமைப்பையும் மேலும் ஜனநாயகப்படுத்த வகை செய்தது. பாட்டாளி அல்லாத மக்கள் வட்டாரங்களுக்கு சோவியத் தேர்தல்களில் இருந்த தடைவரம்புகள் நீக்கப்பட்டன. தேர்தல்கள் அனைத்து மக்களுக்கும் உரியவையும் சமமானவையும் நேர்முகமானவையும் இரகசிய வாக்களிப்பு முறை உள்ளவையும் ஆயின. 1937டிசெம்பரில் புதிய அரசியல் சட்டப்படி சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத்துக்குத் தேர்தல்கள் நடந்தன.

வெற்றி பெற்ற சோஷலிஸ நாட்டின் மக்கள்

கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸ்ட் அல்லாதவர்களுடன் கூட்டு சேர்ந்து இந்தத் தேர்தல்களில் கலந்துகொண்டது. சோஷலிஸ ஜனநாயகவாதத்தின் சக்தியையும் உயிரோட்டத்தையும் கட்சியை மையமாகக் கொண்டு சோவியத் மக்கள் ஒற்றுமையாகத் திரண்டிருப்பதையும் இந்தத் தேர்தல்கள் காட்டின.

அகில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியின் பதினெட்டாவது காங்கிரஸ் 1939 மார்ச்சில் கூடியது. சோஷலிஸத்தின் வெற்றிகளை அது பார்வையிட்டது. சோவியத் யூனியன் தனது உள் வளர்ச்சியில் **சோஷலிஸ சமூகத்தின் கட்டுமானத்தை நிறைவுபடுத்தி, சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்குப் படிப்படியாகப் பரிணமிக்கும் கட்டத்தில்** அடி வைத்து விட்டது என்று, லெனினுடைய கட்டளைகளை வழிகாட்டியாகவும் சோஷலிஸத்தினது வெற்றிகளை ஆதாரமாகவும் கொண்டு பதினெட்டாவது கட்சிக் காங்கிரஸ் முடிவு செய்தது. சோஷலிஸ அமைப்பையும் அதன் பொருளியல்-தொழில்நுட்ப அடித் தளத்தையும் வலுவும் வளர்ச்சியும் பெறச் செய்வதே இந்தக் காலக்கட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள். பொருளியல் உற்பத்தித் துறையில் முதலாளித்துவத்தை மிஞ்சுவது அவசியமாய் இருந்தது. ஒரு காலத்தில் லெனின் முன்வைத்த, **பொருள்களின் நபர்வாரி உற்பத்தியில் பிரதான முதலாளித்துவ நாடுகளை எட்டிப் பிடிக்கவும் முந்தவும் வேண்டும் என்ற அடிப்படைப் பொருளாதாரக் குறிக்கோளை** நடைமுறையில் நிறைவேற்ற முற்படும் படிக் கட்சியையும் சோவியத் மக்களையும் காங்கிரஸ் அறைகூவி அழைத்தது. இந்தக் குறிக்கோளின் அடிப்படையில் காங்கிரஸ் சோவியத் யூனியனின் தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்கான, 1938—1942 ஆண்டுகளுக்குரிய மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் சோவியத் யூனியனில் நிறுவப்பட்ட சோஷலிஸ சமூகத்தின் முதல் வருங்காலத் திட்டமாக விளங்கியது. நாட்டின் தொழில் சக்தியைத் தீவிரப்படுத்தவும் கூட்டுப் பண்ணை அமைப்பை வலுப்படுத்தவும் மக்களின் பொருளியல், பண்பாட்டுத் தரத்தை உயர்த்தவும் நாட்டின் தற்காப்புத் திறனை பலப்படுத்தவும் இந்தத்

திட்டம் வகை செய்தது. ஐந்து ஆண்டுகளில் தொழில் உற்பத்திப் பொருள்களின் அளவைக் கிட்டத்தட்ட இரு மடங்கு ஆக்குவது எனத் திட்டமிடப்பட்டது.

சோவியத் மக்களின் சோஷலிஸ ஒற்றுமை கட்சியின் வாழ்வில் பிரதிபலித்தது. கட்சியின் விதிகளில் காங்கிரஸ் மாற்றங்கள் செய்தது. கட்சியில் சேர்பவர்களைத் தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவு ஜீவிகள் என்று வெவ்வேறுக வகை பிரிப்பது ரத்து செய்யப்பட்டது. கட்சி உறுப்பினர் ஆவதற்கு எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஏற்பு நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன.

சோஷலிஸத்துக்கு அதற்கே உரிய வளர்ச்சி விதிகளும் அதற்கே உரிய பிரச்சினைகளும் இயல்பானவை. இந்தப் பிரச்சினைகளை முன்னர் ஒருவரும் ஒருபோதும் தீர்த்ததில்லை. கட்சி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் திறமையுடன் முற்பட்டது.

சோஷலிஸம் சமூகத்தின் உழைக்கத் திறன் கொண்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் உழைக்கும் உரிமை அளிக்கிறது. உழைப்பாளி மக்களின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள இந்தச் சாதனை சோஷலிஸத்தின் வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு முதன்முதலாக சோவியத் யூனியனில் புரியப்பட்டது. ஆனால் சோஷலிஸ அரசின் மீதும் அதில் தலைமை வகிக்கும் கட்சி மீதும் இது அதிகப் பொறுப்புக்களைச் சுமத்துகிறது, புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது என வாழ்க்கை காட்டியது.

உதாரணமாக, முதலாளித்துவ நிலைமைகளில் தொழில் நிலையங்களுக்குத் தேவையான உழைப்பாளிகளுக்கு வகை செய்வது பற்றி அரசு கவலைப்படுவது இல்லை. தொழில் அதிபர்கள் தாமே இதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அவர்களுக்கும் சங்கடங்கள் எதிர்ப்படுவதில்லை. நாட்டுப்புறத்தில் விவசாயிகளும் நகரத்தில் சிறு உடைமையாளர்களும் சீரழிந்து விடுவதால் உழைப்பாளிகள் தாமே, தேவைக்கும் மேல் கிடைத்துவிடுகிறார்கள். சோவியத் நாட்டிலும் கூட்டுப் பண்ணைகள் பெருத்த எண்ணிக்கையில் அமைக்கப்படுவதற்கு முன் கிராமங்கள் தொழிற்சாலைகளுக்கு உழைக்கும் கரங்களைத் தேவைக்கும் அதிகமாகவே அளித்து வந்தன. ஆனால்

நாட்டுப் புறத்தில் கூட்டுப் பண்ணை அமைப்பு வெற்றி பெற்றதும் நிலைமை மாறிவிட்டது. விவசாயிகள் தரவாரியாகப் பிரிக்கப்படுவது நின்றுவிட்டது. கூட்டுப் பண்ணைகளில் வாழ்க்கை மேம்பட்டது. உழைப்பாளிகளின் பெருக்கு தானாகவே நகரங்களுக்கு வருவது நின்று விட்டது. வேலையின்மை அகற்றப்பட்டு விட்டதால் நகரங்களிலும் வேலைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. தீவிர வளர்ச்சி அடைந்த தொழில்துறைக்கோ உழைப்பாளிகளின் இடையறுத பெருக்கு தேவைப்பட்டது.

கூட்டுப் பண்ணைகளுடன் உடன் படிக்கைகள் செய்து கொள்வதன் அடிப்படையில் நாட்டுப் புறத்தில் உழைப்பாளிகளை ஒழுங்கமைந்த முறையில் திரட்டுவது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவிலேயே அரசுக்குக் கட்டாயம் ஆயிற்று. ஆனால் இந்த ஊற்று விரைவில் வற்றி விட்டது. அரசு உழைப்பாளிச் சேமிப்பைத் திட்டமிட்டு ஏற்படுத்துவது இன்றியமையாதது என்ற முடிவுக்கு வந்தது கட்சி. தொழிற் கல்வி நிலையங்களும் தொழிற்சாலைப் பயிற்சிப் பள்ளிகளும் நாடு முழுவதிலும் விரிவாகத் திறக்கப்பட்டன. லட்சோப லட்சம் இளைஞர்களும் யுவதிகளும் இவற்றில் தனித்துறைப் பயிற்சி பெற்று, தேர்ந்த தொழிலாளர் ஆனார்கள். இவர்களுடைய பராமரிப்புச் செலவை அரசு ஏற்றுக் கொண்டது. பொறி இயலாரும் தொழில்நுட்ப நிபுணர்களும் திட்டப்படி பயிற்றப்பட்டார்கள். தேசீயப் பொருளாதாரத்திற்காக உழைப்பாளிச் சேமிப்புகள் ஏற்படுத்துவது நிலையான அடிப்படையில் அமைக்கப்பட்டது, சோஷலிஸ அரசின் திட்ட வகுப்பு, பொருளாதார உறுப்புக்களின் முக்கியக் காரியம் ஆகிவிட்டது.

சோஷலிஸத்தில், சோஷலிஸ சமூகத்தின் ஒவ்வோர் உழைப்பாளியும் தன் உழைப்பின் பயனைப் பொறுத்து ஊதியம் பெறுகிறான். அதிகப் பொருள்களைச் சிறந்த தரத்தில் உற்பத்தி செய்பவன் அதிக ஊதியமும் சம்பாதிக்கிறான். முதலில் இந்தக் கோட்பாடு செயல்பட்டது சோஷலிஸத் தொழில் துறையில் தான். நாட்டுப்புறத்தில் கூட்டுப் பண்ணை அமைப்பின் வெற்றிக்குப் பிறகு இது விவசாயத்திலும் செயல் படலாயிற்று. தேசீயப் பொருளாதாரத்தில் சோஷலிஸ

அமைப்பு நிலை பெற்றது. உழைப்புக்கு ஏற்ற வினியோகம் என்னும் சோஷலிஸக் கோட்பாடு தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும், ஒவ்வொரு தொழில் நிலையத்திலும் கடைப்பிடிக்கப்படுவது மிக அவசியமாய் இருந்தது. உழைப்பாளிகள் சரிவரப் பயன்படுத்தப்படுவதும் சோஷலிஸப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகமும் தங்கள் உழைப்பின் விளைவுகளில் உழைப்பாளிகள் அக்கறை கொள்வதும் மக்களது நல்வாழ்வின் பொது ஏற்றமும் இப்போது இதையே சார்ந்து இருந்தன.

ஆனால் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அவ்வளவு எளிதாய் இல்லை. சோஷலிஸ உற்பத்தியின் ஒழுங்கமைப்பையும் சோஷலிஸ நிலைமைகளில் பொருளியல் நலங்களின் வினியோகத்தையும் உறுதியான விஞ்ஞான அடிப்படையில் நிலைப்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் தேவைப்பட்டன. இந்தத் துறையில் வெவ்வேறு காலங்களில் கட்சிக்கு வெவ்வேறு பிரச்சினைகள் எதிர்ப்பட்டன. கட்சி இவற்றுக்குச் சரியான தீர்வுகள் கண்டது.

முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் காலத்தில் தொழில் நிலையங்கள், புதுக் கட்டுமான இடங்கள் ஆகியவற்றின் வேலையை உழைப்பாளிகள் பெருக்கின் **ஏற்ற வற்றம்** காய்ச்சல் போன்று தொல்லைப்படுத்தியது. உதாரணமாக, முதலாளிகள் தங்கள் தொழில் நிலையங்களின் தொழிலாளர்கள் நிலைத்து வேலை செய்வது பற்றிச் சிந்திக்கவே நேர்வது இல்லை. முதலாளித்துவ நாடுகளின் கொடு நோயான வேலையில்லாத் திண்டாட்டம் தொழிலாளியைத் தொழில் நிலையத்துடன் பிணைத்து வைக்கிறது. வேலை போய்விடுமோ என்ற அச்சத்தில் அவன் தன்னுடைய வேலை இடத்தை வலிவாகப் பற்றிக் கொள்கிறான். நெருக்கடிகளும் வேலையின்மையும் இல்லாத சோஷலிஸத்தின் நிலைமைகளிலோ வேலையை இழந்து விடுவோமோ என்ற பயம் தொழிலாளிக்கு இருப்பதில்லை. ஒரு தொழில் நிலையத்திலிருந்து விலகினால் வேறு தொழில் நிலையத்தில் அவனுக்கு வேலை கிடைத்துவிடும்.

முப்பதுக்களின் நடுவில் சோவியத் யூனியனில் தனித் தனித் தொழிற்சாலைகளிலும் புதுக் கட்டுமான இடங்களிலும் ஓர் ஆண்டுக் காலத்தில் தொழிலாளர்கள் கணிசமாக மாறி

விட்டார்கள். சிலர் விலகினர்கள். வேறு சிலர் புதிதாகச் சேர்ந்தார்கள். அதிகச் சம்பளம் கிடைக்கும் வேலையைத் தேடியும் உறைவிட நிலைமைகள் கடினமாய் இருந்ததாலும் தேர்ச்சி குறைவாய் இருந்தமையாலும், இத்தகைய பல்வேறு காரணங்களாலும் தூண்டப்பட்டுத் தொழிலாளர்கள் வேலை இடங்களை மாற்றிக் கொண்டார்கள். அப்போது ஒரே வேலைக்கு வெவ்வேறு தொழில் நிலையங்களில் அடிக்கடி வெவ் வேறு ஊதியங்கள் தரப்பட்டு வந்தன. ஆனால் தொழிலாளர் களின் நிலையின்மைக்கு முக்கியக் காரணமாக இருந்தது ஒரு படித்தான ஊதிய முறையே ஆகும். தேர்ச்சி பெற்ற உழைப் புக்கும் தேர்ச்சி அற்ற உழைப்புக்கும், கடின உழைப்புக்கும் லேசான உழைப்புக்கும் அனேகமாக ஒரே மாதிரி ஊதியம் அளிக்கப்பட்டது. தரைக்கு அடியில் வேலை செய்த சுரங்கத் தொழிலாளி மேற்பரப்பில் வேலை செய்த தொழிலாளிக்கு அனேகமாகச் சமமான ஊதியம் பெற்றான். தோண்டி இயந் திரம் ஓட்டும் கட்டுமானத் தொழிலாளி வெறும் கைக் கருவி களால் மண்ணைத் தோண்டும் உழைப்பாளியைவிட ஒரு சிறிதே அதிக ஊதியம் பெற்றான். அவ்வாறே எஃகு வார்ப்புத் தொழிலாளியும் கையாளைவிடக் கொஞ்சமே அதிகச் சம்பளம் வாங்கினான். அலுவலகங்களில் வேலை செய்த பொறி இய லாரும் தொழில்நுட்ப நிபுணர்களும் உற்பத்தியில் பணி ஆற்றியவர்களைக் காட்டிலும் அதிக ஊதியம் பெற்றார்கள். எனவே, பலர் தங்கள் தகுதியை உயர்த்திக்கொள்ளவே முயலாமல் எளிதில் ஊதியம் சம்பாதிக்கும் வேலைகளைத் தேடும் அளவுக்கு இழிந்துவிட்டார்கள்.

உழைப்பாளிப் பெருக்கின் ஏற்ற வற்றம் தொழில் நிலை யங்களின் ஒரு சீரான வேலைக்குக் குந்தகம் விளைத்தது, அவை உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இடையூறாய் இருந்தது. தனித்தனித் தொழில் நிலையங்கள் மட்டுமே அல்ல, முழுத் தொழில் துறைகள், உதாரணமாக நிலக்கரித் தொழில்துறை போன்றவை, இடை நிறுத்தங்களுடன் வேலை செய்தன. நவீனத் தொழில்நுட்ப உபகரணங்கள் அமைந்த புதிய தொழில் நிலையங்கள் சிறப்பாகப் பாதிக்கப்பட்டன. அவற்றுக்கு நிலையான தொழிலாளர்கள், அதிலும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள்.

கட்சியும் சோஷலிஸ அரசும் இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு கண்டன?

முதலாவதாக உழைப்பின் ஊதியத்தில் நிலவிய **முரண்பாடு** அகற்றப்பட்டது. ஒரே மாதிரித் தொழிலும் தகுதியும் கொண்டு ஒரே மாதிரி வேலையை வெவ்வேறு தொழில் நிலையங்களில் செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரே மாதிரி ஊதியம் கிடைக்கலாயிற்று. இந்த நடவடிக்கை உழைப்பாளிப் பெருக்கின் ஏற்ற வற்றத்தைக் குறைத்தது, தொழிலாளர்கள் தொழில் நிலையங்களில் நிலைத்திருக்க வகை செய்தது.

ஒரு படித்தான ஊதிய முறையும் ஒழிக்கப்பட்டது. கடின மான உழைப்புக்கு லேசான உழைப்பை விட அதிக ஊதியம் கொடுக்கப்படலாயிற்று. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் களும் கனியம் தோண்டும் தொழிலாளர்களும் மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை விட அதிக ஊதியம் பெறலாயினர். நிபுணர்கள் விஷயத்திலும் இந்த விதி கடைப்பிடிக்கப்பட்டது. உற்பத்தியில் வேலை செய்த பொறி இயலாருக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் அலு வலகங்களில் பணி ஆற்றுவோரைவிட அதிகச் சம்பளம் தரப் பட்டது. பயின்று தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கும் தேர்ச்சி பெறுத தொழிலாளர்களுக்கும் ஒரு படித்தான ஊதியம் அளிக்கும் முறை அகற்றப்பட்டது தொழில்நுட்பப் புனர்நிர்மாணத்தின் நிலைமைகளில் சிறப்பாகப் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. தங்கள் திறமையையும் உழைப்பின் உற்பத்தித் திறனையும் புதிய இயந்திரங்களைக் கையாளும் தேர்ச்சியின் அடிப்படையில் உயர்த்திக் கொண்ட தொழிலாளர்கள் தேர்ச்சி பெறுத தொழிலாளர்களைக் காட்டிலும் அதிக ஊதியம் பெற்றார்கள்.

கட்சியும் சோஷலிஸ அரசும் தொழிலாளர்களதும் அலு வலக ஊழியர்களதும் உழைப்புக்கு ஏற்ற ஊதிய முறையை ஒழுங்குபடுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள், தங்கள் உழைப்பின் விளைவுகளில் அவர்களுடைய **பொருளியல் அக்கறையை** வளர்த்தன, புதிய இயந்திரங்களைக் கையாள் வதில் தேர்ச்சி பெறவும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் அவர்களைத் தூண்டி ஊக்கின. இது தனி உழைப் பாளிகளுக்கும் அவ்வாறே சோஷலிஸ சமூகம் முழுவதற்கும்

லாபகரமாக இருந்தது. தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் அதிகமாகச் சம்பாதித்தார்கள், சமூகம் அதிக அளவில் பொருளியல் வளங்கள் பெற்றது.

தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் அவர்களது உழைப்பு வெற்றிகளுக்கு உரிய பொருளியல் சன்மானங்கள் மட்டும் இன்றி **உளவியல் தூண்டுதல்களும்** அளிக்கப்பட்டது உற்பத்தியை வெகுவாக உயர்த்த உறுதுணையாய் இருந்தது. முன்னணி உற்பத்தியாளர்களுக்கு லெனின் விருதும் உழைப்புச் செங்கொடி விருதும் ''கௌரவச் சின்னமும்'' வழங்கப்பட்டன. உழைப்புச் சிறப்பின் ஆக உயர்ந்த படியான ''சோஷலிஸ உழைப்பு வீரர்'' பட்டமும் ''உழைப்பு வீரத்துக்கும்'' ''சிறந்த உழைப்புக்கும்'' உரிய பதக்கங்களும் 1938ல் ஏற்படுத்தப்பட்டன. சோஷலிஸ உழைப்பு வீரர் பட்டம் பெறுபவருக்கு லெனின் விருதும் தங்க நட்சத்திரமும் அரிவாள் சம்மட்டிச் சின்னமும் வழங்கப்படுகின்றன.

அதே சமயத்தில் கட்சி தொழில் துறையில் கட்சி ஸ்தாபனங்களின் வேலையை மேம்படுத்திற்று, கம்யூனிஸ்ட் நிர்வாகிகளை முன்னிலும் துடியாக வேலை செய்யப் பணித்தது, கட்சி, அரசு உறுப்புக்களின் அமைவைச் சீர்படுத்திற்று. கட்சி உறுப்புக்களில்—மாவட்டக் கமிட்டிகளிலும் பிரதேசக் கமிட்டிகளிலும் நகரக் கமிட்டிகளிலும்—தொழில் துறை, போக்குவரத்துத் துறைச் செயலாளர் பதவி ஏற்படுத்தப்பட்டது. பெரிய பொருளாதார மக்கள் கமிஸாரகங்களின் வரிசை பிரிக்கப்பட்டது. புதிய மக்கள் கமிஸாரகங்கள் தொழில் துறையின் அதிகக் குறுகிய கிளைகளை நிர்வகித்தன. தொழில் நிலையங்களிலும் புதிய கட்டுமான இடங்களிலும் இருந்த கட்சி ஸ்தாபனங்கள் நிர்வாக அலுவலகத்தின் வேலையைக் கண்காணிக்க உரிமை பெற்றன.

உற்பத்தியில் காணப்படும் எவையேனும் ஒழுங்கீனங்களைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்படி தொழிற்சாலை இயக்குநரிடமோ, தொழிற் கூடத் தலைவரிடமோ மேஸ்திரியிடமோ கோரும் உரிமை கட்சி ஸ்தாபனங்களுக்கு முன்பும் இருந்தது. ஆனால் எல்லா ஸ்தாபனங்களும் எப்போதும் இவ்வாறு செய்வதில்லை. சோஷ

லிஸம் வெற்றி பெற்றதும், நாட்டில் உற்பத்தி அளவுகள் தீவிரமாக அதிகரித்து, தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் தொழில் நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டபோது, தொழில் நிலையங்களின் நிலைமைக்குக் கம்யூனிஸ்ட் நிர்வாகிகளுக்குச் சமமாகவே கட்சி ஸ்தாபனங்களையும் கட்சி பொறுப்பாளிகள் ஆக்கியது. தொழில் நிலையங்களின் தேவைகளையும் வளர்ச்சி வாய்ப்புக்களையும் பற்றி ஓயாமல் அக்கறை எடுத்துக் கொள்வதும் உற்பத்தியை ஒழுங்கமைப்பதிலும் திட்டப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலும் தொழில் நிலைய நிர்வாகிகளுக்கு உதவுவதும் அவற்றின் கடமை ஆயிற்று. கட்சி ஸ்தாபனங்கள் எல்லாக் கம்யூனிஸ்டுகளிடமும்—தொழிலாளி முதல் இயக்குநர்வரை—தங்கள் கடமைகளை ஆதர்ச முறையில் நிறைவேற்றும்படி கோரின. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களிடையே அவை பெருத்த அரசியல் வேலை செய்தன, உழைப்பாளிக் குழுக்களை ஒற்றுமைப்படுத்தின. தொழிலாளர்களின் தகுதிகளை உயர்த்துவது, அவர்களுக்கு இருப்பிட வசதிகள் அளிப்பது, அவர்களுடைய அன்றாட வாழ்க்கையையும் பண்பாட்டுப் பொழுதுபோக்கையும் ஒழுங்கமைப்பது முதலிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தொழிற்சங்கங்களுடனும் தொழில்நிலைய நிர்வாகிகளுடனும் சேர்ந்து கட்சி ஸ்தாபனங்கள் பாடுபட்டன. இளைஞர்களை ஒழுங்கமைக்கவும் அவர்களைப் பயிற்றிப் போதிக்கும் வேலையைக் கம்யூனிஸ்டுகளுக்கு உரிய முறையில் சீர்படுத்தவும் தொழில் நிலையங்களில் உள்ள இளங் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களுக்கு அவை உதவின.

சோஷலிஸ விவசாயத்தின் வளர்ச்சியிலும் கட்சி அயராத கவனம் செலுத்தியது. புதிதாக அமைந்த கூட்டுப் பண்ணைகளை வலுப்படுத்துவது இங்கே முக்கியப் பணியாக இருந்தது. கூட்டுப் பண்ணை உற்பத்தியை ஒழுங்கமைப்பதில் சோஷலிஸக் கோட்பாடுகளைச் சரிவரக் கடைப்பிடிப்பதன் வாயிலாகவே இந்தக் காரியத்தைச் சாதிப்பது முடியக் கூடியதாக இருந்தது. பொதுப் பண்ணையை அபிவிருத்தி செய்வதிலும் அதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதிலும் கூட்டுப் பண்ணைகளுக்கும் கூட்டுப்பண்ணையினருக்கும் உற்சாகம்

ஊட்டுவதற்கு வேண்டிய புதிய சாதனங்களைக் கட்சி தேடிச் சேகரித்தது.

கூட்டுப் பண்ணைகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு விவசாய விளைபொருள்களை அரசு கொள் முதல் செய்யும் முறை உதவிற்று. கூட்டுப் பண்ணைகள் அமைக்கப் பட்ட காலத்தில் தானியம், இறைச்சி, பிற பண்டங்கள் ஆகியவை நிலையான விலைகளுக்கு விற்கப்பட வேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்தியது. இவ்வாறு விற்கப்பட வேண்டிய தானியம், இறைச்சி முதலியவற்றின் அளவு பயிர் நிலத்தின் பரப்பையும் கால்நடைகளின் எண்ணிக்கையையும் பொறுத்துக் கணக்கிடப்பட்டது. ஆனால் அரசின் இத்தகைய கொள்முதல் முறை கூட்டுப்பண்ணை உற்பத்தி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறது என்பது நடை முறையில் தெரிய வந்தது. அதிகப் பயிர்நிலப் பரப்பும் கால் நடைகளும் உள்ள கூட்டுப் பண்ணைகள் அரசுக்கு அதிகப் பண்டங்கள் விற்க நேர்ந்தது. நிலத்தை மோசமாகப் பயன்படுத்தியவை யும் கால்நடைச் செல்வத்தைப் பெருக்குவதில் அக்கறை கொள்ளாதவையுமான கூட்டுப் பண்ணைகள் கட்டாய விற் பனை முறைப்படி குறைந்த அளவு பண்டங்களை வழங்கின.

இந்த அநீதி அகற்றப்பட்டது. முப்பதுக்களின் கடைசி யில் விவசாய விளைபொருள்களை அரசு கொள்முதல் செய்வதற்கு உரிய புதிய முறை புகுத்தப்பட்டது. இப் போது கூட்டுப் பண்ணைகள் பயிர்நிலப் பரப்பையும் கால் நடைகளின் எண்ணிக்கையையும் பொறுத்து அல்ல, தங்கள் வசம் உள்ள மொத்த நிலப்பரப்பின்படி அரசுக்குப் பண் டங்களை விற்றன. இவ்வாறு எல்லாக் கூட்டுப் பண்ணைகளும் சம நிலைமைகளில் வைக்கப்பட்டன. நிலத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதிலும் கால்நடை வளர்ப்பையும் பிற விவசாயத் துறைகளையும் அபிவிருத்தி செய்வதிலும் ஒவ்வொரு கூட்டுப் பண்ணையும் பொருளியல் அக்கறை கொண்டுவிட்டது.

பொது உற்பத்தியில் கூட்டுப் பண்ணையினரின் அக்கறை யைத் தீவிரப்படுத்தும் பொருட்டு, அதிக விளைச்சலும் கால் நடைகளின் அதிக உற்பத்தித்திறனும் காட்டியவர்களுக்கு அதிகப்படி ஊதியம் வழங்கும்படி கூட்டுப் பண்ணைகளுக்குக்

கட்சி யோசனை கூறியது. எல்லாக் கூட்டுப் பண்ணையினரும் பொதுப் பண்ணையில் கட்டாயமாக வேலை செய்ய வேண்டிய குறைந்தபட்ச நாட்களைத் திட்டப்படுத்தும்படியும் யோசனை கூறப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் கூட்டுப் பண்ணை அமைப்பை வலுப்படுத்தவும் கூட்டுப் பண்ணையினரின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்தவும் உதவின.

கூட்டுப் பண்ணை வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் முயற்சியில் முன் நின்று உழைத்தார்கள் நாட்டுப்புறக் கம்யூனிஸ்டுகள். அந்தக் காலத்திலோ, கூட்டுப் பண்ணைகளில் கட்சி ஸ்தாபனங்கள் குறைவாகவே இருந்தன. வழக்கமாக இவை பெரிய கூட்டுப்பண்ணைகளில் நிலவின. ஆனால் அவற்றின் எண்ணிக்கை விரைவாக வளர்ந்தது. அவற்றின் பாத்திரம் உயர்ந்தது. கூட்டுப் பண்ணைகளில் இருந்த கட்சி ஸ்தாபனங்கள் தொழில் துறையில் இருந்தவை போலவே, நிர்வாகிகளின் வேலையைக் கண்காணிக்க உரிமை பெற்றன. கட்சி ஸ்தாபனங்கள் இல்லாத கூட்டுப்பண்ணைகளில் இளங் கம்யூனிஸ்டுகள் பெரிய பணி ஆற்றினார்கள். நாட்டுப் புறத்தில் புதிய கூட்டுப் பண்ணை வாழ்க்கையை நிறுவுவதில் இளங் கம்யூனிஸ்டுகள் சங்கம் அருந்தொண்டு புரிந்தது.

சோவியத் யூனியன் இரண்டாவது உலகப் போரின் தொடக்கத்தில்

சோவியத் மக்கள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை மிகச் சிக்கலான சர்வதேசச் சூழ்நிலையில் நிறைவேற்றினார்கள். 1939 செப்டெம்பர் 1ந் தேதி ஜெர்மனி போலந்தைத் தாக்கியது. சில நாட்களில் பிரிட்டனும் பிரான்ஸும் ஜெர்மனிக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தன.

இரண்டாவது உலக யுத்தம் தொடங்கி விட்டது.

யுத்தம் மூண்டதன் காரணம் என்ன? அதற்கு யார் பொறுப்பாளிகள்?

யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டவை ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய மூன்று ஆக்கிரமிப்பு அரசுகள். இவை நீண்ட காலமாகவே யுத்த முஸ்தீப்புக்கள் செய்து கொண்டிருந்தன. ஹிட்லர் ஜெர்மனியும் அதன் கூட்டாளி நாடுகளும் சோவியத் யூனியனை அழிப்பதையே முதன்மைக் குறிக்கோ

ளாகக் கொண்டிருந்தன. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றின் ஆளும் வட்டாரங்கள் இதில் அவற்றுக்கு ஊக்கம் அளித்து வந்தன. ஆனால் முதலாளித்துவ உலகுக்குள் ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையே நிலவிய கடும் முரண்பாடுகளின் விளைவாக ஜெர்மனியும் இத்தாலியும் ஒரு தரப்பிலும் பிரிட்டனும் பிரான்ஸும் மறு தரப்பிலுமாக முதலில் போர் புரியத் தொடங்கின.

யுத்தத்துக்கு முந்திய ஆண்டுகளில் ஐரோப்பாவில் நிகழ்ச்சிகள் இவ்வாறு நடைபெற்றன.

அந்தக் காலத்தில் சோவியத் யூனியன் தன்னந்தனி சோஷலிஸ நாடாக இருந்தது. அதன் உதாரணம் எல்லா நாடுகளிலும் புரட்சி இயக்கத்தின் மீது மிகப் பெரிய செல்வாக்கு விளைத்தது. மக்கள் இனங்களின் சமாதானத்தையும் பாதுகாப்பையும் ஆதரித்தும் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பை எதிர்த்தும் சோவியத் யூனியன் உறுதியுடன் செயலாற்றி வந்தது. ஜெர்மனியினதும் இத்தாலியினதும் பாசிஸ்ட் தலீயீட்டுக்கு பலியான ஸ்பானியக் குடியரசின் மக்களுக்கு அது மிகப் பெருத்த உதவி அளித்தது. பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களைக் கூட்டாக எதிர்த்து முறியடிக்க ஏற்பாடு செய்ய சோவியத் யூனியன் முயன்றது. ஆனால் பிரிட்டனும் பிரான்ஸும் இந்த முயற்சிக்குக் குறுக்கே நின்றன.

இதற்குள் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்கள் மேலும் மேலும் துடுக்காக நடக்கலாயினர். ஹிட்லர் ஜெர்மனி சர்வ ஜனக் கட்டாயப் படை திரட்டல் நடத்தித் தன் இராணுவ பலத்தை விரைவில் பெருக்கிக் கொண்டது. அது ஆஸ்திரியாவைக் கைப்பற்றியது, பின்பு வெட்கக் கேடான மியூனிக் உடன்படிக்கையின் அடிப்படையில் பிரிட்டனுடனும் பிரான்ஸுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டு செக்கோஸ்லோவாக்கியாவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டது. ஸ்லோவாக்கியா, கார்ப்பேத்திய உக்ரேன் ஆகியவற்றின் ஒரு பகுதியை பாசிஸ்ட் ஹங்கேரி வசப்படுத்திக்கொண்டது. நிலப் பிரபுத்துவப் போலந்து ஒரு சிறு பகுதியைப் பெற்றது. பிரிட்டனுடையவும் பிரான்ஸினுடையவும் ஆளும் வட்டாரத்தினர் ஹிட்லருக்கு மேலும் மேலும் விட்டுக்கொடுத்தனர்.

சோவியத் யூனியன் மீது தாக்கு நடக்கும் அபாயம் கிழக்கிலிருந்தும் அதிகரித்தது. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் முதலில் சீனாவின் வட கிழக்கு மாநிலங்களையும் பின்பு அதன் பெரும் பகுதியையும் கைப்பற்றிக் கொண்டு சோவியத் யூனியனின் எல்லையை அடைந்தார்கள். உரால் வரையில் சோவியத் நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொள்ள அவர்கள் திட்டம் இட்டிருந்தார்கள். சோவியத் நாடு ஜப்பானியத் தலையீட்டாளர்களை எதிர்த்துப் போரிடுவதில் சீன மக்களுக்குப் பேருதவி புரிந்தது. 1938ம் ஆண்டு ஜப்பானியச் சைனியவாதிகள் சோவியத் யூனியனின் தூரக் கிழக்கு எல்லைக்குள் ஆயுத பலத்தால் தாக்கிப் புக முயன்றார்கள். ஹஸன் ஏரி அருகே சோவியத் படைகள் அவர்களை உறுதியுடன் எதிர்த்து முறியடித்தன. 1939 கோடையில் ஜப்பானியர்கள் மங்கோலிய மக்கள் குடியரசு மீது படையெடுத்தார்கள். சோவியத் யூனியன் இந்தக் குடியரசுடன் பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தது. எனவே சோவியத் யூனியன் மங்கோலிய மக்கள் குடியரசின் உதவிக்கு வந்தது. சோவியத், மங்கோலியப் படைகளின் ஒன்றித்த நடவடிக்கைகளின் விளைவாக ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் முறியடித்து விரட்டப்பட்டார்கள்.

ஐரோப்பாவில் சூழ்நிலை நாளுக்கு நாள் கடுமையாகிக் கொண்டு போயிற்று. ஜெர்மனியின் வலிமை மிகுவதால் தமக்கே ஆபத்து நேரும் என்று பிரிட்டனுடையவும் பிரான்ஸினுடையவும் ஆளுவோர் அச்சம் அடைந்தார்கள். ஜெர்மானிய ஆக்கிரமிப்பைக் கூட்டாக எதிர்ப்பது பற்றி அவர்கள் சோவியத் யூனியனுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கினர்கள். ஆனால் இது பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும் வட்டாரங்களின் வஞ்சகச் சூழ்ச்சி தவிர வேறில்லை. சோவியத் யூனியன்மீது திட்டவட்டமான பொறுப்புக்களைச் சுமத்த அவர்கள் முயன்றார்கள், ஆனால் தாங்கள் அத்தகைய பொறுப்புக்களை ஏற்க விரும்பவில்லை. நேரம் கழிந்தது, ஆனால் பிரிட்டனதும் பிரான்ஸினதும் போக்கின் காரணமாகப் பேச்சு வார்த்தைகள் தொடங்கிய இடத்தைவிட்டு நகரவில்லை. பிரிட்டன் அதே சமயம் ஹிட்லருடன் இரகசியப் பேச்சு வார்த்தைகள் நடத்தியது எனத் தெரிய வந்தது. பிரிட்டிஷ்,

பிரெஞ்சுப் பிற்போக்கு வட்டாரங்கள் வெறும் பாசாங்கு செய்கின்றன, பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சோவியத் யூனியனுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்பவில்லை என்பது சோவியத் அரசாங்கத்துக்குக் கண்கூடாகத் தெரிந்தது.

இதற்கிடையே ஜெர்மனியின் ஹிட்லர் அரசாங்கம் அணுக்கிரமிப்பு உடன்படிக்கை செய்துகொள்ளும் யோசனையை 1939 ஆகஸ்டில் சோவியத் அரசாங்கத்துக்கு முன் வைத்தது. சோவியத் யூனியனை இரு முனைகளில்—ஐரோப்பாவிலும் தூரக் கிழக்கிலும் — யுத்த அபாயம் சூழ்ந்தது, அதுவும் முற்றிலும் தனித்திருக்கும் நிலையில். எனவே சோவியத் அரசாங்கம் ஜெர்மனியுடன் அணுக்கிரமிப்பு உடன்படிக்கை செய்துகொள்ள இசைந்தது. சோவியத் யூனியனின் இந்தச் செயல்தான் அந்த நிலைமைகளில் ஒரே சரியான நடவடிக்கை என்று அடுத்து வந்த நிகழ்ச்சிகள் காட்டின. சுமார் இரண்டு ஆண்டுகள் ஆக்க வேலையில் ஈடுபடுவதற்கும் தனது தற்காப்பை வலுப்படுத்துவதற்கும் சோவியத் யூனியனுக்கு வாய்ப்பு கிடைத்தது.

இரண்டாவது உலக யுத்த நெருப்பு மேற்கு ஐரோப்பாவிலும் ஆசியாவின் கிழக்கிலும் மூண்டு எரிந்தது.

போலந்து மக்கள் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வீரத்துடன் போரிட்டார்கள், நியாயத்துக்காகச் சமர் புரிந்தார்கள். ஆனால் பாசிஸ்ட் பெரும் படைகளின் தாக்குதல்களை எதிர்த்து நிற்க அவர்களால் முடியவில்லை. ஹிட்லர் படைகள் சோவியத் எல்லையை நோக்கி முன்னேறின. சோவியத் யூனியன் இதை அனுமதிக்க முடியவில்லை. போலந்தின் பகுதிகளாக இருந்த மேற்கு உக்ரேன், மேற்கு பேலோருஷ்யா ஆகியவற்றின் தற்காப்பு அற்ற மக்களின் விதியை அசட்டையாகப் பார்த்துக் கொண்டிருக்க அதனால் முடியவில்லை. செஞ்சேனை எல்லை தாண்டி இந்த மக்களைத் தன் அரவணைப்பில் எடுத்துக் கொண்டது. இந்தப் பகுதிகளின் மக்கள் இனங்கள் சோவியத் உக்ரேனுடனும் சோவியத் பேலோருஷ்யாவுடனும் சேர்ந்து கொண்டன. சோவியத் யூனியனிடமிருந்து 1918ம் ஆண்டில் ருமேனியாவால் பலவந்தமாகப் பறித்துக்கொள்ளப்பட்ட பெஸ்ஸரேபியாவும்

சோவியத் யூனியனுடன் மறுபடி சேர்ந்து கொண்டது. 1940ல் லித்துவானியாவும் லாட்வியாவும் எஸ்தோனியாவும் யுத்தத்தில் இழுத்துவிடப்படும் அபாயம் உண்டாயிற்று. ஜன நாயக சக்திகளின் வற்புறுத்தலின் பேரில் இவை சோவியத் யூனியனுடன் பரஸ்பர உதவி ஒப்பந்தம் செய்துகொண் டன. ஆனால் பிற்போக்கு அரசாங்கங்கள் ஹிட்லருடன் உடன் பாட்டுக்கு வர ஆயத்தங்கள் செய்தன. அப்போது இந்த நாடுகளின் மக்கள் தங்கள் அரசாங்கங்களை விரட்டிவிட்டு சோவியத் ஆட்சியை நிலைநாட்டினார்கள். இந்த இளம் சோவியத் குடியரசுகள் சோவியத் யூனியனில் சேர்ந்தன.

பிரிட்டனும் பிரான்ஸும் ஜெர்மனியுடன் விந்தையான போர் நிகழ்த்தின. அதற்கு எதிராக ஊக்கமுள்ள நடவடிக்கை களை அவை மேற்கொள்ளவே இல்லை. மாறுக, சோவியத் யூனியனை அவை அமைதியாக இருக்க விடவில்லை. 1939 இலையுதிர் காலத்தில் அவை பின்லாந்தை சோவியத் யூனி யனுடன் போர் தொடுக்குமாறு தூண்டிவிட்டன. ஆனால் இந்தப் போர் வெகு காலம் நீடிக்கவில்லை. சோவியத் படை களின் வெற்றிகரமான நடவடிக்கைகளுக்குப் பிறகு பின்லாந்து சமாதானம் கோரியது. 1940 மார்ச்சில் சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. 1940ம் ஆண்டு வசந்தத்தில் ஜெர்மனி டென்மார்க்கையும் நார்வே யையும் கைப்பற்றிக்கொண்டபோது பிரிட்டனும் பிரான் ஸும் உரிய முறையில் எதிர் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவில்லை. ஹிட்லர் கிழக்கு முகமாகத் திரும்புவான் என்று பிரிட்டிஷ், பிரெஞ்சு ஆளும் வட்டாரத்தினர் நினைத் தார்கள். ஹிட்லரோ, 1940 மே மாதம் ஹாலந்தையும் பெல்ஜியத்தையும் திடீரென்று கைப்பற்றிக் கொண்டு பிரான்ஸ் மேல் பாய்ந்தான். பிரான்ஸின் பிற்போக்கு அர சாங்கம், 1940 ஜூன் மாதம் ஹிட்லருக்கு முன் வெட்கக் கேடான முறையில் சரணாகதி அடைந்தது.

ஆனால் பிரெஞ்சு மக்கள் தோல்வியை ஒப்புக்கொள்ள வில்லை. பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிடு வதற்கு அவர்கள் சக்தி திரட்டத் தொடங்கினார்கள். அவர் களுடைய முன்னணியில் செயலாற்றியது கம்யூனிஸ்ட் கட்சி. சோவியத் யூனியன்மீது தாக்கு நடத்துவதற்கு முன் ஜெர்

மனியும் இத்தாலியும் பால்கன் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்ட போது, யூகோஸ்லாவியா, அல்பேனியா, கிரீஸ் ஆகியவற்றின் மக்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள். சீனாவில் மக்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை இடைவிடாது உக்கிரமாக எதிர்த்துப் போராடினார்கள். இந்த நாடுகளின் மக்களுடைய போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தின கம்யூனிஸ்ட் கட்சிகள்.

யுத்தப் புயல் மேகங்கள் சோவியத் நாட்டின் மீது கவிந்தன. பிரான்ஸ் படு தோல்வி அடைந்து பால்கன் நாடுகள் கைப்பற்றப்பட்ட பின் பிரிட்டனைத் தவிர்த்து மேற்கு ஐரோப்பா அனைத்தும் ஹிட்லரின் காலடியில் கிடந்தது. ஜெர்மனி அளவற்ற போர்த் தளவாடங்களையும் பிற வளங்களையும் கைப்பற்றிக்கொண்டது, ஆக்கிரமிப்புக்கு உள்ளான நாடுகளுடைய பொருளாதாரத்தைத் தனது பணியில் ஈடுபடுத்தியது. ஹங்கேரி, ருமேனியா, பின்லாந்து ஆகிய நாடுகளையும் ஹிட்லர் பாசிஸ்ட் கூட்டணியில் சேர்த்துக்கொண்டான்.

கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் சோவியத் யூனியன் மீது கவிந்த யுத்த அபாயத்தைக் கண்டு, படை பலத்தை வலுப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டன. 1941 கோடையில் செஞ்சேனையின் படையினர் எண்ணிக்கை 45 லட்சத்தை எட்டியது. கமாண்டர்கள் பயிற்சி தீவிரம் ஆக்கப்பட்டது. தரைப் படையிலும் கடற்படையிலும் ஐந்து லட்சத்துக்கும் மேல் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள்.

உலோக உற்பத்தியையும் நிலக்கரியும் பெட்ரோலியமும் எடுக்கும் அளவையும் அதிகரிக்கக் கட்சி முயன்றது. நாட்டின் கிழக்கில் தொழில் துறை அடித்தளம் உறுதியாக்கப் பட்டது. எல்லையிலிருந்து தொலைவில், உராலிலும் மேற்கு சைபீரியாவிலும் மின் நிலையங்களும் உலோக வார்ப்பு, இயந்திர நிர்மாணத் தொழிற்சாலைகளும் புதிய நிலக்கரிச் சுரங்கங்களும் கனியச் சுரங்கங்களும் நிறுவப்படலாயின. தற்காப்புத் தொழில் துறைக்கு மேலும் மேலும் அதிக நிதி வளங்கள் ஒதுக்கப்பட்டன. அதன் உற்பத்திப் பொருள்களின் ஆண்டு வளர்ச்சி மற்றத் தொழில் கிளைகளின் உற்பத்தி வளர்ச்சியைவிட மும்மடங்கு அதிகமாய் இருந்தது.

யுத்தம் மூண்டு விட்டால் பயன்படுவதற்காக, பொருள்களும் உணவுப் பண்டங்களும் சேமித்து வைக்கப்பட்டன. 1927ல் செயல்படுத்தப்பட்ட ஏழு மணி நேர வேலை நாளுக்குப் பதில் எட்டு மணி நேர வேலைநாளைத் தாற்காலிகமாக அமலுக்குக் கொண்டு வருவது சோவியத் அரசாங்கத்துக்குக் கட்டாயம் ஆகிவிட்டது. நாட்டின் தற்காப்பை வலுப்படுத்துவதற்கு இந்த எல்லா நடவடிக்கைகளும் இன்றியமையாதவை எனத் தொழிலாளர்கள் புரிந்து கொண்டார்கள். சோஷலிஸப் போட்டியைத் தீவிரப்படுத்தியதன் வாயிலாகவும் திட்டப் பொறுப்புக்களைக் குறித்த கெடுவுக்கு முன்பே நிறைவேற்றியதன் வாயிலாகவும் அவர்கள் இந்தச் செயலில் ஒத்துழைத்தார்கள்.

கட்சியும் சோவியத் மக்களும் நாட்டின் தற்காப்பை வலுப்படுத்த முழு மூச்சாகப் பாடுபட்டனர்.

மாபெரும் தேசபக்த யுத்தத்தில் வெற்றி

சோவியத் யூனியன் பாசிஸத்துடன் போரில் அடி வைக்கிறது

பிரமாண்டமான விமான, டாங்கிப் படை பலம் கொண்ட முப்பது லட்சம் படைவீரர்கள் அடங்கிய ஜெர்மன் சைனியம், 1941, ஜூன் 22ந் தேதி சோவியத் நாட்டின்மீது படையெடுத்தது. அனுக்கிரமிப்பு உடன்படிக்கையை நம்பிக்கைத் துரோகமான முறையில் மீறி, ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியது. இத்தாலி, ருமேனியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகிய நாடுகள் சோவியத் யூனியனுக்கு எதிராகப் போரில் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டன.

ஹிட்லரும் அவனுடைய தளகர்த்தர்களும் சோவியத் யூனியனுக்கு எதிராக ''மின்னல் போர்'' நடத்தும் திட்டத்தை வகுத்தார்கள். சில மாதங்களுக்குள் செஞ்சேனையை முறியடித்து, சோவியத் மக்களின் எதிர்ப்புச் சித்த உறுதியை முறித்து, சோவியத் சோஷலிஸ அமைப்பை அழித்து,

சோவியத் யூனியனின் மக்கள் இனங்களை அடிமைப்படுத்தி விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள்.

சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தம் தொடங்கிவிட்டது. அது **தேசபக்த** யுத்தம், ஏனெனில் சோவியத் மக்கள் தங்கள் சோஷலிஸத் தாய்நாட்டைக் காக்கும் பொருட்டுப் போரிட்டார்கள். அது **மாபெரும்** யுத்தம், ஏனென்றால் சோவியத் மக்கள் பாசிஸத்துடன் ஜீவ மரணப் போரில் ஈடுபட்டார்கள். சோவியத் அரசின் வருங்காலம் மட்டுமே அல்ல, உலகத் தொழிலாளர் இயக்கத்தினதும் தேசீய விடுதலைப் போராட்டத்தினுடையவும் விதி, மனித குலம் அனைத்தினதும் விதி, இந்தப் போரின் முடிவையே பொறுத்திருந்தது. பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்தியது **நியாயமான** யுத்தம். சோவியத் மக்கள் பாசிஸத்தின் மீது முழு வெற்றி கிடைக்கும் வரை போரை நடத்திச் செல்வார்கள் என்றும் அடிமைப்பட்டிருப்பவையும் தங்கள் தேசிய விடுதலையின் பொருட்டுப் போராடுபவையுமான மக்கள் இனங்களுக்கு அவற்றின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களின் நுகத்தை உடைத்தெறிவதில் உதவுவார்கள் என்றும் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் அறிவித்தன.

சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்துக்கு ஆயத்தம் செய்கையில் அதைத் தனித்து ஒதுக்கவும் சோவியத் நாட்டின் மீது ''சிலுவைப் படையெடுப்பு'' (''தர்ம யுத்தம்'') நடத்துவதற்கு அமெரிக்கா, பிரிட்டன்—உள்ளிட்ட நாடுகளின் சர்வதேசக் கூட்டணியை ஜெர்மனியின் தலைமையில் அமைக்கவும் ஹிட்லர் தீவிர முயற்சி செய்தான். ஆனால் பிரிட்டனையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் சேர்ந்த அதிகத் தொலைநோக்குள்ள வட்டாரத்தினர், ஹிட்லர் ஜெர்மனியின் தரப்பிலிருந்து தங்கள் நாடுகளுக்கு ஏற்பட்ட பெருத்த அபாயத்தைக் கண்டு அதனுடன் கூட்டுச் சேர இணங்கவில்லை. தேசபக்த யுத்தத்தின் ஆரம்ப நாட்களிலேயே அவர்கள் சோவியத் யூனியனை ஆதரிப்பதாக அறிவித்து விட்டார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளையும் பிரிட்டனையும் சேர்ந்த பிற்போக்கு வட்டாரங்களின் மனநிலை சோவியத் தலைவர்களுக்குத் தெரிந்திருந்தது. யுத்தத்தின் முடிவில் அமெரிக்கக்



சோஷலிஸத் தாயகத்தையும் மனிதகுலம் அனைத்தையும் காக்கும் பொருட்டு சோவியத் மக்கள் பாசிஸத்தை எதிர்த்துப் போரில் கலந்து கொண்டார்கள்

குடியரசுத் தலைவர் பதவிக்கு வந்தவரும் அப்போது செனேட்டராய் இருந்தவருமான ஹாரி ட்ருமன், 1941ல் இந்த மனநிலையை அப்பட்டமாக வெளியிட்டார். ''ஜெர்மனி வெற்றி அடைவதை நாம் கண்டால், ருஷ்யாவுக்கு நாம் உதவ வேண்டும், ருஷ்யா வெற்றி பெற்றாலோ, நாம் ஜெர்

மனிக்கு உதவ வேண்டும், இவ்வாறு அவை முடிந்தவரை அதிக ஆட்களைக் கொன்று தீர்க்கட்டும்'' என்றார் அவர். ஆனால் அப்போது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிரிட்டனிலும் செல்வாக்கு பெற்றிருந்த ராஜதந்திரிகள் பாசிஸ்ட் கூட்டணியால் தங்கள் நாடுகளுக்கு நேர்ந்திருந்த மரண அபாயத்தை நிதான அறிவுடன் உணர்ந்து மதிப்பிட்டிருந்தார்கள். சோவியத் யூனியன் இல்லாமல் பாசிஸத்தை ஒழிப்பது நடவாது என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆக்கிரமிப்பாளர்களின் நம்பிக்கைத் துரோகத்தை அமெரிக்க மக்கள் விரைவில் கண்டுகொண்டார்கள். 1941, டிசம்பரில் ஜப்பானியர்கள் பசிபிக் மாகடலில் இருந்த அமெரிக்கக் கடற்படைத் தளத்தைத் திடீரென்று தாக்கினார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஜப்பானுடன் போர் தொடுத்தது, பின்னர் ஜெர்மனி மீதும் இத்தாலிமீதும் போர்ப் பிரகடனம் செய்தது.

பாசிஸ்ட் கூட்டணியை முறியடிக்கும் பொருட்டுப் படைபலத்தையும் பொருளாதார வளங்களையும் ஒன்றிணைப்பது பற்றிய பிரகடனத்தை 26 அரசுகள் 1942, ஜனவரி 1ந் தேதி ஏற்றுக் கொண்டன. சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், சீனு ஆகியவையும் பிற அரசுகளும் இதில் கையொப்பம் இட்டன. பாசிஸ எதிர்ப்புக் கூட்டணி அமைக்கப்பட்டதை விடுதலைப் பற்றுள்ள மக்கள் உற்சாகமாக வரவேற்றார்கள்.

மிக விரைவில் ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையைத் திறப்பதாக பிரிட்டனும் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் வாக்களித்தன. இது மிகவும் அவசியமாய் இருந்தது, ஏனென்றால் ஆக்கிரமிப்பாளர்களுடன் முக்கியப் போராட்டம் ஐரோப்பாவில் நடந்து கொண்டிருந்தது, போரின் தலைவிதி சோவியத்-ஜெர்மன் போர்முனையில்—இரண்டாவது உலக யுத்தத்தின் பிரதானப் போர் முனையில்—முடிவு செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் நேச நாடுகள் தங்கள் வாக்குறுதியை நெடுங்காலம் வரை நிறைவேற்றவில்லை. மூன்று ஆண்டுகள் சோவியத் யூனியன் ஐரோப்பாவில் ஹிட்லர் கூட்டணியைத் தன்னந்தனியாக எதிர்த்து நின்றது, யுத்தத்தின் முக்கியச் சுமையைத் தாங்கிக் கொண்டிருந்தது. பிரிட்டனும்

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் எவ்வித நியாயமான காரணமும் இன்றி இவ்வாறு நடந்துகொண்டது போரை நீடிக்க வைத்தது. இதனால் சோவியத் மக்கள் மேலும் பல லட்சம் உயிர்களைப் பலி கொடுக்க நேர்ந்தது.

பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகச் செஞ்சேனையின் போர் நடவடிக்கைகள் மிக மிக அனுகூலமற்ற நிலைமைகளில் தொடங்கின. ஜெர்மனியின் தாக்குதல் சோவியத் படைகளுக்கு எதிர்பாராததாய் இருந்தது. அவை திடீர்த் தாக்குதலுக்கு உள்ளாயின. பாசிஸ்ட் விமானப் படை திருட்டுத்தனமாகத் தாக்கி யுத்தத்தின் ஆரம்ப மணிகளில் பல சோவியத் விமானங்களையும் டாங்கிகளையும் சேதப்படுத்தி விட்டது. சோவியத் தரைப் படையினர் இன்றியமையாத விமானக் கவசம் இல்லாதவர்கள் ஆகி விட்டார்கள். அவர்களிடம் போதிய டாங்கிகளும் துருப்பு லாரிகளும் இல்லை. இந்த நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மன் சைனியத்தின் கவச மோட்டார்ப் பிரிவுகளும் இயந்திரப் படைப் பிரிவுகளும் சோவியத் படைகளின் தற்காப்பு அரண் வரிசையைப் பிளந்து ஊடுருவி, அவற்றின் ஒன்றிணைந்த நடவடிக்கைகளை முறித்து, அவற்றின் இராணுவ ஒழுங்கைக் குலைத்தன. பகைவர்கள் மாஸ்கோவையும் லெனின்கிராதையும் கீவ் நகரையும் நோக்கி முன்னேறினர்கள்.

ஜெர்மன் சைனியம் போன்ற வலிமை மிக்க பகைவனின் திடீர்த் தாக்கை எதிர்த்து அவனது முன்னேற்றத்தைத் தேக்கி நிறுத்துவது செஞ்சேனைக்கு மிகமிகக் கடினமாய் இருந்தது. சோவியத் படைகள் வீரத்துடன் சமர் புரிந்தன, பாசிஸ்டுகளுக்குப் பெருஞ் சேதம் விளைத்தன, அவர்களைக் களைப்படையச் செய்தன. எல்லைப் புறத்தில் இருந்த பிரேஸ்த்க் கோட்டையின் காவற்படையினர் யுத்தம் இனி லேசாய் இராது என்பதை யுத்தத்தின் முதல் நாட்களிலேயே ஹிட்லர் படைகளுக்குக் காட்டிவிட்டார்கள். தங்களிடப் பல மடங்கு அதிக வலிமையுள்ள பகைப் படைகளுடன் கோட்டையின் வீரக் காவலர்கள் ஒன்றரை மாதம் அயரா உறுதியோடு போரிட்டார்கள். ஆயினும் தாக்கி முன்னேறும் திறன் பகைவர்களிடம் எஞ்சி இருந்தது. செஞ்சேனை சோவியத்

நிலத்தைப் பகைவரிடம் விட்டு விட்டுப் பின்வாங்க நேர்ந்தது. யுத்தத்தின் முதல் மாதத்தில் ஹிட்லர் படைகள் உக்ரேனின் ஒரு பகுதியையும் மல்தாவியா, பேலோருஷ்யா, லித்துவானியா, லாட்வியா, எஸ்தோனியா ஆகியவற்றையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.

எதிரி நிறுத்தப்படுகிறான்

சோவியத் சேனையின் தோல்விகளால் சோவியத் மக்கள் ஆழ்ந்த துயரம் அடைந்தார்கள். கட்சி கசப்பான உண்மையைத் துணிவுடன், வெளிப்படையாகக் கூறியது. மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் அது ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளின் தீய சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி, நாட்டின்மீது மரண அபாயம் கவிந்திருக்கிறது என்று அறிவித்தது. ஆனால், அபாயம் எவ்வளவுதான் பெரிதாய் இருந்தாலும் பாசிஸத்தின் மீது வெற்றி கிடைப்பது நிச்சயம் என்ற திட நம்பிக்கையைக் கட்சி வெளியிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் மக்களைத் தூண்டி எழுப்பி, தேசபக்த யுத்தத்துக்கு அணி திரட்டியது, பகைவனை முறியடிப்பதற்காக நாட்டின் எல்லாச் சக்திகளையும் ஒருங்கு திரட்டுவதற்குரிய தெளிவான செயல்திட்டத்தை வகுத்தது. நாட்டின் வாழ்க்கை அனைத்தும் போர் நிலைமைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டது. ஒரே தலைமைக் கேந்திரம்—அரசுத் தற்காப்புக் கமிட்டி—அமைக்கப்பட்டது. அதற்குத் தலைமை வகித்தார் ஸ்தாலின். நாட்டில் ஆட்சி அனைத்தும் அரசுத் தற்காப்புக் கமிட்டியின் வசமே இருந்தது. எல்லா அரசு இராணுவ அலுவலகங்களுடையவும் கட்சி, தொழிற் சங்க, இளங் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களுடையவும் நடவடிக்கைகளை அது ஒன்றிணைத்தது.

போர் சம்பந்தமான வேலையே கட்சியின் பிரதான நடவடிக்கை ஆகிவிட்டது. சேனையை விரிவுபடுத்தி வலுவாக்குவதில் கட்சி முதன்மையாக ஈடுபட்டது. 1941ம் ஆண்டின் முடிவுக்குள் கட்சியின் மொத்த உறுப்பினர்களில் அனேகமாகப் பாதிப் பெயர் சேனையின் அணிகளில் இருந்தார்கள். கம்யூனிஸ்டுகள் தரைப் படையிலும் கடற்படையிலும் நிர்ணயகரமான பகுதிகளில் இருந்து மிக அபாயம் நிறைந்த பணிகளை நிறைவேற்றினார்கள். அவர்களில் பலர் கமாண்டர்களாக

வும் இராணுவக் கமிஸார்களாகவும் அரசியல் அலுவலர் களாகவும் கட்சி ஊழியர்களாகவும் இருந்தார்கள். தங்கள் துணிவினாலும் நிலையுறுதியினாலும் அவர்கள் படையினரை ஒன்றுபடுத்தி உற்சாகம் ஊட்டினார்கள். கட்சி மத்தியக் கமிட்டியின் பல உறுப்பினர்களும் அதன் பிரபல தலைவர் களும் போர் முனை சென்றார்கள். அவர்கள் போர்முனைகள், சேனைகள் ஆகியவற்றின் இராணுவ ஆலோசனைக் குழுக் களில் உறுப்பு ஏற்றார்கள், கமாண்டர்களுடன் சேர்ந்து போர் நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்தினார்கள்.

அனைத்து மக்கள் படைதிரட்டல் விரைவாகவும் ஒழுங் கமைப்புடனும் நடந்தது. பின்புலத்தில் சேமிப்புப் படை கள் பயிற்றப்பட்டன. தாமே விரும்பிச் சேர்ந்தவர்களைக் கொண்டு மக்கள் படை ரெஜிமெண்டுகளும் டிவிஷன்களும் அமைக்கப்பட்டன. பாசிஸ்டுகளால் கைப்பற்றப்பட்ட சோவியத் நிலப்பரப்பில் தேசபக்த கொரில்லா வீரர்களின் போராட்டம் தீவிரம் அடைந்தது. புதிய படையினர் இடையறுமல் முனைமுகம் சென்றார்கள். நாடு முழுவதிலும் போர்க் கீதம் போல முழங்கியது இந்தப் பாட்டு:

> ''எழுவாய், என்றன் அகல் பெரு நாடே,
> இருள் நிறை பாசிஸ்ட் இழிசனர் படையை
> முழுவதும் அழித்திட, மரண வெம்போருக்கு
> எழுவாய், சிங்க ஏற்றினைப் போலே.
>
> ''உயர்பெருஞ் சிற்றம் உன்னுளம் தன்னில்
> புயலிலே கடலின் அலைபோல் பொங்குக!
> நடக்குது மக்கள் அனைவரின் நற்போர்,
> நடக்குது தூய, புனித மாபெரும் போர்!''

''பகைவனைத் தடுத்து நிறுத்துவோம்!'' — போரின் தொடக்கத்தில் செஞ்சேனை முழுவதும், அதன் ஒவ்வொரு கமாண்டரும் படையினரும், சோவியத் மக்கள் அனைவருமே, இந்த ஒரே நோக்கத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார்கள். செஞ்சேனை இந்த நோக்கத்தை நிறைவேற்றி விட்டது. லெனின் கிராத், ஸ்மலேன்ஸ்க், கீவ், ஒதெஸ்ஸா ஆகிய நகர்களின் அருகே பகைவர்கள் தேக்கி நிறுத்தப்பட்டனர். ஜெர்மன் பாசிஸ்ட் படைகளின் தாக்கி முன்னேறும் சக்தி குறையவும்

சோவியத் படைகளின் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கவும் தொடங்கின. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்பதை ஜெர்மன் பாசிஸ்டுகள் முதன் முதலாக உணர்ந்தார் கள். உக்கிரமான போர்கள் எல்லா முனைகளிலும் நடந்தன. கட்சியின் அறைகூவலை ஏற்று, சொந்த நகரங்களையும் கிரா மங்களையும் காக்கும் பொருட்டு மக்கள் அனைவரும் திரண்டு எழுந்தார்கள். போர் முனைகள் அடுத்த பகுதிகளில் தற் காப்பு அரண் வரிசைகளை நிறுவினர்கள் லட்சோப லட்சம் மாதரும் முதியோரும் சிறுவர் சிறுமியரும்.

ஒரே பாய்ச்சலில் லெனின்கிராத் நகருக்குள் தாக்கிப் புகுவது பாசிஸ்டுகளுக்கு இயலவில்லை. தரைப் படையினரும் கடற்படையினரும் லெனின்கிராத் உழைப்பாளிகளும் அந்த நகரைப் பகைவர் உள் நுழைய முடியாத கோட்டையாக மாற்றிவிட்டார்கள். பகைவர்கள் நகரை முற்றுகை இட் டார்கள். 1942ம் ஆண்டின் மிகக் கடும் பனிக் காலத்தில் பட்டினியும் கொடுங் குளிரும் நகர மக்களை வதைத்தன, பகைவர்கள் இடையறாத பீரங்கித் தாக்கு நடத்திய வண்ண மாயிருந்தார்கள். நகரவாசிகளுக்குப் பல நாட்கள் ரொட்டி கிடைக்கவில்லை. பலர் பட்டினியால் மடிந்தார்கள். ஆயினும், புரட்சியின் வளர்ப்புப் பண்ணையான லெனின்கிராதின் வீரக் காவலர்கள் பகைவர்களை இறுதிவரை எதிர்த்து நின்று, ஒப்பு உவமை அற்ற நிலையுறுதியையும் வீரத்தையும் உலகுக்குக் காட்டினர்கள்.

ஒதெஸ்ஸா நகரின் காப்பாளர்கள் பாசிஸ்ட் பெரும் படைகளின் தாக்குதல்களை இரண்டு மாதங்களுக்கும் மேல் எதிர்த்து முறியடித்தவாறு இருந்தார்கள். உக்ரேனின் தலை நகர் கீவ் சுமார் இரண்டரை மாதங்கள் வீரத்துடன் தற் காப்புப் போர் நடத்தியது. ஸெவாஸ்தோப்பல் நகரின் வீரர்கள் ஒன்பது மாதங்கள் நகரைக் காத்து நின்றார்கள். லெனின்கிராத், கீவ், ஒதெஸ்ஸா, ஸெவாஸ்தோப்பல், பிரே ஸ்த்க் கோட்டை ஆகியன சோவியத் மக்களின் வீரத்துக்கும் நிலையுறுதிக்கும் சின்னங்கள் ஆயின. இவை வீர நகரங்களின் கவுரவப் பட்டியலில் நிலையான இடம் பெற்றுவிட்டன.

வீர நகரங்களின் நீடித்த தற்காப்புப் போர் பெருத்த முக்கியத்துவம் கொண்டிருந்தது. பகைவர்களுக்குப் பெருஞ்

சேதம் விளைந்தது. ஜூன் மாதம் சோவியத் மண்ணில் அடி வைத்த ஹிட்லர் படையினரில் மூவரில் ஒருவன் அக்டோபர் மாதம் ஒன்று கல்லறையில் இல்லாவிட்டால் மருத்துவ மனையில் கிடந்தான். பாசிஸ்ட் படைகளின் முன்னேற்றம் தடைப் பட்டதனால் போர்முனையை அடுத்த பிரதேசங்களிலிருந்து விலைமிக்க உடைமைகளைக் காப்பிடங்களுக்கு அப்புறப்படுத்து வதும் பகைவனின் முக்கியத் தாக்கு வழிகளில் சக்தி மிக்க தடையரண்கள் அமைப்பதும் சாத்தியம் ஆயின.

ஆனால் ஹிட்லர் படைகள் மேலும் மேலும் புதிய துருப்புக்களைப் போரில் ஈடுபடுத்தின. இழப்புக்களை மதியாமல் அவை தாக்கி முன்னேற முயன்றன. 1941 அக்டோபரில் சோவியத் நாட்டுக்கு மிகச் சங்கடமான சூழ்நிலை உருவாயிற்று. பாசிஸ்டுகள் அனேகமாக உக்ரேன் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள், தன்பாஸைக் கைப்பற்றினார்கள், மாஸ்கோ நகரின் புகு வழிகளை அடைந்து விட்டார்கள். எந்த விலை வேண்டுமானாலும் செலுத்தி மாஸ்கோவைக் கட்டாயம் கைப்பற்றும்படி ஹிட்லர் உத்தரவிட்டான். கட்சியும் சோவியத் மக்களுமோ, உயிர் உள்ளவரை உறுதியாக நின்று போரிடுவது, ஆனால் **மாஸ்கோவைப் பகைவர் கைப்பற்ற விடுவதில்லை** என்று முடிவு செய்தார்கள்.

அந்த நாட்களில் மாஸ்கோ கடுகடுத்த தோற்றம் அளித்தது. அதற்கு முன் ஒருபோதும் பகைவர்கள் சோவியத் தலை நகருக்கு அவ்வளவு அருகே வந்தது கிடையாது. முனைமுகம் அவ்வளவு அருகில் இருந்தாலும் கட்சி மத்தியக் கமிட்டியின் போலிட்பியூரோவும் சோவியத் அரசாங்கமும் அரசுத் தற் காப்புக் கமிட்டியும் உயர் தலைமைத் தளகர்த்தர் அலுவலகமும் தலைநகரிலேயே இருந்தன. நவம்பர் 7ந் தேதி செஞ்சதுக்கத்தில் சோவியத் படையினரின் வழக்கமான அணிநடை நடந்தது. போர்முனை சென்ற படைவீரர்கள், டாங்கிகள், பீரங்கிகளின் வரிசைகள் லெனின் சமாதிக்கு முன் அணிவகுத்து விரைந்தன.

நவம்பர் மாதம் ஜெர்மானியர்கள் மாஸ்கோ மீது இன்னொரு தாக்கு நடத்தினார்கள். சோவியத் படையினர் அற்புத நிலையுறுதியுடன் போரிட்டார்கள். தங்கள் அன்புத் தலைநகர் மாஸ்கோவைத் தற்காப்பதில் தேசத்தின் எல்லா நாட்டி

னங்களையும் சேர்ந்த படைவீரர்கள்—ருஷ்யர்கள், உக்ரேனியர்கள், பேலோருஷ்யர்கள், கஸாஃகுகள், ஜார்ஜியர்கள், ஆர்மீனியர்கள், கிர்கீஸியர்கள், ஆஸர்பைஜானியர்கள், உஸ்பெக்குகள், துர்க்மேனியர்கள், தாஜிக்குகள், லாட்வியர்கள், லித்துவானியர்கள், எஸ்தோனியர்கள், மல்தாவியர்கள், தாத்தார்கள், பஷ்கீரியர்கள், உத்மூர்த்துகள், மரீயர்கள் ஆகியோரும் பிறரும்—பங்கு கொண்டார்கள்.

மாஸ்கோவின் புகு வழிகளில் பாசிஸ்டுகளின் தேர்ந்த கவச டாங்கிப் படைகளுடன் கடும் போர்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் சோவியத் தலைமை பின்புலத்திலிருந்து புதிய சேமிப்புப் படைகளை எதிர்த்தாக்கு நடத்தும் பொருட்டுத் தருவித்தது. ''பகைவர்களின் முறியடிப்பு மாஸ்கோ அருகே தொடங்க வேண்டும்!'' என்று முழங்கியது கட்சி.

1941, டிசம்பர் ஆரம்பத்தில் செஞ்சேனை மாஸ்கோவின் அருகே எதிர்த்தாக்கு தொடங்கியது. மாஸ்கோ அருகே நடந்த சமரில் சிறப்பாக அருஞ் செயல் புரிந்தார்கள் தளகர்த்தர்கள் மூக்கவ், கோனிவ், ரக்கஸோவ்ஸ்கி ஆகியோர். யுத்தத்தின் முடிவில் பெர்லினைத் தாக்கிக் கைப்பற்றும் நடவடிக்கையின் தலைமை இவர்களுக்கே அளிக்கப்பட்டது.

1942ம் ஆண்டு வசந்தத்தில் பகைவர்கள் மாஸ்கோவிலிருந்து நானூறு கிலோமீட்டர்களுக்கும் மேல் தொலைவில் தள்ளப்பட்டுவிட்டார்கள். பதிற்றுக் கணக்கான நகரங்களும் பல்லாயிரம் கிராமங்களும் விடுவிக்கப்பட்டன. தெற்குப் போர் முனையிலும் லெனின்கிராத் அருகிலும் பகைவர்கள் மீது பலத்த தாக்குதல்கள் நடத்தப் பெற்றன.

மாஸ்கோ அருகே நடந்த போர் சோவியத் மக்களினதும் அவர்களுடைய சேனையினதும் ஆற்றலையும் யுத்தத்தில் சோவியத் யூனியனுக்கு உள்ள அளவற்ற வாய்ப்புக்களையும் காட்டியது. இந்தச் சமரில் ஹிட்லர் படைகள் பல்லுடைபட்டன. ஜெர்மன் சேனை வெல்ல முடியாதது என்ற வீண்கதையைச் செஞ்சேனை பொய்யாக்கி விட்டது, ஹிட்லரின் ''மின்னல் போர்த்'' திட்டத்தைச் சுக்கு நூறுக்கி விட்டது. மாஸ்கோ அருகே ஜெர்மானியரின் முறியடிப்பு தேசபக்த யுத்தத்தின் நிர்ணயகரமான நிகழ்ச்சி, இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லர் ஜெர்மனி அடைந்த முதலாவது பெருந் தோல்வி

மாஸ்கோ அருகே நடந்த போர். சோவியத் படை வீரர்கள் பாசிஸ்டுகளின் டாங்கித் தாக்குதலை எதிர்த்து முறியடிக்கிறார்கள்

ஆகும். ஜெர்மன் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களுடன் போராட்டத்தில் சோவியத் தலைநகரின் உழைப்பாளிகள் காட்டிய வெகுஜன வீரம், துணிவு, நிலையுறுதி ஆகியவற்றுக்காகவும் தாய்நாட்டுக்கு அவர்கள் ஆற்றிய அசாதாரணத் தொண்டின் பொருட்டும் மாஸ்கோவுக்கு வீர நகரம் என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

எல்லாம்
போர்முனைக்கு!
எல்லாம் வெற்றிக்கு!

யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குப் போர்த்திறன் படைத்த சேனை மட்டுமே அல்ல, வலிவாக ஒழுங்கமைக்கப்பட்ட பின்புலமும் தேவை. இது வாழ்வா சாவா என்பதை முடிவு கட்டும் யுத்தம் என்பது தெளிவாய் இருந்தது. யுத்தம் நீடித்து நடக்கும் என்பதும் புலப்பட்டது. நாட்டை ஒரே இராணுவ முகாமாக மாற்றும் படியும் யுத்த நிலைமைக்கு ஏற்ப எல்லாவற்றையும் மாற்றி அமைக்கும்படியும் போர்முனைக்கு அதிக ஆயுதங்களும் யுத்த

தளவாடங்களும் உணவுப் பண்டங்களும் அனுப்பும்படியும் செஞ்சேனை வேறு வழியின்றிப் பின்வாங்க நேரும்போது விலை மிக்க உடைமைகளைக் காப்பிடங்களுக்கு வெளியேற்றும்படியும், வெளியேற்ற இயலாவிட்டால் அவை பகைவன் வசம் ஆகாதவாறு அழித்துவிடும்படியும் யுத்தத்தின் ஆரம்ப நாட்களிலேயே கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளி வர்க்கத்தையும் கூட்டுப் பண்ணை விவசாயிகளையும் அறிவுஜீவிகளையும் கேட்டுக்கொண்டது. கட்சியின் அறைகூவலை ஏற்று சோவியத் யூனியனின் எல்லா மக்கள் இனங்களும் போர்முனைக்கு ஆதரவு அளிக்க ஒரு மனதாகத் திரண்டு எழுந்தன.

தேசீயப் பொருளாதாரம் மிகக் கடினமான நிலைமைகளில் போருக்கு ஏற்ற முறையில் மாற்றி அமைக்கப்பட்டது. மக்களையும் தொழில் இயந்திர சாதனங்களையும் போர்முனைகளை அடுத்த இடங்களிலிருந்து நாட்டின் உட்பகுதிகளுக்கு மாற்றுவது எல்லாவற்றிலும் கடினமாய் இருந்தது. லட்சோப லட்சம் மனிதர்களின் மிகக் கண்டிப்பான ஒழுங்கமைப்பு, நோக்கத் தெளிவு, அபரிமித உற்சாகம் ஆகியவற்றைக் கொண்டே இவ்வளவு பெரிய காரியத்தைச் சாதிக்க முடிந்தது.

கட்சி, சோவியத் ஸ்தாபனங்களின் தலைமையில் தொழிலாளர்களும் பொறி இயலாரும் தொழில்நுட்ப நிபுணர்களும் அதற்கு முன் எவரும் ஒருபோதும் நிறைவேற்றி இராத அரும் பணியை ஆற்றினர்கள். 1941 ஜூலை முதல் நவம்பர் வரை உள்ள ஐந்தே மாதங்களில் அவர்கள் 1360க்கும் மேற்பட்ட பெருத்த தொழிற்சாலைகளையும் ஒரு கோடிக்கும் அதிகமான மக்களையும் கிழக்கே காப்பிடங்களுக்குக் கொண்டு சேர்த்தார்கள். உரால், மேற்கு சைபீரியா, கஸாஃஸ்தான், மத்திய ஆசியக் குடியரசுகள் ஆகியவற்றின் சோவியத் மக்களுடைய உழைப்பும் இவ்வாறே வீரம் நிறைந்தது. இருப்புப் பாதைத் தொழிலாளர்கள் இடம் விட்டு அகற்றப்பட்ட இயந்திர சாதனங்களைக் குறித்த காப்பிடங்களுக்குச் சரியாகக் கொண்டு சேர்த்து, அவற்றை உடனே பொருத்தி இணைப்பதில் ஈடுபட்டார்கள். வேலை இரவும் பகலும் இடைவிடாது நடந்தது. காப்பிடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொழில் நிலையங்கள் மூன்று நான்கு வாரங்களில் இயங்கத்

தொடங்கி, மூன்று நான்கு மாதங்களில் யுத்தத்துக்கு முந்திய உற்பத்தித் தரத்தை எட்டிவிட்டன.

தொழிற்சாலைகளுக்குத் தேவையான உழைப்பாளிகளுக்கு வகை செய்வது கடினமாய் இருந்தது. 1941ம் ஆண்டு முடியும் தறுவாயில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அனேகமாகப் பாதியாகக் குறைந்தது. இதில் கணிசமான தொகையினர் புதியவர்கள். தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் போர் முனை சென்ற ஆண்களின் இடங்களுக்கு வந்தார்கள் மாதர்களும் முதிராச் சிறுவர்களும். மாதர்கள் மொத்தத் தொழிலாளர்களில் பாதிப் பெயராய் இருந்தார்கள். யுத்தம் காரணமாக வேலைநாள் நேரம் அதிகம் ஆக்கப்பட்டது, முறை நேரத்துக்கு மேல் அதிகப்படி வேலை செய்வது கட்டாயம் ஆக்கப்பட்டது, விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டன. தொழிலாளர்கள் புதிய தொழில்களுக்கு விரைவில் பயிற்றப்பட்டார்கள். 1942ம் ஆண்டில் ஏறத் தாழப் பதின் மூன்று லட்சம் தொழிலாளர்கள் புதிய தொழில்களைப் பயின்று தேர்ந்தார்கள், இருபத்தைந்து லட்சத்துக்கும் மேல் தொழிலாளர்கள் தங்கள் தகுதிகளை உயர்த்திக் கொண்டார்கள்.

யுத்தத்தினால் ஏற்பட்ட சங்கடங்களைப் போக்கிக் கொள்வதற்குக் கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குக் கட்சி உதவி செய்தது. நாட்டுப் புறத்தில் உழைப்பாளிகள் பற்றாக்குறை முனைமுக இடங்களிலிருந்து வந்த ஆட்களைக் கொண்டு இட்டு நிரப்பப்பட்டது.

''எல்லாம் போர் முனைக்கு! எல்லாம் வெற்றிக்கு!'' என்ற அறைகூவலைக் கட்சி மக்களுக்கு விடுத்தது. தொழிலாளி வர்க்கமும் கூட்டுப் பண்ணை விவசாயிகளும் அறிவுஜீவிகளும் இந்த அறைகூவலை ஏற்று பெருந் திரளாக சோஷலிஸப் போட்டியில் ஈடுபட்டார்கள். முனைமுகத்தில் நிகழ்ந்த போர்ச் சாதனைகள் பின்புலத்தில் நிறைவேற்றப்பட்ட உழைப்புச் சாதனைகளுடன் பொருத்தமாக இணைந்தன. ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் நிலக்கரிச் சுரங்கங்களிலும் கனியச் சுரங்கங்களிலும் கம்யூனிஸ்டுகளும் இளங் கம்யூனிஸ்டுகளும் முன்னணி உழைப்புக் குழுக்களுக்குத் தலைமை ஏற்றார்கள். **''உழைப்பிலும் போரில் போலவே!''** என்பது அவர்களுடைய

கோஷம் ஆயிற்று. 1942ம் ஆண்டு வசந்தகாலத்தில் முனை முகத்துக்கு உதவுவதற்காக அகில சோவியத் யூனியன் போட்டி நாடு முழுவதிலும் நடந்தது. முன்னணி உழைப் பாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு மத்தியக் கமிட் டியும் அரசுத் தற்காப்புக் கமிட்டியும் கைமாறும் செங்கொடி களும் பணப் பரிசுகளும் ஏற்படுத்தின. போட்டி முடிவுகள் மாதந்தோறும் கணக்கிடப்பட்டன. வெற்றியாளர்களுக்குச் செங்கொடிகளைச் செஞ்சேனை, கடற்படை ஆகியவற்றின் சிறந்த பிரிவுகளுடைய பிரதிநிதிகள் உரிய கொண்டாட்டக் கூட்டங்களில் வழங்கினர்கள். கூட்டுப் பண்ணையினரும் தன்னலம் இன்றி உழைத்தார்கள். நாட்டின் கிழக்குப் பிர தேசங்களில் பயிர் நிலப் பரப்பை அவர்கள் 1942ல் ஐம்பது லட்சம் ஹெக்டார் அதிகரித்தார்கள். கூட்டுப் பண்ணையினர் முனைமுகத்தை அடுத்த பகுதிகளில் பயிரிட்டு, விளைச்சல் முழுவதையும் அரசுக்கு அளித்தார்கள்.

கட்சியும் சோவியத் மக்களும் மிகப் பெரும் கஷ்டங்களைச் சமாளித்தார்கள். 1942ம் ஆண்டு முடிவுக்குள் சோவியத் யூனியன் நன்கு ஒழுங்கமைந்த, விரைவாக வளர்ச்சி அடை யும் போர்க்காலப் பொருளாதாரத்தைப் பெற்றுவிட்டது. உராலும் மேற்கு சைபீரியாவும் செஞ்சேனையின் பிரதான ஆயுதசாலைகள் ஆயின. 1942ம் ஆண்டு, 1941ம் ஆண்டை விட நான்கு மடங்கு டாங்கிகளும் அனேகமாக இரண்டு மடங்கு விமானங்களும் நிர்மாணிக்கப்பட்டன.

சோவியத் பின்புலம் செஞ்சேனை வெற்றி பெறுவதற்கு உறு துணை புரிந்தது. விஞ்ஞானிகளும் அமைப்பாளர்களும் பொறி இயலாரும் மேலும் நவீனமான விமானங்களையும் டாங்கிகளையும் நிருமித்தார்கள். மார்ட்டர் ராக்கெட்டுகளின் உற்பத்தி அதிகரித்தது. மக்கள் இவற்றைக் ''கத்யூஷா'' என்ற செல்லப் பெயரால் அழைத்தார்கள். ஆலைகளும் தொழிற்சாலைகளும் அல்லும் பகலும் வேலை செய்தன. போர்க் கருவிகளும் ஆயுதங்களும் இடையறுத பெருக்காக முனைமுகங்களுக்குச் சென்ற வண்ணமாய் இருந்தன.

பின்புல உழைப்பாளிகள் செஞ்சேனைக்கு வேண்டியவற் றை எல்லாம் குறைவின்றி அளிப்பதற்கு எல்லா வகையிலும் பாடுபட்டார்கள். சோவியத் படையினருக்கு எதிலும் பற்றுக்

குறை ஏற்படவில்லை. பின்புலத்தில் உணவுப் பண்டங்களும் எரிபொருளும் உடைகளும் கிடைப்பது எவ்வளவோ கடினமாய் இருந்தது. ஆனாலும் ஒருவராவது முணுமுணுக்கவில்லை ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது—தந்தை, மகன், சகோதரன் அல்லது புதல்வி—முனைமுகத்தில் போரிட்டார்கள். முனைமுகத்தில் அவர்கள் தங்கள் தாய்நாட்டை, உற்றார் உறவினரைக் காக்கும் பொருட்டு இரத்தம் சிந்துகிறார்கள், உயிரையே வழங்குகிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருந்தார்கள். செஞ்சேனைக்கு வேண்டிய ஆயுதங்களுக்காக மக்கள் நிதி திரட்டினார்கள். பல தேசபக்தர்கள் பல ஆண்டுகளாகத் தாங்கள் சேர்த்திருந்த சேமிப்புக்கள் யாவற்றையும் அளித்து விட்டார்கள். தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் இவ்வாறு திரட்டிய நிதியைக் கொண்டு முழு முழு டாங்கி வரிசைகளும் விமான அணிகளும் வாங்கி வழங்கினர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி தனது ஊக்கத்தாலும் வீரத்தாலும் முனைமுகத்தில் படையினருடையவும் பின்புலத்தில் உழைப்பாளிகளுடையவும் சிறந்த ஒழுங்கமைப்பையும் தேசபக்தி உணர்வையும் குலையாது காத்தது. முனைமுகத்துக்கும் பின்புலத்துக்கும் உள்ள ஒற்றுமையை அது கெட்டிப்படுத்தியது. பின்புல உழைப்பாளிகள் தங்கள் வீரம் நிறைந்த பிரயாசைகளால் முனைமுகத்தில் அடிப்படைத் திருப்பம் நிகழ்வதற்கு, செஞ்சேனையின் வெற்றிகரமான தாக்குதலுக்கு முன்னேற்பாடுகள் செய்தார்கள்.

நிர்ணயகரமான போர்கள்

யுத்தத்தின் இரண்டாவது ஆண்டு பாசிஸ்டுகளின் புதிய தாக்குதலுடன் தொடங்கிற்று. ஆனால் இப்போது அவர்கள் எல்லா முனைகளிலும் அல்ல, தெற்குப் பகுதி ஒன்றில் மட்டுமே தாக்கு நடத்தினர்கள். இங்கே பகைவர்கள் பத்து லட்சம் துருப்புகள் கொண்ட சைனியத்தைக் குவித்தார்கள். ஜெர்மானியர்களோடு ஒரு இத்தாலியச் சேனையும் இரண்டு ருமேனியச் சேனைகளும் ஒரு ஹங்கேரியச் சேனையும் இந்தத் தாக்குதலில் கலந்து கொண்டன. பகைவர்களின் படைகளது எண்ணிக்கை எதிர்த்து நின்ற சோவியத் வீரர்களின் எண்ணிக்கைக்கு இரு மடங்காக இருந்தது. ஹிட்லர்

சண்டைக்கு முன் படைவீரனுக்குக் கட்சி உறுப்பினர் சீட்டு வழங்கப்படுகிறது

படைகள் சோவியத் தற்காப்பு அரண்களைப் பிளந்து ஊடுருவி வோல்காவையும் வடக்குக் காக்கேஷியாவையும் நோக்கி முன்னேறின. ஆனால் ஸ்தாலின்கிராத் (இப்போது வோல்காகிராத்) நகரின் புகு வழிகளில் பகைவர்கள் தேக்கி நிறுத்தப்பட்டனர்.

ருஷ்யாவின் மாநதி வோல்காவின் கரையில் வரலாற்று முக்கியத்துவம் உள்ள **வோல்காப் பிரதேசப் போர்** உக்கிர மாக மூண்டது. சோவியத் படைத் தலைமை பகைவர்களை இங்கே தடுத்து நிறுத்தி நொறுக்கிவிட முடிவு செய்தது. தற்காப்புப் போர்களில் பகைவர்களைக் களைக்க வைப்பது, அதே சமயம், பக்க அணிகளில் புதிய படைகளைக் குவித்து, பகைவர்களைச் சூழ்ந்து நொறுக்குவது என்பது திட்டம்.

ஸ்தாலின்கிராத் போர் நிகழ்ச்சிகளை உலகம் அனைத்தும் உன்னிப்பாகக் கவனித்தது. இங்கே உயிரை மதியாத கடுஞ்

சண்டையில் யுத்தத்தின் போக்கு முடிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நகரில் ஒவ்வொரு மீட்டர் நிலத்துக்காகவும் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் மாடிக்குமாகவும் விடாப் பிடியான சண்டைகள் நடந்தன. ஆனால் கடும் போர்களின் நிலைமைகளில் கூட, கட்சி வேலை ஒரு நாளேனும் நிற்கவில்லை. கட்சிக் கூட்டங்கள் நடந்தன, இளம் கம்யூனிஸ்டுகளுக்குக் கட்சி உறுப்பினர் சீட்டுகள் வழங்கப்பட்டன, வீரர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன, செய்தித்தாள்கள் தருவிக்கப் பட்டன, போருக்கு உற்சாகமூட்டும் கையெழுத்துத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

வோல்கா அரண்களின் அஞ்சா நெஞ்சர்களான காப் பாளர்கள் வென்றார்கள். 1942, நவம்பர் 19ந் தேதி, செஞ் சேனை பாசிஸ்டுகளுக்கு மரண அடி கொடுத்தது. ஐந்தாம் நாள் அது மூன்று லட்சத்து முப்பதாயிரம் துருப்புக்கள் கொண்ட பகைச் சைனியத்தைச் சூழ்ந்து கொண்டது. முற்றுகை வளையம் நாள்தோறும் மேலும் இறுகிக் கொண்டு போயிற்று. பிப்ரவரி மாத ஆரம்பத்தில் பகைவர்கள் சரண் அடைந்தார்கள். படைவீரர்களின் இவ்வளவு பெரிய அணிகள் முற்றுகையிட்டு நொறுக்கப்பட்டது அதற்குமுன் ஒருபோதும் வரலாறு காணுத அற்புதம் ஆகும். ஜெர்மன் படைகள் நொறுக்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தாலிய, ருமேனிய, ஹங்கேரியச் சேனைகளும் முறியடிக்கப்பட்டன.

ஸ்தாலின்கிராத் வீர நகரங்களின் வரிசையில் அழியா இடம் பெற்றுவிட்டது. அதன் வீரக் காவலர்களை மனித குலம் என்றும் நினைவில் இருத்திப் போற்றும். வோல்காப் பிரதேசப் போரின் புகழ்மிக்க வெற்றி, மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போக்கிலும் இரண்டாவது உலக யுத்தம் அனைத்தின் போக்கிலுமே அடிப்படைத் திருப்பத்துக்கு அடி கோலியது.

வோல்காக் கரையில் ஜெர்மானியர் முறியடிக்கப் பட்டதை அடுத்து மற்றப் போர் முனைகளில் செஞ்சேனையின் தாக்குதல்கள் தொடர்ந்தன. வடக்குக் காக்கேஷியாவில் பகைவர் துடைத்து ஒழிக்கப்பட்டார்கள். லெனின்கிராத் முற்றுகை பிளக்கப்பட்டது. சோவியத் நிலத்திலிருந்து பகைவர்களைத் திரளாக விரட்டியடிக்கும் நிகழ்முறை தொடங்கி விட்டது.

சோவியத் படையினரிடையே கட்சி அரசியல் வேலையின் தன்மையும் மாறிவிட்டது. யுத்தத்தின் தொடக்கத்தில், செஞ்சேனை வேறு வழி இன்றிப் பின்வாங்க நேர்ந்தபோது கட்சி உறுப்புக்களும் அரசியல் ஊழியர்களும் தற்காப்பில் நிலையுறுதி கடைப்பிடிக்கப் படையினரைப் பயிற்றினர்கள். இப்போதோ, செஞ்சேனை தாக்கி முன்னேறியது. நவ நவமான யுத்த இயந்திரங்களும் ஆயுதங்களும் அதற்கு வழங்கியது பின்புலம். டாங்கி, விமான, மோட்டார் இயந்திர சைனியங்களும் சேனைப்பிரிவுகளும் அமைக்கப்பட்டன. புதுவகை யுத்த இயந்திரங்களையும் ஆயுதங்களையும் கையாள்வதில் மிக விரைவாகத் தேர்ச்சி பெறுவதற்குக் கட்சி, அரசியல் உறுப்புக்கள் படையினரைத் தூண்டி ஊக்கின, தாக்குப் போர்களில் துணிவையும் தோழமை நிறைந்த பரஸ்பர உதவியையும் அவர்களுக்கு ஏற்படுத்தின.

ஜெர்மானியர்களின் பெருந் தோல்விகள் ஜெர்மனியின் ஆற்றலையும் அதன் இராணுவ மதிப்பையும் குலைத்துவிட்டன. பாசிஸ வன விலங்கின் முதுகெலும்பில் கீறல் கண்டுவிட்டது, ஆனால் அது இன்னும் முற்றுக முறிக்கப்படவில்லை. ஹிட்லர் ஜெர்மனியில் புதிய படை திரட்டல் மேற்கொண்டான், முனை முகங்களில் படையினர் எண்ணிக்கையை அதிகப்படுத்தினன், அவர்களை ஆற்றல் மிக்க டாங்கிகளால் பலப்படுத்தினன், 1943 ஜூலையில் இன்னொரு பெருத்த தாக்குதல் முயற்சியை எடுத்துக் கொண்டான். இம்முறை ஜெர்மானியர்கள் மாஸ்கோவுக்குத் தெற்கே, கூர்ஸ்க் பிரதேசத்தில் குறுகிய பகுதியில் தங்கள் படைகளைக் குவித்தார்கள். இருபது டாங்கி, மோட்டார் டிவிஷன்கள் உட்பட ஐம்பது டிவிஷன்களுடன் நேரடியாக மோதித் தாக்கி, சோவியத் படையினரின் தற்காப்பு அணி வரிசைகளைப் பிளந்து ஊடுருவி, முன்முயற்சியைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, யுத்தத்தின் போக்கைத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்ப அவர்கள் திட்டம் இட்டார்கள்.

சோவியத் தலைமை பகைவர்களின் திட்டங்களை ஊகித்து அறிந்து கொண்டது. கூர்ஸ்க் போர் தொடங்கியது. இது வரலாற்றில் எல்லாவற்றிலும் பெரிய சண்டை. இதில் இரு தரப்பினரும் பெருத்த எண்ணிக்கையில் மிக அதிகமான

விமானங்களையும் டாங்கிகளையும் பீரங்கிகளையும் பயன்படுத்தினர்கள். தகர்க்க முடியாத சோவியத் தற்காப்பு அரண் வரிசைகள் மேல் மோதிச் சிதறியது ஹிட்லர் படைகளின் தாக்குதல். ஜெர்மானியர்களின் தாக்குதலை முறித்த பின்பு செஞ்சேனை தானே உறுதியாகத் தாக்கி முன்னேறலாயிற்று. அது பகைவர்களை த்னேப்பர் ஆற்றின் மறு கரைக்கு விரட்டி, தன்பாஸிலும் த்னேப்பரின் இடக்கரையைச் சார்ந்த உக்ரேனியப் பிரதேசம் முழுவதிலும் பகைப் படைகளைத் துடைத்து ஒழித்து, 1943 நவம்பர் மாதத் தொடக்கத்தில் கீவ் நகரை விடுவித்தது.

பகைவரின் பின்புலத்தில் விறல்மிக்க தேசபக்த கொரில்லா இயக்கம் செஞ்சேனையின் வெற்றிகளுக்கு உதவியது. இந்த இயக்கம் கட்சியின் அறைகூவலுக்கு இணங்க விரிவாக நடந்தது. கட்சி ஸ்தாபனங்களும் கம்யூனிஸ்டுகளுமே தேச பக்த கொரில்லாப் படைப் பிரிவுகளை முன் நின்று அமைத்தார்கள். 1941ம் ஆண்டிலேயே பகைவர் வசம் இருந்த பிரதேசங்களில் தேச பக்த கொரில்லாக்களின் பெருத்த குழுக்களும் படைப் பிரிவுகளும் செயல் தொடங்கி, பகைவர்களைத் தாக்கலாயின. 1943லோ, பகைவரின் பின்புலத்தில் சுமார் பத்து லட்சம் தேச பக்த கொரில்லாக்கள் அடங்கிய பெருஞ் சேனை போர்கள் நடத்தியது, மறைமுக மாவட்ட, நகர, வட்டாரக் கட்சிக் கமிட்டிகள் இயங்கி வந்தன. கொரில்லாக்கள் மக்கள் தரப்பில் பழி வாங்குவோர் என அழைக்கப்பட்டார்கள். சோவியத் நிலத்தில் வழிப்பறி நடத்தியதற்காக, வன விலங்குகள் போன்று அட்டூழியம் செய்து மாதரைக் கற்பழித்து, கிழவர்களையும் சிறுவர்களையும் கொடுமைப் படுத்தியதற்காக, பாசிஸ்டுகளைப் பழி வாங்கினர்கள் தேசபக்த கொரில்லாக்கள். பொது மக்களை பாசிஸ்ட் அடிமைகளாக வேற்றிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதிலிருந்து தேசபக்த கொரில்லாக்கள் காத்தார்கள், பகைவர்களின் கிட்டங்கிகளையும் இராணுவ அலுவலகங்களையும் அழித்தார்கள், பாலங்களையும் பகைவரின் லாரிகளையும் மோட்டார்களையும் இருப்புப் பாதைகளில் சென்ற ரயில் வண்டிகளையும் வெடிகள் வைத்துத் தகர்த்தார்கள். தேசபக்த கொரில்லா இயக்கம் ஒழுங்கமைந்த முறையில் நடந்தது. அதைத் தலைமை வகித்து இயக்

தேசபக்த கொரில்லா வீரர்கள்

கிற்று மைய இராணுவ அலுவலகம். தேசபக்த கொரில்லாக் கள் பகைவரின் பெரும் படைகளுக்குத் தீவூட்டி வைத் தார்கள், பகைவர்களுக்குப் பெருஞ் சேதம் விளைத்தார்கள். பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளரிடமிருந்து முழு முழுப் பிரதே சங்களை அவர்கள் விடுவித்தார்கள்.

யுத்தத்தின் போக்கு சோவியத் மக்களுக்கும் அவர்க ளுடைய சேனைக்கும் சாதகமாக ஒரேயடியாகத் திரும்பி விட்டது. செஞ்சேனை உயர்ந்த போர்த் திறனைக் காட்டியது. ஜெனரல்களும் அட்மிரல்களும் இராணுவ அதிகாரிகளும் நவீன யுத்தத்தை நடத்துவதில் அனுபவம் பெற்றார்கள், படையினரின் இயந்திர சாதனங்கள் அமைந்த பெரும் பிரிவு களையும் பெரிய தாக்கு நடவடிக்கைகளையும் நிர்வகிக்கும் கலையில் தேர்ச்சி அடைந்தார்கள். சேனை இப்போது விறல் மிக்க போர்க்காலப் பொருளாதாரத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது, மிக மிக நவீன யுத்த இயந்திரங்களால் வலிமை அடைந்திருந்தது. யுத்தம் தொடங்கிய இரண்டு ஆண்டுகளில் சோவியத் தொழில் துறை ஜெர்மன் தொழில் துறையைக் காட்டிலும் இரண்டரை மடங்கு அதிக டாங்கி களும் இருபதினாயிரம் அதிக விமானங்களும் நிர்மாணித்துத் தந்தது. யுத்தம் நடக்கையில் சோவியத் யூனியன் போர் இயந்திர சாதனங்களில் ஜெர்மனியை விஞ்சி விட்டது.

1943ம் ஆண்டுக் கோடையில் தொடங்கிய செஞ்சேனை யின் வெற்றிகரமான தாக்குதல் சோவியத் மக்கள் அனைவருக் கும் உற்சாகம் ஊட்டியது. எத்தனையோ பெருந் தியாகங் களையும் இடர்களையும் மேற்கொள்ள நேர்ந்தாலும் செஞ் சேனை பகைவர்களை அடித்து விரட்டுகிறது, தாய் நிலத்தை விடுவிக்கிறது என்று அறிந்து மக்கள் மகிழ்ச்சியில் திளைத் தார்கள். தாக்கி முன்னேறி வந்த செஞ்சேனையை சோவியத் மக்கள் ஆனந்தக் கண்ணீர் மல்க வரவேற்றார்கள். படைவீரர் களோ, பாசிஸ்ட் பாதகர்கள் இழைத்த கொடுமைகளின் பயங்கரக் காட்சிகளைக் கண் முன்பு கண்டார்கள். பகைவர் கள் சுட்டுச் சாம்பலாக்கிய தரையை விட்டுச் சென்றிருந் தார்கள். பின்வாங்குகையில் அவர்கள் நகரங்களில் எல்லாக் கட்டிடங்களையும் வெடி வைத்துத் தகர்த்து விட்டார்கள்,

கிராமங்களை அடியோடு தீக்கிரை ஆக்கி விட்டார்கள், அமைதியுள்ள மக்களைக் கொன்று தீர்த்தார்கள், அல்லது பாசிஸ்ட் சிறை முகாம்களுக்கு ஓட்டிச் சென்றார்கள், கால்நடைகளைக் குண்டுகளுக்கு இரையாக்கி வீழ்த்தினர்கள், உணவுப் பண்டங்களையும் சூறையாடிய உடைமைகளையும் உடன் கொண்டு போய் விட்டார்கள். பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களின் கால் பட்ட இடங்கள் எல்லாவற்றிலும் சாம்பல் குவியல்களும் இடிபாடுகளுமே எஞ்சி இருந்தன. இவற்றை எல்லாம் கண்ட சோவியத் படையினரின் உள்ளங்களில் பாசிஸ்ட் காட்டு மிராண்டிகள் பால் வெறுப்பு வெந்தழலாக மூண்டு எரிந்தது. அவர்கள் கட்டுக்கு அடங்காத ஆவேசத்துடன் பாய்ந்து முன்னேறினர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியால் போதித்துப் பயிற்றப்பட்டிருந்த சோவியத் மக்கள் எங்குமே உளம் சோரவில்லை. விதி அவர்களை எந்த இடத்தில் கொண்டு தள்ளினாலும் சரியே, எங்கும் அவர்கள் பாசிஸ்டுகளை வீரத்துடன் எதிர்த்தார்கள். பாசிஸ்டுகளின் மரண முகாம்களில் சோவியத் படைவீரர்கள் இரகசிய ஸ்தாபனங்களை அமைத்து, கிளர்ச்சிகள் நடத்தினர்கள். பல முகாம்களில் பிற நாடுகளைச் சேர்ந்த பாசிஸ எதிர்ப்பாளர்களும் போர்க் கைதிகளும் இருந்தார்கள். பாசிஸ்ட் கொலைகாரர்களுக்கு எதிரான போராட்டத்தில் எல்லா பாசிஸ எதிர்ப்பாளர்களுடனும் சோவியத் தேச பக்தர்களின் போராட்டக் கூட்டணி உருவாயிற்று.

ஆயிரக் கணக்கான சோவியத் படையினர் பாசிஸ்ட் சிறை முகாம்களிலிருந்து தப்பி வெளியேறினர்கள். சிலர் தாய்நாடு சேர்ந்து, மீண்டும் படைப் பணிக்குத் திரும்பினர்கள். மற்றவர்களோ, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, பிரான்ஸ், இத்தாலி, யூகோஸ்லாவியா, கிரீஸ், பெல்ஜியம், ஹாலந்து ஆகிய நாடுகளில் தங்கி, தேச பக்த கொரில்லாப் படைப் பிரிவுகளில் சேர்ந்து, அவற்றின் அஞ்சாவீரர்களாகத் திகழ்ந்தார்கள். ஜெர்மனியில் பாசிஸ்ட் கடுங்காவல் முகாம்களில் இருந்த சோவியத் தேசபக்தர்களும் இவ்வாறே வீரத்துடன் செயலாற்றினர்கள். கிடைத்த சாதனங்கள் எல்லாவற்றையும் கொண்டு அவர்கள் ஹிட்லர் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு மறைமுக நாசம் விளைத்தார்கள்.

சோவியத் யூனியனின் போர் வெற்றிகள் உலகு அனைத்தின் மீதும் பாதிப்பு நிகழ்த்தின. 1943ம் ஆண்டு முடிவில், சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றின் அரசாங்கத் தலைவர்களின் மகாநாடு தெஹ்ரானில் (ஈரானின் தலைநகர்) கூடியது. இதில் ஏற்கப்பட்ட அறிக்கை ஆங்கில, சோவியத், அமெரிக்கக் கூட்டணியின் பொதுக் கொள்கைப் போக்கை வரையறுத்து, யுத்தத்துக்குப் பிறகு ஒன்றித்த கூட்டுறவுக்கான கோட்பாடுகளைப் பிரகடனம் செய்தது. ஆயினும் பிரிட்டனும் அமெரிக்காவும் 1943ல் ஐரோப்பாவில் இரண்டாம் போர் முனை திறப்பது பற்றிய தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. 1944 மே மாதம் அதைத் திறப்பதாக அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் இப்போது வாக்களித்தார்கள்.

பகைவர்கள் சோவியத் நிலத்திலிருந்து துடைத்து ஒழிக்கப்பட்டார்கள்

மூன்றாவது ஆண்டும் சோவியத் யூனியன் யுத்தச் சுமை அனைத்தையும் தன்னந்தனியாக ஏற்றிச் சென்றது. ஜெர்மனியிடம் இன்னும் பெருத்த சக்தி இருந்தது. முன்போன்றே அனேகமாக ஐரோப்பா அனைத்தினதும் வளங்கள் அதன் வசம் இருந்தன. இரண்டாம் போர்முனை திறக்கப்படாததைச் சாதகமாக எடுத்துக்கொண்டு ஹிட்லர் கிழக்குப் போர் முனைக்குப் புதிய டிவிஷன்களை அனுப்பினான். இன்னும் வலிமை குன்றாத பகைவர்கள் செஞ்சேனைக்கு எதிர் நின்றார்கள். ஆனால், பின்புல உழைப்பாளிகளின் முயற்சிகளால் 1944ம் ஆண்டு ஆரம்பத்தில் ஜெர்மன் சேனையைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் விமானங்களும் டாங்கிகளும் பீரங்கிகளும் பிற ஆயுதங்களும் அதனிடம் இருந்தன.

1943ம் ஆண்டில் நடந்த மும்முரமான சண்டைகளுக்குப் பிறகு இடை ஓய்வு கிடைக்கும் என்று ஜெர்மன் தலைமை எதிர்பார்த்தது. ஆனால் இவ்வாறு நேரவில்லை. செஞ்சேனை விரிந்த அளவில் புதிய தாக்குதலை மேற்கொண்டது. 1944ம் ஆண்டு முதல் பாதியில் அது லெனின்கிராதின் அருகே பகைவர்களைத் தாக்கி நொறுக்கி, பல நூறு கிலோமீட்டர்கள் தூரத்துக்குப் பின்னே தள்ளியது, உக்ரேனில் த்னேப்பர் ஆற்றின் மேற்கே பகைவர்களின் இரண்டு பெரிய படைத்

தொகுப்புக்களைச் சூழ்ந்து தாக்கி அழித்தது, கிரிமியாவை விடுதலை செய்தது.

1944ம் ஆண்டுக் கோடையில் செஞ்சேனை எல்லாப் போர் முனைகளிலும் தாக்குதல் தொடங்கியது. லெனின்கிராதுக்கு வடக்கே ஜெர்மானிய-பின்லாந்துத் துருப்புக்கள் முறியடிக்கப்பட்டன. பின்லாந்து யுத்தத்திலிருந்து விலகி விட்டது. மத்தியத் திசையில் சோவியத் படையினர் இடைவிடாது தாக்கி முன்னேறி பேலோருஷ்யாவையும் லித்துவானியாவின் பெரும் பகுதியையும், பிறகு லாட்வியாவையும் எஸ்தோனியாவையும் விடுவித்தார்கள். தெற்கே உக்ரேனும் மல்தாவியாவும் 1944 இலையுதிர் காலத்துக்கு முன் முழுமையாக விடுவிக்கப்பட்டன.

1944ம் ஆண்டில், முற்றுகைக்கு உள்ளான ஜெர்மானியர்கள் ஆயிரக் கணக்கில் சரணடைந்து போர்க் கைதிகள் ஆனார்கள். ஹிட்லர் தரப்பு ஆக்கிரமிப்பாளர்கள் மாஸ்கோவைக் காணலாம் என்று ஒரு காலத்தில் ஆசைப்பட்டார்கள். இப்போது அவர்களுடைய மனோரதம் ஈடேறிற்று. 1944, ஜூலை 17ந் தேதி, போர்க் கைதிகளான சுமார் அறுபதாயிரம் ஹிட்லர் துருப்புக்களும் அதிகாரிகளும் ஜெனரல்களும் சோவியத் தலைநகரின் வீதிகள் வழியே காவலுடன் நடத்திச் செல்லப்பட்டார்கள்.

சோவியத் யூனியனின் அரசு எல்லை முழுவதும் 1944ம் ஆண்டில் முற்றுக மீண்டும் நிலை நிறுத்தப்பட்டது. செஞ்சேனை ஜெர்மன்-பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களைத் துடைத்து ஒழித்து **சோவியத் நிலப்பரப்பைத் துப்புரவாக்கி விட்டது.** ஜெர்மன் சேனை சோவியத் நிலத்தில் ஈடு செய்ய முடியாத பேரிழப்புக்களுக்கு உள்ளாயிற்று: 80 லட்சம் படையினர் உயிரிழந்தார்கள், சிறைப்பட்டார்கள், 190 ஆயிரம் பீரங்கிகளும் 62 ஆயிரம் விமானங்களும் 55 ஆயிரம் டாங்கிகளும் அழிந்தன. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களை அடித்து விரட்டியதன் வாயிலாக சோவியத் மக்கள் சோவியத் சோஷலிஸ அமைப்பின் சிதைக்க முடியாத பேராற்றலை நிரூபித்துவிட்டார்கள்.

பகைவரிடமிருந்து விடுவிக்கப்பட்ட இடங்களில் மீட்டமைக்கும் பணி விரிவாகத் தொடங்கியது. விடுவிக்கப்பட்ட

பிரதேசங்களில் பொருளாதாரத்தை மீண்டும் அமைப்பதற்குரிய உடனடி நடவடிக்கைகள் பற்றிக் கட்சி மத்தியக் கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் விசேஷத் தீர்மானங்களை நிறைவேற்றின. போரில் சேதம் அடைந்த பிரதேசங்களுக்குப் புத்துயிர் அளிப்பது மக்கள் அனைவரதும் கடமை ஆயிற்று. உரால், சைபீரியா, கஸாஃஸ்தான், மத்திய ஆசிய, காக்கேஷியக் குடியரசுகள் ஆகியவற்றின் உழைப்பாளிகள், இயந்திரங்களும் எரிபொருளும் கால்நடைகளும் தானியமும் கட்டுமானப் பொருள்களும் நிறைத்த ரயில் வண்டிகளை உக்ரேனுக்கும் பேலோருஷ்யாவுக்கும் மல்தாவியாவுக்கும் லித்துவானியாவுக்கும் லாட்வியாவுக்கும் எஸ்தோனியாவுக்கும் அனுப்பினர்கள். போர் முனையில் சிந்திய குருதியால் உரம் ஊட்டப்பெற்ற சோவியத் மக்கள் இனங்களின் நட்பு, பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களால் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்குச் சோதர உதவியின் வடிவில் புதிய ஆற்றலுடன் வெளிப்பட்டது. அழிவுக்குள்ளான மின் நிலையங்களும் ஆலைகளும் தொழிற்சாலைகளும் நிலக்கரிச் சுரங்கங்களும் கனியச் சுரங்கங்களும் உயிர் பெற்று எழுந்தன. இருப்பிட வீடுகளும் பள்ளிக்கூடங்களும் மருத்துவ மனைகளும் மீண்டும் கட்டப்பட்டன. தன்பாஸில் போர் முடிவுக்குள் நான்குக்கு மூன்று வீதம் சுரங்கங்கள் நிலக்கரி உற்பத்தி செய்தன. நாட்டின் கிழக்குப் பகுதிகளில் யுத்தக் காலத்தில் 2250க்கு மேல் புதிய பெரிய தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டன.

சோவியத் சேனையின் விடுதலை அளிக்கும் முன்னேற்றம்

சோவியத் சேனையின் வெற்றிகரமான தாக்குதல் பாசிஸ்டுகளால் அடிமை ஆக்கப்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகளின் மக்களை ஊக்கி உற்சாகப்படுத்தியது. யூகோஸ்லாவியா, அல்பேனியா, கிரீஸ், போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தேசிய விடுதலை இயக்கம் அனைத்து மக்கள் போராட்டமாக வளர்ந்தது. இவற்றைத் தலைமை தாங்கி நடத்தின கம்யூனிஸ்ட் கட்சிகள். பாசிஸ்ட் கூட்டணியைச் சேர்ந்த இத்தாலி, ஜெர்மனி, ஹங்கேரி, ருமேனியா, பல்காரியா, பின்லாந்து ஆகிய நாடுகளில் பாசிஸ எதிர்ப்பு இயக்கம் தீவிரம் அடைந்

தது. இந்த நாடுகளின் தேசபக்தர்கள் யுத்தத்தில் ஆக்கிர மிப்புக் கூட்டணியின் தோல்விக்காகவும் பாசிஸ்ட் அரசாங் கத்தை ஒழிப்பதற்காகவும் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் போராடினார்கள். இத்தாலியிலும் பல்கேரியாவிலும் ருமே னியாவிலும் தேசபக்த கொரில்லா இயக்கம் விரிவாகத் தொ டங்கியது. சோவியத் யூனியனின் உதவியால் போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, பின்னர் ருமேனியா ஆகியவற் றின் தேசபக்தர்கள் சோவியத் யூனியன் பிரதேசத்தில் தங் கள் படைப் பிரிவுகளை அமைத்தார்கள். இவை செஞ்சேனை யோடு சேர்ந்து சோவியத் ஆயுதங்களால் பாசிஸ்ட் படைகளைத் தாக்கி நொறுக்கின.

செஞ்சேனையின் வெற்றிகள் பிரிட்டிஷ், அமெரிக்க ஆளும் வட்டாரங்களைக் கலவரப்படுத்தின. இப்போது சோவியத் யூனியனால் தன்னந்தனியாக ஜெர்மன் சேனையை முறிய டித்து ஐரோப்பா முழுவதையும் விடுவிக்க முடியும் என்பது தெளிவாய் இருந்தது. பிரிட்டிஷ், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்குப் போரின் இந்த விளைவு உகந்ததாய் இல்லை. ஜனநாயகத்தின் பொருட்டும் முன்னேற்றத்திற்காகவும் ஐரோப்பிய மக்கள் இனங்களின் போராட்டம் வளர்ச்சி அடைந்ததும் அவர்களுக்குத் திகில் ஊட்டியது. பிரிட்டிஷ், அமெரிக்க ஆளும் வட்டாரங்கள் இரண்டாம் போர்முனை திறப்பதை மூன்று ஆண்டுகளாக இழுத்தடித்து வந்தன. கடைசியாக இப்போது அவை இரண்டாம் போர் முனையைத் திறந்தன. 1944ம் ஆண்டு ஜூன் மாதம் பிரிட்டிஷாரும் அமெரிக் கர்களும் தங்கள் படைகளை பிரான்ஸில் இறக்கினார்கள். ஜெர்மனி சம்மட்டிக்கும் பட்டடைக்கும் நடுவே மாட்டிக் கொண்டது. வெற்றியை அடித்து உருவாக்கிய சம்மட்டியாக விளங்கியது சோவியத் யூனியன்.

1944ம் ஆண்டின் நடுவில் சோவியத் சேனை மேற்கு ஐரோப்பாவில் விடுதலை அளிக்கும் மாபெரும் முன்னேற்றத்தைத் தொடங்கியது. கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங் கமும் தங்கள் குறிக்கோள் பின்வருமாறு என்று அறிவித்தன:

—பாசிஸ்ட் கொடுங்கோன்மையை ஒழித்துத் தங்கள் சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள ஐரோப்பிய மக்களுக்கு உதவுவது;

—விடுதலை பெற்ற மக்களுக்குத் தங்கள் அரசு, சமூக அமைப்பு பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முழுச் சுதந்திரம் அளிப்பது;

—யுத்தத்துக்குப் பொறுப்பாளிகளையும் பிரதான யுத்தக் குற்றவாளிகளையும் தண்டிப்பது;

—ஜெர்மனியின் தரப்பில் புதிய ஆக்கிரமிப்பு நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்வது;

—ஐரோப்பாவின் மக்கள் இனங்களுக்கிடையே யுத்தத்துக்குப் பிறகு நீண்டகால ஒத்துழைப்பை ஏற்படுத்துவது;

சோவியத் யூனியனுல் பிரகடனம் செய்யப்பட்ட விடுதலைப் போராட்டச் செயல்திட்டம் மனிதாபிமானம், எல்லா மக்கள் இனங்களதும் அரசுரிமைக்கு மதிப்பு, அவற்றின் உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றின் உணர்வால் நிறைந்திருந்தது. ஐரோப்பிய மக்கள் இனங்கள் அதைப் புரிந்து கொண்டு ஆதரித்தன.

செஞ்சேனை சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் அதை விடுதலை அளிக்கும் சேனையாகக் களி பேருவகையுடன் வரவேற்றார்கள். ஐந்து கண்டங்களையும் சேர்ந்த உழைப்பாளி மக்களின் ஒருமைப்பாட்டைக் குறிக்கும் ஐம்முனை விண்மீன் சின்னத்துடன் வந்த சோவியத் படைவீரனைப் பார்த்து, ஐரோப்பிய நாடுகளின் உழைப்பாளி மக்கள் பாசிஸத்தையும் கம்யூனிஸத்தையும் பிரிக்கும் அகாதத்தின் ஆழம் முழுவதையும் உணர்ந்து கொண்டார்கள். பாசிஸம் தனது மனித வெறுப்பு நிறைந்த இனவெறிக் கொள்கைவாதத்துடன் ஒடுக்கு முறையையும் சாவையும் பரப்பியது. கம்யூனிஸமோ, மக்கள் இனங்களின் நட்புக் கொள்கைவாதத்துடன் விடுதலையையும் வாழ்வையும் நிலைபெறச் செய்தது.

சோவியத் சேனை போலந்துப் படையினருடன் சேர்ந்து ஜெர்மானிய ஆக்கிரமிப்பாளர்களைப் போலந்திலிருந்து விரட்டியடித்தது. 1944ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சோவியத் படைகள் பகைவர்களை நொறுக்கியவாறு ருமேனியாவுக்குள் புகுந்ததும் அந்நாட்டின் தேசபக்த சக்திகள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கிளர்ச்சி செய்து பாசிஸ்ட் அரசாங்கத்தைக் கவிழ்த்தன. ருமேனியா ஜெர்மனியுடன் தொடர்பைத் துணித்துக் கொண்டது. அதன் சேனை ஹிட்லர் படை

களுக்கு எதிராகத் திரும்பியது. சோவியத் சேனையின் வெற்றிகள் முடியரசு-பாசிஸ்ட் அரசாங்கத்தைக் கவிழ்க்க பல்கேரிய மக்களுக்கு உதவின. பல்கேரியத் தாய்நாட்டு முன்னணி அரசாங்கம் ஜெர்மனியுடன் போர்ப் பிரகடனம் செய்தது. யூகோஸ்லாவியாவில், 1941ம் ஆண்டு வசந்தத்தில் ஜெர்மானியர் அதைக் கைப்பற்றிக் கொண்டதுமே கம்யூனிஸ்ட் கட்சி சக்தி மிக்க தேசபக்த கொரில்லா இயக்கத்தை ஒழுங்கமைத்தது. கொரில்லாப் படைப் பிரிவுகளிலிருந்து வளர்ந்த யூகோஸ்லாவிய மக்கள் விடுதலைச் சேனை, யுத்த காலம் முழுவதிலும் ஜெர்மானிய, இத்தாலிய சைனியங்களின் ஒரு பகுதியைத் தனிமைப்படுத்தி வைத்திருந்தது. சோவியத், யூகோஸ்லாவிய சேனைகள் யூகோஸ்லாவியத் தலைநகர் பெல்கிரேடை விடுவித்து, நாட்டில் இருந்த ஆக்கிரமிப்பாளர்களைத் துடைத்து ஒழித்தன. அல்பேனிய மக்கள் சோவியத் படையினரின் வெற்றியைப் பயன்படுத்திக் கொண்டு பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்தார்கள். சோவியத் சேனை ஹங்கேரியையும் செக்கோஸ்லோவாக்கியாவினுடையவும் ஆஸ்திரியாவினுடையவும் கணிசமான பகுதிகளையும் விடுவித்தது, நார்வே, டென்மார்க் மக்களுக்கு பாசிஸ்ட் நுகத்தை உடைத்து எறிய உதவிற்று.

சோவியத் படையினர் பாசிஸ்டுகளால் நிறுவப்பட்ட மரண முகாம்களை அவர்களிடமிருந்து விடுவித்தார்கள். இந்த முகாம்களின் உலைகளில் பாசிஸ்டுகள் பல பத்து லட்சம் கைதிகளை உயிரோடு எரித்திருந்தார்கள். நாற்பது லட்சம் சோவியத் பிரஜைகள் இந்த முகாம்களில் கொல்லப் பட்டிருந்தார்கள். இன்னும் பல பத்து லட்சம் பெயருக்கு இதே கதி நேர இருந்தது. பாசிஸ்ட் முகாம்களில் சிறைவைக்கப்பட்டவர்களில் எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த மனிதர்கள் இருந்தார்கள். சோவியத் படைவீரர்கள் அவர்களுடைய உயிர்களைக் காத்தார்கள்.

1945 ஜனவரி மாத நடுவில் சோவியத் சேனை **வெற்றியை நிறைவுபடுத்தும் தாக்குதல்** தொடங்கியது. சோவியத் படைகளின் விறல் மிக்க தாக்குதல்களுக்கு முன்னிற்க ஹிட்லர் படைகளால் முடியவில்லை.

பெர்லின் நகர் கைப்பற்றப்பட்டு விட்டது. வெற்றிச் செங்கொடி ஜெர்மன் நாடாளு மன்றக் கட்டிடத்தின் மீது பறக்கிறது

மாபெரும் தேசபக்த யுத்தத்தின் வெற்றிகர நிறைவேற்றம்

யுத்தம் ஜெர்மன் பிரதேசத்துக்குள் வந்து விட்டது. நிகழ்ச்சிப் போக்கு இப்படி மாறும் என்று யுத்தத்தை மூட்டி விட்டபோது பாசிஸ்ட் துர்ச் சாகசக்காரர்கள் நினைக்கவில்லை. ஹிட்லரின் ஆட்கள் தாங்கள் இழைத்த தீமைகளுக்கெல்லாம் தண்டனை பெறும் நேரம் வந்துவிட்டது. சோவியத் படை வீரன், மாஸ்கோவிலும் வோல்காவிலும் லெனின்கிராதிலும் காக்கேஷிய மலை அடிவாரத்திலும் இருந்து யுத்த நெருப்பின் ஊடாக நடந்து, ஆக்கிரமிப்பாளர்களை நொறுக்கி வீழ்த்தியவாறு விடாப்பிடியாக முன்னேறி, பாசிஸ்ட் காட்டு விலங்குக்கு இறுதி அடி கொடுப்பதற்காக அதன் ''குகைக்கு'' உள்ளே புகுந்துவிட்டான்.

வெற்றி

1945 ஏப்ரல் மாத நடுவில் சோவியத் சேனை பாசிஸ்ட் ஜெர்மனியின் தலைநகர் பெர்லின் மீது தாக்கு தொடங்கியது. கோர வெம்போர் பத்து நாட்கள் தொடர்ந்து நடந்தது. பெர்லின் கைப்பற்றப்பட்டது. சோவியத் படைவீரர்கள் ஜெர்மன் நாடாளுமன்றக் கட்டிடமான ரைஹ்ஸ்தாக் மீது **வெற்றிச் செங்கொடியைப்** பறக்க விட்டார்கள். சோவியத் சைனியம் ஹிட்லர் சேனையைப் படு தோல்விக்கு உள்ளாக்கிற்று. பாசிஸம் முறியடிக்கப்பட்டு விட்டது. ஜெர்மனி சரணடைந்தது. பாசிஸ்ட் கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் மக்கள் நீதிமன்றத்தால் கடும் தண்டனைகள் விதிக்கப் பெற்றார்கள்.

ஜெர்மனி சரண் அடைந்ததுடன் ஐரோப்பாவில் யுத்தம் முடிந்து விட்டது. ஆனால் ஆசியாவிலும் பசிபிக் மாகடல் பிரதேசத்திலும் அது தொடர்ந்து நடந்தது. அங்கே ஜெர்மனியின் கூட்டாளியான ஏகாதிபத்திய ஜப்பான் சீன மக்களையும் பிற ஆசிய நாடுகளின் மக்களையும் சித்திரவதை செய்தது, பத்து லட்சம் படையினர் கொண்ட பெருஞ் சேனையை சோவியத் யூனியனின் எல்லையில் வைத்திருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் சீனவும் ஜப்பானுடன் யுத்தம் நடத்தி வந்தன, அது முடிவுபெறும் குறியே தென்படவில்லை. ஜப்பானிய ஏகாதிபத்தியக் காட்டு விலங்கு தங்கள் தூரக் கிழக்கு எல்லையில் பாய்ச்சல் காட்டிக் கொண்டிருக்கும் வரை சோவியத் மக்கள் தாங்கள் பாதுகாப்புடன் இருப்பதாக உணர முடியவில்லை. ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளால் கொடுமைப்படுத்தப்பட்ட சீன மக்களுடையவும் பிற ஆசிய மக்களுடையவும் துன்பங்களை அசட்டையாகப் பார்த்துக் கொண்டிருக்க அவர்களுக்கு இயலவில்லை.

1945 ஜூலை மாதம், சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றின் அரசாங்கத் தலைவர்களது மகாநாடு பாட்ஸ்டாம் என்னும் இடத்தில் நடந்தது. ஜெர்மனி இனி ஒருபோதும் சமாதானத்துக்கு அபாயம் விளைவிக்காதவாறு பார்த்துக் கொள்வதாக மூன்று பெரு வல்லரசுகளின் தலைவர்களும் இந்த மகாநாட்டில் ஆழ்ந்த முறையில் பிரகடனம் செய்தார்கள். ஜப்பான் பற்றிய பிரச்சினையும் மகாநாட்டில் எழுந்தது. விரைவில் யுத்தத்துக்கு முடிவு கட்டி உலக சமாதானத்தை நிலைநாட்டும் பொருட்டு,

ஜப்பானிய சைனியவாதிகளை நொறுக்குவதில் நேசநாடுகளுக்கு உதவி செய்வதாகத் தான் அளித்த வாக்கை சோவியத் அரசாங்கம் உறுதிப்படுத்தியது.

ஆகஸ்ட் தொடக்கத்தில் சோவியத் யூனியன் ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. சோவியத் சேனை ஜப்பானியப் படைகளைத் தாக்கி நொறுக்கியது. விரைவில் ஜப்பான் சரணடைந்தது. சீனுவின் நான்கு கோடி மக்கள் கொண்ட வடகிழக்கு மாநிலங்களை ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து சோவியத் சேனை விடுவித்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் சீனுவின் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பையும் அதன் முக்கியப் பொருளாதார மையங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றிக் கொண்டு, பதினான்கு ஆண்டுகளாக அதன் அமைதியுள்ள மக்களைக் கொன்று அழித்தார்கள், நாட்டைச் சூறையாடி அதன் வளங்களைக் கவர்ந்து சென்றார்கள். சீன மக்கள் வீரத்துடன் போராடினார்கள். ஆனால் ஆயுதபலம் குறைந்த சீன மக்கள் விடுதலைச் சேனையால் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக வெற்றிகரமான தாக்குப் போர்கள் நடத்தவும் நாட்டுக்குள் பிற்போக்குச் சக்திகளை எதிர்க்கவும் முடியவில்லை. சோவியத் படைகளால் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் முறியடிக்கப்பட்டது சீனப் புரட்சியை மேலும் விரிவாக நடத்தவும் வெற்றிகரமாக நிறைவேற்றவும் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தியது. சோவியத் சேனை வட கொரியாவை விடுவித்தது. தனது வெற்றியால் அது ஆசிய நாடுகளில் தேசிய விடுதலை இயக்கம் மேலும் மேலும் விரிவாகப் பரவத் துணை செய்தது.

யுத்தத்தின் முடிவில், 1945 ஆகஸ்டில், அமெரிக்க விமானங்கள் ஹிரோஷிமா, நாகஸாக்கி என்னும் ஜப்பானிய நகரங்கள் மீது இரண்டு அணு குண்டுகளை வீசின. இந்த நகரங்களின் மக்கள் பயங்கரத் துன்பத்துக்கு ஆளானார்கள். அணு ஆயுதங்களைக் கையாள்வதற்கு எவ்வித முகாந்தரமும் இருக்கவில்லை. இந்தச் செய்கை மனித குலத்துக்கு இழைக்கப்பட்ட கோரமான கொடுங் குற்றமாக விளங்கியது. ஜப்பான் சரண் அடைந்ததை விரைவுபடுத்தியது இந்த குண்டுகளின் பாதிப்பு அல்ல, சோவியத் யூனியன் யுத்தத்தில் கலந்து கொண்

டதும் ஜப்பானின் சிறந்த தரைப்படைகளை சோவியத் சேனை முறியடித்ததுமே ஆகும்.

சோவியத் யூனியன் மாபெரும் தேசபக்த யுத்தத்தை வெற்றிகரமாக முடித்தது. இரண்டாவது உலக யுத்தமும் முடிந்து விட்டது. நெடுங் காலமாக எதிர்பார்க்கப்பட்ட சமாதானம் தொடங்கியது.

முதலாவது சோஷலிஸ்ட் நாடான சோவியத் யூனியனை நிலையாக வைத்திருப்பதன் பொருட்டும் உலகு அனைத்திலும் சமாதானமும் ஜனநாயகமும் சோஷலிஸமும் வெற்றி பெறுவதன் பொருட்டும் சோவியத் மக்கள் அளவிறந்த கடுந் தியாகங்களை மேற்கொண்டார்கள். யுத்தத்தின்போது ஏறக் குறைய இரண்டு கோடி சோவியத் மக்கள் கொல்லப்பட்டார்கள். ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகள்மீது சோவியத் யூனியன் பெற்ற வெற்றி ஒருகாலும் ஒளி குன்றாது. லெனினது கட்சியால் போதித்துப் பயிற்றப்பட்ட சோவியத் மக்கள் மாபெரும் தேசபக்த யுத்தத்தின்போது முன் ஒரு போதும் வரலாறு கண்டிராத நிலையுறுதியையும் வெகுஜன வீரத்தையும் காட்டினார்கள். 70 லட்சத்துக்கும் அதிகமான படைவீரர்களுக்கு சோவியத் யூனியனின் விருதுகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. பதினோராயிரத்துக்கும் மேல் படைவீரர்களுக்கு சோவியத் யூனியனின் வீரர் பட்டம் அளிக்கப்பட்டது. பரிசுகள் பெற்றவர்களில் சோவியத் யூனியனின் எல்லா நாட்டினங்களுடையவும் மக்களினங்களுடையவும் பிரதிநிதிகள் இருந்தார்கள். மாபெரும் தேசபக்த யுத்தம் லெனினது தீர்க்கதரிசனம் நிறைந்த சொற்களை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்திவிட்டது: ''எந்த மக்களில் பெரும் பாலான தொழிலாளர்களும் விவசாயிகளும் தாங்கள் தங்களுடைய, சோவியத் ஆட்சியை—உழைப்பாளிகளின் ஆட்சியைக் காத்துப் போரிடுவதை, எந்த லட்சியத்தின் வெற்றி தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் பண்பாட்டின் எல்லாச் செல்வங்களையும், மனித உழைப்பால் நிறுவப்பட்டவை எல்லாவற்றையும் அனுபவிக்க வகை செய்யுமோ அந்த லட்சியத்தைக் காத்துப் போரிடுவதை அறிந்துகொண்டு, உணர்ந்து, கண்டு கொண்டார்களோ, அந்த மக்களை ஒரு போதும் யாராலும் வெல்ல முடியாது.'' (முழு நூல் திரட்டு, தொகுதி 38, பக்கம் 315).

மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் மக்களின் வெற்றிக்கு முன்னேற்பாடுகள் செய்து தூண்டி ஊக்கியது **கம்யூனிஸ்ட் கட்சி.** சேனையையும் மக்களையும், முனைமுகத்தையும் பின்புலத்தையும் அது ஒன்றுக இணைத்தது, சோவியத் மக்களின் எல்லாப் பிரயாசைகளையும் பகைவனை முறியடிக்கும் குறிக்கோளை நோக்கிச் செலுத்தியது. கம்யூனிஸ்டுகள் தங்கள் சொந்த உதாரணத்தால் படைவீரர்களையும் பின்புல உழைப்பாளிகளையும் வீரம் நிறைந்த அருஞ் செயல்கள் ஆற்றத் தூண்டி ஊக்கினர்கள். கட்சி மக்களுக்கு முன்னிலும் அன்புக்குரியது ஆகி விட்டது. அதன் செல்வாக்கு உயர்ந்தது. சிறந்த மனிதர்கள் கட்சியின் அணிகளில் சேர்ந்தார்கள். ''கம்யூனிஸ்டாகப் போரில் கலந்து கொள்ள விரும்புகிறேன்.'' ''போரில் நான் இறந்துவிட்டால் என்னைக் கம்யூனிஸ்டாகவே மதியுங்கள்'' என்று அறிவித்தார்கள் ஆயிரமாயிரம் படைவீரர்கள். யுத்த காலத்தில் கட்சி உறுப்பினராவதற்கு வேட்பாளர்களாக 50 லட்சத்துக்கும் அதிகமானவர்களும் உறுப்பினர்களாக ஏறத்தாழ 35 லட்சம் பெயரும் ஏற்றுக் கொள்ளப் பட்டார்கள். மொத்தக் கம்யூனிஸ்டுகளில் பாதிப் பெயருக்கு மேல் யுத்த முடிவில் தரைப்படையிலும் கடற்படையிலும் இருந்தார்கள். போரின் கடுஞ் சோதனைகள் கட்சிக்கு இன்னும் அதிக உரம் ஏற்றின, அதன் போர்த் திறனையும் தலைமைப் பாத்திரத்தையும் உயர்த்தின.

ஜெர்மானிய, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளால் மூட்டி விடப்பட்ட இரண்டாவது உலக யுத்தம் மனித குலத்துக்கு எண்ணிறந்த இன்னல்கள் விளைத்தது. கிட்டத்தட்ட ஐந்து கோடி மனித உயிர்களை அது கொள்ளை கொண்டது, முழு முழு நாடுகளின் வளங்களைச் சூறையாடியது, ஆயிரக் கணக்கான நகரங்களையும் கிராமங்களையும் அழித்தது, பல தலைமுறைகளது உழைப்பின் விளைவுகளைத் துவம்சம் செய்தது.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகளுடன் நடந்த யுத்தத்தை வெற்றிகரமாக முடிப்பதில் முக்கியப் பங்கு ஆற்றியது சோவியத் யூனியன். கம்யூனிஸ்ட் கட்சியால் வழிகாட்டி நடத்தப்பட்ட சோவியத் மக்கள் உலகு அனைத்தினதும் மக்களுக்குத் தங்கள் சர்வதேசக் கடமையை நிறைவேற்றினர்

மக்களுக்கு விடுதலை பெற்றுத் தந்த சோவியத் படைவீரன்

கள். யுத்தத்தின் பெரும் பாரத்தை அவர்கள் சுமந்தார்கள், பாசிஸ்டுகளுக்கு அடிமைப்படும் அபாயத்திலிருந்து மனித குலத்தைக் காப்பாற்றினார்கள். அவர்கள் ஐரோப்பிய மக்கள் இனங்களை பாசிஸ்ட் அடிமைத் தளையிலிருந்து விடுவித்தார்கள், ஜப்பானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் சீன மக்களுக்கும் ஆசியாவின் பிற நாடுகளின் மக்களுக்கும் பேருதவி புரிந்தார்கள். ஐரோப்பா, ஆசியா ஆகியவற்றின் மக்கள் இனங்கள் தேசிய விடுதலை பெற்றன. அவற்றில் பல சோஷலிஸ வழியை மேற்கொண்டன.

சோவியத் யூனியனில் சோஷலிஸ சமூக, அரசு அமைப்பு நிலவியதன் விளைவாகவே சோவியத் மக்கள் மாபெரும் தேசபக்த யுத்தத்தில் உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள வெற்றி அடைந்தார்கள். தொழிலாளர்களும் விவசாயிகளும், சோவியத் நாட்டின் எல்லா மக்கள் இனத்தாருமே, முறிக்க முடியாத நட்பில் ஒன்று சேர்ந்திருந்தார்கள், ஏனெனில் இந்த நட்பைக் கெட்டிப்படுத்தி இருந்தது கம்யூனிஸ்ட் கட்சி.

மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் யூனியனின் மக்கள் இனங்கள் ஆற்றிய ஒளி குன்ரு அருஞ் செயல்களின் நினைவு என்றென்றும் பசுமையாய் இருக்கும்.

சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றுக்கான போராட்டத்தின் முன்னணியில்

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவாகிறது

சோவியத் யூனியன் மற்ற அரசுகளைக் காட்டிலும் அதிக இழப்புக்களுக்கு உள்ளாகியது என்ரூலும், போரிலிருந்து அது அரசியல் நோக்கில் அதிக வலிமை வாய்ந்ததாக வெளிப்பட்டது. அதன் சர்வதேச மதிப்பு உயர்ந்தது. சோவியத் யூனியன் பங்கு கொள்ளாமல் உலக அரசியலின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண்பது இப்போது இயலாதது ஆகிவிட்டது.

ஆக்கிரமிப்பாளிகளான ஏகாதிபத்திய அரசுகள் மீது சோவியத் யூனியனின் வெற்றி உலக வளர்ச்சிப் போக்கு அனைத்தின் மீதும் நிர்ணயகரமான செல்வாக்கு செலுத்தியது. அனேக ஐரோப்பிய நாடுகளில் மக்கள் புரட்சிகள் நடந்தன. அல்பேனியா, பல்கேரியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லாவியா ஆகியவற்றில் மக்கள்-ஜனநாயக அமைப்பு நிலை பெற்றது. இந்த நாடுகளின் தொழிலாளர்களும் விவசாயிகளும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் தங்கள் முதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டார்கள். நிலப்பிரபுக்களிடமிருந்து நிலம் பறிக்கப்பட்டு வேளாண்மை செய்பவர்களுக்கு வழங்கப்பட்டது. முதலாளிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட தொழிற்சாலைகளும் ஆலைகளும் மக்களின் உடைமை ஆயின. மக்கள்-ஜனநாயகப் புரட்சிகள் சோஷலிஸப் புரட்சிகளாக வளர்ந்தன, அதுவும் அமைதியான முறையில், உள்நாட்டுப் போர் இல்லாமலே வளர்ந்தன. தொழிலாளி வர்க்கம் புதிய, மக்கள்-ஜனநாயக அமைப்புக்குத் தலைமை ஏற்றது. மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகள் அதன் வழிகாட்டும் சக்தி ஆயின. ஐரோப்பிய மக்கள்-ஜனநாயக நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து விலகி, சோஷலிஸப் பாதையில் முன்னேறலாயின.

சோவியத் மக்கள் சோதர மக்களுக்கு உதவிக் கரத்தை நீட்டினார்கள். யுத்த காலத்தில் வெகுவாகக் குறைந்துவிட்ட தன் சேமிப்புக்களிலிருந்து உணவுப் பண்டங்களும், விதைத் தானியங்களும் கச்சாப் பொருள்களும் இந்த மக்களுக்கு அனுப்பி வைத்தார்கள். ஜனநாயக நாடுகள் தங்கள் மக்களுக்கு உணவுப் பண்டங்கள் வழங்கவும் தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் நடத்தவும் இந்த உதவி வாய்ப்பு அளித்தது. சோவியத் யூனியன் தனது விறல் மிக்க இராணுவக் கேடயத்தால் அவற்றுக்கு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து காப்பு அளித்தது. ஜனநாயக நாடுகளின் உள் விவகாரங்களில் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை அது தடை செய்தது, இவற்றில் உள்நாட்டுப் போரை மூட்டிவிட அவர்கள் செய்த முயற்சிகளைப் பலிக்காது அடித்தது, ஏகாதிபத்தியத் தலையீடு நேராமல் காத்தது.

புரட்சிச் சக்திகள் ஆசியாவில் ஏகாதிபத்தியச் சங்கிலியைப் பெருமளவு துணித்து விட்டன. சீன மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பிற்போக்கு குவோமின்தான் அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு ஆட்சியைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டார்கள். 1949 அக்டோபர் மாதம் சீன மக்கள் குடியரசு உருவாயிற்று. சீன மக்கள் சோஷலிஸக் கட்டுமானம் தொடங்கினர்கள். சீன மக்களின் வெற்றி யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் நடந்த மிக முக்கிய நிகழ்ச்சி ஆகும். தனது முக்கியத்துவத்திலும் உலகின், மனித குலத்தின் விதி மீது தனது செல்வாக்கிலும் சீனப் புரட்சி உலக விடுதலை இயக்க வரலாற்றில் அக்டோபர் புரட்சிக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பெற்று விட்டது. அது முதலாளித்துவத்துக்கு, சிறப்பாக அதன் காலனி ஆட்சி முறைக்கு பலத்த அடி கொடுத்தது, உலக அரங்கில் சக்திகளின் ஒப்பு நிலையை சோஷலிஸத்துக்குச் சாதகமாக இன்னும் அதிகமாக மாற்றி விட்டது.

சோவியத் படைகள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்த பின் வட கொரியாவில் கொரிய மக்கள்-ஜனநாயகக் குடியரசு உருவாயிற்று. வியத்நாமிய மக்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களையும் பிரெஞ்சுக் காலனி ஆதிக்கவாதிகளையும் எதிர்த்துப் பல ஆண்டுகள் போராடினர்கள். நாட்டின் வட பகுதியில் இந்தப் போராட்டம் வெற்றி அடைந்தது. வியத்நாமிய ஜனநாயகக் குடியரசு தோன்றியது.

சோவியத் யூனியன் ஆசியாவில் மக்கள்-ஜனநாயகக் குடியரசுகளின் உரிமைகளை உறுதியுடன் காத்தது. அவை தோன்றிய நாள் முதலே அவற்றுக்குப் பல வகைகளில் பெருத்த உதவிகள் செய்தது.

ஐம்பதுக்களின் தொடக்கத்துக்குள் பதினெரு அரசுகள் முதலாளித்துவத்திலிருந்து விலகி விட்டன. அவையாவன: அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வியத்நாமிய ஜனநாயகக் குடியரசு, சீனா, கொரிய மக்கள்-ஜனநாயகக் குடியரசு, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லாவியா. சோவியத் யூனியனுடனும் மங்கோலிய மக்கள்-குடியரசுடனும் சேர்ந்து இவை **சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பாக** உருவாயின. இந்த

அமைப்பு உலக நிலப்பரப்பில் நான்கில் ஒரு பாகமும் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பாகத்துக்கு மேலும் கொண்டிருந்தது. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் மகவு. தொழிலாளர், தேசீய விடுதலை இயக்கங்களின் அரணாக விளங்குகிறது இது.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவானதும் சோஷலிஸ நாடுகளின் நட்புறவு ஒழுங்குபடலாயிற்று. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோஷலிஸப் பாதையை மேற்கொண்ட நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளும் சேர்ந்து புதிய, சோஷலிஸ வகைப்பட்ட சர்வதேச உறவு முறைகளை வகுத்தன. எல்லா சோஷலிஸ நாடுகளும் மக்கள் இனங்களுக்கிடையே உறவுகள் நிலவுவதற்குரிய பொதுக் கோட்பாடுகளை ஆழ்ந்த முறையில் உறுதிப்படுத்தின. முழு சமத்துவம், பரஸ்பர உள் விவகாரங்களில் தலையிடாமை, பிரதேச முழுமைக்குப் பரஸ்பர மரியாதை ஆகியவை இந்தக் கோட்பாடுகள். சோஷலிஸ நாடுகளின் எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் ஒரே மார்க்ஸீய-லெனினீயக் கொள்கைவாதமே உள்ளது. இந்நாடுகளின் மக்களின் பொதுக் குறிக்கோள் சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நிறுவுவது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களின் தாக்குதலிலிருந்து புரட்சியின் வெற்றிகளைக் காப்பதில், அவை எல்லாம் ஒரே மாதிரி அக்கறை கொண்டிருக்கின்றன. இந்த எல்லாக் காரணங்களாலும் சோஷலிஸ நாடுகளுக்கிடையே சோதர ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் நிலவுவது சாத்தியம் ஆயிற்று. சோஷலிஸ சர்வதேசீயக் கோட்பாட்டின் அடிப்படையில் அவை ஒன்றுக்கு ஒன்று உளமார்ந்த ஆதரவு அளித்து வருகின்றன.

பாட்டாளி வர்க்க சர்வதேசீயத்தின் பால் பற்றுறுதி கொண்டிருந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சியும் சோவியத் மக்களும் சோஷலிஸ நாடுகளின் மக்களுடன் சர்வதேச உறவுகளை நெருங்கிய நட்பு, சோதர ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைத்தனர். சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷிவிக்) கட்சி சோஷலிஸக் கட்டுமானத்தில் தான் பெற்ற அனுபவத்தைச் சோதரக் கட்சிகளுடன் பகிர்ந்து கொண்டது. சோவியத் கம்யூனிஸ்ட்

(போல்ஷிவிக்) கட்சியின் கட்சி வேலை நடைமுறையைத் தெரிந்து கொள்ளவும் சோஷலிஸத்தைக் கட்டி அமைப்பதில் அதன் அனுபவத்தைக் கற்கவும் எல்லா மக்கள்-ஜனநாயக நாடுகளிலுமிருந்து கட்சிப் பிரதிநிதிக் குழுக்கள் சோவியத் யூனியனுக்கு வந்தன.

சோவியத் யூனியன் சோதர நாடுகளுக்குப் பெருத்த பொருளாதார உதவி அளித்தது: கடன்கள் வழங்கியது, நிபுணர்களை அனுப்பியது, தொழில் நிலையங்கள் நிறுவவும் அவற்றை நடத்துவதில் தேர்ச்சி பெறவும் உதவிற்று. சோவியத் யூனியனுக்கும் மக்கள்-ஜனநாயக நாடுகளுக்கும் இடையே பொருளாதாரத் தொடர்புகள் தொடக்கத்தில் முதன்மையாக வியாபாரத்தின் வாயிலாகவே ஏற்பட்டன. பொருளாதார ஒத்துழைப்பு இன்னும் விரிவான அளவுகளை மேற்கொண்டதும், சோவியத் யூனியனும் ஐரோப்பாவின் மக்கள்-ஜனநாயக நாடுகளும் பரஸ்பரப் பொருளாதார உதவிக் கழகத்தை 1949ல் அமைத்தன. ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளின் இந்த ஐக்கிய அலுவலகம் அவற்றின் பொருளாதார வாழ்க்கையை ஒருங்கிசைக்கலாயிற்று.

பாசிஸத்தின் மீது சோவியத் மக்கள் பெற்ற வெற்றி முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தைச் செயலுக்கு ஊக்கியது. யுத்தத்துக்கு முன் கம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டிருந்த பல நாடுகளில் இப்போது அவை வெளிப்படையாக (சட்ட-பூர்வமாக) வேலை செய்யத் தொடங்கின. முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை 1946ல் ஐம்பது லட்சத்தை எட்டியது. அனேக நாடுகளின் தொழிலாளி வர்க்கம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் முக்கியமான ஜனநாயக, சமுதாய வெற்றிகள் பெற்றது. உலகத் தொழிற்சங்க இயக்கம் விரிவடைந்து வலிவாக ஒன்றுபட்டது. தொழிற்சங்கங்களின் அனைத்துலக சம்மேளனம் தோன்றியது. ஆனால் யுத்தம் முடிந்த சிறிது காலத்திற்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன் ஆகியவற்றின் வலதுசாரித் தொழிற்சங்கத் தலைவர்கள் இதில் பிளவு ஏற்படுத்தி விட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புப் போக்குக்கு எதிராக எல்லா முற்போக்குச் சக்திகளையும் உறுதியாக ஒன்றுபடுத்தின,

சமாதானம், ஜனநாயகம், தேசீய விடுதலை, சோஷலிஸம் ஆகியவற்றிற்கான போராட்டத்தில் முன்னணியில் சென்றன.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகள் சோவியத் யூனியனால் முறியடிக்கப்பட்டது, தேசீய விடுதலை இயக்கத்துக்கு வலிவான தூண்டுதல் அளித்து உந்தியது. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவானது ஏகாதிபத்தியத்தின் காலனியாட்சி முறை தகர்ந்து சிதறுவதற்கு அடி கோலியது. சீனா, வடக்குக் கொரியா, வடக்கு வியத்நாம் ஆகியவற்றின் மக்கள் தவிர, இந்தியா, பர்மா, இந்தோனேசியா, இலங்கை முதலிய நாடுகளின் மக்களும் தேசீய விடுதலை பெற்றார்கள். தேசீய விடுதலைப் போராட்டம் ஆப்பிரிக்க நாடுகளில் விரிவாகப் பரவியது. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பும், ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் சமூகத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதற்கு ஆதரவாகவும் போராடிய சக்திகளுமே வரலாற்று வளர்ச்சியின் பிரதான உள்ளடக்கத்தையும் திசையையும் நிர்ணயிக்கலாயின. சோஷலிஸ அமைப்பு, முதலாளித்துவ அமைப்பு என்னும் இரண்டு உலக சமுதாய-அரசியல் அமைப்புக்களுக்கிடையே நிலவிய முரண்பாடே நவீன யுகத்தின் பிரதான முரண்பாடு ஆயிற்று.

சோஷலிஸத்தின் வெற்றி வலத்தை நிறுத்தவும் சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானத்துக்கு இடர்கள் விளைக்கவும் மக்கள் ஜனநாயக நாடுகள் சோஷலிஸ மாற்றங்களைச் செயல்படுத்த விடாமல் குறுக்கிடவும் அவற்றை முதலாளித்துவ முகாமுக்குத் திரும்பும்படி செய்யவும் தொழிலாளர் இயக்கத்தையும் தேசீய விடுதலை இயக்கத்தையும் பலவீனப்படுத்தவும் தங்கள் சக்திகள் எல்லாவற்றையும் ஈடுபடுத்தினார்கள் ஏகாதிபத்தியவாதிகள்.

ஆனால் சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பின் ஆற்றலும் சர்வதேசச் செல்வாக்கும் நாளுக்கு நாள் வளர்வதைத் தடுக்க ஏகாதிபத்தியத்தால் முடியவில்லை. சோஷலிஸ அமைப்பு மனித சமூக வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணி ஆயிற்று.

1945ம் ஆண்டு மாபெரும் தேசபக்த யுத்தத்தை வெற்றி கரமாக முடித்த பின் சோவியத் மக்கள் அமைதி நிறைந்த ஆக்கப் பணியில் மீண்டும் ஈடுபட்டனர். சோஷலிஸப் பொருளாதாரத்தை மீட்டமைப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் கவனத்தை ஒருமுனைப் படுத்தியது கட்சி.

உழைப்பு முனைமுகத்தில் சோவியத் மக்களின் வீரச் சாதனை

யுத்தம், கம்யூனிஸத்தை நோக்கி சோவியத் யூனியனின் முன்னேற்றத்தை முழுதாகப் பத்து ஆண்டுகளுக்குத் தேக்கி நிறுத்தியது. அதன் விளைவாக எண்ணற்ற தியாகங்களும் பேரிழப்புக்களும் நேர்ந்தன. ஜெர்மன் பாசிஸ்ட் ஆக்கிரமிப் பாளர்கள் 1700க்கு மேல் நகரங்களையும் நகர வகைக் குடியிருப்புக்களையும் வெறும் இடிபாட்டுக் குவியல்களாக மாற்றினர்கள், 70 ஆயிரம் கிராமங்களைத் தீக்கிரை ஆக்கினர் கள், 32 ஆயிரம் தொழில் நிலையங்களையும் 65 ஆயிரம் கிலோ மீட்டர் இருப்புப் பாதைகளையும் அழித்தார்கள், ஒரு லட்சத் துக்கும் அதிகமான கூட்டுப்பண்ணைகளையும் அரசாங்கப் பண்ணைகளையும் இயந்திர-டிராக்டர் நிலையங்களையும் சூறை யாடினர்கள், பதினாயிரக் கணக்கான பள்ளிக்கூடங்களையும் மருத்துவ மனைகளையும் இடித்துத் தகர்த்தார்கள், பத்து லட்சக் கணக்கில் கால்நடைகளைக் கொன்று ஒழித்தார்கள். இரண்டரைக் கோடி மக்கள் வீடு வாசல்களை இழந்தார்கள். நகரங்களில் இடிந்த வீடுகளின் நிலவறைகளிலும் கிராமங் களில் மண்குடில்களிலும் இடம் பிடித்துக் கொண்டு வசித் தார்கள் மக்கள். சோவியத் யூனியனுக்கு நேர்ந்தது போன்ற பயங்கர நாசம், வேறு எந்த நாட்டுக்கும் யுத்த காலத்தில் ஒருபோதும் நேர்ந்ததில்லை.

இவ்வளவு பரந்த அளவில் சேதங்கள் அடைந்த எந்த முதலாளித்துவ நாடும் நீண்ட காலம் வெகு தூரம் பின்னே சென்றிருக்கும். அதிக வலிமையுள்ள வல்லரசுகளுக்குத் தவிர்க்க முடியாதவாறு அடிப்பட்டிருக்கும். சோவியத் யூனி யனால் யுத்தக் காயங்களை விரைவில்ஆற்றிக்கொள்ள முடியாது, யுத்தத்துக்கு முந்திய உற்பத்தித் தரத்தை எட்ட அதற்குப் பல பத்தாண்டுகள் தேவைப்படும் என்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் எண்ணினர்கள். அமெரிக்க

ஐக்கிய நாடுகளின் பொருளாதாரம் யுத்தத்தால் சேதப்பட வில்லை ஆதலால், இந்தக் காலத்துக்குள் அது தனது பொருளா தார, இராணுவ விறலை வெகுவாக வளர்த்துக் கொள்ளும் என்று அவர்கள் கணக்கிட்டார்கள். இதனால் தங்கள் சித்தத்தைப் பிறர் மீது சுமத்தவும் அணுகுண்டால் உலகை அச்சுறுத்தவும் உலகின்மீது தங்கள் ஆதிபத்தியத்தை நிலை நாட்டவும் உலக மக்களை அடிமைத் தளைகளில் பிணிக்கவும் தங்களுக்கு வாய்க்கும் என அவர்கள் மனக்கோட்டை கட்டி னர்கள். மக்கள்-ஜனநாயக நாடுகளை முதலாளித்துவ முகா முக்குத் திரும்ப வைப்பதும் தொழிலாளர் இயக்கத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தையும் நசுக்குவதும் தங்களுக்கு இயலும் என அவர்கள் நம்பினர்கள்.

ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்களும் யுத்தக் காயங்களை ஆற்றிக்கொள்ளவும் ஏகாதிபத்தியவாதிகள் புதிய ஆக்கிரமிப்பு தொடங்கினால் சமாளிப்பதற்கு வேண் டிய அளவு தங்கள் படை பலத்தை உயர்ந்த தரத்தில் வைத்திருக்கவும் திறன் பெற்றிருந்தார்கள். இவ்வளவோடு நிற்காமல் அவர்கள் மக்கள்-ஜனநாயக நாடுகளுக்குக் கணிசமான உதவி அளித்தார்கள், தொழிலாளர் இயக்கத்துக் கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் ஆதரவு நல்கினர்கள்.

யுத்தத்தின் போதே தொடங்கப்பட்ட தேசியப் பொரு ளாதாரச் சீரமைப்பு இப்போது பிரதானப் பணி ஆயிற்று. கட்சி மத்தியக் கமிட்டியின் உத்தரவுப்படி 1946-1950 ஆண்டுகளுக்குரிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் யுத்தக் காயங்களை ஆற்று வதுடன் நில்லாமல், யுத்தத்துக்கு முந்திய உற்பத்தித் தரத்தை விஞ்சுவதும், நாட்டை யுத்தத்துக்கு முன் இருந்ததைக் காட் டிலும் செல்வ வளம் மிக்கது ஆக்குவதும் குறிக்கோளாகக் கொள்ளப்பட்டன.

எவ்வாறு யுத்த ஆரம்பத்தில் போர்க்காலத் தேவைக ளுக்கு ஏற்ப எல்லாவற்றையும் மாற்றி அமைக்கக் கட்சி வல்ல தாய் இருந்ததோ, அவ்வாறே இப்போது அமைதி நிறைந்த வேலைக்கு விரைவில் மாறுவதற்கும் உதாரணத்தை அது காட்டியது. கட்சி நிர்ணயகரமான உற்பத்தித் துறைக ளுக்குக் கம்யூனிஸ்டுகளை அனுப்பி வைத்தது. போர் முனை

வீர நகர்கள் மீட்டமைக்கப்பட்டன



ஹிட்லர் படையினரால் அழிக்கப்பட்ட ஸ்தாலின்கிராத்
1943ல் விடுவிக்கப்பட்ட பின் இவ்வாறு காட்சி அளித்தது

மீட்டமைக்கப்பட்ட பின் வோல்காகிராத் (முன்னுள் ஸ்தாலின்கிராத்)
நகர வீதிகள் இவ்வாறு காட்சி தந்தன

லெனின்கிராத் 1942ம் ஆண்டு முற்றுகையின் போது

இளைத்துச் சோர்ந்த மக்கள் நீர்க் குழாய் அருகே

அதே இடத்தில் 1964ம் ஆண்டில்

கீவ் நகர், 1943ம் ஆண்டு நவம்பர் மாதத்தில்

செஞ்சேனை வீதியில் ஜெர்மன் ஆக்கிரமிப்பாளர்களால் எரிக்கவும் தகர்க்கவும் பட்ட கட்டிடங்கள்

கீவ், செஞ்சேனை வீதி, 1959ம் ஆண்டு

மீன்ஸ்க், 1944ம் ஆண்டு

சோவியத்ஸ்கயா வீதி

மீன்ஸ்க் நகரின் அதே வீதி (தற்போது லெனின்ஸ்கி நெடுஞ் சாலை) 1964ம் ஆண்டில்

யிலிருந்து திரும்பிய கம்யூனிஸ்ட் படை வீரர்கள் கட்டுமானத் தொழிலாளிகளாகவும் எஃகு தயாரிப்பவர்களாகவும் பொருத்தி அமைக்கும் தொழிலாளர்களாகவும் மின்சாரத் தொழிலர்களாகவும் கொல்லர்களாகவும் சுரங்கத் தொழிலாளர்களாகவும் டிராக்டர் ஓட்டிகளாகவும் அறுவடை இயந்திரம் ஓட்டிகளாகவும் கால்நடை வளர்ப்பாளர்களாகவும் வேளாண்மை செய்பவர்களாகவும் பள்ளி ஆசிரியர்களாகவும் விவசாய நிபுணர்களாகவும் மீண்டும் வேலை செய்யத் தொடங்கினர்கள். மிக நிறைய மீட்டமைக்கவும் புதிதாகக் கட்டவும் வேண்டி இருந்தன. கட்டுமானத் தொழில் பெருந்திரளானவர்களின் தொழில் ஆயிற்று. ஆனால் நகரங்களை விரைவாக மீட்டமைப்பதற்குக் கட்டுமானத் தொழிலாளர்கள் மட்டுமே போதவில்லை. இடிபாடுகளை அகற்றித் துப்புரவு செய்வதிலும் இருப்பிட வீடுகளை மீண்டும் கட்டுவதிலும் பங்கு கொள்ளுமாறு கட்சி ஸ்தாபனங்கள் நகர வாசிகளை அழைத்தன. தங்கள் சொந்த நகரங்களை மீட்டமைக்கும் பணியில் வாரந் தோறும் சில மணி நேரம் உழைப்பது தன் கடமை என்று ஒவ்வொரு தொழிலாளியும் அலுவலக ஊழியரும் மாணவரும் இல்லக் கிழத்தியும் எண்ணினர்கள்.

பாசிஸ்டுகளால் அழிக்கப்பட்ட தொழிற்சாலைகளை மீட்டமைப்பதில் கட்சியும் தொழிலாளி வர்க்கமும் மிகப் பெருத்த இடர்களைக் கடக்க வேண்டியிருந்தது. உதாரணமாக, தொனேத்ஸ்க் நிலக்கரிப் பிரதேசத்தில் எல்லாச் சுரங்கங்களையும் பகைவர்கள் நீரில் மூழ்கடித்திருந்தார்கள். இந்த நிலக்கரிப் பிரதேசத்தை மீட்டமைப்பதற்குச் சுரங்கத் தொழிலாளர்கள் சுரங்கங்களில் நிறைந்திருந்த நீரை இறைத்து வெளியேற்ற வேண்டி வந்தது. இவ்வாறு இறைக்கப்பட்ட நீரை ஓரிடத்தில் தேக்கினால் 10 கிலோமீட்டர் நீளமும் 7 கிலோமீட்டர் அகலமும் 10 கிலோமீட்டர் ஆழமும் உள்ள ஏரி உருவாகியிருக்கும். அவ்வளவு நீர் சுரங்கங்களில் நிறைந்திருந்தது. சுரங்கத் தொழிலாளர்கள் இந்த நீரை இறைத்து வெளியேற்றியதுடன், 2500 கிலோமீட்டர் குடை வழிகளில் சுரங்கச் சரிவுகளை அகற்றிச் செப்பம் செய்தார்கள். பூமத்திய ரேகையை ஒட்டி ஆப்பிரிக்கா முழுவதன் வழியாகவும் சுருங்கை குடைவதற்கு ஒப்பானது இந்த வேலை.

மக்களது பிரயாசைகளின் பயனுகவும் கட்சியின் ஒழுங் கமைப்பு வேலையின் விளைவாகவும் நாட்டின் பொருளாதாரத் தை அமைதிக் காலத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்கும் பணி 1946லேயே அடிப்படையில் நிறைவேற்றப்பட்டு விட்டது. இயந்திர சாதனங்களை மேலும் சிறந்த முறையில் கையாளும் படியும் வேலையை விரைவாக நடத்தும் முறைகளை மேற் கொள்ளும்படியும் கட்சி தொழிலாளர்களைக் கேட்டுக்கொண் டது. இயந்திரப் பகுதிகளைத் தயாரிப்பதையும் உலோகங் களை உருக்குவதையும் பெட்ரோலிய ஊற்றுக்கள் குடை வதையும் நிலக்கரி தோண்டி எடுப்பதையும் விரைவுபடுத்து வதற்கு ஆயிரக் கணக்கில் உபயோகமான யோசனைகளைத் தொழிலாளர்கள் முன் வைத்தார்கள். வேலையை விரைவாக நடத்தும் முறைகளின் பயனுக தயாரிப்புப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்தது, நாட்டுக்கு எவ்வளவோ பொருட் செலவு மிச்சப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்த கெடுவுக்குள் நிறைவேற்றுவதற்கு சோஷலிஸப் போட்டி சோவியத் யூனியன் அனைத்திலும் வரிவாகத் தொடங்கியது. அனேகமாக எல்லாத் தொழிலாளர்களும் இதில் பங்கு கொண்டார்கள். கம்யூனிஸ்டுகள் முன்னணியில் சென்றார்கள். சோவியத் தொழிலாளர்களின் நாட்டுப் பற்றும் கூட்டுத்துவ மும் யுத்தத்துக்குப் பிறகு சோஷலிஸப் போட்டியில் புதிய ஆற்றலுடன் வெளிப்பட்டன. தங்கள் நாடு விரைவில் சீரமைக்கப்பட்டு, கம்யூனிஸத்தை நோக்கி விரைவாக முன்னே செல்வதைக் காண அவர்கள் விழைந்தார்கள்.

யுத்தம் முடிந்த மூன்று ஆண்டுகளில் சோவியத் யூனியன் தொழில் பொருள்களின் உற்பத்தியில் யுத்தத்துக்கு முந்திய தரத்தை எட்டியதோடு நில்லாமல் அதை விஞ்சியும் விட்டது. 1950 லோ, தொழில் துறையின் மொத்த உற்பத்தி யுத்தத் துக்கு முந்திய தரத்தை விட முக்கால் பங்கு அதிகமாகி விட்டது. யுத்தத்துக்குப் பிந்திய முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆறுயிரத்துக்கும் மேல் பெரிய தொழில் நிலையங் கள் மீட்டமைக்கவும் புதிதாகக் கட்டவும் பட்டன. **சோவியத் தொழிலாளி வர்க்கம் ஆற்றிய வீரம் நிறைந்த அருஞ் செயல் ஆகும் இது.**

விவசாயத்தைச் சீரமைப்பதில் கட்சிக்குப் பெருத்த இடர்கள் எதிர்ப்பட்டன. பகைவரிடமிருந்து விடுவிக்கப்பட்ட இடங்களில் கூட்டுப் பண்ணைகளிடமும் அரசாங்கப் பண்ணைகளிடமும் இயந்திரங்கள் அனேகமாக இல்லை. பகைவர்கள் வசப்படாத பிரதேசங்களிலோ, டிராக்டர்களும் வேளாண்மை இயந்திரங்களும் தேய்ந்து போய்விட்டன. கூட்டுப் பண்ணைகளைத் தலைமை ஏற்று நடத்த முன்னுள் படைவீரர்கள் பலர் வந்தார்கள். இவர்கள் ஊக்கம் மிக்கவர்கள், ஆனால் அனுபவம் குறைந்தவர்கள். நாட்டுப்புறத்தில் உழைப்பாளிகள் போதவில்லை. முன்னுள் படைவீரர்கள் பலரும் ஏராளமான நாட்டுப்புற இளைஞர்களும் தொழிற்சாலைகளை விரைவாக மீட்டமைக்கும் பொருட்டு நகரங்களில் வேலை செய்ய அழைக்கப்பட்டிருந்தார்கள்.

யுத்தம் விவசாயத்துக்கு மிகப் பெருத்த சேதம் விளைத்தது. நாட்டில் பயிர் நிலம் கால் பகுதி குறைந்து விட்டது, தானிய விளைச்சல் பாதி ஆகி விட்டது. மாடுகளின் எண்ணிக்கை எழுபது லட்சம் குறைந்து விட்டது. பன்றிகளின் எண்ணிக்கை இரண்டரை மடங்கு குறுகிவிட்டது. செம்மறிகள் மூன்றில் ஒரு பங்கு குறைந்து விட்டன. தானிய விளைச்சலும் கால் நடைகளின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டதால் மக்களுக்கு உணவுப் பண்டங்கள் வழங்குவது மிகக் கடினம் ஆயிற்று.

விவசாயத்துக்கு டிராக்டர்களும் விதைப்பு இயந்திரங்களும் அறுவடை இயந்திரங்களும் வழங்குவதிலிருந்தே விவசாயத்தை மீட்டமைக்கும் வேலையைத் தொடங்க வேண்டும் என்று கட்சி முடிவு செய்தது. அப்போதுதான் யுத்தத்துக்கு முன்பு இருந்ததைவிடக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆட்களைக் கொண்டு யுத்தத்துக்கு முந்திய அளவு பயிர் நிலத்தில் வேளாண்மை செய்வதும் அதிக தானியம் விளைப்பதும் கால் நடைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் விரைவில் சாத்தியம் ஆகும். யுத்த காலத்தில் டாங்கிகள் உற்பத்தி செய்து வந்த டிராக்டர் தொழிற்சாலைகள் மீண்டும் டிராக்டர்கள் தயாரிக்கலாயின. பல புதிய, பெரிய டிராக்டர் தொழிற்சாலைகளும் விவசாய இயந்திரங்களும் கருவிகளும் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் கட்டப்பட்டன. 1949ம் ஆண்டில்

யுத்தத்துக்கு முந்திய 1940ம் ஆண்டைக் காட்டிலும் இரண்டரை மடங்கு அதிக டிராக்டர்களும் நான்கு மடங்கு அதிகமாகப் பிற இயந்திரங்களும் விவசாயத்துக்குக் கிடைத்தன.

வேளாண்மையில் டிராக்டர்கள் யுத்தத்துக்கு முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் இருந்தன. ஆயினும் சிறு கூட்டுப் பண்ணைகள் பரப்பில் பெரியவை அல்லாத தங்கள் வயல்களில் டிராக்டர்களையும் சிக்கலான இயந்திரங்களையும் முழு அளவில் பயன்படுத்த முடியவில்லை. அப்போது கூட்டுப் பண்ணைகளைப் பெரியவே ஆக்கும் இயக்கம் கூட்டுப் பண்ணையினரிடையே தொடங்கியது. கட்சி இந்த இயக்கத்துக்கு ஆதரவு அளித்தது. நான்கு, ஐந்து சிறு கூட்டுப் பண்ணைகள் ஒன்றுசேர்ந்தன. இவ்வாறு, சராசரி இரண்டு, மூன்று ஆயிரம் ஹெக்டார் அல்லது இன்னும் அதிகப் பயிர்நிலப் பரப்பு கொண்ட பெரிய கூட்டுப் பண்ணைகள் உருவாயின.

யுத்தத்துக்குச் சற்று முன்பே சோவியத் யூனியனில் சேர்ந்த பிரதேசங்களில் கூட்டுப் பண்ணைகள் அமைப்பதில் விவசாயிகளுக்குக் கட்சி உதவியது. உக்ரேன், பேலோருஷ்யா ஆகியவற்றின் மேற்கு மாவட்டங்களிலும் இளம் சோவியத் குடியரசுகளான லாட்வியா, லித்துவானியா, எஸ்தோனியா ஆகியவற்றிலும் மல்தாவியாவின் மேற்குப் பிரதேசங்களிலும் கூட்டுப் பண்ணை அமைப்பு ஐம்பதுக்களின் தொடக்கத்தில் வெற்றி பெற்றது. இங்கும் பத்து லட்சக் கணக்கான விவசாயிகள் சோஷலிஸ வழியை மேற்கொண்டார்கள்.

கூட்டுப் பண்ணைத் தலைவர்கள், வேளாண்மை நிபுணர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் முதலிய கூட்டுப் பண்ணை உற்பத்தி ஒழுங்கமைப்பாளர்களைப் பயிற்றுவதில் கட்சி கவனம் செலுத்தியது. இயந்திர-டிராக்டர் நிலையங்களில் இயந்திரம் ஓட்டுபவர்களைப் பயிற்றும் பள்ளிகளும் வகுப்புக்களும் நடந்த வண்ணமாய் இருந்தன. விவசாய நிபுணர்களும் கால்நடை வளர்ப்பு நிபுணர்களும் சிறந்த முறையில் வேளாண்மை செய்யவும் கால்நடைகளைப் பேணி வளர்க்கவும் கூட்டுப் பண்ணையினருக்குக் கற்பித்தார்கள்.

1950ல் சோவியத் யூனியனின் விவசாயம் யுத்தத்துக்கு முந்திய தரத்தை நெருங்கியது. பயிர்நிலப் பரப்பும் கால்

நடைகளின் எண்ணிக்கையும் பெரும்பாலும் முந்திய அளவுக்கு வந்துவிட்டன. நகரவாசிகள் அதிக உணவுப் பண்டங்களும் தொழிற்சாலைகள் அதிகக் கச்சாப்பொருள்களும் பெறத் தொடங்கினர்கள். மக்களின் உபயோகத்துக்கான சரக்குகளின் உற்பத்தி அதிகரித்தது. இவற்றின் விளைவாக, 1947ல் நகரவாசிகளுக்குச் சீட்டுக்களின் படி உணவுப் பண்டங்கள் வழங்கும் யுத்தகால வழக்கத்திற்குப் பதில் அரசாங்க, கூட்டுறவுக் கடைகளில் அவை தாராளமாக விற்கப்படும் வழக்கம் அமுலாக்கப்பட்டது. சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரம் யுத்தத்துக்கு முந்திய மட்டத்தை அணுகியது.

பாசிஸ்டுகளால் அழிக்கப்பட்ட இருப்பிட வீடுகளைத் திரும்பக் கட்டுவதும் புதிய வீடுகளை நிறுவுவதும் நகரங்களிலும் கிராமங்களிலும் பெரும் அளவில் நடை பெற்றன. 1946—1950 ஆண்டுகளில் நகரங்களில் நாற்பது லட்சத்துக்கும் மேல் இருப்பிடப் பகுதிகளும் நாட்டுப்புறத்தில் இருபத்தேழு லட்சம் இருப்பிட வீடுகளும் கட்டப்பட்டன. ஆயினும் இருப்பிட வீடுகளின் தேவை இன்னமும் கடுமையாக இருந்தது. தொழிற்சாலைகளைக் கூடிய விரைவில் மீட்டமைப்பதில் ஈடுபட்டிருந்த சோவியத் அரசால் இருப்பிட வீடுகளை அதே சமயத்தில் இன்னும் விரைவாகக் கட்ட முடியவில்லை.

யுத்தத்துக்குப் பிறகு சோவியத் யூனியனில் நகரவாசிகளின் எண்ணிக்கை விரைவாக வளர்ந்தது. தொழில்துறையின் தீவிர வளர்ச்சியே இதற்குக் காரணம். நாட்டுப்புற மக்கள் நகரங்களுக்கு வெள்ளமாய்ப் பெருகி வந்தார்கள். ஆனால் மக்கள் பெருக்கு கிராமங்களிலிருந்து வடிந்ததற்குக் காரணம் தொழில்துறையின் தேவைகள் மட்டுமே அல்ல. கூட்டுப்பண்ணைகளால் நிலையான வருவாய்க்கு வகை செய்ய முடியாமையாலும் நகரங்களில் அதற்கு வாய்ப்பு இருந்தமையாலுமே பலர் கிராமங்களிலிருந்து வெளியேறினர்கள். யுத்தத்தின் விளைவுகள் கிராமங்களைப் பாதித்தன. பல கூட்டுப் பண்ணைகளின் வருமானம் குறைவாய் இருந்தது, பண்ணைகளின் பொருளாதாரத் தேவைகளுக்கே இது அனேகமாக முழுவதும் செலவாயிற்று. இத்தகைய கூட்டுப் பண்ணைகளில் வேலைநாட்களுக்கு ஏற்பக் கூட்டுப் பண்ணையினருக்குப் பகிர்ந்து அளிப்பதற்கு அனேகமாக ஒன்றுமே மிஞ்சவில்லை.

பொதுப் பண்ணையின் வளர்ச்சியில் கூட்டுப் பண்ணையினரின் அக்கறை குறைந்தது. அவர்கள் வேறு இடங்களில், நகரங்களில் வருவாய் தேட முயன்றார்கள்.

கூட்டுப் பண்ணை வாழ்க்கையில் ஏற்பட்ட இந்தக் குறைபாட்டை வட்டாரக் கட்சி ஸ்தாபனங்கள் கண்டு கூட்டுப் பண்ணைப் பொருளாதாரத்தை மீட்டமைப்பதில் உதவின. ஆனால் விவசாயத்தை விரைவில் முந்திய நிலைக்குக் கொண்டு வரவும் மேற்கொண்டு அபிவிருத்தி செய்யவும் சோவியத் அரசின் தரப்பில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாய் இருந்தது.

யுத்தத்துக்குப் பிறகு கட்சியின் நிலை

யுத்தத்திலிருந்து கட்சி முன்னிலும் உரமும் வலிமையும் பெற்று வெளி வந்தது. போர்முனைகளில் பேரளவான உயிர்ச் சேதம் ஏற்பட்டதாயினும் அதன் உறுப்பினர் தொகை அனேகமாக இரு மடங்கு ஆயிற்று. யுத்த முடிவில் ஏறக்குறைய அறுபது லட்சம் பெயர் அதன் உறுப்பினராக இருந்தார்கள்.

சேனையிலிருந்து விலகிய கம்யூனிஸ்டுகள் தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் அமைதிக்கால உழைப்புக்குத் திரும்பினர்கள். கட்சி ஸ்தாபனங்கள் உடனேயே எண்ணிக்கையில் பெருகின. நாட்டுப்புறத்தில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை சிறப்பாக அதிகரித்தது. யுத்தத்துக்கு முன்பு பல கூட்டுப் பண்ணைகளில் கட்சி ஸ்தாபனங்கள் இருக்கவில்லை. யுத்தத்துக்குப் பிறகு விவசாயத்தில் சுமார் பதினைந்து லட்சம் கம்யூனிஸ்டுகள் வேலை செய்தார்கள். இப்போது ஐந்தில் நான்கு கூட்டுப் பண்ணைகளில் கட்சி ஸ்தாபனங்கள் இயங்கின.

யுத்தத்துக்குப் பிந்திய ஆரம்ப ஆண்டுகளில் கட்சி தனது அணிகளின் வளர்ச்சியை வரையறை செய்து வைத்திருந்தது. இளம் கம்யூனிஸ்டுகளின் கொள்கைவாத-சித்தாந்த அறிவுத் தரத்தை உயர்த்துவதிலேயே அது முதன்மையாகக் கவனம் செலுத்தியது. யுத்த நிலைமைகளில் தங்கள் அரசியல் அறிவை முழு அளவில் விருத்தி செய்து கொள்ள இவர்களுக்கு இயலவில்லை. இப்போது அதற்கு வாய்ப்பு கிடைத்தது. கட்சி மத்தியக் கமிட்டி குடியரசுகளிலும் பிரதேசங்களிலும்

மாவட்டங்களிலும் கட்சி ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் கட்சிப் பள்ளிகளை அமைத்தது. இவற்றின் மாணவர்களில் பெரும்பாலோர் போர் முனையிலிருந்து திரும்பிய கம்யூனிஸ்டுகள். மார்க்ஸிய-லெனினிய சித்தாந்தத்தையும் கட்சியின் வரலாற்று அனுபவத்தையும் அரசியல் பொருளாதாரத்தையும் தத்துவத்தையும் கட்சி வேலை நடைமுறையையும் அவர்கள் கற்றுர்கள். அறுபது லட்சம் கம்யூனிஸ்டுகள் அனைவரும் தங்கள் சித்தாந்த, அரசியல் தரத்தை உயர்த்திக் கொண்டார்கள்.

யுத்த காலத்தில் உட்கட்சி ஜனநாயகம் ஓரளவு வரையறை செய்யப்பட்டது. உதாரணமாக, கட்சி மத்தியக் கமிட்டி பெரிய தொழிற்சாலைகளில் கட்சி அமைப்பாளர்களை நியமித்தது. இவர்கள் அதே சமயம் கட்சி ஸ்தாபனங்களின் செயலர்களாகவும் இருந்தார்கள். கட்சி விதிகளில் வகை செய்யப்பட்டிருந்தபடி கட்சி மகாநாடுகள் குறித்த கெடுவுக்குள் கூட்டப்பட வேண்டும். இந்த விதிகள் கடைப்பிடிக்கப்படவில்லை. கட்சி உறுப்புக்களின் தலைமை ஊழியர்கள் அடிக்கடி தேர்ந்தெடுக்கப்படாமலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். யுத்தத்துக்குப் பிறகு கட்சி மகாநாடுகள் ஒழுங்காகக் கூட்டப்பட்டன. எல்லாக் கட்சி உறுப்புக்களும் கட்சி விதிகளுக்கு இணங்க உரிய முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் மீண்டும் கடைப்பிடிக்கப்பட்டது.

கட்சி ஸ்தாபனங்கள் தங்கள் வேலை முறைகளை மாற்றி அமைத்துக் கொண்டன. யுத்த காலத்தில் வட்டார உறுப்புக்கள், அரசுத் தற்காப்புக் கமிட்டியின் தீர்மானங்களையும் கட்டளைகளையும் நிறைவேற்றும் பொறுப்பை அடிக்கடி தாமே ஏற்றுக் கொண்டன. நிர்வாகப் பொறுப்புக்களையும் அவை மேற்கொள்ள நேர்ந்தது. இவ்வாறு செய்வது காரியங்கள் நடப்பதற்கு அவசியமாய் இருந்தது, யுத்த கால அவசரப் பணிகளை விரைவாக நிறைவேற்ற வகை செய்தது. போர் முனைக்கு ஆயுதங்களும் தளவாடங்களும் துணைச் சாதனங்களும் இடையருத பெருக்காக அனுப்பப்படுவது தேவைப்பட்டது. யுத்தம் முடிந்த பிறகும் கட்சிக் கமிட்டிகள் நிர்வாகம் நடத்தும் வழக்கத்தை ஓரளவுக்குத் தொடர்ந்தன. அவை தம் இயல்புக்கு ஒவ்வாத காரியங்

களை மேற்கொண்டன, தனிவகையான ஆணை செலுத்தி நிர்வாகம் செய்யும் அலுவலகங்கள் ஆகிவிட்டன. தொழிற் சாலைகள், புதுக் கட்டுமான இடங்கள், அரசாங்கப் பண்ணை கள் ஆகியவற்றின் இயக்குநர்களும் கூட்டுப் பண்ணைத் தலை வர்களும் மிக மிக அற்ப பொருளாதாரப் பிரச்சினைகளைக் கூடத் தீர்ப்பதற்கு அவற்றை அணுகினர். வட்டார சோவியத் துக்களின் பாத்திரம் தாழ்ந்தது. சமாதான கால நிலைமை களில் இது முறையற்றதாக இருந்தது.

மத்தியக் கமிட்டி கட்சி உறுப்புக்களுக்கு இந்தக் குறை களைச் சுட்டிக் காட்டி, கட்சியால் அனுபவத்தில் சோதித்துச் சரிபார்க்கப்பட்ட தலைமையேற்பு முறைகளுக்கு விரைவில் திரும்புமாறும் கட்சி-அரசியல் வேலையையும் நிர்வாக வேலை யையும் திறமையுடன் ஒருங்கிசைக்கும்படியும் கேட்டுக் கொண்டது. கட்சி உறுப்புக்கள், அரசு, பொருளாதார, சமூக ஸ்தாபனங்களை வழிகாட்டி நடத்தும் பணியை இந்த ஸ்தா பனங்களில் வேலை செய்யும் கம்யூனிஸ்டுகளின் வாயிலாக நிறைவேற்ற வேண்டும் என்று விளக்கியது மத்தியக் கமிட்டி. பதினெட்டாவது கட்சிக் காங்கிரஸின் நிர்ணயப்படி, உற் பத்தி இடங்களில் உள்ள கட்சி ஸ்தாபனங்களுக்கு நிர்வாக அலுவலகத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க உரிமை உண்டு. ஆனால் இந்தக் கண்காணிப்பு, நிர்வாகிகளுக்கு அர வணைப்பு அளிப்பதாகவும் அவர்களுடைய பொறுப்பைக் குறைப்பதாகவும் மாறிவிடக் கூடாது. அரசு, பொருளாதார நிர்வாக உறுப்புக்களின் இடத்தைக் கட்சி உறுப்புக்கள் எடுத்துக்கொள்ளும்படி விடுவதோ, கூடவே கூடாது.

தலைமை ஏற்று நடத்தும் முறைகளைச் சீர்படுத்திய அதே சமயத்தில், உழைப்பாளிகளைக் கம்யூனிஸ முறையில் போதித் துப் பயிற்றுவதையும் கட்சி தீவிரப்படுத்தியது. கொள்கை வாத வேலையில் கட்சி எப்போதுமே மிகுந்த கவனம் செலுத்தி வந்தது. ஆனால் யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் இந்த வேலையின் முக்கியத்துவம் அதிகமாகி விட்டது. சோவியத் நாடு சோஷலிஸ தேசீயப் பொருளாதாரத்தை மீட் டமைத்து, கம்யூனிஸத்தை நோக்கி முன்னேறுவதைத் தீவிரப் படுத்தியது. கம்யூனிஸ்டுகள் மட்டுமேஅன்றி, எல்லா சோவியத் மக்களுமே இந்த இறுதிக் குறிக்கோளைத் தெளிவாகப்

புரிந்து கொண்டு அதை நோக்கி முன்னேறுவது அவசியமாய் இருந்தது. கம்யூனிஸத்தை நிறுவுவது தானே நிகழும் செயல் அல்ல. கோடானுகோடி மக்கள் திரளின் ஆக்க பூர்வமான, குறிக்கோளை நோக்கி முன்னேறும் நடவடிக்கைகளின் விளைவாகவே கம்யூனிஸம் நிறுவப்படும். எனவே, சோவியத் மக்களுக்குக் கம்யூனிஸ உலகக் கண்ணோட்டத்தை ஏற்படுத்து வதும் அவர்களுடைய உணர்விலிருந்து கடந்த கால மீத மிச்சங்களையும் காழ்ப்புக்களையும் அகற்றுவதும் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியப் பணிகளில் ஒன்று ஆகும்.

அயல் நாடுகளிலிருந்து பூர்ஷ்வாக் கொள்கைவாதம் வர வர அதிகமாக உள் நுழைவதையும் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. முதலாளித்துவ நாடுகளுடன் சோவியத் யூனியனின் தொடர்புகள் யுத்தத்துக்குப் பிறகு விரிவடைந் தன. வேறு வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசு களின் சமாதான சக வாழ்வுக் கோட்பாடு மேலும் மேலும் அதிக நாடுகளின் ஏற்பைப் பெற்றது. ஆனாலும் ஒன்றுக்கு ஒன்று எதிரான சோஷலிஸக் கொள்கை வாதமும் பூர்ஷ்வாக் கொள்கைவாதமும் சமாதானமாக ஒருங்கு நிலவ முடியாது. முதலாளித்துவ உலகின் ஆளுவோருக்குக் கம்யூனிஸ உலகக் கண்ணோட்டம் ஆத்திரம் ஊட்டுகிறது. அதற்கு எதிர்நிறை யாக எதையும் முன்வைக்க முடியாமையால் அவர்கள் பூர்ஷ்வா வாழ்க்கை முறையைப் பல விதங்களில் விளம்பரப் படுத்துகிறார்கள், அதன் புகழைப் பாடுகிறார்கள், சோஷலிஸத் தைத் தூற்றுகிறார்கள்.

ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கைவாத அழிவு வேலை களைக் கட்சி உறுதியுடன் தடுத்தது, மார்க்ஸீய-லெனினீயத் தின் முற்போக்கான புரட்சிக் கருத்துக்களைப் போதித்து சோவியத் மக்களைப் பயிற்றியது. திரளான பொது மக்களுக்கு அரசியல் கல்வி அளிப்பதற்குப் பத்திரிகைகள், வானொலி, டெலிவிஷன், திரைப்படம், இலக்கியம், கலை முதலியவற்றை அது பயன்படுத்தியது. சமுதாய விஞ்ஞானம், இலக்கியம், கலை ஆகியவற்றில் பணி ஆற்றியவர்கள் பூர்ஷ்வாக் கொள் கைவாதத்தின் வண்டவாளத்தை அம்பலப்படுத்துவதில் கட்சிக்குப் பேருதவி புரிந்தார்கள். சிறப்பாக பூர்ஷ்வாக்களின் நாட்டினக் கொள்கையை, மக்கள் இனங்களுக்கிடையே

பகைமை மூட்டி விடும் போக்கை எதிர்த்துச் சமரசத்துக்கு இடமற்ற போராட்டம் நடத்தி வருகிறது கட்சி. சோவியத் யூனியனின் மக்கள் இனங்களுக்கிடையே நட்பை வலுப் படுத்தி, சோஷலிஸ நாடுகளின் மக்கள் இனங்களுடன் சோதர ஒத்துழைப்பு, ஏகாதிபத்தியத்தையும் காலனி ஆட்சி முறை யையும் எதிர்த்துப் போராடும் எல்லா நாடுகளுடையவும் உழைப்பாளி மக்களுடன் சர்வதேசீய ஒருமைப்பாடு ஆகியவற்றின் உணர்வில் உழைப்பாளிகளைப் போதித்துப் பயிற்றியது அது.

திரளான பொது மக்களிடையே கட்சியின் ஒழுங்கமைப்பு வேலையும் கொள்கைவாத-அரசியல் பணியும் தக்க பலன் அளித்தன. தொழிலாளர்களும் விவசாயிகளும் அறிவுஜீவி களும் உயர்ந்த அரசியல் உணர்வைக் காட்டினர்கள், தன்னலம் இன்றி உழைத்தார்கள். தொழில்துறை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாலேகால் ஆண்டுகளில் நிறை வேற்றிவிட்டது. சோவியத் மக்கள் யுத்தத்தால் தேசீயப் பொரு ளாதாரத்துக்கு ஏற்பட்ட சேதங்களைப் பெருமளவு ஈடுகட்டி, யுத்தகால இன்மைகளைப் போக்கிவிட்டார்கள்.

1952 அக்டோபரில் கட்சியின் பத்தொன்பதாவது காங் கிரஸ் நடைபெற்றது. மாபெரும் தேசபக்த யுத்தத்திலும் தேசீயப் பொருளாதாரத்தை மீட்டமைப்பதிலும் சோவியத் மக்களுடைய வெற்றிகளின் விளைவுகளை அது தொகுத்துரைத் தது, அடுத்துவரும் ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய பணிகளைத் தீர்மானித்தது.

1951-1955 ஆண்டுகளில் சோவியத் யூனியனின் பொரு ளாதார வளர்ச்சிக்கான ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய கட் டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 1955ம் ஆண்டில் தொழில் பொருள்களின் உற்பத்தியை யுத்தத்துக்கு முந்தியதுடன் ஒப்பிடும்போது மும்மடங்குக்கு மேலும் விவசாய விளை பொருள்களின் உற்பத்தியை இரு மடங்கும் அதிகரிப்பதற்கு இவற்றில் வகை செய்யப்பட்டிருந்தது. இயந்திர நிர்மாணத் தொழிலின் வளர்ச்சியையும் மின் ஆற்றல் உற்பத்தி அதிகரிப் பையும் விரைவுபடுத்துவதில் சிறப்பாகக் கவனம் செலுத்தப் பட்டிருந்தது. தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறை களையும் மின்சாரமயம் ஆக்குவதும் இயந்திரமயம் ஆக்கு

வதும் முன்போலவே சோஷலிஸப் பொருளாதார வளர்ச்சியின் அச்சாணியாக விளங்கின. இந்த அடிப்படையின் பேரிலேயே உழைப்பின் உற்பத்தித் திறன் உயர்ந்தது, உழைப்பாளிகளின் வாழ்க்கை வசதிகள் பெருகின. பண்பாட்டுக் கட்டுமானத்துக்குக் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டது.

கட்சியின் பெயரைக் காங்கிரஸ் மாற்றி வைத்தது. அது சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப் படலாயிற்று.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு தோன்றிய பிறகு நடந்த முதலாவது கட்சிக் காங்கிரஸ் பத்தொன்பதாவது காங்கிரஸ்தான். நாற்பத்து நான்கு கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் காங்கிரஸிற்கு வந்திருந்தார்கள். சோஷலிஸ நாடுகளுடைய கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் இவர்களிடையே இருந்தார்கள். இளம் சோஷலிஸ நாடுகளுக்கு சோவியத் யூனியன் அளித்து வரும் பேருதவியை அவர்கள் தங்கள் உரைகளில் குறிப்பிட்டார்கள். சோஷலிஸக் கட்டுமானத்தில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் உள்ள அனுபவத்தைக் கற்பதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தினர்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தொன்பதாவது காங்கிரஸ் கெடுபிடி நிறைந்த சர்வதேசச் சூழ்நிலையில் நடந்தது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் 1950ம் ஆண்டுக் கோடையில் மூட்டி விடப்பட்ட யுத்தம் கொரியாவில் நடந்து கொண்டிருந்தது. இந்தோசீன மக்கள் பிரெஞ்சுக் காலனி ஆதிக்கவாதிகளுக்கு எதிராக வீரப் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். மூன்றாவது உலக யுத்தம் மூளும் அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்தது. சோவியத் யூனியன் லெனினது அமைதிப் பற்று நிறைந்த கொள்கையை மாறுதல் இன்றிக் கடைப்பிடித்து வந்தது. அது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டனம் செய்தது, உலக சமாதானத்தை வலுப்படுத்த முயன்று பாடுபட்டது. காங்கிரஸ், நாட்டின் தற்காப்புத் திறனை வலுப்படுத்துவதன் இன்றியமையாமையையும் சோஷலிஸ நாடுகளின் நட்புறவை உறுதிப்படுத்துவதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டியது, தங்கள்

சமுதாய, தேசீய விடுதலையின் பொருட்டுப் போராடி வரும் மக்கள் இனங்களுக்கு எல்லா வகையிலும் ஆதரவு அளிக்கும் படி வேண்டுகோள் விடுத்தது.

சர்வதேசக் கெடுபிடி நிலையைத் தளர்த்துவதற்கு சோவியத் யூனியனின் முயற்சி

இரண்டாவது உலக யுத்தத்தின் விளைவு ஏகாதிபத்தியவாதிகளுக்குத் திருப்தி அளிக்கவில்லை. சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனது செல்வாக்கு உயர்ந்தது அவர்களுக்குத் திகில் உண்டாக்கியது. ஐரோப்பாவையும் ஆசியாவையும் சேர்ந்த பல நாடுகள் முதலாளித்துவ அமைப்பிலிருந்து விலகி விட்டதை ஏற்றுக் கொண்டு சும்மா இருக்க அவர்கள் விரும்பவில்லை. தொழிலாளர் இயக்கமும் தேசீய விடுதலை இயக்கமும் நாளுக்கு நாள் ஏற்றம் பெற்று வந்தது அவர்களுக்கு ஆழ்ந்த கலவரம் ஊட்டியது.

சோஷலிஸ முகாம், **ஏகாதிபத்திய** முகாம், என்ற இரண்டு பிரதான முகாம்களின் கடும் போராட்டம் யுத்தத்துக்குப் பிந்திய சூழ்நிலையின் சிறப்புத் தன்மையாக இருந்தது. சோவியத் யூனியனும் மக்கள்-ஜனநாயக நாடுகளும் சோஷலிஸ முகாமில் இருந்தன. தேசீய விடுதலை பெற்றுவிட்ட பல இளம் அரசுகள் ஏகாதிபத்தியத்துடன் போராட்டத்தில் இந்த முகாமைச் சேர்ந்திருந்தன. ஏகாதிபத்திய முகாமிற்குத் தலைமை தாங்கின அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் பிரான்ஸும். ஆனால் பிரிட்டனும் பிரான்ஸும் யுத்தத்தின் விளைவாக வலிவிழந்து விட்டன. மாறுக அமெரிக்க ஐக்கிய நாடுகளோ முன்னிலும் அதிக வலிமை பெற்றிருந்தது. அமெரிக்க ஏகபோக நிறுவனங்கள் போர்த் தளவாடங்களின் விற்பனையில் பல நூறு கோடி டாலர்கள் கொள்ளை லாபம் அடித்துக் கொழுத்திருந்தன.

மிகப் பெருத்த பொருளாதார, இராணுவ விறல் பெற்று விட்ட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரங்கள் உலகத்தின்மீது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டலாம் என்று இறுமாப்புடன் மனக்கோட்டை கட்டின. யுத்தத்தின் முடிவு அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ''உலகத் தலைமையை'' இன்றியமையாதது ஆக்கிவிட்டது என்று 1945ம் ஆண்டின் முடிவிலேயே அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அறிவித்தார்.

பொருளாதார ''உதவி'' எனப்பட்டதன் வடிவில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலாளித்துவ நாடுகளை மேலும் மேலும் தனது ஆதிக்கத்துக்கு அடிப்படுத்திற்று. பிரிட்டனும் பிரான்ஸும் கூட அதற்கு அடிப்பட்டுவிட்டன. உலகின் மிக முக்கியமான முதலீட்டு மண்டலத்தையும் கச்சாப் பொருள் ஊற்றுக்களையும் விற்பனைச் சந்தைகளையும் கைப்பற்றிக் கொண்டு அமெரிக்க ஏகபோகத்தினர் மிகப் பெரிய **உலகச் சுரண்டுவோர்** ஆகிவிட்டார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் முதலாளித்துவ உலகின் பிற்போக்குச் சக்திகள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துக் கொண்டு, **பிற்போக்கின் அரணாகவும் உலக அரசியல் போலீஸாகவும்** மாறிவிட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அது ஏகபோக பூர்ஷ்வா வர்க்கத்தையும் சைனியவாதிகளையும் பாசிஸ்ட் கொலைகாரத் தலைவர்களையும் சார்ந்திருந்தது. லத்தீன் அமெரிக்க, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் அதன் பற்றுக்கோடாக விளங்குபவர்கள் இராணுவ சர்வாதிகாரிகளும் முடியரசுவாத, நிலப்பிரபுத்துவ முதல்வர்களும். இந்தப் பிற்போக்குச் சக்திகள் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவுடன் தொழிலாளர் இயக்கத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தையும் நசுக்கின.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பழைய காலனி ஆட்சியாளர்களை நெருக்கித் தள்ளிவிட்டு அவர்களுடைய இடங்களைக் கைப்பற்ற எத்தனித்தார்கள். ஏதேனும் ஒரு நாட்டின் மக்கள் விடுதலைக்காகவும் சமுதாய முன்னேற்றத்தின் பொருட்டும் விரிவான போராட்டம் தொடங்கி, பழைய காலனி ஆட்சியாளர்களும் உள்நாட்டுப் பிற்போக்காளர்களும் புரட்சி இயக்கத்தை ஒடுக்கத் திறன் அற்றவர்களாய் இருந்த சமயங்களில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அவர்களுடைய உதவிக்கு வந்தார்கள். லத்தீன் அமெரிக்காவின் நாடுகளில் சர்வாதிகார அரசாங்கங்களுக்கு ஆதரவு அளித்தவாறு வெகு காலமாகவே இப்படிச் செயல்பட்டு வருகிறது அமெரிக்க ஐக்கிய நாடுகள். யுத்தத்துக்குப் பிறகு ஆசியாவிலும் அது இவ்வாறே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளத் தொடங்கியது. சீனாவில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பிற்போக்குவோமின்தான் குழுவுக்கு எல்லா வகையிலும் உதவினார்கள்.

1949ம் ஆண்டு இந்தக் குழு படு தோல்வி அடைந்ததும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் சீனுவுக்குச் சொந்தமான தைவான் தீவைக் கைப்பற்றிக் கொண்டு தனது கடற்படையின் உதவியால் குவோமின்தான் சேனையின் எஞ்சிய பகுதிகளை அந்தத் தீவுக்கு அனுப்பி வைத்தது. இந்தோசீனத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியத்நாமிய ஜனநாயகக் குடியரசுக்கு எதிராக பிரெஞ்சுக் காலனி ஆட்சியாளர்களின் ஆபாச யுத்தத்துக்கு ஆதரவு அளித்தார்கள். பிரெஞ்சுப்படைகள் தோல்வியுற்று இந்தோசீனத்திலிருந்து வெளியேறியதும் அமெரிக்கர்கள் தெற்கு வியத்நாமில் தளங்கள் அமைத்துக் கொண்டு அதன் பிற்போக்கு அரசாங்கத்தைத் தங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொண்டார்கள். தென் கொரியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் கைக்கூலி ஒருவனது தலைமையில் கைப்பாவை அரசாங்கத்தை அமைத்தார்கள். இது கொரிய மக்களின் சித்தத்துக்கு எதிராகச் செய்யப்பட்டது. கொரிய மக்கள் நாட்டின் வட பகுதியில் மக்கள்-ஜனநாயக அமைப்பை நிலைநாட்டி, கொரிய மக்கள்-ஜனநாயகக் குடியரசை உருவாக்கி இருந்தார்கள். இந்தக் குடியரசு நாட்டின் இரு பகுதிகளையும் அமைதியாக ஒன்றிணைக்க இடைவிடாது முயற்சி செய்து வருகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தை மூட்டிவிட்ட குற்றவாளிகளான ஜெர்மன் பாசிஸ்டுகளையும் ஜப்பானிய சைனிய வாதிகளையும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆளும் வட்டாரத்தினர் மிக விரைவில் மன்னித்து விட்டார்கள்.

சோவியத் யூனியனுடனும் பிற நாடுகளுடனும் சேர்ந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் பாசிஸ்ட் ஜெர்மனியை எதிர்த்துச் சமர் புரிந்தது. யுத்தம் முடிந்ததும் முடியாததுமாக அமெரிக்க ஆளும் வட்டாரத்தார் ஜெர்மன் ஏகபோக நிறுவனங்களுடன் தங்கள் உறவுகளைச் சரிக்கட்டிக் கொள்ளத் தலைப்பட்டார்கள். யுத்த முடிவில் ஜெர்மனியின் நிலப்பரப்பு கைப்பற்றப்பட்டது: அதன் மேற்குப் பகுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் இராணுவ நிர்வாகமும் கிழக்குப் பகுதியில் சோவியத் யூனியனின் இராணுவ நிர்வாகமும் நடந்தன. பாசிஸ எதிர்ப்புக் கூட்டணியில் அங்கம் வகித்த அரசுகள், ஜெர்மனியின் வருங்

கால அமைப்பு பற்றி ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருந்தன. பாசிஸத்தை வேருடன் களைந்து அகற்றுவது, ஜெர்மன் ஏகபோக நிறுவனங்களை ஒழிப்பது, சமூக வாழ்வு அனைத்தையும் ஜனநாயகப்படுத்துவது, ஜெர்மனியின் நான்கு இராணுவ நிர்வாகப் பிரதேசங்களையும் ஒரே ஜனநாயக அரசாக ஒன்றிணைப்பது, அதன் நிலப்பரப்பிலிருந்து கைப்பற்றல் படைகளைத் திரும்ப அழைத்துக் கொள்வது ஆகிய ஏற்பாடுகளுக்கு இந்த ஒப்பந்தங்களில் வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் பிரான்ஸும் இந்த ஒப்பந்தங்களைத் துடுக்காக மீறின. அவை ஜெர்மனியின் மேற்கு இராணுவ நிர்வாகப் பிரதேசங்களை ஜெர்மன் கூட்டுக் குடியரசு என்ற சுதந்திர அரசாக ஒன்றிணைத்தன, முன்னாள் ஹிட்லர் படை ஜெனரல்களின் தலைமையில் சேனை திரட்டி அமைக்க அதற்கு உதவின, ஜெர்மன் ஏகபோக நிறுவனங்களின் முந்திய சக்தியை மீட்க ஒத்தாசை செய்தன. ஜெர்மன் கூட்டுக் குடியரசின் வடிவில் ஐரோப்பாவில் ஜெர்மன் சைனியவாதம், பழிவாங்கல் கொள்கை ஆகியவற்றின் ஆபத்தான மையம் மீண்டும் தோன்றலுற்றது. ஏகாதிபத்தியவாதிகள் ஜெர்மனியைக் கூறு போட்டார்கள், ஒரே ஜனநாயக அரசை அமைப்பதற்கு இடையூறுகள் விளைத்தார்கள். அவர்களுடைய தான்தோன்றிச் செயலுக்கு எதிர்ச் செயலாகக் கிழக்கு ஜெர்மன் தொழிலாளர்களும் விவசாயிகளும் சோவியத் யூனியனதும் சம்பந்தப்பட்ட மற்ற அரசுகளதும் இசைவுடன் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு என்னும் தங்கள் சுதந்திர அரசை 1949ம் ஆண்டு நிறுவினர்கள்.

அமெரிக்க அரசாங்கம் ஜப்பான் விஷயத்திலும் நேச நாடுகளின் வாக்குறுதியை மீறியது. ஜப்பானிய சைனியங்களை முறியடிப்பதில் நிர்ணயகரமான பங்கு ஆற்றிய சோவியத் யூனியனைப் புறக்கணித்துவிட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் பிரான்ஸும் ஜப்பானுடன் தனிப்பட்ட சமாதான உடன்படிக்கை செய்து கொண்டன. இது ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பரஸ்பர லாபகரமான பேரமாக விளங்கியது: அமெரிக்க ஐக்கிய நாடுகள் தன் படைகளை ஜப்பானில் வைத்திருந்தது, அதன் பிரதேசத்தில் தன் இராணுவ தளங்களை அமைக்க உரிமை பெற்றது; ஜப்பானிய

ஏகபோகங்களின் தலைகள் நீங்கிவிட்டன. சைனியவாத சக்திகளை மறுபடி உயிர்த்து எழச் செய்ய அவற்றுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஜப்பானின் உழைப்பாளி மக்கள் இந்த வெட்கக்கேடான உடன்படிக்கையால் சீற்றம் அடைந்து அதை ஒழிப்பதற்கு விரிவான போராட்டம் தொடங்கினர்கள்.

தேசிய விடுதலை இயக்கத்தை எங்கும் நசுக்குவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் முழு மூச்சாக முயன்றார்கள். படை பலம், சதிச் சூழ்ச்சிகள், லஞ்சம், மிரட்டல் முதலிய எல்லாச் சாதனங்களையும் உபாயங்களையும் இதற்காக அவர்கள் கையாண்டார்கள். ஆயினும் தேசிய விடுதலை இயக்கம் நாளுக்குநாள் வளர்ந்தது. அது ஆப்பிரிக்காவில், சிறப்பாக அரபு நாடுகளில் விரிவாகப் பரவியது. லெபனான், சிரியா, ஜோர்டான் ஆகியவற்றை அடுத்து லிபியா (1951), எகிப்து (1952) சூடான், மொராக்கோ, டியூனிசியா (1956) ஆகிய நாடுகளின் மக்கள் தேசிய விடுதலை பெற்றார்கள். பிரெஞ்சுக் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராக மும்முரமான ஆயுதப் போராட்டம் நடத்தியது அல்ஜீரியா.

யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் **ஆக்கிரமிப்புப் போர்களின் பிரதானத் தூண்டுவிப்பியும் ஒழுங்கமைப்பாளியும்** ஆகிவிட்டது. அதன் ஆக்கிரமிப்புக் கொள்கையின் கூர்முனை சோவியத் யூனியனுக்கும் மக்கள்-ஜனநாயக நாடுகளுக்கும் எதிராகத் திருப்பப்பட்டிருந்தது. ''வலிமையின் அடிப்படையில்'' செயல்பட்டவாறு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ''பனிப் போர்'' எனப்பட்டதைக் கட்டவிழ்த்து விட்டது. அது ஆயுத உற்பத்திப் போட்டியைத் தீவிரப்படுத்தியது, அணுக்கரு ஆயுதங்களின் சேமிப்புக்களைக் குவித்தது, படையினரின் எண்ணிக்கையை அதிகப் படுத்தியது. அதே சமயம் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டணிகள் சேர்த்தது, சோஷலிஸ அரசுகளின் அருகாமையில் இராணுவ தளங்கள் அமைத்தது, இந்த அரசுகளை அணு ஆயுதங்களால் அச்சுறுத்தியது. 1949ல் அது ''வட அட்லாண்டிக் உடன்படிக்கை நிறுவனம்'' (''நாட்டோ'') என்ற பெயரால் அரசுகளின் இராணுவக் குழு ஒன்றை அமைத்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளும்

பிரிட்டனும் பிரான்ஸும் பிற முதலாளித்துவ நாடுகளும் இதன் உறுப்பினர் ஆயின. ''நாட்டோ''வின் உறுப்பு நாடுகளில் அமெரிக்கப் படைகள் அணு ஆயுதங்களுடன் முகாம் போட்டன. ஐம்பதுக்களின் நடுவில் அமெரிக்காவின் முன்முயற்சியாலும் அதன் ஒத்துழைப்புடனும் இன்னும் இரண்டு ஆக்கிரமிப்பு இராணுவக் கூட்டணிகள் தோன்றின: ''தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை நிறுவனம்'' (''ஸியாட்டோ''), ''மத்திய கிழக்குத் தற்காப்பு நிறுவனம்'' (''ஸென்டோ''). இந்தக் கூட்டணிகளில் சேர்ந்த நாடுகளிலும் அமெரிக்க இராணுவ தளங்கள் நிறுவப்பட்டன. இவை சோஷலிஸ நாடுகளை இலக்காகக் கொண்டவை. தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவது இவற்றின் நோக்கம்.

போலியான ''கம்யூனிஸ அபாயம்'' என்னும் கொடியின் கீழ் ''கம்யூனிஸ எதிர்ப்பு'' கோஷத்துடன் தங்கள் ஆக்கிரமிப்புக் கொள்கையைச் செயல்படுத்தினர்கள் ஏகாதிபத்தியவாதிகள். அவர்கள் சோவியத் யூனியனையும் பிற சோஷலிஸ நாடுகளையும் தூற்றினர்கள், கம்யூனிஸ ஆதரசங்களை இழிவுபடுத்த முயன்றர்கள். பல நாடுகளின் மக்களது வாழ்வில் இடம் பெற்று விட்ட சோஷலிஸம் முதலாளித்துவ உலகின் திரளான உழைப்பாளிகள் மீது புரட்சிகரமான செல்வாக்கு செலுத்தியதும் உலக வளர்ச்சிப் போக்கு முழுவதையும் பாதித்ததுமே ஏகாதிபத்தியவாதிகளுக்கு முக்கிய அபாயமாகப்பட்டது. இது ஏகாதிபத்திய அரசுகளின் ஆளும் வட்டாரங்களுக்கு சோஷலிஸ அரசுகள்மீது கடுங் கோபத்தையும் வெறுப்பையும் உண்டாக்கிற்று. ஆனால் கம்யூனிஸ ஆதர்சங்கள் ஏகாதிபத்தியவாதிகளாலும் அவர்களுடைய கையாட்களாலும் எழுப்பப்பட்ட எல்லாத் தடைவேலிகளையும் கடந்துவிட்டன. யுத்தத்துக்கு முன் கம்யூனிஸ்ட் கட்சிகள் இல்லாத நாடுகளிலும் இப்போது அவை தோன்றிவிட்டன. உலகக் கம்யூனிஸ இயக்கம் பூமண்டலத்தின் யாவற்றிலும் செல்வாக்கு மிக்க சக்தி ஆகிவிட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உலகத்தை மூன்றுவது உலக யுத்தத்தின் விளிம்புக்குத் தள்ளினர்கள். பெருந்திரளான மக்களைக் கொன்று குவித்துப் பேரழிவு விளைக்கும் பயங்கர ஆயுதமான அணு குண்டை இந்த யுத்தத்தில் பயன்

படுத்த அமெரிக்க சைனியவாதிகள் ஆயத்தம் செய்தார்கள். 1950ம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் நேர்முக இராணுவ துர்ச்சாகசப் பாதையில் அடிவைத்தது. அது கொரிய மக்கள்-ஜனநாயகக் குடியரசைத் தாக்கும்படி தென் கொரியாவைத் தூண்டிவிட்டு, தன் படைகளைக் கொரியாவுக்கு அனுப்பியது. கொரியாவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத் தலையீடு சர்வதேசச் சூழ்நிலையை மட்டுமீறிக் கெடுபிடி நிறைந்தது ஆக்கியது. புதிய உலக யுத்தக் கருமேகங்கள் உலகின்மீது கவிந்தன.

விறல் மிக்கதும் அமைதியில் பற்று உள்ளதும் ஆன சோஷலிஸ நாடு ஆகிய சோவியத் யூனியன்தான் யுத்தம் மூளாது தடுக்க வல்லது என்று உலக மக்கள் நம்பினர்கள். சோவியத் யூனியன் இந்த நம்பிக்கையை உரிய முறையில் மெய்ப்பித்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் சோவியத் யூனியனின் வளர்ந்துவரும் விறலையும் அதன் சர்வதேசச் செல்வாக்கையும் ஆதாரமாகக் கொண்டு **உலக சமாதானத்தைக் காப்பதற்கு** உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவ தளங்கள் அணு ஆயுதங்களுடன் முதன்மையாக சோவியத் யூனியனையே இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன என்பதை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கருத்தில் கொண்டது. எனவே, யுத்த காலத்தில் ஜெர்மன் பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கப்பட்ட தேசீயப் பொருளாதாரத்தை மீட்டமைப்பது எவ்வளவுதான் கடினமாய் இருந்தாலும், கட்சியும் சோவியத் மக்களும் நாட்டின் தற்காப்புத் திறனை வலுப்படுத்தும் முயற்சிகளைத் தளர விடவில்லை. ஏகாதிபத்தியவாதிகள் அணு ஆயுதங்களுடன் தாக்கினால் தற்காத்துக் கொள்ள வகையற்ற நிலையில் இருக்க சோவியத் யூனியனால் முடியவில்லை. சோஷலிஸ நாடுகள், அமைதிப் பற்றுள்ள பிற நாடுகள் ஆகியவற்றின் மக்களை அணு ஆயுத யுத்தம் தொடங்குவதாகக் காட்டி அச்சுறுத்திக் கொண்டிருந்தது அமெரிக்கா. இந்த மக்களை ஆபத்தில் கைவிட சோவியத் யூனியனுக்கு இயலவில்லை. பல ஆண்டுகளுக்குத் தாங்கள் அணு ஆயுதத்தை ஏகபோக பாத்தியமாக வைத்திருக்கலாம்

என்ற நம்பிக்கையின் பேரிலேயே அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் தீட்டி இருந்தார்கள். ஆனால் அவர்கள் போட்ட கணக்கு பிசகிவிட்டது. சோவியத் யூனியனில் அணு குண்டு 1949லும் நீர்வாயு குண்டு 1953லும் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டன, அணு ஆயுதங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகபோகம் முடிந்து விட்டது. சோவியத் யூனியன் வெப்ப அணுக்கரு ஆயுதங்களை சமாதானம், சோஷலிஸம், சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு ஆகியவற்றின் தொண்டில், அமைதிப் பற்றுள்ள மக்கள் அனைவரதும் தொண்டில் ஈடுபடுத்தியது. சோவியத் யூனியனது இராணுவ ஆற்றல் வலுப்பட்டதனால், யுத்த நெருப்பை மூட்டிவிட முயன்று கொண்டிருந்த ஏகாதிபத்தியவாதிகளின் யுத்த ஆவேசம் தணிந்து விட்டது. அவர்களுடைய துர்ச்சாகசத்துக்கும் தூண்டிவிடும் முயற்சிகளுக்கும் தடை போடும் பயனுள்ள சாதனமாய் இருந்தது இது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் தங்கள் வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப் பிடிப்பதில் விறல் மிக்க சோஷலிஸ முகாமை ஆதாரமாகக் கொண்டிருந்தன, சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் அரசாங்கங்களையும் எப்போதும் கலந்து ஆலோசித்தன. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு மக்கள் இனங்களின் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அரணைத் திகழ்ந்தது. அணுக்கரு ஆயுதங்களின் சோதனைகளை நிறுத்தும்படியும் யுத்தத்தில் அவற்றின் பிரயோகத்தைத் தடை செய்யும் படியும் சோவியத் யூனியன் மீண்டும் மீண்டும் முதலாளித்துவ அரசுகளுக்குப் பிரேரணை விடுத்தது. இந்த யோசனையை மற்ற சோஷலிஸ நாடுகள் ஆதரித்தன. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவற்றின் அரசாங்கங்கள் இதை விடாப்பிடியாக எதிர்த்தன. அவை ஆக்கிரமிப்புப் போக்கைத் தொடர்ந்து கடைப்பிடித்துவந்தன.

உலக சமாதானத்தை ஆதரிக்கவும் சர்வதேசப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சங்கத்தின் (ஐ. நா.) வாயிலாக ஏகாதிபத்திய நாடுகளின் அரசாங்கங்கள் மீது செல்வாக்கு செலுத்த சோவியத் யூனியன் முயன்றது. ஐ. நா.வில் சோவியத் பிரதிநிதிகள் ஏகாதி

''உலக அணுவாயுத யுத்தம் கூடாது!''

பத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை வன்மை யாகக் கண்டித்தார்கள். 1953ம் ஆண்டு சோவியத் யூனியன் ஐ. நா. பொதுச் சபையில் விவாதிப்பதற்காக ஒரு தீர்மான மசோதாவைப் பிரேரித்தது. ''புதிய உலக யுத்த அபாயத்தை நீக்குவதற்கும் சர்வதேச உறவுகளில் கெடுபிடுயைக் குறைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள்'' பற்றியது இந்தத் தீர்மான மசோதா. இதில் பின்வரும் நடவடிக்கை கள் பிரேரிக்கப்பட்டிருந்தன: அணு ஆயுதங்களையும் நீர்வாயு ஆயுதங்களையும் தடை செய்வது; அமெரிக்க ஐக்கிய நாடு கள், பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன், சீன மக்கள் குடியரசு ஆகிய ஐந்து பெரு வல்லரசுகளின் படைபலத்தை மூன்றில் ஒரு பாகம் குறைப்பது; ஆயுத உற்பத்தியையும்

படை பலத்தையும் உலகு முழுவதிலும் குறைப்பது பற்றி ஆலோசிப்பதற்காக சர்வதேச மகாநாடு கூட்டுவது; மக்கள் இனங்களுக்கு இடையே பகைமையையும் வெறுப்பையும் தூண்டிவிடும் பிரசாரத்தைக் கண்டனம் செய்வது.

இந்தோனேசியக் குடியரசு, சிரியா, லெபனான் ஆகிய இளம் தேசிய அரசுகளுக்கு ஆதரவாக சோவியத் யூனியன் ஐ. நா. மன்றத்தில் பேசியது. சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ நாடுகளும் வற்புறுத்திக் கோரியதன் விளைவாக டச்சு, பிரிட்டிஷ் தலையீட்டாளர்கள் இந்தோனேசியாவிலிருந்து வெளியேறவும் அதன் சுதந்திரத்தையும் அரசுரிமையையும் ஏற்றுக்கொள்ளவும் நேர்ந்தது. சிரியா, லெபனான் மக்களுக்கு சோவியத் யூனியன் அளித்த திண்ணமான ஆதரவு பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் இந்த நாடுகளின் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்படுவதற்குத் துணை புரிந்தது.

மேற்கு ஜெர்மனியில் சைனியவாதம் மீண்டும் தலை தூக்கியதும், அமைதிப் பற்றுள்ள ஜனநாயக ஜெர்மனியை அமைப்பது பற்றிய போட்ஸ்டாம் ஒப்பந்தப்படி அளித்த வாக்குறுதிகளை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் பிரான்ஸும் மீறியதும் ஐரோப்பிய மக்களுக்கு ஆழ்ந்த கவலை ஊட்டின. ஜனநாயக அடிப்படையில் ஜெர்மனியை மீண்டும் ஒரே நாடாக ஒன்று சேர்க்கும் படியும் அதனுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும் படியும் சோவியத் யூனியன் பல முறை யோசனை விடுத்தது. ஆனால் மேற்கண்ட மூன்று வல்லரசுகளும் இந்த யோசனையை நிராகரித்து விட்டன. 1949ல் ஜெர்மன் கூட்டுக் குடியரசை அமைத்ததன் வாயிலாக ஜெர்மனியின் பிளவை அவை நிறைவுபடுத்தின. ஐரோப்பியக் கூட்டுப் பாதுகாப்பை அமைப்பது குறித்து சோவியத் யோசனையையும் மேற்கு ஐரோப்பிய அரசுகள் நிராகரித்து விட்டன. அதே சமயம் அவை ''நாட்டோ''வை வலுப்படுத்தின, இந்த இராணுவக் கூட்டணியில் ஜெர்மன் கூட்டுக் குடியரசை1955ல் சேர்த்துக் கொண்டன, அதன்படை பலத்தைப் பெருக்கத் தீவிர உதவி செய்தன. சமாதானத்துக்கு ஆபத்தான இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க சோஷலிஸ அரசுகளால் முடியவில்லை. 1955ம்

ஆண்டு வார்ஸா (போலந்து) நகரில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் சோவியத் யூனியனும் பிற ஐரோப்பிய சோஷலிஸ அரசுகளும் நட்பு, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி ஆகியவை குறித்து உடன்படிக்கை செய்து கொண்டன. வார்ஸா உடன்படிக்கை தற்காப்புத் தன்மை கொண்டது. ஐரோப்பிய மக்களின், உலகு அனைத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துவதே அதன் நோக்கம். சமுதாய அமைப்பு எதுவானாலும் பிற அரசுகள் இந்த உடன்படிக்கையில் சேர்ந்து கொள்வதற்கு எப்போதும் இடம் உண்டு.

மாபெரும் ஐரோப்பிய-ஆசிய வல்லரசான சோவியத் யூனியன் ஆசியாவில் ஆக்கிரமிப்பாளர்களின் சூழ்ச்சிகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தது. கொரியாவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடையவும் அதன் கூட்டாளிகளுடையவும் தலையீட்டை நிறுத்தவும் கொரியப் பிரச்சினைக்குச் சமாதான முறையில் தீர்வு காணவும் இந்தோசீனத்தில் பிரெஞ்சுக் காலனி ஆட்சியாளர்களின் ஆபாச யுத்தத்துக்கு முடிவு கட்டவும் சோவியத் யூனியன் விடாப்பிடியாகப் பாடுபட்டது. அதன் ஊக்கமுள்ள செயல்களின் விளைவாகக் கொரியாவில் யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது 1953ல் சாத்தியம் ஆயிற்று; இந்தோசீனத்தில் போர்நடவடிக்கைகளை நிறுத்துவது பற்றிய ஒப்பந்தம் 1954ல் கையெழுத்தாயிற்று.

இவ்வாறு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் உலக மக்கள் அனைவரதும் பாதுகாப்பின் பொருட்டுச் செயல் ஆற்றி, சர்வதேசக் கெடுபிடி நிலையைத் தளர்த்துவதற்கு விடாது முயன்றன. இதன் பொருட்டு எல்லாச் சாதனங்களையும் வாய்ப்புக்களையும் அவை பயன்படுத்தின. எல்லா நாடுகளிலும் விரிவாகப் பரவிய சமாதான ஆதரவாளர்களின் சக்தி மிக்க இயக்கம், புதிய யுத்தம் மூளாது தடுத்த முக்கியக் காரணி ஆயிற்று. சோவியத் கம்யூனிஸ்டுகளும் எல்லா சோவியத் மக்களுமே இந்த இயக்கத்தில் ஊக்கத்துடன் கலந்துகொண்டார்கள். வெவ்வேறு வர்க்கங்களையும் கட்சிகளையும் சேர்ந்தவர்களும் வெவ்வேறு அரசியல் கருத்துக்களும் மத நம்பிக்கைகளும் கொண்டவர்களுமான பல கோடி மக்கள் சமாதான ஆதரவாளர்களின் உலக இயக்கத்தில் பங்கு கொண்டார்கள். இதைத் தலைமை ஏற்று

நடத்தியது உலக சமாதான சபை. உலகத் தொழிற்சங்க சம்மேளனம், சர்வதேச மாதர் ஜனநாயக சம்மேளனம், உலக ஜனநாயக இளைஞர்கள், மாணவர்கள் சம்மேளனம், ஆப்பிரிக்க-ஆசிய ஒருமைப்பாட்டு இயக்கம், பத்திரிகை யாளர்கள், சட்டத் தொழிலர்களின் சர்வதேச நிறுவனங்கள் முதலியவையும் பிரபல சமூக ஊழியர்களும் விஞ்ஞானம், பண்பாடு, கலை ஆகிய துறைகளின் முன்னணி ஊழியர்களும் சமாதான இயக்கத்தில் சேர்ந்து கொண்டார்கள். தனித் தனிப் போர்க் களங்களை உலக யுத்தமாக மாற்ற முயன்ற ஆக்கிரமிப்பாளர்களுக்கு மிகப் பெரிய தடைக்கல்லாக விளங்கியது இந்த இயக்கம்.

சர்வதேசப் பிரச்சினைகளுக்குப் பரஸ்பரம் ஏற்புள்ள முடிவு கள் காணும் கூட்டு முயற்சிகளின் பொருட்டு முதலாளித்துவ நாடுகளின் தலைவர்களுடன் சோவியத் அரசின் தலைவர்கள் நேர்முகத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆசிய, ஆப்பிரிக்க இளம் தேசீய அரசுகளுடன் சோவியத் யூனியனின் தொடர்புகள் விரிவடைந்தன. ஆண்டுதோறும் பல்வேறு நாடுகளிலிருந்து சோவியத் யூனியனுக்கு மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் மக்கள் வரத் தொடங்கினர் கள். சோவியத் மக்களின் மிகப் பெரிய சாதனைகளையும் அவர் களுடைய அமைதிப் பற்றையும் நல் எண்ணத்தையும் கண் கூடாகக் கண்டு தெரிந்து கொண்டார்கள் இவர்கள். முதலாளித்துவ நாடுகளின் பெருந் திரளான பொது மக்கள் முதலாவது சோஷலிஸ நாடு பற்றிய உண்மையை மேலும் மேலும் அதிகமாக அறிந்து கொண்டார்கள். சோவியத் நாட் டின் நண்பர்களுடைய எண்ணிக்கை எல்லா நாடுகளிலும் அதிகரித்தது. ''கம்யூனிஸ ஆக்கிரமிப்பு'' அபாயம் பற்றியும் சோவியத் யூனியனை எஞ்சிய உலகிலிருந்து மறைப்பதாகக் கூறப்பட்ட ''இரும்புத் திரை'' பற்றியும் சமாதானப் பகை வர்கள் பரப்பி வந்த பொய்க் கதைகள் காற்றோடு போய் விட்டன.

சமாதானத்தை நிலைநிறுத்தும் பொருட்டு இடைவிடாத போராட்டம் நடத்தியவாறே கம்யூனிஸ்ட் கட்சி, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலும் சோவியத் மக்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதிலும் கூர்ந்த

கவனம் செலுத்தியது, கம்யூனிஸத்தை நோக்கி சோவியத் சோஷலிஸ சமூகத்தின் இயக்கத்தை வழிநடத்தியது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ்

1956ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ், கட்சியின் வாழ்விலும் சோவியத் சமூகத்தின் வாழ்விலும் முக்கியப் பங்கு ஆற்றியது. அது சோவியத் யூனியனின் சர்வதேச நிலைமையைப் பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து அடுத்த ஐந்தாண்டுகளில் கம்யூனிஸக் கட்டுமானத்துக்கு உரிய பணிகளைத் தீர்மானித்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் கடைப்பிடித்து வந்த அமைதிப்பற்று நிறைந்த அயல் நாட்டுக் கொள்கையைக் காங்கிரஸ் ஆமோதித்தது. உலகில் நிகழ்ந்த முக்கிய மாறுதல்கள் பற்றிய ஆழ்ந்த பகுத்தாய்வை அது தந்தது. முதலாளித்துவத்தின் ஆதிக்கப் பிரதேசம் குறுகி விட்டது. சோஷலிஸத்தின் நிலைகள் கணிசமாக வலுவடைந்திருந்தன. எல்லா சோஷலிஸ நாடுகளும் பொருளாதார, பண்பாட்டுத் துறைகளில் பெருத்த ஏற்றம் பெற்றிருந்தன. உலக மக்கள் தொகையில் ஏறத்தாழப் பாதிப் பெயர் காலனி, அரைக்காலனி ஆதீன நிலையிலிருந்து விடுபட்டிருந்தார்கள். சமாதானச் சக்திகள் பல்கி வலுவடைந்திருந்தன. இவை எல்லாம் சமாதானம், ஜனநாயகம் தேசிய விடுதலை, சோஷலிஸம் ஆகியவற்றுக்கான போராட்டத்துக்கு அதிகச் சாதக நிலைமைகளை ஏற்படுத்தி இருந்தன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் இந்த மாறுதல்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு உலக வளர்ச்சியின் மூலப் பிரச்சினைகள் குறித்து அனேக **புதிய அடிப்படைக் கருத்துக்களை** முன்வைத்தது.

வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் டை சமாதான சகவாழ்வு குறித்த லெனினது கோட்பாட் நவீன காலக்கட்டத்துக்கு ஏற்பச் செவ்வைப்படுத்தியது காங்கிரஸ். சோஷலிஸம், முதலாளித்துவம் என்ற இரண்டு வெவ்வேறு அமைப்புக்களாக உலகம் பிரிவுபட்டிருக்கும்

நிலைமைகளில் இந்தக் கோட்பாடு சர்வதேச உறவுகளில் அறிவுக்கொத்த ஒரே கோட்பாடாகத் திகழ்கிறது. ஒன்று சமாதான சகவாழ்வு, இல்லாவிட்டால் அழிவு விளைக்கும் யுத்தம் என்ற நிலைமை இப்போது வரலாற்றில் ஏற்பட்டிருக்கிறது. அரசுகளுக்கு இடையே எழும் விவாதங்கள் யுத்தத்தின் வாயிலாக அல்ல, பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்பது கம்யூனிஸ்டுகளின் உறுதியான கருத்து.

சமாதான சகவாழ்வுக் கொள்கை வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவம். பாட்டாளி வர்க்கக் கொள்கைவாதம் பூர்ஷ்வாக் கொள்கைவாதத்துடன் சமரசம் செய்து கொள்ள அது இடம் தரவில்லை. சோஷலிஸ ஆதர்சங்களின் வெற்றிக்காகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்துக்கு அது வாய்ப்பு அளிக்கிறது, மக்கள் இனங்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற உதவுகிறது, அவற்றின் புரட்சி லட்சியங்கள் நிறைவேறத் துணை செய்கிறது. சோஷலிஸம் எல்லா நாடுகளிலும் வெற்றி பெறும் என்று போதிக்கிறது மார்க்ஸீயம்-லெனினீயம். எல்லா மக்கள் இனங்களும் முன்னுகவோ பின்னுகவோ சோஷலிஸ வளர்ச்சிப் பாதையை மேற்கொண்டு விடும். இது புறநிலையான வரலாற்று விதி. முதலாளித்துவத்துக்கு முன் சோஷலிஸத்தின் நிர்ணயகரமான மேம்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது இந்த விதி. இதை மாற்றவோ ரத்து செய்யவோ யாராலும் முடியாது.

தற்கால நிலைமைகளில் **உலக யுத்தத்தை மூள விடாது தடுப்பது செயலளவில் சாத்தியமே** என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் முடிவு செய்தது. ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் நிலவுகையில் யுத்தங்கள் தவிர்க்க முடியாதவை என்று ஒரு காலத்தில் லெனின் சுட்டிக் காட்டினார். அவருடைய இந்தக் கருத்தை வாழ்க்கை உறுதிப்படுத்தியது. ஆனால் அதன் பின் பல பத்தாண்டுகள் கழிந்துவிட்டன. உலகில் புதிய சூழ்நிலை உருவாகி இருந்தது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை மாறவில்லைதான், ஆனால் அதன் வாய்ப்புக்கள் முன்போல இல்லை. இப்போது அது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய ஒரே உலக அமைப்

பாக விளங்கவில்லை. யுத்தத்தில் அக்கறை இல்லாதவையும் அதை எதிர்ப்பவையுமான சக்திகளோ, அளவிட இயலாத வாறு வளர்ந்து வலுப் பெற்று விட்டன.

ஏகாதிபத்தியம் நிலவும் வரை ஆக்கிரமிப்பு யுத்தங்களுக் கான காரணங்களும் நிலவிவரும் என்பது கூறுமலே விளங்கும். இந்தக் காரணத்தால் அமைதிப் பற்றுள்ள எல்லாச் சக்தி களும் மிகுந்த விழிப்புடன் இருப்பது அவசியம் ஆகிறது. எனினும் தற்காலத்தில் விறல் மிக்க சோஷலிஸ முகாம் உருவாகி உள்ளது, அமைதிப் பற்றுள்ள வேறு பல அரசு களும் அதனுடன் இருக்கின்றன. சமாதானத்துக்கான அணித்து மக்கள் இயக்கம் எல்லா நாடுகளிலும் வளர்ந்து விரிவடைந்து வருகிறது. இந்த நிலைமைகளில், ஏகாதிபத்தியவாதிகளைப் புதிய உலக யுத்தம் தொடங்க விடாமல் தடுப்பதற்கு ஏற்ற எதார்த்த வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

வெவ்வேறு நாடுகள் சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் வெவ்வேறு வடிவங்கள் பற்றியும் சோஷலிஸப் புரட்சியின் அமைதி நிறைந்த வளர்ச்சியின் சாத்தியக் கூறு பற்றியும் லெனினுடைய அடிப்படைக் கருத்துக்களை உலகப் புரட்சி அனுபவத்தை ஆராய்ந்து பெற்ற பொது முடிவுகளின் அடிப் படையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் விரிவுபடுத்தியது. கம்யூனிஸ்டுகள் எப்போதுமே வன்முறையை மேற்கொள்ளவும் உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்துவிடவும் துடியாக முன் வருபவர்கள் என்று சித்திரிப்பதை பூர்ஷ்வா வர்க்கத்தினரும் அவர்க ளுடைய கையாட்களும் விரும்புகிறார்கள். உண்மையிலோ, தொழிலாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படையான மார்க் ஸீய-லெனினீயக் கட்சிகளும் சோஷலிஸப் புரட்சி அமைதி யான முறையில் வளர்ச்சி அடைவதையே எப்போதும் மேலாக மதித்து வந்திருக்கின்றன. இதுவே தொழிலாளி மக்களுடையவும் எல்லா மக்காதும் நலன்களுக்கு உகந் தது. தொழிலாளர் இயக்கத்துக்கும் திரளான உழைப்பாளி களுக்கும் எதிராகக் கொடிய அடக்குமுறைச் செயல்களை மேற்கொள்ளும் பூர்ஷ்வா வர்க்கம்தான் வன்முறை நட வடிக்கைகள் எடுத்துக்கொள்வதை அவற்றுக்குக் கட்டாயம் ஆக்குகிறது. முன்பு, முதலாளித்துவம் எல்லாவற்றையும்

தன்னுள் அடக்கிய ஒரே உலக அமைப்பாக இருந்தபோது, புரட்சி அமைதியான முறையில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பு, லெனின் சுட்டிக்காட்டியதுபோல், மிக மிக அரிதாக இருந்தது. இப்போதோ, விறல் மிக்க சோஷலிஸ முகாம் நிலவுகிறது, உலகம் முழுவதிலும் புரட்சிச் சக்திகளின் ஆற்றல் வளர்ந்து வருகிறது. இந்த நிலைமைகளில், சோஷலிஸப் புரட்சி அமைதியாக வளர்ச்சி அடைவதற்கு ஏற்ற வாய்ப்பு விரிவடைகிறது. சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் ஸ்தூல வடிவங்கள் மேலும் மேலும் வளமும் பல்விதமும் பெற்று வருகின்றன.

சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கு நாடாளுமன்ற வழியும் மேற்கொள்ளப்படலாம். அனேக முதலாளித்துவ நாடுகளில் தனது முன்னணிப் பிரிவான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில், தொழிலாளி வர்க்கம் நாடாளுமன்றத்துக்கு வெளியே விரிவான போராட்டத்தின் விளைவாக சந்தர்ப்பவாதி நபர்களை உறுதியுடன் எதிர்த்துத் தோற்கடித்து, மக்களின் பெரும் பகுதியைத் தன்னைச் சுற்றி ஒன்று திரட்டவும் பிற்போக்குள்ள, மக்கள்விரோதிச் சக்திகளை முறியடித்து நாடாளுமன்றத்தில் நிலையான பெரும்பான்மை பெறவும் எதார்த்த வாய்ப்புக்களை அடைந்து விடுகிறது. உழைப்பாளி மக்களின் செயல் முறை ஆதரவை ஆதாரமாகக் கொண்டு, தொழிலாளி வர்க்கம் நாடாளுமன்றத்தை பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக்குத் தொண்டாற்றும் கருவியாக இருப்பதிலிருந்து உழைப்பாளி மக்களுக்குப் பயன்படும் கருவியாக மாற்றிவிட முடியும். இவ்வாறு, அடிப்படையான அரசியல், பொருளாதார மாற்றங்களை அமைதியான முறையில் நிகழ்த்துவதற்கு ஏற்ற நிலைமைகள் அமையக் கூடும்.

சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பு நிகழும்போது வன்முறை கையாளப்படுவது அல்லது கையாளப்படாதிருப்பது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வையும் ஒழுங்கமைப்பையும், அதே போல, பெரும்பாலான மக்களின் சித்தத்துக்குச் சுரண்டும் வர்க்கங்கள் காட்டும் எதிர்ப்பின் சக்தியையும் பொறுத்திருக்கும். சுரண்டுவோர் உழைப்பாளிகளுக்கு எதிராக ஆயுதங்களைக் கையாண்டால், உழைப்பாளிகளும் வேறு வழியின்றி ஆயுதபலத்தால் பூர்ஷ்வா வர்க்கத்தின்

ஆட்சியைக் கவிழ்த்துத் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட வேண்டிவரும். சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் ஸ்தூல வடிவங்கள் என்னதான் பல்விதமாக இருந்தாலும் பின் வருவன கட்டாயமாக இன்றியமையாதவை: உழைக்கும் விவசாயிகளுடன் ஐக்கியமாக இணைந்து பாட்டாளி வர்க்கம் புரட்சியின் வாயிலாக அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றுவது, ஏதேனும் ஒரு வடிவத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்படுவது, மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகளின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் சோஷலிஸக் கட்டுமானத்துக்கு அரசியல் வழிகாட்டுவது.

அமைதியான வழியில் சோஷலிஸத்துக்குப் பரிணமிப் பது சாத்தியம் என்று கம்யூனிஸ்டுகள் ஒப்புக்கொள்வதற் கும், சீர்திருத்தவாதிகளான வலதுசாரி சோஷலிஸ்டுகளின் கொள்கைக்கும் பொதுவான அம்சம் எதுவும் இல்லை. வலது சாரி சோஷலிஸ்டுகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறுக்கிறார்கள், சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றி அமைப் பதற்குப் பதிலாக அற்பச் சீர்திருத்தங்களைப் பிரேரிக்கிறார் கள், முதலாளித்துவ அமைப்பை ஒழிப்பதை எதார்த்தத் தில் மறுக்கிறார்கள். சீர்திருத்தவாதிகளுடன், முதலாளித்து வத்தின் காப்பாளர்களுடன் உறுதியான போராட்டம் நடத் துவது அவசியம்.

சர்வதேச வாழ்வின் கோட்பாட்டு ரீதியான பிரச்சினை கள் பற்றி இருபதாவது காங்கிரஸ் வெளியிட்ட அடிப்படைக் கருத்துக்கள் பெருத்த சித்தாந்த, நடைமுறை முக்கியத்து வம் உள்ளவை. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் எல் லா முற்போக்குச் சக்திகளையும் வலிவாக ஒன்றுபடுத்துவதற் கும், ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் சமாதானம், ஜனநாய கம், சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டும் நடக்கும் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கும் புதிய வாய்ப் புக்களை இவை ஏற்படுத்தின.

பத்தொன்பதாவது கட்சிக் காங்கிரஸுக்குப் பிறகு நடந்த சோஷலிஸ நிர்மாணத்தின் விளைவுகளை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் பார்வையிட்டது. இவ்விளைவுகள் கம்யூனிஸ்டுகளுக்கும் சோவி யத் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளித்தன. ஐந்தாவது

ஐந்தாண்டுத் திட்டம் (1951-1955) குறித்த கெடுவுக்கு முன் — நான்கு ஆண்டுகள், நான்கு மாதங்களில் — நிறை வேற்றப்பட்டிருந்தது. தொழில்துறை 1955ம் ஆண்டில் யுத்தத்துக்கு முந்திய, 1940ம் ஆண்டை விட இரு மடங்கு அதிக அளவில் பொருள்களை உற்பத்தி செய்தது. விவசாயம் குறிப்பிடத் தக்க வெற்றிகள் பெற்றிருந்தது. மக்கள் உப யோகத்துக்கான பொருள்கள் யுத்தத்துக்கு முன்பை விட இரு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டன. சோவியத் மக்களின் வாழ்க்கை வசதிகள் மேம்பட்டிருந்தன. முத லாளித்துவ அமைப்பை விட சோஷலிஸப் பொருளாதார அமைப்பு எவ்வளவு அதிக அனுகூலம் வாய்ந்தது என்பதை இவை எல்லாம் மீண்டும் ஒரு முறை உணர்த்தின.

பொருளாதார வளர்ச்சியில் பெறப்பட்ட வெற்றிகளை ஆதாரமாகக் கொண்டு, அடுத்த ஆண்டுகளில் தேசீயப் பொரு ளாதாரத்தை இன்னும் தீவிரமாக மேம்படுத்துவதற்குக் காங்கிரஸ் தனது திட்டங்களில் வகை செய்தது. தேசீயப் பொருளாதாரத்தின் மற்ற எல்லாத் துறைகளுடையவும் வளர்ச்சியை விரைவாக்கவும் நாட்டின் தற்காப்புத் திறனை வலுவாக்கவும் மக்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்த வும் உதவும் கனரக இயந்திரத் தொழிலின் வளர்ச்சிக்கு முன் போலவே முதன்மை தரப்பட்டது. நாட்டின் தேசீயப் பொருளாதாரத்தை இன்னும் உயர்ந்த தொழில்நுட்பத் தரத் துக்கு இட்டுச் செல்லும் பணியைக் காங்கிரஸ் முன்வைத்தது, **தொழில்நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் கொள்கைப் போக்கை** மேற்கொண்டது. தொழில்துறையில் இயந்திர நிர்மாணம், மின் இயந்திரத் தொழில், இரசாயனத் தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியில் முக்கியமாகக் கவனம் செலுத் தப்பட்டது. வோல்கா ஆற்றின்மீது திறன்மிக்க இரண்டு நீர் மின் நிலையங்களையும் பைக்கால் ஏரியின் அருகே அங்காரா ஆற்றின் மீது உலகிலேயே ஆகப் பெரிய நீர்மின் நிலையத்தை யும் கட்டி முடிப்பது, சைபீரியாவில் யெனிஸேய் ஆற்றின் மீது இவ்வளவே திறன்மிக்க இன்னொரு நீர்மின் நிலை யத்தின் கட்டுமானத்தைத் தொடங்குவது என்று திட்டம் இடப்பட்டது. அணு ஆற்றலை அமைதியான நோக்கங்களுக் குப் பயன்படுத்தும் வேலை விரிவாக்கப்பட்டது: புதிய அணு

மின் நிலையங்களுக்கு அடிக்கல்கள் நாட்டப்பட்டன, அணு ஆற்றலால் இயங்கும் இயந்திரம் அமைந்த பனிக்கட்டி உடைக்கும் கப்பல் கட்டப்பட்டது. யுத்தத்தினால் சிறப்பாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விவசாயத்தின் பின்தங்கிய நிலையைப் போக்குவதற்கு இன்றியமையாத நடவடிக்கைகள் வகுக்கப்பட்டன.

யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகளைப் போக்கி, தேசியப் பொருளாதார வளர்ச்சியில் பெருத்த வெற்றிகளைப் பெற்று விட்ட சோவியத் யூனியன், யுத்தத்துக்கு முன்பே பதினெட்டாவது கட்சிக் காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட சோவியத் யூனியனின் அடிப்படைப் பொருளாதார லட்சியத்தை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாத எல்லாச் சாதனங்களையும் பெற்றிருக்கிறது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. நபர்வாரிப் பொருள் உற்பத்தியில் யாவற்றிலும் வளர்ச்சி மிக்க முதலாளித்துவ நாடுகளை எட்டிப்பிடிப்பதும் முந்துவதுமே இந்த லட்சியம்.

கொள்கைவாத வேலையில் இருந்த குறைகள் காங்கிரஸால் ஏற்கப்பட்ட தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டன. கம்யூனிஸக் கட்டுமானத்தின் நடைமுறைப் பணிகளிலிருந்து இந்த வேலை துணிக்கப்பட்டிருந்தது இதன் முதன்மையான குறைபாடு. இந்தக் குறைகளை நீக்கும்படியும் சித்தாந்த நடவடிக்கைகளைக் கம்யூனிஸத்திற்கான போராட்டத்தின் உடனடிப் பணிகளுடன் நெருக்கமாக இணைக்கும்படியும் கட்சி ஸ்தாபனங்களுக்குக் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்தது. மார்க்ஸீய-லெனினீய சித்தாந்தத்தின் தூய்மையை உறுதியுடன் காப்பதும் பகைமையுள்ள பூர்ஷ்வாக் கொள்கை வாதத்தை எதிர்த்து சமரசத்துக்கு இடமற்ற போராட்டம் நடத்துவதும் எல்லாக் கட்சி ஸ்தாபனங்களுடையவும் கொள்கைவாதத் துறை ஊழியர்களுடையவும் கடமை என்பது வலியுறுத்தப்பட்டது.

தலைமையின் கூட்டுத்துவம் பற்றிய லெனினது கோட்பாட்டை மீண்டும் செயல்படுத்தவும் கட்சி வாழ்வின் ஒழுங்கு முறையை மேற்கொண்டு அபிவிருத்தி செய்யவும், 1953ம் ஆண்டில் ஸ்தாலின் காலமான பிறகு மத்தியக் கமிட்டி செய்த

வேலையை இருபதாவது காங்கிரஸ் ஒரு மனதாக ஆமோதித்தது. கட்சி ஸ்தாபனங்களின் செயல்திறமையையும் திரளான கட்சியினரின் படைப்பு ஊக்கத்தையும் மேம்படுத்த இந்த நடவடிக்கை உதவியது.

வரலாற்றில் தனி நபர் வகிக்கும் பாத்திரம் பற்றிய மார்க்ஸீய-லெனினீயக் கருத்தை விளக்கியும் ஸ்தாலினது தனிநபர் வழிபாட்டைக் கண்டனம் செய்து விமர்சித்தும் கட்சி நடத்திய விரிவான பிரசாரமும் தனி நபர் வழிபாட்டின் தீய விளைவுகளை அது அகற்றியதும் மிகுந்த முக்கியத்துவம் கொண்டிருந்தன.

தனி நபர் வழிபாடு என்பது ஒரு தனி மனிதனின் பாத்திரத்தை அளவு கடந்து பெருமைப்படுத்துவதும் திரளான பொது மக்களின் பாத்திரத்தைத் தாழ்த்துவதும் ஆகும். இது கம்யூனிஸக் கொள்கைவாதத்துக்கு அடிப்படையில் முரண்படுகிறது. திரளான பொது மக்களின் தலைவர்களும் வழிகாட்டிகளுமான, நிலையுறுதியும் வீரமும் வாய்ந்த புரட்சிக்காரர்களின் பாத்திரத்தை மார்க்ஸீயம்-லெனினீயம் உயர்வாக மதிக்கிறது. ஆனால் அதன் கருத்துப்படி வரலாற்றின் நிர்ணயகரமான சக்தியாக, அதன் படைப்பாளியாக விளங்குபவர்கள் திரளான பொது மக்களே ஆவர். ''...கோடானு கோடிப் படைப்பாளிகளின் அறிவு, யாவற்றிலும் மாண்புள்ள மேதை வாய்ந்த தீர்க்கதரிசனத்தைக் காட்டிலும் அளவிட முடியாதவாறு உயர்ந்த ஒன்றைப் படைக்கிறது'' என்றார் லெனின். (முழு நூல்திரட்டு, தொகுதி 35, பக்கம் 281).

ஸ்தாலினின் செயல்களில் இரண்டு அம்சங்களை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி காண்கிறது: ஒன்று பயனுள்ள அம்சம்—இதைக் கட்சி மதிக்கிறது—மற்றது தீங்கான அம்சம்—இதைக் கட்சி விமர்சித்து நிந்திக்கிறது.

ஸ்தாலின் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராக இருந்த ஆண்டுகளில் (இந்தப் பதவிக்கு அவர் 1922ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்), கம்யூனிஸ்ட் கட்சியினதும் அதன் மத்தியக் கமிட்டியினதும் தலைமையில் சோவியத் மக்கள் முக்கியத்துவத்திலும் கடினத்திலும் பிரமாண்டமான பணியை நிறைவேற்றினர்கள்—வரலாற்றிலேயே முதலா

வது சோஷலிஸ சமூகத்தை அவர்கள் நிறுவினர்கள், பொருளாதார நோக்கில் முன்பு பின்தங்கி இருந்த நாட்டைத் தொழில் துறை வளர்ச்சியில் முன்னணி உலக வல்லரசாக மாற்றினர்கள். மாபெரும் தேசபக்த யுத்த ஆண்டுகளில் கட்சியால் வழி நடத்தப்பட்ட சோவியத் மக்கள் இறவாப் புகழ் வாய்ந்த அருஞ் செயலை ஆற்றினர்கள். ஹிட்லர் ஜெர்மனியையும் அதன் கூட்டாளி நாடுகளையும் அவர்கள் முறியடித்தார்கள், சோஷலிஸத்தின் மாபெரும் வெற்றிகளைக் காத்தார்கள், பாசிஸத்தால் அடிமை ஆக்கப்படுவதிலிருந்து மனித சமுதாயத்தைக் காப்பாற்றினர்கள். யுத்தத்துக்குப் பிறகு சோவியத் மக்கள் கட்சியின் தலைமையில் மிகக் குறுகிய காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டமைத்துக் கம்யூனிஸக் கட்டுமானத்தை விரிவாகத் தொடங்கினர்கள்.

கட்சியினுடையவும் சோவியத் அரசினுடையவும் பிற தலைவர்களுடன் சேர்ந்து ஸ்தாலின், பெரிய ஒழுங்கமைப்பாளர், சித்தாந்த நிபுணர் என்ற முறையில் சோவியத் நாட்டில் சோஷலிஸ அடிப்படை மாற்றங்களைச் செயல்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டார். லெனினீயத்தின் பகைவர்களான திரோத்ஸ்கிவாதிகள், வலதுசாரி சந்தர்ப்பவாதிகள், பூர்ஷ்வா தேசீயவாதிகள் ஆகியோருக்கு எதிரான போராட்டத்தை அவர் தலைமை ஏற்று நடத்தினர். முதலாளித்துவ முற்றுகைச் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தினர். சோவியத் நாட்டின் தற்காப்புத் திறனை உயர்த்துவதற்குப் பாடுபட்டார். உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் வளர்ச்சிக்கும் விடுதலை இயக்கம் அனைத்தினதும் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய தொண்டுகள் மிகப் பெரியவை. இவை எல்லாவற்றாலும் அவர் பெருத்த மதிப்பையும் மக்களின் அன்பையும் பெற்றார்.

ஆனால், கட்சியின் தலைமையில் சோவியத் மக்கள் அடைந்த வெற்றிகள் எல்லாம், ஸ்தாலின் பெற்ற வெற்றிகளாக நாளடைவில் சித்திரிக்கப்பட்டன. படிப்படியாக அவரதுதனி நபர் வழிபாடு உருவாயிற்று. கட்சியும் சோவியத் மக்கள் அனைவரும் பெற்ற வெற்றிகளில் தனது பணிகளை ஸ்தாலின் மிகையாக மதிப்பிட்டார். தாம் தவறே செய்யாதவர் என்று நம்பத் தொடங்கினர், அதிகாரத்தைத் தீங்காகப்

பயன்படுத்தலானார். அவரிடம் இருந்த சில பாதகமான சொந்த இயல்புகள் இதற்குத் துணை செய்தன. தலைமையின் கூட்டுத்துவத்தையும் கட்சி வாழ்வின் ஒழுங்கு முறையையும் பற்றிய லெனினுடைய கோட்பாடுகளிலிருந்து அவர் வழுவலானார். தம் வாழ்க்கையின் இறுதிக் காலப் பகுதியில் ஸ்தாலின் செய்த தவறுகள் சிறப்பாகக் கடுமையானவை. ஜனநாயகம் தக்க காரணம் இன்றிக் குறுக்கப்படுவதும் சோஷலிஸச் சட்ட ஒழுங்கு முரட்டுத்தனமாக மீறப்படுவதும் ஆதாரமற்ற அடக்குமுறைகள் மேற்கொள்ளப்படுவதும் நிகழுமாறு விடப்பட்டன.

தனி நபர் வழிபாட்டின் விளைவாக நேர்ந்த தவறுகளும் திரிபுகளும் கம்யூனிஸக் கட்டுமானத்துக்குக் கேடு உண்டாக்கின. ஆனால் சோஷலிஸ சமூகத்தின் இயல்பையும் சோவியத் அமைப்பின் உண்மையான மக்கள் தன்மையையும் அவை மாற்றவில்லை, அவற்றால் மாற்ற முடியவும் இல்லை. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்களுக்கு உரிய சித்தாந்த, அரசியல், ஸ்தாபன அடிப்படைகளை அசைக்கவோ பலவீனப்படுத்தவோ அவற்றால் முடியவில்லை. கட்சி கடைப்பிடித்த கொள்கை சோவியத் மக்களின் அடிப்படை நலன்களை வெளியிட்டது, மக்களின் ஆதரவை எப்போதும் பெற்று வந்தது, சோஷலிஸ, கம்யூனிஸக் கட்டுமானம் வெற்றிகரமாக நடைபெற வகை செய்தது.

உட்கட்சி ஜனநாயகத்தையும் சோவியத் ஜனநாயகத்தையும் அபிவிருத்தி செய்யும் பொருட்டுக் கட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் சோவியத் சமூகத்தின் வாழ்வில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை உயர்த்தவும் சோவியத் சமூக, அரசு அமைப்பை வலுப்படுத்தவும் சோவியத் நாடு கம்யூனிஸத்துக்கு இட்டுச் செல்லும் பாதையில் வெற்றிகரமாக முன்னேறவும் துணை செய்தன. தனி நபர் வழிபாட்டால் விளைந்த தவறுகளும் குறைகளும் சோவியத் சட்ட ஒழுங்கு மீறப்படுவதும் களைந்து அகற்றப்பட்டன. அரசுத் தற்காப்பு அமைச்சரகம், நீதிமன்றம், அரசாங்க வழக்குரைஞர் அலுவலகம் முதலிய நிர்வாக உறுப்புக்கள் மீது கட்சி, அரசுக் கண்காணிப்பு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது. சோதித்துச்

சரிபார்க்கப்பட்ட ஊழியர்களால் அவை வலுவாக்கப் பட்டன. மக்கள் பகைவர்கள் என அநியாயமாக அறிவிக்கப் பட்டுக் கண்டனம் செய்யப்பட்டிருந்த நேர்மையுள்ள பலர், இழந்த நற்பெயரையும் உரிமைகளையும் மீண்டும் அளிக்கப் பெற்றார்கள். சோஷலிஸச் சட்ட ஒழுங்கும் அரசியல் சட்டத் தால் நிலைநாட்டப்பட்டிருந்த சோவியத் பிரஜைகளின் உரிமைகளும் எந்த வகையிலும் மீறப்படுவதற்குக் கட்சி முடிவு கட்டியது.

தனி நபர் வழிபாடும் அதன் தீய விளைவுகளும் பகிரங்க மாகக் கண்டனம் செய்யப்படுவது கம்யூனிஸ எதிர்ப்புப் பிரசாரத்துக்கும் சோஷலிஸம், கம்யூனிஸம் ஆகியவற்றின் பகைவர்களுடைய வன்மம் நிறைந்த புனை சுருட்டுக்களுக்கும் ஓரளவு ஊட்டம் அளிக்கும் என்பதைக் கட்சி அறிந்திருந்தது. ஆனால் இந்தத் தாற்காலிக இடுக்கண்கள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளால் இறுதியாக விளையும் பெருத்த நன்மைகளுடன் ஒப்பிடும்போது மிக மிக அற்பமானவை என்பதையும் அது அறிந்திருந்தது. இந்தப் பிரச்சினையில் உயர்ந்த கோட்பாட்டுச் சிந்தனை களையும், சோவியத் யூனியனிலும் சர்வதேச அரங்கிலும் கம்யூனிஸத்துக்கான போராட்டத்தின் நலன்களையும் அது வழி காட்டியாகக் கொண்டது.

தனி நபர் வழிபாடு கண்டனம் செய்யப்பட்டது, கட்சி ஊழியர்களையும் எல்லாக் கம்யூனிஸ்டுகளையும் லெனினது உணர்வில் போதித்துப் பயிற்றுவதற்கும் கட்சியின் அணி களிலும் அதன் தலைமை உறுப்புக்களிலும் சரியான பரஸ்பர உறவுகளை ஏற்படுத்துவதற்கும் துணை புரிந்தது. கட்சி, அரசுத் தலைவர்களுக்கு, கட்சிக்கும் மக்களுக்கும் முன் அவர்க ளுக்கு உள்ள பெருத்த பொறுப்பை அது நினைவுபடுத்தி யது. தலைவர்களுக்கு நிறைய அளிக்கப்படுகிறது, அவர்க ளிடமிருந்து நிறையக் கோரவும் படுகிறது. ஒவ்வோர் அரசியல் தலைவரின் பாத்திரத்தையும் கட்சியும் மக்களும் எப்போதும் நியாயமாக மதிப்பீடு செய்கிறார்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸினுடைய தீர்மானங்கள் சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் விரிவான வரவேற்பும் ஆமோதிப்பும் பெற்

றன. காங்கிரஸ் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பற்றிய லெனினுடைய கோட்பாடுகளுக்கு விசுவாசம் தெரிவித்தது. சோஷலிஸ நாடுகளின் நட்புறவையும் எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும் சோதரப் பிணைப்புக்களையும் எல்லா வகையிலும் வலுப்படுத்தவும், தொழிலாளர் இயக்கத்துக்கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் திடமான ஆதரவு அளிக்கவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாகப் பாடுபடுகிறது என்று அது அறிவித்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ், சோவியத் யூனியனின் வளர்ச்சியில் மட்டுமே அல்ல, சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்திலும் உலக விடுதலை இயக்கம் அனைத்திலும் முக்கியக் கட்டமாக விளங்கியது. எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் தலைவர்கள் அதன் பயன் விளைக்கும் முக்கியத்துவத்தைப் பாராட்டினர்கள்.

நாட்டுப் பொருளாதாரத்தைப் புது ஏற்றம் பெறச் செய்ய முயற்சி

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸின் தீர்மானங்களுக்கு இணங்க, கட்சி தனது கவனத்தை ஒருமுனைப்படுத்திய மிக முக்கியப் பொருளாதாரப் பணி, விவசாயத்தின் பின்தங்கிய நிலையைப் போக்குவது ஆகும். விவசாயம் பின்தங்கிவிட்டதற்குக் காரணங்கள் பல. யுத்தம் அதற்குப் பெருத்த சேதம் விளைத்தது. யுத்தத்துக்குப் பிந்திய ஆரம்ப ஆண்டுகளில் அரசின் பிரயாசைகள் தொழில் துறையை மீட்டமைப்பதிலேயே ஒருமுனைப் பட்டிருந்தன. எனவே, விவசாய வளர்ச்சிக்குப் போதிய நிதிகளை ஒதுக்க அதனால் முடியவில்லை. ஆனால் விவசாயம் பின்தங்கியதற்கு இவை தவிர வேறு காரணங்களும் இருந்தன. கூட்டுப் பண்ணை அமைப்பின் வாய்ப்புக்கள் முழுமையாகப் பயன்படுத்தப் பெறவில்லை. சமூக உற்பத்தியின் வளர்ச்சியில், தம் உழைப்பின் விளைவுகளில், கூட்டுப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணையினரும் பொருளியல் அக்கறை கொள்ளுமாறு செய்யும் கோட்பாடு மீறப்பட்டது. பல விவசாய விளை பொருள்களின் விலைகள் யுத்தத்துக்கு முன்பே நிர்ணயிக்கப் பட்டவை, மிக மிகத் தாழ்ந்தவையாக இருந்தன. இவற்றால் கூட்டுப் பண்ணைகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது.

கூட்டுப் பண்ணையினரின் ஊதியமும் மிகக் குறைவாய் இருந்தது.

கூட்டுப் பண்ணைகளின் தலைமையிலும் கூட்டுப் பண்ணை வாழ்விலுமே இருந்த இந்தக் குறைகளை, கூட்டுப் பண்ணைகளதும் கூட்டுப் பண்ணையினருடையவும் பொருளியல் அக்கறையைத் தீவிரப்படுத்துவதன் மூலமும் தொழில் நுட்ப உதவியை அதிகரிப்பதன் மூலமும் போக்கத் தொடங்கின கட்சியும் அரசும். விவசாய விளைபொருள்களின் அரசுக் கொள் முதல் விலைகள் கணிசமாக உயர்த்தப்பட்டன. கிராமங்கள் அதிக டிராக்டர்களும் அறுவடை இயந்திரங்களும் பிற விவசாய இயந்திரங்களும் வாங்க ஆரம்பித்தன. அனுபவம் முதிர்ந்த கட்சித் தலைவர்கள் பலரும் விவசாய நிபுணர்கள், கால்நடை வளர்ப்பு நிபுணர்கள், மெக்கானிக்குகள் முதலிய விவசாயத் தேர்ச்சியாளர்களும் நகரங்களிலிருந்து கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் வேலை செய்யச் சென்றார்கள்.

தானிய உற்பத்தியை, சிறப்பாக, முக்கிய உணவுப் பயிரான கோதுமையின் விளைச்சலை அதிகரிப்பது முதன்மையாக அவசியமாயிருந்தது. இந்த லட்சியத்தை நிறைவேற்ற எதிலிருந்து முயற்சி தொடங்குவது? இந்தக் குறிக்கோளுக்கு அதிக விரைவில் இட்டுச் செல்லும் வழி எது? இந்தக் கேள்வி எழுந்தது. சோவியத் யூனியனில் அந்தக் காலத்தில் திறன் மிக்க டிராக்டர் தொழில் இயங்கியது, ஆனால் கனிய உரங்கள் போதிய அளவு இல்லை. அந்த நிலைமையில் நாட்டின் கிழக்கே, கஸாஃஸ்தானிலும் சைபீரியாவிலும் இருந்த கன்னிநிலங்களையும் தரிசு நிலங்களையும் பண்படுத்துவதே குறிக்கோளை விரைவில் அடையும் வழியாக இருந்தது. மிக விசாலமான இந்த நிலப்பரப்புக்கள் பல நூற்றாண்டுகளாக வெறுமையாய்க் கிடந்தன, மக்களுக்கு ஒரு பயனும் தரவில்லை. அக்டோபர் புரட்சிக்கு முன்பும் சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளிலும் ஆதிக்காலக் கருவிகளின் உதவியால் தனிமையில் பாடுபட்ட விவசாயிகளுக்குக் கன்னி நிலத்தைப் பண்படுத்துவது இயலாததாக இருந்தது. யுத்தத்துக்கு முன்பு சோவியத் அரசினிடம் இந்தச் செயலை நிறை வேற்றத் தேவையான டிராக்டர்களும் பிற விவசாய இயந்திரங்களும்

போதிய எண்ணிக்கையில் இல்லை. இப்போது, புதிய டிராக்டர் தொழிற்சாலைகளும் விவசாய இயந்திர நிர்மாணத் தொழிற் சாலைகளும் நிறுவப்பட்டு விட்டமையால் கன்னி நிலத்தைப் பண்படுத்துவதற்குத் திறன் மிக்க இயந்திரங்களை அனுப்பி வைப்பது அரசுக்கு முடிந்தது.

கட்சியின் அழைப்பை ஏற்றுக் கன்னி நிலத்தைப் பண் படுத்தும் பொருட்டு லட்சக் கணக்கானவர்கள் முன்வந் தார்கள். இவர்களில் பெரும்பாலோர் இளங்கம்யூனிஸ்ட் யுவர்களும் யுவதியரும். சோவியத் யூனியனின் எல்லா நாட் டினங்களையும் சேர்ந்தவர்கள் இவர்களில் இருந்தார்கள். இவ்வாறு கன்னி நிலத்தில் குடியேறியவர்களுக்குத் தேவை யான நிதிவசதிகளையும் இயந்திரங்களையும்—நான்கு லட்சம் டிராக்டர்கள், எண்பதினாயிரம் அறுவடை இயந்திரங்கள் இரண்டு லட்சத்து இருபதினாயிரத்துக்கும் மேல் லாரிகள் ஆகியவற்றை—அரசு வழங்கியது. வெற்றியிருந்த ஸ்தெப்பி வெளிகளில் அரசாங்கப் பண்ணைகளின் வசதியான குடி யிருப்புக்களும் அவற்றைச் சுற்றி எல்லையின்றிப் பரந்த கோதுமை வயல்களும் காட்சி அளிக்கலாயின. மூன்று ஆண்டுகளில் (1954-1956) சுமார் 360 லட்சம் ஹெக்டார் (ஏறக்குறைய எட்டு கோடி ஏக்கர்) கன்னி நிலமும் தரிசு நிலமும் பண்படுத்தப்பட்டன. குறுகிய காலத்தில் நாட்டுக்குப் பல கோடி டன் கோதுமை அதிகப்படியாகக் கிடைத்தது.

அரசு இயந்திர டிராக்டர் நிலையங்கள் மாற்றி அமைக் கப்பட்டது முக்கிய நடவடிக்கையாகத் திகழ்ந்தது. இயந் திர-டிராக்டர் நிலையங்களிடம் அனேகமாக எல்லா விவசாய இயந்திரங்களும் இருந்தன. கூட்டுப் பண்ணைகளிடமோ, நிலம் இருந்தது. இயந்திர-டிராக்டர் நிலையங்கள் ஒப்பந்தப் படி முக்கிய வயல் வேலைகளை (உழவு, விதைப்பு, அறுவடை) செய்து அவற்றுக்காகப் பொருள்வகையில், அதாவது கூட்டுப் பண்ணைகளின் விளைச்சலில் ஒரு பகுதியை, ஊதிய மாகப் பெற்றன. பெரும்பாலான கூட்டுப் பண்ணைகள் ஒப்பு நோக்கில் சிறியவையாகவும் பொருளாதார அம்சத்தில் பல வீனமாகவும் இருந்தபோது இந்த முறை அவற்றுக்கு ஏற்ற தாய் இருந்தது. ஆனால் கூட்டுப் பண்ணைகள் பெரியவை யாகி பொருளாதார நோக்கிலும் வலுவடைந்துவிட்ட பின்,

தேவையான இயந்திரங்கள் எல்லாவற்றையும் தாமே வாங்கிக்கொள்ள அவற்றுக்கு வசதி ஏற்பட்டு விட்டது. எனவே இயந்திர-டிராக்டர் நிலையங்கள் மூடப்பட்டன. அவற்றிடம் இருந்த இயந்திரங்கள் கூட்டுப் பண்ணைகளுக்கு விற்கப்பட்டு விட்டன. நிலமும் எல்லா விவசாய இயந்திரங்களும் ஒரே கைகளில்—கூட்டுப் பண்ணைகளில்—குவிக்கப்பட்டன.

இயந்திர-டிராக்டர் நிலையங்கள் மூடப்பட்டது அரசுக்கும் கூட்டுப் பண்ணைகளுக்கும் இடையே பொருளாதாரப் பரஸ்பர உறவுகளில் மாறுதல்கள் ஏற்படுத்தியது. கட்சி இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து விரிவாகப் பரிசீலனை செய்தது. விவசாய விளைபொருள்களின் அரசாங்கக் கொள்முதல் முறை மாற்றி அமைக்கப்பட்டது. கூட்டுப் பண்ணைகளிடம் அரசாங்கம் விவசாய விளைபொருள்களை வாங்குவதற்குரிய பல்வேறு வடிவங்கள் (இயந்திர-டிராக்டர் நிலையங்களின் வேலைக்குப் பொருள்வகை ஊதியம், திட்டப்படி, நிலையான விலைகளுக்குக் கட்டாயமாக வழங்கப்படும் விளை பொருள்கள், திட்டத்துக்கு உபரியான கொள்முதல்கள் ஆகியன) 1958 வரை நிலவி வந்தன. இவற்றுக்குப் பதிலாக, கூட்டுப் பண்ணைகளிடம் விவசாய விளைபொருள்கள் எல்லாவற்றையும் நாட்டின் வெவ்வேறு மண்டலங்களுக்கு ஏற்ப வெவ்வேறாக நிர்ணயிக்கப்பட்ட ஒரே விலைகளுக்கு அரசு வாங்கிக் கொள்ளும் வடிவத்தில் ஒருபடித்தான முறை புகுத்தப்பட்டது. கூட்டுப் பண்ணைகளிடம் வாங்கும் விளைபொருள்களின் அளவுகளை நாட்டின் நலன்களுக்கு ஏற்ப நிர்ணயிப்பதற்கும் கொள்முதல் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் உரிமையை அரசு வைத்துக்கொண்டது. கூட்டுப்பண்ணைகளுடன் அரசின் பொருளாதார உறவுகள் முழுமையாகச் சரக்கு வர்த்தக உறவுகளின் அடிப்படையில் அமையலாயின.

விவசாய விளைபொருள்களின் அரசுக் கொள்முதல் பற்றிய புதிய முறை, வளர்ச்சி அடைந்த சோஷலிஸ சமூகத்தின் நிலைமைகளுக்கு அதிகமாகப் பொருந்தியது. பொருள் விளைச்சலை அதிகரிப்பதில் கூட்டுப் பண்ணைகளுக்கு இதனால் அக்கறை ஏற்பட்டது. விவசாய விளைபொருள்களின் கொள்முதல் விலைகள் உயர்ந்தன, நிலைப்பட்டன. கூட்டுப் பண்ணை எந்த அளவுக்குப் பொருள்களை விளைவித்து அரசுக்கு விற்றதோ

அந்த அளவுக்கு அதன் வருவாய் அதிகரித்தது. கூட்டுப் பண்ணைகள் பொருளாதாரத் தேவைகளுக்கும் பண்பாட்டுத் தேவைகளுக்கும் அதிக நிதிகளை ஒதுக்கலாயின. சில கூட்டுப் பண்ணைகள் ஓர் ஆண்டுக் காலத்தில் கூட்டுப் பண்ணையினருக்கு ஊதியத்தை முன்பணமாகக் கொடுக்கத் தொடங்கின. இந்த ஊதிய முறை சமூக உற்பத்தி வளர்ச்சியில் கூட்டுப் பண்ணையினரின் அக்கறையை அதிகம் ஆக்கிற்று.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் கூட்டுப்பண்ணைப் பொருளாதார ஏற்றத்துக்கு அனுகூல நிலைமைகளை ஏற்படுத்தின. 1953ம் ஆண்டு அரசு 311 லட்சம் டன் தானியம் கொள்முதல் செய்தது, 1958ம் ஆண்டிலோ இந்தக் கொள்முதல் அளவு 566 லட்சம் டன், அதாவது, கிட்டத்தட்ட இருமடங்கு ஆயிற்று. கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இறைச்சி, பால், வெண்ணெய் ஆகியவற்றின் உற்பத்தி அதிகம் ஆயிற்று. சோஷலிஸ சமூக வளர்ச்சியின் இந்தக் கட்டத்தில் கூட்டுப் பண்ணைகளின் வளர்ச்சிக்கு உரிய சரியான வழியைக் கட்சி நிர்ணயித்தது என்பதை இவை எல்லாம் காட்டின. கூட்டுப் பண்ணைகளுடன் அரசின் புதிய பொருளாதார உறவுகளில் மேற்கொண்டு சீர்திருத்தங்கள் செய்வது அவசியமாய் இருந்தது என்பது கூறுமலே விளங்கும். புதிய நிலைமைகளில் கூட்டுப் பண்ணைகள் தங்கள் உற்பத்திக்குத் தேவைப்படும் எல்லா இயந்திர சாதனங்களுக்கும் அவற்றைப் பழுது பார்ப்பதற்கும் இயந்திரம் ஓட்டும் ஊழியர்களைப் பயிற்றுவதற்கும் வகை செய்யும் பொறுப்பைத் தாங்களே ஏற்க வேண்டி இருந்தது. இந்த விஷயத்தில் சிறப்பாகக் கவனம் செலுத்துவது அவசியம் ஆயிற்று.

சோவியத் தொழில் துறையும் விரைந்த வளர்ச்சி பெற்றது. யுத்தத்துக்குப் பிந்திய பதின்மூன்று ஆண்டுகளில் (1946-1958) பன்னிரண்டாயிரத்துக்கும் மேல் பெரிய தொழிற்சாலைகள் மீட்டமைக்கவும் புதிதாகக் கட்டவும் பட்டன. பதின்மூன்றே ஆண்டுகளில் சோவியத் மக்கள் நாட்டின் தொழில் திறனை யுத்தத்துக்கு முன் இருந்ததைவிட இன்னும் நான்கு மடங்கு பெருக்கி விட்டார்கள். தொழில் துறை உற்பத்தியின் மொத்த அளவில், இருபதாவது கட்சிக் காங்கிரஸ்

திட்டமிட்டது போலவே, மின் ஆற்றல் உற்பத்தி, இயந்திர நிர்மாணம், உலோக வார்ப்பு, இரசாயனம் ஆகிய தொழில்களின் பங்கு அதிகரித்தது. தொழில்துறையின் இந்தக் கிளைகள் தேசீயப் பொருளாதாரம் அனைத்தினதும் தொழில் நுட்ப முன்னேற்றத்துக்கு இன்றியமையாதவை என்பது குறிப்பிடத் தக்கது.

சோவியத் தொழில்துறை, வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளுடன் பொருளாதாரப் போட்டியில் முக்கியமான கட்டத்தை அடைந்து விட்டது. 1957, 1958ம் ஆண்டுகளில் சோவியத் யூனியன் தேனிரும்பு, எஃகு, நிலக்கரி, கடைச்சல் இயந்திரங்கள், சிமெண்டு, துணி வகைகள், தோல் காலணிகள் ஆகியவற்றினது மொத்த உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளை விஞ்சி விட்டது. 1958ல் சோவியத் யூனியனில் உலோகம் வெட்டும் கடைச்சல் இயந்திரங்கள் 138 ஆயிரத்துக்கும் மேல் நிருமிக்கப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலோ, 113 ஆயிரமே தயாரிக்கப்பட்டன.

சோவியத் யூனியனில் இரண்டு லட்சத்துக்கும் கூடுதலான தொழில் நிலையங்கள் இயங்கி வந்தன. ஒரு லட்சத்துக்கு மேல் புதிதாகக் கட்டிய தொழில் நிலையங்கள் இருந்தன. இவற்றை நிர்வகிப்பதற்குரிய புதிய வடிவங்களின் தேட்டம் நடந்து கொண்டிருந்தது. இந்த நோக்கத்துடன் நாட்டின் முக்கியமான பொருளாதார, அரசாங்க நிர்வாகப் பிரதேசங்களில் தேசீயப் பொருளாதார ஆலோசனைக் கழகங்கள் அமைக்கப்பட்டன. முன்னர் கிளை அமைச்சகங்களின் கீழ் இருந்த பல தொழில் நிலையங்கள் இந்தக் கழகங்களின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டன. கிளை அமைச்சகங்கள் மூடப்பட்டன. தொழில்துறையின் நிர்வாகத்தையும் அனைத்து அரசு முக்கியத்துவம் உள்ள நிர்மாணத்தையும் கிளைகளின் அடிப்படையில் நடத்தும் கோட்பாட்டுக்குப் பதில் பிரதேசங்களின் அடிப்படையில் நடத்தும் கோட்பாடு மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் தொழில்துறை நிர்வாகத்தின் புதிய முறையில் ஆழ்ந்த குறைபாடுகள் நாளடைவில் தென்படலாயின. நவீனத் தொழில்துறையின் ஒவ்வொரு கிளையும் உற்பத்தி-தொழில்

நுட்ப நோக்கில் ஒரே முழுமை பெற்றிருப்பது தெரிந்த விஷயம். மாற்றி அமைத்தது தொழில்துறைக் கிளைகளின் இந்த ஒருமையைக் குலைத்தது. தொழில் கிளைகளின் நிர்வாகத்தைப் பெருந்தொகையான பொருளாதாரப் பிரதேசங்களாக இது கூறு படுத்தியது. பல்வேறு பொருளாதாரப் பிரதேசங்களைச் சேர்ந்த தொழில் நிலையங்களுக்கிடையே முன்பு ஏற்பட்டிருந்த பொருளாதாரத் தொடர்புகள் குலைந்தன. அனைத்து அரசு நலன்களுக்குக் கேடு விளைக்கும் வட்டார நலன்கள் தலைதூக்கத் தொடங்கின. தனித் தனித் தொழில் நிலையங்களுடையவும் நாட்டின் தொழில்துறை அனைத்தினுடையவும் ஒரு சீரான, திட்டமிட்ட வேலையை இவை எல்லாம் பாதித்தன. பிற்காலத்தில் தேசீயப் பொருளாதார ஆலோசனைக் கழகங்களின் வேலையை ஆராய்ந்த கட்சி, அவை இந்தக் காலக் கட்டத்தில் சோஷலிஸ உற்பத்தி வளர்ச்சியின் நலன்களுக்குப் பொருந்தவில்லை என்று ஒப்புக் கொண்டது.

கம்யூனிஸ்ட் கட்சி விஞ்ஞானம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியில் பெருத்த கவனம் செலுத்தியது. 1958ம் ஆண்டில் சோவியத் யூனியனில் 3,200 விஞ்ஞான நிலையங்கள் இருந்தன. இரண்டு லட்சத்து எண்பதாயிரத்துக்கும் மேல் விஞ்ஞான ஊழியர்கள் இவற்றில் பணி ஆற்றி வந்தார்கள். பள்ளிப் பருவம் எய்திய எல்லாச் சிறுவர் சிறுமியருக்கும் எட்டாண்டுக் கல்வி சோவியத் யூனியனில் 1958ல் கட்டாயம் ஆக்கப்பட்டது, சோஷலிஸத்தின் பிரபல வெற்றியாக விளங்கியது. நாட்டு மக்களில் ஏறக்குறைய 5 கோடி 90லட்சம் பெயர் உயர் கல்வி, நடுத்தரக் கல்வி அல்லது முற்றுப் பெருத நடுத்தரக் கல்வி பெற்றிருந்தார்கள். இருபதுக்களின் தொடக்கத்திலோ, நாட்டு மக்களில் மூன்றில் இருவர் எழுத்தறிவு அற்றவர்களாய் இருந்தார்கள் என்பது தெரிந்ததே. 1958ல் உழைக்கும் வயது வந்த சோவியத் குடி மக்களில் பாதிப் பெயர் குறைந்த பட்சம் ஏழு-எட்டு ஆண்டுக் கல்வி பெற்றிருந்தார்கள். ஐந்தில் ஒரு பகுதியினர் நடுத்தர அல்லது உயர் கல்வி பயின்றிருந்தார்கள். சோவியத் யூனியனில் நடந்த பண்பாட்டுப் புரட்சியின் மிகப் பெரிய வெற்றி ஆகும் இது.

1957ம் ஆண்டு அக்டோபர் மாதம், அக்டோபர் புரட்சியின் நாற்பதாவது ஆண்டு நிறைவுக்கு முன், சோவியத்

யூனியனில் வரலாற்றிலேயே முதன் முறையாக பூமியின் செயற் கைத் துணைக்கோள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. விண் வெளியை வெற்றி கொள்ளும் சகாப்தம் தொடங்கியது. முதல் சோஷலிஸ நாடான சோவியத் யூனியனின் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஒளி வீசும் சான்றாக விளங்கியது இது.

பொருளாதார வெற்றிகளின் விளைவாக சோவியத் மக் களின் பொருள் வசதிகள் இடையறாது உயர்ந்தன. சோவியத் நாட்டில் தேசிய வருமானம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. இது சமூக நலன்களுக்காக, உழைப்பாளி களின் நலன்களுக்காகவே, வினியோகிக்கப்படுகிறது. தேசிய வருமானத்தின் ஒரு பகுதி சோஷலிஸ உற்பத்தியை விரிவு படுத்துவதற்கும் அரசு இயந்திரத்தை நடத்துவதற்கும் நாட்டின் தற்காப்புக்கும் செலவாகிறது. இதன் சுமார் மூன்றில் இரண்டு பகுதி உழைப்பாளிகளின் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுகிறது.

யுத்தத்துக்கு முந்திய 1940ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சோவியத் மக்களின் எதார்த்த வருமானம் 1958ம் ஆண்டில் இரு மடங்குக்கும் மேல் அதிகரித்தது. சோவியத் தொழி லாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் இரண்டு ஊற்றுக்களிலிருந்து வருவாய் கிடைக்கிறது. ஒன்று, ஊதிய நிதி. ஒவ்வொருவரது உழைப்பின் அளவுக்கும் தரத்துக்கும் ஏற்ப இதிலிருந்து ஊதியம் வழங்கப்படுகிறது. மற்றது, சமூக உபயோக நிதி. இதன் பணம் சமூகத்தின் எல்லா உறுப்பின ருக்கும், அவர்கள் செலவிட்ட உழைப்பின் அளவு எத்தகை யதாக இருந்தாலும், அவர்களுடைய தேவைகளை நிறை வேற்றுவதற்காக வினியோகிக்கப்படுகிறது (ஓய்வு கால ஊதியமும் இலவச மருத்துவ உதவியும் கல்வியும், பள்ளிப் பருவத்துக்கு முந்திய குழந்தை நிலையங்களில் சிறுவர் சிறுமியரின் பராமரிப்பும்). ஊதிய நிதியும் சமூக உபயோக நிதியும் இடையறாது அதிகரிப்பது சோஷலிஸ சமூகத்தின் இயல்பாகும்.

சமூக உபயோக நிதி அதிகரித்ததனால் அரசு ஓய்வுகால ஊதியங்கள் பற்றிய புதிய சட்டம் பிறப்பிப்பது சோவியத் அரசுக்கு 1956ல் இயன்றது. ஓய்வுகால ஊதியம் பெறும்

வயதுவந்த எல்லாத் தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழியர்களுக்கும் ஓய்வுகால ஊதியம் கிடைக்கலாயிற்று. தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களின் தனித் தனிக் குழுக்களுக்கு ஓய்வுகால ஊதியம் இரு மடங்கும் இன்னும் மேலும் அதிகம் ஆக்கப்பட்டது. மாதர்களுக்குச் சம்பளத்துடன் பேறுகால விடுமுறை நீடிக்கப்பட்டது. சனிக் கிழமைகளிலும் உற்சவ விடுமுறைகளுக்கு முந்திய நாட்களிலும் வேலை நாளில் இரண்டு மணி நேரம் குறைக்கப்பட்டது. 1957ம் ஆண்டு முதல் தொழிலாளர்களதும் அலுவலக ஊழியர்களதும் வேலை நாட்கள் ஏழு, ஆறு மணிகளாக மாற்றப்பட்டன. நாட்டில் குடியிருப்பு வீடுகளின் கட்டுமானம் பெரும் அளவில் நடைபெற்றது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் உலகக் கம்யூனிஸ இயக்கமும்

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி பிற நாடுகளின் சோதரக் கட்சிகளுடன் ஒத்துழைப்பை இடைவிடாது வலுப்படுத்தி வந்தது. 1957ம் ஆண்டு நவம்பர் மாதம் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் நாற்பதாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதற்காக மாஸ்கோவுக்கு வந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது நலனுக்கு உரிய பிரச்சினைகள் பற்றிக் கலந்து ஆலோசித்தார்கள். முதலில் பன்னிரண்டு சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளது ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பின்னர், அறுபத்து நான்கு உலக நாடுகளின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளுடைய பிரதிநிதிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அந்தக் காலத்தில் உலகக் கம்யூனிஸ இயக்கத்தில் மூன்று கோடி முப்பது லட்சத்துக்கு மேல் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள்.

1935ம் ஆண்டு நடந்த கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது காங்கிரஸுக்குப் பின், கம்யூனிஸ்ட் கட்சிகளின் யாவற்றிலும் பிரதிநிதித்துவம் மிக்க மகாநாடாக விளங்கியது இது. 1943ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் அகிலம் கலைக்கப்பட்ட பிறகு நடந்த கம்யூனிஸ்ட் கட்சிகளின் முதல் கூட்டம் இதுவே.

கருத்துப் பரிமாற்றங்களின் விளைவாக, சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் மகாநாடு ஓர்

அறிக்கையை ஏற்றுக் கொண்டது. உலக வளர்ச்சி குறித்த முக்கியக் கோட்பாட்டு ரீதியான பிரச்சினைகள் பற்றி சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் செய்த முடிவுகளும் வரையறுப்புக்களும் இந்த அறிக்கையில் பிரதிபலித்தன. சமாதானத்துக்கும் சோஷலிஸத்துக்குமான போராட்டத்தின் அனுபவம் சித்தாந்த ரீதியில் பொதுமைப் படுத்தப்பெற்றது. சமாதானத்திற்காகவும் புதிய உலக யுத்தத்துக்கு ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் ஆயத்தங்களை எதிர்த்தும் போராடுவதே கம்யூனிஸ்டுகளுடையவும் எல்லா முற்போக்குச் சக்திகளுடையவும் மிக முக்கியமான சர்வதேசக் கடமை என்று கூறியது அறிக்கை.

சோஷலிஸப் புரட்சி, சோஷலிஸக் கட்டுமானம் ஆகியவற்றின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துக் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் கொண்டிருந்த கருத்துக்களின் ஒருமையை ஆலோசனைக் கூட்டம் வெளியிட்டது. வெவ்வேறு சோஷலிஸ நாடுகளில் நிலவும் நிலைமைகளில் உள்ள வேறுபாட்டின் விளைவாக சோஷலிஸக் கட்டுமானத்தின் வடிவங்களிலும் முறைகளிலும் வேறுபாடு தவிர்க்க இயலாதவாறு ஏற்படுகிறது. இது மார்க்ஸிய-லெனினிய போதனையின் உணர்வுக்கு முற்றிலும் பொருந்துவதே.

ஆனால் சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கான அடிப்படை இயல்புகளும் விதிகளும் சோஷலிஸப் பாதையை மேற்கொள்ளும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை, கட்டாயமானவை. அவை சுருக்கமாகப் பின் வருவன:

—தனது மார்க்ஸிய-லெனினியக் கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்தின் வழிகாட்டி நடத்தும் பாத்திரம்;

—ஏதேனும் ஒரு வடிவத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடத்தப்படுவதும் ஏதேனும் ஒரு வடிவத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்படுவதும்;

—பெரும்பாலான விவசாயிகள் திரளுடனும் உழைப்பாளிகளின் பிற வகுப்புக்களுடனும் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம்;

—முதலாளித்துவ உடைமை ஒழிக்கப்படுவதும் பிரதான உற்பத்திச் சாதனங்கள் சமூக உடைமை ஆக்கப்படுவதும்;

—விவசாயம் படிப்படியாக சோஷலிஸ முறையில் மாற்றி அமைக்கப்படுவது;

—சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நிறுவுவதையும் உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு தேசீயப் பொருளாதாரம் திட்டப்படி அபிவிருத்தி செய்யப்படுவது;

—கொள்கைவாதத்திலும் பண்பாட்டிலும் சோஷலிஸப் புரட்சியைச் செயல்படுத்துவதும் சோஷலிஸக் குறிக்கோளுக்கு விசுவாசம் உள்ள அறிவு ஜீவிகளைப் பெருத்த எண்ணிக்கையில் பயிற்றுவதும்;

—நாட்டின ஒடுக்கு முறையை ஒழிப்பதும் மக்கள் இனங்களுக்கு இடையே சம உரிமையும் சோதர நட்பும் ஏற்படுத்துவதும்;

—சோஷலிஸத்தால் பெற்ற நலங்களை வெளி, உள் பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பது;

—குறித்த நாட்டின் தொழிலாளி வர்க்கம் பிற நாடுகளின் தொழிலாளி வர்க்கத்துடன் ஒருமைப்பாட்டை—பாட்டாளி வர்க்க சர்வதேசீயத்தை—கடைப்பிடிப்பது.

அறிக்கை சந்தர்ப்பவாதத்துக்கு பலத்த அடி கொடுத்தது. கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் அணிகளில் திரிபுவாதத்தையும் வரட்டுச் சூத்திரவாதத்தையும் உறுதியாக எதிர்த்து வெற்றி கொள்ளும்படி அறைகூவல் விடுத்தது.

அறுபத்து நான்கு கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளது மகாநாடு உலகு அனைத்தின் உழைப்பாளிகளுக்கும் நல்லெண்ணம் உள்ளவர்கள் அனைவருக்கும் **சமாதானப் பிரகடனம்** விடுத்தது. சமாதானப் போராட்டத்தை வலுப்படுத்துமாறும் யுத்த நெருப்பை மூட்டிவிட முயலும் ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகள் விஷயத்தில் அதிக விழிப்புடன் இருக்கும்படியும் மகாநாடு உலக மக்களை வேண்டிக்கொண்டது.

அறிக்கையும் சமாதானப் பிரகடனமும் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளால் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது, கம்யூனிஸ இயக்கத்தின் வளர்ச்சிக்கும், சோஷலிஸ முகாமை மேலும் வலுப்படுத்துவதற்கும், சமாதானம், ஜன

நாயகம், சோஷலிஸம் ஆகியவற்றுக்காக எல்லா மக்களினங்களும் நடத்தும் போராட்டத்திற்கும் புதிய வருங்கால வாய்ப்புக்களைத் தோற்றுவித்தது.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய இரண்டாவது மகாநாடு 1960 நவம்பரில் மாஸ்கோ நகரில் கூடியது. உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் வரலாறு முழுவதிலும் யாவற்றிலும் பிரதிநிதித்துவம் மிக்கதாக விளங்கியது இது. எண்பத்தொரு நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

அனைத்து உலக மக்களுக்கு அறிக்கையையும் வேண்டுகோளையும் மகாநாடு ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது. அறிக்கையில் நவீனக் காலகட்டத்தின் தன்மைச் சித்திரிப்பு தரப்பட்டிருக்கிறது: ''முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பு நமது காலகட்டத்தின் முக்கிய உள்ளடக்கம் ஆகும். இந்தப் பரிணமிப்பு மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியால் தொடங்கி வைக்கப்பட்டது. இது, ஒன்றுக்கு ஒன்று எதிரான இரண்டு சமூக அமைப்புக்களிடையே போராட்டம் நிகழும் காலகட்டம், சோஷலிஸப் புரட்சிகளும் தேசீய விடுதலைப் புரட்சிகளும் நிகழும் காலகட்டம், ஏகாதிபத்தியம் தகர்ந்து சரிந்து, காலனி ஆட்சி அமைப்பு ஒழிக்கப்படும் காலகட்டம், மேலும் மேலும் புதிய மக்கள் இனங்கள் சோஷலிஸப் பாதைக்குப் பரிணமிக்கும் காலகட்டம், உலகு பரவிய அளவில் சோஷலிஸமும் கம்யூனிஸமும் வெற்றி வாகை சூடும் காலகட்டம்.''

முதலாளித்துவ நாடுகளின் உலக அமைப்பு ஆழ்ந்த வீழ்ச்சிக்கும் சிதறலுக்கும் உட்பட்டிருக்கிறது. உலக அரங்கில் ஒப்பு வலிமை நாளுக்கு நாள் சோஷலிஸத்துக்கு அதிகச் சாதகமாக மாறி வருகிறது. ஏகாதிபத்தியவாதத்தின் எல்லா முரண்பாடுகளும் தீவிரமாகக் கூர்மை அடைந்து வருகின்றன. ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் வெப்ப அணுக்கரு யுத்தம் மூளாது தவிர்ப்பதற்காகவும் நடக்கும் போராட்டத்தின் சக்திகள் வளர்ந்து வருகின்றன. இந்தப் போராட்டத்தின் தலைமையில் செல்கிறார்கள் கம்யூனிஸ்டுகள்.

காலம் சோஷலிஸத்துக்குச் சாதகமாகவும் முதலாளித்துவத்துக்கு எதிராகவும் பணி ஆற்றுகிறது. உலகு முழுவதி

லும் சோஷலிஸத்தின் வெற்றி எல்லா வகையான யுத்தங் களும் மூள்வதற்குரிய சமுதாய, நாட்டினக் காரணங்களை வேருடன் களைந்து அகற்றிவிடும். அதுவரை, உலகம் இரு அமைப்புக்களாகப் பிரிவுபட்டிருக்கும்வரை, சர்வதேச உறவு களுக்கு ஏற்ற, அறிவுக்கு உகந்த ஒரே சரியான கோட்பாடு வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சக வாழ்வுதான்.

மகாநாடு தேசீய விடுதலை இயக்கத்தின் வெற்றிகளை உயர்வாக மதிப்பிட்டது. ஏகாதிபத்தியத்தின் காலனி ஆட்சி அமைப்பு தகர்ந்து சரிந்தது, சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு உருவானதற்கு அடுத்தபடியாக வரலாற்று முக்கி யத்துவத்தில் இரண்டாவது நிகழ்ச்சி ஆகும். காலனி ஆட்சிக்கு முடிவு கட்டிவிட்ட நாடுகளின் மக்கள், சோஷலிஸ முகாமின் ஆதரவின் துணையால், ஏகாதிபத்தியவாதி களின் சூழ்ச்சிகளை எதிர்த்து நிற்க முடியும். தேசீய ஜனநாயக அரசுகளை அமைக்கவும் சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்லும், முதலாளித்துவமல்லாத பாதையில் முன்னேறவும் அவர்க ளுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சோஷலிஸ நாடுகளும் சர்வதேசத் தொழிலாளர், கம்யூனிஸ இயக்கங்களும் ஏகாதி பத்திய, காலனி ஆட்சி ஒடுக்குமுறையிலிருந்து விடுபடும் பொருட்டுப் போராடும் மக்களுக்கு எல்லா வகையிலும் உற்சாகமும் பொருள் உதவியும் அளித்து வருகின்றன.

கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளில் சந்தர்ப்பவாதத் துடன் இரு முனைப் போராட்டம் நடத்துவதன் இன்றியமை யாமையை மகாநாடு வலியுறுத்தியது: திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் ஒரு முனையில், வரட்டுச் சூத்திர வாதத்துக்கும் குறுகிய குழுக் கண்ணோட்டத்துக்கும் எதிரான போராட்டம் இன்னொரு முனையில். கம்யூனிஸ இயக்கத்திற்கு முக்கிய அபாயமாக இருப்பது திரிபுவாதம். ஆனால், வரட்டுச் சூத்திரவாதத்துக்கும் குறுகிய குழுக் கண்ணோட்டத்துக்கும் எதிராக ஒருங்கிசைந்த இடையறாப் போராட்டம் நடத்தப் படாவிட்டால், சில கட்சிகளில் அவையும் முக்கிய அபாயம் ஆகிவிடக் கூடும். வரட்டுச் சூத்திரவாதமும் குறுகிய குழுக் கண்ணோட்டமும் கட்சிகளைச் செயலின்மைக்கு உட்படுத்தும், அவற்றை தூர்ச்சாகசச் செயல்களுக்குத் தூண்டி ஊக்கும்,

ஏகாதிபத்தியத்துக்கும் பிற்போக்குக்கும் யுத்த அபாயத்துக் கும் எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின துடும் எல்லா ஜனநாயக சக்திகளுடையவும் ஒற்றுமையைக் குலைத்துவிடும்.

விஞ்ஞானக் கம்யூனிஸம், பாட்டாளி வர்க்க சர்வ தேசியம் ஆகியவற்றின் கோட்பாடுகளே அடிப்படையாகக் கொண்டு உலகக் கம்யூனிஸ இயக்க ஒற்றுமையைக் காப்பது ஒவ்வொரு மார்க்ஸீய-லெனினீயக் கட்சியுடையவும் கடமை என்று மகாநாடு வலியுறுத்தியது. ஏகாதிபத்தியத்துக்கு எதி ராக, சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டு நடக்கும் போராட்டத்தின் பொதுப் பணிகள் குறித்து ஒன்று சேர்ந்து செய்யப்பட்ட மதிப்பீடுகளையும் முடிவுகளையும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும்படி கம்யூனிஸ்ட் கட்சிகளையும் தொழிலாளர் கட்சிகளையும் மகாநாடு கேட்டுக் கொண்டது.

மகாநாட்டினால் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையில், சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தின் யாவற் றிலும் அனுபவம் முதிர்ந்ததும் உரம் ஏறியதுமான படைப் பிரிவு என்ற முறையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி யின் செயல்கள் உயர்வாக மதிப்பிடப் பெற்றன. ''தொழி லாளி வர்க்கத்தின் வெற்றிக்காக நடந்த போராட்டத்தி லும் சோஷலிஸக் கட்டுமானத்திலும் விரிவான கம்யூனிஸ நிர்மாணத்தைச் செயல்படுத்துவதிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி திரட்டியுள்ள அனுபவம், சர்வதேசக் கம்யூனிஸ இயக்கம் அனைத்திற்கும் கோட்பாட்டு ரீதியான முக்கியத்துவம் உள்ளது ஆகும். சோவியத் யூனியன் கம் யூனிஸ்ட் கட்சியின் உதாரணமும் அதன் சோதர ஒருமைப் பாடும் சமாதானத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் எல்லாக் கம்யூனிஸ்ட் கட்சிகளுடையவும் போராட்டத்தில் அவற்றுக்கு உற்சாகம் ஊட்டுகின்றன, பாட்டாளி வர்க்க சர்வ தேசியத்தின் புரட்சிகரக் கோட்பாடுகளே நடை முறையில் கடைப்பிடிப்பது எவ்வாறு என்று காட்டுகின்றன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது காங்கிரஸ் செய்த வரலாற்றுத் தன்மை வாய்ந்த தீர்மானங்கள் சோவி யத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் யூனியனில்

கம்யூனிஸக் கட்டுமானத்துக்கும் மாபெரும் முக்கியத்துவம் கொண்டிருப்பதோடு சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தில் புதிய கட்டத்துக்கு அடி கோலியுள்ளன, மார்க்ஸீய-லெனினீயத்தின் அடிப்படையில் இந்த இயக்கம் மேற்கொண்டு வளர்ச்சி அடைய உதவி இருக்கின்றன'' என்று அறிக்கை கூறுகிறது.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மகாநாடுகளுடைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜுகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உறுதியான வழிகாட்டியாகத் திகழ்கின்றன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இவற்றைப் பிறழ்வின்றி, கண்டிப்பாகக் கடைப்பிடித்து வருகிறது. சோதரக் கட்சிகள் தன்மீது வைத்த உயர்ந்த நம்பிக்கையைக் கௌரவத்துடன் மெய்ப்பிப்பதற்குத் தன்னால் இயன்ற எல்லா வகையிலும் அது பாடுபட்டு வருகிறது.

அத்தியாயம் ஐந்து

கம்யூனிஸக் கொடியை உயர்த்திப் பிடிப்போன்

கம்யூனிஸக் கட்டுமானம் விரிவாகத் தொடங்குகிறது

1959 ஆண்டின் தொடக்கத்தில், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்தோராவது அசாதாரணக் காங்கிரஸ் நடைபெற்றது. 1959—1965 ஆண்டுகளில் சோவியத் யூனியனின் தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்கான ஏழாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களை அது பரிசீலனை செய்து உறுதிப்படுத்தியது.

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் இறுதி வெற்றி

சோஷலிஸம் சோவியத் யூனியனில் முழுமையான, இறுதி வெற்றி பெற்று விட்டது என்ற முக்கியமான முடிவைச் செய்தது சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்தோராவது காங்கிரஸ்.

சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றி குறித்த பிரச்சினை உள், வெளி என்ற இரு பக்கங்கள் கொண்டிருந்தது. **உள்** நிலைமைகளின் நோக்கில் சோஷலிஸம் சோவியத் யூனியனில் மாபெரும் தேசபக்த யுத்தத்துக்கு முன்பே வெற்றி பெற்றுவிட்டது. சோவியத் யூனியனில் சுரண்டுவோர் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு விட்ட பின் முதலாளித்துவ முறைகளை மீட்டமைப்பதில் அக்கறை கொண்ட சக்திகள் நாட்டுக்கு உள் மறைந்து விட்டன. ஆனால் **வெளி** நிலைமைகளின் நோக்கில் சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றியை இறுதியானது என்று அப்போது கருத முடியவில்லை.

சோவியத் யூனியன் பகைமை நிறைந்த முதலாளித்துவ நாடுகளால் இன்னமும் சூழப்பட்டிருந்தது. ஏகாதிபத்திய அரசுகள் இராணுவ, பொருளாதாரத் துறைகளில் சோவியத் யூனியனைக் காட்டிலும் மொத்தத்தில் அதிக வலிமை கொண்டிருந்தன, சோவியத் யூனியனை யுத்தத்தில் முறியடிக்கும் திட்டங்களை ஓயாமல் தீட்டிய வண்ணமாய் இருந்தன. இந்த அபாயம் எதிரே இருந்தவரை, நாடு முதலாளித்துவத்துக்குத் திரும்பாது என்ற உறுதி இருக்கவில்லை.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு நிலைமை அடிப்படையில் மாறிவிட்டது. சோவியத் அரசின் அரசியல், பொருளாதார, இராணுவ விறல் வளர்ந்து உறுதிப்பட்டு விட்டது. சோவியத் யூனியன் முதலாளித்துவ நாடுகளால் சூழப்பட்டிருந்த நிலை அகன்று விட்டது. சோஷலிஸம் ஒரு நாட்டின் வரம்புகளைக் கடந்து வெளியேறி, விறல்மிக்க உலக அமைப்பாக மாறிவிட்டது. சர்வதேச ஏகாதிபத்தியம் சோவியத் நாட்டில் முதலாளித்துவத்தை மீண்டும் அமைக்கும் நிலையில் இப்போது இல்லை. சோஷலிஸ முகாமை வெற்றி கொள்ள இப்போது அது வல்லதாய் இல்லை. சோவியத் யூனியனால் நிறுவப்பட்ட ராக்கெட்-அணுக்கரு ஆயுதம் சோவியத் யூனியனுக்கும் பிற சோஷலிஸ நாடுகளுக்கும் நம்பகமான கேடகமாகப் பணி ஆற்றுகிறது.

சோஷலிஸப் பாதையை மேற்கொள்ளும் நாடுகளின் மக்களுக்கு முன், சோஷலிஸத்தின் இறுதி வெற்றிக்கு வகை செய்யும் பிரச்சினை இப்போது இல்லை. சோவியத் யூனியனும் சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பும் இந்தப் பிரச்சினையை ஏற்கனவே தீர்த்துவிட்டன. சோஷலிஸ வளர்ச்சிப் பாதையை மேற்கொள்ளும் ஒவ்வொரு நாடும் உலக சோஷலிஸ அமைப்பைச் சேர்ந்த நாடுகளிடமிருந்து ஆதரவும் உதவியும் பெறுகிறது.

சோஷலிஸ நாடுகளின் நட்பு மண்டலத்தின் பலம் அவற்றின் ஒற்றுமையிலும் வலிவான ஒருமைப்பாட்டிலுமே அடங்கி இருக்கிறது. இந்த ஒற்றுமை நிலவும்வரை சோஷலிஸ நாடுகளுக்கு ஏகாதிபத்தியவாதிகளின் எந்த அச்சுறுத்தல்களும் ஒரு பொருட்டல்ல. 1960ம் ஆண்டில் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய மகாநாட்டில் குறிப்

பிடப்பட்டது போல, ''சோஷலிஸ அரசுகள் ஒரே முகாமாக ஒன்று சேர்ந்ததும், இந்த முகாமின் நாளுக்கு நாள் வலுவாகும் ஒற்றுமையும் இடையருது வளரும் விறலும் மொத்தத்தில் இந்த அமைப்பின் வரம்புகளுக்கு உள் சோஷலிஸத்தின் முழு வெற்றிக்கு வகை செய்கின்றன.''

சோஷலிஸம் வெற்றி அடைந்ததனால் சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நிகழ்ந்த ஆழ்ந்த மாற்றங்களின் விளைவாக சோவியத் யூனியன் தனது வளர்ச்சியின் புதிய கட்டத்தில் பிரவேசித்தது. கம்யூனிஸ சமூகத்தின் விரிவான கட்டுமானம் என்பதே அந்த கட்டம்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்தோராவது காங்கிரஸ் தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்குரிய ஏழாண்டுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. சோவியத் யூனியனில் கம்யூனிஸத்தின் பொருளியல் - தொழில்நுட்ப அடித்தளத்தை அமைப்பதில் இந்தத் திட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ஏழு ஆண்டுகளில் தொழில் பொருள்களின் உற்பத்தியை அனேகமாக இரு மடங்காக உயர்த்தத் திட்டம் இடப்பட்டது. விவசாயம், போக்குவரத்து, பண்பாடு, விஞ்ஞானம் ஆகிய துறைகளின் வளர்ச்சிக்கும் உழைப்பாளிகளின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதற்கும் உரிய பெருத்த நடவடிக்கைகளுக்கு வகை செய்யப்பட்டது.

சோவியத் மக்கள் ஏழாண்டுத்திட்டத்தின் நோக்கங்களை நிறை வேற்றுவதில் மிகுந்த ஊக்கத்துடன் முனைந்தார்கள். நாட்டில் விரிவான சோஷலிஸப் போட்டி தொடங்கியது. காங்கிரஸ் தொடங்குவதற்கு முன் தோன்றிய கம்யூனிஸ முறை உழைப்பு இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் இந்தப் போட்டியின் முன்னணியில் சென்றார்கள். கம்யூனிஸ முறை உழைப்பு இயக்கத்திற்கு அடி கோலியவர்கள் கம்யூனிஸ்டுகளும் இளங் கம்யூனிஸ்டுகளுமே. இது சோஷலிஸப் போட்டியின் இன்னும் உயர்ந்த, புதிய கட்டத்தைக் குறித்தது. ''கம்யூனிஸ்டுக்கு ஏற்ற முறையில் வாழவும் வேலை செய்யவும் கற்போம்'' என்பது இந்த இயக்கத்தின் குறிக்கோளுரை ஆயிற்று. 1961 அக்டோபர் மாதம் கம்யூனிஸ முறை உழைப்பு இயக்கத்தில் ஏறக்குறைய இரண்டு லட்சம் பெயர்—

ВЕЛИКОЕ СОБЫТИЕ В ИСТОРИИ ЧЕЛОВЕЧЕСТВА!

Пролетарии всех стран, соединяйтесь!

Коммунистическая партия Советского Союза

ПРАВДА

Орган Центрального Комитета Коммунистической партии Советского Союза

Год издания 43-й
№ 103 (13993)
ЧЕТВЕРГ
13 АПРЕЛЯ 1961 года
Цена 3 коп.

12 апреля 1961 года первый в мире советский космический корабль «Восток» с человеком на борту, совершив полет вокруг земного шара, благополучно вернулся на священную землю нашей Родины.

Первый человек, проникший в космос,— гражданин Союза Советских Социалистических Республик Юрий Алексеевич ГАГАРИН.

К КОММУНИСТИЧЕСКОЙ ПАРТИИ И НАРОДАМ СОВЕТСКОГО СОЮЗА! К НАРОДАМ И ПРАВИТЕЛЬСТВАМ ВСЕХ СТРАН! КО ВСЕМУ ПРОГРЕССИВНОМУ ЧЕЛОВЕЧЕСТВУ!

Обращение Центрального Комитета КПСС, Президиума Верховного Совета СССР и правительства Советского Союза

Свершилось великое событие. Впервые в истории человек осуществил полет в космос.

12 апреля 1961 года в 9 часов 7 минут по московскому времени космический корабль-спутник «Восток» с человеком на борту поднялся в космос и, совершив полет вокруг земного шара, благополучно вернулся на священную землю нашей Родины — Страны Советов.

Первый человек, проникший в космос, — советский человек, гражданин Союза Советских Социалистических Республик!

Это — беспримерная победа человека над силами природы, величайшее завоевание науки и техники, торжество человеческого разума. Впервые начало взлет человечества в космическое пространство.

В этом задании, которое выбрал и дал выполнить сын советского народа, испытан гений советского народа, могучая сила социализма.

С чувством большой радости и законной гордости Центральный Комитет Коммунистической партии, Президиум Верховного Совета СССР и Советское правительство сообщают, что эту новую эру в прогрессивном развитии человечества открыла наша страна — страна победившего социализма.

В трудолюбивом, талантливом советском народе, вдохновленном партией коммунистов, по плану с Лениным, наша страна превратилась в могущественную социалистическую державу, достигла невиданных высот в развитии науки и техники.

После рабочих войн в Октябре 1917 года наш власть в свои руки, вместе, долго честные люди, сознательно, в том, сколько им не разрывать страной, сохранить свои большой уровень развития экономики, науки и техники.

И вот теперь перед всем миром рабочий класс, сознательное колхозное крестьянство, советская интеллигенция, весь советский народ демонстрирует небывалую победу науки и техники. Наша страна открывает все другие государства мира и первой начинает путь в космос.

Советский Союз первым запустил межпланетный космический корабль-спутник, первым послал искусственный спутник Земли, впервые направил космический корабль на Луну, создал первый искусственный спутник Солнца, осуществил полет космического корабля в район планеты Венера. Ныне на орбиту советским кораблем-спутником с живым существом на борту совершается полет вокруг Земли и возвращение на Землю.

Великие новые победы в освоении космоса имеют триумфальный полет советского человека на космическом корабле вокруг Земли.

Честь и слава советским ученым, инженерам и техникам — создателям космического корабля!

Честь и слава первому испытателю — гражданину Гагарину Юрию Алексеевичу — покорителю космоса!

Наш советский народ, строящий коммунизм, вышел на путь первым проложить в космос. Победы в освоении космоса мы считаем не одним достижением нашего народа, но и всего человечества. Мы с радостью спешим их на службу всем народам, во имя прогресса, счастья и блага всех людей на Земле. Наша достижения в открытии мы ставим не на службу войне, а на службу миру и благополучию народов.

Развитие науки и техники открывает беспредельные возможности для овладения силами природы и использования их на благо человека, для этого прежде всего надо обеспечить мир.

В этот торжественный день мы вновь обращаемся к народам и правительствам всех стран с призывом словом о мире.

Пусть все люди, независимо от рас и наций, цвета кожи, их вероисповедания и социальной принадлежности, проникнут всю силу, чтобы обеспечить прочный мир во всем мире. Выступим новую гонку вооружений. Осуществим запрещение и полное разоружение под строгим международным контролем! Это будет решающий шаг в спасении всех народов мира.

Славные победы нашей Родины вдохновляют всех сознательных людей на мирные подвиги в строительстве коммунизма!

Вперед, к новым победам во имя мира, прогресса и счастья человечества!

ЦЕНТРАЛЬНЫЙ КОМИТЕТ КОММУНИСТИЧЕСКОЙ ПАРТИИ СОВЕТСКОГО СОЮЗА
ПРЕЗИДИУМ ВЕРХОВНОГО СОВЕТА СССР
СОВЕТ МИНИСТРОВ СОЮЗА СОВЕТСКИХ СОЦИАЛИСТИЧЕСКИХ РЕСПУБЛИК

Москва, Кремль, 12 апреля 1961 года.

Советскому космонавту, впервые в мире совершившему космический полет, майору ГАГАРИНУ Юрию Алексеевичу

Дорогой Юрий Алексеевич!

Мне доставляет большую радость поздравить Вас с выдающимся героическим подвигом — первым космическим полетом на корабле-спутнике «Восток».

Весь советский народ, весь наш Вашим славным экипажем, который будет помогать в новых ваших трудных, опасных и сложных на пути открывать человечеству.

Замечательный Ваш полет открывает дорогу странному в истории человечества, в наступило великое и напряженное народа советских людей великой радостью и гордостью за свою социалистическую Родину.

От всего сердца поздравляем Вас со счастливым возвращением из космического путешествия на родную землю. Обнимаем Вас.

До скорой встречи в Москве.

Н. ХРУЩЕВ

12 апреля 1961 года.

Беседа Н. С. Хрущева с первым космонавтом Ю. А. Гагариным

Читайте на 2-й странице «Правды».



ПЕРВОМУ КОСМОНАВТУ — ЧЕСТЬ И СЛАВА!

Юрий Алексеевич Гагарин.

''பிராவ்தா'' செய்தித்தாளின் ஏப்ரல் 13ந் தேதி இதழின் முதல் பத்தி. உலகில் முதன்முறை நிகழ்ந்த விண்வெளிப் பறப்பு பற்றிய செய்தி இதில் வெளியாயிற்று

முதலாவது சோவியத் அணு மின் நிலையத்தின் பொதுத் தோற்றம்

தொழிலாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், பொறி இயலார் மூவரில் ஒருவர் —கலந்து கொண்டார்கள்.

ஏழாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் சராசரி மூன்று பெரிய தொழில் நிலையங்கள் செயல் படத் தொடங்கின. மின் ஆற்றல் உற்பத்தித் துறை சிறப் பாக விரைவாக வளர்ச்சி அடைந்தது. உலகிலேயே ஆகப் பெரிய வோல்கா நீர் மின் நிலையம் கட்டப்பட்டு முடிந்து விட்டது. பைக்கால் ஏரியின் அருகே, அங்காரா ஆற்றின் மீது நிறுவப்பட்ட இன்னும் திறன் மிக்க பிராத்ஸ்க் நீர் மின் நிலையத்தின் நான்கு இயந்திரத் தொகுதிகள் 1961ல் தொழில் துறைக்கு மின் ஆற்றல் வழங்கத் தொடங்கி விட்டன.

விண் வெளியை வெற்றி கொள்வதில் சோவியத் யூனி யன் இன்னொரு பெருத்த சாதனையை நிறைவேற்றியது. 1961ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ந் தேதியன்று, சோவியத் விண்வெளி விமானி, கம்யூனிஸ்ட் யூரி ககாரின் **உலகில் முதலாவது விண்வெளிப் பறப்பு** நிகழ்த்தினர். 1961ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ந் தேதியன்று சோவியத் யூனியனிலிருந்து

கிரகப் பாதையில் பூமியைச் சுற்றிச் செலுத்தப்பட்டது இரண்டாவது விண் வெளி விமானம். விண்வெளி விமானி யும் கம்யூனிஸ்டுமான கேர்மன் தித்தோவ் இதை ஓட்டினார்.

கட்சியின் புதிய செயல் திட்டம்

இருபதாவது கட்சிக் காங்கிரஸின் ஆணைப்படி மத்தியக் கமிட்டியால் தயாரிக்கப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய செயல் திட்ட மசோதா 1961 கோடையில் வெளியிடப்பட்டது. கட்சிக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணையினர், அலுவலக ஊழியர்கள் ஆகியோரின் கூட்டங்களிலும் படைப் பிரிவுகளிலும் இந்தச் செயல் திட்டத்தைக் கட்சியும் மக் களும் மூன்று மாத காலம் விவாதித்தார்கள். 90 லட்சத்துக் கும் அதிகமான கம்யூனிஸ்டுகளும் 730 லட்சத்துக்கும் மேல் கட்சியில் சேராதவர்களும் இந்த விவாதங்களில் பங்கு கொண்டார்கள். கட்சியின் புதிய செயல் திட்ட மசோதா மக்கள் அனைவரதும் ஒப்புதலைப் பெற்றது.

1961 அக்டோபரில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட் சியின் இருபத்திரண்டாவது காங்கிரஸ் கூடியது. காங்கிரஸ் பிரதிநிதிகள் ஏறக்குறைய ஒரு கோடி கம்யூனிஸ்டுகளின் சார்பில் அதன் நிகழ்ச்சிகளில் பங்காற்றினார்கள். இந்தக் காங்கிரஸ், கட்சியின் புதிய செயல் திட்டத்தை—**சோவியத் யூனியனில் கம்யூனிஸ சமூகத்தின் அடிப்படைகளை நிறுவும் செயல்திட்டத்தை**—ஏற்றுக்கொண்டது. இதுவே இந்தக் காங் கிரஸின் வரலாற்று முக்கியத்துவம்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்திரண் டாவது காங்கிரஸால் ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல் திட்டம், கட்சியின் மூன்றுவது செயல்திட்டம் ஆகும். 1903ம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது கட்சிச் செயல் திட்டம் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றி அடைந்ததன் விளைவாக நிறைவேற்றப்பட்டது. இரண் டாவது செயல் திட்டத்தைக் கட்சி 1919ல் மேற்கொண்டது. சோஷலிஸம் கட்டி அமைக்கப்பட்டதுடன் அது நிறைவு பெற்றது. கட்சியின் மூன்று செயல் திட்டங்களும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்பு உள்ளவை.



‘‘சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திட்டம்’’ என்ற பிரசுரத்தின் மேலுறை

இருபத்திரண்டாவது காங்கிரஸின் பிரதிநிதிகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய செயல்திட்டத்தை ஏற்கிறார்கள்

சோவியத் யூனியனில் சோஷலிஸம் வெற்றி பெற்றதும் கம்யூனிஸத்துக்குப் பரிணமிக்கும் பிரச்சினையை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து செப்பம் செய்வது இன்றியமையாதது ஆயிற்று. சோஷலிஸமும் கம்யூனிஸமும் ஒரே சமூக-பொருளாதார அமைப்பின் இரண்டு கட்டங்கள் ஆகும். அவற்றுக்குப் பொதுவான இயல்புகள் பல: உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமை, மனிதனுல் மனிதன் சுரண்டப்படுவது இல்லாமை, உற்பத்தி சமூக உறுப்பினரின் வளரும் தேவைகளை அதிகபட்சமாக நிறைவேற்றும் நோக்கத்துக்குக் கீழ்ப்பட்டிருப்பது. ஆனல் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சித் தரத்திலும் சமூக உறவுகளின் முதிர்ச்சியிலும் சமூக உற்பத்திப் பொருள்களின் வினியோக முறையிலும் மக்களின் உணர்வுத் தரத்திலும் இந்த இரு கட்டங்களும் ஒன்றிலிருந்து ஒன்று சாராம்சத்தில் வேறுபடுகின்றன.

கம்யூனிஸம் மனித சமூக வளர்ச்சியில் ஆக உயர்ந்த கட்டம் ஆகும். சோஷலிஸ வளர்ச்சிக் கட்டத்தைத் தாண்டி, முதலாளித்துவத்திலிருந்து நேராகக் கம்யூனிஸத்துக்குப் பரிணமிப்பது இயலாது. சோஷலிஸக் கட்டுமானத்துக்குப் பிறகுதான் கம்யூனிஸத்துக்குப் பரிணமிப்பு தொடங்கும். கம்யூனிஸம் சோஷலிஸத்திலிருந்து வளர்கிறது, அதன் நேரான தொடர்ச்சியாக விளங்குகிறது. இது இடையறுத வரலாற்று நிகழ்முறை ஆகும்.

இதோடு கூடவே, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் திட்டம், உலக வளர்ச்சியின் நவீனக் கால கட்டத்தினுடைய தன்மையை, சமாதானம் தேசீய விடுதலை, ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டு எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளிகள் நடத்தும் போராட்டத்தின் தன்மையை, உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் தஸ்தாவேஜுகளுக்கு முற்றிலும் இணங்கச் சித்திரிக்கிறது. உலகத்தில் சமாதானத்தையும் உழைப்பையும் விடுதலையையும் சமத்துவத்தையும் சோதரத்துவத்தையும் இன்பத்தையும் நிலைநிறுத்தும் சமூகமே கம்யூனிஸம் என்று செயல் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸம் எவ்வாறு தோற்றம் அளிக்கும்? இது உலகில் யாவற்றிலும் நீதியுள்ள சமூகமாய் இருக்கும் என்று சுருக்கமாகச் சொல்லலாம். ஆனால் இத்தகைய சுருக்கமான விளக்கம், சரியே என்றாலும் போதுமானது அல்ல. சோஷலிஸக் கட்டுமானத்திலும் மார்க்ஸீய-லெனினீய விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலும் பெறப்பட்டுள்ள வெற்றிகளும் கம்யூனிஸ சமூகத்தின் முக்கிய இயல்புகளை இன்னும் முழுமையாகச் சித்திரிப்பதற்கு வாய்ப்பு அளிக்கின்றன.

கம்யூனிஸம். அதன் அடிப்படை இயல்புகள்

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் திட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது: ''**கம்யூனிஸம் என்பது வர்க்கங்கள் இல்லாத சமூக அமைப்பு. இதில் உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் மக்கள் அனைவரதும் ஒரே பொதுவுடைமையாக இருக்கும். சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் முழுமையான சமுதாய சமத்துவம் பெற்றிருப்பார்கள். இதில் மனிதர்களின் சர்வாம்சமான வளர்ச்சியோடு கூடவே, இடையறாது வளர்ச்சி அடையும் விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்திச் சக்திகளும் வளரும். சமூகச் செல்வங்களின் எல்லா ஊற்றுக்களும் நிறைந்த பிரவாகமாகப் பெருகும். 'திறமைக்கு ஏற்ற உழைப்பு, தேவைக்கு ஏற்ற ஊதியம்' என்னும் மாபெரும் கோட்பாடு செயல்படுத்தப் படும். கம்யூனிஸம் என்பது விடுதலையும் அரசியல் உணர்வும் பெற்ற உழைப்பாளிகளின் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகம். இதில் சமூக சுய நிர்வாகம் நிலைபெறும். சமூக நலத்துக்காக உழைப்பது எல்லோருக்கும் முதன்மையான வாழ்க்கைத் தேவை, நன்கு தெரிந்த இன்றியமையாமை ஆகிவிடும். ஒவ்வொரு வருடைய திறமைகளும் மக்களின் அதிகத்திலும் அதிகமான நன்மைக்காகப் பயன்படுத்தப் பெறும்.**''

கம்யூனிஸ சமூகத்தை நிறுவுவதற்குப் பல சிக்கலான பணிகளை நிறைவேற்றுவது தேவை. இன்றியமையாத பொருளியல் உளவியல் முதனிலைகள் எந்த அளவுக்குப் பக்குவப்பட்டிருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டே இவை நிறைவேற்றப்பட வேண்டும். வளர்ச்சியின் நிறைவு பெறுத கட்டங்களைத் தாண்டிக் குதிப்பது கூடாது. அதே போல, நிறை

வேறிவிட்ட கட்டத்தில் காலம் தாழ்த்துவதும் முன்னேறும் இயக்கத்தைச் சுணக்கப்படுத்துவதும் கூடாது. இதை அடிப் படையாகக் கொண்டு, கம்யூனிஸக் கட்டுமானத்தின் பணி களை நிறைவேற்றுவதில் நிச்சயமான தொடர்ச்சிக்குச் செயல் திட்டம் வகை செய்கிறது: இவற்றில் சில பணிகள் முன்னே நிறைவேற்றப்படும்; மற்றவை பின்னே, இன்றியமையாத நிலைமைகள் ஏற்பட்ட பிறகு நிறைவேற்றப்படும்.

கம்யூனிஸ சமூகத்தின் கட்டுமானத்துக்கு உரிய முக்கியப் பணிகள் பின் வருவன:

—கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில் நுட்ப அடித் தளத்தை அமைப்பது;

—கம்யூனிஸ சமூக உறவுகளின் வளர்ச்சி;

—புதிய மனிதனைப் போதித்துப் பயிற்றுவது.

இந்தப் பணிகள் தமக்குள் நெருங்கிய தொடர்பு கொண் டவை, பிரிக்க முடியாத முழுமையாக அமைந்தவை. கம்யூனிஸ வாழ்க்கைக் கோட்பாடுகளைச் செயல்படுத்தும் பொருட்டு இவற்றை ஒருங்கே நிறைவேற்றுவது அவசியம்.

கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம்

கம்யூனிஸ நிர்மாணத்துக்குத் தேவை யான பணிகளின் சங்கிலித் தொடரில் முக்கியமான வளையம் கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில் நுட்ப அடித் தளம் அமைப்பது ஆகும்.

கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்த ளம் என்பது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் மனிதகுல வரலாற்றிலேயே ஆக உயர்ந்த படி ஆகும். அதை அமைப் பது என்பதன் அர்த்தம், நாடு முழுமையாக மின்சாரமயம் ஆக்கப்படுவது, தேசீயப் பொருளாதாரம் இரசாயனமயம் ஆக்கப்படுவது, விஞ்ஞானமும் உற்பத்தியும் பொருத்தமாக இணைக்கப்படுவது, தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விரைந்த வேகம், இயற்கை வளங்களும் பொருள் வளங்களும் உழைப்புச் சக்தி வளங்களும் சர்வாம்சமாகவும் அறிவார்ந்த முறையிலும் பயன்படுத்தப்படுவது, உழைப்பாளிகளின் உயர்ந்த பண்பாட்டு-தொழில்நுட்பத் தரம் என்பதாகும்.

பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் சமூக வளர்ச்சி

யோடு சேர்ந்து வளர்ச்சியும் செப்பமும் அடையும். பொருளாதார நோக்கில் யாவற்றிலும் பயன்பாடு மிக்கவையான புதிய உற்பத்தித் துறைகள் அமைக்கப்படும். புது வகையான ஆற்றலும் பொருள்களும் கையாளப்படும். விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியின் தரமும் உற்பத்தி நிகழ்முறைகள் இயந்திரமயமும் தானியங்கிமயமும் ஆக்கப்படுவதும் இடையருது மேம்பாடு அடைந்துகொண்டு போகும். இந்த அடிப்படையில் உற்பத்திச் சக்திகள் பேரளவாக வளர்ச்சி பெறும்.

சோவியத் யூனியனின் **தொழில்துறையை** தொழில்நுட்ப நோக்கில் உலகிலேயே யாவற்றிலும் சிறந்த, திறன் மிக்க தொழில்துறையாக மாற்றச் செயல்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. கனரக இயந்திரத் தொழிலின் வளர்ச்சியில் மேற்கொண்டும் முதன்மையாகக் கவனம் செலுத்தப்படும், ஏனெனில் அது இல்லாமல் தேசீயப் பொருளாதாரத்தின் மற்ற எல்லாக் கிளைகளதும் விரைந்த வளர்ச்சி நடக்காது. நிர்மாணத் தொழிலும் கட்டுமானச் சாதனங்கள் தயாரிக்கும் தொழிலும் வாகன, தகவல் போக்குவரத்தின் எல்லா வகைகளும் உயர்ந்த தொழில்நுட்பத் தரத்தை எட்டும்.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ சமூகத்தின் பொருளாதாரக் கட்டுமானத்தின் அச்சாணியாகப் பணியாற்றும் **மின் சாரமயம் ஆக்குவது.** தேசீயப் பொருளாதாரத்தின் எல்லாக் கிளைகளதும் வளர்ச்சியில், நவீனத் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் தலைமைப் பாத்திரம் வகிப்பது இதுவே. மின் ஆற்றல் உற்பத்தியின் வளர்ச்சி வேகம் பிற உற்பத்தித் துறைகளின் வளர்ச்சியை முந்திவிடும்.

விறல் மிக்க தொழில்துறையோடு கூடவே, சர்வாம்ச வளர்ச்சியும் உயர்ந்த உற்பத்தித்திறனும் வாய்ந்த **விவசாயம்** அமைக்கப் பெறும். கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும் விவசாய விளைபொருள்களின் உற்பத்தி அளவைப் பெருக்குவதற்கும் ஆதாரமாகப் பயன்படுபவை மின் சாரமயம் ஆக்குவதும் எல்லாத் துறைகளையும் இயந்திரமயம் ஆக்குவதும் பொருளாதார அக்கறை ஏற்படுத்தும் கோட்பாடு, அதாவது, நல்ல உழைப்புக்கும் சிறந்த விளைவுகளுக்கும்

அதிக ஊதியம் என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப்படுவதும் ஆகும்.

கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில்நுட்ப அடித்தளம் அமைப்பதற்கு வேண்டிய மிக முக்கியமான நிலைமை உழைப்பின் உற்பத்தித் திறன் இடையறாது வளர்வது ஆகும். உற்பத்தியில் புதிய தொழில் நுட்பத்தையும் இயந்திர நுணுக்கத்தையும் புகுத்துவதும் அதை இயந்திரமயமும் தானியங்கி மயமும் ஆக்குவதுமே உற்பத்தித்திறன் வளர்வதற்கு முதன்மையாக வழி கோலும். இந்த அடிப்படையில் சோவியத் மக்களின் உழைப்பு நிலைமைகள் மேம்படுவதும் எளிதாவதும் நிகழும். கடுமையான உடல் உழைப்பு இருக்காது, பின்னர், தேர்ச்சி தேவைப்படாத எவ்வித உழைப்புமே இருக்காது. முதலாளித்துவத்தில் இயந்திரமயம் ஆக்குவதும் தானியங்கிமயம் ஆக்குவதும் வேலை இல்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துகின்றன. கம்யூனிஸத்தை நிறுவும் சமூகத்துக்கு இத்தகைய அபாயம் இருக்காது. சோவியத் யூனியனில் பொருளாதாரம் திட்டமிட்டு நடத்தப்படுவதால் உழைக்கத் திறன் கொண்ட மக்கள் அனைவருக்கும் முழு நேர வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன.

கம்யூனிஸத்தில் திறமைக்கு ஏற்ற உழைப்பு சமூகத்தின் எல்லா உறுப்பினர்களதும் வழக்கம், முதலாவது வாழ்க்கைத் தேவை ஆகிவிடும். அவ்வாறு நிகழும் வரை, ஒருவரும் வேலை செய்யாமல் நழுவ விடாதபடி பார்த்துக்கொள்வதற்கான எல்லா உள, பொருள், நிர்வாக முறைகளையும் சோஷலிஸ சமூகம் கையாண்டு வரும். கம்யூனிஸ சமூகம் என்பது உழைப்பாளர்கள் சமூகம், சோம்பேறிகளும் கழப்புணிகளும் கொண்ட சமூகம் அல்ல.

கம்யூனிஸ சமூக உறவுகள்

கம்யூனிஸத்தின் பொருளியல்-தொழில் நுட்ப அடித்தளம் அமைவதுடன் கூடவே கம்யூனிஸ சமூக உறவுகளும் உருவாகும். **வர்க்க வேறுபாடுகளும் பிற சமுதாய வேறுபாடுகளும் படிப்படியாக மறைந்து விடும்,** சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் எதார்த்தமான சமத்துவத்தை நெருங்குவார்கள். சோஷலிஸத்தில் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே வர்க்க வேறுபாடுகள் எஞ்சி இருக்கின்

றன. அரசு (அனைத்து மக்கள்) உடைமை, கூட்டுப் பண்ணை (கூட்டுறவு) உடைமை என்ற இருவகை உடைமை வடிவங்கள் நிலவுவதன் காரணமாக ஏற்பட்டிருப்பவை இந்த வேறுபாடுகள். நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையே வித்தியாசம் இன்னும் இருந்து வருகிறது. பொருளியல் நலங்களின் வினியோகத்துக்கான வெவ்வேறு வடிவங்கள் நிலவி வருகின்றன. இந்த எல்லா வேறுபாடுகளையும் நீக்கி, வர்க்கங்கள் இல்லாத கம்யூனிஸ சமூகத்தை நிறுவும் பணியை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திட்டம் முன்வைக்கிறது.

கூட்டுப் பண்ணை-கூட்டுறவு உடைமையும் அனைத்து மக்கள் உடைமையும் வளர்ச்சி அடைவதும் ஒன்றை ஒன்று நெருங்குவதும் பின்பு வருங்காலத்தில் ஒரே கம்யூனிஸ உடைமையாகக் கலப்பதும் இந்த விஷயத்தில் நிர்ணயகரமான பங்கு ஆற்றும். கூட்டுப் பண்ணைகளின் பொருளாதார ஏற்றமும் நாட்டுப்புறத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுமே இவ்வாறு நெருங்குவதைச் சாத்தியம் ஆக்கும். கூட்டுப்பண்ணைகளில் சமூக உற்பத்தியின் அளவு அதிகமாகும். கூட்டுப் பண்ணைகளுக்கு இடையிலுள்ள உற்பத்தி உறவுகளும் கூட்டுப் பண்ணைகளுக்கும் அரசாங்கப் பண்ணைகளுக்கும் தொழில் நிலையங்களுக்கும் இடையே உள்ள உறவுகளும் வளர்ந்து வலுவடையும். சில கூட்டுப் பண்ணைகள் ஒன்று சேர்ந்து சிறிய நீர்மின் நிலையங்களையும் விவசாய விளைபொருள்களைப் பதனம் செய்யும் தொழிற்சாலைகளையும் கட்டிட நிர்மாணப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளையும் கட்டி ஒன்றுகப் பயன்படுத்துவது இப்போதும் அரிதல்ல. இவ்வாறு, பல கூட்டுப் பண்ணைகளுக்கு உரிய உடைமை தோன்றுகிறது. இது தன்மையில் அனைத்து மக்கள் உடைமைக்கு நெருங்கியது. கூட்டுப் பண்ணையின் உற்பத்திச் சாதனங்கள் அரசின் உற்பத்திச் சாதனங்களுடன் ஒன்று சேர்க்கப் படுவதும் நிகழ்கிறது. அரசின் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின் ஆற்றலையும் பாசனக் கால்வாய்களையும் கூட்டுப் பண்ணைகள் பயன்படுத்திக் கொள்வது இதற்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும். கூட்டுப் பண்ணைகளுக்கு டிராக்டர்களும் அறுவடை இயந்திரங்களும் பிற நவீன இயந்திர சாதனங்

களும் மேலும் மேலும் அதிகமாக வழங்கப்படுவதன் விளைவாக அவற்றின் உற்பத்திச் சேமிப்புக்கள் தொழில் நுட்பத் தரத்தில் அரசுத் தொழில் நிலையங்களின் உற்பத்திச் சேமிப்புக்களை நெருங்கி வரும். இவ்வாறு, சோஷலிஸ உடைமையின் இரு வடிவங்களுக்கிடையே உள்ள வேறுபாடுகளும் இவற்றின் காரணமாகத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நிலவும் வர்க்க வேறுபாடுகளும் படிப்படியாகத் தேய்ந்து மறைந்துவிடும்.

சோவியத் நாட்டுப் புறத்தில் இருவகைப் பண்ணைகள் அமைந்தன—அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும். அரசாங்கப் பண்ணைகள் பேரளவான சோஷலிஸப் பண்ணையின் அனுகூலங்களைத் தங்கள் அனுபவத்தால் காட்டின. நாட்டுப்புறத்தில், விவசாய உற்பத்தியை ஒழுங்கமைப்பதில் தலைமைப் பாத்திரம் வருங்காலத்திலும் அவையே வகிக்கும். அதே சமயம் விவசாய நிலையங்களின் கூட்டுப் பண்ணை வடிவமும் வளர்ச்சி அடையும். கூட்டுப் பண்ணை என்பது விவசாயிகளுக்குக் கம்யூனிஸம் போதிக்கும் பள்ளி ஆகும்.

நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே நிலவும் முக்கிய வேறுபாடுகளும் மறைந்துவிடும். முதலாளித்துவத்தில் நகரங்கள் கிராமங்களை வெகுவாகச் சுரண்டுகின்றன. அவற்றின் நலன்கள் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை. சோஷலிஸத்தில் இந்த எதிர்நிலை மறைந்துவிடுகிறது. நகரம் நாட்டுப்புறத்தின் உதவிக்கு வருகிறது. தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைப்பதிலும், விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் பண்பாட்டின் நலங்களையும் பயின்று தேர்வதிலும் விவசாயிகளுக்கு நகரம் உதவுகிறது. ஆயினும் நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையே வேறுபாடுகள் இன்னமும் நிலவுகின்றன: உற்பத்தி, பண்பாட்டு வளர்ச்சித் தரத்திலும் வாழ்க்கை நிலைமைகளிலும் நாட்டுப்புறம் இன்னும் நகரத்துக்குப் பின்தங்கியே இருக்கிறது. இந்த வேறுபாடுகளை அடிப்படையில் அகற்றுவது, **நாட்டுப்புறத்தை நகரத்தின் மட்டத்துக்கு உயர்த்துவது** என்ற குறிக்கோளை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திட்டம் முன்வைக்கிறது.

கூட்டுப் பண்ணைகளின் பொருளாதார ஏற்றம் அவற்றின்

வாழ்க்கையில் பேரளவான முற்போக்கு இயக்கத்தை ஏற் படுத்தும். நாட்டுப்புறத்தில் உழைப்பு தொழில் உழைப் பின் ஒரு வகை ஆகிவிடும். கூட்டுப் பண்ணைகளில் உழைப் பின் அளவுமான வகுப்பும் ஒழுங்கமைப்பும் ஊதிய முறையும் அரசுத் தொழில் நிலையங்களில் வழக்கில் இருக்கும் வடிவங் களுக்கு நெருங்கியவை ஆகிவிடும். பொது உணவு விடுதிகளும் குழந்தைத் தோட்டப் பள்ளிகளும் சிறு குழந்தைகள் இல் லங்களும் அன்றுட வாழ்க்கை வசதிக்கான பல்வகை நிலையங் களும் விரிவான வளர்ச்சி அடையும். நாளடைவில் கூட்டுப் பண்ணைக் கிராமங்கள் வசதிகள் வாய்ந்த வீதிகளும் வீடுகளும் கொண்ட நகர மாதிரியான குடியிருப்பு மையங்களாக மாறி விடும். நாட்டுப்புற மக்கள் பண்பாட்டிலும் அன்றுட வாழ்க் கை வசதிகளிலும் நகர மக்களுக்கு இணை ஆகிவிடுவார்கள். நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே நிலவும் சமு தாய-பொருளாதார, பண்பாட்டு வாழ்க்கை-வசதி வேறு பாடுகளை அகற்றுவது கம்யூனிஸக் கட்டுமானத்தின் மிக முக்கிய விளைவு ஆகும்.

அறிவு உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையே நிலவும் வேறுபாடுகளும் படிப்படியாக அகற்றப்படும். சோஷ லிஸத்தில் அறிவு உழைப்பாளிகளுக்கும் உடல் உழைப்பாளி களுக்கும் உள்ள நலன்கள் ஒன்றே. அவர்கள் ஒரேபொது வேலையைச் செய்கிறார்கள், சமூகம் அனைத்தின் நலங்களுக் காகவும் பாடுபடுகிறார்கள். அறிவுஜீவிகள் முதலாளித்துவத் தில்போல அடைபட்ட தனிக் குழுவாக இப்போது இருக்க வில்லை. அவர்கள் மக்களிலிருந்தே தோன்றி, மக்களுக்கே தொண்டு ஆற்றுகிறார்கள். ஆனால் தங்கள் பண்பாடு, தொ ழில் நுட்ப அறிவு ஆகியவை காரணமாக அவர்கள் தொழி லாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மேற்படியில் இருக்கிறார் கள். உடல் உழைப்பாளிகளைப் பண்பாட்டிலும் தொழில் நுட்ப அறிவிலும் அறிவுஜீவிகளின் தரத்துக்கு உயர்த்து வதும் **உடல் உழைப்பும் அறிவு உழைப்பும் ஒன்று கலக்குமாறு** செய்வதுமே இப்போது ஆற்ற வேண்டிய பணி. இந்த நிகழ் முறை ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிறது. தொழில் நிலை யங்களிலும் கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணை களிலும் நடுத்தரக் கல்வி பெற்றவர்கள் பத்துலட்சக்

கணக்கிலும் உயர் கல்வி பெற்றவர்கள் லட்சக் கணக்கிலும் வேலை செய்கிறார்கள். தொழிலாளியினதும் விவசாயினதும் உழைப்பு தனது தன்மையில் பொறி இயலார், தொழில் நுட்ப நிபுணர், விவசாய நிபுணர் ஆகியோரின் உழைப்பை மேலும் மேலும் நெருங்கி வருகிறது.

சமூகத்தின் அரசியல் ஒழுங்கமைப்பிலும் அரசின் வளர்ச்சி யிலும் ஆழ்ந்த மாறுதல்கள் நிகழும்.

சோஷலிஸம் வெற்றி பெற்றதும் பாட்டாளி வர்க்க சர் வாதிகாரம், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் மக்கள் அனைவரதும் அரசியல் ஸ்தாபனம் ஆகிவிடுகிறது. அனைத்து மக்கள் அரசு எல்லா மக்களுடையவும் நலன்களையும் சித்தத் தையும் வெளியிடுகிறது. இத்தகைய அரசு வரலாற்றில் இதற்கு முன் நிலவியதே இல்லை. சமூகம் பகைமை கொண்ட வர்க்கங்களாகப் பிரிவுபட்டிருக்கும் இடத்தில், சுரண்டுவோ ரும் சுரண்டப்படுவோரும் நிலவும் இடத்தில் இத்தகைய அரசு ஏற்பட முடியாது. சோஷலிஸத்தில்தான் அனைத்து மக்கள் அரசு எதார்த்தம் ஆக முடியும். ஏனெனில் அங்கே சமூகம் நட்புறவுள்ள வர்க்கங்களால் அமைந்தது, இவற்றின் அடிப்படை நலன்கள் ஒரே மாதிரியானவை, அவை ஒன்று கலந்து விடுகின்றன. தொழிலாளி வர்க்கம் சோவியத் சமூகத்தின் எல்லாவற்றிலும் முன்னணியில் உள்ள, ஒழுங்க மைந்த சக்தியாக இருப்பதால், கம்யூனிஸ சமூகத்தின் கட்டு மானம் நிறைவு பெறும் வரை, வர்க்கங்கள் மறைந்துவிடும் வரை அது தனது தலைமைப் பாத்திரத்தை வகித்து வருகிறது, வகித்து வரும்.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் எதனால் நிச்சயிக்கப்படுகிறது?

முதலாவதாக, அதன் **பொருளாதார நிலைமையால்,** நாட்டின் பொருளாதாரத்தில் முன் இடம் பெற்றிருக்கும் சோஷலிஸத் தொழில் துறையுடன், சோஷலிஸ உடைமை யின் ஆக உயர்ந்த, அனைத்து மக்கள் வடிவத்துடன் அது தொடர்பு கொண்டிருப்பதால்.

இரண்டாவதாக, அதன் **அரசியல் நிலைமையால்,** பல பத்தாண்டுக்கால வர்க்கப் போராட்டத்தின் விளைவாக அது மிகுந்த அரசியல் உரமும் ஒழுங்கமைப்பும் வளமான புரட்சி

அனுபவமும் உழைப்பாளி மக்களின் எல்லா வட்டாரங்களின் இடையேயும் மிகப் பெரிய உளவியல் செல்வாக்கும் பெற்றிருப்பதால்.

சோஷலிஸ ஜனநாயகம் மேற்கொண்டு **வளர்ச்சி பெற,** அரசின் காரியங்களை நிர்வகிப்பதில் எல்லாக் குடி மக்களும் முன்னிலும் ஊக்கத்துடன் பங்கு கொள்ள வகை செய்யும் பணியைக் கட்சி முன்வைக்கிறது. சோவியத் யூனியனில் மக்கள் ஆட்சி உழைப்பாளிப் பிரதிநிதிகள் சோவியத்துக்களில் வெளியீடு பெறுகிறது. இந்த சோவியத்துக்கள் சோஷலிஸ அரசின் அரசியல் அஸ்திவாரமாக விளங்குகின்றன. திரளான பொது மக்கள் சோவியத்துக்களின் நடவடிக்கைகளில் நேர்முகமாகப் பங்கு கொள்வார்கள், அவை நாளுக்கு நாள் அதிக அளவில் சமூக ஸ்தாபனங்களாகச் செயல்படும். தொழிற்சங்கங்கள், இளங் கம்யூனிஸ்டுகள் சங்கங்கள், கூட்டுறவுக் கழகங்கள் போன்ற சமூக ஸ்தாபனங்களின் பாத்திரமும் எல்லாச் செயல் துறைகளிலும் உயரும். சோஷலிஸ அரசாட்சி, படிப்படியாக சமூகக் கம்யூனிஸ சுயநிர்வாகமாக மாறுதல் அடையும். திட்ட வகுப்பு, கணக்கீட்டு உறுப்புக்களும் பொருளாதாரத்தையும் பண்பாட்டு வளர்ச்சியையும் வழிகாட்டி நடத்துவதும் கம்யூனிஸத்தில் தங்கள் அரசியல் தன்மையை இழந்து சமூக சுயநிர்வாக உறுப்புக்கள் ஆகிவிடும்.

கம்யூனிஸத்துக்குப் பரிணமிப்பது, சோவியத் குடி மக்களின் **தனிநபர் சுதந்திரமும் உரிமைகளும் எல்லா வகையிலும் வளர்ச்சி அடைவதைக்** குறிக்கும். சோஷலிஸச் சட்ட ஒழுங்கைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதாலும் சட்ட ஒழுங்கு எவ்விதத்திலும் மீறப்படுவதைக் களைவதாலும், குற்றத் தன்மையை ஒழிப்பதாலும், அதைத் தோற்றுவிக்கும் எல்லாக் காரணங்களையும் வேரறுத்து விடுவதாலும் இதற்கு வகை செய்யப்படும்.

நாட்டின உறவுகளின் வளர்ச்சியில், நாட்டினங்களின் நெருங்கிய நட்பில் புதிய கட்டம் தொடங்கும். சோவியத் யூனியனில் வாழும் மக்கள் இனங்களிடம் பொதுவான கம்யூனிஸத் தன்மைகள் வரவர அதிகமாக உருவாகும். இதன் விளைவாக அவற்றுக்கிடையே நட்பு மேற்கொண்டு வலுவடை

யும். நாட்டின உறவுகள் பற்றிய பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும் சோஷலிஸ சர்வதேசியத்தின் உணர்வில் கட்சி தீர்வு காண்கிறது. மக்களினங்களின் நாட்டினச் சிறப்புத் தன்மைகளை அசட்டை செய்வதை அது எதிர்க்கிறது. அவ்வாறே இந்தச் சிறப்புத் தன்மைகளை மிகைப்படுத்துவதையும் அது எதிர்க்கிறது. தேசியவாதம், நாட்டின வெறி, குறுகிய நாட்டினப் போக்கு, நாட்டினத் தனிப்பாடு ஆகியவை எந்த விதத்திலும் வெளியிடப்படுவது மக்கள் இனங்களின் ஜீவாதார நலன்களுக்கு முரண்படுகிறது. எனவே அவற்றுக்கு எதிராக இடையருத போராட்டம் நடந்து வருகிறது. சோவியத் குடியரசுகள் எல்லாவற்றினதும் பொருளாதாரத்தின் சர்வாம்ச வளர்ச்சியை மேற்கொண்டும் வலுப்படுத்துவதே கட்சியின் நோக்கம்.

உள்ளடக்கத்தில் சோஷலிஸத் தன்மையும் உருவத்தில் நாட்டினத் தன்மையும் கொண்ட சோவியத் யூனியன் மக்கள் இனங்களின் பண்பாடு புது மலர்ச்சி அடையும். இந்தப் பண்பாடுகள் ஒன்றை ஒன்று வளப்படுத்தி ஒன்றுக்கு ஒன்று நெருங்கி வருவதன் விளைவாக கம்யூனிஸ சமூகத்தின் ஒரே அனைத்து மனிதகுலப் பண்பாடு உருவாகும். இதனால் சோவியத் யூனியனின் எல்லா மக்கள் இனங்களும் முன்னிலும் நெருங்கிய ஒற்றுமை கொள்ளும், அவற்றுக்கு இடையே நட்பு மேலும் வலுவாகும்.

புதிய மனிதனைப் போதித்துப் பயிற்றுவது

கம்யூனிஸக் கட்டுமானம் மக்கள் தாங்களே செய்யவேண்டிய, அவர்களுடைய கரங்களும் ஊக்கமும் அறிவும் நிறைவேற்ற வேண்டிய காரியம். மக்களின் உணர்வு எவ்வளவு உயர்வாய் இருக்குமோ, அவர்களுடைய படைப்புச் செயல் ஊக்கம் அவ்வளவே முழுமையும் விரிவும் கொண்டிருக்கும், கம்யூனிஸக் கட்டுமானத்தின் வெற்றிகள் அவ்வளவே அதிகமாய் இருக்கும்.

உளச் செல்வமும் ஒழுக்க நெறித் தூய்மையும் உடல் நலச் சிறப்பும் ஒருங்கே இசைந்த **புதிய மனிதனைப் போதித்துப் பயிற்றுவதைத்** தனது பணியாகக் கட்சி மேற்கொள்கிறது. வளரும் தலைமுறையினரைப் போதித்துப் பயிற்றுவதில் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுகிறது. புது மனிதனை

உருவாக்குவது, கம்யூனிஸக் கட்டுமானம் நடக்கும்போதே, உழைப்புக் குழுக்களில், கட்சி, அரசு, சமூக ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் போதனைப் பயிற்சி வேலை அனைத்தின் செல்வாக்கினாலும் நிகழ்கிறது.

பூர்ஷ்வாக் கொள்கைவாத, ஒழுக்க நெறி வெளிப்பாடுகளுடனும் தனியுடைமை மனப்பான்மையின் மீதமிச்சங்கள், மூடநம்பிக்கைகள், காழ்ப்புகள் ஆகியவற்றுடனும் போராட்டம் நடத்துவது கம்யூனிஸ போதனைப் பயிற்சியின் பிரிக்க முடியாத அங்கம் என்று கட்சி கருதுகிறது. பூர்ஷ்வாக் கொள்கைவாதத்துடன் கம்யூனிஸக் கொள்கைவாதம் எவ்விதத்திலும் சமரசம் செய்து கொள்வது முடியவே முடியாது. கம்யூனிஸக் கொள்கைவாதம் யாவற்றிலும் மனிதாபிமானம் நிறைந்தது. தனி மனிதர்களுக்கு இடையிலும் மக்கள் இனங்களுக்கு இடையிலும் உண்மையான மனிதாபிமானம் உள்ள பரஸ்பர உறவுகளை ஏற்படுத்துவதும், அழிவு விளைக்கும் உலக யுத்தங்களின் அபாயத்திலிருந்து மனித குலத்தை விடுவிப்பதும் உலக சமாதானத்தையும் எல்லா மனிதர்களுக்கும் இன்ப வாழ்வையும் பூமியில் நிலைநாட்டுவதும் அதன் குறிக்கோள்கள் ஆகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் திட்டத்தில் கம்யூனிஸத்தை நிறுவுபவனுக்கு உரிய ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அவற்றில் பின்வரும் ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் இருக்கின்றன:

—கம்யூனிஸக் குறிக்கோள்பால் விசுவாசம், சோஷலிஸத் தாயகத்தின் மீதும் சோஷலிஸ நாடுகள் மேலும் பற்று;

—சமூக நலத்துக்காக நேர்மையுள்ள உழைப்பு: உழைக்காதவனுக்கு உணவு கிடையாது;

—சமூகச் செல்வங்களைப் பாதுகாப்பதிலும் பெருக்குவதிலும் ஒவ்வொருவருக்கும் அக்கறை;

—சமூகக் கடமை பற்றிய உயர்ந்த உணர்வு, சமூக நலன்களுக்குக் கேடு விளைவதைப் பொறுக்க முடியாமை;

—கூட்டுத்துவமும் தோழமை நிறைந்த பரஸ்பர உதவியும்: ஒவ்வொருவனும் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவனுக்காக.

—மனிதர்களுக்கு இடையே மனிதாபிமான உறவுகளும் பரஸ்பர மரியாதையும்: மனிதன் மனிதனுக்கு நண்பன், தோழன், சோதரன்;

—நேர்மையும் உண்மையும், ஒழுக்க நெறித் தூய்மை யும், பொதுவாழ்விலும் தனி வாழ்விலும் எளிமையும் அடக்கமும்;

—குடும்பத்தில் பரஸ்பர மரியாதை, குழந்தைகளைப் பயிற்றி வளர்ப்பதில் அக்கறை;

—அநீதி, சோம்பேறித்தனம், நேர்மையின்மை, பதவி வேட்டை, பொருள் பித்து ஆகியவற்றின்பால் சமரசமற்ற போக்கு;

—சோவியத் யூனியனின் எல்லா மக்கள் இனங்களதும் நட்பும் சோதர உணர்வும், நாட்டின, மனிதஇன வெறுப்பைச் சகியாமையும்;

—கம்யூனிஸம், சமாதானம், மக்கள் இனங்களின் விடு தலை ஆகியவற்றின் பகைவர்கள் பால் சமரசம் அற்ற போக்கு;

—எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளிகளுடனும் எல்லா மக்கள் இனங்களுடனும் சோதர ஒருமைப்பாடு.

கம்யூனிஸத்துக்குப் பரிணமிப்பதற்கு, உடல் உழைப்புக் கும் அறிவு உழைப்புக்கும், சமூக வாழ்விலும் விஞ்ஞான, பண்பாட்டு, கலைத்துறைகளிலும் செயல் ஊக்கத்துடன் பங்கு கொள்வதற்கும் திறன் கொண்ட, அரசியல் உணர்வும் உயர் கல்வித் தேர்ச்சியும் பெற்ற மனிதர்களைப் பயிற்றுவது தேவைப்படும். கட்சியின் செயல் திட்டத்தில் மக்கள் கல்வி யின் சர்வாம்ச வளர்ச்சிக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. சோவியத் விஞ்ஞானமும் இலக்கியமும் இசையும் ஓவியமும் திரைப்படக் கலையும் நாடக மன்றக் கலையும் தொலைக்காட்சி யும் எல்லா வகைக் கலைகளும் முன் ஒரு போதும் இல்லாத அளவு செழித்து வளரும். திரளான மக்களின் அமெச்சூர் கலையையும் தொழில்முறைக் கலையையும் ஒருங்கிசைப்பதன் வாயிலாக சமூகத்தின் கலை நிதிகளை அபிவிருத்தி செய்வதி லும் மேலும் பெருக்குவதிலும் மிகுந்த கவனம் செலுத்தப் படும்.

சோஷலிஸத்தின் நிலைமைகளில் பொருளாதாரத்தின் வளர்ச்சி, தேசியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளும் வளர்ச்சி, மனிதர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது ஒன்றையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. எந்த முதலாளித்துவ நாட்டுடன் ஒப்பிட்டாலும் சோவியத் யூனியனில் மக்களின் வாழ்க்கைத் தரம் ஆக உயர்ந்ததாக இருக்கும்படி செய்வது என்ற, உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திட்டம் மேற்கொள்கிறது.

எல்லாம் மனிதனின் நன்மைக்கே

ஆனால் இது புரட்சித்தன்மையிலிருந்து பிறழ்வது ஆகும், ''பூர்ஷ்வாத் தன்மையை மேற்கொள்வது'' ஆகும் என்று எண்ணுபவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட இப்படிச் சொல்லுகிறார்கள்: சோஷலிஸ நாடுகள் தங்கள் மக்களின் நல்வாழ்வைப் பற்றி அல்ல, உலகப் புரட்சியை விரைவுபடுத்துவது பற்றியே சிந்திக்க வேண்டும். ஆனால் விஷயத்தை இவ்வாறு அணுகுவது அடிப்படையில் தவறானது. உழைப்பாளி மக்கள் முதலாளித்துவத்துக்கு எதிராகப் புரட்சி செய்யக் கிளர்ந்து எழுவதன் காரணமே, முதலாளித்துவம்அவர்களை மனிதர்களாக வாழவிட மாட்டேன் என்கிறது, அவர்களுடைய உழைப்பின் பயன்களைக் கபளீகரம் செய்கிறது, அவர்கள் இரங்கத்தக்க பிழைப்பு நடத்தும்படி நிர்ப்பந்திக்கிறது என்பதால்தான். முதலாளித்துவத்தில் இருப்பதைவிட சோஷலிஸத்தில் வாழ்க்கை ஒப்பிட முடியாத அளவு மேலானது என்ற காரணத்தால்தான் உழைப்பாளி மக்கள் சோஷலிஸத்தின் தரப்புக்கு மாறுகிறார்கள்.

சோஷலிஸம் உழைப்பாளி மக்களுக்கு உண்மையான விடுதலை அளிக்கிறது, மனிதனை மனிதன் சுரண்டுவது அதில் கிடையாது என்பதே அதன் முதன்மையான ஈர்ப்புச் சக்தி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், விடுதலை, சுரண்டல் இன்மை ஆகியவற்றோடு இன்றியமையாத பொருளியல், பண்பாட்டு நலங்களும் சேரும்போது இந்த ஈர்ப்பு ஆற்றல் இன்னும் விறல் மிக்கது ஆகிவிடுகிறது. அதனால்தான் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இடையறாது உயர்த்தப் பாடுபடுவது தனது தலை

யாய பொறுப்பு, தனது சர்வதேசக் கடமை என்று கருது கிறது. சோஷலிஸ நாட்டின் வளர்ச்சியில் வெற்றிகள் எவ் வளவு அதிகமாய் இருக்குமோ, அதில் மக்கள் எவ்வளவு அதிக வசதிகளுடன் வாழ்வார்களோ, உலகு அனைத்திலும் உள்ள மக்களுடைய அறிவுகள் மீதும் இதயங்கள் மீதும் அதன் செல்வாக்கு அவ்வளவே அதிகமாய் இருக்கும்.

சோவியத் மக்களின் வாழ்க்கை வசதிகள் மேற்கொண்டு வளர்ச்சி அடைவது சோஷலிஸ சமூக உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான இரு வடிவங்களையும்— ஊதியத்தையும் சமூக உபயோக நிதியையும் —செவ்வைப் படுத்தி அபிவிருத்தி செய்வதன் வாயிலாக நிகழும் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் திட்டம் குறிக்கிறது. ஆயினும் உழைப்புக்கு ஏற்ற ஊதியமே கம்யூ னிஸ நிர்மாணக் காலப்பகுதி முழுவதிலும் உழைப்பாளி களின் பொருளியல், பண்பாட்டுத் தேவைகளை நிறைவேற்று வதற்கான தலை ஊற்றுக இருந்து வரும்.

புதிய செயல் திட்டம், ''எல்லாம் மனிதனின் பொருட்டு, மனிதனின் நன்மைக்காக!'' என்னும் கட்சியின் கோஷத் திற்குச் செயல்வடிவம் அளிக்கிறது. அதன் உள்ளடக்கம் முழுவதுமே மக்களின் பொருளியல் வாழ்க்கை வசதிகளையும் பண்பாட்டையும் இடையறாது மேம்படுத்துவதையும், ''திற மைக்கு ஏற்ற உழைப்பு, தேவைகளுக்கு ஏற்ற ஊதியம்'' என்ற கம்யூனிஸக் கோட்பாட்டைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய நிலைமைகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது செயல் திட்டத்தினுடைய முக்கிய வரையறுப்புக்கள் இவை யே. இந்தத் திட்டம் சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத் துக்குப் பரிணமிக்கும் காலப்பகுதி முழுவதையும் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸக் கட்டுமானக் காலத்தில் கட்சி

சோஷலிஸ சமூகம் கம்யூனிஸத்தை நோக்கி வளர்ச்சி அடைவதோடு கூடவே கம்யூனிஸ்ட் கட்சியும் வளர்ச்சி அடைகிறது. தொழிலாளி வர்க்கத்தின் கட்சியாய் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி இப்போது மக்கள் அனைவரதும் கட்சி ஆகிவிட்டது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் மக்களின் முன்னணிப் படை

இந்த முடிவு சரிதானா என்று வெளிநாடுகளில் சிலர் சந்தேகிக்கிறார்கள். தொழிலாளி வர்க்கத்தின் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி கம்யூனிஸத்தை அடைவதற்குப் பாதி வழியில் மக்கள் அனைவரதும் கட்சி ஆகிவிட்டது அனுமதிக்கத் தக்கதுதானா? ஸ்தாபன ரீதியிலும் உளவியல் நோக்கிலும் பாட்டாளி வர்க்கத்தின் சீர்கேட்டை இது குறிக்காதா? இவ்வாறு அவர்கள் சந்தேகம் கிளப்புகிறார்கள். ஆனால் இந்த சந்தேகங்களுக்கு எவ்வித ஆதாரமும் கிடையாது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி முதன்மையாகத் தொழிலாளி வர்க்கத்தின் கட்சியாகவே, அதன் கம்யூனிஸ ஆதர்சங்களையும் அதன் குறிக்கோள்களையும் வெளியிடுவதாகவே இருந்தது, மேலும் இருந்து வருகிறது. அதோடு கூடவே அது மக்கள் அனைவரின் கட்சியும் ஆகியிருக்கிறது. சோஷலிஸத்தினது வெற்றியின் அடிப்படையில் சோவியத் யூனியனில் நிறைவேறியுள்ள அடிப்படையான சமுதாய மாற்றங்களின் விதிமுறைக்கு ஒத்த விளைவே ஆகும் இது. தொழிலாளி வர்க்கத்தின்— அதன் முன்னணிப் படையான கம்யூனிஸ்ட் கட்சியின்— குறிக்கோள்களும் ஆதர்சங்களும் சோஷலிஸத்தை நிறுவிய மக்களின் எல்லா வட்டாரங்களுடையவும் குறிக்கோள்களும் ஆதர்சங்களும் ஆகி விட்டன. சமூக வாழ்வில் கட்சியின் பாத்திரம் இதனால் பலவீனம் அடையவில்லை, எல்லா வகையிலும் அதிக வலு அடைந்திருக்கிறது.

கம்யூனிஸக் கட்டுமானத்தின் காலப் பகுதியில் கட்சியின் தலைமை ஏற்கும், வழி நடத்தும், ஒழுங்கமைக்கும் பாத்திரம் மேற்கொண்டு வளர்ந்து கொண்டு போகும் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்திட்டம் வலியுறுத்து

கிறது. இவ்வாறு நிகழ்வதற்குப் பல புறநிலைக் காரணங்கள் உண்டு. அவற்றில் முதன்மையானது கம்யூனிஸக் கட்டுமானம் அளவுகளிலும் பணிகளின் சிக்கல்களிலும் உயர்வது ஆகும். முன்னணிப் புரட்சி சித்தாந்தத்தையும் சமூக வளர்ச்சி விதிகள் பற்றிய அறிவையும் ஆயுதங்களாகப் பூண்டதும் மிகப் பெரிய அரசியல் அனுபவமும் மதிப்பும் வாய்ந்ததுமான கட்சி ஒன்றுதான் இந்தப் பிரச்சினைகளுக்கு யாவற்றிலும் சரியான முடிவுகள் காணவும் அவற்றைச் செயல்படுத்துவதற்குத் திரளான பொதுமக்களை ஒழுங்கமைக்கவும் வல்லது ஆகும்.

நாட்டின் வளர்ச்சியில் புதிய காலப் பகுதிக்குப் பொருத்தமாகக் கட்சியினது வளர்ச்சி, அதன் அரசியல், கொள்கை வாத, ஒழுங்கமைப்பு வேலை ஆகியவற்றில் முன்னிலும் உயர்ந்த கட்டம் தொடங்கும். கட்சி தனது நடவடிக்கைகளின் வடிவங்களையும் முறைகளையும் காலத்தின் வளர்ந்துவரும் தேவைகளுக்கு ஏற்ற மட்டத்தில் அவை எப்போதும் இருந்து வரும் வகையில் இடையறாது செவ்வைப்படுத்தி வருகிறது. கம்யூனிஸ சமூகத்தை நிறுவும் மக்களது முன்னணிப் படைப் பிரிவு என்ற வகையில் கட்சி தனது உள்கட்சி வாழ்க்கையை ஒழுங்கமைப்பதிலும் முன்னே செல்கிறது, கம்யூனிஸ சமூக சுயநிர்வாகத்தின் ஆகச் செவ்வையான வடிவங்களை உருவாக்குவதற்கு முன்மாதிரி காட்டுகிறது.

கட்சி உறுப்பினர்களின் உரிமைகளும் கடமைகளும்

இருபத்திரண்டாவது காங்கிரஸால் உறுதி செய்யப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி விதிகளின் படி, பதினெட்டு வயது நிறைந்த வரும், கட்சியின் விதிகளையும் செயல் திட்டத்தையும் ஒப்புக்கொள்பவரும், கம்யூனிஸக் கட்டுமானத்தில் செயலூக்கத்துடன் பங்கு கொள்பவரும், கட்சி ஸ்தாபனங்கள் ஒன்றில் வேலை செய்பவரும், கட்சியின் தீர்மானங்களை நிறைவேற்றுபவரும், உறுப்பினர் சந்தா கட்டுபவருமான சோவியத் யூனியனின் எந்தப் பிரஜையும் கட்சி உறுப்பினராய் இருக்கலாம். கட்சியில் உறுப்பினராகச் சேர்பவர், மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் கட்சி உறுப்பினராக இருந்துவருபவர்களும் சிபாரிசு செய்யப்படுபவரை உற்

பத்திரிகைத் துறையிலும் சமூகத் துறையிலும் குறைந்த பட்சம் ஓர் ஆண்டு சேர்ந்து வேலை செய்ததன் மூலம் அறிந்தவர்களும் மான மூன்று உறுப்பினர்களின் பரிந்துரைகளைக் காட்ட வேண்டும். கட்சியில் சேர்பவர் ஓர் ஆண்டு வேட்பாளராக இருந்துவர வேண்டும். கட்சியின் செயல்திட்டத்தையும் விதிகளையும் விரிவாக ஆராய்ந்து அறியவும், கட்சியின் உறுப்பினர் ஆவதற்கு முன்னேற்பாடுகள் செய்து கொள்ளவும் அவருக்கு இது இன்றியமையாதது. கட்சி ஸ்தாபனம், வேட்பாளரின் சொந்த இயல்புகளை இன்னும் நன்கு ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்கு இந்தக் காலத்தைப் பயன்படுத்தும். கட்சியில் உறுப்பினர் கண்டிப்பாகத் தனி நபர்வாரியாகவே ஏற்கப்படுவார்கள்.

கட்சி தனது அணிகள் எண்ணிக்கையில் அதிகரிப்பதில் அல்ல, பண்பில் உயர்வதிலேயே முக்கியமாகக் கவனம் செலுத்துகிறது. கம்யூனிஸ நிர்மாணத்தின் நிர்ணயகரமான பகுதிகளில் தனது செல்வாக்கை வலுப்படுத்துவதற்கு அது முயற்சி எடுத்துக் கொள்கிறது. இந்த நோக்கத்துக்கு இணங்கவே அது கட்சியில் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ளும் வேலையை நடத்துகிறது.

கட்சி உறுப்பினர் கௌரவம் நிறைந்த பெரிய பொறுப்பை வகிக்கிறார். அவர் உழைப்பின்பால் கம்யூனிஸ்டுக்கு உரிய போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும், நாட்டின் அரசியல் வாழ்க்கையில் செயலூக்கத்துடன் பங்கு கொள்ள வேண்டும், மார்க்ஸீய-லெனினீய சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற வேண்டும், குறைகளை எதிர்த்துத் துணிவுடன் போராட வேண்டும், கட்சி, அரசுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். உற்பத்தியிலும் சமூக வேலையிலும் சோஷலிஸப் பொதுவாழ்வின் விதிகளையும் அதன் ஒழுக்கநெறிக் கோட்பாடுகளையும் கடைப்பிடிப்பதிலும்—எல்லாவற்றிலும், எப்போதும் அவர் முன்னணியில் இருக்க வேண்டும். கட்சி உறுப்பினர் என்பவர், கட்சியின் குறிக்கோளுக்காக, அதன் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்காக, கம்யூனிஸக் கட்டுமானத்துக்காக உணர்வுபூர்வமாக, செயலூக்கத்துடன், வீரத்துடன் போராடுபவர்.

கட்சி உறுப்பினருக்குப் பின்வரும் உரிமைகள் உண்டு:

—கட்சி உறுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கவும் தேர்ந்தெடுக்கப்படவும் உரிமை;

—கட்சிக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் காங்கிரஸ்களிலும் கட்சிக் கமிட்டிகளின் கூட்டங்களிலும் கட்சிப் பத்திரிகைகளிலும் கட்சியின் கொள்கையையும் நடைமுறை வேலையையும் பற்றிய பிரச்சினைகளைச் சுதந்திரமாக விவாதிக்கவும், யோசனைகளை முன்வைக்கவும், ஸ்தாபனம் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன் தனது கருத்தைப் பகிரங்கமாக எடுத்துரைக்கவும் ஆதரித்துப் பேசவும் உரிமை;

—கட்சிக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் காங்கிரஸ்களிலும் கமிட்டிகளின் முழுக் கூட்டங்களிலும் எந்தக் கம்யூனிஸ்டையும், அவர் வகிக்கும் பதவி எத்தகையதாக இருந்தாலும், தாக்கி விமர்சிக்கும் உரிமை;

—தம்முடைய நடவடிக்கை அல்லது நடத்தை குறித்த பிரச்சினை விவாதிக்கப்படும்போது கட்சிக் கூட்டங்களிலும் பியூரோவினுடையவும் கமிட்டிகளுடையவும் கூட்டங்களிலும் நேர்முகமாகக் கலந்துகொள்ளும் உரிமை;

—சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டிவரை கட்சியின் எந்தப் பிரிவுக்கும் கேள்விகளும் அறிக்கைகளும் யோசனைகளும் சமர்ப்பிக்கவும் அவற்றின் உட்கருத்துக்கு ஏற்ற விடைகளைக் கோரவும் உரிமை.

எல்லாக் கம்யூனிஸ்டுகளும் முதற்படிக் கட்சி ஸ்தாபனங்களில் உறுப்பினராய் இருக்கிறார்கள். இவை கட்சியின் **அஸ்திவாரமாக,** அதன் அடித்தளமாக விளங்குகின்றன. முதற்படி ஸ்தாபனங்கள் கட்சி உறுப்பினர்கள் வேலை செய்யும் இடங்களைப் பொறுத்து—ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் பிற தொழில் நிலையங்களிலும் கூட்டுப் பண்ணைகளிலும் சோவியத் சேனையின் பிரிவுகளிலும் அலுவலகங்களிலும் கல்வி நிலையங்களிலும்—மூன்றுக்குக் குறையாத கட்சி உறுப்பினர்கள் இருக்கும் பட்சத்தில் அமைக்கப்படுகின்றன. அன்றுட வேலையை நடத்துவதற்கு முதற்படிக் கட்சி ஸ்தாபனம் பியூரோ அல்லது கமிட்டியைத் தேர்ந்தெடுக்கிறது. இதன் உறுப்பினர் எண்ணிக்கை கட்சிக் கூட்டத்தால் தீர்மானிக்கப்படும். முதற்படி ஸ்தாபனங்கள்

பொது மக்கள் திரளின் உள்ளே செயல்படுகின்றன, உழைப் பாளிகளுடன் இடையறாது கலந்து பழகுகின்றன, அவர்களைக் கட்சியைச் சுற்றி ஒன்று திரட்டுகின்றன, கட்சிக் கொள்கை யைப் பரப்புகின்றன, அதைச் செயல்படுத்துவதற்கு உழைப் பாளிகளை ஒழுங்கமைக்கின்றன. உழைப்பாளிகளின் கம்யூ னிஸ உணர்வை உயர்த்துவதும் அவர்களுடைய படைப்புச் செயலூக்கத்தை அபிவிருத்தி செய்வதும் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றவும் உபரியாக நிறைவேற்றவுமான முயற்சியில் அவர்களுடைய ஆக்க வேலையைத் தலைமை ஏற்று நடத்துவதும் முதற்படி ஸ்தாபனங்களின் கடமை ஆகும். கட்சி தன்னுடைய முதற்படி ஸ்தாபனங்களுக்குப் பெருத்த முக்கியத்துவம் அளிக்கிறது. அவற்றில் ஒவ்வொன் றும் தனது வேலைக் குழுவில் கட்சியை உரிய முறையில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் உழைப்பாளிகளின் நன் மதிப்பையும் ஆதரவையும் பெறுவதற்கும் கட்சி பிரயாசை எடுத்துக்கொள்கிறது.

கட்சியின் அமைப்புக்கும் செயலுக்கும் உரிய கோட்பாடுகள்

கட்சியின் ஸ்தாபன அமைப்பினது வழிகாட்டிக் கோட்பாடு **ஜனநாயக மத்தியத்துவம்** ஆகும். இதன் முக்கிய வரையறுப்புகள் பின்வருமாறு:

அ) கீழிருந்து மேல்வரை கட்சி யின் எல்லாத் தலைமை உறுப்புக்களும் தேர்ந்தெடுக்கப் படுவது;

ஆ) கட்சி உறுப்புக்கள் தங்கள் கட்சி ஸ்தாபனங்களுக் கும் மேல் உறுப்புக்களுக்கும் முன் தங்கள் செயல்களுக்கு முறையாக அவ்வப்போது விளக்கம் கூறக் கடமைப்பட் டிருப்பது;

இ) கண்டிப்பான கட்சிக் கட்டுப்பாடு, சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குக் கீழ்ப்படுவது;

ஈ) உயர் உறுப்புக்களின் தீர்மானங்கள் கீழ் உறுப்புக் களுக்குக் கட்டாயமாய் இருப்பது.

கட்சி இந்த வரையறுப்புக்களை வழிகாட்டியாகக் கொண்டு எல்லாக் கம்யூனிஸ்டுகளதும் உயர்ந்த செயலூக்கத்துக்கும் செயல் ஒற்றுமைக்கும் ஏதேனும் முக்கியப் பணியை நிறை

வேற்றுவதில் கட்சிச் சக்திகளை விரைவாக ஒருமுனைப்படுத்து வதற்கும் வகை செய்கிறது.

கட்சித் தலைமையின் ஆக உயர்ந்த கோட்பாடு **கூட்டுத் துவம்** என்று கட்சி விதிகளில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கட்சியில் ஒரு நபர் தலைமை ஆதிக்கம் இல்லை, இருக்கவும் முடி யாது: அதன் எல்லாத் தலைமை உறுப்புக்களும்—சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியிலிருந்து முதல்படி ஸ்தாபனத்தின் பியூரோ உட்பட — கூட்டுத் தலைமை கொண்ட உறுப்புக்களாக விளங்குகின்றன. அவை எல்லாமே தேர்ந்தெடுக்கவும் மாற்றப்படவும் கூடியவை, விளக்கம் தெரிவிக்கக் கடமைப்பட்டவை. கூட்டுத்துவம் பிரச்சினைகளின் சரியான தீர்வுக்கும் கட்சி ஸ்தாபனங்களின் முறையான நடவடிக்கைக்கும் அரசியல் முதிர்வும் அனுபவ மும் உள்ள ஊழியர்களை உருவாக்குவதற்கும் கம்யூனிஸ்டு களின் செயலூக்கத்தையும் சுதந்திரத்தையும் வளர்ப்பதற் கும் இன்றியமையாத நிபந்தனை ஆகும். கூட்டுத்துவம் பல மனிதர்களின் பல்துறைத் திறமைகளையும் அறிவையும் அனுபவத்தையும் ஒன்று சேர்க்க உதவுகிறது.

தேர்ந்தெடுக்கப் பெறும் உறுப்புக்களின் செயலையும் அவற்றின் ஊழியர்களது வேலையையும் திரளான கட்சி உறுப் பினர் கண்காணிப்பது மிகவும் முக்கியமானது என்று கட்சி கருதுகிறது. கீழிருந்து மேல்வரை எல்லாக் கட்சி உறுப்புக் களும் முறையாக விளக்க அறிக்கைகள் செய்வதற்கும் தேர் தல்கள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்ததன் வாயிலாக இதற்கு வகை செய்யப்படுகிறது. விளக்க அறிக்கைகள் செய் வதற்கும் தேர்தல்கள் நடத்துவதற்குமான கட்சிக் கூட்டங் களும் மகாநாடுகளும் யூனியன் குடியரசுகளின் கட்சிக் காங் கிரஸ்களும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக் காங் கிரஸ்களும் நடத்துவதற்குக் கண்டிப்பாக நிர்ணயிக்கப்பட்ட கெடுக்களை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் விதிகள் வரையறுத்துள்ளன. இந்தக் கெடுக்களைக் கடைப் பிடிப்பது கட்டாயமானது.

உட்கட்சி ஜனநாயகத்தின் முக்கியக் கோட்பாடு கட்சி யின் கொள்கையையும் நடைமுறை வேலையையும் பற்றிய பிரச்சினைகள்மீது கட்டற்ற, காரியப் பாங்கான விவாதம்

ஆகும். கட்சி இயந்திர ரீதியான கட்டுப்பாட்டை அல்ல, உணர்வு பூர்வமான கட்டுப்பாட்டையே செயல்படுத்து கிறது. விவாதத்துக்கும் விமர்சனத்துக்கும் சுதந்திரம் இல் லாத இடத்தில் உணர்வு பூர்வமான கட்டுப்பாடு நிலவ முடியாது. ஆனல் இந்த சுதந்திரம் கட்டுப்பாட்டையே மறுக்கும் அராஜகவாதத்துடனும் பொது அம்சம் எதுவும் கொண்டது அல்ல. பெரும்பான்மையினரின் விருப்பம் வெளியிடப்பட்டு, தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் எல்லாக் கம்யூனிஸ்டுகளும் ஒரு மனிதன்போலச் செயல்படு கிறார்கள். ஏற்கப்பட்ட தீர்மானத்துக்கு அதை ஆதரித்து வாக்களித்தவர்களும் ஏதேனும் காரணத்தால் அத்தற்கு இசையாதவர்களும் ஒரே மாதிரிக் கீழ்ப்படுகிறார்கள். இது கட்சிக் கட்டுப்பாட்டின் கட்டாயக் கோரிக்கை ஆகும். இல்லா விட்டால் கட்சி ஒரே முழுமையானதாகச் செயல் ஆற்ற முடியாது. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவிட்டால் கட்சியின் முறையான ஒன்றித்த வேலை சாத்தியமாய் இராது, கம்யூனிஸக் கட்டுமானம் பெருத்த நஷ்டத்துக்கு உள்ளாகி இருக்கும்.

விவாதங்கள், சிறப்பாகக் கட்சி அனைத்தையும் உள்ளிட்ட அளவான விவாதங்கள், கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கு வகை செய்யும் விதத்திலும் கட்சியின் ஒற்றுமை குலைவதற்கும் உட்குழுப் பிரிவுகள் உரு ஆவதற்கும் வாய்ப்பு இல்லாத விதத்திலும் நடத்தப்பெற வேண்டும் என்று சோவியத் யூனியன் கம்யூ னிஸ்ட் கட்சியின் விதிகளில் கூறப்பட்டிருக்கிறது. கட்சி அணிகளின் ஒற்றுமையை எல்லா வகையிலும் வலுப்படுத்து வது ஒவ்வொரு கம்யூனிஸ்டினுடையவும் கட்டாயக் கடமை ஆகும்.

கருத்துக்களிலும் ஸ்தாபன நோக்கிலும் கட்சியின் வலு வான ஒற்றுமை அதன் வெல்லரும் விறலுக்கு நிர்ணயகரமான நிபந்தனை, கம்யூனிஸக் கட்டுமானத்தின் மாபெரும் பணி களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உத்தரவாதம் ஆகும்.

உலக வளர்ச்சியின் பிரதான நெடுஞ்சாலை

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் உலகப் புரட்சி நிகழ்முறையும்

உலக வளர்ச்சியின் வருங்கால வாய்ப்புக்கள் பற்றி 1960ல் கூடிய கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு செய்த பிரதான முடிவுகளே நிகழ்ச்சிகளின் போக்கு உறுதிப்படுத்திவிட்டது. பல நாடுகளின் மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராட்டத்துக்கு மேலும் மேலும் உறுதியுடன் கிளர்ந்து எழுந்தார்கள். சோஷலிஸத்தின் பொருட்டுப் போராடும் சக்திகள் வளர்ந்தன. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு வளர்ச்சி அடைந்தது. முதலாளித்துவ நாடுகளில் வர்க்கப் போராட்டங்கள் விரிவாக நடந்தன, ஜனநாயகத்தினதும் சோஷலிஸத்தினதும் வெற்றிக்கு வகை செய்வதை நோக்கமாகக் கொண்ட உள்நாட்டுச் சக்திகள் வலு மிகுந்து பல்கின. முதலாளித்துவ அமைப்பிலிருந்து 1959ம் ஆண்டில் விலகிவிட்டது க்யூபா. அது சோஷலிஸ வளர்ச்சிப் பாதையில் முன்னேறலாயிற்று. தேசிய விடுதலை இயக்கத்தின் பலத்த அடிகளால் காலனி ஆட்சி அமைப்பு தகர்ந்து சிதறியது. எல்லாக் கண்டங்களிலும் திரளான மக்களின் சமாதான இயக்கம் விரிவடைந்தது.

சமாதானம், தேசிய விடுதலை, ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டு மக்கள் இனங்களுடையவும் உழைப்பாளிகளுடையவும் ஒடுக்கப்பட்ட மக்கள் திரள்களுடையவும் போராட்டமே **மனிதகுல வளர்ச்சியின் பிரதான நெடுஞ்சாலை** ஆயிற்று.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்களும் உலகப் புரட்சி நிகழ்முறைக்கு அருந் தொண்டு ஆற்றிவருகிறார்கள், அதன் வளர்ச்சிக்கு எல்லா வகையாலும் உதவி வருகிறார்கள். சோவியத் அரசின் விறலை அதிகப்படுத்துவதன் வாயிலாக அவர்கள் சோதரக் கட்சிகளுடனும் பிற சோஷலிஸ நாடுகளின் மக்களுடனும் சேர்ந்து சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பை வலுப்படுத்துகிறார்கள். உலகு அனைத்திலும் உள்ள தொழிலாளர்களும் திரளான

உழைப்பாளிகளும் சோவியத் மக்களின் இடைவிடாத ஆதரவைப் பெற்று வருகிறார்கள்.

சோவியத் யூனியன் தனது சர்வதேசச் செல்வாக்கைக் காலனி ஆட்சிக்கு எதிராக, தேசிய விடுதலையின் பொருட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்திவரும் போராட்டத்தின் நலன்களுக்காகப் பயன்படுத்தி வருகிறது.

காலனி ஆட்சியை முழுமையாக ஒழிப்பது பற்றிய பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சங்கப் பொதுச் சபையின் விவாதத்துக்கு சோவியத் அரசாங்கம் 1960ம் ஆண்டு முன் வைத்தது, எல்லாக் காலனி நாடுகளுக்கும் மக்களுக்கும் விடுதலை அளிக்கும் பிரகடனத்தின் மசோதாவைப் பிரேரித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைமையில் காலனி வல்லரசுகள் இதை எதிர்த்தன. ஆயினும் பொதுச் சபை பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது. ஒடுக்கப்பட்ட, விடுதலைப் பற்றுள்ள மக்கள் அனைவரும் சோவியத் யூனியன் தங்கள் உண்மை நண்பன், காப்பாளன் என்பதை இன்னும் ஒரு முறை கண்டு தெரிந்து கொண்டனர்.

அறுபதுக்களில், சோஷலிஸ நாடுகளதும் சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தினுடையவும் ஆதரவுடன், ஒடுக்கப்பட்ட மக்கள் காலனி ஆட்சி அமைப்பு மீது உக்கிரமான தாக்குதல்கள் தொடுத்தார்கள். சில மக்கள் ஆயுதப் போராட்டத்தின் விளைவாகக் காலனி ஆட்சி நுகத்தை உடைத்து எறிந்தார்கள். வேறு சில மக்களுக்கு, தேசிய விடுதலை இயக்கத்தின் விரைந்த வளர்ச்சியால் திகில் அடைந்த காலனி ஆட்சியாளர்கள் தாமே வேறு வழி இன்றிச் சுதந்திரம் அளித்தார்கள். 1958ல் காலனி ஆட்சி நுகத்தை உடைத்து எறிந்தது கினி. அதை அடுத்து ஐவரி கோஸ்ட், அப்பர் வோல்டா, கபோனு, காபூ, டாகோமியா, காமரூன், ஸயீர் குடியரசு, காங்கோ மக்கள் குடியரசு, மாரிட்டானியா, மாலி, மடகாஸ்கர், நிகெரா, நைஜீரியா, ஸெனெகால், ஸோமாலி, தோகோ, மத்திய ஆப்பிரிக்கா, சாத் முதலிய ஆப்பிரிக்க நாடுகளின் மக்கள் தேசிய விடுதலை பெற்றார்கள். 1961ம் ஆண்டில் ஸியெரா-லியோனும் தங்களைக்காவும் தேசிய விடுதலை அடைந்தன. நீண்ட காலம் குருதி பெருக்கிப் போராடியதன் விளைவாக அல்ஜீரிய மக்கள் 1962ம் ஆண்டு வெற்றி வாகை சூடினார்கள். புருண்டி,



குப்பைக் கிடங்கில்!

ருவாண்டா, உகாண்டா, கென்யா ஆகியவை சுதந்திரம் பெற்றன.

உலகின் மிக விசாலமான நிலப்பரப்புக்களில் தேசிய விடுதலைப் புரட்சிகள் வெற்றி பெற்றன. அனேகமாகப் பூரா ஆசியாவும் ஆப்பிரிக்காவும் காலனி ஆட்சி அடிமைத் தளைகளை உடைத்து எறிந்து விட்டன. முன்னாள் காலனிகளின் இடத்தில் இளம் தேசிய அரசுகள் உதயமாயின. விடுதலை பெற்ற மக்கள் சர்வதேச வாழ்க்கையில் செயலூக்கத்துடன் பங்கு கொள்ளவும் மனித குலத்தின் பொது முன்னேற்றத்துக்குத் தங்களால் இயன்ற தொண்டு ஆற்றவும் தலைப்பட்டார்கள்.

விறல் மிக்க புரட்சிச் சக்திகள் உலகின் உருவையே மாற்றிவிட்டன. உலக மக்கள் தொகையில் நூறு கோடிக்கும் மேல்—மனிதகுலத்தின் மூன்றில் ஒரு பகுதியினர்—உலக சோஷலிஸ அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் வாழ்கிறார்கள். கோடானுகோடி மக்கள், காலனி ஆட்சி நுகத்தை உடைத்து எறிந்து, தேசிய விடுதலை பெற்றுவிட்டார்கள்.

ஏகாதிபத்தியம் மனிதகுலத்தின் பெரும் பகுதியினர்

மீது தனது ஆதிக்கத்தை மீண்டும் பெற முடியாத விதத்தில் இழந்துவிட்டது.

சோவியத் யூனியன்— சமாதானக் காவலன்

ஏகாதிபத்தியம் உலக மக்களுக்கு இப்போது அபாயமாக விளங்கவில்லை என்று இது அர்த்தப்படுகிறதா? இல்லை. அது இன்னமும் நிலவுகிறது, மனித குல முன்னேற்றத்தின் பிரதானத் தடையாகவும் ஆக்கிரமிப்பு யுத்தங்களின் தலையூற்றுகவும் அது பணியாற்று கிறது. தற்கால சர்வதேச வாழ்க்கை ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு எதிராக சமாதானப் பற்றுள்ள சக்திகளின் கெடுபிடி மிகுந்த போராட்டத்தால் நிறைந் திருக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் உலக சமாதானத்தை நிலைப்படுத்தும் பொ ருட்டும் வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசு களின் சமாதான சகவாழ்வின் பொருட்டும் மாறுதலின்றிப் போராடி வந்தன, போராடி வருகின்றன. சர்வதேசக் கெடு பிடி நிலையைத் தளர்த்தவும் மக்களின் பாதுகாப்பை வலுப் படுத்தவும் ஒவ்வொரு நாட்டின் மக்களும் தேசிய, சமுதாய முன்னேற்றப் பாதையில் கட்டின்றி அபிவிருத்தி அடையக் கூடிய நிலைமைகளை ஏற்படுத்தவும் எல்லா வாய்ப்புக்களையும் அவை பயன்படுத்தி வருகின்றன. தங்கள் வெளிநாட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதில் அவை சோவியத் யூனியனதும் சோஷலிஸ நாடுகளின் அமைப்பு அனைத்தினதும் வளர்ந்துவரும் விறலியும் உலகு அனைத்தினதும் சமாதானப் பற்றுள்ள சக்திகளின் ஆதரவையும் சார்ந்திருக்கின்றன.

கண்டிப்பான சர்வதேசக் கண்காணிப்பின் கீழ், உலகு அனைத்திலும் முழுமையான ஆயுத ஒழிப்புச் செயல்திட்டத் தை ஏற்கும்படி சோவியத் அரசாங்கம் 1959ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சங்கப் பொதுச் சபையில் பிரேரித்தது. சோவியத் பிரேரணைகள் உலகம் முழுவதிலும் விரிவான வர வேற்பைப் பெற்றன. உலகப் பொது மக்கள் அபிப்பிராயத் தின் வற்புறுத்தலுக்கு இணங்கி ஐ. நா. பொதுச் சபை சோவியத் பிரேரணைகளின் உணர்வில் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு ஆயுத ஒழிப்புக் கமிஷனை அமைத்தது.

அணு, நீர்வாயுக் குண்டுகளின் பரிசோதனைகளுக்கும் யுத்தத்தில் அவை பிரயோகிக்கப்படுவதற்கும் தடை விதிக்கும் படி செய்ய சோவியத் யூனியன் விடாப்பிடியாக முயன்று வருகிறது. முடிவாக, 1963ம் ஆண்டில், சோவியத் யூனியனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி வளி மண்டலத்திலும் விண்வெளிப் பரப்பிலும் நீருக்கு அடியிலும் அணுக்கரு ஆயுதங்களின் சோதனைகள் தடை செய்யப்பட்டன. தரைக்கீழ் அணுக்கரு ஆயுதங்களின் சோதனைகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் இசையாத காரணத்தால் தடை செய்யப்படவில்லை. உலகின் மிகப் பெரும்பாலான அரசுகள் இந்த உடன்படிக்கையில் சேர்ந்து கொண்டன. அரைகுறையானதுதான் என்றாலும், இந்த உடன்படிக்கை கையெழுத்தானது சமாதானப் பற்றுள்ள சக்திகளின் கணிசமான வெற்றியாகத் திகழ்ந்தது. அணு, நீர்வாயுக் குண்டுச் சோதனைகளின் போது நேரும் பொழிவுகளால் உடல்நலம் அபாயகரமாகப் பாதிக்கப்படுவதிலிருந்து மக்களுக்கு விடுதலை அளிக்கும் பாதையில் முக்கியமான அடிவைப்பு நடந்து விட்டது.

ஆனால் அணுக்கரு ஆயுதங்களின் சோதனைகள் தடை செய்யப்பட்டதால் அவை பிரயோகிக்கப்படும் அபாயம் நீங்கிவிடவில்லை. எனவேதான் அணுக்கரு ஆயுதங்களைப் பரப்பாதிருப்பது பற்றி அரசுகளுக்கு இடையே ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படுவதற்காக சோவியத் யூனியன் பாடுபட்டது, இந்த ஆயுதங்களின் பிரயோகம் தடை செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்திவருகிறது. மேற்கு ஜெர்மானிய சைனியவாதிகளை அணுக்கரு ஆயுதங்கள் தயாரிக்க விடக் கூடாது என்று சோவியத் யூனியன் விசேஷ வன்மையுடன் போராடிவருகிறது. இந்த சைனியவாதிகளின் காட்டுவிலங்குத்தனமான மனப் போக்குகளும் நாடு பிடிக்கும் சூழ்ச்சிகளும் உலகறிந்தவையே.

சமாதானப் பற்றுள்ள சக்திகளின் செயல்களுக்கு எதிர்நிறையாக ஏகாதிபத்தியவாதிகள், சிறப்பாக அமெரிக்க ஐக்கியநாடுகளின் ஆக்கிரமிப்புப் போக்குள்ள வட்டாரத்தினர் சர்வதேசச் சூழ்நிலையை எல்லா வகையிலும் கெடுபிடி

நிறைந்தது ஆக்கினர்கள். அவர்கள் பிற நாடுகளுடையவும் மக்களுடையவும் விவகாரங்களில் முரட்டுத்தனமாகத் தலை யிட்டார்கள், சோஷலிஸ அரசுகளுக்கும் வளர்ச்சி அடைந்து வரும் இளம் அரசுகளுக்கும் எதிராக ஆக்கிரமிப்பு நட வடிக்கைகளை மேற்கொண்டார்கள், அவற்றுக்கு எதிராகச் சதியாலோசனைகளும் ஆத்திர மூட்டும் செயல்களும் செய் தார்கள், கொள்கைவாத அழிவு வேலைகளை நடத்தினர்கள். இத்தகைய எல்லா சந்தர்ப்பங்களிலும் சோவியத் யூனியன் ஆக்கிரமிப்புக்கு உள்ளானவர்களைக் காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது, மேற்கொண்டு வருகிறது, ஏகாதிபத்திய வாதிகளின் ஆக்கிரமிப்புச் சூழ்ச்சிகளைக் குலைத்தது, குலைத்து வருகிறது, விடுதலைப் பற்றுள்ள நாடுகளின் மக்களுக்கு எல் லாவித உதவியும் ஆதரவும் அளித்தது, அளித்து வருகிறது.

1956ம் ஆண்டு ஏகாதிபத்தியவாதிகள் ஹங்கேரிய மக்கள் குடியரசில் புரட்சி எதிர்ப்புக் கலகத்தைத் தூண்டி நடத்தினர்கள். அந்த நாட்டில் பழைய, முதலாளித்துவ அமைப்பை மீண்டும் நிறுவவும் அதை சோஷலிஸ நாடுகளின் நட்பு மண்டலத்திலிருந்து வலுக்கட்டாயகமாக வெளியேற்ற வும் இவ்வாறு அவர்கள் முயன்றார்கள். புரட்சி எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்கவும் ஏகாதிபத்தியச் சதிச் சூழ்ச்சிக்கு முடிவு கட்டவும் சோதர ஹங்கேரிய மக்களுக்கு உதவினர்கள் சோவியத் மக்கள்.

பெட்ரோலிய வளம் கொழிக்கும் அரபு நாடுகளின் சுதந்திரம் ஏகாதிபத்தியவாதிகளுக்கு உகப்பாய் இல்லை. அவற்றுக்கு எதிராக, சிறப்பாக எகிப்துக்கு எதிராக ஆயுதத் தாக்குதல்களை அவர்கள் பல முறை மேற்கொண்டார்கள். தனது நிலப்பரப்பின் வழியே செல்வதும் எகிப்தியர்களின் கரங்களால் கட்டப்பட்டதுமான சூயெஸ் கால்வாயை 1956ல் எகிப்து தேசீய உடைமை ஆக்கியபோது, எகிப்திய மக்களின், அவர்களுடைய அரசாங்கத்தின் இந்தச் சட்டபூர்வமான செயலை ஆயுத பலத்தால் தடை செய்ய பிரிட்டனும் பிரான் ஸும் இஸ்ரேலும் முயன்றன. சோவியத் யூனியன் அப்போது ஆக்கிரமிப்பாளர்களைக் கடுமையாக எச்சரித்தது. சோவியத் யூனியனதும் உலகின் பிற அமைதிப் பற்றுள்ள சக்திக ளினதும் ஆதரவுடன் எகிப்திய மக்கள் அவர்களை எதிர்த்துத்

தாக்கினர்கள். தலையீட்டாளர்கள் எதிப்திய மண்ணிலிருந்து வெளியேறினர்கள். எகிப்து தனது சுதந்திரத்தைக் காப் பாற்றிக் கொண்டது.

1958ம் ஆண்டு ஏகாதிபத்தியவாதிகள் சிரியாவுக்கு எதி ராகச் சதி செய்தார்கள், துருக்கியை அதன்மீது ஏவிவிட முயன்றார்கள். அதே சமயம் அமெரிக்க, பிரிட்டிஷ் படை கள் லெபனானிலும் ஜோர்டானிலும் தாக்கிப் புகுந்தன, ஈராக்கில் துருப்புக்களை இறக்கத் திட்டம் இட்டன. சோவியத் யூனியனின் எச்சரிக்கை ஆக்கிரமிப்பாளர்களைக் கட்டாயப் படுத்தி, லெபனானிலும் ஜோர்டானிலும் இருந்து தங்கள் படைகளை வெளியேற்ற வைத்தது, ஈராக்குக்கு எதிரான தலையீட்டைத் தவிர்த்தது, சிரியா மீது துருக்கியின் தாக்கு தலைத் தடுத்தது. அதே 1958ம் ஆண்டு அமெரிக்க ஆக்கிரமிப் பாளர்கள் தைவான் தீவுப் பிரதேசத்தில் சூழ்நிலையைச் சிக்கலாக்கினர்கள். இந்த நிலைமை அமெரிக்க ஐக்கிய நாடு களுக்கும் சீனாவுக்கும் இடையே யுத்தமாக வளர்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டது. சோவியத் யூனியனின் செயல்முறைத் தலையீட்டின் விளைவாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கை இடை முறிக்கப்பட்டது.

1961ம் ஆண்டு ஏகாதிபத்தியவாதிகள் ஐரோப்பாவில் சூழ்நிலையைக் கெடுபிடி நிறைந்தது ஆக்கினர்கள். ''நாட் டோ'' நாடுகள், முதன்மையாக அமெரிக்க ஐக்கிய நாடு களும் ஜெர்மன் கூட்டுக் குடியரசும், ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் சோவியத் யூனியனுக்கும் எதிராக அச்சுறுத் தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கின. வார்ஸா உடன்படிக்கை நாடுகளின் ஆதரவுடன் சோவியத் யூனியன் பதில் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தன் எல்லைகளை வலுப்படுத்தி மேற்கு பெர்லினுடன் தன் எல்லையை மூடிவிட்டது.

1961ம் ஆண்டு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் க்யூபா மீது புரட்சி எதிர்ப்புக் கும்பல்களைக் கொண்டு படை யெடுப்பு நடத்துவித்தனர். க்யூபா மக்கள் இந்தக் கும்பல்களை முறியடித்து விட்டார்கள். 1962ல் அமெரிக்க ஐக்கிய நாடு கள் தனது படைகளை க்யூபாவில் இறக்கத் திட்டம் இட்டது. சர்வதேசச் சூழ்நிலை நெருக்கடிக்கு உள்ளாயிற்று. சோவியத்

யூனியனும் பிற சோஷலிஸ நாடுகளும் க்யூபாவைக் காப்பதன் பொருட்டுத் தங்கள் படைகளை ஆயத்த நிலையில் வைத்தன. சோஷலிஸ நாடுகளின் உறுதியான நடவடிக்கைகளின் விளைவாக அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் தாங்கள் திட்டமிட்டதலையீட்டைக் கைவிட நேர்ந்தது.

ஏகாதிபத்தியவாதிகள் அரபு அரசுகளுக்கு எதிராகத் தங்கள் ஆத்திரம் ஊட்டும் நடவடிக்கைகளை நிறுத்தவில்லை, தங்கள் நாடுபிடிக்கும் திட்டங்களைக் கைவிடவில்லை. சிறப்பாக ஆக்கிரமிப்புப் போக்கைக் காட்டுகின்றன இஸ்ரேல் நாட்டின் ஆளும் வட்டாரங்கள். இவை மேற்கு அரசுகளின் தூண்டுதலுக்கு இணங்க, அவற்றின் ஆதரவுடன் செயல்படுகின்றன. 1967ம் ஆண்டு ஜூன் மாதம், இஸ்ரேல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகிய நாடுகளை நம்பிக்கைத் துரோகமான முறையில் தாக்கியது, அண்மைக் கிழக்கில் அபாயகரமான இராணுவ மோதலைத் தொடங்கி வைத்தது. பிற அரபு அரசுகள் எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகியவற்றின் உதவிக்கு வந்தன.

அரேபியர்களுக்கு இடுக்கண் நிறைந்த இந்தத் தருணத்தில் சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ அரசுகளும் அவர்களைக் காக்க உறுதியான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டன. ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளின் விரைந்த உடனடி நடவடிக்கைகள் இஸ்ரேலிய துர்ச்சாகசக்காரர்கள் தங்கள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்படி கட்டாயப்படுத்தின. இந்தத் தொடர்பில் இஸ்ரேலியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நேர்மையையும் வீரத்தையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இஸ்ரேலியர்களையும் அரேபியர்களையும் உறுப்பினராகக் கொண்ட இந்தக் கட்சி தனது சர்வதேசக் கடமையைச் சீரிய முறையில் நிறைவேற்றியது. தேசியவாத நஞ்சுக்கு ஆட்படாமல் அது இஸ்ரேலின் ஆளும் வட்டாரங்களுடைய நாடுபிடிக்கும் திட்டங்களைத் துணிவுடன் எதிர்த்தது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் அவர்களது சதிச் சூழ்ச்சியை அம்பலப்படுத்தி விளாசியது.

அண்மைக் கிழக்கு நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவுகளை ஒழிப்பதற்காகவும்

சோவியத் அரசின் கோரிக்கைப்படி ஐக்கிய நாடுகள் சங்கத்தின் அசாதாரணக் கூட்டம் கூட்டப்பட்டது. எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகியவற்றுக்கு எதிராக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் கண்டிக்கப்பட வேண்டும், இஸ்ரேலியப் படைகள் தாங்கள் கைப்பற்றிய நிலப்பகுதிகளிலிருந்து உடனே வெளியேற வேண்டும், தாங்கள் விழுத்த சேதங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சோவியத் யூனியன் பிரேரித்தது. பிற சோஷலிஸ அரசுகளும் அரபுக் கிழக்கு அரசுகளும் பல பிற இளம் தேசீய அரசுகளும் சோவியத் பிரேரணைகளை ஆதரித்தன. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இராணுவக் கூட்டணிகளைச் சேர்ந்த தன்கூட்டாளி அரசுகளை வலுக் கட்டாயப்படுத்தி, இந்தப் பிரேரணைகள் ஐக்கிய நாடுகள் சங்கத்தால் ஏற்கப்படுவதைத் தடுத்து விட்டது.

அண்மைக் கிழக்கு நெருக்கடி தீர்க்கப்படாமலே இருந்து விட்டது. ஆயினும், முற்போக்கு அரசாங்கங்களைக் கவிழ்ப்பது, அரபு அரசுகளைச் சுதந்திர வளர்ச்சிப் பாதையிலிருந்து திருப்புவது என்ற தங்கள் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள ஏகாதிபத்தியவாதிகளுக்கு இயலவில்லை. ஏகாதிபத்தியத்தின் போர் வெறி கொண்ட சக்திகளைக் கட்டுக்குள் வைப்பதற்கு சோஷலிஸ நாடுகள், இளம் தேசீய அரசுகள், சர்வதேசக் கம்யூனிஸ்ட், தொழிலாளர் இயக்கம், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களது தேசீய விடுதலை இயக்கம் ஆகியவற்றின் நடவடிக்கைகளில் ஒற்றுமை இன்றியமையாதது என்பதை அண்மைக் கிழக்கு நிகழ்ச்சிகள் இன்னும் ஒரு முறை காட்டின.

மக்களின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து ஏகாதிபத்திய முகாமிலிருந்தே உண்டாகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியமே பிரதான ஆக்கிரமிப்பாளியாகச் செயல்படுகிறது என்று தற்போதைய சர்வதேச வாழ்க்கை காட்டுகிறது. மாபெரும் சோஷலிஸ வல்லரசான சோவியத் யூனியன் மக்களின் பாதுகாப்பை எப்போதும் உறுதியாகக் காத்து நிற்கிறது என்பதை நேர்மையுள்ளவர்கள் அனைவரும் காண்கிறார்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வியத்நாமில் அமைதிக்குப் பேராபத்து விளைத்தார்கள். வியத்நாம் நாட்டின் வட

பகுதியையும் தென் பகுதியையும் ஒன்று சேர்ப்பதையும் அதன் வருங்கால அமைப்பையும் பற்றிய பிரச்சினையை நாட்டின் மக்கள் தாங்களே, வெளியார் தலையீடு இல்லாமல், முடிவு செய்துகொள்வார்கள் என்று 1954ம் ஆண்டில் ஜினிவா (சுவிட்ஸர்லாந்து) நகரில் கூடிய மகாநாட்டில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வியத்நாம் ஒன்று சேர்வதைத் தடை செய்தது. அமெரிக்காவைச் சார்ந்திருந்த தெற்கு வியத்நாமின் ஆளும் குழுவினர் தேர்தல்கள் நடப்பதை எதிர்த்தனர். தெற்கு வியத்நாமிய மக்கள் இந்தக் கைப்பாவை அரசாங்கத்துக்கு எதிராகப் போராடக் கிளர்ந்து எழுந்தார்கள். தெற்கு வியத்நாமின் விடுதலைக்கான தேசிய முன்னணி உருவாயிற்று. ஆளும் குழுவினரின் அதிகாரம் ஆட்டம்கண்டது. அப்போது அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்கள் படைகளைத் தெற்கு வியத்நாமிற்கு அனுப்பி இராணுவத் தலையீடு தொடங்கினர்கள். அமெரிக்கத் தலையீட்டாளர்களையும் அவர்களுடைய கையாட்களையும் விரட்டியடிப்பதற்கு வியத்நாமிய தேசபக்தர்களின் சக்தி மிக்க இயக்கம் விரிவாகத் தொடங்கியது. 1965ல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலையீட்டை விரிவுபடுத்தியது, இராணுவ நடவடிக்கைகளை வியத்நாமிய ஜனநாயகக் குடியரசின் நிலப்பரப்புக்கு மாற்றியது. அதன் நகரங்கள் மீதும் கிராமங்கள் மீதும் மிருகத்தனமான விமானத் தாக்குகள் நடத்தி, அமைதியான மக்களை — கிழவர்களையும் மாதர்களையும் குழந்தைகளையும்—கொன்று குவிக்கத் தலைப்பட்டது.

வியத்நாமிய ஜனநாயகக் குடியரசின் வீரம் நிறைந்த மக்கள், தாங்கள் போராடிப்பெற்ற நலங்களை உறுதியுடன் காத்து நின்றார்கள். வியத்நாமிய ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம் அமெரிக்க ஆக்கிரமிப்பைத் தீர்மானமாக எதிர்த்துப் பிரகடனம் விடுத்தது, தனது நிலப்பரப்பின்மீது காட்டுத்தனமான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தலையீட்டாளர்களின் எல்லாப் படைகளும் தெற்கு வியத்நாமிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்றும் வெளிநாட்டினரின் தலையீடு இல்லாமல் தாங்களே தங்கள் விதியை முடிவு செய்து கொள்ள வியத்நாமிய மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் கோரியது.

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த வியத்நாமிய மக்களுடன் ஒருமைப் பாட்டைத் தெரிவிக்கும் பொருட்டு மாஸ்கோ விளாதீமிர் இலியீச் மின் இயந்திரத் தொழிற்சாலைத் தொழிலாளர் களின் பொதுக் கூட்டம். 1965ம் ஆண்டு

சோவியத் யூனியன் வியத்நாமிய மக்களின் சட்ட பூர்வ மான உரிமைகளை உறுதியுடன் ஆதரித்தது. வியத்நாமிய ஜனநாயகக் குடியரசின் அரசாங்கமும் தெற்கு வியத்நாமின் விடுதலைக்கான தேசிய முன்னணியும் விடுத்த எல்லாக் கோரிக் கைகளையும் அது ஆமோதித்தது. பிற சோஷலிஸ நாடுகளுடன் சேர்ந்து சோவியத் யூனியன் வியத்நாமிய மக்களுக்குப் பயனுள்ள உதவி அளித்தது. சோவியத் யூனியன் அளிக்கும் உதவியின், முதன்மையாக வியத்நாமிய ஜனநாயகக் குடியர சின் தற்காப்புத் திறனை உயர்த்துவதற்கான இராணுவ இயந் திர சாதனங்களும் ஆயுதங்களும் வழங்குவதன் வடிவங்களை யும் முறைகளையும் அளவுகளையும் பற்றி சோவியத் யூனியன்

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியத்நாமிய உழைப்பாளர் கட்சிக்கும் இடையே முழுமையான கருத்து இசைவு ஏற்பட்டது.

வியத்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடத்திய குற்றத்தன்மை வாய்ந்த யுத்தம் உலக நாடுகள் எல்லாவற்றையும் சேர்ந்த முற்போக்குச் சக்திகளுக்கு ஆழ்ந்த கோபம் உண்டாக்கியது. அவை வியத்நாமிய மக்களின் வீரப்போராட்டத்துடன் தங்கள் ஒருமைப்பாட்டை வெளியிட்டன, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்தன. இந்த இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்தினர் எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகள்.

சோவியத் யூனியன் வியத்நாமிய ஜனநாயகக் குடியரசுக்குத் தங்கு தடையின்றி வழங்கிய நவீன வகை ஆயுதங்கள் இந்தக் குடியரசினது சேனையுடையவும் தெற்கு வியத்நாமின் மக்கள் படைகளுடையவும் போர்த்திறனை அதிகரித்தன. தலையீட்டாளர்களின் படைகளையும் கைப்பாவை அரசாங்கத்தின் படைகளையும் அவை மேலும் பலமாகத் தாக்கின. அமெரிக்க அரசாங்கமும் அதன் சைகோன் கையாட்களும் வியத்நாமிய ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்துடனும் தெற்கு வியத்நாமியக் குடியரசின் தாற்காலிகப் புரட்சி அரசாங்கத்துடனும் வேறு வழியின்றிப் பேச்சுவார்த்தைகள் தொடங்க வேண்டியதாயிற்று. போர்நிறுத்தம் பற்றியும் வியத்நாமில் மீண்டும் சமாதானத்தை நிலைநாட்டுவது பற்றியும் இரு தரப்பாருக்கும் 1973 ஜனவரியில் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இந்த ஒப்பந்தப்படி எல்லா அமெரிக்க, பிற நாடுகளின் படைகளும் வியத்நாமிய நிலப்பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்டன. வியத்நாமின் உள் விவகாரங்களில் தலையிடுவது இல்லை என்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் வாக்குறுதி கொடுத்தது. வியத்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு படு தோல்வி அடைந்தது.

நீண்டகால, தன்னலம் அற்ற போராட்டத்தில் வியத்நாமிய மக்கள் பெரு வெற்றி அடைந்தார்கள். முதன்மையாக வியத்நாமிய உழைப்பாளர் கட்சியின் உறுதியும் சமயோசிதமும் உள்ள கொள்கை, வியத்நாமிய ஜனநாயகக் குடியரசு அரசாங்கம், தெற்கு வியத்நாமியக் குடியரசின் தாற்காலிகப் புரட்சி அரசாங்கம் இரண்டினுடையவும்

ஒன்றித்த முயற்சிகள், வியத்நாமிய மக்களின் நிலையுறுதி, வீரம் ஆகியவற்றின் பயனுகவே இந்த வெற்றி பெறப்பட்டது. வியத்நாமிய உழைப்பாளர் கட்சி விரிந்த திரளான பொது மக்களுக்கு அவர்களுடைய போராட்டம் நியாயமானது என்பதைத் தெளிவாகப் புரிய வைத்தது, போராட்டத்தை விரிவான அளவில் இராணுவ முறையில் ஒழுங்கமைத்தது, வியத்நாமிய ஜனநாயகக் குடியரசைத் தகர்க்க முடியாத கோட்டையாக மாற்றிவிட்டது. சோவியத் யூனியனும் பிற சோஷலிஸ நாடுகளும் அளித்த சர்வாம்ச உதவியும் உலக முற்போக்குச் சக்திகளுடைய சர்வதேச ஒருமைப்பாட்டு இயக்கம் மிகப் பெரிய அளவில் நடந்ததும் வியத்நாமிய மக்களின் வெற்றியில் முக்கியப் பங்கு ஆற்றின. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் ஒடுக்குவோருக்கும் எதிராக விடுதலையும் சுயாதீனமும் வெல்லும் பொருட்டுப் புகழுக்குரிய அருஞ் செயல் ஆற்றிய சோதர வியத்நாமிய மக்களின் வெற்றியை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்கள் அனைவரும் வரவேற்றார்கள்.

வியத்நாமிய மக்களின் வெற்றி, சமாதான, முற்போக்குச் சக்திகளின் வெற்றி ஆகும். வியத்நாமிய மக்கள், தங்கள் மார்க்ஸீய-லெனினீயக் கட்சியின் தலைமையில், சோஷலிஸ நாடுகளின் சோதர மக்களுடைய உதவியையும் ஆதரவையும் கொண்டு தங்கள் சோஷலிஸ அரசை—வியத்நாமிய ஜனநாயகக் குடியரசை—காப்பாற்றி விட்டார்கள். வியத்நாமிய நிலப்பரப்பில் சமாதானம் நிலைநாட்டப் பெற்றதால் தென் கிழக்கு ஆசியாவின் சூழ்நிலை சீர்படுவது சாத்தியம் ஆகி இருக்கிறது. உலக சோஷலிஸ, தேசிய விடுதலை, முற்போக்குச் சக்திகளின் போராட்டத்துக்கு முன்னிலும் சாதகமான வாய்ப்புக்கள் இதனால் ஏற்பட்டுள்ளன.

தற்போதையக் காலகட்டத்தின் முதன்மையான புரட்சிச் சக்தி

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு என்பது, சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நோக்கிச் செல்லும் கட்டற்ற, அரசுரிமை பெற்ற மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல் நட்பு மண்டலம் ஆகும். **தற்போதையக் காலகட்டத்தின் முதன்மையான புரட்சிச் சக்தியாகவும், ஜனநாயகம், தேசிய,**

சமுதாய முற்போக்கு ஆகியவற்றின் நம்பகமான அரணாகவும் விளங்குகிறது சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு.

சோஷலிஸ நாடுகளின் மக்களது ஒத்துழைப்புக்கு அடிப்படையாய் இருப்பது அவர்களுடைய பொதுக் குறிக்கோள் ஆகும். சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நிறுவுவதும் புரட்சியால் பெற்ற நலங்களையும் தேசிய விடுதலையையும் காப்பதுமே இந்தக் குறிக்கோள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பினது வளர்ச்சியிலும் அதை வலுப்படுத்துவதிலும் பெரும் பங்கு ஆற்றிவருகிறது. சோஷலிஸ அரசுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் தன் உறவுகளை மார்க்ஸீய-லெனினீய, பாட்டாளி வர்க்க சர்வதேசீயக் கோட்பாடுகளின் அடிப்படையில் அது ஏற்படுத்திக் கொள்கிறது. பரஸ்பர ஆதரவு, சம உரிமை, நெருங்கிய ஒத்துழைப்பு, சுதந்திரத்துக்கு மதிப்பு, உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியன இந்தக் கோட்பாடுகள்.

சோவியத் யூனியனுக்கும் சோஷலிஸ நாடுகளுக்கும் இடையே இரு தரப்பாருக்கும் லாபகரமான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மிகுந்த கவனம் செலுத்துகிறது. சோதர நாடுகளுக்குக் கடன்கள் அளிக்கும்போது அவற்றின் அரசுரிமையைப் பாதிக்கும் எவ்வித நிபந்தனைகளையும் அது விதிப்பதில்லை. முதலாளித்துவ நாடுகளுக்கிடையே நிலவும் உறவுகளில் இம்மாதிரி நிபந்தனைகள் விதிக்கப்படுவது வழக்கம்.

சோவியத் யூனியன் அளித்த பொருளாதார உதவி பெரும்பாலான சோஷலிஸ நாடுகளின் தொழில் பெருக்கத்தில் முக்கியப் பங்கு ஆற்றியது. யுத்தத்துக்குப் பிந்திய இருபது ஆண்டுக் காலத்தில் 1200க்கும் அதிகமான பெரிய தொழில் நிலையங்கள் சோவியத் யூனியனின் உதவியால் சோஷலிஸ நாடுகளில் கட்டப்பட்டுள்ளன, கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் எழுநூறுக்கு மேல் தொழில் நிலையங்கள் ஏற்கனவே இயங்கத் தொடங்கி விட்டன. இவற்றில் மிக நவீன சோவியத் இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான சோஷலிஸ அரசுகள் முன்னர் தொழில்துறையில் பின்தங்கி இருந்தன. சோவியத் மக்களதும் இந்த அரசு

களின் மக்களதும் நெருங்கிய ஒத்துழைப்பு, ஒன்றித்த முயற்சி ஆகியவற்றின் விளைவாக இவை மிகக் குறுகிய காலத்தில் தொழில்துறையில் வளர்ச்சி பெற்ற நாடுகள் ஆகி விட்டன. இப்போது சோவியத் யூனியன் மட்டும் சோதர நாடுகளுக்குத் தன் இயந்திர சாதனங்களை வழங்குவதில்லை, அவையும் சோவியத் யூனியனுக்கு இயந்திர சாதனங்களை அனுப்புகின்றன.

சோஷலிஸ நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு, ஒவ் வொரு நாட்டின் இயற்கை வளங்களையும் உற்பத்தித் திறனை யும் சோஷலிஸ உழைப்புப் பிரிவினையின் சாதகங்களையும் உலக சோஷலிஸச் சந்தையின் வாய்ப்புக்களையும் அறிவுக் கியைந்த முறையில், அதிக முழுமையாகப் பயன்படுத்த உதவுகிறது. ஒவ்வொரு நாட்டின் தனி நலன்களுக்கும் உலக சோஷலிஸ அமைப்பின் மொத்த நலன்களுக்கும் ஏற்றதாக இருக்கிறது இது.

ஐரோப்பிய சோஷலிஸ நாடுகள் அமைத்துள்ள பரஸ் பரப் பொருளாதார உதவிக் கழகம் இந்த நாடுகளுக்கிடையே பொருளாதார உறவுகளை ஒருங்கிசைக்கிறது. ஐரோப்பிய சோஷலிஸ நாடுகள் இந்தக் கழகத்தின் உதவியால் ஒவ் வொரு நாட்டின் நலன்களையும் வாய்ப்புக்களையும் கருத்தில் கொண்டு, எந்த நாடு உற்பத்தியின் எந்தத் துறையில் ஈடுபட வேண்டும் என்று முடிவு செய்து உற்பத்தியில் ஒத் துழைப்பு ஏற்படுத்துகின்றன, தங்கள் தேசியப் பொருளா தாரத் திட்டங்களையும் தொழில் பொருள்களின் முக்கிய வகைகளது உற்பத்தியையும் பொருத்தமாக இணைக்கின்றன, மின் ஆற்றல், உலோகங்கள், எரிபொருள், இயந்திரங்கள், பல வகைக் கச்சாப் பொருள்கள் ஆகியவை ஒன்றுக்கொன்று கிடைக்க வகை செய்கின்றன, சரக்குகளையும் ஒன்றுக்கொன்று வழங்கிக் கொள்கின்றன. ஐரோப்பிய சோஷலிஸ நாடுகள் சேர்ந்து திறன்மிக்க மின் ஆற்றல் தொகுப்பு ஒன்றை அமைத்துள்ளன. ''மீர்'' (சமாதானம்) என்ற பெயர் கொண்ட இந்தத் தொகுப்பு இந்த நாடுகளுக்கு மின் ஆற்றல் வழங்கி வருகிறது. ''துரூழ்பா'' (நட்பு) என்னும் பெயர் உள்ள பிரமாண்டமான பெட்ரோலியக் குழாய் வழியையும் இவை நிறுவி இருக்கின்றன. உரால் மலையடிவாரத்திலும்

''துரூழ்பா'' (நட்பு) பெட்ரோலியக் குழாய்வழி அமைக்கையில் சோவியத், செக்கோஸ்லோவாக்கியத் தொழிலாளர்கள் சந்தித்தார்கள்

வோல்கா ஆற்றின் கரைகளிலுமிருந்து சோவியத் பெட்ரோலியம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கும் போலந்துக்கும் ஹங்கேரிக்கும் செக்கோஸ்லோவாக்கியாவுக்கும் இதன் மூலம் அனுப்பப்படுகிறது. பொருளாதார ஒத்துழைப்புக்கான சர்வதேச நிதிமனே வெற்றிகரமாகச் செயல் ஆற்றி வருகிறது.

விஞ்ஞான-தொழில்நுட்ப, பண்பாட்டுத் துறைகளில் சோஷலிஸ நாடுகளின் ஒத்துழைப்பு விரிவாகி வலுவடைந்து வருகிறது. சோவியத் யூனியனில், மாஸ்கோவிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள தூப்ஞ என்னும் இடத்தில் ஒன்றித்த அணுக்கருச் சோதனை நிலையம் இயங்கிவருகிறது. இது உலகின் மிகப் பெரிய விஞ்ஞான மையம். இதில் சோஷலிஸ நாடுகளின் விஞ்ஞானிகள் பணி ஆற்றுகிறார்கள். மக்கள்-ஜனநாயக

நாடுகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான இளைஞர்களும் மகளிரும் சோவியத் நாட்டின் உயர் கல்வி நிலையங்களில் பயில்கிறார்கள். பல சோவியத் மாணவர்கள் பிற சோஷலிஸ நாடுகளின் கல்லூரிகளில் பயிற்சி பெறுகிறார்கள்.

மக்கள் ஜனநாயக நாடுகள் அனைத்தும் சோஷலிஸக் கட்டுமானத்தில் பெருத்த முன்னேற்றம் அடைந்துள்ளன. மக்கள் அனைவருக்கும் பொதுவான, சோஷலிஸ உடைமை அவற்றில் நிலைபெற்றுவிட்டது. தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் பெருகி, தனது தலைமை நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது. திரளான விவசாயிகள் நாட்டுப் புறத்தில் உற்பத்திக் கூட்டுறவுகளை அமைத்து, சோஷலிஸ வளர்ச்சிப் பாதையில் முன்னேறலாயினர். மக்கள் அறிவு ஜீவிகளின் அணிகள் விரைந்து பல்கி வருகின்றன. அறிவுஜீவிகள் தொழிலாளர்களுடனும் விவசாயிகளுடனும் நெருக்கமாக ஒத்துழைத்து வருகிறார்கள். நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்கு உரிய பொது விதிகள் நிலவுவதை இவை எல்லாம் உறுதிப்படுத்தின. இந்த விதிகள் சரியானவை என்பது சோவியத் நாட்டின் அனுபவத்திலேயே முதன் முதலாகச் சோதித்து அறியப்பட்டது.

சோஷலிஸ நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகம் முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைக் காட்டிலும் கணிசமாக அதிகம். 1950 முதல் 1967 வரையுள்ள காலத்தில் சோஷலிஸ நாடுகளின் தொழில் பொருள் உற்பத்தி ஐந்து மடங்குக்கும் மேல் அதிகரித்து விட்டது. பிற நாடுகளிலோ அது இரு மடங்குக்குச் சற்று கூடுதல் ஆகி இருக்கிறது. ஐரோப்பிய சோஷலிஸ நாடுகளும் சோவியத் யூனியனும் சேர்ந்து உலகின் தொழில் பொருள்களின் மொத்த உற்பத்தியில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கை அளிக்கின்றன. சோஷலிஸ நாடுகளில் திரளான பொது மக்களின் வாழ்க்கைத் தரம் வெற்றிகரமான பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் இடையறாது உயர்ந்து வருகிறது.

சோஷலிஸ நட்பு மண்டலம், அதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் சோதர ஒத்துழைப்பு, முழுமையான சம உரிமை, சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. அங்கம் வகிக்கும் மக்களுக்கும் அரசுகளுக்கும் இடையே

முரண்பாடுகளும் மோதல்களும் ஏற்படுவதற்கான புறநிலைக் காரணங்கள் சோஷலிஸ அமைப்பின் இயல்பிலேயே இல்லை.

சோஷலிஸ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் பரஸ்பர உறவுகளில் சோஷலிஸ சர்வதேசீயக் கோட்பாட்டைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பாட்டாளி வர்க்க ஒருமைப்பாடு, நெருங்கிய ஒத்துழைப்பு ஆகியவற்றின் உணர்வில் உழைப்பாளிகளை இடைவிடாது பயிற்ற வேண்டும் என்றும் தேசீயவாத, நாட்டுவெறி மனப்பான்மை எந்த விதத்திலும் வெளிப்படுவதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாது என்றும்1960ல் நடந்த சர்வதேசக் கம்யூனிஸ்டுகள் மகாநாடு கேட்டுக்கொண்டது. எல்லா சோஷலிஸ அரசுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளதும் மக்களதும் ஒருமைப்பாடும் ஒற்றுமையும், மார்க்ஸீய-லெனினீய போதனையின்பால் அவர்களது விசுவாசமுமே ஒவ்வொரு சோஷலிஸ நாட்டினுடையவும் சோஷலிஸ நாடுகளின் நட்பு மண்டலம் அனைத்தினுடையவும் சக்திக்கும் வெல்லரும் விற

லுமும்பா மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகத்தின் கம்ப்யூட்டர் நிலையத்தில்

லுக்கும் தலையூற்றுக வளங்குகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இந்த அடிப்படைக் கருத்துக்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுகிறது.

வெளிநாட்டுக் கொள்கை பற்றிய நடவடிக்கைகளில், சிறப்பாக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக உலக சமாதானத்தையும் மக்கள் பாதுகாப்பையும் ஆதரித்துப் போராடும் முக்கியச் செயலில், சோஷலிஸ அரசுகள் ஒன்றை ஒன்று கலந்து ஆலோசித்துக் கொள்கின்றன. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பினுடைய தற்காப்புத் திறனை அவை வலுப்படுத்துகின்றன, அதைச் சேர்ந்த மக்களின் பாதுகாப்புக்கு வகை செய்கின்றன. சோஷலிஸ உலகைச் சீர் குலைக்கவோ, பலவீனப்படுத்தவோ, அதன் நாடுகளது நட்பு மண்டலத்திலிருந்து ஒரு பகுதியைக் கூடப் பிரிக்கவோ ஒருவருக்கும், ஒருபோதும் அவை இடம் கொடுப்பதில்லை.

சோஷலிஸ உலகம் உறுதியாக அடி வைத்து முன்னேறுகிறது. முற்போக்குள்ள மனித குலம் அனைத்தும் அதன் வெற்றிகளையே நம்பி இருக்கிறது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, சமூகத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைப்பதற்காகப் போராடும் எல்லாச் சக்திகளுடனும் சேர்ந்து, **தற்போதையக் காலகட்டத்தில் மனிதகுல வரலாற்று வளர்ச்சியின் முக்கியத் திசையை** நிர்ணயிக்கிறது சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளுடன் சோவியத் யூனியனின் ஒத்துழைப்பு

தேசிய விடுதலை இயக்கத்தின் முன்னேற்றத்தைக் கண்டு சோவியத் கம்யூனிஸ்டுகளும் சோவியத் மக்கள் அனைவருமே மகிழ்ச்சி அடைகிறார்கள். காலனி ஆட்சியாளர்கள் மீது ஒடுக்கப்பட்ட மக்கள் அடையும் வெற்றிகளையும் மேலும் மேலும் புதிய தேசிய அரசுகள் உரு ஆவதையும் பற்றிய செய்திகளை அவர்கள் மிகுந்த உளநிறைவுடன் வரவேற்கிறார்கள். காலனி ஆட்சி எதிர்ப்புப் புரட்சிகளின் வெற்றிகளும் ஒடுக்கப்பட்ட மக்கள் தேசிய விடுதலை யெறுவதும் அவர்களைப் புது வாழ்வுக்கு இட்டுச் செல்லும் பாதையில் முக்கியமான கட்டமாகும். விடுதலை பெற்ற மக்களுக்கு தேசிய மறு மலர்ச்சியும்

சமுதாய முன்னேற்றமும் அடைவதற்கு நல் வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன. ஆனால் அவர்களுடைய வளர்ச்சி முதலாளித்துவப் பாதையிலோ, சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்லும் முதலாளித்துவமற்ற பாதையிலோ ஏற்படலாம்.

வரலாறு காட்டியிருப்பதுபோல, முதலாளித்துவப் பாதை என்பது மக்களின் துன்பங்கள் நிறைந்த பாதை ஆகும். அது மனிதர்களின் சமுதாய ஏற்றத்தாழ்வைக் கட்டாயம் தீவிரப்படுத்தும். விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய ஒரு சில பணக்காரர்களும் சுரண்டுவோரும் ஒரு புறமும், அவர்களால் சுரண்டப்படப் போகிற பெருந்திரளான ஏழைகள் மறு புறமுமாக இருக்கும்படி சமூகத்தை இது பிரிவு படுத்தும். தொழிலாளர்கள் பூர்ஷ்வா வர்க்கத்தின் அடிமைகள் ஆகிவிடுவார்கள். விவசாயிகள் பஞ்சைகளாகி, இரங்கத்தக்க வாழ்க்கை நடத்துவார்கள். அறிவுஜீவிகள் மூலதனத்தின் அடிமைத் தளைகளில் சிக்கிக்கொள்வார்கள். திரளான உழைப்பாளிகள் கல்வியும் அறிவும் பண்பாடும் பெற வழியின்றி இடர்ப்படுவார்கள். விடுதலை பெற்ற நாடுகளின் பணக்காரர்கள்—தேசிய பூர்ஷ்வாக்களும் நிலப்பிரபுக்களும்—இத்தகைய வளர்ச்சியில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் இதனால் அவர்கள் மேலும் செல்வம் திரட்டவும் ஆடம்பர வாழ்க்கை நடத்தவும் திரளான உழைப்பாளிகள் மீது ஆதிக்கம் செலுத்தவும் வாய்ப்புக்கள் ஏற்படும். ஏகாதிபத்தியவாதிகள் இந்தப் பணக்காரர்களை ஆதரிக்கிறார்கள். ஏனென்றால், பணக்காரர்களுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் உடன்பாடு விரைவில் ஏற்பட்டு விடும். விடுதலை பெற்ற நாடுகளின் மக்கள் முதலாளித்துவப் பாதையை மேற்கொண்டு தங்கள் பின்தங்கிய நிலையைப் போக்கிக் கொள்ள முடியாது. இந்தப் பாதையில் சென்றால் அவர்கள் புதிய காலனி ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டு விடுவார்கள். அடிமைப்படுத்தும் வெளி நாட்டாருக்கும் முதலாளித்துவ ஏகபோகங்களுக்கும் ஏகாதிபத்திய அரசுகளுக்கும் குற்றேவல் புரியும் நிர்ப்பந்தத்துக்கு அவர்கள் உள்ளாவார்கள்.

ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் தோல்விகளை ஒப்புக் கொண்டு அமைதியாக இருக்க விரும்பவில்லை. விடுதலை பெற்ற நாடுகளின் வளர்ச்சியை முதலாளித்துவப் பாதையில்

செலுத்தவும் புதுக் காலனி ஆதிக்க நுகத்தில் அவற்றைப் பூட்டவும் அவர்கள் முயல்கிறார்கள். புதுக் காலனி ஆதிக்கத்தின் பிரதான அரணாக விளங்குகிறது அமெரிக்க ஐக்கிய நாடுகள். முன்னாள் காலனியாட்சி வல்லரசுகளின் ஆளும் வட்டாரங்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து, அனேக நாடுகளில் மக்களுக்கு எதிரான இராணுவ சர்வாதிகார அரசாங்கங்களை அமைத்து, தங்கள் கையாட்களை அரசுத் தலைமைப் பீடங்களில் அமர்த்தி இருக்கின்றன. இந்த நாடுகள் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட இராணுவக் கூட்டணிகளில் வலுக்கட்டாயமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இளம் தேசிய அரசுகளுக்கு ஏகாதிபத்திய அரசுகளின் பொருளாதார ''உதவி'' எனப்படுவது அடிமைப்படுத்தும் நிபந்தனைகளின் பேரில் வழங்கப்படுகிறது. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றின் பொருளாதாரத்தின் மீதும் இயற்கை வளங்கள் மீதும் முதலாளித்துவ ஏகபோகங்களின் ஆதிக்கம் வலுவாக்கப்படுகிறது. இந்த ஏகபோகங்களின் நலன்களைக் காத்து நிற்கின்றன ஏகாதிபத்திய அரசுகள். இவை, விடுதலை பெற்ற நாடுகளைக் கட்டாயப்படுத்துகின்றன, அவற்றின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக இடைவிடாது அச்சுறுத்துகின்றன.

முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை, விடுதலை பெற்ற நாடுகளின் திரளான உழைப்பாளிகளின்—தொழிலாளிகள், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் — நலன்களுக்கு முரண்படுகிறது. இவர்கள் காலனி ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடிக் குருதி சிந்தியதன் நோக்கம், கட்டின்றியும் வசதியாகவும் இன்பமாகவும் வாழ்வதுதான். இத்தகைய வாழ்க்கையை அளிக்க வல்லது சோஷலிஸம் மட்டுமே. சோஷலிஸத்தில் மனிதனை மனிதன் சுரண்டுவது கிடையாது, நாட்டின ஒடுக்குமுறையும் சமுதாய ஏற்றத் தாழ்வும் கிடையாது, மனிதர்கள் ஏழைகளாகவும் பணக்காரர்களாகவும் பிரிக்கப்படுவது கிடையாது. உழைப்பாளிகள் தங்கள் அரசையும் சமுதாயத்தின் எல்லா விவகாரங்களையும் தாங்களே நிர்வகிக்கிறார்கள். உண்மையான தேசிய மறுமலர்ச்சியும் சமுதாய முன்னேற்றமும், உழைப்பாளிகளின் வாழ்க்கை வசதிகள் இடையறாது மேம்படுவதற்கு ஏற்ற முறையில்

உற்பத்திச் சக்திகளின் விரைந்த வளர்ச்சியும் ஏற்படுவது சோஷலிஸத்தின் அடிப்படையிலேயே சாத்தியமாகும் என்பதை சோவியத் யூனியனின் உதாரணமும் மக்கள்-ஜனநாயக நாடுகளின் உதாரணமும் சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டுகின்றன. சோஷலிஸத்தில் உழைப்பாளிகள் தங்கள் உழைப்பின் பலன்களாலும் விஞ்ஞான, பண்பாட்டுச் சாதனைகளாலும் முழு அளவில் பயன் பெறுகிறார்கள். விடுதலை அடைந்த அனேக நாடுகளின் மக்கள், சமுதாய முன்னேற்றம் பெற ஆர்வம் கொண்டு, சோஷலிஸத்துக்கு இட்டுச் செல்வதான முதலாளித்துவமற்ற பாதையைத் தெரிந்தெடுத்துள்ளனர்.

சோஷலிஸத்துக்குச் செல்லும் பாதை எளிதல்ல என்பது கூறுமலே விளங்கும். இது புதிய பாதையாய் இருப்பதும், பகைவர்கள் இடையூறுகள் விளைப்பதும், பழைய வழக்கங்களின் சக்தி செயல்படுவதும் இதற்குக் காரணங்கள். உள்நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் பகைமை நிறைந்த செயல்களுக்கும் எதிராக இடைவிடாது போராடியே சோஷலிஸப் பாதையில் உறுதியாக முன்னேற முடியும். வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகிய எல்லா முற்போக்குச் சக்திகளும் ஒன்றுசேர்வதன் வாயிலாகவே இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற முடியும்.

விடுதலை பெற்ற நாடுகளின் மக்கள் தங்கள் அரசின் சுயாதீனத்தைக் காப்பதுடன் பொருளாதார சுதந்திரத்தைப் பெறுவதற்கும் கடு முயற்சி செய்ய வேண்டி இருக்கிறது. இவ்வாறு செய்கையில் அவர்களுக்குப் பெருத்த இடர்கள் நேர்கின்றன. ஏகாதிபத்திய அரசுகளும் முதலாளித்துவ ஏகபோகங்களும் முன்னாள் காலனி ஆட்சியாளர்களும் இந்த இடர்களைப் பயன்படுத்திக் கொள்ள முயல்கிறார்கள். அவர்கள் இளம் தேசிய அரசுகளுக்குப் பல வகைக் கடன்கள் வழங்க முன்வருகின்றனர், ஆனால் இராணுவ தளங்கள் அமைக்கத் தங்களுக்கு இடம் தரும்படியும் இந்த அரசுகளின் விலை மிக்க இயற்கை வளங்களைப் பயன்படுத்த வாய்ப்பு அளிக்கும் படியும் கோருகின்றனர். ஏகாதிபத்தியவாதிகள் இளம் தேசிய அரசுகளில் விவசாய விளைபொருள்களையும் வேறு சில சரக்குக்களையும் அற்ப விலைகளுக்கு வாங்குகிறார்கள்,

தங்கள் இயந்திரங்களையும் சாதனங்களையுமோ மும்மடங்கு விலைகளுக்கு விற்கிறார்கள்.

இளம் தேசிய அரசுகளின் மக்களுக்குக் காலனி ஆதிக்க அடிமைத் தளை பூட்டவும் அவர்களைப் பொருளாதாரப் பின் தங்கிய நிலையில் என்றென்றும் வைத்திருக்கவும் ஏகாதிபத் தியவாதிகள் செய்யும் முயற்சிகளை சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு வன்மையாக எதிர்க்கிறது. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் தேசிய மறுமலர்ச்சிக்கு நம்பகமான துணைவனாக அது பணி ஆற்றுகிறது. சோஷலிஸ நாடுகளின் உதவியையும் ஆதரவையும் ஆதாரமாகக் கொண்டு இவற் றில் பல நாடுகள் தங்கள் தேசியப் பொருளாதாரத்தை நிறுவியும் பண்பாட்டை அபிவிருத்தி செய்தும் சமுதாய முன்னேற்றம் பெற்றும் வருகின்றன.

சோவியத் யூனியன் பெரும்பாலான இளம் தேசிய அரசு களுடன் பொருளாதார, பண்பாட்டு, விஞ்ஞான-தொழில் நுட்பத் துறைகளில் ஒத்துழைக்கிறது, அவற்றுக்குப் பல் வேறு வகைகளில் பெருத்த உதவி அளிக்கிறது. யுத்தத் துக்குப் பிந்திய ஆண்டுகளில், இளம் தேசிய அரசுகளின் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியின் பொருட்டு, இரு தரப்பாருக்கும் லாபகரமான நிபந்தனைகளின் பேரில் சோ வியத் யூனியன் கடன்கள் வழங்கி இருக்கிறது. இளம் தேசிய அரசுகள் விரைந்த பொருளாதார வளர்ச்சி பெறுவதற்கும் ஏகாதிபத்திய அரசுகளைச் சார்ந்திருப்பதிலிருந்து முழு விடு தலை பெறுவதற்கும் உதவுவதுதான் சோவியத் யூனியனின் ஒரே விருப்பம்.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் சோவியத் யூனியன் அளிக்கும் கடன்களை சோவியத் நாட்டில் பல்வேறு இயந் திரங்களும் உபகரணங்களும் வாங்குவதற்குப் பயன்படுத்து கின்றன. சோவியத் யூனியனின் தொழில்நுட்ப உதவியுடன் 31 இளம் தேசிய அரசுகளில் சுமார் 600 தொழில் நிலையங் களும் வேறு பல கட்டிடங்களும் நிறுவப்பட்டுள்ளன, நிறுவப் பட்டு வருகின்றன. இவற்றில் பல, இந்தியாவில் பிலாய் உருக்காலையையும் எகிப்திய அரேபியக் குடியரசில் நைல் ஆற்றின் மீது அமைந்த அஸ்வான் அணைக் கட்டையும் போன்று மிகப் பெரியவை. அல்ஜீரியா, ஆப்கனிஸ்தான்,

இந்திய-சோவியத் யூனியனின் உதவியால்
சோவியத் இயந்திர சாதனங்களைக் கொண்டு
நிறுவப்பட்ட பிலாய் உருக்காலை

பர்மா, கினி, இந்தியா, ஈராக், யெமன், கம்போடியா, மாலி, நேபாளம், எகிப்து, பாகிஸ்தான், சிரியா, சூடான், டியூனிசியா, இலங்கை, எத்தியோப்பியா முதலியவை



எகிப்திய அரேபியக் குடியரசு. சோவியத் யூனியனின் உதவியால் நைல்

சோவியத் யூனியனிடமிருந்து தொழில்நுட்ப உதவி பெறும் நாடுகளில் சில ஆகும்.

முதலாளித்துவ அரசுகள் இந்தியாவுக்குக் கடன்கள் வழங்கவும் பிலாயில் முதலாவது பெரிய உருக்காலையைக் கட்டுவதில் அதற்கு உதவவும் மறுத்துவிட்டன. சோவியத் யூனியனின் உதவியால் நிறுவப்பட்ட இந்த உருக்காலை, இந்தியாவின் தேசீய வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாத பல லட்சம் டன் எஃகு ஏற்கனவே உற்பத்தி செய்து விட்டது. அஸ்வான் அணையும் நீர்மின் நிலையமும் கட்டுவதற்கு எகிப்து நாட்டுக்குக் கடன்கள் வழங்கவும் முதலாளித்துவ அரசுகள் மறுத்துவிட்டன. இந்த பிரமாண்டமான அணையைக் கட்டுவதற்குத் தேவையான இயந்திர சாதனங்களை சோவியத் தொழிற்சாலைகள் அளித்தன. பல்லாயிரம் சோவியத் தொழிலாளர்களும் பொறி இயலாரும் தொழில்நுட்ப வல்லுநர்



ஆற்றின் மீது கட்டப் பெறும் அஸ்வான் அணையும் மின் நிலையமும்

களும் எகிப்தியத் தொழிலாளர்களுடனும் பொறி இயலா ருடனும் சேர்ந்து இந்த அணைக் கட்டுமானத்தில் உழைத்தார் கள். 1964 மே மாதம் நைல் ஆறு தடுக்கப்பட்டு, புது வழியில் செலுத்தப்பட்டது. 1967ம் ஆண்டு அஸ்வான் மின் நிலையத் தின் முதல் டர்பைன்கள் மின் ஆற்றல் உற்பத்தி செய்யத் தொடங்கின. அஸ்வான் அணைக்கட்டு பாலைவனத்தின் நீண்டு பரந்த மணல் வெளிகளைப் பயிர் நிலங்களாகவும் பழச் சோலைகளாகவும் மாற்றிவிடும். எகிப்திய அரேபியக் குடியரசின் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த இந்த அணை உதவும்.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகள் தங்கள் அலுவலர் களைப் பயிற்றுவதற்கு சோவியத் யூனியன் எல்லா வகையிலும் உதவுகிறது. காலனி ஆட்சியாளர்கள் தாங்கள் அடிமைப் படுத்திய நாடுகளில் மக்கள் கல்வியும் பண்பாடும் வளர்ச்சி

அடைவதற்கு எல்லா வகையிலும் இடையூறு செய்தார்கள். நடுநிலை அல்லது உயர்நிலைக் கல்வி பெறும் பேறு ஒடுக்கப் பட்ட மக்களின் மிகச் சில பிரதிநிதிகளுக்கே வாய்த்தது. ஆனால் இவர்கள் கூடத் தங்கள் நாட்டின் தேசீயப் பொருளா தாரத்துடனும் பண்பாட்டுடனும் தொடர்பு கொண்டிருக்க வில்லை. பெரும்பாலும் அவர்கள் காலனி நிர்வாக ஊழியர் களாக வேலை செய்தார்கள்.

வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் கல்வி நிலையங் கள் கட்டவும் அவற்றுக்குச் சாதன வசதிகள் அளிக்கவும் சோவியத் யூனியன் உதவி வருகிறது. இந்த நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் சோவியத் உயர் கல்வி நிலையங்களில் பயில் கிறார்கள். பர்மா, இந்தியா, கம்போடியா, அல்ஜீரியா, எகிப்து, கினி, மாலி, கென்யா, ஆப்கனிஸ்தான், டியூனிசியா, எத் தியோப்பியா முதலிய நாடுகளில் சோவியத் யூனியனின் உதவி யால் 1968ம் ஆண்டுத் தொடக்கத்தில் 100க்கும் அதிகமான கல்வி நிலையங்களும் விஞ்ஞான மையங்களும் நிறுவப்பட்டன. சிலவற்றின் கட்டுமானம் நடந்து கொண்டிருந்தது. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த சுமார் இருபத்துநாலாயிரம் இளைஞர்களும் மகளிரும் சோவியத் நாட்டின் உயர்கல்வி நிலையங்களில் ஆண்டுதோறும் பயிற்சி பெறுகிறார்கள். 1960ம் ஆண்டில் மாஸ்கோ நகரில் திறக் கப்பட்டது நட்புறவுப் பல்கலைக்கழகம். காங்கோ மக்களின் வீரர், ஆப்பிரிக்காவின் பிரபல முற்போக்குத் தலைவர், காலனி ஆட்சியை எதிர்த்து அச்சமின்றிப் போராடியவர், முடிவில் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளால் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டவர் ஆகிய பத்ரீஸ் லுமும்பாவின் பெயர் இந்தப் பல்கலைக்கழகத்துக்குச் சூட்டப்பட்டிருக்கிறது. 80க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த யுவ, யுவதியர் இந்தப் பல்கலைக்கழகத்தில் சோவியத் மாணவர்களோடு சேர்ந்து பயில்கிறார்கள்.

சோவியத் கல்லூரிகளில் பயிற்சி பெறுவதும் சோஷலிஸ நாட்டில் நீண்ட காலம் வசிப்பதும் தேசீய அரசுகளின் இளைஞர்களது உணர்வில் ஆழ்ந்த பதிவை ஏற்படுத்துகிறது. அவர்கள் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள்—பொறி இயலார், பொருளாதார வல்லுநர், விவசாய விற்பன்னர், மருத்துவர்,

பள்ளி ஆசிரியர்—ஆவதோடு தற்போதையக் காலகட்டத்தின் முன்னணிக் கருத்துக்களையும் கற்றுத் தேர்கிறார்கள். இவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தின் உறுதி மிக்க போராட்ட வீரர்களாகவும் தங்கள் நாடுகளின் தேசிய, சமுதாய முன்னேற்றத்துக்காகப் பாடுபடுபவர்களாகவும் விளங்குகிறார்கள்.

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் முற்போக்குள்ள தேசிய ஜனநாயகக் கட்சிகளுடன் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியினதும் பிற சோஷலிஸ நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியினதும் தொடர்புகள் ஆண்டுதோறும் விரிவாகி வலுப்பட்டு வருகின்றன.

கம்யூனிஸக் கட்டுமானப் பாதையில்

தலைமையின் கூட்டுத்துவம் வலுவடைகிறது

கம்யூனிஸத்தின் வெற்றிக்கான போராட்டத்தின் விஞ்ஞானச் செயல் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பின், கம்யூனிஸ்ட் கட்சி மக்களுக்கு அதை விளக்கி விவரித்தது, அதைச் செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்தது. கட்சியின் குறிக்கோள்களும் அதன் செயல்திட்ட நோக்கங்களும் சோவியத் மக்களின் உணர்வில் மேலும் மேலும் ஆழப் பதிந்தன. கட்சியின் செல்வாக்கு வளர்ந்தது. முன்னணி உழைப்பாளிகள் அதன் அணிகளில் சேர முன்னிலும் அதிக ஆர்வத்துடன் விரைந்தார்கள். இருபத்திரண்டாவது கட்சிக் காங்கிரஸ் நடந்து நான்கு ஆண்டுகளுக்குள் சோவியத் யூனியனில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 25 லட்சம் அதிகரித்தது. கட்சியின் புதிய உறுப்பினர்களில் இளைஞர்கள் பெரும்பாலராக இருந்தார்கள். உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததற்கு ஏற்பக் கட்சி ஸ்தாபனங்களின் வலைப் பின்னலும் விரிவாயிற்று. தற்போது எல்லா ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் புதுக் கட்டுமான இடங்களிலும் எல்லா அரசாங்கப் பண்ணைகளிலும் கூட்டுப் பண்ணைகளிலும் விஞ்ஞான, கல்வி, மருத்துவ நிலையங்களிலும் பிற அலுவலகங்களிலும் கட்சியின் முதற்படி ஸ்தாபனங்கள் உள்ளன.

தனது கொள்கையை விளக்கவும் திரளான பொது மக்களைக் கம்யூனிஸக் கட்டுமானத்தில் ஈடுபடுத்தவும், பத்திரிகைகளையும் வானொலியையும் தொலைக் காட்சியையும் கட்சி விரிவாகப் பயன்படுத்துகிறது. கட்சி மத்தியக் கமிட்டியின் செய்தித்தாளான ''பிராவ்தாவின்'' பத்துலட்சக் கணக்கான பிரதிகள் விற்பனை ஆகின்றன. இது நாட்டில் மக்களால் மிகவும் விரும்பப்படும் நாளிதழாக விளங்குகிறது. கட்சி ஸ்தாபனங்களும் கம்யூனிஸ்டுகளும் கட்சியின் கொள்கையையும் அதன் செயல் திட்டத்தையும் நடைமுறை வேலைகளையும் உழைப்பாளிகளுக்கு அன்றுடம் விளக்குகிறார்கள். கம்யூனிஸ்டுகள் தாங்கள் வேலை செய்யும் எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் எடுத்துக் காட்டாக விளங்க முயல்கிறார்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்ற உயர்ந்த பட்டம் இதற்கு அவர்களைக் கட்டாயப்படுத்துகிறது. கட்சியும் அதன் விதிகளும் அவர்களிடம் இதைக் கோருகின்றன, கம்யூனிஸ்டுகள் முதன்மையாகத் தாங்கள் வேலை செய்யும் பகுதிகளில் காரியங்களின் நிலைக்குப் பொறுப்பு ஏற்கிறார்கள். அவர்கள் கட்சி உறுப்பினர் அல்லாத தோழர்களுடன் இணைந்து வேலை செய்கிறார்கள், சமூக வாழ்வில் அவர்களுடன் நட்பார்ந்த முறையில் ஒத்துழைக்கிறார்கள். சோவியத் சமூகத்தில் கட்சியின் தலைமைப் பாத்திரமும் அரசு அலுவலகங்களிலும் தொழிற்சங்கங்களிலும் பிற சமூக ஸ்தாபனங்களிலும் கம்யூனிஸ்டுகளும் கட்சி உறுப்பினர் அல்லாதவர்களும் சேர்ந்து செய்யும் பயனுள்ள வேலையும் சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நிறுவுவதில் சோவியத் மக்களின் வெற்றிகளுக்கு வழிகோலுகின்றன.

சோவியத் சமூகம் கம்யூனிஸத்தை நெருங்க நெருங்க சமூகத்தை வழிகாட்டி இயக்கும் சக்தியான கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம் **உயர்கிறது** என சோவியத் சமூகத்தின் வளர்ச்சி வரலாறு காட்டுகிறது. இந்த விதி பல சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்டுள்ளது. சோஷலிஸத்திலிருந்து கம்யூனிஸத்துக்குப் பரிணமிக்கையில் பல புதிய, சிக்கலான பிரச்சினைகள் எழும். சமூக உற்பத்தி அளவின் வளர்ச்சி காரணமாக அதை வழிகாட்டி இயக்கும் முறைகளை இடையறாது சீர்படுத்துவது அவசியமாகும். மனிதர்களின் சமூக

உறவுகளில் மாறுதல்கள் நிகழும். இவற்றைக் கவனமாக ஆராய்ந்து செவ்வைப்படுத்துவது இன்றியமையாதது ஆகும். புதிய மனிதனை—கம்யூனிஸ சமூகத்தின் மனிதனை—பயிற்றும் பணி முழு அளவில் எதிர்ப்படும். மார்க்ஸீய-லெனினீய சித்தாந்தத்தை ஆராய்ந்து தேர்ந்த கட்சிதான் இந்தச் சிக்கலான நிகழ்முறைகளை விஞ்ஞான அடிப்படையில் இயக்கவும் கம்யூனிஸ சமூகக் கட்டுமானத்தை நடைமுறையில் ஒழுங்கமைக்கவும் தலைமைக்கு உரிய முறைகளையும் வழிகளையும் புதிய வரலாற்றுக் கட்டத்துக்கு ஏற்ப வகுக்கவும் வல்லது ஆகும்.

தனது எல்லாச் செயல்களிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மார்க்ஸீய-லெனினீய சித்தாந்தத்தைப் பின்பற்றுகிறது. சோஷலிஸ சமூக வளர்ச்சியின் புறநிலை விதிகளையும் அதன் தேவைகளையும் போக்குக்களையும் அடிப்படையாகக் கொண்டு கம்யூனிஸக் கட்டுமானம் பற்றிய நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்படி மார்க்ஸீய-லெனினீயம் கோருகிறது. விஞ்ஞான முறைகளைப் புறக்கணித்துவிட்டு, தன்னிச்சைவாத முறையில், அவசர நிர்வாக நடவடிக்கைகள் வாயிலாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வது வெற்றி அளிக்காமல் போகலாம். எதார்த்தத் தேவைகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் எதிரான இந்த நடைமுறை அகநிலைவாதம் எனப்படும்.

அகநிலைவாதம் கொள்கைவாதத்திலும் அரசியலிலும் ஒரே மாதிரி அபாயமானது, தீங்கு விளைப்பது. அனுபவம் அற்ற இளம் பாட்டாளி வர்க்கக் கட்சிகளில் இது சில வேளைகளில் தோன்றுகிறது. குட்டிபூர்ஷ்வாக் கட்சிகளிலும் அவற்றின் தலைவர்களிடமுமோ, இது அடிக்கடி காணப்படுகிறது. நிகழ்ச்சிகளை விரைவுபடுத்த முயல்வது அனுபவம் இல்லாத புரட்சிக்காரர்களுக்கு இயல்பானது. ஆனால் மார்க்ஸீய-லெனினீய நிலைகளை மேற்கொண்டிருக்கும் புரட்சிக்காரனுக்கு, உள்ளக் கிளர்ச்சிகளுக்கு ஆளாக உரிமை கிடையாது. சமூக வளர்ச்சிக்கு உரிய புறநிலை விதிகளைப் புறக்கணிக்க அவனுக்கு உரிமை கிடையாது. ஒவ்வொரு ஸ்தூலமான சந்தர்ப்பத்திலும் எதார்த்தச் சூழ்நிலையையும் போராடும் சக்திகளின் ஒப்பு வலிமையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு

அவற்றுக்கு ஏற்ப, புரட்சிச் சக்திகளின் வெற்றியை அருகில் கொண்டு வருபவையும் எளிதாக்குபவையுமான போராட்ட வடிவங்களையும் முறைகளையும் கையாள்வது அவனது கடமை ஆகும்.

அனுபவம் வாய்ந்த மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகளின் ஒரு சில தலைவர்களிடமும் அகநிலைவாதம் வெளிப்பட்டு அவற்றுக்குத் தீங்கு விளைக்கக் கூடும். உதாரணமாக, ஆளும் கட்சி தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு, பல பத்தாண்டுகளுக்குக் கூட, இடையறாது வெற்றிகள் அடைந்து வந்தால், மார்க்ஸீய-லெனினீய நிலைகளைப் போதிய உறுதியுடன் கடைப்பிடிக்காத அதன் சில தலைவர்களுக்குத் தலைக் கிறுக்கம் உண்டாகலாம். கட்சி மட்டும் விரும்பினால் எல்லாம் செய்ய முடியும், எதையும் சாதிக்க முடியும் என்ற தவறான நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டு விடலாம். ஆகவே, ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் மார்க்ஸீய-லெனினீயக் கட்சி வீண்பெருமைக்கும் படாடோபத்திற்கும் இடம் கொடுக்கவே கூடாது. தனது தலைமை ஊழியர்களின் சித்தாந்தத் தரத்தை உயர்த்துவதற்கும் அது இடைவிடாது பாடுபட வேண்டும். முக்கியமாக, தலைமையின் கூட்டுத்துவம் பற்றிய கோட்பாட்டை அது பிறழாது கடைப்பிடிக்க வேண்டும், ஏனெனில் கட்சியின் ஒரு சில தலைவர்கள் தான்தோன்றி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுக்கும் காப்பு இந்தக் கோட்பாடே ஆகும்.

மார்க்ஸீய-லெனினீயக் கட்சி திண்ணமான விஞ்ஞான அடிப்படையில், சமூக வளர்ச்சிக்கு உரிய விதிகளை அறிந்து, கருத்தில் கொண்டு தனது செயல்கள் எல்லாவற்றையும் திட்டப்படுத்துகிறது. மற்ற எல்லாக் கட்சிகளிலிருந்தும் அதை வேறுபடுத்திக் காட்டும் முதன்மையான சிறப்பு இதுவே. சமூக வளர்ச்சியின் உடனடித் தேவைகளை உரிய நேரத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும் இந்த வளர்ச்சியின் போக்குக்களை ஆராய்ந்து அறியவும் இதனால் அதற்கு முடிகிறது. புவி ஈர்ப்பு விதிகளை அறியாமலும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் பூமியின் செயற்கைத் துணைக் கோளத்தைச் செலுத்துவது எப்படி இயலாதோ, அப்படியே சமூக வளர்ச்சி விதிகளின் செயல்களை அறியாமலும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும் சோஷலிஸ, கம்யூனிஸக் கட்டுமானத்தை

வெற்றிகரமாக நடத்துவதும் இயலாது. இந்த விதிகளைப் புறக்கணிப்பதால் விளையும் தவறுகள், சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நோக்கி சமூகம் முன்னேறுவதைத் தடைப் படுத்தும்.

சோவியத் யூனியனில் ஏழாண்டுத் திட்டத்தின் நிறை வேற்றம் வெற்றிகரமாகத் தொடங்கியது. ஆனால் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்திரண்டாவது காங் கிரஸ் நடந்து முடிந்ததுமே நாட்டின் பொருளாதார வளர்ச் சியில் இடர்ப்பாடுகள் நேர்ந்தன. இவை நேர்ந்ததற்கு ஒரு காரணம் தேசியப் பொருளாதாரத்தை நடத்துவதில் ஏற்பட்ட தவறுகள் ஆகும்.

சோஷலிஸத்தில் விற்பனைச் சரக்கு உற்பத்தி நிலைத்திருக் கிறது என்பது தெரிந்ததே. தொழில், விவசாய உற்பத்திப் பொருள்கள் அனைத்தின் விலைகளையும் அரசு ஒழுங்குபடுத்து கிறது. விலைகள் விஷயத்தில் அரசுப் பொருளாதார அலு வலகங்களுக்குக் கட்சி யோசனைகள் கூறுகிறது. சோஷலிஸப் பொருளாதாரத்தில் விலைகள் பற்றிய கொள்கை அசா தாரண முக்கியத்துவமுள்ளது, மிகவும் சிக்கலானது. அரசு இந்தக் கருவியைத் திறமையாகக் கையாள வேண்டும். சரக்கு களின் விலைகள் விருப்பம் போல நிர்ணயிக்கக் கூடாது. சரக்குகள் உற்பத்தி செய்பவர்கள் மனிதர்கள், பெரிய உற் பத்திக் குழுக்கள். தொழில்நிலையங்களின் செல்வமும் உழைப் பாளிகளின் ஊதியமும் அவர்களுடைய வாழ்க்கை வசதி களும் இந்தக் குழுக்கள் தங்கள் உழைப்பால் உற்பத்தி செய்த பொருள்களின் விலை விகிதத்தையே சார்ந்திருக்கின்றன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசும் நீண்ட காலப் பொருளாதார நடவடிக்கைகளின் போது விலைகள் பற்றிய கொள்கையைச் செயல்படுத்துவ தில் கணிசமான அனுபவம் திரட்டியிருந்தன, ஆனால் தவறு களும் நேர்ந்தது உண்டு.

கூட்டுப் பண்ணைகளிடம் அரசு வாங்கும் விவசாய விளை பொருள்களின் விலைகளுக்கு அறுபதுக்களில் ''வழுக்கு'' விகிதம் ஏற்படுத்தப்பட்டபோது இவ்வாறு நேர்ந்தது. இந்த விலைகள் ஒவ்வோர் ஆண்டும் விவசாயிகள் அறுவடை செய்த விளைச்சலின் அளவுக்கு ஏற்ப விதிக்கப்பட்டன. விளைச்சல்

நன்ருய் இருந்தால் விலேகள் குறைந்தன, மோசமாய் இருந்தால் உயர்ந்தன. விலேகள் நிலேயாக இல்லாதது விவசாயத்தை உடனே பாதித்தது. தங்கள் உழைப்பின் பலன்களில் விவசாயிகளின் அக்கறை குறைந்தது. விளேச்சல் நன்ருய் இருந்தாலும் மோசமாய் இருந்தாலும் வருமானம் கிட்டத்தட்ட ஒரே அளவாய்த்தான் இருக்கும் என்ருல், விளேச்சலே எதற்காக அதிகமாக்க வேண்டும், பண்டங்களே எதற்காக மிகுதியாய் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நினேத்தார்கள் அவர்கள். போதாக் குறைக்கு, புதிய விலேகள் ஏற்படுத்தப்பட்டது, விளேச்சல் மோசமாயிருந்த இரண்டு ஆண்டுகளில், 1961 லும் 1963லும் நிகழ்ந்தது. இவை எல்லாவற்றின் காரணமாகவும் நாட்டில் தானியச் சேமிப்பும் கால் நடைகளின் எண்ணிக்கையும் குறைந்தன. அரசு விவசாய விளேபொருள்களேக் குறைந்த அளவில் சேகரிக்கலாயிற்று. நகர மக்களுக்கு ரொட்டியும் பிற உணவுப் பண்டங்களும் வழங்குவதில் இடர்ப்பாடுகள் நேர்ந்தன.

1962ம் ஆண்டின் இறுதியில் கட்சி, அரசு அலுவலகங்கள் மாற்றி அமைக்கப்பட்டன. இதுவும் நாட்டின் பொருளாதார நிர்வாகத்தையும் அதன் பொருள் நிலேயையும் கடுமையாகப் பாதித்தது. இந்த மாற்றி அமைப்பின் படி கட்சி ஸ்தாபனங்களின் நிர்மாண ஒழுங்கில் மாறுதல்கள் செய்யப்பட்டன. அவை பிரதேச-உற்பத்திக் கோட்பாட்டிலிருந்து தூய உற்பத்திக் கோட்பாட்டின்படி மாற்றி அமைக்கப்பட்டன. இந்த மாற்றி அமைப்புக்கு முன், ஒரு வட்டாரம் அல்லது மாவட்டத்தின் பிரதேசத்தில் வசித்த எல்லாக் கம்யூனிஸ்டுகளும், அவர்கள் வேலே செய்த இடம் எதுவாக இருந்தாலும் ஒன்றித்த வட்டார, மாவட்டக் கட்சி ஸ்தாபனங்களில் சேர்ந்திருந்தார்கள். மாற்றி அமைப்பின் விளேவாக இந்த ஸ்தாபனங்கள் தொழில்துறையினவாகவும் விவசாயத் துறையினவாகவும் பிரிக்கப்பட்டன. ஒரே மாவட்டத்தில், தலேமை ஏற்று நடத்தும் இரண்டு கட்சி அலுவலகங்கள் செயலாற்றத் தொடங்கின. ஒன்று, விவசாயத் துறைக் கம்யூனிஸ்டுகளே உறுப்பினராகக் கொண்டு வேளாண்மைத் துறையை இயக்கியது. மற்றது, தொழில்துறை ஊழியர்களே உறுப்பினர்களாகக் கொண்டு அந்தத் துறையை மேல்

பார்த்தது. இதற்கு முன்பே (நாம் முன்னர் கூறியிருப்பது போல), பொருளாதார அலுவலகங்கள் மாற்றி அமைக்கப் பட்டிருந்தன. தொழில் துறையின் வெவ்வேறு கிளைகளை நிர்வகித்துவந்த அமைச்சரகங்களின் இடத்தில், பிரதேசவாரி யாக தேசீயப் பொருளாதார மன்றங்கள் ஏற்படுத்தப்பட் டிருந்தன.

ஆலைகள், தொழிற்சாலைகள், புதுக் கட்டுமானங்கள் ஆகிய வற்றின் வேலையை இந்த அமைப்பு மாற்றங்கள் கடுமை யாகப் பாதித்தன. அமைச்சகங்கள் இல்லாததால் தொழில் துறைக் கிளைகளின் மையத் திட்ட அமைப்பும் தலைமையும் கடினமாயின. விஞ்ஞான ஆதாரம் உள்ள ஒன்றித்த தொழில் நுட்பக் கொள்கையைக் கடைப்பிடிப்பதற்குப் பெருத்த தடைகள் ஏற்பட்டன. புதிய தொழில்நுட்பத்தையும் இயந் திர நுணுக்கத்தையும் அபிவிருத்தி செய்வதிலும் புகுத்து வதிலும் பயின்று தேர்வதிலும் தொழில்துறை ஊழியர் களின் அக்கறை குறைந்தது. 1963ம் ஆண்டிலும் 1964ம் ஆண்டிலும் தொழில் பொருள்களின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சி குறைந்தது.

எல்லாச் செயல் துறைகளிலும் சரியான கொள்கையை வகுப்பதற்கு மிக முக்கியமான நிபந்தனை ஆகிய தலைமையின் கூட்டுத்துவத்தை வலுப்படுத்தி, இந்தத் தவறுகளைத் திருத்தத் தொடங்கியது கட்சி.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி யின் முழுக் கூட்டம் 1964 அக்டோபரில் கூடியது. மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளர் பதவியிலிருந்தும் சோவியத் யூனியன் அமைச்சரவைத் தலைவர் பதவியிலிருந்தும் விலகிக் கொள்ளத் தம்மை அனுமதிக்கும்படி நி. ஸெ. குருஷ்சேவ் வேண்டிக் கொண்டார். அவரது வேண்டுகோளை முழுக் கூட்டம் ஏற்றுக்கொண்டது. அதே சமயம், முழுக் கூட்டம் தலைமையின் கூட்டுத்துவத்தை வலுப்படுத்தியது. மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளராகவும் அமைச்சரவைத் தலை வராகவும் ஒரே மனிதர் பதவி வகிப்பது தகாது என அது ஒப்புக்கொண்டது. மத்தியக் கமிட்டியின் முதல் செயலாள ராக லெ. இ. பிரேழ்னிவ் தேர்ந்தெடுக்கப்பட்டார். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக்குழு அ. நி. கஸீகினை

சோவியத் யூனியன்
கம்யூனிஸ்ட் கட்சி
மத்தியக் கமிட்டியின்
பொதுச் செயலாளர்
லெஒனீத் இலியீச்
பிரேழ்னிவ்

சோவியத் யூனியன்
சுப்ரீம் சோவியத்
தலைமைக்குழுத் தலைவர்
நிக்கலாய் வீக்தரவிச்
பத்கோர்னி

சோவியத் யூனியன்
அமைச்சரவைத்
தலைவர் அலெக்ஸேய்
நிக்கலாயெவிச்
கஸீகின்

சோவியத் யூனியன் அமைச்சரவைத் தலைவராக நியமித்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் அக்டோபர் மாத முழுக் கூட்டம், கட்சியின் வாழ்க்கையிலும் செயலிலும் முக்கிய கட்டத்தின் தொடக்கமாக விளங்கியது. கட்சியின் முந்திய காங்கிரஸ்களும் கட்சியின் செயல்திட்டமும் வகுத்திருந்த, உட்கட்சி ஜனநாயகத்தைப் பரப்பும் போக்கை முழுக்கூட்டம் உறுதிப்படுத்தியது. தலைமையின் கூட்டுத்துவம் பற்றிய லெனினது கோட்பாடு மாற்ற முடியாதது என அது வலியுறுத்தியது. கட்சியின் எல்லாப் பிரிவுகளிலும் லெனினது வேலைப் பாங்கைக் கடைப்பிடிக்க அது முடிவு செய்தது.

கட்சி அலுவலகங்கள் மாற்றி அமைக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகளை அக்டோபர் முழுக் கூட்டம் நடந்தேறியதுமே மத்தியக் கமிட்டி விரிவாக ஆராய்ந்தது. கட்சி ஸ்தாபனங்கள் தொழில்துறையினவாகவும் விவசாயத் துறையினவாகவும் பிரிக்கப்பட்டது சரியல்ல என்று அனுபவம் காட்டியது. விவசாயமும் தொழில் துறையும் இந்தப் பிரிவால் பயன் பெறும் என முன்பு எண்ணப்பட்டது. உண்மையிலோ, நகரமும் நாட்டுப்புறமும் இதனால் நஷ்டமே அடைந்தன. மாவட்டம் முழுவதற்கும் ஒன்றுக வழி காட்டி நடத்தும் அலுவலகம் இல்லாது போய்விட்டது. நகரம் நாட்டுப்புறத்துக்கு அளிக்கும் உதவி குறைந்தது. தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் பலவீனம் அடையலாயிற்று. நகரக் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்புறக் கம்யூனிஸ்டுகளும் கலந்து பழகுவது குறைந்துவிட்டது. அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கட்சி அலுவலகங்கள் ஒருங்கிசைந்து நோக்கப் பொருத்தமாகச் செயல்படுவதற்கு அவற்றின் பிரிவு தடையாய் இருந்தது, அவற்றின் தலைமைப் பாத்திரத்தை பலவீனப்படுத்தியது.

ஒன்றித்த மாவட்ட, பிரதேசக் கட்சி ஸ்தாபனங்களைக் கட்சி மீண்டும் ஏற்படுத்தியது. தொழில்துறையிலும் விவசாயத் துறையிலும் பணி ஆற்றிய எல்லாக் கம்யூனிஸ்டுகளையும் ஒன்று சேர்த்தன இந்த ஸ்தாபனங்கள். சோவியத், தொழிற்சங்க, இளங் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களிலும் இதே போன்ற

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மத்தியக் கமிட்டி, அனுபவம் உள்ள ஊழியர்களால் கட்சியின் தலைமை அலுவலகங்களை வலுப்படுத்திற்று.

தலைமையின் கூட்டுத்துவம் பலப்பட்டதும் உட்கட்சி வாழ்க்கை உற்சாகம் அடைந்ததும் கம்யூனிஸ்டுகளின் செயலூக்கம் அதிகரித்ததும் எல்லா அரசு, சமூக ஸ்தாபனங்களின் வேலையிலும் பயனுள்ள விளைவு ஏற்படுத்தின.

பொருளாதாரச் சீர்திருத்தம்

உட்கட்சி விவகாரங்களை ஒழுங்குபடுத்தியபின், மத்தியக் கமிட்டி நாட்டின் பொருளாதார வாழ்வில் நிகழ்ந்த தவறுகளைத் திருத்தவும் குறைகளை அகற்றவும் முற்பட்டது. நாட்டின் பொருளாதாரத்திலும் சமூக வாழ்விலும் இருந்த நிலைமையை மத்தியக் கமிட்டி ஆழ்ந்த சிந்தனையுடன் பகுத்தாய்ந்தது. சோஷலிஸ சமூக வளர்ச்சியில் ஏற்பட்டிருந்த உடனடித் தேவைகளை அது ஆராய்ந்து, கம்யூனிஸக் கட்டுமானப் பணிகளை இன்னும் விரைவாக நிறைவேற்றுவதற்கான வழிகளைக் குறித்தது.

தேசீயப் பொருளாதார மன்றங்கள் மூடப்பட்டன. உற்பத்தித் துறைக் கிளைவாரியான அமைச்சரகங்கள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. இவை உற்பத்தித் துறையின் ஒவ்வொரு கிளையையும் முழுமையாக நிர்வகிப்பதில் கவனத்தை ஈடுபடுத்தின.

நாட்டின் பொருளாதார நிலைமையை எல்லாக் கோணங்களிலிருந்தும் பகுத்தாய்ந்ததன் விளைவாகக் கட்சியின் மத்தியக் கமிட்டி ஒரு முடிவுக்கு வந்தது. சோவியத் யூனியனில் சோஷலிஸப் பொருளாதார அமைப்பின் வாய்ப்புக்கள் வளர்ந்து விட்டதாலும் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி உயர்ந்தமட்டத்தை எட்டிவிட்டதாலும் விரிவான பொருளாதாரச் சீர்திருத்தம் செய்வது சாத்தியம்ஆகியிருக்கிறது என்பதே அந்த முடிவு. சமூக உற்பத்தியின் பயனுடைமையை அதிகரிப்பதும் உழைப்பின் உற்பத்தித் திறன் விரைவாக வளரவும் அதன் விளைவாக சோஷலிஸ சமூகத்தின் பொருளியல், உளவியல் செல்வங்கள் பெருகவும் வகை செய்வதும் இந்தச் சீர்திருத்தத்தின் முதன்மையான நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு, பொருளாதாரத் திட்ட அமைப்பைச்

செப்பம் செய்யவும் உற்பத்திக்குப் பொருளியல் தூண்டுதல்கள் அளிக்கவும் அனேக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி மத்தியக் கமிட்டி யோசனை கூறியது.

சோவியத் யூனியனில் சோஷலிஸ தேசீயப் பொருளாதாரம் மிகப் பெரிய அளவு விரிவடைந்து விரைவாக வளர்ந்து வந்தது. அரசாங்கத் திட்ட வகுப்பு அலுவலகங்களால் தங்கள் மீது சார்ந்த பேரளவான வேலையைச் சமாளிக்க முடிய வில்லை. நாட்டில் இருந்த லட்சக் கணக்கான தொழில் நிலையங்களை அரவணைத்து மேற்பார்ப்பதில் அவை அளவு கடந்து ஈடுபட்டிருந்தது இவ்வாறு நேர்ந்ததற்குக் கணிசமான அளவு காரணம் ஆயிற்று. இந்த அலுவலகங்கள் தொழில் நிலையங்களுக்கு ஏராளமான—சில வேளைகளில் அவ்வளவு முக்கியம் அற்ற—திட்டப் பணிகளை மேலிருந்து ஏற்படுத்தின. இந்த வழக்கம் ஒரு புறம், திட்ட அலுவலகங்களின் கவனத்தைப் பெரிய தேசீயப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய விடாமல் வேறு பக்கம் திருப்பிற்று, மறு புறம், தொழில் நிலையங்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் குறுக்கியது. தொழில் நிலையங்களின் உற்பத்தி நிகழ்முறையில் திட்ட வகுப்பு அலுவலகங்களின் தலையீடும், ஆலைகள், தொழிற்சாலைகளின் திட்டப் பணிகளில் அவை புகுத்திய மாறுதல்களும் தொழில் நிலையங்களின் வேலை ஒரு சீராக நடப்பதற்குத் தடையாய் இருந்தன. தொழில் நிலையங்களின் தலைவர்களுடைய பாத்திரத்தை இவை தாழ்த்தின, அவர்களுடைய பொறுப்பைக் குறைத்தன. உண்மையிலோ, தொழில் நிலையங்களின் தலைவர்கள் அனுபவம் மிகுந்த பொருளாதார நிர்வாகிகள். அரசின் நலன்களில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்கள். சிறந்த தேர்ச்சி பெற்ற நிபுணர்கள். அரசு அனைத்தின் பொது நலன்களையும் உழைப்பாளிக் குழுக்களின் நலன்களையும் சரியாக ஒருங்கிசைக்கும் விதத்தில் தொழில் நிலையங்களை நிர்வகிக்க வல்லவர்கள். இந்த எல்லாக் காரணங்களாலும் தொழில் நிலையங்களின் தலைமைக்கான வடிவங்களையும் முறைகளையும் மாற்றுவதும் திட்ட வகுப்பின் புதிய முறைக்குப் பரிணமிப்பதும் இன்றியமையாதவை ஆயின.

தேசீயப் பொருளாதாரத்தை அரசின் மையப்படுத்தப் பட்ட திட்டப்படி வழிகாட்டி நடத்துவது மாறுமல் அப்

படியே இருக்க வேண்டும் என்று கட்சி எண்ணியது. நாட்டின் பொருளாதார வாழ்வை முறைப்படுத்தும் பிரதான விசைகளை அரசு தன் கைகளில் வைத்திருக்க வேண்டும். முக்கிய நிதிச் சேமிப்புக்களை அது தன்னிடம் திரட்டி வைத்துக்கொள்ள வேண்டும், மிக அவசியமான முதலீடுகளைத் தீர்மானிக்க வேண்டும், தேசீயப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு கிளைக்கும் உற்பத்தி அளவையும் சரக்குகளின் விலைகளையும் திட்டப்படுத்த வேண்டும், கச்சாப் பொருள்களதும் தயாரிப்புப் பொருள்களதும் வினியோகத்தை முறைப்படுத்த வேண்டும், உற்பத்தியில் புதிய தொழில்நுட்பமும் இயந்திர நுணுக்கமும் புகுத்தப்படுவதை மேல்பார்க்க வேண்டும்.

அதே சமயம் தொழில் நிலையங்களுக்கு அதிகப் பொருளாதார சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்று கட்சி சிபாரிசு செய்தது. தொழில் நிலையங்களுக்கு மேலிருந்து தீர்மானிக்கப்படும் உற்பத்தி அளவுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. ஒவ்வொரு தொழில் நிலையமும் உற்பத்தி செய்ய வேண்டிய பொருள்களின் அளவு பற்றிய நிலையான அரசாங்கத் திட்டம் அதற்குக் கொடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு முழுவதும் தொழில் நிலையங்களின் தலைவர்கள் மீதும் அவற்றின் உழைப்பாளர் குழுக்கள் மீதும் சார்ந்தது. தொழில் நிலையத்தின் முக்கிய உற்பத்திச் சாதனத் தொகுப்புக்கள் எல்லாம்—உற்பத்திக் கட்டிடங்களும் பண்டசாலைகளும் இயந்திரங்களும் பிற சாதனங்களும்—தொழில் நிலையங்களுக்குச் சொந்தம் ஆக்கப்பட்டன. இவற்றைப் பயன்படுத்துவதற்காக அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் நிச்சயிக்கப்பட்டது. கட்டணத் தொகை அரசு பட்ஜெட்டில் சேர்ந்தது.

திட்ட வகுப்பு முறையைச் சீர்படுத்தியதுடன், உற்பத்திக்குப் பொருளியல் தூண்டுதல்கள் ஏற்படுத்துவதிலும் கட்சி அக்கறை எடுத்துக்கொண்டது. உற்பத்திக் குழுக்களும் தனி உழைப்பாளர்களும் தங்கள் உழைப்பின் பயன்களிலும் தாங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் அதிகப்படுத்துவதிலும் அக்கறை கொள்ளும் படிச் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளைக் கட்சி எடுத்துக்கொண்டது. பொருள்களின் உற்பத்தி குறித்த நிலையான திட்டங்க

ளும் சரக்குகளின் விலைகளை அரசு நிர்ணயிக்கும் முறையும் அரசுக்கும் தொழில் நிலையங்களுக்கும் இடையே, விற்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையே புதிய ஒழுங்கும் இதற்குத் துணை செய்தன.

தொழில் நிலையங்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களைக் கச்சாப் பொருள்கள், இயந்திரங்கள், பிற சாதனங்கள் ஆகியவற்றின் வடிவில் ஒன்றுக்கொன்று கொடுத்து வாங்கிக் கொள்வதோடு, மக்களின் தேவைக்கான பொருள்களின் வடிவில் அரசாங்க வர்த்தக நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கின்றன. தரமான பண்டங்களை உபயோகிப்போருக்கு உரிய நேரத்தில் வழங்குவதில் தொழில் நிலையங்களுக்கு உள்ள பொறுப்பை அதிகப்படுத்துவதற்காகவும் எல்லாத் தொழில் நிலையங்களையும் சம நிலைமைகளில் வைப்பதற்காகவும் அவற்றின் பொருளாதாரச் செயல்களை ஒரே நோக்கில் மதிப்பிடும் முறையைப் புகுத்தியது சீர்திருத்தம். ஒரு தொழிற்சாலை உற்பத்தி செய்த பொருள்களின் மொத்த அளவு (மொத்த உற்பத்தி) அல்ல, **விற்பனையான பொருள்களின் மொத்த அளவே** அதன் வேலையைக் காட்டும் அளவுக் குறியாக மதிக்கப்படலாயிற்று.

சீர்திருத்தத்துக்கு முன்பு ஆலைகளும் தொழிற்சாலைகளும் தாங்கள் தயாரித்த பொருள்களை அரசாங்கச் சேமிப்பு நிலையங்களுக்குக் கொடுத்து உரிய விலைகளைப் பெற்றுவந்தன. உபயோகிப்போருக்குத் தேவை இல்லாத சில சாமான்களும் சரக்குகளும் சில வேளைகளில் சேமிப்பகங்களில் நெடுங்காலம் கிடக்கும், விற்பனைக்கு வராமலே கூட இருந்து விடும். இதனால் அரசு நஷ்டம் அடையும், இத்தகைய சரக்குகளை உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்களுக்கோ, நஷ்டமே ஏற்படாது. பொருள்களின் மொத்த உற்பத்திக்கான திட்டத்தை அவை நிறைவேற்றி விட்டன, அரசுக்கு அவற்றைக் கொடுத்துவிட்டன, இந்தச் சரக்குகள் எப்படி விற்பனை ஆகின்றன என்பது அவற்றைப் பொறுத்தது அல்ல. பொருள்கள் தயாரித்து அளிக்கும் தொழில் நிலையங்களுக்கும் அவற்றைப் பயன்படுத்தும் தொழில் நிலையங்களுக்கும் இடையிலும் இவ்வாறே நிகழ்ந்தது. ஆர்டர் கொடுத்த தொழில்நிலையங்களுக்குத் தேவையான இயந்திர சாதனங்களை உரிய நேரத்தில்

தயாரித்து அளிக்காத தொழில்நிலையங்களுக்கு எவ்விதப் பொருள் நஷ்டமும் ஏற்படவில்லை. சீர்திருத்தம் இந்த ஒழுங்கை மாற்றி விட்டது. புது ஒழுங்கின்படி, சரக்குகளும் பண்டங்களும் விற்பனை ஆகும் வரை, அதாவது, அவை உபயோகிப்போருக்குக் கிடைக்கும்வரை, அவற்றுக்கான விலை செலுத்தப்பட மாட்டாது. ஒவ்வொரு தொழில் நிலையமும் எந்த விதமான பொருள்களை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டும், அவற்றின் விலை என்ன, யாருக்கு எந்தக் கெடுக்களுக்குள் இந்தப் பொருள்கள் கொடுக்கப்பட வேண்டும் என்ற விவரங்கள் எல்லாவற்றையும் அரசு திட்ட முறையில் தீர்மானிக்கிறது.

தொழிற்சாலைகளின் உற்பத்திக் குழுக்கள் ஒரு சீராகவும் திட்ட வட்டமாகவும் வேலை செய்யும்படியும் அரசின் திட்டத் தில் குறித்த பணிகளை உரிய நேரத்தில் நிறைவேற்றும்படி யும் பொருளாதாரச் சீர்திருத்தம் இவ்வாறு அவற்றைத் தூண்டி ஊக்குகிறது. அதே சமயம், திட்டத்தில் குறித்த அளவுக்குக் கூடுதலாகப் பொருள்களை உற்பத்தி செய்யவும், விலைவாக லாபத்தை அதிகமாக்கவும் அது பெருத்த வாய்ப்பு அளிக்கிறது. ஒழுங்காக வேலை செய்யும் ஒவ்வொரு தொழில் நிலையமும் லாபம் பெறும். சீர்திருத்த நிபந்தனைகளின் படி லாபத்தின் ஒரு பகுதி அனைத்து அரசு நிதியில் சேரும், மறு பகுதி தொழில் நிலையத்தினிடம் இருக்கும். உற்பத்தியைத் தூண்டி ஊக்கும் பொருட்டு இவ்வாறு செய்யப்படும். ஒரு தொழிற்சாலை எவ்வளவு நன்றாக வேலை செய்கிறதோ, எவ் வளவு நிறையச் செய்பொருள்களும் சரக்குகளும் அது உற் பத்தி செய்து விற்கிறதோ, அவ்வளவு அதிக லாபம் அதனிடம் தங்கும். இதில் ஒரு பகுதி உற்பத்தித் தேவைகளுக்காக, முதன்மையாகப் புது இயந்திரங்கள் வாங்கும் பொருட்டு, செலவிடப்படும். மறு பகுதி **ரொக்கப் பரிசு** நிதியில் சேரும். சிறப்பாக உழைத்த தொழிலாளர்களுக்கும் அலுவலக ஊழி யர்களுக்கும் இந்த நிதியிலிருந்து போனஸ்கள் வழங்கப் படும். கணிசமான நிதி வளங்கள் தொழிலாளர்கள், அலு வலர்கள் ஆகியோரின் இருப்பிட வசதிகளை மேம்படுத்தவும் பண்பாட்டு நிலையங்களும் அன்றாட வாழ்க்கைத் தேவை களுக்கான நிலையங்களும் கட்டவும் செலவிடப்படுகின்றன.

இவை எல்லாம் தொழிலாளர்களும் அலுவலர்களும் தொழில் நிலைய உற்பத்திக் குழுவினர் அனைவரும் தங்கள் உழைப்பின் பயன்களில் அதிக அக்கறை கொள்ளுமாறு செய்கின்றன. கூடுதலான பயன் விளையும் விதத்தில் வேலை செய்யவும் உற்பத்தித் திறனையும் புதிய இயந்திரங்களையும் முன்னிலும் சிறந்த முறையில் கையாளவும் கச்சாப் பொருள்களையும் சாமான்களையும் அதிகச் சிக்கனமாகச் செலவிடவும் செய்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும் அவற்றின் அடக்க விலையைக் குறைக்கவும் அவர்கள் ஆர்வத்துடன் முயல்கிறார்கள்.

பொருளாதாரச் சீர்திருத்தம் விவசாயத்திலும் பெரும் பயன் விளைத்தது. விவசாய விளை பொருள்களின் கொள் முதலுக்குரிய நிலையான திட்டத்தை 1970ம் ஆண்டு முடிவுவரை யுள்ள காலப்பகுதிக்கு அரசு 1965ம் ஆண்டு வகுத்தது. இதன்படி ஒவ்வொரு கூட்டுப் பண்ணைக்கும் அரசாங்கப் பண்ணைக்கும் ஆறு ஆண்டுக் காலத்துக்கு அரசின் கோரிக்கைத் திட்டம் வழங்கப்பட்டது. பயிர் நிலப்பரப்பைப் பொறுத்து அவை ஆண்டுதோறும் என்ன விளை பொருள்களை எந்த அளவில் அரசுக்கு விற்க வேண்டும் என்று திட்டத்தில் குறித்திருந்தது. கோரிக்கைத் திட்டப்படி விற்கப்பட வேண்டிய முக்கிய விவசாய விளைபொருள்களின் கொள் விலைகளையும் அரசு உயர்த்தியது. திட்டத்தில் கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிய பின் கூடுதல் விளைபொருள்களைக் கூட்டுப் பண்ணைகள் தம் விருப்பப்படி விற்பனை செய்ய உரிமை அளிக்கப்பட்டது. இந்த உபரிப் பொருள்களை அரசுக்கு விற்கும் படி கூட்டுப்பண்ணைகளைக் கட்டாயப்படுத்தும் வழக்கம் முன்பு சில சமயங்களில் கடைப்பிடிக்கப்பட்டது. சீர்திருத்தப் படி இந்த வழக்கம் தடை செய்யப்பட்டது. ஆனால் கூட்டுப் பண்ணைகள் தங்கள் உபரி விளை பொருள்களை அரசுக்கு விற்பதில் அக்கறை கொள்ளும்படிச் செய்யும் பொருட்டு, கட்டாயத் திட்டக் கொள்முதலுக்குக் கூடுதலாக வாங்கப் படும் விளைபொருள்களின் விலைகளை அரசு கணிசமாக உயர்த்தியது. விவசாய விளைபொருள்களின் அரசாங்கக் கொள் முதல் விலைகள் உயர்த்தப்பட்டதால் மக்களுக்கு அரசினால்

விற்கப்பட்ட உணவுப் பண்டங்களின் விலைகள் மாறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

விவசாயத்தில் பொருளாதாரச் சீர்திருத்தம் செயல் படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே அதன் பெருத்த நன்மை கள் புலனுயின. கூட்டுப்பண்ணையினர் தங்கள் உழைப்பின் விளைவுகளில் கணிசமாக அதிக அக்கறை கொள்ளலாயினர். அவர்கள் இயந்திரங்களை அதிகப் பயன்தரும் விதத்தில் கையாளவும் பயிர் நிலங்களையும் கால்நடைகளையும் அதிகக் கவனத்துடன் பேணவும் தொடங்கினர்கள். விடாப்பிடியாக முயன்று பயிர் விளைச்சலையும் கால்நடைப் பண்ணைப் பொருள் களின் உற்பத்தியையும் மிகுதி ஆக்கினர்கள். அரசுக்குத் திட்டப்படியும் கூடுதலாகவும் விற்ற பொருள்களிலிருந்து கூட்டுப் பண்ணைகளுக்குக் கிடைத்த வருவாய் 1965ம் ஆண்டில் மட்டும், முந்திய ஆண்டைக் காட்டிலும் 250 கோடி ரூபிள் அதிகமாய் இருந்தது. இந்தத் தொகையில் ஏறத்தாழப் பாதிப் பணம் கூட்டுப்பண்ணையினரின் உழைப்புக்கு ஊதிய மாக அளிக்கப்பட்டது. பல கூட்டுப் பண்ணைகள் சேமிப்பு நிதிகள் ஏற்படுத்திக் கொண்டு மாதாமாதம் ஊதியம் வழங் கலாயின. டிராக்டர்களும் பிற இயந்திரங்களும் வாங்குவதற் கும் பண்ணைக் கட்டிடங்களும் பண்பாட்டுக் கழகங்களும் பள்ளிக்கூடங்களும் கட்டுவதற்கும் கணிசமான பணத்தைக் கூட்டுப்பண்ணைகள் செலவழித்தன.

கட்சியும் அதன் மத்தியக் கமிட்டியும் கூட்டு முயற்சி யால் தயாரித்த பொருளாதாரச் சீர்திருத்தம் லெனினுடைய அறிவார்ந்த ஆணைகளை அடிப்படையாகக் கொண்டது. சோஷ லிஸக் கட்டுமானத்தின்போது திரட்டப்பட்ட விலைமிக்க அனுபவம் முழுவதும் அதில் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டிருந்தது. மையப்படுத்தப்பட்ட பொருளாதார நிர்வா கத்தையும் நாடு முழுவதற்குமான ஒரே அரசுத் திட்டத்தை யும் தனித் தொழில் நிலையங்களின் பொருளாதாரச் சுதந் திரத்துடனும் முன் முயற்சியுடனும் அது தக்கவாறு ஒருங்கி சைத்தது. சமூகம் அனைத்தின் நலன்களும் தனி உழைப்புக் குழுக்களுடையவும் தனி உழைப்பாளர்களுடையவும் நலன் களும் அதில் பொருத்தமாக ஒருங்கிசைக்கப்பட்டன.

திட்ட வகுப்புக்கும் பொருளாதாரத் தூண்டுதலுக்கும்

உரிய புதிய முறை ஏழாண்டுத் திட்டத்தின் முடிவில் தேசீயப் பொருளாதாரத்தில் புகுத்தப்படலாயிற்று. கட்சி ஸ்தாபனங்கள் இதன் உட்கருத்தையும் கம்யூனிஸக் கட்டுமானத்துக்கு இது எவ்வளவு முக்கியமானது என்பதையும் தொழிலாளர்களுக்கும் கூட்டுப்பண்ணையினருக்கும் விளக்கி விவரித்தன. கூட்டுப்பண்ணை நிர்வாகிகளுக்கும் தொழில் நிலையங்கள், அரசாங்கப் பண்ணைகளின் இயக்குநர்களுக்கும் உற்பத்திக் குழுக்களுக்கும் புதிய நிலைமைகளில் வேலை செய்யத் தயாராவதற்கு அவை உதவின.

பொருளாதாரச் சீர்திருத்தம் தொழிலாளர்களுக்கும் பொறி இயலாருக்கும் தொழில்நுட்ப நிபுணர்களுக்கும் உழைப்பில் பெருத்த உற்சாகம் ஊட்டியது. பணத்தையும் பொருள்களையும் சிக்கனமாகச் செலவிடுவதிலும் புதிய விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை உற்பத்தியில் விரைவாக ஈடுபடுத்துவதிலும் போட்டி, ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் புதிய கட்டுமான இடங்களிலும் விரிவாக நடைபெறலாயிற்று. இவை எல்லாம் ஏழாண்டுத் திட்டத்தைக் குறித்த கெடுவுக்கு முன்பே நிறைவேற்றத் தொழில்துறைக்கு உதவின. 1965ம் ஆண்டில் நிறைவுற்ற ஏழாண்டுத் திட்டக் காலத்தில் சோவியத் யூனியனின் தொழில் திறன் அனேகமாக இரு மடங்காக வளர்ந்தது. ஏறக்குறைய 5,500 பெரிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. திறன் மிக்க முப்பது மின் நிலையங்கள் இயங்கத் தொடங்கின. உலகிலேயே ஆகப் பெரிய பிராத்ஸ்க் நீர் மின் நிலையம் முழு ஆற்றலுடன் உற்பத்தி ஆரம்பித்தது.

ஏழாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டுகளில் விவசாய உற்பத்தி விரைந்த வளர்ச்சி அடைந்தது. தானியப் பயிர்கள், தொழில் பயிர்கள் ஆகியவற்றின் மொத்த விளைச்சல் அதிகரித்தது. கால் நடைகளின் எண்ணிக்கை அதிகம் ஆயிற்று. அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் அதிக அளவில் விவசாய விளைபொருள்களை அரசுக்கு விற்றன. எங்கும் நகர மக்களுக்குப் போதிய அளவு உணவுப் பண்டங்கள் கிடைத்தன. விவசாயம் இயந்திரமயமாக்கப்படுவது கணிசமாக அதிகரித்தது. 1959 முதல் 1965 வரையுள்ள ஆண்டுகளில் கூட்டுப் பண்ணைகளிடமும் அரசாங்கப் பண்ணை



''மாபெரும் அக்டோபர் புரட்சியின் பொன்விழா'' என்னும் பெயர் கொண்ட பிராத்ஸ்க் நீர்மின் நிலையம். இது உலகில் யாவற்றிலும் திறன்மிக்க நீர்மின் நிலையம்

களிடமும் இருந்த டிராக்டர்களின் எண்ணிக்கை ஏறத் தாழ ஆறு லட்சமும் தானிய அறுவடை செய்யும் தானியங்கி இயந்திரங்களின் எண்ணிக்கை இரண்டு லட்சமும் லாரிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட மூன்று லட்சமும் அதிகரித்தன.

ஏழாண்டுத் திட்டக் காலத்தில் சோவியத் யூனியனில் சோஷலிஸ உற்பத்தி வளர்ச்சி அடைந்ததோடு சமூகச் செல்வமும் அதிகரித்தது. இதனால், சோவியத் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் அவர்களுடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும் ஏற்ற அநேக நடவடிக்கைகளை மேற் கொள்வது, சிறப்பாகத் திட்டக் காலத்தின் கடைசி ஆண்டு களில், சோவியத் அரசுக்கு முடிந்தது. தொழிலாளர்களின் சராசரி மாதச் சம்பளம் உயர்ந்தது, கூட்டுப் பண்ணையின ரின் வருவாய் அதிகரித்தது, சமூக உபயோக நிதியிலிருந்து அளிக்கப்படும் ரொக்கத் தொகைகளும் அனுகூலங்களும் மிகுந்தன. நகரங்களில் மருத்துவர்கள், பள்ளி ஆசிரியர்கள், அரசு வர்த்தகத் துறை, ஊராட்சி மன்றப் பணியாளர்கள்

ஆகியோரின் சம்பளம் உயர்த்தப்பட்டது. கூட்டுப் பண்ணை யினருக்கு முதுமைக் காலத்திலும் உழைப்புத் திறனை இழந்த நிலையிலும் ஓய்வுச் சம்பளம் கொடுக்கும் வழக்கம் 1965ம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டது. 1959 முதல் 1965 வரை யுள்ள ஆண்டுகளில் நாட்டின் நகரங்களிலும் கிராமங்களி லும் 1 கோடி 70 லட்சம் இருப்பிடப் பகுதிகளும் தனி வீடு களும் கட்டப்பட்டன. ஏழாண்டுத் திட்டம் தொடங்கிய போது நாட்டில் இருந்த மொத்த இருப்பிட வீடுகளில் இவை ஏறக்குறைய நாற்பது சத விகிதம் ஆகும்.

சோவியத் மக்கள், தேசீயப் பொருளாதார வளர்ச்சிக் கான ஏழாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி, கம்யூனிஸத்தை நோக்கிச் செல்லும் பாதையில் முக்கிய மான அடி எடுத்து வைத்தார்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து மூன்றுவது காங்கிரஸ்

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி யின் இருபத்து மூன்றுவது காங்கிரஸ், 1966ம் ஆண்டு மார்ச்சு மாத முடிவில் மாஸ்கோவில் கூடியது. ஏறத் தாழ ஒரு கோடி இருபத்தைந்து லட்சம் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகள் காங்கிரஸில் கலந்து கொண்டார்கள். எண்பத்தாறு கம்யூனிஸ்ட், இடதுசாரி சோஷலிஸ்ட், தேசீய-ஜனநாயகக் கட்சிகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் காங்கிரஸில் வீற்றிருந்தார்கள்.

லெ. இ. பிரேழ்னிவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கையைக் காங்கிர ஸில் படித்தார். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் போக்கையும் நடைமுறைச் செயல்களையும் விவர அறிக்கையில் கண்டிருந்த யோசனைகளையும் முடிவு களையும் காங்கிரஸ் ஒரு மனதாக அங்கீகரித்தது.

பாட்டாளி வர்க்க சர்வதேசீயத்தின்பாலும், 1957லும் 1960லும் நடந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளுடைய மகாநாடுகளால் கூட்டாக வகுக்கப்பட்ட சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தின் பொதுக் கொள்கைப் போக்கின்பாலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் விசுவாசத்தைக் காங்கிரஸ் வெளிப்படுத்தியது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸீய-லெனினீய, பாட்

டாளி வர்க்க சர்வதேசீயக் கோட்பாடுகளின் அடிப்படையில் சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளை ஒற்றுமைப் படுத்துவதற்கு ஆதரவாக இருக்கிறது என்று காங்கிரஸ் அறிவித்தது. கம்யூனிஸ இயக்கத்தில் ஒரு கட்சியின் மேலாண் மையை அது எதிர்த்தது. எல்லா மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகளுக்கும் இடையே உண்மையான சமத்துவமும் சோதர உறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் நிலவுவதை அது ஆதரித்தது. கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் புதிய சர்வதேச மகாநாடு கூட்டப்படுவதற்கு அது இசைவு தெரிவித்தது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து மூன்றுவது காங்கிரஸ் சிக்கலான சர்வதேச நிலைமைகளில் நடைபெற்றது. ஏகாதிபத்தியவாதிகள் சோஷலிஸ அரசு களுக்கும் இளம் தேசீய அரசுகளுக்கும் எதிராக அழிவு வேலைகளையும் ஆத்திரமூட்டும் செயல்களையும் தீவிரப்படுத் தினர்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்திய வட்டாரங்கள் வியத்நாமிய மக்களுக்கு எதிராகப் பாதகப் போர் நடத்தின. க்யூபாவுக்கு எதிரான ஆத்திரமூட்டும் செயல்களை அவை கைவிடவில்லை. ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள் விவகாரங்களில் அவை முரட்டுத் தனமாகத் தலையிட்டன. அவற்றின் ''நாட்டோ'' கூட்டாளி கள், சிறப்பாக ஜெர்மன் கூட்டுக் குடியரசைச் சேர்ந்த பழிவெறியினர், ஐரோப்பாவில் சூழ்நிலையைக் கெடுபிடி நிறைந்தது ஆக்கினர். சோவியத் யூனியன், வெவ்வேறு சமுதாய அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கொள்கையை ஒரு சீராகக் கடைப்பிடித்து வந் தது. சர்வதேசக் கெடுபிடி நிலைமையைத் தளர்த்தவும் சமா தானத்தை வலுப்படுத்தவும் அது பாடுபட்டது. ஏகாதிபத் திய ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டனம் செய்தது, ஆக் கிரமிப்புக்கு உள்ளானவர்களுக்குச் செயலளவில் உதவியும் ஆதரவும் அளித்தது. சோஷலிஸ அரசுகளுடனும் வளர்ச்சி அடைந்துவரும் இளம் அரசுகளுடனும் சோவியத் நாடு பொருளாதார, அரசியல் ஒத்துழைப்பை வலுப்படுத்தியது.

சோவியத் கம்யூனிஸ்டுகளதும் சோவியத் மக்கள் அனை வரதும் சித்தத்துக்கும் உணர்ச்சிக்கும் குரல் கொடுத்தது காங்

கிரஸ்: வியத்நாமில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அநாகரிக ஆக்கிரமிப்பைக் கடுமையாக நிந்தித்து, இந்த ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டும் என்றும் எல்லா அன்னியப் படைகளும் வியத்நாமிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அது கோரியது. வீர வியத்நாமிய மக்களுக்கு முழு ஆதரவு அளிப்பதாகவும் ஆக்கிரமிப்பாளர்களை முறியடித்து விரட்டுவதில் அவர்களுக்கு இயன்ற எல்லா வகைகளிலும் உதவத் தயாராய் இருப்பதாகவும் காங்கிரஸ் அறிவித்தது. வியத்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றித்துச் செயலாற்ற விடாப்பிடியாக முயலும்படியும் வியத்நாமிய மக்களுக்கும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு உள்ளான மற்றவர்களுக்கும் செயலளவில் உதவியும் ஆதரவும் அளிக்கும்படியும் காங்கிரஸ் எல்லாக் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளையும் கேட்டுக்கொண்டது.

ஏகாதிபத்தியவாதிகள் சர்வதேசக் கெடுபிடியைத் தீவிரம் ஆக்கிவரும் நிலைமையில் சோவியத் நாட்டின் தற்காப்புத் திறனை அதிகப்படுத்தி, மற்ற சோஷலிஸ நாடுகளுடன் சேர்ந்து உலக சோஷலிஸ அமைப்பின் கூட்டுப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்வதன் இன்றியமையாமையை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து மூன்றுவது காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சிகளை அதிக விழிப்புடன் கவனித்துவரும்படி அது சோவியத் மக்களை வேண்டிக்கொண்டது.

சோவியத் யூனியனின் உள் நிலைமைகளைக் காங்கிரஸ் விரிவாக ஆராய்ந்தது. ஏழாண்டுத் திட்ட நிறைவேற்றத்தின் விளைவுகளும் சோவியத் மக்களின் பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியிலும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் பெறப்பட்ட வெற்றிகளும் மனநிறைவு தருவதாக அது கூறியது. நாட்டின் தேசீயப் பொருளாதார நிர்வாகத்தின் வடிவங்களையும் முறைகளையும் செவ்வைப்படுத்துவதற்கு மத்தியக் கமிட்டியால் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளையும், திட்ட வகுப்புக்கும் பொருளியல் தூண்டுதலுக்குமான புதிய முறையையும் காங்கிரஸ் ஒரு மனதாக ஆமோதித்தது.

1966 முதல் 1970 வரையுள்ள காலத்தில் தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்கான ஐந்தாண்டுத் திட்டத்திற்குரிய

கட்டளைகளைக் காங்கிரஸ் விவாதித்து ஏற்றுக் கொண்டது. இது சோவியத் நாட்டின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம். அனேக முக்கியமான பொருளாதார, சமுதாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்குக் கட்டளைகள் வகை செய்தன. கனரகத் தொழில் துறையில் மின் ஆற்றல் உற்பத்தி, இயந்திர நிர்மாணம், உலோக வார்ப்பு, இரசாயனத் தொழில் முதலிய மிக முன்னணிக் கிளைகள் தேசீயப் பொருளாதாரம் அனைத்திற்கும் தொழில்நுட்ப நோக்கில் புதிய சாதனங்கள் அளிக்க வல்லவை ஆதலால் அவை எல்லாவற்றுக்கும் முன்னர் வளர்ச்சி பெற வகை செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தியும் உபயோகப் பொருள்களின் உற்பத்தியும் கிட்டத்தட்ட ஒரே வேகத்தில் வளர்ச்சி பெறுவதற்குத் திட்டமிடப்பட்டது. சோவியத் நாட்டின் தொழில்துறை வளர்ச்சித் தரம், மக்களின் உபயோகத்துக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை முன்னிலும் விரைவாக அபிவிருத்தி செய்ய வாய்ப்பு அளித்தது. 1966 முதல் 1970 வரையுள்ள ஆண்டுகளில் மொத்தத்தில் தொழில் பொருள்களின் உற்பத்தியை ஏறத்தாழ ஒன்றரை மடங்கு அதிகரிப்பது என்று இந்தத் திட்டப்படி தீர்மானிக்கப்பட்டது. வேளாண்மைத் துறை ஒரு சீராக இடையறாத வளர்ச்சி பெற வகை செய்வது நோக்கமாக ஏற்கப்பட்டது. மொத்த தானிய விளைச்சலையும் பிற பயிர்களின் விளைச்சலையும் அதிகப்படுத்தும் பொருட்டும் கால்நடை வளர்ப்பை மேம்படுத்தும் பொருட்டும் அரசும் அரசாங்கப் பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் நாட்டின் வரட்சிப் பிரதேசங்களில் பாசனக் கால்வாய்த் தொகுப்புகள் கட்டுவதிலும் ஈரிப்பு மிகுந்த பிரதேசங்களில் நிலத்தைக் காய வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதிலும் நிறையப் பணம் செலவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. கனிய உரங்களின் உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்கவும் வேளாண்மைத் துறைக்குப் புதிய விவசாய இயந்திரங்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டது. சோவியத் மக்களின் வாழ்க்கை வசதிகளை விரைவாக மேம்படுத்துவதற்குப் பெருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் மக்களது நபர்வாரி எதார்த்த வரு

மானம் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு அதிகரித்திருந்தது. நகரங்களிலும் நாட்டுப்புறக் குடியிருப்புக்களிலும் ஐந்தாண்டுக் காலத்தில் ஏறக்குறைய 160 லட்சம் புதிய இருப்பிடப் பகுதிகளும் தனி இல்லங்களும் கட்டுவது என்று திட்டமிடப்பட்டது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கான கட்டஃகளில் பிற சோஷலிஸ நாடுகளுடனும் வளர்ச்சி அடைந்து வரும் இளம் அரசுகளுடனும் சோவியத் அரசின் பொருளாதாரத் தொடர்புகள் பிரதிபலித்தன. இந்த அரசுகளுடன் பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பது முதல்தர முக்கியத்துவம் உள்ளது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இந்தத் துறையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் அரசினதும் நடவடிக்கைகள் உலக சோஷலிஸ அமைப்பைச் சேர்ந்த நாடுகஸ ஒன்றுபடுத்தி சோஷலிஸ அமைப்பின் விறஸ அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஆசிய, ஆப்பிரிக்க இளம் தேசீய அரசுகளின் நிஸயையும் அவற்றின் அரசியல் விடுதஸயையும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் வலுப்படுத்துவதற்கு உதவும் ஆர்வம் இந்த நடவடிக்கைகளில் நிறைந்திருக்கிறது.

கட்சியை வலுப்படுத்துவதிலும் சமூக வாழ்வில் அதன் தஸமைப் பாத்திரத்தை உயர்த்துவதிலும் காங்கிரஸ் மிகுந்த கவனம் செலுத்தியது. தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ஸ விவசாயிகள், அறிவுஜீவிகள் ஆகியோரின் உண்மையான முன்னணிப் பிரதிநிதிகள் கட்சியில் சேர்க்கப்படுவதற்கு வகை செய்யும் பொருட்டு, விதிகளில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர விரும்புபவர்களுக்குப் பரிந்துரை வழங்கும் உறுப்பினர்கள், குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் கட்சி உறுப்பினராக இருந்திருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒருவரைக் கட்சியில் சேர்த்துக் கொள்வதாக ஒரு முதற்படி ஸ்தாபனம் செய்யும் முடிவு, கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சி உறுப்பினரில் குறைந்த பட்சம் மூன்றில் இரண்டு பகுதியினர் இந்த முடிவுக்கு ஆதரவாக வாக்களித்தால்தான் செல்லுபடி ஆகும். இருபத்து மூன்று வயது நிறையப் பெறுத இஸஞர்கள், இளங் கம்யூனிஸ்டுகள்

சங்கத்தின் வாயிலாகவே, கட்சியில் சேரலாம். சங்கத்தின் வட்டாரக் கமிட்டி அல்லது நகரக் கமிட்டியின் பரிந்துரை இதற்குக் கட்டாயமானது.

தலைமை வகிக்கும் கட்சி ஸ்தாபனங்கள் உட்கட்சி ஜனநாயகம் மேலும் வளர்ச்சிஅடைய வகைசெய்யவேண்டும், விமர்சனமும் சுய விமர்சனமும் விரிவாக நடப்பதற்கு ஏற்ற நிலைமைகளை உருவாக்க வேண்டும், கம்யூனிஸ்டுகளின் கருத்துக்களையும் யோசனைகளையும் மதித்து அவற்றின் மீது அதிகக் கவனம் செலுத்த வேண்டும், கட்சிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் விதித்தது. சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கட்சியின் தலைமைக்குரிய முறையையும் வழிகளையும் செவ்வைப்படுத்துவதில் ஆழ்ந்த கவனம் செலுத்தப்பட்டது. ''கம்யூனிஸக் கட்டுமானத்தை வழிகாட்டி நடத்துவதிலும் சோவியத் அரசின் உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதிலும் விஞ்ஞான அணுகு முறையும் கூட்டுத்துவமும் காரியப் பாங்கும் மத்தியக் கமிட்டியின் வேலை முறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. வருங்காலத்திலும் அவையே அதன் எல்லா நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக விளங்க வேண்டும்'' என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கை பற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டது.

கம்யூனிஸ்டுகளின் கொள்கைவாதப் பயிற்சியில் இருபத்து மூன்றுவது காங்கிரஸ் கூர்ந்த கவனம் செலுத்தியது. கட்சியில் புதிய உறுப்பினர்கள் ஏராளமாகச் சேர்ந்திருப்பது, கம்யூனிஸக் கட்டுமானப் பணிகளின் சிக்கல், சர்வதேச அரங்கில் நடக்கும் இரு சமுதாய அமைப்புக்களின் கடும் வர்க்கப் போராட்டம் ஆகிய இவை எல்லாவற்றின் காரணமாகவும் கம்யூனிஸ்டுகளின் மார்க்ஸீய-லெனினீயப் பயிற்சித் தரத்தை மேம்படுத்துவதும் அவர்களது கொள்கைவாத உறுதியை வலுவாக்குவதும் தலைமை ஊழியர்களின் கொள்கை வாத அரசியல் தரத்தை உயர்த்துவதும் இன்றியமையாதவை ஆகிவிட்டன. பகைவர்களின் கொள்கைவாதத்தை அம்பலப்படுத்தி வன்மையாகக் கண்டனம் செய்வதும் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளை எதிர்த்து முறியடிப்பதும் கம்யூனிஸ்டுகளின் கடமையாக இருந்தது.

சோவியத் மக்களுக்குக் கம்யூனிஸத்தின் ஒளி மிக்க ஆதர் சங்களின் பால் ஆர்வமும் உயர்ந்த அரசியல் உணர்வும் உழைப்பின்பால் கம்யூனிஸப் போக்கும் சோவியத் நாட்டுப் பற்றும் சோஷலிஸ சர்வதேசீய உணர்ச்சியும் ஏற்படும் வகை யில் இன்னும் விடாப்பிடியாக அவர்களைப் பயிற்றுவது திர ளான பொது மக்களிடையே கட்சியின் கொள்கைவாத-அர சியல் பணியின் நோக்கமாய் இருக்க வேண்டும் என்று காங் கிரஸ் வலியுறுத்தியது. வளரும் தலைமுறையினரின் பயிற்சி யைச் சரியாக ஒழுங்கமைப்பது சிறப்பாக முக்கியமானது என்று காங்கிரஸ் அழுத்திக் கூறியது. நாள்தோறும் கம்யூ னிஸத்தைப் பயிலும்படியும், உயர்ந்த கம்யூனிஸ உணர்வை வளர்த்துக் கொள்ளும்படியும், கம்யூனிஸத்தின் நன்மைக் காகப் பயனுள்ள வகையில் உழைக்க ஆயத்தம் செய்துகொள் ளும் படியும் கட்சியினுடையவும் சோவியத் மக்களுடையவும் புரட்சி மரபுகளையும் உழைப்பு மரபுகளையும் உரிய வகையில் மதித்துப் பெருக்கும்படியும் இளைஞர்கள் வேண்டிக் கொள்ளப்பட்டார்கள்.

காங்கிரஸுக்குப் பிறகு நடந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம், மத் தியக் கமிட்டியின் அரசியல் அலுவல் குழுவையும் (பொலிட் பியூரோ) செயலர் குழுவையும் தேர்ந்தெடுத்தது. லெ. இ. பிரேழ்னிவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மாபெரும் அக்டோபர் புரட்சியின் பொன் விழாவும் வி.இ. லெனினது நூறுவது பிறந்த நாள் விழாவும்

அனைத்துலக உழைப்பாளிகள் திருநாள்

1967ம் ஆண்டு சோவியத் மக்களின் வாழ்வில் பொன் விழா ஆண்டாக அமைந்தது—மாபெரும் அக்டோபர் சோஷ லிஸப் புரட்சி வெற்றி அடைந்து 50 ஆண்டுகள் நிறைந்து விட்டன. விழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்கை யில் சோவியத் மக்களின் அரசியல், உழைப்பு ஊக்கம் பெருத்த ஏற்றம் பெற்றது. நாடு முழுவதி லும் அனைத்து மக்கள் சோஷலிஸப் போட்டி நடந்தது. ஆலை

களிலும் தொழிற்சாலைகளிலும் புதுக் கட்டுமான இடங்களிலும் போக்குவரத்திலும் கூட்டுப் பண்ணைகளிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் விஞ்ஞான நிறுவனங்களிலும் அலுவலகங்களிலும் ஆக்க வேலை ஊற்றெடுத்துப் பொங்கியது.

அந்த ஆண்டில் சோவியத் மக்கள் குறிப்பிடத்தக்க வெற்றிகள் அடைந்தார்கள். 1967ம் ஆண்டில் உலோக வார்ப்புத் தொழிற்சாலைகள் 10 கோடி டன்னுக்கும் கூடுதலான எஃகு தயாரித்தன. இது உலகு அனைத்தினதும் எஃகு உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு ஆகும். 400 பெரிய தொழில் நிலையங்கள் கட்டப்பட்டன. மின் நிலையங்கள் அந்த ஆண்டு 60,000 கோடி கிலோவாட்-மணி மின் ஆற்றல் உற்பத்தி செய்தன. இது புரட்சிக்கு முந்திய அளவைவிட முன்னூறு மடங்கு அதிகம். சைபீரியாவில் நிறுவப்பட்டுக் கொண்டிருந்த உலகிலேயே ஆகப் பெரிய கிராஸ்னயார்ஸ்க் நீர் மின் நிலையத்தின் முதல் இரண்டு பகுதிகள், தலைக்கு 508 ஆயிரம் கிலோவாட் மின் ஆற்றல் உற்பத்தி செய்தன. தன்பாஸில், ஸ்லாவியான்ஸ்க் மின் நிலையத்தில் 800 ஆயிரம் கிலோவாட் மின்னாற்றல் உற்பத்தி செய்யும் டர்போ-ஜெனரேட்டர் இயங்கத் தொடங்கியது. இவ்வளவு திறன் வாய்ந்த நீராவிட்டர்பைன்களும் டர்போ-ஜெனரேட்டர்களும் அந்தக் காலத்தில் உலகில் வேறு எங்கும் இல்லை.

பொன் விழா ஆண்டில் நாட்டுப்புற உழைப்பாளர்கள் தானியங்களும் சர்க்கரைக் கிழங்கும் காய்கறிகளும் சூரிய காந்தியும் பருத்தியும் நிறைய விளைத்தார்கள். சோவியத் நாட்டில் மாடுகளின் எண்ணிக்கை 9 கோடி 70 லட்சத்தை எட்டி விட்டது. புரட்சிக்கு முன் நாட்டில் இருந்த மாடுகளின் எண்ணிக்கையைவிட இது கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகம் ஆகும். சோவியத் யூனியனில் விவசாய உழைப்பாளர்களின் எண்ணிக்கை அக்டோபர் புரட்சிக்கு முன் இருந்ததில் பாதியாகக் குறைந்து விட்டது, ஆனால் அவர்கள் ஏறத்தாழ மூன்று மடங்கு கூடுதலான பொருள்களை உற்பத்தி செய்தார்கள். 1967ல் கூட்டுப் பண்ணைகளிடமும் அரசாங்கப் பண்ணைகளிடமும் 17 லட்சத்துக்கும் அதிகமான டிராக்டர்களும் ஏறக்குறைய 6 லட்சம் தானிய அறுவடை இயந்திரங்களும் 10 லட்சத்துக்கு மேற்பட்ட லாரிகளும் இருந்தன.

பொன்விழா ஆண்டில் சோவியத் விஞ்ஞானம், சிறப்பாக விண்வெளியை வெற்றி கொள்வதில், அரிய சாதனைகள் நிகழ்த்தியது. அக்டோபர் புரட்சியின் ஐம்பதாண்டு நிறைவு விழாவுக்கு முன் இரண்டு சந்தோஷச் செய்திகள் உலகெங் கும் பரவின: 1967ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ந் தேதி, ''வெள்ளி—4'' என்னும் சோவியத் தானியங்கி நிலையம், வெள்ளிக் கோளின் மேற்பரப்பில் மென்மையாக இறங்கி அமர்ந்தது. அதே ஆண்டு அக்டோபர் 30ந் தேதியன்று விண் வெளிக்கோளப் பாதையில் இரண்டு செயற்கைத் துணைக் கோளங்கள் பூமியிலிருந்து அனுப்பப்பட்ட உத்தரவின்படி ஒன்றோடு ஒன்று இணைந்தன, பின்பு பிரிந்தன.

பொன்விழா ஆண்டில் நடந்த அனைத்து மக்கள் போட்டி யின் விளைவுகளைக் கட்சியும் மக்களும் விழாக் கொண்டாட் டத்துக்கு முன் தொகுத்துப் பார்வையிட்டார்கள். ஆலைகளை யும் தொழிற்சாலைகளையும் நிலக்கரிச் சுரங்கங்களையும் கனியச் சுரங்கங்களையும் மின்நிலையங்களையும் புதுக் கட்டுமான இடங்களையும் கூட்டுப் பண்ணைகளையும் அரசாங்கப் பண்ணை களையும் விஞ்ஞான நிறுவனங்களையும் அலுவலகங்களையும் சேர்ந்த 1000 உழைப்பாளர் குழுக்கள் போட்டியில் வெற்றி பெற்றிருந்தன. மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி யின் பொன்விழாவை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட நினைவுக் கொடிகள் இந்தக் குழுக்களுக்கு வழங்கப்பட்டன.

அக்டோபர் புரட்சி வீரர்களையும் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் உறுப்பினர்களையும் மக்கள் கௌரவித்தார்கள். அக்டோபர் புரட்சியிலும் உள்நாட்டுப் போரிலும் பங்காற்றிய சுமார் 130 ஆயிரம் பெயருக்கு விருதுகளும் பதக்கங்க ளும் வழங்கப்பட்டன. அக்டோபர் புரட்சியிலும் உள்நாட்டுப் போரிலும் சோவியத் ஆட்சியின் தரப்பில் ஊக்கத்துடன் பங்கு கொண்டதற்காக அயல் நாடுகளின் பிரஜைகள் பலருக்கு சோவியத் விருதுகளும் பதக்கங்களும் அளிக்கப் பட்டன. வீர நகர்களான மாஸ்கோவும் லெனின்கிராதும் அக்டோபர் புரட்சி விருதுகள் பெற்றன.

சோதர சோஷலிஸ நாடுகள், வளர்ச்சி அடைந்து வரும் அரசுகள் ஆகியவற்றின் மக்களும், உலகனைத்திலும் உள்ள கம்யூனிஸ்டுகளும் முற்போக்காளர்களும் மாபெரும் அக்டோ

பர் சோஷலிஸப் புரட்சியின் பொன்விழாவை சோவியத் மக்களோடு சேர்ந்து உற்சாகமாகக் கொண்டாடினர்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளும் தேசீய-ஜனநாயகக் கட்சிகளும் பொதுக் கூட்டங்களிலும் சிறப்புக் கூட்டங்களிலும், பத்திரிகைகள், வானொலி, திரைப்படம், நிழற்படக் காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாகவும், அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவத்தையும், சோஷலிஸ, கம்யூனிஸக் கட்டுமானத்தில் சோவியத் மக்கள் புரிந்துள்ள மகத்தான சாதனைகளையும், தொழிலாளர் இயக்கத்துக்கும் தேசீய விடுதலை இயக்கத்துக்கும் ஆதரவாக, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அவர்கள் நடத்திவரும் வீரப் போராட்டத்தையும் பற்றித் தங்கள் நாட்டு உழைப்பாளி மக்களுக்கு விரிவாக விளக்கின.

சோவியத் மக்களின் வாழ்க்கையையும் அவர்களுடைய வெற்றிகளையும் நேரில் கண்டு தெரிந்து கொள்வதற்காக அயல்நாடுகளிலிருந்து பற்பல பிரதிநிதிக் குழுக்களும் சமூக, அரசுத் தலைவர்களும் பொன்விழா ஆண்டில் சோவியத் நாட்டுக்கு வருகை தந்தார்கள். அவர்கள் பல நகரங்களையும் கிராமங்களையும் சுற்றிப் பார்த்தார்கள், சர்வதேச விழாக் கொண்டாட்டக் கூட்டங்களிலும் மகாநாடுகளிலும் கலந்து கொண்டார்கள்.

ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவற்றின் 107 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிக் குழுக்கள் அக்டோபர் விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு சோவியத் யூனியனுக்கு வந்தன. சோவியத் மக்கள் அன்புக்குரிய விருந்தினரை ஆழ்ந்த மரியாதையுடன் வரவேற்று, விருந்தினரின் உளமார்ந்த வாழ்த்துக்களுக்காகவும் சோவியத் தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளிகளும் ஆற்றிய புரட்சித் தொண்டுகளை அவர்கள் மதித்ததற்காகவும் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் பொன்விழாவை ஒட்டி மாஸ்கோவில் பெரிய கொண்டாட்டக் கூட்டம் நடை பெற்றது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத், ருஷ்யக் கூட்டுக் குடியரசின் சுப்ரீம் சோவியத் ஆகியவற்றின் அங்கத்தினர்களும் கட்சியின் முது

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் பொன் விழாக் கொண்டாட்டத்தின் போது 1967 நவம்பர் 7ந் தேதி மாஸ்கோ நகரில் சோவியத் படையினரின் அணிவகுப்பு. லெனின் சமாதி மேடைமீது கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசுத் தலைவர்கள் நி. வ. பத்கோர்னி, லெ. இ. பிரேழ்னிவ், அ. நி. கஸீகின் ஆகியோரும் சோவியத் யூனியன் தற்காப்பு அமைச்சர் அ. அ. கிரேச்கோவும்

பெரும் ஊழியர்களும் அக்டோபர் புரட்சியில் பங்காற்றிய வர்களும் அயல் நாட்டு விருந்தினரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லெ. இ. பிரேழ் னிவ், ''சோஷலிஸத்தின் மாபெரும் வெற்றிகள் நிகழ்ந்த ஐம்பது ஆண்டுகள்'' என்னும் தலைப்பில் உரை ஆற்றினார். சோஷலிஸ நாடுகள், கம்யூனிஸ்ட் கட்சிகள், இளம் தேசீய அரசுகள், தேசீய - ஜனநாயகக் கட்சிகள் ஆகிய வற்றின் பிரதிநிதிகள் சோவியத் மக்களுக்கும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அக்டோபர் புரட்சியின் புகழ்வாய்ந்த பொன்விழா குறித்தும் கம்யூனிஸக் கட்டு

மானத்தில் அவர்கள் பெற்றுள்ள வெற்றிகள் குறித்தும் வாழ்த்து கூறினர்கள்.

அக்டோபர் புரட்சியின் பொன்விழாக் கொண்டாட்டம், உலகனைத்தின் புரட்சிச் சக்திகளதும், அக்டோபர் புரட்சியின் கருத்துக்களையும் குறிக்கோளையும் அடிப்படையாகக் கொண்ட அவற்றின் சர்வதேச ஒற்றுமையினதும் காட்சியாக விளங்கியது.

சோஷலிஸத்தின் மாபெரும் வெற்றிகள் நிகழ்ந்த ஐம்பது ஆண்டுகள்

அக்டோபர் புரட்சி வெற்றி அடைந்து அரை நூற்றாண்டு கழிந்த பின்னர், லெனினது கட்சியின் தலைமையில் ருஷ்யாவின் தொழிலாளர்களும் உழைப்பாளி விவசாயிகளும் நிறுவிய, வரலாற்றில் முதலாவது சோஷலிஸ அரசு — சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியன்—நிலவி, வளர்ந்து, வெற்றிமேல் வெற்றி அடைந்து வருகிறது.

அக்டோபர் புரட்சி, சுரண்டும் வர்க்கங்களை ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றிவிட்டு, மக்கள் ஆட்சியை—சோவியத்



ராக்கெட்டுகளின் அணிவலம்

ஆட்சியை — நிலை நாட்டியது. சோவியத் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ச்சி அடைந்து செவ்வைப்பட்டது சோஷலிஸ ஜனநாயகம். பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசாகத் தோன்றிய சோவியத் அரசு, தொழிலாளி வர்க்கம் தலைமைப் பாத்திரம் வகிக்கும் அனைத்து மக்கள் அரசு ஆகிவிட்டது. தொழிலாளர்களும் விவசாயிகளும் அறிவு ஜீவிகளும் சமூக, அரசு விவகாரங்கள் எல்லாவற்றையும் தாங்களே நிர்வகிக்கிறார்கள். சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் நாட்டில் ஆட்சியின் உச்ச உறுப்பாக விளங்குகிறது. அதன் உறுப்பினரில் கிட்டத்தட்டப் பாதிப் பெயர் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆவர். சோவியத் யூனியனின் எல்லா மக்கள் இனங்களும் சுப்ரீம் சோவியத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள்.

அக்டோபர் புரட்சி கம்யூனிஸத்துக்குச் செல்லும் பாதையை உழைப்பாளிகளுக்குத் திறந்து விட்டது. இந்தப் பாதையில் முன்னேறிய சோவியத் மக்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வரலாற்றில் முதன் முதலாக, புதிய, சோஷலிஸ சமூகத்தை நிறுவினர்கள். இப்போது அவர்கள் கம்யூனிஸத்துக்குப் பரிணமிப்பு நிகழ்த்தி வருகிறார்கள். சோவியத் மக்களின் அரை நூற்றாண்டுக் கால ஆக்க வேலையின் மொத்த விளைவு, அவர்கள் சாதித்த அருஞ்செயல் இதுவே.

வீர மக்களின் தாயகமான சோவியத் நாடு, சோஷலிஸத்தால் புதுமையும் அடிப்படை மாற்றமும் பெற்று, முழு விறலும் மாட்சியும் விளங்க மனித குலத்தின் முன் காட்சி அளிக்கிறது. மனிதச் செயல்துறைகள் எல்லாவற்றிலும் சோஷலிஸம் முதலாளித்துவத்தைக் காட்டிலும் எவ்வளவோ மேலானது என்பதை அது காட்டுகிறது.

சோவியத் யூனியனின் சோஷலிஸப் பொருளாதார அமைப்பு பொருளாதாரத்தின் வளர்ச்சியில் முதலாளித்துவத்தைவிடத் தான் மேலானது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றிக் காட்டிவிட்டது. முன்பு ஒப்புநோக்கில் பின்தங்கியிருந்த நாட்டை சோவியத் மக்கள் அரை நூற்றாண்டுக் காலத்தில் திறன் மிக்க தொழில்துறையும் இயந்திரமயம் ஆக்கப்பட்ட பெரு வேளாண்மைத் துறையும் கொண்ட, மிகுந்த வளர்ச்சி அடைந்த சோஷலிஸ அரசாக மாற்றிவிட்டார்கள்.

பொருளாதார வளர்ச்சி இடையறுத, விரைந்த வேகத்தில் நடப்பதற்கு சோஷலிஸம் வகை செய்கிறது. 1929 முதல் 1967 வரையுள்ள காலத்தில் தொழில் உற்பத்தியின் ஆண்டுச் சராசரி வளர்ச்சி சோவியத் யூனியனில் 11 சதவிகிதத் துக்குக் கூடுதலாக இருந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இது 4 சதவிகிதமாகவும் பிரிட்டனிலும் பிரான்ஸிலும் 2.5 சதவிகிதமாகவும் இருந்தது. ஜார் ஆட்சி ருஷ்யா 1913ல் உலகத் தொழில் பொருள்களில் ஏறக்குறைய 4 சதவிகிதம் உற்பத்தி செய்தது. 1967ல் சோவியத் யூனியன் 1913ம் ஆண்டைக் காட்டிலும் 73 மடங்கு அதிகத் தொழில் பொருள்களை உற்பத்தி செய்தது. உலகனைத்திலும் உற்பத்தி யான தொழில் பொருள்களில் கிட்டத்தட்ட 20 சதவிகிதம், அதாவது சுமார் ஐந்தில் ஒரு பங்கு, அது உற்பத்தி செய்தது.

சோஷலிஸம் உழைப்பாளிகளின் வாழ்க்கை அடிப்படையில் மேம்படுவதற்கும் அவர்களுடைய வாழ்க்கை வசதிகள் இடை விடாது உயர்வதற்கும் வகை செய்கிறது என்பதை சோவியத் நாட்டின் அரை நூற்றாண்டு வரலாறு நம்பிக்கையூட்டும் விதத்தில் நிரூபித்து விட்டது. சுரண்டும் வர்க்கங்கள் எல்லா வற்றையும் ஒழித்ததும் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முடிவு கட்டியதும் சமுதாய உறவுத் துறையில் சோஷ லிஸம் பெற்ற முதன்மையான வெற்றி ஆகும். சோவியத் சமூகத்தில் சலுகை பெற்ற வர்க்கங்களோ சமுதாயக் குழுக்களோ இல்லை. வேலை இல்லாமையோ வறுமையோ அதிலே இல்லை. ''திறமைக்கேற்ற உழைப்பு, வேலைக்கேற்ற ஊதியம்'' என்னும் சோஷலிஸக் கோட்பாடு ஒவ்வொரு சோவியத் மனிதருக்கும் உழைக்கும் உரிமையையும் பொருள் வசதி பெறும் உரிமையையும் உறுதிப்படுத்துகிறது.

சோஷலிஸ சமூகம் மனிதன் பிறந்த நாள் முதல் அவனது வாழ்வின் கடைசி நாட்கள்வரை அவன் விஷயத்தில் அக் கறை எடுத்துக் கொள்கிறது. பள்ளிப் பருவம் அடையாத குழந்தைகளைப் பராமரிப்பதற்குக் கணிசமான பணம் செல விடப்படுகிறது. 1967ம் ஆண்டில், 90 லட்சம் குழந்தைகள், அதாவது, தொழிலாளர்கள், அலுவலர்களின் (பள்ளிப் பருவம் அடையாத) குழந்தைகளில் அனேகமாகக் கால்வாசிப் பெயர், குழந்தைகள் இல்லங்களிலும் தோட்டப் பள்ளிக ளிலும் பராமரிக்கப்பட்டார்கள்.

ஏழு வயது நிறைந்த எல்லாக் குழந்தைகளும் பள்ளிசெல்கிறார்கள். அங்கே அவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த வாலிபர்கள், மகளிரில் நான்கில் ஒருவருக்குக் கல்லூரிகளில் தொடர்ந்து பயிலும் வாய்ப்பு கிட்டுகிறது. இவற்றிலும் கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. மேற்கொண்டு கல்லூரி மாணவர்களில் கணிசமான பகுதியினருக்கு அரசு உதவிச் சம்பளம் கொடுக்கிறது. முப்பது லட்சம் பள்ளி ஆசிரியர் களுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் அரசின் செலவில் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

உயர்நிலைப் பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்த பின் ஓர் இளைஞன் உழைப்பு வாழ்க்கையில் அடி வைத்ததும் அவனுக்கு வேலையும் அதற்கேற்ற ஊதியமும் கிடைக்க வகை செய்யப்படுகிறது. தொழிலாளர்களும் அலுவலர்களும் வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை செய்கிறார்கள், இரண்டு நாட்கள் ஓய்வு கொள்கிறார்கள். உழைப்பாளிகளின் எதார்த்த வருமானம் ஆண்டு தோறும் அதிகரிக்கிறது. புரட்சிக்கு முந்திய தரத்துடன் ஒப்பிடும்போது தொழிலாளர்களின் வரு மானம் 6.5 மடங்கும் விவசாயிகளின் வருமானம் 8.6 மடங் கும் அதிகரித்துள்ளன. கணிசமான எண்ணிக்கையில் தொழி லாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களும் ஊதியத்தின் அல் லது வருவாயின் சிறு சதவிகிதமே வரியாகச் செலுத்த வேண்டி இருக்கிறது.

சோவியத் நாட்டில் ஆண்களுக்கு 60 வயதும் பெண்க ளுக்கு 55 வயதும் நிறைந்ததும் அவர்கள் ஓய்வுச் சம்பளம் பெறுகிறார்கள். சோஷலிஸம் சோவியத் மக்களுக்கு முது மைக் காலப் பராமரிப்பை உறுதிப்படுத்துகிறது. சோவியத் முறைப்படி எல்லாத் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக் கும் கூட்டுப் பண்ணையினருக்கும் ஓய்வுச் சம்பளம் கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. போரிலும் உழைப்பிலும் வேலைத் திறன் இழந்தவர்களுக்கும், பிள்ளைப் பிராயத்தில் வேலைத் திறனை இழந்தவர்களுக்கும் ஓய்வுச் சம்பளம் பெற உரிமை உண்டு. 1967ம் ஆண்டில் 3 கோடி 40 லட்சம் பெயர், அதாவது, சோவியத் குடிகளில் ஏழில் ஒரு பகுதியினர் ஓய்வுச் சம்பளம் பெற்றார்கள்.

சோவியத் நாட்டின் மக்கள் அனைவரும் இலவச மருத்துவ உதவி பெறுகிறார்கள். எல்லா மருத்துவப் பணியினருக்கும் சம்பளம் வழங்குவதும் மருத்துவ நிலையங்களைப் பேணிக் காப்பதும் அரசின் பொறுப்பு. சோவியத் மக்களின் உடல் நலப் பாதுகாப்பில் ஆறு லட்சம் மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர். மக்கள் தொகையில் நானூறு பெயருக்கு ஒருவர் வீதம் மருத்துவர்கள் இருக்கிறார்கள். நாட்டின் இயற்கை வனப்பு வாய்ந்த இடங்களில் ஆயிரக்கணக்கான உடல் நல விடுதிகளும் ஓய்வு விடுதிகளும் தங்கு விடுதிகளும் கட்டப் பட்டுள்ளன. உழைப்பாளிகள் இவற்றில் விடுமுறை நாட்களைக் கழிக்கிறார்கள், சிகிச்சை பெறுகிறார்கள், உடல் நலத்தை வலுப்படுத்திக் கொள்கிறார்கள்.

சோவியத் மக்களின் ஆயுட்காலம் அதிகரித்திருப்பதும் குழந்தைச் சாவு விகிதம் குறைந்திருப்பதும் மக்களின் உடல் நலத்துக்கு ஒளிமிக்க சான்றுகளாக விளங்குகின்றன. புரட்சிக்கு முன்பு மக்களின் சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகள் மட்டுமே. இப்போதோ, அது 70 ஆண்டுகளை எட்டி விட்டது. குழந்தைச் சாவு விகிதம் கடந்த அரை நூற்றாண்டில் பத்து மடங்கு குறைந்திருக்கிறது.

சோஷலிஸம் உழைப்பாளி மக்களின் நலன்களுக்கு உகந்த வாறு இருப்பிடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது. கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் சோவியத் யூனியனில் அரசின் நிதிகளையும் மக்களின் பணத்தையும் கொண்டு 200 கோடி சதுர மீட்டருக்கு மேல் இடப் பரப்புள்ள வீடுகள் கட்டப் பட்டுள்ளன. யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் மட்டுமே நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்டக் கால்வாசிப் பெயர் புது வீடுகளில் குடியேறி இருக்கிறார்கள். சோவியத் நாட்டில் வீட்டு வாடகை தொழிலாளர்கள், அலுவலர்களின் சம்பளத்தில் 4, 5 சதவிகிதம் ஆகும்.

அக்டோபர் புரட்சியும் சோஷலிஸத்தின் வெற்றியும் சோவியத் மக்களுக்கு உயர் கல்வியும் அறிவுத் தேர்ச்சியும் பெறும் வாய்ப்பை அளித்தன. புரட்சிக்கு முந்திய ருஷ்யா, மக்களின் எழுத்தறிவுத் தரத்தில் முதலாளித்துவ நாடுகளுக்கிடையே கடைசி இடங்களில் ஒன்றைப் பெற்றிருந்தது. அதன் குடிகள் நால்வரில் மூவர் எழுத்தறிவு அற்றவர்களாக இருந்தார்கள். அரை நூற்றாண்டில் மக்களின் பண்

பாட்டு வாழ்வில் எல்லாம் அடியோடு மாறிவிட்டன. இப் போது சோவியத் நாட்டின் மக்கள் உலகில் எல்லோரிலும் கல்வித் தேர்ச்சி மிக்கவர்கள் ஆவர். சோவியத் யூனியனில் வேலை செய்பவர்களில் பாதிப் பெயருக்கு மேல் கல்லூரிப் படிப்பும் முழுமையான அல்லது முழுமையற்ற உயர்நிலைப் பள்ளிப் படிப்பும் பெற்றிருக்கிறார்கள். சோவியத் நாட்டில் தேர்ச்சி பெற்ற நிபுணர்களும் விஞ்ஞான ஊழியர்களும் பெருத்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இவர்கள் புதிய சோவியத் அறிவுஜீவிகள், சோஷலிஸ உற்பத்தியையும் விஞ் ஞானத்தையும் பண்பாட்டையும் முன்னே இட்டுச் செல் பவர்கள். சோவியத் யூனியனில் உருவாக்கப்பட்டுள்ள சோஷ லிஸப் பண்பாடு, மனிதகுலத்தால் பல்லாயிரம் ஆண்டுக் காலத்தில் படைக்கப்பட்ட எல்லாச் சிறந்த, முற்போக்கு அம்சங்களையும் தன்னுள் ஏற்றுக் கொண்டிருக்கிறது. விஞ் ஞானக் கம்யூனிஸக் கருத்துக்களால் உணர்ச்சி ஊட்டப்பட் டுள்ள சோஷலிஸப் பண்பாடு சோவியத் மக்களுக்குக் கம்யூனிஸப் பயிற்சி அளிப்பதற்குரிய முக்கிய சாதனமாக விளங்குகிறது. அது மனிதகுலம் அனைத்தினதும் ஆன்மிக வாழ்வை வளப்படுத்திப் புதிய மட்டத்துக்கு உயர்த்துகிறது.

சோவியத் யூனியனின் மக்கள் இனங்கள் ஒன்றித்த சோதரக் குடும்பமாக ஒற்றுமைப்படுத்தப்பட்டிருப்பது, அக்டோபர் புரட்சியின் ஐம்பது ஆண்டுகளுடையவும் சோஷலிஸத்தின் வெற்றியுடையவும் முக்கிய விளைவாகத் திகழ்கிறது. சோவியத் யூனியனின் எல்லா நாட்டினங்களும் மக்களினங் களும் நவீன முற்போக்கின் தரத்துக்கு உயர்ந்து விட்டன. இவற்றில் பல, அதிக வளர்ச்சி அடைந்த சோவியத் மக்கள் இனங்களின் சோதர உதவியால், தந்தைவழி-குல ஆட்சி அமைப்பிலிருந்து, உழைப்பாளிகளுக்குத் துன்பம் தருவதான முதலாளித்துவக் கட்டத்தில் புகாமலே, நேராக சோஷலிஸத் துக்கு ஒரு தலைமுறையின் வாழ்வுக் காலத்துக்குள் வந்து சேர்ந்துவிட்டன. சோவியத் நாட்டினங்களதும் மக்கள் இனங் களதும் உருவம் அடியோடு மாறிவிட்டது. எல்லா நாட்டினக் குடியரசுகளும் பொருளாதாரம், பண்பாடு, விஞ்ஞானம் ஆகியவற்றின் வளர்ச்சியில் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்துள்ளன. தொழிலாளர்களும் அறிவுஜீவிகளும் உரு

வாகி வளர்ந்திருக்கிறார்கள். கூட்டுப் பண்ணை அமைப்பின் நிலைமைகளில் விவசாயிகள் மாறிவிட்டார்கள். சோவியத் யூனியனின் எல்லா மக்கள் இனங்களும் சோஷலிஸத்தின் நலங்களைச் சம அளவில் அனுபவிக்கின்றன.

அக்டோபர் புரட்சி **மக்கள் இனங்களுக்கு இடையே சமாதானத்தைப் பிரகடனம் செய்தது.** சோஷலிஸமும் சமாதானமும் பிரிக்க முடியாதவை. எல்லா மக்கள் இனங்களதும் சம உரிமை, பிற நாடுகளின் அரசுரிமைக்கு மதிப்பு, அவற்றின் உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையை சோவியத் அரசாங்கம் அக்டோபர் புரட்சி நிறைவுற்ற நாள் முதல் கடைப்பிடித்து வருகிறது. சோவியத் யூனியன் சமாதானத்தின் அரணுகவும் உலகின் சமாதானப்பற்றுள்ள சக்திகள் அனைத்தையும் ஈர்த்து ஒன்றுபடுத்தும் மையமாகவும் விளங்குகிறது. அக்டோபர் புரட்சியால் பெற்ற நலங்களைக் காக்கும் பொருட்டும் சோஷலிஸத்தின் வெற்றிக்காகவும் சோவியத் மக்கள் விறல் மிக்க சைனியத்தை அமைத்துள்ளனர். சோவியத் சேனை மக்களின் அமைதி நிறைந்த உழைப்பை நம்பகமாகக் காக்கிறது. மற்ற சோஷலிஸ அரசுகளின் சேனைகளோடு சேர்ந்து அது அவற்றின் மக்களது பாதுகாப்புக்கு வகை செய்கிறது.

சோவியத் நாடு **ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டக் கொடியை** முதன் முதலில் உயர்த்தியது, ஏகாதிபத்தியத்துக்கு வலுவான அடி கொடுத்தது. முதலாளித்துவ உலகம் முதலாவது சோஷலிஸ அரசு நிலவுவதை அமைதியாக ஏற்க விரும்பவில்லை, அதை நசுக்க முயன்றது. ஆனால் இந்த முயற்சிகள் யாவும் படு தோல்வியில் முடிந்தன. இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளில் சோவியத் யூனியன் மனித குலத்தை பாசிஸத்தின் அடிமை ஆவதிலிருந்து காத்தது. சோவியத் யூனியனின் அயல்நாட்டுக் கொள்கையை நடத்தும் கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிச் சக்திகளையும் சமாதானப் பற்றுள்ள சக்திகளையும் மக்களின் விடுதலையையும் சுதந்திரத்தையும் தீவிரமாக ஆதரிக்கிறது. சோவியத் யூனியன் உலக சமாதானத்தைக் காக்கும் விறல்மிக்க காரணியாகவும் புதிய உலக யுத்தத்தை மூட்டிவிட ஏகாதிபத்தியம் செய்யும்

ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்குப் பெருத்த தடையாகவும் விளங்குகிறது. பிறருடைய பிரதேசங்களைக் கைப்பற்றவும் பிற மக்களை அடிமைப்படுத்தவும் ஆக்கிரமிப்பாளர்கள் கொண்டுள்ள பேராசையை அது அடக்குகிறது.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி ஆழ்ந்த சர்வதேசத் தன்மை உள்ளது. மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிக்கும் சகாப்தத்தை அது தொடங்கி வைத்தது. அக்டோபர் புரட்சி உலக வளர்ச்சிப் போக்கு அனைத்தின் மீதும் உலகப் புரட்சி நிகழ்முறை மீதும் பெருத்த செல்வாக்கு செலுத்தியது, செலுத்தி வருகிறது. அதன் வெற்றிக்குப் பிறகு கழிந்துள்ள அரை நூற்றாண்டுக் காலத்தில், பெருமளவு அக்டோபர் புரட்சிக் கருத்துக்களும் சோஷலிஸத்தின் வெற்றிகளும் ஏற்படுத்திய செல்வாக்கின் விளைவாக, உலகு அனைத்தினதும் உருவம் மாறிவிட்டது, உலகில் சக்திகளின் ஒப்புநிலை அடிப்படையில் மாறியிருக்கிறது.

1917 அக்டோபரில் உலகத்தில் சில லட்சம் கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள். அரை நூற்றாண்டுக் காலத்தில் கம்யூனிஸம் விறல்மிக்க சக்தி ஆகி விட்டது. இப்போது உலகின் பெரும்பாலான நாடுகளில், அதன் மக்கள் வாழும் ஐந்து கண்டங்களிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன. இவற்றின் உறுப்பினர் தொகை ஐந்து கோடி ஆகும். ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும், மக்கள் சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் பரிணமிப்பதற்காகவும் திரளான உழைப்பாளிகள் நடத்தும் போராட்டத்திற்குத் தலைமை ஏற்றுள்ளன கம்யூனிஸ்ட் கட்சிகள்.

1917 அக்டோபரில் சோஷலிஸ நாடாக இருந்தது ருஷ்ய சோவியத் குடியரசு ஒன்று மட்டுமே. உலகின் ஆறில் ஐந்து பகுதி நிலப்பரப்பில் ஏகாதிபத்தியம் ஆட்சி செலுத்திவந்தது. அரை நூற்றாண்டுக் காலத்தில் சோஷலிஸம் தனது எல்லைகளைக் கணிசமாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. இப்போது சோஷலிஸ நாடுகளின் விறல் மிக்க உலக அமைப்பு நிலவுகிறது. மனிதகுலத்தின் மூன்றில் ஒரு பகுதியினர் இந்த நாடுகளில் வாழ்ந்து புது வாழ்வை நிறுவிக் கொண்டிருக்கிறார்கள்.



மாஸ்கோ. செஞ்சதுக்கம். அவர்கள்
லெனினை வணங்கச் செல்கிறார்கள்

1917 அக்டோபரில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் முதல் படைப்பிரிவான ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் மூலதனத்தின் கோட்டையைத் தாக்க முற்பட்டது. அதன் வீர முயற்சியும் புகழ்வாய்ந்த வெற்றியும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் எல்லாப் படைப் பிரிவுகளுக்கும் உற்சாகம் ஊட்டின. அக்டோபர் புரட்சியின் அனுபவத்தையும் கருத்துக்களையும், மார்க்ஸீய-லெனினீயத்தையும் அவை ஏற்றுக் கொண்டன. கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட நடவடிக்கைகள் விரிவாக நடக்கின்றன. அதன் ஒழுங்கமைப்பும் ஏகபோக மூலதனத்தின் மீது அதன் அடிகளின் வன்மையும் அதிகரித்து வருகின்றன.

1917 அக்டோபரில் உலகின் பெரும் பகுதி காலனி ஆதிக்கத் தளைகளில் பிணிப்புண்டிருந்தது. 150 கோடி மக்கள் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் துன்பம் உழன்றார்கள். தேசிய விடுதலைப் போராட்டம் அப்போதுதான் முளை விட்டிருந்தது. அக்டோபர் புரட்சிக் கருத்துக்கள், சோஷலிஸத்தின் வெற்றி ஆகியவற்றின் செல்வாக்கினால் அது கோடானு கோடி மக்களின் பேரியக்கமாக மாறிவிட்டது. இவர்கள்

காலனி ஆட்சி அமைப்பைத் தகர்த்து நொறுக்கி விட்டார்கள். அதன் இடத்தில் உதயம் ஆயின 70 தேசிய அரசுகள். காலனி ஆட்சியின் கடைசி அரண்களைத் தாக்கி நொறுக்கும் போராட்டம் தொடர்ந்து நடக்கிறது.

முதலாளித்துவம் தகர்ந்து சிதறுவதும் மனிதகுலம் சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதும் தவிர்க்க முடியாது நிகழும் என்று முன்கண்டு உரைத்தார் முதலாவது வெற்றிகரமான சோஷலிஸப் புரட்சியின் தலைவரும் ஒழுங்கமைப்பாளருமான மாமனிதர் லெனின். அவரது மேதை வாய்ந்த தீர்க்க தரிசனம் உண்மை ஆகி வருகிறது.

லெனினியப் பதாகையின் கீழ்

அக்டோபர் புரட்சியின் வெற்றியும் சோவியத் யூனியனிலும் சோஷலிஸ நட்பு மண்டலத்தைச் சேர்ந்த நாடுகளிலும் சோஷலிஸத்தின் மாபெரும் வெற்றிகளும் **லெனினியத்தின் வெற்றி** ஆகும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தவர், மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியைத் தூண்டி ஒழுங்கமைத்தவர், உலகின் முதலாவது தொழிலாளர்கள், விவசாயிகளின் சோஷலிஸ அரசை—சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் யூனியனை—ஸ்தாபித்தவர் ஆகிய விளாதிமிர் இலியீச் லெனினது நூறுவது பிறந்த நாள் 1970 ஏப்ரலில் வந்தது.

லெனினுடைய நூறுவது பிறந்த நாள் விழா சோவியத் யூனியனிலும் பிற சோஷலிஸ நாடுகளிலும் விரிவாகவும் சிறப்பாகவும் கொண்டாடப்பட்டது. எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகளும் தொழிலாளர் கட்சிகளும் தேசிய-ஜனநாயகக் கட்சிகளும் முற்போக்காளர்களும் இந்தத் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்கள்.

இந்தப் பெருநாள் கொண்டாட்டத்துக்கு முன்னேற்பாடாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி விரிவான கொள்கைவாத-அரசியல் பயிற்சி இயக்கம் நடத்தியது. எல்லாக் கம்யூனிஸ்டுகளும் நாட்டு மக்கள் அனைவரும் இதில் ஊக்கத்துடன் பங்கு கொண்டார்கள். கட்சிக் கமிட்டிகள் லெனினது வாழ்க்கையையும் செயல்களையும் ஆராய்ந்து கற்கவும், லெனினுடைய நூல்களைப் படிக்கவும் எங்கும் ஏற்பாடுகள் செய்தன, கண்காட்சிகளும் சித்தாந்தக் கருத்தரங்குகளும்

மகாநாடுகளும் நடத்தின. லெனினைக் குறித்த வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் திரைப்பட விழாக்களும் நடத்தப்பட்டன. லட்சக் கணக்கான சோவியத் மக்கள் லெனின் பொருட்காட்சிச் சாலைக்கும் லெனின் சமாதிக்கும் சென்றார்கள். விளாதீமிர் இலியீச் லெனின் பிறந்த உல்யானவ்ஸ்க் நகரில், லெனினது நினைவை என்றும் பசுமையாக வைத்திருக்கும் நோக்கத்துடன் எழுப்பப்பட்டிருக்கும் லெனின் நினைவுச் சின்னத்தை லட்சக் கணக்கான சோவியத் குடிகளும் அயல் நாட்டு விருந்தினரும் விழா நாட்களில் பார்வையிட்டார்கள்.

லெனினுடைய மேதை வாய்ந்த நூல்களும் கணக்கற்ற பத்திரங்களும் அவர் விட்டுச் சென்றிருக்கும் விலை மதிப்பற்ற சித்தாந்த உடைமை ஆகும். சோவியத் யூனியனில் இவை பதினாயிரம் தடவைகளுக்கு மேல் மீண்டும் மீண்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப் பிரதி எண்ணிக்கை சுமார் 35 கோடி ஆகும். உலக மக்களின் 117 மொழிகளில் லெனினுடைய நூல்களின் பல பத்துக் கோடிப் பிரதிகள் வெளியாகி இருக்கின்றன. எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்கள் அவற்றை ஆழ்ந்து படிக்கிறார்கள், அவற்றிலிருந்து அறிவு திரட்டுகிறார்கள், அவற்றின்படி வாழவும் போராடவும் கற்கிறார்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி, சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத், ருஷ்ய சோவியத் சோஷலிஸக் கூட்டுக் குடியரசின் சுப்ரீம் சோவியத் ஆகியவற்றின் விழாக் கூட்டம், விளாதீமிர் இலியீச் லெனினது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் பொருட்டு 1970, ஏப்ரல் 21ந் தேதி மாஸ்கோவில் நடைபெற்றது. ஏராளமான அயல் நாட்டு விருந்தினர்—சோஷலிஸ அரசுகள், இளம் தேசிய அரசுகள், கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள், தேசிய ஜனநாயகக் கட்சிகள், இடது சாரி சோஷலிஸ்ட் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த பிரபல முற்போக்குத் தலைவர்களும்—விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லெ. இ. பிரேழ்னிவ், ''லெனினது குறிக்கோள் வாழ்கிறது, வெற்றி பெறுகிறது'' என்ற தலைப்பில் உரை ஆற்றினார்.

மாபெரும் சிந்தனையாளரும் புரட்சி வீரரும் ஆன லெனினது பெயருடனும் செயல்களுடனும் மனித குல வாழ்வின் புரட்சி சகாப்தம் அனைத்தும் தொடர்பு கொண்டிருப்பதை லெ. இ. பிரேழ்னிவ் தமது உரையில் குறிப்பிட்டார். மனித குல வரலாற்றில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்கு அடிப்படைத் திருப்பம் லெனினது பெயருடன் தொடர்பு கொண்டிருக்கிறது. இந்தத் திருப்பத்துக்கு அடிகோலியது ருஷ்யாவில் நடந்த மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி லெனினுல் நிறுவப்பட்ட நாள் முதல் அவரது போதனையை இடைவிடாது பின்பற்றியது. லெனினீயப் பதாகையை அது உயர்த்திப் பிடித்திருக்கிறது, உலகு அனைத்தின் தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளி மக்களுக்கும் தனது சர்வதேசீயக் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றிவருகிறது. லெனினது சித்தாந்த முடிவுகள் சரியானவை என்று நிரூபித்த மாபெரும் அக்டோபர் புரட்சியின் வெற்றி, சோவியத் யூனியனில் சமூகம் லெனின் முன்கூட்டி வகுத்த திட்டப்படி புரட்சிகரமாக மாற்றி அமைக்கப்பட்டது, நாட்டில் எல்லா மக்கள் இனங்களும் பிளவுபடுத்த முடியாத சோதரக் குடும்பமாக ஒன்றிணைக்கப்பட்டது, சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் வெற்றியும் கம்யூனிஸ சமூகத்தைக் கட்டி அமைப்பதில் முன்னேற்றமும் —இவை எல்லாம் லெனினீயத்தின் பெரு வெற்றியாக விளங்குகின்றன. இன்றளவும் வாழ்க்கையில் எதிர்ப்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்கையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி லெனினது வளம் மிக்க கருத்துச் செல்வத்தை எப்போதும் துணையாகக் கொள்கிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, லெனினீயப் பதாகையில் கீழ் சோவியத் மக்களைக் கம்யூனிஸத்தின் வெற்றிக்கு நம்பிக்கையுடன் இட்டுச் செல்கிறது.

லெனின் மார்க்ஸீயத்தை வளப்படுத்திப் படைப்புத் தன்மையுடன் விரிவுபடுத்தினர். மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்துக்குப் பரிணமிப்பதற்குரிய முழுமையான சித்தாந்தத்தை அவர் உருவாக்கினர். லெனினீயம் தற்கால உலகில் யாவற்றிலும் முற்போக்கான, செல்

வாக்கு உள்ள, வெல்ல முடியாத கொள்கைவாதம் ஆகும். விரிவான மக்கள் திரளுக்குப் புரட்சி உணர்வு ஊட்ட வல்லது அது. உலக விடுதலை இயக்கப் பெருக்குகள் எல்லாவற்றையும் சர்வதேச நோக்கில் ஒன்றுக இணைப்பது அது. சமூக வளர்ச்சி குறித்தும் உலகைப் புரட்சி வாயிலாக மாற்றி அமைப்பது குறித்தும் எழும் மிக மிக உடனடிப் பிரச்சினைகளுக்கு விடைகளை உலகு அனைத்திலும் உள்ள கோடானு கோடிப் போராட்ட வீரர்கள் லெனினியத்தில் காண்கிறார்கள். ஏகாதிபத்தியத்தையும் சமுதாய, நாட்டின ஒடுக்கு முறையையும் எதிர்த்து, மக்கள் இனங்களின் இன்பத்துக்காகப் போராடுவோர் அனைவரும் லெனினை, அவரது போதனையை, அறிவும் அனுபவமும் நிறைந்த செல்வக் கருவூலமாக விளங்கும் அவரது மேதை வாய்ந்த படைப்புக்களை எப்போதும் வழிகாட்டியாகக் கொள்கிறார்கள்.

சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் லெனினியப் பதாகையின் கீழ் புதிய ஏற்றம் பெற்றது. இந்த இயக்கத்தின் சந்ததியாகவும் அரணுகவும் விளங்கும் சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் புரட்சி, விடுதலை இயக்கத்துக்கு ஆதரவு அளித்தும் வருகிறது. தொழிலாளி வர்க்கம் புரட்சிச் சக்திகளின் போராட்ட முன்னணிப் படையாகவும் ஏகபோக முதலாளித்துவத்தின் முதன்மையான, வல்லமை மிக்க எதிராளியாகவும் விளங்குகிறது என்பது மார்க்ஸீய-லெனினீயத்தின் பிரதான முடிவு. முதலாளித்துவ உலகில் வர்க்கப் போராட்டம் தீவிரம் அடைந்துவருவதும் பாட்டாளி வர்க்க இயக்கம் ஏற்றம் பெற்றுவருவதும் இந்த முடிவை முழுமையாக உறுதிப்படுத்துகின்றன.

லெனினுடைய கருத்துக்கள் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் மேலும் மேலும் விரிவாகப் பரவி வருகின்றன. புரட்சிப் போராட்ட வீரர்களின் புதிய புதிய அணிகள் லெனினியப் பதாகையின் கீழ் ஒன்று திரண்டுவருகின்றன. இளம் தேசிய அரசுகளின் உழைப்பாளி மக்கள் லெனினையும் அவரது வாழ்க்கையையும் செயல்களையும் பற்றி அவரது நூறுவது பிறந்த நாள் விழா ஆண்டான 1970ல் சிறப்பாக நிறையத் தெரிந்து கொண்டார்கள். தேசிய-ஜனநாயகக் கட்சிகள் லெனினைப் பற்றிக் கொண்டாட்டக் கூட்டங்கள் நடத்தின, பத்

திரிகைகளில் அவரைப் பற்றிக் கட்டுரைகள் வெளியிட்டன, அவருடைய நூல்களின் கண்காட்சிகள் நடத்தின, லெனினைப் பற்றிய திரைப்படங்கள் காட்ட ஏற்பாடு செய்தன. சோவியத் யூனியனிலிருந்து தருவிக்கப்பட்ட செய்திப் படத்தில் இந்த நாடுகளின் மக்கள் உயிர்த்து நடமாடும் லெனினது உருவத்தை முதன் முதலாகக் கண்டார்கள். உழைப்பாளி மக்களை முதலாளித்துவ ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பதற்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இனங்களுக்குக் காலனி ஆட்சியாளர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அளிப்பதற்குமான போராட்டத்திற்குத் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த லெனின்மீது இந்த மக்கள் ஆழ்ந்த அன்பு கொண்டார்கள்.

வி. இ. லெனினது நூறுவது பிறந்த நாள் கொண்டாட்டக் கூட்டத்தில் உரை ஆற்றுகையில் லெ. இ. பிரேழ்னிவ் கூறினார்: ''லெனினுடைய பெயர் ஒடுக்குமுறையையும் உரிமை இன்மையையும் சுரண்டலையும் எதிர்த்துப் போராடுவதற்கு அழைக்கும் ஆவேசமுள்ள அறைகூவலாக, போராட்ட ஒற்றுமையின் சின்னமாக, கம்யூனிஸ ஆதர்சங்களின் வெற்றியின் பொருட்டு நடை பெறும் போராட்டத்தில் செல்வதற்கான உத்தரவாதமாக முழங்காத இடம் உலகின் எந்த மூலையிலும் இல்லை.''

உலகக் கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் முன்னணியில்

மாபெரும் அக்டோபர் புரட்சியின் பொன் விழா, முற்போக்குக்கும் பிற்போக்குச் சக்திகளுக்கும், சோஷலிஸ, ஏகாதிபத்தியச் சக்திகளுக்கும் இடையே போராட்டம் கடுமையாக நடந்து கொண்டிருக்கையில் கொண்டாடப் பட்டது. உலகப் புரட்சி இயக்கம் தாக்குதலைத் தொடர்ந்தது. ஆனால் ஏகாதிபத்தியம் விளைத்த அபாயங்களும் அதிகரித்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்புத் தன்மை தீவிரம் அடைந்தது. உலகு பரவிய சுரண்டு

கம்யூனிஸ இயக்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தும் முயற்சி

வோன், அரசியல் போலீஸ்காரன் என்ற வகையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உருவம் முன்னிலும் அதிகத் துலக்கமாக வெளிப்படலாயிற்று. எந்த முறைகளைக் கையாண்டேனும் சோஷலிஸத்தின் நிலைகளைப் பலவீனப்படுத்தவும், முதலாளித்துவ நாடுகளில் உழைப்பாளிகளின் போராட்டத்துக்கு இடர்கள் விளைக்கவும், தேசிய விடுதலை இயக்கத்தை நசுக்கவும், இளம் தேசிய அரசுகள் முன்னேற்றப் பாதையில் வளர்ச்சி அடைவதற்கு முட்டுக்கட்டை போடவும் ஏகாதிபத்தியம் முயன்றது. சமாதானத்துக்கு அது ஆபத்து விளைத்தது. தனது ஆக்கிரமிப்புக் கொள்கையின் கூர்முனையை ஏகாதிபத்தியம் சோஷலிஸ அரசுகளுக்கு எதிராகத் திருப்பியது. வியத்நாமில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இராணுவத் தலையீடு இதைக் காட்டியது.

கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளில் திரிபுவாதமும், வலதுசாரி, ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதமும் தேசியவாதமும் புகுந்து கொண்டதன் விளைவாக இயக்கத்தில் இடர்ப்பாடுகள் நேர்ந்தன. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் ஒன்றிணைவதற்கும் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கும் இவை தடையாயிருந்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், 1960ல் நடந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாட்டினால் வகுக்கப்பட்ட கொள்கைப் போக்கைக் கடைப்பிடிக்க மறுத்து விட்டார்கள். அவர்களுடைய இந்த நிலையும் மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகள் மீது அவர்களுடைய முரட்டுத்தனமான தாக்குதல்களும் உலகு அனைத்திலும் உள்ள கம்யூனிஸ்டுகளைக் கலவரத்துக்கு உள்ளாக்கின. மார்க்ஸீய-லெனினீயத்தையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் உறுதியாகக் காத்து நின்ற சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் மத்தியக் கமிட்டியையும் சீனத் தலைவர்கள் தனிப்பட்ட வன்மத்துடன் தாக்கினார்கள். சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்துக்கும் சோஷலிஸ நாடுகளின் நட்புறவுக்கும் உலகப் புரட்சி இயக்கம் முழுவதற்கும் இது பெரும் கேடு விளைத்தது, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் பொது முன்னணியைப் பலவீனப்படுத்தியது.

புதிய வாய்ப்புக்களை அதிகத்திலும் அதிகமாகப் பயன்படுத்தி ஏகாதிபத்தியத்தின் மீதும் பிற்போக்குச் சக்திகள்,

யுத்தச் சக்திகள் மீதும் இன்னும் விரிவான தாக்குதல் நடத்தும் பொருட்டுக் கம்யூனிஸ்டுகளும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் ஒன்றித்துச் செயல்படுவது, உருவாகி இருந்த சூழ்நிலையில் அவசியமாய் இருந்தது. இந்தப் பிரச்சினைகளை முழு அளவில் ஆராய்ந்து, கூட்டான கருத்துப் பரிமாற்றத்தின் அடிப்படையில் ஒன்றித்த செயல் திட்டத்தை வகுப்பது, கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாட்டினால்தான் முடியக் கூடியதாக இருந்தது. 1966ல் நடந்த சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து மூன்றாவது காங்கிரஸ் இத்தகைய மகாநாடு கூட்டுவதற்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்தது. காங்கிரஸ் நிறைவுற்ற பின் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் பல சோதரக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இந்தப் பிரச்சினையை விவாதித்தார்கள். மகாநாடு பற்றிக் கூட்டாகக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் பொருட்டு 1968 ஆரம்பத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தும் படி சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உள்படப் பதினெட்டு கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் 1967 நவம்பரில் எல்லாக் கட்சிகளுக்கும் வேண்டுகோள் விடுத்தன.

அறுபத்தைந்து கட்சிகளின் பிரதிநிதிகளுடைய ஆலோசனைக் கூட்டம் 1968ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டில் நடந்தது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தின் உடனடிப் பணிகளையும், கம்யூனிஸ்டுகளும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும் ஒன்றித்துச் செயல்படுவதையும் பற்றி விவாதிக்கும் பொருட்டுப் புதிய சர்வதேச மகாநாடு கூட்டுவதை ஆதரித்து இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தார்கள். அவர்கள் முன்னேற்பாட்டுக் குழு ஒன்று அமைத்தார்கள், மகாநாட்டுக்கு முன்னேற்பாடு செய்வதற்கான எல்லா வேலைகளையும் கூட்டாக, சம உரிமையுள்ள, ஜனநாயக அடிப்படையில் நடத்துவது என்று ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். முன்னேற்பாட்டுக் குழு, கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளிலிருந்து வந்த யோசனைகளை ஆராய்ந்து பொதுமைப்படுத்தி மகாநாட்டுப் பத்திரங்களின் நகல்களைத் தயாரித்தது.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு 1969 ஜூன் மாதம் மாஸ்கோவில் நடை பெற்றது. எழுபத்தைந்து கட்சிகளின் பிரதிநிதிக் குழுக்கள் அவற்றின் தலைவர்களின் தலைமையில் மகாநாட்டில் கலந்து கொண்டன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லெ. இ. பிரேழ்னிவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிக் குழுவுக்குத் தலைமை ஏற்றார். பொதுப் பிரச்சினைகளைக் கூட்டாக ஆராய்ந்து ஒன்றித்த கொள்கைத் திட்டத்தைக் கூட்டாக வகுக்கும் உணர்வு மகாநாட்டு நடவடிக்கைகளில் ஊறித் ததும்பியது. சோதர ஒத்துழைப்பும் விரிவான கருத்து வெளியீடும் நிறைந்த சூழ்நிலையில் மகாநாடு நடந்தேறியது. உலகு அனைத்தின் கவனமும் அதன் மீது ஒருமுனைப்பட்டிருந்தது. மகாநாட்டின் தோல்வியை விரும்பிய பகைவர்களின் நம்பிக்கைகள் அடியோடு வீழ்ந்தன. மக்கள் இனங்களின் சமாதானத்துக்கும் விடுதலைக்கும் சுயாதீனத்துக்கும் முதல் பகைவனான ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவது, கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளை ஒற்றுமைப்படுத்துவது என்ற பிரச்சினைகள் மகாநாட்டினது கவனத்தின் மையமாக விளங்கின. எல்லாக் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிப் பிரதிநிதிகளும் இந்தப் பிரச்சினைகள் பற்றித் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்கள். முதன்மையாக வியத்நாமிலும் அரபு நாடுகளின் மக்களுக்கு எதிராகவும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இடைமுறிக்கும் பொருட்டு ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும், சமாதானத்தை உறுதிப்படுத்தி, புதிய உலக யுத்தம் மூளாமல் தடுக்க வேண்டும், மார்க்ஸீய-லெனினீய, பாட்டாளி வர்க்க சர்வதேசீயக் கோட்பாடுகளின் அடிப்படையில் கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்ற விருப்பம் அவர்களுடைய உரைகளில் நிறைந்திருந்தது.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு

லெ. இ. பிரேழ்னிவின் உரையை மகாநாட்டுப் பிரதிநிதிகள் ஆழ்ந்த கவனத்துடன் செவிமடுத்தார்கள். தற்கால

சர்வதேச வாழ்வின் முக்கியப் பிரச்சினைகள் குறித்தும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் குறித்தும், உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளையும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைப்பது குறித்தும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையை லெ. இ. பிரேழ்னிவ் விவரித்தார். இவற்றின் ஒற்றுமையை வலுப்படுத்தவும் இவற்றைச் செயலுக்கு ஊக்கவும் தற்போதைய சூழ்நிலை சாதகமாய் இருக்கிறது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி எண்ணுகிறது என்றூர் அவர். உலக சோஷலிஸ அமைப்பையும் தொழிலாளர் இயக்கத்தையும் தேசிய விடுதலை இயக்கத்தையும் எல்லா வகையிலும் அபிவிருத்தி செய்வதும் எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளை இன்னும் நெருக்கமாக ஒற்றுமைப்படுத்துவதும் பொதுப் புரட்சி நிகழ்முறையில் அவர்களுடைய முன்னணிப் பாத்திரத்தை உயர்த்துவதும் இதற்கு இன்றியமையாதவை. பாட்டாளி வர்க்க சர்வதேசியம், உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் அணிகளது ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கும் அவற்றை ஒன்றிணைப்பதற்கும் உரிய, சோதித்து அறியப்பட்ட சாதனமாக எப்போதும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. சோவியத் கம்யூனிஸ்டுகளும் சோவியத் மக்கள் அனைவரும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் புரட்சிச் சக்திகளின் பொதுப் போராட்டத்தில் தங்கள் சர்வதேசீயக் கடமையை எவ்வாறு நிறைவேற்றுகிறார்கள் என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதிக் குழு சோதரக் கட்சிகளுக்கு எடுத்துரைத்தது. வருங்காலத்திலும் அவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டப் பணிகளின் நிறைவேற்றத்தில் அதிகரித்த பங்கு ஆற்றுவார்கள் என்றும் சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை, சோஷலிஸம் ஆகியவற்றை இடைவிடாது காத்துவருவார்கள் என்றும் அது சோதரக் கட்சிகளுக்கு உறுதி கூறியது.

கம்யூனிஸ இயக்கத்தில் திரிபுவாதத்தையும் வலதுசாரி, ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதத்தையும் தேசியவாதத்தின் வெளிப்பாட்டையும் எதிர்த்துப் போராடும் பிரச்சினையை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிக் குழு கடுமையாகவும் கோட்பாட்டு முறையிலும் எழுப்பியது. சீனு

பற்றிய தன் நிலையையும் அது விவரித்தது. சீனத் தலைவர்களின் லெனினிய விரோதக் கருத்துப் போக்குக்களையும் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளையும் சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் எதிர்த்து சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டம் நடத்துகிறது, நடத்திவரும். சோவியத் மக்களின் நலன்களுக்கும் சோவியத் யூனியனின் பாதுகாப்புக்கும் தீங்கு நேராமல் காப்பதற்குத் தேவையான எல்லாவற்றையும் அது செய்கிறது, செய்து வரும். சோவியத் மக்களதும் சீன மக்களதும் அடிப்படை நலன்கள் ஒன்றோடொன்று பொருந்துகின்றன என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக நம்புகிறது. சோவியத் மக்கள் சீன மக்கள் பால் கொண்டிருக்கும் நட்பு உணர்ச்சிகளைப் பாதுகாத்துப் பேண அது வருங்காலத்திலும் முயற்சி செய்துவரும். சோவியத் யூனியனின் மக்கள்பாலும் பிற சோஷலிஸ நாடுகளின் மக்கள் பாலும் சீன மக்களும் நட்பு உணர்ச்சிகள் கொண்டுள்ளனர் என்பதில் சந்தேகம் இல்லை.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு, கம்யூனிஸ, தொழிலாளர் இயக்கங்களதும் விடுதலை இயக்கம் அனைத்தினதும் பெருத்த வெற்றியாக விளங்கியது. உலகு அனைத்திலும் உள்ள மிக விரிவான மக்கள் திரள்களின் ஒன்றித்த செயல்பாட்டின் அடிப்படையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராட்டத்தைப் பரவலாகத் தொடங்கி வைக்கும் பெருத்த நிகழ்ச்சியாக இருந்தது இது. ''தற்போதையக் கால கட்டத்தில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டப் பணிகளும் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளதும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளதும் செயல் ஒற்றுமையும்'' என்னும் முக்கியமான பத்திரத்தை மகாநாடு ஏற்றுக் கொண்டது. ''விளாதிமிர் இலியீச் லெனினது நூறுவது பிறந்த நாள் விழா பற்றிய'' செய்தியை அது மிகுந்த உற்சாகத்துடன் ஆமோதித்தது. ''சமாதானத்தைக் காப்பதற்கான வேண்டுகோள்'' விடுத்து, ''வியத்நாமுக்கு சுயாதீனமும் விடுதலையும் சமாதானமும்!'' என்ற கோஷத்தை அது கிளப்பியது. இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக அரேபிய மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரிக்கும் அறிக்கையையும், சர்வதேச ஏகாதிபத்தியத்தின்

ஆதரவு பெற்ற சர்வாதிகார அரசாங்கங்களுக்கு எதிராகக் கொடும் அடக்குமுறைகளைப் பொருட்படுத்தாமல் தன்னலம் அற்ற போராட்டம் நடத்திவரும் கம்யூனிஸ்டுகளுடனும் ஜனநாயகவாதிகளுடனும் சோதர ஒருமைப்பாட்டை வெளியிடும் அறிக்கையையும் மகாநாடு ஏற்றுக் கொண்டது. தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் புரட்சி, சோஷலிஸ, சமாதான, தேசீய விடுதலை இயக்கச் சக்திகளே உலக வளர்ச்சியின் பிரதானப் போக்கை முன்போன்று நிர்ணயித்து வருகின்றன என்பதை அடிப்படையாகக் கொண்டு மகாநாடு செயல் பட்டது. மகாநாடு வகுத்த கொள்கைத்திட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இந்தச் சக்திகளின் போராட்டத்துக்கு அதிக ஒருமுனைப் பாட்டை அது அளித்தது. இந்தப் போராட்டத்தைப் புதிய மட்டத்துக்கு உயர்த்தி, ஏகாதிபத்தியத்தை விஞ்சவும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையையும் யுத்தக் கொள்கையையும் தோற்கடிக்கவும் அது வல்லது ஆகுமாறு செய்ய இந்தக் கொள்கைத் திட்டம் முயன்றது.

ஏகாதிபத்தியத் தலையீட்டை நிறுத்தவும் அமெரிக்கப் படைகளை வியத்நாமிலிருந்து விரட்டவும் வீர வியத்நாமிய மக்கள் நடத்திய போராட்டத்தில் அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவியும் ஆதரவும் அளிப்பது ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் நடவடிக்கைகளது உடனடியான நோக்கமாக இருந்தது. சமாதானத்தைப் பாதுகாப்பதும் யுத்த அபாயத்துக்கு எதிராகப் போராடுவதும் உலக அணுக்கரு யுத்தம் மூளாது தவிர்ப்பதும் அவற்றின் பிரதான லட்சியமாக விளங்கியது. வெவ்வேறு சமூக அமைப்புக்கள் கொண்ட அரசுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிப்பதும் ஆக்கிரமிப்புச் செயல்களை இடை முறிப்பதும் ஏகாதிபத்திய அரசுகளின் படைப் பெருக்கத்தை நிறுத்துவதும் அணுக்கரு ஆயுதங்கள் பரவ விடாமல் தடுப்பதும் இந்த ஆயுதங்கள் கையாளப்படுவதற்குத் தடை விதிப்பதும் இராணுவக் கூட்டணிகளைக் கலைப்பதும் இன்றியமையாதவையாக இருந்தன.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு ஏகாதிபத்திய

எதிர்ப்புப் போராட்டத்தில் நிர்ணயகர சக்தியாக விளங்குகிறது. ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறும் வழியை சோஷலிஸம் மனித குலத்துக்குக் காட்டியது. சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பு தோன்றியதும் சோஷலிஸத்தின் ஊக்கமூட்டும் செல்வாக்கும் வரலாற்று நிகழ்முறையை விரைவுபடுத்துவதற்கு ஏற்ற முதனிலைகளை உருவாக்கின, சோஷலிஸம் முன்னேறுவதற்கும் வெற்றி பெறுவதற்கும் சாதகமான புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தின. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் பொதுக் குறிக்கோளின் நிறைவேற்றத்துக்கு உலக சோஷலிஸ அமைப்பு ஆற்றும் பங்கு முதன்மையாக அதன் வளர்ந்துவரும் பொருளாதார, இராணுவ வலிமையால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வலிமையை ஆதாரமாகக் கொண்டு உலக சோஷலிஸ அமைப்பு ஏகாதிபத்தியத்துக்குத் தளை பூட்டுகிறது, புரட்சி எதிர்ப்பை ஏற்றுமதி செய்ய அதற்குள்ள வாய்ப்பைக் குறுக்குகிறது. எல்லா வகையான விடுதலைப் போராட்டத்துக்கும் உலக சோஷலிஸ அமைப்பின், முதன்மையாக சோவியத் யூனியனின் ஈடற்ற ஆதரவு கிடைத்துவருகிறது. உலக சோஷலிஸ அமைப்பை எல்லா வகையிலும் வலுப்படுத்தும்படியும் சோஷலிஸ அரசுகளின் தேசிய, சர்வதேசியப் பணிகளைச் சரியாக ஒருங்கிணைக்கும்படியும் அவற்றின் சோதரப் பரஸ்பர உதவியையும் பரஸ்பர ஆதரவையும் வளர்க்கும்படியும் சோஷலிஸ நாடுகளின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளை மகாநாடு கேட்டுக் கொண்டது. சோஷலிஸத்தைக் காப்பது எல்லா நாடுகளையும் சேர்ந்த கம்யூனிஸ்டுகளின் சர்வதேசக் கடமை ஆகும்.

முதலாளித்துவ நாடுகளில் முதன்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாகத் திகழ்கிறது தொழிலாளி வர்க்கம். அதன் புரட்சி நடவடிக்கைகளின் செல்வாக்கினுல் உழைக்கும் விவசாயிகளும் அறிவுஜீவிகளும் இளைஞர்களும் செயல்முறைப் போராட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். தற்போதையச் சூழ்நிலை இந்த சக்திகள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஒன்று சேர உதவுகிறது. ஏகபோகங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான ஒன்றித்த நடவடிக்கைகளின்போது அவை தங்கள் ஏகாதிபத்திய அரசாங்கங்களின் ஆக்கிரமிப்புத் திட்டங்களைக் குலைக்கவும் பொருளாதார

தில் ஏகபோகங்களின் பங்கைக் குறுக்கவும் பெருமூலதனத் தின் ஆட்சிக்கு முடிவு கட்டவும் அடிப்படையான அரசியல், பொருளாதார மாற்றங்கள் நிகழ்த்தவும் சோஷலிஸத்துக் கான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குச் சாதக மான நிலைமைகளை உருவாக்கவும் வல்லமை பெறுகின்றன.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக் களது ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் பங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இளம் தேசிய அரசுகள் பெருத்த எண்ணிக்கையில் உதயமாகிவிட்ட ஆசியாவிலும் ஆப்பிரிக்கா விலும் தேசிய விடுதலை இயக்கம் புதிய கட்டத்தில் அடி வைத் திருக்கிறது. அரசியல் சுதந்திரத்தை நிலைப்படுத்திக் காப்ப தோடு கூட, பொருளாதாரப் பின்தங்கிய நிலையை அகற்றி, சுதந்திர தேசியப் பொருளாதாரத்தை நிறுவுவதும் இவற்றில் பல அரசுகளுடைய சமூக வளர்ச்சியின் மையப் பிரச்சினைகள் ஆகிவிட்டன. அவை, புதுக் காலனி ஆதிக்கத்துடனும் உள் நாட்டுப் பிற்போக்குச் சக்திகளுடனும் போராடி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டி இருக்கிறது. முற்போக்கு அரசாங்கங்கள் உள்ள நாடுகள் மீதும் முதலாளித்துவம் அற்ற வளர்ச்சிப் பாதையில் முன்னேறும் நாடுகள் மீதும் ஏகாதிபத்தியம் தனிப்பட்ட பகைமை பாராட்டுகிறது. காலனி ஆட்சிக்கும் புதுக் காலனி ஆதிக்கத்துக்கும் எதிராகத் தென் ஆப்பிரிக்க நாடுகளின் மக்கள் நடத்திவரும் போராட் டம் பெருத்த முக்கியத்துவம் உள்ளது. லத்தீன் அமெரிக்க மக்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகாதிபத்தியத்துக்கும் கொடுங்கோல் சர்வாதிகார அரசாங்கங்களுக்கும் எதிராக வீரப் போராட்டம் நிகழ்த்தி வருகிறார்கள். உண்மையான தேசிய அரசுரிமையும் பொருளாதார சுதந்திரமும் பெறு வதற்காக அவர்கள் நடத்தும் போராட்டம் முதலாளித் துவச் சுரண்டலுக்கு எதிரான வர்க்கப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்திருக்கிறது. இந்தப் போராட்டத்தில் பாட் டாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளும் மேலும் மேலும் பெரிய பங்கு ஆற்றி வருகின்றன.

சோஷலிஸ அமைப்புக்கும் தொழிளாளர் இயக்கத்துக் கும் தேசிய விடுதலை இயக்கத்துக்கும் இடையே ஐக்கியம் வலுப்படுவது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின்

வருங்கால வாய்ப்புக்களுக்கு முதற்படி முக்கியத்துவம் உள்ளது என்று மகாநாடு வலியுறுத்தியது.

கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் மகாநாடு உலகு அனைத்திலும் உள்ள உழைப்பாளிகளுக்குப் பின்வரும் போராட்ட அறைகூவல் விடுத்தது:

''சோஷலிஸ நாடுகளின் மக்களே, முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளிகளே, அனைத்து ஜனநாயகச் சக்திகளே, விடுதலை பெற்றுவிட்டவர்களும் ஒடுக்கப்பட்டு இருப்பவர்களுமான மக்களே, ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், சமாதானம், தேசிய விடுதலை, சமுதாய முன்னேற்றம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றுக்காகவும் நடக்கும் பொதுப் போராட்டத்தில் ஒன்று சேருங்கள்!''

மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒன்றித்த முன்னணியாக இணைந்து போராடத் தாங்கள் கொண்டுள்ள தீர்மானத்தை உறுதிப்படுத்தினர்கள். இதற்காக, முற்போக்கும் தேசபக்தியும் சமாதானப் பற்றும் உள்ள எல்லாச் சக்திகளுடனும் ஒத்துழைக்கத் தாங்கள் தயார் என அவர்கள்அறிவித்தார்கள். அதோடு, ஜனநாயக மாற்றங்களின் பொருட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடக்கும் போராட்டம் சோஷலிஸத்திற்கான போராட்டத்தின் அங்கம், இன்றியமையாத கட்டம் எனக் கம்யூனிஸ்டுகள் கருதுவதாக அவர்கள் கூறினர்கள்.

இந்த மகாநாடு, கம்யூனிஸ இயக்கத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தும் பாதையில் முக்கியமான கட்டமாக விளங்கியது. சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள், நோக்கங்களின் பொதுமையும் மார்க்ஸீயம்-லெனினீயம் என்ற ஒரே சித்தாந்தமும் கம்யூனிஸ இயக்கத்தின் ஒற்றுமைக்கு அடிப்படை ஆகும். மார்க்ஸீய-லெனினீயத்துக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கும் விசுவாசம் கடைப்பிடிப்பது கம்யூனிஸ்டுகள் தங்கள் வரலாற்று முக்கியத்துவம் உள்ள குறிக்கோள்களை அடைவதில் வெற்றி பெற உத்தரவாதமாக விளங்குகிறது. தங்கள் கட்சிகள் புரட்சிக் கோட்பாடுகளை உறுதியுடன் காக்கும் என்றும், வலதுசாரி, ''இடதுசாரி'' சந்தர்ப்பவாதிகளின் சித்தாந்த, கொள்கைத் திரிபுகளுக்கு எதிராகவும் திரிபுவாதத்துக்கும் வரட்டுச் சூத்திர

வாதத்துக்கும் இடதுசாரிப் பிரிவினரின் துர்ச்சாகசப் போக்குக்கும் எதிராகவும் போராடும் என்றும், தொழிலாளர் இயக்கத்திலும் விரிவான மக்கள் திரள்கள் இடையிலும் இளைஞர்கள் இடையிலும் விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களைப் பரப்பும் என்றும் மார்க்ஸீய-லெனினீயத்தின் வெற்றியின் பொருட்டு விடாப்பிடியாக முயற்சி செய்யும் என்றும் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அறிவித்தார்கள்.

மகாநாட்டில் அங்கீகரிக்கப் பெற்ற ''விளாதீமிர் இலியீச் லெனினது நூறுவது பிறந்த நாள்'' பற்றிய செய்தியில் இந்தத் திருநாளின் உலக வரலாற்று முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. லெனினது பெயர் மாபெரும் அக்டோபர் புரட்சியினது வெற்றிச் சின்னமாகவும், உலகின் சமுதாய உருவத்தை அடியோடு மாற்றிவிட்டவையும் சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நோக்கி மனிதகுலத்தின் திருப்பத்தைக் குறிப்பவையும் ஆன மிகப் பெரிய புரட்சிச் சாதனைகளின் சின்னமாகவும் திகழ்கிறது. உலக சோஷலிஸம், தொழிலாளர் இயக்கம், தேசீய விடுதலை இயக்கம் ஆகியவற்றின் அனுபவம் அனைத்தும் மார்க்ஸீய-லெனினீயத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தி இருக்கிறது. லெனினது போதனை சர்வ வல்லமை உள்ளது, ஏனெனில் அது சரியானது.

லெனின் சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் மதிப்புக்குரிய தலைவர். லெனினீயப் பதாகையின் கீழ் தொழிலாளர் இயக்கம் பெரும்பாலான நாடுகளில் புதிய மட்டத்துக்கு உயர்ந்தது. கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாகி வலுப்பெற்றன. சர்வதேசக் கம்யூனிஸ இயக்கம் உண்மையில் உலகு பரவிய, தற்காலத்தின் செல்வாக்கு மிக்க அரசியல் சக்தியாக மாறிவிட்டது.

லெனின் எல்லா ஒடுக்கப்பட்ட நாட்டினங்களுடையவும் நண்பர். ஏகாதிபத்தியத்துக்கும் காலனி ஆட்சி முறைக்கும் எதிராக மக்கள் இனங்களின் விடுதலைக்காகவும் சுயாதீனத்துக்காகவும் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமைக்காகவும் வெற்றிகரமான போராட்டம் நடத்தும் வழியை அவர் காட்டினார்.

மாமனிதர் லெனினுடைய கருத்துக்களும் அவருடைய நூல்களும், கம்யூனிஸ்டுகளுக்கும் உலகைப் புரட்சிகரமாகப்

புதுக்கி அமைக்க முயல்வோர் அனைவருக்கும், சோஷலிஸம், சமாதானம் ஆகியவற்றின் பொருட்டுப் பிற்போக்குக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராக அவர்கள் நடத்தும் போராட்டத்தில் உணர்ச்சி ஊட்டும் வற்றாத ஊற்றாக விளங்குகின்றன. லெனினீயத்தைக் கற்பது, சமூக வாழ்வின் நிகழ்ச்சிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் தற்போதையக் காலக் கட்டத்தின் புரட்சி வாய்ப்புக்களை இன்னும் தெளிவாகக் காணவும் இளம் தலைமுறையினருக்கு உதவுகிறது.

கம்யூனிஸ்டுகள் அனைவருக்கும் சமூகத்தை சோஷலிஸ முறையில் மாற்றி அமைக்கப் போராடுவோர் அனைவருக்கும், முன்னேற்றத்தையும் சமாதானத்தையும் ஆதரிப்போர் அனைவருக்கும் மகாநாட்டினர் பின்வரும் வேண்டுகோள் விடுத்தனர்:

''எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளர்களே, உலகு அனைத்தினதும் மக்களே!

சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை, சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டுத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் உயர் நோக்குள்ள மாபெரும் போராட்டத்தில் ஊக்கத்துடன் பங்கு கொள்ளுமாறு லெனினுடைய ஆதர்சங்களின் வெற்றியின் பொருட்டு உங்களை அழைக்கிறோம்!''

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து நான்காவது காங்ரஸ்

1971ம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் முறையான இருபத்து நான்காவது காங்கிரஸ் மாஸ்கோவில் கூடியது. அதன் நிகழ்ச்சிகளில் ஏறக்குறைய ஐயாயிரம் பிரதிநிதிகள், 145 லட்சம் கம்யூனிஸ்டுகளின் சார்பில் கலந்து கொண்டார்கள். 91 உலக நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர், தேசிய-ஜனநாயக, இடதுசாரி சோஷலிஸ்ட் கட்சிகளின் 102 பிரதிநிதிக் குழுக்கள் வந்தன. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, சமாதானத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் சோஷலிஸத்துக்காகவும் போராடும் சர்வதேசச் சக்திகளின் அனைத்துலக ஒருமைப்பாட்டையும் போராட்ட ஒற்றுமையையும் துலக்கமாகக் காட்டியது இந்தக் காங்கிரஸ்.



சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ்

காங்கிரஸினது கவனத்தின் மையமாகத் திகழ்ந்தது கட்சி மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கை. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லெ. இ. பிரேழ்னிவ் இந்த அறிக்கையை சமர்ப்பித்துப் பேசினார். அறிக்கை நாட்டின் சர்வதேச, உள் நிலைமையை மார்க்ஸீய-லெனினீய நோக்கில் பகுத்து ஆராய்ந்தது. சோவியத் மக்களின் வெற்றிகள் அதில் காட்டப்பட்டிருந்தன, சமூகத்தின் வருங்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் நிர்ணயிக்கப் பட்டிருந்தன, கம்யூனிஸக் கட்டுமானத்தின் சித்தாந்த, நடைமுறைப் பிரச்சினைகள் விளக்கப்பட்டிருந்தன. மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கையை எல்லாக் கோணங்களிலிருந்தும் விவாதித்த பின்னர், கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் கொள்கைப் போக்கையும் நடைமுறைச் செயல்களையும் காங்கிரஸ் ஒரு மனதாக, முழுமையாக ஆமோதித்தது. இவ்வாறு அது கட்சியினதும் சோவியத் மக்கள் அனைவரதும் சித்தத்தை வெளியிட்டது.

மத்தியக் கமிட்டியின் வெளி நாட்டுக் கொள்கை பற்றிய செயல்களைக் காங்கிரஸ் உயர்வாக மதித்தது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து மூன்றுவது காங்கிரஸுக்குப் பின் கழிந்த ஐந்து ஆண்டுகளில் யுத்த அபாயக் கரு மேகங்கள் பல முறை உலகத்தொடு வானத்தில் கவிந்தன. ஆயினும் உலக யுத்தப் பெருந்தீ மூளாமல் தவிர்க்க முடிந்தது என்றால் அதற்குரிய பெருமை சோவியத் அரசையும் அதன் ஒத்திசைந்த சமாதானக் கொள்கையையுமே சாரும்.

சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பினது ஒற்றுமையையும் வளர்ச்சியையும் சோதர சோஷலிஸ நாடுகளுடன் உறவையும் குறித்த பிரச்சினைகள் மீது சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டி எப்போதும் கவனம் செலுத்தி வந்தது. சில இடர்களும் சிக்கல்களும் இருந்தாலும் இந்தத் திசைகளில் காரியம் இடைவிடாது முன்னேறியது. சோதர நாடுகளுடன் ஒத்துழைப்பு எல்லாத் துறைகளிலும் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று வலுவடைந்தது.

விரைந்த பொருளாதார, விஞ்ஞானதொழில்நுட்ப வளர்ச்சியும் சோஷலிஸப் பண்பாட்டின் மலர்ச்சியும் உழைப்

பாளி மக்களது பொருளியல் நல்வாழ்வின் ஏற்றமும் செப்ப மாக ஒருங்கிசைந்த வளம் கொழிக்கும் அரசாக ஒவ்வொரு சோதர நாடும் விளங்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி யும் சோவியத் மக்களும் விரும்புகிறார்கள். எல்லா சோஷ லிஸ நாடுகளும் புதிய சமூகத்தை நிறுவிக் காப்பவர்களும் தங்கள் அனுபவச் செல்வத்தை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்பவர்களுமான மக்களின் நட்பார்ந்த குடும்பமாகத் திகழ வேண்டும் என அவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, தங்கள் சமுதாய, தேசீய விடுதலையின் பொருட்டுப் போராடும் மக்களுக்கு ஆதர வாக ஏகாதிபத்தியத்தை இடைவிடாது தீவிரமாக எதிர்த்து வருகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இரு பத்து நான்காவது காங்கிரஸால் ஏற்கப் பட்ட ''இந்தோசீன மக்களுக்கு விடுதலையும் சமாதானமும்!'' என்ற செய்தியும் ''அண்மைக் கிழக்கில் நீதியுள்ள நிலையான சமாதானத்திற் காக!'' என்ற அறிக்கையும் இந்த ஆதரவின் புதிய வெளியீ டாக விளங்கியது.

ஏகாதிபத்தியம், முதன்மையாக அமெரிக்க ஏகாதிபத் தியம் எங்கும் ஆதிக்கம் செலுத்த முயல்கிறது. பிற மக்களின் விவகாரங்களில் அது தலையிடுகிறது, அவர்களுடைய சட்ட பூர்வமான உரிமைகளையும் அரசுரிமையையும் மரியாதை யின்றி மீறுகிறது. அதை எதிர்த்து இன்னும் கடினமான, நீண்ட போராட்டம் நடத்துவது அவசியம். இந்தப் போ ராட்டத்தின் வெற்றி ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளின் ஒற்றுமையை, முதன்மையாக அவற்றின் முன்ணணிப் படையான உலகக் கம்யூனிஸ இயக்கத்தின் ஒற்றுமையைப் பெருமளவு சார்ந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் அணிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி பிற சோதரக் கட்சிகளுடன் சேர்ந்து கடுமையான முயற்சி செய்து வந்திருக்கிறது.

இது சிக்கலான பணியாக இருந்தது. கம்யூனிஸ இயக்கத் தின் நடவடிக்கைகளது கொள்கைவாத-சித்தாந்த அடிப் படை என்ற முறையில் மார்க்ஸீய-லெனினீயத்தைப் பல்வேறு திசைகளிலிருந்து தாக்குவதற்காகச் செய்யப்பட்ட முயற்சி கள் விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப் பகுதியில்

தான் மிக மிகக் கடுமையாக வெளிப்பட்டன. சீனத் தலைமை அனேக நாடுகளில் ''மார்க்ஸீய-லெனினீயக் கட்சிகள்'' என்ற பெயரில் பிளவுக் குழுக்களை அமைக்க முற்பட்டது. சர்வ தேசக் கம்யூனிஸ இயக்கத்துக்கு எதிர் நிறையாக இந்தக் குழுக்களை எப்படியாவது ஒன்று சேர்க்க அது முயன்றது. திரோத்ஸ்கிவாதிகள் இந்தக் குழுக்களுடன் அடிக்கடி கூட்டு சேர்ந்தார்கள். தேசீயவாத நோக்கில் தனித்து ஒதுங்கும் போக்குகள் சிற்சில இடங்களில் தீவிரம் அடைந்தன. ''இடது சாரி'' சந்தர்ப்பவாதமும் வலதுசாரி சந்தர்ப்பவாதமும் புத்துயிர் பெற்றன.

கம்யூனிஸ இயக்கத்தை ஒற்றுமைப்படுத்தவும் அதன் கொள்கைவாத அடிப்படைகளை வலுப்படுத்தவும் ஆன திருப் பத்தை ஏற்படுத்துவது முதன்மையான லட்சியமாக இருந் தது. 1969ம் ஆண்டில் நடந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மகாநாடு இந்த லட்சியத்தை அடை யும் பாதையில் பெருத்த அடிவைப்பாக விளங்கியது என்று காங்கிரஸ் குறித்தது. இம் மகாநாட்டுக்கு முன்னேற்பாடு கள் செய்து அதை நடத்துவதில் சோவியத் யூனியன் கம்யூ னிஸ்ட் கட்சி பெரும் பங்கு ஆற்றியது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி தனது சர்வதேசக் கடமையை உணர்கிறது. அனைத்துலக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டும் தீவிரப்படுத்தவும் அதில் பங்கு கொள்ளும் எல்லோருடையவும் போராட்ட ஒற்றுமையை வலுப்படுத்த வும் உதவக் கூடிய கொள்கைப் போக்கை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி சர்வதேச விவகாரங்களில் கடைப்பிடிக்கும் என்று காங்கிரஸ் அறிவித்தது.

ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட ஏகாதிபத்திய சக்தி களின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி அவற்றின் நடவடிக்கை களை இடை முறிக்கும் உறுதியான போக்கும் அதே சமயத் தில் உடனடியான பிரச்சினைகளைத் தீர்ப்பது, வேறு சமுதாய அமைப்பைச் சேர்ந்த அரசுகளுடன் சாதாரண உறவுகளையும், சூழ்நிலை அனுமதிக்கும் இடங்களில் நல்ல உறவுகளையும் கடைப்பிடிப்பது என்ற ஆக்கத்தன்மை உள்ள போக்கும் சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் பொருத்த மாக இணைந்திருக்கின்றன. சமாதானத்துக்காகவும் சர்வதேச

ஒத்துழைப்புக்காகவும் மக்கள் இனங்களின் விடுதலை, சுயாதீனம் ஆகியவற்றின் பொருட்டும் போராடுவதற்கான ஆக்கத் தன்மையும் சீரிய விஞ்ஞான அடிப்படையும் கொண்ட செயல் திட்டம் மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கையில் முன்வைக்கப்பட்டது. எல்லா நாடுகளையும் சேர்ந்த உழைப்பாளி மக்களின் அடிப்படை நலன்களுக்கு ஏற்றது, சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு, மக்கள் இனங்களின் விடுதலை, சுயாதீனம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றின் பொருட்டு அவர்கள் நடத்தும் போராட்டத்தை எளிதாக்குவது என்ற முறையில் இந்தச் செயல் திட்டத்தைக் காங்கிரஸ் ஒருமனதாக அங்கீகரித்தது.

சோவியத் மக்களின் தன்னலமற்ற உழைப்பினால் சோவியத் யூனியனில் **வளர்ச்சி பெற்ற சோஷலிஸ** சமூகம் நிறுவப்பட்டுள்ளது என்ற முக்கியமான முடிவு மத்தியக் கமிட்டியின் விவர அறிக்கையில் செய்யப்பட்டது. காங்கிரஸும் கட்சியும் எல்லா மக்களும் மிகுந்த மனநிறைவுடன் இந்த முடிவை ஏற்றுக் கொண்டார்கள். தேசீயப் பொருளாதார வளர்ச்சி, சோஷலிஸ சமூக உறவுகள், விரிவான வெகுஜனங்களின் பண்பாடு, அரசியல் உணர்வு ஆகியவற்றின் உயர்ந்த தரம், வளர்ச்சி பெற்ற சோஷலிஸ சமூகத்திற்கு இயல்பான தன்மை ஆகும். சோவியத் சமூகத்தின் சமுதாய அமைவில் முக்கியமான மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. தொழிலாளி வர்க்கம் நாட்டில் யாவற்றிலும் பெருத்த எண்ணிக்கை கொண்ட வர்க்கம் ஆகிவிட்டது. கம்யூனிஸக் கட்டுமானத்தில் அதன் தலைமைப் பாத்திரம் வளர்ந்து வருகிறது. கூட்டுப் பண்ணை விவசாயிகளுடன் அதன் ஐக்கியம் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், எண்ணிக்கையில் அதிகரித்து வரும் அறிவுஜீவிகள் ஆகியோர் ஒருவரை ஒருவர் மேலும் மேலும் நெருங்கிவருகிறார்கள்.

லெனினது நாட்டினக் கொள்கை கட்சியால் ஒத்திசைந்த முறையில் செயல்படுத்தப்படுவதன் விளைவாக சோவியத் யூனியனில் உள்ள எல்லா சோஷலிஸ நாட்டினங்களும் மக்கள் இனங்களும் புது மலர்ச்சி பெற்றுப் படிப்படியாக ஒன்றை ஒன்று நெருங்கிவருகின்றன. சோவியத் யூனியனில் சோஷலிஸக் கட்டுமானம் நடந்த ஆண்டுகளில் **மக்களின் வரலாற்றில்**

புதிய பொதுமை — சோவியத் மக்கள் என்ற பொதுமை — உருவாகி இருக்கிறது.

விவர அறிக்கையில் குறித்த காலப் பகுதியில் சோவியத் நாட்டின் தேசீயப் பொருளாதார வளர்ச்சியில் புதிய சாதனைகள் புரியப்பட்டன, உழைப்பாளி மக்களின் வாழ்க்கை வசதிகள் மேம்பட்டன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியப் பொருளாதார உற்பத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டன. ஐந்து ஆண்டுகளில் தேசீய வருமானம் 41 சதவிகிதத்துக்கு மேலும் தொழில் துறை உற்பத்தி 50 சதவிகிதமும் அதிகரித்தன. மக்கள் உபயோகத்துக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில் கிளைகள், உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழில் கிளைகள் ஆகியவற்றின் வளர்ச்சி வேகங்கள் ஒன்றை ஒன்று நெருங்கி வந்தது இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய சாதனையாக விளங்கியது. இதனால் மக்களுக்குத் தொழில் உற்பத்திப் பொருள்கள் வினியோகம் கணிசமாக மேம்பட முடிந்தது.

விவசாய வளர்ச்சியில், சிறப்பாகத் தானிய உற்பத்தியில் பெருமளவு வெற்றிகள் பெறப்பட்டன. ஐந்து ஆண்டுகளில் தானியங்களின் சராசரி வருஷ விளைச்சல் 370 லட்சம் டன்கள், அதாவது, கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு அதிகரித்தது. இறைச்சி, பால், முட்டைகள், பிற பண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. விளைவாக சோவியத் மக்கள் முன்னிலும் நன்முக ஊட்டம் பெற்றார்கள்.

கழிந்த ஐந்தாண்டுகள் சமுதாயப் பணிகளின் நிறைவேற்றத்தில் முக்கியக் காலப்பகுதியாக விளங்கின. சோவியத் யூனியனில் நபர்வாரி எதார்த்த வருவாய்கள் ஐந்து ஆண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு கூடுதல் ஆயின. சமூக உபயோக நிதி ஒன்றரை மடங்கு அதிகரித்தது. குடியிருப்பு வீடுகள் பற்றிய பிரச்சினை விரிந்த அளவில் தீர்க்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளில் நூற்றைம்பது கோடிச் சதுர மீட்டர்கள் உறைவிட வசதி கொண்ட வீடுகள் கட்டப்பட்டன. ஒவ்வொன்றும் பத்து லட்சம் மக்கள் தொகை கொண்ட 50 புதிய நகரங்கள் கட்டுவதற்குச் சமமாகும் இது.

பொருளாதார நிர்மாணத்தில் பெறப்பட்ட வெற்றிக

ளின் விளைவாக சோஷலிஸ அமைப்பு மேலும் வலுவடைந்தது. சோவியத் மக்கள் அனைவரும் கட்சியை மையமாகக் கொண்டு மேலும் நெருக்கமாக ஒன்றிணைந்தார்கள். சோஷலிஸ நாடுகளின் உலக அமைப்பினது நிலைகளை வலுப்படுத்துவதிலும் முதலாளித்துவத்துடன் பொருளாதாரப் போட்டியிலும் இந்த வெற்றிகள் பெருத்த தொண்டு ஆற்றின.

1971—1975 ஆண்டுகளில் சோவியத் யூனியனின் தேசீயப் பொருளாதார வளர்ச்சிக்குரிய ஐந்தாண்டுத் திட்டத்திற்கான கட்டளைகளைக் காங்கிரஸ் உறுதிப்படுத்தியது. சோஷலிஸ உற்பத்தி வளர்ச்சியின் விரைந்த வேகம், உற்பத்தியின் பயன்பாட்டை அதிகரிப்பது, விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம், உழைப்பின் உற்பத்தித் திறனது வளர்ச்சியை விரைவுபடுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் **மக்களது வாழ்க்கையின் பொருளியல் பண்பாட்டுத் தரத்தைக் கணிசமாக உயர்த்த** வகை செய்வது புதிய, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். உழைப்பாளி மக்களின் வாழ்க்கை வசதிகளைச் சாராம்சத்தில் மேம்படுத்துவது இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்சியின் நடவடிக்கைகளின் நோக்கமாகவும் சோவியத் நாட்டின் பொருளாதார வளர்ச்சி நீடித்த வருங்கால நிலைமைகளுக்கு ஏற்பச் செலுத்தப்படுவதன் நோக்கமாகவும் விளங்குகிறது.

காங்கிரஸினால் திட்டமிடப்பட்ட கொள்கைப் போக்கின்படி, தொழில்துறையும் விவசாயமும் இந்த ஐந்தாண்டுகளில் மேற்கொண்டு ஏற்றம் பெறும். அதே சமயம், மக்களின் உபயோகத்துக்கான பண்டங்களின் உற்பத்தியை விரிவுபடுத்துவது, வர்த்தகத்தை வளர்ப்பது, பொது உணவு விடுதிகள் அமைத்தல், உடைகளும் காலணிகளும் தயாரித்தல், அவற்றைச் செப்பனிடுதல், உழைப்பாளிகளின் ஓய்வுக்கு ஏற்பாடு செய்தல் போன்ற பணித்துறைக் கிளைகள் எல்லாவற்றிலும் வேலையை மேம்படுத்துவது ஆகியவற்றிலும் பெருத்த கவனம் செலுத்தப்படும்.

மையத்திலும் வட்டாரங்களிலும் உள்ள எல்லா ஊழியர்களும் மக்களுடைய வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளிலும் நுட்பமான விமர்சன நோக்குடன் கவனம் செலுத்த வேண்டும், மிக முக்கியமான அரசுப்

பொறுப்புக்களை நிறைவேற்றும் பான்மையில் இந்தப் பிரச்சினைகளை அணுக வேண்டும் என்று கட்சி கோருகிறது.

சோவியத் சமூகத்தின் சமுதாய-அரசியல், பண்பாட்டு வளர்ச்சி குறித்த பிரச்சினைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. தொழிலாளி வர்க்கம், கூட்டுப் பண்ணை விவசாயிகள், அறிவு ஜீவிகள் ஆகியோர் மேலும் மேலும் ஒருவரை ஒருவர் நெருங்கி வருவதும், நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் அறிவு உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையில் நிலவும், முக்கிய வேறுபாடுகள் படிப்படியாக மறைவதும் நிகழும். எல்லா வர்க்கங்களும் சமுதாயக் குழுக்களும் ஒன்றை ஒன்று நெருங்கிவருவதும் சமுதாய ஒற்றுமை வலுப்படுவதும், தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிஸ நலன்களையும் கம்யூனிஸ ஆதர்சங்களையும் வெளியிடும் மார்க்ஸீய-லெனினீயக் கொள்கைவாதத்தின் அடிப்படையில் நிகழும். சமூகத்தின் மிக முன்னணியில் உள்ள வர்க்கமான தொழிலாளி வர்க்கத் தின் செல்வாக்கு வளர்ந்து வலுப்பெறுவதை நோக்கமாகக் கொண்டே கட்சி பாடுபட்டு வருகிறது.

கட்சி மேற்கொண்டும் சோவியத் சோஷலிஸக் குடியரசு களின் ஐக்கியத்தை வலுப்படுத்தும். சோஷலிஸ நாட்டினங் கள் மலர்ச்சி பெற்று, நாளடைவில் ஒன்றை ஒன்று நெருங்கி வருமாறு செய்யும் லெனினது கொள்கைப் போக்கைக் கட்சி ஒத்திசைந்த முறையில் கடைப்பிடிக்கும். சோவியத் யூனி யனின் பொது நலன்களையும் அதன் ஒவ்வொரு குடியரசின் நலன்களையும் எப்போதும் கருத்தில் கொள்வதே இந்தப் பிரச்சினையில் கட்சியின் கொள்கையினது சாராம்சம் ஆகும்.

சோவியத் அரசை மேற்கொண்டு வலுப்படுத்தவும் சமூகத்தின் அரசியல் ஒழுங்கமைப்பு முழுவதையும் செப்பம் செய்யவும் பெருத்த வேலை செய்யத் திட்டம் இடப்பட்டிருக் கிறது. சோஷலிஸ ஜனநாயகத்தின் வளர்ச்சியும், உழைப் பாளிப் பிரதிநிதிகள் சோவியத்துக்கள், தொழிற்சங்கங்கள், லெனின் இளங் கம்யூனிஸ்டுகள் சங்கம் ஆகியவற்றின் பாத் திரத்தை உயர்த்துவதுமே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது, இருந்து வருகிறது. சோஷலிஸ ஜனநாயகம் படிப்படியாக வளர்ச்சி அடைய வேண்டும்,

ஒவ்வொருவனும் தான் அனைத்து மக்கள் குறிக்கோளில் அக்கறை கொண்ட, அதற்கு உரிய பொறுப்பை ஏற்கிற குடிமகன் என்று இந்தச் சொல்லின் முழு அர்த்தத்தில் உணர வேண்டும் என்பதற்காகக் கட்சி ஓயாமல் பாடுபட்டு வருகிறது.

எல்லா உழைப்பாளிகளுக்கும் விஞ்ஞான ரீதியான, மார்க்ஸீய-லெனினீய உலகக் கண்ணோட்டத்தை ஏற்படுத்துவதும் உழைப்பின்பால் கம்யூனிஸப் போக்கைக் கடைப்பிடிக்கும் விதத்தில் அவர்களைப் பயிற்றுவதும் கட்சியின் கொள்கைவாதப் பயிற்சி வேலையின் நோக்கமாக வருங்காலத்திலும் இருந்து வரும். மக்கள் கல்வி நிலையங்களின் அமைப்பு, இலக்கியம், கலை, பிரசார, வெகுஜனத் தகவல் சாதனங்கள் ஆகியவை எல்லாம் சோவியத் நாட்டில் ஒரே உயர்ந்த குறிக்கோளுக்குத் தொண்டு ஆற்றுகின்றன. கம்யூனிஸத்தைச் செயலூக்கத்துடனும் உணர்வு பூர்வமாகவும் நிறுவும், ஒருங்கிசைந்த வளர்ச்சி பெற்ற தனி நபரைப் பயிற்றி வளர்ப்பதே அந்தக் குறிக்கோள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியை மேற்கொண்டு வலுப்படுத்துவது, சோவியத் சமூகத்தில் அதன் தலைமைப் பாத்திரத்தையும் வழிகாட்டி நடத்தும் சக்தியையும் மேம்படுத்துவது ஆகியவை குறித்த பிரச்சினைகள் இருபத்து நான்காவது காங்கிரஸின் நடவடிக்கைகளில் முக்கிய இடம் பெற்றன. இருபத்து மூன்றுவது காங்கிரஸுக்குப் பிறகு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியில் முப்பது லட்சம் பெயர் உறுப்பினராகச் சேர்ந்திருந்தார்கள். இவர்களில் பாதிக்கு மேல் தொழிலாளர்கள். கட்சியில் முன்னணித் தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் கம்யூனிஸ்டுகளைப் பயிற்றுவதற்கும் வருங்காலத்திலும் முதன்மை தரப்படும்.

கட்சி நடவடிக்கைகள் பற்றிய எல்லாப் பிரச்சினைகளும் விரிவான ஜனநாயக அடிப்படையில் விவாதித்து முடிவு செய்யப்படுகின்றன. உட் கட்சி ஜனநாயகத்தின் வளர்ச்சி, கட்சிக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவது, ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டை நடைமுறையில் சரியாகச் செயல்படுத்துவது ஆகியவற்றிலிருந்து பிரிக்க முடியாதவாறு இணைந்தது என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

ஜனநாயகத்தின் பெயரால் கையாளப்படும் அராஜகத் தன்மை கொண்ட ஒழுங்கீனமும், கம்யூனிஸ்டுகளின் முன் முயற்சியையும் உற்சாகத்தையும் தடை செய்யும் சடங்கு முறை மத்தியத்துவமும் மார்க்ஸீய-லெனினீயக் கட்சிக்கு ஒருங்கே கேடானவை என்று அது எண்ணுகிறது.

கம்யூனிஸ்டுகளின் உயர்ந்த கொள்கைப் பற்று, செயலூக்கம், தன்னலத் தியாகம் ஆகியவையே கட்சியின் பலம் ஆகும். காங்கிரஸில் லெ. இ. பிரேழ்னிவ் கூறினார்: ''செயலின்மையையும் அசட்டையான போக்கையும் கட்சி ஏற்காது. நீ கம்யூனிஸ்ட் என்றால், உன்னுடைய கடமை இடர்களுக்கு முன் செயல் இழந்து நிற்பதல்ல, பின்தங்கிய மனப்பான்மைக்கு ஆமாம் போடுவதல்ல, கட்சியின் உணர்வு உள்ள, செயலூக்கம் நிறைந்த போராட்ட வீரனாக இருப்பதாகும். உழைப்பிலும் சமூக வாழ்விலும் படிப்பிலும் அன்றாட வாழ்க்கையிலும்—எப்போதும் எங்கும் கம்யூனிஸ்ட் கம்யூனிஸ்டாகவே இருக்க வேண்டும், நமது லெனினது கட்சியின் உறுப்பினன் என்ற உயர்ந்த பட்டத்தைத் தகுதியுடன் சூட வேண்டும்.''

கட்சி ஊழியர்களைத் தெரிந்தெடுப்பதிலும் உரிய இடங்களில் அமர்த்துவதிலும் பயிற்றுவதிலும் கட்சியும் அதன் மத்தியக் கமிட்டியும் வட்டாரக் கட்சி அலுவலகங்களும் இடைவிடாது அக்கறை எடுத்துக் கொள்கின்றன. மக்கள் நடுவிலிருந்து, முதன்மையாகத் தொழிலாளர்கள், விவசாயிகள் நடுவிலிருந்து இயற்கைத் திறனும் தேர்ச்சியும் பெற்ற தலைவர்களைத் தெரிந்தெடுத்து, கம்யூனிஸக் கட்டுமானத்தின் எல்லாத் துறைகளிலும் அமர்த்துகிறது கட்சி. உயர்ந்த அரசியல் உணர்வும் நல்ல தொழில்முறைப் பயிற்சியும் பெற்றவர்களும், பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சி குறித்த பிரச்சினைகளுக்கு விஷயஞானத்துடன் தீர்வு காண வல்லவர்களும் நவீன நிர்வாக முறைகளில் தேர்ந்தவர்களும் ஆன மனிதர்கள் இந்த எல்லாத் துறைகளிலும் இருக்குமாறுவகை செய்ய அது முயன்று வருகிறது.

ஊழியர்களிடையே புதுமை உணர்வு என்னும் பண்பைக் கட்சி எப்போதும் உயர்வாக மதித்து வந்திருக்கிறது. சமூக வாழ்விலும் உற்பத்தியிலும் விரைந்த, ஆழ்ந்த மாற்றங்கள்

நிகழ்ந்துவரும் இந்தக் காலத்திலோ இந்தப் பண்பு சிறப்பான முக்கியத்துவம் பெற்றுவிட்டது. புதுமை உணர்வு பெற்றிருப்பது என்றுல் வளர்ச்சியின் வருங்கால வாய்ப்பைக் காண்பது, எதிர்காலத்தில் பார்வை செலுத்துவது, பணிகளின் நிறைவேற்றத்துக்கு யாவற்றிலும் சரியான வழிகளைக் கண்டு அறிவது என்று அர்த்தம் ஆகும்.

ஒவ்வொருவரும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட காரியத்துக்கு சொந்தப் பொறுப்பை அதிகமாக உணரும்படி செய்வது வேலையைச் சரியாக ஒழுங்கமைப்பதற்கும் ஊழியர்களின் வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் இன்றியமையாத நிபந்தனை ஆகும். குறித்த ஒவ்வொரு நபரும் வேலையை நடத்துவதற்கு முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டும், தன்னுடைய ஒழுங்கமைப்புத் திறனின்மையையும் கவனக் குறைவையும் தலைமையின் கூட்டுத்துவம் என்ற போர்வை மறைவில் ஒளிக்க எவனுக்கும் உரிமை கிடையாது என்பது, லெனினால் உருவாக்கப்பட்டு, கட்சியால் புரிந்து கொள்ளப்பட்ட விதத்தில் நிர்வாகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று ஆகும்.

வாழ்க்கையிலிருந்து பின்தங்கிவிடாமல் இருக்கும் பொருட்டு எல்லா ஊழியர்களும் இடைவிடாது கற்கவும், தங்கள் கொள்கைவாத-சித்தாந்தத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், விஞ்ஞானம், முன்னணி நடைமுறை ஆகியவற்றின் சாதனைகளில் தேர்ச்சி பெறவும் வேண்டும் என்று காங்கிரஸ் அறிவுறுத்தியது. இவ்வாறு செய்தால்தான் அவர்கள் எப்போதும் நிலைமையைச் சமாளிக்கவும் கட்சிக் கொள்கையைத் திறம்படச் செயல்படுத்தவும் வல்லவர்களாய் இருப்பார்கள்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி தனது எல்லாச் செயல்களிலும் மார்க்ஸிய-லெனினிய விஞ்ஞானத்தைப் பிறழாமல் பின்பற்றி வருகிறது, அதைப் படைப்புத் தன்மையுடன் வளர்ப்பதற்கு எல்லா வகையிலும் பாடுபட்டு வருகிறது. மத்தியக் கமிட்டி முழுக் கூட்டங்களின் தீர்மானங்களிலும், மாபெரும் அக்டோபர் புரட்சியின் பொன்விழா, வி. இ. லெனினது பிறந்தநாள் நூற்றாண்டு விழா ஆகியவை குறித்த பத்திரங்களிலும் தற்கால சமூக வாழ்வையும் கம்யூனிஸக் கட்டுமானத்தையும் பற்றிய மிக முக்கியமான பிரச்

சீனைகள் சித்தாந்த ரீதியில் ஆழ்ந்து ஆராயப்பட்டுள்ளன. 1969ல் நடந்த கம்யூனிஸ்ட், தொழிலாளர்கள் கட்சிகளின் சர்வதேச மகாநாட்டை ஒட்டிக் கணிசமான சித்தாந்த வேலை செய்யப்பட்டது. கம்யூனிஸ்டுகள் மார்க்ஸீய-லெனினீயச் சித்தாந்தத்தை விடா முயற்சியுடன் கற்றுத் தேர்ந்து, அதை நடைமுறையில் கையாளத் திறன் பெற்றிருப்பது மிக அவசியம் என்று கட்சி கருதுகிறது.

காங்கிரஸ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியையும் மத்தியத் தணிக்கைக் கமிட்டியையும் தேர்ந்தெடுத்தது. காங்கிரஸின் முடிவில் நடந்த மத்தியக் கமிட்டியின் முழுக் கூட்டம் மத்தியக் கமிட்டியின் அரசியல் பிரிவை (பொலிட்பியூரோவை)யும் செயலாளர் குழுவையும் தேர்ந்தெடுத்தது. லெ. இ. பிரேழ்னிவ் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபத்து நான்காவது காங்கிரஸ் பெருத்த வரலாற்று முக்கியத்துவம் உள்ள நிகழ்ச்சி. கட்சியின் வாழ்விலும் சோவியத் மக்கள் அனைவரது வாழ்விலும் முக்கியமான மைல்கல் இது. தற்காலத்தில் கொந்தளிப்பு ஏற்படுத்தியுள்ள கேள்விகளுக்கு அது விடைகள் அளித்தது, நம்பிக்கைக்கு உகந்த சரியான அரசியல் கொள்கைப் போக்கை வகுத்தது. காங்கிரஸால் தயாரிக்கப்பட்ட வேலைத் திட்டம் சோவியத் மக்களின் மிக மிக உடனடியான ஜீவாதார நலன்களை வெளியிட்டது. இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவது, கம்யூனிஸத்திற்குச் செல்லும் பாதையில் புதிய பெரிய அடி எடுத்து வைப்பது தன் முதல் கடமை என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

முடிவுரை

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்ட, புரட்சி நடவடிக்கைகளும் வீர வரலாறும் இந்த நூலில் சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளன.

இங்கு விவரிக்கப்பட்டவற்றிலிருந்து பெறப்படும் முக்கியமான முடிவு, ஏகாதிபத்தியத்தையும் காலனி ஆட்சியையும் ஒழிப்பதற்கும் புதிய, சோஷலிஸ சமூகத்தை நிறுவுவதற்கும் உழைப்பாளி மக்களுக்கு சொந்தமான, கட்டற்ற புரட்சிக் கட்சி இருக்க வேண்டும் என்பதே. தொழிலாளி வர்க்கத்தினிடமும் உழைப்பாளி வெகுஜனங்களிடமும், ஒடுக்குவோருக்கு எதிரான போராட்டத்தில், தங்கள் ஸ்தாபனம் தவிர வேறு எவ்வித ஆயுதமும் இல்லை என்று போதித்தார் லெனின். புரட்சிக் கட்சி நிலையுறுதியும் வீரமும் துணிவும் அனுபவமும் வாய்ந்த புரட்சிக்காரர்களை, உழைப்பாளிகளின் முன்னணிப் பிரதிநிதிகளும் திரளான பொது மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரர்களுமான தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அறிவுஜீவிகளையும் உறுப்பினராகக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய மனிதர்களைக் கொண்டே புரட்சிகர மார்க்ஸீயக் கட்சியை — கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தார் லெனின்.

உழைப்பாளி மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு சோஷலிஸ சமூகத்தைக் கட்டி அமைப்பதையும் வெற்றிகரமாக வழி காட்டி நடத்துவதற்குப் புரட்சிக் கட்சி கருத்து, செயல் ஒற்றுமையாலும் ஒன்றித்த கட்டுப்பாட்டினாலும் இணைந்திருக்க வேண்டும். கட்சியிலும் அதன் தலைமை உறுப்புக்களிலும் உள்ளார்ந்த கருத்து ஒருமை இல்லாவிட்டால் அது ஒற்றுமையாக வேலை செய்ய முடியாது. கட்சியின் எல்லா முடிவுகளும் கூட்டாகத் தயாரிக்கப்பட்டு ஏற்கப்பட வேண்டும். கட்டுப்பாட்டை மீறுபவர்களைக் கட்சி தன் அணிகளில் வைத்துக் கொண்டிருக்க முடியாது. இம்மாதிரி ஆட்கள் கட்சியிலிருந்து அகற்றப்படுவது அவசியம். கட்சியின் எல்லா வட்டார ஸ்தாபனங்களும் தலைமை வகிக்கும் கட்சி மையத்தின் தீர்மானங்களையும் உத்தரவுகளையும் செயல்படுத்த வேண்டும். இந்த நிபந்தனை கடைப்பிடிக்கப்படா விட்டால் புரட்சிக் கட்சி விடுதலை இயக்கத்திலும் புது வாழ்வை நிறுவுவதிலும் தலைமைப் பாத்திரம் வகிக்க முடியாது. கட்சி ஸ்தாபனங்கள் யாவும், கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் கட்சி மையத்தால் வகுக்கப்பட்ட ஒரே திட்டப்படி வேலை செய்ய வேண்டும். இது கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஒழுங்கமைந்த தன்மையை அளித்து வெற்றிகளுக்கு இட்டுச் செல்லும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் பயனுள்ள செயல்களின் வெற்றிக்குக் காரணம், அது தனது வரலாற்றுக் காலம் முழுவதிலும் **விஞ்ஞானக் கம்யூனிஸ சித்தாந்தத்தைப்** பின்பற்றி வருவதே ஆகும். விஞ்ஞான சித்தாந்த அறிவு பெருமலும் அதைக் கையாளாமலும் புரட்சிக் கட்சி புதிய சமூக அமைப்பை—சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் —நிறுவுவதற்கான ஒருமுனைப்பாடுள்ள வேலையை நடத்த முடியாது. சமூக வளர்ச்சி விதிகளை வெளிப்படுத்தும் விஞ்ஞான சித்தாந்தமாக விளங்குகிறது மார்க்ஸீயம்-லெனினீயம். இது சரியானது என்பது சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பல்லாண்டுச் செயல்களால், சோவியத் யூனியனில் சோஷலிஸ, கம்யூனிஸக் கட்டுமானத்தின் நடைமுறை விளைவுகளால் சோதித்து நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு புரட்சிக் கட்சியும் தனது நாட்டின் தனிப் பட்ட நிலைமைகளில் வேலை செய்கையில் மார்க்ஸீய-லெனினீய சித்தாந்தத்தின் வரையறுப்புக்களையும் முடிவுகளையும் படைப்புத் தன்மையுடன் கையாள வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் தன்னைப் புரட்சிக் கட்சி என்று அழைத்துக்கொள்ளும் ஏதேனும் ஒரு கட்சி எந்தக் காரணத் தினாலாவது மார்க்ஸீய-லெனினீய சித்தாந்தத்தைப் புறக் கணித்தால் அல்லது அதன் இடத்தில் தன் சொந்தப் படைப்பு எதையேனும் கையாள முயன்றால், அதனால் உழைப்பாளி களுக்குப் பயனுள்ளது எதுவும் கிடைக்க முடியாது. புரட்சி கரத் தொழிலாளர் கட்சிகளும் முற்போக்குள்ள தேசிய-ஜன நாயகக் கட்சிகளும் வெற்றிகரமாகப் பயன்படுத்தக் கூடிய தும் எல்லாவற்றையும் உள்ளடக்கியதும் ஆன ஒரே விஞ்ஞான சித்தாந்தம் மார்க்ஸீயம்-லெனினீயம் ஆகும்.

புரட்சிக் கட்சியின் பலம் உழைப்பாளி மக்களுடன் நெருக்கமான ஐக்கியத்தில், அவர்களுடைய ஆதரவில் அடங்கி இருக்கிறது. லெனினது கட்சி மக்களின் நலன்களுக்காக, அவர்களுடைய விடுதலைக்காகவும் இன்பத்துக்காகவும் தன்ன லம் இன்றிப் போராடியதன் மூலம் வெகுஜனங்களிடையே நிலையான செல்வாக்கு பெற்று, எல்லாராலும் ஏற்கப்பட்ட சமூகத் தலைவனும் வழிகாட்டியும் ஆகிவிட்டது. மக்களுடன் விரிவான, நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதன் காரண மாக, அவர்களுடைய மனப்பாங்குகளையும் விழைவுகளையும் சிந்தனைகளையும் விருப்பங்களையும் கட்சி எப்போதும் அறிந் திருக்கிறது, அவர்களுடைய தேவைகளுக்கு ஏற்ப உரிய நேரங்களில் செயல்படுகிறது. சோவியத் யூனியனின் கம் யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் கொள்கைக்கும் திரளான உழைப் பாளி மக்கள் அளித்துவரும் ஆதரவே சோவியத் யூனியனில் சோஷலிஸத்தின் மாபெரும் வெற்றிகளின் தலையூற்று ஆகும்.

புரட்சிக் கட்சி மக்களுடன் இடையறாத நிலைத்த தொடர்பு கொண்டிருந்தால் அது நிறை வாழ்வு வாழும், எப்போதும் வெற்றி பெறும். கட்சி வெகுஜனங்களிடமிருந்து தொடர்பைத் துணித்துக் கொண்டு, அவர்களுடைய தேவை களிலும் கோரிக்கைகளிலும் அக்கறை செலுத்துவதை நிறுத்திவிட்டால், அவர்களுடைய ஆதரவை இழந்துவிடும்.

அத்தகைய கட்சி தனது செயல்திறனைக் கட்டாயம் இழந்து, வாடி, வெறும் சம்பிரதாயக் குழுவாக மாறிவிடும்.

போராட்டத்தினுடையவும் வேலையினுடையவும் எல்லா வடிவங்களிலும் தலைமை ஏற்கும் கலையிலும் தேர்ச்சி பெறுவது உண்மையான புரட்சிக் கட்சியின் முக்கியப் பணி ஆகும். போராடும் சக்திகளின் ஒப்புநிலையையும் எதார்த்தத்தில் உருவாகியுள்ள சூழ்நிலையையும் சமூக வளர்ச்சியின் உடனடித் தேவைகளையும் வெகுஜனங்களின் மனப்பாங்கையும் எப்போதும் தெளிந்த அறிவுடன் கணக்கில் எடுத்துக் கொள்ளவும் நிச்சயமான வெற்றிக்கு வகை செய்யக்கூடிய போராட்டச் சாதனங்களையும் வடிவங்களையும் தீர்மானிக்கவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி வல்லதாக இருப்பதே அதன் வெற்றிகளுக்குப் பெருமளவு காரணமாகும். வெவ்வேறு நிலைமைகளில் வேலை செய்து கட்சி பெற்றுள்ள பல்லாண்டு அனுபவமும், அது தீர்வு காணவும் சமாளிக்கவும் வேண்டி இருந்த பிரச்சினைகளின் சிக்கலும் இடர்களும், அது எதிர்ப்பட நேர்ந்த கடுமையான நிலைமைகளும் எல்லாம் கட்சிக்கு சமயோசித சாமர்த்தியத்தையும் நிலையுறுதியையும் எச்சரிக்கையையும் கற்பித்திருக்கின்றன.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கட்சி ஆகிவிட்டதும் சமூக வாழ்வில் அதன் தலைமைப் பாத்திரம் மேலும் வளர்ந்தது. கட்சி மக்களின் விதிக்குப் பொறுப்பு ஏற்றது, சமூகத்துக்கு வழிகாட்டி இயக்கலாயிற்று. தனது கம்யூனிஸக் கட்டுமானச் செயல்திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கட்சி தனது தலைமை நிலையைப் பயன்படுத்துகிறது. இந்தப் பிரதானக் குறிக்கோளை அடைவதையே அதன் நடைமுறைச் செயல்கள் யாவும் நோக்கமாகக் கொண்டுள்ளன. சோவியத் சமூகத்துக்குக் கட்சியின் தலைமை விஞ்ஞான அடிப்படையில் அமைந்திருப்பதால் அது பயன் விளைக்கிறது, வெற்றி பெறுகிறது. சோவியத் சமூகத்தின் வளர்ச்சியைக் கம்யூனிஸத்தை நோக்கிச் செலுத்துகையில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, இன்றியமையாத நிலைமைகள் உருவாகி இருப்பதற்கு ஏற்ப, முறையாகவும் திட்டப்படியும் புதிய புதிய பணிகளை மக்களுக்கு முன்வைக்கிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத், தொழிற்சங்க, இளங் கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்கள், உழைப்பாளி மக்களின் பிற ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கை களை ஒன்றிணைத்து, அவற்றின் முயற்சிகளைக் கம்யூனிஸக் கட்டுமானம் என்ற ஒரே வழியில் செலுத்துகிறது. கட்சி இந்த ஸ்தாபனங்களுக்கு ஆணை இடுவதில்லை, அறிவுறுத்தி இணங்கச் செய்யும் முறையைக் கடைப்பிடிக்கிறது. கட்சி இந்த ஸ்தாபனங்களுக்கு யோசனைகள் அளித்து, சிபாரிசுகள் செய்கிறது, இந்த யோசனைகளின் பொருளையும் முக்கியத் துவத்தையும் இன்றியமையாமையையும் விளக்குகிறது. இந்த ஸ்தாபனங்களில் சேர்ந்துள்ள உழைப்பாளி வெகுஜனங்கள் கட்சியின் கொள்கையைச் சரிவரப் புரிந்துகொண்டு கிர கித்துக் கொள்ளுமாறும் அதைச் செயல்படுத்தத் தீவிரமாக முயற்சி எடுத்துக்கொள்ளுமாறும் செய்யக் கட்சி பாடுபடு கிறது.

அரை நூற்றாண்டுக் காலத்தில் சோவியத் சமூகத்தில் கம் யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பாத்திரம் நிலையாக வேரூன்றி விட்டது. திரளான உழைப்பாளி மக்களும் அவர்களுடைய எல்லா ஸ்தாபனங்களும் அதன்பால் முழு நம்பிக்கையை வெளியிடுகிறார்கள். கட்சியும் தனது தலைமையின் பாணியையும் முறைகளையும் இடைவிடாது செப்பம் செய்து வருகிறது. அரசு, சமூக ஸ்தாபனங்களதும் எல்லா உழைப்பாளி மக்களதும் முன்முயற்சியும் சுயமான நடவடிக்கைகளும் வளர்ச்சி பெறுவதற்கு அது எல்லா வகையிலும் உதவுகிறது.

தன்னுடைய குறைகளையும் தவறுகளையும் துணிவுடன் விமர்சிப்பது புரட்சிக் கட்சியின் வெற்றிகரமான செயல் களுக்கு இன்றியமையாத நிபந்தனை ஆகும். பிழைகளும் தவறுகளும் செய்யாமல் வாழ்க்கை நடத்துவது கடினம் என்பதை ஒவ்வொரு மனிதனும் சொந்த அனுபவத்தின் வாயிலாக அறிந்திருக்கிறான். புரட்சிக் கட்சிகளுக்கும் இது பொருந்தும். அவையும் பல காரணங்களால் தவறுகளும் பிழைகளும் செய்கின்றன. கட்சி இந்தத் தவறுகளை மறைக் காமல் உரிய நேரத்தில் அவற்றை வெளிப்படுத்தி, துணி வுடன் விமர்சித்து விரைவில் திருத்திக் கொள்வது அவசியம். அது தானாகவே இவ்வாறு செய்ய வேண்டும். அதே சமயம்

தான் தலைமை வகிக்கும் வெகுஜனங்களின் விமரிசன உரை களை அது உற்றுக் கேட்க வேண்டும். புரட்சிக் கட்சி தன் தவறுகளையும் குறைகளையும் மறைத்து, அவை வேரூன்ற வாய்ப்பு அளித்தால், இந்தச் செயலே அதன் அழிவுக்குக் காரணம் ஆகக் கூடும். விரும்பியோ விரும்பாமலோ அது புரட்சி நிலைகளிலிருந்து வழுவி இழிந்து விடக் கூடும். அப்போது அதை நம்பியிருந்த வெகுஜனங்கள் அதைப் புறக்கணித்து விடுவார்கள்.

லெனினது கட்சி வெற்றிகள் பெற்றதற்கும் பெற்று வரு வதற்கும் காரணம், அது தனது தவறுகளையும் குறைகளையும் எப்போதும் துணிவுடனும் தீர்மானமாகவும் வெளிப்படுத்தி, ஒப்புக்கொண்டு, அவற்றைத் திருத்தவும் அகற்றவும் முயன் றதுதான். இவ்வாறு செய்யும்படி சோவியத் யூனியன் கம் யூனிஸ்ட் கட்சிக்கும் அதன் ஊழியர்களுக்கும் எல்லாக் கம் யூனிஸ்டுகளுக்கும் போதித்தார் லெனின். விமரிசனமும் சுய விமரிசனமும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியினது உள் வாழ்க்கை, செயல்கள் ஆகியவற்றின் நிரந்தரமான, மாற்றமுடியாத நியமங்கள் ஆகும். இவற்றைக் கடைப் பிடித்து வருவதனால் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி யில் எப்போதும் உற்சாகமும் போராட்ட ஊக்கமும் நிலவு கின்றன, அதன் ஊழியர்கள் தங்களை மேலும் மேலும் சீர்படுத்திக்கொள்கிறார்கள், கட்சி வெகு ஜனங்கள் சுய முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள், கட்சி மக்களிடையே பெருத்த மதிப்பு பெற்றிருக்கிறது.

புரட்சிக் கட்சி, **பாட்டாளி வர்க்க சர்வதேசியம், உழைப்பாளி மக்களின் சர்வதேசிய ஒருமைப்பாடு ஆகிய கோட்பாடுகளை ஒத் திசைந்த முறையில் கடைப்பிடிக்க** வேண்டும்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எல்லாப் புரட்சிக் கட்சிகளும் தங்கள் நாடுகளுக்கு உள்ளே செயலாற்றுகின்றன. ஆனால் மற்ற நாடுகளும் நிலவுகின்றன, அவற்றில் உழைப்பாளி மக்கள் வாழ்கிறார்கள், புரட்சிக் கட்சி கள் செயலாற்றுகின்றன என்பதை மறந்துவிட உண்மை யான புரட்சிக் கட்சி எதற்கும் உரிமை கிடையாது. தவிர வும், உலகின் பெரும்பாலான நாடுகளில் ஏகாதிபத்தியம் இன்னமும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது, உழைப்பாளிகள்

கொடுமையாகச் சுரண்டப்பட்டு வருகிறார்கள், புரட்சிக் கட்சிகளோ, தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. ஏகாதிபத்தியப் பிற்போக்கின் ஒன்றிணைந்த சக்திகள், சமாதானம், ஜனநாயகம், தேசிய விடுதலை, சோஷலிஸம் ஆகியவற்றின் சக்திகளுக்கு எதிர் நிற்கின்றன என்பதைச் சிறப்பாகக் கவனத்தில் கொள்வது அவசியம் ஆகும்.

இந்த எல்லாக் காரணங்களாலும், எல்லா நாடுகளையும் சேர்ந்த புரட்சிக் கட்சிகள் சர்வதேச ஒருமைப்பாட்டை எல்லா வகையிலும் வலுப்படுத்துவதும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவு அளிப்பதும் இன்றியமையாதது ஆகிறது. புரட்சிக் கட்சிகளுக்கிடையே உறவுகள் முழு சமத்துவம், ஒவ்வொரு கட்சியினது சுதந்திரத்துக்கும் மதிப்பு, அதன் உள் விவகாரங்களில் தலையிடாமை ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பது கூறுமலே விளங்கும். உலகப் புரட்சி இயக்கத்தில் எந்த ஒரு கட்சியினதும் மேலாண்மைக்கு இடம் கிடையாது. இவை எல்லாவற்றிலிருந்தும் தெரிவது என்ன என்றால், ஒவ்வொரு புரட்சிக் கட்சியும் தனது உறுப்பினர்களைப் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உணர்விலும் உழைப்பாளிகளின் சர்வதேச ஒருமைப்பாட்டின் உணர்விலும் போதித்துப் பயிற்ற வேண்டும், விரிவான வெகு ஜனங்களின் உணர்வில் இந்தக் கருத்துக்களை விடா முயற்சியுடன் பதிய வைக்க வேண்டும் என்பதே. உண்மையான புரட்சிக் கட்சி தனது அணிகளில் தேசிய ஒதுக்க மனப்பான்மைக்கும் பெரு வல்லரசு நாட்டு வெறிக்கும் இடம் தரக்கூடாது. அது பிற புரட்சிக் கட்சிகள்பாலும் மக்கள்பாலும் வெறுப்பை வெளியிடவோ, சர்வதேச விடுதலை இயக்கத்தின் மற்றப் பிரிவுகளிலிருந்து தனித்து வேலை செய்யவோ கூடாது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்தாபிக்கப் பட்ட கணம் முதலே பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும் உழைப்பாளிகளின் சர்வதேச ஒருமைப்பாட்டையும் உறுதியாகக் கடைப்பிடித்து வந்தது. இப்போதும் அது இதே நிலைகளில் மாறுதலின்றி நிற்கிறது. அதன் வாழ்க்கையும் செயல்களும் யாவும் சர்வதேசிய உணர்வால் நிறைந்துள்ளன. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி பல நாட்டினங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் நாட்டில் செயலாற்றி வரு

கிறது. இந்த ஒரு காரணத்திலேயே வெவ்வேறு நாட்டினங்களையும் மக்கள் இனங்களையும் சேர்ந்த உழைப்பாளிகளுக்கிடையே சோதர ஒத்துழைப்பை ஒழுங்குபடுத்தும் திறன் அதற்குத் தேவைப்பட்டது. இந்தப் பணியை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிகரமாக நிறைவேற்றியது—சோவியத் மக்கள் இனங்களின் நட்பு பிளக்க முடியாதது. சோவியத் யூனியனின் எல்லா நாட்டினங்களும் மக்கள் இனங்களும் சம உரிமை பெற்றவை. அவற்றில் ஒன்றுகூட எந்தச் சலுகையும் பெற்றிருக்கவில்லை. சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நிறுவுவதில் சோவியத் நாட்டினங்களதும் மக்கள் இனங்களதும் சோதர ஒத்துழைப்பு சோவியத் மக்களின் உணர்வில் ஆழ்ந்த பதிவு ஏற்படுத்தியுள்ளது. நாட்டுவெறியும் குறுகிய தேசியவாதமும் அவர்கள் அறியாதவை. உழைப்பாளிகளையும் சோவியத் மக்களையும் சர்வதேசீய உணர்வில் பயிற்றுவதற்கு லெனினது கட்சி பல ஆண்டுகளாகப் பொறுமையுடன் இடைவிடாது செய்த வேலையின் பயனுகும் இது. வரலாற்று முக்கியத்துவம் உள்ள இந்தச் சாதனை குறித்துக் கட்சி பெருமை கொள்கிறது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, மனிதகுலத்துக்கு விடுதலை அளிப்பதற்கான போராட்டத்தில் உலகப் புரட்சிச் சக்திகள் அனைத்தினதும் சர்வதேச ஒற்றுமை எவ்வளவு முக்கியமானது, இன்றியமையாதது என்பது சோவியத் கம்யூனிஸ்டுகளுக்கும் எல்லா சோவியத் மக்களுக்கும் தெளிவாகப் புரிந்திருக்கிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இந்தத் திசையில் தன்னல் இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்துவருகிறது. அது சோஷலிஸ நாடுகளுடனும் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுடனும் சோவியத் யூனியனின் ஒத்துழைப்பை வலுப்படுத்திவருகிறது, கம்யூனிஸ்ட், தொழிலாளர், தேசீய-ஜனநாயகக் கட்சிகளுடன் தனது உறவுகளை பலப்படுத்தி வருகிறது, ஏகாதிபத்தியத்துக்கும் காலனி ஆதிக்கத்துக்கும் எதிராக மக்களின் போராட்டத்துக்கு எல்லா வகையிலும் ஆதரவு அளித்துவருகிறது.

உலக விடுதலை இயக்கத்துக்குத் தனது சர்வதேசக் கடமையை நிறைவேற்றுவது தன் முதற் பணி, பொறுப்பு என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும்

கருதி வந்தது, கருதி வருகிறது. லெனினுல் பிரகடனம் செய்யப்பட்ட, ''உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே, ஒன்று சேருங்கள்!'' என்ற மாபெரும் சர்வதேச அறை கூவலுக்கு அது மாறுதலின்றி விசுவாசம் கடைப் பிடித்து வருகிறது.



வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
6, நல்லதம்பி செட்டித் தெரு,
சென்னை-2

ஷோ-ரூம்
6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்
80, மேலக் கோபுர வீதி, மதுரை-1
87/89, ஒப்பணக்கார வீதி, கோய
முத்தூர்-1
சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8
பஸ் நிலையம், தஞ்சாவூர்